# விவேக போதினி

## ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

MADRAS

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்

தொகுதி 6

1914ம் ௵ ஜூலை மீ —1915ம் ௵ ஜூன் மீ
1914—15

சென்னை
ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரவர்களால்
" கமர்ஷியல் அச்சுக்கூடத்தில் " பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர் செய்தது]

[விலை ரூபாய் 4

16207

# அட்டவணை

பக்கம்

## மதவிஷயக் குறிப்புகள்


ஜீவ ஸப்தாவரணங்கள் ... 1
ஏழு அஞ்ஞான பூமிகள் ... 37
ஏழு ஞான பூமிகள் 81,125,169
வேதாந்தத்திரட்டு,205,245,285,325,361,401,441


## மதவிஷயங்கள்


அவதாரங்கள்—பக்தி வழி ... 2
அவதாரங்கள்—உபாஸனைவழி ... 38
அவதாரங்கள்—ஞானவழி 82,126
மோக்ஷஸோபானம்.—பீடிகை 170
ஷை கர்மயோகம், 206,246,286,326,
ஷை பீஷ்ம சரித்திரம் 363,403,443


## உபநிஷத் ரத்னமாலை


முக்திகோப நிஷத் ... 24
ச்வேதாச்வதரோப நிஷத் ... 51
கௌஷீதகி உபநிஷத் ... 53
மண்டல ப்ராஹ்மணோப நிஷத் ... 108
ஆருணிகோபநிஷத் ... 110


## பஞ்சாங்கம்


ஆநந்தவூ சித்திரைமீ ... 362
ஷை வைகாசிமீ ... 402
ஷை ஆனிமீ ... 442


## இராஜாங்க விஷயம்


லார்ட் ஹார்டிஞ் அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் ... 33
கனம் கவர்னர் ஜனரல் அவர்களின் சென்னை விஜயம் ... 166
ராஜப்ரதிநிதி அவர்களின் சென்னை விஜயம் 238
புதுக்கோட்டை ராஜா அவர்களின் 39-ம் வருஷ வர்த்தனி மஹோத்ஸவம் ... 283


## பெரியோர் சரிதை


ஸஹஜாநந்தர் சரிதை ... 7
ஜஸ்டிஸ் மஹாதேவகோவிந்த ரானடே ... 43
திருவண்ணாமலை ஸ்வாமிகள் ... 49
ப்ரஸிடெண்ட் கார்பீல்ட் 210,249


பக்கம்


ஹுஸேன் நூரி ... 220
காலஞ்சென்ற ஹைகோர்ட் ஜட்ஜ் ஸுந்தரய்யர் ... 323
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ... 329


## பிரகிருதிதத்வ சாஸ்திரம்


மூளையும் அதன் ஸ்வபாவமும் ... 107
எலும்புக்கூடு ... 263
ஸந்திகளும் ஸந்தி பந்தங்களும் ... 298
முத்தும், முத்துச் சிப்பியும் ... 446
பிராணிகளின் வர்ணங்கள் ... 449


## வைத்திய விசாரம்


டைபாய்ட் ஜ்வரம், ஜன்னி ஜ்வரம், பித்தவாத ஜன்னி ... 251


## ஐக்யசங்க விஷயம்


ஐக்கிய நாணயம் ... 408


## சரித்திர ஆராய்ச்சி


மேனாட்டுப்பூர்வகாலத்திய ஸ்ம்ருதிகர்த்தர்கள் 12
இந்திய ராஜாங்கம் ... 16
திவ்யப் பிரமாணங்கள் 55,92
பாரதவர்ஷமஹிமா அல்லது இந்திய சரித்திரச் சிறப்பு ... 67
ஹிந்து நாகரிகத்தின் மேன்மைக்கம் ... 105
ஹிந்து நாகரிக ஆதர்சம் ... 182
இந்தியர்களின் தற்கால நிலையும் செயலும் 378
கொடுந்தமிழும், ஹிந்துஸ்தானிவார்த்தைகளும்452


## பூகோளமும் தேசசரித்திரமும்


சீன தேசத்திய இஸ்லாம் மதம் ... 48
வ்ருந்தாவனம் ஸ்தலம் ... 129
தஞ்சாவூர் ஜில்லா சரித்திரம் 258,421,457
காப்டன் ஸ்காட் செய்த தக்ஷிண துருவப் பிரயாணம் ... 336
இந்திய ஸிலோன் இருப்புப்பாதை ... 355


பக்கம்

## கவிகள்


மகாகனம் பொருந்திய இராஜப்பிரதிநிதி யாரின் சென்னை விஜய வரவேற்கை ... 165
இராமாயண அகவல் 188,239,270,305
ஆபுபென் ஆதமும் தேவதூதனும் ... 314
திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி ... 344
386,430,466


## வியாக்யானங்கள்


ஆத்திசூடி விளக்கம், 26, 70, 115, 156, 192
232, 276, 317, 351, 391, 434, 468


## மொழிபெயர்ப்புகள்


வஸந்தமாளிகை 59,153,190,267,315,387,431
ஆபுபென் ஆதமும் தேவதூதனும் ... 314


## நவீனங்கள்


கமலரேகை (ஒரு துப்பறியும் நாவல்) 63,111,150
183,341,462
தாரணீபதி அல்லது தந்திரபாலன் 221,272,309
348,381,427,475


## திராவிடக்கதைகள்


6. கழுதைக்காது ... 99
7. அப்பக்கதை ... 144
8. ஓர் அகப்பைச் சாறு, ஒருண்டைக்களி 177
9. ஐந்து வாக்கியக்கதை ... 225
10. ஆறு வாக்கியக்கதை ... 436
11. கல்மேல் நெல் முளைத்து கல்கோழி கூப்பிட்ட கதை ... 470


## சிறுகதைகள்

### வைதிகக் கதைகள்


திலீப சக்ரவர்த்தியின் தபஸ் ... 19,454
சிவபுராண சரிதங்கள்—கோலாஹலன் கதை 85


### சரித்திரக் கதைகள்


மாட்சிமைதங்கிய அலக்ஸாண்ட்ரா மஹாராணியும் தயையும் ... 134
சாலிவாஹனனைப்பற்றிய ஒரு கதை ... 366


### வேடிக்கைக் கதைகள்


ஆமணக்கு நெய் பிதிலியும் மண்ணெண்ணெய் டின்னும் .... 135
கல்மேல் நெல் முளைத்து கல் கோழி கூப்பிட்ட கதை ... ... 470
மாயக்கண்ணாடி. 95,139
ஸோமா என்னும் ரஜகஸ்திரீயின் கதை ... 102


பக்கம்

## ஸம்பாஷணைகள்


குரு சிஷ்ய ஸம்பாஷணை ... 57
தென்புலத்தார் ஸம்பாஷணை ... 278


## வியாஸங்கள்

### இலக்கிய இலக்கண விஷயம்


ஸந்தி விளக்கம் ... 9
பண்டைக்காலத் தமிழ்ப்புலவர்கள்—திருவள்ளுவர் ... 290
பவணந்தியாரு மவரியற்றிய நூல்களும் ... 416


### கல்வி விஷயம்


பெண்கல்வி ... 410


### நீதி விஷயம்


தெய்வ நீதி ... 22
கடமை முரண் ... 46
அக்பர் நீதி மொழிகள் ... 376


### வைதிக விஷயம்


வைதிகமத ஞானம் ... 419
ஆலய வழிபாடு 301,340,372


### இந்திய விஷயம்


இந்தியாவும் தேசாபிமானமும் ... 214
தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமை 230


### பொது விஷயங்கள்


தூரதிருஷ்டங்கள் ... 218
வெளிப்ரயாணம் ... 256


### விவேக:விளக்க வியாஸத்திரட்டு


ஆத்மா ... 88
இருதுக்கள் ... 174


## மாணவர் பக்கங்கள்


ஆத்திசூடி விளக்கம் 26, 70, 115, 156, 192
232, 276, 317, 351, 391, 434, 468


## மொழிபெயர்ப்பு விளக்கம்


ஈஜியுஸ்ஸும் தீஸியுஸ்ஸும் ... 28
ஈசாஞ்ஞை ... 72
பெயர்போன கிரேக்ய ப்ரயாணம் ... 117
ஸூர்யனை எப்பொழுதும்ஒளிவிட்டுக்கொண்டிருக்கும்படிச் செய்வதெது? ... 157
மூவ்வகைச் சட்ட ஒழுங்குகள் ... 193

பக்கம்

நியாயமாக நிறுத்தெடுத்துவை ... 72
பரிசுத்தம் ... ... ... 75
உலகவாஞ்சைகளில் பற்றுள்ள பக்தன் ... 88
காமத்தை வெல்லும் வழி ... ... 94
ஒற்றுமையின் லக்ஷணம் ... ... 107
நில உப்பு ... ... 111
மாட்டுத் தீவனம் ... ... 116
ஸச்சிதாநந்த ஸாகரம் ... ... 120
நன்மதிப்பு ... ... ... 133
மாமரத்தைப் பயிர் செய்யும் வகை ... 155
நூறு வயஸுக்கு ஜீவிப்பதெப்படி ... 160
சென்னைக் கல்வி இலாகா இன்ஸ்பெக்ஷன் ஸர்கில்கள் ... ... 164
மாதை வெங்கடேசுவரன் ... ... 173
வேதவதி ... ... ... 176
நெல்லுக்கு உரம் ... ... 199
சுவாசாசய சம்பந்தமான வியாதிகளுக்கு மருந்து ... ... ... 202
ஒழுங்கு ... ... ... 210
மறைஞான சம்பந்தர் ... ... 213
மதுரை யாசிரியர் ... ... 225
மத்திய தேசம் ... ... 229
உப்பின் குணம் ... ... 239
பூங்கோதை ... ... ... 250
ஜாதிக்காய் ... ... ... 255
உன்னைப்போல பிறரையும் நினை ... 257
பெருங்காயம் ... ... 267
மலைவேம்பு ... ... ... 275
நல்ல பால் ... ... 278
ஸ்ரீ சிதம்பரம் அத்வைத ஸபா ... 283
எலிமெண்டரி பாடசாலைகள் தோட்ட அபிவிருத்தி ... ... 290
உபாத்தியாயர்களுக்குப் போதனு முறைப் பாடசாலை ... ... 297
மிஸ்டர் ரவீந்திரநாத் டாகோரின் நன் கொடை ... ... ... 300
புதுக்கோட்டை ஸ்ரீ மார்த்தாண்ட தொழிற் பொருட் காட்சி ... ... 308
பொன் விளைவு ... ... 314
சீனுவில் ஸோப்புத் தொழிற் சாலை ... 317
பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் முன் கல்வி இலாகா வைப்பற்றிய ராவ்பஹதூர் மிஸ்டர் M. ரங் காச்சாரியாரின் சாட்சியம் ... ... 319
இந்தவிலோன் ரயில்வே ... ... 319
மைனரின் வயது; ஜப்பான் பூகம்பத்தில் இறந்தவர்கள் ... ... 322
மதுரை மிஸ்டர் பி. நாராயணய்யர், பீ. ஏ., பி. எல்., காலஞ்சென்றுர் ... 324
ஏகாந்தம் ... ... ... 336
தறிகாய் ... ... ... 350

பக்கம்

ஆகாயவிமானத்தில் உலகத்தைச் சுற்றி வருதல் ... ... ... 353
சென்னையில் ஸ்திரீகளின் காலேஜ் ... 371
ஜப்பான், ஜாவா இவைகளிலிருந்து நம் இந்தியாவில் இறக்குமதியான ஸாமான்களின் விலை விவரம் ... ... 375
தபால் தந்தி இலாகாக்கள் ... ... 385
சென்னையில் கம்பியில்லாத்தந்தி ... 393
ஸர்ப்பக்கடி ... ... ... 398
தென்னிந்தியாவில் பெய்த மழையின் அளவு 419
இந்தியாவுக்குக் கடன் கொடுப்போரின் சட்டம் ... ... 421
ஓர் அற்புத சிருஷ்டி ... ... 436
விவேக போதினி 6-ம் தொகுதியின் அட்டவணை; லார்டு மார்லியின் சித்திரப்படம் 479

## சித்திரப்படங்களின் அட்டவணை

தசாவதாரம்—சிவனது வேடஅவதாரம் ... 1
மத்ஸ்யாவதாரம்—கூர்மாவதாரம் ... 37
திருவண்ணமலை ஸ்வாமிகள், பால்யப்பருவம் 49
வராஹாவதாரம்—வாமனுவதாரம் ... 54
ராமாவதாரம்—நரஸிம்ஹாவதாரம் ... 81
விக்டோரியா பப்ளிக்ஹால் ... 110
வால்மீகி ருஷி வேடனைச்சபிக்க இராமாயணம் பிறந்தது ... ... 125
மாட்சிமைதங்கிய லார்டு ஹார்டிஞ்சு—லேடி ஹார்டிஞ்சு ... ... 165
முதலை, குரங்கை ஈரல்எடுத்துவரக் கொண்டு வருவது—குரங்கு ஆப்பைப் பிடுங்குவது 205
பிருஹதீசுவரர் கோயில், தஞ்சாவூர்—தஞ்சாவூர் அரண்மனை, உட்பாகம் ... 245
காலஞ்சென்ற ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர். பி. ஆர். சுந்தரமய்யர் ... ... 284
திருவள்ளுவர்... ... ... 293
ஸ்வாமி ராமகிருஷ்ணபரமஹம்ஸர்—ஸ்வாமி விவேகானந்தர் ... ... 325
மிஸடர். வி, பி. மாதவராவ், ஸி. ஐ. ஈ.—ஆனரபில் மிஸ்டர், டி. வி. சேஷகிரி அய்யர் ... ... ... 361
சில தஞ்சாவூர் காட்சிகள் ... .. 401
ரிப்பன் கட்டடங்கள்(சென்னை புதிய முனிஸிபல் ஆபீஸ் ... ... 405



சபரி ராமருக்கு அன்புடன் விருந்தளித்தல்



# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்தஹு ஆனிமீ=1914-ஹு ஜுலைமீ } பகுதி 1

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 6. தாயுமானவர்

### 8. உள் நாட்டம்

அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே
    யம்மாயை யில்லாமையே
ஆமெனவு மறிவுமுண் டப்பாலு மறிகின்ற
    வறிவினை யறிந்துபார்க்கின்
எண்டிசை விளக்குமொரு தெய்வவருளல்லாம
    லில்லையெனு நினைவுமுண்டிங்
கியானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே
    யின்பமெனு மன்புமுண்டு
கண்டன வெலாமல்ல வென்று கண்டனை செய்து
    கருவி காணங்களோயக்
கண்மூடி யொருகணமிருக்க வென்றாற்பாழ்த்த
    கர்மங்கள் போராடுதே
பண்டையுள கர்மமே கர்த்தாவெனும் பெயர்ப்
    பக்ஷநானிச் சிப்பனோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூரணானந்தமே.

(பரிபூரணானந்தம்—4)

### 9. தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமும் வழிபாடும்

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
    வன்பினா லுருகிவிழிநீர்
ஆருக வாராத முத்தியின தாவேச
    வாசைக்கடற்குண் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
    தழுதழுத்திட வணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
    தன்னருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன் முதன்முனிவோர்கள்
    தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே
    சொரூபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லாலடிக்குள் வளர்
    சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
    சின்மயானந்த குருவே.

(சின்மயானந்த குரு—1)

### 10. தக்ஷிணாமூர்த்தி உபதேசம்

கூடுதலுடன் பிரிதலற்று நீர்த்தொந்தமாய்க்
    குவிதலுடன் விரிதலற்றுக்
குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான
    குறியற்று மலமுமற்று
நாடுதலு மற்றுமேல் கீழ் நடுப்பக்கமென
    நண்ணுதலு மற்றுவிந்து
நாத மற்றைவகைப் பூதபேதமு மற்று
    ஞாதுருவின் ஞானமற்று
வாடுதலு மற்று மேலொன்றற் றிரண்டற்று
    வாக்கற்று மனமுமற்று
மன்னுபரிபூரணச் சுகவாரி தன்னிலே
    வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
    சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
    சின்மயானந்த குருவே.

(சின்மயானந்த குரு—8)

# CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தமி | இங் | தமிழ் | வார | ஆநந்த௵ ஆடிமூ { சாலிசகம் 1836 கலியப்தம் 5015 } பசலி 1324 கொல்லம் 1089 { 1914௵ ஜூலை—ஆகஸ்டுமூ |
|---|---|---|---|---|---|
| ரபு | 21 | 16 | 1 | வியா | நவ 56-24, அசு 29-35, திரு 2-41, தை 23-54, திவி 18-26, ரா 24-22, அக 31-26, கடகரவி 4-29, தரு 3, ரிசபுத 5-21, சூன்யதிதி தக்ஷிணாயன - ஆடிபண்டிகை சூன்யார்கம். |
| சு | 22 | 17 | 2 | வெ | தச 60-0, பர 35-12, சூல 43-55, வணி 28-12, தியா—0—0 மக 3, சுக் 7-2, கடக கிரு தசமிதிதி கரிநாள். |
| ச | 23 | 18 | 3 | சனி | தச 0-44, ✱ கார் 40-46, கண் 44-41, பத் 0-44, திவி 8-9, மிதுனசனி 37-28, கார் உப |
| ரசெ | 24 | 19 | 4 | ஞா | ஏகா 4-23, ரோ 45-21, விர் 44-38, பர 4-23, திவி 23-59, பூச 1, ரவி 35-5, பூர 3, செ 48-0, மக 4, சுக் 60-0, சர்வஏகா |
| சு] | 25 | 20 | 5 | திங் | துவா 6.55, மிரு 48-55, தரு 43-45, தை 6-55, திவி 0-11, அக 31-26, பிரதோ |
| | 26 | 21 | 6 | செ | திர 8-21, திரு 51-9 வியா 41-49, வணி 8-21, திவி 10-42, மாசி மழை 5-க்குள் |
| புசு | 27 | 22 | 7 | புத | சது 8-25, புன 52-10, ஹர் 38-53, சகு 8-25, திவி 21-39, திரு 4, புத 10-9 பூர 1, சுக் 51-26, சர்வ அமா ஆடிஅமா |
| ர | 28 | 23 | 8 | வியா | ● அமா 7-17, பூச 52-0, வஜ் 34-59, நா 7-17 திவி 11-7, பூச 2, ரவி 5-32, தீபஸ்தம்ப பூ, இஷ்டி |
| செ | 29 | 24 | 9 | வெ | பிர 5-0 ஆயி 50-41, வித் 30-9 பவ 5-0, திவி 29-13, அக 31-24, சிரா சுத் சிம்மாய 20-41 பூர 4, செ 41-42, சந் தரி |
| புசு | 1 | 25 | 10 | சனி | துதி 1-37, திரு 55-49, மக 48-32, விய 24-33, கௌ 1-37, திவி 19-36, புன 1 புத 48-0, பூர 2, சுக் 45-0 விய சிரா |
| ர | 2 | 26 | 11 | ஞா | சது 52-18, பூர 45-31, வரி 18-16, வணி 24-52, திவி 7-32, பூச 3, ரவி 36-4, சது விரு நாகசதுர்த்தி [கரிநாள் |
| | 3 | 27 | 12 | திங் | பஞ் 46-45, உத் 42-0, பரி 11-25, பவ 19-31, திவி 2-28, நாகசெருடபஞ்சமி பிரவாகத்திஞல்சிலவிடங்களில்சவுக்கியம் |
| புசு | 4 | 28 | 13 | செ | சஷ் 40-50, ஹஸ் 38-6, சிவ 4-13, சித் 52-31, கௌ 13-47, திவி 1-38, ரா 25-22 அக 31-22, புன 2 புத 40-17 பூர 3 சுக் 9-48, சஷ் உப |
| செ | 5 | 29 | 14 | புத | சப் 34-41, சித் 34-1 சா 49-7 கர 7-47, சே 0-44, ரா 15-42, உத் 1-செ 35-7 சப் விரு சீதளாசப்தமி மழை 3-க்குள் |
| ரகு | 6 | 30 | 15 | வியா | அஷ் 28-39, சுவா 29-56, சுப 41-33, ப 28-39, ரா 11-41, பூச 4 ரவி 6-35, அவி 1-வக்கு 46-17, அஷ்டமிதி |
| புசு | 7 | 31 | 16 | வெ | நவ 22-48, விசா 26-5 சுப் 34-15 கௌ 22-48, ரா 14-12, புன 3 புத 27-17, பூர 4 சுக் 5-29, திதித்வயம் வரலக்ஷ்மி விரு |
| | 8 | 1 | 17 | சனி | தச 17-22, அனு 22-41, பிரா 27-15, கர 17-22, ரா 4-44, அக 31-17, ஏகாதிதி |
| ர-பு | 9 | 2 | 18 | ஞா | ஏகா 12-29, கே 19-50, மா 20-53, பத் 12-29, ரா 7-51, ஆயி 1 ரவி 36-5 கடகபுத 9-53, சர்வ ஏகா வைசிரா |
| செசு | 10 | 3 | 19 | திங் | துவா 8-19, மூல 17-45, வை 14-58, பா 8-19, திவி 13-45, ரா 15-57 கன்னிசெவ் 28-31 |
| | 11 | 4 | 20 | செ | திர 5-8, பூரா 16-39, விஷ் 9-57 தை 5-8, ரா 5-4, கரிநாள் மழை4க்குள் [உத் 1 சுக் 1-12, பிர |
| புசு | 12 | 5 | 21 | புத | சது 3-3, உத்தி 19-40, பிரி 5-47, வணி 3-3, திவி 26-42, அக 31-14, பூச 1 புத 8-30, கன்னி சுக் 58-0 யஜுர்வேதிசிராவணம் ரக்ஷாப சிர கர்ம சர்ப போ பூ சிர உப |
| ர | 13 | 6 | 22 | வியா | ○ பௌ 2-8, திரு 17-52, ஆயு 2-33, பவ 2-8, திவி 28-17, ஆயி 2 ரவி 5-30, இஷ்டிரிக்வேதி சிராவணம் காயத்திரிஜபம் [24-8, சத 2 ராகு மக 4 சேது 36-46, |
| புரா | 14 | 7 | 23 | வெ | பிர 2-32, அவி 20-21, சௌ 0-23, சோ 58-49, கௌ 2-32, ரா 8-16, சிரா பகு பூச 2 புத |
| செசு | 15 | 8 | 24 | சனி | துதி 4-14, சத 24-2, அதி 58-56, கர 4-14, ரா 10-8, உத் 3 செ 21-58 உத் 3 சுக் 54-0, |
| ரபு | 16 | 9 | 25 | ஞா | திரு 7-3, பூரட் 28-46, சுக 59-28, பத் 7-3, ரா 23-53, அக 31-10 ஆயி 3 ரவி 34-56, பூச 3 புத 27-13, சங் சது |
| | 17 | 10 | 26 | திங் | சது 10-52, உத் 34-24, திரு 60-0, பா 10-52, தியா—0—0 மழை 7 க்குள் |
| புசு | 18 | 11 | 27 | செ | பஞ் 15-24, ரே 40-34, திரு 0-36, கௌ 15-24 திவி 7-29, பூச 4 புத 30-20, உத் 4 சுக் 50-15, சஷ்டிதிதி |
| | 19 | 12 | 28 | புத | சஷ் 20-16, அசு 47-0 சூல 2-3, வணி 20-16, ரா 3 47, அதிதி |
| ரசெ பு] | 20 | 13 | 29 | வியா | சப் 25-8, பா 53-15, கண் 3-36, பவ 25 8, திவி 13-30, அக 31-8, ஆயி 4 ரவி 3-45, உத் 4 செ 15-15, ஆயி 1 புத 33 30, சப்தமிதிதி ஜன்மாஷ்டமி காளாஷ்டமி தசாபல அகஸ்திய உதயம் 3-45, |
| பு | 21 | 14 | 30 | வெ | அஷ் 29-25, ✱ கார் 59-1 விர் 4-54, கௌ 29-25, திவி 26-8 பிரசாஸ்தபுத 55-7 அஷ்டமிதிதி சூரி ஸா ம கார்உப |
| புசு | 22 | 15 | 31 | சனி | நவ 33-19, ரோ 60-0, தரு 5-45, தை 1-22, ரா 11-7, ஆயி 2 புத 34-2, ஹஸ் 1 சுக் 17-28 கட கிரு நவமிதிதி |
| ர | 23 | 16 | 3 | ஞா | தச 35-59, ரோ 3-49, வியா 5-53, வணி 4-39, திவி 18-41, வி மாரவி 32-4, சூன்யதிதி விஷ்ணுபதி [ஸ்ரீஜயந்தி |

| | | | |
|---|---|---|---|
| | | சனி | புத |
| ராகு. | 3-மிதுனச 18-கடகபு | | ரவி |
| குரு. | 19-கன்செ 21 கன்சுக் | | செ,சு கே |
| | | | |



விவேக போதினி

தொ. 7.] ஆனந்த௵ ஆனிமீ [பகுதி. 1

## மோக்ஷ ஸோபானம்

### THE STEPS TO THE GOAL

(2) கர்மயோகம்

பீஷ்மர் சரித்திரம் (தொடர்ச்சி)

இதுவரையில் கூறிவந்தவைகளிலிருந்து, பீஷ்மர் தமது வாழ்நாள் முழுவதும் கர்ம யோகமுறைப்படியே தமது காரியங்களை எல்லாம் நடத்தி வந்தும், முக்யமாக மூன்று விஷயங்களில் அவர் கர்மயோக அனுஷ்டானம் எல்லோருக்கும் வெளிப்படையாக ஓங்கி விளங்கியது என்பது தெரியவந்திருக்கும். அவைபாவன:— (1) தகப்பனாரை திருப்திப் படுத்த ப்ரஹ்மசரியம் பூண்டது: (2) பூண்டபிரஹ்மசரியத்தை நிலைநிறுத்தியது: (3) தமக்கு ஏற்பட்ட சில தர்மவிஷயக் குழப்பத்தால் கொடியவர்பாலிருக்கும்படி நேர்ந்தும், ஒழுங்கு தவறாது நடந்துகொண்டது என்பவைகளே. இவைகளுள், முன்னர் முதலிரண்டையும், மூன்றாவதில் பீஷ்மருக்கு ஏற்பட்ட குழப்பம் இன்னது, அது இவ்வாறு அவரைக் கொடியவர் பக்கம் இருத்திவிட்டது என்பதையும் எடுத்து விளக்கியாகிவிட்டது. இங்கு, இப்படிப்பட்ட கஷ்டநிலை அவருக்கு உண்டான போதிலும், அவர் இவ்வாறு கர்மயோக ஒழுங்கு தவறாது நடந்து கொண்டார், என்பதை எடுத்து விவரிப்போம்.

'பீஷ்மர் தர்மாத்மாவாயினும், யுத்தகாலம் வந்தால் நம்புறம் இருந்துதான், உதவி புரிவார்' என்று நம்பிக்கொண்ட துர்யோதனன், யார் புத்திமதியையும் கவனியாது, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவையும் உதறித் தள்ளிவிட்டு மஹாபாரத யுத்தம் தொடங்கிவிட்டான். யுத்தத்திற்கு முன்னர், எல்லோரும் ஒரு கூட்டம் கூடி, யுத்தவிஷயத்தில் ஆலோசிக்கலாயினர். அதில், பீஷ்மர் தமது கஷ்டநிலையையும் தாம் அனுஷ்டிக்கவேண்டிய கர்மயோக வழியையும் நன்கு ஆராய்ந்து, துர்யோதனனை நோக்கி 'அப்பா, நான் உன்னிடமே இருந்து பழகிவிட்டேன். ஆதலால் ப்ரியம் பாண்டவர்களிடமிருந்தபோதிலும், நான் உன்புறமே இருந்துதான் உதவிசெய்வேன். அந்த விஷயத்தில் ஒருவித ஸந்தேஹமும் கொள்ளாதே; பாண்டவர்களுக்கு ஒருவித தேஹஸஹாயமும் செய்யும் நிலை எனக்கு இல்லை. ஆனால், என் மனம் அவர்கள் ஜயத்தையும், உன் அபஜயத்தையும் தான் கோரிக்கொண்டிருக்கும். இந்த விஷயத்தைக்குறித்து நீ துக்கித்துப் பயனே இல்லை. இதற்கு அறிகுறியாக, நான் பாண்டவர்களை மாத்திரம், யுத்தத்தில் கொல்லவேமாட்டேன். அவர்களும், உன்னைப்போல எனக்கு அருமைப்பேரர்கள் தானே! தந்தை இழந்து தவிப்பவர்களல்லவா? மேலும், அவர்கள் தர்மச்சிறப்பிற்கும் உன் அதர்மக் கொடுமைக்கும் எவ்வளவு தூரம்? அவர்களை என் கையால் கொல்ல எனக்கு எப்படியடா மனம் துணியும்? இப்படி இருப்பினும், நீ உணராது அவர்களுக்கு ஒருவித ரஹஸ்ய உதவியும் புரிந்துவிடுவேன் என்று எண்ணாதே. மேலும், பாண்டவர்கள் பக்கமிருக்கும் சிகண்டி, முதலில் பெண்ணாகவிருந்து ஆணானவன். அவனைக்கண்டால் முன் ஞாபகம்வர, நான் சண்டையிடமாட்டேன். ஆதலால், அவன் என்னை அதிகமாகத் துறக்

கிடாமல் நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வளவுதான். என் மனத்தில் உள்ள ரஹஸ்யமான குழப்பங்களை வெளியிட்டு விட்டேன் உங்களுக்கு. இவைகளில் பாண்டவர்களுக்கு முன்னதை வெளியிடவே மாட்டேன். பின்னதை வெளிபிடத்தகுந்த தருணம் வந்தாலொழிய வெளிபிடேன். ஆகவே, இவைகளால் நான் உனக்குச் செய்யப்போகும் உதவிக்கு யாதொரு குறைவும் வாராது. அதிகமாகச் சொல்லுவானேன். நான் உயிரோடிருந்து போர் செய்யும்வரையில், பாண்டவர்களுக்கு ஜயமே இல்லை என்று நம்பி இருக்கலாம் நீ' என்று தமது கர்மயோக ஒழுங்கை திடமாக வெளியிட்டார். அப்பொழுது நடந்த யோசனை முடிவில் துர்யோதனன் பீஷ்மருக்கு ஸேனாபதிப் பட்டாபிஷேகம் செய்தான். மேல், அங்கு நடந்த பாகுபாட்டில் பீஷ்மர், கர்ணன் மிகபராக்கிரமசாலியாயினும், அவனுக்கிருந்த சாபக்கொடுமை கெட்டகாரியப் பிரியம் இவைகளால் அவனை அர்த்தரதர் என்ற தாழ்ந்த ஜாதிவீரருள் சேர்த்து அர்ஜுனனைவிட எவ்வளவோ தாழ்ந்தவன் என்று கூறிவிட்டார். இதனால், கர்ணனுக்கு மிகுந்தகோபம் வந்துவிட, “இந்த பக்ஷபாதியான பீஷ்மர், சண்டை செய்கிறவரையில் நான் வில்லம்பெடுத்துப் போர் புரிவதில்லை,” என்று அவன் சபதம்செய்து, யுத்தத்தைவிட்டு ஒதுங்கிவிட்டான்.

இப்படி எல்லாம் ஆக, தகுந்த ஸமயத்தில் பாரதப் போர் தொடங்கியது. பாணப்ரயோகம் தொடங்குமுன் பஞ்சபாண்டவர்களும் கிருஷ்ணனும் பீஷ்மரிடம்வந்து அடிபணிந்து, யுத்தம் தொடங்க அனுமதிகேட்டனர். என்ன செய்வார் பீஷ்மர்! பேரன்மார்கள் எல்லோரும் சேர்ந்து வாழமுடியாமல் போய்விட்டதேஎன்ற துக்கம் பாதித்தது ஒருபுறம்: பேரர்கள் என்றால் இந்த தர்மாத்மாவான பாண்டவர்களல்லவோ பேரர், துர்யோதனாதியரை பேரர் என்று மதிப்பது எப்படி என்ற ஸந்தோஷமும் வெறுப்பும் ஒருபுறம்: இப்படிப்பட்ட பேரப்பிள்ளைகளுக்குஸஹாயம் ஒன்றும் செய்யமுடியவில்லையே; இந்தப் பாழும் பாவிகள் பக்கம் இருக்கும்படி யாகிவிட்டதே என்ற பதைப்பு ஒருபுறம்: ஆக இவ்வாறு பீஷ்மர் மனம் சின்னபின்னமாகச் சிதறியது. 'நாம்தான், இந்தக் கஷ்டஸமயத்திலும் நடக்கவேண்டிய வழியைத் தீர்மானித்தாகிவிட்டதே! இனி என்ன சஞ்சலம்,' என்று மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டிருக்க பகவான்பீஷ்மர் மனோநிலையைக் கண்டு மெச்சிஅனுக்ரஹம் நிறைந்த திருஷ்டியுடன் அவரைக்கண்கொட்டாது நோக்க தர்மபுத்திரரைத் தடவிக் கொடுத்துக்கருணையுடன் நோக்கி அவர் கூறுகிறார். 'ஹே தர்மநந்தனா! பணம் பொல்லாது; எல்லோரும் அதற்கு அடிமையே ஒழிய அது ஒருவருக்கும் அடிமையாவதில்லை. இதனால் நான் துர்யோதனாதியரிடம் கட்டுப்பட்டுவிட்டேன். உனக்கு ஒரு ஸஹாயமும் செய்யமுடியாது ' என்றால். உன் சிறப்பை நோக்கில் உனக்கே நான் உழைத்துத் தீர்த்திருக்கவேண்டும். நான் அதற்குக் கொடுத்துவைக்கவில்லை. ஆதலால் ஜயமடைந்து சீரும் சிறப்புமாக நீ வாழக்கடவாய் என்று மனப்பூர்வமாகத்தான் எனக்கு இப்பொழுது உங்களுக்கு ஆசீர்வாதம் செய்ய முடியும். இது வெறும் வார்த்தைமாத்திரம் அல்ல என்பதற்கு வேறு விஷயமும் கூறிவிடுகிறேன். நான் தாத்தா என்று அன்பால் என்னிடம் சண்டையில்தயங்காதீர்கள். யுத்தத்தில் யார் வந்தாலும் கொல்லவேண்டியது க்ஷத்ரியன் பொது தர்மம். அதன்படி நீங்கள் என்னைக் கொல்லலாம். எனக்கு அதுதான் இப்பொழுது மிகத் திருப்திகரமானது. நான் சண்டைசெய்யும் வரை உங்களுக்கு ஜயம் வரப்போகிறதில்லை. ஆதலால், என்னை யுத்தகளத்தில் அடித்துத்தள்ள உங்களுக்கு மனப்பூர்வமாக அனுமதிகொடுக்கலாம் நான். ஆதலால், நிர்ப்பயமாக யுத்தம் தொடங்கி, என்னைக்கொன்று, இதோ இருக்கிறாரே இந்தப் பரமாத்மா கிருபையால் உங்கள் தர்மசிந்தைக்கேற்ற சிறப்பைப் பெறுங்கள்' என்று மொழிந்தார்.



தர்மபுத்திரருக்கு அடங்காத் துயரம் வந்து கவிந்துகொண்டது. 'தாதா! இப்படியா வந்துவிட்டது எங்கள் விதியின் கொடுமை! உங்களைக் கொன்றுவிட்டா நாங்கள் சிறப்புற்று ஓங்கவேண்டும். இனிமேல், என்ன செய்வது? உங்களைக் கொல்வதற்கு உபாயம் ஏதாவது உண்டா?' என்றார். அதற்கு பீஷ்மர் 'அப்பா! அது கூற இது தருணம் அல்ல. உங்கள் மனம் என்மேல் அன்புடனிருக்கையில் அது, கூறினாலும் உங்களுக்குப் பயன்படாது. நான் இப்பொழுது கூறவுங்கூடாது. யுத்தம் நடக்கட்டும். எப்பொழுது நான் செய்யும் சண்டையால் நான் இறந்தால்தான் மேல் சண்டை நடத்தமுடியும் என்று உங்கள் அன்பெல்லாம் நீங்கி, உங்களுக்கு ஓபாது படுகிறதோ அப்பொழுது வாருங்கள் நான் கூறி விடுகிறேன். அதுவரையில், பொறுங்கள். நாழிகையாகிவிட்டது; போய் யுத்தம் தொடங்கலாம். என்னைக்கொல்ல நீங்கள் என்ன உபாயம் செய்தாலும் எனக்கு திருப்திதான் என்பதை மறவாது உத்ஸாஹமாய்ச் சண்டையிடுங்கள்” என்று கூறிப் பாண்டவர்களை அனுப்பிவிட்டார். மேலவர்கள் துரோணாதி ஆசாரியர்களைக்கண்டு ஆசீர்வாதமும் யுத்தம் தொடங்க அனுமதியும் பெறுங்கால், ஒவ்வொருவரும் முக்யமாக த்ரோணர், தமது குறைவு சிறப்புக்களைக் கூறி தம்மைக் கொல்லும் விஷயத்தை மனக்கனிவுடன் பாண்டவர்களுக்கு எடுத்து விளக்கிவிட்டனர். இதிலிருந்து இந்த மனக்கனிவான ஸமயத்திலும் பீஷ்மர் தமதுமரணோபாயம் கூறாதிருந்தது அவர் கர்மயோகச் சிறப்பை எப்படிக் காட்டுகிறது பாருங்கள்!

கர்மயோகப்படி மனதை பாண்டவர் ஜய ஆசீர்வாதத்திலும், தேஹத்தை துர்யோதன ஸஹாயத்திலும் பீஷ்மர் செலவிட்டு மிகுந்த உக்ரமாகச் சண்டை செய்தார் முதல் பத்து நாள். இதில் இவர் சண்டை செய்த சிறப்பை மஹாபாரதம் பீஷ்ம பருவத்தில் விஸ்தாரமாகக்கூறப்பட்டிருக்கிறது. இவர் சண்டைசெய்த மாதிரியைப்பார்த்தால்,எல்லோரும் இவருக்கு துர்யோதனனிடம் மிகுந்த பற்று என்றும் பாண்டவர்களிடம் மிகுந்த வெறுப்பென்றும் எண்ணுவார்கள். இந்த பத்துநாள்களுள் மூன்றாம்நாளும் ஏழாம் நாளும் இவர்சண்டைவெகு உக்கிரமாகப் போய்விட, பகவான் ஆயுதமெடேன் என்று செய்த உறுதிமொழியைக் கூட விட்டு, சக்ராயுதத்தை எடுத்துக்கொண்டு ஓடி பீஷ்மர் மேல் விட்டு அர்ஜுனனை தைர்யப்படுத்தவேண்டியதாகிவிட்டது. பகவான், பீஷ்மரை நோக்கி ஓடிவரும்பொழுது, அவரது குறைகளை எடுத்துக்காட்டி அவரைப் புண்படுத்திக்கொண்டுவர, அதையும் மஹாபக்திமானான பீஷ்மர், தமது கர்மயோகநிலையை நினைப்பூட்டுவதாகக்கொண்டு பகவானுக்கு ஸாஷ்டாங்க தண்டனிட்டார் யுத்தகளத்திலேயே. இப்படி கோரயுத்தம் செய்கையிலேயே தன்னிலை மறவாதிருந்தார் பீஷ்மர்.

இப்படி பீஷ்மர் என்னதான் சண்டைசெய்தும் இரு கக்ஷியும் மாறி மாறி ஏறி இறங்கி வந்ததே ஒழிய பாண்டவர்கள் பக்கம் அபஜயக் குறிகள் காணப்படவே இல்லை. வரவர துர்யோதனனுக்கு பீஷ்மரிட மிருந்த நம்பிக்கை குறைந்துகொண்டே வந்தது. எட்டாம் நாள் முதல், அவன் தன் சஞ்சலத்தை பீஷ்மரிடம் வாய்விட்டுக் கூறவும் தொ

டங்கிவிட்டான். யுத்தம் முடிந்து எட்டாம் நாள் வந்ததும் துர்யோதனன் பீஷ்மரை நோக்கி, 'தாத்தா நீர் என்ன சண்டை செய்தும், பாண்டவர்கள் கைதாழ்வதில்லையே! என்ன செய்வது' என்று கேட்கத் தொடங்கினான். அதற்கு பீஷ்மர், 'அப்பா நான் அப்பொழுதே சொல்லவில்லையா, உன் கக்ஷி ஓங்காது நீ அநியாயக்காரனாய் இருப்பதால்,' என, துர்யோதனன் 'நான் உம்மை நன்றாகச் சண்டைசெய்யச் சொன்னால், என்னைக் குற்றங்கூறிப் புண்படுத்த இந்த ஸமயம் தானா பார்த்தீர்?' என்று துக்கித்தான். அதற்கு பீஷ்மர், 'நாளை என்னாலானதை முழுவதும் பார்த்துவிடுகிறேன்' என்று வாக்களித்து அவனை அனுப்பிவிட்டார். 'நம் மனதாரச் சண்டையிட்டுப் பார்த்துவிடுவோம் நாளை' என்று தீர்மானித்து, மறுநாள் கொடியபோரும் செய்தார். பாண்டவர்களுக்கு, இனி பீஷ்மர் உயிரோடிருந்தால் ஜயமே வாராது; ஆதலால் அவரை வெட்டிச் சாய்த்துவிடவேண்டியதுதான் என்ற யுத்த ஆவேசமும் குழப்பமும் அன்று மாலை உண்டாகிவிட்டது. அவர்கள் கை அன்று வெகு தாழ்ந்துவிட்டபடியால் பீஷ்மரிடம் இருந்த தாத்தா என்ற அன்பும் சற்றுக்கழன்றுவிட்டது. என்னசெய்தென்ன? காமாலைக்காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்தானே. பீஷ்மர் என்ன செய்தும், அவர் முதலில் கூறிய தமது பாண்டவ கருணையே துர்யோதனன் மனதைவிட்டு அன்று அகலவில்லை. அவர் செய்த ஒவ்வொரு காரியத்தில் அவர் பாண்டவர் பக்ஷபாதத்தால் புகுந்துவேலைசெய்யாது மழுப்புகிறார் என்றுபட்டது அவனுக்கு. அன்று மாலை, பீஷ்மரை நன்றாக ஒளியாது கேட்டு இந்த விஷயத்தை முடித்துவிடவேண்டும் என்ற பரபரப்பு துர்யோதனனுக்கு அப்பொழுதே உண்டாகிவிட்டது. மாலைப்பொழுது எப்பொழுது வரும் என்று கூலிக்காரன்போல மேற்கே அடிக்கடிபார்த்துக்கொண்டு நின்றான் துர்யோதனன். பாண்டவர்களோ களைத்துநடுநடுங்கிக்கொண்டு நின்றனர் அன்று.

பீஷ்மர் மரணத்தைக்கூடத் தாம் அனுஷ்டித்துவரும் கர்மயோக அங்கமாகவே எப்படி ஏற்றுக்கொண்டார் என்பதை மேல் எடுத்து விவரிப்போம்.

---

# ஸதாசிவப்ரம்மம்

என்ற

## ஸித்தரின் திவ்ய சரித்திரம்

## SADASIVA BRAHMAM (*A Life Sketch*)

'ஸதாசிவப்ரம்மம்' என்றுநாமம்பூண்ட மஹாத்மா தென் இந்தியாவில் செழித்தோங்கி புகழ்பெற்ற இராஜயோகீச்வரர்களில் மிகப் பிரக்யாதிபெற்று ஞானபரராய் வாழ்ந்து வந்த பிராஹ்மணோத்தமர். இஞ்ஞானியாரை, 'ஸதாசிவேந்திர ஸரஸ்வதி' என்றும் சிலர் சொல்வார்கள். இவர் ஸுமார் இருநூறுவருடங்களுக்கு முன், மாஞ்சோலையாலும் தென்னஞ்சோலையாலும் அலங்கரிக்கப்பெற்ற மிகப் பரிசுத்தமான காவேரியாற்றின் வளம்பொலிந்த தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணம் என்றசிறப்புற்றோங்கிய பட்டணத்துக்கருகாமையிலுள்ள 'திருவசநல்லூர்' என்று பெயர் பொருந்திய வளப்பம் மிகுந்த கிராமத்தில் பிறந்தவர். இக்கிராமம், தொன்று தொட்டு பண்டிதர்களுக்காகப் பெயர்பெற்றது. இவர் 'ஜானகீபரிணயம்' என்ற நாடகமியற்றிய மிகப் பிரஸித்தமான ஸ்ரீ இராமபத்ர தீக்ஷிதரவர்களிடம் இலக்கண இலக்கியங்கள் பயின்றுள்ளவராம். 'ஐயாவாள்' என்று பிரசித்திபெற்ற ஸ்ரீ வெங்கிடேச சாஸ்திரிகளவர்களும், மஹாபாஷ்பம் ஸ்ரீ கோபால கிருஷ்ணசாஸ்திரிகளவர்களும், நம்முடைய பரமாநந்தருடன் கூடப்படித்தவர்களாம். நம்முடைய பிரம்மஞானியார், அறிவில் மிகத்தேர்ச்சிபெற்றபின், இவருடைய ஸம்ஸாரம், இவர் வாஸம் செய்துவந்த கிராமத்துக்கருகாமையிலுள்ள ஒருகிராமத்தில் புஷ்பவதியானாளென்ற ஸமாசாரம் தெரியவந்ததும், நாட்டு வழக்கத்தை பொத்து இந்த ஸந்தோஷகரமான ப்ரகரணத்தை முன்னிட்டு இவருடைய தாயார் அன்றையதினம் மற்றைய நாட்களைக்காட்டிலும் கொஞ்சம் விசேஷமாக விருந்துணவுகள் செய்தாள். அதனால் நம்முடைய மஹானுக்குச் சாப்பாட்டுக்குச் சற்று தாமதமேற்பட, ஸம்ஸாரம் பெரியவளாய் விட்டாளென்ற ஸங்கதி தெரியவந்த வுடனேயே 'சாப்பாட்டுக்கு இவ்வளவு தாமதமாய்விட்டதே? இனி அவளும் நம்முடைய கிரஹத்துக்கு வந்துவிட்டால் நம்முடைய கதி நிரம்பமோசமாய்ப் போய்



விடு'மென்று முழு நம்பிக்கை கொண்டு அன்றைக்கே, ஸம்ஸார ஸாகரத்தில் முழுகக்கூடாது, பரலோகஸாதனத்தை இப்பொழுதே தேடவேண்டுமென்று தம் மனதில் திடச்சித்தஞ் செய்துகொண்டு தம்முடைய வீட்டைவிட்டு அகன்று வெளியில் புறப்பட்டுவிட்டதாகப் பிரஸித்தி. இப்படிப்புறப்பட்ட சிலநாட்களுக்கெல்லாம் இவருடைய யோக்கியதைக்கு அனுகுணமாக ஒரு ஸத்குருவினுடைய பரிச்சயம் இவருடைய ஜன்மாந்தர விசேஷத்தால் இவருக்குக் கிடைத்தது. இத்திவ்ய புருஷர் பெயர் 'ஸ்ரீபரமசிவேந்திர ஸரஸ்வதி.'

இந்தப் பரமோத்தமருடைய ஸாமர்த்தியத்தையும் புகழையும் பற்றிப் புகல நம்மாலியலாது. நம்முடைய ஸித்தர் தம்முடைய குருவினிடம் வேதாந்த சாஸ்திரத்தைப் பயின்றதும், யோகாப்யாஸத்தில் மிகத் தேர்ச்சி பெற்று, இக்குரு ஸங்கீத சாஸ்திரத்திலும் நிபுணரானதினால், அதிலும் சொற்ப பரிச்சயம் செய்து வந்ததாகவும் தெரியவருகிறது. இக்காலத்தில் தான் நம்முடைய ஞானியார் அனேக அபூர்வ கிரந்தங்களை இயற்றினாராம். அவைகளில் 'பிரம்ம ஸூத்திர விருத்தி,' 'ஆத்ம வித்தியா விலாஸம்,' 'ஸித்தாந்த கல்பவல்லி' 'அத்வைத ரஸ மஞ்சரி,' இவைகள் முக்கியமானவைகள். இம்மஹான் செய்திருக்கும் கீர்த்தனைகள் மிக அருமையானவை. நம்முடைய ஸ்ரீமான், சாஸ்திர நுட்பமான விஷயங்களைப்பற்றித் தம்முடைய குருவுடன் பலதடவைகளில் வாதம் செய்து வந்ததாகவும், இவருடைய அதிகநுட்பமான கேள்விகளுக்கு உத்தர மெளிதி லளிக்க முடியாது இவருடைய குருவே சிற்சில ஸமயங்களில் மயங்கினாராம். இச்சிறந்த குருவைத் தரிசிக்கப் பல விடங்களிலிருந்து வித்வான்கள் வருவதுண்டாம். அவர்களெல்லாம் நம்முடைய யோகீச்வரர் கேள்விகள் கேட்டு, அவர்கள் விடையளிக்க முடியாது, பலதடவைகளில் மிக மனவருத்தமடைந்து, ஒரு ஸமயத்தில் மனம் பொறுது நமது ஸித்தரைப்பற்றி குருவினிடத்தில் புகாராவாகத் தெரிவிக்க, அக்குரு கோபம் மூண்டு 'ஸதாசிவா! எப்பொழுது உன் வாயடைக்கும்,' என்றுகடிந்துகூற, 'நம்முடைய திவ்யாத்மா இதனைக்கேட்டுக் கிலேசமடைந்து குரு இவ்விதம் சொல்லலாயிற்றே' யென்று மிகவெட்கி, தாம் அது பரியந்தம் செய்த தவ

றுதல்களை மன்னிக்க வேண்டுமென்று தம்மு
டைய குருவைப் பிரார்த்தித்ததுமன்றி தா
மௌனமாயிருக்கவேண்டியதென்று விரதப
ஏற்படுத்திக்கொண்டு, அந்த விரதத்தை அந்
க்ஷணம் முதல் தம்முடைய ஜீவகாலம் முழுவ
தும் அனுஷ்டித்து வந்ததாகவும், இதற்கு
பிறகு, ஒரு தடவை கூட இவர் வாயைத் தி
ந்து பேசினதில்லை யென்றும், தமக்கு ஏத
வது அவசியம் வேண்டியிருந்தால் அப்படி
பட்டஸமயங்களில் சமிக்ஞைகளாலாவது தை
யி லெழுதியாவது தம்முடைய உட்கருத்தை
வெளியிட்டு வந்ததாகவும் சொல்லப்பட்டு வ
கிறது. ஜனங்களுக்கு, இவர் ஒரு பெரி
மஹாத்மா, ஸாமான்யமானவ ரில்லை யென்
விஷயம் வெகுநாள்வரை தெரியாது. இவ
இல்லற வாழ்க்கையைத் துறந்தது முதல் ஜன
ங்களுக்கு ஹிதம்செய்யப் பாடுபட்டதாகவும்
இவருடைய நடவடிக்கைகள் யாவற்றும் தே
சாபிமானத்திலேயே ஏற்பட்டு வந்ததாகவு
புலப்படுகிறது. ஜாதி வித்தியாஸமே இவ
அனுஷ்டித்ததில்லை யென்றும், எந்த ஜாதியா
ரா யிருந்தாலும் அவர் வீட்டில் யாதொரு வித்
தியாஸமும் பாராட்டாது எதைக் கொடுத்த
லும் சாப்பிட்டுக்கொண்டு வந்ததாகவும், என்
றைக்கு அவருக்கு ஆகாரம்கிடைக்கவில்லையோ
அன்று தெருக்களில் விழுந்து கிடக்கும் எச்
சிற்கலைகளிலுள்ள சேஷங்களை வயிறு நிர
பச் சாப்பிட்டு வந்ததாகவும் சொல்லப்படு
கிறது. இவர் நாளுக்குநாள் காயக்கிலேசப்
செய்து யோகாப்யாஸத்தில் தீர முயன்று,
அதில் அதி நுட்பமான இரஹஸ்யங்களை வெகு
சீக்கிரத்தில் கிரகித்துக் கொண்டதாகவும், இவ
ருடைய அபூர்வமான செயல்களைக் கேட்டு
இவர் குருவே மிகுந்த ஆச்சர்ய மடைந்தா
ரென்றும், தமக்கு இவ்வளவு ஞானம் இன்னும்
ஏற்படவில்லையே யென்று மிகவும் துக்கித்து
வந்தாரென்றும் கேள்வி. இவர் ஒரு இடத்தி
லாவது அதிக நாள் தங்காமல் வெகு தூரம்
யாத்திரை செய்து வந்ததாகவும், தூர தேசங்
களில் நடந்துவரும் ஸங்கதிக ளெல்லாவற்றை
யும் ஞானதிருஷ்டியால் பார்க்கும்படியான
திறமை இவருக்கு இருந்ததாகவும் சொல்லப்
படுகிறது.

நம்முடைய மஹாத்மா தமது வாழ்நாட்
களின் பிற்காலத்தில் அவதூத ஸ்வாமிகளாக

இருந்தனராம். அவதூத மென்றால் பிறந்த மேனி,வஸ்திரம் தரித்துக்கொள்ளா திருத்தல். ஒரு ஸித்தர் இன்ன இன்ன விதமாக விருக்க வேண்டுமென்று பூர்வ கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறதோ, அவ்விதக் குணாதிசயங்களெல்லாம் நம்முடைய ஸித்தரிடம் பொருந்தியிருந்தனவாம். பிறந்தமேனிக் கிருத்தல் சாமான்யமான செயலன்று ஞானத்தேர்ச்சி மிகப்பெற்று, உலக சிந்தனையே யில்லாமல் மோக்ஷ ஸாதனத்துக்குரிய கருமங்களை அனுஷ்டித்து வரும் ஸாதுக்களுக்குத்தான் இப்பேரின்பம் கிடைக்குமே யொழிய மானிடஜன்மமெடுத்து ஸம்ஸார ஸாகரத்திலாழ்ந்து கஷ்ட நிஷ்டூரங்களை ஸதா அனுபவித்து வரும் நம்மைப் போன்றவர்களுக்கு இவ்வித ஸாம்பிராஜ்யம் கிடைப்பது துர்லபம். 'புனாபி ஜனனம், புனாபி மரணம்' ஸித்தமாய்க் கிடைக்குமேயொழிய இவ்விதப் பேரானந்தம் எப்படிக் கிடைக்கப் போகிறது?

நம்முடைய மஹாத்மாவினுடைய அற்புதச் செயல்களில் சில பின்வருமாறு:—

இவர் வாலிபத்திலிருந்த இடங்களை யெல்லாம் விட்டு விட்டு, கோயம்புத்தூர் ஜில்லாவில் அமராவதி, காவேரி, இந்நதிக்கரைகளில் தம்முடைய வாழ்நாட்களைக் கழித்ததாக அறிகிறோம். அனேகம் தடவைகளில் இவர் ஒரு உத்தேசமுமில்லாமல் உன்மத்தன் போல் தம்மைச்சுற்றி இன்ன ஸங்கதி நடக்கிறதென்று தாம் அறியாமலே தெய்வ சிந்தனையிலேயே இவரது மனம் ஆழ்ந்திருந்ததாகவும் அனேக நாட்களில் தோட்டம் துறவுகளிலும் நடுக்காடுகளிலும் ஆற்றோரங்களிலும் அலைந்துகொண்டு ஆற்றுமணல்களில் சில வேளைகளில் படுத்துக்கிடந்ததாகவும் அறிகிறோம். இப்படித் திரியும் காலத்தில், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் 'கொடுமுடி' என்ற கிராமத்தில் காவேரி மணல்களில் நம்முடைய உத்தமபுருஷர் உலக சிந்தனையற்று பிரம நிஷ்டையிலிருக்கையில், ஆற்றில் வெள்ளம் திடீரென்று வந்து இம்மஹாத்மாவை வெகுதூரம் அடித்துக்கொண்டு போய்விட்டதாகவும் ஆற்றங்கரைகளிலிருந்த கிராமவாஸிகள் இந்தத் துக்ககரமான காட்சியைக் கண்ணால் பார்த்து ஸகிக்க முடியாமல் இச்சமயத்தில் யோகீச்வரருக்கு உதவிசெய்யத் தங்களால் முடியவில்லையே, என்செய்வோம், 'ஜகத்குரு' என்று துக்காக்கிராந்தர்களாய்த்தங்கள் தங்கள் கிரஹத்துக்குச் சென்றனராம். இது நடந்து இரண்டு மூன்று மாதங்கள் கழித்துக் காவேரியில் வெள்ளம் தணிந்து ஜலம் குறைய, கிராமாதிகாரிகள் வழக்கப்பிரகாரம் குரமபுகட்டுவதற்காக ஆற்றுக்குச் சென்றார்களாம். அப்பொழுது வேலை செய்கிறவர்களில் ஒருவர் தன் மண்வெட்டியைக் கொண்டு மிகுந்த ஆழமாக ஆற்றில் வெட்ட அதன் வாயில் ஏதோ தட்டுப் பட்டதாம். வேலைக்காரன் உடனே தன் மண்வெட்டியை யெடுக்க, அதில் இரத்தக்குறிகள் சில விருப்பனவற்றைக் கண்ணுற்று ஆச்சர்யமடைந்து அங்குள்ளோரிடம் தெரிவிக்க, அனைவரும் ஒருங்குகூடி அந்த விடத்தைச் சுற்றி ஒரு பெரிய குழியை வெட்டிப் பரிசோதிக்கையில் அங்கிருந்த எல்லோரும் திகிலடையும்படி மணல்களில கைகால் முதலிய உறுப்புக்கள் மூலைக்கு ஒன்றாக ஆழப்புதைந்து இருந்தனவாம். பிறகு அவை அனைத்தும் ஒன்று சேர்ந்ததும் நம்முடைய மஹான் தமக்கு யாதொரு விதமான ஊறுபாடின்றி எழுந்து யாதொரு சமிக்ஞையும் செய்யாமல் தம்முடைய மார்க்கத்தில் சென்றனராம்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா கரூருக்குச் சமீபத்தில், ஒரு கிராமத்தில் ஒரு கிருஷிகன் தன் வயலில் விளைந்த நெல்லை அறுத்துத் தூற்றி அறுவாக்கித் தன் களத்தில் குவித்துவிட்டு, பொழுது போய்விட்டதினால மறுநாள் நெல்லை அளந்து கொள்ளலாமென்ற எண்ணத்துடன் குறிபோட்டுவிட்டுச் சிலரை காவல் வைத்துத் தன் வீடு போய்ச்சேர்ந்தானாம். காவலாளர்கள் தங்கள் எஜமான் இட்டவேலையை ஜாக்ரதையாய்ப்பார்த்துக்கொண்டிருக்கும் தருணத்தில், நடு இராத்திரில், நம்முடைய ஸ்வாமிகள் இந்த விடம் சென்று நெல் அம்பாரத்தில் சாய்ந்து படுத்திருக்கையில் காவலாளர்கள் இவரைக் கள்வரென்று அந்நியதாக்கிரகணம் செய்து அவரை அடித்துக்கட்டிவைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் கைகளிலிருந்த தண்டங்களை உயர்த்தி இவர் ஸமீபத்தில் வந்ததும் அவர்கள் எல்லாரும் மயங்கி ஓங்கின பிரகாரம் மறுநாட்காலை வரை இவரையே சூழ்ந்து நிற்க, மேற்கூறிய எஜமான் இவ்வற்புதத்தைக் கொஞ்ச தூரத்திலேயே தெரிந்து இது என்னவென்று காவலர்களை வினவ, அவர்கள் தாங்கள் நினைவோடிருந்தவரையில் நடந்ததைச் சொல்லலும், நம்முடைய மஹான் நிஷ்டையிலிருந்தெழுந்து மௌனமாய்ச் சென்றனராம்.



இப்படித் திரியுங்கால் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமத்திற்கு நம்முடைய அவதூத ஸ்வாமிகள் போயிருந்ததாகவும், அப்பொழுது நாயக்கருடைய ஸேனைகளுக்குச் சாமான்கள் தயாரித்து அனுப்பும் ஸமயமாயிருந்ததால் இவருக்கும் ஒரு பழந்துணியை இடுப்பில் கட்டி இவரையும் மற்ற வேலையாட்களோடு விறகு சுமக்கும்படி அனுப்ப, எல்லாரும் சுமைகளை இறக்கினதும்நம்முடைய யோகீச்வரரும் தம் சுமையையும் கீழேபோட அங்கிருந்த விறகுகளெல்லாம் திடீரென்று நெருப்புப் பற்றிக்கொண்டு சாம்பலாய்ப்போய் விட்டனவாம்.

நம்முடைய ஸ்வாமிகள் திருச்செந்தூரில்சில நாள் வாஸம்செய்துவந்தனராம். அக்காலத்தில் வேளாள குலத்தில் பிறந்த ஒருசெல்வக்குமரி, கல்யாணமான ஐந்தாவது தினம் பெரிய மனுஷியாகி, (பிராரப்த கர்மத்தினால் அப்பெண்ணை பாம்புதீண்ட,) அவள் அகாலமரணமடைந்தனளாம். பிரபுவினுடைய மகளாகையால் இச்சமாசாரம் ஊரெங்கும் கூக்குரலாய்ப் பரவ, இந்தச்சப்தத்தைக்கேட்ட நம்முடைய ஞானேச்வரர் அந்த கிரஹத்துக்கு வந்து, சவத்தைத் தம்முடைய திருக்கைகளினால் தடவ, அந்தச் சவம் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்வது போல் எழுந்திருந்து இம்மஹாத்மாவினுடைய பாதங்களில் வணங்கினதாகச் சொல்லப்படுகிறது.

இம்மஹான் சிலகாலம் இராமநாதபுரத்தில் ஜீவித்து வந்தனராம். அப்பொழுது ஒரு பிராமணன் குன்மவியாதியால் மிகுந்த கஷ்டப்பட்டு அதை நிவர்த்திக்க அவர் தம்மாலியன்ற மட்டில் மணி மந்திர ஔஷதங்களால் எவ்வளவோ பாடுபட்டும் ஒன்றிலும் சௌகர்யமடையாமல் நம்முடைய மஹான் கால்களில் விழ, அவர் மிகப் பச்சாத்தாபப்பட்டு, பூமியில் மண்ணைக் கிள்ளி அப்பிராமணர்வாயில் போட உடனே இவர் சொஸ்தமடைந்து வெகுநாள் வாழ்ந்திருந்ததாகவும் அறிகிறோம்.

மேற்கூறிய விருத்தாந்தங்களால் நம்முடைய பெரியவர் மிகச்சிறந்தவரெனவும் பிறவி ஸித்தரென்றும் அறிந்துகொள்ளவேண்டியது. இவருக்குக் குழந்தைகளிடத்தில் மிகப் பிரியம். இவர் தமக்கு ஏதாவது தின்பண்டங்கள் கிடைத்தால், அவைகளைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதுவழக்கம். மதுராபுரியில் விருஷபோற்சவம் பிரபலமாக வருடந்தோறும் நடந்து வருகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கரூருக்கருகாமையிலுள்ள நெரூர் கிராமத்தில் சில குழந்தைகள் இவ்வுற்சவத்தைப் பார்க்கவேண்டு மென்று ஆசைகொண்டு நம்முடைய பரமாத்மாவைப் பார்த்து,'எங்களை இன்றிரவு மதுரையில் விருஷபோற்சவத்துக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டு'மென்று வேடிக்கையாகப்பிரார்த்திக்க, அவர் இவர்கள்வேண்டுகோளுக்கிணங்கி, அவர்களைக்கூப்பிட்டுத் தம்முடைய தலை, முதுகு, தோள்கள் இன்னும் மற்ற அவயவங்களில் ஒவ்வொரு குழந்தையை ஏறும்படி செய்து கண் மூடித் திறப்பதற்கு முந்தி இவர்களனைவரும் மதுரையில் ரிஷபாரூடராயிருக்கின்ற பகவான் முன்பாகவிருப்பதைக் கண்டதும், குழந்தைகள் மிகச்சந்தோஷமடைந்ததாம். உத்ஸவகாலத்தில் குழந்தைகள் பிரியமாக உட்கொள்ளும் தித்திப்புத் தின்பண்டங்களை அவர்களுக்கு வேண்டியமட்டில் அளிக்க, குழந்தைகள் உத்ஸவத்தை மிகவும் குதூஹலமாகக்கொண்டாடினர்களாம். நம்முடைய பக்தர் இக்குழந்தைகளை முதலில் தூக்கிக்கொண்டு போனபிர்காரம் அவரவர் வீட்டில் பொழுது விடிவதற்கு முன்னமே திரும்பக் கொண்டுவந்து விட்டனராம். பொழுது விடிந்ததும் ஒவ்வொரு குழந்தையும் அவரவர் பெற்றோர்களிடத்தில் முதல் நாள் இராத்திரி தாங்கள் மதுரையில் கண்ட திவ்ய காட்சியை மிகச்சந்தோஷமாயெடுத்துரைத்ததுடன் தாங்கள் தின்று தெவிட்டி மிகுதியிருந்த பக்ஷணங்களையும் காட்டியதாகவும் புலப்படுகிறது.

மஹா சிவாத்திரி, கோகுலாஷ்டமி முதலிய விசேஷ விரதாதி உத்ஸவ நாட்களில், இம்மஹானை அனேக விடங்களில் ஒரே காலத்தில் ஜனங்களில் அனேகர் இவருடைய பிரசம்லைகளைப் பார்த்ததாக நிச்சயமாய்க் கூறியிருக்கிறார்கள்.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு பெறும்.)

# தமிழ் வசன நூலாசிரியர்கள்

## TAMIL PROSE WRITERS

ஆதி காலம் (கி-பி. 200-ஆம் ஆண்டுக்குமுன்)

வசன நடை எனப்பேச்சுமுறையிற் சொல்வது "உரைநடை" எனத் தமிழ்நூல்களில் வழங்கும். உரைத்துப்போதலின்உரை;நடத்தலின் நடை. ஆக்குவோனுக்கு வருத்த மில்லாது பேசுவதுபோலவும், நடப்பது போலவும் எளிமையாக அமைந்து செல்லும் தன்மையது என்பது இச்சொற்களின் கருத்து. இவ்வுரை நடை பண்டைய தமிழ் நூல்களில் தொன்மை என்னும் நூல்வகைகளுட் காணப்படுகின்றது. தொன்மையாவது பாரதம் போன்ற பழைய கதைகளைச் செய்யுளோடு உரை நடையுங்கலந்துவரச் சொல்லும் நூல். அத்தகைய நூல்கள் பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை போல்வன. சிலப்பதிகாரமும் உரையும் பாட்டும் கலந்துள்ள நூல்தான். அக்காலத்து உரை நடை இத்தன்மைத்து என்பதைச் சிலப்பதிகாரத்தில் உரைபெறுகட்டுரையில் உள்ள பின் வரும் வாக்கியம் காட்டும்:—

அதுகேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கணாட்டகத்து,
நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய,
மழைதொழி லென்றும் மாறா தாயிற்று.

மத்தியகாலம்(முற்பகுதி கி-பி 200-ம்௵ முதல் கி-பி. 600-ம்௵ வரை.)

2. இக்காலத்துத்தான் சைன நூல்கள் தழைத்தன. சைன நூலாசிரியர்கள் வடமொழியும் கற்றவராய் அம்மொழியைத் தென்மொழியோடு பெரிதுங் கலக்கலாயினர். அவர்கள் இயற்றின வசன நூல்கள் மணிப்ரவாளநடை என வழங்கும் நடையைக்கொண்டது. ஸ்ரீபுராணம், கத்திய சிந்தாமணி என்னும் நூல்கள் இந்நடையில் எழுதப்பட்டவை. இந் நடையின் தன்மை இவ்வகைய தென்பதைக் கீழ்க் காட்டும் உதாரணத்தால் அறியலாகும்:—

"சிரேணிக மகாராஜன் * * அசோக விருக்ஷ மூலத்து ரூப யௌவன சுபலக்ஷண ஸஹிதராகித் த்யாநாரூடராகி யிருந்த ஜீவந்தர முனிகளைக் கண்டு அத்தியந்தம் விஸ்மிதனாகி தரும கணதரரை யடைந்து, 'பகவானே! திருச லக்ஷண சகிதராகிய இத்தபோதனர் யார்?' என்று வினவ அவரும் அருளிச்செய்வார்."

மத்தியகாலம் (பிற்பகுதி கி-பி-600-ம்௵ முதல் 1500௵ வரை.)

3. இக்காலம் வெகு விசேடமானது. இக்காலத்திற்றான் சைவ வைணவ ஆசிரியர்கள் ஏற்பட்டனர். அவர்தம் அரிய நூல்களும் செயல்களும் வெளிவந்தன; கச்சியப்பர் கந்த புராணம் பாடினர்; கம்பர் இராமாயணம் இயற்றினர்; சேக்கிழார் பெரியபுராணஞ்செய்தனர்; சங்க நூல்களைப் பொங்கும் ஆசையிற் படித்து ஆராய்ந்து உரையெழுதினர் நச்சினார்க்கினியர்; சிலப்பதிகாரத்து உலப்பிலா உரையைத் தந்தனர் அடியார்க்குநல்லார்; திருக்குறளின் கருத்ததனைப் புலப்படுத்தினர் பரிமேலழகர். உரையாசிரியர்கள் எழுதின உரைதவிர வேறு உரைநடையைக் கொண்ட நூல்கள் இக்காலத்து இல. உரையாசிரியர்களுள் இளம்பூரணர் முதலாவார். அவர் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலுக்கு உரையெழுதிப் பெயர் பெற்றவர். இவரை "உரையாசிரியர்" என்றே அக்காலத்தும் கூறினர். அடியார்க்குநல்லார் "உரையாசிரியராகிய இளம் பூரண அடிகள்" என்றார். இவருக்கு வடமொழிப் பயிற்சி இல்லை. சிவஞான யோகிகள் இவரைத் "தமிழ் நூலொன்றே வல்ல உரையாசிரியர்" என்றார். தொல்காப்பியத்துக்கு உரை யெழுதினோர் ஐவர். அவருள் கல்லாடர் என்பவர் ஒருவர்; அவர் உரை இப்போது கிடைத்திலது; பேராசிரியர் என்பவரும் ஒரு தொல்காப்பிய உரை ஆசிரியர். இவர் திருக்கோவையார், குறுந்தொகை முதலிய நூல்களுக்கு உரை கண்டவர். இவர் செவ்விய செந்தமிழ் நடை எழுத வல்லவர். இவர் நடையின் தன்மை பின் வருமாறு:—

"நீ பூக் கொய்யச் சிறிது புடை பெயர்ந்தாய்; அந்நிலைமைக்கட் கீழ்காற்று மிகுதலாற் கரைமே லேறுங்கடல் மேல் வந்துற்றது. உற, யான் தோழியோ! தோழியோ! என்று நின்னைவிளித்தேன்; அது கண்டிரங்கி அவனருளொடு வந்து தன் கையைத் தந்தான்; யானு மயக்கத்தாலே அதனை நின்கை யென்று தொட்டேன்."

சேனாவரையர் என்பவரும் தொல்காப்பிய



உரையாசிரியர். இவர் வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்தவர். இவர் உரைநடைக்கு உதாரணம் "யானைநூல் வல்லா னொருவன் காட்டுட் போவுழி ஓர் யானை யடிச்சுவடு கண்டு இஃதரசுவா வாதற் கேற்ற இலக்கண முடைத்து என்றவழி * *"

நச்சினார்க்கினியர் என்னும் பெரியவரும்ஒரு தொல்காப்பிய உரையாசிரியர். மஹாபண்டிதர். கல்விக் கடலைக் கடந்தவரென்றே சொல்லலாம். தொல்காப்பியம், கலித்தொகை, பத்துப்பாட்டு, சிந்தாமணி, குறுந்தொகை (20 செய்யுள்) என்னும் நூல்களுக்கு அருமையான உரை எழுதியுள்ளார். இவர் உரைநடை தெள்ளியதும், தூயதும், ஓடுந்தன்மைஅமைந்துள்ளதுமானது. இவரது நடையின் பெருமை பின்வரும் செய்யுளுக்கு அவர் எழுதியுள்ள உரையால் விளங்கும்:—

### செய்யுள்

கரும்பே தேனே அமிர்தே காமர் மணியாழே
அரும்பார் மலர்மேல் அணங்கே மழலை யன்னம்மே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணைமானே.

### உரை

கணவற்கு மெய்ம் முழுதும் இனிதாயிருத்தலிற் கரும்பு. நல்லார் உறுப்பெல்லாங் கொண்டு இயற்றலிற் றேன். இவ்வுலகிலில்லாத மிக்க சுவையும் உறுதியுங் கொடுத்தலின் அமிர்து. காம வேட்கையை விளைவித்து இனிய பண் தோற்றலின் மழலையை யுடையதோர் யாழ். கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலிற் றிரு. நடையா லன்னம். சாயலான் மயில். காலமன்றியுங் கேட்டோர்க்கு இன்பஞ் செய்தலின் குயில். மன்னன் மகளே யென்றல் புகழன்மையின், மன்னன் பாவாய் என்றது அவன் கண்மணிப் பாவை யென்பது துணர்த்திற்று; இனி யிவள் கொல்லிப்பாவை யன்று, மன்னன் பாவை யென்றுமாம். சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலிற் பூவை. நோக்கத்தான் மான்.

பரிமேலழகர் உரைநடை சிற்சில இடத்துச் செய்யுள்போல அமைந்துளது. உதாரணம்:—
"இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமிலின்பத் தழிவில் வீடும்..."
"வீடென்பது, சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்து."

வீரசோழிய உரையாசிரியராகிய பெருந்தேவனாரும் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரும் இக்காலத்தவர். அடியார்க்கு நல்லார் நடையும் சிற்சில இடத்துச் செய்யுள்போல அமைந்தொழுகும் தன்மையதாயிருக்கின்றது.

நிகழுங்காலம்

(கி-பி 1500-ம் ௵ முதல் இன்றளவும்)

4. இக்காலத்திற்றான் சைவ சித்தாந்த சாஸ்திர நூல்கள் எழுதப்பட்டன.தனி வசன நூல்கள் தலையெடுக்கத் தொடங்கின.

(1) நிரம்ப அழகிய தேசிகர்—இவர் உமாபதி சிவம் திருவாய் மலர்ந்த திருவருட் பயனுக்கு உரை செய்தவர். இவர் நடை தெள்ளியது.
(2) ராபர்ட் டி நொபிலியஸ் (தத்வபோதக சுவாமி) இவர் 17-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்தவர்.கிறித்தவ நூலாசிரியர்.இவர் நடை இலக்கணம் பிறழாதுளது என்பர்.

(1680-1700) பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்த உரையாசிரியர்கள்:—

(1) மயிலேறும் பெருமாள் பிள்ளை—கல்லாட உரையாசிரியர்.
(2) திருவாரூர் வைத்தியநாத தேசிகர்—இலக்கணவிளக்கம் என்னும் நூல் எழுதினவர்.
(3) பிரயோக விவேகம் என்னும் நூல் எழுதின குருகூர் சுப்பிரமணிய தீக்ஷிதர்.
(4) இலக்கணக் கொத்து எழுதின ஈசான தேசிகர்.
(5) பவணந்தியார் நன்னூலுக்கு உரையெழுதின சங்கர நமசிவாயப் புலவர்.

இவர்களது உரை நடைகளெல்லாம் சிறந்த செந்தமிழ் நடையைக் கொண்டன. ஓர் உதாரணம் காட்டுவாம்:—

"மன மொழி மெய்களின் வணங்குது
மகிழ்ந்தே என்பவாகலின் மனத்தாற்
றுணிவு தோன்ற நினைத்தலும், மொழியாற்
பணிவு தோன்ற வாழ்த்தலும், தலையாற்
றணிவு தோன்ற இறைஞ்சலும் அடங்கப்
பொதுப்பட "வணங்கி" என்றும்."

பதினெட்டாம் நூற்றாண்டில் (கி.பி. 1740) கான்ஸ்டான்டியஸ் பெஸ்கி என்னும் மேனாட்

டுப் புலவர் ஒருவர் தமிழ்கற்று வீரமாமுனிவர் என்னும் பெயரோடு விளங்கலாயினர். 1727-ஆம் ஆண்டில் வேதியர் ஒழுக்கம் அல்லது உபதேச ரத்நாகரம் என்னும் வசன நூலை யியற்றினர். டாக்டர் போப்துரை இந்நூலின் வசனநடையை மிக வியந்து எழுதியுள்ளார். வேதவிளக்கம், தேம்பாவணி உரை, ஞான உணர்த்தல், அவிவேக பூரண குருகதை முதலிய நூல்களும் இவர் எழுதினவாம்; அவிவேக பூரண குருகதை யென்பது வெகு வேடிக்கையான சிறு கதைகளின் தொகுதி. எளிய நடையில் பெண்பாலரும் படிக்கத்தக்க தாயிருக்கிறது.

சிவஞான சுவாமிகள்—இவர் 18-ஆம் நூற்றாண்டின் ஈற்றில் இருந்தவர். "பெருந்தமிழ்ப் புலவர்" என்றால் இவர்க்கே தகும். வடமொழி தென்மொழி இரண்டும் வல்லவர். செய்யுள் யாப்பதிலும் பெரியோர். உரையெழுதுவதிலும் நிபுணர். நூலாராய்ச்சியிலுஞ் சிறந்தவர். தத்துவ நூலை மெத்தவுங் கற்றவர். தணிகைப் புராணம் பாடிய கச்சியப்பர் முதலான பன்னிரு மாணாக்கர்களுக்கு பாடஞ் சொன்ன மஹா பண்டிதர். இவர் வசன நடை மிக்க கம்பீரமுள்ளது. உதாரணம்:—

"ரூபகப்பிரயோசனமுள்ள பதார்த்தவய மில்லாத இடத்து ரூபகஞ் செய்தல் பொருந்தா தென்பதறிய கில்லீர். அலங்கார சாஸ்திரம் படித்தறிந்தீராயின், இவ்வாறு ரூபகத்திற்கும் ஆகுபெயர்க்கும் பேதந் தெரியாமற் சொல்லி யிழுக்குறீர்."

சோக்கப்ப நாவலர். இவர் தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர். இவர் நடை மிகத் தெளிவுள்ளது.

இனி பத்தொன்பதாம் நூற்றாண்டிற்ற மிழ் வசன நூலாசிரியர் இன்னோர் என்பதைக் குறித்தெழுதுவாம்.

வ. சு. செங்கல்வராயன், எம்., ஏ.

---

தண்ணீர் குடித்தல்.—நம்தேசத்து ஜனங்கள் சாதாரணமாய் சாப்பிடும்போது தண்ணீர் அருந்துவது வழக்கம். ஆனால் கல்வி கற்ற சிலர் இக்காலத்தில் சாப்பிடும்போது தண்ணீர் அருந்துவது தப்பென்று போதிக்கப்பட்டு சாப்பிட்ட பிற்பாடு தண்ணீர் சாப்பிட்டு வருகிறார்கள். ஆனால் சாப்பிடும் போது கொஞ்சபாகம் தண்ணீர் அருந்துவதே ஜீரணத்துக்குச் சிரேஷ்டமென்று தெரியவருகிறது.

## நல்ல விதையை விதைப்பதினால் உண்டாகும் அனுகூலங்கள்

## ADVANTAGES OF SOWING GOOD SEEDS

பயிர்கள் விளைவதற்கு நிலமே முக்கியமானதென்றும், நிலம் நல்லதாயில்லாவிட்டால் நல்ல மாசூல் கிடைக்காதென்றும், நிலம் நல்லதாயிருக்குமானால், விதை நல்லதா கெட்டதா வென்று அவ்வளவு யோசிக்க வேண்டியதில்லை, கொஞ்சம் மட்டமாயிருந்தாலும்நன்றாய் விளையுமென்றும் அனேகமாய் நினைப்பதுண்டு.

நிலம் நல்லதாயிருந்தால் விளைச்சல் திறமாயிருக்கும் என்று சொல்லுவது உண்மைதான். ஆனால் நல்ல நிலத்தைத் தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு விதையின் தன்மையைக் குறித்துச்சிறிதும் கவனிக்காதவனை விட நல்ல நிலத்தில், விதையைப் பொறுக்கி எப்போதும் நல்ல விதையையே விதைப்பவன் அதிகபலனை யடைவான் என்பதும் நிஜமே.

நல்ல விதையென்பது கீழ்க்குறித்த விவரங்களின் வகைகளில் இரண்டிலுமாவது அல்லது ஏதாவதொன்றிலாவது பொருந்தி யிருக்கும்.

ஒரு பிடி விதையில் ஒவ்வொரு விதையும் நல்லதாயும் நன்றாய் விளைந்ததாயும் பருத்து, உமி (அல்லதுதோல்) பெருத்து, அரிசி (அல்லது பருப்பு) சிறுத்து இராமல் பால்நிறைந்து, முத்தி சேடையில்லாமல் முளைக்கும்.

விதையெல்லாம் ஒரே ராசியாய் ஓங்கிவளர்ந்து நோயை லட்சியம் பண்ணாமல் பூச்சியடித்தாலும் கெடாமல் நல்லராசி காணுவது.

முன் சொன்ன குணங்கள் எல்லாம் இருந்து அந்த விதையை விதைத்தால் முன்பின்னாய் முளையாமல் ஒரே விதமாய் முளைத்து சிலது மெலிந்து சிலது பெருக்காமல் ஏகதேசமாய் வளர்ந்து நல்ல மாசூலைக் கொடுக்கும். அதனால், உழவு, எருவு, மழை, நீர்க்கட்டு, வெயில், காற்று, வேலை முதலியவைகள் ஒரே மாதிரியான போது, பஞ்சை. விதையை நிலத்தில் அதிகமாய்க் கொட்டுவதை விட நல்ல விதையைக் குறைத்து விதைத்தால் போதும். இந்த ராஜதானியின் அனேகபாகங்களில், நெல், பருத்தி விதைப்பில் அதிக விதையை விதைக்கிறார்கள். அப்படி யதிக விதை விதைப்பதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று பின் சொல்லியது. ஒரு பிடிவிதை எடுத்துப் பார்த்



தால், அதில் நொறுங்கிப் போயும் நன்றாய் முற்றாததும், முளைக்கமாட்டாததாயும், ஏதோ முளைத்தாலும் நன்றாய் வளர்ந்து பலனைக் கொடுக்கமாட்டாததாயும் உள்ள விதைகள் அனேகம் இருக்கும்.

முன் சொன்ன நல்லகுணங்களோடு, இரண்டாவது வகையென்று விவரித்த குணங்களும் உண்டானால், அந்த விதைகளை விதைத்தால் நல்ல மாசூலடைய அதிக ஏதுவுண்டு. இந்த ராஜதானியில் விதைக்கிற ஒவ்வொரு வகை விதையிலும் அனேக தினுசுகள் கலந்திருக்கும். கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபூர் ஜில்லாக்களில் கரிசல் காட்டில் போடுகிற பருத்தி வெண்பஞ்சையும் செம்பஞ்சையும்கொடுக்கிறது விதைகளின் கலப்புதான். செம்பஞ்சு தினுசு இந்த கரிசல் நிலங்களில் ஓங்கிவளராது. அதிக பருத்தி வெடிக்காது. அதனால், இந்த செம்பஞ்சு விதை கலந்த விதையை விதைத்தால், வெண்பஞ்சை மாத்திரம் கலப்பில்லாமல் போட்ட காட்டிலிருந்து வருகிற பருத்தியை விட மாசூல் குறைந்து போகும். இதுவுமல்லாமல், இந்த இரண்டுவித பஞ்சு தினுசுகளின் இழை நாண்ணியமும் வேறு. நாண்ணியத்தை உத்தேசித்து விலையும் மாறும். கலந்த பஞ்சைவிட கலப்பில்லாத வெண்பஞ்சு தினுசுக்கு விலை கூட்டிக்கொடுப்பார்கள். பருத்தியைப் போல் நெல்லிலும், மிளகாயிலும் விதைகள் கலந்தேயிருக்கும். மிளகாய் நட்டிருக்கிற ஒரு தோட்டத்திலேயோ அல்லது காட்டிலேயோ போய்ப்பார்த்தால் பத்துப் பன்னிரண்டு தினுசுகள் வரையில் பொறுக்கலாம். சில செடிகள் நன்றாய்க்காய்க்கிற தினுசுகள் அல்லாததினால், மாசூல் நன்றாய்க் காய்க்கிற தினுசைமாத்திரமேதனியே நட்டபோது வருகிறதளவு வராது.

ஒவ்வொரு குடியானவனும் மேற்சொன்ன காரணங்களினால் நல்ல விதையையே விதைக்கவேணும். தான் விதைகட்டாமல் அயலாரிடத்தில் வாங்கவேண்டிவந்தால் நன்றாய் முற்றாததும் நொறுங்கிப் போயுமுள்ள விதையைவாங்கப்படாது. தனக்கு சொந்த விதையிருந்தால், அதை நன்றாய் வளர்ந்த செடிகளிலிருந்து பொறுக்கி கருக்காய் பதர் இல்லாமல் ஜாக்கிரதையாய்வைக்கவேண்டும். இப்படிப்பண்ணினால் ஒருவன் விதையிலும் செட்டுப்பிடிக்கலாம்.

யும் அதிகமாய்க் காணும்.

## பவளமும் பவளக்கொடியும்

## CORALS AND CORAL-REEFS

முத்தைப்போல் பவளமும் கடலில் வசிக்கும் ஒரு சிறு பிராணியால் உண்டாக்கப்படுகின்றது. நத்தை என்னும் ஜந்துவில் ஏற்படும் அசாதாரணக் காரணங்கள் சிலவற்றால் முத்து உண்டாகின்றதென்று, முன் அவ்விஷயத்தைக் குறித்து எழுதப்பட்டதிலிருந்து தெளியக்கூடும். ஆனால், பவளம் என்பதோ பவளப்பூச்சியின் முக்கிய அங்கங்களில் ஒன்றாயிருப்பதுடன், அப்பூச்சியை அதன் எதிரிகளினின்றும், மற்றப்படி கடலடியில் உண்டாகக்கூடிய சுழல்கள் முதலான அபாயங்களினின்றும், வெகு சாவதானமாய்க் காப்பாற்றுகின்றது. ஜீவப்பிராணிகள் பெரும்பாலனபோல், பவளப்பூச்சி தன்னிடம்விட்டு நகரக்கூடியதன்று; செடிகளைப்போல் அதுவும் ஒரே இடத்தில் ஊன்றியிருக்கும். கடலடியில் இருக்கும் பாறைகளின் மீதிலாவது வேறு பொருள்களின் மீதிலாவது கொடிபோற் படரும். செடிகளைப்போலவே அதுவும் கிளைகள் விட்டுப் படிப்படியாய் வளரும். செடிவர்க்கத்தில் ஒரே இடத்தில் ஊன்றப்பெறாது தாமே நடந்து செல்லும் செடிகள் சில இருப்பனபோல், தாமே நகர்ந்துசெல்லும் ஜீவஜந்துக்கள் வர்க்கத்தில் பவளப்பூச்சி ஊன்றப்பெற்றிருக்கும் பெருமையுடைத்தாம். இக்காரணம் பற்றியே இதைக் கடலிலுண்டாகும் ஒருவகைச் செடியென்றுகொண்டு மருள்வாரும் உண்டு. பவளப்பூச்சியைப்போலவேதாமே நகரக்கூடிய சக்தியிழந்த வேறொரு வகுப்புப் பிராணியும் உண்டு. அதனை ஆங்கிலத்தில் "ஸ்பஞ்ச்' (Sponge) என்று சொல்வார்கள். பவளப்பூச்சி செடிகளில் சேர்ந்ததன்று, பிராணிகளுள் சேர்ந்தது தான் என்று கொள்வதற்கு அதன் அங்கத்தின் கூறுபாட்டைப்பற்றி சில சொல்ல விளங்கும்.

இவ்வுலகத்து வசிக்கும் பிராணிகளை அவற்றின் அங்கக் கூறுபாட்டிற்குத் தக்கவாறு உயர்ந்தனவென்றும், தாழ்ந்தனவென்றும் உயிர் நூல்வல்லார் வகுத்திருக்கின்றனர். மீன், தவளை, பல்லி, பறவை, மிருகம் முதலியன உயர்வகுப்பின வென்றும், புழு, நண்டு, ஈ, எறும்பு, நத்தை முதலியன தாழ்ந்த வகுப்பின வென்

றும் சொல்வார்கள். அத்தாழ்ந்த வகுப்பில், மிகத்தாழ்ந்த பிராணிகளுள் ஒன்று இப்பவளப்பூச்சியே. அவை பல கூடி, ஒன்றாய் வசிக்கும். அத்தகைய கூட்டத்திற்கு 'பவளப்பூச்சிக் குழாம்' (Colony) என்று சொல்லலாம். அக்கூட்டத்தினின்று ஒன்றை விலக்கி அதன் அங்கக் கூறுபாட்டை ஆராய்ந்து பார்த்தால் பூச்சி முழுவதும் வாய், வாயைச்சுற்றி அமைக்கப்பெற்றிருக்கும் உணர்ச்சிக் கொம்புகள், இரைப்பை, அண்டகோசம், மணிக்குடல், இவையனைத்தையும் தன்னுள்ளடக்கிக் காக்கும் எலும்புக் கூடு என்று ஏற்படும். கண், மூக்கு, காது, கை,கால், இருதயம், சுவாசப்பை என்ற வேறு விதமான அங்கக் கூறுபாடுகள் ஒன்றும் இராது. அதன் அவயவங்களின் அமைப்பைக் காட்டும்பொருட்டுப் பூச்சியொன்றை நீளப்பாடாய் வெட்டின தோற்றம் படம்1-ல் காட்டியிருக்கிறது. அதில் கறுப்பு நிறமிட்டிருக்கும் பாகமே பூச்சியின் எலும்புக்கூடாம். வேறு பிராணிகளினாலாவது அல்லது வேறு




படம். 1.

1 வாய்,
2 இரைப்பை
3 எலும்பு
4 அண்டகோசம்
5 பவளப் பூச்சி ஒட்டிக் கொண்டு வளரும் கற்பாறை.
6 மணிக்குடல்(Mesentery)
7 உணர்ச்சிக் கொம்புகள்.

எந்தவிதத்திலாவது பவளப்பூச்சிக்குத் தொந்தரவு உண்டானால் அது தன் உணர்ச்சிக் கொம்புகளை உடனே உள்ளிழுத்துக்கொண்டு எலும்புக்கூட்டுக்குள் சுருங்கிக்கொள்ளும், எலும்புக்கூடு மிகவும் கெட்டியானதால் பவளப் பூச்சிக்கு யாதொரு தீங்கும் நேரிடாது.

எலும்புக்கூட்டின் குறுக்குவெட்டு ஒன்றை படம் 2-ல் காட்டியிருக்கிறது. அதிலிருந்து அக்கூடு எங்ஙனம் பூச்சியைச் சுற்றிக்கொண்டிருக்கின்றது என்பது நன்கு விளங்கும். எலும்புக்கூடு என்றதினாலேயே, அது பறவை, மிருகம் இவற்றின் எலும்பு போன்றதன்று. எந்தப் பிராணியிலாவது ஒருகெட்டியான பாகமிருந்து, அதைத் தசைபோன்ற மெதுவான பாகங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்குமா

படம். 2.




1 எலும்புக்கூடு

2 எலும்புக் கூட்டை அறைகளாக வகுக்கும் பிரிவுகள்.

யின் அக்கெட்டியான பாகத்தைச் சாதாரணமாய் "எலும்பே"ன்று (skeleton) உயிர்நூலார் சொல்வது வழக்கம். அவ்வழக்கம் பற்றியே பவளப்பூச்சியின் மெதுவான பாகங்கள் கூட்டைப்பற்றி பிடித்திருப்பதும் தவிர, அக்கூடே மெதுவான பாகங்களைக் காப்பாற்றுவதினால் அதையும் " எலும்புக்கூடு " என்று சொல்வது பொருந்தும். அக்கூடு சீமைச் சுண்ணாம்பாலானது. பூச்சியின் மேற்றோலினால் சிறிது சிறிதாய் ஆக்கப்பட்டது. அக்கூடே கெட்டியாயும் பருமனாயுமிருக்குமாயின் பவளமென்றும், பலகூடு ஒன்று சேர்ந்தது, பவளக் கொடியென்றும் சொல்வார்கள்.

அத்தகைய கொடியொன்றின் உருவம் படம் 3-ல் காட்டப்பட்டிருக்கிறது. ஒன்றன்



படம். 3.
பவளக் கொடி(எலும்பு மட்டும்)

மேலொன்றாய்க் கொடிபோல் வளராமல் பவளப் பூச்சிகள் ஒரே பரப்பாக மிகுதியாய் வளர்ந்து, அங்ஙனம் வளர்வதினால் பூச்சிகளின் எலும்புக்கூடுகள் பல ஒன்றாய்ச் சேர்ந்து பவளக் கட்டிகளாகவும், பவளத்தீவுகளாகவும் மாறுவதும் உண்டு. அவ்விதம் உண்டான பவளத்தீவுகள் சிலவற்றை இராமேச்வரத்துக்கு அருகாமையிலுள்ள கடலில் பார்க்கலாம். இன்



னும் அவை மிகுதியாய் மத்திய பஸிபிக் மஹா ஸமுத்திரம், (Central Pacific Ocean) பெர்ஷியக்குடாக்கடல் (Persian Gulf) பனாமாகுடாக் கடல் (Gulf of Panama) செங்கடல் (Red Sea) இவற்றிலும். ஜான்ஜிபார் (Zanzibar) மடகாஸ்கர் (Madagascar) மொரிஷஸ் (Mauritius) ப்ரஸீல் (Brazil) இவற்றினருகாமையிலும் மேல் இந்திய தீவுகளைச் (West Indies) சுற்றியும் வளர்கின்றன. தீவுகளாக வளருவதல்லாமல், நடுவில் குளம்போல் ஜலம் தேங்க, அதைச் சுற்றிலும் கரைகட்டினது போல பவளக்கொடி படர்ந்து நிற்கும். அக்கரையின்மேல் தென்னை முதலிய மரங்கள் வளர்ந்து அதை அழகு பெறச் செய்யும். அவற்றிற்கு ஆங்கிலத்தில் அட்டால்ஸ் (Atolls) என்று பெயர்.

கொடியாயினும் கட்டியாயினும் பவளம், சுண்ணாம்பு செய்வதற்குத்தான் ஸாதாரணமாய்ப் பயன்படுகிறது. அவற்றுள் ஒருவகை மட்டுமே அதன் நிறத்தினால் மிக விலையுயர்ந்த நவமணிகளுள் ஒன்றாக மதிக்கப்பட்டு வருகின்றது. அது சிவப்பு நிறங்கொண்டதென்று யாவருமறிவர். அது மத்தியதரைக் கடலில் (Mediterranean Sea) மாத்திரமே உண்டாகின்றது. அங்கிருந்து எடுக்கப்பட்டுத்தான் வேறு தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றது.

செம்பவளம் ஸாதாரணமாய் மிக ஆழமான இடங்களில் வளர்வதில்லை. எண்பது "பாகம்" (Fathom) ஆழமுள்ள இடங்களில் வெகு நன்றாய் வளரும். அது த்யூனிஸ் (Tunis) அல்ஜீரியா (Algeria) மொராக்கோ (Morocco) என்னும் தேசங்களினோரமாயுள்ள மத்தியதரைக் கடலில் மிகுதியாய் உண்டாகின்றது. நேப்பில்ஸ் (Naples) லெக்கார்ன் (Leghorn) ஜினோவா (Genoa) என்னும் பட்டணங்களுக்குச் சமீபத்திலும், சர்தீனியா (Sardinia கார்ஸிகா (Corsica) காடலோனியா (Catalonia) ப்ராவென்ஸ் (Provence) என்னும் தேசங்களின் கரையோரத்திலும் அகப்படும்.

ஏறக்குறைய 2,000 வருஷங்களாகத்தான் மத்தியதரைக் கடல் தேசங்களுக்கும் நம் தேசத்திற்கும் அதிகமான செம்பவள வியாபாரம் நடந்து வருகின்றது. அதற்கு முன், கால்ஸ் (Gauls) என்பவர்கள் தமது யுத்தக் கருவிகளிலும் தலைப்பாகைகளிலும் அலங்காரமாகத் தரிப்பதற்கும் ரோமன்ஸ் (Romans) என்னும் ஜாதியார் தமது குழந்தைகள் அபாயத்துக்குள்ளாகாமலிருக்கும்பொருட்டு செம்பவளத்தை அவற்றின் கழுத்தில் கட்டியுபயோகப்படுத்தி வந்தார்களாம். இக்காலத்தும் இத்தாலியா (Italy) தேசத்துப்பெண்கள், திருஷ்டி தோஷம் படாமலிருக்கும்பொருட்டும் மலட்டுத்தனத்தைப் போக்கும்பொருட்டும் செம்பவளத் துண்டுகளை அணிவது வழக்கமாம். ஸாதாரணமாய் வியாபாரத்துக்கு வரும் பவளம் சிவந்ததானாலும் வேறுநிறங்கொண்டிருப்பதுமுண்டு. ஆனால் அத்தகைய பவளங்கள் மிக அருமையாய்க் கிடைக்கும். இளஞ்சிவப்பும் ரோஜாநிறமும் கலந்ததே பவளங்களுக்கெல்லாம் சிறந்தது. விலையிலும் மிக வுயர்ந்தது.

சென்ற நூற்றாண்டு ஆரம்பமுதல், மத்தியதரைக் கடலில் பவளங்குளிக்க உத்திரவு கொடுக்கும் பாத்தியதை பிராஞ்சுக்காருடையதாய் இருந்துவருகிறது. அப்பாத்தியதை அவர்களுடையதானாலும், கடலில் சென்று பவளம் குளிப்பதும், அதைக் கடலிலிருந்து சேகரித்து, வெட்டித்தேய்த்து, உருவாக்கி வியாபாரத்துக்குத்தக்கதாய்ச்செய்யும் கைத்தொழிலும், இத்தாலியா தேசத்தில் முக்கியமாய் நேபில்ஸ், ரோம், ஜீனோவா என்னும் நகரத்தாரே செய்து வருகிறார்கள். வருஷாவருஷம் மத்தியதரைக் கடலில் பவளங்குளித்தல் நடந்து வந்தாலும் எடுக்கப்பட்ட பவளம் எவ்வளவென்றும் என்னவிலை கொண்டதென்றும் சொல்லத்தக்க கணக்கு அகப்படுவதில்லை. 1873-ம் ௵ மட்டும் அல்ஜீரியா தேசத்துக்கடுத்த கடலில் பவளங் குளித்தபோது, 311 கப்பல்களும் 3150 பேர்களும் வேலை செய்ததாகவும், மொத்தம் 1,13,000 பவுன் விலைகொண்ட செம்பவளம் எடுத்ததாகவும் தெரிகிறது.

செம்பவளம் இந்தியாவிலும் சீனாவிலும், அதிகமாய் விலையாகிறது. நந்தேசத்தில் எதற்காக வாங்குகிறார்களென்பது நாமெல்லோரும் அறிந்த விஷயம். தற்காலம் அதன் விலையும் மிக வுயர்ந்திருக்கின்றது. சீனாவில் சர்க்கார் மேலுத்தியோகஸ்தர்கள் அணியும் உடுப்புக்குச் செம்பவளத்தால் செய்த பொத்தான்களை உபயோகப்படுத்த வேண்டுமாம்; அவை அவர்கள் உத்தியோகத்தைக் குறிப்பிடும் சின்னங்களிலொன்றாம்.

வி. நரஸிம்மய்யங்கார், எம். ஏ., பி. எல்

# சென்னையில் பால் ஸப்ளை

## MILK SUPPLY IN MADRAS

பால் பொதுவாய், உலக முழுவதும், விசேஷமாய் இந்தியாவிலும், முக்கியமான போஜன பதார்த்தமாய் விளங்குகிறது. ஆஹார பதார்த்தங்களுக்கின்றியமையாத ஸகலஸத்துக்களும் பாலில் குறைவின்றி, ஏற்பட்ட அளவில் இருக்கின்றன. மேலும் பாலிலிருந்து மேற்படி ஸத்துக்களில் எதையும் குறைத்துவிடுவோமானால் அதைச்சாப்பிடுபவர் சரீர ஆரோக்யத்தின் குறைவிற்கு அது காரணமாகிறது, அன்றியும், பாலின் அமைப்பாதி, ரஸாயந சாஸ்திர ஆராய்ச்சியால் அறியக்கூடிய, குணாகுணங்களைப் பரிசீலனை செய்திருப்பவர்கள், இதர ஆஹாரங்களைக் காட்டிலும், பாலிற்கு, குழந்தைகளின் அரோக திட சரீர வளர்ச்சி விஷயமாய், விசேஷ குணங்களுண்டென்று கூறுகின்றனர். இந்தியாவில் ஸமீப காலத்திற்குள் ஜனத்தொகை ஜடிதியில் விருத்தியான காரணம்பற்றி, உபயோகத்திற்குக் கிடைக்கக்கூடும் பாலினளவு, ஜநஸமூகத்திற்குப் போதாமலிருப்பதால், பாலின்விலையும்வரவரமேற்போய்க்கொண்டே வருகிறது. இவ்விஷயம் பெரிய பட்டணங்களில் முக்கியமாய்க் கரதலாமலகமாய்க் காணலாகும். அன்றியும் சென்ற சில வருஷங்களுக்குள் கால்நடைகளின் தீனிகளின் விலையும் விருத்தியானதும் இவ்விஷயத்தையே வற்புறுத்துகிறதென்னலாம். அல்லாமலும், சென்ற ஐந்து வருஷங்களுக்குள் பெட்டிப்பால் என்று வழங்கும் (Condensed Milk) முன்னைக்காட்டிலும் அரைமடங்கு அதிகமாய்இறக்குமதியாகிறதென்றால் ஜனோபயோகத்திற்குப் பால் போதாமை நன்குவிளங்கும். பாலின் விலையில் வர வர ஏற்றமுண்டாவது ஜனத்தொகையின் ஆவச்யகத்தினளவு கிடைக்காததாயினுமாகுக; அல்லது கால்நடைத் தீனி வகைகளின் விலையில் ஏற்றத்தினாலாயினுமாகுக; அன்றேல், சிலர் அபிப்பிராயப்படுமாறு மேய்ச்சற்றரைகள் போதுமான அளவில் இல்லாமற்போனதாயினுமாகுக; வேறெக்காரணமாயினுமாகுக; அதல்ல நமக்கு முக்கியமான விஷயம். நாகரீகவிருத்திபற்றி, பால், பாலடியாகப்பிறக்கும் இதரபொருள்கள் (தயிர் நெய்யாதியவை) இவைகளின் விலையில் ஜடிதியான ஏற்றமுண்டாயிருக்கிறதென்பதொன்றே கவனிக்கத்தக்கது. நாகரீக விருத்தியாலும், காபி, தேயிலை, முதலியபானங்கள் அதிகப் பழக்கத்திற்கு வருவதாலும், முன்னிலும் அதிகஅளவில் பாலிற்குத் தேவையுண்டாயிருக்கிறதென்பது மறுக்க முடியாதது. இன்னொன்று. பெரிய பட்டணங்களில் கைத்தொழிற்சாலைகளும், இன்னும் மற்ற ஸௌகர்யங்களும் அதிகமிருப்பதுபற்றி அதிகக் கூலி வாங்கலாமென்று எதிர்பார்க்கும் கூலிவேலையாட்களும் இதரஸௌகர்யங்களை யுத்தேசித்து மற்றோருமாய், வரவர, கிராமாந்திரங்களிலிருந்து ஜனங்கள் பட்டணங்களில்வந்து குடியேறி, அதனால் பட்டணங்களின் ஜனத்தொகையை அளவிற்கு மிஞ்சி யதிகப்படுத்துகிறார்கள் என்பதும் தத்துவாரா, இப்பெரிய பட்டணங்களின் பாலின் தேவை யதிகப்படுகிறதென்பதும் நிச்சயம். தேவையினளவு பால் கிடைப்பதரிதாகவே, பாலில் கலப்பு அதிகப்படவேண்டியதும் அவசியமாகிறதென்பதும் கிடைக்கப்பெற்றது.

பாலை மிச்ரப்படுத்தி, அதன் நன்மையைக் குறைக்கும் விதங்களைப்பின்னர் கவனிப்போம். எவ்விதத்தாலாயினும் மிச்ரப்படுத்தப்பட்ட பாலினால், ஏற்படும் துர்க்குணங்களிலொன்று சிறு குழந்தைகளின் அளவு கடந்த அஸ்தான மரணமாகும். அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் (United States of America) வாஷிங்டனில், 1895 வருஷத்தில் பரிசோதனையின் பேரில் சுத்தமென்று தகுந்த உத்தியோகஸ்தர்களால் அத்தாட்சி செய்யப்படாத பால் விற்பனைக்கு வரக்கூடாதென்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதுமுதல், சீதபேதியினடியாகப் பிறந்த வ்யாதிகளால் ஏற்படும் சிசு மரணத்தின் ஸங்க்யை வரவரக் குறைந்துவந்தது. மேலும், பாலில் மிச்ரம் ஏற்படுவதனால், பாலிலுள்ள முக்கியமான, உணவுப்பொருள்கள் குறைவதுடன் பலவிதமான வ்யாதிகளும் உண்டாகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய வியாதிகளுக்குள் டைபாய்ட்ஜுரம் (Typhoid fever) காலரா, சீதபேதி முதலியன சில. அன்றியும், இதில் நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டிய பாகம் பாலில் கலப்பு ஏற்படுவதற்கும் சிசுமரண ஸங்க்யைக்கும் நெருங்கிய ஸம்பந்தமுண்டென்பதே. ஆகவே, இவ்விஷயம் அசேஷ ஜனக்ஷேமத்தைப் பற்றியிருப்பதால், யாவரும் ச்ரத்தையுடன் கவனிக்கவேண்டியது என்று அறியற்பாலது. ஆனதுபற்றியே, பரிசுத்தமான பால் 'ஸப்ளை' விஷயமாய் 1907-ம் வருஷத்தில் 'ப்ரஸ்ஸல்ஸ்' நகரத்தில் கூடின காங்கிரஸ் தீர்மானங்களை யொத்து, 'ந்யூயார்க்' என்ற அமெரிக்கா கண்டத்திலுள்ள பட்டணத்தில் ஜனங்களுக்குச்சுத்தமான பால்ஸப்ளை கிடைப்பதற்கேற்ற பலவிதமான சட்டங்களை ஏற்படுத்தி கவனமாயிருந்து வருகிறார்கள் என்று தெரியவருகிறது.

இந்தியாவில், ராணுவ இலாகா ஸம்பந்தப் பட்டமட்டில் மேற் கூறியவாறு பாலின் சுத்த விஷயமாய் ச்ரத்தை யேற்பட்டிருக்கிறது. ஆனால்சிறிதுகாலமாக ஆங்காங்குள்ள மாகாண கவர்ன்மெண்டுகளும், விஷயத்தின் கௌரவத்தையறிந்த வேறுசிலரும், பொதுவிலேயே பால் ஸப்ளையை சுத்தீகரிக்க முயன்றுவருகிறார்கள். பஞ்சாப் மாகாண கவர்ன்மெண்டாரால் இவ்விஷய பரிசீலனார்த்தமாக நியமிக்கப்பட்ட மிஸ்டர். எ.எம். ஸ்டௌ (Mr.A.M.Stow,I.C.S.) என்பவர் "இந்திய நகரங்களிலும் பட்டணங்களிலும் ஏற்பட்டிருக்கும் பால்ஸப்ளை ஏற்பாடுகள் நிரம்ப அதிருப்திகரமாயிருக்கின்றன. தெருக்களிலும், கடைகளிலும் பாலைக் கையாடும் விதங்களும், பசுக்கொட்டில்களும் பசுக்களுக்குத் தீனிபோடுவதற்குச் செய்துள்ள ஏற்பாடுகளும், மிகுந்த கர்ணாடகமாகவும் தேகஸௌக்கியத்திற் கேலாதனவாயுமிருக்கின்றன" என்று ரிபோர்ட் செய்திருக்கிறார். இப்படியே இன்னம் பலவிடங்களில் பரிசோதனைகள் செய்யப்பட்டு இதே முடிவு பெறப்பட்டிருக்கிறது.

ஏனைய விஷயங்களால், நாம் மேற்கொண்ட வ்யாஸத்தின் கௌரவம் எளிதில் விளங்கும். இனி சென்னைநகரின் பால்"ஸப்ளை"யைப்பற்றி சற்று விசாரிப்போம். இந்த வ்யாஸத்தில் பால் என்ற சப்தத்தில் பால்மட்டுமன்றி வெண்ணெய், நெய், தயிர் முதலிய பொருள்களும் கருதப்பட்டனவாகக்கொள்க. சென்னை நகர் முழுமைக்கும் பால் உள்ளூரிலிருந்தே கிடைக்கிறது. செலவாகும் வெண்ணெயில் பெரும்பாகம் பெங்களூரிலிருந்துவருகிறது. அநேகமாய், வேண்டிய நெய் அத்தனையும் கடப்பை, நெல்லூர், கோயம்புத்தூர், சேலம்ஜில்லாக்களிலிருந்தும், முக்கியமாய் பின்கூறிய இரண்டினின்றும் சென்னைக்குவருகிறது. சென்னையைச் சுற்றியுள்ள க்ராமாந்தரங்களினின்றும் வெகு சிறிய அளவு நெய்கிடைக்கிறது. மேற்படி க்ராமங்களில் வஸிக்கும் கன்னடியர் என்ற இடையர்களாலேயே சென்னையின் தயிர் 'ஸப்ளை' முழுமையும் நடந்து வருகிறது.

இக்கன்னடியர்கள், தாம் மைஸூர் ராஜ்யத்திலிருந்து இங்குவந்து குடியேறினதாக வ்யவஹரிக்கின்றனர். இவர்கள் சென்னைக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள க்ராமாந்தரங்களில்வஸிப்பவர்கள். இவர்கள்எருமைகள் தான்வைத்துப்பரிபாலிக்கிறார்கள். ஏனெனில் இவை பசுக்களைக் காட்டிலும் பால் அதிகமாகக் கொடுப்பதுடன் நீண்டகாலம் பால் வற்றாமலுமிருக்கின்றன. ஸென்ஸஸ் ரிபோர்ட்டின்படி இக்கன்னடியர்களில் சுமார் 4938 பேர்கள் இப்பால் வகையறா வ்யாபாரத்தில் அமர்ந்திருக்கின்றனர் என்று வெளியாகிறது.

சென்னையில் பால் ஸப்ளைக்கு ஆதாரமாகவிருக்கும் பசுக்கள் நெல்லூர் பசுக்கள் என்று சொல்லப்படுகிற நெல்லூர் குண்டூர் ஜில்லாக்களில் உற்பத்தியாகும் பசுக்களே. இவைகள் சிற்சில ஸமயங்களில் சென்னைக் கருகாமையிலுள்ள புளியந்தோப்புச் சந்தையிலும், அங்கு மலிவாகக் கிடைக்காத ஸமயங்களில் நேராக நெல்லூர் குண்டூர் ஆகிய இவ்விடங்களிலிருந்தும் வாங்கப்படுகின்றன. மயிலாப்பூர் பக்கங்களில் சில நாட்டுப்பசுக்களும் காணப்படுகின்றன. இவைகள் பெரும்பாலும் பஞ்சமர்களுக்கு ஸொந்தம். அவர்கள் இடையர்கள் மூலமாய் பால் வ்யாபாரம் செய்கின்றனர்.

வேளை ஒன்றுக்கு சுமார் $\frac{1}{2}$படி பால் செலவுள்ள குடும்பங்களுக்கு பசுக்காரர் பசுக்களைக் கொண்டுவந்து நிறுத்திப் பால் கறந்து கொடுக்கிறார்கள். இவ்வித அவசியம் நேர்ந்திருப்பதற்குக் காரணம் மேற்படி பசுக்காரர் கொஞ்சங்கூட பச்சாத்தாபமென்பதில்லாமல் கூடுமான அளவு பாலை மிச்ரப்படுத்தி விடுகிறார்கள் என்பது தான். இந்தியப் பசுக்கள் பெரும்பாலும் தம்கன்றுகள் பக்கத்திலிருந்தாலன்றி பால் கொடுப்பதில்லை யாதலாலும், பக்கத்தில் கன்றில்லாமல் நிற்கும் பசுவின் பாலைச்

சாப்பிடுவது அசாஸ்த்ரீகம் என்று ஹிந்துக்கள் நம்புவதாலும், இக்கன்றுகளை பசுக்காரர்கள் பசுக்களோடு ஒட்டிக்கொண்டு, ஊரைச்சுற்றி வரவேண்டியிருக்கிறது. பசுங்கன்றுகளோ வெகு சுகசரீரமுடையவை. அவைகளுக்கு இவ்வித அலைச்சல், சரீரம் இளைத்துப் பலமற்றுப் போவதற்கும் காலக்ரமத்தில் மரணம் ஸம்பவிப்பதற்கும் காரணமாகிறது. அன்றியும் இப்பசுக்காரர் பால் விற்றுப் பணருசி கண்டவர்களாதலால், சற்றுமிரக்கமின்றி, பசுவிலிருந்து பாலை ஒட்டக்கறந்து, அதனால் கன்றுகளுக்குப் போதுமான ஆஹாரமில்லாமலடித்துப் போடுகிறார்கள். பால் சுரப்பதற்கு அவசியமானவரை எவ்வளவு பால் அவைகளால் குடிக்கமுடியுமோ அதற்குமேல் ஒரு பொட்டுக்கூட அவை குடிக்க முடியாதபடி வெகு ஜாக்கிரதையாயிருப்பார்கள். ஐயோ! பாவம்! இவ்வெளிய பசுங்கன்றுகள் தங்கள் விருத்திக்கவசியமான தாய்ப்பாலற்று (வேறுபாலேது!) வரவர இளைத்து, பலமற்று, பிற்காலத்திலும் உபயோகமற்றுப் போகின்றன. மறுபடி மாடுகள் வேண்டுமென்றால் நெல்லூர் குண்டூர் போக வேண்டியதுதான். பிராணி ஹிம்ஸைத் தடுப்பு ஸங்கத்தார் (S. P.C.A) புகுந்துழைப்பதற்கு இதோ விஸ்தாரமான பூமிகையிருக்கிறது!

இம்மட்டிலுமல்ல. பசுக்காரர்கள் தமக்குச் சொந்தமான பசுக்களிலிருந்து க்ரமவழியிலோ அக்ரமவழியிலோ எவ்வளவு பால் கறக்கலாகுமோ அவ்வளவு கறக்காதொழியார். பசுவின் பாலை விருத்திசெய்வதற்காக, எள்ளுப்புண்ணாக்கு, நொய்யரிசிக்கஞ்சி, முள்ளுக் கீரைக் கஷாயம், வேகவைத்த சுரைக்காய் முதலியவைகளை ஆஹாரமாகப்பசுக்களுக்கு மிகுதியும் கொடுக்கிறார்கள். இதனால் அப்பசுக்களுக்கு அவர்களிழைக்கும் கெடுதியை அவர் அறிவதில்லை அல்லது கருதுவதில்லை. சில ஸமயங்களில் பசு பால் வற்றுவதுதான் அதன் உபயோகத்திற்கு எல்லை. சில திடகாத்திரமுள்ள பசுக்கள் இரண்டு அல்லது மூன்று ஈற்றுகள் வரைதாங்கிக்கொடுக்கும். அதன் பிறகு அவைகள் அடிமாடுகளாக ஆகவேண்டியதுதான். ஆஹா! என்ன மதியீனம்! உத்தமமான கோஸந்ததி இவ்விதம் நம் தேசத்திற்கு லபிக்காயல் குறைந்துகொண்டே வருகிறது.

பசுவைக்கெடுப்பது இம்மட்டில். இனி இவர்கள் பாலையும் கெடுக்கிறார்கள். பால் வாங்குபவர்கள் கண்டு பிடிக்காமலிருக்கவேண்டிய அவஸரத்தில், பாலைமிச்ரம் செய்யவேண்டியதற்கு ஜலம் எவ்விடத்திலிருந்து எடுக்கிறோம் என்றுகூடப் பார்ப்பதில்லை. சாக்கடைஜலமும் அவர்களுக்கு ஸம்மதந்தான். அகப்பட்டுக் கொள்ளாமல் எவ்வளவு ஜலம் பால்தகரங்களில் மறைத்து வைத்துக்கொள்ளக் கூடுமோ அவ்வளவு கட்டாயம் வைத்திருப்பார்கள். நேராடிப்பசுக்களைக் கொண்டுவந்து நிறுத்திக் கறக்கப்படும்பாலும் சுத்தந்தான் என்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. பாலை மிச்ரம் செய்வதில் அப்பால் விற்பவருக்குள்ள லாகவம் வாங்குபவரின் ஜாக்கிரதையிலும் அளவு கடந்தது. அதுவும் போதாததற்கு அவர் வடுவான ஒரு 'அஸிஸ்டண்டி'ல்லாமல் வெளியே புறப்படுவதில்லை. இந்த 'அஸிஸ்டண்டி'ன் வேலை கறக்கப்படும்பொழுது கன்றைப் பிடித்துக் கொள்வதென்ற வ்யாஜம் இந்த உதவிப்பாற்காரப்பையன்கையில் ஒருதகரம்தவறாதுவைத்திருப்பான். முன்னமேயே கறக்கப்பட்ட பால் அந்த பாத்திரத்திலிருப்பதாக வெளிப்போக்கு. உண்மையில் கறந்தபாலை மிச்ரிப்பதற்காக வீட்டிலிருந்தே தயார்செய்துவந்த வஸ்துவாக்கும் அதற்குள்ளிருப்பது. இவனுக்கு இன்னொரு வேலையும் உண்டு; அதாவது பால்வாங்குபவர்களுக்கு பால்காரனுடைய மிச்ரவிஷயலாகவத்தைக்காட்டிக்கொடுக்காமலிருக்கிறதுதான். இத்யாதிகாரணங்களினால் தம்வீட்டில் நேராடிப்பசுக்களைக் கொண்டுவரச்செய்து கறந்து பெறமுடியாத ஏழைகளென்ன, தங்களுடைய வேலைக்காரிகளைக் கவனிக்கவிட்டு கவலையற்றிருக்கும் பணக்காரர்களென்ன, இவர்கள்தாம் பால்மிச்ரத்தால் கஷ்டமடைபவர்கள் என்று ஏற்படும்.

முக்கியமாய்ப் பாற்காரர்கள் பாலை மிச்ரிப்பதென்பது இரண்டுவிதங்களில். தண்ணீரைக் கலப்பதொன்று; ஆடையை (பாலின்கொழுப்புபாகத்தை) யெடுத்துவிடுதல் மற்றொன்று. ஸாதாரணமாக, பாலின் ஆடையினொருபாகத்தை நீக்கிவிட்டு, அதனால் கனமாகும் பாலைத் தண்ணீர் சேர்ப்பதனால் சுத்தமான பால்போலாக்குவார்கள். எருமைப்பாலில் ஸரியளவு தண்ணீர் சேர்த்து பசுவின் பாலென்று விற்பதுமுண்டு. அன்றியும்பசுக்களைவெயிலில்வெகு



நேரம் கட்டிவைத்து, அதன் மூலமாய்த் தண்ணீர் அதிகமாகக் குடிக்கும்படிசெய்து, இவ்விதம் பால் மடியிலிருக்கும்போதே நீர்க்கும்படிசெய்வதுமுண்டு. ஆதலால் சென்னைபோன்ற பெரிய பட்டணங்களில் பால் மிச்ரிக்கப்பட்டதா அல்லவா என்று சோதித்தறிய வேண்டுவதற்குரிய ஸாதனம் அவசியமென்பது பெறப்படும். பாலில், மிச்ரம்பண்ணப் பட்டிருப்பதையறிய 'க்ஷீரசோதினி' (Lactometer) என்றொரு கருவியேற்பட்டிருந்தாலும், தன்னளவில் ஐந்திலொருபங்கு அல்லது குறைவாய் தண்ணீர் கலக்கப்பட்ட பாலின் தன்மையைக் காண்பித்துக்கொடுக்க அது போதாது. இக்கருவியால் மட்டுமல்லாமல், வேறு ஸாதனங்களாலும் பாலின் தன்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். பரீக்ஷித்தறிய எடுத்துக்கொள்ளப்பட்ட பாலில் கொழுப்புப்பதார்த்தம் எவ்வளவு, கனபதார்த்தம் எவ்வளவு, தண்ணீர் எவ்வளவு என்று பகுத்தறிய வேண்டுவதுடன், இன்ன கணக்குக்குக் குறைந்த பால் மிச்ரிதமென்று கருதப்படவேண்டும் என்று சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டாலன்றி கதி பிறப்பதற்கு ஏதுவில்லாமலிருப்பது துக்கிக்கத்தகுந்த விஷயம்.

ஏனெனில் பாலில் மிச்ரம் ஏற்படுவதாலுண்டாகும் அநர்த்தம்ஸாமான்யமல்ல. மாடுகள் அதிகப்பால் கறக்க வேண்டியதற்காக பாற்காரர் செய்யும் விஷயங்களும், பாலையவர் கையாடுவதில் ஏற்படும் அசுசியும், விளைவிக்கும் அநர்த்தங்களும் முற்கூறியவையிலும் குறைந்ததல்ல. நமக்குத் தெரிந்தவற்றுள் பாலைப்போல் அவ்வளவு நாஜூக்கான பதார்த்தம் வேறொன்றுங் கிடையாது. பாலைப்போல் வெகுசீக்கிரம்கெடக்கூடியதும் வ்யாதிக்குரிய பூச்சி(germs)களால் ஸ்வரூபபேதம் வெகுஎளிதில் அடையக்கூடிய பதார்த்தமும் வேறொன்றிலது. மேற்கூறிய விஷப்பூச்சிகள் (germs) வ்ருத்தியாகும்வேகம் நம்பக்கூடாதபடி வேகமாக விருக்கும். ஓரே ஒரு விஷப்பூச்சி (germ) 24-மணி நேரத்திற்குள் 165-லக்ஷம் பூச்சிகளாக விருத்தியாகிறதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது; இவைகள் பாலில் சேருவதுதான் பால்கெடுவதற்கு முக்கியமான காரணம். ஆதலால் கூடியமட்டில் இந்த ஜீவ அணுக்கள் பாலில் அண்டாதபடி செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

ஆனால் இவைகள் பாலில் ஸம்பந்தப்படாமலே முற்றும் தடுத்துவிடலாமென்பது ஸாமான்யத்தில் ஸாத்தியமாகிற கார்யமன்று; ஏனெனில் இந்த ஜீவ அணுக்கள் கணக்கில்லாமல் பசுக்கள்கட்டும் கொட்டிலிலேயே ஆகாசத்தில் ஸஞ்சரிக்கின்றன. மாடுகளின் மடிகளிலுள்ள பாலிலும்இந்தஜீவஅணுக்கள் சேர்ந்துவிடுகின்றன. ஆதலால் ஸாதாரண ஸ்திதியில் முதல் மூன்றுநான்கு 'பீல்' களில்வரும் பாலில் இந்த ஜீவஅணுக்கள் பரவியிராமலிருப்பதில்லை. சுத்தமாகக் கறக்கப்பட்ட பால் பெறக்கூடுமென்று வைத்துக்கொண்டபோதிலும், அதுவும் வெகு சீக்கிரத்தில் இந்த ஜீவஅணுக்களால் நிறையப் பெறும். ஆதலால் இவ்வணுக்கள் விருத்தியாவதற்கு சௌகர்யமான காலதேச வர்த்தமானங்கள் எவையென்று நாம் கவனித்தறிய வேண்டும்.

சில சமயங்களில் இவை மாடுகளின் மடிகளுக்குள்ளேயே சென்றுவிடுகின்றன. வேறு சில ஸமயங்களில் மடிகளிலேயே வ்யாதிகள் (Tubercolosis) நிலை பெற்று இருக்கும். இன்னும் சிலபோது, மாடுகளின் வயிற்றிலும் மடிகளிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் சாணி, (வெகு ஸன்ன அணுக்கள்) பாலில் உதிர்ந்து அதின்மூலமாய் அணுக்கள்சேருகின்றன. பாற்காரர்களின் பாத்திரங்கள் வெகு அசுத்தமாய், பல ஜீவ அணுக்களைக்கொண்டிருக்கும். கறப்பவர்கள் கைகளில் அழுக்கேறியிருக்கக்கூடும். மேலும் பால் எவ்வளவுக்கெவ்வளவு உஷ்ணமாக விருக்கிறதோ, அத்தனைக் கத்தனை இந்த ஜீவ அணுக்கள் வந்து வியாபிக்கின்றன என்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய விஷயங்களை யறிந்துகொண்ட பிறகு, சென்னை நகரில் பால் ஸப்ளையை நினைத்துப் பார்ப்போமானால் எத்துணை பயங்கரமாக விருக்கின்றது கவனியுங்கள்! பசுக்கொட்டில்கள் மகா பயங்கரமான கொடிய நாற்றம் வீசுகின்றன! பக்கங்களில் சகல வ்யாதிகளுக்கும் உற்பத்திஸ்தானமாக சாக்கடைகள்! பசுக்களின் ஆரோக்கியத்தைக் கவனிப்பாரோ கிடையாது! பசுக்களின் கதி எப்படியானாலும், அவையுள்ளவரை அவற்றின் ஸர்வஸ்வத்தையும் ஆகர்ஷிப்பதொன்றையே கருதின பாற்காரர்கள்! பசுக்களின்மேலெல்லாம் சாணமும் அழுக்கும் சேறும்! பாற்காரர் இன்னும்

அஸஹ்யர்! சில ஸமயங்களில் யானைக்கால் வ்யாதியுள்ளவர்களும் தோல் வ்யாதியால் பீடிக்கப்பட்டவர்களும பால் கறப்பவர்கள்! அழுகினது, புளித்தது, கெட்டது முதலிய எந்த தண்ணீராலும் பசுவிற்குப் பாதகமில்லை (பாற்காரன் மதத்தில்)! ஐயோ கஷ்டம்! பாபம்! பாபம்! கஷ்டம்!

இவைகளை யுத்தேசித்து பால் 'ஸப்ளை' விஷயமாக அடியிற் கண்டபடி ஜாக்ரதையெடுத்துக்கொள்ள வேண்டும். (i) பாலில் மிச்ரம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுடன், பசுக்கள் கட்டுமிடம் சுத்தமாக விருக்கின்றனவா, ஆரோக்யமான ஆஹாரம் அவைகளுக்குக் கொடுக்கபபடுகிறதா வென்று கவனிக்க வேண்டும். (ii) பால் தெருவில் கறக்கக் கூடாது. (iii) முதல் நான்கு அலலது ஐந்து 'பீல்' பாலை கன்று பருகும்படி விடவேண்டியது. (iv) கையை பதப்படுத்துவதற்காக, இடையன் பாலில் கையை விடுவதை நிறுத்தவேண்டும். (v) பால் கறப்பதற்கு முன்னமேயே மடி, முலைக்காம்புகள் முதலியனவற்றை சுத்தஜலம் கொண்டு நன்றாய்க் கழுவவேண்டும்.

அல்லாமலும், அசேஷ ஜநாரோக்யத்தைக் காப்பாற்றுவதில் கடமைப்பட்ட மெட்ராஸ் கார்பரேஷன் இவ்விஷயத்தில் ஊக்கமெடுத்துக்கொள்ள வேண்டும். (i) சுத்தமான பாலின் ஸ்வரூபம் இன்னதென்று வரையறுக்க வேண்டும். (ii) பசுக்களின் ஆரோக்யத்திற்கேற்ற நிபந்தனைகளின்படி பசுக்கொட்டில்கள் கட்டி, இடையர்களுக்கு ஸ்வல்ப குடிக்கூலிக்கு விட வேண்டும். (iii) கொட்டில்களை சுத்தமாய் வைத்திருப்பவர்களுக்கு பரிசுகள் அளிக்கவேண்டும். (iv) காலகரமத்தில் பால் ஸப்ளைக்கும் லைசென்ஸ் ஏற்படுத்தி, மிச்ரம் செய்பவர்கள் குற்றத்திற்குள்ளாகும்படி செய்யவேண்டும்.

இப்படிப் பொதுஜனமும், பொதுஜனநன்மையை நாடின முனிஸிபாலிடியாரும் சேர்ந்து இந்தத் துறையை சீர்திருத்த முயலுவார்களானால், மேற்கூறிய வ்யாதிகளால் இறப்பவர்களுடைய ஸங்க்யை குறைந்து தேசத்திற்கு க்ஷேமம் உண்டாகுமென்பது இப்பொழுது நாம் வற்புறுத்த வேண்டியதில்லாமலே விளங்கும்.

A. ஸ்வாமிநாதய்யர், பீ. ஏ.

# ஆரோக்ய சாஸ்த்ரம்
## THE SCIENCE OF HEALTH

நிறைந்த செல்வமடைந்து உயர்ந்த பதவியிலிருக்கவும், நோயற்று த்ருடசரீரத்துடன் வெகு காலம் ஜீவிக்கவும் விரும்புவது ஸர்வஜனங்களுக்கு மியற்கையே. தனம் ஸம்பாதிக்கும் விஷயத்தில், பலர் பலவிதமான முயற்சி செய்து, தங்கள் ச்ரமத்துக்கும் அத்ருஷ்டத்துக்குமுரிய த்ரவ்யாதி பாக்யம் பெறுவதை நாம் பார்த்து வருகிறோம். பொருளிருந்தாலே, ஸுகமுண்டாகுமென்பதில்லை. தனதான்ய ஸம்ருத்தியுள்ளவர்களும், வ்யாதியால் பீடிக்கப்பட்டு மனோதுக்கத்தை யனுபவிப்பதுண்டு. 'நோயற்றவாழ்வே வாழ்வு' என்கிறபடி எளியதசையிலிருந்தாலும், ரோக பீடையில்லாமல், த்ருடகாத்திரனாய், தான் ஸுகமாயிருப்பதுடன் பிறருக்கு முபகாரஞ் செய்யக் கூடிய ஸ்திதியிலிருப்பதே பெரும் பாக்யம். தேகத்தில் வ்யாதி குடிகொண்டும், இளமைப் பர்வத்திலேயே, கை, கால், கண் முதலிய அவயவங்கள் திராணியற்றும், தனக்குமனோத்ஸாகமின்றி உறவினர்களுக்கு அஸௌகர்யமும் க்லேசமு முண்டாகும்படி வாழ்வதைவிட இறப்பதே மேன்மை. பிறர் நன்குமதிக்குமபடி செல்வமும் அதிகாரமும் பெற்று, மேன் மேல் தங்கள் பேராசையை பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய ஸ்திதியிலிருப்பவர்களும் கொடியநோயால் வருந்தும்போது, இவ்வுலகில் எல்லாவற்றைக் காட்டிலும் அத்யந்தம் ப்ரியமான தங்கள் உயிரையே மாய்த்துவிடத் துணிகிறார்களென்று பலஸமயம் கேள்வியடைகிறோம். பாபமற்ற ஸர்வ ஸுகானுபவங்களுக்கும் முக்கியகாரணமான தேக ஆரோக்யத்தை தேடிக்கொள்வது எல்லாருக்கும் முதல் நோக்கமாயிருக்க வேண்டியதாயினும், அது விஷயமான அறிவை ஸம்பாதிக்க முயலாமல், ரோகம் வருவது தெய்வாதீனம், மனுஷ்யனால் தடுக்கக்கூடியதல்ல, அப்படிவந்தால், வைத்தியன் மூலமாய் சிகித்ஸை செய்துகொள்ளலாமென்று நினைத்து உதாஸீனமாயிருப்பது உலகவிந்தையிலும் விந்தை. பௌதிகசாஸ்திர (Materialistic Science)த்தில் இடைவிடாமல் பரிச்ரமப்பட்டு மிகும் நாகரிகமுடையவும், ஜனங்களுக்கு ஹிதகாமான வித்யைகளை ஸர்வ



ப்ரகாரமாய்ப் பரவும்படி செய்வதில் மிகுந்த ஆஸக்தியுமுள்ள மேற்கு தேசத்தாரிடத்திலேயே இவ்வித நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. இந்தியதேசத்தில் கேட்பானேன்? கஷ்டப்பட்டு ஸம்பாதித்தால்தான் கல்வியின் அருமை அறிவார்கள் என்ற எண்ணத்தினாலும், ஸாதனக்குறைவுகளினாலும், இதுகாரணங்களினாலும் வித்யாப்ரசாரம் இத்தேசத்தில் ஸுலபமாய் ஏற்படுகிறதில்லை. அதிலும், சரீர சாஸ்த்ரஜ்ஞான ஸம்பாதன மூலமாய் தேக ஆரோக்யத்தைத் தேடிக்கொள்ளும் ப்ரயத்னம் தத்காலம் மிகவும் ஸ்வல்பமாயிருக்கிறது. வ்யாதி பீடையில்லாமல், தேக ஸௌக்யத்துடன் வாழவேண்டுமென்கிற ஆஸ்தையிருக்கலாம். ப்ரயத்ன மில்லாவிட்டால், விரும்புவதினாலேயே எண்ணம் பலிக்குமா? இரைவேண்டுமென்று இச்சித்து, சிங்கம் குகையில் படுத்து உறங்கினால், மிருகங்கள் தாங்களே அதன் வாயில் வந்து விழுமா? ஸதா ரோகியாயிருப்பவனை நோக்கி, "ஏன் ஐயா, எப்போதும் வ்யாதிக்ரஸ்தராய், தேகஸுகமில்லாமல், அடிக்கடி டாக்டர் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறீரே? காலத்தில் ஸ்நானஞ்செய்து, அழுக்கற்ற வஸ்த்ராதிகளை யணிந்து, நல்ல உணவும் ஜலமுமுட்கொண்டு, வீட்டையும் அதன் சுற்றுப்பக்கங்களையும் குப்பை செத்தையில்லாமல் சுத்தமாய் வைத்துக்கொண்டு, நோவு அடிக்கடி வரவொட்டாமல் தடுத்துக்கொள்ளக் கூடாதா? வீணாய் த்ரவ்யச்செலவையும், ஸுகக்குறைவையும் தேடிக் கொள்வானேன்?" என்று கேட்டால், அதற்கு அவன், "'வ்யாதி வருவதும் போவதும் நம்மைக் கேட்டா ஏற்படுகிறது? ரோகத்தால் அவஸ்தைப்பட தலைவிதியிருந்தால் விடுமா? அதிருக்கட்டும். விசாலமான வீடும் சுத்தவஸ்திரங்களும் நல்ல உணவும் தேடிக்கொள்ள, நாம் என்ன ப்ரபுவா? பங்களா இருக்கிறதா? அப்படித்தானிருந்தது, எல்லா ஸௌகர்யங்களையுமுடைய பெரியமனுஷ்யர்களுக்கு வ்யாதி வருவதில்லையா? ரோகமில்லாதவன் ஜகத்திலுண்டா? இதெல்லாம் சுத்தப் ப்ரமை; காலவ்யத்யாஸம், ஏதோ இரண்டு கோண எழுத்துத்தெரிந்துவிட்டால், இத்தேசத்தில் வெகு நாளாய் நடைபெற்று வரும் ஆசார ஒழுக்கங்களையெல்லாம் தூஷித்துப் புதிதுபுதிதாய் பேசுகிறார்கள்," என்றும் இன்னம் இம்மாதிரியாகவும் சொல்வது அபூர்வமில்லை. ஆங்கிலேய பாஷையில் தேர்ச்சியடைந்து லௌகிகஜ்ஞான ஸம்பன்னர்களுள் கூட அனேகர், ஆரோக்யசாஸ்த்ரத்தின் உபயோகத்தையும் ஆவச்யகத்தையும் நன்குணர்ந்ததாக அனுஷ்டான மூலமாய் ஏற்படவில்லை. வ்யாதி நேர்ந்தால், தாது புஷ்டிகரமான ஔஷதங்களாலும், மற்ற விதத்திலும் பரிஹாரம் தேட வெகுப் ப்ரயத்தனப்படுகிறார்களே தவிர, தேக ஸௌக்யத்துக்குரிய ஆஹாராதி நியமங்களையும், மற்ற ஸாதனங்களையும் கவனித்து, தக்கபடி முன் ஜாக்கிரதை எடுத்துக்கொள்வதாக வ்யக்தமாய் காணப்படவில்லை. நோயுண்டாகுங் காலத்தில் 'நாம் என்ன செய்யலாம், ஸாத்யகூடியவரையிலும் சுத்தமாயும் ஜாக்கிரதையாயுந்தானிருக்கிறோம். தேகஸுக விஷயத்தில் அவ்வளவு கண்டிப்பாயிருக்க ஸாத்யப்படுகிறதா? எவ்வளவோ தாக்ஷிண்யம் நேரிடுகிறது. தள்ள முடியவில்லை. தவிர, இப்போது கால நிலைமை (weather) நன்றாயில்லை. எல்லாருக்குமே இந்த ஸீக் வருகிறதாம்' என்று சிலரும், மற்றவர் "வீட்டிலே பொம்மனாட்டிகளுக்கு சுத்த மூடத்தனம், சொன்னால் தெரிகிறதில்லை. எல்லாம் கர்னாடக ஆசாரம். நாகரிகமுள்ள இதரதேசங்களில் வழங்கும் வ்யவஹாரங்களையும், ஸயன்ஸில் புதிதுபுதிதாய் ஏற்படும் சூழ்ச்சி, காட்சிப்பொருள்களையும்பற்றி அவர்களுக்கு ஒரு அக்ஷரம் தெரியுமா? அவர்களோடுகூடத்தான் கஷ்டப்பட்டுக் காலந்தள்ள வேண்டியிருக்கிறது. புருஷர்களைப்போல ஸ்த்ரீகளும் இங்கிலீஷ் படித்துத் தேர்ந்தாலொழிய இந்தியாவுக்கு கதி மோக்ஷமில்லை" என்றும் இன்னம் பற்பலவிதமாகப் பேசுவதையும் அனேகர் கேட்டிருக்கலாம். இதனால், அவர்களுக்கு தேகசாஸ்த்ரத்தில் நம்பிக்கையும், அது விஷயஞானத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்கிற உத்ஸாகமுமில்லை என்று சொன்னதாக எண்ணக்கூடாது. தேகச்ரமம், த்ரவ்யநஷ்டம், லோகாபவாதம், பிறர் நிந்தை இதுகளையெல்லாம் கவனியாமலே, தத்காலத்துக்கொத்தபடி இந்தியதேசத்தார்களின் எல்லாவித க்ஷேமத்துக்கும் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்ய எப்போதும் முயன்றுவரும் தலைமை ப்ரபுக்களுக்கு, ஜனங்களுக்கு அத்யந்தம் ஹிதமான இவ்விஷயத்தில் ச்ரத்தையும்,

உத்ஸாகமுமில்லை யென்று சொல்லக்கூடுமோ ?
இத்தேசத்தின் ச்ரேயஸ்ஸைத் தேடுவதே
முக்ய நோக்கமாயுள்ள இங்கிலீஷ் ராஜாங்கத்
தாரும், தனத்தாலும் கல்வியினாலும் ஸஹா
யம் செய்யக்கூடிய தார்மிகர்களும், எல்லாவற்
றைக்காட்டிலும் முக்யமாய்தெரிந்துக்கொள்ள
வேண்டிய சரீர ஸுகத்துக்குரிய அறிவை
கொஞ்சகாலத்திலேயே ஸ்திரீ, புருஷர், பாலர்,
வ்ருத்தர் முதலிய எல்லாரும் சுலபமாய் தாங்
கள் தங்கள் பாஷையில், பாடசாலையிலோ,
லளித நடையில் எழுதப்படும் புஸ்தக மூல
மாயோ, கற்று அனுஷ்டானத்தில் அந்தஞ்ஞா
னத்தை உபயோகப்படுத்துவதில் ஏற்படும்
பாதகங்களைப்போக்கி, வேண்டியஸாதகங்களை
உண்டு பண்ணி, ஜனங்களின் ஸந்தோஷம்,
நன்றியுணர்வுக்கும், பகவத் க்ருபைக்கும் பாத்
ரமாவார்களென்று நம்பலாம். எல்லோருக்கும்
வ்யாதி வரக்கூடும்; தேகவலிவுள்ளவனும் பிணி
யால் வருந்தும்படி சிலஸமயம் நேரலாம்.' கண்
கெட்ட பிறகு ஸூர்ய நமஸ்காரம்' என்பது
போலிராமல், முன்ஜாக்கிரதையாயிருத்தல் நலம்
என்று சொல்லவேண்டுமோ? சுத்த உணவு,
பானம், ஆடை முதலிய வாழ்மை நிலைமைக
ளால் வியாதி வாராமலே தடுக்கலாம்; அல்லது
அடிக்கடி வரவொட்டாமலாவது செய்து கொ
ள்ளலாம். வந்த ரோகத்தைத் தீர்ப்பதற்கான
மார்க்கத்தைச் சொல்வது வைத்யசாஸ்த்ரம்.
மிகுந்த பொருட்செலவு செய்து தேகச்ரமப்
பட்டு இதில் தேர்ச்சியடையலாம். இது ஸர்வஜன
ஸாமான்யமாக ஏற்படுவது கஷ்டம். வைத்ய
சாஸ்த்ரத்தின் பாகமென்று சொல்லக்கூடிய
ஆரோக்ய சாஸ்த்ரமானது, கூடியவரையில்
நோய் வாராமல் தடுப்பதற்கும், அதிகப்பொருள்
நஷ்டமின்றியே, இவ்வுலக வாழ்க்கைக்குரிய
ஸௌகர்யங்களைத் தேடிக்கொள்வதற்கும்ஸாத
கமான அறிவை உண்டுபண்ணும். ஸுலபமாய்
எல்லாரும் தெரிந்துகொள்ளலாம். தேக ஸுக
த்தை நாடியே மேன் மேலும் மஹா ப்ரயா
ஸைப்பட்டு புதிது புதிதான கருவிகள், யந்த்
ரங்கள், மற்ற ஸாதனங்களையும் கண்டுபிடித்து,
நாகரீக வ்ருத்தியைத்தேடும் இக்காலத்திலும்கூட,
சரீரம் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறதென்
றும், அது அடிக்கடி நோவுக்குட்படாமல் க்ர
மமாய் வளர்ச்சியடைவதற்குண்டான ஸாதக
பாதகங்கள் என்னவென்றும் தெரிந்துகொள்
வது அத்யாவச்யமென்றும் சொல்லவேண்டு
மா? தெய்வ ஸ்ருஷ்டிகளுள் அதிவிசித்திரமான
தேகயந்த்ரத்தின் ஸ்வரூபந்தெரியாமல், சரீ
ரத்தைப்போஷித்து உலகவாழ்க்கை செய்வது
அடிமரத்தை வெட்ட நுனிமரம் ஏறுவதற்
கொப்பாகும். அதுவிஷயமாய் ஜனங்களுக்கிரு
க்கும் அஜ்ஞானத்தைப்போக்கி, ஞானத்தை
ப்புகட்டுவது, இவ்வார்ய பூமிக்கு ஹிதம் செய்
யக்கூடிய தேசாபிமானிகளின் முதற்கடமை.
ஆனால் இவ்விஷயத்தில் நன்றாயாராய்ந்து,
இந்தியாதேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிக்கும்
ஜனங்களுடைய நிலைமைக்கும் மனோநோக்
கத்துக்கும் பொருந்தும்படியான அறிவே அ
வர்களுக்கு ஏற்படும்படி செய்யவேண்டுமே
யொழிய, நம்மவருடையதேகஸ்திதி, எளிமை
முதலியதற்கொவ்வாததும் அநிச்சயமான உப
யோகமுள்ளதும், வீண் டம்பத்துக்குரியதாயு
முள்ள கல்வி உண்டாகும்படி செய்வது உசித
மல்ல. விபரீதஞ்ஞானத்தைவிட, அஞ்ஞானமே
ச்ரேஷ்டம். யதார்த்தஞானமே ஸுகமளிக்கும்.

A. வரதாச்சார்யர், பீ. ஏ., எல். டி.

---

## ஐக்கிய நாணய உணர்ச்சியைப்பற்றி இந்தியா கவர்ன்மேண்ட் தீர்மானம்

ஐக்கிய நாணய நிதிச் சங்கங்களைப்பற்றிய சட்டம்
ஏற்பட்டது முதல் ஐக்கிய நாணய உணர்ச்சி எந்த
மட்டில் இந்தியாவில் பரவியிருக்கிறதென்பதைச்
சீர்தூக்கிப்பார்த்து, இந்தியா கவர்ன்மென்டாரால்
ஒரு தீர்மானம் வெளியாயிருக்கிறது. அந்தத் தீர்
மானத்தில் ஐக்கிய நாணய உணர்ச்சி படிப்படியாய்
விருத்திமுகம் காட்டிப் பரவினது சுட்டிப் பேசப்பட்
டிருக்கிறது. ஐக்கிய நாணய நிதிச் சங்கங்கள் புத்தி
சாலித்தனமாய் நடத்தப்பட்டுக்கொண்டு போமா
னால், நாட்டின் பொருளாதார நிலைக்கும், சமூகவாழ்
க்கை நிலைக்கும், கல்வி நிலைக்கும் பெருத்த அனு
கூலங்கள் விளையு மென்பதற்கு இது வரை ஏற்பட்
டுள்ள சங்கங்கள் சாட்சிகளாயிருக்கின்றன வென்
றும், 10 வருஷங்களுக்கு முன்னே சிற்சில இடங்
களில் ஐக்கிய நாணயச்சங்கங்கள் பரீட்சார்த்தமாய்
ஸ்தாபிக்கப்பட்டதுபோய், இப்போது இந்தியாவில்
12000த்துக்கு மேற்பட்ட சங்கங்களும், 6 லட்சத்
துக்கு மேற்பட்ட மெம்பர்களும் இருக்கிறார்க
ளென்றும் இப்போது வேலை செய்து கொண்டிருக்
கும் சங்கங்களுக்கு 5 கோடிரூபாய் போட்டுப் புரட்
டவிருக்கிறதென்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்
கிறது.





# வெண்டாமரையாள்

## துவாதசாந்த மாலை

## IN PRAISE OF SARASVATI

### காப்பு—வெண்பா

தண்டாதென் னுள்ளத்திற் சார்ந்தின்ப மேயளிக்கும்
வெண்டாம ரைக்கிறைவி மேன்மாலைக்—கொண்டா [டத்
தோழமைபூண் டென்னன்பைத் தூயதாச் செய்தரு [ளும்
வேழமுகன் றாட்டுணையே வேண்டு.

### துவாதச மாலை

பொன்பூத்த பதுமமலர்த் தவிசாகி யதனினிறைப்
 பொருளாகித் தெருள தாகிப்
புகலுமறை யுபநிடத மாவாக்ய மாகியுயர்
 பூரணப் போத மாகிக்
கொன்பூத்த பரமநிலை வைப்பாகிப் பேரின்பக்
 கூறாகி வேறதாகிக்
குலவுவிசு வம்பதித் துவமாகி நித்யசுகக்
 கோலவடி வாகி ஞான
மன்பூத்த வடியருள வமுதாகி யதனினடு
 வயமாகிச் சுயம தாகி
வண்மைமிகு புயலனைய வருண்மாரி கொண்டுதவு
 மதியாகி விதிய தாகி
மின்பூத்த நிதியமென வொளிர்தரு செஞ்சரணமலர்
 விளக்கி யருள் வாழ்வுதருமோ!
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
 வெண்டாமரைக்கி றைவியே. 1.

பண்பாத கல்விநீஞ் சொற்சுவைய பநுவலும்
 பகருநற் பொருளும் பல்கிப்
பற்பலவ தானமும் விற்பன விவேகமும்
 பாங்குறனி னூறு பொற்பை
யெண்பொழுதி லெளிதெய்தி வந்தெதிர் புரிந்த
 மென்னவா வாத மோலித் [குளு
தெழுதாம றைக்கினவி தொழுதாடு கிற்பவதை
 யெணிடாத லைந்த லைந்து
மண்படுபு னிலவுகாத் திடுகிளைய தாகுமென்
 வன்மனக் கலிவாஞ் சையின்
வன்மைகண் டிகலிகை விடுவையே லஃதினும்
 வருத்தமிக் குலகி லுண்டோ!
விண்பெறுநீ தாய்! மகன் யான்! என்று வையகம்
 விளக்கிலது கருணை வைப்பாம்.
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
 வெண்டாம ரைக்கி றைவியே. 2.

மருவுமூ லத்தினிற் குண்டலிச் சத்தியாய்
 வளர்சுவா திட்டா னமாம்
மனையினிற் கலைமகளி னுருவா யதற்குமேன்
 மணிபூர கத்தி னிற்செக்
திருவுருவ மாயொளிர னகதம னைக்கணொரு
 செய்யருத் ராணி யாகித்
திகழ்தருவி சுத்தியின் மகேச்வரிய தாயருட்
 செறிந்திலகு மாக்கி னையினில்
அருவுருவ மாகியம னோன்மணி யெனப்பொலிச்
 தணிமருவு பிரம ரந்த்ரத்
தறிவுதரு சிற்சத்தி வடிவாய்து வாதசாந்
 தத்திலா னந்த மயமாம்
வெருவறுநற் சுத்தியா யிலகுமுனை யேத்திதினம்
 வேண்டுவே னுமத டிமைநான்
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
 வெண்டாம ரைக்கி றைவியே. 3.

இப்பியதொ ருண்மைநெறி யாவுமே குடி கொண்ட
 தேசிகச் சலதி புக்குச்
செய்யநன் னூலிலக் கணவிலக் கியமெனுந்
 தெண்ணீர் தெவிட்ட வுண்டு
செப்பரிய கற்பனைச் சூற்கொண்டு போதிநூர்
 சோலைச் சேண்ப டர்ந்து
சீருற்ற பிரஸங்க விடியொலிபு லறிவினர்
 திடுக்கிடும் படிமு ழக்கி
யொப்பினற் பொருண்மினற் காட்டிநிறை கவிமாரி
 யோங்கியார்ந் தெவனும் வருஷித்
துறுகாள மேகமிய விசைநா டகத்தமி
 ழூற்றுப்பா சண்ட வாக்கை
மெய்ப்பவெற் கீந்தருள வேண்டுமெடி மைக்குனது
 வேட்கைதிரு வுளமென் கொலோ!
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
 வெண்டாம ரைக்கி றைவியே. 4.

தேருமறை யாகமமோ டறுபத்து நான்குகலை
 சிற்பகணி தாதி யாவுஞ்
சீருறவ நிஞ்சருழி சென்றுபணி யாற்றிநற்
 செவிவாய் மடுப்ப ஞான்றுக்
தீரமுற வுள்ளத்திற் பதித்தவண நிற்கவொரு
 தெவ்வுகல் குரவு விசனஞ்

சீற்றமொடு வஞ்செதிர்ம லேந்தமா முற்றிடினுஞ்
செய்கையாக் கொள்ளா துமேற்
சாருங் கல்வியைக் கற்குபொழு தெதிர்ந்தெழுஞ்
சங்கையெனு மோர்பா வியைத்
தகர்ந்துசெல் லும்போது மறப்பெனும் பகைவனுட்
டதைந்துகொளே கொள்ளு கிற்கும்
வீரமதை யென்சொல்லி யாற்றுமே னேழைநா
வீற்றிருந் தருளல் வேண்டும்!
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாம ரைக் கிறைவியே. 5.

எழுத்தோடு சொற்பொருள்க ளணியாப்ப லங்கார
மிதயத்தி ருத்தி யென்றும்
எண்ணெண்க லேம்முழுது மறிவுறுத் திடுஞான
மேய்ந்தவர்க் குழுவி லார்ந்து
பழுத்தபுல மைத்திறம தாயாது புழுத்ததோர்
பழுவமெனத் தோற்றி பொய்ம்மைப்
படிவகனி கொண்டிகலி தடியிடைப் பெண்ணடை
பனிப்புறத் தேது வாகி [விற்
வழுத்துபுகி லாக்கொடுங் கடையரிற் கடையனேன்
வண்டமிழ்ப் பாப்பாய் வனே
மலர்மேலி ருந்தவளு மலேமேல்வ ளர்ந்தவளு
வாழ்த்தியங் கினிது சாற்றும்
விழுத்தகு நிணுதுமலர் வழுத்தியுள மேபாச
வியனறிவு யருளல் வேண்டும்
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாம ரைக்கி றைவியே. 6.

போகமளே யாடுபுல் லறிவினர்கள் போலாது
புந்தியுடல் வாக்கு மொன்றிப்
புத்தமுத மொத்ததமிழ்ப் பொங்குபுது வெள்ளநீர்
புக்கிடைய மர்ந்து செஞ்சொல்
வகபா தந்திரியு வண்ணங்க லித்துறை
யிசைப் பனுவல் கோவை பரணி
யெனவுரைப் பல்கவிக ளாற்பரம பொருளிதனின்
இயல்பனைத் துங்கு நித்த
நிகழுந்த டத்திலக் கணமுந்த தரித்த நல
நீர்மைமிகு சாது சங்க
நேர்ந்துநின் றவர்சரண பங்கேரு கஞ்சூடி
நிற்கநிலே புரிதற் காய
வேகமுட னினதாளே வைப்பிடம தன்றிபிற
வியஞ்சகமு மொன்று முளவோ!
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாமரைக் கிறைவியே. 7.

சொன்முறைதெ ரிந்துகலே கற்கநில் லேன்முனேர்
சொற்றமுறை யாய்ந்து பல்கால்
தொழும்புபுரி கற்கன்பு தனமுபின் றென்றும்நற்
சோபானத் துறையை யண்டி
மன்முறையொ ழுக்கமுட னிற்கவிலே நியமமாம்
வகையுண ந தற்கு மிலேபுன்
வடிவமோ திரமில்லே சொப்பனத் தினும்ஞான
மகிமையை யுணாற் காகா

பன்முறைபே ரின்பநெறி யன்பர்புகல் கிற்றினும்
பற்றுரு நிற்றை மோசப்
பக்ஷமேற் கொண்டெதிர்க் கக்ஷிபூண் டிடுமுளம்
பரமார்த்த மேத றியுமோ!
மின்முறை வதிந்தமகி பொன்னெடுகு லாவவரு
விபுலவைப் பிடம தாய
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாம ரைக் கிறைவியே 8.

முருக்கலருங் காவிபொரு வள்ளேமுத னேர்குமிழு
முகைமுல்லே நிறைநறைக்கு
முதமுபைந் தொடியுடைத் தோன்றிநெய் தற்கான
முகிழ்கன்னி கார முகையுந்
திருக்கிளரு நூபுரப் பற்பமுஞ் செறிகடவு
டேருனம் வெண்க மலமேற்
சீர்பெற்ற கலேமுதல கலேசொற் றிருந்தென
திகழ்வுற்றி ருந்த கன்று
பெருக்கமுறு பொருநைகெழு பரம்புறைசலான்றவன்
பிறங்கிவளர் மூன்று சங்கப்
பெட்பொளிர வந்தமுத முத்தமிழ்க் குழுவிநரைப்
பேணற்கி யைந்த தெய்வ
விருக்கமே யெனுதுதய ரறக்கவுளங் கொளாததுவும்
வியப்பினும் வியப்பிதம்ம!
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாம ரைக்கி றைவியே. 9.

பூவலய மீதுடற் பொருளாவி யாவுநின்
பூங்கழன்ம லர்க்கு ளிட்டுப்
புகலிடம டைந்தசெந் நாப்புலவர் போலாத
புன்மையான் வஞ்ச நெஞ்சப்
பாவகனென் றெனேமுற்றுங் கைவிடுவையேலெனது
பாடும்பொய்ப் பட்டு சித்தம்
பையபித் தேறிடும் வீணை காயமும்
பவுரிகெட் டலேயு மந்தக்
கேவலம தால்வருவ தாம்பாவ நிந்தனே
கேட்டவர்க ளிருவர் தன்னேக்
கேடுடைய றென்றுநகை செய்துகை கொட்டிடுவர்
கேதம தொழித்து ஞான
மேவரும் பண்பருளேச் செய்துமே பார்க்கினின்
மேதகைக் கிழிபதாமோ.
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாம ரைக்கி றைவியே 10.

ஏழையின் குறைநீக்கி யாதரவு செய்வையேல்
ஏளனம் வந்து விடுமோ
எண்கணன் பாற்பெருமை பேசுவதி லென்முறையு
னிருசெவியி னுழைய விலேயோ
ஆழிசூழ் புவிமீது மகிமைபெறு நினதுதிரு
வருளான தும்பொய்த் ததோ
அடிமையைக் காப்பதிலே யெனவிரத கங்கணம
தங்கையிற் பூண்ட துண்டோ
ஊழின்ப டிக்கன்றி வேறநட வாதிஃது
முறுதியென் றுவதொருவாக்



# ராஜ சரிதம்

## பாரஸீகம்—A. காம்பைஸீஸ்

## LIVES OF KINGS

## Persia—A. Cambyses

பாரஸீக ராஜ்யத்தில் மிகுந்த ப்ரக்யாதியோடும் ஆண்டு வந்தவரசர்களில் ஸைரஸ் என்பவர் ஒருவர். அவருக்கு ஒருகுமாரன் பிறந்தார். அவர் பெயர் காம்டைஸீஸ். ஸைரஸ் தன் தேசத்திற்கு வடபார்ச்வத்திலுள்ள சில காட்டுமிராண்டி ஜனங்கள் செய்தகலகத்தை அடக்குவதற்காகப் படையெடுத்துச் சென்றிருந்தபொழுது அவர்களால் கொலேயுண்டு இறக்கவே, காம்பைஸீஸ் பட்டத்திற்கு வந்தார்.

சௌர்ய பராக்ரமங்களில் காம்பைஸீஸ் தன்பிதாவிற்கு நிரம்பத்தணிந்தவரல்லவென்றுலும், அவருடைய புத்திசாதுர்யம், ஸமயத்திற்கு ஸமயம் ஒளிவிட்டோங்கும் *யுக்திவிசேஷம், பூததயை, ப்ரஜைகளே வசம் செய்துகொள்ளும் சக்தி முதலிய ராஜகுணங்களில் முற்றிலும் குறையுள்ளவர். இவருடைய செய்கைகளேயுற்று நோக்குமிடத்து, இவருக்குக்கொஞ்சம் பைத்தியம் கூடவுண்டோ வென்றெண்ணும்படியாகவிருக்கும். தோட்டிமுதல் தொண்டமான் வரையுள்ள ஸகலர்களும் இவர் தமக்கு எந்தஸமயத்தில் ஏதுசெய்வாரோ என்று நடுநடுங்கியிருப்பார். இவரிடம் நேசமாயிருந்தவர் ஒருவருமே கிடையாது.

பட்டத்திற்குவந்ததும் தன்னுடைய பிதாவைப்போல் தானும் பலதேசங்களேப்பிடித்து ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தி, க்யாதிமானுக விளங்கவேண்டுமென்ற ஆசை இவருக்கு உண்டாயிற்று. ஆகவே பெரிய ஸேனுஸமூகத்தைத் திரட்டிக்கொண்டு அந்தக்காலத்தில் நாகரீகத்தில் சிறந்து விளங்கினதும், ஆபிரிக்கா கண்டத்தின் வடகீழ்ப்பாகத்தில் உள்ளதும், நைல் என்ற நதி பாய்ந்தோடுவதாய் நீர்வள மிக்கதும், ஸ்வபாவத்தி லில்லாவிட்டாலும் நைல் கொண்டுவந்து ஏராளமாய்ச் சேர்ப்பிக்கும் வண்டலின் ப்ரபாவத்தால் நிலவளமிக்கதாகவும் விளங்கின ஈஜிப்ட் தேசத்தின்மீது படையெடுத்து காம்பைஸீஸ் சென்றுன். அத்தேசத்தை ஜயிப்பது அவருக்கு ச்ரமஸாத்தியமான கார்யமாகவில்லே; அதாவது வெகுசுலபமாய் அந்ததேசத்தை பாரஸீகராஜ்யத்தின் ஒருபாகமாக்கிக்கொண்டார். அத்தேசத்திலேயே சிறிதுகாலட் தங்கவும் தங்கினுர்.

அந்தக்காலத்தில்ஈத்தியோபியாதேசத்தின் பெருமைகள் அவர்காதில்விழுந்தன. மிகுந்தஐச்வர்யம்கொழிக்கும்தேசம் அது. ஆப்ரிக்காகண்டத்தின் மத்தியப்ரதேசத்துக்கு அக்காலத்தில் 'ஈத்தியோப்பியா' என்று பெயர் வழங்கிவந்தது. நம்புதற்கொணுதபடி பெருஞ்செல்வம்படைத்த வொரு தேசத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவுடன் எந்த வீரனுக்குத்தான் அந்ததேசத்தைக்கைப்பற்றவேண்டுமென்ற எண்ணம் உண்டாகாது. இவ்விஷயமாய் தீவ்ராலோசனே செய்யும்பொழுது அத்தேசத்தின் ஸௌக்ஷ்மங்கள், சித்ரங்கள், அதையடையும்மார்க்கங்கள், இன்னும் அவச்யமான விஷயங்கள் முதலியனவற்றை யறிந்துவருதற்பொருட்டு சில ஒற்றர்களே யனுப்ப வேண்டுமென்றுதீர்மானித்தான் காம்பைஸீஸ். அப்பொழுதவன் சில நுட்பபுத்தியுடைய ஒற்றர்களேத் தருவித்து அவர்களே ராஜதூதர்களாக்கி அனேகம் காணிக்கைப்பொருள்களே யவர்களிடங்கொடுத்து ஈத்தியோபிய நாட்டரசனு

* இதனே ப்ரதிபாசக்தி யென்பர் வடநூலார்.

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

குரைத்திடிற் சிறியனே னுய்வேனெ—னுமாயை
யுன்னேத் தடுத்த வாறே
வேழநிகர் கலிகாலக் கொடுமையோ யாதுனது
வேட்கையுண மறியனம்ம!
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாம ரைக்கி றைவியே. 11.
ஆதிநா யகிவிமல போதநா யகிமந்த்ர
மானநா யகிநித்திய
வறிவினு யகிமௌன குறியினு யகியின்ப
மருளுநா யகி மங்கல
நாதநா யகிமகா பூதநா யகி மகிமை
நண்ணுவிற் பனநா யகி
நாற்பத்து முக்கோண நடுவிலுறை நாயகி
நவரசவ லங்கா ரசங்
கீதநா யகிநளின யிதநா யகியுதை
கிரணநா யகியற் புதக்
கீர்த்திநா யகிமிகும தார்த்தநா யகியமுத
கிரநாயகி சத் திய
வேதனு யகியென்று மாதவர்க ளறுதினம்
வேண்டுமடி பாச வருள்வாய்
வெண்டாம ரப்பலணங் கொண்டான்ம கற்குரிய
வெண்டாம ரைக்கிறைவியே. 12

எஸ். வேலாயுத முதலியார்.

டைய ஸ்நேகபந்தத்தை விரும்பிய ஒரு அரசன் அனுப்புவதுபோல் அவர்களையனுப்பி வைத்தனன். அவர்களிடம் அனுப்பப்பட்ட காணிக்கைப்பொருள்கள் என்னவென்றால்:—ஊதாச்சாயம் கொடுக்கப்பட்ட ராஜரீக உடையொன்று; கழுத்திலணிந்துகொள்ளுவதற்குயோக்கியமான தங்கச்சங்கிலியொன்று; தங்கக்கங்கணங்கள் ஒருஜோடி; வாஸனாத்ரவ்யம் அடங்கிய பெட்டியொன்று; தென்னைச்சாரிலிருந்து செய்யப்பட்ட முதல் தரமான சாராயபிதிலியொன்று; ஆகிய இவைகளே.

ஈத்தியோப்பிய ராஜன் ஸாமான்யப்பட்டவனல்லன். காம்பைஸீஸ் இப்படி நயவஞ்சகமாக அனுப்பிவைத்த தூதர்கள் உண்மையில் இன்னகார்யத்தை யுத்தேசித்து வந்திருக்கிறார்களென்பதை ஒருநொடியில் அறிந்து கொண்டான். ஆதலால் ஸாதாரணஸ்திதியில் ராஜதூதர்களை எவ்வளவு மர்யாதையுடன் எதிர்கொண்டழைத்து உபசரிக்கவேண்டியது லோகஸாமாந்ய ரீதியோ, அவ்விதம் அவர்களை யுபசரிக்கவில்லை.

காம்பைஸீஸ் தூதர், ராஜஸந்நிதானத்தில் நின்றுகொண்டு தாங்கள் காணிக்கைகளாகக் கொண்டுவந்த பொருள்களிலொன்றாகிய நீலவர்ணங் கொடுக்கப்பட்ட ராஜரீகவுடையையெடுத்துக்காட்டவும், ராஜன் "நிரம்பசரி! உங்களரசன் மிகுந்தகெட்டிக்காரன்; என்னுடைய புத்திசாலித்தனம் எந்த மட்டிலிருக்கிறதென்பதைப் பரீக்ஷிப்பதற்காக இதைக்கொடுத்தனுப்பினன்போலும்!" என்று சொல்லி மடமடவென்று சிரித்தான். காம்பைஸீஸ் தூதுவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர்களிலொருவன் "ஸ்வாமி? தாங்கள் சொல்லுவது விளங்கவில்லையே" என்றான்.

ராஜன், "ஆம் உங்களுக்கு விளங்காது; இப்பொருள்களை யனுப்பிய காரணம், அரசன் உங்களிடம் சொல்லியிருக்கமாட்டானல்லவா? இவ்வுடையை யவர் அனுப்பியதின் காரணம் நான் சொல்லட்டுமா? இதன் ஸ்வபாவ வர்ணமாகிய வெண்மை தெரியாதிருக்கும்படி எப்படி நீலவர்ணமேற்றப்பட்டிருக்கிறதோ அதே ப்ரகாரமாக, உங்களுடைய அரசன் தன்னுடைய நிஜமான எண்ணம் வெளியே தெரியாதிருக்கும்படி உங்களைத் தூதுவர் என்ற வ்யாஜங் காட்டியனுப்பிவைத்திருக்கிறான். கூடுமானால் இவ்விஷயத்தை நான் அறிந்துகொள்ள வேண்டுமென்பது உங்களரசன் கருத்து. விளங்கிற்றா இப்பொழுது?" என்றான்.

தூதுவர் திடுக்கிட்டனர். அரசனுடைய புத்தி யூகத்தைக்கண்டு மலைத்தனர். இருந்தாலும் தாங்கள் கண்டு பிடிக்கப்பட்டதை வெளியிடவில்லை. பிறகு அவர்கள் தங்கச் சங்கிலியையும் கங்கணங்களையும் எடுத்து அரசனிடம் கொடுத்தனர். அரசனுக்கு அந்தச்சங்கிலியும் கங்கணங்களும் விலங்கிற்கு அறிகுறிகள் என்று தோன்றவே, அவன் சிரித்து, "ஸரிதான்; அது ஸரிதான்; இவைகளைக் காட்டிலும் பெரிதும் உரப்புள்ளவுமானவை வெகுவாகக்கிடைக்கும் எங்களிடத்தில். ஈத்தியோப்பியாவில், தங்கம் விசேஷமாக அகப்படக்கூடிய பொருள் என்றும் அதனாலேயே, இத்தேசத்துக் கைதிகளுக்குக்கூட ஸ்வர்ணமயமான விலங்குகளேயிட்டு வருகிறோமென்றும் உங்கள் அரசனுக்குத் தெரியாதுபோலிருக்கிறது! நீங்கள் போய்ச் சொல்லுங்கள்" என்றான்.

தூதர்கள் சாராயப்பிதிலியையெடுத்துக் காண்பிக்கவும், அரசன் "எங்களுடைய தேசத்தில் இது கொஞ்சம் அபூர்வந்தான். இதனுடையசக்தி எங்களுக்குநன்றாகத்தெரியும். இதையுட்கொள்ளுவதனால் சரீரபலம் நாளுக்கு நாள் குறைவுபடுமென்பதையும் நாங்களறிவோம். ஆயினும் அதனுடைய ருசியைக்கண்டு நான் மோசம் போவேனென்று உங்களரசன் நினைத்திருந்தால் அப்படி நினைத்தது தவறென்று அவனிடம் நீங்கள் போய்ச்சொல்லுங்கள்" என்று இவ்வாறு அவர்கள் அரசனுக்குக் கொண்டுவந்த காணிக்கைப்பொருள்கள் ஒவ்வொன்றையும் தோஷங்கூறி வேண்டாமென்று மறுத்துவிட்டான்.

ஸபை கலையும் நேரமாயிற்று. அரசன் தூதுவர்களை யழைத்துக்கொண்டு ஸபையை விட்டகன்றான். ஊருக்கு வெளியே வெகு ரமணீயமானவொரு ப்ரதேசத்தில் சுத்த ஸ்படிகம் போல் தெளிவுற்ற தண்ணீர் கொப்பளித்து வரும் ஓருற்றண்டை யவர்களை யழைத்துக்கொண்டுபோய் நிறுத்தி, ராஜன் "தூதர்களே! இங்கு ஏதாவது நூதனமான வாஸனை வருகிறதா? நிதானியுங்கள்." என்றான்.

"ஆம். நீலோத்பலங்களின் வாஸனை" என்றார் தூதர்.



"எங்கிருந்து வருகிறது தெரிகிறதா?"

"இந்த ஊற்றின் ஜலத்தினிடையே யிருந்துதான் வருகிறது."

"வாஸ்தவம். இவ்வூற்றின் ஜலத்தினுடைய ப்ரபாவம் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இது தீர்க்க ஜீவன் கொடுக்கக்கூடியது. ஈத்தியோப்பியர் தினந்தோறும் இதிலேயே மூழ்கிவருகிறார்கள். அதனால் அவர்கள் சரீரம் திடப்படுவதுடன் அரோகிகளாய் தீர்க்க ஜீவிகளாய், இருந்து வருகிறார்கள். இங்கிருப்பவர் ஒருவரும் நூற்றிருபது வயதாவதற்கு முன் இறப்பதில்லை. இந்த விசேஷங்களையும் உம்முடைய அரசனிடம் போய்ச்சொல்லுங்கள்" என்று ஈத்தியோப்பியா அரசன் சொன்னான்.

பிறகு எல்லோரும் அரண்மனைக்குத் திரும்பினார்கள். தூதர்கள் அரசனிடம் உத்திரவு பெறும் வேலை, அரசன், "இன்னொன்று; உங்களரசனுக்கு நானொரு காணிக்கை கொடுத்தனுப்புகிறேன்" என்று சொல்லி, உள்ளேசென்று ஒரு பெரிய வில்லொன்றை யெடுத்துவந்து, அவர்களிடம்கொடுத்துப் பின்னும் "இதுதான் நான் சொன்ன காணிக்கை. இந்த வில்லை யெடுத்துப் பாரஸீகர்கள் எப்பொழுது ஸுலபமாய் நாணேற்றி, சரஸந்தானம் செய்ய சக்தியுடையவராக ஆவாரோ, அப்பொழுது ஈத்தியோப்பியாவின் மீது படையெடுக்கத்தக்க ஸமயம் வந்ததென்று எண்ணலாகும். அதற்கு முன் படையெடுத்தால், தீர்க்கஜீவிகளான ஈத்தியோப்பியர்கள் கையில் பாரஸீகர் அவமானமடைவது நிச்சயம் என்று உங்களரசனிடம் நான் சொன்னதாகச் சொல்லுங்கள்" என்றுரைத்து அவர்களைப் போகவிடுத்தான்.

ஒன்றன் மேலொன்றாய்த் தாங்கள் கண்டதும் கேட்டதுமான ஆச்சர்யங்களைத் தூதுவர் வந்து காம்பைஸீஸ் அரசனிடம் தெரிவித்தார்கள். ஈத்தியோப்பியரின் தன்மைகளைத் திருட்டுத்தனமாய்த் தெரிந்து வரும்படியனுப்பியத் தூதுவர்களுக்கு, அவர்தன்மைகளையும், பலத்தையும், பலம் கிடைத்த வழியையும் முதலிய பல விஷயங்களையும் பஹிரங்கமாய்க்காட்டிக்கொடுத்த ஈத்தியோப்பிய ராஜன்மீது காம்பைஸீஸ் மிகுந்தகோபம் கொண்டான். அவன் கொடுத்தனுப்பிய வில் ஸாமாந்யமாய் ஸைந்யத்திலுள்ள ஒவ்வொரு ஈத்தியோப்பியனும் உபயோகப்படுத்தும் ஆயுதம். அதைப் பாரஸீக ஸைந்யத்திலிருந்த மிகுந்த பலசாலியும் ஸரியாக எடுத்து நிலை நிறுத்த முடியவில்லை; நாணேற்றுவதும் சரஸந்தானம்செய்வதும் அப்புறமிருக்கட்டும். அவைகளைக் கண்கூடாகக் கண்ட காம்பைஸீஸ் ஈத்தியோப்பியர்களைஜயிப்பது தன்னாலாகாத கார்யமென்று உடனே மதித்திருக்கவேண்டியது.

அப்படிக்கன்றி, தன்னுடைய ஸேனைகளைத் திரட்டிக்கொண்டு, யுத்த ஸந்நத்தனாகப் புறப்பட்டு விட்டான் ஈத்தியோப்பியாவை நோக்கி.

ஆனால் ஈத்தியோப்பியர்வை யடைந்து, அங்கே யவமானமடையும்படி கடவுள் அவனை விடவில்லை. ஆப்ரிக்காவின் மத்தியப்ரதேசத்தை யடைவதற்கு முன்னம், விஸ்தாரமான மணல் நிறைந்த பாலைவனங்களைக்கடக்கவேண்டியிருப்பதுதானுங்களுக்குத் தெரியுமே. அப்பாலைவனங்களில் வெகு பெயர்கள் இறக்கும்படி நேர்ந்தது. இதைக்கண்டு அதைர்யமடைந்து, மீதமிருந்த ஸ்வல்பமனிதர்களைத்திருப்பி யழைத்துக்கொண்டு மறுபடி ஈஜிப்ட் வந்து சேர்ந்தான். இப்படியாயிற்று ஈத்தியோப்பியா படையெழுச்சியின் இறுதி.

ஈஜிப்ட் தேசத்தார்களின் இக்காலத்திய நாகரீகம் தாழ்ந்தபடியிலிருந்தது. அவர்களுடைய பழக்க வழக்கங்களில் முக்கியமாய்மதவிஷயமான கோட்பாடுகளும் ஆசாரங்களும், நாகரீகம் மிகுந்த தற்காலத்தியவர்களுக்கு நகைப்பிற்கு இடங்கொடுக்கத் தக்கனவாயிருக்கும். உலகத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸகலப்ராணிகளையும் அவர்கள் தெய்வமாகக் கொண்டாடினார்கள். எலி, பூனை, மாடு, மூஞ்சூறு, முதலிய ஸகல ப்ராணிகளும் அவர்களுக்குத் தெய்வந்தான். முதலைகளைக் கூட தெய்வமாக நினைந்து வழிபாடு செய்துவந்தார்கள். இப்படியவர்கள் தெய்வமாக பாவித்த ப்ராணிகளுள் நிரம்ப முக்கியமானதும் முதன்மைஸ்தானம் வஹித்ததுமாக விருந்தது, சிற் சில சரீரலட்சணங்

இராமாயணத்தில் ஸீதையை விவாஹம் செய்து கொள்ளுவதற்கு சிவதநுஸ்ஸை நாணேற்றி சரஸந்தானம் செய்வதைப்பந்தயமாக வைத்திருந்ததையும், ஸீதாராமவிவாஹமாகி அயோத்திக்குத் திரும்பி வரும் வழியில் பரசுராமர் ஏற்பட்டு ஸ்ரீராமரிடம் வைஷ்ணவதநுஸ்ஸை நீட்டி "இதை நீ வளைத்துவிடுவாயானால் நான் உன்னால் ஜயிக்கப்பட்டதாக வொப்புக்கொள்ளுகிறேன்" என்று பரசுராமர் சொன்னதையு மிங்கு ஒப்பிட்டுப்பார்க்க.

அளோடு கூடிய பசுங்கன்று. அது முற்றிலும் கறுப்பாகவிருக்கவேண்டும். அதனுடைய நெற்றியில் சதுஷ்கோணகாரமாய் ஒரு வெள்ளைச் சுட்டியுமிருக்கவேண்டும், அதன் பின் பாகத்தில் அப்படியே பருந்து போன்ற உருவமுள்ள ஒருவெள்ளை விழுந்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட *லக்ஷணலக்ஷிதமான ஒருபசுங்கன்றுகாணப்படும் பட்சத்தில் அதையொரு கடவுளின் அவதாரமாகவே ஈஜிப்தியர் எண்ணியிருந்தனர்.

அன்றியும் அது எந்த தேசத்தில் காணப்படுகின்றதோ, அத்தேசம் உத்தரோத்தராபிவ்ருத்தியாய் விளங்குமென்பது மிவர்கள் நம்பிக்கை.

காம்பைஸீஸ் ஈஜிப்ட் தேசத்திலிருந்து வருநாளில், இப்படிப்பட்ட கன்றொன்று காணப்பட்டது. இதைக்கண்டதும் அத்தேசத்தாருக்கிருந்த ஆநந்தத்திற்குக் கணக்கேயில்லை. காம்பைஸீஸ் இதைப்பற்றிக்கேள்விப்பட்ட உடனே அக்கன்றைத் தன்முன்னிலைக்குக்கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தான். அரசன் முன்னல் கன்று கொண்டுவந்து நிறுத்தப்பட்டதும் காம்பைஸீஸ் சிரித்து "இதுதா னுங்கள் தெய்வமோ?எங்கே உங்கள் தெய்வம் தன்னையே காப்பாற்றிக்கொள்ளட்டும்; பார்ப்போம்" என்று சொல்லி, தன்னரையில் பிணிக்கப்பட்டிருந்த உடைவாளையுருவி, அக்கன்றின் அடித்தொடையில்குத்தியதைக்கொன்றுபோட்டான் அவனே அரசன். அவனையாரென்னபண்ணலாம். வேறு யாராவதாகவிருந்தால் அந்த நிமிஷமே ஈஜிப்தியர் அவனைப்பொடியாகச் செய்திருப்பார்கள். இந்த மஹாபாபத்தாலேதான் காம்பைஸீஸ் சித்தப்ரமம்கொண்டான் என்று அந்தநாட்டார் வாதிக்கின்றனர். அதற்குக்காரணம் எப்படியாயினுமாகுக; அவன் பிற்காலத்தில் செய்த செய்கைகள் முழுவதும் சித்தப்ரம்மம் கொண்டவன் செய்யும் செய்கைகளாகவே யிருந்தன. தன்னுடைய ஸஹோதரனை ஸ்மர்டிஸ்என்பவனைக்குத்திக்கொன்றான். அவனுடையஸஹோதரிக்கும் அதேமாதிரியான கதி கிடைத்தது. தனக்குப்ராணபதமாகவிருந்த ஒருஸ்நேகிதனுடைய சிறுகுழந்தையொன்றை அம்பாலடித்துக்கொன்றான். இதற்குக் காரணமொன்றுமில்லை. தான் மிகுந்த குறிப்பாளி என்பதைக்காட்டுவதற்காகவே அக்குழந்தையை அம்பாலடித்தது!

இப்படி யநேகநாட்கள், அநேக மாதங்கள், அநேக வருஷங்கள் சென்றன. ராஜ்யம் அல்லோல கல்லோலமாயிற்று. ஒருவனுக்காவது நாம் அடுத்தநிமிஷம் உயிரோடிருப்போம் என்ற நிச்சயம் கிடையாது. கடைசியாய்க் கடவுள் கண்திறந்தார். காம்பைஸீஸ் ஒருஸமயம் அவஸரமாய்க் குதிரையின் மீதேறினன். அவனுடைய கத்தியிடப்பட்டிருந்த வுறை, குதிரைக்கும் அவ னிருப்பிடத்திற்கும் நடுவில் நசுங்கிப்பிளந்து இரண்டாய் விழவே, கத்தி அவனுடைய அடித்தொடையில் பதிந்து, அவனுடைய மரணத்தை ஸம்பாதித்துத்தந்தது. ஆதியில் பசுங்கன்றை அவன் எந்த விடத்தில் குத்திக்கொன்றானே அதேயிடத்தில் அவனுடைய சரீரத்தில் கத்தியேறி காம்பைஸீஸ் இறந்தான் என்று சொல்லப்படுகிறது.

நீங்கள் சிரிக்கிறீர்கள்! ஆம். வாஸ்தவம் தான். அது ஏதோ தற்செயலாய் அந்தவிடத்தில் பட்டது! கன்றைக்கொன்றதற்காகவோ?" என்று நினைக்கிறீர்கள். அதென்னவோ எனக்குத்தெரியாது. அதுகடவுளுக்குத்தான் தெரியும். ஆனல் நானொரு கேள்விகேட்கிறேன். அவனுக்கேன் அப்படிப்பட்டமரணம் நேரவேண்டும்? ஏன் அதே இடத்தில் கத்தி ஏறவேண்டும்? எனக்கென்னவோ அது தெய்வதண்டனையாகத்தான் தோன்றுகிறது. ஆனல் இதெல்லாம் அவரவர் மனதின்போக்கைச் சேர்ந்ததென்பீர்கள், அவரவர் விச்வாஸநிலையைப் பொறுத்ததென்பீர்கள். அது வாஸ்தவம்தான். ஆனல் இவ்வழியில் விச்வாஸம் (Faith) வைத்திருப்பதற்காக நான் வெட்கமடையவில்லை.

இவ்விதம் ஆழ்ந்த யோசனைசெய்ய விடங்கொடுக்கிறமட்டிலாவது இந்த சித்தப்ரமைகொண்ட காம்பைஸீஸ் சரித்திரம் உபயோகப்படட்டுமே!.

T. R. S. சாஸ்திரி, பீ. ஏ.

---

இப்படியே அச்வமேதத்திற்கு யோக்யமான குதிரைகளின் வர்ணம், இதரலக்ஷணங்கள் முதலியன நம்முடைய சாஸ்த்ரங்களிலும் கூறப்படுகின்றது. இப்படிப்பட்ட லக்ஷண லக்ஷிதமான குதிரையொன்று கிடைத்து, ஒருவன் யாகம் செய்வானனல் அவனுக்குமிகவும் மேலானபதவி ஸ்வர்க்கத்தில் கிடைக்கிறதென்பது சாஸ்த்ரங்களின் துணிவு. இவ்வகைப்பட்டன மிகவும் அரிதாதல்பற்றி இவைகளுக்கு இத்துணை மஹிமை ஏற்பட்டனவோ என்னவோ!



# மஹாபாரதக் கதைகள்

## STORIES from MAHABHARATA

### இந்திரனும் கச்யபரென்ற ப்ராமணனும்

குலம், கர்மா, தானம், விவேகம் இவைகளுள் எது மனிதனுக்கு உத்தமமான பதவியைக் கொடுக்கக்கூடியதென்று தர்மபுத்திரர் கேட்க, பீஷ்மர் பின்வரும் கதையைக் கூறுகிறார்.

செல்வ மதம் கொண்ட வைச்யர் ஒருவர் வண்டியில் விரைவாய் ஸவாரி செய்கையில் வழியில் நின்ற ஒரு ஏழை ப்ராமணன் பேரில் வண்டியை ஏற்றி அவரைக் கீழேதள்ளிவிட்டார். கச்யபர் என்ற மேற்சொல்லிய ப்ராமணன் தபஸில் சிறந்தவர். ஆகிலும் வெகு ஏழை. தன்னுடைய ஏழைத்தன்மையினல்தான் மேற்கண்ட அவமானம் தனக்கு நேரிட்டதென்று எண்ணி ஏழையும் உயிரை வைத்துக்கொள்ளலாமா வென்று தராக்ரஹப்பட்டுக்கொண்டு ஹடமாய் உயிரைவிட்டுவிட நிச்சயித்து அசைவின்றி இல்லாமல் கிடந்தார். இதை அறிந்த இந்திரன் ஒரு நரிரூபமாய் அவரிடம் வந்து பின்வருமாறு சொல்கிறார்.

"ஸகலப் பிராணிகளும் மனுஷ்ய ஜந்மம் எப்பொழுது கிடைக்குமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. மனிதனிலும் பிராம்மண ஜன்மத்தையே மிகவும் கொண்டாடுகிறார்கள். நீர் மனுஷ்ய ஜந்மத்தைப் பெற்றுப் பிராம்மண குலத்தில் பிறந்து வேதசாஸ்திரங்களை நன்றாய் கற்றுணர்ந்தவராயும் இருக்கிறீர். இவ்விதம் அடையக்கூடாத பதவியை அடைந்தும் ஏன் வீணுப் உயிரைமாய்த்துக்கொள்கிறீர்? மனிதனுக்கு இருப்பது போல் கைகால்கள் இல்லாததினல் என்னைப் போன்ற பிராணிகள் படும் கஷ்டம் சொல்லி முடியுமா? தேகத்தில் முள் தைத்தால் எடுக்க முடியவில்லை. ஈ.எறும்பு கடித்தால் அவைகளை நிவர்த்திக்க முடியவில்லை. வெயில் மழைக்குத் தங்கும்படியான வீடுகள் கட்டிக்கொள்ளமுடியவில்லை. நீர் எவ்வளவோ புண்யங்களைசெய்து நரி, க்ருமி, பாம்பு, தவளை முதலிய பாபயோநிகளில் பிறக்காமல் உத்தமமான மானிடஜன்மத்தை அடைந்திருக்கிறீர். இதோ என்னைக்கடித்துக்கொண்டிருக்கும் பூச்சிகளை ஓட்டமுடியாமல் கஷ்டப்படுகிறேன். இந்த உயிரை மாய்த்துக்கொண்டால் இதைக்காட்டிலும் இழிவாய் உள்ள எண்ணிறந்த ஜந்மங்களில் எது வாய்க்குமோ என்று பயந்து, நான் உயிரைவைத்துக்கொண்டிருக்கிறேன். மனிதனுடைய ஆசைக்கும் அளவுண்டா? தனமில்லை என்று இப்பொழுது நீர் வருந்துகிறீர். தனமிருப்பவன் அரசனகப்பிறக்கவில்லையே என்றும், அரசன் தேவதையாகப் பிறக்கவேண்டுமென்றும் பிறகுதேவர்களுக்கெல்லாம் அரசனுகிய இந்திரனுடைய பதவியை அடைய வேண்டுமென்றும் விரும்புவான். பணமிருந்தாலும் ஸுகம்கிடைப்பதுநிச்சயமில்லையே. ராஜ்யபதவியில் இருப்பவனும்மேலான ராஜாவுக்குக்கீழ்ப்படிந்துகப்பங்கட்டிக்கொண்டு மனதில் க்லேசம் அடைவதை நாம் பார்க்கிறோம். மேலும் தனவான்கள் பலவிதமான நோய்களால் வருந்துவதில்லையா? ஆகையால் அவனவன் தன்னுடைய கர்மபலனுக அமைந்த பிறப்பையும் நிலைமையையும் இகழ்ந்து கொள்ளாமல் மனதைச் சமாதானப் படுத்திக் கொள்ளவேண்டியதுதான் உசிதம். ஆகையால் நீர் உடனே எழுந்திருந்து உம்முடைய தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். வேதத்திற்சொல்லிய தர்மங்கள் நற்பயனை அளிக்காமல் வீண்போகா. வேதத்திற்சொல்லிய தர்மங்களை அனுஷ்டிக்கக்கூடிய பதவி புண்யம் செய்தல்லவோ பெறக்கூடியது: நான் முன் ஜன்மத்தில் தர்க்க சாஸ்திரத்தைக் கைப்பற்றி வேதத்தை நிந்தித்து எப்பொழுதும் ஹேதுவாதங்களை செய்துகொண்டு நாஸ்திகனுயும் ஒன்றிலும் நம்பிக்கையில்லாமல் எல்லாவற்றிலும் சங்கித்துக்கொண்டு, விவேகமற்றவனுயிருந்தும் ஒருபெரியபண்டிதனுக எண்ணங்கொண்டு காலத்தை வீணுக்கினேன். அதனல் இந்த நரி ஜந்மம் எனக்குக் கிடைத்தது. திரும்பவும் மனிதனுய்ப்பிறந்து யக்ஞம், தானம், தபஸ் இவைகளை செய்துகொண்டு விலக்கவேண்டிய வஸ்துக்களை விலக்கி, அறியவேண்டியபொருளை அறிந்து மனதில் ஸந்துஷ்டியோடுஎப்பொழுது இருப்பேனென்றுஇரவும்பகலும் கவலையோடு இருக்கிறேன்."

மேற்சொல்லிய வார்த்தைகளைக்கேட்ட கச்யபரென்றப்ராமணன் உடனே எழுந்து, தன்னுடன் பேசின நரி இந்திரன் என்று ஞானதிருஷ்டியால் தெரிந்துகொண்டு அவருக்கு விதிப்படி பூஜைசெய்துவிட்டுத் தன் வீடுசென்றான்.

G. S. கிருஷ்ணஸ்வாமீ ஐயர், பீ. ஏ.

# தசைகள், நரம்புகள், தோல்

## MUSCLES, NERVES & SKIN

போலீஸ்காரர்கள் தலைப்பாகை கட்டுவதற்காதாரமாக, அடியில் ஒரு சிறு கூடை அல்லது நெட்டிக்கூடு ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறதல்லவா? அதன் பிரயோஜனம் என்னவென்கிறீர்கள்? தலைப்பாகைக்கு பார்வைகொடுப்பதற்கு நிரம்ப முக்கியமான, துணி மிருதுவானதாகையால், அது விரைப்பாய் நிற்கவேண்டியதற்காக ஆதாரமாய் அவைகளிருக்கின்றன. அப்படியேதான் நம்சரீரத்தின் எலும்புக்கூடும். அதை ஆதாரமாகக்கொண்டுதான் மனிதசரீரத்தின் அமைப்பு நிர்ணயிக்கப்படுகின்றது. எப்படித் தலைப்பாகைக்குத் துணியோ, அவ்விதமே நம்முடைய எலும்புக்கூட்டிற்கு மாம்ஸமேதஸ்ஸாதிகள். இன்னும் பாருங்கள். இந்த நெட்டியால் தயாரிக்கப்பட்ட தலைக்குட்டைகளின் மேலுள்ள துணிகளை யவிழ்த்துவிட்டோமானால், அடியிலிருக்கும் நெட்டி சொரசொரப்பாயும் பார்வைக்குக் கரடுமுரடாயுமிருக்கிறது. மிருதுவான துணியை வேண்டிய இடங்களில் மெத்தையாகக்கொடுத்து மேலே இழுத்துத் தைப்பதனால் தலைப்பாகைக்குக் கௌரவமான தோற்றம் உண்டாகிறது. அப்படியே, இந்த எலும்புக்கூடும் பார்வைக்கு எவ்வளவு அவலட்சணமாக விருந்தாலும், மனித சரீரமானது எவ்வளவு அழகாயும், அமைப்பாகவும் பார்ப்பதற்கு மனோகரமாகவுமிருக்கிறது பாருங்கள். இவ்விதம் இவ்வெலும்புக்கூட்டை அழகுபடுத்துவதென்னவென்கிறீர்கள்? இவ்வெலும்புக்கூட்டை முற்றிலும் மூடி மேடுபள்ளங்களை ஸமமாக்கிவைப்பது தசை நார்க்கூட்டங்களும், நரம்புகளும்; தோலுமே.

இதுவரை நாம் பேசிவந்த தலைப்பாகைக் கூட்டிற்கும் சரீர எலும்புக்கூட்டிற்கும் ஒரு முக்கியமான பேதமுண்டு. எலும்புக்கூடானது சேதனமுள்ள சரீரத்தின் பத்தியிலிருப்பதனால் அதுவும் சேதனமுள்ளதாகக் காணப்படுகிறது. அதாவது இந்த எலும்புக்கூட்டிற்குப்பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, அழிவு, சலனம் ஆகியகார்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுக்குள் இந்தப் பிரஸக்தியில் நாம் கவனிக்க வேண்டியது எலும்புக்கூட்டின் ஸ்வதச்சல*னமே; அதாவது தானாக அசையும் சக்தியே. ஆனால் இதற்குண்மையில் தானாக அசையும் சக்திகிடையாது. இனிமேல் நாம் விவரித்துச் சொல்லப்போகிற மூளைமுதலியவைகளின் கட்டளையை யொத்து நடப்பனவாகும். இத்தசைநார்களின் ‡ ஸ்வாதிஷ்டிதமான (தம்மிடத்துள்ள) ஓர் சக்தியினாலேயே இவ்விதசலனம் ஏற்படுகிறது. அதெப்படியென்று கவனிப்போம்.

நம்மேலே போர்த்தப்பட்டிருக்கும் தோலை உரித்துவிடுவோமானால், கீழே ரக்தவர்ணமுள்ள மாம்ச பிண்டங்கள் கண்களுக்குப் புலப்படும். ஆனாலிவ்விரக்தவர்ணமானது அந்தமாம்ஸங்களுக்கு ஏற்பட்ட சுபாவவர்ணமல்ல. பின் அவைகளினூடே செல்லும் ரக்தத்தின்வர்ணமாகும். இவ்வுண்மையை நாம் வெகுசுலபமாய் அறிந்துகொள்ளலாம். எப்படியெனில், இந்த மாம்ஸத்துண்டங்களை எடுத்து ஜலத்தில் போட்டு வைத்திருப்போமானால் அவைகளிலுள்ள ரக்தமானது ஜலத்தில் சுவறிவிடும். பிறகு அந்தமாம்ஸங்களை எடுத்துப் பார்ப்போமானால் வெண்மையாகத் தோற்றும்.

மேலும், தோலுரிக்கப்பட்ட சரீரத்தில் நாம் கவனிக்கவேண்டிய பாகம் இன்னுமொன்றுளது. அதாவது சரீர ஸந்திகளில், எந்த ஸந்திகளுக்கு அதிகமான சலனம் வேண்டியிருக்கிறதோ, அவ்விடங்களில் அடர்த்தியாகவும் நீளமாகவும் மாம்ஸபிண்டங்கள் காணப்படுகின்றன. எவ்விடத்தில் வெகுசொல்பமான அசைவும் அவசியமில்லையோ (மண்டை யோட்டுக்கும் தோலுக்கும் நடுவிலும், மண்டையோடுகளுக்கிடையிலும்) அவ்விடத்தில் வெகு சொல்பமாக இந்தமாம்ஸம் வைக்கப்பட்டுளது. இதற்குக்காரணம் சரீரத்தின் எவ்விதமான சலனமும் எலும்புகளின் சலனத்தாலும், அவ்வெலும்புகளின் சலனம் மாம்ஸங்களின் சலனத்தாலும் உண்டாகின்றன என்பதுதான். அதிக வேலைசெய்யவேண்டிய இடங்களில் அதிகமாகவும்சொற்பவேலை செய்யவேண்டிய இடங்களில் சொல்பமாயும் இந்த மாம்ஸங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இனி, இவ்விதசலனத்திற்குக் காரணமான ஒவ்வொரு மாம்ஸத்துண்டையும் ஒவ்வொரு தசையென்று விவகரிப்போம். இவ்விதத் தசைகளில் குறைந்தபட்சம் 500 தசைகள் வரை நம்முடைய சரீரத்தில் வைக்கப் பட்டிருக்கின்றன. தோலுரித்த பெரியபடத்திலாவது நிஜ மனித சரீரத்திலாவது உற்றுப்பார்ப்பீர்களானால், தொடை முதலிய பலம் பொருந்திய பாகங்களில் இத்தசைகளில்அநேகம் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, அந்த எலும்புகளின்மேலிலும் மற்ற இடங்களில் அவ்வவ்விடங்களுக்குத்தகுந்த பலமிருக்கும்படி ஒன்று இரண்டு அல்லது அதிகம் தசைகள் எலும்புகளுக்கிடையுமாகச் சேர்த்துக் கட்டப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம்.

மனித சரீரம் அல்லது வேறு ஏதாவது பிராணியின் சரீரத்திலிருந்து ஒரு துண்டு மாம்ஸத்தை எடுத்துக்காயவைத்துப் பிறகு அணுதர்சனி*யைக் கொண்டாவது அல்லது கவனமாய் உற்றுப்பார்த்தாவது நோக்கினால் ஒவ்வொரு மாம்ஸ பிண்டத்திலும் அநேகம் சிறுதசைகள் இருப்பது காணப்படும். இத்தசைகள் நடுவில் தடிமனாயும் ஓரங்களில் மெலிதாயுமிருக்கும்படி நடுவிலிருந்து கரைந்து வருவதாகக்காணப்படுவதோடு, தசையின் ஓரங்கள் மற்றபாகங்களைப்போல் மிருதுவான மாம்ஸங்களாகவிராமல் கெட்டியானவைகளாய் நாம் முன்னே சொல்லியிருக்கும் ஸந்திபந்தன நாடாக்களைப்போலிருக்கின்றன. இவைகளுக்கு டெண்டென்ஸ் (Tendons) என்றுபெயர். இவைகளைக்கொண்டுதான் தசைகள் எலும்புகளில் கட்டப்படுகின்றன. இத்தசைகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே (அதாவதுமற்ற தசைகளின் சம்பந்தமில்லாமல்) சலிப்பதற்கு சக்தி ஏற்பட்டிருக்கிறது. இப்படி அநேகம் தசைகள் சேர்ந்து கட்டுக்கட்டுகளாக நம்முடைய சரீரத்தில் அநேகவிடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இக்கட்டுகளுக்குத் தசைசமூகம் (Muscles) என்று பெயரிடுவோம்.

* ஸ்வத: தானாகவே, சலநம்-அசைதல்,

‡ ஸ்வ- தன்னிடத்திலேயே, அதிஷ்டிதமான-வைக்கப்பட்டுள்ள,

* அணு—வெகு சிறிய துளி. தர்சனி—பெரிதாகக் காட்டும் கண்ணாடி (Microscope)



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### 1. ஆத்திசூடி விளக்கம்

#### 40. கைவினை கரவேல்

கைத்தொழிலை மறைக்காதே என்பது இதன் பொருள். கைத்தொழில் என்ற சொல்லுக்கு ஜீவனத்திற்காக மாத்திரம் என்று செய்யப்படும் உபயோகமான காரியம் என்றும், தான் அவசியம் செய்யவேண்டிய கடமையான லௌகிக வைதிகத்தொழில்கள் என்றும் பொருள் கூறலாம். இதனால் ஜீவனத்திற்காகச் செய்யவேண்டிய தொழிலைவிடாது செய்யவேண்டும் என்ற லௌகிகப் பொருளும்: கர்மானுஷ்டானம் ஈச்வர பக்தி முதலியவைகளை எப்பொழுதும் விடக்கூடாது என்ற வைதிகப் பொருளும் இந்த ஸூத்திரத்திற்கு உண்டு என்பது வெளியாகும்.

(1) ஜீவனத்தொழிலை விடாதே:—உலகில் பொதுவாக மானிடர்களுக்கு இரண்டுவிதத் தொழில் உண்டு. அவையாவன, ஜீவனத்தொழில் மனஸ் ஸமாதானத்தொழில் என்று. முன்வகையில் உழவு, சொத்தைப்பாதுகாத்தல், கைத்தொழில், வியாபாரம், உத்யோகம் முதலியவைகளைச் சேர்க்கலாம். பின்னதில் கற்றல், கேட்டல் முதலியவைகளைச் சேர்க்கலாம். கற்றல் கேட்டல்தான் முடிவில் மானிடர்களை அடுத்தபடியாகிய வைதிக நிலைக்குக் கொண்டுசேர்ப்பது. அது இல்லாவிடில், மானிட தேஹம் வெறும் உண்டு கழியும் யந்திரமாகப்போய்விடும். தற்காலத்திய நாகரீகம் இந்தநிலையைத்தான் ஸ்திரப்படுத்த ஏற்பட்டுள்ளது. ஆகவே, கற்றல் கேட்டலாகிய மனஸ் ஸமாதானத்தொழிலே மானிடப் பிறப்பிற்குச் சிறந்தது என்று 'கேள்விமுயல்' என்ற ஸூத்திரத்தில் வற்புறுத்தப்பட்ட போதிலும், அது தடையின்றி நடைபெறுவதற்கு வேண்டிய அளவு கவலையின்றி ஊண்உறக்காதிகள் கிடைப்பதற்குத் தகுந்த ஜீவனமுபற்சி அவசியம் வேண்டும். இதில் காலத்தைக் கொஞ்சம் செலவழித்துவிட்டுத்தான் மிகுந்தகாலங்களை கற்றல் முதலியவைகளில் செலவிடவேண்டும். இப்படிச் செய்தால் மனஸ்ஸமாதானத் தொழில் நன்றாக நடைபெறும். ஏற்பட்ட நல்ல பய

ளையும் கொடுக்கும். இல்லாவிடில், அதையே ஜீவனோபாயமாகவும் உபயோகிக்க வேண்டி வரும்: மனஸ்ஸமாதானம் உண்டாகாது. அதிலிருந்து ஒய்வு ஒழிவு இல்லாது பாழும் வயிற்றிற்கே உழைத்துத் தீரவேண்டி வந்துவிடும். ஆதலால் மனஸ்ஸமாதானத்திற்காக உள்ள பொது விஷயங்களை ஜீவனோபாயமாகக் கொள்ளாது, அது தனித்ததாகவே இருத்தல் வேண்டும். பொதுவான ஸமாதான காலங்களில் தேர்ந்த கற்றறிவுடையோருக்கு ஜீவனம் அவர்கள் கல்விமூலமாகவே நடந்துவிடும்; ஆனால் கஷ்டகாலம் வந்தால் இப்படி இரண்டும் சேராது. இங்கிலாந்தில் ஜான்ஸன் காலத்தில் கவிகள்பட்டகஷ்டம் சொல்லிமுடியாது. அவர்களை நன்றாக ஆதரிப்பார் இல்லை. அதில் சிலகவிகளுக்கு கடைமுதலிய ஜீவனோபாயம் வேறாகவிருந்ததால், தாம் கவிகட்டும் தொழிலையும் விடாது ஸுகமாக இருந்தனராம். இந்தியாவில் இம்மாதிரியான கஷ்டம் வாராமலிருப்பதற்காகவே க்ருஹஸ்தர்கள், ப்ரஹ்மசாரி ஸந்யாஸிகளை, ஆதரிக்கும்படியாகவும், பொது ப்ராஹ்மணர்களை மற்றைய ஜாதியார் ஜீவனோபாய ஆவசியகம் தோன்றாமலே வைத்துக்கொண்டிருக்கும் படியாகவும் வேதமே வர்ணாச்ரம தர்மங்களை விதித்துள்ளது. இதனாலே ப்ராஹ்மணர்கள் தமது வைதிகவழியிலேயே தவறாது ஜீவித்து வந்தனர். தற்காலக் கொடுமையில் இவை சற்று பலக்குறைவை அடைய, ப்ராஹ்மணர்களும் ஜீவனோபாயத்தை யோசிக்க வேண்டி வந்துவிட்டது. இதுபற்றி வடக்கே சில வருஷங்களுக்கு முன்னர் கூடிய ப்ராஹ்மண மஹாஸங்கத்தில் 'ப்ராஹ்மணர்கள் வைதிகத் தொழிலை ஜீவனத்திற்கு உபயோகமே படுத்தாது வேறு லௌகிக உபாயத்தை அதற்காக மாத்திரம் கைக்கொள்ள வேண்டும்' என்ற தீர்மானம் பிறந்தது. இதுவரையில் ப்ராஹ்மணர்களுக்குக் 'கைவினை கரவேல்' என்ற ஸூத்திரத்தின் லௌகிகப் பொருள் பொருந்தாமலிருந்தது, வைதிக ஒழுங்கினாலே. காலக் கொடுமையால் இதையும் ப்ராஹ்மணர்கள் இப்பொழுது கவனிக்கவேண்டி வந்துவிட்டது தமது வைதிக ஒழுங்கு ஸரியாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டுமானால். ஆகவே இந்தக் காலத்தில் ப்ராஹ்மணர்கள் உள்பட எல்லா பரதகண்ட வாஸிகளும் தமது வைதிகத்தொழிலுக்கு வெளிப்பட்டதான ஜீவனோபாயம் ஒன்றைக் கைக்கொள்ளவேண்டும் என்றாச்சுது. தத்காலத்திய கைத்தொழில், வியாபாரம், வைத்தியம் முதலிய தேச க்ஷேமத்தை அதிகப்படுத்த ஏற்பட்டுள்ள வாதங்களுக்கு எல்லாம் இந்தப் பொருளில் இந்த ஸூத்திரமே ஆதாரமாகும். ஆனால் முன்கால ஒழுங்குப்படி இந்த ஸூத்திரம் எப்படிப்பட்டவனும் உழுது உண்ணுவதைக் கைவிடலாகாது என்று பொருள்படும். என்ன உத்யோகம் செய்து எவ்வளவு பணம் ஸம்பாதித்தபோதிலும் உழுதுவாழ்வாரிடம்தானே தான்யம் வாங்கி உண்ணத் தொங்கவேண்டும். ஆதலால் அந்த ஜீவனோபாயத் தொழிலை ஒவ்வொருவரும் விடாதிருந்தால் தான் பொதுக்ஷேமம் என்று கூறவந்தது இந்த வாக்யம். பெரியோர் வாய்ச்சொல் சிறப்பு இதுதான். காலத்திற்கு ஏற்ற விரிந்த பொருளகள் எல்லாவற்றிற்கும் இடம் தரும் தன்மையுடனிருக்கும் அவைகள்.

(2) கர்மானுஷ்டானாதிகளை விடாதே:—இந்த ஸூத்திரம் முன் பொருளில் ப்ராஹ்மணருக்கு முற்காலத்தில் பொருத்தமில்லாவிடினும், எல்லோருக்கும் எக்காலத்தும் பொதுவாயும், ப்ராஹ்மணர்களுக்குச் சிறப்பாயும் இந்த வைதிகப் பொருளில் மிகுந்த பொருத்தமுடையது. இங்கு கைவினை என்பது ஒருவனுடன் கைகண்ட பொருள்போலவே பொருந்தியுள்ள கர்ம விசித்திரங்கள், அதாவது அவனுக்குஏற்ற ஜாதிவர்ணாச்ரம தர்மங்கள். இந்தப் பொருளைத் திடப்படுத்தி இதனால் ஏற்படக்கூடிய மோக்ஷத்தையும் இடையிலுள்ளவழி நிலைகளையும் காட்ட ஏற்பட்டதுதான் பகவத்கீதா சாஸ்திரம். இந்தக் கைவினை நாற்பெரும் வருணத்திற்கே சிறப்பானது. இப்படி அடங்காத உலகத்தவர்களுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. பின்னரல்லவா மோக்ஷமார்க்க முயற்சி அவர்களுக்கு உண்டாவது என்பது ஏற்பட, கர்மானுஷ்டானத்தை எப்பொழுதும் விடவேகூடாது. அதுவாக விட்டுப்போகும் நிலைவந்தால் தானே நழுவிவிடும். நமது புத்திபூர்வமாக விவேகம் செய்து அதை நீக்க முயலவே கூடாது. இப்படிச் செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாவதே மனதின் குற்றத்தைக் காட்டும். இதன்படி நடக்க முயலு பலன் குதர்க்கியே, பலபெயர்களை மோசம்



பண்ணிக் கெடுக்கவந்தவனே. இவனுக்கு நரகம்தான் கதி என்று கூறவும் வேண்டுமா? வினை என்ற சொல்லின் கீழ் நாம் செய்பவன், இது செயல் என்ற வேற்றுமை உணர்வுடன் நடைபெறும். உள் வெளித்தொழில்கள் இரண்டையும் அடக்கிவிடலாம். இதனால் கைவினை என்பதனுள் த்யானம், உபாஸனை, நிஷ்டை, நற்குணம், நற்செய்கை எல்லாம் அடங்கும். ஆகவே வைதிக ஒழுங்குப்படி மோக்ஷவழியில் எந்த எந்த பாகங்களும் பழக்கங்களும் கூறப்பட்டுள்ளனவோ அவைகளில் நமது பிறப்பு, வர்ணம், ஆச்ரமம், நிலை முதலியவற்றிற்கு ஏற்றவைகளைக் கடைப்பிடித்து விடாது பழகிக்கொண்டே இருக்கவேண்டும், அவைகள் தாமே நழுவும் வரையில், என்ற சிறந்த பொருளும் இந்த ஸூத்திரத்தில் புதைந்து கிடக்கிறது பாருங்கள்!

இம்மாதிரி அனுஷ்டித்து ஈடேறியவர்கள் தான் நமது ருஷிகள், பெரியோர்கள் முதலிய எல்லோரும். இவர்களுள் மஹாபாரதம் ஆரண்ய பர்வத்தில் வரும் தர்மவியாதோபாக்யானத்தில் வியாதன், பெண்மணி இவர்களும், பீஷ்மரும், ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவுமே தகுந்த திருஷ்டாந்தம்.

# மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

Pompeii was a miniature of the civilization of that age. Within the narrow compass of its walls was contained, as it were, a specimen of every gift which luxury offered to power. In its minute but glittering shops, its tiny palaces, its baths, its forum, its theatre, its circus—in the energy yet corruption, in the refinement yet the vice, of its people, you beheld a model of the whole empire. It was a toy, a plaything, a show box, in which the Gods seemed pleased to keep the representation of the great monarchy of earth, and which they afterwards hid from time, to give to the wonder of posterity;—the moral of the maxim, that under the sun there is nothing new.

Crowded in the glassy bay were the vessels of commerce, and the gilded galleys for the pleasures of the rich citizens. The boats of the fishermen glided rapidly to and fro ; and afar off you saw the tall masts of the fleet under the command of Pliny. Upon the shore sat a Sicilian, who with vehement gestures and flexible features, was, narrating to a group of fishermen and peasants a strange tale of ship wrecked mariners and friendly dolphins; just as at this day, in the modern neighbourhood, you may hear upon the Mole of Naples.

பாம்பியை என்னும்பட்டணம் அக்காலத்திய நாகரிகத்திற்கோர் சிற்றுருவாகவே இருந்தது. அதன் மதிட் சுவருள் அடங்கிய சிறுவிடத்துள் பெரும்போக விஷயங்களால் பணக்காரர்கள் அடையக்கூடிய பேறுகள் எல்லாம் ஒருங்குசேர்ந்திருந்தனபோலக் காணப்பட்டன. அதிலிருந்த சிறு பளபளப்பான கடைகளிலும், சிற்றரண்மனைகளிலும், ஸ்நாநத்தொட்டிகளிலும். நியாய ஸ்தலங்களிலும், நாடகசாலைகளிலும், வையாளி வீதிகளிலும், அவ்வூராரிடமிருந்த ஊழல் நிறைந்த சுறுசுறுப்பிலும், பொல்லாங்கு நிறைந்த சீர்மையிலும், அவ்வூரிருந்த தேசம் முழுவதையும் எடுத்துக்காட்டும் விளக்கக் குறிப்பைக் காணலாம். உலகில் முன்னர் இருந்த அரசாட்சி உருவத்தை அமைத்து பின்னர் சிலகாலம் வரையில் காட்டாது மூடி வைத்து, பிற்காலத்தார் வியப்படையும்படி, ஸூர்யனுக்குட்பட்ட இங்கு, புதி தென்பதொன்றுமில்லை என்றபழமொழியின் கருத்தை விளக்க தேவதைகளால் உத்ஸாஹமாக இயற்றப்பட்ட ஒரு பொம்மையோ, விளையாட்டு ஸாமானோ, காட்சிப் பெட்டிதானோ அப்பட்டணம் என்று கூறவேண்டும்.

கண்ணாடி போன்ற அவ்வூர் விரிகுடாவில் கூடிக்கிடந்தன வாணிகக்கப்பல்களும், பொன் பூச்சுக்களும் பாய் தண்டுகளும் உடைய பணக்காரர்கள் களியாட்டுப் படகுகளும். மீன் பிடிப்போர் படகுகள் அங்குமிங்கும் நழுவிப்பாய்ந்தோடின. ப்ளினியின் மேல்பார்வைக்குட்பட்ட கப்பற்கூட்டங்களின் உயர்ந்த பாய்மரங்கள் வெகுதூரத்தில் காணப்பட்டன. கரையிலோ, இக்காலத்திலும் நேபல்ஸ் பட்டணத்தில்போதாங்கும் செய்கரையில் கேட்கக்கூடியவை அலைன்ற, கப்பலுடைபட்டுத் தத்தளிக்கும் மாலுமிகள், அவர்கட்குதவும் கடற்பன்றித் தோழர்

(இதன் தொடர்ச்சி 34-ம்பக்கம்.)

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### மூன்று பாஷையால் வந்த முடிவு

சாளவதேசத்தின் அரசன்பெயர் முத்கலன். அவனுக்கொரேபிள்ளை. அவன்மஹாநிபுணன். எழுத்தைப் பார்த்தால் அவனுக்குக் கழுதைக் காம்போதி ராக மிதமிஞ்சி வந்துவிடும்; தேம்பித் தேம்பி அழுவான். எழுதுவதென்றால், அவனுக்குப் பெருந்தொல்லை. தன்பிள்ளைக்குப் படிப்பேறாததைக் கண்ட முத்கலன் தன் மகனைப்பார்த்து "உன் களிமண் மண்டையில் என்னால் ஒன்று மேற்ற முடியவில்லை. படியாதவனை, கட்டிக்கொண்ட மனைவிகூட மதியாள். உனக்கு எத்தனை முறை சொல்லி இழவெடுப்பது. என் எதிரிலிராதே. நல்ல உபாத்தியாயருடன் சேர்த்தனுப்புகிறேன். நீ அவருடன் வெளிதேச சஞ்சாரஞ் செய்து படித்துவா. அவரால் முடிந்தவரையும் உனக்குச் சொல்லித் தருவர்" என்று சொன்னான்.

முத்கலன் மகன், தன் உபாத்தியாயருடன் வெளியூரெல்லாஞ் சஞ்சாரஞ்செய்து ஒருவருஷமானதும் தன் ஊரையடைந்தான். வந்த மகனை "என்ன படித்து வந்தாய்?" என்று தகப்பன் கேட்டான். "எவ்வளவோ படித்தறிந்து விட்டேன். யாருமறிய முடியாததெல்லாம் நான் சொலவேன். நாய்கள் குரைத்தால்கூட அவை என்ன சொல்கின்றன என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். நாய்ப் பாஷை நான் நன்றாய்க் கற்றுவந்திருக்கிறேன்" என்று மகன் உத்ஸாகத்துடன் பதில் சொன்னான்.

"ஐயோ! இதுவும் ஒரு விதியா?" என்று தன் தலையிலறைந்துகொண்டு அரசன் சிறுவனை வேறொரு உபாத்தியாயருடன் படிக்க வெளியூருக்கனுப்பினான்.

முன்போலவே, அவன் ஒருவருஷம் கடந்ததும், தனது ஊரையடைந்து தந்தையை வணங்கினான். தன் மகனுக்கு வணக்கம் வந்துவிட்டது என்று எண்ணிக்கொண்ட முத்கலன்

---

கள். இவர்களைப்பற்றிய விநோதக்கதைகளை சுறுசுறுப்பான அங்க அடையாளங்களுடனும், படிவான முகக்குறிகளுடனும் எடுத்துசரமாரியாகப் பொழிந்துகொண்டிருந்தான் ஒருஸிஸி ஆயான், செம்படவர்கள், குடியானவர்கள் ஆகிய இவர்கள் நிறைந்த ஒரு கூட்டத்திற்கு.

"என்னடா சேதி? எவ்வளவு படித்தாய்? என்ன ஸமாசாரம்?" என்று மகனைக் கேட்டான். "இம்முறை நான்படித்த பாஷை யுங்களுக்குத் தெரியவே தெரியாது. இப்பொழுதெனக்குப் பக்ஷிகள் பேசும் பாஷை நன்றாகத்தெரியும். அவைகள் பாடும் பாட்டின் நயத்தை நன்றாக அறிந்து சொல்வேன்" என்று மகன் பதில் சொன்னான்.

அரசனுக்குக்கோபம்வந்துவிட்டது. "அடே! பித்துக்கொள்ளிமகனே! மூடசிகாமணியாக விளங்குகிறாய்! உனக்கு அறிவென்பது சூனியமாகிவிட்டது. பணம், பொருள், காலம், எல்லாம் உனக்கு வீணே செலவிட்டேன். வெட்கமில்லாமல் நாய்போலக் குலைக்கக் கற்றேன், பக்ஷிபோல்கத்தக் கற்றேன் என்று வாய்கூசாமல் சொல்லுகிறாய். மடையா! பணம் என்பது உனக்குக் கிள்ளுக்கீரையாய்விட்டது. பணமும் நஷ்டம்; படிப்பும் வந்தபாடில்லை. மடச்சாம்பிராணியாக விளங்குகிறாய். ஐயோ மகனையிற்றே என்று பரிதாபப்படுகிறேன். நீரும் மூன்றுபழிபொறுக்கும் என்பார்கள். முதல் தவறினால் மூன்றில் சரியாய் விடுமென்பார்கள். இம்முறை நீ நன்றாகப் படியாதுவந்தால் என் வாசல் நிழலிற் கூட நிற்கக்கூடாது. நான் அப்பொழுது மகன் என்று கொண்டாட மாட்டேன். பின் என்னை தகப்பன் என்று எண்ணவேண்டாம். நீ வந்த வழியைப் பார்த்துக்கொண்டு எங்கேயாவது போகலாம்" என்று கடுகடுத்து மகனைப்பார்த்தெள்ளுங் கொள்ளும் வெடித்தான்.

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று மகன் மூன்றாவது உபாத்தியாயருடன் வேற்றூர் படிக்கப்போனான். ஒரு வருஷம் கடந்து தனதுதந்தை வீடடைந்து தகப்பனை வணங்கி வாய்பொத்திக் கைகூப்பி நின்றான். அரசனும் "எவ்வளவு படித்தாய்?" என்று கேட்டான்.

"இவ்வருஷம் மண்டூகபாஷை கண்டறிந்து வந்தேன்" என்று மகன் பதில் சொன்னான். அரசனுக்குக் கோபம் வந்துவிட்டது. தனது ஸேவகர்களைக்கூப்பிட்டு, "இனி இவன் என் மகனில்லை, அவனைத் துறந்து விட்டேன். இவனைக் குண்டுகட்டுக் கட்டி காட்டில் கொண்டுபோய் கத்திக்கிரையாக்கி விடுவீராக" என்று கண்ணில் தீப்பொறிபறக்கக்கட்டளையிட்டான்.



ஸேவகர்களும் அரசன் கட்டளைக்குட்பட்டவர்களாய்ச் சிறுவனைக் காட்டிற்குக்கொண்டு போனார்கள். ஆனால் அவனை வெட்டுவதற்கு அவர்மனம் ஒப்பவில்லை. ஆகையால் அவனை அங்கேயே விட்டுவிட்டு, ஒருமானைக்கொன்று அதன் நாக்கையுங் கண்ணையுங்கொண்டுவந்து அரசனுக்குக் காட்டினார்கள்.

சிறுவனும் நெடுந்தூரம் நடந்து ஒரு கோட்டையை யடைந்தான். அங்கவனுக்குத் தூக்கமேலிட்டதால் அக்கோட்டைத் தலைவனைத்தனக்கொரு விடுதி படுக்கக் கொடுக்கும்படி கேட்டான். அவனும் "கோட்டையரண்மனையின்மேல் கோபுரத்தில் இடமிருக்கிறது. உனக்கு வேண்டுமென்றால் அங்கு தூங்கலாம். ஆனால் அதில் காட்டுநாய்கள் அதிகமாக இருப்பதல்லாமல், வந்த ஆளைக் கொன்று இரைசெய்கின்றன வாகையால் அங்கு தூங்குவது ஆபத்திற்கிடமாகும்; இந்நாய்களுடைய ஸம்பர்க்கத்தால் இந்நாடு முழுவதிற்கும் நடுக்கம்" என்று சிறுவனை எச்சரித்துப் பதில் சொன்னான்.

ஆனால் சிறுவன் அம்மொழிகளுக்குப் பயப்படாமல் "அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம், நாய்கள் எனக்கொன்றும் கெடுதிசெய்யமுடியாது. அவற்றிற்கு ஆஹாரத்திற்காக ஏதேனும் கொடும்; நான் போய் படுத்துக்கொள்கிறேன்; தயவுசெய்யும்" என்று கேட்டான். இதைக்கேட்க, ஜனங்களுக்குச் சற்று ஸமாதானமாக, கோட்டைத்தலைவன் சிறுவனிடம் ஆஹாரமூட்டையைக் கொடுத்துக் கோபுரத்தருகில் அழைத்துப்போய் அதன் வாயிலைத் திறந்தான். சிறுவனும் உள்ளே நுழைந்தான். ஜனங்கள் தமதிடம் போனார்கள்.

உள் நுழைந்ததும் நாய்கள் குலைக்கவில்லை. தமது நேசனைக்கண்டாற்போல தமது வாலையாட்டிக்கொண்டவனைச் சூழ்ந்துகொண்டன.

நிற்க, காலையானதும் கோட்டைத்தலைவன் கோபுரக்கதவைத் திறந்தான். சிறுவனும் சிறிதும் வாட்டமடையாமல் வெளிவரக்கண்டவன் ஆச்சரியமடைந்தான். கோட்டைக்காரன் "இரவு உன்னை அந்நாய்கள் தொந்தரை செய்யவில்லையா?" வெனக்கேட்டான். "தொந்தரையா? யார் சொல்லுவார். அவை தமது கஷ்டநிலையை என்னுடன்சொல்லியழுதன. அவற்றைமந்திரத்தால் கட்டிப் பணத்தைக்காக்கும்படி ஏவியிருப்பதால் ஆகார நித்திரையில்லாமல் அழுவதாக என்னிடத்து சொல்லின. இதற்காகத்தான் இவ்வூராரை அவை தொந்தரை செய்கின்றன. அதை நீக்குவதற்கு வழிகூட எனக்கவை கற்பித்திருக்கின்றன" என்று சிறுவன் பதில் சொன்னான்.

இந்த ஸமாசாரத்தைக் கேட்டதும், அக்கோட்டைத்தலைவனுக்குண்டான ஸந்தோஷத்திற்களவேயில்லை "ஏன் அப்பா! நீ இந்த பெரும் பணக்குப்பையை வெளி எடுத்து விடுவாயானால் உன்னை என் மகனாகக் கொண்டாடுவேன்" என்று சிறுவனைக்கொண்டாடினான். சிறுவனும் அக்கோபுரத்தின் மேலேறி உள் சிறுவழி மூலமாகச்சென்று உள்ளே சேமித்திருந்த பணக் குவியல்களை எல்லாம் வெளியிலெடுத்து எறிந்தான்.

அன்று முதல், நாய்களுடைய குலைத்தலால் முன்னிருந்த பெருங்கூச்சல் எங்குங் கேட்கவேயில்லை. அத்தொல்லையிலிருந்து சிறுவனால் அவ்வூர் விடுபட்டு க்ஷேமமடைந்தது.

பின் சிறுவன் தன் வழியே நடந்து வந்துகொண்டிருந்தான். தக்ஷிணத்தில் உள்ள கிராமத்தருகு அப்பொழுது வந்துகொண்டிருந்தான். பக்கத்திலிருந்த குட்டைகளில் இருந்த தவளைகள் ஓயாமல் கத்திக்கொண்டிருந்தன. அவை என்ன சொல்கின்றன என்று சிறுவன் காது கொடுத்துக் கேட்டான். அதைக் கேட்டதும் அவனுக்குத் தனக்குந் தெரியாமல் பெருங்கவலை மேலிட்டது.

அதே ஸமயத்தில் அக்கிராமத்திய மடத்தின் அதிபதி ஸித்தியடைந்தார். அவர்க்குப் பின், யார் குருபீடத்தை யடைவதென்று அங்கு மடாதிபதிகளெல்லாங்கூடிப் பெருந்தர்க்கம் நடத்திக் கொண்டிருந்தார்கள். கடைசியாக அக்கூட்டத்தார் "எந்த மனுஷனிடம் தெய்விகத் தன்மை விளங்குமோ அவனையே குருபீடத்துக்கு உரியவனாகக் கொள்வது" என்று நிச்சயித்தார்கள்.

இவ்வாறு நிச்சயித்துக்கொண்டிருந்த ஸமயம் நமது அரசச்சிறுவன் ஸபைமுன் தோன்றினான். அவனை உபய கருடன் வலம்வந்து சூழ்ந்து பிரதக்ஷிணஞ் செய்யக்கண்ட கூட்டத்தார், சிறுவனையே அம்மடத்தின் அதிபதியாக்க நிச்சயித்து அவனை அப்பதவியை ஒப்புக்கொள்ளும்படி வேண்டினர்.

இந்தப் பதவி இவனுக்கு வருமென்றுதான் முன் தவளைகள் சொல்லியது. அதைக் கேட்டுதான் சிறுவன் கவலை கொண்டான். இப்பொழுது அவர் கேட்பதைக் கேட்டு, அத்தகைய பதவிக்குத் தான் தகுந்தவனல்லவென்று எண்ணி அப்பதவியை ஒப்புக்கொள்வதற்குத் தயங்கினான். ஆனால் அக்கருடன்கள் தமது பாஷையால் ஒப்புக்கொள்ளும்படி அவனைத் தூண்டின. அவனும் அவ்வாறே ஒப்புக்கொண்டான். பின் ஸகலவைபோகத்துடனும், அவனுக்கு அம்மடாதிபதிப் பட்டம் அளிக்கப்பட்டது. பின் எல்லார் முன்னும் பூஜைகள் செய்து எவ்வாறு தீர்த்தப் பிரஸாதமளிப்பதென்றவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது அங்கிருந்த உபயகருடன்களும் தமது பாஷையில் மந்திரங்களைக் கூறி நடத்தவேண்டிய தந்திரங்களையுங் காட்டிக் கொடுத்தன. சிறுவனும் மடாதிபதிப் பட்டத்துடன் மிகு வைபவத்துடன் விளங்கினான்.

பின் சிறுவன் தனது தகப்பனது நாட்டில் விஜயஞ்செய்யத் தனக்கு நடந்த மரியாதைகளைப் பெற்றுத் தன் தந்தையிடம் தனக்கு வந்த பதவியைப்பற்றி மறைவாய்ச் சொன்னான்.

மன்னனும் உள்ளங்களித்து ஸந்தோஷமடைந்தான்.

சிறுவனும் அக்குருபீடத்தில் நெடுநாளிருந்தான்.

"மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமீங்கில்லை—"

---

**இந்திய தானியங்கள்.**— வட அமெரிக்கா தேசத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் கவர்ன்மெண்டார் அங்கு ஜனங்கள் சாப்பிடும் ஆகாரத்தையும் இந்தியாவில் ஜனங்கள் உபயோகிக்கும் முக்கியமான ஆகாரதானியங்களையும் (கோதுமை, அரிசி, சோளம், சாமை முதலியவைகள்) டாக்டர் C. F. லாங்குவொர்தி என்பவரைக் கொண்டு சோதித்துப் பார்த்தார்கள். இந்தய தானியங்கள் புஷ்டியையும் தேகத்துக்கு வலிவையும் கொடுக்கின்றனவென்றும், தானியங்களில் ஒன்றுக்கொன்று சொற்ப பேதமே இருக்கிறதென்றும் ஆகையினால் இவைகள் ஜனங்களுக்குத் தகுந்த ஆகாரமென்றும் சிலாக்கியமானவையென்றும் இந்த டாக்டர் சொல்வதை யனுஸரித்து அந்த கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

***

**உலகத்தில் நடைபெறும் பத்திரிகைகள்** —தினசரிப் பத்திரிகைகளும் வாரப் பத்திரிகைகளுமாக உலகத்தில் 66,000 பத்திரிகைகள் வெளியாகின்றனவாம்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### ஸுகன்யை அல்லது பதிபக்தி

### Sukanya or The True Wife

முற்காலத்தில் சர்யாதி மஹாராஜனுக்கு எல்லா லட்சண குணமும் வாய்ந்த பத்தினிகள் நாலாயிரம் பேரிருந்தார்கள். இவர்களுக்கு, ஒரே குமாரத்தி பிறந்து ஸுகன்யை என்ற நந்நாமம் பூண்டு வளர்ந்து வந்தாள். ராஜனுக்கும், அவன் பத்தினிகளுக்கும் ஸுகன்யையிடத்தில் பரமப்பிரீதி. அவர்களிருந்த பட்டணத்துக்குக் கொஞ்சதூரத்துக் கப்பால் சலவைக்கல்லால் படிகள் கட்டப்பட்டு பால்போல் நீர் நிரம்பின ஏரியொன்றிருந்தது. அன்னம், சக்கிரவாகம், நீர்க்கோழி முதலிய விசித்திரப் பறவைகள் திரள்திரளாயங்கு சஞ்சரித்துக்கொண்டும், தாமரைகளில் வண்டுகள் புகுந்து தேனையுண்டு மதங்கொண்டு ரீங்கார சத்தத்தோடு பாடிக்கொண்டுமிருப்பது வழக்கம். அவ்வேரியின் மேலைப் பாகத்தில் வெகுதூரம்வரை அநேக விருக்ஷங்கள் வளர்ந்து ஒரே காடாயிருந்தது. எங்கே பார்த்தாலும் புன்னை, கொன்னை, மாதுளை, எலுமிச்சை, முந்திரி, புளி, ஆல், அரசு, அகில், வேம்பு, பாக்கு, தென்னை, கருங்காலி முதலான மரங்களடர்ந்திருந்தன. அக்கானகத்தின் நடுவில், பிருகு மஹாருஷிக்குத் தனயனான ச்யவனர், அங்கு மனுஷ்ய ஸஞ்சாரமிராதெனத் கருதி, இல்லந்துறந்து, ஸ்வாஸபந்தம் செய்து, ஸர்வேந்திரியங்களையும் அடக்கி ஜலபானாகாரமின்றி, த்ருடாஸனத்திலமர்ந்து, மௌனம் ஸாதித்து, அம்பிகையைக்குறித்து உக்கிரமான தவஞ்செய்துகொண்டிருந்தார். அவர் வெகுகாலமாய் தியானத்திலாழ்ந்து இருந்தவிடத்தில் பெரிய புற்றொன்றெழும்பி அவரை மூடிக்கொண்டது. அருகில் கொடிகள் கிளம்பிப் படர்ந்தன. எறும்புகள் வரிசை வரிசையாய்ப் புற்றுக்கும் புற்றிலிருந்தும் போய்வந்துகொண்டிருந்தன.

இவ்வாறிருக்க, ஒருநாள் சர்யாதி மஹாராஜன் தன் ஸ்திரீ ஜனங்களையிட்டுக்கொண்டு ஜலக்கிரீடை செய்ய மானஸ ஸரஸுபோன்ற ஏரிக்கு வந்துசேர்ந்தான். அவன் நீரில் இறங்கி க்ரீடை செய்ய, ஸுகன்யை தன் தோழிமார்



களோடு கானகம் பிரவேசித்தாள். சிறிது நேரம் உல்லாஸமாய் விளையாடிக்கொண்டிருந்தவள், மலர்கள் கொய்திடும் எண்ணமாகவே வனத்திலலைந்து திரிந்து கடைசியில் ச்யவனரது புற்றையடைந்தாள். ராஜபுதல்வி, விளையாட்டுப் பெண்ணானதால் புற்றினருகிலுட்கார்ந்து அதன் த்வாரத்தின் வழியே பார்த்தாள். மின்மினிப்பூச்சிபோல் ஒளியொன்று அதற்குள் தென்பட்டது. அஃதென்னவென்று தீர்மானிக்க விருப்பங்கொண்டு ஒரு கூர்மையான முள்ளெடுத்து த்வாரத்தில் குத்தப்போனாள். அதுகண்ட ச்யவனர், புற்றுக்குளிருந்து "இதென்ன பெண்ணே, நான் தபஸ்வீ, புற்றை யிடிக்காதே, அப்புறம்போ" வென மந்தமான குரலோடு கட்டளையிட்டார். ஸுகன்யை ஏதோ சத்தம் கேட்கிறதென்று அலட்சியமாய், விளையாட்டுப் புத்தியோடு மறுபடி முள்ளையெடுத்து 'இவையென்ன' வென்று ருஷியின் கண்களில் குத்திவிட்டுப் போய்விட்டாள். ச்யவனர் வலிபொறுக்க மாட்டாமல், மிக்க வருத்தமடைந்து கோபிக்க, நீராடிக்கரையேறியிருந்த அரசன், அவன்பரிவாரங்கள் யாவருக்கும் மலமூத்ராதிகள் வெளிவராமல் போய்விட்டது! ஸைன்யங்கள் முறையிட்டன. சர்யாதி, துக்கக்கடலிலாழ்ந்து. அரண்மனையேகி, இதற்குக் காரணம் யாதென்று வினவி "ஏரிக்கு மேற்கு திக்கிலுள்ள வனத்தின் மத்தியில் ச்யவனமஹாருஷி அருந்தவம் புரிந்துகொண்டிருக்கிறார். அவருக்கு எவரோ தீங்கிழைத்திருக்கவேண்டும். அதனால்தான் இத்துக்கம் நேர்ந்திருக்கின்றது. அதில் ஸந்தேகமில்லை. எத்துஷ்டன் விளைத்தது அவர் தவத்துக்கு கேடு? சொல்லட்டும்" என்று கடிந்தான். தாங்கமுடியா வேதனையால் பீடிக்கப்பட்ட பரிவாரங்கள் முழுதும், "ஸ்வாமி, 'மனோவாக்காய' மென்ற மூன்றுவிதத்தாலும் தபஸ்வீக்கு நாங்கள் கெடுதி செய்ததாகவறியோ" மென்று உத்தரம் மொழிந்தார்கள்.

இவ்வாறிறைவன் துக்கித்துக் கலக்கமுற்று தன் ஸ்நேகித வர்க்கங்களை யன்போடும் ஆத்திரத்தோடும் வினவினான். ஜனங்கள் முகத்தில் ஈயாடவில்லை. இதுகண்ட ஸுகன்யை தான் செய்த காரியத்தை நினைத்துத் தகப்பனைப்பார்த்து "அப்பா, வனத்தில் நான் என் மனதுக்கிசைந்தபடி விளையாடுகையில் இரண்டு த்வாரங்களுடன் கூடின புற்றொன்று கண்ணில் தென்பட்டது. மின்மினிப் பூச்சிபோல் அங்கு ஒளியொன்று வீச, அஃதென்னவென்று பார்க்க, முள்ளெடுத்து அப்புற்றில் குத்தினேன். முள்ளையெடுத்ததும் அதன் நுனியில் ஈரமிருந்தது. புற்றிலிருந்து 'ஐயோ' வென்றொரு மந்தமான சத்தமுண்டாயினது. அதென்னவென்று புரியாதவளாய் திகைத்து வந்துவிட்டேன்" என்று சொன்னாள். சர்யாதி கேட்டு ச்யவனருஷிக்குக்கெடுதிஸம்பவித்துவிட்டதெனக் கொண்டு, பரபரப்புடன் அவரிருக்குமிடமேகி, புற்றையிடித்துவிட்டு, கடுந்துயரனுபவித்துக் கொண்டிருந்த ச்யவனரைக்கண்டு சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து கைகூப்பி வினயத்துடன் "முனிச்ரேஷ்டரே! என் புத்திரி, குழந்தை விளையாட்டில் கவனமாயிருந்து தங்களுக்குத் தீங்கு செய்துவிட்டாள். ருஷிகள் பொறுமையுள்ளவர்களென்றுநான் கேள்வியுற்றிருக்கிறேன். ஆதலால் அக்ஞானத்தால் செய்ததை மன்னித்தருளவேண்டு" மெனப் பிரார்த்தித்தான். வணக்கத்துடன் வேண்டும் அரசனை நோக்கி ச்யவனர் "நான் ஒரு ஸமயத்திலும் கொஞ்சமேனும் கோபியேன். உன் புதல்வி எனக்குத் தீங்கிழைத்தபோதும் நானவளைச் சபிக்கவில்லை. குற்றமற்ற வெனது கண்ணில் வலியுண்டாகி யிருப்பதால், உனக்கும் கெடுதல் நேர்ந்திருக்கலாமெனத் தோன்றுகிறது. ஈச்வரி பக்தனுக்கு இடையூறு செய்வது சிவனுக்கே யநர்த்தமென்றால் மற்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்! நான் இவ்விஷயத்தில் என்ன செய்யக்கூடும்? நானோ அந்தகனாகிவிட்டேன். எனக்கு யார் உதவிபுரிவார்கள்?" என்று வருந்த, அரசன் "எனது வேலையாட்களில் அநேகரைத் தங்களுக்கு ஊழியஞ்செய்யச் சொல்லுகிறேன். நீங்கள் கிருபை செய்யவேண்டும்." என்று தலைவணங்கி யிரங்கினான். அதற்கு முனிவர் "அந்தகனாயிருந்துகொண்டு, நானெவ்வித முதவியின்றி தவஞ்செய்வது? உனது ஸேவகர்கள்தாம் எனக்கு என்ன சுச்ரூஷை செய்வார்கள்? தாமரைக் கண்ணுடைய உனது பெண்ணை எனக்கு விவாகம் செய்துகொடுத்தால் நான் தவஞ்செய்ய அவள் எனக்குப் பரிசாரியை செய்யட்டும். அவ்வாறு நீ கொடுத்தெனக்குத் திருப்தி வந்ததும் உனக்கும் உன் ஸைன்யத்துக்கும்

இப்பொழுதிருக்கும் வருத்தம் நீங்கிவிடும். நான் தபஸ்வீ. அவளையெனக்குக் கொடுப்பதில் ஒரு தீமையுமில்லை. என்ன சொல்லுகிறாய்?" என்று வினவினார். சர்யாதி இவ்வார்த்தையைக் கேட்டு 'கொடுக்கிறேன், கொடுக்கவில்லை' யென்று சொல்லாமல் சிந்தைக்கடலிலாழ்ந்தான். தனக்குள் மாத்திரம், "என்ன, கேவலம் அந்தகர், கிழவர், விகாரலட்சணத்தோடு கூடினவர். இவருக்கு என் தேவகன்னிகை போன்ற ஸுகன்யையைக் கொடுத்துவிட்டு எவ்வாறு பிழைத்திருப்பேன்? தன் ஸுகத்தை நாடி தன் குமாரியின் ஸம்ஸாரஸுகத்தைப் பறிகொடுக்குமற்ப புத்தியுள்ளவன் யார்? அந்தோ யௌவனத்தில் காமன் ஸ்திரீகளைப்பீடிப்பனே! தனக்கேற்ப பதியடைந்தும் அழகுவாய்ந்த பெண்களுக்கு மிகுதியல்லவோ இப்பீடை! அப்படியிருக்க கண்ணிழந்த தபஸ்வீக்கிழவரிடம் என்செய்வாள்? முன்காலத்தில் தருணிப்பருவத்திலிருந்த 'அஹல்யை' கௌதமரைப் பதியாக வடைந்து தேவேந்திரனால் மோசம் போனாளன்றோ? அவள் நீதிநெறி தவறினதை கௌதமரறிந்து அவளைச் சபிக்கவில்லையா? ஆதலால் வருவன வரட்டும். என் கண்ணுக்குக் கண்ணான குழந்தையைக் கொடுப்பேனோ?" வென்று உழன்று கொண்டே அரண்மனை யடைந்து, மந்திரிகளை யழைத்து "மந்திரிகாள், இச்சங்கடத்தில் நான் என்ன செய்வது? ஸுகன்யையைக் கொடுக்கவா? அல்லது நாமெல்லோரு மித்தீராத்துக்கமனுபவிப்பதா? நீங்கள் ஒன்றுகூடி தீர்க்காலோசனை செய்து சொல்லவேண்டும்" என்று வேண்டினான். மந்திரிகளும் "நாங்கள் என் சொல்வது? ஸுகன்யையை முனிவருக்குக் கொடுக்க கொஞ்சமேனு மெங்களுக்கு மனமில்லையே!" என்று மொழிந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் மனங்கலங்கிக் குலைந்து நிற்பதைக் கண்ட ஸுகன்யை புன்சிரிப்புடன் "அப்பா, ஏன் என் விஷயத்தில் இவ்வளவு பீடிக்கப்பட்டுத் துயரடைகிறீர்கள். ச்யவனரின் தவத்துக்குப் பங்கம் விளைத்தது நான். நான் போய் என்னையே அர்ப்பணம் செய்து அவரை ஸமாதானப்படுத்தி ஸந்தோஷப்படுத்துகிறேன்" எனப் புகன்றாள். இது கேட்டரசன் கொஞ்சம் வருத்தம் நீங்கி மந்திரிகளருகிலிருக்கும்பொழுதே "குழந்தாய், எவ்விதம் மெலிந்த சரீரத்தோடு நீ வனம் சென்று, வயது முதிர்ந்துக் கோபம் எஞ்சி மிஞ்சியிருக்கிற ச்யவனருக்கு அடியாளாய்ப் பணிவது? சரியான வயது, ஞானம், வலிமை, செல்வம் இவை படைத்தவனுக்கல்லவோ தகப்பன் தன் மகளை மணஞ்செய்து கொடுக்கவேண்டும். தனமில்லாதவன் பொருட்டு ஒருகாலும் கொடுக்கக்கூடாதே. கண்ணே! உன் ஸௌந்தர்யமெங்கே! வனத்திலலைகிற தபஸ்வீ எங்கே! இவ்வரண்மனை எங்கே! கானகத்தில் தனித்திருக்கும் குடிசையெங்கே! அன்னம்போற் பேசுமென்னருமைப் புதல்வியே! வரவேண்டியவை வரத்தானே வேணும். என் ராஜ்யமிழப்பது நலமே. எனக்கும் என் ஸைன்னியத்துக்கும் மரணம் நேருவதும் நலம்! ஒருபொழுதும் கண்ணிழந்து விகாரமாயிருக்கும் ச்யவனரிடம் முன்னையனுப்பேன்" என்றுறுதியாய்க் கூறினான். கேட்டு ஸுகன்யை "என்னைக் குறித்துக் கலங்குவதி லுபயோகமில்லை. என்னால் எல்லா ஜனங்களுக்கும் க்ஷேமமுண்டாகட்டும். நான் ச்யவனரைப் பதியாக வடைந்து அதிக பக்தியோடும் அன்போடும் அவர்மனதுக்கிசைந்தவாறு தருமங்கெடாது பணிந்து நடக்கிறேன். எனக்குப் போகத்திலாசையில்லை. நீங்கள் வருத்தப்படவேண்டா" மென்று மன்றாடினாள். இதைக்கேட்டதும் மந்திரிகள் ஆச்சர்யமடைந்தார்கள். அரசனுங் கடைசியாக அவள் வார்த்தைக்கிணங்கி வனமடைந்து ச்யவனரை வலம் வந்து நமஸ்கரித்து "ஆர்ய, என்புத்திரியை விதிப்பிரகாரம் தங்களுக் கடியாளாக்கிக் கொள்ளுங்கள்" எனச்சொல்லி விவாஹவிதிப்படி பெண்ணை தானம் செய்தான். அரசன் கொடுத்தசீர்முதலானவைகளை வேண்டாமென முனிவர் மறுத்துவிட்டார். அவளைப்பெற்று ருஷி களிப்புற, அரசனுக்கும் ஸைன்னியத்துக்குமிருந்த வேதனைநீங்கி ஸுகமடைந்தார்கள். திரும்பிப்போகும் தருணத்தில் தகப்பனை நோக்கி ஸுகன்யை "என்னுடையாபரணங்களையெடுத்துக்கொண்டு மரையுரியும்மான்தோலும் கொடுங்கள். ருஷிபத்தினிகள்போல வேஷம் பூண்டு தங்களுக்கு இவ்வுலகத்திலும் வேறுலகத்திலும் கொஞ்சமும் அபகீர்த்திவாராமல் என்பதியை ஸேவித்து வருகிறேன். பெண்ணை இவ்விதம்கொடுத்துவந்துவிட்டோமேயென்று நீங்கள் சிறிதும் மனக்கவலைகொள்ளக்கூடாது.



வஸிஷ்டருக்கு அருந்ததி எவ்வாறோ, அத்ரி மஹருஷிக்கு அனுஸூயை எவ்வாறோ, அவ்வாறே நான் ச்யவனருக்கு தர்மபத்தினியாகவிருந்து தங்கள் கீர்த்தி குறையாமல் நடந்துவருகிறே"னென்று ஸமாதானப்படுத்தினாள். அரசன் செவியில் இப்பேரின்பமொழிவிழ, அவள் கேட்டதைத்தந்து ருஷிபத்தினிக்குரியவாடையணிந்து வந்த மகளைப்பார்த்து பிரிந்து போக சற்றும் மனம் வராதவனாய்க் கண்ணீர்விட்டுப் பிரமித்தபடியே நின்றான். அங்கிருந்தவர்கள் யாவருமிக்காட்சியைக் கண்டு துக்கம் மேலிட்டவர்களாய்க் கதறினார்கள். சற்றுப்பொறுத்து ருஷிதம்பதிகளிடத்தில் விடைபெற்று, சர்யாதி, மந்திரி வர்க்கங்களோடு நகரத்துக்குத் திரும்பினான்.

அரசன் போனதுமுதல், ஸுகன்யை பதிபக்தியே மேலாய்க்கொண்டு, 'தக்ஷிண, கார்ஹபத்திய, ஆகவனீய' மென்ற மூன்றுவித அக்னிகள் வளர்த்தாள். வனத்திலுள்ள இனிய கனிகிழங்குகொணர்ந்து ச்யவனருக்குக்கொடுத்து ஒருவேளை புசியுமென்பாள். அவரை வெந்நீரில் ஸ்நாநம்செய்வித்து, மான்தோலுடுத்தி மங்களாஸனத்திலமர்த்தி, எதிரில் எள், தர்ப்பமிவைபரத்திக் கமண்டலுவை வைத்து "ஸ்வாமி, நித்யகர்மங்கள்செய்யு" மென்பாள். பிறகு கைப்பிடித்துத்தூக்கி வேறொரு ஆஸனத்தி லுட்காரவைத்து உருசியுள்ள பழங்கள் தந்து பக்குவமாய் நீவாரான்னம் சமைத்துப் பரிமாறுவாள். உண்டுகளித்ததும்அவரை ஆசமனீயம்செய்யச் சொல்லிஅன்புடன் தாம்பூலங் கொடுப்பாள். கைகால்பிடித்துச் சரீரஸௌக்கிய முண்டுபண்ணுவாள். தானும் சாப்பிட்டு அவர் ஸன்னதியடைந்து "என்ன உத்தரவு செய்கிறீர்க" ளென்று கேட்பாள். இவ்விதமே சந்திக்கடன்கள் முடிந்ததும் பூக்கள் சேகரித்து மிருதுவான படுக்கை தயாரித்து அதில் படுக்கச்செய்வாள். அனுமதி பெற்று அருகிலுட்கார்ந்து பாதங்களைத்தடவிக்கொண்டே "நாதா, குலஸ்திரீ தர்மம் என்ன? அவள் எவ்விதம் நடந்துகொள்ளவேணுமென்று எனக்குச் சொல்லுங்க"ளென்பாள். சிறிது நேரங்கழித்து விசிறியெடுத்து இளங்காற்றுப்பட வீசுவாள். குளிர்காலத்தில் காட்டுக்குச்சிகள் கொணர்ந்து பதியின் முன் தீமூட்டம் போட்டு அடிக்கடி "குளிர்நீங்கியதோ? ஸௌக்கிய முண்டானதோ?" வென்பாள். அவர் உறங்கினதும் காலடியில் படுத்துத் தானும் நித்திரை போவாள். விடியற் காலத்தி லெழுந்து ஜலபாத்திரம் மண் இவை எடுத்துவைத்து தூரமழைத்துப் போய்விட்டு மறுபடியுமழைத்து வந்து பாதப் பிரட்சாளனம் செய்வாள். பிறகு பல்துலக்கச் சொல்லி ஸ்நானம் செய்வித்து, "மணாளரே, ஆதித்தன் உதிக்கின்றான். ஹோமகாலம் நெருங்கி விட்டது. நித்யகர்மவிதிகள் நடத்து" மென்பாள். இவ்வாறு இம்மாசற்ற பெண்மணி, நாடோறும் பதிபக்தியே ஞாபகமாய் ச்யவனரை யுபசரித்து வந்தனள்.

இப்படியிருக்க வொருநாள் அச்வினிகுமாரர்களிருவரும் ஒருவரோடொருவர் விளையாடிக்கொண்டு ச்யவனரது ஆச்ரமத்தை யணுகினார்கள். அப்பொழுது ஏரியில் மூழ்கி மல்லிகைக்கொடிபோல்விளங்கி ஆச்ரமத்தை நோக்கிவந்துகொண்டிருந்தாள் ஸுகன்யை. தேவர்கள் அவளை நெருங்கி மோகித்தவர்களாக "மாதே, ஒரு க்ஷணிகநேரம் நிற்பையோ? அன்ன நடைபோட்டுப் புன்னகையுடன் கூடிவரும் நீயார்? உன்பிதாயார்? கணவன்யார்? நீயாருடைய பாக்கியம்? இப்பரந்துள்ள தடாகத்தில் ஸ்நானம் செய்யத்துணையில்லாமல்வந்தது என்கொலோ? உன்காந்தியைப் பார்த்தால் நீ மஹாலக்ஷ்மி போல் விளங்குகின்றாயே! உன் லட்சணம் பொருந்திய பாதங்கள் கீழே சலிக்கின்றதைக் காண, பெண்ணே, எங்கள்மனம் நோகின்றதே! விமானத்திலேறிச் செல்லவேண்டியநீ பூமியில் நடப்பது தகுமோ? நூறு தோழிமார் இடையே வரவேண்டிய நீ நிர்மானுஷ்யமான இக்கானகத்தில் தன்னந்தனியே வந்தது யாது காரணம் பற்றியோ? உனது பெற்றோர்களல்லவோ பாக்கியம்பெற்றோர்கள்! உன்பர்த்தாவின் ஆநந்தமல்லவோ ஆநந்தம்! நீ ராஜகுமாரத்தியோ, அல்லது தெய்வகன்னிகைதானோ! உன் திருவடிகள் இதில் ஸஞ்சரிக்க இப்பூவுலகம் புண்ணியம்செய்ததோ? பறவைகள் மிருகங்களெல்லாம் உன்னைக்காணாமல் தவித்தனவோ? தவந்தான் செய்தனவோ? உன்குயில் போன்ற குரலைக்கேட்க எங்கள் செவிகள் ஆசையுற்று நிற்கின்றன. தங்கக்கொடிபோலுலாவுகிறவளே, நீ யார்? உன் பிதா யார்? உன்பதியார்? நாங்கள் தேவர்கள். சொல்லிப்போ" வென்று தடுத்தார்கள். (அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

## விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**தொழில் ஸ்கூல்கள்.**—சென்னை ராஜதானியில் 39 தொழிற்படிப்பு ஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்பார்வையை, தொழில்களின் டைரெக்டரே பார்த்து வரவேணுமாயும் ஏப்ரல் மாதம் 15-ந் தேதி முதல் அவருடைய வசத்திலேயே ஒப்புவிக்கும்படியாயும் சென்னைக் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

***

**நகரங்களின் அபிவிர்த்தி.**—இக்காலத்தில் பட்டணங்களில் மிகு விரைவாக விருத்தி யடைந்துவருகின்றன வென்று தெரிகிறது. சென்ற வருஷத்தில் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்பட்டணத்தில் 12,000 புதிய வீடுகள் கட்டப்பட்டன. அவைகளுக்காக ஏற்பட்ட செலவு 414,00,000 பவுண்டு என்று தெரிகின்றது.

***

**இரவிற் கண் விழித்தல்.**—இரண்டு இரவுகளில் ஒரு மனிதனுக்குத் தூக்கமில்லாமல் போனால் அந்த சிரமமும் ஓய்ச்சலும் பரிகாரமாவதற்கு 15-நாள் ஆகிறதென்று சாஸ்திர நிபுணர்களினால் அறியப்பட்டிருக்கிறது. இது இப்படியிருக்க, நம் தேசத்தில் அநேக ஜனங்கள் டிராமாக்களில் இடைவிடாமல் பல நாள் சென்று இரவில் கண்விழித்துக்கொண்டு ரூபாயையும் செலவழிக்கிறார்கள். இவர்களுக்குத் தேக ஆரோக்கியம் கெடுமென்பதில் ஏதேனும் ஸந்தேகமுண்டோ?

***

**ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் ஜனத் தொகை.**—முன் பம்பாய் கவர்னராயிருந்த லார்டு ஸைடென்ஹாம் "ராயல் கலோனியல் இன்ஸ்டிட்யூட்" என்ற சபை முன் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் ஜனத்தொகையைப் பற்றி ஒரு வியாஸம் படித்தார். உலகத்தின் மொத்த ஜனத்தொகை 180-கோடி. பத்து வருஷத்துக்கொரு தடவை அந்த ஜனத்தொகையானது நூற்றுக்கு 5 அல்லது 6 வீதம் அதிகமாய்க்கொண்டு வருகிறது. உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்கு ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் அடங்கியிருக்கிறது. ஜனங்களின்தொகை அதிகமாவதற்கு இந்தியாதான் முக்கிய காரணம். ஆகையால் இந்தியா ஜன நெருக்கமுள்ளதென்ற விஷயம் கணக்குகளைச் சோதித்துப் பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கு மென்றும், அதற்கு மாறாக ஸர் வில்லியம் ஹண்டர் என்றவர் சொல்லியிருப்பது தப்பென்றும், லார்ட் ஸைடென்ஹாம் சொல்லுகிறார். 1908-முதல் 3-வருஷகாலத்தில் ஆயிரத்துக்கு 37-ஜனனமும் 34 மரணமும் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது, 3150-லட்சம் ஜனங்களுள்ள இத்தேசத்தில் வருஷமொன்றுக்கு 100-லட்சம் ஜனங்கள் சாகிறார்கள்.

**பம்பாய் மாகாணத்தில் துஷ்டஜந்துக்களால் நேர்ந்த உயிர்ச்சேதங்கள்.**—சென்றவருஷம் பம்பாய் மாகாணத்தில், துஷ்ட ஜந்துக்களால் நேர்ந்த உயிர்ச்சேதங்கள் முந்திய வருஷங்களைவிட மிகுதியாகவிருக்கின்றன. பாம்புக்கடியினால் சென்ற வருஷத்தில் 1,406 மரணங்கள் நேர்ந்திருக்கின்றன அதற்கு முன்வருஷத்தில் 1,140 மரணங்கள்தாம் நேர்ந்தனவாம். ரத்னகிரி ஜில்லாவில் துஷ்டஜந்துக்களால் நேர்ந்துள்ள மரணங்கள் இன்னும் அதிகமாயிருக்கின்றன. சென்ற மூன்றுவருஷ காலமாய் ஓநாய்களினுள் 6,000 கால்நடைகள் அம்மாகாணத்தில் வருஷந்தோறும் நாசமடைகின்றனவாம். ஓநாய்களைக் கொல்பவர்களுக்குக் கொடுக்கப்படும் வெகுமதிக்காகக் கவர்ன்மெண்டார் 65 ரூபாய்தான் செலவிட்டிருக்கிறார்களாம்.

***

**மாம்ஸத்திற்காகக் கொல்லப்படும் ஆடுமாடுகள்:**—பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய மூன்று பட்டணங்களிலும் மாம்ஸத்திற்காக 1912-ம் வருஷத்தில் கொல்லப்பட்ட மிருகங்களின் விவரம்:—

| | |
|---|---|
| ஆடுகள் | 12,15,438 |
| மாடுகள் | 1,12,872 |
| கன்றுகள் | 11,024 |
| பன்றிகள் | 2,860 |

***

**காட்டுமனிதர்களும் ஸ்த்ரீகளும்.**—மிஸ்டர் வில்லியம்ஸைத் தலைவராகக் கொண்ட இந்திய ஸர்வே அதிகாரிகள், திருவாங்கூர் ஸமஸ்தானத்து எல்லைப் பிரதேசங்களிலுள்ள ஜனஸஞ்சாரமற்ற 100 சதுர மைல் விஸ்தீரணமளவும் பரவியிருக்கும் காடுகளில் பிரவேசித்தபொழுது அங்கே ஓரிடத்தில் 13 காட்டு மனிதர்களையும் ஸ்திரீகளையும் கண்டார்கள். அவர்களுக்கு யாதொரு பாஷையும் பேசத் தெரியாதென்றும், அவர்கள் ஜனஸமூகங்களைக் கண்டவர்களே அல்லர் என்றும் அந்த மனிதர்களும் ஸ்திரீகளும் மூங்கில் இலைகளை வஸ்திரங்களாக உபயோகப் படுத்துகிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

***

**சென்னை ராஜதானியில் பெய்த மழையின் அளவு**

ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல்
ஜூலை மாதம் முதல் தேதி வரை.

| | | |
|---|---|---|
| சென்னை | ... | 2·70 |
| கடலூர் | ... | 3·68 |
| நாகப்பட்டணம் | ... | 2·12 |
| கொடைக்கானல் | ... | 17·22 |
| உதகமண்டலம் | ... | 10·83 |
| கோயமுத்தூர் | ... | 1·91 |
| வேலூர் | ... | 6·12 |
| சேலம் | ... | 7·66 |
| திருச்சிநாப்பள்ளி | ... | 2·67 |
| மதுரை | ... | 4·77 |
| திருநெல்வேலி | ... | 0·88 |

# விவேக போதினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
3-SEP 1914
MADRAS.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்" — (sic, as printed:) "எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்.

விவேக | ஆனந்த௵ ஆடி௴=1914-௵ ஆகஸ்டு௴ } பகுதி 2

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 6. தாயுமானவர்

#### 11. ஸாதாரண நிலை நீக்கம்

மின்னனைய பொய்யுடலை நிலையென் றுமையிலகு
விழிகொண்டு மையல் பூட்டு
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்க மென்றும்
பொன்னையழி யாதவஸ் பொருளென்று போற்றி
பொய்வேட மிகுதி காட்டிப் [யிப்
பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலாம்
போக்கிலே போக விட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகா யதன்
ஸமய நடை சாராமல் வேதாந்த ஸித்தாந்த
ஸமரஸ சிவானு பூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்
வாழ்வித்த ஞான குருவே [டன்பின்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

(மௌனகுரு வணக்கம்—4)

#### 12. விசாரணை நிலை

ஆதிக்க நல்வினை யாரிந்த மாயைக்கெ
னறிவன்றி யிடமில் லையோ
வந்தரப் புட்பமுங் கானலின் னீருமோ
ரவசரத் துபயோ கமோ
போதித்த நிலையையு மயக்குதே யடாயகான்
புக்கவரு போற்றி டாமற்
பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென்
புந்திக்கு ளிந்த்ர ஜாலஞ்
சாதிக்கு தேயிதனை வெல்லவு முபாயநீ
தந்தருள்வ தென்று புகல்வாய்
சண்மத ஸ்தாபனமும் வேதாந்த ஸித்தாந்த
ஸமரஸநிர் வாக நிலையு
மாதிக்கொ டண்டப் பரப்பெலா மறியவே
வந்தருளு ஞான குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

(மௌனகுரு வணக்

#### 13. உபதேச நிலை

ஐந்துவகை யாகின்ற பூதமுத லானதும
டங்கவெளி யாக வெளிசெய்
தறியாமை யறிவாதி பிரிவாக வறிவார்க
ளறிவாக நின்ற நிலையிற்
சிந்தையற நில்லென்று சும்மா விருத்திமேற்
சின்மயா நந்த வெள்ளந்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன் றுகாண்
எந்தவட வாற்பரம குருவாழ்க வாழ்வரு
ளியநந்தி மரபு வாழ்க
வென்றடியர் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென் னவே
வந்தகுரு வேவீறு சிவஞான ஸித்திநெறி
மௌனோப தேச குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

(மௌனகுரு வணக்கம்—

**CAL.**

**.கம்**

| யோ | தமு | இங் | தமிழ் | வார | ஆநந்தஹு ஆவணி மு கல... உ. | பசலி 1324 கொல்லம்-1090 } 1914 ஹு ஆகஸ்டு—செப்டம்பர் |
|---|---|---|---|---|---|---|
| பு | 24 | 17 | 1 | திங் | ஏகா 37-37, மி 7-31, ஹர் 5-1, பவ 6-48, திவி ..., அக 31-0, ஆயி 3-புத 29-51, சூன்யதி ஸர்வஏகா ஸமார்கம். | |
| செசு | 25 | 18 | 2 | செ | துவா 37-58, திரு 10-4, வஜ் ..18, கௌ 7-45, ரா 9-42, ஹ-1-செ10-11, ஹஸ் 2 சுக் 11-45, சிம்ஹ துவா-கரிநாள் | |
| பு | 26 | 19 | 3 | புத | திர 36-51, புன 11-21, வித் 0-35, விய 56-16 கர 7-22, ரா 02-4, ஆயி 4 புத 24-39, பிரதோ விய-சிரா-மாசி. | |
| ரச | 27 | 20 | 4 | வியா | சது 34-39, பூச 11-26, வரி 52-10, பத் 5-45, ரா 11-57, மக 2 ரவி 1-15, விரு 4 சனி 45-36, போதாயனம். | |
| புசு | 28 | 21 | 5 | வெ | ● அமா 31-21, ஆயி 10-25, பரி 46-36, சது,,3 -0, ரா, 8 -31, அக 30-54, ஸிம்மபுத 18-28, ஹஸ் 3 சுக் 6-2, சர்வ அமா-பீடோரா-போ-இஷ்டி-ரிஷப பூ. | |
| | 29 | 22 | 6 | சனி | பிர 27-9, மக 8-25, சிவ 40-23, பவ 27-9, திவி 27-30, பாத்-சத்-பிரதமாதிதி-இஷ்டி-சங்-தரி-மழை-4-க்குள். | |
| ரசெ | 1 | 23 | 7 | ஞா | துதி 22-14, பூர 5-39, ஸித் 33-37, கௌ 2214, திவி 22-38, மக-3 ரவி 29-9, ஹஸ் 2-செ 58-22, மக 2-புத 13-23 திரு 4 வக்குரு 21-26, திதித்வயம்.- | |
| பு5] சு | 2 | 24 | 8 | திங் | திரு 16-44, உத் 2-15, ஹஸ் 56-8, சா 26-24, கர 16-14, திவி 21-55, ஹஸ் 4 சுக் 0-17, சதுர்திதி ;பலராமஜயந்தி ஹரிதாளி விநாயகசதுர்த்தி சாமவேதி சிராவணம் தாமஸம். | |
| பு | 3 | 25 | 9 | செ | சது 10-51, சித் 54-15, சுப 18-52, பத் 10-51, திவி 17-0, அக 30-50, கன்யாய-58-18, மக 3 புத 1-6, ரிஷிபஞ் கரிநா | |
| ரபுசு | 4 | 26 | 10 | புத | பஞ் 4-47, சவ்ஷ 54-0, சுவா 50 11, சுப் 11-14, பா 4-47, திவி 7-18, மக 4 ரவி 56-51, மக 4 புத 11-17, சித் 1 சுக் 11-43, சஷ்டி உபு சூரிய சஷ்டி ஆவணி உச்சம் 56-51. | |
| | 5 | 27 | 11 | வியா | சப் 52-58, விசா 43-18, பிரா 3-40, மா 52-34 கர 25 52, திவி 3-17, ரா 24-56, அமுக்தா சப் விரு மழை 8-க்குள் | |
| பு | 6 | 28 | 12 | வெ | அஷ் 47-29, அனு 42-42, வை 49-6, பத் 20-13, ரா 25-15, பூர 1 புத 38-28, தூர்வாஷ்டமி வை சிரா. [டாஷ்டமி | |
| செசு | 7 | 29 | 13 | சனி | நவ 42-40, கே 39-44, விஷ் 42-32, பா 15-4, ரா 28 14, அக 30-45, ஹஸ் 3 செ 43-33, சித் 2 சுக் 55-5, ஜ்யேஷ் | |
| ரபு | 8 | 30 | 14 | ஞா | த 38 33. மூ 37-29, பி 36-33, தை 10-36, சே 2-59, ரா 2-44, பூ 1 ர 24-8, பூ 2-பு 27-0, ஆவ உச்சிவ 24-8. | |
| | 9 | 31 | 15 | திங் | ஏகா 35-24, பூரா 36-10, ஆயு 31-19, வணி 9-58, திவி 0-57, ரா 25-21, சர்வஏகா பரிவர்த்தனைகா. [வாமனஜய. | |
| புசு | 10 | 1 | 16 | செ | துவா 33-18, உத்தி 35-53, ஸௌ 26-56, பவ 4-21, சே 0-4, ரா 15-20, பூர 3 புத 18-40, துலா சுக் 13-23. | |
| ர | 11 | 2 | 17 | புத | திர 32-28, திரு 36-46, சோ 23-22, கௌ 2-53, ரா 16-28, அக 30-40, பூர 2 ரவி 51-8 சிரஉப-பிர | |
| பு | 12 | 3 | 18 | வியா | சது 32-47, அவி 38-57, அதி 20-58, கர 2-37, ரா 27-19, பூர 4 புத 12-24, அனந்தவிரு மழை 10-க் | |
| செசு | 13 | 4 | 19 | வெ | ○பௌ 34-25, சத 42-23, சுக 19-30, பத் 3-36, சே 1-59, ரா 28 55. ஹஸ் 4 செ 30-31, சித் 4 சுக் 31-36, உமாமகேசவிரு-சந்திரக்கிரகணம். [மாளய ஆரம்பம் இஷ்டி. | |
| பு | 14 | 5 | 20 | சனி | பிர 37-16, பூர 46-50, திரு 18-58, பா 5-50, சே 3-34, பாத் பகு உத் 1 புத 5-50, | |
| ரபு | 15 | 6 | 21 | ஞா | துதி 41-6, உத்தி 52-17, சூல 19-17, தை 9-11, திவி 7-1, அக 30-35, பூர 3 ரவி 17-27, கன் | |
| சு | 16 | 7 | 22 | திங் | திரு 45-33, ரே 58-22, கண் 20-13, வணி 13-19, திவி 25-19, சுவா 1 சுக் 50-0. [னிபுத 59-59. | |
| பு | 17 | 8 | 23 | செ | சது 50-34, அசு 60-0, விர் 21-31, பவ 18-3, ரா 23-7, உத் 3 புத 53-24, சங் சது. | |
| ர | 18 | 9 | 24 | புத | பஞ் 55-32, அசு 4-44, துரு 22-57, கௌ 23-3, ரா 0-43, பூர 4 ரவி 43-59, மகாபரணி. | |
| செபு | 19 | 10 | 25 | வியா | சஷ் 60-0, பர 11 4, வியா 24-16, கர 27-46, ரா 13-30, அக 30-30, சித் 1 செ 28-40, ஊக் 4 புத 50 23, கார்உப | |
| சு | 20 | 11 | 26 | வெ | சஷ் 0-12, * கார் 16-56, ஹர் 25-10, வணி 0—12, தியா—0—0 சுவா 2 சுக் 7-36, க்குள். | |
| பு | 21 | 12 | 27 | சனி | சப் 4-1, ரோ 21-58, வஜ் 25-22 பவ 4-1, திவி 0—17, ரா 5-25, ஹஸ் 1 புத 46-30, ஷ்டமி சாணரஷ்டமி. | |
| ர | 22 | 13 | 28 | ஞா | அஷ் 6-49, மிரு 26-0, ஸித் 21-45, கௌ 6-49, ரா 17-31, உத் 1 ரவி 9-34, அவித கரிநாள். | |
| புசு | 23 | 14 | 29 | திங் | நவ 8-28, திரு 28-50, விய 23-11, கர 8-28, ரா 29-12, அக 30-25, ஹஸ் 2 புத 41 ... ர 3 சுக் 25-17, வியதி பாதமாளயம். | |
| | 24 | 15 | 30 | செ | தச 8-41, புன 30-25, வரி 10 36, பத் 8-49, சே 3 37, ரா 20-8, சிம் கி ஏகாதிதி. | |
| ரசெ பு] | 25 | 16 | 31 | புத | ஏகா 7-56, பூச 30-46, பரி 17-3, பா 7-56, தியா—0—0, கன்னி ரவி 34-51, சித் 2 ... 1, பிரா தயபுத 55-7, ஹஸ் 3 புத 42-20. சூன்யதிதி சர்வஏகா சன்யாசிமாளயம் ஷடசீதி. | |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| ராகு. | 5—ஸிம்மபு | | புத |
| | 16· துலாசு | | ரவி |
| குரு. | 21-கன்·பு | | கே |
| | | | செ சுக் |



விவேக போதினி

தொ. 7.] ஆனந்தஹு ஆடி௴ [பகுதி. 2.

# மோக்ஷ ஸோபானம்

## THE STEPS TO THE GOAL

### (2) கர்மயோகம்

### பீஷ்மர் சரித்திரம் (முடிவு)

ஒன்பதாம் நாள் மாலையுத்தம் முடிந்து எல்லோரும் படைவீட்டிற்குத் திரும்பிவிட்டனர். ஆவலுடன் இந்தத் தருணத்தை எதிர்பார்த்திருந்த துர்யோதனன் தனது மாலைக் கடமைகளை முடித்துக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் பீஷ்மர் படைவீடுவந்து மிகுந்த பரபரப்புடன் அவரை நோக்கி, 'தாதா என்ன இப்படி மோசம் செய்துவந்தீரே இன்று! இவ்வளவா உமது பக்ஷபாதம், பாண்டவர்களை நன்றாக முறியடித்துவிட்டிருக்கக் கூடாதா இன்று? இப்படி எவ்வளவு காலம் கடத்துவதாக உமது யோசனை?' என்று கடிந்துகொண்டான். அதற்கு பீஷ்மர், 'அப்பா குழந்தாய்! நான் முன்னரே கூறவில்லையா யுத்தம் வேண்டாமென்றும், என்னால் பாண்டவர்களைக் கொல்லமுடியாதென்றும்? அப்படி இருக்க, நான் எவ்வளவு ஆவேசத்துடன் சண்டையிட்டும் உனக்கு திருப்தியாகவில்லை போலிருக்கிறது! பலன் ஸரியாக வரவில்லை என்பதா உன் துக்கத்திற்குக் காரணம்? நாம் என்ன செய்தும் கிருஷ்ண ஸஹாயம் பெற்று நிற்கும் தர்மவான்களான பாண்டவர்களை ஜயிக்க ஒருநாளும் முடியாது. நாம் கஷ்டப்பட்டு யுத்தம் செய்தால், ஜயம் அவர்களுக்குப் போவதை கொஞ்சநாள் தடுத்து நிறுத்தலாம். முடிவில் ஜயம் அவர்களுக்குத்தான் போகும். நீ வீணாய் அந்யாய விஷயத்தில் பறந்தென்னலாபம், மனப்பூர்வமாகப் பாடுபடும் என்னை அடிக்கடி பக்ஷபாதி! பக்ஷபாதி!! என்று குத்திக் காட்டிப் புண்படுத்தாதே!' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். துர்யோதனனுக்குப் படபடப்பு அதிகமாகிவிட்டது. 'சண்டைக்கு வந்துவிட்டு உம்மைப் போல நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொள்ளுபவர் யாராவது இருப்பார்களா? எதிரிகளை பூஷிக்கத்தான் படுமா? தன் பக்கத்தாரை இப்படியா அதைர்யப்படுத்துவது? என்ன துர் அதிர்ஷ்டமோ உம்மை நான் ஸேனாதிபதியாய்ப் பெற்றது? வேறு யாரையும் நியமிக்க முடியாமலிருக்கிறதே நீர் பாண்டவஜயத்தைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருக்கும் வரையில் உம்மாலேதான் என் உயிர்த்தோழனான கர்ணனும் சண்டையிடமுடியாது தத்தளிக்கிறான். உம்மால் நமக்கு ஜயம் கொண்டுவரமுடியாவிடில் இப்படி நமக்கு வேண்டியவர்கள் ஸஹாயத்தையுமா தடுத்துக்கொண்டிருக்க வேண்டும்? உமது காரியங்கள் எனக்குப் பிடிக்கவே இல்லை' என்று கொட்டிவிட்டான் துர்யோதனன். துடித்தார் பீஷ்மர். 'அப்பா குழந்தாய்! உனக்கு உன் காரியமே பெரிதாகிவிட்டது. அது முடியக்கூடியதா அல்லவா என்பதைக் கவனியாதே பேசி, என் நியாய வசனங்களை விபரீதமாகக் கொண்டு என்னைப் புண்படுத்துகிறாய். நான் இருப்பதால் உனக்கு அநேகவிஷயத்தில் தடைகளுள போலிருக்கிறது. நான் எப்படி அப்பா உனக்காக தற்கொலை புரிந்துகொண்டு இறப்பது? நாளை ஒரு நாள் பொறுத்துக்

கொள். என்னாலானமட்டும் உன் விஷயக் கடமையைச் செலுத்திவிடுகிறேன். என் உயிரையாவது நாளைக்கொடுப்பேனே யல்லது இப்படி அபஜயத்துடன் திரும்பேன். இதற்குப் பின்னர் யாரை வேண்டுமானாலும் ஸேனாபதியாக்கிக்கொள். அவஸரப்படாதே, சற்றுப்பொறு' என்று அவனை ஸமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு, 'ஸரி நமக்கு ஆயுள் முடிவுகாலம் வந்து விட்டாற் போலிருக்கிறதே! துர்யோதனனும் நமது மரணத்தை விரும்புகிறான் போலிருக்கிறது. இனி நமது செஞ் சோற்றுக் கடனை உயிர்போகும் வரையில் செலுத்திவிட வேண்டியது,' என்று ஒருவாறு தேறி அமைதியுடனிருந்தார் பீஷ்மர்.

இங்கு இப்படி துர்யோதனன் ஒருவாறு தேறிப் போய்க்கொண்டிருக்கும் பொழுது, பாண்டவர்கள் படைவீட்டில் கிருஷ்ணபரமாத்மாவை அக்ராஸனாதிபதியாகக் கொண்ட ஒரு ஆலோசனை ஸங்கம் நடைபெற்று வந்தது. அதில் அர்ஜுனன் முதலியோர் 'நமது தாத்தா போடும் சண்டையைப் பார்த்தால் நமக்கு ஜயம் திரும்பாதுபோலிருக்கிறதே! அவரைக் கொன்று சாய்த்தால்தான் மேல்காரியம் ஆகும் போலிருக்கிறதே! இதென்ன விபரீதகாலம்! தாத்தாவைக் கொன்றே தீர்க்கும்படியான காலம் வந்து விட்டதே!" என்று பரிதவித்தனர். இதற்கு தர்மபுத்திரர் 'நாம் பீஷ்மரிடம்போய் இதை வெளியிட்டுக் கேட்போம், முன்னரே அவர் அனுமதி கொடுத்திருக்கிறபடி' எனப் பாண்டவர்களும் கிருஷ்ணபரமாத்மாவை முன்னிட்டுக்கொண்டு பீஷ்மர் படைவீட்டை நோக்கி 9-ம்நாளிரவில் புறப்பட்டு, துர்யோதனன் போய் பீஷ்மர் அமைதி அடைந்திருந்த காலத்தில் வந்து சேர்ந்தனர். அர்ஜுனன் விஷயத்தை நேரிட ப்ரஸ்தாபிக்க, 'பீஷ்மர் ஏது! நமக்கு மரணகாலந்தான் அணுகிவிட்டது போலிருக்கிறது. இருதிறத்தாருக்கும் நாம் இறந்தால் நலமாகவிருக்கும்போலத் தோற்றுகிறதே. இதைவிட நாம் சாகவேண்டிய தருணம் வேறு ஒன்றும் ஏற்படாது. ஆகையால் இப்பொழுது தயங்காது உயிரை விடவேண்டியதுதான்' என்று எண்ணமிட்டுக்கொண்டு பாண்டவர்களை நோக்கி, 'ஹே தர்மாத்மாக்களே, இதுதான் நான் ரஹஸ்யம் கூறுவதாகக் குறிப்பிட்ட ஸமயம். என் ஸகல கர்மங்களையும் பலனையும் இதோ இருக்கும் கிருஷ்ண பரமாத்மா ஸந்நிதானத்தில் ஸமர்ப்பித்துவிட்டுக் கூறுகிறேன் என் மரணோபாயத்தை, கவனமாய்க் கேளுங்கள்' என்று பீடிகை போட்டுக்கொண்டார். பின்னர், 'பாண்டவர்களே! நீங்களோ தர்மாத்மாக்கள், ஜயம்உங்களதே, ஆனால் நான் உயிருடனிருக்கும்வரையில் வரவேண்டிய ஜயத்தை அடைய உங்களால் முடியாது. எனக்கும் மரணகாலம் ஸமீபித்து விட்டாற்போலத் தோற்றுகிறது. என்னை வெட்டிச் சாய்க்க உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன். தாத்தா என்று கூடக் கவனியாது என்னை நீங்கள் கொல்லுவது எனக்கு ஸம்மதந்தான். நான் வில்லம்பு எடுத்துப் போர்புரிந்து கொண்டிருக்கும் வரையில் என்னை நீக்கமுடியாது. உங்கள் புறம் சிகண்டி இருக்கிறானல்லவா? அவன் பெண்ணாகப் பிறந்து நடுவில் ஆணானவன். அவனைக் கண்டுவிட்டால் நான் அம்பெடேன். அவனை முன்னிறுத்திக்கொண்டு அர்ஜுனன் பின்னிருந்து போர் செய்தால் நான் யுத்தகளத்தில் அடிபட்டு விழுவேன். இப்படிச் செய்துவிடு அர்ஜுனா! தயங்காது. உன் தமயனாருக்கு ஜயத்தை ஸம்பாதித்துக் கொடுத்து விடலாம் நீ' என்று கூறி முடித்தார். அர்ஜுனனுக்கு அடங்காத்துயரம் வந்துவிட்டது. 'தாத்தாவை மோசடியாக வல்லவா நான் கொல்லும்படி வந்துவிட்டது' என்று



துடித்தான். பீஷ்மர், 'வந்தது வந்துவிட்டது நீங்கள் என்னைக் கொல்லாமல் இருக்கமுடியாது. க்ஷத்ரிய தர்மப்படி என்னை இப்பொழுது கொல்வது பாபமாகமாட்டாது. ஆதலால் தைர்யமாய் நாளையே என்னை வெட்டிச் சாய்த்துவிடுங்கள்,' என்று மரணத்தை ஒரு திரணமாக நினைத்து வசனித்தார். 'இப்படிப்பட்ட தாத்தாவைக் கொல்லும்படி யாகிவிட்டதே' என்று மனம் உருகித்தத்தளித்து பீஷ்மரிடமிருந்து விடைபெற்றுப்போயினர் பாண்டவர்கள்.

பத்தாம் நாள் காலையில் யுத்தம் தொடங்கி வெகு உத்ஸாஹமாய் நடைபெற்றது. பீஷ்மரை அணுகிவந்த சிகண்டியை துர்யோதனாதியர் நெருங்க வொட்டாது தடுத்து விட்டனர். இப்படி அன்று பிற்பகல் வரையில் போர் நடந்து பாண்டவர் கக்ஷி. களைத்துக்கொண்டே வந்தது. வெகு தந்திரமாக அர்ஜுனன் தகுந்த காவல்களுக்கிடையில சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு பீஷ்மர் முன்வந்து நின்றுவிட்டான். எவராலும் இந்த அர்ஜுனன் முயற்சியை அப்படியே தடுத்துவிட முடியவில்லை.

இவ்வாறு சிகண்டி முன் நிற்பதையும் அர்ஜுனன் அவன் பின் மறைந்து யார் பிரித்தும் பிரிக்க முடியாது ஸ்திரமாக நின்றுவிட்டதையும்கண்ட பீஷ்மர் தமது ஆயுதங்களை எறிந்துவிட்டார். ஆகாயத்தில் ருஷிகளும் வஸுக்களும் பீஷ்மரை நோக்கி 'உமது வஸுபதத்திற்குத் திரும்பும் காலமாகிவிட்டது. நீர் இப்பொழுது செய்த காரியமே நல்லது நல்லது,' என்று அங்கீகரித்தனர். ஸரி, நல்ல தருணம் தான் சாக என்ற தீர்மானம் பிறந்து கொண்டிருக்கையிலேயே, யார் தடுத்தும் தடைபட்டு நிற்காது பாணவர்ஷங்களை மிகுந்த கொடுமையாகச்சிதறிவிட்டுபீஷ்மரை அம்புகளால் துளைத்தான் அர்ஜுனன். பீஷ்மர் தேஹத்தில் மயிர்க்கால்களிலெல்லாம் அம்புகள் பொத்திவிட்டன.

10-ம் நாள்மாலை பீஷ்மர் யுத்தகளத்தில் களைத்துச் சாய்ந்துவிட்டார். முதுகுப்புற விலாப்புறம் தைத்திருந்த அர்ஜுன பாணங்கள், பீஷ்மரை தரையில் படவொட்டாது அந்தரத்திலேயே ஏந்திப்பிடித்தன. தலை தொங்க விட்டுவிட்டது. இப்படி பீஷ்மர் யுத்தகளத்தில் அடிபட்டுவிழுந்ததும் போரை நிறுத்திவிட்டு இருதிறத்தாரும் வந்து கூடிவிட்டனர். அப்பொழுது ஆகாயத்திலிருந்த ருஷி, வஸுக்கள் 'தக்ஷிணாயனமல்லவா பீஷ்ம' என்று ஒலமிட, 'ஆனால் ஸரி, இனி 48 நாள் உத்தராயணம் பிறக்கும்வரை இப்படியே இருந்துவிடுகிறேன், என்ன ப்ரமாதம்!' என்று தீர்மானித்துவிட்டார் தகப்பனாரிடமிருந்து பெற்ற ஸ்வச்சந்த மரணசக்தியை ஸரிவர உபயோகப்படுத்தி. அப்பொழுது தொங்கும் தலையை ஸரிப்படுத்தும்படி கேட்க, துர்யோதனாதியர் எடுத்து வந்த தலையணைகளை ஒப்புக்கொள்ளாது அர்ஜுனனால் குறுக்காக நடப்பட்ட இரண்டு பாண ஆதாரத்தை ஏற்றார்: தாகசாந்திக்கு துர்யோதனாதிகள் கொண்டுவந்த தீர்த்தாதிகளை ஏற்காது, அர்ஜுனனால், பர்ஜன்யாஸ்த்ரத்தால் அவர் தலை மாட்டில் ஏற்படுத்தப்பட்டு அவர் வாய்க்கு நேராய் சிறு தாரையாக விழும்படி செய்த பாதாள கங்கை ஊற்றை அங்கீகரித்து சற்று களைப்பாறி துர்யோதனாதியரை நோக்கி 'இதோடு யுத்தத்தை நிறுத்திவிடுங்கள், நான் ஒருவன் போனது போதும். மற்றைய எல்லோருமாவது சேர்ந்துவாழ்ந்து ஸுகியுங்கள்' என்று பரிவுடன் புத்திமதி கூறினார். யுத்தத்தை நிறுத்தி விடுவோமா என்று யோசித்துக்கொண்டு துர்யோதனன் ஒருபுறமும், மிகுந்த துக்கத்துடன் பாண்டவர்கள் மறுபுறமுமாகப் பிரிந்து போயினர். இரவில் கர்ணன் பீஷ்மரிடம் வந்து துக்கித்து 'யுத்தம் நிற்பதே நலம், இல்லாவிடில் நான் துர்யோதனனுக்காக உயிர் விடுவேனே ஒழிய பாண்டவர்கள் தமயனாக அவர்

களிடம்போய் துர்யோதனாதியரை பறக்கவிட எனக்கு எப்படி மனம் வரும்?' என்று தன் உள் எண்ணத்தைக் கூறி யகன்றனன்.

இரவிலேயே துர்யோதனன் எண்ணம் மாறிவிட மறுநாள் முதல், மேல்யுத்தம் நடந்து தர்மபுத்திரருக்கு ஜயம் வந்தது. என்ன வந்தென்ன? அநியாயமாக உறவினர்களை எல்லாம் கொன்ற பாதகனாகி விட்டேனே என்ற துக்கமும் கூடவே வந்து கவிந்துகொண்டது அவரை. ராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு பலர் புத்திமதியின்மேல் இசைந்து தர்மபுத்திரர் ஹஸ்தினாபுரத்தரசரானார். தர்மபுத்திரருக்கு ஏற்பட்ட மனக்கவலை மாறினபாடில்லை.

இப்படி இருக்கையில், பட்டாபிஷேகமாகி இரண்டொரு நாட்கழித்து ஒருநாள் அதிகாலையில் தர்மபுத்திரர் பகவான் பள்ளியறைக்கு வர அங்கு மெத்தையின்மேல் பகவான் நிஷ்டையில் மூழ்கி, அசையாதிருப்பதைக் கண்டு மிகுந்த விநயத்துடன் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தார். பகவான் கண் விழித்ததும் தர்மபுத்திரரை நமஸ்கரித்து நிற்க, அவர் பகவானை நோக்கி 'நீர் ஜகந்நாதராச்சுதே, இந்த ஸமயத்தில் உமக்கென்ன நிஷ்டை வந்தது?' என்று பரிஹாஸமாகக் கேட்க, 'ஒன்றும் விசேஷம் இல்லை தர்மநந்தனா! தினம் காலையில் அம்புப் படுக்கையில் உத்தராயணத்தை எதிர்பார்த்திருக்கும் மஹாத்மாவான பீஷ்மர் என்னைத் துதிப்பார். அவரிடம் போய்விடும் என் மனம்அப்போது நிஷ்டையிலிருப்பேன் அவர்முடிக்கிறவரையில், இவ்வளவுதான்,' என்றார். அதற்குதர்மபுத்திரர் 'ஐயோ இப்பேற்பட்ட மஹானைக்கொன்றபாபியாகி விட்டேனே நான்' என்றலறிக்கொண்டு மூர்ச்சித்து விட்டார். அதற்கு பகவான் 'இன்னும் தீரவில்லையா இந்தப் பித்து உனக்கு! எழுந்திரு அந்த பீஷ்மரிடமே போவோம் நீ செய்த பாபத்தை விசாரிக்க' என்று காலைக் கடனை முடித்துக்கொண்டு பீஷ்மரை அணுகினர். அங்கு பீஷ்மர் நிர்யாணத்தைக் காண அநேக மஹருஷிகளும் வந்துவிட்டனர். அநேகருஷிகள் பீஷ்மருக்கு உபசாராதிகள் செய்துகொண்டுமிருந்தனர்.

தர்மபுத்திரர் அவரை அணுகி தமது மனக்குறையை வெளியிட அவர் மிகுந்த கருணையுடன் அவரை நோக்கி, "அப்பா குழந்தாய், உன் தர்ம சிந்தையில் பாபம் எப்படியடா உதிக்கும்! நீ செய்தது உன் தர்மத்தைத்தானே. அது நடைபெறுங்கால் எங்கள் கொடுமையால் உன்னால் மாளுவதுபோல நாங்கள் இறக்கும்படி நேர்ந்தது இதற்கு நீ இப்படி துக்கிப்பது உன் தர்மசிந்தைக்கழகல்லவே. உனக்கு நியாயப்படி கிடைத்துள்ள ராஜ்யத்தை ஒழுங்குப்படி ஆளுவதற்குக்கூட இந்ததுக்கம் இடந்தாராமல் உன்னை தர்மப்ரஷ்டனாக்கிவிடுமே. சீக்கிரம் மிச்சமில்லாது இதைத்தொலைத்து உனக்குவரும் ஸந்தேஹங்களைக்கேள். இதோ நமது முன்னிருக்கும் பகவான் பலத்தால் நான் உணர்ந்தவரையில் கூறிவிடுகிறேன். பின்னாவது தெளிந்து தேறி இரு," என்றுசொன்னார். பகவத்கிருபையால் தர்மபுத்திரருக்கு உபதேசிக்கையில் பீஷ்மருக்கு அம்புவலி குறைந்துவிட்டது. இவர் தர்மபுத்திரருக்கு எடுத்துக்கூறிய வேத ரஹஸ்யங்களை மஹாபாரதம் சாந்தி, அனுசாஸன பார்வங்களில் காணலாம்.

இவ்வாறு எல்லாம் கூறி முடிந்தகாலத்தில் உத்தராயணமும் வந்தது, தேஹத்தை உதறிவிடும் காலம்வந்ததுவிட்டது என்று தெரிந்துவிட்டது. உடனே யோகாப்யாஸத்தில் இறங்கிவிட்டார் பீஷ்மர். அடங்கிவரும் இந்திரியப்ராணாதிகளைமனதில் அடக்கி ஹிருதயத்தில் கொண்டு நிறுத்தி மேல்புண்ய கதியான ஸுஷும்னா மார்க்கத்தின்வழி வெளிக்கிளம்ப ப்ரயத்னப்பட்டார். அது சற்று கஷ்டமாக இருப்பதைக்கண்டு எதிரிலிருந்த கிருஷ்ண பரமாத்மாவை வாயாரத் துதித்து-தமக்குஅவர்விஷயத்திலிருந்த உண்மைஉணர்வை வெளியிட்டுத்யானித்தார். இவர்ப்ராணன்ஸுஷும்னைவழியாக தடையின்றி ஏறி மண்டை உச்சியாகிய ப்ரஹ்மரந்திரத்தைப் பிளந்து தயாராகவிருந்த திவ்ய ஆக்நேய சரீரத்தைப்பற்றிக்கிளம்பி ஆகாயமார்க்கமாகப்போய் வஸுபதவியைச் சேர்ந்தது. அங்கிருந்த எல்லோருக்கும் பீஷ்மர் பற்றிச்சென்ற ஆக்நேய சரீரம் அவர் மண்டையுச்சியிலிருந்து உயர ஆகாயத்தில் மறையும் வரையில் பெரிய சுளுந்து வெளிச்சம்போலக் காணப்பட எல்லோரும் பீஷ்மர் சிறப்பில் ஈடுபட்டு அசைவற்று தூண்போல் நின்றுவிட்டனர்.

இவ்வாறு மரணத்தைக்கூடக் கர்மயோகமாகவே ஏற்றார் கர்மயோக சிகாமணியான பீஷ்மர்!!!



# ஸதாசிவப்ரம்மம்

என்ற

## ஸித்தரின் திவ்ய சரித்திரம்

## SADASIVA BRAHMAM (a life sketch)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு காலத்தில் இவர் மஹிமையைக் கேட்டறிந்த ஒரு பிரமசாரி, இவர் பாதங்களில் வீழ்ந்து இவரோடு கூடவே ஜீவித்து வந்தனராம். இந்தப் பிரமசாரி ஒரு தினம் இரவில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதர் ஸன்னதியில் உற்சவம் நடக்கின்றது, அதைப்பார்க்கவேண்டுமென்று ஆவல் கொள்ள, நம்முடைய பரமாத்மா அதற்கிணங்கி சமிக்ஞை காட்ட, க்ஷணத்திற்கெல்லாம் அவர்களிருவரும் ஸ்ரீ ரங்கநாதர் ஸன்னதியில் தீபாராதனையாகிறதை மிகக்களிகூர்ந்து பார்த்தார்களாம். உடனே இப்பிரமசாரி இம்மஹானை எங்கும் தேடிக்காணமல், நெரூருக்கு வந்ததாகவும், அவ்விடத்தில் ஸ்வாமிகளெழுந்திருப்பதைக் கண்டு குதூஹலமடைந்து அவரை நமஸ்கரித்து அவருடைய அற்புதச்செயல்களை யாவருமறியும்படி பிரஸித்தப்படுத்தினதாகவும் சில நாட்களுக்கெல்லாம் நம்முடைய ஸித்தர் இப்பிரமசாரியை நாக்கை நீட்டச்சொல்லி தர்ப்பையால் ஒரு பீஜாக்ஷரம் அவர் நாக்கிலெழுதி அனுக்ரஹிக்க, இவர் சீக்கிரத்தில் கல்வியில் நிபுணராகி மைஸூர் சமஸ்தானத்தில் வேண்டியமட்டில் வெகுமதிகளைப் பெற்று வந்ததாகவும் இவருடைய ஸந்ததியார்கள் நெரூர் கிராமத்தில் மானியம் பெற்று இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றார்களென்றும் அறிகிறோம்.

நம்முடைய யோகீச்வரர் ஓரிடமும் நிலையாயிராது ஸதா எங்கும் அலைந்துகொண்டிருந்ததினால் ஒரு ப்ரகரணத்தில் ஒரு மஹம்மதிய அதிபதி விஜயம் செய்திருந்த கூடாரத்திற்குள் பிரவேசித்ததாகவும் அவ்விடத்தில் அந்த அதிபதி தன்னுடைய கோஷா ஸ்திரீகளுடனிருந்ததால் இந்த அவதூதஸ்வாமிகள் புகுந்ததும் மிகக் கோபம் கொண்டு உடனே தன்னுடைய கத்தியை உருவிக் கோபாவேசத்தால் நம்முடைய ஞானபாருடைய ஒரு புஜத்தை வெட்டி விட்டாராம். தமது ஒரு கைபோனதைக் கூடக்கவனியாது வழக்கம்போல் நம்முடைய மஹாத்மா தம் வழியில் போய்க்கொண்டிருந்ததை இந்த மஹம்மதிய அதிபதி பார்த்து மிகுந்த துக்கமடைந்து, தான் தெரியாத்தனமாய் இப்படிப்பட்ட மஹானுடைய கையை வாங்கிப் போட்டோமே! இந்த அநீதியான காரியத்தை இந்தப் பெரியவர் பொறுத்தருளும்படி, தான் செய்து கொள்ளவேணுமென்ற எண்ணத்துடன் அவர் எங்கு சென்றாலும் தானும் கூடவே போய்க் கொண்டிருந்ததாகவும் அநேக நாள் கிரமித்து யோகீச்வரர் இவரைத் திரும்பிப்பார்த்து, தம்முடன் கூடவே அவர் வந்து கொண்டிருப்பதற்கு என்ன காரணமென்று சமிக்ஞை செய்ய, அவர் நம்முடைய ஸித்தருக்குக் கொடுமையான காரியமொன்று செய்துபோட்டதினால் க்ஷமிக்கவேண்டுமென்று பலவாறாக கெஞ்சிச் சொல்லலும், என்ன குற்றமென்று தெரிவிக்கும்படி சமிக்ஞைசெய்ததும் இன்ன குற்றமென்று எடுத்துரைக்க அது பரியந்தம் தம்முடைய ஒரு கை வெட்டுண்டிருக்கிறதென் றறியாத நம்முடைய ஞானியார் அக்காலத்திலறிந்து தம்முடைய மற்றொரு கையை வெட்டுண்ட கைமேற் போடலும் அது வழக்கம்போல் ஆய்விட்டதைக்கண்டு ஸ்தம்பித்து நின்று தன்னை ஆசீர்வதிக்கவேண்டுமென்று ஸ்வாமிகளைப் பிரார்த்திக்க, அந்த அதிபதிக்கு ஆசீர்வாதமளித்துவிட்டு வழக்கப்பிரகாரம் தம் மார்க்கத்தில் சென்றனராம்.

நம்முடைய மஹாத்மா ஆலயங்களுக்குப் போய்த் தெய்வங்களைத் தரிசனம் செய்யுங்காலங்களிலெல்லாம் அர்ச்சனைகளை மனதில் தியானிக்கத்தியானிக்க, ஒவ்வொரு அர்ச்சனைக்கும் ஒவ்வொரு புஷ்பம் தானாக ஸ்வாமியினுடைய தலையில் விழுந்துகொண்டு வந்ததாகவும் தெரியவருகிறது. தம்முடைய தேஹமாத்தியந்தம் மண்ணையும் விபூதியையும் பூசிக்கொண்டு, இப்பிரபஞ்ச வாழ்க்கை அநித்தியம்; ஒன்றுக்கும் பிரயோசனமில்லை; நித்தியமான பரமபதத்தை நாடவேண்டுமென்ற ஊக்கத்துடன் தமக்கு ஆகாரம் தண்ணீர் ஒன்றையும் இலக்ஷியம் செய்யாமலிருந்தது முண்டு.

ஒரு ஸமயம் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு நம்முடைய பிரமமஞ்ஞானியார் போயிருந்தனராம். அப்பொழுது ஒரு நாள் ஒரு குடியானவன் ஆலை ஆட்டிக்கொண்டு இருக்கையில், கொப்பரையில் கொதித்துக் கொண்டிருக்கும் பாலைக் கையில் விடும்படி சொல்ல, அக்குடியான

வன் காய்ச்சாதபாலைக் கொடுப்பதாகத் தன்னாலியன்றமட்டில் அவருக்குச் சொல்லியும்அதை அவர் ஏற்றுக்கொள்ளாதவராய், கொதிக்கிற பாலிலேயே தமக்கபிலாஷையென்று ஜாடை செய்ய, அதைக் கொடாவிடில் தனக்குப் பெரிய அபாரதம் நேரிடுமோவென்று அவன்மிகப்பயந்து, அவர் அபீஷ்டப்பிரகாரம் கொதித்துக்கொண்டிருக்கும் பாலை அவர் கையில் விட அதைத் தம்முடைய திருக்கையில் குளிர்ந்த நீர்போலருந்திவிட்டுத் தம்முடைய நெறியில் சென்றனராம்.

கி. பி. 1738-ம் வருஷவாக்கில் நம்முடைய திவ்ய புருஷர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திவ்ய ஸ்தலங்களையெல்லாம் தரிசனம் செய்த பிறகு புதுக்கோட்டை சமஸ்தானத்தில் புதுக்கோட்டை நகரிலிருந்து ஐந்துமைல் தூரமுள்ள திருவாங்குளமென்ற மஹாக்ஷேத்திரத்தில் சிலநாள் தங்கியிருந்துவிட்டு அந்த க்ஷேத்திரத்திற் கருகாமையிலிருக்கும் அடர்ந்த காடுகளில் உலாவித்திரிந்துவருங்கால், புதுக்கோட்டை ராஜ்யத்தில் அப்பொழுது செழித்தோங்கி செங்கோல் நடத்திவந்த 'சிவஞ்ஞான புரந்துனர்' என்று பிரஸித்திபெற்ற விஜய ரகுநாதத்தொண்டைமானார் அவர்களுக்கு, நம்முடைய ஞானபாருடைய தரிசனம் கிடைத்ததாம். இப்பூபதிக்குத் தெய்வபக்தி மிகவுமதிகமாம். இவர் ஸதா, தெய்வ சிந்தனையிலேயேயிருந்தவராம். இப்புதுமை நகருக்கு ஒருமைல் தூரமுள்ள சிவஞானபுரம் என்றவிடத்தில் விசேஷமாய்த் தன் ஜீவகாலத்தைக் கழித்துவந்தவராம். இந்த ராஜாவுக்கு வெகுநாள் பரியந்தம் புத்திர ஸந்தானமில்லை. நம்முடைய யதீச்வாரைக்கொண்டு இப்பாக்கியத்தையடையவேண்டுமென்ற மிகுந்த அவாவுடன் தன் வேண்டுகோளை அவரிடம் தெரிவிக்க, அவர் இதற்கிணங்கினவராய்ப் பசுமாட்டு வெண்ணெயில் சொற்பம் கொண்டு வரும்படி ஆஞ்ஞாபிக்க, அவ்வெண்ணெயைத் தம்முடைய திருக்கையில் வாங்கி மந்திரித்து அதை இப்பூபதியின் பட்டமஹிஷிக்கு அளிக்கும்படி திட்டம் செய்ய, இந்தப் பட்டஸ்திரீ அதை உட்கொண்டதும் கர்ப்பம் தரித்துப் புருஷப்பிரஜையை ஈன்றதாகத் தெரிய வருகிறது. இக்குழந்தைக்கு 'நவநீதித் தொண்டமானார்' என்று நாமகரணம் செய்யப்பட்டது. இது முதல் இவர் சிலகாலம் இம்மஹானைவிட்டு நீங்காமல் இவரை பிரதிதினமும் ஆராதித்து இவரது அபீஷ்டத்தைத் தம்முடைய ஞானத்தினாலறிந்து நிறைவேற்றிவர, நம்முடைய திவ்யாத்மா இப்பூபதியினிடத்தில் மிகக்கருணைகூர்ந்து இவருக்கு தக்ஷிணமூர்த்தி விக்ரஹமொன்று நிருமித்து அதை அரண்மனையிலேயே ஸ்தாபிக்க, அன்று தொட்டு இன்றுவரை இச்சமஸ்தானத்து ராஜாக்கள் அதைகுலதெய்வமாக மிகுந்த சிரத்தையுடன் வணங்கிவருகிறார்கள். இந்த மந்திரமெழுதிய மணலை இன்றுவரை மேற்கூறிய தக்ஷிணமூர்த்தி ஸன்னதியிலேயே மிக ஜாக்கிரதையுடன் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். தவிரவும், இச்சமஸ்தானத்தில் நவராத்திரி பூஜை, அன்னதானம், யாத்திரைக்காரர்களுக்கு ஸ்வயம்பாகம், பிரதி வெள்ளிக்கிழமையிலும் பிராமணப் பெண் குழந்தைகளுக்கு ஸ்வயம்பாகம் முதலிய தர்மங்களும் இவர் அபீஷ்டத்தின்படி வெகு விமரிசையாக அன்று முதல் இன்றுவரை நடந்து வருகிறது. இத்தருமங்களை நிரந்தரமாகச் செய்து வரும்படியான ஏற்பாடுகளை நம்முடைய மஹான் இப்பூபதியினிடம் பெற்றபின் தாம் இன்னவிடத்தில் இன்ன தினத்தில்இன்னநேரம் ஸமாதிக்குள் ஐக்கியமாக வேண்டுமென்றும் அதற்குவேண்டிய ஸாமான்களும் தம்முடைய ஸமாதியில் ஒரு ஆலயமும் நிருமிக்கவேண்டுமென்றும், இப்பிரஸக்தியில் ஒரு பிராஹ்மணர் காசி க்ஷேத்திரத்திலிருந்து 'பாணலிங்கம்' ஒன்று கொண்டுவருவாரென்றும் இந்த மஹத்வமடைந்த ராஜாவினிடத்தில் சமிக்ஞையால் தெரிவித்துவிட்டு தாம் அந்தர்த்தியானமானாரென்றும் கேள்வி. இவர் வாக்கின்படி நெரூர் கிராமத்திற்கு இப்பூபதி தம்முடைய மந்திரிமார் முதலிய உத்தியோகஸ்தர்களுடன் சென்று இவர் அபீஷ்டத்தை நிறைவேற்றி வருங்கால், பாணலிங்கமும், அவ்விடத்திற்கு யோகீச்வரர் ஏற்கனவே சொல்லிய பிரகாரம் காசி க்ஷேத்திரத்திலிருந்து வந்து சேர்ந்ததாம். இத்தருணத்தில் நம்முடைய ஞானியார் பார்ப்பவர்கள் மனம் பூரிக்கும்படி இவ்விடத்தில் விஜயம் செய்து ஸமாதியில் எழுந்தருளினார்களாம். தொண்டைமான் ராஜாவும் இக்கிராமத்தார்களும் சேர்ந்து வாத்திய வேத

(இதன் தொடர்ச்சி 49-ம் பக்கம்.)



(48-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷங்கள் முழங்க, சாஸ்திரபூர்வமாக நடக்க வேண்டிய பூஜை அனுஷ்டானங்களை முடித்து, லிங்கப் பிரதிஷ்டையும் செய்து, ஆலயமும் கட்டி, நித்திய பூஜை நைவேத்தியத்திற்கு ஏற்பாடு செய்து, நவராத்திரி உற்சவம் முதலியவைகள் கிரமப்படி நடந்துவர புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருமயம் தாலுக்காவில் இரண்டு கிராமங்களை தொண்டைமான் இராஜா அவர்கள் இனாமாகவிட்டுக் கொடுத்திருந்தார்கள். அந்த இனாம் இக்காலத்தில் கட்டளையாக ஏற்பட்டு மேற்கூறிய உற்சவாதிகள் மிகுந்த வைபவத்துடன் இன்றும் நடந்துவருகின்றன. புதுக்கோட்டை சமஸ்தானத்தில், இம்மஹானை இன்றைக்கும் மிகுந்த பக்தி விசுவாஸத்துடன் தெய்வமாகக் கொண்டாடிவருகிறார்கள்.

இவ்வளவு பிரக்யாதிபெற்ற ஸித்தருடைய அற்புதச் சரித்திரத்தைப் படிக்கிறவர்களும், படிக்கக் கேட்கிறவர்களும், அஷ்டைச்வரியங்களும்பெற்று நீடூழிகாலம் சிறப்புடன் வாழ்வாரென்பது நமது உறுதியான கொள்கை. உலகத்தில் என்றைக்குப் பிறந்தோமோ, அன்றைக்கே மரணம் நிச்சயம். உலகத்திலேயே சாச்வதமான நிலையாக இருப்பவர்களை இது பரியந்தம் காணோம். ஆகையால் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற மட்டில் கிருஹகிருத்திய காரியங்களுடன் மோக்ஷபதவி பெறவேண்டியதற்குரிய ஸாதனங்களையும் நாளடைவில் கைப்பற்றமுயல்வது அத்தியாவச்யமென்று இச்சரித்திரத்தாலறிகிறோம்.

ஓம் தத்ஸத்.

ஏ. இராமச்சந்திர அய்யர்.

## ஹிந்துக்களின் புராதன நாகரிகமும் தற்காலக் கல்வியும்

## ANCIENT HINDU CIVILIZATION AND MODERN EDUCATION

மேனாடுகளில் தினேதினே நாகரிகம் விருத்தியடைந்து கரை புரண்டோட, நம் தேசம் மாத்திரம் அவ்விஷயத்தில் மழுங்கிக் கிடக்கக் காரணம் யாது? நூதன யந்திரங்களைக் கண்டுபிடிப்பதிலும், அற்ப வஸ்துக்களையும் நமக்கு அவச்யமாகச் செய்விப்பதிலும், நாட்டு நன்மையின்பொருட்டு பலவித சீர்திருத்தங்கள் கொண்டுவருவதிலும், தேசாபிமானம், பாஷாபிமானம் முதலியவைகளை விருத்தி செய்வதிலும், தம் நாட்டாரையும் ஜாதியாரையும் பாஷையினரையும் மதத்தினரையுமே உயர்வாகக் கருதி அவர்களுக்காக வருந்தியுழைப்பதிலும் ஏதோ தூண்டிக்கொண்டிருக்கவும் நம் நாட்டார் 'கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்' என்று வாளா இருத்தற்குக் காரணம் யாதோ? நமக்குத் தெரிந்தவரையில் இவை எல்லாவற்றிற்கும் ஒரேகாரணம்தான் கூறலாம். அது நம் நாட்டாரது அறியாமை என்னும் அந்தகாரம்தான். எதுவரையில் நம் நாட்டார் நம் தேச பூர்வீக சரித்திரத்தையும், நாகரிகத்தையும், அறிவுப் பெருக்கத்தையும் அறியாமலும், அயல் நாட்டாரது சரித்திரங்களையும் அவர்களது நடவடிக்கைகளையும் அறிந்தும் அவைகளை நம் தேசத்திற்கேற்ப அனுஷ்டிக்காமலும் இருக்கிறார்களோ, அதுவரையிலும் நம் தேசம் க்ஷீணதசையில்தானிருக்கும். நம் நாட்டில் அனேகர் தங்கள் சக்திகளைப் பற்றியும் தம் நாகரிகத்தைப் பற்றியும் எப்பொழுதுமே இழிவாக நினைக்கிறார்கள். தம் ஸ்வயபாஷை அவர்கள் திருவாக்குக்கு வெளியிலேயே நின்றுவிடுகிறது. ஏழையாயிருக்கும் ஸ்வஜாதியான், ஸ்வதேசத்தான் ஏளனத்திற்கு இடனாகிறான். ஸ்வமதமோ இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் வெறுக்கத்தக்கதாயிருக்கின்றது. எல்லாம் அந்நியநாட்டுச் சரக்காகவே யிருக்கவேண்டியதாய்வந்துவிட்டது. இப்படியிருந்தால் இந்நாட்டில் எவனுக்குத்தான் சற்றாவது பற்று உண்டாகும்? தன் வேலைத்திறத்தில் தனக்கு எவ்வாறு உத்ஸாஹமும் தைர்யமும் உண்டாகும்? தம் நாட்டின் பொருட்டு சிரமப்பட்டு உழைக்கும் வெகு சிலருக்கும் உள்ள ஊக்கம் குன்றிவிடுமல்லவா? நாம் அந்நியரிடமிருந்து நாகரிக விஷயங்களை க்ரஹித்து அனுஷ்டிக்கவும், அவர்களது பழக்க வழக்கங்களைத் தழுவவும் வேண்டாமென்று சொல்ல வந்தோமில்லை; நன்மை பயக்கக்கூடியது எந்தத் திசையிலிருந்து வந்தாலென்ன? எக்காலத்திலிருந்து வந்தாலென்ன? எந் நாட்டார், எப்பாஷையார், எம்மதத்தினரிடமிருந்து வந்தாலுமென்ன? நன்மையைக் கைக்கொள்ளுவதில் எவ்விதத்திலும் ஒரு குற்றமு மேற்படாது. அவைகள் கேவலம் போலிவேஷமாயும் நாளா வட்டத்

தில் தீங்கு விளைத்தல் கூடாதனவாயும் இருக்க வேண்டுமென்பதே நம் நோக்கம்.

அந்நிய நாட்டாரிடமிருந்து நாம் கற்கவேண்டிய விஷயங்கள் எத்தனையோ விருக்கின்றன. உதாரணமாக மேனாட்டாரின் தொழில் முறைகளும் அவர்களது வியாபார ரீதிகளும், அவர்களது பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிகளும் நாம் கற்றறிய வேண்டியவைகளே. இவ்வுலகத்தில் ஒவ்வொரு தேசமும் ஏதாவது ஒரு விஷயத்தில் சிறப்படைந்திருக்கிறது என்பது யாவரும் அறிந்தவிஷயம். ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரமே சிறப்புப் பெறுவதுடன், எல்லாவிஷயங்களிலும் இகத்திற்கும் பரத்திற்கும் உபயோகமானவைகள் எல்லாவற்றிலும் ஒரு தேசம் சிறிது தேர்ச்சி யடைந்தாலொழிய அத்தேசம் நீடித்து நிற்கும் விருத்தியை யடைவதில்லையென்பதும் எல்லாருக்கும் தெரியும் எப்பொழுதும் நிலைக்கக்கூடிய ஆத்மவித்யாவிஷயங்களைச் சிறிதேனும் கவனியாது, கேவலம் உலக இன்பங்களையே பெரிதாகக்கருதி, பொருளீட்டுவதிலும், நாடு நாடாய்த் தம் ஆளுகைக்குள் கொண்டுவந்து இவ்விஷயங்களுக்குரிய ஸாதனங்களையே தேடிய மேனாட்டு நாகரிகங்கள் எங்கு போயொளித்தன? இவைகள் வெளித்தோற்றத்தில் மாத்திரம் நாகரிகமடைந்தவைகளாகக் காணப்படினும் உண்மையில் அனேகமாய் நினைத்தற்கரிய ஊழல்களை யுடையனவாய் இருக்கின்றன. கேவலம் பணத்தையே பெரிதாக எண்ணிவந்த மேனாட்டு ப்ரபுக்கள் தம் நாட்டு நாகரிகத்திலேயே வெறுப்படைந்து எல்லா விஷயங்களிலும் நாகரிகமற்றவர்கள் என்று கருதப்பட்டு வந்த ப்ராசீன இந்திய நாகரிகத்தி லீடுபட்டு அதன் சக்தியையே மஹாசக்தி யெனக் கருதி அதன் போக்கையே பின்பற்றவும் தலைப்பட்டுவிட்டனர். இதைக் கீழ்நாட்டாருக்கு எடுத்துக் காட்டவே அம்மேனாட்டு விஞ்ஞானிகள் பலர் கீழ்நாட்டு ப்ராசீன தர்மங்களைக் கூறும் நூல்களை ஆராய்ச்சிசெய்வதில் முற்பட்டனர்போலும்!

இம்மாதிரி மேனாட்டாரே ஆர்ய தர்மத்தின் உயர்வையும் இந்தியாவின்பூர்வீக நாகரிக மேம்பாட்டையும் மேற்கொண்டு அங்கீகரிக்கும் காலத்தில் இந்தியாவில் பிறந்து வளர்ந்துவரும் இந்தியர்கள் மாத்திரம் ஏன் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளவேண்டும்? இவர்கள் ஆர்ய புத்ரர்களல்லவா? இந்திய புண்யபூமியில் அவதரித்த மஹான்களின் பெருமையைத் தாமும் பெறும் சிறப்பிற்கு உரியவரல்லவா? இந்நிலவுலகிலுள்ள மற்றெல்லாதேசசரித்திரங்களைக்காட்டிலும் இந்தியநாட்டுச் சரித்திரமே பலவித அனுபவங்களை எடுத்துக்காட்டுதலின் சிறப்புடையதாயிருக்கின்றது. இப்படியிருக்க, நம் பரதகண்டத்திற்குச் சரித்திரமென்பதே கிடையாது; நமது மூதாதைகள் நாகரிகமற்றவர்கள்; காடுகளிலும், குகைகளிலும், மூக்கைப் பிடித்துக்கொண்டு உலகநன்மை என்பதையே கவனியாமல் சுயநயம் பாராட்டி வந்தவர்கள் என்று கூறுவதை என்னென்று சொல்வது? இப்படிச்சொல்பவரின் குணாதிசயங்களும் நடவடிக்கைகளும் எப்படியிருக்கும்? நம் ப்ராசீன நாகரிகச் சிறப்பை மேனாட்டு ஜனங்களுக்குப் பறையறைவித்து அவ்வெளியோரின் பரிதாபநிலைமையை எடுத்துக்காட்டி உண்மைநெறியைக் காட்டிய யதிச்ரேஷ்டராகிய ஸ்வாமி விவேகாநந்தர் சொல்வதைச் சற்று செவிசாய்த்துக் கேட்கப் பிரார்த்திக்கிறோம்:-"தனக்குச் சொந்ததேசசரித்திரமில்லாநாட்டிற்குஇவ்வுலகத்தில் ஒன்றும்சொந்தமில்லை. நான் இத்தகைய கௌரவமான வம்சத்தில் பிறந்தவன் என்று கருதும் அபிமானமும் பெருமையும் உள்ளவன் ஒருவன் எப்பொழுதாயினும் தீயனாவ னென்று நீநம்புகிறாயா? அதுஎப்படி முடியும்? அத்தகைய தைர்யம் ஒருவனுக் கிருக்குமாயின் அது அவனுடைய எண்ணங்களையும் செயல்களையும் அடக்கியாளுமாகையால் அவன் ஏதாவது குற்றம்செய்வதினும் ப்ராணனையே போக்கிவிடுவானென்பது நிச்சயம். ஆகையால் ஒரு தேசத்தார்க்குரிய சரித்திரமானது அந்நாட்டாரை நன்றாய் அடக்கி யாண்டுவருவதுடன் அவர்கள் தாழ்மையை அடைய வொட்டாமலும் தடுக்கிறது. ஓ, நமக்கு அப்படிப்பட்ட சரித்திரமேதுஎன்றுகேட்பாயென எனக்குத்தெரியும் ஆம், உன்னைப்போல் எண்ணங்கொண்டிருப்பவர்களுக்குஇல்லைதான். உங்கள் ஸர்வகலாசாலைவிற்பன்னராய பெரியோர்களுக்கும் இல்லைதான். ஓரேமூச்சாய் மேனாடுகளில் ஓடிப்பிரயாணம்செய்து, ஐரோப்பிய நடையுடைகளுடன் திரும்பிவந்து, 'நமக்கு என்ன இருக்கிறது, நாம்காட்டுமிராண்டிகள்' என்று முறையிடுபவர்களும் இப்படியேதான் எண்ணுகிறார்கள், மற்றதேசங்களுக் கிருப்பதுபோலவே நமக்குச் சரித்திரமில்லை யென்பது உண்மைதான். * * * * நமக்கு எப்படி இருக்கவேண்டியது நியாயமோ அதேமாதிரி நம்சொந்த தேசசரித்திரம் வாய்த்திருக்கிறது. கண்களை மூடிக்கொண்டு 'அம்மம்ம! நமக்குத்தேசசரித்திரமென்பதே கிடையாது' என்று கதறினால் அச்சரித்திரம் மறைந்து போய்விடுமா? கண்ணைத்திறந்து பார்க்கிறவர்களுக்கு பகல் வெளிச்சம் போன்ற சரித்திரம் இருக்கிறது என்றும் அச்சரித்திர பலத்தினாலேயே நம் நாடு நல்ல ஜீவதசையில் இருக்கிறது என்றும் தெரிகிறது. ஆனால் அச்சரித்திரமானது மறுபடியும் வரையப்பட வேண்டியதாயிருக்கிறது. தற்காலத்திலுள்ள மேனாட்டுக் கல்வியின்மூலமாய் நம்மவருக்கு அமைந்துள்ள அறிவிற்கும் அபிப்பிராய நெறிகளுக்கும் ஒத்துவரும்படி அச்சரித்திரம் இன்னொரு முறை திருத்தமடைய வேண்டியதாயிருக்கிறது. * * * * உலகத்துள்ளமற்றநாடுகளுக்கு இந்தியா தாராளமாய் வித்யாதானம் செய்தது என்னும் உண்மைக்கு தேசசரித்திரமே சாட்சி பகர்கின்றது. நன்கு ஆராய்ச்சிசெய்தால் உலகத்துள்ள கல்வித்தொகுதியின் பகுதிகளுக்கும், ஆத்மவித்யாபிவிருத்திக்குரிய எல்லா கருத்துக்களுக்கும் மூலாதாரம் இந்தியாவிலேயே இருந்திருப்பதாகத் தெரியவருகிறது. * * நமக்கேயுரிய கல்வித்தொகுதியின் பற்பல பகுதிகள் எல்லாவற்றையும் அந்நியர் உதவி சிறிதேனுமில்லாமல் கற்கவேண்டியது தவிர, ஆங்கில பாஷையையும், மேனாட்டுச் சாஸ்திரங்களையும் பயில வேண்டியதே நாம் செய்யவேண்டியவைகள். ஸர்க்கார் ஊழியத்தைத் தேடாமல் தங்களுக்குப் போதுமானவரையில் ஸம்பாதிப்பதுடன் கஷ்ட காலங்களுக்காகச் சேர்த்து வைக்கும் வண்ணம் நம்மவர்களுக்குத் தொழிற்கல்வியும் நம்நாட்டுகைத்தொழில்களை அபிவிருத்தி செய்தற்குரிய படிப்புமே நமக்கு அத்யாவச்யம்.

(இதற்குரிய) வழியை வெகு சுலபமாகச் சொல்லிவிடலாம். நாட்டின் ஜீவகதியை மறுபடியும் எடுத்து வற்புறுத்திக்காட்டி அநுஷ்டித்தலிலேயே அது வெகு எளிதில் அமைந்துவிடும். பகவான் புத்தர் துறவறத்தைப் பற்றி உபன்யஸித்தார். இந்தியநாடு அவ்வுபன்யாஸத்தைக் கேட்கவும், இன்னம் ஆறுநூற்றுண்டுகளில் உச்சஸ்தானத்தையடைந்து விட்டது. அதுதான் மர்மம். துறவறமும் ஸேவையும் தாம் இந்தியாவிற்குரிய சிறந்த நோக்கங்கள். அம்மார்க்கங்களில் இந்நாட்டாரைச் செல்லும்படி தூண்டினால் மற்றவைகள் சரியாய் அமைந்துவிடும். * * * "

ஆகையால் நாம் உண்மையில் நம்மவரது நன்மையைக் கருதுபவராயிருப்பின் நம் நாட்டுச்சரிதத்தை எவ்வளவு ச்ரத்தையுடன் அறிந்துகொள்ளவேண்டியது என்றும், நம் புராதன நாகரிகத்தைக் கைவிடாது அவலம்பிக்க வேண்டியது எவ்வளவு அவச்யமாகிறது என்றும் விளங்குகிறதல்லவா?

கே. எஸ். வீராஸ்வாமி ஐயர், பீ.ஏ.



## பண்டைகாலத் தமிழ்ப் புலவர்கள்

# பெருந்தேவனார்

## TAMIL MEN OF LETTERS
## PERUNDEVANAR

திருவளர்ந் தோங்கும் பரதகண்டத்தின் பாண்டி நாட்டுப் பழம்பதியாகிய மதுரைமாநகரில் கடைச்சங்கம் நிலவிய ஞான்று, அச்சங்கமிருந்து தண்டமிழாய்ந்த பண்டை நல்லிசைப்புலவர்களுள் சிலர்சரித்திரங்களைவிவேகபோதினி'யில் கலாசாலை மாணவர்கட்குப் பயன்படுமாறு சுருக்கமாக எழுதி வெளியிடுவான் கருதி, முன்னரே தெய்வப்புலமை நக்கீரனார், ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் இவர்களைப் பற்றி ஒரு சில குறிப்புக்கள் வரைந்து விடுத்தாம். இப்போது கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவரான பாரதம் பாடிய பெருந்தேவனார் என்னும்நல்லிசைப்புலவரைக்குறித்து ஒரு சிலகுறிப்புக்கள் வரைவாம்.

"சீருறும் பாடல் பன்னீராயிரமுஞ் செழுந்தமிழ்க்கு—வீரர்தஞ்சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்—பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்--மாருதம் பூவின் மணம் வீசிடுந் தொண்டைமண்டலமே" என்னுந் தொண்டைமண்டல சதகச்செய்யுளால், இவர் தொண்டை நாட்டில் பிறந்து வளர்ந்தவர் என்பது இனிது பெறப்படுகின்றது. இவர் தம் இளம்பருவத்திலேயே நல்லாசிரியரை அடுத்து நற்றமிழ் இலக்கண இலக்கியங்களைத் துறை

போகப்பயின்று, புலமை நிரம்பி விளங்கினார். தமிழில் எவ்வளவு முதிர்ந்த ஆராய்ச்சி இவற்கு இருந்ததோ, அவ்வளவு வடமொழியிலும் இருந்ததென்பதைவலியுறுத்தற்கு, வடமொழி வியாச பாரதத்தைத்தழுவி இவர் தமிழில் பாரத வெண்பா இயற்றுதற்கு ஒருப்பட்டமையே போதிய சான்றுமென்க. இவர்தம் ஒழுக்க விழுப்பத்தினையும், பெரும் புலமையினையும் அறிந்து கடைச்சங்கத்தையும் அச்சங்கமிருந்து தமிழ் வளம்படுத்திய புலவர்களையும் ஆதரித்துவந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவனை கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என்னும் மன்னர் பெருமான், இவரைத் தொண்டை நாட்டிலிருந்து மதுரையம்பதிக்கு அழைப்பித்துச் சங்கப்புலவர்களுள் இவரையும் ஒருவராகச் சேர்த்து ஆதரித்து வந்தான். அதுமுதல் இவர் கடைச்சங்கத்தையும், பாண்டியன் அவைக்களத்தையும் அலங்கரித்து வந்த பாவலர் திலகராய் விளங்குவாராயினர்.

இப்புலவர் பெருமான் மக்களுயிர்க்கு உறுதி பயக்கவல்ல உயர்ந்த நீதிபோதனைகளை உலகத்தாருக்கு எளிதில் அறிவுறுத்தல் வேண்டும் என்னும் நன்னோக்கம் பெரிதுங் கொண்டிருந்தாராதலின், தம் எண்ணம் இனிது நிறைவேறுதற்கு வேதவியாசர் செய்த மகாபாரதத்தை தமிழில் இயற்றுவதைக் காட்டிலுஞ் சிறந்த மார்க்கம் பிறிதில்லை என்று கண்டு பாரதத்தைப்பாடத் தொடங்கினார். "பாரத: பஞ்சமோ வேத:" என்றும், "பாபவிநாசா: பாரதகதா:" என்றும் பாரதம் ஆன்றோரால் பாராட்டப்படுதலால், அதனை இவர் தமிழில் இயற்றப்புகுந்தது பெரிதும் பொருத்தமேயாம். பாண்டவ துரியோதனாதியர் சரித்திரத்தைக் கூறுமுகத்தால் குடும்ப ஐக்கியம், கற்பின்மேன்மை, பிறன்பொருள் விழையாமை, செய்ந்நன்றியறிதல், பிறன்மனை நயவாமை, தருமத்தின் உயர்வு முதலாய எண்ணிறந்த அரிய நீதிகளைப் பாரதம் விளக்குவதால், உலகத்தாருக்கு உயர்ந்த நீதிகளைப் புகட்டுவதற்கு அது ஒரு சிறந்த கருவி என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? பாரத கதையினிடத்து இப்புலவர் பெருமானுக்கு நன்கு மதிப்பு அதிகமுண்டென்பதை விளக்குவதற்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருக்குறள் கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்டபோது, அதனை வியந்து பாராட்டி நல்லபிப்பிராயங் கொடுக்க இசைந்த இவர் "பாரதம் பழைய இராமகதையை ஒப்பதாகும்; மனுஸ்மிருதி பழைய வேதத்தை ஒப்பதாகும்; ஆனால் தெய்வத் திருக்குறள் நூலுக்கு ஒப்பதும் மிக்கதும் வேறில்லை" என்னும் பொருள்படும்படி,

"எப்பொருளும் யாரும் இயல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு-முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்"

என்று அருளிச்செய்து பாரதத்தைக் குறிப்பிட்டிருத்தலே போதிய சான்றாம்.

பெருந்தேவனாரியற்றிய பாரதம் இருபதினாயிரஞ் செய்யுட்களை உடையதென ஒரு சிலரும், அறுபதினாயிரங் கொண்டதென வேறு சிலரும், எண்பதினாயிரமென மற்றுஞ் சிலரும் கூறுகின்றார்கள். ஆனால் முதலில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் தொண்டைமண்டல சதகச் செய்யுளால் பெருந்தேவனார் பாரதம் பன்னீராயிரஞ் செய்யுட்களை உடையதென்பதும், அது கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்டதென்பதும் இனிதறியக்கிடத்தலின், பன்னீராயிரஞ்செய்யுட்கள் என்று கோடலே பொருத்தமுடைத்து. அவைகளுள் உத்தியோக பருவத்திலும், யுத்தபருவத்திலும், சிற்சில பாடல்களே இப்போது காணப்படுகின்றன. ஏனைய பெரும் பகுதிகள் இறந்தொழிந்தனபோலும்! இவர் பெரும்பாலும் வெண்பாவினால் தம் நூலை இயற்றியிருக்கின்றாரேனும், இடையிடையே ஆசிரியப்பாவும், உரையும் (உரைவசனநடை) கலந்து அமைத்திருக்கின்றாராதலால், இவருடைய பாரதத்தை உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள் என்று ஆன்றோர் வழங்குப. இங்ஙனம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளால் பழையதோர் கதையினைக் கூறின், அதற்குத் தோன்மை என்று பெயராம். இவ்வுண்மை "தோன்மைதானே—உரையோடு புணர்ந்த பழைமைமேற்றே" என்று ஆசிரியர் தோல்காப்பியனார் (தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் 238-ஆம் சூத்திரம்) அருளிச்செய்தமையானும், அதற்குப் பேராசிரியர் "தொன்மை என்பது உரைவிராய்ப் பழைமையவாகிய கதைப்பொருளாகச் செய்யப்படுவது" என்று உரை கூறி "அவை பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர்



யாத்திரையும் போல்வன" என்று உதாரணம் எடுத்துக்காட்டுவதானும் அறியற்பாற்று.

பாரத வெண்பா ஒன்றே இவரியற்றிய நூலாகும். இதனைத்தவிர வேறு தனி நூல் ஏதும் இவர் செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் திருவள்ளுவமாலையிற் காணப்படும் "எப்பொருளு யாரு மியல்பினறிவுற" என்னுந் தொடக்கத்துப் பாட்டும்; புறநானூறு, குறுந்தொகை முதலிய நூல்களிலுள்ள கடவுள் வாழ்த்துச்செய்யுட்களும் இவரால் இயற்றப்பட்டனவாகும். இவர் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தாக இயற்றிய,

"கண்ணிகார் நறுங்கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
யூர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப் பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
யெல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடை பொலிந்த வருந்தவத் தோற்கே"

என்னும் செய்யுளில், சிவபெருமான் திருமேனி இலக்கணங்களை மிக விரிவாக எடுத்துக்கூறுவதுடன், "பெண்ணுரு வொரு திறனாகின்றவ்வுருத்—தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்" என்னும் அடிகளால் "இறைவன் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கும்பொருட்டுத் தம் அருட்சத்தியை ஒரு பாகத்தில் தோற்றுவித்துப் பின்னர் சங்காரகாலத்தில் அதனைத் தம்முள் ஒடுக்கிக்கொள்வார்" என்னும் சைவ சமய தத்துவ உண்மையினையும் புலப்படக் கூறுகின்றாராதலால், சைவ சமயத்தின் தத்துவ நுட்பங்களை இனிதறிந்தவர் என்பது குறிப்பால் அறியக்கிடக்கின்றது. புறநானூற்றில் சிவபிரானைப் பாடியிருத்தல் போலவே, இவர் குறுந்தொகை கடவுள் வாழ்த்தில்,

"தாமரை புரையுங் காமர் சேவடி
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றி
னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேம வைக லெய்தின்றா லுலகே"

என்று முருகவேளைத் துதித்திருக்கின்றார்.

அன்றியும் இவர் தாம் இயற்றுவான் புகுந்த பாரதத்திற்குக் காப்புச்செய்யுளாக

"ஓத வினையகலு மோங்கு புகழ் பெருகுங்
காதற் பொருளனைத்துங் கைகூடுஞ்—சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேற் பாரதப்போர்
தனிக்கோட்டு வாரணத்தின்றாள்" [தீட்டுந்

என்பதைக் கூறி, விநாயக வணக்கஞ் செய்திருக்கின்றார்.

இவைகளைக் கொண்டும், சிவபெருமான் பெயருள் ஒன்றான "மகாதேவன்" என்னும் வடமொழிப் பெயரின் தமிழ் மொழிபெயர்ப்பான 'பெருந்தேவனார்' என்பது இவருடைய பெயராயிருப்பது கொண்டும் இவர் சைவசமயத்தினர் என்பது இனிதறியப் படுகிறது. ஆனாலும் இவர் பாடுதற்கு ஒருப்பட்ட நூல் பாரதமாகிய விஷ்ணு கதையாதலினால், எற்புடைக் கடவுளாகிய திருமாலை ஆங்காங்கு வணங்கியும், அவர்க்குப் பல இடங்களில் தம் நூலில் பாத்துவங்கூறியும் செல்கின்றார். இதனால் இவர் சைவத்தையும் வைஷ்ணவத்தையும் ஒப்ப நோக்கும் சமரசபாவ முடையார் என்பதும், மதத்வேஷம் சிறிதும் அற்றவர் என்பதும் இனிது புலனாகின்றன.

இனி, இவர் பாடிய பாரத வெண்பாக்கள், பிற்காலத்தில் புகழேந்தியார் பாடிய நளவெண்பாவைப் போல், ஓதுதற்கினியவைகளாயும், உணர்வதற் கெளியவைகளாயும், ஆற்றொழுக்குப்போல் தெளிவான நடைபெற்றுத் திகழும் இயல்புடையவைகளாயும் இருக்கின்றன. இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராதலால், நக்கீரர், கபிலர், பரணர் முதலானவர்கள் இவரோடிருந்த புலவர்கள் என்பதும், இவருடைய காலம் தெய்வப்புலமைத் திருவள்ளுவருடைய திருக்குறள் கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட காலம் என்பதும், அதாவது இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னராமென்பதும் இனிதறியக் கிடக்கின்றன. இவர் காலத்தில் இவருடன் கவிசாகரப் பெருந்தேவனார் என்று வேறு ஒரு புலவர் இருந்திருக்கின்றாராதலால், அவர் பெயருக்கும் இவர் பெயருக்கும் வேறுபாடு தெரியும் பொருட்டு இவரைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று அக்காலத்திலேயே ஆன்றோர்கள் வழங்கி வந்திருக்கின்றார்கள். அப்பெயரே இன்

(இதன் தொடர்ச்சி 54-ம் பக்கம்.)

# ஆரோக்ய சாஸ்த்ரம்

## THE SCIENCE OF HEALTH

முன் ஸஞ்சிகையில், ஆரோக்கிய சாஸ்த்ரத்தின் கருத்தும், அது விஷயமான ஞானத்தை ஜனங்கள் மேன்மேலும் ஸம்பாதித்து வ்யாதிவராமல் கூடியவரையில் தடுத்துக்கொள்வதற்கு வேண்டிய ஸாதனங்களைத்தேடுவதில் கவர்ன்மெண்டாரும் ஸ்வதேசாபிமானமுள்ள தலைவர்களும் ஊக்கமுடையவர்களாயிருக்க வேண்டுமென்பதும் சொல்லப்பட்டது. இது விஷயமாய் ராஜாங்கத்தாரும், மற்றவர்களும் செய்யும் ப்ரயத்னமானது ஸுலபமாய் பலிதமாவதற்கு ஜனங்களின் மன ஒற்றுமையும், அனுஷ்டான ரூபமான ஸஹாயமும் ஏற்படவேண்டும்; இல்லாவிடில் பொது நன்மைக்காக கவர்ன்மெண்டாராலும், முனிஸிபாலிடி, யூனியன் முதலிய ஜன மாகாணங்களாலும் ஏற்படுத்தப்படும் சட்டவிதிகளை ஜனங்கள் கொடிய இடையூறென்று நினைத்து அஜ்ஞானமூலமான பயத்தினாலும் ஆக்ரஹத்தாலும் அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடவாமலிருக்கப் பலவித உபாயம் தேடுவார்களென்பது அனுபவஸித்தமே.

சிலவருஷங்களுக்குமுன் பம்பாயில் ப்ளேக் (Plague) என்னும் கொள்ளைநோய் வந்தகாலத்தில் அதைத் தடுப்பதற்காக செய்த ஏற்பாடுகளால் ஜனங்கள் பயந்து ராஜாங்க உத்தியோகஸ்தர்களுடன் சண்டையிட்டுக்கலகம் செய்யும்படி நேர்ந்தது. அந்தநோயின் ஸ்வபாவம் கொஞ்சங்கொஞ்சமாய் ஜனங்களிடத்தில் பரவவே விகாதமும் குறைந்து வருகிறது. இப்போது கூட, ப்ளேக்பாஸ்போர்ட்டு ஸம்பந்தமானவிதிகளை சிலர் மீறிநடப்பதற்காக நியாயஸ்தலங்களில்வழக்குகள் தொடரப்பட்டு அபராதமோ சரீர தண்டனையோ விதிக்கப்படுகின்றது. வைசூரி, வாந்திபேதி இவை உண்டாகும்காலத்தில் பயத்தினாலும், இதரகாரணங்களாலும் பஹு ப்ரயத்னப்பட்டு அதிகாரிகளுக்குத்தகவல்தெரியாமல் செய்து, வ்யாதிபரவும்படியான வழியை நாளைக்கும் தேடுகிறார்களென்பது அநேகமாய் எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே.

ஒவ்வொருவருடையவும் ஜன ஸமுதாயத்தினுடையவும் ஆரோக்ய ஸம்பாதனத்துக்குரிய ஸாமான்யவிசேஷ விதிகளின் கருத்தும், அவைகளை யனுஷ்டிப்பதாலுண்டாகும் பயனும், அனுஷ்டிக்காவிட்டால் ஏற்படும் கெடுதியும், பேதைமையான ஜனங்களுக்கு ஸரியாய் விளங்கும்படி ஞானத்தைப் பரவச்செய்வதால்தான் அவர்களின் நிஜமான ஐக்யம் ஏற்படும். அப்படிக்கில்லாமல், 'இன்னவிதமான ஜலத்தைப் பானம்பண்ண வேண்டும். கிணற்றை நிரப்பி மூடிவிடு. வீடுகளையும் தெருக்களையும் இவ்விதம் சுத்தமாய் வைத்துக்கொள்' என்பது முதலான பலவுத்திரவுசெய்து, அப்படிச்செய்யாவிட்டால் தகுந்தசிக்ஷை விதிக்கப்படுமென்று பயத்தைக் காட்டி ஜனங்களின் ஸௌக்யத்தைத் தேட முயல்வது வீண் ச்ரமமென்றே சொல்லவேண்டும். நமது ஆர்யர்களின் ப்ராசீன சாஸ்த்ரங்களில்சொல்லப்பட்டிருக்கும் தேக ஆரோக்யத்துக்குரிய ஸ்நானம், ஆஹாரம், பானம், வஸ்த்ர சுத்தி முதலியவைகளைப்பற்றிய நியமங்களின் தற்காலநிலைமையேஇதற்கு ஓர் தகுந்த நிதர்சனமாகும். மேற்கண்ட விதிகளில் பெரும்பாகம் எக்காலத்திலும் ஹிந்துக்களின் தேகாரோக்யத்திற்கு அனுகூலமுள்ளதாயினும், அவைகளின் நோக்கத்தையும் ஆவச்யகத்தையும் ஜனங்கள் அறிவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை பஹுகாலமாய்த் தேடாமலிருந்து வருவதாலன்றோ, நம்மவரில் அநேகர் அவைகளை அனுஷ்டியாமல் விட்டுவிடுவதுடன், 'இதெல்லாம் சுத்தமூடபக்தி (Superstition); நாகரிகமான இக்காலத்துக்குத் தகாது' என்று நாநாவிதமாக நிந்தித்துப்பேசும்படியும் காலஸ்திதி நேர்ந்துவிட்டதல்லவா? இதே நியமாதிகள் மேற்கு தேசத்தார் உபன்யாஸ மூலமாய்ப் புகழ்ந்து பேசினாலும் அவர் பாஷையில் எழுதி புஸ்தகரூபமாய் வெளியிட்டாலும், அநேகருக்கு வேதவாக்கியங்களாக விளங்குகின்றன!

(53-ம் பக்கத் தொடர்ச்சி.)

றும் இவருக்கு நிலவி வருகின்றது. இவ்விருவரே யன்றி, வீரசோழியத்திற்கு உரை வகுத்த வேறொரு பெருந்தேவனாருமுளர். சிறந்த உரையாசிரியர்களான பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலானோர் தொல்காப்பியத்திலும், பிற இடங்களிலும் பாரதம் பாடிய பெருந்தேவனாருடைய செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியிருப்ப தொன்றே அவருடைய பெருமையையும், அவரியற்றிய பாரதத்தின் அருமையையும் விளக்குதற்குப் போதிய சான்றாகும்.

ஸி. கோ.



மனோவ்யாபாரம் வெகு விசித்ரம். ஒரு ஸமயம், பந்தனமாகவும், துக்கரூபமாயும் தோன்றுவதே, மறுஸமயம் மிக்கஸுகமாயும், அவச்யம் அனுஷ்டிக்கத் தக்கதாயும் காண்கிறது. மருந்தின் குணமறியாமல் அதை வெறுக்கும் சிறுபிராயத்தில் ஔஷதம் அடித்துப் புகட்ட வேண்டியிருக்க, வயது முதிர்ந்து தேகபோஷணைக்குரிய ஞானமுண்டாகுங்கால், பெருந்தனம் செலவு செய்து மருந்து ஸம்பாதித்து, எவ்வளவு அருசியாயினும், ச்ரத்தையுடனுட்கொண்டு, காயக்லேசாதிகளை ஸஹிப்பது மிகவும் ஸஹஜமாயிருக்கிறதல்லவா? ஸுகாதாரமான விதிகளெல்லாம் நிர்ப்பந்த ரூபமென்று நினைக்கச்செய்யும் புத்தி ப்ரமமானது, தேக சாஸ்த்ர ஞானமுண்டானால், ஸூர்யனைக் கண்ட பனிபோல் நீங்கி, ஜனங்கள் அவ்வித விதி நியமங்களை அத்யாவச்யகங்களாகவும், மிகவும் ஸுகாவஹங்களென்றும் எண்ணி, மேன்மேலும் தங்களுடைய க்ஷேம ஸம்பாதனத்தில் வெகு ஆஸ்தையுடன் ப்ரவர்த்திப்பார்களென்று சொல்ல தீர்க்கதர்சித்வம் வேண்டியதில்லை.

தேக ஆரோக்ய விஷயமாய் முக்கியாம்சமாய் முதலில் தெரிந்து கொள்ளவேண்டியதைச் சற்று விசாரிப்போம். வ்யாதிவருவது ஸர்வஜனங்கள் விஷயத்திலும் ஸம்பாவிதமே. ஆனால், வ்யாதி தேகத்தில் வேரூன்றி பெருந்தீங்கு விளைவிக்காமல், தடுக்கக்கூடிய சக்தி (Resisting power) ஒவ்வொருவருக்கும் ஸஹஜமாய் ஏற்பட்டிருக்கிறது; இல்லாவிடில், நோயுண்டாகும் போதெல்லாம் அது நிவர்த்தியாகாமலே, ஜனங்கள் அதற்கு ஸுலபமான இரையாகும்படியல்லவா நேரிடும். அநேக ஸமயங்களில் வ்யாதி ஸ்வஸ்தமாவதை நாம் தினந்தோறும் பார்க்கிறோம். ஔஷதமூலமாய் மேற்கண்ட தடுக்கும் சக்தி வ்ருத்தியடைந்து வ்யாதியை வெல்லுகிறது. இச்சக்தியானது, ஸாதாரணமாய் அவரவர்களுடைய வாஸஸ்தலம், உணவு, பானம், ஒழுக்கம், இதுகளை யனுஸரித்து, ஏற்றக்குறைவாயிருக்கும். சிலஸமயம் இயற்கையான காரணங்களால் இந்த சக்தி அதிகரிக்கலாம்; அநேகமாய், ஒவ்வொருவரும், தன் ஆரோக்ய விஷயமாய் எடுத்துக்கொள்ளும் முன் ஜாக்கிரதைக்குத் தக்கபடி மேற்சொன்ன சக்தியை விருத்தி செய்துகொண்டு, பிணிவர வொட்டாமல் தடுத்தும், அப்படி வந்தாலும் அதை வென்றும், நல் வாழ்வைப் பெறுவது துர்லபமல்ல.

வ்யாதி பலஹேதுக்களால் நேரிடலாம். சில ரோகங்கள், உஷ்ணாதிக்யம் முதலான ஸாதாரணகாரணங்களாலுண்டாகி ஸுலபமாய் ஸ்வஸ்தம் செய்யக்கூடியவை; ஒரேஸமயத்தில் பலரைப் பீடிக்காமல், சிலருக்குத்தான் வரும்; ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் தொத்தக் கூடியதல்ல.

ப்ளேக் (plague), வாந்திபேதி (cholera), வைசூரி (small-pox, measles) இவைபோன்ற பயங்கரமான கொள்ளை ரோகங்களோ, ஸமகாலத்தில் அநேகமுயிரை மாய்த்து, மஹாநாசத்தை விளைவிக்கக்கூடிய ஸ்வபாவமுள்ளவை; வெகு சீக்கிரத்தில் கிராமங்கள், நகரங்கள் முழுவதும் பரவி, சிகித்ஸைக்கு ஸரியாயுட்படாமல், ஜீவநாசம் செய்து ஜனமடர்ந்த ப்ரதேசங்களை சூன்யப் ப்ராயமாயாக்க வல்லமையுள்ளவை. கோரமான இந்நோய்களினுற்பத்திகாரணம், அதி ஸூக்ஷ்மமான க்ருமிகள் (bacteria). இக்கிருமிகள், ஜீவனுள்ள பிராணிகளுள் மிகவும் தாழ்ந்ததும் அற்பமுமானவை. இவை இவ்வளவு சிறியவையென்று மனஸால் க்ரஹிப்பதே கஷ்டம். ஒவ்வொன்றின் ஸராஸரிபருமன், 1/25,000," ஒரு அங்குலத்தின் 25,000 பாகங்களில் ஒன்று. இவைகளின் ஆக்ருதி அணுவின் அணுவாயினும், வீர்யமோ அஸஹ்யம்.

மேற்சொன்ன க்ருமிகள் பலவகைப்பட்டன. அவைகளின் குணங்களும், உணவு பதார்த்தங்களும் வெவ்வேறு. அவைகள் தங்கி, ஒன்று பத்து, நூறு, ஆயிரம் என்று அதிசீக்கிரத்தில் மேன் மேல் வ்ருத்தியடைவதற்குத் தகுந்த ஸ்தானமும், நிலைமையும் பற்பல. சில பாலில் வளரும். பால் புளித்து உறைவது இவ்வகைக் க்ருமிகளின் செயலே. மற்றும் சிலது, இலை, கனி முதலியவற்றைப் புஜித்து அவைகளை அழுகச்செய்கின்றன. இறைச்சி கெட்டு துர்க்கந்தமாவது மற்றொரு வகை க்ருமியின் காரியம். இம்மாதிரியே மனுஷ்யதேகமும் சில ஜாதி க்ருமிகளுக்கு மிகவும் தகுதியான வாஸ

ஸ்தானமாகிறது. சரீரத்தினுள் புகுந்தவுடன் அவைகள் அனேக ஆயிரக்கணக்காய் வ்ருத்தியடைந்து, பௌதிக மாறுதல்கள் (chemical changes) மூலமாய், பற்பலவஸ்து ஜாதங்களை உண்டுபண்ணுகின்றன. சில க்ருமிகளும், அவையுண்டுபண்ணும் பதார்த்தங்களும் மனுஷ்ய சரீரத்துக்குத் தீங்குவிளைவிக்கக் கூடியதில்லை. ஒருவேளை தேக ஸௌக்கியத்துக்கு அனுகூலமாயிருக்கும். மற்றவைகளும், அவற்றால் உண்டாகும் மாறுதல்களும் தேக ஆரோக்யத்துக்கு அத்யந்தம் விருத்தமானவைகளாயும், வ்யாதிக்கு ஆஸ்பதங்களாகவு மிருக்கும். இதைப்பற்றிய விபரம், ஸந்தர்ப்பத்துக் கனுகுணமாய் பின்னால் சொல்லப்படும்.

க்ருமிஜாதமான கொள்ளை நோய்கள் இரு விதமாய் ஜனங்களுள் பரவி மஹா நாசத்தை விளைவிக்கலாம். (1) நோயாளியின் ச்வாஸக் காற்றினாலும், வஸ்த்ராதிகள் மூலமாயும், இதர விதமாயும், க்ருமிகள், அவனருகில் வருபவர்களின் மீது ஒட்டிக்கொண்டு அதே வ்யாதியை உண்டாக்குகின்றன. இந்த ரோகங்களுக்கு ஒட்டுரோகம் அல்லது தொத்துவியாதி (Infectious disease) என்று பெயர். அஸ்தி ஜ்வரம் (Typhoid fever), ப்ளேக், காலரா, வைசூரி முதலியன இவ்வகுப்பினுள்ளவை. (2) ரோகம் தொத்துவாரியில்லா விட்டாலும், இன்னொரு விதமாய், ஒரே காலத்தில் பலருக்கு நோயுண்டாகக் கூடும். ஜனங்கள் பானம் பண்ணும் குளம் அல்லது ஏரி ஜலம் க்ருமிதுஷ்டமாயிருந்தாலும், இறைச்சிக்கடை, பாற்சாலை இதுகளில் விற்கப்படும் மாம்ஸம், பால் முதலியன வ்யாதிக்ரஸ்தமான ஆடு மாடுகளினுடையதா யிருந்தாலும் ஏககாலத்தில், அதுகளை உபயோகப்படுத்தும் பலருக்கு ஹிம்ஸையுண்டாகலாம்.

பூச்சிஜன்யமான மேற்சொன்ன ரோகங்களிலிருந்து மனுஷ்யன் தப்புவது அல்லது அவைகளுக்கு இரையாவது என்பது முக்கியமாய் மூன்று அம்சங்களைப் பொறுத்திருக்கிறது. (1) அந்தந்த க்ருமிகளின் கொடுமை (2) உட்கொள்ளும் ஜலம், காற்று, உணவு முதலியவற்றிலுள்ள க்ருமிகளின் ஸங்க்யை. (3) நோயாளியின் வ்யாதியைத் தடுப்பதற்கான வலிவு. (1) வது விஷயமாய், நாம் செய்யக்கூடியதொன்றுமில்லை; தெய்வ ஸ்ருஷ்டியிலே ஏற்பட்ட க்ருமிகளின்ஸ்வாபாவிகக்கொடுமை, சாந்த குணம் இவைகளை மாற்றுவது மனுஷ்யன் கையிலகப்பட்டதில்லை. (2), (3) வது அம்சங்கள் விஷயமாய் எல்லாரும் யதாசக்தி ப்ரவிருத்தித்தல் கடமை. ரோகஹேதுக்களான க்ருமிகளை, வ்ருத்தியடையாவண்ணம் கொன்று வ்யாதி நிவாரணத்திற்கான சக்தியை வளரச்செய்து, சரீர ஆரோக்யத்தையும் தீர்காயுஸ்ஸையும் அடைய முயல்வது இவ்வுலகவாழ்க்கையின் முதன்மையான நோக்கமாயிருக்கவேண்டும். இதற்குரிய ஞானத்தை விவரித்துக் காட்டுவதுதான் ஆரோக்யசாஸ்த்ரம். இதர ஞானம் போலல்லாமல், இந்த ஞானம் படிப்புள்ளோர், ஸாமான்ய ஜனங்கள் எல்லாருக்கும் ஆவச்யகம் என்று சொல்லவேண்டுமா?

வ்யாதி நிவாரணம் மாத்திரமல்ல. அதிகச் செலவில்லாமல் ஜனங்கள் எப்படி ஸுகமாய் வஸிக்கக்கூடுமென்பதும் இச்சாஸ்த்ர பரிச்சயத்தால் ஏற்படும்.

ஆரோக்ய சாஸ்திராப்யாஸம் ஆரம்பிப்பவர்கள் கவனிக்கவேண்டிய ஓர் எச்சரிக்கை உண்டு. ஒளியை நிழலும், பகலை இரவும் தொடருவதுபோல், லோக ஹிதார்த்தம் ஏற்படும் ப்ரயத்னங்களுக்கு அநுஸ்யூதமாய் அனேக தீங்குகளும் ஸம்பவிக்கின்றன என்பது ப்ராயேண தொன்று தொட்டு அனுபவஸித்தமாயிருக்கிறது. மனுஷ்யர்களின் ஸௌகரியம், போக்குவரத்துக்குரியகருவிகள், யந்த்ரங்களைக் கண்டுபிடிப்பதற்காக வேண்டிய ப்ரயத்னங்கள் அனேக வருஷங்களுக்கு முன்னமேயே ஆரம்பித்து, ஸயன்ஸ் விஷயிகமான கல்வி அபிவிருத்தியாயிருக்க, தேக ஆரோக்ய ஞான ஸம்பாதனத்தைப் பற்றிய உத்ஸாகப்ரவிருத்தி கொஞ்சகாலமாய்த்தான் ஏற்பட்டு, க்ரமேண அதிகரித்துவருகிறது. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்கிறபடி இதுதான் ஸமயமென்று, அனேகர் மனோமயக் குதிரையிலேறி ஸவாரிசெய்து தங்களுக்கு அபிமதமான கொள்கையை வெகு ஆடம்பரத்துடன் ப்ரசுரஞ்செய்து, அதனால் ஸாமான்யஜனங்களில் பலர் வீண் த்ரவ்யநஷ்டத்தையும் தேகச்ரமத்தையும் அடையும்படி நேரிடுகிறது. ஜலத்தினாலேயே ஸர்வரோகங்களையும் நிவர்த்திசெய்யலாமென்று சிலரும், ஆடைதரிக்கும் ஓர் விதத்தாலென்று மற்றவரும், ஒரே ஔஷ



# மாடுகளின் மேய்ச்சல்

## CATTLE REARING

குடியானவனுக்குபயிர்த்தொழிலேஜீவனம். அந்த பயிர்த் தொழிலுக்கு மாடுகள் அவசியம் வேண்டும். ஆதலால் மாடுகளின் சுகத்தைத்தேடுவது அவனுக்கு முக்கியமான காரியம். அப்படி மாடுகளின் சுகத்தைத் தேடும் போது, தப்பாமல் கவனிக்கவேண்டியது மேய்ச்சலைப்பற்றி.

சாதாரணமாய் இந்த ராஜதானியில் குடியானவர்கள் மாடுகளை வயிறு ஆர மேய்க்க வகை ஒன்றும் ஏற்படுத்திக் கொள்ளாமல் கிராமப் பொதுவிலிருக்கிற நிலத்திற்கோ, மந்தைக்கோ, உழுது பயிர் செய்யாதோ, செய்யக்கூடாதோ, இருக்கிற கரம்பைக்கோ, ஆற்றங்கரைக்கோ, தண்ணீரில்லாதபோது ஆற்றுமணலிலோ ஓட்டி அடையப் போடுகிறார்கள். வேலையிருக்கிறபோது வேலைசெய்யாத மாடுகளையும் வேலையில்லாதபோது எல்லா மாடுகளையும் தப்பாமல் ஓட்டுகிறார்கள்.

இப்படிப்பட்ட பொது விடங்களிலிருக்கிறது அனுகூலந்தான். கொட்டில் அல்லது தொழுவத்தைவிட்டு காலாறித் திரிந்து வந்தால் கால்நடைகள் சுகப்படும். கட்டுத்தரையிலேயே யிருந்தால் அசுகமடையும். ஒரு கிராமத்திலிருக்கிற மாடுகள் எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறதினால் வருகிற தீமைகள் அப்படிப் போகிறதினாலுண்டாகிற நன்மைகளை விட அதிகம். அவைகள் இன்னதென்றும், அவைகளைநீக்குவதற்கானஹேது இன்னதென்றும் இப்போது விவரிக்கப்படுகிறது.

---

(56-வது பக்கத் தொடர்ச்சி.)

தத்தால் எல்லாப்பிணியும் தீருமென்று இதரர்களும் சொல்லுகிறார்கள். இதெல்லாம் ஸத்யமென்று நம்பி ஏமாந்து போகாமல், தேக சாஸ்த்ர ஞானத்தை யதோசிதம் க்ரஹித்து தன் அனுபவம், ஹிதர்களின் ஆப்தவசனம் இதுகளை ஸாதனமாய்க்கொண்டு ஒவ்வொருவரும் விடா முயற்சியுடன் தன்னுடையவும், இதரர்களுடையவும் ஆரோக்ய ஸம்பத்தைத்தேடுவது இந்தியர்களின் புரோவ்ருத்திக்கு முக்கிய ஸாதனமாகும். A. வரதாச்சார்யர், பி. ஏ., எல். டி.



மேற்சொன்ன பொது ஸ்தலங்களிலோ மேய்ச்சல் ரொம்பவும் பஞ்சை. இந்த இடங்களில் அனேகவிதமான புல்லும் செடிகளும் உண்டு. அனேகத்தை மாடு தின்னாது. உதவுகிறவைகளிலும், அநேகம் மாட்டுத்தீனிக்கு முக்கியமாக எடுத்தவையல்ல. இப்படி மாட்டுக்குப் பிரயோஜனப் படுகிறதைவிட பிரயோஜனப் படாத புல்லும் செடிகளும் மிகுந்திருக்கும். இது முதலாவது.

இரண்டாவது என்னவென்றால் அங்கேயிருக்கிற மேய்ச்சலோ போதாது. மேய்கிறமாடுகள் எல்லாவற்றிற்கும் ஏதோ சில கிராமந்தவிர மற்ற ஊரிலெல்லாம் மேய்ச்சலுக்குப் புல் அகப்படாது. அப்படியகப்பட்டாலும் மழைக்காலத்திலே கொஞ்சநாளே தவிர, வருஷமுந்நூற்றறுபது நாளும் அகப்படாது.

அனேகர் கட்டுத்தரையில் வேலை செய்யாத மாட்டுக்கு ஒன்றும் போடுகிறதேயில்லை. சிலர் வேலைசெய்கிற மாட்டுக்கும் போடுகிறதில்லை. வெளியில்போய். மேய்ந்துவந்தால் போதும் என்றிருக்கிறார்கள். மேய்ச்சலையே நம்பிக் கொண்டிருந்து. வீட்டிலேயும் தீனியில்லாமல் நல்ல மேய்ச்சலுமில்லாமல் சிலகாலம் பொறுக்குகிறதற்கும் ஒன்று மகப்படாமல்போகிறது. அதனாலே மாடு தின்கிற தீனி வயிற்றிற்குப் போதாமல், மெலிந்து நோஞ்சலாய்ப் போகும்.

சில ஜில்லாக்களில் மாடுகளுக்கு வயசு முதிர்ந்து அனேக நாள்வரையில் உடை (காய்) அடிக்கிறதில்லை. மற்ற மாடுகளோடு கலந்து ஓட்டிவிடுகிறார்கள். ஒரு மந்தையில் கன்றுக்குட்டி, கிடாரி, கறக்கிறமாடு, வாட்டுமாடு, பலப்பட்டது, பலப்படாதது, எருமைக்கிடா, எருதுமாடு, கிழம், கட்டை எல்லாம் கலந்திருக்கும். இப்படி கலந்திருப்பதில் எதை எது மெதித்தது எப்போது மெதித்தது என்று சொல்லத்தெரியாது. நல்ல ஜாதிக்கன்றுகள் வேணுமென்று நினைத்தாலும், இப்படிக் கலந்து ஓட்டுகிறதினால் சில காளைகள், பலப்படுகிறதற்கு வயசுவாராதசிலகிடாரிகளையும் மெதித்துவிடும். மந்தையிலிருக்கிற நல்ல மாடு, கெட்டமாடு, நோஞ்சல் நொடி எல்லாம் மெதிக்கஹேதுவாயிருக்கிறது.

மேலும், வேறுபாடு இல்லாமல் இப்படி கலந்திருப்பதினால் ஊரில் ஒருமாட்டுக்கு கோ

மாரி வந்தால் அது மற்ற மாடுகளோடு கலக்கிறதினாலே அவைகளுக்கும் கோமாரி வரும். வெக்கை வந்தாலும் அப்படித்தான். எல்லா மாடுகளுக்கும் பரவி அதிக நஷ்டம் ஏற்படும்.

இப்படிச்செய்வதால் விலையுள்ள எருவும் நஷ்டமாய்ப்போகிறது. சில சமயத்தில் சாணியைப் பொறுக்கி முட்டை தட்டி எரிக்கிறார்கள். இதில் மூத்திரம் மாத்திரம் வீணாய்ப் போகிறது.

மேய்ச்சலுக்காக காட்டுக்கு மந்தைகளை ஓட்டினால் சாணியைப் பொறுக்க முடியாது. பொறுக்கினாலும் சவரணையாய்ப் பார்க்கமுடியாது. அதனாலே சாணி, மூத்திரம் எல்லாம் நஷ்டமாய்ப்போகிறது.

மேற்சொன்ன வழக்கத்தினால் ஏற்படுகிற தீமைகள் இன்னதென்று இப்போது நமக்குத் தெளிவாச்சுது. எரு நஷ்டமாகிறது ஒன்று. நோய் தாக்குகிறதினால் மாடுகள் சாகிறது ஒன்று. இதோடு கூட ஊரிலேயே யிருக்கிற மாடுகளுக்கு தீனிபோதாமல், மூத்திரம் ஒளை தண்ணீர்பட்டு குளிர் பனியில் வெடைக்காதபடி போடுகிற விரிப்பு இல்லாததால் சுகம் குறைந்து, மாடுகள் உபயோகமில்லாமல் போகும். கடைசியாய் சொன்னதற்கு வேறு திருஷ்டாந்திரம் சொல்ல வேண்டியதில்லை. இந்த இராஜதானியின் வடபாகத்தில் உள்ள குடியானவர்கள் வேலைக்கு நல்ல மாடு வாங்க வேணுமென்று நினைத்தால், சந்தைகளுக்குத் தாமணிபக்காரர்கள் கொண்டு வருகிற மைசூர் அல்லது ஓங்கோல் மாடு தினுசுகளில் ஏதாவது ஒன்றைத்தான் வாங்குவார்கள்.

இப்போது உள்ள வழக்கத்தினால் ஏற்பட்ட தீமைகள் இன்னதென்று சொல்லியாய் விட்டது. அவைகளைப் போக்குவதற்கான ஹேதுக்கள் என்னவென்று பார்ப்போம்.

முதலாவது ஓங்கோல்,தாலுக்காவில் ஏற்பட்டிருக்கிற விதம் மாடுகளைக் கட்டிவைத்தே தீனி போடுகிறது.

அதாவது மாடுகளைத் தொழுவத்தில் கட்டி புல்லையும் மாட்டுத் தீவனத்திற்காக விதைத்த ஜாடுப் பயிர்களையும், கூடுமான காலம் வரையில் பச்சையாகவே அறுத்துப் போடுகிறது. பருத்திக்கொட்டை முதலியதும் கொடுக்கிறதுண்டு. அவரவர்கள் இஷ்டத்துக்குத் தகுந்தபடி சிலபேர் பருத்திக்கொட்டை, சிலபேர் வேறு ஏதாவது, சிலபேர் அதிகம், சிலபேர் கொஞ்சம் கொடுக்கிறதுண்டு. இந்த ஏற்பாட்டுக்கு மாடுகளை வெளியே போகாமல் கட்டிப் போடுவதினால் சுகம் குறையுமானதால், மாடுகள் கிடந்து, உருண்டு, புரண்டு திரியும்படி போதுமானவிசாலமுள்ள அடைப்பு அடைத்த இடம் அவசியம்.

நம்முடைய இஷ்டம், சௌகரியத்துக்குத் தகுந்தபடி தரை மட்டத்துக்கு மேல் உயர்த்தியோ, அல்லது தாழ்த்தியோ, தொழுவம் கட்டிக் கொள்ளலாம். இந்த ஏற்பாட்டை எல்லா விடங்களிலும் கைக்கொள்ளலாம். அதன் நன்மைகள் எல்லார்க்கும் தெளிவானது.

இரண்டாவது முன்னையதைப்போலதுதான். ஆனால், மேற்சொன்ன ஏற்பாட்டிலுள்ளபடி தொழுவத்திற்கு சமீபத்தில் வேறாக அடைப்பு அடைத்த இடத்திற்கு பதிலாக மழைக்காலத்தில் மாடுகள்மேய்ச்சலுக்கென்று போதுமான நிலத்தில் புல்லை வளர்ப்பதுதான். இந்த நிலத்திற்கு மாடுகளை ஓட்டினபோது, விழுகிற மூத்திரம் சாணியினால் புல் நன்றாய் வளரும். புல் வளர்வதினால் நிலம் கொழுக்கும். கட்டையை மடித்து உழுது பயிர்கள் உண்டாக்கினால் நல்ல மாசூல் கிடைக்கும்.

ஆனால், இந்த ஏற்பாட்டை எல்லா விடங்களிலும் வழக்கத்திற்குக் கொண்டுவரமுடியாது. மழையினால் விளைகிற பயிர்கள் உள்ளதும், நல்ல மழைகள் உள்ளதும் குடியானவர்களுக்கு உள்ள நிலவிஸ்தீர்ணம் அதிகமாயுள்ளதுமான ஜில்லாக்களுக்கும் தகுந்தது.

---

**ஒரு குரங்குப் பெண்**:—ஐக்கிய மாகாணங்களிலுள்ள கெயினிடாலில் குரங்குகளின் மத்தியில் வளர்ந்த ஒரு பெண்குழந்தை கண்டுபிடிக்கப்பட்டது. அக்குழந்தை சுமார் 9-வருஷகாலம் காட்டில் குரங்குகளுடனே வளர்ந்து வந்ததாம். அதனால் அதன் நடையுடை பாவனை யெல்லாம் குரங்குகளின் செய்கைகள் போன்றிருக்கின்றனவாம். அது முதலில் புல்லும் பச்சை உருளைக்கிழங்கும் தின்றது; இப்பொழுதும் ரொட்டியும் பாலும் சாப்பிட்டு வருகின்றது. தன் குட்டியை யிழந்த லங்கர் ஜாதிப் பெண் குரங்கொன்று காட்டிலுள்ள குடிசையொன்றில் வசித்துக்கொண்டிருந்த இப்பெண்ணைச் சிசுவாயிருக்கும்பொழுது தூக்கிக்கொண்டுபோய் வளர்த்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.



## ஆரியர்களின் ஸங்கீதமுறை
## SCIENCE OF ARYAN MUSIC
### ஸாஹித்யங்கள்
### MUSICAL COMPOSITION

நாம் இதுவரையில் ஸங்கீதத்துக்கு முக்கியமாக ராகம் என்னும் விஷயமும், ராகத்தின் வேறு ஒரு ரூபமான மத்தியமகாலம் அல்லது தாநம் என்னும் விஷயமும், இப்படிச்சொன்ன இரண்டிற்கும் ஆதாரமாகிய ஸ்வரங்கள் என்னும் விஷயமும் ஆகிய இவை எவ்விதம் உண்டாகின்றனவென்றும், என்னென்ன வகையென்றும், அவைகள் எவ்வாறு வழக்கத்தில் வந்திருக்கின்றனவென்றும்பார்த்தோம். இனி, ஸங்கீதத்தை எவ்விதம் பேச்சு வார்த்தைகளுடன் நாம் சம்பந்தப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று பார்க்கவேண்டியது. அதாவது ஒரு பாஷையில் வார்த்தைகளை ஏதோ ஒரு அபிப்பிராயம் கொள்ளும்படி சேர்த்து, அதைப் பிறகு ஒரு ராகத்தில் இசைத்து உச்சரிப்பதாம். இப்படிச் செய்யவேண்டுமென்றால் ஸங்கீதஞானமும் பாஷாஞானமும் இரண்டும் அவசியமாகும். இப்படிச்சேர்த்து இயற்றும் இவ்விஷயத்தை ஸாஹித்யம் என்று சொல்வது வழக்கத்திலிருக்கிறது. ஆகவே, நாம் இனி பார்க்கவேண்டிய விஷயம் ஸாஹித்யங்களும், அவைகளின் லக்ஷணங்களும், அவைகளின் வகைகளுமாகும்.

ஸாஹித்யம் என்பதற்கு இயற்றப்பட்டது என்று அர்த்தமாகும். அதாவது, மேலே சொன்னமாதிரி வார்த்தைகளை நன்றாய் ப்ராஸங்களுடன் சேர்த்து, ஒருதாளத்தில் இசைத்து ஒரு ராகத்தில் பாடும் விஷயம் ஸாஹித்யம் என்னும் பெயரை வகிக்கும். ஸாஹித்யங்கள் முதல் முதல் எவ்வாறு இருந்தனவென்றும், பிறகு எவ்வாறு உருவாகி யிருக்கின்றனவென்றும் பார்ப்போம்.

ஆதிகாலத்தில் வேதங்களுள் முதல் வேதமான ருக்வேதத்தில் சந்தஸ் அல்லது வ்ருத்தம் என்னும் மாத்ராகாலவளவுடன் இயற்றப்பட்ட மந்திரங்கள் இருந்தன. பிறகு, பிராமணர்கள் தாங்கள் அநுஷ்டிக்கும் யக்ஞ யாகாதிகளில் தேவதைகளை ஸாமவேதரூபமான சஸ்திரங்கள் என்னும் ஸாமகாநத்தால் ஸங்கீதத்துக்கு இசைத்துப்பாடினார்கள் என்றுதெரிகிறது.

இப்படி வெகுகாலம் நடந்தபின், புராணாதிகள் ஏற்பட்டகாலத்தில் அவரவர்கள் மதத்துக்கு ஏற்பட்ட ஈசனையும் அவரது அற்புதச் செயல்களையும் கீதிகள் என்னும் பெயருள்ள பாடுவதற்கு எளிதான ஸாஹித்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரம் செய்ததாகத்தெரிகிறது. இப்போதைய ஸங்கீதத்தில் உள்ள கீதங்கள் என்னும் ஸாஹித்யம் இந்த கீதிகளை ஒத்தவைகள் என்பது என் அபிப்பிராயம்.

கீதகோவிந்தம் என்னும் கிரந்தம் சிலஸாஹித்யங்கள் உள்ள கிருஷ்ணபகவானது லீலையைப்பற்றிய புஸ்தகம் ஒன்று ஜயதேவ கவியால் ஸமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டிருக்கிறது. இதுதான் ஆரியஸங்கீதத்தில் முதல் ஸாஹித்ய புஸ்தகம். இதைவழக்கத்தில் அஷ்டபதி யென்று சொல்வார்கள். இந்தப் புஸ்தகத்தைக் கவனித்துப்பார்த்தால் ஒவ்வொரு அஷ்டபதியும் (அதாவது எட்டுச் சரணங்கள் வைத்து எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு ஸாஹித்யமும்) மேலேசொன்ன மாதிரியான கீதிகளைப்போலவே இருக்கின்றன வென்று பார்த்துக்கொள்ளலாம். ஒவ்வொரு சரணமும் எதுகை, மோனை பொருந்தினவைகளாயும் ராகம் தாளம் இரண்டுக்கும் இசைக்கப்பட்டவைகளாயும் இருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு ஸாஹித்யத்திலும் பல்லவி அல்லது த்ருவபதம் என்பது இருப்பதாக நாம் காண்கிறோம்.

த்ருவபதம் என்பது ஹிந்துஸ்தானி கவாயிகள் ஸாஹித்யங்களில் ஒருவகை. அதை மருவி வடக்கே தேசீய ஸங்கீதத்தில் த்ருபத் என்று சொல்வதைப் பார்த்துக்கொள்ளலாம். பல்லவி என்பது பல்லவம் என்னும் வார்த்தையின் திரிபு. இதற்கு சங்கீத சாஸ்திரகாரர்கள் "பதகர்ப்பம்து பல்லவம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது பல்லவம் என்பது நாம் சொல்லவேண்டிய அபிப்பிராயத்தை எல்லாம் ஒருங்கே அடைத்து வைத்துக்கொள்ளும் விஷயமாகும். அதாவது, முக்கியமான கோரிக்கை என்னும் விஷயமாகும். ஆகவே, பின்னால் வரும் சரணங்களில் அந்த முக்கிய கோரிக்கை விஸ்தரித்துச்சொல்லப்படும்என்று நாம் பார்த்துக்கொள்ளலாம் என்றால் பல்லவியில் முக்கிய அபிப்பிராயமும் சரணங்களில் அந்த அபிப்பிராயத்தின் விவரணமும் இருக்கின்றனவென்று அறிந்துகொள்ளவேண்டும்.

இந்தமாதிரி ஸாஹித்யங்களில் பல்லவியொன்று நீங்கலாக இதர பாகங்கள் ஒரேமாதிரியாக இருப்பதாகப் பார்க்கலாம். அதாவது அனுபல்லவி என்று நாம் வழங்கும் விஷயம் இந்தமாதிரி ஸாஹித்தியங்களில் கிடையாது. இந்தமாதிரி ஸாஹித்தியங்கள் கீதங்களுக்கு அடுத்ததாக ஏற்பட்டவைகள் என்று நினைக்கிறேன்.

பிறகு இந்த கீதகோவிந்தத்தின் ஸாஹித்யங்களை நர்த்தனம் செய்யுங்காலத்தில் பாடிக்கொண்டு பக்தர்கள் தாளத்துக் கொத்துவர ஆடிக்கொண்டிருந்தார்கள். அதிலிருந்து தேவகைங்கரியம் செய்வதற்கென்று ஏற்பட்டுள்ள தேவதாஸிகள் கோவில்களில் நர்த்தனாதிகளைக்கொண்டு ஆடிவருகிற வழக்கம் ஏற்பட்டது. அந்த ஸம்பந்தமாக, வர்ணங்களும், பதங்களும் வழக்கத்தில் வந்தன.

வர்ணங்கள் என்னும் ஸாஹித்யம் ஏற்பட்டிருக்கிறமாதிரியைப் பார்த்தால் அவைகள் நர்த்தனத்துக்காக என்றே ஏற்பட்டதாகக் காணலாம். ஸ்வரங்கள் சேர்த்திருக்கிறதும், கதிகள் ஒதுக்கி யிருக்கிறதும், தாளத்துக்கு ஒத்தபடி தயார் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும் ராகத்தைக்காட்டிலும் தாளம்தான் அவைகளில் பிரதானமென்றும் தெரிகிறது.

வர்ணம் என்பதற்கு வர்ணிக்கும் ஸாஹித்யம் என்பது பொருள். அதாவது, ஈசனை வர்ணிக்கும் பாட்டுக்களாம். அவைகளில் எல்லாம் பல்லவி, அநுபல்லவி, சரணம் இம்மூன்றும் உண்டு. எந்தத் தாளத்திலிருந்தாலும்சரி, அந்தத் தாளத்தின் இரட்டைப்படை ஆவிருத்தம் காலப்பிரமாணமுள்ள பல்லவி இருக்கின்றது. அது ஸாஹித்திய ரூபமாயிருக்கிறது. அதே மாதிரி காலப்பிரமாணமுள்ள அநுபல்லவி ஸாஹித்தியமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் சரணம்மட்டும் ஒரேஆவிருத்தமுள்ளதாக இருக்கிறது. இதுவும்தவிர எத்துக்கிடை ஸ்வரங்கள் என்று சொல்லி வழக்கத்திலிருக்கிற இரண்டு ஆவிருத்தமோ அல்லது அதற்கு மேற்கண்ட இரட்டைப்படை ஆவிருத்தமுள்ளஸ்வரவரிசைகள் சேர்க்கப்பட்டிருக்கிறது. பல்லவி, அநுபல்லவி, சரணம் இம்மூன்றுக்கும் உள்ள ஸ்வரங்களையும் ஸாஹித்யங்களையும் சேர்த்துத்தான் மாணாக்கர்க்குச் சொல்லிவைக்கிறது வழக்கத்திலிருக்கிறது.

இவ்வித வர்ணங்களுள் மூன்றுவகைகள் உண்டு. அவைகளாவன:—(1) பதவர்ணம் (2) ஸேளகவர்ணம் (3) தானவர்ணம் இந்த மூன்று வர்ணங்களையும் நர்த்தனங்களுக்கு உபயோகித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவைகளில், பதவர்ணம் மிகுதியாய் நர்த்தனகாலத்தில் பாடப்படுகிறது. இவைகளில் ராகபாவம் நன்றாய்ப்பொருந்தியிருக்கிறது. உதாரணமாக, சங்கராபரணராகத்தில் ‘‘மநவிசெகொந்ந’ என்கிறவர்ணத்தைபார்த்துக்கொள்ளலாம். அகாரங்கள் ரொம்பக்குறைவு. ஆனதால், பாடுவதற்கு சுலபமானது. காதுக்கும் இனிமையானதாம். இந்த வர்ணங்கள்தான் கேட்கத்தகுந்தவைகள் என்று என் அபிப்பிராயம்.

[தேவதாஸிகளின் ஆட்டத்தைப்பற்றி நமது கனவான்களில் சிலர் அதை நிஷேதிக்கவேண்டுமென்றும், சிலர் ஆதரிக்கவேண்டியதென்றும் அபிப்பிராயம்கொண்டிருக்கிறார்கள். நான் எழுதுவது ஸங்கீதவிஷயமானதால், அதைப் பற்றிமட்டில் நர்த்தனவிஷயத்தைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கவேண்டியது உசிதமென்று எழுதுவேன்.

பாவம் (அதாவது அபிநயம்), ராகம் (அதாவது சுகம்தரும் ஸங்கீதம்), தாளம் (அதாவது கெத்து வாத்தியங்களாகிற மிருதங்கம்முதலியவைகளைக்கொண்டு காலப்பிரமாணம் மீறாமல் சப்தங்கள்செய்தல்), இந்தமூன்றும் சேர்ந்தால்தான் பூர்ணமான ஸங்கீதம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு அநுஸரணையாகவே, இந்தக்காலத்தில் பெயர்போன போதனாசக்தியுள்ள ப்ரோபல் (Froebel) என்னும் வித்வானுடைய முறையாகிய கிண்டர்கார்டன் முறையில்அபிநயப்பாட்டுக்கள் (Actionsongs) என்று சொல்லப்பட்டவிஷயம் மேலேகுறித்த நர்த்தனத்தின் ஆரம்பமாம். ஆனால், எந்த வேலைசெய்தாலும் அந்த வேலை பூர்ணமாயிருந்தால் எவ்வாறு உள்ளதென்று தெரிந்தால் ஒழிய அந்தவேலை சரியாய் விருத்திசெய்ய முடியாது. அதுபோலவே (என் அபிப்பிராயம் என்னவென்றால்) அபிநயப்பாட்டுக்கள் இருக்கவேண்டியமாதிரியும், அவைகளுக்கு ஏற்றபடி அபிநயமும் தெரியவேண்டுமென்றால் தாஸிகள்எவ்விதம் நர்த்தனம செய்கிறார்கள் என்றும் எந்த மாதிரி அபிநயங்கள் செய்கிறார்கள் என்றும் எவ்விதம் பாட்டுக்களையோ சுலோகங்களையோ பதங்களையோ வர்ணங்களையோ நர்த்தனத்துக்குச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள் என்றும் தெரிந்தால் ஒழிய ஸாத்தியமில்லை என்பதே.

பின்னும் இதை நிஷேதிக்கவேண்டியதற்குக்காரணம் என்னவென்று விசாரித்தால், ஒரு விஷயம் தெரிகிறது. ஜனங்கள் வித்தை விஷயமாகக் கவனித்தால் பாவம், ராகம், தாளம் மூன்றும் சேர்த்துப்பார்க்க வேண்டுமென்கிற குதூகலம் இருந்தால் அவர்கள் தாஸிகளிடத்தில்தான் பார்க்கவேண்டியதாயிருக்கிறது. ஆனால் அந்த தாஸிகளை ஜனங்களுடைய தெரியாத்தனத்தால் கெட்ட காரியத்துக்கும் உபயோகப்படுத்துவது வழக்கத்திலிருக்கிறது. புத்திமான்கள் அவர்களிடத்தில் கவனிக்கவேண்டிய வித்யாபாகத்தைக் கவனித்துவிட்டு விஷயாதிகளை தங்கள் மனதில் ஏற்றுக்கொள்ளாமலிருந்தால் அந்த வித்தை பரிசீலனம் செய்யப்பட்டு இன்னும் நல்லஸ்திதிக்குவரும் என்பது என் அபிப்பிராயம். மேலேசொன்னதை யெல்லாம் கொண்டு ஊகிக்கவேண்டியதென்னவென்றால் குற்றம் சாட்டப்படவேண்டியவர்கள் புத்தியீனத்தால் கெட்டுப்போகும் ஜனங்களேயொழிய தாஸிகள் அல்ல என்பதே.]

அடுத்தாற்போல், பாடுவோர்கள் அப்பியஸிக்கும் வர்ணத்தின்வகைஎன்னவென்றால் ஸேளகவர்ணமாம். இந்த வர்ணங்கள் பாடுவதற்குச் சுகமாய் இருக்கின்றன. பதவர்ணங்கள் ஆட்டத்துக்கு உதவுகின்றனபோல ஸேளகவர்ணங்கள் பாடுங்காலத்தில் கச்சேரிகளில் விசேஷமாய்க் கேட்கிறோம். சிலவேளைகளில் இந்த வர்ணங்களையும் ஆட்டத்துக்குச் சேர்க்கிறது உண்டு. இந்த வர்ணங்களில் அகாரம் கொஞ்சம் ஜாஸ்தியாக வரும், ஆனால் ராகபாவம் கொஞ்சம் பதவர்ணத்தில்விடக் குறைவாக இருக்கின்றது. இதற்கு உதாரணம் ஹம்ஸத்வநி ராகத்தில் உள்ள ‘‘ஜலஜாக்ஷ’’ என்னும் வர்ணமாம்.

மூன்றாம்வகை வர்ணம் என்னவென்றால், தாநவர்ணமாம். அவைகளில் அகாரம் ஜாஸ்தியாயிருப்பதுடன் ராகபாவம் எல்லாவர்ணங்களுள் குறைவு என்று பார்க்கிறோம். உதாரணமாக, ‘‘விரிபோணி’’ என்று பைரவி ராகத்தில் உள்ள வர்ணத்தைப் பார்த்துக்கொள்ளவும்.

பொதுவாய் நாம் கவனித்தவரையில் இந்த வர்ணங்கள் எல்லாம் தாளம்பிரதானமாய்வைத்தும் ராகம் பிரதானமல்லவென்றுதெரிகிறது. ஆகவே, இந்தவகை ஸாஹித்யத்தை ஸங்கீதத்தில் பிரியமுள்ளவர்கள் கச்சேரிகளில் வேறுவிதமான ஸாஹித்யங்களைப்போல் அவ்வளவு மிகுதியாய்ப் பாடுகிறதில்லை.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸங்கீதம் மிகுதியாய் ஜனங்கள் ஆவலுடன் கேட்கவேண்டுமென்று கூட்டங்கூடி, அப்படி சேர்ந்த இடத்தில் எவ்வகையான ஸங்கீதம் அவர்கள் அநுபவிக்கிறார்கள் என்றும், அந்த ஸங்கீதம் ஏன் அவ்விதமிருக்கவேண்டுமென்றும் எழுதித்தெரிவிப்பது யுக்தம் என்று நினைக்கிறேன்.

இந்தக்காலத்தில் பகவத்பக்தி விருத்தியாகும்பொருட்டென்று, அதையே தொழிலாக வைத்துக்கொண்டிருக்கும் வித்வான்களால் ஸங்கீதம் மிகுதியாய் ஜனங்களிடம் பரவுதற்கு இடமாயிருக்கிறது. அவர்களில் நிஜமான ஸங்கீத ஞாநமுள்ளவர் சிலரே. மற்ற பாகவதர்களோ, சிலர் ஸ்வரஞானமில்லாதவர்; சிலர் பிறரிடம்ஸங்கீதமே அப்பியஸிக்காமல் காதால் கச்சேரிகளில் கேட்டு ஞாநம் ஸம்பாதித்திருக்கிறவர்கள். சிலர் தாளமில்லாமலும், ராகபாவம்பொருந்தாமலும், ஸாஹித்யலக்ஷணம் பொருந்தாமலும் இருக்கிற பார்ஸிநாடகமெட்டுக்களை மூலமாகவைத்துக்கொண்டு தயார் செய்த பாட்டுக்களைப்பாடுவோர். (அதைப்பாடநாடகக்கொட்டகையிருக்கிறது). இன்னும் சிலர், எந்த பாஷாஞாநமுமில்லாமல் அந்தப்பாட்டுக்களை பிசகாகப் பாடிக்கொண்டு ஜனங்களை ஏமாற்றுவோர். ஆனால் நமது சாஸ்திரத்தின் அபிப்பிராயம் என்னவென்றால், சுருதிவாக்யங்களில் அபஸ்வரமாகச் சொல்லி அபராதம் ஏற்பட்டாலும் சரி, ஸமஸ்கிருத பதமானது சரியானபடி பிரயோகம் செய்யப்படாமல் பிசகு ஏற்பட்டாலும்சரி, மகாதோஷம் உண்டென்றும், நரகப்ராப்தி என்றும் முறையிடப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நமது பணம்பெற்ற பெரிய கனவான்கள் சிலர், தங்கள் ஆசாரத்தில் அநேக பிசகுகளை ஏற்படுத்திக்கொண்டு கெட்ட வழியில் பிரவேசித்துவிட்டதுபோல் இந்த ஸங்கீதவித்தையையும் கெடுப்பதற்கென்று ஏற்பட்ட விற்பத்தி, ஞாநம் முதலியவைகள் இல்லாத பாகவதர்களைக்கொண்டு காலக்ஷேபாதிகள் நடத்திக்கொண்டுவருகிறார்கள். நாமெல்லோரும்ஸங்

கீதவித்தை முன்னுக்கு வரவேணுமென்கிற பக்ஷத்தில் இந்த மாதிரியான பாகவதர்களை விலக்கவேண்டியது நமது முதற்கடமையாம்.

அடுத்தமாதிரி ஸாஹித்யம் என்னவென்றால் பொதுவாய் கிருதிகள் என்பவைகளே. கிருதிகளில் பொதுவாய் பல்லவி, அநுபல்லவி, சரணம் மூன்றும் தனித்தனியாய் உண்டு. அவை மூன்று வகைப்படும். கீர்த்தனம், பதம், ஜாவளி என்பவையாம்.

கீர்த்தனம் என்பது பகவத்விஷயமாயும்பதம் என்பது நாயக நாயகிபாவம் (தலைவன் தலைவி சம்பந்தம்) பொருந்தினதாயும், ஜாவளி என்பது சிற்றின்பப் பிரதானமாயும் எழுதப்பட்டுள்ளது.

கீர்த்தனம் எழுதுவோர் பக்தியுள்ளவர்களாய் பெரும்பாலும் நல்ல ஸங்கீத ஞானமும், பாஷாஞானமுமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இவர்களில் ஸ்ரீமான் தியாகராஜய்யரே மிகுந்த சாமர்த்தியமுள்ளவர்.

இவரைத்தவிர, பிரபலமானவர்கள் ச்யாமா சாஸ்திரிகளும், முத்துஸாமி தீக்ஷிதருமாம். ச்யாமா சாஸ்திரிகளுடைய கீர்த்தனங்கள் தாளம் விஷமமாயும் ஸங்கீத விஷயமாய் ராகபாவத்தில் தியாகய்யர் அவர்கள் கீர்த்தநத்துக்கு அடுத்தபடியாயும் இருக்கின்றன.

முத்துஸாமி தீக்ஷிதர் கீர்த்தநங்களோ கொஞ்சம் குறைவுள்ள ராகபாவமும் அக்ஷரம் நிறைந்ததாகவும், கீர்த்தநம் ஒவ்வொன்றும் மிகுந்த ஆவிருத்தம் உள்ளவைகளாகவும் இருக்கின்றன. மத்யமகால முடுகுகள் மிகுதியாயிருக்கின்றன.

பதம் என்பது கிருதிகளில் மற்றொரு வகையாம். பதம் என்றால் வார்த்தை என்று அர்த்தம். அதனால் நமக்குத் தெரிகிறதென்னவென்றால் பதம் என்கிற ஸாஹித்யம் பாடும் காலத்தில் ஒவ்வொரு வார்த்தையும் பிரித்துப் பிரித்து உச்சரிக்கப் படுவதனால் இந்தப் பெயரை அடைந்ததாகத் தோன்றுகிறது.

கிருதிகளுக்குள்ளாக, மத்தியம காலத்தைக் கவனித்தால் தியாகய்யர் அவர்கள் உருப்படிகள் முதல்தரமானவைகள் போல, ஸௌகம் வேண்டுமானால் நாம் பதம் பாடுவதில்தான் பார்க்கலாம். க்ஷேத்திரக்ஞர் பதம்தான் இந்த லக்ஷணம் பொருந்தி, ராகபாவம் நிறைந்து கேட்பவர் மனதைக் கவரக்கூடியதாயிருக்கிறது. சாதாரணமாய் எல்லாருக்கும் தெரியக் கூடியவும் அபூர்வம் இல்லாத ராகங்களில் உத்தமமான ஸாஹித்யங்கள் கேட்க வேண்டுமென்றால் க்ஷேத்ரக்ஞர் பதம்தான் என்பது யார்க்கும் தெரிந்ததே.

பதம் ஸாஹித்யம் செய்திருக்கிறவர்கள் க்ஷேத்ரக்ஞர் சபாபதிஅய்யர் இருவருமாம். ஆனால் வெகுநாளாக எல்லாரும் புகழப்பட்ட பதம் க்ஷேத்ரக்ஞருடையதுதான். பாஷை தெலுங்காயிருப்பதாலும், அந்த ஸாஹித்யங்களைப் பாடுவதில் மூச்சுப்பிடித்து ஸௌகமாய் பாடிப் போஷிக்க வேண்டியிருப்பதால், இக்காலத்தைய சாரீரமில்லாத வித்வான்கள் பாடினால் சுகப்படுகிறதில்லை. ஒரு பாடகனுக்கு சரியான ராகஞானம் உண்டென்பதற்குப் பரீக்ஷை அவனுக்கு குறைந்தபக்ஷம் சரியான படிக்கு பதினைந்து க்ஷேத்ரக்ஞ பதமாகிலும் பாடத் தெரியவேண்டும் என்பதே.

அடுத்தமாதிரி ஸாஹித்யங்கள் என்ன என்றால் ஜாவளிகளாம். இந்த ஸாஹித்யம் செய்யக் கூடியவர் விசேஷமாய் ராகஞானமில்லாதவர்களும் நல்ல ஸாஹித்ய ஞாநம் இல்லாதவர்களுமாயிருக்கிறார்கள். அதற்கு ருஜு ஒரு ராகத்திலாவது நல்ல ராகபாவம் பொருந்திய ஜாவளியே இல்லை. ஸாஹித்யம் செய்திருக்கிறவர்கள் சிலவேளைகளில்கணக்குக்குவிரோதமாக பல்லவி அநுபல்லவி சரணங்களை எழுதிவிடுகிறார்கள். இந்தவகை ஸாஹித்யங்கள் வழக்கத்தில் வந்திருப்பது நம்மிடத்தில் ஸங்கீதம் குறைந்து போனதற்கு ஒரு அடையாளமாம். பெரிய வித்வான்கள் இந்த ஸாஹித்யம் பாடி நான் கேட்டதில்லை. என்னுடைய அநுபோகத்தில் மஹாவைத்யநாதய்யராவது பட்டணம் சுப்பிரமணியய்யராவது கச்சேரிகளில் ஜாவளி பாடினதில்லை. தியாகய்யராவது, ச்யாமா சாஸ்திரிகளாவது, தீக்ஷிதராவது ஒரு ஜாவளியாவது ஸாஹித்யம் செய்யவில்லை. நமது பாட்டுக்கச்சேரிகளில் முக்கியமாய் விலக்கிவிடவேண்டிய விஷயங்களில் ஜாவளியொன்றும். மேலும் ஒரு ஜாவளியில் அர்த்தத்தைக்கவனித்தால் படித்தவர்கள் அங்கீகரிக்கத்தகாத அபிப்பிராயங்கள் உள்ளதாம். அதைப் பாட வேறு பேர்வழிகள் இருக்கிறார்கள். இதை எல்லாம் கவனித்து நாம் ஜாவளியை பாட்டுக்கச்சேரிகளிலிருந்து விலக்கிவிடுவதே யுக்தமாகும்.



கடைசியாக, நாம் கவனிக்கவேண்டிய விஷயம் கச்சேரிகளில் பல்லவி பாடும் வித்வான்கள் எவ்விதமான பல்லவி பாடுகிறார்கள் என்றும் எவ்விதமான பல்லவிதான் பாடவேண்டுமென்றும் சொல்லவேண்டியதேயாம்.

பல்லவி பாடுவது சரியாய்ப் பாடப்படாததினால் பாடகர்களது தெரியாத்தனம் பல்லவி பாடும் வழக்கத்துக்கே ஒரு அகௌரவத்தை ஏற்படுத்திவிட்டது. பல்லவி பாடுவது கீர்த்தநம் முதலியவை போலவே சரியானபடி குருமுகமாய்ச் சுட்டிக்காட்டி, கற்பிக்கப்பட்டு நல்வழிப் படுத்தப்பட்டால் ஒழிய சுகப்படுகிறதில்லை. நமது பாடகர்களில் பல்லவி பாடுவதில் பெயர் போனவர் மஹாவைத்யநாதய்யர்தான். அவரிடமிருந்து தயாரானவர்கள் இப்போதும் பல்லவி முதல்தரமாய்த்தான் பாடுகிறார்கள். சென்னப்பட்டணம் சபைகளில் பல்லவி சரியாய் பாடப்படுகிறதில்லை. ஆனதினால் அங்கே ஜனங்களின் அபிப்பிராயம் என்னவென்றால் கீர்த்தநம் முதலியவை பல்லவியைவிட மேலானதென்றும், சுகமாய்ப் பாடப்படுகிறதென்றும், பல்லவியே பாடவேண்டாமென்பதுமாம். வாஸ்தவம் என்னவென்றால், பல்லவி சரியாய்ப்பாடும் வித்வான்களிடத்தில் அவர்கள் கேட்க இடமில்லாமல் போயிருக்கிறது.

பல்லவி எடுக்கிறபோதே அது எந்த வார்த்தைகளோடு சேர்ந்திருக்கிறதோ அதுவும், மேலேஎடுப்போ கீழேஎடுப்போ அதுவும்அது சரியான எத்துக்கிடையா இல்லையா என்று நிர்ணயம் செய்துவிடும். எத்துக்கிடை (எத்தாகக் கிடைத்தது)பல்லவி பாடுவதற்கு என்று எடுக்கப்படும் வார்த்தையின்கூட்டமாம். எடுப்பு என்பது ஆரம்பத்தில் எந்த ஸ்வரத்தில் அந்தப்பல்லவியின் ஸங்கீதம் அமைந்திருக்கிறதோ அதுவாம். சரியானபடி எத்துக்கிடையை அமர்த்தி தயார்செய்வது ஒருபாடகன் யோக்கியதையை நன்றாய் வெளிப்படுத்தும். எப்போதும் மேலே எடுப்புள்ள பல்லவிகளே முதல்தரமானவைகள். அக்ஷரம் குறைவாயிருந்தால் பல்லவி தரமாயிருக்கும்.

சில வித்வான்கள் ஸௌககாலத்தில் பல்லவி பாடுகிறதாகப் பேர் வைத்துக்கொண்டு காலப்பிரமாணம் ஸங்கீதத்துக்குத் தகுந்தபடி இருக்கவேண்டும் என்கிற எண்ணத்தை விட்டு மனப்போக்குக்குத் தகுந்தபடி காலத்தை இழுத்துக்கொண்டு நல்ல ஞானஸ்தர்களுக்குக் கூட பல்லவியில் அருவருப்பு விழும்படி செய்து விடுகிறார்கள். தாங்களந்த எத்துக்கிடை எந்த எந்தக் காலத்தில் பாடினால் சுகமாயிருக்குமோ அதை தாங்களே உணர்ந்துவிட்டு பிறர் சுகப்பட வேண்டுமென்றும் எண்ணி, பல்லவிக்கு ஸங்கீதம் பிரதானமேயொழியக் காலப்பிரமாணம் அல்ல என்றும் எண்ணி, காலப்பிரமாணம் ஸங்கீதத்தின்சுகத்தைக்கெடுக்கக்கூடாதபடி அதற்குச் சேர்க்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு பாடகர்கள் பல்லவி பாடினால் பல்லவி மேலானதுதான் என்கிற அபிப்பிராயம் ஜனங்களுக்கு சீக்கிரத்தில் உண்டாய்விடும் என்பதில் சந்தேகமில்லை.

P. S. சுந்தரம் அய்யர், பி. ஏ., எல். டி.

# வைதிகமத ஞானம் II

## KNOWLEDGE OF VEDIC RELIGION

(Continued from page 421 Vol. V, No. 11)

நமது மதவிஷய ஞானம் இப்பொழுது வெறும் நுணிப்புல் மேய்ச்சலாக இருக்கின்றதென்றும், அப்படி இருப்பதற்குக் காரணம் ஷட்தர்சனப் படிப்பின்மையே என்றும்; அந்தக் குறையை ஒருவாறு நீக்க மஹான் ஸஹஜானந்தாள் செய்தமுயற்சிகள் இவ்வாறு தழைத்துவருகின்றன என்றும், முன்னர், எடுத்துக் காட்டியாகிவிட்டது. இங்கு அந்த ஷட்தர்சனங்களைப்பற்றி சில பொது விஷயங்களை எடுத்துக் காட்டுவோம்.

ஷட்தர்சனங்கள் என்று கூறப்படும் வைதிக மதசாஸ்திரங்கள் ஆறும் பின்வரும் அட்டவணையிலிருந்து இன்னவை என்பது வெளியாகும்.

நியாயம்: கௌதமமுனி செய்தது. 530 ஸூத்திரங்களடங்கியது—வைசேஷிகம்: கணாதமுனி 570—ஸாங்கியம்: கபிலமுனி 527—யோகம்: பதஞ்சலிமுனி 195—மீமாம்ஸம்: ஜைமினிமுனி 2758—வேதாந்தம்: வியாஸமுனி 555- ஆ. ஸூத்ரங்கள் 5135.

இந்த ஸூத்ரங்களுள் நமது வைதிக விஷயங்கள் எல்லாம் முற்றிலும் அடங்கிவிட்டன. இவைகளைவிட்டு நேரிட வேதத்தை அணுகவே

முடியாது. இவைகள் பொதுவாகமதகிரந்தங்களை உணருவதற்கு வேண்டிய உதவிகளான மூன்று விஷயங்களாகப் பிரியும். தர்க்கம், விசாரம், பரவிஷய உணர்ச்சி என்பனவே. வைதிகமத விஷயத்தில் தர்க்கம் நியாயவைசேஷிகமாகவும், விசாரம் ஸாங்கிய யோகமாகவும்; பரவிஷய உணர்ச்சி மீமாம்ஸ வேதாந்தமாகவும் இவ்விருவகைப் பட்டிருக்கின்றன. இம்மூன்றுவித உதவிகள் இல்லாமல் வேதங்களால் நேரிட நாம் மோக்ஷபயனை அடையமுடியாது.

இக்காலத்திய ஒழுங்கில் நேரிட அத்வைத வேதாந்தமாகிய வேதாந்ததர்சனம் படிப்பதே பழக்கமாகிவிட்டது. இதனால்தான் முற்கூறிய குறைகளும் வெறும் வாசாஞானமும் மாத்திரம் நம்முள் மிஞ்சிவிட்டன. இந்த ஒழுங்கை இந்த வாசாஞானத்தைக்கொண்டே மாற்றுவதற்கு வேண்டிய காரணங்கள் கூறுவோம்.

வேதாந்தசாஸ்திரம் படித்து ஈடேறுவதற்கு நான்குஸாதனங்கள் வேண்டும். அவையாவன: விவேகம், வைராக்கியம், குணஸம்பத்து, மோக்ஷஇச்சை: இவையின்றி வேதாந்தம்படித்தால் மனதில் பதியாது: குதர்க்கநடத்தைக்கும் கொண்டு செலுத்திவிடும். மேலும் இந்த ஸாதனங்கள் வந்து அமைந்தபிறகு மோக்ஷஸ்வரூபத்தை உள்ளபடி காட்டும் வேதத்தின் ஞானகாண்ட பாகத்தை ஆதாரமாகக் கொண்டு மோக்ஷத்தைப்பற்றி கல்விகேள்வியும், அதைப் பற்றிய ஆராய்ச்சியும், இவைகளால் தேறியபடி தெளிந்து நிலைத்தலுமாகிய, சிரவண, மனன நிதித்யாஸனங்கள் வேண்டும். இப்படி இருந்தால்தான் மோக்ஷஇச்சை உள்ளபடி திடப்பட்டு நமது சுத்தமனத்தினிடம் ஏற்படும் அகண்டாகார விருத்தியால் அழிந்து மோக்ஷம் கைகூடும். இதுவரை மோக்ஷஇச்சை நீங்காது நிற்கும். இது எக்கால வேதாந்திகளும் அங்கீகரிக்கக்கூடிய விஷயமே.

நமது பெரியோர்களால் ஷட்தர்சனங்களும் இந்த விஷயங்கள் உள்ளபடி ஏற்படுவதற்காக இயற்றப்பட்டன. இவைகளாலன்றி வேறு எந்த விதத்தாலும் இவை உள்ளபடி ஏற்படவே காரணமில்லை. ஆதலால்தான் தத்கால ஸூக்ஷ்ம புத்திகளுக்கும் வேதாந்தம் வெறும் வாசாகைங்கரியமாகவே நின்று விட்டதற்குக் காரணம். முன்னர் எடுத்துக்காட்டிய சிரவண மனன நிதித்யாஸனங்களும், முறையே விவேக, வைராக்ய குணஸம்பத்துக்களுடன் ஸம்பந்தப்பட்டவை. பின்னவை வெளிக்குறிகள், முன்னவை அவைகளுக்கு நேரான உள் நிலைமைகள். ஷட்தர்சனங்களுள்; நியாய, வைசேஷிக,ஸாங்க்யம் மனனம் வைராக்யம்இவைகளை கிளப்புவதற்கும், யோகம் நிதித்யாஸன குணஸம்பத்துகளைக் கிளப்புவதற்கும், நியாய மீமாம்ஸங்கள் சிரவண, விவேகங்களை உண்டாக்குவதற்கும் முக்யம். இவைகளுக்கு எல்லாம் த்வைத தர்சனங்கள் என்று பெயர். இவைகளில் ஒருவன் மனம் தேறிவருமாயின் நான்கு ஸாதனங்களில் முதல் மூன்றும் பலத்துவர சிரவணமனன நிதித்யாஸன வழிகளும் வேரூன்றிவரும் வைதிக த்வைதவிஷயத்தில். இதனால் மோக்ஷ இச்சை உண்டாகி முடிவின் ஸ்வரூபஞானமின்றி விடுபடவேண்டிய பந்தத்தின் நுட்பஞானத்துடன் ஒருவாறு பலப்பட்டுக்கொண்டு வரும். இப்படிவரும் தன்மை உடைப்பவனே வேதாந்த தர்சனமாகிய வைதிக அத்வைதம் பயிற்சிசெய்ய அதிகாரி. இதைக் கற்கத்தொடங்கினால் சிரவணமனன நிதித்யாஸனாதிகள் மோக்ஷ ஸ்வரூபவிஷயத்தில் உபயோகப்பட்டு, மோக்ஷ இச்சை முடிவின் சிறப்பால் முதிர்ந்துகொண்டேவரும். மேல் ஈசன் அனுக்ரஹத்தால்முடிவுகைகூடி மோக்ஷ இச்சையும் ஒய்ந்து விடும்.

இவ்வாறு வைதிகமதத்தை உணர்ந்து அனுபவிக்க ஏற்பட்டவழியை கைசோரவிட்டு, புதிய வழிகளான நேர்வேதாந்தப் பயிற்சிகளையே நாம் கைக்கொண்டு விட்டது எவ்வளவு பரிதாபமான நிலை! இக்காலத்திய நிலை குலைந்த வர்ணாச்ரமதர்மங்களின் நிலை, கர்மானுஷ்டானக்குலைவு, ஈச்வரபக்தி இன்மை, பாபபுண்யாதிகளில் நம்பிக்கையின்மை, வேதாந்தப் பேச்சு, வயிற்றின்பச் சிற்றின்பப்பிடிப்பு, எல்லாம் இந்த வழிதப்பி வேதங்களைப்பிடிக்க முயன்ற குற்றத்தால் ஏற்பட்டகுழப்பங்களே. இங்கு வெளிநாட்டார் நம் விஷயங்களைப்பற்றிக் குற்றங்கூறுவதைக்கண்டு பரிதவிக்கவந்ததல்ல. நம்மவருள்ளேயே முற்கூறிய துர்நிலைகள் தழைத்து ஓங்கிவருகிறதே அதுதான் நமது பரிதாபத்திற்குக் காரணம். இந்நிலை மாறி நமது முன்னிலை வரவேண்டுமாகில் ஷட்தர்சனங்களை வாசித்துணரவும், அந்த ஞானம்



# தசை சமூகங்களின் வேலை

## MUSCLES AND THEIR FUNCTION

தசை சமூகங்களின் வேலை:—ஸ்பஞ் என்று இங்கிலீஷ்காரர் வழங்கும் கடற்காளானைப் பார்த்திருப்பீர்களே! அதைக் கைகளால் அமுக்கும் பட்சத்தில், அமுங்கி கையைவிட்டுவிட்டால் முன்போலவாகிவிடும். இவ்விதம் சில வஸ்துக்களிருக்கின்றன. இந்திய ரப்பர் என்ற வஸ்துவை அமுக்குவதில் ஒன்றும் பிரயோஜனமில்லை. அதை இருபுறங்களிலும்பற்றி இழுப்போமானால், அது நீளும். இழுப்பதை நிறுத்திவிட்டால் மறுபடி பூர்வஸ்திதிக்கு வந்துவிடும். இப்படிச் சில வஸ்துக்களிருக்கின்றன. இவ்விதமாய் வெளியிலிருந்து பிரயோகிக்கப்படும் பலத்தால் தங்கள் உருவம் மாறி அப்பலம் இல்லாமற் போனவுடனே தம் ஸ்வயரூபத்தைத் திரும்பப்பெறும் வஸ்துக்களுக்கு எலாஸ்டிக் (elastic) வஸ்துக்கள் என்றும், இந்த குணத்திற்கு எலாஸ்டிஸிடி (elasticity) * என்றும் பெயரிட்டிருக்கின்றார்கள். இவ்விரண்டுவகை வஸ்துக்களிலொன்றனுள்ளிருக்கும் எலாஸ்டிஸிடி என்னும்சக்தியை வெளிப்படுத்துவதற்கு அவ் வஸ்துவை அமுக்க வேண்டியிருக்கிறது. மற்றொருவகையில் அவைகளை விஸ்தரித்து இழுக்கவேண்டியிருக்கிறது.

இவ்விரண்டினுள், தசைகளின் எலாஸ்டிஸிடி ஸ்பஞ்சினுடைய எலாஸ்டிஸிடி போன்றதேயன்றி இந்திய ரப்பரின் எலாஸ்டிஸிடியைப் போன்றதன்று. அதாவது தசைகள் அமுக்கப்பட்டால் சுருங்குவதாகவும், அவைகளின் வழிக்கு வாராதிருந்தால் ஸ்வபாவமாயிருப்பதாகவுமிருக்கின்றன.

இப்பொழுது இரண்டு கட்டைகளை எடுத்துக்கொண்டு அவைகளைக் கீல் பொருத்தாக பொருத்திக்கொள்வோம். கீலிருக்கும் ஓரத்திற்கு வேறொரு ஓரத்தில் ஒரு துவாரமாக, இரண்டு துவாரங்கள் இரண்டு கட்டைகளிலும் செய்வோம். பிறகு அத்துவாரங்களின் வழியாக ஒரு கயிற்றைச்செலுத்தி இருபுறங்களிலும் முடிச்சிட்டுஉருவாமலிருக்கும்படிசெய்து கொள்ளுவோம். அவ்விரு கட்டைகளும் கயிறுமாக ஒரு நேர்க்கோண முக்கோணமாகும்படி வைத்துக்கொள்ளுவோம். கயிறு மட்டும் கொஞ்சம் பருமனாகவும் நன்றாய் வெயிலில் காய்ந்ததாகவுமிருக்கட்டும். இதோ இந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீரை ஊற்றிக் கயிற்றை நனைக்கிறேன்.

உஷ்ணப்படுத்தப்பட்ட வஸ்துக்கள் தம் சுபாவப் பருமனிலு மதிகமாகப் பருப்பதும் ஈரத்தினால் சுருங்குவதும் உங்களுக்கு முன்னமேயே தெரியுமல்லவா? ஆதலால் இப்பொழுது தண்ணீரை ஊற்றினதும் அக்கயிற்றின் நீளமானது குறைவதற்காரம்பிக்கும். அப்படியேநீளம் குறைவதால், இரண்டு கட்டைகளும் ஒன்றுக்கொன்று சமீபத்தில் கொண்டுவரப்பட்டு, நேர்க்கோணமானது குறுங்கோணமாவதைக்

* Elasticity போன்ற இங்கிலீஷ் குணவாசகங்களை தர்ஜமா செய்வதில் கிடைக்கப்பெறும் பதங்கள் அந்த இங்கிலீஷ் பதங்களைவிட கடினமாயிருப்பதோடு, அவைகளைவிடத் தெளிவிலும் குறைவாயிருப்பதால், ஸுலபமான ப்ரஸக்திகள் தவிர மற்ற விடங்களில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப் படுத்தியிருக்கிறேன். ஆசிரியர்.

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

பலருக்கும் எட்டவும் வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இம்முயற்சி ஈச்வரகிருபையால் நிகழாமலிருக்கவில்லை. முன்னர் எடுத்துக்காட்டிய ஸஹஜானந்தர் கருத்துக்கிணங்கிய பலரால் ஷட்தர்சனவிளக்கம் என்ற ஒரு புத்தகமும், நமது வைதிகமத விளக்கம் என்ற பத்திரிகையும் வெளிவரவேண்டும் என்ற ஆவல் காட்டப்பட்டிருக்கிறது. ஈச்வரகிருபையால் இவை வெளிவருமாயின் நமது வைதிகமத விஷயத்தில் நமக்கு ஏற்பட்டு நம்மைப் படுகுழியில்தள்ளியிருக்கும் ஆபாஸ வேதாந்த ஞானம் தெளிய நமக்கு நல்ல நிலை எளிதில் கைகூடிவிடும்.

இதுவரையில் வாசித்து வந்தவர்களுக்கு இரண்டு சங்கைகள் உண்டாகலாம். அவையாவன: (1) இவ்வளவு மேன்மை பொருந்திய ஷட்தர்சன ஞானம் ஏன் நம்மிடமிருந்து இப்பொழுது முற்றிலும் நழுவிவிட்டது? (2) இந்த ஷட்தர்சனங்களில் காட்டப்படும் வேதவிளக்கங்கள் யாவை? என்பவைகளே. இவைகளை முறையே பின்வரும் ஸஞ்சிகைகளில் நீக்கப் புகுவோம்.

காணலாம். ஆனால் அக்கட்டைகளிலொன்றை அதாவது * லம்பமாக நிற்கும் கட்டையை அசையாமல் அந்த ஸ்தானத்திலேயே இருக்கும்படிச் செய்துவிடுவோமானால், மற்றொரு கட்டையானது பூமிக்கு ‡ ஸமாந்திரமாகவில்லமல் தூக்கப்படும்.

இதேமாதிரிதான் நம்முடைய புஜங்களில் நடப்பதும். நம்முடைய கையை நீட்டி மறுபடி முன்கையை மேற்கையோடு சேர்க்கப் பிரயத்தனம் பண்ணும்பொழுது நடப்பதென்னவென்றால், நிலையாய் தோள் பட்டை எலும்பில் பொருத்தப்பட்டிருக்கிற தசையானது ஏதோவொரு காரணத்தினால் சுருங்க வாரம்பிக்கிறது. அப்பொழுது அச்சுருக்கத்தால் முழங்கை எலும்பானது மேற்கை எலும்பிற்கு ஸமீபமாக இழுக்கப்படுகிறது. அப்பொழுது முன் கை தூக்கப்படுகிறது.

இப்படியேதான் நம்முடைய சரீரத்தில் நடக்கும் ஸகல சலனங்களும் நடந்துவருகின்றன. எந்தெந்த இடங்களில் சலனங்கள் நடக்கவேண்டிய தவசியமோ, அவ்வவ்விடங்களிலெல்லாம் இவ்விதமாக தசைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நினைத்தமாத்திரத்தில் நாம் நினைத்தமாதிரியான சலனமுண்டாகும்படி சரீரத்திற்குள் சில ஏற்பாடுகள் இருக்கின்றன. அந்த ஏற்பாடுகளை யொத்திட இத்தசைகள் சுருங்குவதும் இவை சுருங்குவதால் சலனங்கள் ஏற்படுவதுந்தான் சரீரக்கூற்றின் ரகஸ்யம்.

லம்பம்=vertical ‡ ஸமாந்திரம்=horizontal

**நல்லபாம்புக் கடிக்கு மருந்து:**—நல்ல பாம்பால் கடிக்கப்பட்டவர் உடனே எருக்கிலைக்கொழுந்தையும், அதில் நான்கிலொரு பங்கு புகையிலையையும் சேர்த்தரைத்து ஒரு பெரிய நெல்லிக்காயளவு சாப்பிட்டால், விஷம் இறங்கிவிடுமாம். பல்லுக்கிட்டிப போனவர்க்கும் இம்மருந்து பயன் செய்திருக்கின்றதாம், மற்றப்பாம்புகளின் விஷமும் இம்மருந்தால் இறங்கிவிடுகின்றதாம்.

**பூச்சிக்கடி நிவாரணமருந்து:** —நதிகளிலாவது தடாகங்களிலாவது ஓரங்களில் அலையால் ஒதுங்கியுள்ள மெல்லிய மணலைக் கட்டித் தயிரைப்போல அரைத்து சாதாரண பூச்சிக்கடித்தழும்புகளின் மீது 5,6, நாள் நன்றாகத் தேய்த்தால் அவற்றிலுள்ள துர்நீர்கள் எளிதாக வெளியே வந்துவிடுமாம்; பிறகு அவற்றின்மீது சிறிது ஈயவெள்ளையையும், கர்பூரத்தையுங் கலந்து, தேங்காயெண்ணெய்விட்டுக் குழைத்து காலையும் மாலையும் தேய்த்து ரணத்தைச்சுத்தமாகக் கழுவிவந்தால் ஷேரோகம் நிவர்த்தியாய்விடுமாம்.

# மஹாபாரதக் கதைகள்

## STORIES FROM MAHABHARATA

## 2. சிபிச்சக்கரவர்த்தி கதை

சிபிச்சக்கரவர்த்தி யமுனா நதிக்கரையில் யாகம் செய்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் ஒருநாள் பருந்தொன்று ஒரு புறாவைத் துரத்திவந்தது. புறா பயந்து யாகம் செய்துகொண்டிருந்த சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் வந்து சரணம் அடைந்தது. அப்பொழுது பருந்து சொல்லிற்று:— “அரசர்களெல்லோரும் தங்களை மிகவும் சிரேஷ்டமான தர்மாத்மாவென்று சொல்கிறார்களே. அப்படிப்பட்ட நீர் இவ்விதம் தர்மவிரோதமான செய்கையை என் செய்கிறீர்? பசியினால் வருந்தும் எனக்கு ஈசுவரனால் நியமிக்கப் பட்டிருக்கிற ஆகாரத்தை தர்மத்தில் ஆசைகொண்டு, ஆனால் தர்மமுறையைத் தவறி, நீர் அபஹரிப்பது நியாயமன்று.”

ராஜா:—இந்தப் புறா உன்னைக் கண்டு பயந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி என்னிடம் சரணமடைந்திருக்கிறது. இவ்விதம் சரணமடைந்திருக்கிற புறாவுக்கு நான் அபயப்பிரதானம் கொடாமலிருப்பதில் என்ன உத்தமதர்மம் இருக்கிறதென்று நீ நினைக்கிறாய்? இந்தப் புறா பயத்தினால் மதிகலங்கி நடுநடுங்கிக்கொண்டு உயிரைக் காப்பாற்றிக்கொள்ள என்னிடம் வந்திருக்கிறது. அதைக் காப்பாற்றாமல் விட்டு விடுவது மிகவும் நிந்திக்கத் தகுந்ததல்லவே?

பருந்து:—ஸகல ஜந்துக்களும் ஆகாரத்தினால் தான் உண்டாகிவளர்ந்து ஜீவித்து வருகின்றன. போஜனமில்லாமல் சொல்பகாலம் கூட இருக்க முடியாது. எனக்குக்கிடைத்த ஆகாரத்தை இவ்விதம் இழந்ததினால் என்னுடைய பிராணன்கள் சரீரத்தை விட்டு விலகி மரித்துப்போகிற ஸ்திதியிலிருக்கின்றன. நான் மரித்துப் போனால் என்னுடைய பிள்ளை குட்டிகளும் பெண்ஜாதியும் காப்பாற்றுவாரில்லாமல் நசித்துப் போவார்கள். இந்தப் புறா ஆகிய ஒரு பிராணியை காப்பாற்ற வேண்டி பல பிராணிகள் நசிப்பதற்கு நீர் ஹேதுவாயிருக்கிறீர். பலர்களுக்கு இடஞ்சலாயிருக்கும் ஒரு தர்மமானது தர்மமல்ல. அது தான் அதர்மமாம். ஒருவருக்கும்



ஹிம்ஸை உண்டாக்காமல் இருக்கிறதன்றோ தர்மம்? சிலர்களுக்கு இடஞ்சலையும் சிலர்களுக்கு நன்மையையும் விளைவிக்கக்கூடிய விஷயங்களில் எப்படிச் செய்தால் இடைஞ்சல் குறைவாயும் நன்மை அதிகமாயும் இருக்குமோ அவ்விதம் செய்யவேண்டியதுதான் தர்மம்.

ராஜா:—பக்ஷியே! நீ வெகு அழகாய்ப் பேசுகிறாய். நீ பக்ஷிகளுக்கு அரசனான கருடனோ? தர்மங்களையெல்லாம் நீ தெரிந்துகொண்டு பேசுகிறாயோ? நீ பேசுவது வெகு விசித்ரமாயிருக்கிறது. நீ பேசுவதைப்பார்த்தால் உனக்குத் தெரியாததொன்றுமில்லைபோல் தோன்றுகிறது. அப்படிக்கிருந்தும்சரணமடைந்தவனைக்கைவிடுவது தர்மம் தானென்று நீ எப்படி நினைக்கிறாய்? உன்னுடைய இந்தப் பிரயத்னம் ஆகாரத்திற்குத்தானே. இதைப்பார்க்கிலும் ஆகாரம் அதிகமாய் வேறுவிதமாய் கிடைக்கக் கூடியதாக இருக்கிறதே. மாடு, பன்றி, மான், எருமை இவைகளில் எது உனக்கு இஷ்டமோ அதை அவ்விதம் ஆகாரம் செய்து கொள்ளலாமே.

பருந்து:—நான் பன்றி, மாடு, மான் இவைகளில் ஒன்றையும்சாப்பிடுகிறதில்லை. ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஆகாரத்தைவிட்டுவிட்டு மற்றது எனக்கு ஏன்? பருந்துகள் புறாவைப் பக்ஷிக்கின்றன என்பது ஸனாதனமாக ஏற்பட்ட மொழி அல்லவோ? ஸாரத்தை விட்டுவிட்டுச் சக்கையைக் கடிப்பதுண்டோ?

ராஜா:—என்னுடைய விசாலமான ராஜ்யத்தை அதிலுள்ள ஸகலஸம்பத்துகளுடனும் உனக்குக் கொடுத்துவிடுகிறேன். அல்லது நீ வேறு என்னென்ன விரும்பினாலும் அவையெல்லாம் தருகிறேன். இந்தச் சரணமடைந்த புறாவைமட்டும் நீ விரும்பாதே. அதைக் கொல்லாமல் மற்று எது சொன்னாலும் அவ்விதம் செய்கிறேன். புறாவைமட்டும் உன்கையில் கொடேன்.

பருந்து:—புறாவினிடத்தில் உமக்கு ஸ்னேகம் இருப்பது மெய்யானால் புறாவினளவு உம்முடைய தேகத்தின் மாம்ஸத்தை அறுத்து நிறுத்து எனக்கு நீர் கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் எனக்குத் திருப்தியாகும்.

ராஜா:—நீ இவ்விதம் சொல்வதே எனக்குப் பெரிய அனுக்ரஹம். நீ விரும்புகிறபடியே என் மாம்ஸத்தை அறுத்து நிறுத்துத் தருகிறேன்.

இவ்விதம் சொல்லிவிட்டு பரமதார்மீகனான சிபிச்சக்ரவர்த்தி தன்னுடைய மாம்ஸத்தை கொஞ்சம் அறுத்து புறாவோடு நிறுத்துப் பார்த்தார்; குறைவாய் இருந்தது. பின்னுங் கொஞ்சம் மாம்ஸம் அறுத்து நிறுத்தார். அப்பொழுதும் குறைவாய் இருந்தது. இவ்வாறு பலதடவை மேன்மேலும் தனது மாம்ஸத்தை அறுத்துச் சேர்த்து நிறுத்தும், அந்தச் சிறிய புறாவின் நிறைக்குக் குறைவாகவே இருந்தது. அதன் பிறகு தன்னையே முழுவதும் பருந்துக்கு இரையாக கொடுத்துவிடுகிற தீர்மானத்துடன் தானே நிறைத்தட்டில் புறாவிற்கு ஸமமாக ஏறிநின்றார். இதைப்பார்த்தவுடன் பருந்து பின்வருமாறு சொல்லிற்று:—

“தர்மத்தை உணர்ந்த அரசனே! நான் இந்திரன்; உன்னைச்சரணமாக அடைந்த இந்த புறா அக்னிபகவான். நாங்கள் இருவரும் தர்ம விஷயத்தில் உன்னுடைய மனோநிலையைப் பரீக்ஷிப்பதற்காக உம்முடைய யக்ஞசாலைக்கு இவ்விதம் வந்தோம். சரணமடைந்த ஸ்வல்பப் பிராணியைக் காப்பாற்றுவதற்காக உம்முடைய மாம்ஸத்தை இவ்வாறு நீர் அறுத்துக்கொடுத்ததினால் உமக்கு இந்தலோகத்தில் சாச்வதமான கீர்த்தியும் பரலோகத்தில் உத்தமமானகதியும் கிடைக்கும்.” பருந்து இவ்வாறுசொன்னவுடன், பருந்தும் புறாவும் மறைந்துவிட்டன.

**கௌதம புத்த மகா முனி பிறந்த இடம்:**—இவர் கபிலவஸ்துவில் பிறந்ததாக இப்போது சொல்லப்படுகின்றது. அது உண்மை யல்லவென்றும் கபிலவஸ்துக்கடுத்தாப்போல் 15 மைல் தூரத்திலிருக்கும் லம்பினி என்ற கிராமத்தில் சால விருக்ஷங்களடங்கிய சோலையில் ஒருமரத்தடியில் ஜனனமானதென்றும் பண்டிட் கங்கப்ரஸாத் வெளியிட்டிருக்கிறார். அந்த லம்பினி கிராமத்தில் கௌதமமுனி பிறந்த ஸ்தலத்தில் அசோக சக்ரவர்த்தி ஒரு கல் ஸ்தம்பம் நட்டு அந்த ஸ்தம்பத்தில் புத்த மகாமுனி இங்குபிறந்தாரென்று எழுதிவைத்தார். பிறகு இந்தஸ்தம்பமும் அவர் பிறந்த இடமும் காலவளவில் அழிந்துபோயின. சில வருஷங்களுக்கு முன்னால் ஒரு ஹிந்து ஸாது அந்த இடத்தில் ஒரு சிறிய காளி கோவில் கட்ட அந்தக் கோவிலில் இப்போது பல ஹிந்துக்கள் காளி பூஜை செய்கிறார்கள். சுமார் 20 வருஷத்துக்கு முன்னால் ஒரு ஐரோப்பிய ஆர்க்கியாலஜிஸ்ட் தற்செயலாய் அந்த இடத்தை வெட்டிப் பரிசோதிக்க அந்த ஸ்தம்பமும் அதில் வெட்டெழுத்துகளும் வெளியாயின. இந்த லம்பினி கிராமம் நேப்பாள சமஸ்தானத்து எல்லைக்குள்ளிருக்கின்றது.

# ஐரோப்பிய யுத்தம்
## THE EUROPEAN WAR

சென்ற இரண்டு வாரங்களாக உலகமுழுதும் யுத்தமேகங்கவிந்து, ஜனங்கள் மனதைக் குழப்பி, எங்கு மிருள் பரப்பிக்கொண்டிருந்தது. ஸமாதானக் காற்று பலமாகவீசி அம்மேகத்தைக் கலைத்து உலகத்திற்குப் போர்மழையால் சேதம் வாராதிருக்கவும் முடிந்திருக்கலாம். ஆனால் காற்று கலைந்து ஐரோப்பா எங்கும் போரிருள் மூடி நெருப்புமழைபெய்ய காலத்தின் கொடுமையாக முடிந்து விட்டது. வரும்வரும் என்று எல்லாரும் பயந்தது கடைசியாகத் தடுக்க முடியாமல் வந்துவிட்டது.

இப்பெருங்குழப்பத்திற்குக் காரணம் முடிவில் மதுபிந்து கலகம்போலக் காணும். ஆஸ்டிரியா என்பது ஐரோப்பா கண்டத்தின் தென்பாகத்தில் இருக்கும் ஒரு நாடு. அதன் கிழக்கில் ஸெர்வியா என்றொரு சிறு நாடு உண்டு. இச்செர்வியாநாட்டிலிருந்தவனொருவன் ஆஸ்ட்ரியா நாட்டு இளவரசனையும் அவர் மனைவியையுஞ் சில நாள்களுக்கு முன்னால் சுட்டுக்கொன்றான். அவ்வாறு அவன்செய்ததுஸெர்வியா தேசத்தவர் ஆஸ்ட்ரியா நாட்டாரிடம் வைத்திருந்த பகையாலென்று ஆஸ்ட்ரியா ராஜாங்கத்தினபிப்ராயம். தமதரசன் மகனையிழந்ததுக்கத்தால் பொறுக்க முடியாத கோபங்கொண்ட ஆஸ்ட்ரியருடைய மனக்கொதிப்பால்




அந்நாட்டு ராஜாங்கம் ஸெர்வியா கவர்ன்மெண்டாரை மேற்படி ஸம்பவத்தைப்பற்றி ஸமாதானம் சொல்லும்படி ஆட்சேபித்தது. ஆனால் உண்மையில் மேற்படி ஸம்பவத்தைக் காரணமாகக் கொண்டு ஸெர்வியாவை அடக்கவேண்டுமென்பதே ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டின் எண்ணம். இவ்வெண்ணத்துடன் ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டு வெகு கடுமையான நிருபமொன்றெழுதியது. அதற்குத்ருப்திகாமானபதில் கிடைக்காவிடில் யுத்தத்திற்குத் தயாராயிருப்பதாகவும் தெரிவித்தது. அந்நிருபத்தின்படி நடப்பது ஸெர்வியாவிற்குப் பெருங் கௌரவக் குறைவென்று எல்லாராலும் கருதப்படுகின்றது. "ஸெர்வியாவில் ஆஸ்ட்ரிய இளவரசைக் கொன்றவனைத் தண்டித்திருக்கவேண்டும்; அப்படிப்பட்ட குற்றங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தண்டனைகளை வெளிப்படுத்தவேண்டும்; ஸெர்வியாவில் ஆஸ்ட்ரியாவுக்கு விரோதமான போதனை செய்யக்கூடாது; அவ்வாறு செய்தால் நிறுத்திவிடவேண்டும்; ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டுக்கு ஆகாதவரையெல்லாம், அல்லது ஆஸ்ட்ரியாவால் விரோதிகளாக சொல்லப்படுபவர்களை எல்லாம் ராஜ ஸேவையிலிருந்து நீக்கவேண்டியது; முன் நடந்த ராஜகொலையில் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டும்;—இவ்வாறு செய்யாவிடில் இதுவே கடைசிக்கடிதம்; இதற்குமேல் நடப்பது பேச்சாலல்ல; வ்யவஹாரங்கள் போரால்தான் நடத்தவேண்டியது" இவ்வாறு ஒரு கடிதமிருந்தால் கௌரவத்திற்காகப் பாடுபடும்ராஜாங்கம் எதுதான் மதித்துப் பதில் கொடுக்கும்? ஆயினும் ஸெர்வியாகவர்ன்மெண்டார் நியாயப்படி ஸமாதானம் சொன்னார்கள். 'வேண்டா மாமியாருக்குக் கைபட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம்' என்றாற்போல யுத்தத்திற்குத் தயாராயிருந்த ஆஸ்ட்ரியாவிற்கு இந்த ஸமாதானம் திருப்திகாமாயில்லை. போர் இரண்டு தேசங்களுக்கும் மூண்டுவிட்டது.

நிற்க, ருஷியா தேசத்திற்கு ஸெர்வியாஜனங்களிடம் தம் ஜாதி அபிமானத்தால் எப்போதும் அநுதாபம் உண்டு. மேலும் ஸெர்வியா ஒரு சிற்றரசாகையால் ஒரு வல்லரசு அதனுடன் சண்டைசெய்து அழித்துவிட ருஷியா சும்மா பார்த்திராது. இவ்விதமாகச் சண்டையைப்பற்றிய நிருபங்கள் நடப்பதைக்கண்ட ருஷியாவிற்கு மனக்கொதிப்பு உண்டாயிற்று. ஆகையால் சரியான ஸாவகாசம் கொடுத்தால் ஆஸ்ட்ரியா, ஸெர்வியா இவைகளுக்குள்ள வ்யவஹாரங்களை வல்லரசுகள் எல்லாம் கூடி மத்யஸ்தம் செய்துவிடலாமென்றும், அவ்வாறு இடம் கொடுக்காவிடில் தாம் ஸெர்வியாவைக் கைவிடாமல் பின்தாங்குவதாகவும் ருஷியாவின் அபிப்ராயமாக வெளிவந்தது. இவ்வாறு இருக்கும் நிலைமையைக் கண்டு, 'இரண்டுபேர் சண்டையிட்டால் அவர்களை தீர்த்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல் மூன்றாவதுகவர்ன்மெண்டு பிரவேசித்தால் அதைபபார்த்திரோம்' என்று ஜெர்மெனி நாட்டார் வெளியிட்டார்கள். இதேஸமயத்தில் லண்டன் நகரத்தில் அன்னிய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே ஸமாதான உடன்படிக்கைகள் ஏற்படுத்த ப்ரயத்னப்பட்டார். இதற்குள் ஆஸ்ட்ரியா ஸெர்வியாவின்மேல் படையெடுக்க ஆரம்பித்துவிட்டது. ருஷியாவிலும் ஜெர்மனியிலும் யுத்தம்செய்வதென்று தீர்மானம் செய்யாவிட்டாலும் தம்சேனையெல்லாம் ஒன்று சேர்த்துப் போருக்காகத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். இங்கிலாந்தில் அன்ய மந்திரியால் ஏற்படுத்தப்பட்ட ஸமாதான மீட்டிங்கிற்கு ஜெர்மனி தேசம் மாத்திரம் தமது பிரதிநிதியை அனுப்பவில்லை. அவர்கள் அப்படி செய்ததற்குக் காரணம் சமாதான ஏற்பாடு நிறைவேற முடியாதென்ற திடநம்பிக்கையே. இதற்குள் எல்லாவற்றிற்கும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று இங்கிலாந்தும் ப்ரான்ஸும் போர்க் கப்பல்களையும் சேனைகளையும் யுத்தமுண்டாகும் பக்ஷத்தில் எதிர்க்கத் தயாரித்துக்கொண்டிருந்தன. இவ்வாறு செய்ய பல காரணங்களுண்டு. ஸுமார் 6,7 வருஷங்களுக்குமுன் இங்கிலாந்தும், ப்ரான்ஸும், ருஷியாவும் பரஸ்பரம் உதவி செய்துகொள்வதாக உடன்படிக்கை செய்து கொண்டார்கள், 1907-ம் வருஷத்தில் ஹேக்கில் நடந்த ஸமாதான மகாக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டபடி ஐரோப்பா கண்டத்தின் வல்லரசுகள் எல்லாம் அக்கண்டத்து சிற்றரசுகளை யாரும் தாக்கப் பார்த்திருக்கக் கூடாதென்று கடமைப்பட்டவர்களானார்கள். இந்த உடன்படிக்கையும் ஜாதி யபிமானமுமே ருஷியாவை ஸெர்வியாவிடம் அநுதாபம் காட்டும்படி தூண்டின. அவ்வாறு ருஷியா உதவிசெய்தால் ப்ரான்ஸும் இங்கிலாந்தும் உடன் உதவி செய்ய கடமைப்பட்டவர்கள் ஆனார்கள்.

இவ்வாறு உதவியைப்பற்றி ஒவ்வொரு நாட்டாரும் ஆலோசித்துக்கொண்டிருக்கும் பொழுது ஜெர்மனி தேசத்தவர் ஒருபழியும் அறியாத லக்ஸம்பர்க் என்னும் சிற்றரசுள் நுழைந்து தாமேசெய்த உடன்படிக்கையை மீறி சிறு தொந்தரைகள் செய்ய ஆரம்பித்தார்கள். ப்ரான்ஸ் தேசத்து எல்லையில் தமது படைகளையும் நடாடச்செய்தார்கள். அவ்வாறு செய்வது தவறென்று ப்ரான்ஸு கவர்ன்மெண்டார் ஆக்ஷேபித்தார்கள். 'காக்கை உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்தது' போல் ப்ரான்சுக்காரனாகிய ஆகாய சஞ்சாரி ஒருவன் நியூரெம்பர்க் என்னும் ஜெர்மன் பட்டணத்தின்

மேல் வெடிகுண்டு எறிந்தான். யுத்த மாரம்பிப்பதற்கு முன் அவ்வாறு செய்தது பிசகு என்று ஜெர்மனி ஆக்ஷேபித்தது. மேலும் ஜெர்மெனியின் சேனை இரண்டு பிரான்ஸு நகரங்களுள் புகுந்துவிட்டது. அதேசமயத்தில் ஜெர்மனி ராஜாங்கம் பிரான்ஸ் மேலும் ருஷியா மேலும் போர் ஆரம்பிப்பதாகத் தெரிவித்தது.

நிற்க, ஆஸ்ட்ரியா ஸெர்வியாவைத் தாக்க ஆரம்பித்துவிட்டது பெல்க்ரேட் என்னும் தலைநகரின்மேல்பீரங்கிப்படைகொண்டு தாக்கியது. ருஷியாவின்சிலபாகங்களையும்அதிக்கிரமித்துத் தாக்க ஆரம்பித்துவிட்டது. ருஷியா, பிரான்ஸ் இவைகளின் மேல் ஜெர்மனி படையெடுப்பதாகக் கேள்விப்பட்ட இங்கிலாந்தின் ராஜாங்க சபையில் தாம் செய்யவேண்டிய வ்யவஹாரத்தைப்பற்றி ஸபை கூடியது. அங்கு அன்னிய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே தாம் உலக நன்மையின் பொருட்டு தம்மாலானவரை சமாதான முயற்சிகள் செய்ததாகவும், சண்டைப்பேயால் ஆட்டப்பட்ட ஜெர்மனியிடம் ஸமாதானத்திற்கு இடமில்லாமல் போனதாகவும், தாம் முன் ஒத்துக்கொண்ட உடன்படிக்கையின்படி பிரான்ஸ் தேசத்தின் மேலண்டைப் பாகங்களைக்காப்பதும் அதற்குதவி செய்வதும் தமது பொறுப்பென்றும், அவ்வாறு செய்வதே தமக்குக் கௌரவமென்றும், அதற்கு இங்கிலீஷ் ஜனங்கள் ஒப்பவேண்டுமென்றும் பேசினார்.

இதற்குள் ஜெர்மனியப்படை பிரான்ஸைத் தாக்குவதற்கு வழி பெல்ஜிய நாட்டெல்லையிலிருப்பதால்அந்நாட்டின்மூலமாகப்போய்த் தாக்குவதே தமக்குத் தகுந்ததென்று நிச்சயித்து அந்நாட்டின் மூலமாகப்பாய்ந்துச் செல்லவாரம்பித்தது. ஆனால் அந்நாட்டார் "நாங்கள் போரில் ஸம்பந்தப்படாதவர்களாகையால் வழிவிட முடியாது" என்று தடுத்தார். வழிவிடாவிட்டால் தாங்களே வழிசெய்து கொள்வதாகச் சொல்லிக்கொண்டு பெல்ஜியநாட்டிலுள்ள லீஜ் என்னும் பெருங்கோட்டையை ஜெர்மானியர் தாக்கினார்கள். பெல்ஜியநாடு இங்கிலாண்டு நாட்டை உதவிசெய்யும்படிக் கேட்டுக்கொண்டது. முன்னமேயே ஆலோசித்துக்கொண்டிருந்த இங்கிலாந்து இராஜாங்கஸபையின் முன் இவ்விஷயம் வரவும், இங்கிலீஷ் அன்னியமந்திரி ஜெர்மனியை பெல்ஜியத்திலிருந்து படையை வெளியேற்றி விடவேண்டுமென்றார். அந்நாடு முடியாதென்னவே, பிரான்ஸுக்கு உதவி செய்ய ஆலோசித்துக்கொண்டிருந்த இங்கிலீஷ் ராஜாங்கம் பெல்ஜியநாட்டின் உதவியாக ஜெர்மெனியின் மேல் படையெடுப்பதாகத் தெரிவித்தார். அதற்குத்தயாராக இருப்பதாக ஜெர்மனிபதில் கொடுத்தது.

ஆகவே ஐரோப்பிய நாடுகளில் முக்யமான நாடுகளுக்குள் பெரும்போர் மூண்டு விட்டது. முள் தைத்து உடல் முழுதும் புரை ஏறினாற் போல, ஐரோப்பா முழுதும் கொலையும், பகையும் நெருப்புங் குடிகொள்ள இடமாய்விட்டது.

ஆனால் நமது இராஜாங்கமாகிய இங்கிலாந்து போர்செய்யப் பலமான காரணங்கள் உண்டு. அவையாவன:—

1. உடன்படிக்கைப்படி நடக்கவேண்டிய கௌரதை; 2. சிற்றரசுகளை வல்லரசுகள் தமதிஷ்டப்போக்கின்படி நாசஞ்செய்யப் பார்க்கத் தகாததில்லை; 3. சிற்றரசுகளை வல்லரசுகள் அன்னியரால் நாசமடையாமலிருக்க வல்லரசுகள் ஹேக்ஸமாதானசபையில் ஏற்றுக்கொண்ட கடமை; 4. தமதுபக்கத்திலிருப்பவரது ஸுகத்தைக் கவனிக்க வேண்டிய தர்மம்; 5. தமது தேச க்ஷேமத்தின் பொருட்டு ஜாக்ரதையாக இருக்கவேண்டிய கடமை; 6. பெல்ஜியம் உதவி செய்யும்படிக் கேட்டுக்கொண்டது.

இதனால் யாவருக்கும் இங்கிலாந்து நாடு துராக்ருதமான யுத்தஞ் செய்ய ஆரம்பிக்கவில்லை என்பது விளங்கும். அதற்கு ஸெர்வியா அழிவதால் ஒரு நஷ்டமுமில்லை. பிரான்ஸ் கஷ்டப்பட்டால் கேடொன்றுமில்லை. அபய மடைந்தவர்களைக் காப்பாற்றல்; கொடுத்தவாக்கைநிறைவேற்றல்; துராக்ருதமாகச் சண்டை செய்பவரையடக்கவேண்டிய கடமை—இவைமூன்றுமே இங்கிலாந்தைத் தனது ஸுகத்தைக் கவனியாது சண்டையுள் நுழையும்படிச்செய்தது. தெய்வத்தை நம்பி ஸத்தியத்திற்குட்பட்டு, தெய்வீகத்தன்மையுடன் நமது அரசன் சக்ரபதி சண்டைக்காயத்தமானார்.

இத்தன்மையான காலத்தில் நம்மவர் எவ்வித பேதமுமில்லாமல் நமது ராஜ்யத்திற்கும் அரசர்க்கும் உடல், பொருள், ஆவி யாவுங்கொடுக்கத் தயாராக இருப்பது ஒரு அதிசயமான விஷயமா?



# குண்டலகேசி

அல்லது

## "தற்கொல்லியை முற்கொன்றவள்"

### முன்னுரை

இக்காலத்தில் தமிழ்மக்கள் பலர் ஏனைய நூல்களைக்காட்டினும் தமிழ் நாவல்களை அதிக ஆர்வத்துடனும் மிகுந்த ஊக்கத்துடனும் படித்துவருகிறார்கள் என்பதற்குக் கடந்த சில்லாண்டுகளுக்குள் எண்ணிறந்த தமிழ் நாவல்கள்,—தக்கார் சிலராலும் அல்லாதார் பலராலும்,—எழுதப்பெற்று வெளிவந்துலவுகின்றமையே போதிய சான்றாகும். ஆகவே, எத்தகைய அரிய விஷயங்களையும் எளிதில் விளக்குதற்கு "நாவல்" என்பது, ஒரு சிறந்த கருவியாக இருக்கிறதென்பது தானே பெறப்படும். "அல்லாதார் பலர்" என்னும் பகுதியில் அடங்குவோருள் ஒருவனாக, யாமிருந்த போதிலும், அச்சிறந்த கருவியினை எஞ் சிற்றறிவிற்கெட்டியவரை உபயோகித்தல் இழுக்கன்றெனக் கருதி, "குண்டலகேசி" என்னும் இச்சிறு நாவலை, யாம் ஒருவாறு எழுதத் துணிந்தாம். தாந்தாம் எடுத்துரைக்கும் விஷயங்களின் அமைதிக்கு ஏற்ப, நாவல்கள், "நீதிபோதனை நாவல்கள்," "துப்பறியும் நாவல்கள்," "புனைந்துரை நாவல்கள்", "அபூதாலங்கார நாவல்கள்", "சரித்திரசம்பந்தமான நாவல்கள்" எனப் பல திறப்படும். அவற்றுள் இந்த நாவல் எதன்பாற் படுமோவெனின்,—"சரித்திரசம்பந்தமான" (historical novel) நாவலின்பாற் படுமென்க. என்னை? பஞ்சகாவியங்கள் என்றும், சங்க இலக்கியங்கள் என்றும் தமிழறிவுடைய சான்றோரால் பாராட்டப்படும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து பண்டைத் தமிழ் நூல்களுள், ஒன்றனைப் பற்றியது இந்நாவலாதலின் என்பது. இவ்வைந்து காப்பியங்களுள் முன்னையமூன்றும் புத்தக உருவத்தில் தம பண்டைச் சொரூபங் குன்றாமல் இன்றும் விளங்கிவருகின்றன. பின்னைய இரண்டுந் தம் முழு மேனியோடு இதுகாறும் வெளிப்போந்தில. இவ்விரண்டினுள் ஒன்றான குண்டலகேசி என்பதைப் பற்றி இதுவரை கிடைத்துள்ள ஒருசில ஆதாரங்களை அஸ்திவாரமாகக் கொண்டு, அப்பெயர் புனைந்தே கட்டப்பெறும் இந்த "நாவல் மாளிகை", தனக்கு வேண்டிய சாதனங்களை, அவசியம் நேர்ந்தவிடத்துப், பிறவிடங்களிலிருந்தும் கடனாகப் பெற்றிருக்கிறது. இந்த நாவலின் கதை யமைப்பிற்குச் 'செந்தமிழ்''ப் பத்திரிகையின் முதற்றொகுதி மூன்றாம் பகுதியும், இந்நாவலின் இரண்டாம் அதிகாரத்தில் வருகின்ற விஷயத்தின் பெரும் பகுதிக்கு, மணிமேகலையிற் சேர்க்கப்பட்டுள்ள "பௌத்த தருமம்" எமக்குப் பெருஞ் சாதனமாயிருந்தன. ஆதலின், "செந்தமிழ்"ப் பத்திரிகாசிரியர்க்கும், மகாமஹோபாத்தியாயர் பிர்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கட்கும் யாம் பெரிதுங் கடப்பாடுடையேம். "குணநாடிக் குற்றமுநாடி யவற்றுள்—மிகை நாடி மிக்க கொளல்" சான்றோர் கடனென ஆன்றோர் கூறுப.

## முதலாம் அதிகாரம்

### மதிநோக்கும் மதிமுகத்தாள்

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கைபோழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கத மென்று இசையால் திசைபோய துண்டே",—சிந்தாமணி

சீருஞ் சிறப்பும் இனிதியன்றதும், நாமகள் நயந்த நவையறு கல்வியும் பூமகள்பயந்த புரைதீர் பொருளுமாகிய இருபெருஞ் செல்வமும் நன்கமைந்ததும், குடமலை ஈன்ற புதுப் புனல் நங்கை, நுரையாகிய பூமாலையை,—இன்ப மிகுந்த தன் காதற் கணவனும் சமுத்திர ராஜனுக்குச் சூட்டுதல் கருதி,— மீதூர் களிப்பாற் சிறக்க வேகத்திக் காற்றினுங் கடுகிக் கீழ்த்திசை நோக்கிச் செல்லும் பேரொலி முழக்கை என்றுங் கொண்டதும், செந்நெல் விதையிடும் உழவருழத்தியர் நாற்றுப் பறித்து நடுகின்ற உவப்பின் மிகுதியால்,—மழை பொழி குறியென முன்னர்த் தோன்றும் இடி முழக் கென்று எழிலுறு மயிலினங்கள் மகிழ்ந்து ஆரவாரிக்கும்படியும், பொழிலுறை குயிலினங்கள் மனமாழ்கித் தத்தம் பொழிலகத்தே ஒடுங்கும்படியும்,—சேர்ந்து பாடும் பாட்டொலி என்றுங் குன்றப் பெறாததும், தன் நீர்மை குன்றாதிருத்தல் வேண்டி முந்நீர்ப் புணரி ஆடையுடுத்த நிலமகட்கு நெற்றித் திலதம் போன்றதும், பலவகையான பழங்களைத்தரும் பலவகைப்பட்ட தருக்களையுடைய தோப்புக்களையும், நறுமணங் கமழும் பன்னிறப் பூக்களையுடைய பூஞ்சோலைகளையும் தன்கண் ஒருங்கே பெற்றதும், அந்தணர் வீதியும் அங்காடித் தெருக்களும் நிறையப் பெற்று வேத முழக்கையும் பண்டங்கொள் வாணிபர்களின் வாத முழக்கையும் இடையறாது கொண்ட பெருமை வாய்ந்ததுமான சோழநாட்டிற்றுப் பண்டைக்காலத்தில் தலைநகராயிருந்த காவிரிப்பூம் பட்டினம் என்னும் ஒப்புயர்வில்லாத் திப்பிய நகரத்தில், கல்வி, ஒழுக்கம், ஆண்மை, தயாளம் முதலிய உயர் குணங்களிற் சிறந்தவனும், திருமகளின் திருவருள் நிரம்பப் பெற்றுப் பெருந் தனவந்தனாய் விளங்கியவனும், வைசியகுலத்திலுதித்து அக்குலத்திற்குரிய வேளாண்மைத் தொழிலையும் வாணிபத் தொழிலையு முறைவழாது நடத்திப்பொருந்து முறையிற் பொருளீட்டினவனும், தன்காலத்திருந்த சோழமன்னனோடு நெருங்கியநட்புரிமைபூண்டு அம்மன்னனால் பாராட்டப் பெற்றவனும், இக்காலத்தில் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பட்டங்களைப் போலும் அளிக்கப்படும் பரிசில்களைப் போலும் அக்காலத்

தில் தமிழ் அரசர்களால் கொடுக்கப்பட்ட பல பட்டங்களுள்ளும் அளிக்கப்பட்ட பல பரிசில்களுள்ளும் மிகச் சிறந்ததும், சேனைத் தலைவனுக்கே பெரும்பாலும் சூட்டப்படுவதும், ஏனையோர்க்குப் பெரும்பாலும் கிட்டாததுமான "ஏனுதி" என்னும் கௌரவப் பட்டத்தையும், அப்பட்டத்திற்குரிய அடையாளமாகக் கொடுக்கப்படும் "ஏனுதிமோதிரம்" என்னும் கணையாழியையும் சோழமன்னன் உவந்தளிக்கக் களிப்புடன் ஏற்றுப் பீடுசால் பெருமையுடன் துலங்கியவனுமான ஒரு பிரபல வைசியனுக்கு, அவன் முற்பிறப்பிற் செய்த பெருந்தவப் பயனுலும்,

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்று மணிமேகலைக்கு எடுத்துபதேசித்த தீவதிலகையின் உபதேச மொழியைத தனக்குபதேசித்ததாகவே கருதிப் பல வகையான தான தருமங்களை,—இக்காலத்தில் பலர், தாங்கள் செய்யுந் தருமத்தைக் கண்டு பிறர் தங்களைப் புகழ வேண்டுமென்றும், தங்களுடைய பெயர் பத்திரிகைகளில் அழகாக அச்சிடப்படுவதைக் கண்டு மகிழவேண்டுமென்றும், மிக மலிவாக விற்கப்படும் கௌரவப் பட்டங்களை வாங்க வேண்டுமென்றும், தருமம் செய்வதாக ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு யாசகம் செய்தால் அந்த யாசகத்திற் கிடைக்கும் பெரும் பொருளை, முதலை விழுங்குவதுபோல், விழுங்கிவிடலாமென்றும் நினைத்தும், இன்னும் இவை போன்ற பல காரணங்களைத் தங்கள் அந்தரங்க நோக்கமாகக் கொண்டும், உலகத்தை மயக்குவதற்காகச் செய்யும் போலித் தருமங்களைப் போலாது,—உண்மை அன்புடனும் முதிர்ந்த தயாளத்துடனும் இச்சென்மத்தில் இடையருது இயற்றிய பலனுலும், அவன் மனம் மகிழும்படியும் அவனுடைய உற்ருரும் உறவினரும் ஆனந்திக்கும்படியும், அவனுடைய மனைவி வயிற்றிற் ருேன்றிப் பத்துத் திங்களும் முற்ற முடிந்தபின் பிறந்த பெண்மகவுக்கு சாமுத்திரிகா சாஸ்திரப்படி எல்லா எழிலும் பொருந்தி யிருந்தமையின், அதனை மிக்க அன்புடனும் ஆர்வத்துடனும் வளர்த்து உரிய பருவத்தே அதற்கு நாமகரணஞ் சூட்டியும், வித்தியாப்பியாசம் செய்வித்தும் வர, அப்பெண்மணியும் குழவியெனக் கிடந்து, மதலையென மிழற்றி, சிறுமியெனத் தவழ்ந்து, பேதையெனப் பிதற்றி இங்ஙனமாகவே நாளுக்கு நாள் பிறைமதிபோல் வளர்ந்து, இறுதியில் "மங்கை" என்னும் பெயர் பெறுதற்குரிய பருவத்தை அடைந்து, தன் சேடியர் குழாத்துடன் அந்தப்புரத்தில் வதிவாளாயினள்; அம்மங்கை பேர்,—குண்டலகேசி!

இவள் ஒரு நாளிரவு முதற் சாமத்தில், சந்திரன் தன் முழுக் கலைகளுடன் ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தபோது, தன் மாளிகையின் மேன்மாடியில், குணமாலை, கனகமாலை என்னும் பெயருடைய தன் இரண்டு சேடியர்களோடு, உல்லாசமாய் விளையாடிக்கொண்டும், தன்னுடைய ஆசான் கற்பித்த அரிய நூற்பொருள்களைக் குறித்து வார்த்தையாடிக்கொண்டும், சந்திரனை நோக்கிப்பலவாறு மனோபாவனை செய்துகொண்டு மிருந்தாள்.

"தோழிகாள்! விண்மீ தூரும் தண்மதியை நோக்கும்போது, உங்களுடைய மனோபாவக உணர்ச்சியில் புதிய கருத்துக்கள் எவையேனும் புலப்படுகின்றனவா?" என்று குண்டலகேசி தன் சேடியர்களை நோக்கி வினவினாள்.

"தலைவியே! எங்களுக்கு மனோபாவம் உணர்ச்சி இருந்தாலன்ரோ புதிய கருத்துக்கள் தோன்றும்? உன்னைப்போல் நாங்கள் படித்தவர்க ளல்லோம்" என்று இருவரும் சேர்ந்து விடையிறுத்தார்கள்.

"பாவனு சக்திக்கும் நூலறிவுக்கும் சம்பந்தமே இல்லை. ஆதலால், உங்கள் மனத்தில் தோன்றுவதைக் கூறுங்கள்" என்று குண்டலகேசி மீண்டும் வற்புறுத்தினாள்.

"அம்மையே! உன் திருநுதலுக்குத் தன்னுடைய மூன்றும் கலையிணையாகாதென்னும் உண்மை அறிந்தே, சந்திரன் சாம்பவன் சடைமுடியில் சரணடைந்தான் என்று நான் கருதுகிறேன். அன்றியும் பிறை என்னும் பெயர், உன் நன்னுதலின் முன்னிலையில், தனக்கு ஏற்காதென மதித்தே, மதியென அவன் வளர்கின்ருன் என்றும் நான் நினைக்கிறேன்" என்று குணமாலை கூறினாள்.

"நன்று சொன்னாய், குணமாலையே! மதியென அவன் வளர்ந்தது, அவனுடைய மதியின்மையையே புலப்படுத்துகிறது. என்னை? பிறையென விளங்கிய ஞான்று நந்தலைவியின் வாணுதல் அவனுக்கு இகழ்ச்சியை விளைத்ததுபோலவே, மதியென விளங்குகின்றபோது அவளுடைய திருமுகம் அவனுக்கு இகழ்ச்சியை விளைவிக்கும் என்பதை அவன் அறியானயின னன்றே?" என்று கனகமாலை கழறினாள்.

"ஆம், நீ உரைத்தது சாலப் பொருத்தமுடைத்து. முதலில் அவ்வுண்மையை அவன் அறிந்திலனாயினும், தன்னிடம் 'முயல்' என்று சொல்லப்படும் களங்க மிருப்பதால், களங்கமற்ற முகத்தையுடைய நந்தலைவியின் முன்னர்த் தோன்றுதல், தனக்குச் சிறுமையாம் எனப் பின்னர்த் தெளிந்து கருமேகத்தின் இடையே சென்று மறைந்தொளிய அவன் முயல்கின்ருன், கண்டாய்!" என்று குணமாலை கூறிச் சந்திரனையும் சுட்டிக் காட்டினாள்.

"சகிகாள்! என்னைப் பலபடப் புகழ்ந்து உரையாடுதற்கோ, நான் உங்களை நோக்கி அவ்வினு நிகழ்த்தினேன்?" என்று குண்டலகேசி புன்முறுவலில் மறைந்த நாணத்துடன் சொன்னாள்.

"அம்மையே! எங்கள் மனத்தில தோன்றியதைத் தானே நாங்கள் சொல்ல முடியும்? எங்கள் உரைமொழி உனக்குப் புகழ்மொழியாய்த் தோன்றினால்,



நாங்கள் சம்பாஷணையை நிறுத்திக் கொள்ளுகிறோம். சந்திரனை நோக்கும்போது உனக்கு என்ன தோன்றுகிறது? அதைததெரிவித்தால் நாங்கள் கேட்கிறோம்" என்று குணமாலை சொன்னாள். அவளுடன் கனகமாலையும் இணங்கிப் பேசினாள்.

"பாங்கிகாள்! வானுலாவும் இவ்வெண்மதியை நோக்கும்போது எனக்கு ஓர் எண்ணம் உண்டாகிறது. நீங்கள் இருவரும், என்னுடைய நிலைமையைக் காட்டிலும் அவனுடைய நிலைமை மிகத் தாழ்ந்தது என்று பொருள்படும்படி உரையாடினீர்கள். ஆனால், எனக்கு அவ்விதம் தோன்றவில்லை. அவனுடைய நிலைமையைவிட என்னுடைய நிலைமையே தாழ்ந்ததாயும் பரிதபிக்கத் தக்கதாயு மிருக்கிறது" என்று குண்டலகேசி சொல்லிக்கொண்டிருக்கும் போதே, "தலைவியே! நீ அவ்விதம் நினைத்ததற்குக் காரணம் யாது?" என்று குணமாலை இடைமறித்து உசாவினாள்.

"காரணம் யாதா? இராகு என்னும் கோளினால் பீடிக்கப்பட்ட சந்திரனைத் திருமால் விடுவித்து இரட்சித்தார். அவரால் விடுதலையடைந்த அவன், மீதூர் களிப்பினால் இப்போது வெளிமீதூர்கின்ருன். ஆனால் நானோ, உருவிலியான மதன் என்பவனால் பீடிக்கப்பட்டு மிக வருந்துகின்றேன். என்னை அவன் கையினின்றும் விடுவிப்பார் எவரும் இலர். இதனால் யாருடைய நிலைமை பாராட்டத் தகுந்தது, யாருடைய நிலைமைபரிதபிக்கத்தக்கதுஎன்பதை நீங்களே அறிந்து கொள்ளலாம். மேலும், தான் விடுதலை அடைந்தபெருமைக் குறிப்பும், நான் விடுதலை அடையாத சிறுமைக் குறிப்பும் இனிது தோன்ற என்னை நோக்கி எளனஞ் செய்து நகைப்பதுபோல், சந்திரனுடைய தோற்றம் இருப்பதும் இவ்வுண்மையை வலியுறுத்தும்" என்று குண்டலகேசி உரைத்தாள்.

"இவ்விதம் நீ கருதுவது, உன்னுடைய குற்றமன்று; உன் பருவத்தின் குற்றமாகும். தலைவியே, உன்னுடைய பெரும் குறையை நிவர்த்திக்க வேண்டுவது உன் பெற்ரோரின் கடமையாகும். இன்னமும் உனக்கு விவாகம் செய்விக்காமல் உன் பிதா இருந்து வருதற்குக் காரணம் யாதென எனக்கு விளங்கவில்லை. உன்னுடைய சிறந்த அழகுக்கு ஏற்ற கணவன் கிடைக்கவில்லை போலும்!" என்று குணமாலை கூறினாள்.

குணமாலை கூறியது வெறும் புகழ் மொழியன்று; உண்மையேயாம். ஏனெனில், குண்டலகேசி என்பாள் இயற்கையிலேயே பேரழகும் பெருநலமும் இனிது வாய்ந்தவளாவாள். அவளுடைய "பச்சென்ற திருமுகமும், சேயிதழும், வெண்ணகையும், பார்வை என்னும் நச்சு அம்பும், அமுதூற நவிற்றுகின்ற யடமொழியும், நாணும் பூணும், நுண்ணிடையும் கண்டு சோர்ந்து" முற்றத்துறந்த மாதவ யோகிகளும் நிலைகுலைவார்களென்ருல், அவள்பேரழிலைச் சிலமொழியால் புகழ்வது யாங்ஙனம்? காரிருளைக் காத்தாற்பிடித்துநீளமுறுக்கினாற்போல் கருமையும் மென்மையும் அடர்த்தியும் நீளமும் ஒருங்கமைந்த கருங்குழலாள்! வட்டமதியின்மேல் மற்ருேர் இளம்பிறையைப்பொருந்தவைத்ததுபோல் காணப்படும்அழகிய திருமுகமும் குறுகி வளைந்த சிறுநுதலும் ஒருங்கமைந்த பேரெழிலாள்! பாற்கடலில் பள்ளிகொண்ட கருமேனித் திருமாலை நெஞ்சகத்தே நினைப்பூட்டும் பெருவிழியும் கண்மணியும் ஒருங்கமைந்த தடங்கண்ணாள்! எள்ளை எள்ளும் எழில் மிகுநாசியாள்; வள்ளையைப் பழிக்கும் சித்திரச் செவியாள்! சங்கம் புரையும் பங்கமில் மிடற்ருள்! மூங்கில் நிகர்த்த பஞ்சிளந் தோளாள்! பளிங்கெனத்துளங்கும் ஒளிமிகுகதுப்பும், கொவ்வையை நிகர்த்துக் கிள்ளையைமயக்கும் செவ்வியஇதழும், முல்லை முகைச் சரமென்று ஐயுறத்தக்கதாய் முறுவலொளிவீசும் பல்வரிசையும், மதியை நிகர்த்த அவள் மதிமுகத்திற்கு, மதிக்குள களங்கம் இன்றெனவற்புறுத்துவபோல்விளங்கின! பல் வளை அணிந்தமுன்கையும் காந்தள் நிகர்த்த அங்கையும், "துடியும் பிடியும், வல்லிக்கொடியும் இணையாகா; வானிற்ருேன்றும் மின்னே இணை" என்று சொல்லும்படியான நுண்ணிடையும், கதலித் தண்டையும் மதகரியின் துதிக்கைத் தண்டையும் புறங்காணவல்ல தொடையும், வராலை நிகர்த்த கணைக்காலும், பாளை விரியாப் பசுங்குரும்பையைப் பழித்து, சிலம்புந் தண்டையும் சிலம்பும்படி அணிந்து, ஆடவர் கருத்தை இழுக்கும்பரமே, "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் நெருஞ்சிப் பழம்" என்று சொல்லும்படியாக, அவ்வளவு மென்மையோடுவிளங்கி சீறடியும் இனிதமைந்த, இம்மங்கை நல்லாளின் சாயல், மடமயிலையும், மேனி பத்தரை மாற்றுப் பசும் பொன்னையும், குரல்குயிலொலியையும், மொழி அமிழ்தையும் ஒத்திருந்தன வென்ருல், குணமாலை இவளழகைப் புகழ்ந்து மொழிந்தது வழுவாமோ?

"குணமாலையே! காதலனும் காதலியும் ஒருங்கிருந்தால் அவர்கட்கு இன்பத்தைப் பயப்பதும், பிரிந்திருக்கும் காதலர்களுக்கும், விவாகமாகாத பருவமங்கைகளுக்கும் துன்பத்தை விளைப்பதும் சந்திரனுடைய இயல்பான குணமாகும். நடுநிலை பிறழ்ந்த இந்த மதியை நாம் மதித்தல் வேண்டாம். நம் தலைவியை அழைத்துக்கொண்டு அந்தப்புரம் செல்வோம்" என்று கனகமாலை கூறினாள்.

"தோழிகளே! இதற்குள் அந்தப்புரம் செல்லுவானேன்? இன்னும் சில நாழிகை இங்கு விளையாடுவோம். இதோ, தோழி பத்மினி வருகின்ருள். அவளையும் சேர்த்துக்கொள்வோம்" என்று குண்டலகேசி சொல்லிக்கொண்டிருக்கும்போதே பத்மினி என்னும் மற்றொரு தோழியும் அங்கே வந்துசேர்ந்தாள். நால்வரும் சேர்ந்து "நான்கு மூலையாடுதல்," "கண்பொத்துதல்" "அம்மனை எறிதல்" போன்ற சில விளையாட்டுகளைச் சிறிது நேரம் மனமகிழ்ந்து விளையாடலானார்கள்.

"பாங்கிகாள்! இப்போது விளையாடின விளையாட்டுகள் எனக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும்

விளைவித்திருக்கின்றன. இச்சமயம் சென்று நான் என்னுடைய பாடத்தைப் படித்தால் விஷயங்கள் மனதில் நன்றாய்ப்பதியு மென்று நினைக்கிறேன். ஆதலால், வாருங்கள், நாம் கீழிறங்கிச் செல்வோம்'' என்று குண்டலகேசி உரைத்தாள்.

“நல்லது! செய்வோம் அவ்விதமே. நேற்று உபாத்தியாயர் எந்தப்பாடம் கற்பித்தார்! இன்றுபடிக்கவேண்டுவதுயாது?” என்று குணமாலை குண்டலகேசியை வினவினாள்.

“சகியே! நேற்று ஆசிரியர் **மத்தியமநிகாயம்** என்னும் நூலில் ‘இவ்வுலகம் நிலையுள்ளதா? நிலையற்றதா?” என்று **பகவான் புத்தரை** நோக்கி **மாலுங்கன்** வினவிய பகுதியை எடுத்து விளக்கினார். இன்று, பிறவிகள் ஒன்றின்பின் ஒன்றாய் வந்துகொண்டிருக்கும் என்பதற்குக் கூறப்படும் **வாயுசந்தானம் கூபசந்தானம், தாராசந்தானம், பிபீலிகாசந்தானம்** என்னும் நான்கு உதாரணங்களை விளக்கிக் காட்டுவதாகக் கூறியிருக்கின்றார்” என்று குண்டலகேசி கூறினாள்.

“அப்படியா? நன்று! நாம் கீழே இறங்கிச் செல்வோம்” என்று குணமாலை சொன்னாள்.

“தலைவியே! அன்று ஏதோ கனவு கண்டதாகக் கூறினையே?” என்று பத்மினி இரகசியமாகக் குண்டலகேசியைக் கேட்டாள்.

“ஆ! அதை என் இப்போது ஞாபகப்படுத்தினாய்?” என்று மிகுந்த ஆறாமையோடு குண்டலகேசி கூறினாள். மறு நிமிஷத்தில் அவள் மூர்ச்சித்துக்கீழே சாய்ந்தாள். அவளுடைய கண்கள் மாத்திரம் விழித்தபடியே சந்திரனை நோக்கின. அந்த **மதிநோக்கும் மதிமுகத்தாளை** மூன்று சேடியர்களும் அணைத்தபடியே தூக்கிக்கொண்டு மாடியிலிருந்து கீழிறங்கினார்கள்.

## இரண்டாம் அதிகாரம்

### காளன் என்னும் கள்வன்

“செய்வினை வழித்தாய்
உயிர் செலு மென்பது
பொய்யில் காட்சியோர்
பொருளுரை யாதலின்.”—**சிலப்பதிகாரம்.**

இவ்வுலகத்தில் எஞ்ஞான்றும் எங்கணும் தீயனவென்று சான்றோரால் கடியப்பட்டவையும்,--கடியப்படுபவையுமான இழிதொழில்கள் பலவற்றுள் **களவு** என்பதும் ஒன்றன்றே? “களவென்னுஞ் சொற்கேட்டதுணையானே களவு தீதென்றலும், காமம் என்னுஞ் சொற்கேட்ட துணையானே காமந் தீதென்றலுங் கூடாவாம்; மற்றவை நல்லவாமாறும் உண்டு” என்று **ஆசிரியர் நக்கீரனார், இறையனார் அகப்பொருள்** உரையிற் கூறி, அதற்கு எடுத்துக்காட்டாக, உற்றாரோடு கலகம்விளைத்து, விஷ மருந்தி உயிர் துறக்கக் கருதி, ஒருவரு மில்லாத சமயத்தில் அருந்தும் நோக்கத்தோடு விஷத்தை வாங்கி மறைவாக வைத்திருந்த ஒருத்தியைக், காலன் கையினின்றும் விடுவிக்கும் நல்லெண்ணத்துடன், அவள் செயல் அறிந்த ஒருவன் அவளறியாமல், அவள் வைத்திருந்த விஷத்தை எடுத்து வெளியே கொண்டுபோய் உகுத்திட்ட செய்தியையும் எடுத்துரைத்தார். இத்தகைய செயல்கள் பிறர்க்கு நன்மையே பயத்தலானும், செய்பவனுக்கு நேரே பயனளிக்காமையானும் “களவு” என்னும் பகுதியில் சொன்மாத்திரையே யன்றி, உண்மையில் அடங்காவாம். மற்று, பிறருடைய மனம் வருந்தும்படியும், பிறர்க்குச் சொந்தமான பொருள்களின் இழப்பினால் அவர்கள் பலவகையான கஷ்டநஷ்டங்களை அடையும்படியும், பிறரை வஞ்சித்துத் தான் பயனடைய வேண்டு மென்னும் கெட்ட நோக்கத்துடன் பிறருடைய பொருளை அவர்களுக்குத் தெரியாமல் கவருவதுதான் “களவு” என்று சொல்லப்பெறும். இத்தகைய களவே விழுமிய ஒழுக்கமுடைய நன்மக்களால் வெறுக்கப்படுகின்றது. “தீச் செயல்களைக் குறிக்கும் சொற்களை வாயாற் சொல்லுதலுங் கூடாதாம்” என்னுங் கொள்கையுடைய ஆசிரியர் **தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்**, அச்செயல்களைக் குறித்துக் கூறநேர்ந்த விடத்தும், உடன்பாட்டுவகையால் அவற்றின் பெயரைக் கூறாமல், ‘அழுக்காறாமை”, “இன்னாசெய்யாமை”, “கள்ளுண்ணாமை”, “பிறனில் விழையாமை”, “பெரியாரைப் பிழையாமை” என்று எதிர் மறை முகத்தால் கூறித், தங்கொள்கையைக் குறிப்பால் உணர்த்துதல் போலவே, களவைப்பற்றிச் சொல்ல நேர்ந்தபோதும் “களவு” என்று சொல்லுதற்கு உடன்படாராய்க் “கள்ளாமை” என்று கூறினாரெனின்; களவின் இழிவு இத்தகைய தென்பதை யாம் சொல்லவும் வேண்டுமோ? “பிறருடைமையாயிருப்பதியாதொருபொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை கருதுதலும் செய்தலோடொத்தலின், கள்ளாமை யென்றார்” எனப் **பரிமேலழகர் திருக்குறள்** ‘கள்ளாமை’ அதிகாரத்தின் உரையிற் கூறும் நுட்ப உரையை உற்று நோக்கும்போது, பிறருடைய பொருளைக் களவாடவேண்டுமென்று நினைத்தலுங் கூடாதாம் என்பது இனிது புலப்படுகிறதன்றே? அங்ஙனமிருந்தும் இக்காலத்தைப்போலவே பண்டைக்காலத்திலும் கள்வர்கள் இருந்திருப்பதானது, சிலருக்கு ஆச்சரியத்தை விளைக்கும். ஆனால், இக்காலத்தில் வறுமையின் கொடுமையாலும், உணவுப்பொருள்களின் விலையேற்றத்தினாலும், உள்நாட்டுப் பண்டங்களின் வெளிச்செலவினாலும், பிறதேசப்பண்டங்களின் மிகுந்த விலையாலும், ஜனத் தொகைக்குத் தகுந்தபடி தொழிலின்மை காரணமாகவும், தொழின் முயற்சிக்குத் தகுந்தபடி ஊதிய மின்மை காரணமாகவும் நேரும் வருவாய்க் குறைவினாலும், இன்னும் இவைபோன்ற பல காரணங்களாலும் தகுந்த யோக்கியதை யுடையவர்கள் சிலரும் கல்வியுடையவர்கள் சிலருங்கூட “ **தான்தான் ஜீவிக்க முயலல்**” என்னும் **டார்வின்** (Darwin) கொள்கையைப் பின்பற்றித் தங்கள் மதிப்பையுங் கௌரவத்தையும் பலியிட்டாவது தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் களவைக் கைக்கொள்ளும் கொடிய தன்மைக்கு உள்ளாகிறார்கள். இந்தியாவின் வடபாகத்தில் எண்ணிறந்த பகற்கொள்ளைகளும், தீவர்த்திக்கொள்ளைகளும் பிரதிதினமும் நடக்கின்றன வென்று நாம் பத்திரிகை வாயிலாய் அறிவதே, இவ்வுண்மையை நாட்டுதற்கு உறுஞ் சான்றாம். தவிர்த்தும், பொதுஜனங்களின் உடற்பாதுகாப்பு, பொருட்பாதுகாப்பிற்காக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பெற்றுள்ள, “போலீஸ்” இலாகாவின் வேலை, வரவர இருந்தவிடத்திலிருந்தபடியே எழுத்து மூலமாய் நிறைவேற்றப்படும் வேலையாய் விட்டபடியாலும், அவ்விலாகா உத்தியோகஸ்தர்களின் சுற்றுப்பிரயாணம் பெரும்பாலும் நின்று, கையிலிருக்கும் அறிக்கைமனுக்களை உடனுக்குடன் எவ்விதமாகவாவது பைசல்செய்து ஒழுங்காக மேலதிகாரிகளுக்கு அறிவித்துவிடவேண்டு மென்னும் கொள்கை மாத்திரம் பரவிவருகிறபடியாலும், நடந்த களவுகள் கண்டுபிடிக்கப்படாமற் போவதோடு, நடக்கும் களவுகள் நாளுக்கு நாள் அபிவிருத்தியாகியும் இக்காலத்தில் வருகின்றன. பண்டைக்காலத்திலேயோ, இத்தகைய களவுகள் நிகழ்ந்தில. களவு செய்வதைத் தங்கள்குலத்தொழிலாகக் கொண்டவர்களும், கல்வியறிவும் நல்லவர்களின் கூட்டுறவும் இல்லாமல், அறியாமையால் மறச் செயலைக் கைக்கொண்ட சிலருமே பண்டைக்காலத்திற் களவாடுவதை மேற்கொண் டொழுகினார்கள்.



இத்தகைய களவினை அக்காலத்தில் மேற்கொண் டொழுகினவர்களுள் காளன் என்னும் பெயருடையானும் ஒருவனாவன். இவன் வைசிய குலத்திலுதித்தவனாயிருந்தும், இயல்பும் அந்தஸ்தும் இனிதுவாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்தும், இளம்பருவம் தொடங்கியே இவன் கொடிய ஆறலைகள்வர்களுடனும், கொள்ளைக்காரர்களுடனும், மதுவுண்போருடனும், சூதாடிகளுடனும், பொதுமகளிரின் விழைச்சியைப் பெரிதும் விரும்பும் காமுகர்களுடனும் நட்புரிமை பூண்டு அவர்களோடு சேர்ந்து உண்பதும் உடுப்பதும், அளவளாவுவதும் மனமகிழ்வுறுதுமாக இருந்துவந்தானாதலின், அவர்கட்குரிய தீய குணங்களும் செயல்களும், “நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்பதாகுமறிவு” என்னும் பொய்யாமொழிப்படி, இவனுக்கு நாளடைவில் படியலாயின. முதலில் தன்வீட்டிலுள்ள சிறுபண்டங்களை இவன் தன் பெற்றோர்களுக்குத் தெரியாமல் களவாடி, அவைகளைப் பிறரிடம் அடகுவைத்தும், பிறர்க்கு விற்றும் பொருள் வாங்கி அதனைத் தீயவழிகளில் செலவிடுதற்குத் துவங்கினான். இச்செயல் நாளடைவில் முதிர்ந்து இவனுடைய வீட்டிலுள்ள விலையுயர்ந்த இரத்தின ஆபரணங்களையும், பொற்பணிகளையும், பெருந்தொகையான பொருளையும் கொள்ளையடிக்கும்படி இவனைத் தூண்டிற்று. இக்காளன் என்பான் சிறசில சமயங்களில் தன்னுடைய தோழர்களான கள்வர்களுக்குத் தானே உளவறிவித்துத் தன் வீட்டிற் கொள்ளையிடும்படி வற்புறுத்திப், பிறகு அக்கொள்ளைப்பொருளில் தனக்குரிய பாகத்தைமகிழ்ச்சியுடன் பெற்றுமகிழ்ந்திருக்கிறானென்றால்; இவனுடைய தீய ஒழுக்கத்தைப்பற்றி நாம் அதிகம் சொல்லுவானேன்?

இவனை நன்மார்க்கத்திற் றிருப்புதற்கு இவனுடைய பெற்றோர்கள் பலவாறு முயன்றும், அவர்கள் முயற்சி சிறிதும் பயன்படவில்லை. இவனால் தன்னுடைய நற்பெயருக்கும், தன் குலத்தின் கௌரவத்திற்கும், தன் குடும்பத்தின் மதிப்பிற்கும் பங்கம் விளைகிறதென்பதை நன்கறிந்த இவன்றந்தை “குலத்தைக் கெடுக்கும் கோடரிக் கொம்பாக” இவனைக் கருதித் தன் வீட்டிற்குள் நுழையவே கூடாதென்று இவனுக்குக் கண்டிப்பான உத்தரவுசெய்ததோடு, அக்காலத்து வழக்கப்படி, உற்றார் உறவினர்கள் அறிய இவனைச் சாதிப்பிரஷ்டமும் செய்வாராயினர். இங்ஙனம் செய்த அவருடைய செயல் இவனுக்குப் “பழம் நழுவிப் பாலில் விழுந்தது” போல் ஆயிற்று. ஒரு சிறிதிருந்த மானத்தையும் அச்சத்தையும் இப்போது இவன் அறவே ஒழித்துவிட்டான். பிறருடைய வீடுகளில் கன்னம்வைத்துத் திருடவும் பகற்கொள்ளையிடவும் இவன் ஆரம்பித்துவிட்டான். தவிர பௌத்த சமயத்தை மேற்கொண்டு, பௌத்த சந்நியாசியைப்போல் வெளிவேடம் பூண்டு, இவன் வழிப்போக்கர்களுக்கும் சாதுக்களுக்கும் இழைத்துவந்த இன்னல்கள் பலவாகும். அதிகம் சொல்லுவானேன்! இவனால் பொதுஜனங்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கலானார்கள்.

இக்காளன் என்பான் காவிரிப்பூம்பட்டினத்தின் புறத்தேயிருக்கும் குறுங்காட்டினுள் ஒரு நாளிரவு இடையாமத்தில் வேறு மூன்று கள்வர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். முதல் நாளிரவு இவர்கள் நால்வரும்சேர்ந்து அரசனுடைய மாளிகையில் கொள்ளையடித்த நகைகளையும் நாணயங்களையும் பங்கிட்டுக்கொள்ளுதல் சம்பந்தமாக அச்சம்பாஷணை இருந்தது.

“ நான் வெளியில் நின்று காவல்புரிந்தேனே ? ” என்றான் மாடன்.

“ கன்னம் வைத்தது நானன்றோ? ” என்றான் இருளன்.

“முதலில் மாளிகைக்குள் நுழைந்து நகைப்பெட்டி இருந்த இடத்தைக் கண்டுபிடித்துக் கூறியது நானே வேன்” என்றான் முனியன்.

“ தைர்யத்தோடு பெட்டியை உடைத்துப் பொருள்களைக் கைக்கொண்டவன் நானேயாதலால், எனக்கே அதிகமான பாகம் கிடைக்கவேண்டும். ஐந்து சமபாகமாகப்பிரித்து, இரண்டை நான் எடுத்துக்கொள்வேன். நீங்கள் மூவரும் தலைக்கொரு கூறாக எடுத்துக் கொள்ளுங்கள்” என்று காளன் சொன்னான்.

“ ஏன்; ஏன்?” எனக் கூறினான் முனியன்.

“ கூடாது; கூடாது!” என்றான் இருளன்.

“ முடியாது; முடியாது!” என்றான் மாடன்.

“ வேலைக்குத் தகுந்த கூலிதானே?” என்றான் காளன்.

“ நான் கஷ்டப்பட வில்லையோ?” என்றான் முனியன்.

“ நான் கன்னம் வைக்காதிருந்தால், நீ எவ்விதம் உட்செல்லமுடியும்?” என்றான் இருளன்.

“ நான் வெளியில்நின்று ஆள்பார்க்காமலிருந்தால், நீங்கள் தப்பித்து வந்திருக்கமுடியாதே?” என்றான் மாடன்.

“ ஏன் வீணாக வார்த்தையாடுகிறீர்கள்? நான் சொல்லுகிறபடிதான் செய்யவேண்டும்” என்றான் காளன்

“ இணங்கோம்; இணங்கோம்!”

“ ஒப்போம்; ஒப்போம்!”

“ இசையோம்; இசையோம்!”

இவ்விதமாக ஏனையமூவரும் தனித்தனிக் கூவினார்கள். இவர்களுக்குள் கலகம் ஆரம்பித்துவிட்டது. குடிவெறியால் ஒருவரை ஒருவர் திட்டுவதும், புடைப்பதும், அடிப்பதும், உதைப்பதுமாக விருந்தார்கள். இவர்கட்குச் சமீபத்தில் சருகுகளும் செத்தைகளும் சேர்ந்த குப்பல் ஒன்று எரிந்துகொண்டிருந்தது. குளிர் காய்வதற்கும், மான் மரை முதலிய விலங்குகளைக் கொன்று, சுட்டு உண்பதற்கும் சாதகமாய் இவர்களே அந்தக் குப்பலை ஏற்றிக்கொண்டார்கள். இவ்வெளிச்சம் சுமார் ஒரு மைல் சுற்றளவிற்கு தெரியக்கூடியதுதான்.

இவ்வெளிச்சத்தை நோக்கி நால்வர் அன்றிரவு வந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் அரசனுடைய கட்டளைப்படி, முதல் நாளிரவுஅரண்மனையில்திருடிய கள்வர்களைக் கண்டுபிடிப்பதற்காகப் புறப்பட்ட நகர் காவலர்களானவர்கள், இவர்களுள்ஒருவன் காவற்றலைவன்; ஏனைய மூவரும் அவனுக்கு உட்பட்ட காவலர்கள். எரிந்துகொண்டிருந்த குப்பலுக்குச் சமீபமாய் இவர்கள் சென்றவுடன், அங்கே சச்சரவு செய்துகொண்டிருந்த கள்வர்கள் நால்வரும் நாற்றிசையும் நோக்கி ஓடலாயினர். அவர்களைப் பின்தொடர்ந்து இக்காவலர்கள் சென்றார்கள். காளன் மாத்திரம்இவர்களுடைய கரத்திலகப்பட்டான்;ஏனைய மூவரும்இவர்கள் கண்ணிற்கும் காத்திற்கும் அகப்படாமல் மறைந்தொழிந்தார்கள். தங்களிடம் அகப்பட்டுக்கொண்ட காளனுக்கு அவ்விடத்திலேயே விலங்கிட்டு அவனை அரசனிடத்திற்கு அழைத்துச் செல்லக் காவலர் நால்வரும் முதலில் கருதினார்கள். ஆனால், காளன் தான் யாரென்பதையும், தன்னுடைய தந்தையின் பெயரையும் அவர்களிடம் சொன்ன மாத்திரத்தில் அவனது தந்தையிடம் தங்கட்கிருந்த மதிப்பினால், இக்காலத்தில் போலீஸ் சேவகர்கள் கைதியாய் அகப்பட்டவர்களை அகாரணமாக அருவருக்கத் தகுந்த இழி சொற்களை வாய்கூசாமற் கூறித் தூஷித்தல் போல்தூஷிக்காமலும், இரக்க மென்பதும் உணர்ச்சி என்பதும் மருந்திற்குமின்றி அவர்களைத்தங்கள் பலங்கொண்டவரையில் அடித்தும் உதைத்தும் துன்புறுத்தல் போல் துன்புறுத்தாமலும், மிகக மரியாதையுடனும் கௌரவத்துடனும்விலங்கிடாமலே அவனை அழைத்துச் சென்று, அவர்கள் அரசன் முன்னிலையில் நிறுத்தினார்கள். மறுநாளன்று அரசன் காளனை விசாரிக்கத் தொடங்கினான்

“ஏ! கள்வனே, நீ நேற்றிரவு நம்முடைய அரண்மனையில் கன்னம்வைத்துச் சில ஆபரணங்களைத் திருடிச் சென்றதுண்டா?” என்று அரசன் காளனை நோக்கி வினவினான்.

காளன் ஏதும் பதில் கூறாமல் மௌனம் சாதித்தான். கள்வர் தலைவன் சில ஆபரணங்களையும் நாணயங்களையும் ஒரு துணி முடிப்பிலிருந்து அவிழ்த்தெடுத்து, “மகாராஜாவே! இவை இவர்கள பங்குபோட்டுக்கொள்வதற்காகக் கூடுகின்ற இடத்திலிருந்தன” என்று மிகுந்தபணிவுடன் கூறி, அவைகளை அரசன் சமுகத்தில் வைத்தான். அவைகளை அரசன்கையிலெடுத்துப் பார்த்துவிட்டு “ஓ! இவை நிச்சயமாய் நம் அரண்மனையிலிருந்தவைதாம்!” என்று அதிசயத்துடன்கூவிக் காளனை நோக்கி “ஏ!கள்வனே, இப்போதென்ன சொல்லுகிறாய்? கையுங்களவுமாய் உன்னைப் பிடித்த பின்னர் நீ உண்மையை மறைக்கமுடியாது. நேற்றிரவு இவைகளை நீ களவாடினாய் என்பது நிச்சயமே; உன்குற்றத்தை நீ ஒப்புக்கொள்கின்றனையா, இல்லையா?” என்று இரண்டாம் முறை வினவினான். இந்தக் கேள்விக்கும் காளன்மௌனமே சாதித்தான்.

“நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல உனக்கு இஷ்டமில்லையா, என்ன?” என்றுமீண்டும் ஒரு முறை அரசன் காளனை நோக்கி வினவினான். இதற்கும் காளன் மோனவிரதமே பூண்டான்.

“கள்வனே! நான் மூன்று முறை உன்னை வினவியும், நீ ஏதும் பதில் கூறாமல் மௌனம் சாதித்தாய். மௌனம் சாதிப்பது சம்மதம் அறிவிப்பது போலாம்” என்பதை நீ அறியாயோ? நீ கள்வன் என்பதையும் இவைகளைத் திருடியவன் நீயே என்பதையும் உன்னுடைய மோனவிரதம் நன்கு புலப்படுத்துகின்றது. ஆதலால் உன்னை நான் தண்டிக்கப் போகின்றேன்” என்று அரசன் ஆத்திரத்தோடு கூறினான்.

“அரசனே, மேலைவீதி கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட எழுவருள், இவனும் ஒருவனாவான். இதுவரை இவன் மறைந்து திரிந்தபடியாலிவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை அந்தக் குற்றத்தில் சம்பந்தம்பட்ட ஏனைய அறுவரும் சிறைச்சாலையிலிருந்து வருகிறார்கள். அந்தப் பெண்மணியை, அவளணிந்திருந்த ஆபரணங்களை அபகரிக்க வேண்டி, இவனே தன்னுடைய கையினால் குத்திக்கொன்றான் என்றும், அவர்கள் இவனுக்கு உதவியாக மாத்திரம் இருந்தார்கள் என்றும் அவர்களுடைய வாய்மொழிகளாலே நாம் அறிகிறோம். ஆதலால் அந்தக் குற்றம் சம்பந்தமாயும் இவனை விசாரித்து, இவன் கொலைசெய்தானென்று ருஜுவானால், கொலைக் குற்றத்திற்குரிய கடுந் தண்டனையையும் இவனுக்கு விதிக்கவேண்டுவது செங்கோன் முறையும், இராஜ தருமமுமாகும்” என்று அரசன் பக்கத்தில் நின்ற பிரதம மந்திரி இத்தருணத்

*(இதன் தொடர்ச்சி 77-ம் பக்கம்.)



# இராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

### இராமன் படையெழுச்சிச் சருக்கம்

(விவேகபோதினி 6-ம் தொகுதி 8-ம் பகுதி
308-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கன்னல் மொழியாள் அஞ்சனை மைந்தன்
கண்டு இராமரை காலில் வீழ்ந்து
மண்டு காதலால் மனத்தையும் செலுத்தி
நித்தமாம் பத்தியால் பரமனைப் பிணித்து
பத்தருக் கருளும் பரமனைத் தொழுது பின்
வானர வரசச்சுக்கிரீபனை யழைத்து
வானவர் சகாயனை நேயனா வாக்கிபின்
தாம்வசித் திடுமோர் வரைக்கழைத் தேகினன்.
பாம்பணைப் பள்ளிப் பரம்பொரு ளிடத்தே
வீரவானரரி னரசுசுக் கிரீவன்
தீரவாலிக்கும் தனக்கும் பெண்ணால்
விளைந்த பிரமாதச் சண்டையைச் சொல்லி
களைப்பினா லேங்கலும், கண்ணனு நோக்கி
அபயமு மளித்து அரசையு மீய
சபதமும் கூறி சாப வலவன்
தன்பலம் காட்டிட மராமரம் துளைத்து
பின்துந்துபியின் பேரெலும் பெற்றினான்
நித்தியப் பிரமச் சாரியா மனுமான்
பத்தியைச் செலுத்தி பரமனைப் பணிந்து பின்
சீதையெறிந்த சிறப்புடை நகைகளைத்
தாதையின் பாதத் தருகே வைத்து,
அய்யனே! அரக்கனி னிரதத் திருந்து
மெய்யனே! என்னனை யெறிந்தா ளிவை”யெனக்
கூறி, தொழும் சுக்கிரீவனோ டமர்ந்தான்.
மேரினை மானும் மாவில் லேந்தியும்
தேவியை நினைந்து தேம்பினன் மாதோ
தாவிப் பாய்ந்து தன்பகைக் கொன்றிடும்
சுக்கிரீபனெழுந்து சுவாமியைத் தேற்றி, பின்,
“ பக்கத்துளவென் படையினைக் கொண்டு
இராவணற் ஜெயித்து என்னனை மீட்ப” வென்
றிராமரைத் தொழுதான் எவர்க்கு மிக்கான்
பின்னர்,
திண்டோள் வாலியை தேவாதி தேவன்
சண்டைக் கழைக்கசுக் கிரீபனைப் பணித்தான்
சேயின் சேக்கையில் இராவணற் பிணித்த
மாயிரு புயத்த மாண்புடை வாலியைச்
சண்டைக் கழைத்தனன் சுக்கிரீபவேந்தன்.
திண்டோள் வாலியும் திடங்கொடு வந்தான்.
தினந்தினஞ் சென்று துந்துபி யெலும்பை
மனம் மயங்காது அசைத்திடும் வாலி
சண்டைக் கேகையிற் சகியாந்தாரை
சண்டைக் கேகலென் றவற்றடுத் தாளே.

(வேறு)

“ தசரத புத்திரர் தசதிசை விளங்கிய
புகழைப் கொண்ட புண்ணிய சீலராம்
இராமன் இலக்குவன் இவருடைப் பலத்தாற்
சண்டைக் கழைத்தான் சடுதியிற் காண்பீர்
வீரர் உம்மை வீட்ப” ரெனவே
தாரை சொல்லலும் தன் தாரத்திடம்
கடுகடுப் புடனே கண்கள் சிவந்திட
“ பாவி! பாவி! பாவியிற் பாவி!
குற்றமில் ஆதவ குலத்திற் கின்று
குற்றம் சாட்டினை கொல்லுவேன் நின்னை.
தந்தையே யாயினும் தனயனே யாயினும்
கொண்டவ ளாயினும் குற்றம் செய்திடில்
அரசனின் கடமை அவர் தண்டிப்பதே
பெண் நீ யானதாற் பேயே பொறுத்தேன்
ஆதவன் குலத்தின் அருளைப் பூண்டோர்.
பாதகம் செய்யார் பழிக்கஞ்சுபவர்
புறாவைக் காத்திடப் புண்ணியன் சிபியும்
உடலையே ஈந்த உண்மையீதறிவாய்
அலறினாய் பேயே அறிந்தே யிருந்தும்.
உஷினரன் குலத்தில் உதித்த இராமன்
அவ்விதம் செய்யான் அறிதி பேதாய்
நானோ விண்வாழ் தேவரின் நண்பன்.
மனுவின் நீதியை மனத்திற் பூண்டு
அதன்படி யொழுகு மரசனு மாவேன்.
பகற்குலத் தவர்க்கு மெற்கும் பகையிலை.
ஆகையால் என்னை அன்னவர் கொல்லார்.
சீதையைத் தூக்கிய சிறியோ னிராவணன்
றன்னை மாய்த்திட தயிரிய மற்றவன்,
என்னைக் கொன்றிட எவ்விதம் சாலும்?”
என்றிவை கூறி எழில்மா திருத்தி
சென்று தம்பியைச் சாடினன் மாதோ.
மறைந்தே யிருந்து மாய்த்தனன் வாலியை.
மனைவியையிழந்ததால் மனம்வெருணவன்.
வாளி வாலியின் மார்பிற் பாயலும்

(76-ம்பக்கத் தொடர்ச்சி.)

தில் மன்னனுக்கு எடுத்துரைத்தார். கொலையுண்ட பெண்ணின்வீட்டிலுள்ளவர்களுக்கும், வேறு சிலருக்கும்“விசாரணையழைக்கை”அனுப்பி வரவழைத்தும் சிறைச்சாலையிலிருந்த ஆறுகுற்றவாளிகளையுடனியாய விசாரணை மண்டபத்திற்குக் கொண்டுவரும்படி செய்தும் அரசன் இக்கொலைக்குற்றத்தைப் பற்றிப் புனர் விசாரணை செய்தான். காளனே அப்பெண்மணியைக் கொன்றானென்பது, இவ்விசாரணையில் ஐயந்திரிபற ருஜுவாய்விட்டது.

“காவலர்காள்! இவனைச் சிறைச்சாலையிலடைத்து வைத்திருந்து, இன்றை எட்டாம்நாள் கொலைக்களத்திற்குக் கொண்டுபோய், இவன் சிரசைச் சேதித்து விடுங்கள்!” என்று அரசன் ஆணை தந்தான். “கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்—தள்ளாது புத்தேளுலகு” என்னும் பொய்யா மொழிக்குக் காளன் என்னும் கள்வன் இலக்காயினன்.

நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்.

வாலியும் கரத்தால் வாளியைப் பிடித்து
இழுத்துப் பார்த்தலும் இராமனின் நாமம்
எழுதி யிருப்பதை ஏந்தலும் கண்டான்.
காண்டலும் கோபம் கடுமையாய்க் கொண்டு
மூர்ச்சையாய வீழலும் முகுந்தன் வந்தான்
மட்டியர் நாடிடு மறை விடத்திருந்து.
வலிமிகக் கொண்ட வீரன் வாலி
மூர்ச்சை தெளியலும் முகுந்தனை நோக்கி,
குலத்தினைக் கெடுத்த கோடரிக் காம்பே!
குலத்திற் கிழுக்கைத் தேடினை கொடிய!
சீதையைப் பிரியலும் சிந்தையு மிழந்தாய்.
புந்தியும் போயது புன்மையும் பூண்டாய்.
அருளை நீத்து அறத்தைக் காய்ந்தனை.
மறைவிடத் திருந்து மாய்க்கவு மெண்ணி
அம்பையும் விடுத்தாய் அறிவிலி பேதாய்!
வீர தர்மமு மிதுவோ? வீர உன்
வீரத்துவத்தை எவ்விதம் விளம்புவேன்.
மனுவின் நீதியை மறந்தனை போலும்.
கெட்டா லுயர்குலம் கீழா மென்று
உறுதியாய் நாட்டி உண்மையைக் கொன்றாய்.
கொலை பாதகனே! கொடுங்கோல் மன்ன!
இராக்ஷத னொருவன் இல்லாற்றிருடவும்
மலையில் வாழும் மந்தியைக் கொன்றிட
நீ படித்திட்ட நீதிநூல்யாவும்
புகல்கின் றனவோ புல்லிய கூறிடாய்:
என்னிடம் கூறில் என்வாலுமோமம்
ஒன்று சென்று ஒண்டோடி வாழும்
இலங்கையைக் கொண்டு இங்குவந்திடுமே
அவ்வித மிருக்க அற்பசுக்கிரீவனின்
உதவியால் உன்மனையாட்டியை மீட்க
எண்ணினை என்னை யறியாய் போலும்
வஞ்சித்திட்ட வஞ்சக!" என்றான்.
இந்தவார்த்தையை இலக்குவன் கேட்டு
வலிமிகக்கொண்ட வாலியை நோக்கி,
"தம்பியின்தாரம் பிள்ளையென் றெண்ணு
தணந்தனை யாதலால் உன்னுயிருண்டனம்
அரசநீதியு மிதுவேயறிதி.
மறைந்தேயிருந்து மாய்த்தகாரணம்
காலில் நீவிழின் காக்கவே வேண்டும்
என்றே எண்ணி இவ்விதம் செய்தோம்,"
எனலும் வாலி எம்பிராற் பார்த்து
"காலில் விழுந்தாற் காத்தலாகாது?
இதுதானுங் களிராஜ முறைமையோ;
பொய்வேடம்புனை புண்ணிய! பொய்யனே!
தவதிவேடந் தான் நீ கொண்டுளாய்.
வில்லியர் கைக்கொள் வில்லேன் கொண்டாய்?
தவதியின் தன்மையிதுவோ? தவதி!
பாதனன்றோ படிக்கா சாவன்
அவனேயல்லவோ நீதியைப் புரிபவன்
கொண்டைக் கேனோ பட்டுக் குஞ்சலம்?
அரசனின் தன்மையை அற்ப! நீ நாடினை
போதிலும்,
குரங்கினம் மனத்திற் கொள்ளுமோமுறைமை.
உண்மையிதனை உணர்ந்திலாய் போலும்,"
எனவேகடிதலை எம்பிரான் கேட்டான்
சொல்லேறுழவனின் சுடுசரம் பாயலும்
மனமிகவாடி மயங்கித் தியங்கி
வலவன் வாலியின் முகத்தினை நோக்கி,
"மங்கையைப் பிரிந்ததால் மதிதனை யிழந்து
மாய்த்தேன் மன்னவ! உன்மன மறிந்திலேன்
நீதி மன்னனென் றோர்ந்திலேன் நின்னை
மனைவியைப் பிரிந்து என்மனம் வாடிடும்போல்
மனைவியைப் பிரிந்த மன்னனுன் தம்பியின்
மனமும் வாடுமென் றெண்ணிமனத்தில்
அம்பையும் எய்தேன் அறிவிலி யாயினேன்
எய்தஎன் பாணம் இப்பவே மீட்டு
உன்உயிர் அளிப்பேன் உத்தம அறிதி" யென்
றருளையே பூண்டு அன்போ டறைந்தான்
பூர்வவாசனை புண்ணியன் வாலிக்
குண்டாயிற்று. உடன் அவ்வாலியும்
இராமனைநோக்கி, "ஈசனே! இராமா!
மராமரம் துளைத்த மகிபனே! கேளாய்
என்றைக் கிருபினும் இறப்பது நிச்சயம்
மண்ணும் மனைவியும் மக்களும் ஜாலமே
மற்றும்,
வடுப்படா ஜாதி வடுப்படிற் பிழையோம்.
காயம் பட்டாற் கருப்பனே யிறப்போம்
ஆகையால் எற்கு அளிப்பாய் கதியும்"
எனவே தொழுது எகினன் மோக்ஷம்
கிருஷ்ணனைச் சேர்ந்ததும் கிரியைகள் புரிந்தார்
கிரியைகள் முடியலும் கிருஷ்ணன் தம்பியால்
சுக்கிரீவற்கு சுவர்னமு டிதரிப்பித்
திளவளற் பட்டம் இனிதற புனைந்தான்
வாலி மைந்தன் வலவனங் கதற்கு
மாரிகாலம் மறைந்து போகலும்
வானரர் வந்து வணங்கின ரய்யனை.
வானர ரனுப்பினன் வஞ்சியைத் தேடட
தேடித் தென்திசை சென்ற அனுமான்
அங்கதன் முதலிய அனைத்துள வீரரும்
சென்று சபரிவாழ் பிலத்திற் றேடினர்
'இராமா! இராமா! இராமா!' யென்று
கூவிக் கூத்து மாடினர் பாடினர்
இந்திரன் சாப மீந்ததால் வருந்தும்
சபரியின் காதிலிச் சத்தம் படலும்
சாபம் நீங்கிச் சடுதியிற் சென்றாள்
இந்திரன் வாழும் இந்திர உலகம்.
ஜடாயுவின் மூத்தசம் பாதிவாழ் வரையை
அனுமாரடைந்தனர் வானர ருடனே
ஜடாயுவின் செய்தியைக் கேட்ட சம்பாதி
மனம்மிக வாடிபின் மாராமரம் துளைத்த
இராமனின் நாமம் செவிப்புக இறகுகள்
முளைத்திட வுடனே முந்நிலை யடைந்து
பறந்து சென்றது பக்ஷி யினரசும்
அனுமார் சென்று இலங்கையை யடைந்து



தேடித் தேடி பின் அசோக வனத்தே
சீதையைக் கண்டு ஸ்ரீ ராமனைத் துதித்து
மோதிர மீந்து பின் மொத்தி யாக்கரை
வனத்தை யழித்து வாட்டினர் வீட்டார்
இந்திர ஜித்து இதனைக் கேட்டு
பிரமாஸ்திரத்தால் பிணித்து அனுமனை
இராவணன் முன்னே இட்டுச் செல்லலும்
ஆசனமாக வாலினை அமைத்து
அனுமா ரிருந்தா ராக்க ரஞ்சிட.
வாளையுருவி வானர வீரனை
வெட்டிட வந்தான் வீண னிராவணன்
"கோமா தூதரைக் கொல்லலா லான் றது.
பூம தகலாப் புயனே போற்றினே"
னெனவே வீடணன் இசைத்த காலையில்
இராவண னெழுந்து அனுமனின் வாலில்
தீயை யிடலும் தீரன் மகிழ்ந்து
இலங்கையிற் றீயையிட்டு ஆர்த்தனன்
இலங்கையு மெரிந்து சாம்பலே யாயது
இலங்கையிற் றீயை யிட்ட பினனுமார்
சீதையை யடையலுஞ் 'சிரஞ்சீவி' யெனவே
அம்மை வாழ்த்தி அளித்தாள் ஆழியை
அனுமார் மீண்டு மய்யனை யடைந்து,
கண்டே னம்மையை அம்மையைக் கண்டேன்
எனவே போற்றி இயம்பலும், இராமன்
அடைந்த ஆனந்தம் அறைதலு மாகா.
அஞ்சனை மைந்தன் அய்யனைத் தொழுதுபின்
அம்மணி அணிந்திடும் சூடா மணியளித்
தானந் தத்தால் ஆடிப் பாடினன்.
பின்னர்,
அரக்கன் எலும்பைக் காலா லசைத்த
இராம னெழுந்து வானரருடனே
சமுத்திர மடைந்து சாகர வாசனை
அழைத்தலு மன்னவன் வாரா திருந்தான்.
நிற்க,
இலங்கையில் வீடணன் இராவணற் பார்த்து
அம்மை சீதையை அய்ய னிடத்துச்
சேர்த்திட வேண்டலும் செவ்விய கண்களை
உருட்டி விழித்து உருவி வாளை
வெட்ட வந்தனன் வெஞ்சினத் தோடே
மண்டோ தரியை மணந்த விராவணன்
வீடணன் பிழைத்து இராமனை யடைந்து
சரணம்புகச் சர்வேச்வர னேற்று
இலங்கையை உனக்கே ஈவே னென்றான்.
வருணன் வாரா திருத்தலைக் கண்டு
முனிந்து விடுத்தனன் முகுந்தன் வாளியை
வந்தான் வருணன் வாளிக் கஞ்சியே
வருணனி னுதவியால் வாரா வதிமுடித்
தெல்லா வீரரும் ஏகினர் இலங்கை.
'இலங்கையைச் சேர்ந்து இராமன் இன்பமாய்
வானர வீரர் வரிசையின் நடுவே
இலக்குண வேந்தனோ டிருந்தனன் மாதோ.

# கமலரேகை

## KAMALAREKA

### ஏழாம் அதிகாரம்

### சித்திரவர்மனும் கமலநாதனும்

"அரக்குமாளிகை" என்னும் பெயருடைய சூது மண்டபத்தில் கமலநாதன் மறுநாட் காலையில் தனியாக உட்கார்ந்து பல்துலக்கிக் கொண்டிருந்தான். "அரக்குமாளிகை" என்பது காஞ்சிபுரத்திலுள்ள ஒரு சூதுமண்டபம் என்பதையும், அங்கே கமலநாதன் சித்திரவர்மன் முதலானவர்கள் சூதாடுதற்காகக் கூடுவார்கள் என்பதையும் கதையின் ஆரம்பத்திலேயே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அச்சமயத்தில் ஒரு வேலைக்காரன் கமலநாதனிடம் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அக்கடிதத்தைக் கமலநாதன் பிரித்துப் பார்க்கவே, அது சித்திரவர்மனால் அனுப்பப்பட்டதென்பதையும், சித்திரவர்மனுக்கு உடம்பு அசௌக்கியமா யிருப்பதால் அவர் தன்னுடைய மாளிகைக்குவந்து தன்னை உடனே சந்திக்கும்படி கமலநாதனுகிய தன்னை அக்கடிதமூலமாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்பதையும் அவன் இனிதறிந்துகொண்டான்; காலை ஆகாரம் சாப்பிட்டு விட்டு அவன் "அரக்குமாளிகை" யிலிருந்து புறப்பட்டு ஏகம்பநாதர் வடக்கு வீதி 20-ம் எண்ணுள்ள சித்திரவர்மன் மாளிகைக்குச் சென்று அவரைச் சந்தித்தான். சித்திரவர்மன் அச்சமயம் ஒரு சாய்வான நாற்காலியில் உடம்பு முழுமையும் கம்பளியினல் போர்த்துக்கொண்டு சாய்ந்திருந்தார். அவருடைய முகம் வெளுத்துப் பளபளப்பாயிருந்தது. நெற்றியில் பலமான பற்று பூசப்பட்டிருந்தது. தரையில் அவருடைய காலோரத்தில் நெருப்புச் சட்டி ஒன்று இருந்தது. அவர் தம்முடைய கால்களை அச்சட்டிக்குச் சமீபத்திற் காட்டிச் சூடேற்றிக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திற் கிடந்த மேஜையின்மீது மருந்து சீசாக்களும், ஓர் 'அவுன்ஸ் கிளாஸும்,' ஜுரமறிகருவியும் சில பழ வகைகளும் இருந்தன. அவரையும், அவரிருந்த இடத்தையும், அவரைச் சுற்றிருந்த சாமான்களையும் அச்சமயம் பார்த்த எவரும் அவர் கொடியதொரு ஜுரநோயால் வருந்துகின்றார் என்பதை இனிதறிந்து கொள்ளுவார்கள். கமலநாதனும் அவரைப் பார்த்தவுடன் அவ்விதமே எண்ணினான்.

"என்ன, சித்திரவர்ம! இவ்விதமிருக்கின்றாயே? உனக்கு உடம்பு சுகமில்லை என்று உன் கடிதத்தால் அறிந்தேன். ஆனாலும் இவ்வளவு அபாயகரமான நிலைமையில் இருப்பாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. என்ன வியாதியினால் நீ பீடிக்கப்படுகிறாய்?" என்று கமலநாதன் மிகுந்த பரபரப்போடும் அச்சத்தோடும், சிநேகபாவ முதிர்ச்சியினால், முன்னிலை ஒருமைப் பிரயோகத்திலேயே சித்திரவர்மனைக் கேட்டான்.

“நேற்றிரவுதான் நான் சென்னையிலிருந்து இங்கு வந்தேன். வந்தவுடனேயே ஜுரம் வந்துவிட்டது. பித்தவாத ஜுரம் என்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்” என்று சித்திரவர்மன் விடை அளித்தான்.

“சித்திரவர்மா! இப்போது நீ என்ன மருந்து சாப்பிட்டு வருகிறாய்? யார் மருந்து கொடுக்கிறார்கள்?” என்று கமலநாதன் கேட்டான்

“கோயினா கலந்த மருந்துதான் சாப்பிடுகிறேன். வைத்தியர் ஆராவமுத ஐயங்கார் மருந்து கொடுத்து வருகிறார்” என்று சித்திரவர்மன் பதில் பகர்ந்தான்

“கொயினாவை ஏன் சாப்பிடுகின்றாய்? ஜுரத்தை அடக்கக் கூடிய குணம் அதற்கு இருந்தபோதிலும், அடியோடு நீக்கக்கூடிய சக்தி அதற்கு இல்லையே? அன்றியும், கொயினா சாப்பிடுகிறவர்கள் அடிக்கடி ஜுர நோயால் தாக்கப்படுகிறார்கள் என்று பிரபல வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்” என்று கமலநாதன் சொன்னான்.

“வேறு என்ன சிகிச்சைதான் செய்வது?”, என்று சித்திரவர்மன் மிக்க ஆருமையோடும், ஆயாசத்தோடும் வினவினான்.

“சித்திரவர்ம, நம்முடைய தேகத்தைப் பாதுகாத்து வருகின்ற சூக்கும உஷ்ண சத்தான விந்துதத்துவம், சூக்கும சீதளசத்தான நாததத்துவம் என்னும் இரண்டு பிராணாதாரமான சக்திகளுள், உஷ்ண சத்தானது நம்முடைய தேகத்தினுள் அசுத்தங்கள் நிறைந்துவிடும்போது, அவைகளை எரித்து நம் சரீரத்தைச் சுத்தப்படுத்தத் துவங்குகின்றது. அசுத்தங்கள் அதிகமாகச் சேர்ந்து விடுமானால், அவைகளை எரித்தொழித்து உடம்பைச் சுத்தப்படுத்துவதற்கு வேண்டப்படும் உஷ்ணசக்தி அதிகமாகிறது. ஆகவே, இயல்பாகவே நம் சரீரத்தில் அமைந்திருக்கும் சூடு மிகுந்த ஆற்றலுடன் அவ்வசுத்தங்களை எரிக்க ஆரம்பிக்கிறது. அவ்விதம் எரிக்க ஆரம்பிக்கும்போது அதனுடைய வேகம் அவ்வசுத்தங்களோடு அவைகளால் பற்றப் பட்டிருக்கும் சரீரத்தையும் சேர்த்து எரித்து விடுகிறது. இதனையே நாம் காய்ச்சல் அல்லது ஜுரம் என்று சொல்லுகிறோம். எனவே உடம்பினுள் இயல்பாக அமைந்திருக்கும் சூட்டின் மிகுதியாகிய காய்ச்சல் உடம்பைச் சுத்தப்படுத்துவதற்காகத் தோன்றும் ஓர் இயற்கை நிகழ்ச்சி என்பது தெள்ளிதிற் புலப்படுகிற தன்றோ? ஆதலால் இயற்கை முறையிற் றோன்றும் ஜுரத்தை இயற்கை முறையினால் குணப்படுத்துவதே சிறந்ததாகும். உடம்பில் முக்கியமாக விஷதிரவியங்கள் சேருமிடங்கள் இரைப்பை, சுவாசாசயம், மலமூத்திரக் குடல் மேற்றோலின் மேலுள்ள உரோமத் துவாரங்கள் முதலிய இடங்களே யாதலால் இவைகளைச் சுத்தப்படுத்தினால் ஜுரம் இலேசாக நீங்கிவிடும். ஜுரம் தோன்றியவுடன் ‘லங்கனம் பரம ஔஷதம்’ என்னும் பழமொழிப்படி ஆகாரம் ஏதும் உண்ணாமல் பட்டினியாக இரண்டொரு வேளை யிருந்தால் இரைப்பை சுத்தமாய்விடும். ஏற்கெனவே இரைப்பையிலிருந்த அசுத்தங்கள் பசித்தீயினால் தகிக்கப்பட்டுப்போம் சுத்தமான ஆகாயமுள்ள விடத்திலிருந்து பிராணவாயுவைச் சுவாசித்தால் சுவாசாசயம் சுத்தப்படும். நீர் ஏற்றும் குழாய்களின் வழியாய் மலக்குடலுக்குத் தண்ணீர் ஏற்றிக் கழுவினால் மலமூத்திரக் குடல் அசுத்தமற்றதாகிவிடும். வேது முதலியன பிடித்து உடம்பில் நன்றாய் வியர்வை அரும்பச்செய்து அடிக்கடி அழுந்தித் துடைத்துக் கொண்டே வந்தால் மயிர்த் துவாரங்கள் சுத்தப்படும். இவ்விதம் சுத்தப்பட்டவுடன் ஜுரம் தானே தணிந்து விடும். சுலபமான இந்த இயற்கை முறைகளை விடுத்து ‘மருந்து மருந்தென்று’ ஏன் கண்டவைகளை நீ உட்கொள்ளுகிறாய்? கண்ட மருந்துகளை உட்கொள்வதால் உடம்புக்கு கெடுதியேதவிர நன்மை சிறிதுமில்லை” என்று கமலநாதன் சித்திரவர்மனை நோக்கிக் கூறினான்.

‘நன்று; அவ்விதமே செய்கின்றேன், இப்போது எனக்கு உடம்பு சிறிது குணமாயிருக்கிறது,” என்று சித்திரவர்மன் தன் மொழியிலும் விழியிலும் ஒருவகையான உற்சாகக் குறிப்பு இனிது புலப்படும்படி பேசிக்” கமலநாதா!’ என அவனை மீண்டும் விளித்து “நீ நேற்று முன் தினம் இரவு சென்னையில் என்னைவிட்டுப் பிரிந்து போய் விட்டனையே, யாது காரணம்? நான் உன்னை நாடகப்பந்தலில் நெடுநேரம் தேடினேன். ஆனாலும், உன்னைப்போலவே பலர் உடை அணிந்திருந்தார்களாதலால் உன்னை அடையாளங் கண்டு அழைத்திடுதற்கு நான் அசக்தனானேன். அன்றிரவு என்னையும் என்னோடு வந்தஸ்திரீயையும் தனியே விடுத்து நீ மறைந்து விட்டனையே? எங்கே சென்றாய்? ஏன் மறைந்தாய்?” என்று உசாவினான்.

“நீ இப்போது என்னைக் கேட்ட கேள்விகளையே நான் உன்னைக் கேட்கவேண்டுமென்று கருதியிருந்தேன். ஆனால் நீ முந்திக் கொண்டாய்.” என்று கமலநாதன் புன்சிரிப்புடன் கூறி “நல்லது, சித்திரவர்ம! நீ என்னை விட்டுப் பிரிந்தாயா அல்லது நான் உன்னைவிட்டுப் பிரிந்தேனா என்னும் விஷயத்தைப் பற்றி நாம் வீணே விவகரித்தல் வேண்டாம். யார் பிரிந்தாலும், பிரிவு பிரிவே யாகும்; இப்போது மறுபடியும் சேர்ந்து கொண்டோம். ஆதலினால் அவ்விஷயத்தை அறவே மறந்துவிடு; நான் கேட்கும் இரண்டொரு கேள்விகளுக்கு மாத்திரம் விடை கூறி எனக்கேற்பட்டுள்ள ஐயத்தை அகற்று. நாம் நாடகம் பார்த்தற்காக இங்கிருந்து சென்னைக்குப் புறப்பட்ட அன்று பிற்பகலில் ஒரு ஸ்திரீ உன்னை இங்குவந்து பார்த்தாள் அல்லவோ? அவள்தானே உன்னையும் என்னையும் கட்டாயப்படுத்தி நாடகம் பார்ப்பதற்காகச் சென்னைக்கு அழைத்தவள். அவளிடம் என்னைப்பற்றி நீ பிரஸ்தாபிக்க நேர்ந்தபோது என் உண்மைப் பெயரைக் கூறாமல் “இவர்தான் திவான் பகதூர் சத்தியசந்தர்” என்று பொய்ப்பெயர் கூறினையே? அங்ஙனம் கூறியதற்குக் காரணம்



யாது? அவளுடைய பெயர் யாதென்பதையும், அவள் எவ்வூராள், எவ்வியல்பினள் என்பதையும் எனக்குக் கூறாமல் நீ மறைப்பதற்குக் காரணம் என்னை? இவைகளை நீ விளங்க விளக்கவேண்டும்” என்று மீண்டும் பேசினான்.

“கமலநாதா! இவ்விஷயங்கள் உனக்கு ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் எழுப்பிவிட்டிருக்கின்றன என்பதை நான் நன்குணர்வேன். ஆனாலும் வெறும் கமலநாதனைவிட மிக அரிதிற் கிடைக்கக் கூடிய ‘திவான்பகதூர்’ என்னும் கௌரவப் பட்டத்தோடு கூடிய சத்தியசந்தன் மேலானவன்தானே? இக்காலத்தில் கௌரவப் பட்டங்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன வாதலால் அவைகட்கு உண்மையான மதிப்பும் கௌரவமும் இல்லை என்று நீ கருதுகின்றாய் போலும்! ஆனாலும் ஒரு கௌரவப் பட்டம், தோட்டக் கச்சேரி மூலமாயும் உல்லாச விருந்து மூலமாயும் எத்தனை ஆயிரம் ரூபாவைக் கொள்ளை கொள்ளுகிறதென்பதை நீ சிறிது ஊன்றி ஆலோசித்தல் வேண்டும். நீண்டகால முயற்சியினாலும், சிறந்த சிபார்சுகளினாலும், பெரும் பொருட் செலவினாலும், சாமர்த்தியமான வெளி வேஷத்தினாலும் மிக அரிதிற் கிடைக்கும் கௌரவப் பட்டத்தை இவையெல்லாம் இல்லாமலே நான் எளிதில் உனக்குக் கிடைக்கும்படி செய்திருக்கும்போது நீ ஏன் வீணே மனங் கவல்கின்றாய்? நான் பொய்யாக உனக்கு அப்பட்டத்தைச் சூட்டினாலும் நீ அதனை மெய்யாகவே அளிக்கப் பட்டதுபோல் பாவித்து மகிழ்வுடன் ஏற்றுக் கொள்: நூற்றுக் கணக்காகக் காணப்படும் திவான் பகதூர்களில் நீ ஒருவனாதலால், நீ வகித்திருக்கும் அப்பட்டம் பொய்யான தொன்று என்பதைப் பொது ஜனங்கள் அறிந்துகொள்ளமாட்டார்கள். இனி, அந்த ஸ்திரீயின் பெயரை நான் சொல்லவில்லை என்று வருந்துகின்றாய். அவள் எவளாயிருந்தால் என்ன? அவளுடைய பெயர், ஊர் முதலியவைகளை நீ அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏதும் நேரவில்லை. அவளை இனி நீ சந்திக்கப் போகிறதே இல்லை. ஆதலால் நீ அவளைப்பற்றி ஒரு சிறிதும் அறிந்துகொள்ள வேண்டாம். அன்றியும் அவளைப் பற்றி நான் விவரம் ஏதும் சொல்லக்கூடாத நிலைமையில், அவளுக்கு நான் செய்து கொடுத்திருக்கும் சத்தியம், என்னை வைத்திருக்கிறது. ஸ்திரீகளினுடைய இரகசியங்களைக் காப்பாற்ற வேண்டுவது மனிதனுடைய கடமை. இக்காரணங்களால் என்னுடைய வாய் கட்டப்பட்டிருக்கிறது. ஆதலால் அவளைப்பற்றி என்னை நீ ஏதும் கேளாதே” என்று சித்திரவர்மன் வற்புறுத்திக் கூறுவானாயினான்.

“நல்லது, நீ இவ்விஷயமாய் ஒன்றும் சொல்ல வேண்டாம். ‘கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?’ என்னும் பழமொழியினை நன்கறிவேனாதலால், அவளைப்பற்றி அறிந்துகொள்வதற்காக உன்னை நான் கசக்கி முகரேன்! சென்னையிலிருந்து நீ திரும்பியபோது அவளும் உன்னுடன் திரும்பிவிட்டாளா? அல்லது சென்னையிலேயே அவள் தங்கிவிட்டாளா?” என்று கமலநாதன் வினவினான்.

“ஓ! அவளும் என்னோடு திரும்பிவிட்டாள். அவளும் நானும் பெரிய பண்ணை கண்ணியம் பிள்ளை என்னும் பிரபல தனவந்தருடன் அவருடைய ‘மோட்டார்’ வண்டியிலேறியே சென்னையிலிருந்து காஞ்சி நகர் வந்துசேர்ந்தோம். அவர் என்னுடைய நண்பராதலால், அவருடைய வேண்டுகோளுக்காக ‘மோட்டார்’ வண்டியிலேறி நாங்கள் வந்தோமே தவிர வேறில்லை” என்று சித்திரவர்மன் பதில் உரைத்தான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் கமலநாதனுக்குச் சித்திரவர்மன்மீது சிறிது சந்தேகம் உண்டாயது. இரயில் மார்க்கமாகத் திரும்பாமல் மோட்டார் ஏறி வந்ததற்கு ஏதாவது ஒரு முக்கிய காரணம் இருக்க வேண்டுமென்று கமலநாதன் எண்ணினான். அன்றியும், கண்ணியம்பிள்ளை தன்னை வேண்டிக்கொண்டதற்காக அவ்விதம் செய்ய நேர்ந்ததென்று சித்திரவர்மன் சொன்னதை அவன் சிறிதும் நம்பவில்லை. அப்பெயர்கொண்ட ஒரு தனவந்தர் உண்மையில் இல்லை என்பதைக் கமலநாதன் நன்கறிவான். கண்ணியம் பிள்ளை என்னும் பெயருடைய மனிதனே இல்லாதபோது, அப்பெயருடைய ஒருவர் மோட்டார் வண்டி வைத்திருந்ததாகவும் அதில் தான் ஏறிவந்ததாகவும் சித்திரவர்மன் கூறியது,

மலடிமைந்தனுந் தானுவிற் புருடனும்
வான்மலர் முடிசூடி—
இலகு கந்தர்ப்ப நகரினிற் சுத்திகை
யிரசதம் விலைபேசிக்—
கலகமாயின ரிடையினிற் கயிற்றாக்
கடித்திருவருமாண்டார்—
அலகையாயினர்

என்பதைப் போன்றதோர் அசம்பாவிதமான கதையேயாம் என்பதனை அவன் இனிதறிந்து கொள்ளாதிருப்பனோ? அந்த ஸ்திரீக்கும், நாடகப் பந்தரில் அன்று நடந்த கொலைக்கும் ஏதேனும் சம்பந்த மிருக்கலாமென்றும், அதனாலேயே அவள் பிறரறியாதபடி ‘மோட்டார்’ மூலமாய் பிரயாணஞ் செய்திருக்கிறாள் என்றும் கமலநாதன் சந்தேகமாய் நினைத்தான்.

“கமலநாதா! நாம் அநாவசியமான விஷயங்களைக் குறித்து ஏன் விவகரித்துப் பொழுதைப் போக்குகிறோம்? நாம் அன்று பேசிக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் பலனுண்டு. உன்னுடைய ஆலோசனை எந்தமட்டில் இருக்கிறது? என்னோடு சேர்ந்து வேலைசெய்து அந்த இரகசியத்தைக் கண்டுபிடிப்பதில் உனக்கு இஷ்டந்தானா? நம்முடைய முயற்சி கைகூடினால் நமக்குத் தனித்தனியே கிடைப்பது இரண்டரை இலட்சரூபா,—ஞாபகமிருக்கட்டும்” என்று சித்திரவர்மன் கூறிச் சம்பாஷணையை வேறுவழியில் திடீரென்று திருப்பினான். இச்சமயம் அவன் மிகுந்த உற்சாகத்தோடும் தைரியத்தோடும் பேசினான். அவனை அறியாமலே அவன் அவ்விதம்

பேசியதிலிருந்து கமலநாதனுக்கு இன்னும் ஓர் உண்மை புலப்பட்டது. அதாவது சித்திரவர்மன் உண்மையில் ஜுரநோயால் வருந்தவில்லை என்பதும், எக்காரணத்தை முன்னிட்டோ அவன் ஜுரத்தால் வருந்துபவனைப்போல் பாசாங்கு செய்துவந்திருக்கிறான் என்பதும், தன்னுடைய சதியாலோசனை விஷயமாய்ப் பேசிய உற்சாகத்தில் தான்பூண்ட பொய்வேடத்திற்கு இயைய நடிப்பதற்கு மறந்தவனாய் உண்மையைப் புலப்படுத்தி விட்டான் என்பதுந்தான்.

"சித்திரவர்மா! என்னுடைய அபிப்பிராயம் சிறிதும் மாறவில்லை. நான் ஏற்கெனவே இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனைபுரிந்து ஒருவிதமான முடிவுக்கு வந்துவிட்டேன். உன்னோடுசேர்ந்து வேலை செய்வதில் எனக்கு ஆட்சேபம் சிறிதுமில்லை. ஆனால் நன்மாறனைப் பற்றியும், அவன் சம்பந்தமான இரகசியங்களைப் பற்றியும் எனக்கு நீ விவரமாய் எடுத்துரைத்தல் வேண்டும். எவ்விதமான விவரமும் அறியாமல் 'கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல்' என்னை விட்டிருந்தால் நான் உன்னோடு சேர்ந்து வேலை செய்தல் எங்ஙனம் சாத்தியமாகும்" என்று கமலநாதன் வினவினன்.

"இவ்விஷயமாய் நீ ஏன் கவலைப்படுகின்றாய்? ஏராளமான பணம் கிடைக்கிறது! நான் சொல்வது போல் மாத்திரம் நீ செய்யவேண்டியது. நன்மாறனை நான் நன்கறிவேன். ஆதலால், எவ்வெச்சமயங்களில் எவ்வெவ்விதமாய் நடந்தால் காரியம் கைகூடும் என்று அறிந்துநடப்பதற்கு என்னால்முடியும்" என்று சித்திரவர்மன் விடை இறுத்தான்.

"நன்மாறனுடைய புத்திரியை நீ அறிவாயோ? அவளுடைய பெயர் கமலரேகைதானே? அன்றிரவு அவளைக் குறித்துத்தானே நீ என்னோடு வார்த்தையாடினாய்?" என்று கமலநாதன் சித்திரவர்மனைக் கேட்டான்.

"ஓ! அவளை நான் நன்கறிவேன். அவளைப்பற்றிய எல்லா விஷயங்களும் எனக்குத்தெரியும். ஆனால் என்னைப்பற்றி அவள் அதிகம் அறிந்திருப்பாள் என்று நான் நினைக்கவில்லை. அதுவும் ஒரு காரியத்திற்கு நலந்தான். ஏனெனில், என்னை அவள் அறிந்திருப்பாளானால், நம்முடைய முயற்சிக்கு அவள் இடையூறாகவே நிற்பாள்" என்று சித்திரவர்மன் சொன்னான்.

"நல்லது! இப்போது என்னை நீ என்ன சொல்லவேண்டுமென்று கேட்கிறாய்?" என்று கமலநாதன் அவசரக்குறிப்புத்தோன்ற வினவினன்.

"என்னோடு சேர்ந்து வேலைசெய்ய உனக்கு இஷ்டமுண்டா, இல்லையா என்பதை மாத்திரம் நான் அறியவிரும்புகிறேன்." என்று கூறினன் சித்திரவர்மன்.

"மனப்பூர்வமாய் உன்னோடு சேர்ந்து வேலைசெய்ய எனக்குச்சம்மதமே! அவ்விஷயத்தில் நீ எட்டுணையும் ஐயுறுதல்வேண்டாம்!" என்று வற்புறுத்தி உரைத்தான் கமலநாதன்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## I. ஆத்திசூடி விளக்கம்

### 41. கொள்ளை விரும்பேல்

இந்த ஸூத்திரத்திற்கு மூன்றுவிதப் பொருள்கள் உண்டு. (1) கொள்ளையடிக்கும்படியான தருணங்கள்வரினும் பிறர்பொருளை கைக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்திற்குக்கூட இடங்கொடாதே. (2) பிறன்பொருளை கைக்கொள்ளுவதிலேயே கருத்துடனிராதே. (3)நமது மனத்தை கொள்ளைகொண்டு தன்வசப்படுத்தித் தத்தளிக்கவிடும்விஷயபோகங்களை விரும்பாதே. இவைகள் முறையே அரசன் முதலியபெரிய நிலையிலிருப்பவர்களுக்கும் இரண்டாவது வ்யாபாரம் வக்கீல் வைத்தியம் முதலிய ஸாதாரண நிலையிலிருப்பவர்களுக்கும், மூன்றாவது, தம் நடத்தையை ஒழுங்குபடுத்திக்கொள்ள விரும்பும் முமுக்ஷுக்களுக்கும் பொருத்தமானவை.

(1) **கொள்ளை யடிக்க விரும்பாதே**:—பிறர் சொத்துக்களை எல்லாம் ஒரே அடியாக வாரிவிடும் தருணம் முக்யமாக அரசர்களுக்குத்தான் வரும். அரசர்கள் தமது விரோதிகளான வேற்றரசர்கள்மேல் படையெடுத்துச்சென்று அவர்களைமுறியடித்துவிட்டால், தமது ஸந்தோஷ மிகுதியால மிருகத் தன்மையிலிருக்கும் தமது போர்வீரர்களை, தோற்ற நாட்டின்மேல் கொள்ளைக்கு விடுவதுண்டு. அரசர்கள் இதைக் கவனியாமலிருந்தாலும் போர்வீரர்களே தமது ஸந்தோஷ ஆவேசத்திலே கொள்ளையடித்துவிடுவர்: அரசர்களும் அப்பொழுது அவர்களை விசாரித்து தண்டியாமல் விட்டுவிடுவர். இப்படிச் செய்யவே கூடாது என்றுதான் இதுவற்புறுத்துகிறது. தோற்றவர்களுக்கு துக்கம் எவ்வளவு இருக்கும்! அவர்களை மேலும் கொள்ளையால் வருத்துவது செத்தபாம்பை மறுபடி அடிப்பது, அரைத்த மாவை மறுபடியும் அரைப்பது போன்ற பயனற்றதும், செய்பவரது குணக்குறைவைக் காட்டுவதுமான தொழிலல்லவா? இப்படிப்பட்ட இழிவு, இரக்கமின்மை இவைகள் நிறைந்த கொள்ளைத் தொழிலில் எந்த புத்திமானாவது இறங்க இசைவனோ? ஆகவே இதை ஒருகாலத்திலும் அரசர் இடங்கொடுத்து வளரவிடவே கூடாது. மேலும் உண்மையாக துக்கப்படுவோர் துக்கத்தைக் கண்டு மரியாதையாக ஒதுங்கி, நம்மால் அவர்களைத் தேற்ற முடியாவிடில் சும்மாவிருப்பது அழகே ஒழிய அவர்களைத் தூண்டி மேலும் வருத்துவது எப்படிநன்னடக்கையாகும்? வருந்துபவர் வாய்ச்சொல் சாபம் போலப் பலித்துவிடும். ராவணன் திக்விஜயம் செய்துவருகையில் அயோத்திவாசி அங்கு இருந்த அனரண்யர் என்ற ராஜனை எதிர்த்தான் சண்டையில். அவர் தோற்றுவிழ அவரிடம் சென்று பரிஹாஸ வார்த்தை, தற்புகழ்ச்சி முதலியவைகளால் அவரை



மேன்மேலும் புண்படுத்தினன். இறக்கும் அவ்வரசன் தொந்திரவு பொறுக்கமுடியாது, "இந்தத் தருணத்திலும், ஸமயம் தெரியாது என்னை இப்படி வருத்துவதால், என் குலத்தில் பிறக்கும் ஒருவனாலே நீயும் இப்பாடுபட்டு இறக்கக்கடவாய்' என்று சபித்தார். அதன்படி பின்னர் ஸ்ரீராமசந்திரமூர்த்தியால் அநேக அவமானங்கள் பட்டு இறந்தான் ராவணன். இதுவுமன்றி தோற்றவரை மறுபடி கொள்ளை முதலியவைகளால் வருத்தலாகாது என்பதற்கு வேறு ஒரு முகாந்திரமும் உண்டு. ஒரு நாட்டை வேறொரு அரசன் ஜயித்துவிட்டால், அது அவனதாகிவிடவில்லையா? ஆகவே அங்குள்ளவர்கள் அவன்குடிகள் அல்லவா? அவர்களைக் கொள்ளைகளால் வருத்தினால் அந்த பாபம், அவர்கள் வருந்துங்கால் இடும் சாபம் எல்லாம் அந்தஜயித்தஅரசனையேசூழ்ந்து கெடுத்துவிடும். ஆதலால் அவன் ஜயித்த நாட்டுக் குடிகளை வருத்தாதிருத்தல் வேண்டும்.

அரசர்களைப்போலவே மேலான உத்யோகஸ்தர்களுக்கும்ஒருவாறு கொள்ளையடிக்குங்காலம் நேர்ந்துவிடும். இந்தக் கொள்ளைக்கு லஞ்சம் வாங்குதல் என்று பெயர். இப்படி லஞ்சம் வாங்குவதால் மேலான கௌரவஸ்தரெனப் பெயரெடுத்து உலகில் உலாவிவருபவர்கள் புதிய நாகரிகம் பரவிவரும் இக்காலத்தில் எங்கும் காணலாம். இக்காலத்திய செல்வம் செல்வாக்குடைய பெரியமனிதர்கள் நிலைகள் எல்லாம் தாம்நேரிடவாங்கிய லஞ்சத்தாலோ அல்லது தமது முன்னோர் வாங்கிச் சேர்த்த லஞ்சத்தாலோ தான் அமைந்தனவாக விருக்கும், பரம்பரை கௌரவஸ்தர்கள் மிகச் சிலரே. உலகமே இப்படி லஞ்சத்தை, வெகுமதி என்றும், நன்கொடை என்றும், நன்றிமறவாமை என்றும், நேரிட உறந்த லஞ்சம் என்றும் அநேக விதமாகவாங்கி ஓங்கும் பெரியோர்களால் நிறைந்துவிடக்கூடிய காலம் வந்துவிட்டபடியால் ஔவையார் கூறிய ஸூத்திரத்திற்கு இப்பொருள் இக்காலத்திற்கேற்ப மிகப் பொருத்தமானதே. இந்தமாதிரியான புதுவிதப் பெரியோரை அதிகமாக வளரவிடாமலிருப்பதற்கே ராஜாங்கத்தாரும் மிகுந்த நுண்ணறிவுடன் படித்தவருக்கும் நற்குடிப் பிறந்தோருக்குமே உயர்ந்த வேலைகளைக் கொடுக்க ஏற்பாடும் செய்துவருகின்றனர். இதனால் காலக்கிரமத்தில் பரம்பரைப் பெரியோர்கள் அதிகப்பட்டு இவ்விதக் கொள்ளை விரும்புவது நமது உத்யோகஸ்தருள் குறைந்துவரலாம்.

(2) **பிறர் பொருளைக் கவரவிரும்பாதே**:—முன் பொருளில் காட்டப்பட்ட அரசன் கொள்ளை, உத்யோகஸ்தர்கள் கொள்ளை இவைகள் கெட்டவைகள் ஆகையால் கூடியவரையில் இவைகளைத்தடுக்கவேண்டுமென்று எல்லோருக்கும் தோற்றலாம். ஆனால் தத்கால நாகரிகத்தால் நன்மைபோலத் தோற்றுவதான ஒரு கொள்ளை நமது ஸமூக வாழ்க்கையில் பரவி பெருங்கேடு விளைத்து வருகிறது. பசுத்தோல் போர்த்த புலிபோல பொதுஜனங்கள்சொத்துக்களை ஸாவதானமாக உறிஞ்சும் கொள்ளைக்காரர் மூவர் இக்காலத்தில் ஓங்கிவருகின்றனர். முன்னர் கூறிய அரச உத்யோகஸ்தருக்கிருக்கும் கொடுங்கோன்மை இவர்களுக்கு இல்லாது இவர்கள் நல்லகீர்த்தியுடனேயே தமது கொள்ளைத்தொழிலை நடாத்துகின்றனர். இவர்கள் பெயர்களைக் கூறிவிட்டால் எல்லாம் உடனே விளங்கிவிடும். இவர்கள்தான் நமது வியாபாரிகள், வக்கீல்கள், வைத்யர்கள். இவர்கள் கொள்ளைத்தொழிலைப்பற்றி அதிகமாக விஸ்தரிக்கப்போனால் பலருக்கு மனம் கலங்கும். இப்படி இவர்களை எடுத்துக் காட்டியதே எல்லோருக்கும் இவர்கள் ஸமாதானக் கொள்ளையின் தன்மை விளங்கி இருக்கும். இவர்களைநோக்கியே இந்த ஸூத்திரம் ஹிதோபதேசம் செய்கிறது. இவர்கள் இதைக் கருத்துட்கொண்டு ஒழுகுவாராயின் நமது ஸமூகவாழ்க்கையில் ஏழைகள் அதிகமாகாது எல்லோரும் செழித்துஓங்க இடமுண்டு.

(3) **விஷயபோக விருப்பத்திற்கு இடங்கொடேல்**:—விஷய போகங்களுக்குக்கெல்லாம் ஒருவித விழுங்கும் தன்மையுண்டு. அவைகளின் அனுபவத்தை ஒருவித தூக்கம், அல்லது மூர்ச்சைக்கு ஸமம் என்றுதான் கூறவேண்டும், விஷயானுபவம் இவ்வாறு நமது உணர்ச்சியையே கொள்ளை கொள்ளும் தன்மை வாய்ந்தது. ஆதலால்தான் அதைக் கொள்ளை எனப் பெயரிட்டு இந்த ஸூத்திரத்தில் அழைத்திருப்பது பொருந்தும். விஷய ஸுகம் ஆராய்ந்து பார்க்கும் விவேகிகளுக்கும் துக்கமாகத் தோற்றும். இந்த ஸுகத்திற்கு முன்னிலையாயும் இதை அதிகப் படுத்துவதாயும் உள்ளது ஆசை நிலை. இது வீண் மனச் சஞ்சலம்தானே! இது ஸுகமா துக்கமா? இந்த ஆசைப் பரபரப்பால் ஸுகம் கிடைத்தால் அதை அனுபவிக்குங்கால் ஒருவித மூர்ச்சை நிலை, இடையில் உணர்ச்சிவருகையில், அனுபவம் நின்று 'இது மிகுந்த ஸுகமாக இருக்கிறதே! இது மாறிவிடும் தன்மையுடையதல்லவா! மாறாது இப்படியே இருந்தால்தானே நலம்' என்று இயற்கைக்கு விரோத எண்ணத்தால் வருத்தம்தான். ஸுகம் அதிகமாகிவிட்டால் திகட்டுவதால் ஒருவித வெறுப்பாகிய துக்கம்தான். ஸுகம் முடிந்த பிறகு ஐயோ போய்விட்டதே என்ற ஏக்கம், அதை மறுபடியும் அனுபவிக்கவேண்டும் என்ற ஆசை விஷயானுபவத்தால் அதிகமாகி வருத்தும் துக்கம் ஆகிய இவைகளேதான் இருக்கும். இப்படி விஷய ஸுகம் துக்க பூர்ணமாகவிருந்தும் அதில் வலிய நமது புத்தி இழுபடுவதாகிய துக்கம் ஒன்று.என்ன விவேகத்தால் தடுத்தும் விஷயானுபவ இழுப்பு பலமாக விருப்பதாலும், நமது நன்முயற்சியை வீணாக்கும் கொடிய குணமிருப்பதாலும் விஷயம் துக்கம்தான். இது பற்றியே ஒரு கிண்ணத்தின் வெளியில் செதுக்கியிருந்த காதலியைத்தூரத்தும் காதலன் உருவத்தைக் கண்டு 'ஐயோ! எப்பொழுதும் இப்படியே இருந்தால்தான்ஸுகம். கைக்கெட்டிவிட்டால் மயக்கம்

தானே! ஸுகம்தெரியாதே!' என்று வியந்து கூறியுள்ளார் ஒரு ஆங்கலகவி. இங்கு அடியில் வரையப்பட்டிருக்கும்மொழிபெயர்ப்பில்காணப்படுவதுவிஷயானுபவ திகட்டிற்கு உதாரணம். இவைகளை எல்லாம் பார்த்தால், மனிதனுக்கு ஒருவித ஆவலுண்டு. அதைத் தீர்த்துக்கொள்ள விஷய அனுபவத்தால் முடியுமென்று கருதி அவன் வெளிப்படுகிறான். விஷயானுபவம் அந்த ஆசை தலை எடுக்கவொட்டாது சற்று மயக்குகிறதே ஒழிய முடிவில் ஆசை அதிகமாகிவிடுகிறது. ஆதலால் மனிதன் ஆசையை முற்றிலும் தீர்க்கவல்லவஸ்து இவ்வுலகில் இல்லை என்பதுதான் விஷயானுபவத்தால் விவேகிகளுக்கு வெளியாகும். ஆகவே விவேகிகளுக்கு விஷயானுபவம் துக்கமாகத் தானிருக்கும் மேல் நிலைகிட்டும்வரையில். இந்த துக்க உணர்ச்சியைத்தான் பதஞ்சலிபகவான் தமதுயோக ஸூத்திரத்தில்:—

'காரணம், இடைத்தாபம், முடிவு, நற்பாவனைக்கு மாறாயிருத்தல் ஆகிய இவைகளால் எல்லாம் துக்கமே விவேகிகளுக்கு' என்று சுருக்கிக் கூறியுள்ளார்.

ஆதலால் விவேகிகள் எக்காரணத்தாலும், இப்படி நமது மனதைக் கொள்ளைகொண்டு துக்கத்தை ஸுகமாகக் காட்டி நம்மைக் கழுதைகளாக்கும், விஷய ஸுகத்தை விரும்பலாகாது என்று எச்சரிக்கைசெய்கிறாள் ஒளவை இந்த ஸூத்திரத்தில் மானிடப்பிறப்பின் பலத்தை அடைந்து ஈடேற முயலும் விவேகிகளை நோக்கி. இப்பொருள் முற்கூறிய பொருள்களை யெல்லாம் அடக்கியுள்ளது என்று கூறவும் வேண்டுமோ?

# II மொழிபெயர்ப்புவிளக்கம்

## TRANSLATION MODELS

### Man and Brutes

'What,' said he, 'makes the difference between man and all the rest of the animal creation? Every beast that strays beside me has the same corporeal necessities with myself he is hungry, and crops the grass; he is thirsty and drinks the stream; his thirst and hunger are appeased, he is satisfied and sleeps; he rises again, and is hungry; he is again fed, and is at rest. I am hungry and thirsty, like him, but when thirst and hunger cease I am not at rest. I am like him pained with want, but am not like him satisfied with fulness. The intermediate hours are tedious and gloomy; I long again to be hungry, that I may again quicken my attention. The birds peck the berries or the corn, and fly away to the groves, where they sit in seeming happiness on the branches, and waste their lives in tuning one unvaried series of sounds. I likewise can call the lutanist and the singer; but the sounds that pleased me yesterday weary me to-day, and will grow yet more wearisome to-morrow. I can discover within me no power of perception which is not glutted with its proper pleasure; yet I do not feel myself delighted. Man surely has some latent sense for which this place affords no gratification; or he has some desires distinct from sense, which must be satisfied before he can be happy.'

—Samuel Johnson, Rasselas.

**மனிதனும் மற்றைய பிராணிகளும்**

அவன் கூறலுற்றான்:—

மனிதனுக்கும் மற்றைய பிராணிகளுக்கும் உள்ள வேற்றுமைதான் என்ன? என்னருகே ஓடியாடி உலாவும் ஒவ்வொரு மிருகத்திற்கும் எனக்குள்ளது போலத்தானே உடற்றேவைகள்உள: அவைகளுக்கு பசி உண்டானால் புற்கொய்துண்ணுகின்றன: தாஹம் எடுத்தால் நீரோடைகளில் நீர் பருகுகின்றன: உடனே பசிதாகம் அடங்கி விடுகின்றன. திருப்தியுடன் உறங்குகின்றன: மறுபடி எழுந்ததும் பசிவார உண்டு ஓய்ந்திருக்கின்றன. அவைகளைப்போல எனக்கும் பசிதாஹம் உண்டாகின்றன: அவை நீங்கியதும் எனக்கு ஓய்வுமாத்திரமில்லை. அவைகளைப் போல எனக்கும் விருப்பத்தால் வருத்த முண்டாகின்றது. ஆனால் அவைகளுக்கு உண்டாவதுபோன்ற முழுத் திருப்திமாத்திரம் வருவதில்லை. இடை நேரங்கள் எல்லாம் வெறுப்புண்டாக்குவதாயும் மந்தமாயும் காணப்படுகின்றன. நான் கருத்துடன் சுறுசுறுப்பாகிவிட மறுபடி சீக்கிரம் பசிவாராதா என்ற விருப்பம் உண்டாகின்றது; பக்ஷிகளோ சிறுகாய்களை அல்லது தான்யங்களைக் கொத்திக்கொண்டு சோலைகளுள் பறந்து சென்று, ஒரேவிதத் தொடர்ச்சியுடைய ஸ்வரங்களை வாய்விட்டு மீட்டிக்கொண்டு வாழ்நாளைச் செலவிட்டு மிக்க ஆனந்தத்தோற்றத்துடன் அங்குள்ள கிளைகளில் அமர்ந்திருக்கின்றன. எனக்குக் கூட இதைப்போலிருக்க பாடகர்களையும் வீணை வல்லவர்களையும் அழைக்கும் திறனுண்டு. ஆனால் நேற்று மனதைக் கவர்ந்த ஸ்வரங்களை இன்று கேட்டால் அலுத்துபோய்விட்டவை போலிருக்கின்றனவே! மேலும் நாளை அதிகமாகத்தானே அலுத்துப்போனதாகப்படும் அவைகள் !! என்னுள் தகுந்த விஷயஸுகத்தால் திருப்திப்படுத்தப் படாத ஒரு உணர்ச்சிகூட இருப்பதாகத் தோற்றவில்லையே! இப்படி இருந்தும்

(இதன் தொடர்ச்சி 85-ம் பக்கம்.)



# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDRENS' & LADIES' PAGES

இம்மொழி காதில்விழ, மாதுசிரோமணி ஸுகன்யை வெட்கி, "தேவபுத்திரர்களே, நான் சர்யாதி மஹாராஜனது ஒரே குமாரத்தி; அருகிலிருக்கும் ச்யவனமகரிஷியை தர்மபத்தினியாக மனதொப்பி மணந்தவள். என்பர்த்தா கண்ணிழந்தவர், வயதுசென்றவர். நான் அவருக்கு அல்லும் பகலும் பக்தியோடு பரிசரியை செய்துவருகிறேன். நீங்கள் யார்? இங்கு வந்தகாரணம் யாது? கொஞ்சதூரத்துக்கப்பால் ச்யவனரிருக்கிறார். அங்கெழுந்தருளி ஆச்ரமத்தைப் பரிசுத்தப்படுத்துங்கள்" என்றாள்.

இது கேட்டு அச்விஸிகுமாரர்கள் ஸுகன்யையைப்பார்த்து மறுபடி "இதென்ன விபரீதம்! இவ்வளவு அவலட்சணங்களுடன் கூடின ரிஷிக்கு உன்னைத் தானம் பண்ண உன்தகப்பனுக்கு எவ்விதம் மனம் துணிந்ததோ! கிளியை வளர்த்து பூனைக்குப் பறி கொடுத்தது போலாயிற்றே! வானத்தில் மின்னலுலாவுவதுபோல் இவ்வனத்தில் நீசஞ்சரிக்கின்றாய். அப்ஸரஸ்திரீகளில் கூட உனக்கு நிகருள்ளவள் காண்பதரிதே. பட்டுடுத்தி ஆபரணங்களால் சிங்காரிக்கவேண்டிய உன் ஸௌந்தர்ய சரீரத்தில் மான் தோலும் மரப்பட்டையுமெவ்வாறு ஏறினவோ? நீ புதிதாய் யடைந்திருக்கும் யௌவனமும் வீண், உன் வாழ்நாளும் வீணே. அந்தோ! விதியின்பயனோ இது? பிரும்மா ஒன்றுந்தெரியாதவரோ? காட்டில் இக்கஷ்டமனுபவிக்க உன்னை விதித்தனரே! ச்யவனர் ஒருவிதத்திலும் உனக்கேற்ற கணவனல்லவே! பெண்ணாசை பொன்னாசை, மண்ணாசையென்ற மூன்றுவித ஆசைகளையும் விட்டவர். துறவி. சிறிதும் கவலைகொள்ளாமல் அவரைத் தள்ளிவிட்டு, ஏ! சஞ்சலக்கண்ணே, வேறுபதி நீயடைவதே மேல். அதுவே நலம்! அதுவே உத்தமம். நீ ராஜபுதல்வியாதலால், ஸம்ஸார ஸுகமின்னதென்று நன்றாய் யறிந்திருப்பாய். ஆதலால் யோசித்து எங்களிருவருள் ஒருவரைப் பதியாகக் கொள். நாங்கள் ரவி குமாரர்கள்! உன்னை எங்களோடழைத்துப்போகிறோம் வா. தேவர்களிருக்குமிடத்தில் எங்கள் மாளிகைகளிலும், நந்தவனத்திலும், உத்தியானங்களிலும், உன்னிச்சைப்படி சகிமார்களுடன் விளையாடித்திருப்திகொள். காலில் வலியேற வனத்திற் றனியே யலைந்து காய்கிழங்கு ஜலம் கொணரவேண்டாம். கண்ணிழந்த முனிவரோடு மானக்கேடான வாழ்வுமுனக்கு வேண்டாம்" என்று வேண்டினார்கள்.

இக்குரூர வார்த்தை செவியில் அம்புபோல் மோதித்துளைக்க, ராஜகுமாரி நடுநடுங்கி, "நீங்களோ ரவி புத்திரர்கள், தேவர்கள்; எல்லா மறிந்தவர்கள். அப்படியிருக்க தர்மமார்க்கத்தையே நாடும் பதிவிரதையைப்பார்த்து என்னென்னவார்த்தை சொல்லுகின்றீர்கள்! சர்யாதி மகாராஜனுக்குப் பிறந்து, ச்யவனரை மணந்து, கேவலம் வியபசாரிகளுக்கேற்ப மார்க்கத்தை யனுசரிப்பதா? ஸகலலோகத்திற்கும் கர்மஸாக்ஷி சூரியன். கச்யபருடைய தனயன்; நீங்களோ ரவிபுத்திரர்கள் இவ்வாறுபேசுவது உங்களுக்கழகோ? இது எங்கடுக்கும்? தர்மம் அதர்மம் இவைகளையறிந்த குலஸ்திரீயொருத்தி, தான்அக்கினிசாட்சியாய்க்கொண்ட புருஷனை விட்டுக் கண்டவனை யடைவாளோ? இனி என்னைத் தொந்திரை செய்யாமல் வந்தவழி போய்ச் சேருங்கள். இல்லாவிடில் ஸ்திரீசாபம் பொல்லாதது. சபித்துவிடுவேன். நான் ஸுகன்யை, சர்யாதி மகாராஜனின் புதல்வி, பதிபத்தியே மேலாய்க் கொண்டவள் என ஞாபகமிருக்கட்டும்" என்று கடுகடுத்துக்கூறினாள்.

வானசாரிகள் இருவரும் அதிசயப்பட்டு ரிஷியின் சாபத்துக்கு பயந்தவர்களாய் ஸுகன்யையை நோக்கி "உத்தமியே. உன் தர்மசிந்தையால் மகிழ்ந்தோம்; உனக்கு ஒரு வரமளிப்போம், நாங்கள் தெய்வலோகத்து வைத்தியர்கள்! எங்களுக்கு உன் பதியை அழகுவாய்ந்தவராகவும் யௌவனத்தோடு கூடினவராகவும் செய்யத் திறமையுண்டு; நாங்களிருவரும் உன் பதியும் ஓரொருபசரீர மெடுத்துக்கொள்ளுகிறோம், அப்பொழுது எங்கள் மூவருள் ஒருவரைப் பதியாக வரித்தெடுத்துக்கொள்" என்று புகல அவள் ஒன்றும் பதில் பேசாமல் தன் பதியிடம் சென்று நடந்த வரலாற்றை யவருக்குத்தெரிவித்து, "ஸ்வாமி ஏதுத்தரவு செய்கிறீர்களோ அதன்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றாள். அதற்கு ச்யவனர் "காந்தே! தாமதியாதே, சீக்கிரம் போய்த் தெய்வலோக வைத்தியர்களை யிட்டுவா" வென உத்தரவளித்தார். ஸுகன்யை போய் அவர்களை யழைத்து வந்தாள். வந்ததும் அவர்கள் ஸுகன்யையிடம் "உன்பதி ஜலத்தில் ஸ்நானம் செய்யட்டும்" என்று சொல்லித் தாங்களும் ஏரியில் மூழ்கிவிட்டு, மூவரும் யௌவனமடைந்தவர்களாக, ஒரே ரூபம் அவயவங்கள் அமைக்கப்பெற்று, ஒரே வேஷம்பூண்டு, ஒரேவித ஆபரணங்களால்அலங்கரிக்கப்பட்டு, ஸுகன்யைமுன் வந்து நின்று, ஒரே ஸமயத்தில், ஒரே குரலோடு அவளைநோக்கி, "கமலக்கண்ணே! எங்களுள் யாரிடத்து உனக்குப் பிரியமதிகமோ, அவரைப் பதியாக வரித்துக்கொள்" என்றார்கள்.

ஸுகன்யை, இம்மூவரும் சிறிதும் வேற்றுமையின்றி யிருந்ததைப்பார்த்து மனக்கலக்கமுற்று, "இச்சமயத்தில் நான் என் செய்வேன்? தேவர்களாய் வந்தவர்கள், இந்திரஜாலமல்லவோ செய்து விட்டார்கள். என்பதியைத் தவிர்த்து வேறு யாரையாகிலும் வரிப்பேனோ? எனக்கு மரணகாலம் கிட்டிவிட்டது

(84-ம் பக்கத்தொடர்ச்சி.)

வரம்புமீறிய உள்ளக்களிப்பும் உண்டாகவில்லையே!! மனிதனிடம் ஒரு நுட்பமானபொறி ஒன்றுள்ளது: அதைத்திருப்திப்படுத்த இங்குஒன்றுமில்லை: அல்லது மனிதனிடம் பொறிகட்கு அப்பாற்பட்ட அவாத்தான் உள்ளதோ! அது திருப்திப்பட்டடங்கினால்தான் அவனுக்கு ஆனந்தம் வரும்போலிருக்கிறது."

போலிருக்கின்றதே" யெனத் திகைத்து, ஒன்றும் புரியாதவளாய் ஈச்வரியைக் குறித்து "அம்ப, உன்னையே சரணமடைந்தேன். சொல்லமுடியாத் துக்கமனுபவிக்கிறேனே; நீ தான் என்னை இரட்சித்தருளவேண்டும். தாமரையிலிருந்துதித்தவளே, சங்கரனுக்கு நாயகியே, மகாவிஷ்ணுவுக்குப் பிரியமான லட்சுமியே, வேதங்களுக்கெல்லாம் மாதாவாகிய ஸகலகலாவல்லியே,ஸ்தாவரஜங்கமங்களைஸ்ருஷ்டித்தவளே, அக்ஞானிகளுக்குப் புத்திபுகட்டி, ஞானிகளுக்கு மோட்சம் கொடுப்பவளே, உனது பக்தர்களுக்கு ஜயம், கீர்த்தி முதலியவை தருபவளே, என் அன்னையே, என் பதிவிரதா தர்மத்தை நீ காக்கவேண்டும். உன் காலில் பணிந்து வீழ்கிறேன். எனக்கு வேறு கதியில்லை" யென்றும் மற்றுமநேக விதத்தால் தோத்திரஞ் செய்தனள். ஸர்வலோக மாதாவானதிருபுரசுந்தரியினருளால் ஸுகன்யை மனதில் ஞானமுதித்தது. மூவரையும்பார்த்து தன்பதியையே மனதால் நிதானித்து வரித்தாள்! ச்யவனர் வரிக்கப்பட்டதும் தேவவைத்தியர்கள் மூக்கில்விரல்வைத்து, ஸுகன்யையின் பாதிவிருத்தியதர்மத்தை மெச்சி, வெகு வியப்புற்றவர்களாக அவளுக்கு வாக்களித்த வரத்தைக் கொடுத்து, ஸுரலோகம்போக உத்தரவு கேட்க, ச்யவனர் அவர்களைநோக்கி "ஓ தேவகுமாரர்களே, நானடைந்திருக்கும் ஸம்ஸாரஸுகத்தை என்னென்று சொல்வேன்! வயது முதிர்ந்து, ஆசைவிலகி, கண்களிழந்து வனத்தில் தவஞ்செய்து கொண்டிருந்தவெனக்கு உங்களால் என்ன பாக்கியம் கிடைத்தது! கண்களிரண்டிலும் புதிதாய் வெளிச்சமுண்டாகிவிட்டது. மின்னலொளியாளை எனக்கே பத்தினியாக அடைந்தேன். யௌவனம் பெற்றேன், அழகுபடைத்தேன். தேவர்களே, நீங்கள் எனக்குச் செய்த இவ்வகை நன்மையால் பேரின்பமடைந்தேன். ஆனால் பூமியில் ஒரு விதத்திலும் கடன்படக்கூடாதே! நீங்கள் எதாகிலும் பிரதியுபகாரமாக என்னிடமிருந்து அடையவேண்டும்" என்றுவேண்ட, அவர்கள் ஒருவரோடொருவர் சற்றுயோசித்து, தம்பதி சமேதராயிருந்த ச்யவனரைப்பார்த்து "ரிஷிச்ரேஷ்டரே, பிதாவின் மகிமையால் நாங்கள் ஒருகுறையின்றியிருந்தும் பிரும்மதேவன் 'மகாமேரு' மலையில் யாகம் நடத்தினபொழுது, மற்றதேவர்களுடன் கூடி வைத்தியர்கள் ஸோமபானம்செய்யத்தகுதியற்றவர்களென தேவேந்திரனால் இகழ்ந்து தள்ளப்பட்டோம். உங்களால் கூடுமாயின், மிக்க ஆசையுற்றிருக்கு மெங்களுக்கு ஸோமபானம் செய்துவைக்கவேண்டு மெனக்கூறினார்கள். ச்யவனர் அதற்கிணங்கி, "சர்யாதி மகாராஜன் நடத்தப் போகிற பெரிதானயாகத்தில் இந்திரன் விழித்துக்கொண்டி ருக்கையிலேயே, உங்கள் ஆவலைத் தீர்த்துவைக்கிறேன். நீங்கள் கவலையற்றிருங்கள்" என விடையளித்தார்.

இவ்வார்த்தைகளைக்கேட்டு அகமகிழ்ந்த அச்வினி குமாரர்களிருவரும் விடைபெற்று மேலுலகம்சென்றார்கள். ச்யவனரும் ஸுகன்யையைக் கையில் கோர்த்திட்டு ஆச்ரமமடைந்தார். முற்றும்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**கோர்ட் பீஸ் ஸ்டாம்புகளின் செலவு:—** சென்ற 1913-ம் வருஷம் மார்ச்மாதம் 31-தேதியோடு முடிவான ஒருவருஷத்தில் சென்னைமாகாணத்தில் கோர்ட் பீஸ் ஸ்டாம்புகளும் காப்பிஸ்டாம்புகளும் மாத்திரம் 89,01,000 ரூபாய்க்குச் செலவாயிருக்கின்றன. ஆனால் அதற்கு முன் வருஷம் அவை 8104000 ரூபாய்க்குச் செலவாயின. அதனால் பிரிட்டிஷ் ராஜரீகத்தில் வாவரக் கோர்ட் வியவகாரங்கள் மிகுதிப்பட்டுவருகின்றன வென்று தெரிகின்றது. வக்கீல்கள் என்ற வகுப்பாரும் அதிகரித்து வருகின்றனர்.

***

**ஹைகோர்ட் ஜட்ஜிகளின் சம்பளம்.—**கல்கத்தாவில் இப்பொழுது பாரிஸ்டராயிருக்கும் மிஸ்டர் நார்டன் அங்குள்ள ஹைகோர்ட்ஜட்ஜிகளுள் ஒருவரான ஜஸ்டிஸ் இமாமைப்பற்றி கல்கத்தாக் காப்பிட்டல் பத்திரிகைக்கு ஒரு வியாசம் எழுதியுள்ளார். அதில் அவர் ஹைக்கோர்ட் ஜட்ஜிகள் கவுன்ஸில் மெம்பர் வேலையை விரும்பாதிருக்குமாறுஜட்ஜிகளின் சம்பளமும் கவுன்ஸில் மெம்பர்களின் சம்பளமும் சமமாயிருக்கும்படி ஜட்ஜிகளின் சம்பளத்தை 4000 ரூபாயிலிருந்து 5000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கூறுகிறார். ஹைகோர்ட் ஜட்ஜிகள் கவுன்ஸில் மெம்பர் ஸ்தானத்தை விரும்புபவரா யிருத்தலின் அவர்கள் கவர்ன்மென்டின் தயவைச் சம்பாதிக்க வேண்டியவர்களாகிறார்கள். அதனால் அவர்கள் தங்கள் சுதந்தரமாக நியாயஞ் செலுத்த விடமின்றி பல குறைகள் நேரிடுகின்றன.

***

**ஆங்கிலபாஷையின் அபிவிர்த்தி—**1657-ம் வருஷத்தில் இங்கிலீஷ் பாஷையில் 13,000 வார்த்தைகளிருந்தன. அவை 1706-ம் வருஷத்தில் 20,000 வார்த்தைகளாயின; 1,800-ம் வருஷதகில் 50,000 வார்த்தையாயின; 1828-ம் வருஷத்தில் 1,05,000 வார்க்தையாயின; 1,830-ம் வருஷத்தில் 1,60,000 வார்த்தையாயின, கடைசியாக 1894-ம் வருஷத்தில் அச்சிடப்பட்ட இங்கிலீஷ் அகராதிகளில் 3,18,000 வார்த்தைகளிருந்தன. இப்பொழுது அதில் 4,50,000 வார்த்தைகளிருக்கின்றன.

***

**ஸ்திரீகளின் மிகுதி:—**இங்கிலாந்து, ஸ்காட்லாந்து அயர்லாந்து மூன்றும்சேர்ந்த ஐக்ய நாட்டின் ஜனத்தொகையில் ஆடவரைவிட 15 லட்சம் ஸ்திரீகள் மிகுதியாக விருக்கின்றனர். ஆடவரைவிட ஸ்திரீகள் மிகுதியாக விருப்பதும் ஸ்திரீகளைவிட ஆடவர் மிகுதியாகவிருப்பதும், இரண்டும், பொதுவாக வியபிசாரம் மிகுதியாவதற்குக் காரணங்களாம்.



உயர்ந்த டானிக்! அற்புதமான குணம்!
சாப்பிட இனிப்பானது
## ஆரோக்கிய வர்த்தக ஜீவன்.
அல்லது
பலத்தைத் தரும் ஔஷதங்களில் மிகவும்
கீர்த்தி வாய்ந்த லேகியம்.

இது ரஸாயனம், பலஹீனமுள்ள புருஷர், ஸ்திரீ, பாலகர்களும் உபயோகிக்கக்கூடிய தேவாமிர்தம். இதை சாப்பிட்டால் உடம்பிலுள்ள எல்லா வியாதிகளையும் போக்கி, சக்தியை யுண்டுபண்ணி, வியாதிகளை அணுகவொட்டாமற்செய்யும். புத்தி ஞாபகசக்தி வியாதியில்லாமை, ஆயுள்விருத்தி இவைகளைக் கொடுத்து சரீரவிருத்தியைச் செய்யும். பலஹீனம் சுவாசகாசம் குரல் கம்மல் இருதய ரோகம் இரத்தக் கெடுதி தண்ணீர் தாகம் இவைகளைத் தீர்க்கும்.
விலை 1-ராத்தல் அல்லது 40 தோலா எடை ரூ 5.
1-சேர் அல்லது 24 தோலா எடை ரூ. 3.

## அமிருதாமலக தைலம்,

எண்ணெய் ஸ்நானத்திற்கு இத்தைலத்தைத் தேய்த்தல் மிக நல்லது. இந்தத் தைலம் அபூர்வமான முறையாற் செய்யப்பட்டது. இது தலைநோய், கண் சிவப்பு, கண்மங்கல் முதலிய நோயைத்தீர்க்கும். இது மயிர்த்துவாரத்தின் வழியாய்ச்சென்று தோலின் அடிப்புறத்தையும் மயிரின் நுனியையும் போஷித்து, தோலை ஒட்டிய வியாதிகளை நீக்கி சரீரத்தை அழகாக்குகிறது. நெடுநாள் காந்தலுக்குப் பின் இத்தைலத்தைத் தேய்த்து ஸ்நானஞ் செய்தால் காந்தல் மறுபடியும் வராது. தலையில் உள்ள வீக்கங்கள் பொடுகுகள் இவைகளையும் நீக்குகிறது.
இதன் விலை புட்டி 1-க்கு ரூ 1 டஜன் 1-க்கு ரூ. 9

## அசோகாரிஷ்டம்.
(ஸ்திரீகளுக்கு அமிர்தம்)

பெண்களுக்கு மாதவிடாய், காலக்கிரமமாயும், அளவு சரியாயும், யாதொரு வலியின்றியும் இருப்பதே சுகத்திற்கு அடையாளம். இதன்றி இதற்கு மாறுபாடு இருக்குமாகில், அதையுடனே கவனிக்காவிட்டால் அது நாளடைவில் பிள்ளைப் பேறின்மையையும் சில சமயங்களில் அகால, ஆயுள் முடிமையுமே உண்டு பண்ணிவிடும். இவ்வரிஷ்டத்தை தூரஸ்திரீகளாய் இருக்கும் பொழுது தொடங்கி ஒரு மாதம் சாப்பிட்டு வந்தால் ஷ வியாதிகள் எல்லாம் நீங்கி கருத்தரித்தலும் அழகும் உண்டாகிறது. 2-அவுன்ஸ் ஜலம் ½.மருந்து சேர்த்து சாப்பிடவும்.
இதன் விலை புட்டி 1-க்கு
ரூபா 1—8—0.

ஆர். வி. பண்டித் அண்ட் கோ.
நெ 6, பந்தர் தெரு, பூதறஸ்.

ஸ்ரீமத்வால்மீகி
# இராமாயண வசனம்
பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தகுந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு,
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரஞ் செய்யப்பட்டது.
இப்பதிப்பின் விசேஷம்.

தமிழில் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றியிருந்தபோதிலும் செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசன ரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில், நன்றாய்ப் பரிசோதித்து, வெகு பொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிடப்பட்டிருக்கின்றது. மிகவிலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாலகாண்டம் | ... ரூபா. | 1 12 | சுந்தரகாண்டம் | ... ரூபா. | 1 12 |
| அயோத்தியாகாண்டம் | ... ,, | 3 0 | யுத்தகாண்டம் | ... ,, | 3 8 |
| ஆரணியகாண்டம் | ... ,, | 1 12 | **6 காண்டமும் சேர்த்து வாங்கினால்** | | **12 8** |

வி. கல்யாணராம ஐயர் அண்டு கோ.,
190 எஸ்பிளனேட், சென்னப்பட்டணம்.

## “விவேக போதினி” விளம்பரங்கள்

பல கண்காட்சிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

[என்னுடைய ஆயுர்வேத ஔஷதசாலையை ஸ்திரமாக பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது.]

# பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சந்நதி, தஞ்சாவூர்.

2. சர்பத்துகள்:—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜா புஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம். மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம் நாருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரைபுஷ்பம், இஞ்சி சர்பத்துகள், ஷை சர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒருசேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடாவாடரிலாவது, சுமார் 8 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும், எந்த பழசர்பத்து உபயோகிக்கப்பட்டதோ, அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுங்கூடிய சர்பத்தாகும் ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடா வாட்டராவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

22. சுகந்த மூக்குத்தூள்:—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரணபுகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய் கலந்து கொண்டால், அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அநாவசியம். இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம்போகாமலிருப்பதுமின்றி, சுவாசனை மூக்கில் சுற்றிக்கொண்டேயிருக்கும். தலைவலி, பீனிசம், ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர்பீனிசும், நாசியில் துர் நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவாச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துற்நாற்றத்தை நீக்கி, சதாகமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்கு நாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்தமூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்கு போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4, வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 3 பிரத்தியேகம். 4 முதல் 6 சீசாக்கள்வரையில் வி. பி. செலவு அணா 4 பிரத்தியேகம். 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 7 பிரத்தியேகம்.

பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை, ஸ்ரீவெங்கடேச பெருமாள்கோவில்சன்னதிவீதி, தஞ்சாவூர்.

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் என் ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கேஎழுதக்கோருகிறேன் பறங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்

OFFICE OF ... 21 OCT 1914 MADRAS



பீஷ்மர் அம்புப்படுக்கையிலிருந்து பாண்டவர்களுக்கு உபதேசம் செய்தல்

Supplement to the "Viveka Bodhini" [ "விவேக போதினி" அனுபந்தம் ]




# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்த௵ ஆவணிமீ =1914-௵ ஸெப்டம்பர்மீ } பகுதி 3



OFFICE OF THE REGISTRAR OF ... 21 OCT 1914 MADRAS


## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 6. தாயுமானவர்

### 14. உணர்வும் அப்யாஸமும்

எல்லாமு னடிமையே யெல்லாமு னுடைமையே
  யெல்லாமு னுடைய செயலே
எங்கணும் வியாபிநீ யென்றுசொலு மியல்பென்
  றிருக்காதி வேத மெல்லாஞ்
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாச்
  சொல்லிறந் தவரும் விண்டு
சொன்னவையு மிவைநல்ல குருவான பேருந்
  தொகுத்த நெறிதானு மிவையே
அல்லாம லில்லையென நன்று வறிநதே
  னறிந்தபடி நின்று சுகநா
னாகாத வண்ணமே யிவ்வண்ண மாயினே
  னதாவுநின தருளென் னவே
கல்லாத வறிஞனுக் குள்ளே யுணர்த்தினை
  கதிக்குவகை யேது புகலாய்
கருத்தரிய சிற்சபையி லானந்த நிர்மித்தமிடு
  கருணா கரக்க டவுளே. (கருணாகரக்கடவுள்—3)

### 15. உணர்வும் அப்யாஸமும்

பட்டப் பகற்பொழுதை யிருளென்ற மருளர்தம்
  பக்ஷமோ வெனது பக்ஷம்
பார்த்த விடமெங்கணுங் கோத்தநிலை குலையாது
  பரமவெளி யாக வொருசொற்
றிட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
  சேராம லாரா கநான்
சிறுவீடு கட்டியதி னடுசோற்றை யுண்டுண்டு
  தேக்குசிறி யார்கள் போல
நட்டணைய தாக்கற்ற கல்வியும் விவேகமு
  நன்னிலய மாக வுன்னி
நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவே
  நடுவே முளைத்த மனதைக்
கட்டவறியாமலே வாடினே னெப்போது
  கருணைக் குரித் தாவனோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்மித்தமிடு
  கருணா கரக்க டவுளே.

(கருணாகரக்கடவுள்—4)

### 16. வழிபடா வழிபாடு

பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
  பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
  பனிமல ரெடுக்க மனமும்
நண்ணே னலாமலிரு கைதான் குவிக்கவெனி
  னாணுமென் னுளநிற்றி நீ
நான்கும் பிடும்போ தரைக்கும் பிடாதலா
  லுன்பூசை செய்யன் முறையோ
விண்ணேவி ளாதியாம் பூதமே நாதமே
  வேதமே வேதாந் தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
  வித்தேய வித்தின் முளையே
கண்ணே கருத்தேயெ னெண்ணே யெழுத்தே
  கதிக்கான மோன வடிவே
கருதரிய சிற்சபையி லானந்த கீர்த்தமிடு
  கருணா கரக்க டவுளே.

(கருணாகரக்கடவுள்—6)

அவர் ஸந்நிதான விசேஷத்தில் அவரைப் பெரும்பாலும் மறந்தே கர்மயோகம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதில் ஈசனை அதிகமாகக் கவனியாது அவர் ஆக்ஞையே கவனத்துடன் பின்பற்றப் படுகிறது: ஒரு உபந்யாஸம் நடைபெறுங்கால் அக்ராஸனாதிபதி கவனிக்கபடாது, உபந்யஸிப்பவரே எப்படி கவனிக்கப்படுவாரோ அதுபோல. இக்கருத்தை உள்ளடக்கியேதான் மீமாம்ஸஸாங்கியாதி ஆஸ்திக நிரீச்வரதர்சனங்கள் ஸந்தர்ப்ப அவஸரத்தை உத்தேசித்து ஈச்வரனை ஒதுக்கிவைத்துப்பேசுகின்றனவேயொழிய, ஈச்வரனே இல்லை என்பது அவைகளின் கருத்தல்ல; கொஞ்சநாள் வரையில்தான் இந்தக் கர்மயோக நிலையைப்பற்றி இருக்கமுடியும். பின்னர் இந்த ஸத்கர்மங்களை எல்லாம் நமது நன்மைக்காக விதித்து நமது கர்மங்களுக்கேற்ற பலனை அளித்தருளும் ஈசன் தன்மை யாது என்ற எண்ணம் உண்டாகாமலிராது. இது உண்டானதும், தினம் கர்மயோகம் அனுஷ்டிக்கும் ஸந்தியாமுதலியகாலங்கள்போகமற்றையநேரங்களில்லௌகிகஎண்ணங்களுக்கிடைசிற்சில ஸமயங்களில் ஸத்கர்ம ஆக்ஞை செய்தவரான ஈசன் விஷயம் மனதில் ஊறத்தொடங்காமல் போகாது. இப்படி ஏற்பட்டு கொஞ்சகாலம் இதில் செலவழியத் தொடங்குகையில்தான் கர்மயோகம் பக்தியோகமாகத் தொடங்குவது. இந்த மாறுபாட்டிற்கு ஸஹாயமாக உள்ளது பாகவதத்தில் சிலபாகங்களும் ராமாயண பாரதங்களுமே.

இந்த மாறுபாடு ஏற்பட்டதும், கர்மயோக காலத்தில் ஒதுக்கிவைக்கப்பட்ட ஈசன் விஷய விசாரம் ஒருவாறு தொடங்கும்: ஆனால் இந்த பக்தியோகநிலையில் அது பூர்ணமாக விருத்தியடைந்து முடிவுபெறுது. கர்ம ஸம்பந்தமாகவே இந்த ஆராய்ச்சி தொடங்கும். ஈசன் கர்மபல தாதா; அவர் எங்கும் பாவி இருந்து நமது தொழில்களை எல்லாம் ஸாக்ஷிபோலப் பார்த்து அவைகட்கேற்ற ஸுகதுக்க ஸ்வர்க்க நரக ஜன்மபலன்களைக் கொடுத்துவிடுபவர்: நமது அபிவிருத்திக்காக தனுகரணபுவன போகங்களை ஸ்ருஷ்டித்து அதில்ஒழுங்குகளையும்ஏற்படுத்தியுள்ளார்: அதன்படி அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைக் கவனியாமலே இது வரையில் அவர் உத்தரவுப்படி நடந்துவந்தோம்: இனியாவது அவர் ஆஞ்ஞைப்படி நடந்து திருப்திபண்ணின நேரம்போக அவரையும் முன்கூறியபடிக்கருதி வழிபடுவோம்! ஒரு ஸாதாரண உபகாரியான பிரபுவை எவ்வளவு ஆதரிப்பதில்லை நாம்? இவரை ஏன் ஒதுக்கிவைத்திருக்கவேண்டும்? என்ற எண்ணங்கள் இப்படி அப்யாஸிக்குமேல் கிளம்பிவரும். உடனே இந்தஸர்வாதிபதியான ஈசனை கர்மயோகம் அனுஷ்டித்து மிகுந்த காலங்களில் நேரிட வழிபடத் தொடங்குவான்.

இந்த வழிபாட்டிற்கு விக்ரஹாராதனம் மிகுந்த ஸாதகமாகவிருக்கும். எங்கும் நிறைந்த ஈசனை அவனுடன் ஸம்பந்தப்பட்டு ஸ்தூலமாயுள்ள அவன் அங்கம்போன்ற ஒரு பரிசுத்த வஸ்துவான பொருள் அல்லது உருவ மூலமாக அணுகி வழிபட முயலுவதே இந்த பக்தியோகத்தின் தொடக்க பாகம். எங்கும் நிறைந்திருக்கும் ஈசனை ஒருஉருவமூலமாகப்பாவித்து பெரியோர்களுக்குக் காட்டும்படியான மரியாதை மூலமாக ஷோடசோபசாரஞ் செய்து வழிபடுவதே இந்த யோகத்தின் முதல்படி. இதற்கு வேண்டிய பரிசுத்தமாகிய ஸ்வகர்மங்களை யோகமாக அனுஷ்டித்துப் பின்னர், பக்தி வழிபாட்டிற்கு வேண்டிய புஷ்பம், வஸ்துக்கள் முதலியவற்றைச் சேகரிப்பதில் முயன்று, ச்ரத்தையுடன் பூஜைநடத்துவதும், இம்மாதிரி நடத்தித் தயாராக மேல் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு தயாராகவிருக்கும் கோயில்களுக்குச்



செல்லுவதும், பின்னர் நல்ல வைதிக பாவனையுடன் பூஜைக்கு ஏற்ற உருவத்திலும் தன்னுள்ளும்பொதுவாகஎல்லோருள்ளும்பாவியிருக்கும் ஈசனை எண்ணி உருகி ஈடுபட்டு மெய்ம்மறந்து நிற்பதுமே இந்த முதல்படியான வழிபாட்டின் லக்ஷணம். இந்த பாகம் சற்றேறக்குறைய கர்மயோகம்போல நிஷ்காம்யத் தொழிலுடன் ஸம்பந்தப்பட்டிருப்பினும் கர்ம ஒழுங்கு ஏற்படுத்திய ஆக்ஞாகர்த்தா விஷயம் அதிகமிருப்பதால் பக்தியோகத்தில் சேர்க்கப்பட்டது.

இந்தமாதிரியான கடவுள் எண்ணம் நிஷ்காம்ய கர்மயோகத்தின் பின்னர் நிஷ்காம்யமாகவே ஏற்பட்டு மிகுந்த கௌரவபுத்தியுடன் ஈசன் வழிதிரும்பி விட்டிருப்பதால், உலகவிஷயத்தில் ஓயாத தீவ்ரப்பற்று இதுவரையில் எப்படி இருந்ததோ அப்படிப்பட்ட பற்று ஈசன் வழிபாடு விஷயத்தில் அப்யாஸிக்கு ஏற்பட்டுவிடும். இதுபற்றியே, மஹா பக்தசிகாமணியான ப்ரஹ்லாத ஸ்வாமியும் 'பாமர ஜனங்களுக்கு விஷயங்களில் பலமாயும், ஓயாதும் உள்ளதுபோன்ற பற்று ஈசன் விஷயத்தில் ஏற்படுவதே பக்தி என்னப்படும்' என்று வெளியிட்டிருக்கிறார். 'நமது நன்மைக்காகவே எல்லாவற்றையும்ஏற்படுத்தியுள்ள ஈசன் ஒருவன் உண்டு அவன் ஆக்ஞைப்படிதான் நாம் இதுவரை நடந்துவந்தது' என்று படும் எந்த கர்மயோகிக்குத்தான் இந்த பலமான பக்தி வாராது! அவரிடம் ஒருவிதமான மனப்பூர்வ ஸம்பந்தம் ஏற்பட்டு அவர் ஸம்பந்தப்பட்டவரையில் உலக வஸ்துக்களையும் தன் கர்மங்களையும் அர்ப்பணம் செய்ய ஒரு விக்கிரஹ மூலமாக பூஜாதி கர்மங்களான பக்திபாகங்கள் சாஸ்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அதிலுள்ள ஈசன் விஷயத்தில் தன்னிலைக்குத்தகுந்தபிடிப்புஏற்பட்டுவிடுகிறது, கர்மயோகத்திலிருந்து மேல் வரும் பக்தியோகிக்கு. இதோடு நில்லாது இந்த பக்தி. தான் வழிபட எடுத்துக்கொண்டிருக்கும் ஈசன் உருவ விஷயத்தில் ஒன்பது விதமாக தொழிற்படத் தொடங்கிவிடும். பக்தியோக அங்கமான நிஷ்காம்ய பக்தி மூடமாக இருப்பதால்தான் இது வெளிப்பட இடமுண்டாகின்றது. பிரஹ்லாத ஸ்வாமி 'ஈச்வரன் குணங்களைக் கேட்பது, நாமங்களை உச்சரிப்பது, அவரை த்யானிப்பது, பாதங்களில் ஈடுபடுவது, அவரைப் பூஜிப்பது, நமஸ்கரிப்பது, வேலைக்காரன்போலிருப்பது, ஸ்நேஹம் வைப்பது, தன்னை சரணமாக அவருக்கு விட்டிருப்பது' ஆகிய ஒன்பது ரூபமாக பக்தி வெளிவரும் என்று கூறுகிறார்.

இந்த நிலையில், ஈசன் ஸ்வரூபவழிபாடு எப்படி கர்மயோகத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்ததோ, அதுபோல ஈசன் எங்கும் நிறைந்த தன்மை கருதப்படாது பக்தன் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டு, எந்த உருவ மூலமாகப் பக்தன் ஈசனை வழிபடுகிறானோ அதிலிருந்து அவனை அனுக்ரஹிக்கப் போவதாக நமது சாஸ்திரம் எடுத்துக் காட்டும். ஈசன் தன்னை விட்டு வெளியிலிருந்து தன் இஷ்ட தேவதா விக்ரஹ மூலமாகவே தன்னை ஈடேற்றுவார் என்பது இவன்மனதில் ஊறி அந்தரூபத்தில் மனம்நிலைத்துமற்றவைகளில்பாய்ந்தோடாது நிற்கும்பழக்கம் தன்னையறியாது பக்தனுக்கு உண்டாகிக்கொண்டுவருகின்றது. ஆகவே ஈசனுக்கும் தனக்கும் ஒருவித ஸம்பந்தத்தை வெளிப்படையாகக் கருதிக்கொண்டேதான் முற்கூறியபடி எல்லாம் இந்த பக்தி நிகழ இடமுண்டு. அவை பதினொருவிதம் என்று நாரதர் பக்தி ஸூத்திரத்தில் பின்வருமாறு பகுத்துக் கூறுகிறார். 'மஹிமா ஞானத்தால் வருவது, தர்ம உணர்ச்சியால் வருவது, உபாஸனாக்கிரமத்தால் வருவது, தாஸ்யபாவத்தால் வருவது, ஸக்ய பாவத்தால் வருவது, ஸ்நேஹ (நாயகநாயகி)

பாவத்தால் வருவது, தான் பகவான் குழந்தை என்ற பாவத்தால் வருவது, ஆத்மநிவேதனத்தால் வருவது, தாதாத்ம்ய பாவத்தால் வருவது, துக்கத்தால் வருவது, பிரிவாற்றாமையால் வருவது ஆகிய இப்பதினொரு விதமாக ஒரே பக்தி பிரிந்து காணப்படும். இம்மாதிரி ஸம்பந்தத்தில் ஏதாவது ஒன்றில் ஈடுபட்டு ஈசனுள் மூழ்கியும் வெளிப்படுங்கால் முன் கூறிய ஒன்பது ரூபமாக வழிபடுவதும்: தகுந்த காலங்களில் விடாது ஈசாக்ஞையான ஸ்வதர்ம,வர்ணாச்ரம அநுஷ்டானகர்மாக்களை விடாமல் அநுஷ்டிப்பதுமே பக்தியோகிகள் தொழில். இம்மாதிரி பதினொருவித பக்திகளைப் பண்ணி ஈடேறியவர்கள் கதை ராமாயணத்தில் நன்றாகக் காணப்படுகிறது. ஸ்ரீராமராகிய பரம்பொருளை பக்திசெய்து நற்கதியடைந்த 'ஸுக்ரீவன், லக்ஷ்மணர், ஜடாயு, விபீஷணர், ஹநுமார், குஹன், ஸீதை, மஹாருஷிகள், சரபங்கர், சபரி, காகாஸுரன், பரதர் ஆகிய இப்பதினொரு கூட்டத்தாருமே முன்னெடுத்துக் காட்டிய பதினொருவித ஸம்பந்தங்கள் ரூபமாக ஏற்படும் பக்திப் பாகுபாடுகளுக்குக் காரணம்.

கர்மானுஷ்டானத்தையும், அதை அமைத்த கருணை வள்ளலான கடவுள் வழிபாட்டையும் முக்யமாகக்கொண்ட இந்த பக்தி பொதுவாக இரண்டுபடிகளை உடையது. முதலாவது பாஹ்ய பக்தி என்பது: இதில்தான் அப்யாஸம் முதலியவைகளுக்குத்தடைகளாக ஏற்படும்விஷயஸுக இழப்பு, தேஹாதி பாதை, மதத்வேஷமுடையோரால் ஏற்படும் தீங்கு ஆகிய வாழ்க்கைத் துயரங்களைக்கண்டு நடுங்கி வெயில் ஸஹித்திடாப் புழுப்போல் வெம்பி ஈசன் அடியிணை நிழலில்வந்து அமர்ந்து இளைப்பாற எண்ணும் தன்மை,பக்தர்களுக்குஉண்டாகிறது. இவ்வாறு கடவுளை ஒரு வெளிவஸ்துவாகக் கருதி வழிபட்டு நிஷ்காம்யமாக தன்னைவிட்டு வாழ்க்கைத் துயரம் நீங்கவேண்டுமென்று மிகுந்த பரபரப்புடன் ஈடுபடுவதே இந்த பாஹ்ய பக்தியின் லக்ஷணம். இரண்டாவது அனந்யபக்தி என்பது: தன் இஷ்டதேவதையையே வழிபட்டு, மற்றதேவதைகள் விஷயத்தில மனதைச்செல்லவிடாதும் உலகவிஷயங்களில் செல்லவிடாதும் இந்த வேலையையே பெரிதாகவும் வாழ்க்கைத் தொழிலாகவும்கருதி ஈடுபடுவதுதான். இந்நிலையில் ஈசன் (இஷ்டதேவதை) வழிபாடும்: அவன் ஆக்ஞைப்படி கர்மானுஷ்டானம் செய்வதுமே தொழிலாகிவிடும். உலகவிஷயத் துன்பத்தில் உள்ளபயமும், ஸுகத்தில் உள்ள இழுப்பும் இவனுக்கு ஒரு பொருட்டாகத் தோற்றாது. மனம் சாந்தநிலையை அணுகிக்கொண்டே வரும். இப்படிப்பட்ட 'அனந்ய பக்தனது யோகம் (இல்லாத அவசியப் பொருளை சேர்ப்பிப்பது) க்ஷேமம் (உள்ள அவசியப்பொருளை விலகாது நிறுத்துவது) இரண்டையும் தன் பொறுப்பாக நான் இஷ்டதேவதாரூபமாக இருந்து கருதித்தாங்குவேன்' என்றுகூறி 'எந்த ரூபத்தில் என்னை வழிபட்டபோதிலும் நான் அவ்வுருவ மூலமாக அனுக்ரஹிக்கிறேன்' என்று கிருஷ்ண பரமாத்மா, தாம் முன்னர் கூறியதற்கேற்ப வற்புறுத்துகிறார்.

இங்கு விஸ்தரிக்கப்பட்ட பக்தியோகவிஷயமாக ஏற்படக்கூடிய சில சங்கைகளை பின்னர் எடுத்துக்காட்டி தகுந்த ஸமாதானம் கூறுவோம்.

---

**ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் தீப்பெட்டிகள்.**—சுமார் 30 கோடி ஜனங்களுள்ள இந்தியாவில் சென்றவருடம் ஏப்ரல் மாதம் முதல் இவ்வருஷம் பிப்ரவரி மாதம் வரை 11 மாதங்களில் 5,49,000 பவுண்டு மதிப்புள்ள தீப்பெட்டிகள் அந்நிய தேசங்களிலிருந்து வந்து இறக்குமதியாயிருக்கின்றன. ஒரு வருஷத்தில் சுமார் 6-லக்ஷம் பவுண்டு, அதாவது சுமார் ஒரு கோடி ரூபாய், மதிப்புள்ள தீப்பெட்டிகள் இந்தியாவில்செலவாகின்றனவென்று தெரிகின்றது.



# அதிவீரராம பாண்டியன்

## ATIVIRARAMA PANDIYAN

நம் தமிழ்நாட்டின்கண் ஆண் பெண் அடங்கலாய் இளையோர் முதியோர், பண்டிதர் பாமரர் முதலிய அனைவரும் பெயர் சொன்ன மாத்திரத்தில் ஏத்திப் போற்றத்தக்க அரிய புலவர் நம் மூதாட்டியாகிய ஔவையாரே. அவர் போல் எந்நாட்டவரும் எக்காலத்தவரும் எவ்வாண்டினரும் அன்புபாராட்டி மதிக்கத்தக்க புலவர் வேறு எந்த நாட்டிலும் காண்பதரிது. அப்புலவர் பெருமாட்டிக்கடுத்து நம் தமிழ் நாட்டின்கண் பள்ளிச்சிறார் முதல் எவரும் மதிக்கத்தக்க புலவர் நம் அதிவீரராம பாண்டியரே.

திருவள்ளுவர், கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் முதலிய அரிய பெரிய புலவர் பெருமையைக் கற்றோரன்றி மற்றோர் அறியார். சில ஆண்டுகளின் முன் ஔவையார் சரிதத்தை நூலாராய்ச்சியின் நுட்பங்கொண்டும் சரித்திர சம்பந்தமான விஷயங்களைக்கொண்டும் ஒருவாறு எழுதலானேன். இச்சமயம் அவ்வண்ணமே அதிவீரராம பாண்டியருடைய சரிதத்தை ஒருவாறு எழுதத் துணிந்தனன்.

"வெற்றிவேற்கை வீரராமன் கொற்கையாளி குலசேகரன்" என்றும், "பாண்டிய குலசேகரன் இகல்கடந்த பருதிவேற்றடக்கை மீனவனே" என்றும், "அடுசினக்களிற்று மானவேல் வழுதி அடல் அதிவீரபூபதியே" என்றும், "ஒலி நீர்வேலி யவனிபுரந்தருள் வழுதி அதிவீரராமன் இகலரசர் ஏறே" என்றும் இவரது நூல்களின் சிறப்புப்பாயிரங்களுள் கூறப்பட்டிருப்பதால், இப்புலவர் பாண்டிநாட்டு அரசர்களில் ஒருவர் என்பதும், இவர் ஆட்சி செய்த தலைநகர், கொற்கை என்பதும் விளங்குகின்றன. இதனால்இவர் மதுரையம்பதியில் ஆண்டு, பெரும்புகழ்பெற்ற பாண்டியர்களில் ஒருவரென்று மயங்கலாகாது. பாண்டிய அரசாட்சி வலிமை குன்றிய காலத்துத் திருநெல்வேலியைச் சார்ந்த * கொற்கை என்னும் பதியிலாண்ட ஒரு சிற்றரசர் என்பது சிலாஸாசனங்களால் வெளியாகின்றது.

இவ்வதிவீரர் புவியரசராயிருந்தது மன்றிக் கவியரசராகவும் விளங்கினர்.

இவரது பிறப்பு வளர்ப்பைப்பற்றி இவர் இயற்றிய நூல்களிலும் பிற நூல்களிலும் ஆதாரங்காணப்படாவிடினும் சிலாசாஸனங்களால் சில குறிப்புக்கள் தெரியவருகின்றன. எனது நண்பர் ஸ்ரீ து. அ. கோபிநாதராயர், எம். ஏ., அவர்களது அரிய முயற்சியால் வெளியான 13 தென்காசி சாஸனங்களிலிருந்து * தென்காசி விசுவநாத சுவாமிகோயில் கட்டினவன் அரிகேசரிபராக்கிரமபாண்டியன் எனத் தெரியவருகின்றது. இவ்வரசன் கி.பி. 1422-ம் ௵ முதல் 1463-ம் ௵ வரை 41 வருஷம் ஆண்டனன். இவனுக்குப் பின் இவனது சகோதரன் ஜடிலவர்மனான குலசேகரதேவன் ஆண்டான். இவன் ஆண்டகாலம் கி.பி. 1480 முதல் 1499 வரை.‡ இவனுக்குப்பின் மாறவர்மன் சுந்தரபாண்டியன் III (1532.கி.பி.) ஜடிலவர்மன் சீர்வல்லபன் (1535 கி.பி.) என இருவர் ஆண்டனர். இவர்களுக்குப்பின் திருநெல்வேலி மாறனாகிய வீரவேற்குலசேகரன் கி.பி. 1552-1564

---

* இது தூற்றுக்குடிக்குத் தெற்கே 10-மைல் தூரத்தில் தாமிரபருணி சமுத்திர சங்கமமாகின்ற இடத்துக்குச் சமீபத்தில் இருப்பதாகவும் அவ்விடத்தில் இன்றும் இடிந்த கோட்டை கொத்தளங்களின் சின்னங்களும் கோவில்களின் சின்னங்களும் காணப்படுகின்றனவென்றும், மரச்செறிவுள்ளதாயிருக்கிறதென்றும் சுற்றுப்புறத்தில் பல சிறு கிராமங்களிருக்கின்றனவென்றும், கூறுகிறார்கள். கோல்கி என்று பெரிப்ளஸ் கூறியிருப்பதும் இதுவே போலும்.

* செந்தமிழ் 4-ம் தொகுதி 115—120 பக்கங்கள்.

‡ Vide Epigraphia Indica, Volume IX, page 229.

வரை ஆண்டனன். இவ்வரசனது புத்திரனே நம் அதிவீரராம பாண்டியன் என்னும் ஸ்ரீவல்லப தேவன். இச்சிரீவல்லபன் சகம் 1486 (கி. பி. 1564) ரக்தாக்ஷிவருஷம் சித்திரைமாதம் 20உ பூர்வபக்ஷத்தில் திதி யாறில் முதல் வாரம் புனர்பூசத்தில் "சீவலவேளென மகுடஞ் சூடினன்." இது தென்காசி விசுவநாத சுவாமி கோயில் பெரிய கோபுரத்துத் தென் சுவர்க்காலில் எழுதியுள்ள சாஸனத்தால் தெரியவருகின்றது. அது பின் வருமாறு

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வரி 9-வது சாஸனம்

1. சகன்கால மாயிரத்து நானூற்றெ
2. ண் பத்தாறிற் சலதி சூழ்ந்த. சேக
3. ங் காண விரத்தாக்கி சித்திரை
4. யிலிரு பத்தாந்தேதி வேந்தர்,
5, புகழ்ந்தேவல் செய்ப்பூருவ
6. திதியாறில் முதல் வாரம் புனர்
7. பூசத்திற்,சுகந்தாதி புனையழகன்
8. சீவல வேளென மகுடஞ்சூடினனே

(செந்தமிழ் 4-ம் தொகுதி 119-ம் பக்கம்)

இவனது தந்தை ஆளுகையில் வித்தியா நகரத்து மகாராஜன் அச்சுவதேவ ராயரால் தென்றிசை படையெடுக்கப்பட்டுப் பாண்டிய சேர ராஜாக்கள் ஜயிக்கப்பட்டார்கள். அக்காலந் தொடங்கிப் பின் வந்த பாண்டிய அரசர்களின் சார்வபௌமத்துவம், போய்விட்டதென்பது தோன்ற இப்பாண்டியன் தன்னை வேள் எனக் குறித்துக்கொள்வது உணரத்தக்கது. இவ்வதிவீரராம பாண்டியனது சாஸனம் ஒன்று தென்காசி குலசேகரமுடையார் கோயிலில் காணப்படுகின்றது. அஃது இவன் ஆண்ட 5-வது ஆண்டாகிய கி.பி. 1567-வது வருஷத்தில் ஏற்பட்ட சாஸனம், அது வருமாறு:—

(2) "சகாப்தம் 1489 மேல் செல்லா நின்ற ஸ்வஸ்திஸ்ரீ கோஜடிலவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி கோ நேர்மை கொண்டான் ஸ்ரீ பெருமாள் (3) அழகன் பெருமாள் அதிவீரராமன் ஸ்ரீவல்லபதேவர்க்கு யாண்டு 5-வது பிரபவ ஸு ஆவணி மாதம் 22-தேதி அபர பக்ஷத்து (4) திரிதியையும் சுக்கிரவாரமும் கொண்ட யோகமும் வணிககரணமும் பெற்ற உத்திரட்டாதி நாள்." இதனால் இவ்வரசன் தென்காசி குலசேகரமுடையான் கோயில் பிரதிஷ்டை செய்ததாகத் தெரியவருகிறது.

இவ்வரசன் ஆண்ட 21-வது வருஷத்தில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கடுத்த புதுக்கோட்டை யென்ற ஊரின் சாஸனம் பிறந்ததாகத் தெரியவருகின்றது. திருக்குற்றாலச் சாஸனங்களில் ஒன்றால் இவ்வரசன் 42 வருஷங்கள் ஆண்டதாகவும் வெளியாகின்றது. வடமொழிக்குப் போஜ ராஜன்போல் இவ்வரசன் தென்மொழிக்கு விளங்கி வந்ததாகக் கூறலாம்.

வீரத்தன்மையிலும், செய்யுள் செய்யும் வன்மையிலும், புலவர்களிடம் மிக்க அன்பு பாராட்டி அவர்கள் மனம் மகிழும்படி பொருள் கொடுத்து உதவி புரிவதிலும், மற்றும் பல உத்தம குணங்களுடன் வாழ்ந்ததன்மையிலும் நம் அதிவீரராம பாண்டியனை மாங்குடிமருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சிக்குத் தலைவனான தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனுக்கு ஒருவாறு ஒப்பிடலாம்.

இப்புலவரேறு இயற்றிய நைடதச்சிறப்புப் பாயிரத்தின்கண்

"வலனுயர்த்த வண்ணலஞ்சேல் வான்றொடுபொற்
கோட்டிமய வரையிற் றீட்டி,
யலர்தலைமா நிலம்புரக்கு மதிவீர
ராமனிகல் அரசரேறே."

எனக்கூறப்பட்டிருப்பதைக் கொண்டு இவ்வரசன் தன் மீனக்கொடியை இமயமலையினிடத்தே தனக்குரிய எல்லைக்கல்லாகத் தீட்டிப் பரந்த இடத்தையுடைய பூமியைக் காக்கின்ற பெரிய அரசன் என்றும்,

"எதிர்மலைந் தேற்ற வெஞ்சமத் தரச ரிடுதிறை
கடையளந் தறியா
மதுரையும் புகாரும் வஞ்சியும் புரக்கு மாணவேல்
வழுதியர் பெருமான்
அதிர்பொலங் கழற்கால் அடலதி வீரன்"

என்ற கூர்மபுராணம் உத்தரகாண்டம் கடைச் செய்யுளைக்கொண்டு தமிழ் நாடு முழுவதும் ஆண்ட பெரிய அரசனென்றும் மயங்காமல் இவற்றைப் புலவர் புகழ்ந்த புகழ்ச்சியாகக் கொள்ளலே சால்புடைத்தாம்.

சோழன் கரிகாற் பெருவளத்தான் ஒரு காலத்து இமயமலை வரையிற் சென்று இடையிலுள்ள அரசர்களை வென்றான் என்ற சிலப்பதிகாரக் கதையைத் தழுவியே நம் அதிவீரனும் புகழப்பெற்றனன் போலும். ஆகையால் இவற்றை உண்மை வரலாறுகக் கொள்ளச் சரித்திரக்காரர் ஒப்பமாட்டார்.



இவை நிற்க, பாண்டிய அரசர்களைப் பற்றிய சரித்திரம் எழுதிய வில்ஸன் பண்டிதர் நம் அதிவீரராமனைப் பற்றிக் கூறுவதாவது "கொற்கையிலிருந்து அரசாண்ட குலசேகரன் என்பவனை அரிவீரன் அல்லது அதிவீரன் எனச்சொல்வதுண்டு. அவன் வடமொழியிலிருந்து அநேகம் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தனன். கி.பி.1051க்குச் சமமான சாலிவாகன சகாப்தம் 973-ம் வருஷத்திலே அவன் பிரபல முற்றிருந்தான்" என்பதே. இதற்கு யாதொன்றும் ஆதாரங்கூறவில்லை. மேற்கூறப்பட்ட தென்காசி சாஸன ஆதாரத்தால் இக்கொள்கை சரியன்று என்பது நன்குவிளங்கும்.

"இவ்வதிவீரனையே தமிழ் உலகம் வல்லபதேவன், பிள்ளைப்பாண்டியன், குலசேகரன், குணசேகரவழுதி, தமிழ் வளர்த்ததென்னவன் என்ற பெயராலும் வழங்கும்" என்று ஒரு நைடதப்பதிப்பின் முகவுரையில் ஒரு புலவர் கூறியுள்ளார். குலசேகரன், வல்லபதேவன் என்ற பெயர்களுக்குமட்டும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. தமிழ்வளர்த்த தென்னவன் என்பது பொதுவாகப்பாண்டியர்களுக்கேகூறலாம். உக்கிரப்பெருவழுதி முதலிய அநேகபாண்டியர்கள் தமிழைக் கண்ணுங்கருத்துடன் வளர்த்து வந்திருக்கிறார்களென்பது சரித்திரங்களால் வெளியாகின்றது. நம் அதிவீரனை பிள்ளைப் பாண்டியன், குணசேகரவழுதி என்று கூறுவதற்குத்தக்க ஆதாரம் புலப்படவில்லையாதலால் அதனைச் சித்தாந்தமாகக் கொள்ளல் தகாது.

நம் அதிவீரனைப்பற்றிக் கர்னபரம்பரையாய்வழங்கும் ஒரு விருத்தாந்த முண்டென ஒரு நைடதப் பதிப்பாசிரியர் கூறியுள்ளார். அது வருமாறு:—

"இவரது பெற்றோர் நெடுங்காலம்மகப்பேறின்றிச் சேது யாத்திரை சென்று இராமநாத சுவாமியை வழிபட்டு அவர் பேரருளால் இரட்டைப்பிள்ளைகள் பிறந்தனர் என்றும், அப்பிள்ளைகளுக்கு முறையே வரதுங்கராமன் எனவும் அதிவீரராமன் எனவும் திருநாமஞ் சூட்டினர் என்றும் கூறுப. உலக வழக்கப்படி அப்பிள்ளைகளுக்கு அக்காலத்தில் இராமலக்ஷ்மணர் என்று பெயரிடவேண்டுமென்று சிலர் கூறியும் இவர்களது தந்தையார் பரமசிவன் திருநாமத்தைக் குறிக்கின்ற இராம நாமத்தையே இருவருக்கும் சூட்டினரென்ப."



தென்காசி சாஸனங்களால் வரதுங்கராமன் நம் அதிவீரராமனுக்குக் கூடப்பிறந்த சகோதரர் அல்லரென்பதும், அவர் தகப்பனோடு கூடப்பிறந்த சகோதரரது புத்திரர்என்பதும், வரதுங்க ராமன் கூடப்பிறந்த சகோதரன் குணராமபாண்டியன் என்பதும் தெரியவருகின்றன. மேற்கூறிய கர்னபரம்பரைக் கதை, வரதுங்கராமனையும் குணராம பாண்டியனையும் ஒருகால் குறிக்கலாம். இவ்விரு சகோதரரும் கரிவலம்வந்தநல்லூர் என்ற இராஜதானியை யுடைய ஒரு சிறுநாட்டை ஆண்டதாகவும்வெளியாகின்றது.

நம் அதிவீரனைப் போலவே வரதுங்கனும் வடமொழி தென் மொழியில் மிக்கவல்லவர். பிரமோத்திரகாண்டம் முதலிய சில அரிய நூல்களை இயற்றியிருக்கின்றனர்.

"பாண்டியிலிரண்டு பட்டரிலிரண்டு" என்றும், "பாண்டியிலிருவர் ஆண்டியிலிருவர்" என்றும் நம் தமிழ் நாட்டில் வழக்குண்டு. பாண்டியிலிரண்டு என்பது கலைமாதுக் கிரு கண்போன்ற இவ்வரியபுலவர்கள் இருவரையுங் குறிக்குமென்ப.

இவரது குரு: நம் அதிவீரராம பாண்டியனுடைய குரு, சுவாமி தேவர் என்பவர். இதனை

"மருட்கிடனா மெனைப் பிணித்த வல்வினையின்
தொடரனைத்து மாய நூறி
அருட்கடைக்கண் அளித்தாண்ட சுவாமிதேவன்
திருத்தாள் அகத்து வைப்பாம்"

என்று காசிகாண்டப் பாயிர முடிவிலும் கடை வாழ்த்திலும் கூறப்பட்டிருக்குஞ் செய்யுளாலும்,

"ஆழ்கடற் பிறவித் துன்பமுற் றழுந்தாது அடி
மலர்ப் புனையளித்தாண்ட
சூழ்சுடர் ஞானத்திருவுருவமைந்தசுவாமிதேவன்
பதம்பணிவாம்"

என்று கூர்ம புராணத்திற் கூறப்பட்ட குரு வணக்கச் செய்யுளாலும் அறியலாம்.

இவரது சமயம்: கூர்மபுராணம், காசிகாண்டம் முதலிய இப்புலவரது நூல்களாலும் தென்காசிச் சாஸனங்களாலும் இவர் சிவபக்தியிற் சிறந்தவரென்பது நன்கு விளங்குமாயினும் அந்நூல்களில் மகாவிஷ்ணுவையும் மனமுருகித் துதித்திருப்பதால் பொது நோக்குடையவரென்றே கொள்ளல் தகுதியாம். கருவையம்பதிவிஷயமாய் இவரியற்றிய மூன்று சிறு பிர

பந்தங்களும் இவரது சிவபக்தி வன்மையை நன்கு புலப்படுத்துகின்றன. அவற்றிலிருந்து சில உதாரணங்கள் கூறுவேன்.

“விரைமாலை சுற்று குழலாரிடத்து மிகவாசை வைத்து மெலிவேன்
கரையாதிருக்கு மனநீ கரைத்து னடிபாட வைத்த கதை நான்
உரையா னிரைக்க முடியாது—”
(கருவைப்பதிற்றுப்பத்து 6-ம் செய்யுள்)

“தேசிகனாகக் கனவில்வந் தாண்டருள் செய்தவடகாசிய னெங்கள் கருவைப்பிரான்—”

* * * *

“கண்டேன் கருவைப் பெருமான்றிருவடி கண்டு பற்றிக்
கொண்டேன்பரசமயங்குறு கேன்புல்லர் கூட்ட நண்ணிப்
பண்டேபுரிந்த பழவினையாவையும்பற்றறுத்துத்
தொண்டே புரிவதல்லாற்பின்னை வேறு தொழிலில்லையே.”
(கருவைக்கலித்துறை-18)

## இவர் இயற்றிய நூல்கள்

1. நறுந்தொகையென்ற வெற்றிவேற்கை
2. நைடதம்
3. கூர்ம புராணம்
4. காசிகாண்டம்
5. கொக்கோகம்
6. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி
7. திருக்கருவை கலித்துறையந்தாதி
8. திருக்கருவை வெண்பா அந்தாதி

இவை நிற்க. வாயுசங்கிதை யென்ற நூலையும் இவரே இயற்றினர் எனச் சிலர் கூறினும் வரகுண ராமன் என்ற ஒருவர் இயற்றினரென்பதே பண்டிதர்களின் கொள்கை. இலிங்கபுராணம் இயற்றிய குலசேகர பாண்டியர் வேறொருவர். அவரது குரு அகோர சிவாசாரியார். திருக்கருவை விஷயமாய்ச் செய்த மூன்று சிறு நூல்களையும் வரதுங்க பாண்டியரே இயற்றினர் என்பது சில வித்வான்களின்கொள்கை. ஆனால்

“கன்னற்பாகிற் கோற்றேனிற் கனியிற் கனிந்த மொழிநவிலும்” (நைடதம் அன்னத்தைத் தூதுவிட்ட படலம் 108-ம் செய்யுள்.) என்றும்,

“கன்னலின் முதிற்றேனிற் கனியினிற் கனிந்த பாடல்” (கூர்மபுராணம் பூர். 12-ம் அத் 57-ம் செய்யுள்.) என்றும் கூறிய இவர் வாக்கே,

“கன்னற்பாகிற் கோற்றேனிற் கனியிற் கனிந்த கவிபாட” (6-ம் செய்யுள் 3-ம் வரி) என்று திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதியிற் காணப்படுகிறபடியால் இச்சிறு நூலையும் இதனைச்சேர்ந்த வேறு இரண்டு சிறு நூல்களையும் அதிவீரரே பாடினர் என்று தெரிய வருகின்றது

## இவர் காலத்துப் புலவர்கள்

வாயுசங்கிதைபாடிய வரகுணராமனும் பிரமோத்திர காண்டம் முதலிய நூல்களியற்றிய வரதுங்கராம பாண்டியனும் திருவிளையாடற் புராணமியற்றிய பரஞ்சோதி முனிவரும் சேதுபுராணமியற்றிய நிரம்பிய அழகிய தேசிகரும் நம் அதிவீரராம பாண்டியனும் ஒரு காலத்தவராவர்.

## இவரது நூல்களின் சிறப்பு

மேற்கூறிய வண்ணம் அதிவீரராம பாண்டியரியற்றிய எட்டு நூல்களின் விவரங்களைச் சிறிது கூறுதல் நலமாம்.

1. நறுந்தொகை:—இதனையே வெற்றிவேற்கையென்று வழங்குவர். இச்சிறு நீதி நூல் காப்பு உள்பட 133 அடிகளை யுடையது. இதன் நடையை ஔவையார், திருவள்ளுவர் முதலிய பெரியோருடைய நடைக்குச் சமமாகக் கூறலாம். எட்டுத் தொகையுள் ஒன்றாகிய புறநானூறு என்ற அரிய நூலிலிருந்து சில கருத்துக்களையும் தொடர்களையும் இவ்வாசிரியர் இச்சிறு நூலில் எடுத்தாண்டிருப்பது உணரத்தக்கது. அவை வருமாறு:—

நறுந்தொகை

“எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பர்”

* * * *

“அறிவுடையொருவனை யரசனும் விரும்பும்”

* * * *

“நற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே.”

புறநானூறு

“ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னாதவருள்
அறிவுடையோனாறு அரசுஞ்செல்லும்
வேற்றுமைதெரிந்த நாற்பாலுள்ளுங்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பாலொருவனுமவன் கட்படுமே.”

நறுந்தொகை

“கற்கைநன்றே கற்கைநன்றே
பிச்சைபுகினுங் கற்கைநன்றே.”



புறநானூறு

“உற்றுழியுதவியும் உறுபொருள்கொடுத்தும்
பிற்றைநிலைமுனியாது கற்றல்நன்றே”

நறுந்தொகை

“மன்னவர்க்கழகு செங்கோன்முறைமை”

புறநானூறு

“நன்னலட நல்கல் வேந்தற்குக்கடனே.”

இந்நூலில் ஆலமரத்தின் அருமை பெருமையை ஐந்தடிகளாற் கூறினரேனும் அணுவினின்றும் அண்டங்களைப் படைக்கவல்ல கடவுளது அபார சக்தியின் நுட்பம் மிகவும் அழகாய்த்தோன்றும்வண்ணம் சுருங்கக்கூறிவிளங்கவைத்திருப்பது பெரிதும் பாராட்டற்பாலது. இஃது உபநிடத உண்மை. ஆங்கில மகா கவியாகிய மில்டன் என்பவர் ஆலமரத்தின் அழகை 13 வரிகளில் வர்ணித்திருப்பது இங்கு ஆராயத்தக்கது.

நறுந்தொகை

“தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவியாட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே”

## மில்டன் (Milton.)

“The fig tree, not that kind for fruit renown'd
But such as at this day, to Indians known,
In Malabar or Decan spreads her arms
Branching so broad & long, that in the ground
The bended twigs take root & daughters grow
About the mother tree, a pillar'd shade
High over-arch'd and echoing walks between
There oft the Indian herdsman, shunning heat,
Shelters in cool, and tends his pasturing herds
At loop-holes cut through thickest shade: those leaves
They gather'd, broad as Amazonian targe;
And with what skill they had, together sew'd
To gird their waist.”
(Paradise Lost—Book IX lines 1101—1113)

நம்மாசிரியரது செங்கோன்முறைமையைநன்குவிளக்கக்கூடிய செய்யுள்கள் வருமாறு:—

1 “கொடுங்கோன் மன்னர் வாழுநாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே.”

2. “சான்றோரில்லாத் தொல்பதியிருத்தலின்
தேன்றேர் குறவர் தேயநன்றே.”

* * * *

3. வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பதாகவும்
சாற்றுவதொன்றைப் போற்றிக் கேண்மின்
பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே.
மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
பொய்போலும்மே பொய்போலும்மே.”

அதனால்,

இருவர்தஞ் சொல்லையு மெழுதரங்கேட்டே
இருவரும் பொருந்த வுரையாராயின்
மனுநெறி முறையின் வழக்கிழந்தவர்தா
மனமுநமறுகி நின்றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழியீர்வதோர் வாளாகும்மே.”

(தொடரும்.) எஸ். சாமிநாதய்யர்

# கிராமாந்திர ஜன ஐக்கிய சங்கங்களும் அவற்றின் நன்மைகளும்

## CO-OPERATIVE CREDIT SOCIETIES: THEIR BENEFITS

இக்காலத்தில் நமது தயாளத்வமுள்ள கவர்மெண்டாரால் பல சங்கங்கள், கிராமாந்திரங்களிலும், பட்டணங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன என்பது யாவருக்குந்தெரிந்ததே. ஒவ்வொரு வருஷத்தின் முடிவிலும், அச்சங்கங்களின் தொகை அதிகமாகிக்கொண்டுவருகிறது. சர்க்காரவர்களும் இதற்கென்றே துண்டு இலாகாவொன்றுஏற்படுத்திஅச்சங்கங்களின் அபிவிருத்தியை நாடுகிறார்கள். ஆதலின் அச்சங்கங்களின் முக்கிய நோக்கங்களையும் அவைகளால் ஜனங்களுக்கு விளையும் நன்மைகளையும் சங்கங்களை நடத்துகிற முறைகளையும் நாம் கவனித்து அறிந்துகொள்வதுஅவசியமாகின்றது. முதலில் கிராமாந்திரச் சங்கத்தைப்பற்றி விசாரிப்போம்.

கிராமாந்திர ஜனஐக்கிய சங்கமென்றாலென்ன? இது கிராமாந்திரங்களிலுள்ள மனிதர்கள் தங்களுடைய பொது நன்மையை நாடியேற்படுத்திக்கொள்ளுமொரு சங்கம். கிராமவாசிகளெல்லாம் விவசாயவிருத்திக்காகப் பிறரிடமிருந்து அதிகவட்டிக்குக் கடன்வாங்கிக் கெட்

(இதன் தொடர்ச்சி 98-ம் பக்கம்)

டுப்போவதால் ஒருவருக்கொருவர் சொற்ப வட்டிக்குக் கடன் கொடுக்கவும் கடன்வாங்கவும் இச்சங்கமுபயோகப்படுகிறது. இச்சங்கத்தையேற்படுத்திக் கொள்வதற்குக் குறைந்த பக்ஷம் பத்துபேர்களாவது வேண்டும். 18-வயதிற்குமேலுள்ள ஒவ்வொரு புருஷனும் இச்சங்கத்திற்கு அங்கத்தினனாகலாம். ஸ்திரீகள் கூட இதில்சேரலாம். பணக்காரர்தான் அங்கத்தினராக விருக்கலாமென்ற நிபந்தனை கிடையாது. முக்கியமாய் ஏழைகளினுபயோகத்திற்காகவே இது ஏற்பட்டிருக்கின்றதென்று சொல்லலாம். மேலும் இச்சங்கம் எல்லாஜாதியாருக்கும் பொதுவாகவுள்ளது. எவனும் அங்கத்தினனாவதற்குத்தகுதியுள்ளவனே. இவ்வாறு ஏற்பட்டுள்ளஒருசங்கத்தால் அநேக விதமான நன்மைகளை ஒவ்வொருவனுமடையலாம். சங்கத்தில் சேராது தனித்திருந்தால் அவைகளில் ஒருசிறிதேனுமவர் அடைவது கூடாததாகும். இதில் சேர்ந்துள்ளவர்கள் பணம் சொத்து யாதொன்றுமில்லாது மிகவும் ஏழைகளாயிருந்தபோதிலும் யோக்கியதையும் முயற்சியும் வேலைத்திறமையு மவர்களிட மிருந்தால் அவர்களை நம்பிக் கடன்கொடுக்க யாவரும் சித்தமாயிருப்பார்கள். இவ்விதயோக்கியதைகளும் நம்பிக்கையும் கிராமவாசிகளிடம் பெரும்பாலுமிருப்பதால் மேற்கூறிய ஒரு சங்கத்தை ஏற்படுத்தி நடத்துவது மிகவும் எளிதாகின்றது.

இச்சங்கத்தைக் குறைவறநடத்துவதில் ஒவ்வொரு அங்கத்தினரும் கண்ணுங்கருத்துமாக விருக்கிறார்கள். ஏனெனில் ஒருவன் முதலில் கடன் வாங்கிப் பின்னர் கடன் தொகையைத் திருப்பிக்கொடுக்கத்தவறினால் அவன் நீங்கலாகவுள்ள மற்றெல்லோரும் அதற்குப் பாத்யப்படவேண்டிவருகிறது. ஆதலால் கடன்கொடுக்கும்போது அவர்களனைவரும் வெகு ஜாக்கிரதையாகவிருக்கிறார்கள். இதுபோலவே சங்கத்தினது பிரயோஜனத்திற்காகவே எல்லாரும் சேர்ந்து பிறரிடம் கடன்வாங்கினாலும் ஒவ்வொருவரும் அக்கடனைத் தீர்க்கச் சித்தமாயிருப்பதால், கடன் கொடுப்பவர் சிறிதும் தடையின்றிக் குறைந்த வட்டிக்கே கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். இதனால் இச்சங்கத்திற்குப்பணத்தட்டென்பது ஒருபோதுங்கிடையாது. குறைந்த வட்டிக்கு ஏராளமாய்ப் பணம் கிடைக்கின்றது. வெகு தூரத்திலுள்ளவர்களும் தங்களுடைய பணத்தைக் கடன் கொடுக்க முன் வருகிறார்கள். ஆயினும் கிராமாந்திரவாசிகளின் க்ஷேமத்தைக் கருதியே இச்சங்கங்களேற்படுவதால் அந்தந்தவூர்களிலுள்ளவர்களைச் சங்கத்திற்குக் கடன் கொடுக்கவும் தங்களுடைய வருமானத்தில் செலவுபோக மிகுந்த பாகத்தை மாதந்தோறும் சங்கத்தில் போடவுஞ்செய்வது மிகவும் உத்தமம்.

இவ்வாறு பலவழிகளாகச் சங்கத்திற்கு முதல் ஏற்பட்டவுடன் அம்முதலைச் செலவிடுவதில் யாதேனும் குற்றமேற்படாவண்ணம் சில நிபந்தனைகள் அனுசரிக்கப் படுகின்றன.

1. அங்கத்தினர்க்கன்றி வேறெவர்க்கும் கடன் கொடுக்கக்கூடாது.

2. கிராமத்திலுள்ளவர்கள், கிராமஅண்டையிலுள்ளவர்கள் இவர்களுடைய ஸ்திதியாவர்க்குந் தெரிந்ததாதலின் கொடுப்பதும் வாங்குவதும் கூடியவரை கிராமத்தார்க்குள்ளேயே நடக்கவேண்டும்.

3. கிராமவாசிகளுக்குள் நல்ல யோக்யதையுள்ளவர்களையே அங்கத்தினராக்கவேண்டும்.

4. கடன் வாங்குகிறவர்கள் கடனெதற்காக வாங்கப்படுகிறதென்பதை முன்பே தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

5. ஒருவன் கடன் கேட்டால் அவனுக்குக் கடன்கொடுப்பது உசிதமாவென்பதையும், எம்மட்டு கடன் கொடுப்பது நல்லதென்பதையும் மற்றவர்கள் தீர்மானிக்கவேண்டும்.

6. கடன் வாங்குபவன் அங்கத்தினரிருவரை ஜாமீன் காட்டவேண்டும்.

7. கடனெதற்காக வாங்கப்பட்டதோ அந்த விஷயத்தில் பணம் உபயோகப்பட்டதாவென்று ஜாமீன்தார்களும் மற்ற அங்கத்தினர்களும் தெரிந்து கொள்ளவும், அவ்வாறு உபயோகிக்காதபக்ஷத்தில் உடனே பணத்தைவாங்குவதற்கான வழிகளைத் தேடவும் வேண்டும்.

8. அடிக்கடி சர்க்கார் உத்யோகஸ்தர்களால் சங்கத்தின் கணக்குகள் தணிக்கைசெய்யப்படவேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகட்குட்பட்டு நடந்துவருகிற சங்கங்கள் ஒருபோதுந்தாழ்வடையா. இதுவரை யாதேனுமொருசங்கம் தோன்றி அவ்வாறு தாழ்வடைந்து மறைந்ததாகக் கேட்டதில்லை.



இனி, இச்சங்கத்தை நடத்துவோர் அதன் அங்கத்தினரே. சங்கக்கணக்குகளைத்தணிக்கை செய்வதைத்தவிர, வேறு ஒரு விஷயத்திலும் சர்க்கார் தலைகொடுப்பதில்லை. சங்கத்தினரே தமக்குள் கல்வி அறிவு ஒழுக்கங்களாற்பெருமைவாய்ந்த ஐந்து பெயர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைப் பஞ்சாயத்தாராக வைத்துக்கொண்டு, சங்கத்துச் சகல காரியங்களையும் அவர் மூலம் நடத்துகிறார்கள். இந்தப்பஞ்சாயத்துக் கமிட்டியார்க்கு பிரத்யேகமாகச் சம்பளங்கிடையாது. வேலை யதிகமாகவில்லாததாலும் பஞ்சாயத்தாரா யிருப்பதால் ஒருவருக்குக்கிடைக்கும் மரியாதையாலும், கிராமவாசிகளில் கண்ணியதையுடைய ஒவ்வொருவரும் பிறர் தங்களை வேண்டும்போது ஊதியமின்றி வேலைசெய்யச் சித்தமாயிருக்கிறார்கள். பஞ்சாயத்தார்கள் மாதமொருமுறை கூடி சங்கத்தினது அபிவிருத்தியைக் கருதிய காரியங்களைப் பகிரங்கமாய் நடத்தவேண்டும். தகுந்தவர்களுக்குக் கடன் கொடுப்பதும் கொடுத்தகடன்களைச்சரியான காலங்களில் பாக்கியின்றி வசூல் செய்வதும், சங்கத்தினங்கத்தினரைத் தங்களுடைய மிகுதிப் பணத்தைச் சங்கத்திலேயே போட்டுவைக்கத் தூண்டுவதும் அவருடைய கடமைகளாகும்.

ஒவ்வொரு சங்கமும் சாதாரணமாக வருஷத்திற்கு 100-க்கு 7½. ரூ. வீதம் சென்னை சென்ட்ரல் பாங்க் முதலிய பாங்குகளிலிருந்து வட்டிக்குப்பணம் வாங்கலாம். இப்படி வாங்குகிற பணத்தை அங்கத்தினர் நூற்றுக்கு 9¾ வீதம் கடனாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இவ்விதம் குறைந்தவட்டிக்கு வாங்கிச் சிறிது அதிகவட்டிக்கு கொடுப்பதால் கிடைக்கும் இலாபத்திலிருந்து சங்கத்தை நடத்துவதிலுண்டாகுஞ் செலவைக்கழித்து மீதியை மூலதனத்திற்காகத் துண்டுபடுத்தி வைக்கிறார்கள். சங்கத்திற்குப் பின்னாலேதேனும் நஷ்டம் வந்தால் அதைச்சரிப்படுத்துவதற்கு இந்தமூலதனம் (Reserve Fund) உபயோகப்படுகிறது. இதுசங்கத்திற்குக் கிடைத்த இலாபத்தின்ஒரு பகுதியாயினும் அங்கத்தினர் இதை யொருபோதும் பிரித்துக்கொள்ளக்கூடாது. ஆயினும் எல்லோருக்கும் அது பொதுதான்; எல்லோருக்கும் அதில் சம்பந்தமுண்டு. ஆதலால் இந்த மூலதனம் நஷ்டம் நேருங்கால் சங்கத்திற்குக் கவலை வாராது கைகொடுக்கும் உபகாரிபோலும், அங்கத்தாரனைவரையும் சங்கத்தினது சாச்வத அபிமானிகளாகும்படி கட்டுப்படுத்தும் பாசம்போலுமுள்ளது. ஏதோ வொரு காரணம்பற்றி இச்சங்கம் நடைபெறாது நின்றுவிட்டால் அங்கத்தினருடைய தீர்மானப்படி இம்மூலதனத்தை யாதேனுமொரு பொதுஜன விஷயத்தில் வினியோகிக்கலாம்.

இவ்வித சங்கங்கள் எங்கும் பரவி ஜனங்களுக்கு நன்மை பயக்குமாறு நமது இராஜாங்கத்தார் வெகு முயற்சி யெடுத்துக்கொண்டிருப்பதோடு சில அனுகூலங்களையும் தந்திருக்கிறார்கள். அவையாவன:—

(1) சங்கத்தினது கணக்கைத் தங்கள் சொந்த உத்யோகஸ்தர் மூலம் தணிக்கை செய்வதற்குப் பிரதிப் பிரயோஜனமாகச் சிறிதும் பணம் கேட்பதில்லை. வேறு யாரேனும் அவ்விதம் தணிக்கைசெய்தால் அவர்களுக்குச் சங்கம் சிறிதுபணம் கொடுக்கவேண்டிவரும். தணிக்கையுமவ்வளவு சுத்தமாக விருப்பது அறிது.

(2) சங்கத்திற்கும் அதைச்சேர்ந்தவர்களுக்கும் ஸ்டாம்புச் செலவென்பதே கிடையாது. பணம் கொடுப்பதும் வாங்குவதும் ஸ்டாம்புக் காகிதமின்றியே நடைபெறுகின்றன. மற்றவர்களிடத்தில் கடன் வாங்கினால் ஸ்டாம்பு ஒட்டாமலும் ஸ்டாம்புகாகிதங்களில் எழுதாமலுந் தீராது.

(3) வெற்றுக்காகிதங்களிலெழுதின சங்கத்துப் பத்திரங்களை ரிஜிஸ்டராபீசில் பணமில்லாது ரிஜிஸ்டர்செய்து கொடுக்கப்படும்.

(4) சங்கத்தாரி னுபயோகத்திற்காக ஜில்லா கெஜட்டுகள் அந்த ஜில்லாவிலுள்ள சங்கங்களுக்கு இனாமாக அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு அங்கத்தினருமிதைப்படிப்பதால் கிராமவாசிகளுக்குத் தெரியவேண்டிய விஷயங்களெல்லாம் தெரிந்து அறிவிற் சிறந்தவராகின்றனர்.

இந்த சங்கத்தை ஏற்படுத்தி நடத்துவதால் கிராமவாசிகளுக்கு மிகுதியான நன்மைகள் விளைகின்றன. தற்காலத்தில் ஒவ்வொருகிராமங்களிலும் குடியானவர்கள் சிறுவியாபாரிகள் தொழிலாளிகள், கூலியாட்கள் முதலியோர் வசிக்கிறார்கள். அவர்களில் கடன்வாங்காதவர்கள் அநேகமாயில்லையென்றே சொல்லலாம். எல்லாரும் செட்டிமார்களிடத்திலும் பிறரிடத்

திலும் தங்களுடைய முட்டான சமயங்களில் பணங்களை அதிகவட்டிக்கு வாங்குகிறார்கள். பணங்களைத்திருப்பிக்கொடுப்பதுபலர்க்குசாத்தியமாகாமல் தமது சொத்துக்களெல்லாம் அவர் இழந்துவிடுவார்கள். சிலர் நெல்விளைந்து வந்தவுடன் கடன்வாங்கின பணத்திற்காக எல்லாவற்றையும் கடன் கொடுத்தவர்க்கே குறைந்தவிலைக்கு விற்றுவிட்டுப் பின்னர் தமது சாப்பாட்டிற்கு மறுபடி கடன் வாங்குகிறார்கள். எப்பொழுதும் கடனாளிகளா யிருக்கிறார்களே தவிர, நெல்லின்விலையேறினதாலடையும் இலாபத்தை அவர் ஒருபோது மடைவதில்லை. இவ்வாராகிய சங்கடங்களிலகப்பட்டுத் தம்மைக்கடனினின்று விடுவிக்க வழிதெரியாது விழி பிதுங்கித்தவிக்கும் ஜனங்களுக்கு கிராமஜன ஐக்கிய சங்கமானது உயிர்கொடுக்கும் தெய்வமென்றே சொல்லலாம். முதலில் குறைந்தவட்டிக்குச்சங்கத்திலிருந்து பணம்வாங்கி அவரவர் தம்முடையபழையகடனைத்தீர்த்துக்கொள்ளலாம். ஒருமுறை கடனால் பிடிக்கப்படாது தம்மை விலக்கிக்கொண்டால் பின்னரவர்கட்குளென்றும் நல்ல காலந்தான். விஷம்போல்வட்டியேறி எங்கே நாம் முழுகிப்போய் விடுகிறோமோ என்ற பயம் அவர்களுக்கு முற்றிலும் நீங்கிவிடுகிறது. விளைந்து வீடுசேருமுன்னமே தமது விளைவுகளை முன்போல கடன்காரருக்கு குறைந்த விலைக்கு அளந்து விடாது, இலாபகரமாக எப்போது விற்கலாமென்று தமக்குத் தோற்றுகிறதோ அதுவரை தான்யங்களைக் கட்டிவைத்துப் பிறகு விற்று அந்தலாபத்திலிருந்து சங்கத்திற்குச் சேரவேண்டிய தொகையை வட்டி கூட்டிச் சிறிது சிறிதாகத் தீர்த்துவிடலாம். எப்பொழுது கடனாகிய தீராப்பிணியினின்று விடுபட்டாரோ, அப்பொழுது அவருக்கு ஆறாத ஊக்கமுண்டாகி மேன்மேலும் தமது நிலையை யுயர்த்திக்கொள்ள முயல்கிறார்கள். தம்முடைய நிலத்தைப்பண்படுத்தி அதிக விருத்திக்குக்கொண்டுவருவதற்கு முக்கிய சாதனங்களாகிய உயர்ந்தஜாதி விரைகள், ஆடுமாடுகள், உறங்கள் முதலியனவாங்குவதற்குச்சிறிது கடன் சங்கத்தினின்றும் பெற்றுக்கொண்டு, அவைகளை வாங்கித் தமது பிரயாசையால் நிலத்தைப் பன்மடங்கு அதிகமாய் விளையும்படி செய்து மிகுதியான இலாபத்தை யடைகிறார்கள். எதிர்காலத்தில் வரும் ஆபத்துகளை நோக்கி ஏழைகள் சிறிது சிறிதாகப் பணத்தைச் சேமித்து வைப்பதற்கு இச்சங்கம் சிறந்த சாதனமாகவுள்ளது. இன்னும், செட்டு, தற்காத்தல், பிறர்சார்பின்மை முதலிய நற்குணங்களெல்லாம் அவர்களிடம் தாமே அமைந்து கொள்ளுகின்றன. இது ஏற்பட்டு நடக்கும் ஒவ்வொருகிராமத்திலும், கிராமவாசிகள் பகை, கக்ஷி, துரோகம், பொச்சாப்பு முதலியன இல்லாது சுகமாக ஒத்து வாழ்கிறார்கள். தமக்குள் வழக்கேதேனுமிருந்தால் அதைப் பஞ்சாயத்தார்மூலம் தீர்த்துக்கொள்ளுவதால் அவர்கள் வியாச்சிய விஷயமாக ஒருபோதும் பணச்செலவு செய்வதில்லை. தற்கால நாகரீகத்திற்கேற்ப பள்ளிக்கூடம் நடத்தல், கிராமத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் வியாதி முதலியன அணுகாது காப்பாற்றல், கிணறேனும், குளமேனும் ஒன்றைப் பானத்திற்கென்று துண்டாக ஒதுக்கிவைத்து அதைப் பிறர் அசுத்தமாக்காது போற்றி வைத்தல் முதலிய பொது நன்மையான விஷயங்களில் அவர்களுடைய கவனஞ் செல்வதால் கிராமத்தாருக்கு ஒருவிதமான மதிப்பும் ஏற்றமுமேற்படுகின்றன. ஒவ்வொருவரும் தங்களாலியன்றவரை கிராமத்திற்கு நன்மை புரிய முயற்சிப்பதாலும் தங்களுடைய கிராமவிஷயங்களைத் தாங்களே நடத்திக்கொள்வதாலும் நாளடைவில் சுவய அதிகாரம் வகிக்கத் தகுதியுள்ளவர்களாகிறார்கள். இவ்விதப் பழக்கஞ்சிறிதுமில்லாத மற்ற ஜனங்களுக்கு இவர்கள் வழிகாட்டிகள் போல நின்று மாபெருந்தீபங்கள்போல வொளிர்வதால், நாடெங்கும் செல்வமோங்கும், நன்மை விளையும், நல்லறிவு மேலிடும்.

---

ஜலதோஷம்.—இது சாதாரண வியாதி. நாசிக்குள்ளிருக்கிற சிலேஷ்ம சவ்வுக்குக் காணுகிற தாபித ரோகம். இந்த தாபிதம் அல்பமாயாவது, உக்கிரமாயாவது இருக்கும்; அல்பகாரணங்களால் சிலருக்கு அடிக்கடி கண்டு போராடும். சிலருக்குத் தீராத வியாதியாய் இருந்து விடுவது முண்டு. பிரகிருதிபலனாய் இருந்தால் வியாதி அணுகாது. மூக்கிலிருக்கிற வியாதி சுவாசக் குழலுக்கிறங்குவது முண்டு. இந்த ரோகத்துக்குச் சீதமே காரணம். காற்று விகல்பத்தினாலும், சரீரம் ஆயாசமடைந்திருக்கும் போது ஈரம் படுவதினாலும் சீதபதார்த்தங்கள் உண்ணுவதினாலும் கழுத்துமேல் குளுங்காற்று படுவதினாலும், குளுங்காற்று வாடையில்இருப்பதினாலும் ஈரத்தில் திரிவதனாலும் ஜலதோஷம் காணும்.



162071

# நரம்புகள்

## NERVES

இதற்கு முன்னாலேயே நரம்புகள் நம்முடைய சிரசின் கூடாக விருக்கின்றனவென்று சொன்னோமல்லவா? இன்னமும் அம்மண்டையோடும் வர்டிப்ராவோடும் சேர்க்கப்பட்டிருக்குமிடத்தில், அதாவது அடிப்புறத்தில் ஒருசக்ராகாரமான துவாரமிருக்கிறது. இந்த மண்டையோட்டிலுள்ள துவாரத்திற்கு நேராக வர்டிப்ராக்களில் துவாரங்களிருக்கின்றன. ஆதலால் மண்டையோட்டி லாரம்பித்து முதுகெலும்பு ஸ்தம்பத்தின் அடிவரையில் நீளமாக ஒரு துவாரம் செல்லுகிறது. இதோ பாருங்கள். இந்த வர்டிப்ரா எலும்பில் ஒரு துவாரமிருக்கிறது. இவைகளை ஒன்றின்மேலொன்றாக இடம் பார்த்து வைப்பதனால் இந்த நீண்ட துவாரம் உண்டாகிறது. இதற்கு 'முதுகெலும்புக் கால்வாய்' என்று சொல்லலாம்.



இந்த மண்டையோட்டுக் கூட்டுக்குள் தான் மூளை வைக்கப்பட்டிருக்கிறது. அடிப்புறத்தில் இந்த மூளையிலிருந்து ஒரு பாகம் வால்போலக் கிளம்பி, முதுகெலும்புக் கால்வாயின் வழியாக நீளச்செல்லுகிறது. இந்த மூளையை 'எடுத்துப் பரீட்துப் பார்க்கும் பட்சத்தில், அது நம்முடைய சரீரத்திலுள்ள மற்ற மாமிசங்களைப் போலிருக்கவில்லை யென்பது வெளியாகும்.

இந்த நீண்ட வாலுக்கு ஸ்பைனல் கார்ட் (Spinal cord) என்று பெயரிட்டிருக்கிறார்கள். வாலில் மயிர்களிருப்பது போல், இந்த ஸ்பைனல் கார்டிலிருந்தும் அநேகம் மெல்லிய, வெண்ணிறமுள்ள, நீண்ட நரம்புகள், ஒவ்வொரு இடத்திலிருந்தும் புறப்பட்டு, சரீரத்தின் எல்லா பாகங்களுக்கும் செல்லுவதை நீங்கள் காணலாம்.

இந்த நரம்புகள் நம்முடைய சகலவிதமான உணர்ச்சிக்கும் காரணம். இவையில்லாமற் போனால் நமக்கு வலிமுதலியவை உண்டாகாது. வஸ்துக்களின் காடின்யம், மார்த்தவம், குளிர்மை, உஷ்ணம் முதலிய குணங்களும் புலப்படாமற் போய்விடும். இந்த நரம்புகள் தாம் நம்முடைய தசைநார்களை சுருங்கும்படி செய்து அதனால் எலும்புகளை அசைப்பிக்கின்றன. அதாவது, நாம் நம்முடையகழுத்தை ஒருபக்கத்திலிருந்துமற்றொரு பக்கத்திற்குத் திருப்புவோமானால், அப்பொழுது கழுத்தைத்திருப்பும்படி, தசைகளுக்குத் திரவிட்டு வேலைவாங்கினது உண்மையில் நரம்புகளே. ஆனால் சிலசமயங்களில் இந்த நரம்புகளுக்கு தம் வேலையைச் செய்ய சக்தியில்லாமற் போய்விடுகிறது. இதற்குத்தான் பக்ஷ வாயு அல்லது பார்சுவவாயு என்று பெயர். பார்சுவவாயு வந்தவர்களுக்கு அந்த பார்சுவவாயு வந்த சரீரத்தின் பாகம் ஸ்வாதீனப்படுவதில்லை. அவைகளை அசைப்பதற்கு அவர்களால் முடியாதென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அது ஏன்? சரீரத்திற்கு எவ்விதசலனத்திற்கும் காரணம் தசைகள் சுருங்குதல், அதற்குக்காரணம் நரம்புகள். ஆதலால் ஆதிகாரணமான நரம்புகள் தம் வேலையைச் செய்ய சக்தியற்றவைகளாய்விட்டால் சரீரத்தில் சலனத்திற்கு ஹேதுவில்லாமற் போய்விடுகிறது.

மூளையின் உபயோகமென்ன வென்கிறீர்களோ? தசை நார்களுக்கு நாம் மேற்கூறியபடி வேலைகொடுத்து வேலைவாங்குபவை நரம்புகளானாலும் உண்மையில் அவ்வேலைக்காதாரமாயிருப்பது மூளையே. ஏனெனில் இந்நரம்புகள் மூளையினிடத்திலிருந்து தான் இவ்வுத்தியை பெற்று, தசைகளைச் சுருங்கும்படி செய்கின்றன. ஆகையால் இந்நரம்புகள் இங்குமங்குமாக, மூளையினிடமிருந்து சரீரத்தின் பாகங்களுக்கும் சரீரபாகங்களிலிருந்து மூளைக்குமாக ஸதா செய்திகள் அனுப்பப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. இதனால் மூளையானது சரீரத்தின் மற்ற பாகங்களில் நடக்கிற அநேகம் ஸங்கதிகளை யறிந்து அவ்வவைகளுக்குச் செய்ய வேண்டிய சிகித்ஸைகளைச் செய்யவேண்டியதற்காக வேறு நரம்புகள் மூலமாய் தசைகளுக்கும் சரீரபாகங்களுக்கும் செய்தியனுப்பப் படுகிறது. உதாரணமாக ஒருவனுக்கு ஒரு முள் தைப்பதை எடுத்துக்கொள்வோம். உடனே

அவனுடைய மனோவியாபாரமில்லாமலே முள் தைத்த கால்கள் தூக்கப்படுகின்றன. அதாவது முற்காலில் பிணிக்கப்பட்டுள்ள தசை சுருங்கி, காலைத் தூக்குகிறது. இத்தசை ஏன் சுருங்க வேண்டும்? மூளையானது நரம்புகளின் மூலமாய் இத்தசைகளுக்குச் சுருங்கும்படி ஒரு உத்திரவனுப்பிற்று. இவ்விஷயம் மூளைக்கு எப்படித் தெரிந்தது? சரீரபாகங்களிலிருந்து ஸமாசாரம் கொண்டுபோகும் நரம்புகள், முள் தைத்த விஷயத்தை மூளைக்குத் தெரிவித்தன. ஆகையால் மூளையானது ஸர்வாதிகாரியாயிருந்து தன்னுடைய வேவுகாரர்களாகிய சில நரம்புகளின் மூலமாய், வெளியில் நடக்கும் விஷயங்களை யறிந்து தன் ஸேவகர்களான வேறு சில நரம்புகளின் வழியாய்உத்திரவுகளை யனுப்பி வேண்டிய காரியங்களை ஸாதித்துக் கொள்ளுகிறது.

### தோல்

இதுதான் நம்முடைய சரீரத்தின் மேற்போர்வை. நாம் முன்னமேயே கூறியுள்ள தசைகளையும் நரம்புகளையும் மற்ற பாகங்களையும் மூடிக்கொண்டிருக்கின்றது. இது இரண்டு அடுக்குகளாக விருக்கிறது. மேலடுக்குக் கொஞ்சம்தடிமனும் உரப்பாகவும். அதற்குக் கீழடுக்கு மெல்லியதாயும், மிருதுவாகவுமிருக்கிறது. நம் சரீரத்தில் முள் முதலியவைகள் தைக்கும்பொழுது, முள்ளின், நுனியானது மேல் தோலில் மட்டும் குத்துமானால் நமக்கு வலியுண்டாவதில்லை. வலியை யுண்மையிலறிவது கீழடுக்குத்தான். சரீரரோமங்களின் வேர்களும் இவ்வடுக்கில் தான் அமைக்கப்பட்டுள்ளன. அக்கீழடுக்கின் வர்ணமானது இரத்தஞ் சுரந்ததுபோல் சிவப்பாயிருக்கும். நம்முடைய உதடுகளென்ன, வாயின் உட்புறமென்ன, இவைகளிலுள்ள தோல்கள் கீழடுக்குத் தோலுக்கு உதாரணங்கள். தோல் நம் சரீரத்துள்ள தசைகளையும், நரம்புகளையும் மற்றுமுள்ள பாகங்களையும் சேர்த்துப் பிடித்துக் கட்டுவதற்கு மட்டுமல்லாமல் அழுக்குத் தூசிமுதலியவை அடையாமலும் அவ்வவயவங்களுக்குக் கேடுவராமலும் காப்பதற்குபயோகமாகிறது.

T. R. S. சாஸ்திரி, பீ.ஏ.

# வைதிகமத ஞானம் III

## KNOWLEDGE OF VEDIC RELIGION

முன் பாகத்தில் வைதிகமதத்தை உள்ளபடி காட்டவந்த ஷட்தர்சனங்களின் பொதுவிஷயம் கூறப்பட்டது. இங்கு அவ்வளவு சிறப்பு வாய்ந்த தர்சனப் படிப்பு ஏன் இக்காலத்தில் குன்றியது என்பதை எடுத்தாராய்வோம்.

இந்த தர்சனப்படிப்பு விருத்தியாகி இவைகள் ஒன்றற்கு ஒன்று உதவியாகவிருந்துவேத முடிவை நிலைக்கச் செய்யும் குணமுடையன என்ற உணர்ச்சி மேலாக திடப்பட்டிருந்த காலம்தான் நமது பெரியோர்கள் காலம். வரவரக் கலி முத்தி ஜனங்கள் புத்தி குன்றிக்கொண்டுவர இந்த தர்சனங்கள் ஒவ்வொன்றையும் வேறாகக் கருதித் தனி முடிவை ஒவ்வொன்றும் வற்புறுத்துகின்றது என்று வீண் பிடிவாத குதர்க்கங்கள் கிளம்பி வேத முடிவு இன்னது என்பது உருத்தெரியாமல் போகத் தொடங்கிவிட்டது. பொதுவாக மீமாஸ்கர்கள் கர்மாவே போதும் வேறு ஒன்றும் வேண்டியதில்லை, அதுவே வேத முடிவென்று சாதித்து கூட்டங்கூட்டினர். ஸாங்கியர் நிரீச்வரவாதம் செய்து தாம் வெளியிடும் பிரகிருதி புருஷச் சேர்க்கைதான் பந்தம், அதன் நீக்கமே மோக்ஷம் இது தான் வேதமுடிவு என்று வாதம் பண்ணத்தொடங்கினர். யோகிகள் தமது காயக்லேசாதி தவங்களை வேதமுடிவு என்று கொடிய அப்யாஸங்களை நிலைக்கச் செய்தனர். இப்படி ஒன்று சேர்ந்து உதவிபுரியவேண்டிய தர்சனங்கள் பிரிவுபட்டுப் பின்பற்றப்படவே ஸந்மார்க்க ப்ரவர்த்தி வீண் பக்ஷபாத குதர்க்க மாத்திரமாக நின்றுவிட்டது. இதுபோததென்று வேதத்திற் கூறியுள்ள பன்னிரண்டு தேவதைகளான ருத்ரன், ருத்ர மூர்த்தி, கணபதி, நந்தி, ஷண்முகர், கருடன், ப்ரஹ்மா, விஷ்ணு, நரஸிம்மர், ஸூர்யன், அக்னி, துர்கை, ஸம்பந்தப்பட்ட தாந்திரீக ஆகமங்களும் தலை விரித்தாடத் தொடங்கிஜனங்கள் எல்லோரையும் குழப்பி, பல கக்ஷிப்ரதிகக்ஷிகளாகப் பிரித்து சின்னாபின்னப் படுத்தின. வேத முடிவு இந்த அல்லோல கல்லோலத்தில் தலை எடுக்காமலே முழுகிப்போய் விட்டது. இந்த ஸமயத்தில் வேத முடிவை உள்ளபடி வெளிக்



காட்டி அதற்கு ஆகமதர்சனங்கள் இவ்வாறு வழிகள் என்பதை விளக்கிக் குழப்பத்திலிருந்து விளக்கம் உண்டாக்க அவதரித்தார் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகள்.

இவர் ப்ரஸ்தானத்ரயம் என்று எல்லோருக்கும் தெரிந்திருப்பதான, ச்ருதிப்ரஸ்தானமான உபநிஷத்துக்கள், ஸ்மிருதிப்ரஸ்தானமான பகவத்கீதை, ஸூத்ரப்ரஸ்தானமான வேதாந்த தர்சன பிரஹ்ம ஸூத்திரம் இவைகளுக்குத் தெளிவான வ்யாக்யானம் எழுதி ஷட்தர்சனங்களையும் ஸ்தாபநம் பண்ணி வேதாந்தத்தை நிலை நாட்டினர். இப்படிச் செய்த இவரது பொதுவான அபிப்ராயம் இன்னதென்பதைத் தாமே பிரஹ்ம ஸூத்திரம் இரண்டாம் அத்யாயம் முதல் பாதம், மூன்றும் ஸூத்திர வ்யாக்யானத்தில் வெளியிடுகிறார். (II—i—3)

"ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றி யுக்திவாதம் செய்யும் ஸ்மிருதிகள் அநேக மிருப்பினும் இங்கு பூர்வபக்ஷம் பண்ணி நீக்க ஸாங்கியம் யோகம் என்ற இரண்டு தர்சனங்களைமாத்திரம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஷட்தர்சனங்களுக்குள் இவைகளே பெரும்பாலாலும் பரம புருஷார்த்தமான மோக்ஷம் கைகூடுவதற்கு மிக முக்யமானவை என்று அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இவைகள் விஷயமான நுட்பத்தை வெளிப்படுத்த வேண்டியே இவ்வாறு செய்யப்பட்டது. இதற்கு ஆதாரமாகக்கூட 'ஸாங்கிய யோகங்களால் வெளியிடப்பட்ட காரண வஸ்துவை உணர்ந்தவர் பந்தங்களினின்றும் விடுபவர்' என்ற ச்வேதச்வதர உபநிஷத் VI 13-ம் ச்லோகமும் உளது. இதைக்கொண்டு ஸாங்க்யயோக ஸ்மிருதிகள் கூறும் விஷயங்களில் எல்லாம் ப்ரமாணமே என்ற வாதத்தை மாத்திரம் இங்கு நிராகரிக்கவேண்டியது அவசியம். உண்மையாதெனில், வேத ஸம்பந்தமில்லாமல் வெறும்ஸாங்கியம் அல்லது யோகம் இவைகளில் பழகுவதால் மாத்திரம் முக்தி கைகூடிவிடாது. அந்த ச்வேதச்வதர உபநிஷத்தே ஆத்மாவின் அகண்ட ரூப உணர்ச்சியின்றி மோக்ஷம் கைகூடாதென்று 'அவனை உணர்ந்தோனே மரணம் தாண்டுகிறான்; மேற் செல்ல வேறு வழியே இல்லை என்று III-8-இல் கூறியுள்ளது. இதை முற்கூறிய ஸாங்கிய, யோகங்



களால் வெளியிடப்பட்ட காரணங்கள் என்ற
ச்ருதிவாக்யத்தில் பொருத்தி ஸாங்கியம், யோ
கம் என்றபதங்களுக்கு ஞானம், நிஷ்டைஎன்ற
பொருள்களை எடுத்துக்கொள்ள வேண்டும்
(இவைகளை முறையே ப்ரதானமாக உடைய
கபிலபதஞ்ஜலிஸ்மிருதிகளுக்கு முறையே இட
பெயர் பொருந்தும்.) இவ்விரு தர்சனங்களி
வேதவிரோதமில்லாத பாகங்களை நாமும் ப்ரமா
ணமென்றேஒப்புக்கொள்ளுகிறோம். ஆத்மாவை
நிர்குணன் என்று உபதேசிக்கும் ஸாங்கிய த
சனத்திற்கும், புருஷன் கேவலம் சுத்த
என்று வற்புறுத்தும் வேதத்திற்கும் (அந்த
புருஷன் ஒன்றோடும் ஒட்டியவனல்லன்: பிரஹ
தாரண்யக உபநிஷத் IV—3—16) உள்ள பொ
ருத்தத்தைக் கருதாமலிருக்க முடியுமா! ஸ
சாரம்செய்யும்ஸந்நியாஸிகள் விஷயத்தில் யோ
கம் விதிக்கும் ஒழுங்குகளைப்பார்த்தால் ஜாபா
உபநிஷத் 4-ம் பாகத்தில் வேதம், 'பரிவ்ரா
கன் காஷாயம், மொட்டைத்தலை, பற்றின்மை
இவைகளுடன்' என்று இவ்வாறு விதித்திரு
பதற்கும் உள்ள பொருத்தத்தை ஒப்புக்கொ
ளுவதற்குத் தடை ஏது!!

"முற்கூறியவிஷயங்கள் எல்லா யுக்தி ஸ்மி
திகளான தர்சனங்களுக்கும் பொருத்தம்தா
இந்த ஸ்மிருதிகள் எல்லாம் தமது யுக்தி அ
யாஸங்களால் உண்மையை உணர மிகு
உதவி புரிகின்றன எனில் எமக்கும் அது ஸ
மதமே. ஆனால் உண்மை உணர்த்துவன வே
வாக்கியங்களே. அவைகளின் முழு ஆற்
வேறு எதற்கும் இல்லை என்பதுதான் முடி
'வேத முணராதோன் ப்ரஹ்மமுணரான்' எ
கிறது தைத்திரீய ப்ராஹ்மணம் III—12-9
இந்த விஸ்தாரத்திற் கேற்ப."

இங்கு எடுத்துக் கூறியதிலிருந்து ஸ்ரீம
சங்கரபகவத் பாதாசாரிய ஸ்வாமிகள் இ
வாறு மற்றைய மதங்களை நிலைநிறுத்தி அ
திற்கும் வைதிகஅத்வைத மதத்திற்கும் உள்
பொருத்தத்தைக் காட்டி அத்வைத முடிவ
உறுதிப்படுத்தினர் என்பது விளங்கும்.

இவ்வாறு வெளிப்படையாக ஆசார்யா
கூறியிருந்தும் இதை நன்கு மதியாது ஸ
கிருதம் படித்த பண்டிதர்களிடமே ஆசார்
ளுக்குப் பிற்காலம் ஷட்தர்சன விஷய அ
தாவு வாவா அதிகப்பட்டுக்கொண்டு வந்த
ஆசார்யாள் பிரஹ்மஸூத்ரம் இரண்டாம்

யாயம் முதல்பாதம் முதல் ஸூத்திர பாஷ்யத்
தில், ஸாங்கிய தர்சனத்தைக் கண்டித்துவிட்
டார்கள்; பின்னர் யோகத்தையும் கண்டித்து
விட்டார்; மற்றவைகளை வேறுஒரிடத்தில்ஒதுக்
கிவிட்டார். ஆதலால் இந்ததர்சனங்களையும்தர்ச
ஞந்தரங்களையும் ஆஸ்திகர் வாசிக்கவேண்டிய
தில்லை என்று குருட்டு அபிப்பிராயம் பலத்து
வந்தது I-iii-28-ம்ஸூத்திர வ்யாக்யானத்தில்
வையாகர்ணிக மதம் கண்டிக்கப் பட்டுள்
ளதே அதனுல் வேத உணர்ச்சி ஏற்பட வியா
காணப்படிப்பை விட்டுவிட்டோமா: அதுபோல
தர்சனப்படிப்பையும் வேண்டியவரையில் கைக்
கொள்ள வேண்டும் என்ற நல்ல யுக்தி அவர்க
ளுக்குப் படாமலே போய்விட்டது. கலிகால
மஹிமையால். இப்படி ஷட்தர்சன விஷய
அருவெறுப்பு அதிகப்பட்டு வருகையில் ப்ரஹ்
மஸூத்ரம் இரண்டாம்அத்யாயம் முதல்பாதம்
முதல் ஸூத்திர வ்யாக்கியானத்தில் ஸ்ரீமத்
சங்கராசாரியாள் பின்வருமாறு கூறியுள்ளார்
என்பது வெளிப்படுத்தப்பட்டது.—

"ச்வேதச்வதர ச்ருதி 5-ம்பாகம் 2-ம் ச்லோ
கத்தில்'எல்லாம்அடக்கியஈசன்தன்பிள்ளைகபில
ரிஷிக்கு எல்லாஉணர்வையும்கொடுத்துகடாக்ஷி
த்தார், அவர் வெளிவருகையில்' என்றுள்ளது.
ஆதலால் கபில ஸாங்கியமும் அதன் பிரகிருதி
ஸ்ருஷ்டிவாதமும் உண்மையே என்று கூற
வரும் பூர்வபக்ஷவாதிக்கு பதிலாக ஒன்றுகூற
வேண்டும். 'இந்த வாக்கியம் ஒன்றும் குறிப்பி
டாமல் கபிலர் என்று மாத்திரம் கூறியுள்ளது.
புராணத்திலோ ஒரு கபிலர் காணப்படுகிறார்.
அவர் தான்ஸகரபுத்திரரை எரித்தவாஸுதேவர்
எனப்படுபவர்.' இதனுலே ஸாங்கியாசாரியான
கபில வாஸுதேவர் வேதங்களில் கூறப்பட்ட
ஆதிகாரிகரல்ல" இதனுல் அவர் தர்சனமான
ஸாங்கியமும் அதுபோன்ற மற்றைய தர்சனங்க
ளும் அவைதிகம் என்றும் சிஷ்டர்கள் ஆதரிக்
கத்தகாதனஎன்றும் முழுவதும் ஒதுக்கப்பட்
டன இன்றுவரையில்.

ஷட்தர்சனப் படிப்பு குன்றியதன் காரணத்
தைக் காட்டியாகிவிட்டது. இனித் தகுந்த
யுக்தி மேற்கோள்கள் இவைகளைக்கொண்டு
கடைசியில் கூறப்பட்டது ஆசார்யாள் வாக்கே
யல்ல நடுவில் வந்த சில பரபரப்பான வேதாந்
தாபிமானிகளதே என்பதை விளக்க முயலு
வோம்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### 1. ஆத்திசூடி விளக்கம்

### 42. கோதாட்டொழி

இதற்குப் பொதுவாக குற்றம் பொருந்திய
ஆட்டத்தை விட்டுவிடு என்பது பொருள்.
இதில் ஆட்டு என்ற பதத்தின் பொருள் சிறப்
பால். இதில் சில சிறந்தபொருள்கள் அடங்கியு
ள்ளன. இச்சொல்லின் பொருள்களை எல்லாம்
இரண்டு பொருள்களுள் அடக்கிவிடலாம். அ
வையாவனவிளையாட்டு என்பதும்,வ்யவஹாரம்
அல்லது விஷயப்பழக்கம் என்பதுமே. முதல்
பொருள்தான் இங்கு ஸாதாரணப்பொருள்;
பின்னது மதவிஷயப் பொருளே. ஆதலால்
முன்பொருள்படி நாம் பழகிவர முயன்றால்
தான் பின் பொருள்படி. பழகிவரும் ஆற்றல்
வர இந்த ஸூத்திரப்படி முற்றிலும் ஒழுகிய
திருப்திக்கிடமுண்டாகும்.

(1) குற்றமுள்ளவிளையாட்டைநீக்கு:—நமக்கு
சில தொழில்கள் குற்றமுடையன என்றும்
வேறுசில நல்லவை என்றும் பொதுவான
உணர்ச்சிஉண்டு. இவ்வாறுகூற முடியாத்தொ
ழில்களைப்பற்றிய வரையில் தர்ம சாஸ்திரங்
களே நமக்கு பரமாணம். ஆகவே நமது இயற்
கை உணர்ச்சிபாலாவது அல்லது கல்விப்பயிற்
சியில் தேர்ந்த அறிவினுலாவது நாம் செய்ய
வரும் தொழில்களின் குணதோஷங்களை
உணர்ந்து விடலாம். இதன் பின்னர் உலகில்
குற்றமுள்ளவைகளை நீக்கி, குணமானவை
களைக் கைவிடாதிருக்கவேண்டும் என்பது
பொது தர்மம். இப்படி இருப்பினும், குற்ற
மான காரியங்களை யாதொரு குற்றத்தைக் கரு
தாது விளையாட்டிற்காக செய்வது நமது ஸமூ
கவாழ்க்கையில் சிற்சில ஸமயங்களில் ஏற்பட்டு
விடும். உதாரணமாகப் பிறரை இகழ்தல் என்
பது குற்றமுள்ள செயலே. அதில் அவர் முன்
னிலையில் இகழாது போகவிட்டுப் புறஞ்சொல்
லுவது மிகுந்த குற்றமுடையது. ஆயினும்
பலஸ்நேஹிதர்கள் உல்லாஸமாய் சேர்ந்து ஒரு
வித கெடுதியுமின்றிப் பேசிக்கொண்டிருக்கை
யில் அங்கில்லாதவர்களின் தோஷங்களைப்பற்
றிய விசாரம் கிளம்பிவிடும். இந்த விசாரணை
யின் முடிவைக்கொண்டு கெட்டதையோ நல்
லதையோசெய்துவிடவேண்டும் என்றநோக்க



மில்லாமலே பொதுவாக நேரம் போக்கும்
பயனைக் கருதியே இக்கோதாட்டுநடைபெறும்.
இம்மாதிரியே பரபுருஷர்களைப்பற்றிப் புகழ்ந்
தோ இகழ்ந்தோ ஸ்திரீகளும், அப்படியே
புருஷர்கள் ஸ்திரீகளையும்பற்றிப் பேசுவது
கோதாட்டுத்தான். இந்தப்பேச்சு நடக்காத
வம்பர் மஹாஸபை உலகில்உண்டா? இவ்வாறு
ஆழ்ந்து கோதாட்டின் லக்ஷணங்களை சாஸ்திரங்
களில் கூறியபடி, அனுவசியம், வீண்மனச்சஞ்
சலகாரணம், சற்று அலக்ஷ்யமாக விருந்தால்
பொய் சண்டைமுதலிய வினைகளுக்குக் கொ
ண்டுவரும் விளையாட்டு என்று நன்கு உணர்
ந்துபார்த்தால், தத்காலத்திய நாகரிக ஸமூக
வாழ்க்கையில் உண்டாகும் சேர்க்கைப் பழக்
கங்கள் எல்லாம் வெறும் கோதாட்டாதலால்
அநாகரிகமே: அவைகளில் ஏற்படும்விளையாட்
டுச்சொற்கள் வினையாகமுடிய இடம் உண்டு,
அல்லது அவைகளை மறைத்து சிலரிடம் கூறி
பொய்கள் ஏராளமாகக் கூசாது கூறும் பழக்
கத்தை உண்டாக்கிவிடும் என்று நன்கு உணர்
ந்து அவைகளைவிட்டுக் கூடியவரையில் ஒதுங்கி
நிற்க முயலவேண்டும் புத்திமான் என்று எச்
சரிக்கைபண்ணுகின்றது இந்தஸூத்திரம். உல
கத்தில் அவசியம் ஒருவன் செய்து தீரவேண்டி
யது தன் ஜீவனத்தொழில், தன்மனம் சுத்தி
பெற்று மோக்ஷ நிலையை அடைவதற்கு
வேண்டிய வைதிகத்தொழில் ஆகிய இவை
களே. தன் ஜீவனம் என்பதில் தன்னைச்
சேர்ந்தோர் என்பதும் அடக்கம். இவ்விரண்
டைவிட ஏற்படும் மற்றையத் தொழில்கள்
வார்த்தைகள் எல்லாம் கோதாட்டுக்களே.
பிறர் நன்மைக்கு உழைத்தல்கூடக் கோதாட்
டுத்தானே எனில், இது பெரும்பாலும்
கோதாட்டாயும் சிறு பான்மை கோதிலா
ஆட்டமாயுமிருக்கும். இந்த கோதிலாப் பாகம்
முற்கூறிய மானிடர்வாழ்க்கைத்தொழில்களில்
இரண்டாவதாலேயேதான் உள்ளபடி ஏற்படும்.
ஆகவே முன் கூறிய இரண்டு வாழ்க்கைத்தொ
ழில் ஒழிந்தமற்றயவைகள் எல்லாம் கோதாட்
டுகள்தான், தோற்றமாத்திரத்தில் எவ்வளவு
சிறந்தவைகளாகக் காணப்படினும். ஆதலால்
அவைகளைக் கூடியவரையில் குறைத்துவந்து
முடிவில் தவிர்க்கவேண்டும், வாழ்க்கை நோக்
கத்தை உள்ளபடி அடையமுயலுவதும் மானிட
ராகவேண்டுமாகில்.

பிறர் மனதை அனுவசியமாகப்புண்படுத்து
வது, நல்லகாரியத்தில் அனுவசியமான பிடிவா
தம் இவைகள்கூடக் கோதாட்டில் சேர்ந்தவை
கள்தான். ஒருவன் எவ்வளவு நல்லவனுக
இருந்தாலும் பிறர் மனதைப்புண்படுத்தி விட்
டால் அது கேட்டிற்குக் காரணமாகும். கோ
தாட்டின் பயன் திரௌபதி சிரித்ததால் துர்
யோதனன் பொறாமை மூலமாக பாண்டவர்கள்
பட்டபாடுகள்தான். அகமுடையான் அடித்
தது பெரிதல்ல, அடுத்தகத்துக்காரி சிரிப்பது
தான் பெரிதாகி விடுவதல்லவா உலகஇயற்கை.
ஆகவே பிறர்மனதைப்புண்படுத்தாமலே இருக்
க கூடியவரையில்முயலவேண்டும்.ஷேக்ஸ்பியர்
நாடகங்களில் லீயர் என்பதில் லீயர் மூடத்தன
மாகத்தன் மூத்தகுமாரிகளிருவரும்தன்னைமிக
வும் நேசித்தார்கள் என்று அவர் வார்த்தைக
ளில் நம்பி மகிழ்ந்து, தன் கடைக்குட்டி கார்
டிலீயா அன்பு எவ்வளவு உண்மையில் அதிக
மாகவிருக்க வேண்டும், அவள் மூத்தவர்களை
விடஉண்மையில் நல்லவளாகையால் என்று
மிகுந்த ஆவலுடன் அவள் அன்பை வெளியி
டும்படி கேட்டானே! அப்பொழுது கார்டிலி
யாவுக்கு இவன் மனோபாவம் தெரியாதா? தன்
அக்காள்களது பாசாங்குகளும் தெரியாதா?
பின்னதை வெளியிட, 'எனக்குவேண்டிய அள
வுதான் அன்பு உண்டு அதிகமும்இல்லை குறைந்
தும்இல்லை' என்றுகூறி அனுவசியமாகத்தானே
தகப்பனுர் ஆவலைத்தடுத்துவருந்தினுள். சற்று
நிதானித்திருந்தால் இவளுடைய நற்குணம் நி
றைந்தமனம்' அக்காள்களைவிட மிகப்பகட்டாக
என் அன்பைக்கூறி, என்னிடம் அதிக ப்ரீதி
யுள்ளதகப்பனுரை திருப்திப்படுத்திப் பின்னர்
அக்காள்களுடையபாசாங்கை வெளியிடலாம்;'
அல்லது' என் உள் அன்பின்பெருமையைஎன்ன
சொல்வேன்! அதை என் அக்காள்களைப்போல
வெளியிடமுடியவில்லையே!என்றுவது கூறிவிட
லாமே' என்று காட்டிவிடாதா. அக்காள்கள்மே
லிருந்தஆத்திரம், தகப்பன் அறியாமையின்மே
லிருந்த வெறுப்பு இவைகளால் பதறியல்லவா
இந்தப்புண்யவதி தகப்பனை வருத்தும்கோதாட்
டில் முயன்றுள். இது எவ்வளவு பேராபத்
தாக முடிந்தது என்பது லீயர்கதையின் துக்க
முடிவிலிருந்து வெளியாகும். இதேமாதிரி
நல்ல விஷயங்களில் வீண் பிடிவாதம் காட்டுவ
தும் கோதாட்டே. குரு. தக்ஷிணை கொடுப்பது

நல்லதாயினும் அந்த விஷயத்தில் குரு வேண்டாம் என்னும்பொழுதும் வீண் பிடிவாதங் காட்டிக் காலவருஷியும், உத்தங்கரும் பெருந் துயரத்திற்காளாக வில்லையா? இவர்கள் கதையை பாரதத்தில் ஆதிபர்வ, உத்தியோகபர்வங்களில்விஸ்தாரமாகக் காணலாம். இவ்வாறு நல்ல விஷயங்களின் இடையில் வரும் கோதாட்டுக்களை நுட்பமாய் உணர்ந்து ஒழிக்கவேண்டும்.

(2) குற்றமுள்ள பழக்கங்களையே ஒழிக்க வேண்டும்:—நமது தர்மசாஸ்திரங்களில் பாபம் மூன்றுவிதமாக ஏற்படலாம் என்று வகுத்துக் கூறப்பட்டுள்ளது. அவையாவன:-(1) விஹித ஸத்கர்மங்களைச்செய்யாமை (2) விஹிதமானதைச் செய்வது (3) இந்திரியங்களை அளவுக்கு மிஞ்சி விஷயங்களுள் பாயவிடுதல் ஆகிய இவைகளே. முன்னுள்ள இரண்டுவித பாபகாரணங்கள் அறியாமையால் நிகழினும், மூன்றாவது தத்கால நாகரீகச் சிறப்பால் வீண் பிடிவாதம், கொழுப்பு இவைகளால் மனப்பூர்வமாக மானிடச்ரேஷ்டர்களால் அனுஷ்டிக்கப் படுகிறது. இதைத்தான் அற ஒழிக்க வேண்டும் என்றாள் ஔவை இந்த ஸூத்திரத்தால். இதை ஒழிக்க முயலுவதில் முன் கூறிய குற்றமுடைய விளையாட்டுக்கள் தாமே நீங்கும். ஆனால் இந்திரிய அடக்கத்திற்கு முதல்படி கோதான விளையாட்டுகளை ஒழிப்பது. இந்திரியங்களை அவைகள் இஷ்டப்படி விஷயங்களில் முழுவதும் பாயவிட்டால் வீண்மனச் சஞ்சலங்கள் அதிகப்பட்டு பாபத்தொழில்களில் உள்ள முயற்சி அதிகப்படும். இந்திரிய மனங்களை அழுக்கேறி, பாப எண்ணங்கள் அதிகப்பட்டு அசுத்தமாகிக்கொண்டு வர, துக்கம் அதிகரிக்கும். இதுபற்றியே, 'மனம்போன போக்கே போகவேண்டாம்' என்றாள் ஔவை உலகநீதியில். இந்திரியங்களை இஷ்டப்படி அவிழ்த்துவிட்டுத் திண்டாடுவதற்கு தத்காலத்திய நாகரிகஸ்தர்களே திருஷ்டாந்தம். மானிடர்களுக்கு இவ்வாழ்க்கையில் ஸுகமாக இருக்க வேண்டியவை குறைவேயாயினும், அவையும் அதிகநாள் வேண்டுவனவில்லையாயினும், வேண்டிய விஷயங்களை அதிகப்படுத்திக்கொண்டு ஜீவிக்க என்ன திண்டாட்டம் ஏற்பட்டுவிட்டது இந்த நாகரீக காலத்தில்! தின்னச் சோறின்றி இறப்பவர்கள் அதிகப்பட்டு விட்டார்களல்லவா இந்நாகரீகம் நிறைந்த உலகில்! தத்காலத்திய ஜீவனத்திற்காக எல்லோரும் தமது வாழ்க்கை நோக்க உழைப்பையும் கருதாது உழைக்கவேண்டி வந்துவிடவில்லையா? இந்நிலையை உண்டாக்கும் நாகரிகத்தை நல்லது என்று எப்படி ஒப்புக்கொள்ளுவது. 'வயிறே உன்னோடு வாழ்தலரிது' என்று பரிதவித்த ஔவையார் இப்பொழுதிருந்தால், பாழும் மானிட சஞ்சலமே உன்னோடுவாழ்தலரிது என்று கதறமாட்டாளா நாகரீகக் கொழுப்பைப் பார்த்து. ஆகவே கோதாட்டை உள்ளபடி ஒழிக்கவேண்டுமாகில் மன இந்திரியங்களை அனாவசியமாக விஷய ஸம்பந்தப்பட்டு வெளிமுகமாகித் திண்டாடவிடாது கூடியவரையி லிருக்கவேண்டும்: வெளிவிட வேண்டுமாகில் சாஸ்திரீய ஒழுங்குப்படி தீராததாயும், கோதில்லாததாயும் உள்ள விஷயங்களில் வெளிவிடலாம். இந்த இரண்டு லக்ஷணங்களுமில்லாது வெறும் கோதில்லாததாயினும் அவைகளை வெளிப்பட இடம் தராமல் அடக்கி நிற்கவேண்டியதுதான்.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

The character of a Gentleman

It is almost a definition of a gentleman to say he is one who never inflicts pain. This description is both refined and, as far as it goes, accurate. He is mainly occupied in merely removing the obstacles which hinder the free and unembarrassed action of those about him; and he concurs with their movements rather than takes the initiative himself. His benefits may be considered as parallel to what are called comforts or conveniences in arrangements of a personal nature like an easy chair or a good fire, which do their part in dispelling cold and fatigue, though nature provides both means of rest and animal heat without them. The true gentleman in like manner carefully avoids whatever may cause a jar or a jolt in the minds of those with whom he is cast—all clashing of opinion or collision of feeling, all restraint, or suspicion, or gloom, or resentment· his great concern being to make every one at their ease



and at home. From a long sighted prudence he observes the maxim of the ancient sage, that we should ever conduct ourselves towards our enemy as if he were one day to be our friend. He throws himself into the minds of his opponents, and he accounts for their mistakes.

சீரியர் இலக்கணம்

சீரியர் புண்படுத்தார் என்பதே அவரைக் கிட்டத்தட்ட வரையறுத்து விளக்கும் வாக்யம் என்னலாம். இந்த விளக்கம், திருத்தமாயும் செல்லும் வரையில் பொருத்தமாயும் உள்ளது. தம்மைச் சுற்றியுள்ளோர் தம் விருப்பப்படிக் குழப்பமின்றி செய்யும் செயல்களுக்குத் தடையாயுள்ளவைகளை நீக்கி வைப்பதிலேயே சீரியர் பெரும்பாலும் முயன்று கொண்டிருப்பர். அவர்கள் போக்கின்படி நடப்பாரே ஒழிய அடிக்கடித் தாமாகப் புதிதாக ஒன்றையும் தொடங்கார். ஒவ்வொருவனும் தன் விஷயத்தில் ஏற்படுத்திக்கொள்ளும் ஸுக ஸௌகரியங்களுக்கு (இன்ப இசைவுகளுக்கு) நிகர் சீரியரால் உண்டாகும் நன்மைகள்; இயற்கையிலேயே ஓய்ந்திருக்கும் வழிகளும், ஜீவச்சூடும், களைப்பு, குளிர்களை முறையே நீக்க அமைந்திருப்பினும், களைநீக்கும் சாய்வு நாற்காலியும், நல்ல குளிர்காயும் நெருப்பும் எப்படி உதவியாக விருக்குமோ, அப்படியே தான் இருப்பர் சீரியரும். இப்படியே உண்மையான சீரியரும், மாறபிப்பிராயத் தாக்குதல் மனஸ்தாபம், வீண்கட்டுப்பாடு, ஸம்சயம், துயரம், பகை, இவைபோன்ற ஒருவிதக் குழப்பமும், குதர்க்கமும் தம்முடனிருப்பவர்கள் மனதில் உண்டாகாத வண்ணம் மிகுந்த ஜாக்ரதையாய் தடுத்துவிடுவர்: ஒவ்வொருவனையும் தன் இல் அடங்கி ஓய்ந்திருக்கச்செய்வதே அவர் முக்ய நோக்கம். 'நமது பகைவரிடம், மேல் ஒரு தருணத்தில் அவர் நமது தோழராகலாம், என்ற எண்ணத்துடன், நிதானமாக நடந்து கொள்ளவேண்டும்' என்ற முதறிவாளர் முதுமொழியை தீர்க்காலோசனையை முன்னிட்டுப் பின்பற்றி நடப்பவர் இச்சீரியர் தம் பகைவர் மனத்துள் புகுந்து பரிவுடன் பார்த்து அவர்கள் குற்றங்களுக்குத் தகுந்த முகாந்திரம் கண்டு தெளிவர் சீரியர்.

# ராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

இதனை அறிதலும் இராவணன் தன்னுடை
தூதரை யழைத்து தூதும் போக்கினன்.
வாலிதம்பியின் வானரச் சேனையை
கண்டு தூதரும் கடிதினி லோடி
இராவணன் பக்கலில் இனிதிற்புகலும்
அவர்களைக் கூட்டி அரசனும் சென்று
கோபுரமீதினில் கோதையர் சூழ்ந்து
சாமரஞ் சுழற்ற சடுதியிலேறி
இராமன் இலக்குணன் இவர்களை தூதர்
சுட்டிக் காட்டிடச் சுகமதாயிருந்தான்.
அன்ன காலையில் வானரவாசன்
கோப சகிதனாய்க் கோபுரமீதில்
தாவித் தசக்கிரீ பனின்தலை தன்னில்
காலால் மிதித்து கடுமையோடறைந்து
கிரீடம் பத்தையும் கிரகித்தோடி
இராமபிரானின் இணையடியருகே
வைத்து வணங்கினன் யாவரும் புகழ்ந்திட.
" தனிமையிற் சென்று தசக்கிரீபனை
எதிர்ந்தனை வந்தலே புந்தியில் லாமல்.
இனிமேலிவ்வித மேகிடாதிருத்தி"
எனப்பல அரச நீதிகளியம்பி
அங்கதனழைத்து அரசர் தொழிற்படி
தூதுவனாகத் தூதுவன் ஆக்கலும்
இராவணனிடத்தே அங்கதனேகினன்.
ஏகி இராவணன் முகத்தினைநோக்கி
" இராமனின் தூதன் என்பேரங்கதன்.
வலிபறித்துன்னை வாலிற்கட்டிய
வாலியின் மைந்தன் வலியிலாய் கேட்பாய்.
அன்னை சீதையை உடனே அய்யனின்
பாதந்தன்னில் பண்புடன் விடுத்து
பாதம்பணிந்தால் பானுயன்னிப்பான்.
அன்றேல் அமர்செய அரக்கனே வா"வென
சத்தியம் கைக்கொடு சாற்றலு, மிராவணன்,
" வலிமிகக்கொண்ட வாலியின் மைந்தனே!
இராமனின்மனைவியை இனியான்விட்டிடேன்
யானைவாய்க் கரும்பு இனித்திரும்பிடுமோ?
சமர்க்களந் தன்னில் சடுதியிலும்மை
ஓர்கணை தன்னால் உயிர்வாங்கிடுவேன்.
ஆதையாலங்கத அறைவதைக்கேளாய்.
என்னுடன்சேர்ந்து இயற்று சண்டையும்
கிருஷ்ணனைக் கொன்று கிஷ்கிந்தையை யுனக்கு
பட்டமும்கட்டிப் பார்ப்பலென் கண்ணால்"
எனவேகூறினன். எம்பிரான்தாசன்
கண்கள் சிவந்திட கடுமையாய்நோக்கி,
" அறிவினைப்புறத்தே விடுத்த அறிவிலி!
மட்டி! இராவண! மமதையைப் பூண்டோய்!
கழுதாய் நினைத்தாய் கக்கலும் கதக்கலும்.
எம்பிரானிராமனை எவ்விதம் கொல்வாய்?

படியை மடியிற் கொண்ட பரமனை
ஆலிலை யறிதுயி லமர்ந்தருள் மையனை
தேவர் துயரை தீர்த்திடற் பொருட்டு
தசரத ராஜனின் தனையனாய்த் தோற்றி
கோசிக முனியுடன் கொடுங்கான் சென்றுநின்
பாட்டி தாடகை பார்மேல் மாண்டிட
பாரியவில்லில் பாணம் தொடுத்து

சுவாகுவைச் சுவர்க்கம் குடிபுகச் செய்துநின்
குலத்தினைக் கெடுத்திடக் குகப்பிரான் படகினில்
கங்கையைத் தாண்டிய கருப்பனைமாலை
கரியழைத் திடலும் கருடன் மீதூர்ந்து
கரிதனைக் காத்த காருண்யவள்ளலை
அற்பன் நீயோ அமரில் வெல்வாய்.
பூனைசென்று புலியைவெல்லவும்
அற்பயானைபோய் அரியைவென்றிடவும்
எண்ணிடலொத்து இயம்பினாய்மூடா!
பிரமனின் பேறனாய்ப்பேதாய் தோன்றினை.

பிரமனின் அருளைப் பேதாய் கொன்றாய்.
கங்கைவேணியின் கருணைகரனை
பத்தியென் பாசக் கயிற்றாற் பிணித்தனை.
இத்தனை பெருமை இருந்தும் பயனென்?
தசரத ராஜனின் தனையன் மாலின்
பெரியதோர் புகழை பேதாயறிந்திலை.
கேடு பின்வர கெட்டது மதியும்.
கெடுமதிகீத்து கெட்டபேர் காய்ந்த
சீதையைக் கொண்டுபோய் சீதா சமேதனின்
இணையடி யருகே இட்டுமீளுதி.
இராமனை ஜெயிக்க இராவணா! நாடா
இராமனின் இணையடி மனத்திற்பூண்மின்.
மற்றும்,
சிம்மம் தனக்குச் சிறியதோ ரெலியும்
பட்டங்கட்டிடப் பரிந்துசெப்பிடல்போல்,
பட்டம் எற்குப் பாதககட்டிட
சித்தத் தெண்ணிச் செப்பினை சிறிய!
அம்மனை அய்யற் களிப்பா" யெனவே
கடுகடுத் தறைந்து கனைத்து நின்றனன்.
இராவணன் நோக்கி இறுமாப் போடு
'அரக்கரே! அங்கதன் கொல்வீ' ரெனலும்
அரக்கர் பலபேர் அங்கத னோடு
சண்டை செய்திட சடுதியில் வந்தார்.
அரக்கரை நொடியினில் அடித்து வீழ்த்தி
"அடடா பாவி! அரக்கனே! தூதனைக்
கொன்றிட எவினாய், கொலைபாதகனே!

அழியாய் நீயும் அடியோ" டென்று
இராவணன் முடியை இடக்கால் தன்னால்
மிதித்து முடிபூ மிசைவிழச் செய்து
இராம பிரானிடம் இனிதிற் பாய்ந்தான்.
இராவணன் செய்திதை இராமன் கேட்டலும்
வில்குனித் தம்பை விரைவிற்பூட்டி
கோட்டையை வளையலும் கோடையிடியென
அரக்கர் பல்லோர் அய்யனை வளைந்து
போர்பரிந் திறந்து பொன்னுலக கடைந்தனர்.
மற்றும் பலபல மாண்புடை யரக்கர்
கூட்டமாய் வந்து வானரக் குழாத்தை
மிதிமிதி யென்று மிதித்து நசுக்கலும்
வானரர் மிகையும் வலியிழந் தோடினர்.
அனுமன் இதனை அறிந்து ஓடி
அரக்கரை யெல்லாம் அமரில் மடித்து

அண்டமும் கலங்கிட இராமவென் றார்த்தான்.
சதகண்டனிடம் சாரண ரோடி
செய்தியைச் செப்பலும் சென்னியை யசைத்து
பளாபளா வென்று பற்களைக் கடித்து
இரத மூர்ந்து ஏகினன் போர்க்களம்.

அன்ன காலையிலரக்கனின் முன்னே
காக்கையும் கழுகும் கதறி விழுந்தன.
கோடையிடியது குபீலென விழுந்தது.
மேகமு மின்றி மின்னல் வீசிட
வானுறை மீன்கள் வானின்றிழிந்தன

இவையெல்லாம் கண்டும் இராவண வேந்தன்
சட்டைசெய்யாது சண்டையிற் புகுந்தான்.
இந்திர ஜித்துவுமுடனே கினனே.
இராவண னிராமனை யெதிர்த்தனன் மாதோ.
இருபோர் வீரரும் இணைபிரியாது

வலமிடமாக இடம்வலமாக
சுழலெனச் சுழன்று சுற்றித்திரிந்து
வாளிகளெய்து வாளிகள் கொன்றனர்.
இறுதியிலிராமன் இராவண வேந்தனின்
இரதம் இடியாஸ் திரத்தால் நொறுக்கினன்
வில்லு மொடிந்தது வீரனின் சரத்தால்.
இராமபாணத்தால் யாவு மழியலும்
வெந்தழல் மெழுகென வீரனும் வருந்தி
இலங்கையைப் புரக்கும் இராவணவேந்தன்
தலைகுனிந் தவனாய்த் தரைமேல் நின்றான்.
இவ்வித நிலையினன் இராவண வேந்தனை
எம்பிரானிராமன் இனிதில் நோக்கி,
"ஈரேழுலகம் ஏங்கிட வாழ்ந்த
இராவண வேந்தே இயம்பிடல் கேளாய்.
தூதனைக் கொல்லெனதுணைவரையேவியோய்!

அரசே அரசற் கழகிது தானோ?
ஆயுதமின்றி அறிவிலிநின்றாய்.
அல்லையேல் உன்னை அடியொடு மாய்ப்பேன்.
ஜானகி ஈந்து சரணம் புகுதல்
நலமின்றோமோ நலமிலாய் சொல்லிடாய்.

முதல்நா ளிதுதான் முனையில் தனியாய்
நின்றாய் நின்றாய் நிற்பல வீரனே!
சண்டை செய்வதோ ஜானகி விடுப்பதோ?
இதனை இரவில் யோஜித்திராவண
நாளை வாபோ. நான்பொறுத் தனுப்பினேன்."
எனவே கூறலும் இராவணன் சென்று
பாத சாரியாய்ப் படையிழந் தவனாய்
அரண்மனை யடைந்தான் அழிந்த மனத்துடன்.



இலக்குவ னுடன்போர் இழைத்த இராவணி
தேரிழந் தவனாய் செய்வ தில்லையும்

வீர பட்டமும் வீரனழித்திட
பாத சாரியாய் பயத்துடன் சென்று
அழிந்த பெருமையோ டரண்மனை யடைந்தான்.
அனுமன் அங்கதன் முதலியோர் பணிய
இராமன் இலக்குவன் இருவரும் சுகமாய்
வானரர் நடுவே வளர்ந்தனர் கண்ணே.
இராவண னெழுந்து இளவரசாகும்
கும்பகர்ணனைக் கூப்பிடச் சொல்லி
ஆயிரம் கோடி அரக்கரையேவினன்.
குன்றினை யொத்த கும்ப கர்ணனும்

விதிவசத் தாலே விழித்து எழுந்து
சென்று இராவணன் சேவடி வணங்கலும்
இராவணன் தம்பியை நோக்கி, "எம்பி!
இராம இலக்குனர் இரண்டு நரர்கள்
வாலியின் தம்பி வலியசுக்கிரீவனை
துணையாக் கொண்டு தோன்றி இங்கு
பலபல வம்புகள் பண்ணினர் தம்பி!
வேகமாய்ச் சென்று உன் வேலுக்கிரையாய்
பேயரை வீட்டு நீடுடன் மீளுதி"
என்றே இயம்பினன். இளையவன் நோக்கி,
"அண்ணே! அடியனேன் அறைவதைக் கேளீர்.
ஆலிலை துயின்ற அய்யனே யாய.
இராம பிரானொடு ஏனோ பகைத்தீர்.
அவருடன் பகைத்தோர் அடியுடன் மாய்வரே!
அம்மனைக் கொண்டுபோய் அடிமலர் சேர்த்து

அபயமென் றிரந்தால் அருள்பெற் றிடுவீர்
தம்பியின் வார்த்தை தள்ளினீர் முன்னர்.
துட்டர் புத்தியை இட்டமாய்க் கேட்டீர்.
அழிவிலிலங்கைக் கழிவுந் தேடினீர்;"
என்றே கூறலும் இராவணன் கடிந்து,
"வீடணன் சேர்ந்த விடத்தே விரைந்து
அடைந்து வாழ்தி, அறிவிலி வாழ்தி.
எம்பி தேவரின் எமனென எண்ணினேன்.
நன்றாய் வாழ்ந்திடில் எற்கும் நலமே."

எனவே மனம்மிக நொந்து இயம்பினன்.
இயம்பலும் இளையோன் இராவணற் கிணங்கி
உயுத்தகோலத்தனாய் உடைபலவணிந்து
விட்டில் தேடி விளக்கடைந்திடல்போல்
சூலந்தாங்கி சூரனும் வந்து
வானரச் சேனையை வையகங் கலங்க

சாடிய காலையில் சாய்ந்தனர் பலரே.
கும்ப கர்ணனைக் குகன் முனோன் கண்டு
மனம்பூ ரித்து மகிழ்ந்து மனத்தில்
வில்லியர் போற்றிடு வீடணன் நோக்கி,
'இவன்யார்' எனலும் இன்பம் எய்தி
வீடணன் சொல்லுவான், "விண்ணுலே கேளீர்.
இராவணற் கிளையோன் என் முன் தோன்றல்
கும்பகர்ணன் குருபரா இவனும்
புத்திகள்பலவே எடுத்துப் புகலலும்
இராவணன் கேளா தேவின னிவினை.
மதியிலி அம்பால் மாய்வதை விடநும்
சிறப்புடை யம்பால் சென்னி யிழந்து
மோகம் கொன்றோர் மோக்ஷ மடைந்திட
எண்ணியே வந்தா" னென்று இயம்பினன்.
இம்மொழி கேட்ட எம்பிரா னிராமன்,

இராவணன் தம்பியை யினிதி லழைத்து
சரண்புகச் செய்தி சடுதியி' லெனலும்
விரைவிற் சென்று வீடணன் மகிழ்ந்து
அண்ணனை நோக்கி அனபுமிக் கூர்ந்து
சிற்சில மொழிகள் செப்பிடச் செல்லையில்
அண்ணன் தம்பியை அன்புடன் நோக்கி
"எம்பி நீ இம்மையில் நன்மையை எய்தினை;
வினையென தெனக்கு வினையுன தனக்கு.
இராமனைப் பணிந்து இன்பம் எய்துபோ.
ஆலிலைதுயிலும் அய்யனே இராமன்"

எனவே கூறி எடுத்தான் வில்லை.
வில்குனித் தம்பை விரைவிற் பூட்டி
வானர வீரரை வாட்டிடுங் காலையில்
அனுமன் ஓடிவந்தரக்கனோ டெதிர்த்து
பெரும்பெரும் மலைகளைப் பெயர்த்தரக் கன்மேல் ()
எறியலும், ஆக்கின னெரியினிற்றுரும்பென.
"நம்மாலிவனை நமனுல கனுப்பிட
லசாத்திய மசாத்தியம். அப்பனே வீட்பான்"
எனவே அதைப்பார்த்த னுமனியம்பினன்
வானர வரசு வலியசுக்கிரீவன்,

கோபமிக் கூர்ந்து குபீலெனப் பாய்ந்து
அரக்கனை யடித்திட, அரக்கன் நோக்கி
வாலியின் தம்பியை வளைத்து பிடித்து
இலங்கையை நோக்கலும் வானரன் வெகுளியால்
அரக்கன் மூக்கையும் காதையு மழித்து
இராமனி னருளாலின்னலி நீங்கி
தப்பியே ஓடி தசரத மைந்தனை
மனத்திற் றுதித்துமகிழ்ந்தே யிருந்தான்.
"தங்கையு மூளி தமையனு மூளி
உயிர்வாழ்ந் தென்பயன் உடனே சாவேன்."

எனவே நினைந்து எடுத்து வில்லை
குணத்தொனி காட்டி கும்ப கர்ணனும்,
வானரர் யாவரும் வாடிட மாட்டினன்.
இதனைக் கண்ட எம்பிரா னிராமன்
சாபந் தாங்கிச் சடுதியி லவனை
வளைந்து வாளிகள் பலவே சொரிந்தனர்.
வீரத் துவத்தைப் பூண்ட வீரன்
வாளிகள் யாவையும் வாளியாற் பொடிசெய்
தலைந்துவா னரரை அய்யன்மீ தெறிந்து
பலபல பேர்களைப் பற்களாற் கடித்து
நெறநெற வென்று நெறித்து உண்டு
உருத்திரன் போல உலகெலா நடுங்க
ஓடிஓடி அலைந்தனன் மாதோ.

# குண்டலகேசி

அல்லது

## "தற்கொல்லியை முற்கொன்றவள்"

### மூன்றாவது அதிகாரம்

### ஆசிரியர் அருக்கசந்திரனார்

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக".—மணிமேகலை

அவந்தி தேசத்தின் தலைநகராக அக்காலத்திலிருந்த உஞ்சைமாநகரினைச் சேர்ந்தவரும், சாஸ்திர ஆராய்ச்சி நிரம்ப வாய்ந்தவரும், பௌத்த சந்நியாசியாயிருந்து பௌத்த மதத்தைப்பற்றி ஊரூராய்ப் பிரசங்கம் செய்துகொண்டு போவதையே தம் தொழிலாகக் கொண்டவரும், ஒழுக்கமும் சீலமும் இனிதமைந்தவருமான அருக்கசந்திரன் என்னும் பௌத்த சந்நியாசி, பல தேசங்களையும் சுற்றிக்கொண்டு சோழனுடைய தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்து அங்கே சிறிது காலம் வதிவாராயினர். இவருடைய கல்வித் திறனையும், சாஸ்திர ஆராய்ச்சியையும், பிரசங்க ஆற்றலையும், விழுமிய ஒழுக்கத்தையும் நாளடைவில் கேள்வியுற்ற பொதுஜனங்கள், இவரைப் பெரிதும் போற்றி ஆதரிக்கத் தொடங்கினார்கள். இவரைப்பற்றிக் கேள்வியுற்ற குண்டலகேசியின் தந்தை, தன்னுடைய புத்திரிக்கு வித்தியாப்பியாசமும் தருமோபதேசமும் செய்விக்கும்படி இவரை வேண்டிக்கொண்டார். தம்முடைய மதத்திற்கும் கொள்கைக்கும் இன்றியமையாததான பரோபகார சிந்தையைப் பெரிதும் பெற்றிருந்த அருக்கசந்திரனார், அவருடைய வேண்டுகோளுக்குப் பெரிதும் இணங்கி இலவசமாகவே குண்டலகேசிக்கு வித்தியாப்பியாசம் செய்வித்தற்கு ஒருப்பட்டார். அன்றுமுதல் இவர் பிரதி தினமும் குண்டலகேசியின் மாளிகைக்குச் சென்று, அவளுக்கு அறநூல்களைப் போதித்து வந்தார். குண்டலகேசி தலைமாணாக்கரினுஞ் சிறந்த தீவிர பக்குவமும் நுண்ணுணர்வும் வாய்ந்தவளாதலால், அவருடைய போதனையைக் கவனமாய் மனத்தில் வாங்கி உளத்தில் அழுத்தினாள். குண்டலகேசி மாடி மீது மூர்ச்சித்து விழுந்த அன்றிரவும் அருக்கசந்திரனார், வழக்கம்போலவே, அவளுக்குப் பாடம் சொல்லுவதற்காக வந்தார். சேடியர்கள் பனிநீர் தெளித்தும், சிவிறிகொண்டு விசிறியும், இன்னும் பல உபசாரங்களைச் செய்தும், குண்டலகேசியின் மூர்ச்சைதெளிவிக்க முயன்றுகொண்டிருந்தார்கள். இதனை அறிந்த அருக்கசந்திரனார் சிலமந்திரங்களைஜபித்துத் தண்ணீர் அவள் முகத்திற் படும்படி தெளிக்கவே, அவள் நித்திரையிலிருந்துவிழிப்பவள்போல் எழுந்துட்கார்ந்தாள். அவள் களையினை ஆற்றிப் பிறகு அவளுடைய பாடத்தைக் கேட்கவும், புதுப் பாடம் சொல்லிக் கொடுக்கவும் அருக்கசந்திரனார் தொடங்கினார்.

"குழந்தாய், 'இவ்வுலகம் நிலையுள்ளதா, நிலையற்றதா?' என்று பகவான் புத்தரை நோக்கி மாலங்கன் வினவியதற்கு, அவர் யாது பதில் அளித்தார்?" என்று குண்டலகேசியை உசாவினார்.

"மறுமொழி ஏதும் பகராமல் மௌனம் சாதித்தார்" என்று குண்டலகேசி விடை தந்தாள்.

"அவ்விதம் அவர் மௌனம் சாதித்ததின் கருத்து யாது?" என்று ஆசிரியர் வினவினார்.

"அத்தகைய வினாக்களும் ஆராய்ச்சியும் பயனற்றவை என்பதே பௌத்தருடைய கருத்தாகும்" என்றாள் குண்டலகேசி.

"இன்று உனக்கு எந்த விஷயத்தைப் பற்றிப் போதிப்பதாக, நேற்று நான் கூறினேன்?" என்று அருக்கசந்திரனார் கேட்டார்.

"பிறவியைப்பற்றியும், அதற்குக்கூறப்படும் நான்குவிதமான உதாரணங்களைப் பற்றியும் விளக்குவதாகச் சொன்னீர்கள்" என்று குண்டலகேசி கூறினாள்.

"ஓ! அப்படியா? சரி; சொல்லுகிறேன். நீ கவனமாய்க்கேள்" என்று அருக்கசந்திரனார் கூறி, மீண்டும் குண்டலகேசியை நோக்கிக் "குழந்தாய்! சேதன அறிவுப்பொருளான ஜீவராசிகள், ரூபம், வேதனை, ஸம்ஜ்ஞை, ஸம்ஸ்காரம், விஜ்ஞானம் என்னும் ஐந்து ஸ்கந்தங்களால் உண்டாகின்றன" என்று கூறினார்.

"ஸ்கந்தம் என்றால் என்ன?" என்று குண்டலகேசி கேட்டாள்.

"ஸ்கந்தம் என்னும் பதத்திற்குக் கூட்டம்என்று பொருள்; ரூபம் என்பது உருவத்தையும், வேதனை என்பது நுகர்ச்சியையும், ஸம்ஜ்ஞை என்பது குறியினையும், ஸம்ஸ்காரம் என்பது பாவனையையும், விஜ்ஞானமென்பது அறிவையும் குறிப்பனவாகும்" என்று அருக்கசந்திரனார் கூறினார்.

"அடிகாள்; இன்னும் விளங்க உரைத்தால் நலம்" என்று குண்டலகேசி கூறினாள்.

"குழந்தாய், அவ்விதமே விளங்க உரைக்கின்றேன்; கேட்பாயாக! ரூபஸ்கந்தம் என்பது, உருவங்களுக்கெல்லாம் காரணமாகிய பொருட் கூட்டங்களைத் தெரிவிப்பதாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களும், ஐந்து ஞானேந்திரியங்களும், ஐம்புலன்களும், ஆண்பெண் பாகுபாடும்இவை போன்ற பிறவுமாகிய இருபத்தெட்டு தத்துவங்களின் தொகுப்புக்கு ரூபஸ்கந்தம் எனப் பெயர்" என்றார் அருக்கசந்திரனார்.

"வேதனா ஸ்கந்தம் என்பது யாது?" என்று குண்டலகேசி வினவினாள்.

"குழந்தாய்! இந்திரியங்களுக்கும் புலன்களுக்கும்,—அதாவது, உதாரணமாகக் கண் என்னும் இந்திரியத்திற்கும் உருவம் என்னும் புலனுக்கு முள்ள சம்பந்தம் போன்ற,—சம்பந்தம் ஏற்படுங்கால் தோன்றும் உணர்வே வேதனாஸ்கந்தம் என்று சொல்லப்



பெறும். ஐம்பொறிகளும் மனமும் இந்தப் பகுதியுள் அடங்கும். இந்த ஆறு இந்திரியங்களால் உண்டாகின்ற ஆறு வகைப்பட்ட உணர்வுக்குச் சம்பந்தமுற்று, அந்த உணர்வினால் உண்டாகும் பொதுவறிவையும் சிறப்பறிவையும் ஆதாரமாய்க் கொண்டு பதார்த்தங்களுக்குப் பெயரிட்டு அவைகளைக் குறித்துக்காட்ட இன்றியமையாது வேண்டப்படும் ஞானமே 'ஸம்ஜ்ஞாஸ்கந்தம்' என்று சொல்லப்படும். மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களால் உண்டாகும் தொழில் வேறுபாட்டினால், அவைகளுக் குண்டாகும் பரிபாக விசேஷமே 'ஸம்ஸ்கார ஸ்கந்தம்' என்று பெயர் பெறும். 'விஜ்ஞானஸ்கந்தம்' என்பது, உறங்குவோன் உணர்வு கர்த்திருத்துவம், போக்திருத்துவம் இரண்டுமில்லாமல் சாக்ஷி மாத்திரையாய் இருத்தல் போல, சேதனர்களுடைய தேகத்துள்ளிருந்து, அவர்களுடைய அறிவிற்கு ஆதாரமாய் நிற்கும் சைதன்னிய தத்துவ நிலையாகும். இந்த ஸ்கந்தங்கள் ஐந்தும் நிலையற்றன. இவை முறையே நுரைபோலும், நீர்க் குமிழிபோலும், கானல் ஜலம் போலும், வாழை போலும், இந்திர ஜாலம் போலும் தோன்றிமறையும் இயல்புடையன" என்று அருக்கசந்திரனார் கூறினார்.

"அண்ணலே! இவ்விஷயங்களெல்லாம் எனக்கு இனிது விளங்கின. ஆனாலும், இன்று பிறவியைப் பற்றிக் கூறி, என் அறியாமை நீக்குவதாகச் சொன்னீர்களே? அவ்விஷயத்தை விடுத்து, ஐந்து ஸ்கந்தங்களைப் பற்றிக் கூறப்புகுந்ததன் நோக்கம் யாதோ?" என்று குண்டலகேசி உசாவினாள்.

"சிறுமியே, அவசரப்படாதே. பிறவியைப் பற்றிச் சொல்லுவதற்காகவே, நான் முதலில் இவைகளைக் கூறினேன். குழந்தாய்! 'ஜாதஸ்ய மரணம் த்ருவம்' என்கிறபடி பிறந்தவனுக்கு மரணம் நிச்சயமன்றோ? ஒருவன் இறந்து போன பின்னர், அவனைச்சேர்ந்த ஐந்து ஸ்கந்தங்களும் தனித்தனியே பிரிந்து விடுகின்றன. ஆனால், உயிரோடிருந்தபோது அவன் செய்துவந்த நல்வினை தீவினைகள் விஜ்ஞான ஸ்கந்தத்தில் விதையைப்போல் சூக்குமமாய் உள்ளடங்கியிருந்து, அந்த விஜ்ஞானத்தைத் தமக்கு ஏற்ற முறையில் ஏனைய நான்கு ஸ்கந்தங்களோடு மீண்டும் கலப்பித்து மறு பிறப்பை அடையச் செய்கின்றன. ஆகவே, வினையே பிறப்பின் மூலமென்பதும், கன்மம் இருக்கும் வரையில் பிறப்பும் இறப்பும் இருந்துகொண்டிருக்கு மென்பதும் புலனாகின்றன" என்று ஆசிரியர் கூறினார்.

"குருவே, பிறவிக்குக் காரணம் அறிந்தேன். வாயுசந்தானம் முதலாகக் கூறப்படும் நான்கு உதாரணங்களையும் விளக்குவதாக நேற்றுக் கூறினீர்களே?" என்று குண்டலகேசி வினவினாள்.

"ஆம்; சொல்லுகிறேன். கேள்! காற்றானது பிரிந்து நில்லாமல் தொடர்புற்றுச் செல்லுதல் போல், பிறவியானது ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து வரும். இந்தக் காற்று உபமானந்தான் வாயுசந்தானம் என்று நம் முன்னோரால் கூறப்பட்டது. ஒரு விளக்கிலிருந்து எண்ணிறந்த தீபங்கள் ஏற்றப் பெறுதல் போல், ஒரு பிறவியிலிருந்து பல பிறவிகள் உண்டாக்கப் படுகின்றன. இந்த உவமானமே தீபசந்தானம் எனப்படும். ஓர் ஆற்றில், நீர் ஓடிக்கொண்டிருக்கும்போது, ஓரிடத்தில் ஒரு கணத்தே காணப்பட்ட நீர், மறுகணத் தவ்விடத்தே நில்லாவிட்டாலும், ஆற்றின்ஜலவோட்டம் ஒன்றாய்க் காணப்படுதல் போல், வரும் பிறப்புகளின் தொடர்பு ஒன்றாகவே யிருக்கும். இந்த உவமானம் தாரா சந்தானம் (தாரை=நீர்ப்போக்கு) எனப் பெயர் பெறும். எறும்புகள் குறித்த இடத்தை அடைகிற வரையிலும், ஏறியும் இறங்கியும் வளைந்தும் சென்ற போதிலும், ஒன்றன் பின் ஒன்றாய்ச் செல்லுதல் போல, வினை நீங்கும் வரையிலும் உயர்ந்ததும் தாழ்ந்ததுமான பிறவி இருந்துகொண் டிருக்குமாயினும், அப்பிறவி தொடர்புற்று நிற்கும். இந்த உபமானந்தான் பிபீலிகாசந்தானம் (பிபீலிகை=எறும்பு) எனப்படும். மனிதர்கள் தாந்தாம் புரியும் நல்வினை தீவினைக்கு ஏற்ப,

"மக்களுந் தேவரும் பிரமரு நரகருந்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சொல்லப்பட்ட கருவிற் சார்தலும்"

என்றபடி, மக்கட்கதி, தேவகதி, பிரமகதி, நரககதி, விலங்குகதி, பேய்க்கதி என்னும் ஆறு கதியினுள் ஒன்றை அடைவார்கள். குழந்தாய்! இதுவரை, புத்த பகவான் அருளிச்செய்த மானவீக சாஸ்திரக்கொள்கைகளுள் இரண்டொன்றை நான் சுருக்கமாக உனக்கு எடுத்துரைத்தேன். இத்தகைய விஷயங்கள் மனதிற் பதிதல் கடினமாதலாலும், அதிகம் கூறினால் இரசிக்காவாதலாலும், எளிதில் விளங்காவாதலாலும், இன்று இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, எளிதில் விளங்கக் கூடியவையும், உன்னைப் போன்று இல்லற தருமத்தில் இருப்பவர்களுக்குஅவசியமானவையுமான இல்லற தருமங்கள் இரண்டொன்றைக் கூறுகிறேன். கேட்பாயாக!" என்று அருக்கசந்திரனார் கூறினார்.

"குருவே, அவ்விதமே செய்யுங்கள்" என்று குண்டலகேசி ஆர்வத்தோடு உரைத்தாள்.

"குழந்தாய்! முதலில் பெற்றோர்களுக்கும் அவர்தம் மக்கட்கு முரிய கடமைகளைக் கூறுகின்றேன்; கேட்பாயாக! பெற்றோர்கள் தங்கள் மக்களைத் தீச்செயல் புரிவதினின்றும் விலக்கவேண்டும்; நல்ல ஒழுக்கங்களை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்; கல்வி கற்பிக்கவேண்டும்; அவர்கட்கு ஏற்ற கணவன்மார்களையும் மனைவிமார்களையும் தெரிந்து விவாகம் செய்விக்கவேண்டும்; அவரவர்கட்குரிய தாயபாகத்தைக் கொடுக்கவேண்டும். மக்கள், தங்களைப் பாதுகாத்த பெற்றோர்களைப் பாதுகாக்கவேண்டும்; குடும்ப சம்பந்தமான கடமைகளைச் செய்யவேண்டும்; குடு

ம்ப சொத்துக்களைப் பாதுகாக்கவேண்டும்; குடும்ப சொத்துக்களை உரிமையாக்கிக் கோடற்கு யோக்கியதை உடையவர்களாகத் தங்களைச் செய்துகொள்ளவேண்டும்; பெற்றோர்கள் மரணமடைந்த பிறகு அவர்களை ஞாபகத்தில் வைத்தற்குரிய கடமைகளைச் செய்யவேண்டும். இவைகள், பெற்றோருக்கும் அவர்தம் மக்களுக்கும் முறையே உரிய கடமைகளென்று கௌதம புத்தர் உபதேசித்த அறங்களாகும்" என்று அருக்கசந்திரனார் கூறினார்.

"அண்ணலே! அறிந்துகொண்டேன். அவர் கணவனுக்கும் மனைவிக்கு முரிய ஒழுக்கங்களைப் பற்றிக் கூறியிருக்கின்றாரோ?" என்று குண்டலகேசி கேட்டாள்.

"ஓ! கூறியிருக்கின்றார்; அவைகளைப் பிறகு கூறுகின்றேன். மாதாபிதாவுக்குப் பிறகு, குருவே பிரத்தியட்ச தெய்வமாதலால், இரண்டாவதாகக் குருசிஷ்யர்கட்குரிய இயல்பினைக் கூறுகின்றேன். குருவானவர் சிஷ்யர்களை நல்ல வழியில் பயிற்றவேண்டும்; ஞானத்தை என்றுங் கைவிடாதிருக்கும்படி உபதேசிக்கவேண்டும்; சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் பூரண அறிவை உண்டாக்கவேண்டும்; சிஷ்யர்களைப் பற்றி அவர்களுடைய நண்பர்களிடத்திலும் சகபாடிகளிடத்திலும் நல்ல அபிப்பிராயத்துடன் பேசவேண்டும்; சிஷ்யர்களுக்கு அபாயம் நேர்ந்தால் அவர்களை அவ்வபாயத்தினின்றும் விடுவிக்கவேண்டும். சிஷ்யர்களோ தங்கள் குருவின் முன்னிலையில் நிற்பதாலும்; அவருக்குப் பணிவிடை செய்வதாலும்; அவரிடம் வணக்கத்தோடிருப்பதாலும்; அவருக்கு வேண்டியவற்றைக் கொடுத்தலாலும்; அவருடைய உபதேசத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதினாலும் ஆசாரியர்களைக் கௌரவித்தவர்களாவார்கள்" என்று குண்டலகேசியின் போதகாசிரியர் உரைததார்.

"நன்கறிந்து கொண்டேன், குருவே!" என்று குண்டலகேசி கூறினாள்.

"இனிக், கணவன் மனைவியிடத்தும், மனைவி கணவனிடத்தும் நடந்து கொள்ளவேண்டிய முறையையும், அவர்கள் அனுசரிக்கவேண்டிய ஒழுக்கங்களையும் கூறுகின்றேன். பதியானவன் தன் மனைவியைக் கௌரவத்தோடு நடத்தவேண்டும்; அன்புடன் நேசிக்கவேண்டும்; அவளை விடுத்துப் பிறஸ்திரீகளின் இணைவிழைச்சியை விரும்பாதிருத்தல் வேண்டும்; அவளைப் பிறர் கௌரவிக்கும்படி செய்யவேண்டும் அவளுக்குத் தகுந்த ஊணும் உடையும் பூணும் பிறவும் உவப்புடன் கொடுத்து அவளைப் பாராட்டவேண்டும். மனைவியானவள் தன் கணவனிடம் பூரண அன்பையும் கௌரவத்தையும் செலுத்தவேண்டும்; கற்புடையவளாக இருத்தல் வேண்டும்; வீட்டு வேலைகளைத் திறமையுடன் ஒழுங்காகச் செய்வதோடு சுற்றத்தாருக்கும், நண்பர்களுக்கும், ஏழைகளுக்கும் நன்றாய் விருந்தளித்து உபசரிக்க வேண்டும்; வீட்டுக்குரிய செலவை மிதமாகச் செய்யவேண்டும்; தான் செய்யும் வேலைகளில் மறவாமையும் திறமையும் உடையவளாக இருக்கவேண்டும்" என்று பௌத்த சந்நியாசி புகன்றார்.

"குருவே! இப்போது கூறிய விஷயம்விளங்கிற்று. கௌதம புத்தர் இல்லற சம்பந்தமாய் இன்னும் ஏதாவது கூறியிருக்கின்றாரோ?" என்று குண்டலகேசி உசாவினள்.

"ஆம்; கூறியிருக்கின்றார். நண்பர்களின் இயல்பைப்பற்றிக் கூறவேர்ந்தவிடத்து, தகுந்த இயல்புடைய ஒருவன் தன் நண்பர்களைக் கௌரவித்து அவர்களுக்கு நன்கொடை கொடுத்தல்; அவர்களுடன் அன்புரையாடுதல்; அவர்கள் நன்மையை விருத்திசெய்தல்; அவர்களைத் தனக்குச் சமமாக நடத்துதல்; தன்னுடைய செல்வத்தை அவர்கட்கும் ஒருசிறிது பகிர்ந்து கொடுத்தல் முதலியவைகளால் தன் நட்பின் சிறப்பை விளக்கவேண்டும். இந்த நண்பர்கள் அவனைப் பாதுகாத்தும்; அவன்பொருளைப் பாதுகாத்தும்; அவனுக்கு அபாயம் நேர்ந்தால் அவனுக்குப் புகலிடங் கொடுத்தும்; அவனுக்குக் கஷ்டம் நேர்ந்தபோது அவனைக் கைவிடாமல் இயன்ற உதவி செய்தும்; அவனிடத்தும் அவன் குடும்பத்தாரிடத்தும் அன்பு செலுத்தியும் வரவேண்டும். இனி வேலைக்காரர்களுக்கு இயன்ற தொழிலை விதித்தல்; தக்க உணவும்கூலியும் கொடுத்தல்; வியாதியால் பீடிக்கப்பட்டால் மருந்து முதலியன கொடுப்பித்தல்; விடுமுறை நாட்களை அப்போதைக்கப்போது கொடுத்தல் ஆகிய இவையெல்லாம் எஜமானன் அனுஷ்டிக்கத் தக்கன. அதிகாலையில் எழுந்திருத்தல்; எஜமானன் உறங்கியபின் தான் உறங்குதல்; கொடுத்ததைப் பெற்றுத் திருப்தியடைதல்; மனக்குறையின்றி உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வேலை செய்தல்; பயபக்தியோடும் அன்போடும் எஜமானனிடத்தில் வசனித்தல் ஆகிய இவையெல்லாம் வேலைக்காரனுக்கு இருக்கவேண்டிய குணங்களாகும். குழந்தாய். இன்று இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுவோம். நாழிகை அதிகமாய்விட்டது; நான் சென்று நாளை வருகிறேன்." என்று ஆசிரியர் அருக்கசந்திரனார் குண்டலகேசியிடம் சொல்லிவிட்டு, அவள் வீட்டிலிருந்து நீங்கினார்,

## நான்காம் அதிகாரம்

### காதலுக்குக் கண்ணில்லை

"மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருக்கி னிணர்சூடுப புன்மை கொண்டே
பேயென் றெழுந்து பிறரார்ப்பவு நிற்பர் காம
நோய்நன் கெழுந்து நனிகாழ்க் கொள்வ
தாயினக்கால்."—வளையாபதி.

"ஆ! இச்சுந்தரவதனின் பேரெழில்தான் என்னே, என்னே! அகன்று பரந்த நன்னுதலும், கருகி வளைந்த திருவளர் புருவமும், மழைக்குலம் போலப் பேரருள் பொழியும் விழுமிய விழியும், முகிழ்முல்லை நிகர்த்த எழிலுறு நாசியும், பவழ நிறந் தவழும் அமிழ்த இதழும், தாளம் நிகர்த்த தூயவெண்பல்லும், செங்குமுதம் புரையும் திருவாயும், மாங்கதுப்பனைய மாண்புறு கதுப்பும், கத்தரி கடுக்குந் திப்பிய செவியும், வலம்புரி புரையும் நலமிகு மிடறும், மலையொடு மலைக்கும் வலிமிகு புயமும், யாழ்முனை யனைய தூயசெங்கரமும், மாதர் மனங்கவரும் நீசறு மார்பும், இன்னுங் கட்டிளங் காளையர்களுக்கு இருக்கவேண்டிய அழகு அனைத்தும் ஒருங்கமைந்து, என் கண்முன் நிற்கும் இச்சுந்திரபுருஷன் யாவனோ? கண்ணனுக்கு ருக்மணி வயிற்றிற் பிறந்த காமனும், அவருக்கு ஜாம்பவதி வயிற்றிற் பிறந்த சாமனும் இவன் எழிலுக்கு இணையாவார்களோ? ஆ! இவன் என் என்னோடு வார்த்தையாடாமல் விலகி நிற்கின்றான்? அன்பனே,— என் நாதனே ஐயனே! திருவே! பொறையே! மணியே!' அமுதே! கலையின் நிலையே! நிலையுமெம்முயிரே! காதற்றுறையே! நாதனும் துறையே! பூசனைக்குரியாய்! எம்முள முறைவாய்! உயிரே; உறவே! நறவின் நிறைவே! எழிலார்மதியே; அடியாள் கதியே! உன் வாய்திறந்து என்னோடு வார்த்தையாடாயா? எழில்மிகு மயில்காள்! பொழிலுறை குயில்காள்! செங்கால் நாரைகாள்! பச்சிளங் கிள்ளைகாள்! பானிற அன்னங்காள்! தூநிறத் தூதுணங்காள்! அவற்கு என் நிலைமையை நீவிரெடுத்து நவிலீரோ? மலருறை மதுகரமே! தேனுகர் வண்டினமே! சுரும்பே, ஞிமிறே! அரற்றும் அளியே! நீவிராவது அளிமிகுந்து அவற்கு என் நிலைமை பகரலாகாதா? பரமன் விரும்பும் கொன்றைகளே! நாண்மலர் நிறைந்த புன்னைகளே! நல்லார் விழிநிகர் குவளைகளே! முல்லைகாள்; மல்லிகைகாள்! அல்லிகாள்; தாமரைகாள்! இம்மெல்லியலாள் புல்லுரையை நீவிரேனும் கேளீரோ? தாவும் மரைகாள்! ஓடும் மான்காள்! ஒளியும் முயல்காள்! மேயும் பசுக்காள்! நீவிர் என் வேண்டுகோளை நிறைவேற்ற வல்லீரோ? காதலரே! இவ்வளவு வர்மம் தமக்கு ஏற்குமோ? நான் இவ்வளவு ஆர்வத்துடன் தங்களை அழைக்கும்போது, என் சமீபத்தில் தாங்கள் வரக்கூடாதா? என்னோடு ஒரு வார்த்தையாவது பேசலாகாதா? நாதா, வாருங்கள்! என் அருகே அமருங்கள்!" என்று குண்டலகேசி தானாகவே நித்திரையில் புலம்பிக்கொண்டிருந்தாள்.



இவள் நித்திரையிற் பிதற்றிய சொற்கள், இவளருகே மற்றோர் மஞ்சத்தில் சயனித்து உறங்கிய தோழி குணமாலையை விழிக்கும்படி செய்தன. குணமாலை கண்விழித்துக் குண்டலகேசியின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே சிறிதுநேரம் மஞ்சத்தில் உறங்குபவள்போல் படுத்திருந்தாள். குண்டலகேசி தானாகவே பேசிக்கொண்ட விஷயங்களைக் குணமாலை கவனித்துக் கேட்டவுடன், தன் தலைவி 'காதல் நோயால்' வருந்துகின்றாளென்பது அவளுக்குத் தெற்றெனப் புலப்பட்டது. குணமாலை எழுந்து தன் தலைவியின் மஞ்சத்தருகிற் சென்று அவளைக் கையினால் தட்டி எழுப்பினாள். குண்டலகேசியும் திடுக்கிட்டு "என் நாதா!" என்று சொல்லிக்கொண்டே எழுந்துட்கார்ந்தாள்.

"நான் நாதனலலேன்; தோழி குணமாலை!" என்று புன்சிரிப்புடன் குணமாலை கூறினாள்.

குண்டலகேசி தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, நாணத்தினால் ஏதும் சொல்ல முடியாமல் பூமியை நோக்கியபடியே காலின் பெருவிரலைக் கையாற் றிருகிக் கொண்டிருந்தாள்.

"அம்மா; என்ன சங்கதி? நித்திரையில் ஏதேதோ புலம்பினாயே?" என்று குணமாலை கேட்டாள்.

"என்ன! நான் புலம்பினேனா? அவ்விதம் நான் புலம்புதற்கு ஏதுவில்லையே? சகியே, ஏதோ கனவு கண்டேன்; கடந்த சில தினங்களாக எக்காரணத்தாலோ, எனக்கு அயர்ந்த உறக்கமில்லை; பலவிதமான கனவுகள் காண்கின்றேன்" என்று குண்டலகேசி கூறினாள்.

"இன்று எத்தகைய கனவு கண்டாய்?" என்று குணமாலை கேட்டாள்.

"கண்ட கனவை விழித்தபின் சொல்லுவதற்கு என்னால் முடியவில்லையே? சொப்பனாவஸ்தையில் நிகழ்கின்ற நிகழ்ச்சி, ஜாக்கிராவஸ்தையில் பெரும்பாலார்க்கு மறந்துபோகின்றது. நானும் அவ்விதமே கனவு நிலையில் கண்டவைகளை நனவு நிலையில் மறந்துவிடுகிறேன்" என்று குண்டலகேசி உரைத்தாள்.

"தலைவியே, நீ உண்மையில், கண்ட கனவு மறந்திருந்தபோதிலும் சரியே; அல்லது அதை என்னிடம் தெரிவிக்கக் கூடாதென்று மறைத்தபோதிலும் சரியே; உன் மனத்தின் நிலைமை எனக்கு விளங்கிவிட்டது" என்று குணமாலை கூறினாள்.

"என்ன விளங்கிற்று? எவ்விதம் விளங்கிற்று". என்று குண்டலகேசி வினயினாள்.

"தலைவியே! நீ காதல் நோய் கொண்டிருக்கிறாய் என்பது விளங்கிற்று; நீ சற்று முன்பு நித்திரையில் புலம்பிய சொற்களை நான் கேட்டிருந்தாலும், அன்று மாளிகை மேடையில் உலாவிக்கொண்டிருந்தபோது பத்மினி உன்னை இரகசியமாக ஏதோ கேட்டவுடன், நீ திடீரென்று மூர்ச்சித்துவிழுந்ததாலும் அறிந்துகொண்டேன்" என்று குணமாலை சொன்னாள்.

"நான் நித்திரையில் என்ன புலம்பினேன்?" என்று குண்டலகேசி குணமாலையைப் புன்சிரிப்புடன் வினவினாள். குணமாலை, தான் விழித்த பிறகு, நித்திரையில் குண்டலகேசி தானே பேசிக்கொண்டிருந்த விஷயங்களைத் தான் கேட்டவாறே எடுத்துக் கூறினாள்.

"குணமாலையே, உண்மையை உன்னிடம் மறைப்பதாற் பயனென்ன? நான் சில தினங்கட்கு முன்னர் ஒரு நாள் பிற்பகலில் நம் மாளிகையின் மேன்மாடியில் உலாவிக்கொண் டிருந்தேன். அப்போது தெருவழியே போய்க் கொண்டிருந்த ஓர் அழகிய வாலிபனைத் தற்செயலாக காண் பார்க்கலானேன். அந்த நிமிஷம் முதல் என் மனம், எக்காரணம் பற்றியோ, அவனைப் பற்றிநிற்கின்றது. விழித்திருக்கும்போதெல்லாம் அவனைப்பற்றிய ஞாபகமே எனக்கதிக மிருக்கின்றது. உறங்கும் போதோ, அவ

னைப்பற்றியே கனவு காண்கின்றேன். அவன்மீது எனக்குள்ள பெருங்காதலே இப்போது என்னைத் துன்புறுத்தி வருகின்றது. "அவன் யார்? அவனை எவ்விதம் மீண்டும் பார்ப்பது? அவனை எப்போது காண்பது? அவனை எவ்வாறு மணப்பது? என்னும் இவைபோன்ற எண்ணங்கள் என் மனத்தில் இடையறாது எழுகின்றன. தோழியே, எவ்விதமாவது என் மனக்குறையை நிவர்த்தி செய்தற்கு நீ முயல வேண்டும்" என்று குண்டலகேசி பரிதாபத்தோடு கூறினாள்.

"தலைவியே! நீ சொல்வது மிக நன்றாயிருக்கிறதே! அவனை நான் எவ்விதம் காணமுடியும்? அவனுடைய ஊர், பெயர், குலம், தொழில், முதலியன நமக்குத் தெரியாவே? அவ்விதமிருக்கும்போது அவனை எங்கு நாம் காண்பது; எவ்விதம் காண்பது? அவனுடைய அங்க அடையாளமாவது உனக்கு நன்றாகத் தெரியுமா? என்று குணமாலை வினவினாள்.

"சகியே, அவன் நடுத்தரமான உயரமும் பருமனும்*உடையவன்; இருபத்துநான்கு அல்லது இருபத்தைந்து வயதுதான் இப்போது அவனுக்கிருக்கலாம்; வட்டமதியைப் போல் திரண்டுருண்டதும் செந்தாமரைபோல் அலர்ந்திருப்பதுமான அழகிய முகமுடையவன்; கறுத்தடர்ந்து நீண்டிருக்கும் குஞ்சியன்; அகன்ற நெற்றியும் விசாலமான கண்களுமுடையவன்! பருத்த தோளினன்; பவள வாயினன். தாள்தொடுங் கையினன்; பொன்னிற மேனியன்" என்று குண்டலகேசி தன் காதலனின் பேரெழிலைக் குணமாலைக்கு எடுத்துரைத்தாள்.

"தலைவியே! இனி என்னாலான உதவியை நான் செய்கின்றேன். நீ வருந்துதல் ஒழிக! நாளை நண்பகலில் நம்முடைய அரண்மனையில் களவாடிய கள்வனைச் சிரச்சேதம் செய்வதற்காகக் காவலர்கள் கொலைக் களத்திற்கு அழைத்துச் செல்லப் போகின்றார்கள் என்று பறை சாற்றுவோர் இன்று பறையறைந்தார்கள். கொலைக்களத்திற்கு அவனை நம் மாடவீதி வழியாகத்தான் அழைத்துப் போவார்கள். அக்காட்சியைப் பார்க்க ஊர் ஜனங்கள் கும்பல் கும்பலாய்ப் பின்தொடர்வார்கள். நாம் நாளைப் பகலில் மாடிமீதிருந்து கவனிப்போமானால், ஜனக்கூட்டத்தில் நீ காதலித்துள்ள புருஷன் காணப்படினும் படுவான். ஆதலால், கவற்சி நீங்கி மீண்டும் துயில் கொள்" என்று குணமாலை கூறவே, குண்டலகேசியும் ஒருவாறு மனந்தேறி சயனத்திற் படுத்து உறங்கலானாள். குணமாலை தன் சயனத்திற்குச் சென்றாள்.

மறுநாள் நண்பகலில் அரண்மனை மாடவீதியின் வழியாய் நான்கு காவலாளர்கள் ஒரு கைதியை அழைத்துக் கொண்டு சென்றார்கள். கைதியின் இரண்டு கைகளும் இருப்பு விலங்கால் பிணிக்கப்பட்டிருந்தது. உடம்பொடு ஒட்டியிருக்கும்படியான அரைக்கைச் சட்டை,—இருள் போல் கருநிறமுடையது,—தன் சரீரத்தில் மேற்பாகத்திலும், அங்ஙனமே கொண்டாற் சல்லடமும் அரையிலிருந்து முழந்தாள் வரையிலும் அவன் அணிந்திருந்தான். அவனைச் சூழ்ந்து, ஜனங்கள் பற்பல விதமாய்ப் பேசிக்கொண்டே, கும்பு கும்பாய்ச் சென்றார்கள். இவ்வேடிக்கையை மாடிமீது தன் தோழியர்களோடு நின்று பார்த்துக் கொண்டிருந்த குண்டலகேசி, கைதியானவன் மாளிகைக்குச் சமீபமாய் வந்துகொண்டிருந்தபோது, அவனைக் கூர்ந்து நோக்கிவிட்டு "ஆ! தோழிகாள்! "இவனே என் காதலன்" என்று தன்னையும் மறந்து வாய்விட்டுக் கூவினாள்.

இந்த வார்த்தைகள் அவள்பக்கலில் நின்ற தோழியர்களுக்குப் பெரும் வியப்பையும் முதிர்ந்த துயரினையும் விளைவித்தன. அவர்கள் சில நாழிகை வரையில் ஒன்றுந்தோன்றாமல் ஸ்தம்பித்து நின்றார்கள். அவனை மணத்தல் பழிப்பிற்கு இடமாகுமென்றும், அத்தகைய கள்வனை இச்சிப்பது நியாயமன்றென்றும், ஆதலால் அவன்மீது கொண்டுள்ள காதலைஒழித்துவிடுதல் நலமென்றும் அவர்கள் தம் தலைவிக்கு எடுத்துரைத்தார்கள். இவர்களுடைய உபதேசங்கள் குண்டலகேசியின் செவியில் நுழையவே இல்லை. அவள் ஒரே பிடிவாதமாய் அவனையே மணம்புரிந்து கொள்ள வேண்டுமென வற்புறுத்துரைத்தாள்.

"தோழிகாள்! ஒருமுறை செலுத்திய காதலை மறுபடி ஒழித்து விடுவது இயலாத காரியம். முதலில் அவனைக் கண்டபோதே நான் அவன்மீது காதல் கொண்டேன். இப்போது அவன் கள்வன் என்று அறிந்து அதனை நீக்குவது யாங்ஙனம்? அவன் கள்வனாயினும், அவனையே நான் மணப்பேன்; இன்றேல் இன்றே உயிர் துறப்பேன். இவ்விரண்டில் ஒன்றே என்னாற் செயற்பாலது" என்று குண்டலகேசி உறுதி கூறினாள்

இவ்விஷயத்தை இனி இரகசியமாய் வைத்திருத்தல் முறையன்றெனக் கருதி அவளுடைய பாங்கியர்கள் அவள் தந்தையினிடத்து இவ்விஷயத்தைப் பற்றி விரிவாய்க் கூறினார்கள். குண்டலகேசியின் தந்தையும் அவனைச் சேர்ந்த சிலரும் அவளுக்குப் பல நியாயங்களை எடுத்துக்காட்டி அக்கள்வனை மணத்தல் முறையன்றென வற்புறுத்தினார்கள். குண்டலகேசிக்கு அவர்களுடைய வார்த்தையும் சமாதானத்தைக் கொடுக்கவில்லை. குண்டலகேசியின் பிடிவாதம் அவளுடைய பிதாவுக்குக் கோபத்தை விளைவித்த போதிலும், ஏகபுத்திரியை இழந்துவிட மனமற்றவனாய், அக்கள்வனை அரசனிடம் சொல்லி விடுவித்து, அவனை அவளுக்கு மணம்புரிவிக்க இசைந்தான். அக்கள்வன் யாவனோவெனின்,—காளனே!

கள்வன் என அறிந்த பின்னரும், குண்டலகேசி அந்தக் காளன் என்பானை அவ்வளவு ஆர்வத்துடன் காதலித்ததும், அவனையே வதுவை செய்துகொள்ள வேண்டுமெனப் பிடிவாதமாய்க் கூறியதும், சிலருக்கு வியப்பாயும் ஆச்சரியகரமாயும் தோன்றுதல் கூடும் ஆனாலும் மக்களின் ஆன்ம தத்துவத்தையும் அதன் இயல்பினையும் உற்று நோக்குமிடத்து, அங்ஙனம் வியத்தற்கும் ஆச்சரியப்படுதற்கும் ஏதுவில்லை என்பது யார்க்கும் தெற்றென விளங்கும். ஆன்மாவுக்கு அனுபவ மாத்திரையாக உள்ளதாய், ஆன்ம உணர்வினுக்கு மாத்திரம் புலப்படுவதாய், பிறருக்கு "அது இத்தகையது; இவ்வியல்பினது" என்று உரையினாலும் பிறவாற்றானும் விளங்கவைக்க முடியாததாய், மக்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்கும் பெற்றி வாய்ந்ததாயுள்ள, உள்ள நெகிழ்ச்சி, 'அன்பு' எனப் பெயர்பெறும். இந்த அன்பு, தான் தோன்றும் முதிர்ந்த தரத்திற்கும் குறைந்த தரத்திற்கும் ஏற்றபடி, அருள், கருணை, பக்தி, காதல், நட்பு, இரக்கம், எனப் பல நாமம் பெறும். இவற்றுள் முன்னைய மூன்றும் இறைவனுக்கும் ஆன்மாக்களுக்குமுள்ள தொடர்பில் நிகழும் அன்பைக் குறிப்பனவாகும். ஏனைய, மக்கட்டொகுதிகளுக்குள்ள தொடர்பிலும், பிற ஜீவராசிகளுக்குள்ள தொடர்பிலும் நிகழாநிற்கும் அன்பைக் குறிப்பனவாகும். மக்களுக்குள் நிகழும், அன்புரிமை எல்லாவற்றிலும், மிகச் சிறந்ததும், முதிர்ச்சியுடையதுமான அன்பே, காதல் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. அஃதாவது, காந்தத்திடத்தில் மறைவாக இருக்கும் ஆகருஷண சக்தியானது, இரும்பைக் கண்டவிடத்துப் புலப்பட்டுத்தோன்றி அவ்விரும்பை இழுத்துக்கொள்வது போலவும், அன்னையின் சரீரமெங்கும் வியாபித்து மறைவாயிருக்கும் பாலானது, குழந்தையைக் கண்டவுடன் ஒருங்கு திரண்டு ஸ்தன்னியத்தின் வழியாய் வெளிப்படுதல் போலவும், ஒரு கட்டழகியின் ஆன்மாவிடத்து மறைந்து நிற்கும் அன்பானது அவள் விரும்பும் ஓர் ஆண்மகனைக் கண்டபோதும், இங்ஙனமே ஒரு வாலிபனின் ஆன்மாவிடத்து மறைந்து நிற்கும் அன்பானது அவன் விரும்பும் பெண்மணியைக் கண்டபோதும் முறையே புலப்பட்டுத் தோன்றும்,—இதுவே 'காதல்' எனப்படும். இனி, இக்காதலைத் தோற்றுவிப்பது யாதோவெனின்; காதலே காதலைத் தோற்றுவிக்குமென்க என்னை? "மாறுபட்ட தன்மையுடையன தம்முளிணங்கா" என்பது நம் ஆன்றோரின் கொள்கை யாதலினாலும், இக்காலத்துப் பௌதிக சாஸ்திர விற்பன்னர்களின் ஆராய்ச்சித் திறனும் அதனையே வலியுறுத்துகின்றமையானுமென்க. பச்சை விறகைத் தீயிலிட்டால் எரியக் காண்கின்றிலேம். இதற்குக் காரணமென்ன? பச்சை விறகிலுள்ள ஈரமும், தீயினிடத்துள்ள வெம்மையும் தம்முள் மாறுபட்ட குணமுடையவாதலால், அவ்விறகு எரிகிறதில்லை. ஆனால் காய்ந்த விறகைத் தீயிலிட்டால், அது நன்றாய் எரிகிறது. இதற்குக் காரணம் என்னை? காய்ந்த விறகில் இயற்கையாகவே வியாபித்து மறைந்து கிடக்கும் உஷ்ணமும், தீயினிடத்துள்ள வெம்மையும் தம்முள் ஒத்த குணம் உடையவாயிருத்தலே காரணமாம்.

"நல்லது; 'ஒத்ததன்மை யுடையனவே தம்முள் பொருந்தும் என்பது உண்மையாயின், ஓர் ஆண்மகனும் பிறிதோர் ஆண்மகனும், ஒரு மடமகளும் மற்றொரு மடமகளும் தம்முட் பாராட்டும் அன்புரிமை, ஒரு தலைமகனும் ஒரு தலைமகளும் தம்முட் பாராட்டும் அன்புரிமைபோல் அத்துணை முதிர்ந்ததாகவும் சிறந்ததாகவும் இல்லையே? அவர்கள் பாராட்டும் அன்பு, இவர்கள் பாராட்டும் அன்பைப்போல் காதல் என்னும் பெயர் பெறவில்லையே? காரணம் யாது?" என்று சிலர் வினவலாம்.

ஒவ்வொரு பொருளுக்கும் பொதுத்தன்மை, சிறப்புத்தன்மை என இரண்டிருக்கின்றன பச்சை விறகுக்கும் தீயினுக்கும் முறையே அமைந்துள்ள வெம்மைக் குணம் அவைகட்குரிய பொதுத்தன்மையும், விறகிலிருக்கும் பட்டை, அதனது உருவம் முதலியனவும், தீயினுக்கிருக்கும் செந்நிறம், பிரகாசம், ஒரு வஸ்துவைப் பற்றுக்கோடாகக்கொண்டே எரிதல் முதலியனவும் அவை தமக்கு முறையே உரிய சிறப்புத் தன்மையுமாகும். காய்ந்த விறகை இன்னொரு காய்ந்த விறகோடு சேர்த்தால் அவையிரண்டும் ஒன்று சேர்ந்தெரிகின்றில. அவைகளை ஒன்று சேர்த்து எரிக்கும்படி நேர்ந்தவிடத்தும் நாம் அவைகளை ஒன்றோடொன்று தேய்த்துக் கடையவேண்டியிருக்கிறது. இதனால் இரண்டு பொருள்கள் தம்முள் இணங்குவதற்கு அப்பொருள்களின் பொதுத்தன்மை ஒன்றாயும், சிறப்புத் தன்மை வேறாயும்இருக்கவேண்டுவது இன்றியமையாததாகின்றது என்பது இனிது புலப்படுகிறதன்றே? இறைவனுடைய பேரற்புத சிருஷ்டியில் காணப்படும் பல இரகசியங்களுள் ஆண் பெண் பாகுபாடும் ஒன்றாகும். ஆன்மாவிற்குரிய இச்சை, ஞானம், கிரியை ஆகிய இவைகளும், ஐம்பொறியால் நுகர்ந்து அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்களும் கரசரணாதி அவயவங்களுட் பெரும்பாலனவும், பசி பிணிமூப்பாதிய இவைகளும், சரீரஅமைப்பிற்கு அவசியமான ஏழு தாதுக்களும் பிறவும் ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் பொதுவாயுள்ள பொதுத்தன்மைகளாம். சரீரத்தின் மென்மை; கன்மேந்திரியங்களின் நுண்ணிய அமைப்பு; நாணம், மடம், அச்சம், பயிர்ப்பாகிய குணங்கள் இவையெல்லாம் பெண்மக்கட்கே உரிய சிறப்புத் தன்மைகளாம். சரீர வன்மை; மனோதிடம்; ஜ்ஞானேந்திரியங்களின் திண்ணிய அமைப்பு; வீரம், தைரியம், துணிபாதிய குணங்கள் இவையெல்லாம் ஆண் மக்களுக்கே உரிய சிறப்புத் தன்மைகளாம். இங்ஙனம் ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் பொதுத்தன்மை ஒன்றாயும் சிறப்புத்தன்மை வேறாயும் இருக்கின்றமையாற்றான் காய்ந்த விறகும் தீயும் ஒன்றுசேர்ந்தவழி இயற்கையாகவே விறகு நெருப்புப்பிடித்து எரிதல்போல், ஓர் ஆண்மகனுக்கும் மடமகளுக்கும் ஏற்படும் அன்புரிமையானது, இயல்பாகவே அவர்களுக்குள் எழுவதாய், மிக முதிர்ந்ததாய், இணையற்றதாய், காதல் என்னும் பெயர் பெறுதற்கு ஏற்றதாய் இருக்கின்றது. ஆகவே, காதல் என்பது மனதிற்கிசைந்த ஓர் ஆண்மகனைக் கண்டவிடத்து ஒரு பெண்மணிக்கும்,

(இதன் தொடர்ச்சி 116-ம் பக்கம்)

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
# CHILDRENS' & LADiES' PAGES
## ரிப்வான் விங்கிள் கதை*
## THE STORY OF RIPVAN WINKLE

அமெரிக்கா கண்டத்தின் தேசங்களில் மிகவும் பிரசித்திபெற்ற ஐக்கிய நாடுகளில், (United States of America) காட்ஸ்கில் (Katskill)என்னும் பெயர் கொண்ட ஒரு மலைத்தொடர், வளப்பம் பொருந்திய ஹட்ஸன் நதிக் (Hudson River) கருகே, வானளாவி, உயர்ந்து விளங்குகின்றது. இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி, என்று கூறும் பருவங்கள் ஒவ்வொன்றிலும் அம்மலையின் நிறம் மாறி மாறித் தோன்றும்; இதுமாத்திரமல்ல. அம்மலைத்தொடர் ஒரு நாளுக்குள்ளேயே, மணிக்கு மணி, வெவ்வேறு நிறத்துடன் தோன்றும். ஆகவே அம்மலையடிவாரத்தில் வசிக்கும் ஜனங்கள், மழையோ, காற்றோ, புயலோ, மற்றெந்த சீதோஷ்ண மாறுதலோ, வருமுன்னரே அம்மலையைப் பார்த்த மாத்திரத்தில், "இன்ன மாறுதல் நாளைவரும் என்று தவறாமல் எளிதிற் கூறுவார்."

இம்மலையின் அடிவாரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுவில், மழை, பனி, வெய்யிலாலும் காலப்போக்கினாலும், சற்றே பாழடைந்த ஒரு வீட்டில், ரிப்வான் விங்கிள்என்னும் ஒரு குடியானவன் வசித்திருந்தான். அவன் சற்றேனும் கபடமற்றவன்; அனைவராலும் நல்லவன் என்னும் பெயர் வாய்ந்தவன்; அதோடு அடங்காப்பிடாரியான தன் மனைவியிடம் பெரிதும் நடுங்குவான். வாஸ்தவத்தில் இந்நடுக்கம் பற்றியே அனைவரும் இவனை நேசித்தனர் போலும். ஏனெனில் இல்லத்தில் உறையும் அடங்காப்பிடாரிகள் கையிற்சிக்கி, நடுங்கிக் காலங்கழிக்கும் மனிதர்கள், தாம் பிரதிதினமும் தம் மனைவியைத் திருப்தி செய்யும் வழக்கம் பற்றி, தமது நண்பரோடு பழகும்போதும் அவர்களைத் திருப்தி செய்ய முயல்கிறார்கள். அன்றியும் அடங்காப் பிடாரிகள், தாங்கள் இழைக்கும் பெருந்துன்பமாகிய உலைக்களத்தின் பெரு நெருப்பில், தங்கள் கணவர்களின் மனதாகிய இரும்பை அநுதினமும் காய்ச்சுவதால், முதலில் இரும்புபோல் வலிய அவர்கள் மனமும், நாளடைவில் பதப்பட்டு, எவ்வழியும் எளிதில் வளைக்கக் கூடியதாகிறது. மேலும், பொறையுடைமையின் மகிமையைப்பற்றி, ஆயிரம் பிரசங்கங்களைக் கேட்டாலும் அவை யத்தனையும் ஒரு தலையணை மந்திரோபதேசத்திற்கு நிகராகுமா? இவ்வாறான மந்திரோபதேசங்கள், அபரிமிதமாய்க் கிடைக்கப்பெறும் பாக்கியம் வாய்ந்தோர்களில் ரிப்வான் விங்கிளே மிகவும் அதிர்ஷ்டசாலி.

இப்பெரும் பாக்கிய வசத்தினால், அவ்வூரார் யாவருக்கும் இவனி[illegible] விசுவாசம் அதிகம். அவ்வூர்ச் சிறுபிள்ளைகளோ இவனைக் கண்டாற் போதும்; ஆரவாரத்தோடு அவனை எதிர்கொண்டழைப்பார்கள். ஏனென்றால் அவன் பன் முறையும் அவர்களோடு பாரியடித்தும், காற்றாடி பறக்கவிட்டும், குண்டாடியும், மற்று பலவகையான ஆட்டங்களை அவர்களுக்குக் கற்பித்தும் வருவான். ஆட்டமாடின பிறகு, பூதம், பேய், பிசாசு, காட்டுமனிதர் முதலியவைகளைப்பற்றி விநோதமாகக் கதை சொல்வான். ஆனதுபற்றி, சிறு பிள்ளைகள், ஸ்வயேச்சையாக அவனுடைய மார்மேலும், தோள்மேலும், முதுகிலும், நிர்ப்பயமாய் ஏறி விளையாடுவார்கள்.

எல்லாரும் அதிசயிக்கத்தக்க குணம் இவனிடம் ஒன்றுண்டு. அதாவது பயன்தருங் காரியங்களைச் செய்வதில் சற்றுமனமில்லாமை. இதைக்கொண்டே, இவன் ஊக்கமற்றவனென்று கூறக் கூடாது. ஏனெனில், நான்குமார் நீளமும், தூக்க முடியாத கனமுள்ள ஒரு தூண்டிற் கோலைக் கையில் தாங்கி, குளிர் நடுக்கும் பாறையின்மீது உட்கார்ந்துகொண்டு, ஒரு மீன்கூட அகப்படாவிட்டாலுஞ் சளைக்காமல், காலை முதல் மாலைவரையில் தூண்டிலின்மேற் கண்ணாக, அசையாமல் உட்கார்ந்திருப்பான். அல்லது

* கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் முதலில், சில ஆங்கிலர், இங்கிலாந்தினின்றும் புறப்பட்டு, கப்பல் யாத்திரைசெய்து, இப்போது ஐக்கியநாடுகள் (United States of America) என்று கூறுந் தேசத்தில் குடியேறி, நாளடைவில் அத்தேசமுழுவதும் பரவி, இங்கிலாந்து சக்ரவர்த்தியின் அரசாட்சிக்குட்பட்டவர்களாய் ஏறக்குறைய இருநூறு வருஷங்களாக வசித்திருந்தார்கள். ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டினிறுதியில், ஆங்கில மன்னராயிருந்த மூன்றாம் ஜார்ஜ், (George III,) ஐக்கிய நாடுகளில் தேயிலைமேல், தீர்வை இறுத்தாரென்ற வியாஜத்தை முன்னிட்டு, அந்நாட்டார், ஆங்கிலரோடு போர் செய்து, அப்போரில் வெற்றியடைந்து, அதனால் ஸ்வாதீனம் பெற்று, அன்றுமுதல் குடியரசாக வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பெரும்போரில், இராணுவத் தலைவராயிருந்து, தந்நாட்டுக்கு ஜயமும் கீர்த்தியுந் தந்து, தமது நாட்டிற்கு, முதற் பிரதிநிதி (President) யாக இருந்தவர், ஜார்ஜ் வாஷிங்க்டன் (George Washington) என்பவர். இங்கிலாந்து தேசசரித்திரத்திலுள்ள இவ்வரலாறு இங்குக் கவனிக்கற்பாலது.

(115-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்ஙனமே மனதிற்கிசைந்த பெண்மணிமீது ஓர் ஆடவனுக்கும் இயல்பாகவே உண்டாகும் உள்ள நெகிழ்ச்சியாகிய அன்புரிமை என்பது இனிதுபெறப்பட்டது. எனவே "காதலுக்குக் கண்ணில்லை" என்பதற்கிலக்கியமாகக் குண்டலகேசி கள்வனாகிய காளையையே மணப்பதாக வற்புறுத்திக் கூறியது ஒரு வியப்பன்று.

நாகை-ஸி. கோபாலகிருஷ்ணன்.



பொழுது போக்குவதற்காக, நாலைந்து புறாக்களையாவது, இரண்டு மூன்று அணிலையாவது சுடுவதற்காக, ஒரு துப்பாக்கியைத் தோளிற் சாத்தி, காடு, செடி, மலை, பள்ளத்தாக்கு என்று கொஞ்சமும் பயப்படாமல்; சேற்றிலுஞ் சதுப்பிலும், ஒரு நாள் முழுவதுந் திரிவான். அயலானுடைய வண்டி, அசைக்க முடியாத கனத்தோடு சேற்றிலழுந்தி விட்டதென்றாலும், புலங்களைச் சுற்றி கருங்கற்சுவர் எழுப்புங் காலத்து, தன்னுதவியை யாராவது வேண்டினாலும், தன் முழுமனதோடும் அவர்களுக்குதவுவான். சுருங்கச் சொல்லில் ரிப் தன் காரியந்தவிர மற்றெந்த வேலையை வேண்டுமானாலுஞ் செய்வான்; ஆனால், தன் சொந்த வேலையைச் செய்வதோ, அவனுக்கு முற்றிலும் அஸாத்தியம். ஆகையால் இவனுடைய தோட்டமும் நிலங்களும், பாடுபடுவாரின்றி நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டே வந்தன.

அவனுடைய பிள்ளைகள்; பெற்றோரற்றுத் தெருவில் திரியும் அனாதைகளைப்போல், கந்தை கட்டித் திரிந்தனர். தகப்பன் பெயரைக்கொண்ட மூத்த புத்திரன், நாமகரண காலத்தில், தன் தகப்பன் பெயரோடு அவனுடைய குணங்களையும் ஆஸ்தியாக அடைந்தான் போலும். அந்தப்பிள்ளை, குட்டிபோட்ட பூனையைப்போல் தன் தாயாரின் முன்றானையைப் பிடித்துக்கொண்டிருப்பானேயன்றி. அவளை விட்டு, அப்புறம், இப்புறம் நகரமாட்டான். அவனுடைய உடை அதியாச்சரியமானது. தன் தகப்பன் உடுத்திக் கிழித்த சட்டைகளிரண்டைக் குதிக்காலின் கீழே புரளும்படியாகப் போட்டுக்கொண்டு, சீமாட்டிகள், சேறானவிடத்தில் நடக்கும்போது, தங்கள் பாவாடைகளைக் கரங்களிற்பற்றிப் போகும் வண்ணமே, வெகு சிரமப்பட்டுத் தன் சட்டையைக் கையால் தூக்கிக்கொண்டு அங்குமிங்கும் ஓடுவான்.

எதுஎப்படி யிருந்தாலும் ரிப்வான் விங்கிளுக்குஎல்லாம் ஒன்றே. விசாரம் இன்னதென்று அவனுக்குத்தெரியாது. வேலைசெய்து உண்பதைக் காட்டிலும் வேலைசெய்யாமற் பட்டினியிருப்பதே உசிதமென்று எண்ணும் பாக்கியவான். ஆனால் இவன் மனைவி, இவனுடைய சோம்பலைப் பொறுக்கமுடியாமல், இவன் காதில் அஹோராத்திரம் இடிபோல்முழங்குவாள். அவள் என்ன சொன்னாலும் இவனளிக்கும் பதிலொன்றே; அதாவது மௌனமாயிருத்தல். இவனுடைய மௌனத்தைக் காணக்காண, அவளுக்குக் கோபம் மேன்மேலும் மூளும். அப்போது இவன் ஓரே ஓட்டமாக வீட்டிற்கு வெளிப்புறம் ஏகுவான்;— ஏனென்றால், வீட்டின் உட்புறம், வெளிப்புறம் ஆகிய இரண்டு புறங்களில், அடங்காப்பிடாரியின் கணவனுக்குச் சொந்தமானது வீட்டின் வெளிப்புறமொன்றுதானே.

ரிப்வான் விங்கிளுக்கு ஆருயிர்த் தோழனான அவனுடைய நாயும், தன் எஜமானுடைய மனைவியைக் கண்டால் நடுநடுங்கும்; ஏனெனில், அச்சீமாட்டி. அவ்விருவரையும் சோம்பேறித்தனத்திற் சென்று பிறந்தவர்களெனக் கருதினாள். அம்மாது, விளக்குமாற்றைக் கையிலெடுத்தாற் போதும்; உல்ப் (Wolf) என்று பெயர் பெற்ற அந்த நாய், ஊளையிட்டுக் கொண்டு கதவை நோக்கி ஓடி ஒளிக்கும்.

இவ்வாறே வருஷங்கள் பலவுங் கழிந்தன அந்தச் சீமாட்டியின் தொண்டையும் நாளுக்கு நாள் உரம் பெற்றது. உண்ணும் வேளை தவிர, மற்ற வேளையில், ஒரு விநாடி நேரங்கூட, வீட்டில் தங்குவதரிதென்று கண்டறிய, அந்தவூர்ச் சத்திரத்து வாயிலில் பிரதிதினமுங் கூடும் ஸபையில் தானுமொரு மெம்பரானான். அந்தச் சத்திரத்ததிகாரியே, அச்சபையின் சாச்வத அக்கிராஸனாதிபதி. தெருப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயரான டேரிக் வான் பம்மெல் (Derrick Van Bummel)என்பவர், அச்சபையின் மெம்பர்களில் முக்கியமானவர். அச்சத்திரத்தின் வாசலில், உயர்ந்து வளர்ந்த ஒரு மரத்தின் நிழலில், ஒரு விசுப்பலகையின்மேல் அந்தச் சபைகூடும், அக்கிராஸனாதிபதியும் அச்சத்திரத்திற் கதிகாரியுமான, நிக்காலஸ் வெட்டர் (Nicholas Vedder) எப்போதும் புகைச்சுருட்டை உல்லாஸமாய்ப் பிடித்துக்கொண்டு, தன் நாற்காலியை அம்மரத்தின் கீழிருந்து அப்பால் எடுக்கலாமே, வெய்யில் ஏற ஏற, நிழலுக்குச் சரியாய் நாற்காலியைத் தள்ளிக் கொண்டிருப்பார். ஆகையால் அவ்வூரில் ஆண் பெண் அனைவரும், அந்த அக்கிராஸனாதிபதியின் நாற்காலி, அம்மரத்தின் கீழ் இருக்கும் இடத்தைப் பார்த்தவுடனே, பொழுது இத்தனை நாழிகை யாயிற்றென்று வெகு ஸ்வல்பமாய்க் கூறுவார்கள். ஆறு மாதத்திற்கு முன் அச்சிடப்பெற்ற ஸமாசாரப் பத்திரிகை ஒன்று எப்போதாவது இவர்கள் கையிற் கிடைக்குமாயின், இச்சபையின் மெம்பரான உபாத்தியாயர் அதை அதிக உத்ஸாஹமாகப்படிப்பார் அச்சபையின் மெம்பர்கள் பேசும் வியங்களைப்பற்றி அக்கிராஸனாதிபதி, தன் அபிப்பிராயங்களை, வாய்திறந்து சொல்லுவதேகிடையாது. பிறர் சொல்லுவது தன் மனதிற்கு அங்கீகாரமாய் இருக்குமாகில், சுருட்டின் புகையைத் தன் வாயிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் ஊதுவார். அங்கீகரிக்காவிட்டால், நீராவியந்திரம் புகை விடுவதைப் போலக் குப் குப்பென்று, வாயினின்றும் ஊதுவார். இத்தகைய குறிகளைக் கொண்டே, அச்சபையார் தமது அக்கிராஸனாதிபதியின் அபிப்பிராயங்களைத் தெளிவாய் அறிவார்கள்.

பல நாள்களாய் ரிப்வான் விங்கிள் இங்கே வந்து காலங்கழித்தான். ஆனால் அவன் மனைவியோ, அவனை இங்கும் இருக்க விடவில்லை. எல்லோரும் கூடியிருக்கும்போது, அவர்கள் நடுவில் புகுந்து, ஸபையாரையும் அக்கிராஸனாதிபதியையும், சோம்பேறிகளென்று வைவாள். இவ்விடமும் தனக்குப் பயம் தாராததைக் கண்ட ரிப் உண்டவேளை போக மற்ற வேளையில், துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, காட்டில் வேட்டையாடிக் காலங்கழிப்பதே ஸரியென்று தீர்மானித்தான்.

இவ்வாறு பலநாள் சென்றபின், ஒரு நாள் மாலைப் பொழுதில், தன்னையும் அறியாமல், காட்ஸ்கில் மலையின் மிகவும் உன்னத சிகரமொன்றில் போய்ச் சேர்ந்தான். அன்று முழுவதும், தனக்கு மிகவும் பிரிய விளையாட்டாகிய அணில் வேட்டையாடி மிகவும் களைத்திருந்தபடியால், சற்று இளைப்பாறக் கருதி, மலைமேற் செழித்துப் படர்ந்த பசும்புல்லின்மேல், துப்பாக்கியை அருகே வைத்துப் படுத்துக்கொண்டான். நாற்புறமும் உயர்ந்த மரங்கள் காற்றில் அசைந்தன. தூரத்தில், கம்பீரமான ஹட்ஸன் நதி (Hudson River) பாய்வதையும், அதன் நீல நிறமான ஜலத்தின்மேல் இங்குமங்கும் சிறிய படகுகள், நீர்ப் பறவைபோல் வெள்ளிய பாய்விரித்துச் செல்வதையும், நெடுந்தூரத்தில் அவ்வாற்று ஜலத்தின் நீல நிறமும், ஆகாயத்தின் நிறத்தோடு கலந்து மறைவதையும், ஆனந்தமாய்க் கண்குளிரக் கண்டான். மேற்கே திரும்பிப்பார்த்தான். ஸூரியன் அஸ்தமிக்க இன்னும் அரை நாழிகைப்பொழுது தானிருக்கும், தானிருக்கும் கிராமமோ ஐந்தாறு மைல் தூரத்திற்கப்பாலிருக்கிறது. ஊர்போவதற்குள் இருட்டிவிடும். தன் மனைவிக்கு என்ன விதமாய்ப் பதில் சொல்வதென்று பயந்து, ஒரு பெருமூச்சு விட்டான்.

இச்சமயத்தில், சற்று தூரத்திலிருந்து' "ரிப்வான் விங்கிள்! ரிப்வான் விங்கிள்!" என்று தன்னை யாரோ உரத்த சத்தமாய்க்கூப்பிடும் தொனிகேட்டது. திரும்பிப்பார்த்தான்; சற்று தூரத்தில், தோளில் ஒரு பெருஞ்சுமையைத் தாங்கி அம்மலைமேல் சிரமத்தோடு ஏறிவரும் ஒரு விசித்திர ரூபமுடையவனைக் கண்டான். தன்னுடைய உதவியை வேண்டித் தன்னை அழைத்தனன் போலும் என்று நினைத்து, அம்மனிதனை நோக்கி நடந்து, அவனருகே வந்தான். அருகில் வந்து உற்று நோக்கினவுடன் ரிப் ஆச்சரியமும் பயமும் அடைந்தான். வந்தவனோ கிழவன்; அவனுடைய உடை மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருந்தது; முதுகில் மது நிறைந்த ஒரு தோற்பையைச் சுமந்திருந்தான். ரிப் அருகே வந்ததை உணர்ந்து, தன் சுமையைச் சற்றுத் தாங்கி உதவுமாறு சைகை செய்தான். இந்தக் கிழவனைக் கண்ட ரிப் தன்னையறியாமலே மெய் சிலிர்த்து, பதில் ஒன்றுங் கூறாமல் அவனுக்குதவினான். கிழவனும் அவனுமாக, மாறி மாறி, அத்தோற்பையைச் சுமந்துகொண்டு, அம்மலைச் சிகரத்திற்கு வந்து, அங்கிருந்து ஒரு பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றார்கள். அக்கிழவனுடைய விருத்தாந்தத்தையும், அந்த அந்திவேளையில், அக்காட்டில், மலைநடுவில், அப்பையோடு அவன் என்ன முகாந்தரத்திற்காக வந்தானென்பதையும் கேட்க வேண்டுமென்று, ரிப் மிகவும் ஆவலுள்ளவனாயிருந்தாலும் அக்கக் கிழவனுடைய தோற்றத்தைக் கண்டு, மனம் நடுங்கி, ஒன்றுங் கேளாமல் கூடவே நடந்தான்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

---

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**இந்தியாவிற் காகிதத்தொழில்.**—1911-ம் வருஷத்தில் ஏற்பட்ட கணக்கின்படி இந்தியாவில் எட்டுக் காகிதத் தொழிற் சாலைகளிருக்கின்றன. அவற்றிலிருந்து 6 கோடிப் பவுண்டுக் காகிதம் உற்பத்தியாகிறது. அத்தொழிற்சாலைகளில் 4600 பேர்கள் வேலை செய்கின்றனர். இந்தியாவுக்கு இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, பெல்ஜியம் முதலிய நாடுகளிலிருந்து 118 லக்ஷரூபாய் மதிப்புள்ள காகிதமும் அட்டைகளும் வருகின்றன அவற்றில் இங்கிலாந்திலிருந்து 68 லக்ஷரூபாய் மதிப்புள்ள காகிதம் வருகின்றது. ஜெர்மனியிலிருந்து 20 லட்சரூபாய் மதிப்புள்ள காகிதமும், ஆஸ்ட்ரியாவிலிருந்து 10 லட்சரூபாய் மதிப்புள்ள காகிதமும், பெல்ஜியத்திலிருந்து 5 லட்சரூபாய் மதிப்புள்ள காகிதமும் இந்தியாவுக்கு வருகின்றனவாம்.

***

**பூனாவிலுள்ள கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷன்.** இப்பொழுது பூனா நகரத்தில் கட்டப்படும் கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷனிலிருந்து கெயிரோ மார்க்கமாக லண்டனுக்குத் தந்தியனுப்பி ½ மணி நேரத்திற்குள் மறுமொழி யறியலாமாம். யுத்த காலங்களில் இது மிகவும் பயன்படுவதாமென்பது வெளிப்படை; வேறொரு தந்தி வாங்கும் ஸ்டேஷன் ஏற்படுமாயின் ஷை பூனா ஸ்டேஷனிலிருந்து ஒரு நிமிஷத்திற்கு 75 வார்த்தைகள் வீதம் அனுப்பலாமாம்.

***

**ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்குத் தீப்பெட்டிகள் அனுப்பிவரும் முக்கியமான தேசங்கள்.**—ஜப்பான் 66,72,560 குரோஸ்கள்; ஸ்வீடன் 33,51.684; ஆஸ்டிரியா 12,02,082; நார்வே 8,18,524; பெல்ஜியம் 2,79,812; ஜெர்மனி 1,84,367; ஸ்ட்ரெயிட்ஸ் ஸெட்டில் மெண்ட்ஸ் 79,327; மற்றத் தேசங்கள் 1,63,471. ஆக 1.27,51,827 குரோஸ்கள் மேற்குறிப்பிட்டிருக்கும் தேசங்களிலிருந்து நம் இந்தியாவிற்கு சென்றவருடம் ஏப்ரல் மாதமுதல் இவ்வருடம் பிப்ரவரிமாதம் வரை 11 மாதங்களில் இறக்குமதியாயிருக்கின்றன.

***

**கவர்ன்மெண்டு கிராண்டு.**—புதிய ஸ்கூல்களை ஸ்தாபிப்பதற்கும் இப்பொழுதிருக்கும் எலிமெண்டரி ஸ்கூல்களிலுள்ள உபாத்திமார்களின் தொகையை அதிகப்படுத்துவதற்கும் கவர்ன்மெண்டார் 147922 ரூபாயை லோக்கல் போர்டு முனிஸிபல் ஸ்கூல்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும்படியாய் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

---

['விவேக போதினி' அனுபந்தம்]

Supplement to the "Viveka Bodhini"



ஆஸ்ட்ரியச் சக்ரவர்த்தி



ஜர்மன் சக்ரவர்த்தி



பெல்ஜிய நாட்டரசன்

## CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | துலு | இங் | தமிழ் | வார | ஆநந்தஹு ஐப்பசிமூ { சாலிசகம் 1836 கலியப்தம் 5015 } பசலி 1324 கொல்லம்-1090 } 1914ஹு அக்டோபர்மூ—நவம்பர்மூ |
|---|---|---|---|---|---|
| ரசு | 26 | 17 | 1 | சனி | திர 26-55, உத 42-10, பிரா 13-3, வணி 26-55, திவி 2-24, அக 29-32, துலாரவி 2-13, அனு 4, சுக் 18-0, சூன்ய திதி துலாவிஷு ஆலயசனி பிரதோ நரகசதுர்தெசி மா சி மந்திர தீபம் சூன்யார்கம் |
| பு | 27 | 18 | 2 | ஞா | சது 21-37, ஹஸ் 38-31, மா 5-53, வை 52-34, சகு 21-37, திவி 1-53, ரா 27-42, புதவக்ரம் 55-7, திதித்வயம் தீபாவளி கேதாரவிரு வை சிரா லக்ஷ்மி கு பூ சர்வ அமா. [அமா பிண்டபிய இஷ்டி மழை 2-க்குள் |
| செ | 28 | 19 | 3 | திங் | ● அமா 15-57, சித் 34-33, விஷ் 50-43, நா 15-57, சே 1-12, ரா 18-10, விசா 1 செ 56-42, பிரததிதி சோம |
| ரபு | 29 | 20 | 4 | செ | பிர 10-4, சுவா 30-26, பிரி 42-56, பவ 10-4, ரா 12-59, கார் சுத் சித் 4 ரவி 22-13, பச்சாதஸ்தபுத 55-7, சுவா 3 வக்புத 6-0, சந் தரி பலி பிர கோவஸ்த பூ பிராகுதுதியா. |
|  | 1 | 21 | 5 | புத | துதி 4-13, திரு 54-12, விசா 26-22, ஆயு 35-13, கௌ 4-13, ரா 6-17, அக 29-25, மழை 4-க்குள். |
| சு | 2 | 22 | 6 | வியா | சது 53-8, அனு 22-35, ஸௌ 27-47, வணி 25-46, ரா 6-25, கே 1 சுக் 5-8, சது விரு கரிநாள். |
| ர | 3 | 23 | 7 | வெ | பஞ் 48-23, கே 19-19, சோ 20-47. பவ 20-45, ரா 3-18. சுவா 1, ரவி 42-13, ஸ்கந்தபஞ்சமி. [ஸ்கந்தசஷ்டி. |
| செபு | 4 | 24 | 8 | சனி | சஷ் 44-27, மூல 16-43, அதி 14-19, கௌ 16-25, திவி 12-43, ரா 10-27, விசா 2 செ 47-0, சுவா 2 வக்புத 7-8, |
| கு | 5 | 25 | 9 | ஞா | சப் 41-24. பூரா 14-54, சுக 8-28, கர 12-55, ரா 5-16. அக 29-22, விர்ச்சிகாய 51-16, குருவக்ரநில 43-7, சப் விரு |
|  | 6 | 26 | 10 | திங் | அஷ் 39-28, உத் 14-4, திரு 3-22, சூல 55-49, பத் 10-26, திவி 24-7, சிர உப சிலவிடங்களில்காற்றதிகம். [கல்பாதி. |
| ரபுசு | 7 | 27 | 11 | செ | நவ 38-46, திரு 14-25, கண் 56-4, பா 9-7. திவி 24-40, சுவா 2, ரவி 2-13, சுவா 1 வக்புத 34-20, கே 2 சுக் 56-33 |
|  | 8 | 28 | 12 | புத | தச 39-17, அவி 15-58, விர் 53-52, தை 9-1, ரா 5-28, மழை 7-க்குள். [கிரதயுகாதி. |
| செ | 9 | 29 | 13 | வியா | ஏகா 41-5, சத 18-44, துரு 52-42, வணி 10-11, ரா 6-33, அக 29-16. விசா 3 செ 33-9, சர்வஏகா உத்தானேகா |
| ர | 10 | 30 | 14 | வெ | துவா 44-9, பூர 22 46, வியா 52-28, பவ 12-37, ரா 19-31. சுவா 3 ரவி 22-13, க்ஷீராம்திபூ சுவா ரோம. [கோபத்ம பூர். |
| பு | 11 | 31 | 15 | சனி | திர 48-11, உத்தி 27-49, ஹர் 52-55, கௌ 16-10, தியா—0—0 சித் 4 வக்புத 57-30, சனிப்ரதோ. |
|  | 12 | 1 | 16 | ஞா | சது 52-58, ரேவ 33-39, வஜ் 53-55, கர 20-34, திவி 0-41, வைகுண்ட சதுர்தெசி. |
| ர | 13 | 2 | 17 | திங் | ○ பௌ 58-7, அசு 39-56, விஷ் 55-10, பத் 26-32, ரா 0-3, அச 29-10, சுவா 4 ரவி 41-58, அன்னபிஷேகம் தக்ஷஸா ம கார் ஸ்நா பூர் ஆ சா மா வை. |
| செபு | 14 | 3 | 18 | செ | பிர 60-0, பர 46-20, விய 56-28, பா 29-3, திவி 6-30, கார் பகு விர்ச்சிகசெ 2-24, பிராகு தயபுத 55-7, இஷ்டி விய சிரா. |
|  | 15 | 4 | 19 | புத | பிர 3-19, ✱ கார் 52-29, வரி 57-29, கௌ 3-19, திவி 19-24, கார் உப மழை 5-க்குள். |
| சு | 16 | 5 | 20 | வியா | துதி 8-4. ரோ 57-59 பரி 57-57, கர 8-4, ரா 7-3, கே 3 சுக் 44-44, கரிநாள். |
| ர | 17 | 6 | 21 | வெ | திரு 12-3, மி 60-0, சிவ 57-44, பத் 12-3. திவி 13-2, அக 29-5, விசா 1 ர 0-43, சங். ச |
| செ | 18 | 7 | 22 | சனி | சது 15-3, மிரு 2-29, சித் 56-33, பா 15-3, திவி 24-39, அனு 1 செ 31-33. |
| புசு | 19 | 8 | 23 | ஞா | பஞ் 16 46, திரு 5-50, சா 55-20, தை 16-46, ரா 8-0, புதவக்ரநில 55-7, சுக்ரவக்ரம் 40-7, சஷ்டிதிதி. [சப்திதி சிலவிடங்களில் மழையினல் சௌக்யமுண்டு. |
| ர | 20 | 9 | 24 | திங் | சஷ் 17-12, புன 7-56, சுப 51-11, வணி 17-12, திவி 28-17, விசா 2 ரவி 19-28. |
|  | 21 | 10 | 25 | செ | சப் 16-26, பூச 8-52, சுப் 47-1, பவ 16, 26, ரா 11-41, அக 29-2, அஷ்டமிதிதி காளாஷ்டமி. |
| பு | 22 | 11 | 26 | புத | அஷ் 14-26, ஆயி 8-36, பிரா 41-59, கௌ 14-26, ரா 8-54, சுவா கா ரிசுபுத 30-0, மழை 3-க்குள். |
| ரசெ | 23 | 12 | 27 | வியா | நவ 11-21, மக 7-13, மா 36-19, கர 11-21, திவி 26-28, விசா 3 ரவி 37-36, அனு 2 செ 1-4. |
| ரசு | 24 | 13 | 28 | வெ | தச 7-23, பூர 4-59, வை 29-34, பத் 7-23, திவி 22-0, விக்கிரமசகம் 19-71, கே 2 வக்சுக் 36-40, ஸ்மாஏகா வைசிரா. |
|  | 25 | 14 | 29 | சனி | ஏகா 2-42. துவா 54-41, உத் 2-3, ஹ 56-28. விஷ் 22-32, பா 2-42, திவி 21-50, அக 28-56, துவாதி வை ஏகா. |
| ர | 26 | 15 | 30 | ஞா | திர 51-37, சித் 54-28, பிரி 15-5, கர 24-30, திவி 17-10, விர்ச்சிகரவி 56 20, துலா ஸ திரயோதிதி பிரதோ கட முழுக்கு. |

|  |  |  |  |
|---|---|---|---|
|  |  |  | சனி |
| ராகு. | 1௦ விர்ச்சிக செ |  |  |
| குரு. |  |  | கேது |
|  | சுக் | ரவி செ பு |  |



# விவேக போதினி

தொ.7.] ஆனந்தஹு புரட்டாசிமீ [பகுதி. 4.

## மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

### 3. பக்தியோகம் (தொடர்ச்சி)

பக்தியோகம் இன்னது என்பது நன்கு விளக்கப்பட்டது முன் பாகத்தில். பக்தி யோகநிலையை அடைவதற்கு (1) மூடமாயிருப்பினும் நிஷ்காம்யமாயிருத்தல் வேண்டும்: (2) ஈசன் விஷயத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி இருக்கவேண்டியதில்லை: (3) வைதிக கர்மானுஷ்டானம் இல்லாது தனித்திருக்கக் கூடாது: (4) விக்ரஹாராதனை ரூபமாகத் தானிருக்கவேண்டும்: (5) சில ஸமயங்களில் வெளிப்பட்டும் வரலாம்: (6) ஈசனுடன் ஒருவித ஸம்பந்த பாவனையால் நிகழவேண்டும் அதிதீவ்ரமாக. (7) தடைகள் தாக்கலாகாது என்ற ஆவல், ஈசன் வழிபாட்டை தன் வழிப்படி. உத்ஸாஹத்துடன் செய்வதையே வாழ்க்கைத் தொழிலாக மதித்து நடத்துவது ஆகிய இவ்விருவிதமாக இருக்கும் இந்த பக்தியின் தன்மை, என்று விஸ்தாரமாக விளக்கப்பட்டது.

(1) இதிலிருந்து பொதுவாக ஒரு சங்கை உண்டாகலாம். இந்த பக்தியைப் பார்த்தால் ஒருவித ஸாதாரணமான மனோநிலையாகத் தானே இருக்கிறது! இதைப் பக்தியோகம் என்று மேன்மைப்படுத்திக் கூறவேண்டியதில்லையே என்னலாம். உண்மையை ஆழ்ந்து விசாரிக்குங்கால் இந்த அபிப்ராயம் தவறு என்பது நன்கு விளங்கும். இந்த பக்தி மூடமாயினும் நிஷ்காம்யமாக இருத்தல் வேண்டும் என்பதில்தான் அடங்கியுள்ளது இந்த சங்கைக்கு உத்தரம். இதை நன்குவிளக்க நமது சாஸ்திரங்களில் இரண்டு பதங்கள் மனதின் பற்று விஷயத்தில் உபயோகிப்பதுண்டு. அவையாவன ஆஸக்தி, ஆச்ரயம் என்பவைகளே. பொதுவாக எவ்வளவு கற்றுத் தேர்ந்தவர்களுக்கும் அவர்கள் செய்யும் தொழில்களில் இவை எப்பொழுதும் இரண்டுபட்டே இருக்கும். உத்யோகம் வ்யாபாரம் முதலியவை செய்யும் ஜனங்களுக்கு ஆச்ரயம் தமது தொழில்கள்: ஆஸக்தி, தன் குடும்பம்தான். இந்தக்குடும்பமும் தானும், உள்ளவரையில் ஸுகமாக இருந்துகாலம்தள்ளிவிடவேண்டும் என்பதிலேயே ஆஸக்தி ஒவ்வொருவனுக்கும்: இதுநிறைவேற, தொழில்களை அவர்கள் ஆச்ரயிப்பதே வழக்கமாகிவிட்டது. இப்படி உலக இயற்கையெல்லாம் இருக்க, பரமபுருஷார்த்தங்களைத்தரும் தன்மை வாய்ந்த கடவுள் வழிபாடு (ஈச்வரபக்தி) விஷயத்திலும் இது நம்மை விட்டு விலகுவது மிகக்கடினம். அங்கும் இந்த ஆஸக்தி ஆச்ரயபேதம் வந்து சேர்ந்து முதலில் காம்ய பக்திக்குத்தான் இடம் ஏற்படும். இது வெகுகால கர்மயோகம், பக்தி ஆகிய இவைகள் பழக்கத்தால்தான் நிஷ்காம்யமான யோகநிலையை அடையவேண்டும். இந்த நிலையில் ஆஸக்தி ஆச்ரயம் இரண்டும் ஒன்றுபட்டுவிடும். இதில் ஈசன் வழிபாடுதான் ஆச்ரயமாகும்: அவனிடம் உள்ளபடி ஈடுபட்டு நிற்பதேதான் ஆஸக்தியாகிவிடும்: மற்றைய ஆஸக்தி ஆதாரமாக விருந்ததெல்லாம் ஈசன் பாரம் என்று ஒதுக்கப்பட்டு விடும். இந்த ஆஸக்தி, ஆச்ரயம் ஒருமைப்பாட்டின் சிறப்

யைத்தான் ஸ்ரீக்கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு தன் ஸ்வரூபச் சிறப்பைக் கூறத் தொடங்கும் பகவத் கீதை 7-ம் அத்தியாய ஆரம்பத்தில்

என்னிடத்துப் பற்றும் இதயம் தனைப்பெற்றுச்
சொன்னதொரு யோகத் துறைமருவி—என்னையே
சார்ந்துநீ முற்றுமெனைச் சந்தேகம் அற்றினிது
தேர்ந்திடும்வண் ணம்கேள் சிறந்து.

என்று எடுத்து நன்கு விளக்குவதாகக்கூறி, இந்த ஒருமைப்பாடு (அதாவது ஆஸக்தி, ஆச்ரய ஒருமைப்பாடு அல்லது பற்று, சார்புச் சேர்க்கை) ஸித்திபெற முயலுவது மானிடருள் அருமை என்பதை

ஆயிரவர்க்குள் ளொருவன் ஆரியஸித்திபெற
நேயமுடனே முயல்வன் நீணிலத்தில்—

என்று கூறி, இதுநிலைத்து ஒருவன் பக்தி, பக்தியோகமாவதின் சிறப்பை நன்கு விளக்குகிறார். நாம்செய்யும் ஸாதாரணபக்தி எவ்வளவு தீவ்ரமாக இருப்பதாகத் தோன்றியபோதிலும், அது பக்தியோகமே ஆகாமலிருக்கலாம். நாம் பற்றுவிட்டுச் செய்யும் கர்மங்களெல்லாம் கர்மயோகமாகிவிடுமா? அவை எப்படி சாஸ்திரீயமாயும் ஒழுங்காயும் உள்ளவைகளாயின் கர்மயோகங்களாகுமோ அதுபோல சாஸ்திரீயமாயும் ஒழுங்காயும் ஏற்பட்டுள்ள காம்ய பக்தி முதிர்ச்சியில் ஆஸக்தி ஆச்ரயம் ஒன்றுபட்டுவிடும் நிலைவந்தால்தான் பக்தி எவ்வளவு மூடமாயினும் பக்தியோகமாகும். ஆகவே பக்தியோகம் நிஷ்காம்ய மூடபக்தி என்று கூறியதால் இந்த யோகத்திற்கு ஒருவிதக் குறைவும் ஏற்படாது.

(2) பக்தியோகத்திற்கு ஈசன் விஷயத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி வேண்டியதில்லை என்று கூறப்பட்டதே! இது எப்படிப் பொருந்தும்? என்ற சங்கை உண்டாகலாம். இதனால் தகுந்த ஈசன் விஷய உணர்ச்சி இல்லாது ஆஸக்தி ஆச்ரயம் கூடுவதுகூட கஷ்டமாக இருக்காதா என்று கூட கிளைபாய்ந்து விடலாம் இச்சங்கை. ஒரு விஷயத்தில் ஈடுபட்டு மனச்சஞ்சலம் ஓய்ந்து நிற்க அவ்விஷய பூர்ண உணர்வுவேண்டுவது அவசியமில்லை: சில விஷயத்தில் வ்யவஹரிப்பதற்குக் கூட இந்தப் பூர்ண உணர்வு அனவசியம்தான். ஒருவன் நீந்தவேண்டுமாகில், த்ரவ தத்துவ சாஸ்திர ஒழுங்குகள் உணர்ந்துதான் ஆகவேண்டுமா? ஒரு படம், பதுமை இவைகளைக்கண்டு ஆனந்திப்பதற்கு அவைகளைச் செய்யும் திறமையும், அதன் அங்க அமைப்புக்களின் நுட்ப உணர்ச்சியும் அவசியம்வேண்டுமா? இயற்கையாக அமைந்துள்ள தோற்றங்களைக் கண்டு நாம் பிரமித்துப்போய் மனம் ஓய்ந்து நின்று விடுவதில்லையா? ஒருபுறம் ஒருமலை வீழருவியும், ஒருபுறம் பச்சைப்பசேல் என்ற மரக்கூட்டங்களும், ஒருபுறம் துள்ளிவிளையாடும் மானினங்களும், ஒருபுறம் இனிப்பாகக் கூவும் பலவர்ணப் பறவைகளும், ஒருபுறம் செவ்வானச் சிறப்புக் கிடையில் தலைநீட்டும் ஸூர்யனும், எதிர்ப்புறம் ஓடிப்பரந்துள்ள மைதானமும் அதன் முடிவில் நீலமாகப் பரந்துள்ள கடலும் அமைந்திருக்கும் இயற்கைத் தோற்றத்தைக்கண்டு எண்ணமிழந்து நிலைத்த மனத்துடன் தூண் போல் நிற்காதவர் உலகில் உண்டா! இங்கு கூறப்பட்ட விஷயங்களின் நுட்ப உணர்ச்சி இந்த ஈடுபாட்டிற்கு அவசியமா? நமது இந்திரிய மனுதிகளால் ஒருவாறு உணரும் திறனிருந்தால் போதும், ஒரு சிறந்த விஷயத்தில் மனங் குவிந்துவிட. நமது தாய் தகப்பன்மார்களை முன்னர் நன்றாக உணர்ந்து பின்புதான் நமக்கு அவர்களிடம் விருப்பம் உண்டாகிறதோ? இவைகளை எல்லாம் பற்றி ஆராய்ந்து பார்த்தால் ஒன்றில் ஈடுபட அதைப்பற்றிய நுட்ப



உணர்ச்சி வேண்டியது அவசியமில்லை: அதைப் பற்றிய ஒருவாறான உணர்வும், அது உள்ளது என்றமாறா நிச்சயமும்தான் வேண்டும். ஈசன் விஷயத்தில் அவர் இருப்புவிஷய ஸந்தேஹம் பக்தியோக நிலையிலிருக்க இடமே இல்லை: ஒருவாறான உணர்வும் முன்படியால் ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த மனோநிலை நிலைப்பதற்கு வேண்டிய அங்கங்களிருப்பதால் ஆழ்ந்த ஆராய்ச்சியில்லாமலே ஈசன் வழிபாடு யோகமாக நிகழ இடம் உண்டு.

(3) வைதிக கர்மானுஷ்டானமில்லாது தனித்திராது பக்தியோகம் என்றுள்ளதை மறந்து அலக்ஷ்யம் செய்வதால்தான் போலிபக்திகளை எல்லாம் பக்தியோகங்களாக மதித்து இக்காலத்தவர் பலர் மோசம் போகின்றனர். இந்த குதர்க்கக் கொடுமையும் இதனால் மோசம் போவோர் இஹபரமிரண்டினிலும் புகுந்து திண்டாடும் கொடிய நிலைகளையும்பற்றிக் கூறினால்தான் இந்த பாகத்தை நன்கு ஆராய்ந்ததாகும். வைதிக கர்மாக்கள் பொதுவாக வர்ணாச்ரமம், ஸ்திரீ புருஷநிலை இவைகளை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளன. இவைகளைப்பற்றி வேதங்களில் குறிக்கப்பட்டனவாயும், ஸ்மிருதி புராணாதிகளில் எடுத்து விஸ்தரித்து உதாரணங்கள் மூலமாய் விளக்கப்பட்டதாயும் உள்ள கர்மாக்களே வைதிககர்மா எனப்படும். இவைகளை ஒருவன் அனுஷ்டியாது பக்தியோகத்தை ஸரிவர அணுகவே முடியாது. மனம், வாக்கு, காயம் இவைகளின் வழியாக நடைபெறும் கர்மா ஒன்றுகூட இல்லாது ஒரு க்ஷணங்கூட இருக்கமுடியாப் பரிதாபத் திண்டாட்ட நிலையில் மானிடர் அமைந்து கிடக்கின்றனர். இந்த நிலையைவிட்டு அவர்களைக்கிளப்பி மனம்போன போக்கே போகாது தடுத்தேற உதவியாக விருப்பன வைதிக கர்மாக்கள். அவைகளை ஈசாஞ்ஞைப்படி நடப்பதாக எண்ணி அனுஷ்டித்தால்தான் மனச் சஞ்சலம் குறைந்து திண்டாட்டம் அடங்கிவரும். இந்த அனுஷ்டானமில்லாமல் ஈசனிடம் மூடமாகக்கூட நிலைப்பதற்கு வேண்டிய உணர்வு பாகம் ஏற்படவே மாட்டாது. ஆகவே, பக்தி நிலைபெற வைதிக ஸத்கர்மங்களை யோகமாக அனுஷ்டிப்பது அவசியமே. வைச்ய, ஸ்திரீ, சூத்திரர்களுக்கு இந்தக் கர்மானுஷ்டானம் மிகக் குறைவாக இருப்பதால், பொதுவாக பகவான் கீதை IX—ம் அத்யாயம் 26,27-ம் ச்லோகங்களில்

யாவனே பக்தியொடும் என்பொருட்டுப் பச்சிலையும்
பூவும் நறுங்கனியும் பூம்புனலும்—ஈவனோ
தூமனத்தன் அன்னோன் துலங்கக் கொடுத்தவற்றை
நான்மகிழ்ந்து கொள்ளுவனே நன்கு.

யாதொன் றியற்றிடினும் யாது நுகர்ந்திடினும்
யாதொன்றை ஓமித்தங் கீந்திடினும்—யாதோர்
தவஞ் செயினும் குந்தி தவப்புதல்வ செய்வாய்
உவந்தெனக்கிங் கர்ப்பணமா ஓர்ந்து.

என்று இருவகைப்படுத்திக்கூறியுள்ளார். முன்கூறியதற்கு முறையே த்ரௌபதி (துர்வாஸ மானபங்க ஸமயம்), கஜேந்திரன், சபரி, ரந்திதேவர் ஆகிய இவர்களே திருஷ்டாந்தம். இந்த ச்லோகம் பொதுவாக வைதிககர்மம் குறைந்துள்ள பெண்டுகள் முதலியோர்கள் தமது ஸ்வல்ப கர்மாக்களையும், பக்திஸம்பந்த கர்மாக்களையும் கர்மயோகமாகச் செய்தால்தான் பக்தியோக நிலைக்கு வரலாம் என்பதை உணர்த்த வந்தது. அடுத்த ச்லோகமோ வைதிக கர்ம விஷயம் ஒழுங்காயும் விரிவாயும் ஏற்பட்டுள்ள க்ஷத்ரிய ப்ராஹ்மண வர்ணத்தாருக்கு கர்மயோகத்தால்தான் பக்தியோகத் தொடக்கம் ஏற்படும் என்பதைக் காட்ட வந்தது. இதற்கேற்பவே, அந்த அத்தியாயத்திலேயே பகவான் 32,33-ம் ச்லோகங்களில் இந்தக் கருத்தை இரண்டுவகைப் படுத்தியே வெளியிடுகிறார்:—

பெண்டிரும் வாணிகரும் பீடுதவிர் சூத்திரரும்
கொண்டிடுதி ஈனக்குலத்தினரும்—அண்டியெனை
மிக்காரச் சேவித்து மேலான நற்கதியிற்
புக்கார வாழ்ந்திடுவோர் போந்து.

புண்ணிய நற்பூஸுரரும் போதமலி ராஜருஷிக்
கண்ணியரும் மேலாம் கதியதனை—நண்ணுதலைச்
சொற்றிடலிங் கென்னே துயர்மலிபுன் வாழ்விதனைப்
பெற்றுளநீ நன்கெனையே பேண்.

ஆகவே எல்லோருக்கும் அவரவர்கள் வரையில் உள்ள வைதிக விஹித கர்மானுஷ்டானம் கர்மயோகமாக நடைபெறாது பக்தியோக நிலை வரவேமாட்டாது: வைச்ய, ஸ்திரீ, சூத்திரர்களுக்குக் கர்மம் குறைவு; க்ஷத்ரிய ப்ராஹ்மணர்களுக்கு அதிகம் இவ்வளவுதான்.

இந்த இரு ச்லோகங்களையும் இக்காலத்தவர் எடுத்துக்கொண்டு கடவுள் வழிபாடு நடத்துங் காலத்து வைதிககர்மானுஷ்டானத்தையும்ஸ்மிருதி ஒழுங்கையும் கவனிக்கவேண்டியதில்லை: இப்படி மனங்கூசாது ஒழுங்குக்கு விரோதமாக நடப்பதே பக்தி முதிர்ச்சியைக் காட்டும் என்று குதர்க்க அபிப்ராயம் கொள்ளுகின்றனர். இதோடு நிறுத்தாது, வைதிக கர்மகாலமாகிய ஸந்த்யா காலத்தில் பஜனைகளும், ஸ்மிருதி விரோதமாகவும், ஜாதிஒழுங்கு,ஸ்மார்த்த சௌச ஒழுங்கு இவைகளுக்கு விரோதமாகவும்,பக்திபாவசத்தால் மேல்விழுந்து கூத்தாடுவது, எச்சில் கலப்பது, எச்சில் இலையில் புரளுவது முதலிய துர் அப்யாஸங்களிலிறங்கி பக்தியோகானுஷ்டானம் செய்யப் புகுந்து விடுகின்றனர்! இந்த அலங்கோலத்தை சாஸ்திரங்கள் எப்படி பக்தி என ஒப்புக்கொள்ளும்? இப்படிச் செய்வதால் கொஞ்சம் வரக்கூடிய பக்தி கூடப் பறந்தோடிப் போய்விடும்: பின்னர் அல்லவா இதுபக்தியோகத்தில் சேருவதற்கு? இந்த பக்தி வீண் மனக்கொதிப்பாகத்தான் முடியும்: முன்பின்னுள்ள நடவடிக்கைகளை ஸரிவர மாற்றி, அப்பாஸியை மோக்ஷவழி நடக்கும்படி தூண்டிவிடாது. உலகத்தில் சில காலம் நல்ல பக்தன் என்ற பெயரை உண்டாக்கி, மறைவாய் அப்பாஸியைக் கெட்ட காரியங்கள் விடாது செய்துவர உதவிசெய்து, இம்மையில் மாறுப்பழிக்கும் மறுமையில் நரகம்,பூச்சி புழு நாயாதி ஜன்ம அனுபவ துக்கங்களுக்கும் கடையின்றி ஆளாக்கிவிடும். வீண் பஜனை, கூத்து, பாட்டு இவைகளில் முழுகுவது மாத்திரம் வைதிக கர்மானுஷ்டானமின்றி எப்படி பக்தியாகும்? இந்த மனக்கொதிப்பு வைதிக விஷய அச்ரத்தை, வீண் கர்வம், தான் விதிவரம்புக்குட்பட்டவனல்ல என்ற இறுமாப்பு இவைகளை உண்டாக்கி,தான் தாழ்ந்தஜாதியில் பிறந்தவனாயினும் மேல் ஜாதியானைவிடச் சிறந்தவன் என்ற பயனற்ற கொழுப்பைத்தான் அதிகப்படுத்தும்.

இதிலிருந்து வர்ணாச்ரமம் ஸ்திரீ புருஷ வரம்பில் நிலைபெற்று விரிந்துள்ள வைதிக கர்ம அனுதாவால் தத்காலத்தில் நடைபெற்று ஓங்கி வரும் கடவுள் வழிபாடுகள் எல்லாம் பக்தியோகமேயல்லாது காம்ய பக்தியையும் விடத் தாழ்ந்துள்ளனவும் மிக அபாயகரமாயுள்ளனவுமே என்பது வெளியாயிருக்கும். இதற்கு மாறுக ஆழ்வார்கள் நாயன்மார்கள் தாஸர்கள் இவர்கள் உதாரணங்களைக் கொண்டுவந்து வைதிக கர்மானுஷ்டானமின்றி செய்யப்பட்ட பக்தியும் சிறந்தது என்று ஸ்தாபிக்க முயலலாம். இந்தக் குதர்க்கத்திற்கு ஸமாதானத்தையும் மற்றைய பக்தியோக அங்கங்களின் விஸ்தாரத்தையும் மேல் விளக்கிக் காட்டுவோம்.

---



## காங்கோவிலிருக்கும் ஞாம்பர் என்னும் பூர்வ குடிகள்
## THE NGOMBES OF THE CONGO

### பீடிகை

ஆப்பிரிக்காவிலுள்ள ஸ்வாதீன நாடுகளில் காங்கோ என்பது ஒன்று. அந்த நாட்டின் மத்தியில் காங்கோ வென்னும் ஒரு பெரிய நதி ஓடுகின்றது. இந்நதியின் இரு கரைகளிலும் ஸுமார் 350-மைல் விஸ்தீர்ணமுள்ள பிரதேசத்தில் ஞாம்பர் என்னும் ஒரு ஜாதியார் வசிக்கின்றனர். ஞாம்பர் என்றால் "உள் நாட்டார்" அல்லது "புதர்களில் வசிப்போர்" என்று அர்த்தம். இந்த ஜாதியார் தங்களுடைய முகங்களில் தங்களுடைய ஜாதி யடையாளங்களை வரைந்துகொண்டு பார்வைக்கு மிகவும் பயங்கரமாயிருப்பாராதலால் இவர்களை எளிதில் இன்னாரென்று தெரிந்து கொள்ளலாம். இவர்களே காங்கோ நாட்டு ஜனங்களில் நாகரிக மடைந்தவர்களில் முதன்மையானவர்களாம். ஆதலால் இவர்களுடைய நாகரிகமின்னதென்று விசாரிப்பது விநோதமாயிருக்கும்.

### ஞாம்பரது சில சடங்குகள்

ஞாம்பர் தங்கள் குழந்தைகளுக்குப் பிறந்தவுடன் செய்யும் சடங்குகளில் முக்கியமானவையிரண்டு: அவைகளில் மேற்குறித்த ஜாதியடையாள மிடுதல் ஒன்று; மற்றது அக்குழந்தைகளின் தலைகளைக் கட்டுவதாம். தலையையிறுக்கிக் கயிற்றினாற்கட்டி நெற்றியில் ஆழ்ந்த தழும்புகளைப் பெறுவதே இந்த ஜாதியார் தங்களுடைய உயர்ந்த குலத்திற்கும் வளர்ப்பிற்கும் அறிகுறியாகக்கொள்வது. ஆதலால் குழந்தைப் பருவமுதல் யௌவனம் மாறும் வரை, தாய்மார் தங்களுடைய குழந்தைகளின் தலைகளை இடைவிடாமல் கட்டிவருவார்கள். ஆகவே நெற்றியில் விசேஷமாகத் தழும்பில்லாதவரெல்லாம் தாழ்ந்த குலத்தினரென்றும், இளமையில் நன்கு வளர்க்கப் பெறாதவரென்றும் கருதப்படுவதுமன்றி தங்களுக்கு யுக்த வயது வரும்பொழுது கல்யாணம் செய்து கொள்ளத் தகுந்த வரன்களுங் கிடையாமல் தவிப்பார்களாம். ஆனால் தற்காலத்தில் ஐரோப்பிய நாகரிகம் இந்தப் பிரதேசத்திலும் பரவி வருவதால் இந்த ஜாதியார் இச்சடங்குகளிரண்டையும் முன்போல் அவ்வளவு பிடிவாதத்துடன் நிறைவேற்றி வருவதில்லை. ஆனாலும் இந்தச் சடங்குகளிரண்டும் அதி புராதனமாகையால் இவைகள் கட்டோடொழிவதற்கு வெகு காலம் பிடிக்கும்.

### ஞாம்பரது பட்டணங்களும் கிராமங்களும்

இந்த ஜாதியாருடைய பட்டணங்களும் கிராமங்களும் விசேஷமாக நதிக்கரைகளினின்றும் வெகு தூரமான இடங்களிலும் மேட்டு நிலங்களிலுமேதான் கட்டப்பட்டிருக்கின்றன. இவை மிகவும் ஒழுங்காக சதுரமாகவாவது முட்டை வடிவமாகவாவது கட்டப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியே ஒரு சிற்றரசனும் பல கிராமங்கள் சேர்ந்த ஒரு பிரதேசத்திற்கு ஒரு பெரிய அரசனும் உண்டு. இதுவே புராதன கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் அடையாளம். மேற் சொல்லியபடி ஐரோப்பிய நாகரிகம் பரவி வருவதால் தற்காலம் இந்நாட்டில் பட்டணங்கள் பலவிதமாகக் கட்டப்பட்டு வருகின்றன. அவைகளிற் சில வெகு நீளமாகவும், வீடுகளின் ஸமீபத்தில் புகையிலைத் தோட்டங்களுள்ளனவாகவும், படிப்படியான வீதிகளுடையனவாகவு மிருக்கின்றன. மற்றுஞ் சில ஒரே வீதியுள்ளனவாய் அனேக மைல் விஸ்தீர்ணமுள்ளனவாயு மிருக்கின்றன. இந்தப் பட்டணங்களெல்லாம் துரைத்தனத்தாரின் உத்தரவின்படி யாத்திரிகர்களின் அனுகூலத்தை யுத்தேசித்துக் கட்டப்பட்டு வருபவையாம்.

### வ்யவஸாயம்

காங்கோவில் ஞாம்பர்தான் பயிரிடுங் குடிகள். இவர்கள் தங்களுடைய விளைபொருள்களைத் தங்களை யடுத்து நதியோரங்களில் குடியிருக்கும் செம்படவர்களுக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து மீன் வகைகளைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

சாதாரணமாய்ப் புருஷர்கள் காடுகளையழித்து மரங்களையும் புற்பூண்டுகளையும் வெட்டிவிடுவார்கள். பின்பு அந்நிலங்களைப் பண்படுத்துவதும் உழுவதும் தோண்டுவதும் சோளம் வாழை புகையிலை முதலிய பயிர்களை யுண்டாக்குவதும் ஸ்திரீகளுடைய கடமையாம்.

## ஞாம்பரது பழங் கதைகள்

காங்கோ நாட்டுக் குடிகள் ஒருவருக்குமே தங்களுடைய பாஷைக்கென்று அக்ஷரங்கள் இல்லை. ஆதலால் அவர்கள் தங்களுடைய புராதன வரலாறுகள் யாவற்றையும் கர்ண பரம்பரையாய்ச் சொல்லிவருகிறார்கள். இந்த வரலாறுகளை அவர்கள் தங்களது இளம்பிராயத்தில் தாம் பெற்றோரிடம் கேட்டபடியே சிறிதும் சொற்பிறழாமல் தங்களது குழந்தைகளுக்குச் சொல்லிவருகிறார்கள். வேலை யொழிந்த தினங்களில் இராக்காலங்களில் சிறுவரும் சிறுமியரும் கணப்புகளைச்சுற்றி யுட்கார்ந்துகொண்டு தங்களுடைய மூதாதைகளின் விருத்தாந்தங்களை ஆவலுடன் தம்மிற் பெரியரிடம் கேட்டு ஆனந்திப்பதை இன்றுங் காணலாம். அவர்கள் சொல்லிவரும் கதைகளில் மிக வேடிக்கையாயிருப்பனவற்றிற் சிலவற்றை இங்கே யெழுதுகிறோம்.

1. மாங்கோ, ண்டாங்கோ அல்லது உலகத்தில் முதன்முதல் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்திரீ புருஷர்களின் வரலாறு:—

ஆதிகாலத்தில் ண்டாங்கோ என்ற ஒரு மனித னிருந்தான் அவனுக்கு மாங்கோ வென்ற ஒரு மனைவியிருந்தாள். அவர்கள் வெகுகாலம் மேலுலகமாகிய ஸ்வர்க்கத்தில் வசித்து வந்தனர். ண்டாங்கோவுக்கு அநேக நாய்களிருந்தன. அவன் அவைகளுடன் ஸ்வர்க்கத்தைச் சேர்ந்த வனங்களில் ஓயாமல் வேட்டையாடி வருவது வழக்கம். (இக்காலத்தும் ஞாம்பர் வேட்டையாடுவதில் பிரஸித்தி பெற்றவர்களே). இப்படி வேட்டையாடி வருகையில் ஒருநாள் இவன் மிகவும் ஆழமான ஒரு குழியினிடம் வந்து சேர்ந்தான். இந்தக் குழியை இவன் இதற்குமுன் கண்டதில்லையாதலால் இது இவனுக்கு மிக்க ஆச்சரியமாகத் தோற்றியது அதைக்குனிந்து பார்த்தான். அப்போது அதனடியில் மிக்க ரமணீயமான ஒரு நாடும் அங்கே கணக்கில்லாத சோலைகளும் ஆறுகளும் இருப்பதைக் கண்டான். உடனே தன் வீட்டுக்குச் சென்று தான் கண்ட புதுமையைத் தன் மனைவிக்கும் தன் சுற்றத்தாருக்குஞ்சொல்லி "அந்த நாட்டுக்கு நாமெல்லாரும் ஒருங்கே போகவேண்டுமென்பது எனது அபிப்பிராயம்" என்றும் சொன்னான். ஆனால் அவனுடைய மனைவியும் அவனுடைய மற்றைய பந்துக்களும் இதற்கு இணங்கவில்லை. அவர்களெல்லாரும் ஒருமித்து "ஓஹோ! இங்கிருக்கும் இஷ்டமித்திர பந்து ஜன பரிவாரங்களை விட்டு நாங்கள் வேறிடம் தேடமாட்டோம். நீ சொல்லும் அந்தப் புது நாட்டுக்கு நாங்கள் வரவே மாட்டோம்" என்று சொல்லி மறுத்துவிட்டார்கள்

இவர்கள் இவ்விதம் மறுத்துரைத்தபோதும் ண்டாங்கோ மாத்திரம் அந்தப் பிரதேசத்திற்குச் சென்று அங்குள்ள அபரிமிதமான துஷ்ட மிருகங்களை வேட்டையாட வேணுமென்று தீர்மானித்தான். இந்தத் தீர்மானத்துடன் அவன் தன்னுடைய நாய்களையழைத்துக்கொண்டு தன்மனைவியிடத்தும் மற்ற உறவினரிடத்தும் விடை பெற்றுக்கொண்டு தான் முன்கண்ட குழியிடம் வந்தான். அங்கே அப்பொழுது ஒரு நீண்ட ரப்பர் கொடியிருப்பதைக் கண்டு அதை அருகிலிருந்த ஒரு மரத்திற்கட்டி அதைப் பிடித்துக்கொண்டு அந்த குழிக்குள் இறங்கினான். வெகுதூரம் இறங்கின பிற்பாடு இப்போது நாம் வஸிக்கும் பூமியின்மேல் காலையூன்றி நின்றான். அப்போது பூமியில் அவனுக்கெதிர்ப்பட்ட காட்சிகளைக் கண்ணுற்று மிகவும் மகிழ்ந்தான். பின்பு தான் கொண்ட காரியமாகிய வேட்டையைத் துவக்கினான். பூமியில் மிருகங்களும் காடுகளும் கணக்கில்லாம லிருந்ததினாலும் ண்டாங்கோ மிகுந்த ஆவலுடன் வேட்டையாடினதினாலும் அவனுக்கு வெகு நாள் வரை சலிப்புத் தோன்றவில்லை. கடைசியாக வேட்டையாடினது போதுமென்று அவனுக்கு ஒருநாள் தோன்றியபொழுது அவன் தான் முதன் முதல் பூமியில் இறங்கின இடத்திற்கு வந்து தனக்கு முன்பு உதவியாயிருந்த ரப்பர் கொடியைப் பிடித்துக்கொண்டே மேலே யேறினான். கடைசியாக விண்ணுலகஞ்சேர்ந்து தன் வீட்டையுமடைந்தான்.

இவன் வீட்டுக்குத் திரும்பிவந்த செய்தி உடனே விண்ணுலகெங்கும் பரவியது. அப்பொழுது இவனுடைய உற்றார், உறவினர், இஷ்டர், இவனுக்குத் தெரிந்தவர், தெரியாதவர் எல்லாரும் இவனிருப்பிடத்திற்கு வந்து இவன் கண்ட அத்புதங்களையும் இவனுக்கு நேர்ந்த சுகதுக்கங்களையும் சொல்லும்படி



வேண்டிக்கொண்டனர். இப்போது ண்டாங்கோ மிகப் பிரஸித்தி பெற்றவனாய் விட்டபடியால் தனது நாட்டாரின் மத்தியில் உயர்ந்த ஆஸனமொன்றி லுட்கார்ந்துகொண்டு, தான் கண்ட அத்புதங்களையும் தனக்கு வாய்த்த நன்மைதீமைகளையும் விஸ்தாரமாய்ச் சொல்லி, விசேஷமாய் அந்தப் புதிய தேசத்தில் சலிக்காமல் வேட்டையாடலாமென்றும் சொன்னான். இவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே இடைக்கிடை இவனைக் கேட்கவந்தோர் 'கொல்' லென்ற சிரிப்பினாலும் ஆரவாரத்தினாலும் அவரவர் அடைந்த சந்தோஷத்தைத் தெரிவித்தனர். ஆனால் அவன் கடைசியாக எல்லாரையும் பார்த்து 'நீங்கள் எல்லாரும் அந்த நாட்டிற்கு என்னுடன் புறப்படுங்கள். அங்கே நம்மெல்லாருக்கும் இடமிருக்கிறது. அது ஸகல விதத்திலும் விரும்பத்தக்க பிரதேசம்' என்று சொன்னபொழுது அவர்களெல்லோரும் ஒருமித்து "நீயென்ன மதியிழந்தவனாயிருக்கிறாய். இங்கு நாம் ஸுகமாயிருக்கிறோமே, இந்த இடத்தை விட்டு வேறிடம் சென்று ஸுகம் ஸம்பாதிக்கச் சொல்கிறாயே, இது வெகு நேர்த்தி. நாங்கள் வரமாட்டோம்! நாங்கள் வரவேமாட்டோம்!" என்று மறுத்துவிட்டார்கள்.

அப்போது 'ண்டாங்கோ' தன் மனைவியைப் பார்த்து "நீ என் மனைவியாதலால் என் கட்டளைப்படி நடக்கவேண்டியவள். நீ என்னுடன் அந்தப் புதிய தேசத்திற்குப் போகவேண்டியது. ஆனால் ஒன்று; நாம் இந்த இடத்தை விட்டுப் போகுமுன் நமது உற்றார் உறவினர் மற்றையோர்க்கு ஒரு பெரிய விருந்திடவேண்டும். ஆதலால் உடனே வீட்டுக்குப்போய் வேண்டிய அளவு சாதம், ரொட்டி, கரி முதலியவைகளைச் சேகரித்துவை" என்று சொன்னான். மாங்கோவும் அவ்விதமே செய்துவைக்க, ண்டாங்கோ தன்னுறவினர்க்கும் மற்றையோர்க்கும் விருந்திட்டுப் பின்னர் தன் மனைவியுடன் பூமியிலிறங்கினான். இந்தக் கதையை ஞாம்பர் பூரண விசுவாசத்துடன் நம்புவதுமன்றி, மாங்கோ ண்டாங்கோ வென்பவர்களே உலகத்திற்றோன்றிய முதல் ஸ்திரீபுமான்களென்றும் வாதிக்கிறார்கள்.

2. உலகத்தில் சூனியம் விளைந்த விவரம்:— உலகத்தில் சூனிய ஞானம் உண்டானதைப் பற்றி அவர்கள் பின்வருமாறு ஒருகதை சொல்லுகிறார்கள்:—

மாங்கோ ண்டாங்கோ ஆகிய இருவரும் பூலோகவாஸம் செய்துவருகையில் அவர்கள் ஒரு குறித்த இடத்திலிராமல், எங்கெங்கே வேட்டைக்கு மிருகங்களகப்படுமோ அங்கங்கே வஸித்து வந்தார்கள். ஸ்திரமாக இன்ன இடத்தில் தானிருக்கவேண்டுமென்று அவர்கள் தீர்மானிக்கவில்லை. இப்படியிருக்கையில் ஒருநாள் ண்டாங்கோ தன் வலைகளைப் பரீக்ஷித்துக்கொண்டு இருந்தபொழுது, காட்டின் மத்தியில் வெகுதூரத்தில், பயங்கரமும் விசித்திரமுமான ஒரு ஜந்து தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கண்டான். இந்தப் பிராணியைக் கண்டவுடன் ண்டாங்கோ மிகப்பயந்து "எங்கே ஓடினால் பிழைப்போம்" என்று நினைத்தான். அப்போது 'இளையமுகுந்தன்'(Elia Mokund-an)என்ற அந்தஜந்து அவனிடம்வந்து அவனுடைய பயத்தைப்போக்கி, பிரியவசனங்கள் சொல்லி, அவனைக் காட்டிலேயே வஸிக்கும்படிக்கும், வேட்டையாடுவதில் அவனுக்குத் தான் மிக்வும் உதவிசெய்யப் போவதாயும் சொல்லிற்று. ண்டாங்கோ ஸரியென்று ஒப்புக்கொண்டான். ஆனால் இவனது மனதில் மாத்திரம் இந்தஜந்து எந்தஸமயத்தில் என்ன விதமாய் மோசம் செய்யக் காத்திருக்கிறதோ என்ற பயம் ஸதா குடிகொண்டிருந்தது. இவன் மறுபடி தன் மனைவியைக் கண்டபொழுது அவளிடம் தான் கண்ட அதிசயத்தையும் தனக்கும் இளைய முகுந்தனுக்கும் நடந்த சம்பாஷணையையும் சொல்லி, அவள் இளைய முகுந்தனை ஒருவிதத்திலும் சந்திக்கக் கூடாதென்றும் திட்டப் படுத்தினான். ஆனால் தான் பயப்பட்டதாக மாத்திரம் அவளிடம் சொல்லவில்லை. ஆதலால் சூன்யமென்பது மனப்பேயே.

3. ஞாம்பர் தீமூட்டக் கற்றது:—ண்டாங்கோ தன் வழக்கப்படி வேட்டையாடி வருகையில் ஒருநாள் மிருகங்களுக்குக் கண்ணிவைப்பதில் சிறிது தாமதித்தான். அப்போது அவனுடைய நாய்கள் காட்டினுட் புகுந்து முன்னொருநாள் தங்களுக்குத் தப்பியோடின ஒரு முட்பன்றியைத் துரத்தியடித்துக் கடைசியாக அதைக்கொன்றன. இதற்குச் சிறிது நேரத்திற்குமுன் ஆகாயத்தில்

பெருத்த இடியும் முழக்கமுமாயிருந்தது. அந்த இடிமுழக்கத்தில் ஒரு பெரிய மரம் வேரற்றுச் சாய்ந்து தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. மரமெரிந்து கொண்டிருந்ததைக் கண்ட நாய்கள் அதனண்டை வந்து, அனல் சுகமாயிருந்ததினால் அவ்விடத்திலேயே குளிர் காய்ந்துகொண்டிருந்தன. ண்டாங்கோ தன்னுடைய வேலை முடிந்தவுடன் நாய்களைக் கூப்பிட அவைகள் வழக்கப்படி ஓடிவாராமையால் இங்குமங்கும் அவைகளைத் தேடித்திரிந்தான். நாய்களுக்கு கணைப்பு ஸுகமாக விருந்ததில் இவனது கூக்குரல் கேட்கவேயில்லை. கடைசியாய் ண்டாங்கோ தனது நாய்களுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டதென்று சந்தேகித்துப்பின்னும் காடெல்லாந் தேடுகையில் அவையிருந்த மரத்துக்குச் சிறிது தூரத்தில் வந்தான். அப்போதும் நாய்கள் மரத்தைவிட்டு வர மனமுள்ளவைகளாகத் தோற்றவில்லை. அவைகள் கடைசியாக அவனிடம் வந்து சேர்ந்தபொழுது அவனுக்கு அவற்றின் அடையாளமே தெரியவில்லை. அவைகளின் மேலெல்லாம் புழுதிபடைந்து, வெள்ளை வெளேரென்றிருந்தன. (அவைகளினுடம்பில் சாம்பல்படிந்திருந்தது). அப்போது ண்டாங்கோ, பிரமித்தவனாய் "ஐயோ இதென்ன அநியாயம், இவைகளினுடம்பில் ஏதோ நூதனமான வஸ்து இருக்கின்றதே, இது என்ன? இதுவரை இம்மாதிரியான கஷ்டம் என் நாய்களுக்கு சம்பவித்ததில்லையே" என்று கதறினான்.

அப்போது நாய்கள் மறுபடியும் மரம் எரிந்துகொண்டிருந்த இடத்திற்குத் திரும்பியோடின. ண்டாங்கோவும் அவைகளைப் பின்தொடர்ந்தான். அப்படிக் கொஞ்சதூரம் போகையில் 'உஸ்' என்ற சப்தம் அவனுக்குக் கேட்டது. அந்த சப்தம் கேட்டவுடன் "இந்த சப்தமுண்டாகுமிடத்தில்தான் ஏதோ விசேஷமிருக்கிறது, அங்கேதான் நாய்கள் முதலில் போயிருந்திருக்கவேண்டும். அவைகள் புழுதியடைந்ததும் அவ்விடத்திலேயேதான் இருக்கலாம்" என்று அநுமானித்து அதையறியஆவலுள்ளவனானான். கடைசியாய் மரத்தினிடம் வந்து, மரம் எரிவதைப் பார்த்தபொழுது அவன் முன்னிலும் பன்மடங்கு ஆச்சரியப்பட்டு "ஆஹா! இது யாருடைய வேலை" என்று வாய்விட்டலறினான். பின்பு தணலை நெருங்கினான். அப்போதுதான் அவன் நெருப்பின் ஜ்வாலையையும் அது உடம்பிற்கு ஹிதமாயிருப்பதையுங் கண்டான். இதனுடன் நில்லாமல் "நெருப்பினுட் குதித்தால் எப்படியிருக்கிறதென்று பார்ப்போம்" என்று நினைத்து அதிற் குதிக்கவே, தனது கால், கை, உடம்பு முதலிய அவயவங்களெல்லாம் வெப்பந்தாங்காமல் கொப்பளிக்க சட்டென்று வெளியிற் குதித்து ஓட்டம்பிடித்தான். அப்படி ஓடிச் சிறிது தூரம் சென்றபின் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தக் காட்டில் உலர்ந்த தழைகளும், செடி செத்தைகளும், மரம் மட்டைகளுமிருக்கின்றனவே! இவைகளை அந்தக் கொப்பளிக்குங் குழியிற் போட்டால் என்னவாகின்றனவென்று பார்ப்போம் என்ற யோசனையுடன் திரும்பி அந்த மரத்தண்டை வந்து, தான் வழியில் சேகரித்த தழை தாம்புகளையும் உலர்ந்த மரக் கட்டைகளையும் அந்த நெருப்பிலிட்டான். உடனே புகையும் இளஞ்சூரியன்போன்ற தீக்கொழுந்தும் உண்டாவதைக் கண்டு ஆனந்த பரவசனாய்த் திரும்பித் தன்னிருப்பிடஞ்சேர்ந்து 'ண்டாங்கோ செய்த வித்தையே வித்தை, அதை வந்து பாருங்கள்' என்று சொல்லிக் கூத்தாடினான். இவனுடைய ஆரவாரத்தைப் பார்த்த ஜனங்கள் உடனே இவனைச் சுற்றிக்கொண்டு, "நீ என்ன அதிசயத்தைக் கண்டாய், அதை எங்களுக்குச் சற்று தெரியச்சொல்" என்று கேட்டார்கள். அதற்கு அவன் "நேற்று இராத்திரி முதல் இன்று காலைவரை மழையுங்காற்றுமாய், ஆகாயத்தில் பளிச்சுப்பளிச்சென்று மின்னலுமாயிருந்ததல்லவா? இன்று மழை நின்றபின் நான் ஒரு விநோதங்கண்டேன். வழக்கப்படி என் குரலைக்கேட்டவுடன் ஓடிவரவேண்டிய நாய்கள் இன்று நான் வெகுநேரம் கூப்பிட்டும் என்னிடம் வரவில்லை. நானும் இதென்ன ஆச்சரியமென்று திகைத்து சலிக்காமல் காடெல்லாந்திரிந்து தேடுகையில் அவை வெகு ஸாவதானமாய் என்னைப்பார்த்து வருவதைக்கண்டேன். அவற்றின்மேல் ஒருவிதம் புழுதி படிந்திருந்தது. அதைப் பரீக்ஷிப்பதற்கு முன்னமேயே அவை திரும்பி வந்த வழியே யோடின. முதலில் இதைக்கண்டு சிறிது பயந்தேனானாலும், சிறிது நேரத்திற்கெல்லாம் என் மனதை திடப்படுத்திக்கொண்டு அவைகளைப் பின்தொடர்ந்தேன். அங்கே நான் கண்ட விசேஷமென்னவென்று நினைக்கிறீர்கள்! எனது நாய்கள் ஒரு மரத்தடியில் ஒரு வெள்ளைப்புழுதியில் படுத்துக்கொண்டு வெளியேறச் சற்றும் மனமில்லாதவையாய்த்தோற்றின. நானும் அந்தப்புழுதியிடம் போய்ப்பார்த்தேன். ஆஹா! அப்பொழுது வெகு சுகமாயிருந்து பின்பு புழுதியிலேயே நின்றால் இன்னும் சுகமாயிருக்கலாமென்று நினைத்துப்புழுதிக்குள் காலைவைத்தேன். உடனே என் கால் கைகளெல்லாம் எரிந்து கொப்பளிக்கத் தலைப்பட்டன. உடனே 'இந்த ஆபத்தினின்று தப்பினேன்' என்று வெளியே எட்டிக் குதித்து வீட்டு முகமாய் ஓடிவந்தேன். பின் அதேயிடத்திற்குப்போய் சில உலர்ந்த தழைகளையும் மரக்கட்டைகளையும் அந்தக்கொப்பளிக்குங் குழியில் போட்டு அவைகள் என்ன ஆகிறதென்று பார்த்தேன். அவையினின்றும் வெகுசீக்கிரம் இளஞ்சூரியன் போல் ஒரு வெளிச்சம் கிளம்புவதைக் கண்டேன். அந்த மரக்கட்டைகளில் எரிந்தும் எரியாமலுமிருந்த சிலவற்றைக் கொண்டுவந்திருக்கிறேன். இதோபாருங்கள், இவைகளில் ஏதாவது பிரயோஜனமுண்டாவென்று பார்க்கப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே தன்னருகிலிருந்த சில குப்பைசெத்தைகளால் தான் கொண்டுவந்த கொள்ளிக்கட்டையைமூடி ஊதினான். அப்பொழுது இவன் சொல்லியபடி 'இளஞ்சூரியன்' போல் வெளிச்சமுண்டாயிற்று. அதைக்கண்டவுடன் அவனைச் சுற்றியிருந்தவர், தங்கள் தேஹங்களில் நூதனமும் ஹிதமுமான ஒரு உணர்ச்சியுண்டாவதைக்கண்டு அதற்கு 'சூரியன்குஞ்சு' என்று பெயரிட்டனர். இன்றைக்கும் ஞாம்பர் பாஷையில் நெருப்பிற்கு 'மோஸர்' என்றுதான் பெயர்; மோஸர் என்றால் இளஞ்சூரியன் என்று பொருள்.

மேற் குறித்தபடி நெருப்பின் உபயோகங்களிற் சிலவற்றை அனுபவசித்தமாய்த்தெரிந்துகொண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளில் ஓரோர் 'சூரியன் குஞ்சு' இருந்தால் நலமாயிருக்குமென்று கருதி ண்டாங்கோவிடம் வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். ஒருவன் ஒரு பித்தளைத்துண்டைக் கொடுத்து ஒரு சூரியன் குஞ்சை வாங்கிக்கொள்ளுவான். (பித்தளைத்துண்டு தான் இந்நாட்டில் வழங்கிவரும் நாணயம்). இரண்டு துண்டு கொடுத்தவன் இரண்டு குஞ்சுகள் பெற்றுச்செல்வான். இவ்விதம் சூரியன் குஞ்சு ஒன்றுக்கு பித்தளைத்துண்டு ஒன்று வீதம் பெருத்த வியாபாரம் கொஞ்சநாள் நடந்தது.

நாளடைவில் போஜன பதார்த்தங்களைப் பக்குவம் செய்வதற்கு நெருப்பையுபயோகிக்குமுறை கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது ஞாம்பர், போஜனபதார்த்தங்களைச் சமைப்பதற்கு மாத்திரமேயன்றி குளிர்காலங்களில் கணப்புக்காகவும் நெருப்பை **விசேஷமாக** உபயோகித்து வருகிறார்கள். நெருப்பு அவிந்து போய்விட்டால் அயல் வீட்டிலிருந்து கொஞ்சம் தணல் வாங்கிக்கொள்வது வழக்கம். தற்காலம் நமது நாட்டில் உபயோகப்பட்டு வரும் தீக்குச்சிகள் இவர்களது நாட்டிற் பிரவேசித்துச் சிறிது காலந்தான் ஆயிருக்கிறபடியால், ஞாம்பர் தங்கள் வீடுகளில் நெருப்புச் சட்டி வைத்து அதை அணையவிடாமற் பாதுகாத்து வருகிறார்கள். இவ்வாறாக ஞாய்பர் தங்களது நாய்களினுதவியால் நெருப்பைக்கண்டு பிடித்தனரென்று தெரியவருகிறது.

S. R. அனந்தய்யா.

## புண்ணிய கன்மங்கள்

**அந்தந்த ஜாதியாசாரம் வழுவாது நடத்தல், மாதா பிதா குரு தேவதாபக்தி ஸர்வாத்துமாக்களிடங்களிலும் வைத்த இரக்கம், வருணாச்சிரமங்களுக்கு ஏற்ற ஆசாரங்கள், அதிதிஸத்காரம், ஞாதிமுதலான பந்துக்களிடங்களிலே ஸ்னேகம், ஒரு நெறிப்பட்டுப் பிறரை உபாஞ்சிப்பிக்குங்குணம், வழுக்கிலாத நியமன விரதம், ஸற்பாத்திரத்திற் றான் தேடியபொருளைச் செலுத்தல், குரு ஜனங்களையு நமஸ்கரித்தல், பெரியோரிடத்திற்றாழ்ந்த தன்மை காண்பித்தல், உள்ளது சொல்லுதல், சருவசங்கபரித்தியாகம், குலங் கல்வி, நிறைவாயிருந்தாலும் கர்வமற்றிருத்தல், அவரவர்சாத்திரஞ் சூத்திரங்களிலோதியபடி அவரவர்கொண்ட தேவதையைப் பூசித்தல், இவை முதலானவை குற்றமற்ற தர்மங்களாகச் சாத்திரங்கொண்டு நிச்சயிக்கப் பட்டவையானால், கடவுள் கற்பித்த புண்ணிய கன்மங்களாகும். ஆகையால் அவரவர்கொண்ட தெய்வமே யவரவர் செய்யுங்கன்மங்கட்கு முன்னிலையாய் நின்று** பலங்கொடுக்கும்.

# அதிவீரராம பாண்டியன்
## ATIVIRARAMA PANDIYAN

(முன் தொடர்ச்சி)

நைடதம். இந்நூல் † ஸ்ரீஹர்ஷ மகா கவி வடமொழியில் இயற்றிய நைஷதத்தை முதனூலாகக்கொண்டு இயற்றப்பெற்றது. வடமொழி நூல் எத்துணைச் சிறப்பாக அப்பாஷையில் மதிக்கப்படுகின்றதோ அத்துணைச் சிறப்பாகத் தமிழ் நைடதமும் தமிழர்களால் மதிக்கப்பெற்று வருகின்றது. ஸம்ஸ்கிருதிகள் தந்நூலை "நைஷதம் வித்வத் ஔஷதம்" எனப் பாராட்டுவார்கள். தமிழர்களும் "நைடதம் புலவர்க் கௌடதம்" எனத் தம் நூலைப் பாராட்டுவது எவரும் அறிந்ததே. வடமொழி நைடதம் 22 * சருக்கங்களையுடையது. இதற்கு ஆறு வியாக்கியானங்கள் உண்டு. அவற்றுள் ஸ்ரீமல்லிநாத சூரி அவர்களால் இயற்றப்பெற்ற ஜீவாது என்ற வியாக்கியானமே வித்வான்களால் எடுத்தாளப்பட்டு வருகின்றது. தமிழ் நைடதம் நாட்டுப்படலம் முதல் அரசாட்சிப்படலம் ஈறாக 28 படலங்களும் பாயிரமுட்பட 1174 செய்யுட்களுமுடையது. ஸ்ரீஹர்ஷ கவி சிந்தாமணி மந்திர உபாசனையால் வடமொழி நைஷதம் இயற்றியதுபோல் நம் அதிவீராமபாண்டியரும் சிந்தாமணி மந்திர உபாசனை கொண்டு தமிழ் நைடதத்தை மொழிபெயர்த்தனர் என்பது சில தமிழ்ப்பண்டிதர்களின் கொள்கை. இஃது எவ்வாறிருப்பினும் பஞ்ச காவ்யங்களுள் ஒன்றாகிய நம் தமிழ்ச் சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்தில் பல்காலும் நம் அதிவீராமபாண்டியர் பழகியிருத்தல்வேண்டும் என்பது நைடதச் செய்யுட்களை உய்த்துணர்வோருக்கு நன்கு விளங்கும். வடமொழி நைஷதத்தையும் தமிழ் நைடதத்தையும் நன்கு ஒப்புநோக்குங்கால் பின்னது பெரும்பான்மை முதனூலின் சரியான மொழிபெயர்ப்பென்பதைத் தெளிவா யறியலாம். யான் ஒரு ஸம்ஸ்கிருத பண்டிதரின் உதவியால் அவ்வாறு ஒரு ஸர்க்கம் முழுவதையும் ஒப்புநோக்கியபோது அவையிரண்டும் ஒத்திருப்பதை யறியலானேன். அவை வருமாறு:—

| வடமொழி நைஷதம்: 3-ம் சருக்கம் | தென்மொழி நைடதம்: அன்னத்தைத் தூதுவிட்ட படலம் |
|---|---|
| ச்லோகம்—3 | செய்யுள்—46 |
| ... 4 | ... 47 |
| ... 5 | ... 48 |
| ... 6 | ... 49 |
| ... 7 | ... 50 |
| ... 8 | ... 51 |
| ... 9,10 | ... 52 |
| ... 11 | ... 53 |
| ... 12 | ... 54 |
| ... 14 | ... 55 |
| ... 15 | ... 56 |
| ... 16 | ... 57 |
| ... 17 | ... 58 |
| ... 18 | ... 59 |
| ... 56 | ... 82 |
| ... 58 | ... 83 |
| ... 59 | ... 84 |
| ... 63 | ... 87 |
| ... 64,65 | ... 88 |
| ... 66 | ... 89 |
| ... 71 | ... 94 |
| ... 72 | ... 95 |
| ... 73 | ... 96 |
| ... 76 | ... 98 |
| ... 77 | ... 99 |

இரண்டொரு திருஷ்டாந்தங் காட்டுவேன்.

நைஷதம்

நேத்ராணி வைதர்ப்ப ஸுதாஸகீநாம்
விமுக்த தத்தத்விஷய க்ருஹாணி
ப்ருபுஸ்த மேகம் நிருபாக்யரூபம்
ப்ரஹ்மேவ சேதாம்ஸி யதிவ்ருதாநாம்

(3-ம் சர்க்கம், 3-ம் சுலோகம்.)

(இ-ள்.) விதர்ப்ப தேசத்து அரசனுடைய மகளாகிய தமயந்தியின் தோழிகளுடைய கண்கள் அந்தந்த விஷயங்களுடைய கவர்தலை விடப்பட்டவைகளாய்ச் சமானமில்லாமலிருக்கிற ரூபத்தையுடையதும் ஒன்றாயுமிருக்கிற அதை (அந்த அன்னத்தை) அடைந்தன. எப்படியெனில் ஏகாக்ரசித்தத்தையுடைய (அடக்கப்பட்ட நியமத்தையுடைய) யோகிகளுடைய மனங்கள் பிரமத்தை யடைந்ததுபோல்.

தமிழ் நைடதம்

"பொறியின் வழிநெஞ்சு புகுத்தியிடார்
அறிவின்னறிவாயவரும்பொருளைப்
பிறிதொன் றறநோக்குதல்போற்பிறமு
மறியுண்கணின்மங்கையர்நோக்கினரால்"

(அன்னத்தைத் தூதுவிட்ட படலம் 46-ம்செய்யுள்.)

ஆதர்சதாம் ஸ்வச்சதயாப்ரயாஸி
ஸதாம் ஸதாவத் கலுதர்சநீய:
ஆக: புரஸ்குர்வதி ஸாகஸம்மாம்
யஸ்யாத்மநீதம் ப்ரதிபிம்பிதம்தே

(3-ம் சர்க்கம், 6-ம் சுலோகம்)

(இ-ள்) நிர்மலமாயிருப்பதனால் கண்ணாடியாயிருக்குந் தன்மையை அடைந்திருக்கிறாய். யாதொரு உன் (சம்பந்தமான) குற்றமானது என்னை உபசரிக்கிறதும் செய்கிறது. தன்னையுந் தெரிவிக்கிறது. இந்த என்னுடைய குற்றமானது பிரதிபலிக்கிறது.

தமிழ்ச் செய்யுள்

"பளிங்கிற் றுன்னிய பல்பொருண் மற்றதில்
விளங்கித் தோன்றல்போல் யான்செய்த வெம்பிழை
களங்க மற்றவுன் னுள்ளத்திற் கண்டுகொல்
துளங்க யான்பிழைத் தேனென்று சொற்றதே"

(அன். தூதுவிட்டபடலம் 82-ம் செய்யுள்.)

அர்த்தாப்ய தேவா இமியத் பவத்யா
சித்தைக பத்யாமபி வர்த்ததேய:
யச்ராக்ஞகார: இலசேத ஸோபி
ஜிம்ஹேதரை: ப்ருஹ்ம ததர்ப்யவாப்யம்

(3-ம் சர்க்கம், 63-ம் சுலோகம்.)

(இ-ள்) உன்னால் எதுதான் அடையமுடியாது. இது கஷ்டப்பட்டு அடையமுடியும். யாதொரு மார்க்கமானது ஒருகாலால் நடந்து போய்க் கொணரக்கூடிய இடத்தில் இருக்கிறதோ அதாவது மனத்தினால் அடையக்கூடியதோ எந்தப் பிரம விஷயத்தில் மனத்திற்கு அஞ்ஞானம் தடையோ அந்தப் பிரமமானது சரீரத்தில் சாமர்த்தியமில்லாத மனிதர்களால் (புத்தியுள்ளவர்களால்) அடையமுடியும்.

தமிழ்ச் செய்யுள்

"மனமுறுமோர் பொருளடைத
லரிதோ மனத்தாலு
நினைவரிய பொருளினையு
நிறையுடையோ ரடைகுவராற்
புனைமணிமே கலைதாங்கிப்
புடையகன்ற வகலல்குற்
கனியனைய வந்தீஞ்சொற்
கற்பகப்பூங் கொம்பன்னாய்"

(ஷை படலம், 87-ம் செய்யுள்.)

ஸாதுத்வயா தர்க்கித தேகமேவ
ஸ்வேநாநலம் யத்கில ஸம்ச்ரயிஷ்யே
விநாமு நாஸ்வாத்மநிது ப்ரஹர்தும்
ம்ருஷாகிரந்த்வாம் ந்ருபதௌநகர்தும்

(ஷை சர்க்கம், 77-ம் சுலோகம்.)

(இ-ள்.) சுவேச்சையினால் நளனை யடைவேன்; அல்லது அனலையடைவேன் என்ற ஒரு விஷயத்தைச் சாதுவாகக் கொள்ளுகிறேன். இவனில்லாமல் உன்னைத்தொந்தரவு செய்தற்கு நளன் விஷயத்தில் உன்னைப் பொய் சொல்லுகிறவனாகச் செய்யமாட்டேன்.

தமிழ்ச் செய்யுள்

"ஐயமுறேல் நளன்மார்பி
லணியலணி குவனன்றி
மையல்புரி வேள்வரினு
மன்றலந்தார் சூட்டவேனோ
நெய்யொழுகு வேற்றாதை
பிறற்களிப்ப நேர்குவனேல்
வெய்யதழற் புகுந்தாவி
விட்டனுரை நிறுத்துவனால்"

(ஷை படலம், 99-ம் செய்யுள்.)

ஸம்ஸ்கிருதத்தில் நைஷதம் தவிர நளன் கதையைக் கூறும் நூல் ஸ்ரீ மஹாபாரதம். நளோபாக்கியானம் வன பருவத்தில் மிகவும் அழகாயும் விரிவாயுங் கூறப்பட்டுள்ளது. நளோதயம் என்ற வடமொழி நூலும் நளன் கதையைக் கூறும்.

தமிழில் முதல் முதல் நளன் கதையைக் கூறியவர் சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகள். கௌந்தியடிகளது துணைகொண்டு கோவலனும் கண்ணகியும் மதுரைமாநகரை யடைந்து சிலம்பு விற்றுவரும்பொருட்

† ஸ்ரீஹர்ஷ மகாகவியின் காலம் கி. பி. 1169.

* இப்பொழுது அச்சில் வெளியாயிருக்கிற வடமொழி நைஷதப் பதிப்புக்களில் 22 சருக்கங்களே இருக்கின்றனவென்றும் ஆனால் மொத்தம் இந்நூலில் 140 சருக்கங்களுண்டென்றும் 96-ம் சர்க்கமுதல் 112-ம் சர்க்கம் வரை வியாக்கியானம் மட்டும் காலஞ்சென்ற நடுக்காவேரி பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரி அவர்கள்புத்தகசாலையில் தாம் கண்டதுண்டென்றும் மேற்படி சாஸ்திரியாருடைய மாணாக்கர் ஒருவர் கூறுகின்றனர்.

டுக் கண்ணகியைக் கோவலன் பிரிந்தேக நேரி ட்ட காரணத்தால் துன்புறவே கௌந்தியடி கள் நளசரித்திரத்தைக் கூறிக் கோவலனைத் தேற்றினர்.

" வல்லா டாயத்து மண்ணரசிழந்து
மெல்லியல் தன்னுடன் வெங்கா னடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீதொடு படூஉஞ் சிறுமைய ளல்லள்
அடவிக் கானகத் தாயிழை தன்னை
யிடையிருள் யாமத் திட்டு நீக்கியது
வல்வினை யன்றோ மடந்தைதன் பிழையெனச்
சொல்வது முண்டேற் சொல்லா யோநீ"

(சிலப்: 14-வது: ஊர்காண் காதை, 50-57)

அடுத்துப் புகழேந்திப் புலவர் நானூற்றுச் சொச்சம் வெண்பாக்களால் நளசரிதத்தைச் சொற்சுவை பொருட்சுவை ததும்ப நள வெண்பா என்ற நூலைப் பாடினர். " வெண்பா விற் புகழேந்தி" எனப் புலவர் அகமகிழ்ந்து பாராட்டுவதால் இதன் பெருமை நன்கு விளங்கும்.

அவருக்குப் பின் வில்லிபுத்தூரார் தாம் பாடிய பாரதத்தில் இக்கதையை மிகவும் சுருக்கி ஒரே செய்யுள் உரைத்துப் போந்தனர். அஃதாவது:—

நீவிரோ வல்லிர் முன்னை னிலமுழு தாண்டநேமி
நாவிரி கீர்த்தி யாள னளனெனு நாம வேந்தன் [றுத்
காவிரி யென்னத் தப்பாக் கருணையான் சூதிற்றோற்
றீவிரி கானஞ் சென்ற காதைநுஞ் செவிப்படாதோ.

(அருச்சுனன் தவநிலைச் சருக்கம்:24-ம் செய்யுள்.)

வில்லிபாரதத்தை யொட்டி பாரதக்கதையை விரித்துப்பாடிய நல்லாப்பிள்ளை என்னும் புலவர் நளன்கதை யுரைத்த சருக்கம் என்ற ஒரு சர்க்கத்தில் நளன்கதையை 153 செய்யுட்களால் பாடினர்.

வில்லிபுத்தூரார் காலத்துக்கும் நல்லாப்பிள்ளை காலத்துக்கும் இடைக்காலத்தில் நம் நைடதம் பாடப்பெற்றது.

நளவெண்பாவிற்கும் நைடதத்திற்கும் சிற்சில இடங்களிற் பொருத்தங்களும் சில இடங்களிற் கதை வேற்றுமைகளுமுண்டு; அவற்றை ஈண்டுரைப்பிற் பெருகும். "கன்னற்பாகிற்கோற்றேனிற்கனியிற் கனிந்த" நைடதத்தின் செய்யுள்நடை, மொழிச்செறிவும் ஓங்கிய கருத்தும் உடையது. சீவகசிந்தாமணி, சூளாமணி, கந்த புராணம், கம்பராமாயணம் முதலிய உயர்ந்த காவ்யங்கள்போல் மிக்க வனப்பு வாய்ந்தது.

அதிவீரராம பாண்டியர் நைடதத்தை மன்மதோ பாலம்பனப்படலம் வரை பாடி முடித்துத் தமக்கே அச்செய்யுட்களின் சுவை மிக்க வியப்பையும் உவப்பையுந் தருவதைக்கண்டு தம் தமையனாரும் மகாவித்வானுமாகிய வரதுங்கராம பாண்டியரிடம் காட்டவே அவர் அச்செய்யுட்களை ஆராய்ந்து பார்த்து ஆனந்தக்கடலில் அழுந்தித் தம்பியைத்தழுவி முத்தமிட்டு " அச்சோ! பொற்கலத்தில் நிரப்புதற்குரிய திவ்வியாமிருதத்தை வாளாநிலக்கமரிற் பெய்தனையே" என்றனராம். அதுகேட்ட அதிவீரர் "நம் சந்திரவம்சத்துச் சக்கரவர்த்தி காப்பியத் தலைவராகவும் இங்ஙனம் உரைத்தல் என்" என, "மானுட அரசனைப்புகழ்ந்து இத்துணைச்சொற்சுவை பொருட்சுவைப் பாக்களைப்பாடினையே! இவற்றை நித்திய வஸ்துவாகிய பரமசிவன்மீது பயன்படுத்தப் பூர்வஜன்ம புண்ணிய வசமில்லாமற் போயிற்றே என்று கவல்கிறேன்" என, நூலாசிரியரும் அதனை நன்குணர்ந்து ஊக்கங்குன்றி ஒருவாறு பாடிப் பிரபந்தத்தை முடித்தனர் என்ப.

நைடதத்தைப் படிப்பவரெவரும் அதன் பிற்பாகம் முற்பாகம்போல் அத்துணைச் சிறப்பு வாய்ந்திருக்கவில்லை யென்பதை யறிவார்கள். அதனாற் சிலர் இம்மாண்புள்ள காப்பியம் "சென்று தேய்ந்திறுதல்" என்னும் குற்றத்துக்குள்ளாகுமெனக் கூறுவர். அவ்வாறு கூறுவது பொருந்தாது. நூலாசிரியரது ஊக்கக்குறைவே அதற்குக்காரணமாம். அல்லது தமது வம்சத்தாசன் துன்புற்றதை விவரிக்க மனம் பொறாது கதையைச் சுருக்கியிருக்கலாம். அலங்காரப் பொலிவுள்ள இந்நூலைப்படியாத செந்தமிழ் மாணாக்கர் இரார்.

இந்நூலாசிரியர் தம் குலப்பெருமையிற் கண்ணுங்கருத்து முடையார் என்பது தமயந்தி கல்யாணகாலத்தில் ஆங்குக்குழுமிய சூரியகுல அரசர்களை நோக்கி இந்திரன் " அரசர்காள், நீவிர் வெய்யோன் அருங்குலத்துதித்தும் திங்கள் மரபின் மன்னவர்க்கு நுங்கள் மாணெழின் மழுங்கினீரால்" என்று சந்திரகுலத்தை இழித்துக்கூறவே அங்கிருந்த பாண்டியன் மனம் பொறாது வெகுண்டு



" நன்று நன்றென்ன நக்கு நாமவேல்வழுதி சீறி,
யுன்றலை துணிப்பனென்னுவொளிறு வாளு
குன்றெறி வயிரவாட் குரிசின் [றையினீக்கிக்,
மேற்கனன்று சென்றான் "

என்று கூறியதாக அதிவீரர் கூறுவதால் நன்கு விளங்கும்.

நைடதம் அரங்கேற்றுங்கால் நகரப்படலத்தில்

வாய்ந்தமின்னைமடந்தையாக்கிவிண்
போந்தடாமலன்றோமலர்ப்புங்கவன்
சாந்தணிந்ததமனியக்குன்றென
வேந்துவெம்முலைப்பாரமியற்றினன்

என்ற 25-ம் செய்யுளை விளக்குகையில் புலவர் ஒருவர் எழுந்து "புவிக்குங்கவிக்கு மாசே! மின்னுக்கும் மலைக்கும் சம்பந்தம் இன்மையால் இவ்வுவமை பொருந்தற்பாலதன்று" எனவே பாண்டியனார் விடைபகரத் தெரியாமல் அம்மட்டில் நிறுத்தி வீடுசென்று மனங்கவன்று இருப்பதை அவரது தேவியுணர்ந்து அவ்வாறு கவல்வதற்குக் காரணங்கேட்கவே அவரும் அன்று சபையில் நடந்ததைக் கூறினர். உடனே, மிக்ககல்விப்பயிற்சியும் புருடபக்தியுமுள்ள தேவியார் "இதற்குக் கவலுறுவதென்? மின்னற்கும் மலைக்கும் சம்பந்தமில்லாவிடினும்இயைபுஉண்டாகவன்றோ சூசகமாகிய இருப்பாணியைப் பிரமன் அடித்தான்" என்று சமாதானங் கூறினராம். பாண்டியனார் தேவியினது சமயோசித புத்திசாதுர்யத்தை மிகப் பாராட்டி அளவிலா ஆனந்தமடைந்து அடுத்த நாள் அவைக்கட் சென்று அரங்கேற்றுங்கால் முந்தின நாள் ஆக்ஷேபித்த புலவருக்குத் தக்க சமாதானங்கூறி அவரைமகிழ்வித்தனர் எனக் கர்னபரம்பரையாய் ஒருகதை வழங்குவதாகப் புலவர் ஒருவர் கூறியுள்ளார்.

அன்னத்தைக் கண்ணுற்ற படலத்தில்

வேனி
"தண்ணறுக் கொழிக்குஞ்செய்ய சம்பக நனைகள்
வண்ணல் பாசறை விளக்கம் போன்றன வவைமேல்
"நண்ணிய தூமம்போன்றும் (வண்டு."

என்றபாடலைப் படிக்கவே மற்றோர்புலவர் எழுந்து "சம்பகம்வண்டுதீண்டாமலராயிருக்கசம்பக நனைகள்மேல் வண்டு நண்ணியதாகக் கூறியது என்னை"யென அதற்கு நம் கவி "சம்பகம் வண்டுணா மலரேயொழிய,வண்டுதீண்டாமலான்று: வண்டு சண்பகத்தின்கண்ணும் சேரும். ஆனால் அதனைச்சேர்ந்து அதன்தேனையுண்டால் இறந்துபடும்" என்று சமாதானங் கூறினராம்.

இந்நூலில் இவ்வாசிரியர் பல இடங்களில் உபயோகித்திருக்கும் உபமானங்கள் மிகவும் கம்பீரமாகவும் இயற்கையாகவு மிருக்கின்றன. அன்னம் தமயந்தியைக்கண்டு வியந்த இடத்தில் கவியின் சாதுர்யம் மிகவும் பாராட்டற்பாலது.

"கண்ணுங் கையும் முகமுங் கமலமா
நண்ணுஞ் சண்பக நாண்மலர் மேனியா
வண்ணல் வேளை வழிபடற் காற்றிய
வண்ண மாலைகொ லென்று மருண்டது."

(அன். தூதுவிட்ட படலம் 42-ம் செய்யுள்)

அன்னம் சொன்னமொழியைக் கேட்டு நளன் நகைத்தான் என்று கூறிய இடத்தில்,

அன்னம் பெய்த சொல்லமுதம் உள்ளெலாம் பரந்து
பெருகிமேல் வழிதல்போல் நகையா

என்று சாதுரியமாகவும் சுபாவமாகவும் கூறியிருத்தல் பெரிதும் பாராட்டற்பாலது.

அழகானமோன அமைப்புக்கு இந்நூலிலிருந்து இரண்டோர் உதாரணம் எடுத்துக்காட்டுவேன்.

"அங்காவல்குலதனள வுரைக்கினு டவாவாவின
தளவே" (அன் : தூது : படலம் 22-செய்யுள்)
"காதலங்கடலின் கரைபெறற்கயனாற் காரணமின்
றியே காட்ட" (அன்: தூது: படலம் 35-செயயுள்)

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

---

**மதுரை ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்.**—இந்த ஹைஸ்கூலின் பரிசளிப்பு தினம் சென்ற செப்டம்பர் மாதம் 28-ந் தேதியன்று ராமனாதபுரம் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ராயபகதூர் W L. வெங்கடராமய்யாவின் அக்கிராசனத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. அந்த ஸ்கூலில் படிக்கும் பிள்ளைகளின் மொத்தம் 572 ஆக இருந்தது 1,051 ஆக ஏறியிருக்கிறது. ஹைஸ்கூல் புதிய கட்டடத்திற்கு மானேஜிங் அதிகாரிகள் 40,000 ரூபாய் வரையில் வசூல் செய்திருக்கிறார்கள். பிரஸ்தாப வருஷத்தின் வரும்படி 17,080-5-2 செலவு 21300-3-1. புதுக்கட்டடத்திற்காகச் செலவு செய்ததில் வரவைவிட செலவு ஜாஸ்தியாயிருக்கிறது.

# ரக்த ஓட்டம்

## BLOOD CIRCULATION

முற்கூறிய அதிகாரங்களிலுள்ளபடி நம்முடைய சரீரத்தில் எலும்பு, தசைகள், நரம்புகள், தோல் முதலியவைக ளிருக்கின்றனவென்றும் அவைகள் வேலை செய்வது மன்றியில் வரவர விருத்தியாகின்றனவென்றும் தெரிந்து கொண்டோம். இவ்விதம் சரீரபாகங்கள் வேலைசெய்வதானது அப்பாகங்களுக்குக் குறைவை யுண்டுபண்ணிக்கொண்டே யிருக்கின்றது. அப்படியிருக்க நம்முடைய சரீர அவயவங்கள் நாளுக்கு நாள் விருத்தியடைவதற்கு ஏதாவதொருகாரணம் இருக்கவேண்டுமென்பது புலப்படுகிற தல்லவா? அவ்விதம் செய்வது நாமுட்கொள்ளும் ஆஹாரந்தான். ஆஹாரமானது நம் சரீரத்திலுள்ள சில ரஸங்களால் கரைக்கப்பட்டு அன்னரஸமாக மாறி ரக்தத்தோடு தன்னினப்பட்டு, நம் சரீர ரக்தத்தோடு ஒன்று சேர்ந்து, தேகத்திலுள்ள அங்கங்களுக்குப் புஷ்டியைக் கொடுக்கிறது.

இதனால் நாம் ஒரு விஷயமறிந்து கொள்ளலாம். அதாவது ஆஹாரம் சாப்பிடாமல் விட்டுவிடுவோமானால் தேகத்தின் ரக்தம் குறைந்து சரீரம் மெலிந்து சீக்கிரத்தில் நாசமடைவோம். ஆகவே, ரக்தத்தின் உபயோகம் தேகபுஷ்டிக்கென்று கிடைக்கப்பெற்றது.

நம்முடையசரீரத்தில் எந்தவிடத்தில் வேண்டுமென்றாலும் ஒரு குண்டூசி போன்ற 'மிக்க ஸன்னமான 'கூரை'யுடைய ஆயுதத்தைக்குத்தினோமானால் உடனே அவ்விடத்திலிருந்து ரக்தம் கசிந்து அல்லது பீரிட்டுவருவதை நாம் பார்க்கலாம். இதிலிருந்து நம்முடைய தேகத்தில் ரக்தமில்லாத இடமே யில்லை யென்பது நன்றாய் விளங்கும். ஏனென்றால், சரீரத்திலுள்ள ஒவ்வொரு பாகத்திற்கும் தனித்தனியே ரக்தத்தைக் கொண்டுபோய் கொடுக்கவேண்டி யிருப்பதால், எல்லா விடங்களிலும் ரக்தம் காணப்படுகிறது.

சரீர அமைப்பில், சரீர பாகங்களுக்கு ரக்தத்தைக் கொண்டுபோவதற்காகச் சிலகுழாய்களும், கொண்டுபோய் பரவவிடப்பட்டரக்தத்தை ஒன்றாகச்சேர்த்து,மறுபடி கொண்டுவருவதற்காக சில ரக்தக் குழாய்களுமாக, இருவகைக் குழாய்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்வகுப்பிற்கு ஆர்டரி (Arteries) களென்றும் பின்வகுப்பிற்கு வெயின் (Veins) களென்றும் பெயர்.

இவைகளுக்குள் அமைப்பில் நிரம்ப வித்தியாஸம் காணப்படுகிறது. அவ்வமைப்புகளின் தன்மை முழுவதும் நமக்குத்தெரியவேண்டியதவசியமில்லை யென்றாலும், ஆர்டரிகள் அதிக உறுதியானதசைகளாலாகி, மிகுந்த உறுதியானவைகளாகவும், வெயின்கள் அவ்வளவு உறுதியற்றவைகளாகவும் இருக்கின்றனவென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியதவசியம்.

ஆனால் நாம் ஆகாரம் செய்யுந் தோறும் உண்டாகிற ரக்தம் முழுவதும் நம்முடைய சரீரத்திலேயே நிலைத்திருக்குமாயின் அவ்விரக்த வெள்ளத்தையடக்கிக்கொள்ள நம்முடைய சரீரத்தில் இடம்போதாது. ஆகவே, இந்த ரக்தமானது சரீரத்தில் பலபாகங்களுக்குச் சென்று அவ்விடங்களிற் சேர்ந்து அப்பாகங்களோடு தன்னினப்படுகிறது. ஏற்கெனவே அங்கிருந்த பாகங்கள் வேலைசெய்து கொண்டே இருப்பதனால் எரிந்து கரியாகி, சரீரத்திற் குபயோகமில்லாமல், வெளியே கழிக்கப்பட்டுக் கொண்டேவருகிறபடியால், நம்முடைய சரீரத்தில் திரவரூபமாக விருக்கிற ரக்தமானது எப்பொழுதும் ஒரே அளவினதாக இருந்து கொண்டு வருகிறது.

மேற்சொல்லியவைகளிலிருந்து ரக்தமானது அவ்வவ்விடங்களில் நிலைத்துநிற்பதில்லையென்பதும் ஸதாகாலமும் இரக்தக் குழாய்களின் வழியாய்ப் போவதும் வருவதுமாகவே யிருக்கிறதென்பதும் செவ்வனே விளங்கும். இந்த ரக்த ஸஞ்சாரத்திற்குத்தான் ரக்த வோட்டமென்று பெயர்.

ஆகவே, இந்த ரக்த வோட்டத்திற்குக் காரணத்தையும், பிரயோஜனத்தையும் நாம் விசாரித்தறியவேண்டும். இரக்த வோட்டத்திற்கு முக்கிய ஆதாரமாயிருப்பது ஹ்ருதயம் அல்லது ரக்தாசயம் என்று சொல்லப்படும்.

ரக்தாசயம், தலை கீழுந்தலையாய்த் தொங்கவிடப்பட்ட ஒருதாமரை மொட்டை யொருவாறு ஒக்கும். ஒரு வேளை இதனால்தான் நம் தேசத்தில் அதற்கு ஹ்ருதய கமலமென்று பெயரிட்டிருக்கிறார்கள் என்றுஎண்ணலாகும்.



அல்லது மேற்புறம் காம்பிருக்கும்படி தொங்கவிடப்பட்ட கிளிமூக்கு மாங்காயைப்போலிருக்கும் என்னலாம். இதன்பருமன் அவரவருடையமுஷ்டிப்பிரமாணமாயிருக்கும். முண்டத்தின் மேற்பக்கமாகிய மார்பகத்தின் மத்தியில் சற்று இடதுபுறமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஹ்ருதயமானது அவ்விடத்தில் தனியான வேறுவித ஆலம்பங் களில்லாமல், அதாவது சரீரத்திலுள்ள வேறு எந்த அங்கத்தோடும் நேராகப் பொருத்தில்லாமல் நிராலம்பமாய் நிற்பதாகக் காணப்படும். ஹ்ருதயத்திலிருந்து ரக்தத்தை வெளிக்கொண்டு போகின்றனவும், உட்கொண்டு வருகின்றனவுமான குழாய்கள் சரீரத்தின் அங்கங்களோடு சம்பந்தப்படுவதால், இந்தக் குழாய்களாகிய கயிறுகளைக் கொண்டு, தன்னிடத்தில், ஹ்ருதயமானது நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.

ரக்தாசயமானது முழுவதும் தசைகளாலேயே ஏற்பட்டது.இதனுட்புறம் கூடு. இதில் நான்கு அறைகள் உண்டு. அவைகளெல்லாம் ஒன்றற்கொன்று சம்பந்தமில்லை. இடையே தசைகளாலாகிய ஒரு சுவரிருந்து தடுக்கிறது. ஒவ்வொரு புறத்திலும் மேலும் கீழுமாயுள்ள இரண்டு அறைகளுக்கும் 'வால்வ்'கள் (Valve) என்று சொல்லப்படும் ஒருவிதக் கதவுகளால் சம்பந்த மேற்பட்டிருக்கிறது.

'வால்வ்'களானது ஒரேபுறத்தில் திறக்கக் கூடிய கதவுகள். இந்த வால்வ்கள் மேற்புறத்திலிருந்து கீழ்ப்புறந் திறக்கக்கூடியவையாதலால்,சாதாரணமாய் மேலறையில் ஜலத்தை ஊற்றுவோமானால் அந்த ஜலமானது, தன்னுடைய பாரத்தினாலேயே 'வால்வைத்' திறந்து கொண்டு, கீழறைக்கு வந்துவிடக் கூடும். ஆனால் கீழறையில் வந்த ஜலத்தை மறுபடி மேலறைக்கு அனுப்புவது அஸாத்தியம். அதாவது ஜலம் நிறைந்த கீழறையை அமுக்குவோமானால், அந்த ஜலமானது மேலே போக யத்தனிப்பதில் இந்த வால்வை மூ- மார்க்கதை யடைத்துவிடும்.

இந்த நான்கு அறைகளில் மேலறைகளுக்கு ஆரிகிள்(Auricle)கள் என்றும் கீழறைகளுக்கு வெண்ட்றி (Ventricle)கிள் என்றும் பெயர். வலதுபுறமிருப்பவைகளுக்கு வலது ஆரிகிள், வலது வெண்ட்டிரிகிள் என்றும், இடதுபுறத்து வகுப்புகளுக்கு இடது ஆரிகிள், இடது வெண்ட்றிகிள் என்றும் பெயர்.

நிற்க. நம்முடைய சரீரத்தில் பல பாகங்களிலுமுள்ள ரக்தத்தை ஒன்று சேர்த்து, ரக்தாசயத்தில் கொண்டுவந்து சேர்க்கும் குழாய்களுக்கு 'வெயின்' கள் என்று பெயரென சொல்லியிருக்கிறோமல்லவா? இவை சரீரமெங்கும் வியாபித்து, சிறிய மயிரிழைகள்போ லவ்வளவு மெல்லியனவா யிருந்து அநேகம் சிற்றாறுகள் ஒன்றினோடொன்று கலந்து பெரிய நதியாவதுபோல, பெரிய வெயின்களாக ஆகி, ரக்தாசயத்தில் ரக்தத்தைக் கொண்டுவந்து சொரிகின்றன. இவ்விதமாய் இரண்டு பெரிய வெயின்கள் நம்முடைய சரீரத்தில் உண்டு. அவைகளிலொன்று கழுத்திற்குக் கீழ்ப்பட்ட பாகங்களிலும், மற்றொன்று கழுத்திற்கு மேற்பட்ட பாகங்களிலுமுள்ள ரக்தத்தை யொன்று சேர்த்து வந்து ரக்தாசயத்தில் கொட்டுகின்றன. இவ்விரண்டும் ஹ்ருதயத்தின் வலது ஆரிகிளில் ரக்தத்தைக் கொண்டுவந்து சேர்க்கின்றன.

நாம் ஏற்கெனவே, ரக்தாசயமானது முழுவதும் தசைகளால் செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறோ மல்லவா? மேலும் தசைகளுக்கு நரம்புகளின் உத்தரவுப்படி சுருங்கவும், மறுபடி பெரிதாகவும் சக்தியுண்டென்று முன்னதிகாரத்தில் படித்திருக்கிறோமல்லவா? அவ்விதமே இந்த ரக்தாசயத்தின் பேரிலும் அதை வேலை செய்யும்படித் தூண்டிவிட்டு மேற்பார்வை பார்ப்பதற்காக சில நரம்புகளிருக்கின்றன. வெயின்களிலிருந்து ரக்தமானது ரக்தாசயத்தின் வலது ஆரிகிளுக்கு வந்துவிழுந்தவுடன், இந்த நரம்புகள் அந்த ஆரிகிளுக்கு சுருங்கவேண்டி, உத்தரவு இடுகின்றன. அப்பொழுது அவைகள் சுருங்குகின்றன.

அப்படிச் சுருங்கும்பொழுது ஆரிகிளில் உள்ள இடமானது குறைந்து, அதற்குள் வந்து விழுந்திருக்கும் ரக்தம் முழுவதையும் அடக்கிக் கொள்வதற்கில்லாமற் போகிறது. அதனால் இந்த ரக்தமானது வெளியே எங்கேயாவது போகப் பார்க்கிறது. இதற்கு உதாரணம் ஒன்று பாருங்கள். ஒரு ரப்

பர் பந்தை எடுத்து அதில் ஒரு சிறு துவாரம் செய்து, அதன் வழியாய் அதற்குள் தண்ணீர் நிறையும்படி நிரப்புங்கள். மறுபடி அந்தத் துவாரத்தை கையால் மூடிக்கொண்டு, பந்தை அமுக்க பிரயத்தனப்பட்டால் அது ஸாத்தியப்படுவதில்லை யென்று வெளியாகும். மிகுந்த பலங்கொண்டு அமுக்கினால் பந்து கிழிந்துபோகும்; அப்படிக்கில்லாமல் துவாரத்திலிருந்து கையை விலக்கி அமுக்கினால், பந்து சுலபமாய் அமுங்குவதுமன்றி, அத்துவாரத்தின் வழியாய்த் தண்ணீர் வேகமாய் வெளியே பீச்சப்படுவதைக் காண்பீர்கள். இதேமாதிரியாய் ரக்தம் சஞ்சாரம் செய்ய வேண்டியதற்கான வேகங் கொடுப்பதற்கும் வலது ஆரிகிளிலிருந்து வலது வெண்ட்றிகிளுக்கு ரக்தத்தை அனுப்புவதற்காகவுமே, இவ்விதம் வலது ஆரிகிள் சுருங்குவதற்கு வேண்டிய ஏற்பாடும், ஆரிகிளுக்கும் வெண்ட்றிகிளுக்கும் இடையில் நாம்மேற்கூறியுள்ள வால்வும் அமைந்திருப்பது.

ஆனால் ரக்தம் வந்த வழியான வெயின் வழியாகத் திரும்பிப் போகும்படி பீச்சப்படக் கூடாதோவென்றால், கூடாது. ஏனெனில் ஆரிகிளில் விழுந்த ரக்தம் வெண்ட்றிகிளுக்கும் போனவுடனே மறுபடி ஆரிகிளில் வந்து விழுவதற்காக ரக்த வெள்ளமானது மேலே வெயின்களில் வந்து காத்துக்கொண்டு இருப்பதனால் அவ்வளவு ரக்தத்தைப் பக்கத்தில் தள்ளிப் பீச்சும்படியான அவ்வளவு சக்தி, ஆரிகிளின் சுருக்கத்திற்கு இல்லை. மேலும் இதைஉத்தேசித்து, நிரம்ப சுலபமான மார்க்கம் ஒன்றிருக்கும் பொழுது, ரக்தம் அவ்வழி நோக்குவதற்கே ஏதுவில்லை.

இப்பொழுது ரக்தமானது ஆரிகிளிலிருந்து வெண்ட்றிகிளுக்கு வந்துவிட்டதாக வைத்துக் கொள்ளுவோம். இந்த சமயத்தில் ஒரு விஷயம் நாம் கவனிக்கவேண்டும். அதாவது, ஆரிகிள்களும் வெண்ட்றிகிள்களும் ஒரே காலத்தில் சுருங்கி விரிவடைவதில்லை. ஆனால் ஆரிகிள் சுருங்கும்பொழுது வெண்ட்றிகிள்கள் விரிந்தும், வெண்ட்றிகிள்கள் சுருங்கும்பொழுது ஆரிகிள்கள் விரிந்தும் இவ்விதம் இருவகுப்பினவையும் மாறிமாறிச் சுரிங்கி விரிகின்றன. இதன் நோக்கம் காலதாமதமில்லாமல் வேலை நடக்கவேண்டியதே. ஆரிகிள் சுருங்கும் காலத்தில், அவைகளிலிருந்து வரும் ரக்தத்தை வாங்குவதற்கு சுலபமாயிருக்கும்படி வெண்ட்றிகிள்கள் விரிந்தும் வெண்ட்றிகிள்கள் ரக்தத்தை வெளியே யனுப்பும்பொழுது, மறுபடி அவைகளிடம் ரக்தம் அனுப்பவேண்டி வெயின்களிலிருந்து வாங்குவதற்காக ஆரிகிள்கள் விரியவும் செய்கின்றன. ஆகையால் ஆரிகிள்களுக்கும் வெண்ட்றிகிள்களுக்கும் மாறிமாறி க்ஷணநேரம் சிரமபரிகாரத்திற் கிடமுண்டாகிறது. ஆனால் இவைகளிடம் வேலைவாங்கும் நரம்புகளுக்கோ சற்று நேரம்கூட ஓய்வுகிடையாது. மனிதனுக்கு உயிர் என்பது ஆரம்பித்ததுமுதல், மறுபடி அது நீங்கும்வரையில் இவை, ஓயாமல் வேலை செய்துகொண்டே யிருக்கின்றன.

வெண்ட்றிகிளுக்குள் வந்து சேர்ந்த ரக்தமானது, அது நரம்புகளின் உத்தரவுப்படி சுருங்கும்பொழுது வெளியே தள்ளப்படுகிறது. மறுபடி ரக்தம் ஆரிகிளுக்குள் போக முடியாதெனபது நாம் முன்னமேயே அறிந்த விஷயம். ஆனால் இந்த வெண்ட்றிகிளிலிருந்து ஒரு ரக்தக்குழாய் கிளம்பி பக்கங்களிலிருக்கிற சுவாசாசயங்களுக்குச் செல்லுகிறது. இவைகளுக்கு பல்மனரி ஆர்டரீஸ் (pulmonary arteries) என்று பெயர். இக்குழாயிலும் தசைகள் அதிகமிருப்பதால், இது இடையிடையே சுருங்கி, ரக்தத்தை சுவாசாசயத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. வெயின்களைப் போலவே ஆர்டரிகளும் போகும் மார்க்கத்தில் அவ்வவ்விடங்களுக்கும் ரக்தம் கொடுக்கவேண்டியதற்காக கிளைகிளாகப் பிரிகின்றன. போகப் போக வெகு சிறு கால்வாய்களாகப் பிரிந்து கடைசியில் மயிரினும் ஸன்னமான சிறு குழாய்களாக எங்கும் பரவுகின்றன.

ரக்த ஆர்டரிகள் எங்கெங்கு செல்லுகின்றனவோ, அவ்வவ்விடங்களிலெல்லாம், வெயின்களும் செல்லுகின்றன. ஆர்டரிகள் கொண்டுபோய்ச் சேர்த்த ரக்தங்களை மறுபடியும் ரக்தாசயத்திற்கு அவைகள் கொண்டுவந்து சேர்க்கவேண்டு மல்லவா? இப்படியே இந்த சுவாசாசய ஆர்டரிகள் செல்லுமிடங்கள் தோறும் சிறு வெயின்கள் காணப்படுகின்றன. இவை யொன்றாய்ச் சேர்ந்து மறுபடி போன ரக்தங்களை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துத்



# வைதிகமத ஞானம்—IV

## KNOWLEDGE OF VEDIC RELIGION

வேதார்த்தங்களை யுக்திக்குப் பொருத்தமாக விளக்கிக்காட்டி வற்புறுத்தவந்த ஆறு சாஸ்திரங்கள் என்று மதிக்கப் பெற்றுவந்த ஷட்தர்சனங்கள் ஆராய்ச்சி குறைந்து வந்ததற்குக் காரணங்கள் இவை என்று காட்டியாகிவிட்டது. அவையாவன (1) உண்மையை உணர்த்துவதில் வேதங்களே ஆதாரங்கள், தர்சனாதி சாஸ்திரங்கள் உதவிகளாக இருந்து யுக்தி அப்யாஸ ஒழுங்கு முதலியவைகளைக் காட்டி வற்புறுத்துவன: அவ்வவைகள் போக்கிற்கேற்ப சில மத ப்ரக்ரியைகள் அங்கீகரிக்கும்படி வரினும், அவைகளை வேதவிரோதமாயின் ஒதுக்கி மற்றவைகளை கைக்கொள்ள வேண்டும் அப்யாஸி: அவைகளுக்கு வேத ஆதாரமின்றி உண்மையை உணர்த்தும் திறனில்லை; என்று ஆசாரியாள் ஷண்மதஸ்தாபன அத்வைத ஸித்தாந்தம் செய்ததை, அவை வேத விரோதமாகையால் அவைகளை ஆராய வேண்டியதேயில்லை என்று குதர்க்கமாக பொருள்படுத்திக்கொண்டதும் (2) பொதுவாக கலிகாலக்கொடுமையால் பண்டிதபாமரர்கள் அறிவு குன்றி விபரீதப்பட்டதுமே ஒழிய வேறல்ல.

(136-வது பக்கத் தொடர்ச்சி.)

திரட்டி பல்மனரி வெயின் (pulmonary vein) எனப் பெயர் பூண்டு ரக்தத்தை இடதுபுறத்து ஆரிகிளில் கொண்டு வந்து சேர்க்கிறது. மறுபடி வலதுபுறத்து ஆரிகிளில் நடந்தது போலவே இங்கேயும் இடது புறத்து ஆரிகிளில் சுருக்கமும், அதன் மூலமாய் இடதுபுறத்து வெண்ட்றிகிளில் ரக்தம் பீச்சப்படுதலும் மறுபடி அதன் சுருக்கமும் அதன் மூலமாய் சரீரம் முழுவதற்கும் ரக்தத்தைக் கொண்டு போய்ப் பாவச்செய்யும் அயோர்டா (Aorta) என்னும் ஆர்டரியில் ரக்தம் அனுப்பப் படுதலும் நடந்துகொண்டே யிருக்கின்றன. இந்த அயோர்டா கொண்டுபோகும் ரக்தத்தை மறுபடி யொன்றுசேர்த்து ஒரு வெயின் வலது ஆரிகிளில் கொண்டுவந்து சேர்க்கிறது. இதுதான் ரக்த ஓட்டத்தின் ஒரு சுற்றுப் பிரமாணம் அல்லது ஸஞ்சார .

T. R. S. சாஸ்திரி, பி. ஏ.

இந்தக் குதர்க்க விருத்திக்குக் காரணம் ஆசார்யாள் கபிலருஷி விஷயமறுப்பு என்பதும் முன்னர் குறிக்கப்பட்டது. அதில் வேதத்தில் கூறியுள்ள பகவான் பிள்ளை கபிலர் வேறு, ஸாங்கியப்ரவர்த்தகரும், ஸகரபுத்திரரை எரித்தவரும், அக்னி அவதாரமுமான கபிலர்வேறு : ஆதலால்அவர் தர்சனமான ஸாங்கியம் ப்ரமாணமாகக் கொள்ளத்தக்கதன்று என்று ஆசார்யாள் கூறுவதாகக் காட்டப்பட்டுள்ளது. இது ஆசார்யாள் வாக்கே அல்ல என்பது இந்த பாஷ்யபாகத்தை வாசிப்பவர்களுக்கும் பாரத பாகவதாதி புராணங்களை வாசிப்பவர்களுக்கும் நன்கு வெளியாகும். இந்தக் குதர்க்க ஆதார மறுப்பைப்பற்றி இங்கு ஆராயப்புகுவோம்; இதன் முடிவில் இதனால் ஷட்தர்சனப்படிப்புக் குன்றி நாம் தத்தளிப்பது மிகுந்த பரிதாபத்திற்குக் காரணமான விஷயமாகத் தோற்றும்.

முதலில் ஆசார்யாள் வாக்யமாகக் கூறப்பட்டுள்ள கபிலதூஷணம் வரும் பாஷ்ய பாகத்தின் முன் பின் கிரமத்தைப்பற்றி விசாரிப்போம். 'ச்ருதிதான் பரம ஆதாரம். ச்ருதிக்கும் ஸ்மிருதிக்கும் மாறுபாடு உள்ள விடங்களில் ச்ருதியையே கைக்கொள்ளவேண்டும். ச்ருதி உதவியின்றி சில ஸ்மிருதிகர்த்தாக்களுக்கு ஸித்திகள் ஏற்பட்டு அதன் மூலமாக அவர்கள் வெளியிட்ட கொள்கைகளைப் பின்பற்றலாகாதா எனில், வேத ஸம்மதமான தர்மானுஷ்டானமின்றி இந்த ஸித்திகளே ஒருவனுக்கு ஏற்படா: ஆகவே ஸித்தர்கள் வாக்கியப்படி ச்ருதிகளை மாறாகப் பொருள்படுத்தக்கூடாது. மேலும் ஸித்தர்களையே ஆதாரமாகக்கொண்டபோதிலும், அவர்களுள் அபிப்ராயபேதம் ஏற்படும் இடங்களில் ச்ருதியைப் பற்றித்தானே தீர்மானம் செய்யவேண்டும், யுக்தி பலமில்லாதவர்களோ மூடத்தனமாக ஒரு ஸ்மிருதியை வேதத்தைக்கூடக் கவனியாது பிடித்துக்கொள்ளுவர் என்பது கூட இல்லை: இப்படிச் செய்வாராயின் அபிப்ராய பேதத்தால் உண்மை நிலைக்காமல் போய்விடும். ஆதலால் நாம் ஸ்மிருதிகளின் அபிப்ராய பேதங்களை எடுத்துக்காட்டி இன்னவை ச்ருதிக்குப் பொருத்தமானவை இன்னவை மாறானவை என்று பகுத்துக் காட்டவேண்டியது அவசியம். பூர்வபக்ஷத்தோன் கபிலர் சிறப்

பைக் காட்டுவதாகக் கூறும் வேதவாக்ய மாத்திரத்தால் வேதவிரோதமாக அவர் கூறும் கொள்கைகளையும் அங்கீகரிப்பது நியாயமல்லவே (அவன் கூறும் வேதவாக்கியத்தில் வெறும் கபிலர் என்று மாத்திரம்தான் காணப்படுகிறது: புராணத்திலோ ஒரு கபிலர் காணப்படுகிறார். அவர்தான் ஸகரர் பிள்ளைகளை எரித்தவர்: வாஸுதேவர் எனப் பெயர் பெற்றவர். அந்தக் கபில ஸம்பந்த ச்ருதிக்கு வேறு நோக்கமுண்டு: வேறு வாக்யங்களால் வற்புறுத்தப்படாத கபிலர் சிறப்பை ஸ்தாபிப்பதில் அவைகளுக்கு ஆற்றலில்லை.) வேறு ச்ருதிவாக்கியங்களில் மனுவின் சிறப்பு கூறப்பட்டுள்ளது, மனுவின்சொற்கள் மானிடர்மருந்தே என்று. இவர் கொள்கைக்கும் கபிலர் கொள்கைக்கும் விரோதம் உள்ளது. மஹாபாரதத்திலும் கபிலரின் சில கொள்கைகள் மறுக்கப்படுகின்றன'

இங்கு எடுத்துக் காட்டப்படும் பாஷ்யபாகத்தில் தடித்த எழுத்திலிருப்பவைகளை விட்டு வாசித்தால் ஏதாவது பொருட்குறைவு உண்டாகிறதா பாருங்கள்! ஆகவே இந்த பாகம் பாஷ்ய பங்திக்கு அனுவசியம் என்றும், விஷயத்தில் பொருத்தம் உடையதல்லவென்றும் அதிகமாகக் கூறுமலே வாசிப்போருக்குவிளங்கிவிடும். இப்படி பிரஹ்மஸூத்திர பாஷ்யத்தில் கைவைத்த பாபப்புடைய வேதாந்தி இந்த பாகம் குறிக்கும் வேதவாக்ய வ்யாக்யானத்திலும் கைவைக்காமல் போகவில்லை. அங்குள்ள கபில சப்தத்திற்கு ஸாங்கியப்ரவர்த்தக ஆதிகாரிக ருஷியான கபிலர் பொருளல்ல: கபில வர்ணமுடைய ஆதி குருவான ஹிரண்யகர்ப்பர் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக புராண ச்லோகங்கள் எடுக்கப் பட்டுள்ளன. ஆனால் புராணத்திலோ, கபிலர் ஸாங்கியாசாரியர் என்று விஸ்தாரமாகக் கூறப்பட்டு, அவரைத் துதிக்குமிடத்திலும் அவர் ஹிரண்யகர்ப்பரே என்று வற்புறுத்திக் கூறப்படுகிறது. இந்தக் குதர்க்க வேலை செய்த மத துர் அபிமானி இவ்விரண்டு இடங்களிலும் இசைவுகேடாய் அகப்பட்டுக்கொண்டு விட்டான். தோற்றமாத்திரத்தில் இவை, ஸம்பந்தமின்மையாலும், உள்விரோதமுடைமையாலும், ஆசார்யாள் வாக்கல்ல என்று விளங்கிவிட்டபோதிலும், இம்மாதிரி ஆசார்யாள் கூறியிருக்கவே மாட்டார்கள் என்பதற்கு வேண்டிய முகாந்திரங்களை எடுத்துக்காட்டுவோம்.

முக்யமாக ஆசார்யாள் வைதிக அத்வைத ஸித்தாந்தம் பண்ணினவழி வெறும் பரமத கண்டன மாத்திரத்தால் அல்ல. கண்டனமென்பது தீராவிடில்தான் அவர் செய்வது வழக்கம். எந்த மத வாதிகளுடன் அவர் தர்க்கம் பண்ணும்படி வந்தபோதிலும் அவர் அவர்களை கண்டனம் செய்யப்புகாது, அவர்கள் வாய் மொழியாலேயே அவர்கள் மதம் அவர்கள் மதத்திற்குள்ளவேத ஆதாரம் இவைகளை நன்குணர்ந்து, அவர் காட்டும் வேத ஆதாரத்தின் ஸந்தர்ப்ப அமைப்பை நன்கு விளக்கி, அதன் உண்மைப்பொருளை நன்றாக ஸ்தாபித்து, எதிர் கக்ஷிக்காரர்கள் அப்யாஸாதிகளில் உள்ள வைதிக பாகங்களை ஒப்புக்கொண்டு ஸ்தாபித்து, அஞ்ஞான விபரீதங்களால் அவர்களிடமுள்ள அவைதிகபாகங்களைத் தகுந்த முகாந்திரங்களால் கண்டித்து நீக்கி, பின்னர் அவர்கள் மதத்தை அனுஷ்டித்துவந்தால் வேதமுடிவாகிய அத்வைதமே இவ்வாறு வந்தமையும் என்பதை விளக்கிக் காட்டுவர். இதுபற்றியே இந்த மஹானுக்கு ப்ரதிவாதி பயங்கரர், பரமதகண்டனக் கோடாலி முதலிய கொடிய பெயர்கள் வாராது, ஷண்மத ஸ்தாபன அத்வைத ஸித்தாந்தாசாரியர் என்ற பெயர் வழங்கிவருகிறது. இவ்வாறு ஸகல மதங்களின் வைதிக பாகங்களை ஒப்புக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த பரமாசாரியாள் விஷயப் பொருத்தமின்றி அனுவசியமான கண்டனைகள் செய்வார்களா! மதங்களில் உள்ள அவைதிக பாகங்களை நயமாகச் சொல்லி நீக்க முயலுவது இம்மஹான் தன்மையேயொழிய, மஹாபாபமாகிய மதாசாரிய தூஷணை என்பதை இவர் கனவிலும் கருதியவரல்லவே! இப்படிப்பட்ட ஸாத்விகருக்கு, தற்காலத்தில் கொள்கை ஆராய்ச்சியில் ஸம்பந்தப்பட்ட ஆசாரியதூஷணையைக் கலந்து தெருவீதி நாய்கள்போல சண்டையிடும் குதர்க்கிகள் நிலையைக் கொண்டுவந்து விட்டவர்கள் பாபத்தை என்னவென்று சொல்வது! அவர்களுக்குத்தான் தற்காலத்தில் நமது ஷட்தர்சன அனுதாவின் பாபத்தின் பாகம் போய்ச்சேரும்!! மற்றையதர்சன கர்த்தாக்களும் ஆதிகாரிக ருஷிகளல்லவா? அவர்கள் தர்சன கண்டனம்



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 43. கௌவை யகற்று

பழியை நீக்கு என்பது இந்த ஸூத்திரத்தின் பொருள். இதை இரண்டு விதமாகப் பொருள்படுத்தலாம். (1) பாபமென்று சாஸ்திரங்கள் பெரியோர்கள் முதலியவர் பழிக்கும் தொழில்களை அணுகாதுபழகிவரவேண்டும். (2) நம்மேல் பழிவந்துவிடுமாயின் அதை நீக்கி விடவேண்டும் என்றும் பொருள்கொள்ளலாம். இந்தஸூத்திரத்தின் இவ்விருவிதப் பொருள்களிலும் சாஸ்திர ரஹஸ்யங்கள் அடங்கியுள்ளன என்பதை நன்கு விளக்கப் புகுவோம்.

(1) பழிக்கப்படும் செயல்களை அணுகாதே. துஷ்டரைக்கண்டால் தூரவிலகு என்பதுபோல, பாபச்செயல்களைக்கண்டால் அணுகாமலே விலகிவிடவேண்டும். இந்நிலையைவிட்டு பாபச்செயல்களினிடையிலிருந்தால் என்ன? நம்மை என்ன செய்துவிடும்? அவைகளைவிட்டு விலகுவது பயங்குள்ளித்தனம் நமக்கு அவைகளைத் தடுத்து நிற்கவாவது அல்லது அவைகளை சீர்திருத்தவாவது வேண்டிய நற்குண பலமில்லாமலா போய்விட்டது என்ற குதர்க்க யோசனைகளில் ஈடுபட்டு, முன்னரே தடுத்து விலக்கி ஒதுங்கி விடக்கூடிய கொடிய நிலைகளில் புகுந்துவிட மனப்பூர்வமாக முயலுவது வெறும் மூடத்தனமே. இதுவுமன்றி இது மனம் நல்ல நிலையிலிருந்து கீழே நழுவிவிட்டது என்று காட்டும். இந்த நிலையை மனம் அடைந்து பழிக்கப்பட்ட நிலைகளுள் புகுவது, மாடியில் அடிக்கப்பட்டுவரும் பந்து, முதல் மாடிப்படியில் பட்டுத்துள்ளுவதற்குநிகர். இவ்வாறு துள்ளும் பந்து அடிப்பவன் கைதவறி மாடி அடிப்படிவரை எப்படி உருண்டுபோய் விடுமோ அதுபோல மனம் நிலைதவறி முயல்பவன் தொழில்களை வீணாக்கி அதோகதியைத்தான் அடைந்துவிடும். ஆகவே ஒருதரம் பழிக்கும்தொழில்கள் இடையில்போய்விட்டால் இந்த அதோகதி வந்துவிடத் தடையில்லை. இதனால் மேல் மறுபடி அபிவிருத்தியாகி முன்னிலைக்கு வருவது மிகக் கடினம். இதுவுமன்றி கெட்டநிலைகளுள் ஈடுபடும் துர் அப்யாஸத்தால் துர்வாஸனை பலத்து நமது எதிர்முயற்சியை பலமாகத் தடுக்கும் ஆற்றலுண்டாகிறது. இந்தக் கொடுமைகள் எல்லாம் உற்றுநோக்கி பழிக்கப்படும் தொழில்களை விலக்கவே முயலவேண்டும்.

அவைகளை விலக்கமுடியாது அவைகளுக்கு இடையிலிருந்து தடுக்கும் துரதிர்ஷ்டம் வந்துவிட்டாலும், நமது முயற்சியின் சிறுபாகம் அவைகளைத் தடுப்பதற்கும் மிகுதியான பாகம் அவைகளைவிட்டு வெளியேறுவதற்கும்தான் உபயோகப்படுத்தப் படவேண்டும். அதனுள்ளேயே இருந்து காலங்கழிப்பது அதிக வேலையை உடைய எதிரி இடையில் அகப்பட்டுக்கொண்ட ஒருவன் அவனோடேயே சண்டைசெய்ய முயன்று கொண்டிருப்பது போலாம் முடிவில் இவனும் கொடியவனாகி விடவேண்டியதுதான். மஹாபாரதத்தில் மஹாதர்மாத்மாவான கர்ணன் பழிக்கப்பட்ட துர்யோ

---

(138-வது பக்கத் தொடர்ச்சி.)

செய்யுமிடங்களில் எல்லாம் இப்படி ஆசார்ய தூஷணம் காணப்படவில்லையே! ஆதலால் ஸர்வமதசோதக ஸ்தாபகரான ஆசார்யாள் இம்மாதிரி கபிலருஷி தூஷணம் செய்ய நியாயமே இல்லை. இந்த இடத்தில் ஆசார்யாள் கூறவந்தது 'வேதத்தில் ஒரு ஆதிகாரிகருஷி பெயர் வந்துள்ளது: ஆதலால் அவர் இயற்றிய சாஸ்திரக் கொள்கைகளை எல்லாம், வேதவிரோதமாயினும் அங்கீகரித்து விடவேண்டும் வேதத்தை ஒதுக்கிவிட்டு, என்று கூறுவது நியாயமன்று' என்பதே. இந்தப் பொது விஷயத்தில் கபில தூஷணம் வேண்டியதில்லையே! ஏதாவது ஒன்று அவசியமாக இந்தவிடத்தில் கூறவேண்டுமெனில், வேதருஷி அவைதிகக் கொள்கையைக்காட்டி யுக்திவாதம் செய்வதற்குக் காரணம் இன்னது என்பதல்லவா கூறப்பட்டிருக்கவேண்டும். அப்படி இல்லாது மதத்வேஷிகள்போல மதாசாரிய தூஷணத்திலிறங்குவாரா ஷண்மதஸ்தாபன அத்வைதாசாரியர்!

இதுவரையில் மதாசாரிய தூஷணம் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் செய்யக்கூடியதல்ல, ஆதலால் இந்த தர்சன கண்டன வாக்யம் அவரதல்ல என்று விளக்கியாகிவிட்டது. இனி மற்றைய சாஸ்திர புராணாதாரங்களை எடுத்துக்காட்டி அவைகளை உணர்ந்த ஆசாரியாள் இவ்வாறு முழுமோசமாகக் கூற முகாந்திரமே இல்லை என்பதை நிலைநாட்டுவோம்.

தனாதிகளிடமே பழகும்படி நேர்ந்துவிட்டபடியால் துஷ்ட சதுஷ்டயர்களுள் ஒருவனாகும்படி நேர்ந்துவிடவில்லையா? ஸஹவாஸ தோஷத்தால் நாம் கெட்டுப் போவதும் இதற்கு உதாரணம் தான்.

இப்படி பழித்தொழில்களை அகற்றிவரும் பொழுதும் கஷ்டகாலங்களில் நமக்கு அவைகளைச் செய்யவேண்டுமென்ற கட்டாயம் வந்துவிடலாம். அப்பொழுதும் அவைகளைச் செய்யாது விலக்கவேண்டும் என்ற குறிப்பையும் அடக்கியுள்ளது இந்த ஸூத்திரம். புலி பசித்தாலும் புல்லைத்தின்னுமா என்ற வீரியத்துடன் பழிக்கப்படும் தொழில்களை எக்காலத்திலும் மனதில்கூட எண்ணாதிருக்கவே முயலவேண்டும். இந்நிலைக்கு உதாரணமாக உள்ளவன் ஹரிச்சந்திரன். அவன் கொடிய தருணங்களிலும் பழித்தொழிலாகிய பொய்யை அணுகாதிருந்ததே இதற்குத்தகுந்த திருஷ்டாந்தம். இம்மாதிரியே நமது புராணாதிகளில் கடவுளது சோதனையில் பழிசம்பந்தமின்றி தேறி அவர் கருணைக்குப் பாத்திரமாவதாகக் காணப்படும் பக்தகோடிகளெல்லாம் இந்த கௌவையகற்றுவதற்கு உதாரணம்தான், ப்ரஹ்லாதர், சிபி, முதலியோர் போன்றவர்கள்.

(2) வந்தபழியை நீக்கவேண்டும்:—ஒருவன் மேல் உண்மையாகவோ மாறாகவோ பழிவந்து சுமருவது உலகில் ஸாதாரணமாக உள்ளதுதான். அந்த ஸமயத்தில் அதைநீக்கமுயற்சிகள் செய்யவேண்டியது அவசியம் என்று இந்த ஸூத்திரம் வற்புறுத்துகிறது. நியாயமாக உள்ளபடி ஒருவன்மேல் பழிசுமந்து விட்டால் அவன் தண்டனை ப்ராயச்சித்தாதிகளுக்கு உட்பட்டு அதை நீக்கிக்கொள்ளவேண்டியதுதான். அநியாயமாக ஒன்றுமறியாதவன்மேல் பழிவந்தால் அவன் ஏன் இவைகளால் அதை நீக்க முயலவேண்டும் என்ற சங்கைவரலாம். அதற்கு சாஸ்திரம்ஒருவன்மேல் அநியாயமாகப் பழிசுமருங்காலத்திலும் ஏதோ ஒரு முகாந்தரத்தால் தான் அதுவரும், அந்தமுகாந்திரத்திற்கு இடம் கொடுத்த குற்றம் அவனிடம் இருப்பதால் அதுவரையில் பச்சாத்தாபப்பட்டு, அந்நிலையில் மறுபடியும் போகலாகாது என்று உறுதிபண்ணிக்கொண்டு, தகுந்த ப்ராயச்சித்தத்தையும் அவனும் செய்துகொள்ள வேண்டியதுதான் என்று விதிக்கிறது. இப்படிச்செய்தால் அவனும் பழியை முற்றிலும் அகற்றியதாகும். இதோடில்லாது பழியை முற்றிலும் நீக்க ஒருவன் தனக்கு பழிவந்தவழியைப் புகுந்து விசாரித்து அதன் உண்மையை வெளிப்படுத்த முடிந்தால் அப்படியும் நீக்கிக்கொள்ளவேண்டியதுதான்.

இந்த விஷயத்தில் வெறும்பச்சாத்தாபம் மாத்திரம் போதாது. இது மறுபடி இதேமாதிரி பழிவரக்கூடிய நிலைவந்தால் திடீரென்று புகுந்துவிடவேண்டும் என்ற எண்ணம் உண்டாகாமல்தான் தடுக்கும்; மனம்மிகுந்த பாபமுடையதாயின் இதைமீறிவெளிப்பட்டுவிடலாம். இந்த மனதில் துர்வாஸனைகளுக்கு அநுகூலமாக உள்ள பாபப் பதிவுகளைத் தடுத்து அழிக்க பலமான புண்யமாயும் தேஹ அமைப்பு ஸம்பந்தமாயுமுள்ள பட்டினி, நிலைத்தஜபம், தீர்த்தயாத்திரை ரூபமான ப்ராயச்சித்த கர்மாவும் அவசியம் வேண்டும். இதனால் பச்சாதாபத்தால் குறைந்துவரும் பாபவாஸனைகளுக்கு அனுகூலமாக உள்ள கர்மபதிவுகள் அழிக்கப்பட பச்சாத்தாபத்தால் கெட்டவழிநடப்பது ஸரிவரத் தடைபட்டு ஸந்மார்க்க ப்ரவ்ருத்தி திடப்படும். ஆகவே பழியை வெறும் பச்சாத்தாபத்தோடு நில்லாது ப்ராயச்சித்தத்தாலும் நீக்கவேண்டும். ஆகவே இங்கு அகற்று என்பதற்கு இந்தவிதமாக நீக்கு என்று பொருள்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஸ்வஸ்திரீகளாகிய பெண்சாதி, தாய், ஸகோதரிகள் முதலியவர்களைத் தவிர, மற்றைய ஸ்திரீகளிடம் பழகலாகாது என்பது சாஸ்திர ஒழுங்கு. ஒருவன் ஒருவித கெட்ட எண்ணமும் இல்லாது வேற்றுஸ்திரீ ஒருத்தியுடன்பழகும்படி அவன்தொழிலாலோ வேறு எதாலோ நேர, அதன் வரம்புகடந்து கெடுதல் ஸம்பவிக்கஇடம்தராது அந்தஸ்திரீயுடன் அவன்பழகுவதாக வைத்துக் கொள்ளுவோம். இதனால் இவன் எவ்வளவு சுத்தனாயினும், சீக்கிரம் உலக அபவாதம் இவனுக்கு வந்துவிடும் என்பது நிச்சயம். இது அவனுக்கும் தெரிந்ததுதான். இந்த அபவாதம் வந்து விட்டால் கௌவையகற்று என்பதை அவன் பின்பற்றுவது எப்படி என்ற சங்கைவரலாம் தத்காலத்திய நாகரிகம் பலத்த பலருக்கு. முதலில் புத்திமானாயின் நம்மிடம் இந்த அபவாதம் வரக் காரணம் என்ன என்று யோசித்து, இதைத்



தூண்டும் காரணமான காரியமில்லாக்காலங்களில் அந்த ஸ்திரீயுடன் பழகுவது, அடிக்கடி அவளுடன் ஏகாந்தத்தில் பழகும்படி தருணம் வாராது காத்து விலகுவது, அநேகர் முன்னிலையில் பழகிவருவதிலும் ஸந்தேஹத்திற்கு இடனான நடவடிக்கைகளுக்கு இடங்கொடாதிருப்பது, கூடியவரையில்அவளைவிட்டு ஒதுங்கப்பார்ப்பது, இவைகளைக் கடைப்பிடித்து அபவாத காரணங்களைக் குறைக்கப்பார்த்து, முடிவில்அவளைவிட்டு ஸாவதானமாக விலகவும் பார்க்கவேண்டும். இப்படி எல்லாம் ஒழுங்காகச் செய்து வெளிப்படுவதற்கு 'நாம் தான் ஒரு கெடுதியும் எண்ணாது இவளோடு பழகிவர கெட்ட உலகம் நம்மைப் பழிக்கிறது' என்ற இறுமாப்பு இருக்கவேகூடாது. இதுஇருந்தால் அந்த ஸ்திரீயோடு அவனை அதிகமாகப் பழகச்செய்து அதோகதிக்கு கொண்டு வந்து விட்டுவிடும். இப்படி இல்லாது நாம் எவ்வளவு சுத்தனாயினும் நாம் பழகுவது வேற்று ஸ்திரீயுடன் தானே. ஒருவேளை நமது நடவடிக்கை ஸந்தேஹத்திற்கு இடனாகத்தான் உள்ளதோ! பார்த்து அவைகளை ஸரிப்படுத்தி ஒதுங்கப் பார்ப்போம்' என்று நிதான ஆராய்ச்சிவரவேண்டும். இது வந்து நமது நடத்தைக்குற்றம் வெளியானதும் பச்சாத்தாபம் ப்ராயச்சித்தம் இவைகளைத் தகுந்தபடி சாஸ்திரீயமாக நடத்தி அந்த ஸ்திரீப் பழக்கத்தைக் குறைத்து வெளிப்பட முயலவேண்டும். இதுபோலவேதான் பரபுருஷர் பழக்கம் ஏற்படக்கூடிய ஸ்திரீகளும் துஸ்ஸங்கம் ஏற்பட்டிருக்கும் இருபாலாரும் நிதானம், பகுத்தறிவு, பச்சாத்தாபம், ப்ராயச்சித்தம் ஸாவதான ஒதுக்கம் இவைகளால் கௌவை அகற்ற முயலவேண்டும்

நமது புராணங்களில் கௌவையகற்ற நமது பெரியோர் பட்டிருக்கும்பாடுகள் பலவுள. ஸ்யமந்தகமணி விருத்தாந்தத்தில் தம்மேல் ஸத்ராஜித்து மஹாராஜன் பழிசுமத்த தகுந்த தன் வேண்டுகோள் முன்னரே உள்ளது என்று நிதானித்துணர்ந்த கிருஷ்ணபரமாத்மா, அந்தப் பழியை அகற்ற அந்தமணி போன வழியைத் தேடிச்சென்று ஜாம்பவானிடம் யுத்தம் செய்து அந்த மணியைக் கைப்பற்றி ஸத்ராஜித்திற்கு அது போனவழியைக் கூற எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டார்? இதுபோலவே பெரியபுராணம் பழியஞ்சிய படலத்தில் வேடன் தன்மேல்வந்த கொலைப்பழியை நீக்கிக்கொள்ள ஓடாது நின்று பாண்டியராஜன் முன்னிலைவர, அவரும் அநியாய தண்டனை விதிக்கும் பழி தமக்கு வாராதிருக்க ஸோமஸுந்தரக் கடவுள் விஷயமாக விரதம் அனுஷ்டித்து அவர் உத்தரவுப்படி மறுநாள் குயவன் வீட்டில் வேடன் கொன்றவனல்ல என்று உணர்ந்ததையும் இங்கு கவனிக்கத் தக்கது. இம்மாதிரி நமது ஸம்பந்தப்பட்டு வரும் அபவாதத்தை ஆராய்ந்துபார்த்து நீக்கி வருவோமாகில் நமது மனம் எளிதில் சுத்தப்பட்டு மோக்ஷமார்க்க வழி நடக்கத் தகுந்த ஆற்றலை எளிதில் பெறும்.

# மொழி பெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

### Earliest Grief

The first sense of sorrow I ever knew was upon the death of my father, at which time I was not quite five years of age; but was rather amazed at what all the house meant, than possessed with a real understanding why nobody was willing to play with me. I remember I went into the room where his body lay, and my mother sat weeping alone by it. I had my battledore in my hand, and fell a beating the coffin, and calling papa, for I know not how I had some slight idea that he was locked up there. My mother caught me in her arms, and transported beyond all patience of the silent grief she was before in, she almost smothered me in her embraces; and told me in a flood of tears, papa could not hear me, and would play with me no more, for they were going to put him under ground, whence he could never come to us again. She was a very beautiful woman, of a noble spirit, and there was a dignity in her grief amidst all the wildness of her transport, which methought struck me with an instinct of sorrow, that, before I was sensible what it was to grieve, seized my very soul, and has made pity the weakness of my heart ever since.

# மஹாபாரதக் கதைகள்
## STORIES FROM MAHABHARATA
### ஸுரபீ உபாக்யானம்

துர்யோதனன் அசேதனனாயிருந்தாலும்,
புத்ரவாஞ்சையால் அவனைக் கைவிட முடிய
வில்லை யென்று கூறின திருதராஷ்டிரரை
நோக்கி வியாஸர் இந்த உபாக்கியானத்தைச்
சொல்லுகிறார்:—

ஜகத்திலுள்ள பசுக்கள், எருதுகள்
இவைகளுக்கெல்லாம் மாதாவாகிய ஸுரபீ,
ஒரு ஸமயத்தில் கண்ணீர் சொரியச் சொரிய
அழுதுகொண்டு இந்திரன் முன் சென்று நின்
றாள். அவளைப்பார்த்து மிகவும் மனம் தளர்ந்து
"அன்னையே, நீ ஏன் இவ்வாறு அழுகிறாய்.
தேவதைகளெல்லாம் க்ஷேமம்தானே" என்று
இந்திரன் கேட்டார்.

ஸுரபீ:—தேவர்களுக்கு யாதொரு அபா
யமுமில்லை. என்னுடைய புத்திரர்களில் ஒரு
வன் நிமித்தம் இந்தப் பெருந்துக்கம் என
க்கு நேர்ந்திருக்கிறது. இதோ பூலோகத்
தில் ஒரு அல்ப குடியானவன் என்னுடைய
மிகவும் துர்பலமுள்ள அருமைப்பிள்ளை ஒரு
வனுக்குச் செய்யும் கொடுமையைப் பாரீர்;
கலப்பையை இழுத்து இழுத்து அயர்ந்து
போய் இனி இழுக்கமுடியாமல் மிகவும் ஆவ
லுடன் படுத்துக்கொள்ளும் எருது ஒன்றை
சாட்டையால் அடித்தும் தாறினால் குத்துகிற
தையும் பாரீர். இதைப்பார்க்கத்தான் என்ம
னது பதைக்கிறது. கலப்பையில் பூட்டியிருக்
கும் எருதுகளில் ஒன்று நல்ல பலமுள்ளது.
பாரத்தை நன்றாய் வஹித்து இழுக்கிறது. மற்
றொன்றோ அல்ப ப்ராணனுள்ளதாயும், இளைத்
தும், தேகமெல்லாம் எலும்புகளும் நரம்புக
ளும் புடைத்து மிருக்கிறது. குடியானவன்
என்ன அடித்தாலும் தாறினால் தூண்டினாலும்
அது கலப்பையை இழுக்கமாட்டாமல் தத்த
ளிக்கிறது. இதைப்பார்த்துத்தான் எனக்குத்
தாங்கமுடியாத துக்கம் உண்டாயிருக்கிறது.

இந்திரன்:—உனக்கு எண்ணிறந்த புத்திரர்
கள் இருக்கிறார்களே. எல்லோரும் தானே
இவ்விதம் வண்டிகளிலும், கலப்பைகளிலும்
பூட்டப்பட்டு வருந்துகிறார்கள். அப்படியி
ருக்க இந்த ஒரு பிள்ளை படும் கஷ்டத்தைப்
பற்றி ஏன் துக்கம் அடைகிறாய்?

ஸுரபீ:—என்னுடைய எண்ணிறந்த புத்தி
திரர்களில் ஒவ்வொருவரிடத்திலும், எனக்கு
ஸமமான ப்ரீதிதான். ஆகிலும் இந்தப்பிள்ளை
மிகவும் தீனன், துர்பலமுள்ளவன் அதனால்
தான் இவனிடத்தில் அதிக வாஞ்சையும் கிரு
பையும் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஸுரபீ சொல்லவும் இந்திரனு
டைய ஆக்ஞையால் பூலோக முழுதும் மழை
சொரிந்து, குடியானவன் உழவை நிறுத்தி
விடும்படி நேர்ந்தது.

ஆகையால், அரசனே, பாண்டுவைப்போல்
நீரும் என்னுடைய குமாரன்தான்: இருவரிடத்
திலும் எனக்கு ஸமமான ப்ரீதிதான்: உம்மு
டைய நூற்றொரு குமாரர்களும் நீண்டகாலம்
க்ஷேமமாய் இருக்கவேண்டுமென்பதுதான்
னது கோரிக்கை. ஆகிலும், பாண்டு
வின் ஐந்து புதல்வர்களும் கருத்தில்லாதவர்
கள். மிகவும் க்ஷீணதசையை அடைந்தி
ருக்கிறார்கள். அதனால்தான் ஸுரபீ சொன்ன
ப்ரகாரம், அவர்களிடம் எனக்கு அதிகக்ருபை
உண்டாகிறது. இவ்வளவு தீனஸ்திதியை
அடைந்திருக்கும் அவர்கள் எவ்விதம் ஜீவிப்
பார்களோ எவ்விதம் விருத்தியடைகிறார்களோ
என்று எப்பொழுதும் என் மனது பரிதவிக்கி
றது. உம்முடைய மற்ற நூறு புத்திரர்களின்
க்ஷேமத்தை நீர் விரும்புவது உண்மையாகில்
பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்
ளும்படி துர்யோதனனுக்கு நீர் போதிக்க
வேண்டும்.

(141-வது பக்கத் தொடர்ச்சி.)

### துயரத் தொடக்கம்

துயர உணர்வு எனக்கு முதலில் தோன்றியது
என் தகப்பனார் இறந்த காலத்தில்தான்: அப்
பொழுது எனக்கு வயது ஐந்து கூட நிறையவில்லை.
என்னுடன் விளையாட ஒருவரும் வாராததற்குக் கார
ணம் இன்னது என்ற நிஜ உணர்வைவிட, என் மன
தில் வீட்டிலுள்ளோர் கருத்து விளங்காமையால் ஏற்
பட்ட வியப்பே மிகுந்திருந்தது அவர் உடலிருந்த
உள்ளே போனது எனக்கு ஞாபகம் வருகிறது: என்
தாய் தனிமையாக அதனருகே இருந்து அழுது
கொண்டிருந்தாள். என்கையில் பந்தடி மட்டை இருந்
தது: அப்பா! அப்பா!! என்று கூவிக்கொண்டு
பிணப்பெட்டியை அடிக்கத் தொடங்கிவிட்டேன்:
அங்குதான் பூட்டப்பட்டிருக்கிறார் அவர் என்று
எனக்கு அப்பொழுது ஒருவாறு விளங்கினது, இவ்
வாறு என்று கூறமுடியவில்லை. என்தாய் என்னை
வாரிச்சேர்க்க, அவள் அனுபவித்து வந்த உள் துய
ரம் பொறுக்கமுடியாமல் வரம்பு மீறிவிட, என்னை
மூச்சுவிட முடியாது கட்டி அணைத்து, 'அப்பாவுக்கு
நீ சொல்வது கேளாது, உன்னோடு இனி விளையாட
வரவே மாட்டார், எல்லாரும் அவரைக் குழியில்
போட்டுமூடிவிடுவார்கள்: அவர் நம்மிடம் திரும்பியும்
வரமாட்டார்' என்று கண்ணுங் கண்ணீருமாய்க் கூறி
னாள். அவள் மிகுந்தஅழகும் பெருந்தன்மையும் வாய்ந்
தவள்: அவளிடமிருந்த வரம்பு மீறின கொடிய துக்
கத்தில் இருந்த மேன்மை, துக்கஉணர்வை என்
னிடம் புகுத்திவிட்டதுபோலத் தோற்றிற்று. துய
ரப்படுவது இன்னது என்று விளங்கும் முன்னரே
என்மனதை துயரம் நேரே கொள்ளைகொண்டுவிட,
அன்று முதல் இரங்குவதே என்கோழை மனதின்
முக்யமான தளர்ச்சியாக்கிவிட்டது.



# ஐரோப்பிய யுத்தம்
## THE EUROPEAN WAR

பிரான்ஸ் தேசத்தை ஆக்கிரமிப்பதற்கு
இடையூறாய் முளைத்த பெல்ஜியரை வழிக்குக்
கொண்டு வரவேண்டி லீஜ் என்னும் கோட்
டையை, ஜெர்மானியர் முற்றுகை போட்டனர்,
என்று ஆகஸ்டு 'போதினி' யில் வாசித்தது
நண்பர்களுக்கு ஞாபக மிருக்கலாம். ஜெர்மனி
யின் எண்ணமோ, 1870-ம் வருஷத்தில் செய்
ததுபோல பிராஞ்சுக்காரர் யுத்த முஸ்தீப் செ
ய்வதற்குள் அவர்கள் இராஜதானியாகிய பாரிஸ்
ஸைக் கைப்பற்றிவிடலா மென்பதுதான். சிறு
இராஜ்யமாகிய பெல்ஜியம் 'வழி விடோம்'
என்று குறுக்கிட்ட பொழுதும் குறைந்த எண்
ணிக்கையுள்ளபெல்ஜியர்களை ஒரு கொடிப்பொ
ழுதில் சின்னாபின்னப் படுத்தி தங்களெண்ண
த்தை ஸாதித்து விடுவதாகவே ஜெர்மானியர்
நம்பியிருந்தனர். ஆயினும் நாமொன்று நினைக்
க தெய்வமொன்று எண்ணுவது, அனுபவ
ஸித்தமல்லவா ?

ஸ்வேச்சையையும், ஸ்வதேசாபிமானத்தை
யும் உயிரெனக் கருதும் பெல்ஜியர்களோ யுத்
தப்பயிற்சியில் தேர்ந்து பேர்பெற்றவும் அளவு
சங்கியை யில்லாததுமான ஜெர்மன் ஸைன்யத்
துடன் தைர்யமாய் யுத்தம் செய்தது மல்லா
மல், தங்களுடைய பராக்ரமத்தால் ஜெர்மனியை
சிறிதுகாலம் கைகாலாடவொட்டாமல் செய்து
ஆசந்த்ரார்க்கமான கீர்த்தியை ஸம்பாதித்துக்
கொண்டார்கள். எனவே வழிப்பட்ட பெல்ஜி
யர்களை ஜயித்து வசமாக்குவதே ஜெர்மனிக்
குப் பெரும்பாடாகி விட்டது.

முதற் கோணல் முற்றுங் கோணலல்லவா ?

இந்த பெல்ஜிய யுத்தம் முடிவதற்குள் பிரா
ன்ஸ், ருஷ்யா முதலிய தேசங்களி லெல்லாம்
யுத்த ஸன்னாகங்கள் குறைவரத் தயாரித்து
விட்டார்கள். சென்ற போதினியில் விளக்கி
யுள்ள அநேக முகாந்திரங்களை முன்னிட்டு
பெல்ஜியர்களுக்கு உதவிபுரிய ஒப்புக்கொண்ட
இங்கிலாந்தில், வேரூன்றியபுகழ்வகித்த கிச்சன
ரால் ஜாக்ரதைசெய்யப்பட்ட இங்கிலீஷ் ஸைன்
யமொன்று எதிரிக்குத் தெரியாமல் வெகு
ஸாமர்த்தியமாக பெல்ஜியருக்கு உதவிசெய்ய
வந்துவிட்டது.

எவ்வளவு வீரத்தோடுதான் யுத்தம் செய்யி
னென்ன ? வீரர்களான கணக்கிறந்த ஜெர்மன்
சேனாஸைன்யத்துடன் சிறு ராஜ்யமாகிய பெ
ல்ஜியம் எவ்வளவுநாள்தான் போராடமுடியும் ?
பிரான்ஸ், இங்கிலாந்து சகாயத்திற்கு வந்தபிற
கு தான் அகோரமான யுத்தம் தொடங்கியது.

ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி முதல் யுத்தம்
மும்முரமாக வாரம்பிக்க, லீஜ், நேமர், ப்ரஸ
ல்ஸ் முதலிய கோட்டைப் பட்டணங்கள் வெகு
பிரயாஸையின் பேரில் ஒவ்வொன்றாக ஜெர்மா
னியர் வசமாயின. தற்சமயம் பெல்ஜிய ஸே
னை முழுவதும் வடமேற்கு மூலையி லுள்ள
'ஆண்ட்வெர்ப்' என்னும் மிகுந்த பலமுள்ள
கோட்டையில் ஜெர்மன் முற்றுகையுட் பட்டி
ருக்கிறது. ஆயினும் தீர்மானமான ஜயம்
ஒருவர் பக்கமும் ஆனதாக இன்னும் சொல்ல
முடியாது. இடைவிடாது 20-ம் தேதி முதல்
நடந்து வரும் யுத்தத்தில் ஜயம் சில ஸமயம்
நம்மவர் பக்கமும், சிலஸமயம் எதிரி பக்கமு
மாக இருப்பினும், மொத்தமாய் அனுகூலம்
இதுவரை நமக்கே யொழிய ஜெர்மானிய
ருக்கு சிறிது மில்லை.

ஆகவே தாங்கள் முதற்கொண்ட யோசனை
யை விடுத்து ஜெர்மானியர் இப்பொழுது வே
றுயுக்தி தொடுத்திருக்கிறார்கள். பிரான்ஸ்
சுற்றெல்லையில் 100-மைல் நீள விஸ்தீர்ணத்
திற்குத் தங்கள் ஸேனா ஸமூகத்தைநாட்டி பாரி
ஸ்ஸை மெதுவாக நெருக்கி, கவர்வதற்கு வழி
பார்க்கிறார்கள். இடையிடையே ஆகாயக்கப்
பல்களிலிருந்து வெடிகுண்டுகளைப் பட்டணங்

(142-வது பக்கத் தொடர்ச்சி.)

களின் மத்தியிலிட்டு ஜனங்களுக்குப் பயத்தையும் சேதத்தையும் உண்டுபண்ணுகிறார்கள். என்றாலும், பணங்காட்டு சல சலப்புக்கு அஞ்சும் நரி பிராஞ்சுக்காரரல்ல.

தத்ஸமயம் ஸாயிஸ்ஸன்ஸ், அயின் என்னும் இடங்களைச் சுற்றிலுமே மனதில் நினைக்கரிய கடும்போர் விளைந்து வருகின்றது. வெகு சீக்கிரத்தில் ப்ரபலமான சண்டையொன்று நேர்ந்து இன்னார் பக்கமே ஜயம் என்று நிஸ்ஸந்தேகமாகத் தெளிந்துவிடும் எனத் தோன்றுகிறது. நம்மவர் பக்கமே ஜயமிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

நிற்க, இந்தக் கோர யுத்தத்திற்குக் காரணபூதமானது ஆஸ்ட்ரியா என்பது ஞாபகமிருக்கலாம். ஜெர்மனியின் பேச்சைக்கேட்டு ஸெர்வியாவை அடியோடழித்து மத்தியக் கடலுக்கு வழிதேடவேண்டும் என்றெண்ணிய ஆஸ்ட்ரியாவின் யோசனைகளெல்லாம் சண்டமாருதமெதிர்த்த சரகென ஆயது. ஸெர்விய ஜனங்களிடமுள்ள ஸ்வஜாதி அபிமானத்தை முன்னிட்டும் ஜெர்மனி மத்யக்கடலில் ப்ரவேசித்து ஸெர்வியாவும் நாசமடைந்தால் தங்கள் உயிருக்கே உலை வைத்துவிடுவார்கள் என்னும் ஸ்வயநன்மையைக் கருதிய பயத்தை முன்னிட்டும் ஸெர்வியாவின் ஒத்தாசைக்கு ருஷ்யா வந்ததல்லவா? இரு ராஜ்யங்களும் ஒன்று கூடி ஆஸ்ட்ரியாவை அநேக யுத்தங்களில் புறங்காட்டச் சிதறி அடித்து அவர்கள் வசமிருந்த யுத்த ஸாமக்கிரியை முழுமையும் கவர்ந்து கொண்டனர். மேலும் வீரமும், ஸாமர்த்தியமும், பலமும், பணமும் பொருந்திய அநேக ஆஸ்ட்ரிய வீரர் இந்த யுத்தங்களில் பெரும்பான்மை மடிந்து விட்டபடியால் ஆஸ்ட்ரிய ஸைன்யம் ஊறு செய்ய பலனின்றி பரிதபிக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது.

இதோடு விடாமல் ருஷ்யர்கள் ஜெர்மனிக்குள்ளும் புகுந்து கிழ்ப்ரஷ்யக்கோட்டைகளைப் பிடிக்க யத்தனித்துவிட்டார்கள். ஆகவே, தங்களெண்ணத்தை சுலபமாக நிறைவேற்றலாமெனக் கருதிய ஜெர்மானியருக்கு பலம் மிகுந்த எதிரிகளோடு பொருது ப்ரஷ்யாவை விட்டு ஓட்டுவதே ப்ரம்மப்ரயத்னமாகி விட்டது. என்றாலும், சேனைப் பெருக்கினாலும் போர் வீரர்களுடைய விடாமுயற்சியாலும் தங்களெண்ணம் சபலமானது என்னும் ரோஷத்தாலும் இன்னம் முறிவின்றியும் தளர்வுறுமலும் ஜெர்மானியர் போர் புரிகின்றார்கள்.

ஐயோ பாவம்! அவர்களுக்கு விபத்தாக இன்னொரு ஸம்பவம் முளைக்கத் தலைப்பட்டுவிட்டது. யுத்த ஸந்நாகங்களும் ஸைன்ய போஷணாத்ரவ்யங்களும் வரவரக்குறையவாரம்பிக்கின்றன. தங்கள் நாட்டு எல்லையை நீங்காத பிராஞ்சுக்காரருக்கோ விசாரமில்லை. இந்தியா, அமெரிக்கா, முதலிய இடங்களிலிருந்து ஏராளமான தான்ய வரவுபெறும் இங்கிலாந்திற்கும் பயம் சிறிதுமில்லை. நாடுவிட்டு பரதேசத்தில் சண்டையிடும் ஜெர்மானியருக்கும் வெளி ஒத்தாசை வருவதற்கியலாத பெல்ஜியருக்கும் கஷ்டமே.

நிற்க, கப்பற்படையின் ஸ்திதியை சற்று விசாரிப்போம். இங்கிலீஷ் ஸேனை, இங்கிலீஷ் கால்வாயிலும், வட ஸமுத்திரத்திலும், தெற்கில் மால்டா, ஜிப்ரால்டரிலும் இருப்பதால் ஜெர்மானியர் படை ஒரு திக்கிலும் அசைய முடியாமல் கியேல் என்னும் ஸந்தியில் அடைபட்டிருக்கிறது. எனவே, இரு படைக்கும் ப்ரபல யுத்தமாரம்பிக்க அவகாசம் இன்னும் ஏற்படவில்லை. இருபக்கங்களிலும் அநேக கப்பல்கள் பிடிபட்டு வெகு விதத்திலும் பெருநஷ்டம் விளைந்திருக்கிறது. வங்காள ஸமுத்திரத்தில் நிர்த்தூளி செய்து இந்தியாவிற்கு இதுவரை பெருத்த நஷ்டம் விளைவித்த எம்டன்போன்ற சில கப்பல்கள் எவ்விதமோ வெளிவந்து ஜனங்களுக்கு மனவமைதியின்மையையும் வீண் கிலியையும் உண்டுபண்ணி அனர்த்தம் விளைக்கின்றன. ஆயினும் ஸகாயத்துக்கு ஜப்பான் போர்க்கப்பலோடு கூடிய இங்கிலீஷ் போர்க்கப்பல்கள் வங்காளக்கடலைப் பாதுகாக்கப் புறப்பட்டபடியால் இம்மாதிரி துராகிருதமான செய்கைகள் இனி நடவா என நாம் நம்பலாம்.

இந்த பரிதாபகரமான யுத்தத்தில் விளைந்திருக்கும் நஷ்டத்திற்கோ கணக்கு வழக்கில்லை. இருதிறத்திலும் மடிந்திருக்கும்ஜனத்தொகைக்கு அளவில்லை. படைஸமுகம், பணச்செலவு இவைகளை நினைத்தலுமரிது. போதாக்குறைக்கு தங்கள் யுக்திகள் வ்யர்த்தமான கோபத்தாலோ, பகைவரின் மத்தியில் தங்கள்



ஸைந்யங்கள் இருக்கவேண்டிய ஜாக்ரதையை யுத்தேசித்தோ, தங்கள் கைப்பட்ட ஜனங்களைக் கொல்வதும் நகரங்களைத்தீக்கிரையிடுவதுமாக விருக்கின்றனர் ஜெர்மானியர்கள். நாகரீகத் தேர்ச்சியில் மிகப் பிரக்யாதிபெற்ற லூவேன், ரீம்ஸ், முதலிய நகரங்களையும், கோடானுகோடி புஸ்தகங்களடங்கிய புஸ்தகசாலைகளையும் ஸூக்ஷ்ம வேலைப்பாடுள்ள அத்யத்புதமான கோவில்களையும் நெருப்பிற்கிரையிட்ட ஜெர்மானியரின் கொடுமை விபஸனிக்கத் தகுந்ததே.

யுத்தப் பயிற்சியிலும் மந்திராலோசனைகளிலும் தேர்ச்சியுற்ற சிலர், இவ்யுத்தம் முடிவதற்கு வெகுகாலம் செல்லுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். என்பதால் பொருள் நஷ்டமும் உயிர்ச்சேதமும் இன்னம் ஒழிந்தபாடில்லை. ஜெர்மானியரோ கேவலம் ரக்தாவேசம்கொண்ட காட்டுமிராண்டியர் என்று சொல்ல இடமில்லை. யுத்தப்பயிற்சியிலும், பாஷாஞானத்திலும், தத்வசாஸ்த்ரங்களிலும் சிறந்த நிபுணர்கள் ஜெர்மனியில் பலருளர். ஆகவே ஜெர்மானியரின் முழு அழிவும் உலகத்துக்கோர் பெரு நஷ்டமே என்பது வெளியாகும்.

முடிவில் இங்கிலீஷ் முதலிய படைகள் ஜெயித்து ஜெர்மானியப் படை அடியோடழிந்து ஐரோப்பா கேவலம் பிணகளமாகவேண்டும் என்றெண்ணாமல் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கைக்கொள்வதற்கு வேண்டிய நற்புத்தியையும் நல்ல சிந்தையையும் ஜெர்மானியருக்களித்து உலகத்திற்கு இதத்தை விளைவிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

---

**ஓர் அற்புதகடியாரம்:**—பாஸ்டன் எடிஸன் கம்பெனியார் தங்கள் வ்யாபார விளம்பரமொன்று தயார் செய்திருக்கிறார்கள். அதன் அகலம் 64 அடி உயரம் 60½ அடி. அதில் ஓரு கடியாரம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. அக்கடியாரத்து டயலின் (Dial) குறுக்களவு 31½ அடி. அதன் இருபுறத்திலும் வரிசைவரிசையாய் மின்சார விளக்குகள் பதிக்கப்பட்டிருக்கின்றன நிமிஷங்காட்டும் முள்ளின் நீளம் 18½ அடி. மணிகாட்டும் முள்ளின் நீளம் 14 அடி 4 அங்குலம் இவை முறையே 488,386 பவுன் நிறையுள்ளவை. மொத்தநிறையோ 15 டன். இதில் 6322 மின்சார விளக்குகள் இருக்கின்றன.

# ராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

இராம னேவினன் இருவெவ் வம்புகள்
இருகால் களையும் இடம்பெயர்த் தேகி
அய்யனைச் சார்ந்தன அம்புகளிரண்டும்.
கும்பகர்ணனும் குப்பற விழுந்து
தேகம் குழலியா தேவி பூமியும்
அம்மியாக் கொண்டு அரக்க வீரத்தால்
வானர வீரரை வாடிட அரைத்தான்
இவன் வீரத்தை இராமன் மெச்சி
அரக்கனி புகழை அதிகமாய்ப் புகன்று
ஓர்வாளியினால் தலையை யுருட்டினான்.
வாளியும் சென்றரக் கன்றலை வாங்கி
கங்கையில் மூழ்கி கருப்பனை யடைந்தது.
செய்தியைச் சாரணர் சென்னிபத் துடையாற்
கறிக்கை யிடலும் அலறி படிமிசை
சகோதர வாஞ்சையை சகிக்கலாற்றாது
வீழ்ந்து புலம்பினன் வீர னிராவணன்.
உலக வாஞ்சையை யாவரே ஒழித்தவர்?
சகோதரன் றன்னைச் சாகவென் றீந்த
மானுட ரன்றிமற் றியார்தா னறிவர்?
இராவணன் றன்னை இந்திர ஜித்துவும்
ஆற்றித் தேற்றி, 'அந்த மனிதரை
ஈதோ சென்று எமனுல கனுப்புவேன்'
என்றே கூறி ஏகினன் போர்க்களம்.
இராவணன் பிள்ளைகள் இளையோன் பிள்ளைகள்
யாவரும் சென்று எமனுல கடைந்தனர்,
அங்கதன் அனுமான் முதலிய வீரரால்.
இராக்கதப் படையெலாம் எடுத்தன ஓட்டம்
இதனைக் கண்ட இந்திரஜித்து
இலக்குவ னிடத்து இரதம் செலுத்தி
சாபங் குனித்துச் சாடினன் சரத்தால்.
இதனால் வெகுண்டு இளைய பெருமாள்
வில்லை வளைத்து வில்லொலி காட்டி
கடுகடுப் புடனே கனவம் பெய்து
எதிரியை வாட்டி எதிரிலா திருந்தார்.
இராவணி தேரிலும் இலக்குவன் பாரிலும்
நின்று இருந்து நெடும்போர் புரிவதை
அங்கதன் கண்டு அய்யனைத் தூக்கி
வாகன வடிவாய் விளங்கினன் மாதோ.
இதனை நோக்கிய இந்திர ஜித்துவும்
கதையொன் றெடுத்து கடுமையோ டேவினன்.
அதையு மிலக்குவ னிருதுண்டாக்கினன்.
இலக்குவன் பலபல கணைகளாலிராவணி
அகத்தினை வாட்டலும் அலமந்து நின்றபின்
மாயையால் வானில் மறைந்துபோ யினனே.
'மறைந்தா னரக்கன் மறைந்தா' னெனவே
வானரர் மனத்தின் வாட்டமொழித்தனர்.
அந்த வேளையில் அந்தரத் திருந்து

பறந்து பிரமனின் படைவந்துற்று
மையனின் படைகளை மயக்கத் தாழ்த்தலும்,
மற்றுநா கக்கணை மாய னிராவணி
ஏவியா வரையு மிறுக்கிப் பிணித்து
இலக்குண வேந்தனை எடுத்திட முயன்றான்.
அதனைக் கண்ட அனுமப் பெயரினன்
ஓங்கி ஓர்மிதி மிதித்தனுப் பினனே.
இராவணி சென்று இராவண னிடத்து
வீரச் செயல்களை விளம்பியின் புற்று
நடன மாதர் நடித்திடல் நோக்கி
இராவணன் புகழ்ந்திட இருந்தனன் மாதோ.
அரக்கர் யாவரும் அரக்கனைப் புகழ்ந்து
அன்புடன் வாழ்த்தி அகமகிழ்ந் தனரே.
நிற்க.
வீரன் வீடணன் அனுமசாம் புவந்தாள்
மூவரும் முருந்தனை யெழுப்பிட நினைத்து
வழிதெரியாது வாடலும் கிழவன்
சாம்பு வந்தனும், "சாற்று வதைக்கேள்
அஞ்சனை புத்திரா! அனுமனே! உந்தன்
ஆற்றலை யாவரோ அறைந்திட வல்லார்?
ஆதவன் றனைப் பழமென அகத்தெணி
பாய்ந்து கவ்விய பராக்கிர மசாலியே!
இலங்கையை எரித்த இராம தூதனே!
சடுதியிற் சென்று சஞ்சீவி மலையைத்
தூக்கி வருதி தூதுவ!" என்றான்.
இயம்பலு மனுமன் ஏகினன் பரிந்து.
பரிந்து சென்று பர்வத மெடுத்து
சடிதில் மீளவும் காற்றுமேற் பட்டிட
உடனே உயிர்த்து யாவரு மெழுந்தனர்.
போதிலும் போயில தாவ பாசமும்.
இதனை யறிந்த எம்பிரான் வாகனம்
கருடன் கனவே கத்துடன் வந்து
சுற்றிவந்திடலும் சுருண்டது நாகமும்.
யாவருமுடனே எழுந்து களைத்து
அரக்கர் பலரை அடித்து மடித்தனர்.
இறவாப் பட்ட மிராம னளித்தான்
அஞ்சனை மைந்தன் அனுமந்தற்கு.
சாரண ரோடிச் செய்தியைச் சாற்றலும்
இராவணி திருமி இலக்குண வேந்தனை
பலகணை கொண்டு பதறிட வடித்தான்.
கனகோ பத்துடன் கருப்பனின் தம்பி
கணைகளா லிராவணி காயம் வாட்டி
சாரதி தேரையும் சாய்த்தனன் மாதோ.
இதனைக் கண்ட இராவணன் மைந்தன்
மாயையால் மறைந்து மறைவிடம் சேர்ந்து
நிகும்பலை யாகம் நிகழ்த்திட லுற்றான்.
வீடண னிதனை விண்ணுவுக் குணர்த்தலும்
இராம னிளையனை இனிதிற் கூயி
யாகம் கலைத்திட அனுமனோ டேவினன்.
அனுமன் சென்று யாக மழித்தலும்
இலக்குணன் கணைகளால் இராவணி வாட்டினன்.
வாட்டலு மெழுந்து வளைத்து வில்லை
பல பல கணைகள் பரப்பி, பின்னர்,
"இலக்குவ உன்னை இராமனுங் கண்ணனாய்
எமபுரி புகுந்திட ஏற்றவேன் பாராய்.
என்கணைக் கிலக்கா யாயினை பாபம்!"
எனவே புகன்றனன் இராவணன் மைந்தன்.
இராமனின் தம்பி இலக்குவன் நோக்கி,
பதிற்கணை பலபல மாரிபோர் சொரிந்து
"இராவணி உன்னை இராவணன் தந்தையாய்
என்கணை தன்னால் எமனுல கனுப்புவேன்.
என்கணைக் கிதோ இலக்காய் நின்றாய்
ஓடி யோடி யொளித்திடு கள்ளனே!"
எனவே புகன்று இராவணி யுடம்பை
சல்லடைக் கண்ணாய்ச் சரத்தாற் றுளைத்தனன்.
மற்றும்,
இரதம் சாரதி யாவு மழிந்தன.
இதனைக் கண்ட இராவணன் மைந்தன்,
மறைந்து இலங்கையை மாயையாற் சேர்ந்து
இராவணன் தன்னுடை யிணையடி வணங்கி
"ஐயனே! சீதையை ஐயனைச் சேர்த்தி.
அல்லையேல் மாய்வோம் அடியுடன் அரசே!
சென்னிபத் துடைய சிறப்புடை தந்தாய்!"
எனலும் வேந்தன் இராவணப் பெயரோன்
கொன்றுண் டிடச்செயுங் கோபம் பூண்டு,
"நீல கண்டனும் நிர்மல ரூபியை
அன்பாற் பிணித்து அண்டரை வென்று
எமகண் டகனாய் எண்டிசை புகழ
இலங்கையில் வாழும் எற்கோ புத்தியை
போதித் தனைநீ புந்தியில் லாதவ!
எந்தனுக் கேற்ற பிள்ளைநீ இல்லை.
சாய்ந்தாய் நீயும் சபல நெஞ்சனே!"
எனவே யியம்பி வாளுரை நீத்து
ஓங்கி வெட்டிட ஓடியே வந்தான்.
இதனைக் கண்ட வீர னிராவணி,
"உன்கையாற் சாவதின் உளத்தன் புடையார்க்
கருணை மய்யனின் அன்புடைத் தம்பி
இலக்குண வேந்தன் வில்லினின் றிழியும்
கூரிய அம்பால் கூற்றையு மடைந்திடில்
உண்மையாய் மோக்ஷம் உண்டு எனக்கு.
ஆகையா லாங்கு அடைந்து யான் மாய்வேன்.
பிதாவே யாயினும் பிழையி லிறங்கினாய்.
தந்தைக் காக தனையன் மாய்கிறேன்
இனிமே லாகிலும் இன்பம் பெற்றிட
சீதையைக் கொடுபோய் சேர்ப்பி அய்யனே.
யானிதோ சென்று எமன்வாய்ப் படுவல்"
என்றே கூறி தேரிலே ஏறி
இலக்குண னடைந்து ஈசனைத் தொழுது
சாபம் வளைத்து சரங்களைப் போக்கினான்.
வீரரிருவரும் வெகு நேரம் வரை
பம்பரம் போலே பன்முறை சுழன்று
பலபல அம்புகள் பரப்பினர் மாதோ.



## சூரிய கிரணங்களும் அவைகளின் வேலையும்
## SUNBEAMS AND THEIR WORK

சூரியரச்மிகளால் நமக்குண்டாகும் ப்ரயோஜனங்கள் இரண்டு உண்டு. அவை நமக்கு வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் தருகின்றன. அவைகளின் சகாயத்தாலேயே நாம் எதையும் பார்க்கிறோம். நாமிருக்கும் அறை இருட்டாயிருந்தால் அதிலுள்ள மேஜை, நாற்காலி, சுவர்களிருக்கிற விடம் நமக்குத் தெரியவில்லையல்லவா? ஏன்? அவைகளில் இயற்கையாயுள்ள வெளிச்ச அலைகளில்லை. ஜன்னல்களைத் திறந்தால் சூரியகிரணங்கள் அவை வழியாய் வந்து மோதலும் அலைகள் அறையிலிருக்கிற வஸ்துக்களின் மீதுறைந்து ஸம்பந்திக்கின்றன. பிறகு, கடலிலுள்ள அலைகள் கரையில் மோதி எதிர்த்து அங்கே சென்று கொண்டிருக்கும் படகுகளிலடிப்பதுபோல், அவ்வஸ்துக்களிலிருந்து அலைகள் திரும்பி நம் கண்ணிற் படுகின்றன. அப்பொழுது நமக்கு நாற்காலியின் உருவம் அல்லது மேஜையின் உருவம் தோன்றுகிறது.

சில பதார்த்தங்கள் அநேகமாய் எல்லா அலைகளையும் வாங்கிக்கொண்டு அவைகளைத் திருப்பிவிடுகிறதில்லை. உதாரணமாய், ஒரு சுத்தமான கண்ணாடித் தட்டுக்குள் அலைகள் ஊடுருவிச் செல்கின்றன. ஆனதுபற்றி நாம் சுத்தக்கண்ணாடி யிருக்கிறவிடத்தைச் சாதாரணமாய்ப் பார்க்க முடிகிறதில்லை. சில சமயங்களில் கண்ணாடிக் கதவுகளிருப்பது கூடத்தெரியாமல் நாமவைகளை நொறுக்கிவிடுகிறோம். அதற்கு மாறாகவெள்ளைச் சுவர்களிலிருந்து அநேகமாய் எல்லா அலைகளும் திரும்பி வந்து விடுகின்றன. அவ்வாறே பளபளப்பான உலோகங்களில் அலைகள் நுழைவதேயில்லை. ஆதலாற்றான் எகு இரும்பால் (Steel) செய்யப்பட்ட ஒரு கத்தியையும், வெள்ளியால் செய்யப்பட்ட கரண்டி முதலியவைகளையும் நன்றாய்ப் பார்க்கக் கூடும்.

இப்படி எதிர்த்துவரும் அலைகள் வஸ்துக்களிருப்பதை உணரச் செய்வதோடும் அவைகளை வெவ்வேறு வர்ணங்களோடு நமக்குக் காட்டுகின்றன. ஒரு சூரிய கிரணம் ஓரிலையின் மேல் விழுவதாக வைத்துக் கொள்வோம். அக்கிரணத்தினலைகளிற் சில நமது கண்ணில் மோதி இலையின் பரப்பை அறிவிக்கின்றன. மற்றவை இலைக்குள்ளேயே ஊடுருவிப் பாய்கின்றன. சிவப்பு, ஆரெஞ்ச், மஞ்சள், நீலம், இன்டிகோ, ஊதா ஆகிய இந்த ஆறு * வர்ணங்களுடைய அலைகளும் இலையின் உபயோகத்திற்காக உள்ளே பிடிபட்டுக் கைதிகளாகின்றன. பச்சை வர்ணமான அலைகளை மட்டும் இலை ஆகர்ஷிக்கத் திறமையில்லாமல் விட்டுவிடுகிறது. இவை நங் கண்ணில் வந்து மோதவே, இலை பச்சை நிறமாயிருக்கிற தென்கிறோம். அது காரணம்பற்றி நாம் இலை பச்சை நிறம் என்று சொல்லும்பொழுது, இலைக்கு சூரியரச்மிகளின் பச்சை வர்ணமுள்ள அலைகள் தேவையில்லையாதலால் அவைகளை இலை வெளியில் விட்டுவிடுகிறதென்றும், புஷ்பம் சிவந்த நிறம் எனும் பொழுது அதற்குச் சிவப்ப வர்ணமுள்ள அலைகள் தேவையில்லை யென்றும், மேஜைமேலிருக்கும் துணி வெள்ளை யெனும்பொழுது அது அநேகமாய் எல்லாவலைகளையும் தள்ளிவிடுகிறதென்றும், கறுப்புச்சட்டை எனும்பொழுது அது ஒருவித அலையையும் வெளிவிடுகிறதில்லை யென்றும் அறிவோம். ஆகவே, இலை புஷ்பம், மேஜை முதலான ஒவ்வொரு வஸ்துவுக்கும் இயற்கையாய் அமைந்துள்ள வர்ணம் கிடையாதென்றும், ஒவ்வொரு வர்ணத்தோடு கூடித் தோன்றுவது அந்தந்தவர்ண அலைகளைத் தமக்கு வேண்டாமென்று மறுத்து எதிர்த்தடிக்கிற தென்றும் கேட்க நமக்கு எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது!

இதுவரையில் நாம் வெளிச்சங்கொடுக்கும் அலைகளைக் கூறிவந்தோம். இப்பொழுது வெயிலில் சற்று நமது கையை வைத்துப் பார்ப்போம். சூரியகிரணங்களின் உஷ்ணம் நம் கைக்கு ஏறுகிற தல்லவா? ஆம் அதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? கிரணங்களில் இரண்டுவித அலைகளுண்டு. ஒன்று வெளிச்சத்தைத் தரக்கூடிய தென்றும், ஒன்று உஷ்ணத்தைக்கொடுப்பது என்று மறிகிறோம். சாதாரணமா நம் முகத்தினருகில் ஓர் இரும்புத் தகட்டை வைத்து பார்த்தால் சூடான அலைகள் நம்முகத்தில் விசையா வீசுவது தெரியும். இவ்வித உஷ்ண அலைகள் ஒ சூரிய ரச்மியில் பல்லாயிரமுண்டு. அவை செய்யு வேலை வெகு அற்புதம். காற்றை உஷ்ணப்படுத் மெல்லியதாக்கி உயரக் கிளப்புகின்றன. காற்றோ டம், சுழற்காற்று இவைகளை உண்டாக்குகின்றன. இச்சுழற்காற்றால்தான் நீர்ப் பரப்புகளிலும் சுழல்க ண்டாகின்றன. மற்றுமிவ்வலைகள் தரையில் பட் செடி கொடிகளை வளரச்செய்கின்றன. நம் தேகத் லிருக்கும் சூட்டிற்கு, ஒருபாகம் நேராக சூரியகி ணங்களிலிருந்தும், ஒருபாகம் சுற்றலாக செ கொடிகள் மூலமாகவும் வரும் இவ்வலைகளே ரணம்.

நிலக்கரி பழைய விருட்சங்களா லுண்டாகிற அது கொடுக்கும் சூடு இந்த விருட்சங்கள் முன் கொண்ட சூரிய ரச்மிகளின் சூடே. சாதாரணம எரிகிற கரியால் உலகத்தில் எவ்வளவு விசித்ரமா செயல்கள் நடக்கின்றன! நாம் பார்க்கும் நீராவி ய ரங்களும், புகைக்கப்பல்களும் அதிவேகமாய்த் ளப்படுவது தண்ணீராலிருந்தபோதிலும், அந்நீ ஆவியாக்குவது கரியின் வேலையன்றோ? அதேவி

* From the Fairyland of Science by Miss Buckley

* பார்ப்பதற்கு வெண்மையாய்த் தோன்றினும் சூரியகிரணம் ஏழு வர்ணங்கள் கொண்டதென்று செதுக்கிய கண்ணாடி மூலமாய் கிரணத்தைப் பூரவிட்டுப் பார்த்துத் தெளிக.

## ஆனந்த ராமாயண வெண்பா

## ANANDA RAMAYANA VENBA

சச்சிதா நந்தா மோதானுஞ் சாகரத்தில்
விச்சுவபா ரந்தீர்க்கும் வேட்கையலை—யுச்சிதமாய்த்
தோன்ற வதன்றிவலை சுத்தவான் மாவாகச்
சான்றோர் துதிக்கவருந் தான். 1

எழிலிதயா காச விகல்கோ சலத்திற்
கழிசுத்த சத்துட் கரணம்—மொழிமலிந்த
மாற்றார் வணங்கு மகியன் றயாதனுய்த்
தேற்றமுற வந்த தெனச் செப்பு. 2

இம்மன்னர்க் கான்மா விரண்டோ டிருமகராய்
மும்மை விளக்கமுற முன்வந்தான்—பொம்மலார்
கோன்மருவு நற்புத்தி கோசலையி டந்துரிய
வான்ம ணிராமனு ஞன். 3

குபுத்திகை சேயிபாற் கூறுகன வான்மா
விபுபரத னென்ன விளங்க—நிபுணர் சேர்
சாக்ரான்மா லக்ஷ்மணனுய்ச் சார சமபுத்தி
பார்க்குஞ் சுமித்திரைதன் பால். 4

கொள்ளுஞ் சுழுத்தி குலசத்து ருக்கனரும்
தெள்ளுமணி யிருவர் சென்மித்தார்—உள்ளிற்
கருமணியாங் கண்மணிபோற கார்த்த னரசன்
ஒருமணியாய் வாழ்ந்தன ரொன்று. 5

ராமன் றனைவிசுவா மித்ரமக ரட்சண்ய
மாமனோ வேக மதுவிழுக்க—சேம
விழிப்பான்மா வோடுமே மேவினன் காரும்
இழியாசம் சாரக்கா னில். 6

1 விச்சுவம்=பூமி; 2 உட்கரணம்=அந்தக்கரணம்; 3 ஆன்மா=சுத்தான்மா; பொம்பல் ஆர்கோன்=தயாதன்; 4 கனவான்மா=சொப்னுத்மா; சமபுத்தி=மத்திம புத்தி; 6 விழிப்பான்மா=சாக்ரான்மா;

கெட்ட மனோவிருத்தி சேதஞ்செய் தாடகையின்
கொட்ட மடக்கிக் குனிவில்லா—மட்டில்
மனவோட்டங் கண்டித்து மாசுத்த மாயை
யன சீதையைக் கொண்டா னங்கு. 7

மாயை முன் வாதனையா மாபரசு ராமனையு
பாயத்தாற் றள்ளிப் பகிதய—தேய
வியோம மெனவே விமலர் பரவு
மயோத்தி யடைந்தா னவன். 8

துரியான்ம ராமன் றுயிலான்மா வோடு
விரியுகன வான்மாவை விட்டுப்—பிரிய
விழிப்பான் பேண மிகுசுத்த மாயை
தழுவ சுகந்திளைத் தான். 9

இங்ங ணிகழ விறைசுத்தாங் தக்காணம் (ணிச்
அங்கு துரியான்மாவை யண்டிமகிழ்—பொங்கவெ
சாதனதி யானமெனுந் தார்முடியை ராயனுக்கே.
ஆதரவாய் சூட்டமுயன் றான். 10

சஞ்சலமென் கூனியாற் சங்கதியங் கீதறிந்த
வஞ்சபுத்தி கைகேயி மாசினங்கொண்—டஞ்சாது
சுத்தசத்தாங் தக்காணத் துட்சொப்ப னன்மனே
நித்தங் குடிகொள்ள நின்று. 11

மன்னுந் துரியான்மா வாரிசக்கண் ராகவனார்
இன்னல் சம்சாரக்கா னேகவும்—பின்னர்
அலைந்து வெளிவருகத் தூண்டினு ளாற்றல்
நிலைதோளான் ராமன்முன் னின்று. 12

வஞ்சபுத்தி சொன்ன வழிப்படியே தூமாயை
யெஞ்சா விழிப்பான்மா வின்னவரோ—டஞ்சாத்
துரியான்மா சம்சாரஞ் சூழ்கானஞ் சென்றான்
பெரியாள் விடை யதனைப் பெற்று. 13

பண்பார் துரியான்மா பற்றிலந்தக் கரண
திண்டோள் அரசன் றிருமேனி—மண்மீது
விட்டான்சம் சாரக்காரன் மேவிராமன் டம்ப
மட்டார் விராஞயிர் மாய்த்து. 14

காயமாம் பஞ்சவடி கண்டிரா மன்பஞ்ச
தாயபூதக் குடிலைத் தான்கட்டி—தூய
விசிராந்தி யுற்றார் விருப்பா மரக்கி
யிசிய வெழுர்தா னெதிர். 15

எஞ்சாத சூர்ப்பநகை யென்னுமவள் மாவலியை
மிஞ்சா தடக்கவெனும் வீரியன்முன்—அஞ்சாத
க்ரமசின லோப கரதூட ணன்சிரமூன்
றுமவுணர் வந்தெதிர்த் தார். 16

வளையீசல் போல்வளைய மன்னு மவர்தங்
கிளைவே றறுத்தான்பின் கேடார்—உளைமோக

7 மனவோட்டம்=மனோவிருத்தி; 8 முன் வாதனை=பூர்வ சமஸ்காரம்; 9 துயிலான்மா=சுழுத்தியாத்மா; 11 வஞ்சபுத்தி=குபுத்தி; 13 தூமாயை=சுத்தமாயை, 15 குடில்=குடிசை; விசிராந்தி=களைப்பாறல்; விருப்பு=ஆசை; இசிய=இணங்க; 17 வளை=யுற்று;

(148-வது பக்கத்தொடர்ச்சி.)

நாம் விளக்கிற்போட்டு எரியடுகிற எண்ணெய் விதைகளிலிருந்து எடுக்கப்பட்டாலும், விதைகளுள்ள விருட்சங்கள் பூராவாய் கிரணங்களை யுண்டிருக்கின்றன. மெழுகுவர்த்தி, ஆடுமுதலிய மிருகங்களின் கொழுப்பிலிருந்து செய்யப்படுகிறது. மிருகங்களும் புல் மேய்கின்றன. தழை தின்னுகின்றன. என்றால், நாம் எப்புறம் திரும்பினாலும் இப்பூமியிலுள்ள வெளிச்சமும் உஷ்ணமும், நெருப்பு, வர்த்தி, விளக்கெண்ணெய், காற்று இவை எதிலிருந்து உண்டானபோதிலும் சரியே, யந்த்ரங்கள் சுற்றுவது, வண்டித்தொடர்கள் ஓடுவது, கப்பல்கள் நகருவது, எல்லாம் சூரியனால் அனுப்பப்படும் கிரணங்களினலைகள் செய்யும் வேலையென்று புலப்படுகிறதல்லவா?

டி. எஸ். ராஜகோபாலய்யர்.



மாரீச னலிழுக்க வாழ்சுத்த மாயைவிட்
டாரிய னார்பிரிந்தார். 17

சீராருந் தூமாயை சீதை தனித்திருக்க
காரார் வலியகங் காரமெனும்—போரரும்
ராவணனென் மாயரக்கன் நாடிகவர்ந் தேகினான்
பூவனிதை தாமதத்தைப் பூண்டு. 18

தாதார்பூ மாதைவிட்டு தாசரதி தான்பிரிய
வாதாரு மோஹமெனு மாரீசன்—தீதார்
உயிரிழந்தா னெங்கு மொளிருந் தனியன்
அயிலாரி ராமன்றன் னால். 19

நாலாம் அவத்தையி னயகன்றா மாயையெனுஞ்
சேலார் விழிச்சனகித் தேசுருவை—மேலாகக்
காணது வாடிக் கலக்கமுற்றான் பின்னிளைய
னணுப் பெருந்துணையி னல். 20

துக்கக் கபந்தன் றுணிபட்டான் சந்தோடந்
துய்க்கச் சபரியுரை தூண்டவே—மிக்கறிவாம்
சுக்ரீவன் றாயபக்தி தோள்வலிய மாருதியின்
றக்கநட்பு கொண்டான் றழைத்து. 21

அன்பா யிருக்க வவிவேக வாலியுயிர்
முன்பே கவர்ந்து முழுவறிவும்—நன்பக்தி
ஆயவனு மான்சுக்ரீ வன்முதலா யாளனுப்பி
நாயகியைத் தேடவிட்டா னன்கு. 22

மெத்தச் சிறப்பால் வினைசேர் பெருங்காயப்
பித்தநிறை யஞ்ஞானப் பேர்கடலை—தத்தி
யிலிங்கமாந் தேக விலங்கை யடைந்தான்
வலியாரும் பத்தியனு மான். 23

மாவலியி ராவணனென் மன்னு மகங்காரம்
ஆவலுடன் றுக்க வசுத்தமா—மாவருத்தம்
பூண்டவை தேகியெனும் பூமாதைத் தான்கண்டு
மீண்டான் கவிக்கதிபன் மேல். 24

உத்தாரநோக்கு முயர் துரிய வான்மனிடம் (மா
வித்தார மாய்ச்சொன்னன் மெய்ப்பக்தி—சுத்தான்
வள்ளல்சுக் ரீவனல்ல வாசனைகு ரக்குழாம் (மா
சொள்ளகடல் வந்தான் குறித்து. 25

தள்ளுமஞ் ஞானச் சலதிக் கரைதன்னில்
மெள்ளவர வுச்சாக வீடணனு—முள்ளிருந்து
தூண்ட வுபாயவனை தூர்த்திட்டா னஞ்ஞானந்
தாண்டிலங்க லங்கைசேர்ந் தான். 26

மாகும்ப கர்ண மதமழுக்கா றிந்திரசித்
தாகுமிவ ரோடே வகங்கார—மாகும்
வலிராவ ணன்சாய மாய்த்தான் றுளவ
மலிதோ ளுடையரா மன். 27

18 பூவனிதை=சீதை; 19 அயில்=அழகு; 20 நாலாம் அவத்தை=துரியம்; 21 துய்க்க=அநுபவிக்க; 23 பெருங்காயம்=தூலதேகம்; தத்தி=தாண்டி; 24 கவிக்கதிபன்=அநுமான்; 25 சுத்தான்மா=ராமன்; 27 அழுக்காறு=மத்ஸரம். 28 புனிதம்=சுத்தம்.

இப்பா லசுத்தமுற்ற வந்திழைதூ மாயையினை
தப்பாத சித்தசுத்தி தன்னெரியா—லொப்ப
புனிதஞ்செய் தேதுரிய புண்ணியனர் கொண்டார்
இனியபல நண்பருட னே. 28

இலிங்கமா தேக விலங்கைநகர் விட்டு
கெலியிதயா காசசா கேத—பொலிநகரில்
வந்துபா மாநந்த வாழரச போகத்தை
முந்தி யடைந்தான் முயன்று. 29

இருதயா காசமகா காசத் திருத்தி
யொருசரயு மாநதியி னூடே—பொருந்தி
விரவுசச்சி தாநந்த விஷ்ணுரு பத்தை
திராமன் சேர்ந்தான் றெரிந்து. 30

துரியான்மா சச்சிதா நந்த சொரூப
வுரிமை யறிந்துசா யுஜ்யம்—பொருந்துமீ
தாநந்த ராமாய ணத்துவிலா லக்காண்டத்
தேநவிலப் பட்டதாந் தேர். 31

[இஃது பெரும்பான்மையும் ஆநந்த ராமாயணத்தைத் தழுவியுள்ளது.]

K. V. இராமசந்திரன்.

**பயங்கரமான பீரங்கிகள் கொண்ட 2 புதிய பிரிட்டிஷ் சண்டைக்கப்பல்கள்.**—பிரிட்டிஷ் கடற்படைக்கு இரண்டு பெரிய சண்டைக் கப்பல்கள் இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. அவ்விரண்டு கப்பல்களும் குவீன் எலிஸபத், வார் ஸ்பைட் என்று அழைக்கப்படும். அந்த இரண்டு கப்பல்களும் சுமார் ஒரு மாதத்திற்குள் கட்டப்பட்டு தயாராய் விடும். அதில், 15 அங்குலம் சுற்றளவுள்ள குழாய்கள் கொண்ட பீரங்கிகள் அமைக்கப் படுகின்றன. இம்மாதிரியான பெரிய பீரங்கி இதுவரையுள்ள ப்ரிட்டிஷ் சண்டைக் கப்பல்களில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இதுமாதிரி பயங்கரமான பெரிய பீரங்கி இதுவரையிலும் இங்கிலாந்தில் செய்யப்படாததுடன், இங்கிலாந்து செய்திருக்கும் பீரங்கிகளில் இதுவே மிகவும் மேலான பீரங்கியாகும். ஒருடன் எடையுள்ள குண்டு அப்பீரங்கியிலிருந்து பிரயோகிக்கப்படும். அக்குண்டு 10, அல்லது 12 மைல் தூரம்போகும். அக்குண்டு படும் எக்கப்பலும் உடனே தூள் தூளாய்ப் போய்விடுமென்று சொல்லலாம். இது நிற்க. சுமார் 13½ அங்குலம் சுற்றளவுள்ள குழாய்கள் கொண்ட பீரங்கிகள் அமைக்கப்பட்ட பலசண்டைக் கப்பல்கள் பிரிட்டிஷாருக்குண்டு. ஆனல் ஜெர்மானியர்க்கோ 12 அங்குலச் சுற்றளவுள்ள குழாய்கள்கொண்ட பீரங்கிகள் அமைக்கப்பட்ட கப்பல்கள்தா மிருக்கின்றன. ஆகவே பிரிட்டிஷ் கடற்படைக்கு ஜெர்மன் கடற்படை ஈடாகாதென்றே சொல்லவேண்டும்.

# குண்டலகேசி

## "தற்கொல்லியை முற்கொன்றவள்"

## KUNDALAKESI

### ஐந்தாம் அதிகாரம்

### துறவுபூண்டு வாதம்புரிதல்

"போதர வுயிர்த்த வாவி
 புக வுயிர்க் கின்றதேனு
மூதிய மென்று கொள்வ
 ருணர்வினன் மிக்க நீரார்
ஆதலா லழுதன் மாலைப்
 பொருள்களுக் கழுதல் வேண்டா
காதலா லழுது மென்பார்
 கண்பனி களையலுற்றார்"—குண்டலகேசி

குண்டலகேசியின் நிமித்தம் அவளுடைய பிதா அரசனிடஞ் சென்று அந்த நிமிஷத்திலேயே தன் புத்திரியின் கருத்தையும், காளனை விடுவித்து அவனை அவளுக்கு மணம்புரியாவிட்டால் அவள் உயிர் துறப்பது நிச்சயம் என்பதையும் விவரமாக எடுத்துக்கூறி, அரசனைக்கொண்டு காளனை விடுவிக்கும்படி செய்தார். காளனும் தன்னுடைய நல்லதிர்ஷ்டத்தால், வாளுக்கு இரையாகாமல் தப்பினான். குண்டலகேசியின் பிதா பெரும் பொருள் செலவிட்டு மிகுந்த சிறப்புடன் காளனுக்கும் குண்டலகேசிக்கும் விவாகம் செய்து வைத்தார். காளன் தன்னுடைய தீயசெயல்களை அறவே ஒழித்துவிட்டு, மிகுந்த கௌரவத்துடனும் மதிப்புடனும் வாழ்ந்துவந்தான். அவனும் குண்டலகேசியும் சதிபதிகளுக் கிருக்கவேண்டிய ஒற்றுமையுடனிருந்து இல்லற தருமத்தைச் செவ்விதினியற்றி வந்தார்கள். இவ்விதமாகச் சில வருஷங்கள் கழிந்தன.

* * * *

ஒரு நாள் குண்டலகேசி தன் கணவனுடன் சையாக் கிருகத்தில் உல்லாசமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது, "ஊடுதல் காமத்திற் கின்பம், அதற் கின்பம் கூடிமுயங்கப்பெறின்" என்னும் அனுபவ ஆப்த வாக்கியத்திற் கிணங்க, தம்பதிகளுக்குள் அவ்வமயத்தில் சாதாரணமாய் நிகழும் அபிப்பிராய பேதம், எவ்விஷயத்தைக் குறித்தோ, அவர்கட்குள்ளும் உண்டாயது. குண்டலகேசியின் ஊடலைத் தீர்க்கக் காளன் முயன்றான். ஆனால் அவன் எவ்வளவிற் கெவ்வளவு முயன்றானோ அவ்வளவிற் கவ்வளவு அவள் கொண்ட பிணக்கு அதிகமாயிற்று. இருவர்களுடைய வார்த்தைகளும் வாவாத் தடித்தன.

"நீ கள்வனன்றோ?" என்று குண்டலகேசி காளனை நோக்கி அச்சமயம் கூறி ஏளனஞ்செய்தாள்.

இந்த வார்த்தைகள் காளனுக்கு அடங்காக் கோபத்தினை விளைவித்தன. குற்றம் செய்தவர்களிடம் அக்குற்றத்தைப் பிறர் எடுத்துச் சொன்னால், அவர்களுக்குக் கோபம் உண்டாவது இயல்பன்றோ? அவ்விதம் எடுத்துரைக்கும்போது, வெந்த புண்ணில் கோல் நுழைவதுபோல, அவர்கள் மனம் புண்ணுவது இயல்புதானே? குண்டலகேசி கூறிய இந்தச் சொற்களைக்கேட்டு உளத்தில் மிகச் சினங்கொண்டவனாயிருந்த காளன், அவளை எவ்விதத்திலேனும் கொன்றுவிடவேண்டுமென்று கருதிச் சமயம்பார்த்திருந்தான். இந்த அற்பக் குற்றத்திற்காக ஒருவன் தன் மனைவியைக் கொலைசெய்தற்குக் கருதுவனோவென்று சிலர் ஐயுறுதல் கூடும். இக்காலத்தில் அற்ப விஷயத்துக்காகத் தம்பதிகள் சண்டை சச்சரவிடுவதையும், கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களை மிருகங்களினும் கேடுகெட்டவர்களாகக் கருதி அடிப்பதையும் உதைப்பதையும், ஏதோ ஒரு சிறு மனஸ்தாபம் காரணமாக மனைவிமார்களைக் கத்தியால் குத்திக் கொல்ல முயல்வதையும்,—கொல்வதையும்,—நாம் அனுபவத்தில் பிரதி தினமும் பிரத்தியட்சத்தில் பார்த்துவரும்போது, நியாய ஸ்தலங்களில் இம்மாதிரியான குற்றங்கள் விசாரிக்கப்பட்டும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டும் வருவதை நேரிலும் பத்திரிகை வாயிலாயும் நாம் அறிந்துவரும்போது, காளன் விஷயத்தில் நாம் ஐயுறுவானேன்? மேலும், காளன் தன் சிறு பிராயம் முதல் தீயவர்களோடு சேர்ந்து களவாடுவதையும், கொள்ளையடிப்பதையும், கொலைபுரிவதையும் இன்னும் இவைபோன்ற பல தீச்செயல்கள் புரிவதையும் தன் தொழிலாகக் கொண்டு, நீண்ட காலம் இவைகளில் பழகிவந்தவனாதலால், அவனை எவ்வளவு உயர்ந்த நிலையில் வைத்தபோதிலும், அவனுடைய இழிதொழில்கள், "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழிக் கிணங்க, அவனைவிட்டு நீங்காவாதலால், அவன் குண்டலகேசியைக் கொன்றுவிட சூழ்ச்சி செய்தது ஒரு வியப்பன்று. ஆனாலும், காளன் தன்னுடைய சூழ்ச்சியைக் குண்டலகேசி அறியாதிருக்க வேண்டி, அவளுடன் எப்போதும்போல் அளவளாவியும், அவள் மீது மிகுந்த அன்புடையவன்போல் வெளித்தோற்றத்தில் நடித்தும் வந்தான்.

ஒரு நாள் காலையில் காளன் குண்டலகேசியை நோக்கி "அன்பே! இன்று மாலையில் நாம் இந்நகருக்கு வெளியே சிறிது தூரத்திலிருக்கும் மலையடிவாரத்தைப் பார்த்து வருதற்காகச் செல்லவேண்டும்" என்று கூறினான்.

"நாதா! அங்கே என்ன விசேஷம்? எதற்காகச் செல்லவேண்டும்?" என்று குண்டலகேசி உசாவினாள்.

"விசேஷம் ஒன்றுமில்லை. அம்மலை முகட்டில் அழகிய ஒரு கோட்டம் இருக்கின்றதாம். அதைச் சென்று பார்த்துத் திரும்பும் பலர் அதைபற்றி வியந்து பேசுகிறார்கள். நாமும் போய் அதைப் பார்த்துத் திரும்பலாமே?" என்று காளன் உரைத்தான்.

"மலை மிக உயரமாயிருக்குமே? அதில் ஏறிச் செல்ல என்னால் முடியுமோ?" என்று குண்டலகேசி கேட்டாள்.



"அந்த மலை அவ்வளவு உயரமானதன்று!" என்று காளன் கூறவே, குண்டலகேசி அவனோடு அன்று மாலையில் மலையடிவாரத்திற்குச் செல்ல இசைந்தாள்.

கதிரவன் தன் பிரயாணத்தைக் கீழ்த்திசையில் தொடங்கியவன், வான்மீது ஊர்ந்துகொண்டே மேலேறி வந்து,—மனிதர்களுக்கு வாழ்வு சிலகாலம் தாழ்வு சிலகாலம், அவர்களுடைய செல்வமும், புகழும், இயல்பும், அந்தஸ்தும், சகடம்போல் ஏறுவது சிலகாலம், இறங்குவது சிலகாலம், என்னும் நீதியைப் போதிக்கக் கருதியவன்போல்,—ஒரு சில நிமிஷம் உச்சியில் நின்று, பிறகு கீழிறங்கி மேற்றிசை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். நெடும் பிரயாணம் செய்த களைப்பினாலும், முதலில் மேலேறி உச்சஸ்தானத்தைப் பெறும்படியான பாக்கியத்தைப் பெற்ற தான், பின்னர் அந்த ஸ்தானத்திலிருந்து கீழிறங்கிச் செல்லும்படியான ஒரு நிலையை அடைய நேர்ந்ததால் உண்டான வருத்தத்தாலும் ஆற்றல் குன்றியவனைப்போல் ஆதித்தன் தன் கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு மேற்குச் சமுத்திரத்துள் மறையும்நிலையிலிருந்தான். அவனுடைய இலேசான கதிர்கள் தோப்புகளையும், தோட்டங்களையும், சோலைகளையும், வனங்களையும் ஊடுருவிப் பாய்ந்தன. மலைகளும், அருவிகளும், காடுகளும், கான்யாறுகளும், சூரியனுடைய மாலை வெயில் தம்மீது படுவதால் பொன்னிறமாய்த் திகழ்ந்தன. அப்போது மணி சுமார் ஐந்தரை இருக்கும்.

"நாதா! மலைமீது ஏறுவது சிரமமன்றென்றும், இந்த மலை அவ்வளவு உயரமன்றென்றும் கூறினீர்களே? ஆ! இந்த மலை எவ்வளவு உயரமாயிருக்கிறது! கீழேயிருந்தேறி மேலே வருவதற்குள் என் கால்கள் சோர்ந்துபோயினவே! ஐயோ! இங்கிருந்து கீழே நோக்கினால் மிகப் பயங்கரமா யிருக்கின்றதே! போதும், போதும், நாம் மலைக்காட்சி காணவந்தது" என்று குண்டலகேசி அச்சத்தோடு கூறினாள்.

"நீ பெண்பாலாதலால் உனக்கு இவ்விதம் இக்காட்சி தோன்றுகிறது. இதைவிடப் பெருமலைகள் எத்தனையோ இருக்கின்றன!" என்று காளன் கூறினான்.

"நல்லது; இங்கே கோயில் ஒன்று இருப்பதாகக் கூறினீர்களே? அஃது எங்கே இருக்கிறது? அதைப் பார்த்து விட்டு நாம் சடுதியில் வீட்டிற்குத் திரும்பிவிடுவோம்" என்று குண்டலகேசி சொன்னாள்.

"இன்னும் சற்று உயரத்தில் இருக்கிறது. மெதுவாக ஏறிவா!" என்று காளன் கூறிக் குண்டலகேசியை அழைத்துக்கொண்டு மலையின் உச்சிக்குச் சென்றான். ஆனால் மலைமுகட்டில் வெறும் பாறைகளும், மரங்களும் கொடிகளும், அருவிகளும் புதர்களும் காணப்பட்டனவே யன்றிப் பிறிதொன்றும் காணப்படவில்லை. அங்கே கோட்டமும் இல்லை, கோயிலுமில்லை. மலைமுகட்டைக் கண்டவுடனேயே, குண்டலகேசிக்குப் பெரியதொரு மனநடுக்க முண்டாயது.

"நாதா! இந்த இடம் மிகப் பயங்கரமாயிருக்கிறதே? இங்கே கோவிலைக் காணேனே? இங்கே ஏன் என்னை அழைத்துவந்தீர்கள்?" என்று குண்டலகேசி மிகுந்த அச்சத்துடன் கேட்டாள். அவள் உடல் நடுங்கிற்று; நா குழறிற்று.

"அன்று நீ என்னைத் தூஷித்தாயன்றோ? நிந்தித்தாயன்றோ?" என்று காளன் சிறிது ஆத்திரத்தோடு கேட்டான்.

"என்ன! நீங்கள் சொல்லுவது ஒன்றும் எனக்கு விளங்க வில்லையே? நான் எப்போது உங்களைத் தூஷித்தேன்?" என்று குண்டலகேசி கேட்டாள்.

"அன்றிரவு உன்னுடைய பிணக்கைத் தீர்க்க நான் முயன்றபோது 'நீ கள்வனன்றோ?' என்று கூறி, நீ என்னை நிந்தித்தாயே?" என்று காளன் கேட்டான்.

"நாதா! நான் விளையாட்டாயும், பரிகாசமாயும் அச்சமயத்தில் கூறினேனே தவிர, உங்களை நிந்திக்கவேண்டுமென்னும் கெட்ட எண்ணத்தோடு நான் சொல்லவில்லையே?" என்று பரிதாபத்தோடு குண்டலகேசி புகன்றாள்.

"நல்லது; அதற்குத் தகுந்த தண்டனையை இப்போது நீ அடைவாய்! இந்த மலையின் உச்சியிலிருந்து உன்னைக் கீழே தள்ளிவிடப்போகிறேன். அதற்காகவே உன்னை நான் இங்கு அழைத்துவந்தேன்" என்று வாய்கூசாமல் காளன் உரைத்தான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் குண்டலகேசி புலிவாய்ப்பட்ட மான்போலும், தேரைவாய்ப்பட்ட பாம்புபோலும், அனலிடைப்பட்ட புழுப்போலும் துடித்தாள். செய்வது யாதென அவளுக்குத் தோன்றவில்லை. அவள் உடம்பு முழுதும் வியர்த்தது; கண்கள் சுழன்றன; கைகால்களெல்லாம் நடுங்கின; உதடுகள் உலர்ந்தன; வாயுரை குழறியது; மெய் விதிர்த்தது; அவள் ஏங்கினாள்; பெருமூச்செறிந்தாள்; அழுதாள்; அலறினாள்; தயங்கினாள்; மயங்கினாள்! ஆனாலும் காளன் மனம் கல்லினுங் கடிதாய் இரும்பினும் வலிதாய் இருந்தது.

"ஆ! இந்த அற்பக் குற்றத்திற்காகவா எனக்கு இவ்வளவு கொடுமையான தண்டனை? இதற்காகத்தானா நான் உன்னை மணம் புரிந்தேன்? நான் என் தந்தையின் உரையை மறுத்தும் தோழியர் மொழியை வெறுத்தும் ஒரே பிடிவாதமாய் உன்னைக் கணவனாக வரித்ததின் பலன் இதுதானா? இக்கதியடையவோ நான் உனக்கு மனைவியானேன்? நீ எனக்கு கணவனானாய்? நீ அடைதற்கிருந்த கொலைத் தண்டனையினின்றும் நான் உன்னைக் காத்தேனே? அதையாவது இப்போது நீ நினைத்துப் பார்க்கக்கூடாதா? அதை நினைத்தாலாவது உன் மனம் சிறிது இளகாதா? நெஞ்சம் சிறிது கரையாதா? ஐயோ! உன்னைக் கண்டநாள் தொடங்கி நான் உன்மீது அடங்காக் காதல் கொண்டு கனவினும் நனவினும் உன் சிந்தையாகவே இருந்தேனே? அதன் பயன் இதுவேயோ? ஐயோ! சிறிதாவது உனக்கு இரக்கமில்லையா? தயை

செய்து என்னை விட்டுவிடு. நான் எங்கேயாவது ஓடிப்போய் பிழைத்துக்கொள்ளுகிறேன்" என்று குண்டலகேசி மிகுந்த ஆருமையுடன் கூறி அவனைக் குறையிரந்து வேண்டினாள்.

இவளுடைய வார்த்தைகள் வன்னெஞ்சனாகிய காளன் செவியில் நுழையவுமில்லை; மனத்தில் பதியவுமில்லை. எந்த விதமாய்த் தன்னைத் தற்காத்துக் கொள்வதென்று தெரியாமல் குண்டலகேசி சிறிது நேரம் தயங்கினாள். ஆனாலும் மிகவும் இக்கட்டான சந்தர்ப்பங்களில், தாறுமாறான சில சமயங்களில், தாங்கமுடியாத துன்பமும் துயரமும் சூழ்ந்து கொள்ளும் அமயங்களில் பெரிய அபாயங்களில் அகப்பட்டுக் கொண்டு அவைகளிலிருந்து தப்புவதற்கு வழியில்லாமல் தயங்கும் நேரங்களில், மனிதர்களுக்குத் திடீரென்று ஏதாவது ஒரு யுக்தியும், புதிய பலமும், அசாதாரணமான தைரியமும் உண்டாதல் இயல்பென்பதைப் பலர் அனுபவத்தில் அறிந்திருக்கக்கூடும். இம்மாதிரியான யுக்தியும், தைரியமும், இப்போது குண்டலகேசி மனதில் திடீரென்று தோன்றின. அவள் தன்னைத்தானே திடப்படுத்திக் கொண்டாள்.

"நல்லது; இவன் தன்னுடைய சூழ்ச்சியால் என்னைக் கொல்லத் துணிந்தான், நான் என்னுடைய சாகசத்தால் இவனைக் கொன்று விடுகின்றேன். ஏனெனில், தற்கொல்லியை முற்கொல்லவேண்டும் என்பது ஆன்றோர் கொள்கை யன்றோ?" என்று குண்டலகேசி தனக்குள் சொல்லிக்கொண்டு, பிறகு காளனை நோக்கி "நாதா! தங்களுடைய இஷ்டப்படியே நீங்கள் செய்யலாம். ஒருநாளில்லாவிடில் ஒருநாள் இச்சரீரம் இறந்தொழிவதுதானே? தங்களுடைய கையால் மரணமடைவதற்கு நான் எவ்வளவோ புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். நீங்கள் உங்களுடைய திருக்கரத்தால் என்னைப் பிடித்து இம்மலையினின்றும் கீழே தள்ளுவதைப்பற்றி எனக்குமிகுந்த சந்தோஷம். ஆனால், நாதா, நான் தங்களை ஒருவரம் மாத்திரம் கேட்டுக்கொள்ளுகிறேன். அஃதாவது, தங்களை மூன்று முறை பிரதட்சணம் செய்து வந்து தங்கட்கு ஒரு நமஸ்காரம் செய்த பின்னர், நீங்கள் என்னைப்பிடித்துத் தள்ளவேண்டும் என்பதே, அவ்விதம் செய்தால் இறந்தபின் எனக்கு நற்கதியாவது கிடைக்கும்" என்று பணிவுடன் கூறினாள்.

காளனும் அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்கினான். அவனை மலை முகட்டின் நடுவே நிற்கவைத்து அவள் அவனைச் சுற்றிப் பிரதட்சணம் வந்தாள். மூன்றாவது பிரதட்சணம் செய்துகொண்டு காளன் முதுகுப்புறமாய்க் குண்டலகேசி வந்தவுடன், அவள் அவனைத் திடீரென்று பிடித்துக் கீழே தள்ளினாள். காளனுடைய சரீரம் உருண்டுகொண்டே சென்று கீழே விழுந்து ஒரு கணப்போதில் துகள் துகளாய்ச் சிதறுண்டது.

காளனுடைய கதி இவ்விதமானபின், குண்டலகேசி மலையினின்றும் கீழிறங்கி அவனுடைய சரீரத்தினை நோக்கினாள். அவனுடைய சரீரம் சிதறுண்டு இரத்த மயமாய்க் கிடந்ததைக் கண்டவுடன் அவளுக்குப் பரிதாபம் உண்டாயிற்று. தவிரவும், அச்சமயம் ஏதோ காரணத்தால் தோன்றிய மனோதிடத்தால் அவள் காளனைக் கீழே பிடித்துத் தள்ளிவிட்டபோதிலும், பிறகு பெரிதும் வருந்தினாள். பர்த்ரு சோகத்தால் பெரிதும் பீடிக்கப்பட்டவளாய்க் கணவனிறந்தபின் இல்லறத்திலிருப்பது நலமன்றெனக் கருதியவளாய், அன்று முதல் எல்லாச் சுகபோகங்களையும் வெறுத்துவிட்டு சந்நியாசியாகப் புறப்பட்டு விட்டாள் நம் கதாநாயகியாகிய குண்டலகேசி. இனித் துறவுபூண்டு வாதம் புரிதல் ஒன்றே தன்னால் செயற்பாலதென்று அவள் கருதினாள்.

* * * *

அதுமுதல் குண்டலகேசி பௌத்த மதத்தைப்பற்றி ஊர்கடோறும் சென்று பிரசங்கம் புரிந்து அந்த மதத்தைப் பரவச் செய்தும், வைதிகர் முதலான எல்லாச் சமயத்தார்களுடனும் வாதம் நிகழ்த்தி அவர்களை வென்றும், ஆவணம் என்னும் நகரத்திலிருந்து வரும், சமண மதக் கொள்கையுடையவருமான நாதகுப்தனார் என்னும் மகாவித்துவானோடு நெடுநாள் சாஸ்திர சம்பந்தமான வாதம்புரிந்து இறுதியில் அவரைத் தோல்வியடையச் செய்தும், பெரிய கல்விக் கழகங்களிலும் இராஜ சபைகளிலும் வலிந்துசென்று வித்துவான்களோடு வாதிட்டும், பெரிய கோட்டை வாயில்களில் நாவல் மாத்தினை நட்டு வெளியிலிருப்போர் உட்செல்லாமலும், உள்ளிருப்போர் வெளியே போகாமலும் தடுத்தும், தன்னோடு வாதம் புரிவதற்குத் தகுதியுடையோர் கிடைக்கும்போது நடப்பட்ட நாவல்மரங்களைப் பிடுங்கி எறிந்தும், இன்னும் இவை போன்ற பல அரிய செயல்களைச் செய்தும் அக்காலத்தில் தன் புகழை எங்கும் பரப்பிவந்தாள் "ஜம்புத்வீபம்" என்றும், "நாவலந் தீவு" என்றும் அக்காலத்தில் பெயர் பெற்றிருந்த நம் இந்தியதேசம் முழுவதிலும், பௌத்த மதத்தைப் பரவச் செய்வதும், இந்தியாவிலிருந்த அக்காலத்துப் பல சமயங்களையும், புறமதத்தினருடன் வாதம் நிகழ்த்தி வென்று அடக்குவதும், தன்னுடைய கொள்கை என்பதைப் புலப்படுத்துவதற்கு ஓர் அறிகுறியாகக் குண்டலகேசி நாவல் மரங்களை நட்டு வாதம் புரிந்தாள் போலும்! யார் இவளிடம் வாதத்திற்கு வந்தபோதிலும் அவர்களை முதலில், "இறை யாவன்? நூல் யாது? பொருள் என்னை? மற்றிவற்றின் முறைபட்ட நிகழ்வுரைக்க; முடிபுரைக்க." என்றிவள் வினவுவது வழக்கமாம். இவ்விதமாகக் குண்டலகேசி பௌத்த சமயக் கொள்கையை அனுஷ்டித்த பிக்ஷுணியாக ஒரு சில வருஷகாலமிருந்து, தன் புகழை எங்கும் பரப்பிவிட்டு இறுதியில் முத்தி பெற்றனள். சுபம்!

(முற்றிற்று.)

நாகை - ஸி. கோபாலகிருஷ்ணன்.



# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

அவ்வாறு செல்கையில், நெடுந்தூரத்தில், கோடையிடி முழக்கம் போலப் பலமுறையும் ஒலித்தது. அம்முழக்கங்கள், தான் நோக்கிச் செல்லும் ஒரு கணவாயினின்றும் வருவதாக ரிப் கருதினான். இவ்வாறு இரண்டொரு நாழிகை, முள்போற் குத்தும் கற்களின்மீது, நாய் பின் தொடரநடந்தபின் நாற்புறமும் செங்குத்தான மலைகள் வட்டமாய் நிற்க, நடுவில் மைதானம் போன்ற இடமொன்றின் நடுவே வந்து சேர்ந்தார்கள்.

இவ்விடம் வந்தவுடன் ரிப்பினுடைய ஆச்சரியம் முன்னிலும் அதிகமாயிற்று. அங்கே விசித்திர உடைதரித்த மனிதர் சிலர், கர்லாத் தடிகள் போன்ற சில உருளைத்தடிப் பூமியின்மீது நிறுத்தி, ஒருவகை ஆட்டமாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களோ, அதிக விசித்திரமாக இருந்தன. ஒருவனுடைய முகம், தோசைகல்போல அகன்று உருண்டு, நடுவில் புளியங்கொட்டை போன்ற இரண்டு கண்கள் பொருந்தி யிருந்தது. மற்றொருவனுடைய முகம் முழுவதையும் அவனுடைய மூக்கே அடைத்துக் கொண்டிருந்தது; அவன், கோபுரம்போன்ற ஒரு வெள்ளிய குல்லாய் தரித்து, அதன்மேல் கோழி இறகு இரண்டு மூன்று தரித்திருந்தான். அவர்களுடையதாடியும் மீசையும், நீண்டும் குறுகியும், பல வர்ணங்கள் உள்ளனவாயு மிருந்தன. ரிப்போடுகூடவந்த கிழவனைப்போலவே இருந்த ஒருவன், அம்மனிதர்களுக்குத் தலைவனைப்போலத் தோன்றினான். அவர்களுடைய தோற்றத்தில் மிகவும் விந்தையாயிருந்ததென்னவெனில், அவர்கள் விளையாட்டாய்ப் பொழுது போக்க எண்ணி, அவ்வாட்ட மாடிக்கொண்டிருந்த போதிலும், கொஞ்சமேனும் பேசவுமில்லை, சிரிக்கவுமில்லை; முகத்தில் ஸந்தோஷக் குறியென்பது, சற்றுமேயில்லை; ஆட்டமாடும்போது அவர்கள் வாய் திறக்கவே இல்லை. ஆனால் அவர்கள் உருட்டிய உருளைத்தடிகள் ஒன்றோடொன்று முட்டியபோது, நெடுந்தூரம் வரையிலும், இடி முழக்கம் போலச் சத்தங் கேட்டது.

அவர்களினருகே, ரிப்பும் கிழவனும், போய்ச் சேர்ந்தவுடன், திடீரென்று அவர்கள் ஆட்டத்தை நிறுத்திவிட்டு, அவனை உற்று நோக்கினார்கள். அவர்கள் தன்னை உற்று நோக்குவதைக் கண்ட ரிப் மனம் நடுங்கினான். உடன் வந்த கிழவன், இச்சமயத்தில் தன் பையைக் கீழே இறக்கி, அந்த மதுவைச் சிறு பாத்திரங்களில் வார்த்து, அவர்களுக்குக் கொடுக்கும்படி ரிப்புக்குச் சைகை செய்தான். கைகால் உதற, ரிப்பும் அவ்வாறே செய்தான் ஒவ்வொருவனும் அம்மதுவை ஒருவாயாய்க் குடித்துவிட்டு, முன்போல மௌனமாய் ஆட்டமாட ஆரம்பித்தான். கொஞ்சங் கொஞ்சமாய், ரிப்பினுடைய பயமும் குறைய ஆரம்பித்தது. ஒருவரும் தன்னைப் பாராதிருந்த ஸமயத்தில் அம்மதுவைக் குடிக்கத் துணிந்தான்; அதுவும் ருசியாயிருந்தது; அவன் குடித்த ஒவ்வொரு கிண்ணமும், மற்றொன்றைக் குடிக்கத் தூண்டிற்று. அவனும்சளைக்காமல், மேன்மேலும் குடித்துக்கொண்டே போகையில், அம்மதுவின் மயக்கத்தால், மனங்கலங்கி, கண் பஞ்சடைந்து, தலை சுழன்று, மயக்கம் மேலிட்டது. அவனும் கீழே படுத்து, மெய்ம்மறந்து, அயர்ந்து நித்திரை போனான்.

அவன் நித்திரைவிட்டெழுந்தவுடன், தான் முதலில் விசித்திரக் கிழவனைப் பார்த்த மலையினுச்சியிலேயே, பசும்புற்றரையில் தான் படுத்திருப்பதாகக்கண்டான். அப்போது, காலை ஸுமார் பத்து மணி இருக்கும். பக்ஷிகள் குளிர்ந்த கிளைகளில் உட்கார்ந்துகொண்டு, பலவாகக் கூவின; தன்னருகே இருந்த துப்பாக்கியைப் பார்த்தபோது, அது தன் துப்பாக்கியைப்போலத் தோன்றவில்லை; பளபளப்பு மழுங்கி, அடிக்கட்டை செல்லரித்திருந்தது. அது எவ்வாறிருக்கிறதென்று அவன் யோசனை செய்தபொழுது, கொஞ்சங் கொஞ்சமாக, அவன் மதுபானஞ் செய்து மயக்கமடைந்ததும், அழுகை வழிந்த விளையாட்டுக்காரர்களைக் கண்டதும், அவர்கள் ஆட்டமாடின மைதானமும், இவனை அவ்விடத்திற்கு அழைத்துப்போன கிழவனும், மற்றும் பல விஷயங்களும் ஒவ்வொன்றாய் நினைவிற்கு வந்தன. மதுவைக் கொடுத்துத் தன்னை மயக்கி, தன்னுடைய நாயையும் அபகரித்துக் கொண்டு, நல்ல துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அதற்குப்பதிலாக உபயோகமற்ற மற்றொரு துப்பாக்கியைத் தன் பக்கத்தில் வைத்துவிட்டுத் தன்னை ஏமாற்றிப் பரிஹாஸம் செய்த அந்தத் துஷ்டப் பயல்களைக் கண்டிக்கவேண்டு மென்று நினைத்து, மலையினின்றுங் கீழே யிறங்கி, மைதானத்தை நோக்கி நடந்தான்.

"மதுவைக் குடித்து மயங்கி உறங்கும்போது, பொழுதுபோய் இரண்டு நாழிகைதானே ஆயிற்று; இப்பொழுது பொழுது விடிந்து, பத்து நாழிகை ஆயிற்றே; இரவு முழுவதும் இங்கேயே உறங்கினேமா என்ன?" என்று சிந்தித்துக்கொண்டே நடந்தான். அன்றியும், நடக்கும்போது, முழங்காலும் இடுப்பும் முன்போல வலிவாயில்லாம லிருப்பதைக் கண்டு "இதேது விபரீதம்! இந்தக் கட்டாந்தரையில் நேற்றிராத்திரி தூங்கினது என்னுடம்பிற்கு ஒத்துக்கொள்ளவே யில்லை," என்றும் நினைத்தான். மலையினின்றும் இறங்கி, தான் முதனாள் கிழவனோடு நடந்த செங்குத்தான பாதையிற் போய் சேரும் வழியிலே நடந்தான். அப்பாதையைக் காணமல், அப்பாதையிருந்த இடத்தில், ஒரு பெரிய ஆறு செவிடுபடக்கூடிய ஒலியோடு, ஆகாச கங்கைபோல மேலிருந்து கீழே விழுவதைக் கண்டு, ஒன்றுந் தோன்றாமல் பிரமித்தான், அப்புறம் போவது அஸாத்தியமென்று கண்டு, நாயையும் துப்பாக்கியையும் இனிப் பெறப்போகிறதில்லையென்று வருந்திக்கொண்டே, திரும்பி, வயிற்றைப் பசி துளைக்க, முழங்காலில் பிடிவாய்வுபோல வலிக்க

வெகு துயரத்தோடு தன்னூர்க்குத் திரும்பினான்.

ஊரில் வந்தவுடன், இவனுடைய மனம், மேலும் மேலும் பிரமித்தது. அது தன் சொந்த ஊர்தானோ அல்லது அயலூரோ, என்று நினைத்தான்; ஏனெனில், தெருக்களும், வீடுகளும், கட்டடங்களும், ரஸ்தாக்களும், ஜனங்களும், அவர்களுடைய நடையுடை பாவனைகளும் முற்றிலும் புதியனவாயிருந்தன. சுற்றுமுற்றும் பார்க்கும்போது, தூரத்தில் காட்ஸ்கில் (Kaatskil) மலையிருப்பதையும், அதனருகே, உருக்கிய வெள்ளிபோல ஹட்ஸன் நதி ஓடுவதையுங்கண்டு அது தன்னூராய்த்தான் இருக்கவேண்டும் என்றும் ஒருவாறாய்த் தெளிந்தான். தோளில் ஒரு ஓட்டைத் துப்பாக்கியைத் தாங்கி, கூன் வளைந்து, தள்ளாடித் தள்ளாடி, இவன் வருவதைகண்ட சிறு பிள்ளைகளும், பெண்களும், நரிக்காரர்களைகண்ட நாய்போல, இரைச்சலிட்டுப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் யாவரும் நிமிஷத்திற்கொருதரம் தத்தம் முகவாய்க்கட்டையைத் தடவுவதையும் அதன்பின் கொல்லென்று சிரிப்பதையுங் கண்ட ரிப் தானும் அப்படியே தன் முகவாய்க்கட்டையைத் தடவினான். என்ன ஆச்சரியம்! தனக்கு வயது தெரிந்த நாள் தொடங்கி நேற்றுவரைக்கும் மழமழப்பாக மயிரில்லாமல் வைத்துக் கொண்டிருந்த முகவாய்க்கட்டையிலிருந்து, ஒருமுழ நீளம் தாடிவளர்ந்து தொங்குவதைக் கண்டான். இதேது விபரீதம்! தானும் தன்னைச் சூழ்ந்தவர்களும் ஒருமிக்க, பைத்தியக் காரர்களாய்ப் போய்விட்டார்களா என்னவென்று ஸந்தேகித்தான். என்ன செய்வான் பாவம்! கடைசியாக தான் முன்னிருந்த வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து, அதன் பாழடைந்த தோற்றத்தையும், இடிந்த சுவரையும், விழுந்த கூரையையும் கண்டு பிரமித்து, மரம்போல அசைவற்று நின்றான். குடியில்லா வீடுபோலிருந்த அவ்வலங்கோலத்தைக் காணச் சகியாது, தன் ஸ்நேகிதனும் சத்திரத்ததிகாரியுமான நிக்கொலஸ் வெட்டரை (Nicholas Vedder)க் கண்டு, தன் ஸந்தேகங்களைத் தெளிவித்துக் கொள்ளலாமென்று நினைத்து விரைவாய்நடந்து, சத்திரத்தின் வாயிலில் வந்துசேர்ந்தான்.

சத்திரமிருந்த இடத்திற்கு வந்தானேயொழிய சத்திரத்தைக் காணவில்லை. அதற்குப் பதிலாக மரத்தால் கட்டிய வீடொன்றைக் கண்டான். அதன் சுவரில், "டேலிட்டில் (Doolittle) என்பவருடைய யூனியன் ஓட்டல்" என்று எழுதியிருந்தது. முன்பு சத்திரக்காரனான நிக்கலஸ் வெட்டர் (Nicholas Vedder) நாள் முழுவதும் சுருட்டுப் பிடிப்பதற்காக நிழலைத் தந்த மரமிருந்த இடத்தில், ஒரு கம்பம் நிற்பதையும், அக்கம்பத்தின் நுனியில் நக்ஷத்திரங்கள் போலப் புள்ளிகள் அமைந்த ஒரு கொடிச்சீலை காற்றில் அசைவதையும், அக்கொடிச்சீலையின் கீழ் தன் அரசனான மூன்றாம் ஜார்ஜின் உருவப்படம் சித்தரித்திருப்பதையும் கண்டான். ஆனால் இந்த முகம் பெரிதும் மாறுபட்டிருந்தது; மேலும் அந்தப் படத்தின் கீழே "ஜார்ஜ் வாஷிங்டன்" (George Washington) என்று பேரெழுதியிருந்தது. அவ்விடத்தில் வழக்கம்போல ஒரு கூட்டங்கூடி இருந்தது; ஆனால் அங்கே மிகுந்த ஆரவாரமாயிருந்தது. வற்றலாய் உலர்ந்து தேகம் வெளுத்த ஒருவன் நின்றுகொண்டு, அனைவரையும் நோக்கி, "பங்கர்ஸ்ஹில்"—"குடியரசு" "ஸ்வாதீனம்" "குடியுரிமை"—முதலாகிய பல விஷயங்களைப்பற்றி, சண்டப்பிரசண்டமாய் உபந்யாஸம் செய்தான். அவன் சொல்லியவைகளில் ஒரு வார்த்தைக்குக்கூட ரிப்புக்கு அர்த்தம் விளங்கவில்லை.

தோளில் துப்பாக்கியைத் தாங்கி, காட்டுமுராண்டியைப்போல முழநீளம் தாடியை வளர்த்துக்கொண்டு தன்னைப் பின்பற்றிச் சிறுவரும் சிறுமிகளும் ஆரவாரம் செய்ய, அவ்விடம் வந்த ரிப்பின் தோற்றத்தைக் கண்ட அனைவரும் அவனை ஆவலாக உற்றுப் பார்த்தார்கள். உபந்யாஸகன், அவனருகே போய் (ரஹஸ்யமாக) "நீ யார்பக்கம் ஓட்டுக்கொடுக்கப்போகிறாய்" என்று கேட்டான். ரிப் ஒன்றுந் தெரியாமல் விழித்தான். மற்றொருவன், "நீ எந்த கக்ஷியைச் சேர்ந்தவன்?" என்று வினவினான். பதிலொன்றுஞ் சொல்லத் தெரியாமல் ரிப் விழிக்கும்போது, கவுரவம் பாவித்துக்கொள்ளும் ஒருவன் ரிப்பின் அருகே வந்து, கம்பீரமாகத் தன் இடது கையை இடுப்பின்மேல் வைத்துக்கொண்டு, "எங்களூரில் எலெக்ஷன் நடக்கும்போது, எதற்காக துப்பாக்கியோடும், இந்த ஆரவாரத்தோடும் இங்கே வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு ரிப், "ஐயா, நான் ஒரு ஏழைக்குடியானவன்; நான் இங்கே கலகம் விளைக்க வந்தேனென்று தாங்கள் நினைக்கக்கூடாது; எனக்குக் கலகமென்பதே தெரியாது. நமது சக்கரவர்த்தியாகிய மூன்றாம் ஜார்ஜுக்கு, நான், மிகவும் அடிமைகளில் அடிமையான குடி" என்றான். இதைக்கேட்டவுடன் அங்கிருந்த அனைவரும் கைகொட்டிக் கொல்லென்று சிரித்தார்கள். ஏனெனில், இங்கிலாந்து சக்ரவர்த்தியை, ஐக்கிய மாகாணத்தார் ஒத்துக்கொள்ளவில்லை; யுத்தத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடித்து, தமது நாட்டைக் குடியரசாக்கி ஜார்ஜ் வாஷிங்டன் என்பவரைத் தமக்குப் பிரஸிடெண்டாக (President) நியமித்திருக்கிறார்களல்லவா? "இவன் துரோகி," "வேவு பார்க்க வந்தவன்," "இவனைப்பிடியுங்கள்," "இவன் நம் தேச சட்டத்திற்கெதிராய் நடக்கிறான்" என்று பலரும் பலவாறாய் மொழிந்தார்கள். முன் சொன்ன பெரிய மனுஷன், இந்த சத்தத்தைக்கொஞ்சம் அடக்கி, "நீ எதற்காக இங்கே வந்தாய்? யாரைத்தேட வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு ரிப், "ஐயா, நான் கெட்ட எண்ணத்தோடாவது, வேவு பார்க்கவாவது, இங்கே வரவில்லை. இங்கே எலெக்ஷன் நடக்கிறதென்று சொல்லுகிறீர்களே, அதைக் கெடுக்கவும் வரவில்லை. என் நண்பரில் சிலரைப் பார்ப்பதற்காக, இங்கே வந்தேன்" என்றான்.

"அவர்கள், யார்? சொல்."



"ஐயா, நிக்கொலஸ் வெட்டர் (Nicholas Vedder) எங்கே?"

அனைவரும் ஐந்து நிமிஷம் மௌனமாயிருந்தார்கள். அப்போது அங்கிருந்த ஒரு கிழவன், "நிக்கொலஸ் வெட்டரா!! அவன் செத்துப் பதினெட்டு வருஷமாகிறதே!" என்றான்.

பிரமித்த ரிப், மறுபடியும், "பள்ளிக்கூட உபாத்தியாயராகிய டெர்ரிக் வான் பம்மெல் (Derrick von Bummell) எங்கே?" என்று கேட்டான்.

"அவர் நமது ஸ்வாதீன யுத்தத்தில் (War of Independence) பேர் பெற்று இப்போது காங்கிரஸில் மெம்பராயிருக்கிறார்."

ரிப்புக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவனுக்குப் பதில் சொல்லுகிறவர்கள் எல்லாரும், அலக்ஷியமாய், பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன் நடந்த விஷயங்களென்று சொல்லுகிறவைகளெல்லாம், ரிப்புக்குச் சன்னமாயிருந்தன. கடைசியாக மனதை ஒருவாறு துணிவுபடுத்திக்கொண்டு, இங்கே யாருக்காவது ரிப்வான் விங்கிள் தெரியுமா?" என்று கேட்டான்.

உடனே, இரண்டு மூன்று பேர்கள், "ரிப்வான் விங்கிளா? தெரியும், தெரியும், அதோ யிருக்கிறானே அவன்தான் ரிப்வான் விங்கிள்" என்றார்கள்.

ரிப், திரும்பிப் பார்த்தான், எல்லாவிதத்திலும் தன்னைப்போலவேயுள்ள ஒருவன், ஒரு மரத்தின்மேல் முழுச்சோம்பேறிபோலச் சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான், மேலே ஒன்றுஞ் சொல்ல முடியாமல், 'ஓ' வென்று கூவி, "இதென்ன அநியாயம்; நான், நானாக இருக்கவில்லை, நான் வேறொருவனாக இருக்கிறேன். இவ்வூரிலுள்ள அனைவருக்கும் எனக்கும் ஒருங்கே பைத்தியம் பிடித்திருக்கிறது போல் தோன்றுகிறதே. நேற்றுப் பகலெல்லாம் நான் ஸௌக்யமாக இருந்தேன்; இரவில் அந்த மலைமேல் தூங்கிவிட்டேன்; அந்தப் போக்கிரிகள் என் துப்பாக்கியை மாற்றிவிட்டு, என்னாயையும் அபகரித்துக்கொண்டு, என் புத்தியையும் மயக்கிவிட்டார்கள். என் பேர் இன்னதென்றும், நான் யாரென்றுங்கூட எனக்குத் தெரியவில்லை. ஐயோ! என்ன செய்வேன்!" என்று அலறினான்.

இந்தச் சமயத்தில் அக்கூட்டத்திலிருந்த ஒரு யௌவன ஸ்திரீயின் கையிலிருந்த குழந்தை, ரிப்பினுடைய தோற்றத்தைக் கண்டு பயந்து அழுதது. அப்போது அந்த ஸ்திரீ, குழந்தாய், ரிப், அதோ பாரடா! அந்தக்கிழவன் உன்னை ஒன்றும் செய்யமாட்டான் என்று கூறி, அதைச் சாந்தப்படுத்தினாள். அந்தக் குழந்தையின் பேரும், அந்த ஸ்திரீயின் குரலும், அவளுடைய நடையுடை பாவனைகளும், அவனுடைய மனதில் ஒருவாறு பலவித எண்ணங்களை உண்டாக்கின. உடனே ரிப் அந்த ஸ்திரீயைநோக்கி, "பெண்ணே! உன் பெயரென்ன?" என்றுகேட்டான்.

"என்பெயர், ஜூடித் கார்ட்டினர் (Gudith Gardiner)."

"உன் தகப்பன் பெயர் என்ன?"

"அந்தத் துக்கத்தை ஏன் கேழ்க்கிறீர்? அவர் பெயர் ரிப்வான் விங்கிள். இருபது வருஷத்து முன் ஒருநாள் வேட்டையாடப் போனார்; பிறகு திரும்பி வரவில்லை; அவருடன் போன அவருடைய நாய் மாத்திரம் திரும்பிவந்தது; தன்னைத்தானே சுட்டுக் கொண்டாரோ, அல்லது காட்டு முராண்டிகள் அவரைப் பிடித்துக் கொண்டுபோய்விட்டார்களோ, அல்லது, வேறு என்ன நேர்ந்ததோ, நானறியேன். அப்போது நான் சிறுகுழந்தை," என்று பதில் கூறினாள்.

ரிப் நடுநடுங்கிக்கொண்டே, 'உன் தாயாரெங்கே?' என்று கேட்டான்.

"அவளும் அப்பொழுதே செத்துப் போய்விட்டாள், ஐயா."

இந்தப் பதிலைக் கேட்டதும், ரிப்புக்கு, மனதில் ஒரு பக்கத்தில் ஆறுதலும், மற்றொரு பக்கத்தில் அடக்கமுடியாத துக்கமும் உண்டாயிற்று. அந்த ஸ்திரீயையும் குழந்தையையும் கட்டிக்கொண்டு,

"நான்தான் உன் தகப்பன். நான்தான் ரிப்வான் விங்கிள். இங்கே ஒருவருக்கும் ரிப் வான் விங்கிள் தெரியாதா?" என்று கூவிக் கதறினான்.

அங்கே ஆச்சரியப்படாதார் ஒருவருமில்லை. இத்தருணத்தில் ஒரு கிழவி, தள்ளாடித் தள்ளாடிக்கொண்டு அவனருகே வந்து, தன் கண்ணிற்கு நேராகக் கையை வைத்துக்கொண்டு, அவன் முகத்தை உற்றுப்பார்த்து,

'ஆஹா! ரிப்வான் விங்கிள்! இருபதுவருஷ காலமாக எங்கே போயிருந்தீர் ஐயா? வாரும், வாரும்! நான், உம்முடைய அயல் வீட்டுக்காரி யாயிற்றே. உமக்கு நினைவில்லையா?" என்றாள்.

இச்சமயத்தில் அந்த வீதியில் சற்று தூரத்தில் வந்துகொண்டிருந்த, பீடர் வாண்டெர்டாங்க் (Peter Vanderdank) என்பவரைக் கேட்டால், எல்லாருடைய ஸந்தேகமும் தெளிவாகுமென்று, எல்லாரும் அபிப்பிராயப்பட்டார்கள். அவர் அக்காலத்துத் தேச சரித்ர வல்லவர். அவர் அருகே வந்து ரிப்பைப் பார்த்தவுடனே அவருக்கு நன்றாக ரிப்பினுடைய ஞாபகம் வந்துவிட்டது. இவன் பழய ரிப் வான் விங்கிள் தான் என்று அவர் உறுதிமொழி கூறிவிட்டு, பிறகு அவ்வூருக் கருகேயுள்ள மலையின் விநோதத்தையும் மகிமையையும் கூறினார். அதாவது:—"இம்மலையையும் இவ்வாற்றையும் முதன் முதல் கண்டுபிடித்த ஹென்ட்ரிக் ஹட்ஸனும் (Hendrick Hudsan) அவருடைய கப்பலில் அவருடன் வந்த ஜனங்களும் இருபது வருஷத்திற் கொருமுறை அம்மலையை வந்து பார்த்து, அவ்விடத்தில் தங்கி ஆட்டமாடுகிறது வழக்கம்; என் தகப்பனாரும் ஒருமுறை அவர்களைப் பார்த்திருக்கிறார். அவ்வாட்டத்தில் அவர்கள் உருட்டும் கர்லாத்தடிகள் ஒன்றோடொன்று முட்டி இடிபோல ஒலித்ததை, ஒருநாள் ஸாயங்காலம் நானும்கேட்டிருக்கிறேன்" என்றார். (இதன்தொடர்ச்சி 156-ம்பக்கம்)

# ஐரோப்பிய மஹா யுத்தம்

## (தமிழ்ப் பதிப்பு)

இப்போது நடக்கும் யுத்தத்தைப்பற்றி விஸ்தாரமாக 'விவேக போதினி'யில் வெளியிடுவதற்கு இடமில்லாமையால் ஷை யுத்தத்தைப்பற்றி நன்றாய்த் தெரியும்பொருட்டு யாவருக்கும் உபயோகமாகும்வண்ணம் தனியாகப் புஸ்தகரூபமாக அநேக நண்பர்கள் வேண்டுகோளுக்கிணங்கி வெளியிட உத்தேசித்திருக்கிறோம். அதில் யுத்தத்தின் காரணமும், யுத்த நடவடிக்கைகளும், வீரர், ஸேனாதிபதி இவர்களுடைய பெருமையும், அந்தந்த நாட்டு அரசர்கள், படைகள், கப்பற்படைகள், ஆகாய விமானப் படைகள், கோட்டைகள், ராணுவ ஸ்தலங்கள் இவற்றைப்பற்றிய ஸமாசாரங்கள் யாவையும் ஒழுங்குபடுத்தி என்றைக்கும் உபயோகமாகும்படி எழுதப்படும். இதில் சித்திரப்படங்கள் ஏராளமாய்ச் சேர்க்கப்படும்.

காகிதத்தின் விலையேற்றத்தின்பொருட்டு, கொஞ்சம் காப்பிகளே அச்சிடுவதால் ஷை புத்தகம் வேண்டிய சந்தாநேயர்கள் தாமதிக்காது தங்கள் பெயரை உடனே ரிஜிஸ்டர் செய்துகொள்ளவும். வழக்கம்போல் சந்தா நேயர்க்குப் புத்தகத்தின் விலை குறைக்கப்படும்.

விலாஸம்:—

**மானேஜர் 'விவேக போதினி'**

திருவல்லிக்கேணி, சென்னை.



Mr. Asquith,
Prime Minister
மிஸ்டர் ஆஸ்க்வித், பிரதம மந்திரி



Mr. Winston Churchil,
First Lord of the Admiralty
மிஸ்டர் சர்ச்சில், கப்பற்படை பாதுகாப்பு மந்திரி



Sir Edward Grey,
Secretary, Foreign affairs
ஸர் எட்வர்ட் க்ரே, அந்நியதேச மந்திரி

## CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | துலு | இங் | தமிழ் | வார | ஆநந்த வூ கார்த்திகை மூ — சாலிசகம் 1836 கலியப்தம் 5015 — பசலி 1324 கொல்லம் 1090 — 1914 வூ நவம்பர் மூ—டிசம்பர் மூ |
|---|---|---|---|---|---|
| செபு | 27 | 16 | 1 | திங் | சது 45-25, சுவா 50-20, ஆபு 7-30, ஔள 52-10, பத் 18-1, திவி 7-30, அக 28-52, அனு 3 செ 30-0, சுவா 2 புத 1-57, விர்-கி- சதுர்த்தி விஷ்ணுபதி மாகி கரிநாள் ஸ்மார்கம். |
| | 28 | 17 | 2 | செ | ●அமா 39-35, விசா 46-16, சோ 52-4, சது 12-30, திவி 3-20, ரா 26-47, சர்வ அமா. |
| | 29 | 18 | 3 | புத | பிர 34-0, அனு 42-28, அதி 44-34, கிம் 6-47, ரா 25-52, மார் சுத் இஷ்டி சம்பாசஷ்டி ஆ. |
| ர | 30 | 19 | 4 | வியா | துதி 28-46, கே 39-2, சுக 37-22, கௌ 28-46, ரா 29-21, அனு 1 ரவி 13-52, சந் தரி மழை 7-க்குள். |
| செபு | 1 | 20 | 5 | வெ | திரு 24-8, மூ 36-17, திரு 30-42, கர 24-8, சே 2-7, ரா 3-31 அக 28-46, பச்சாதஸ்த செ 47-7, அனு 4 செ 58-30, |
| | 2 | 21 | 6 | சனி | சது 20-16, பூரா 34-16, சூல 24-33, பத் 20-16, திவி 0-11, ரா 25-11, திதித் சது விரு நாகசதுர். சுவா 3 புத 9-25, திரிதி. |
| ரகு | 3 | 22 | 7 | ஞா | பஞ் 17-18, உத் 33-14, கண் 19-19, பா 17-18, ரா 14-38, அனு 2 ரவி 31-24, அவி 1 ரிசுகுரு 22-52, சஷ் நாகபஞ் சப் விரு சிர உப சம்பாசஷ்டி. [சமி சஷ் உப. |
| புசு | 4 | 23 | 8 | திங் | சஷ் 15-30, திரு 33-20, விர் 14-53, தை 15-30, ரா 14-50, சாபாப 1-58, சுவா 4 புத 4-42, கே 1 வக்சுக் 42-58. |
| | 5 | 24 | 9 | செ | சப் 14-54, அவி 34-35, துரு 11-21, வணி 14-54, ரா 24-38, அக 28-42, நந்தனசப்தமி தத்தாத்ரே நவாா. |
| ரசெ | 6 | 25 | 10 | புத | அஷ் 15-34, சத 37-4, வியா 8-47, பவ 15-45, ரா 25,24, அனு 3 ரவி 48-28, கே 1 செ 28-56, விசா 1 புத 50-0, |
| [பு | 7 | 26 | 11 | வியா | நவ 17-31, பூர 40-48, ஹர் 7-14, கௌ 17-31, தியா—0—0 தசமிதிதி கல்பாதி. [கோஷ்டாஷ்டமி கரிநாள். |
| | 8 | 27 | 12 | வெ | தச 20-42, உத்தி 45-36, வஜ் 6-38, கர 20-42, திவி 6-33. அதிதி மழை 4-க்குள். |
| புசு | 9 | 28 | 13 | சனி | ஏகா 24-53, ரே 51-18, வ்ரித் 6-49, பத் 24-53, திவி 18-27, அக 28-32, விசா 2 புத 47-0, பச்சாதஸ்தசுக் 40-7, அனு 4 வக்சுக் 34-0, ஏகாதிதி சர்வ ஏகா விய சிரா |
| ரசெ | 10 | 29 | 14 | ஞா | துவா 29-45, அசு 57-29, விய 7-37, பா 29-45, ரா 17-55, அனு 4 ரவி 5-11, கே 2 செ 59-0, |
| பு | 11 | 30 | 15 | திங் | திர 34-58, பர 60-0, வரி 8-44, கௌ 4-43, திவி 24-5, விசா 3 புத 37-14, பிரதோ. |
| | 12 | 1 | 16 | செ | சது 40-10, பர 4-0, பரி 9-59, கர 7-34, ரா 8-35, கார் உப பாஷாண சதுர்செசி அண்ணமலைதீபம் பிரத்யவரோ. |
| ரபு | 13 | 2 | 17 | புத | ○பௌ 45-2, *கார் 19-7, சிவ 11-2, பத் 12-36, ரா 25-24, அக 28-30, கே 1 ரவி 14-51, விர்ச்சிகபுத 47-24, சர்வாலய தீபம் பிரத்தியவரோ தத்தாத்ரேய ஜ கரிநாள். |
| சு | 14 | 3 | 18 | வியா | பிர 49-4, ரோ 15-47, சித் 11-39, பா 17-3, ரா 2-23, மார் பகு அனு 3 வக்சுக் 32-56, இஷ்டி. |
| செபு | 15 | 4 | 19 | வெ | துதி 52-3, மிரு 20-32, சா 11-34, தை 20-33, ரா 14-16, கே 3 செ 28-0, அனு 1 புத 55-20. |
| ர | 16 | 5 | 20 | சனி | திரு 53-50, திரு 24-12, சுப 10-38, வணி 22-56, ரா 26 55, கே 2 ரவி 38-11, மழை 9-க்குள். |
| | 17 | 6 | 21 | ஞா | சது 54-17, புன 26-38, சுப் 8-46, பவ 24-3, ரா 18-44, அக 28-28, சங் சது. |
| பு | 18 | 7 | 22 | திங் | பஞ் 53-24, பூச 27-49, பிரா 5-54, கௌ 23-50, ரா 29-21, அனு 2 புச 3-31. |
| ரசெ [புசு | 19 | 8 | 23 | செ | சஷ் 51-21, ஆயி 27-49, மா 2-2, வை 55-18, கர 22-22, சே 1-49, ரா 28-47, கே 3 ரவி 54-30, கே 4 செ 46-8, பிராகுதயபுத 55-7, அனு 2 வக்சுக் 37-15, பச்சாது சுக் 40-4, வை-சி. |
| பு | 20 | 9 | 24 | புத | சப் 48-12, ம 26-41, விஷ் 51-38, பத் 19-46, சே 1-15, ரா 17-34, அனு 3 புத 10-40, சிலவிடங்களில் பனி ஆரம் |
| ச | 21 | 10 | 25 | வியா | அஷ் 44-12, பூர 24-39, பிரி 45-18, பா 16-12, ரா 13-22, அக 28-26, மிரு 3 வக்சனி 51-14, காளாஷ்டமி பைரவாஷ்டமி திஸ்ரோஷ்டகா. |
| புரா | 22 | 11 | 26 | வெ | நவ 39-28, உத் 21-50, ஆயு 38 14, தை 11-52, ரா 13-13. அனு 4 புச 9-0, அவி 4 ராகு மக 2 சேது 23-26. |
| ர | 23 | 12 | 27 | சனி | தச 34-11, ஹஸ் 18-45, ஔள 31-1, வணி 6-49, ரா 8-42, கே 4 ரவி 10-20. |
| செபு | 24 | 13 | 28 | ஞா | ஏகா 28-32, சித் 14-34, சோ 23-21, பா 28-32, திவி 27-37, சாபசெ 6-8, கே 1 புத 7-2, சர்வஏகா. |
| | 25 | 14 | 29 | திங் | துவா 22-42, சுவா 10-29, அதி 15-32, தை 22-42, திவி 23-31, அக 28-25, விர் திதித்வயம் பிரதோ. |

Margin labels: 1333 ஞூ மொகர்ம் (beside 1–9); விருச்சிக (beside 18–22); தசம்பர் (beside 15–18).

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| ராகு. | 17விர்ச்சிக புத | | |
| குரு. | 25-சாப செவ் | | கேது |
| | ரவிசுக்செ | புத | |



# விவேக போதினி

தொ. 7.] ஆனந்தவூ ஐப்பசிமீ : [பகுதி. 5.

## மோக்ஷ ஸோபாநம்

### THE STEPS TO THE GOAL

### 3. பக்தியோகம் (தொடர்ச்சி)

(3) பக்தியோகம் வைதிக கர்மானுஷ்டானமில்லாது தனித்திருக்காது என்ற விஷயத்தை விஸ்தரித்துவருகையில் ஆழ்வார் நாயன்மார் சரிதைகள் இந்தப் பாகத்திற்கு விரோதமாகக் காணப்படுகின்றனவே என்று ஆராய்வோருக் குத்தோற்றலாம். இது வெறும் மயக்கந்தான். ஆழ்வாராதிகளில் ப்ராஹ்மண க்ஷத்ரிய வருணத்தைச் சேர்ந்தவர்களிடம் கர்மானுஷ்டானமில்லை என்று ஒருவராலும் கூறமுடியாது. மற்றைய வருணத்தாருள் அவதரித்த பெரியோர்களுக்கு வைதிககர்மங்குறைவாக விருப்பதால் விஸ்தாரமாக அவர்கள் செய்த பக்தி விசேஷத்தைப்போல எடுத்த ப்ரஸ்தாபிக்கப் படாமலிருக்கலாம். இதைக்கொண்டு அவர்கள் தமது கர்மாக்களை அநுஷ்டியம் என்று விட்டவர்கள் என்று கொள்ள இடமேயில்லை. இன்னும் சிலர் தமது பக்திபரவசத்தில் உலக ப்ரஜ்ஞையே இல்லாது இருந்தகாலங்களில் கர்மானுஷ்டானுதிகளில் முடிவுலா திருக்கலாம். மேலும் சிற்சிலரிடம் ஸ்மிருதிக்கு விரோதமான கர்மங்களும் காணப்படலாம். அவைகள் ஈசன் ஸம்பந்தப்பட்டு ஏதோ ஒரு காரியார்த்தம் நிகழுவதால் அவைகளை ஸாதாரண ஒழுங்காக மதித்து பக்தியோகத்திற்கு அந்த ஒழுங்குத்தவறு அவசியம் என்று குதர்க்கம் பேசாது அவைகளில் ஈடுபட்டு ஜாக்ரதையாக ஒதுங்கல்வேண்டும். ஆகவே பொதுவாக சைவவைஷ்ணவ ஸித்தாந்த சரிதங்கள் வைதிக ஒழுங்கிற்கு விரோதமாகக் காணப்படினும், கதாநாயகர்கள் நடந்துகொண்டவழிகளை நுட்பமாக ஆராய்வதாலும், பக்திபரவசத்தில் கர்மங்கள் நழுவப்பெற்றிருந்த நிலையைஉணர்வதாலும், அவர்கள் பெரும்பாலும் அடைந்த முடிவான பதமுக்தி, ஜீவோதிர்லபமாகியநிஜமுக்திக்குகீழ்ப்பட்ட நிலைகளின் தன்மைகளாலும், அவர்கள் பக்திவைதிககர்மம் நீங்கப்பெற்ற வெறும்பக்தியே அல்ல என்பது நன்குவெளியாகும். அவர்கள் பக்தியைப்பற்றியே அவர்கள் சரிதங்கள் ஏற்றமாக்கூறவந்தனவேஒழிய, அவர்களிடம் இதற்கு முக்ய ஆதாரமாக முன்னரே அமைந்து கிடந்த கர்மத்தைக் கூறாமல் ஊஹித்துக் கொள்ளும்படி விட்டன். மேலும் சிற்சிலர் தம் நிலைவிசித்திரத்தாலோ அல்லது தமது மனதின் கொடுமையாலோ முதலில் ஈசனது நாம ஸங்கீர்த்தன ரூபமான ஸாதாரணபக்தியில் தொடங்கலாம். அதன் சிறப்பால் அவர்கள் மனம் தெளிந்து நல்வழிப்பட்டுத்தகுந்த வைதிக ஸத்கர்மங்களிடம் பற்று உண்டாகி அதுவே பக்தியோகமாகலாம். இந்த ரஹஸ்யத்தையே கிருஷ்ணபரமாத்மா பகவத்கீதை 9-வது அத்யாயம் 30-31ம் ச்லோகங்களில்:—

தீயொழுக்கம் மிக்கோனும்தெய்வமது வேறொன்றை
ஆயுமனம் இல்லா தநேத்தனையே—நேயமுடன்
போற்றுவனேல் ஏதமறு புந்திநிச்ச யம்கொளால்
ஏற்றமுறு தூயோனும் ஈங்கு.

சிற்பொழுதில் அன்னோன் அறத்திற் செறிந்தோனும்
எப்பொழுதும் சாந்தியினை எய்துவனுல்-பொற்புறு
(மென்

பத்தனென்றும் கேடபடான் என்று நிச்சயமாய்ச்
சித்திரவிற் சேவகநீ செப்பு.

என்று எடுத்துவெளியிடுகிறார். கர்ம அநுஷ்டானத்தில் பக்திவந்தால் உடனே அது பக்தியோகமாகி மேல்படிகளுக்குங் கொண்டுவிடும் முக்கியமாக ப்ராஹ்மண க்ஷத்திரியர்கள் விஷயத்தில்: மற்றையோர் விஷயத்தில் பக்தி ஒருவாறு கர்மாநுஷ்டானத்தை முன்னிட்டுத்தொடங்காம விருப்பினும் கர்மாநுஷ்டமான ரூபமான கர்மயோகத்தை நிலைக்கச்செய்தே பின்னர் பக்தியோகமாகி மேல் நோக்கும்: என்று விளங்கியிருக்கும் இதற்குள்.

(4) விக்ரஹாராதனா ரூபமாகத்தானிருக்கும் இந்த பக்தியோகம் என்று கூறப்பட்டுள்ளது. இது சிலருக்கு அனாவசியமென்று படலாம். சற்று நிதானித்தால் இந்தக் குழப்பம் நீங்கிப் போய்விடும். நமது அன்பு ஒரு குறியின் மூலமாயல்லது திடப்பட்டு ஓங்காது. இதற்கு முக்கிய காரணம் நமது மனது வெளிமுகப்பட்டு விஷயங்களை நுகரவேண்டும் என்ற அவாவுடன் கூடியிருப்பதேதான். நமது நண்பர்களை வெகுகாலம் பார்க்காவிட்டால் அவரிடம் உள்ள அன்பு மழுங்கிவரும். அந்தக் காலங்களில் அவர்கள் படமோ அல்லது அவர்கள் கொடுத்த அறிகுறியோ ஏதாவது ஒன்று நம்மிடமிருப்பின் அவர்களிடமுள்ள அன்பு இவைகளால் தூண்டப்பட்டு முளைந்துகொண்டே இருக்கும் நமது உள்ளத்தில். இதுபற்றியே தான் நாகரிகம் நிறைந்த இக்காலத்திலும் அன்புமிகுந்தோர் பிரியும்படி நேரிடும் காலத்தில் அறிகுறிகள் மாற்றிக்கொள்வது படமெடுப்பது முதலியவைகள் செய்வது வழக்கமாகிவிட்டது. இதுபோல கர்ம ஒழுங்கிற்கு மூலமாயிருந்து நம்மைக்காக்கும் கடவுளுக்கும் ஒருவித ரூபமூலமாகத்தான் பக்தி நிலைக்கு வருபவனால் அன்பு செலுத்த முடியும். இப்படியின்றி மானஸிகமாக அன்புசெலுத்த மூட பக்தி நிலையில் ஒருவன் முயன்றால் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததென்றபடி மானஸீக உருவத்திற்கு அன்புசெலுத்தியதாகவாவது அல்லது சூன்யத்தில் உறங்கியதாகவாவது முடியும்.

மேலும் வேறுவிதமாகப் பார்க்குங்கால் முடிவுப்படியான ஞானயோகத்தில் அல்லது மற்றவைகளில் கடவுளை ஒருவித உருவமும் இன்றி வழிபடமுடியாது என்பதுதான் வைதிகக் கொள்கை என்பதும் வெளிப்படும். ஸாதாரணமாக நமது ஸ்நேஹிதன் ஒருவனை அன்புடன் திருப்திபண்ண நாம் புகுவதாக வைத்துக் கொள்ளுவோம். திருப்தி அடையவேண்டியது அவன் ஜீவாத்மா ; அதையா நாம் நேரிட திருப்திப்படுத்துகிறோம்? நல்ல சொற்களால் அவன் காதையோ, தடவிக்கொடுப்பதால் அவன் ஸ்பர்சேந்திரியத்தையோ, பழங்களால் அவன்கை, வாய் கண்ணைபோ திருப்திப்படுத்தியல்லவா, அவனை திருப்திபண்ண முயலுகிறோம்? இவ்வாறின்றி வேறு எவ்வாற்றானும் நமது தோழர்களை திருப்திப்படுத்த முடியாது. இம்மாதிரி நேரிட திருப்தி அடைவதற்கும், திருப்திப்படுத்தவேண்டிய முடிவான ஜீவனுக்கும் உள்ள ஸம்பந்தத்திற்கு அங்க அங்கி ஸம்பந்தம் என்று பெயர். இதன்படி நாம் நேரிடத்திருப்தி செய்யவேண்டியது அங்கமே, உள்ளபடி திருப்தியடைவது அங்கியே. இதன்படி பக்தியோகத்தில் திருப்திப்படுத்தி அநுக்ரஹம் பிறக்கும்படி செய்யவேண்டியது ஈச்வரனாக இருக்க அவரை நம்போன்றவரால் (நம்முள்ளிருப்பவரையே நேரிடத் திருப்திப்படுத்த முடியாதவரான நம்மவரால்,) நேரிட திருப்தி பண்ணவே முடியாது. அவருடைய அங்கங்களுள் சிலவான பஞ்சமஹாபூதங்கள், பகவான் விபூதியோக அத்யாயத்தில் குறித்திருக்கும் விபூதிரூபங்கள், அன்னை பிதா, பெரியோர், குரு, திவ்யமூர்த்திகள் முதலியவைகள் மூலமாக அவரை ஆராதிப்பதல்லாது அவரை வழிபட வேறுவழியே இல்லை. விக்ரஹாராதனரூப ஸம்பந்தமில்லா பக்தி என்பதே இல்லை. இந்த போகத்திற்கு அடுத்தபடியான ராஜயோகத்திலும் இது உண்டு. விக்ரஹ விஷயம் என்னும் புத்தகத்தில் இந்த விஷயம் வெகுவாக விஸ்தரிக்கப்பட்டு ஞானிக்கும் இவ்வழி நீக்கத்தக்கதல்ல என்று வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஆதலால் இந்த மோக்ஷ ஸோபானம்முடிந்து மோக்ஷம் நேரிடக் கைகூடி அதிலேயே முழுகி இருக்கும் நிலைதவிர மற்றையவைகளில் எல்லாம் ஈசன் ஏதாவது ஒரு விக்ரஹ ரூபமாகத்தான் ஆராதிக்கப்படுவன்: அது வெளிப்படையான கல்செம்பாலாகிய உருவமாகவாவது அல்லது மானஸிக உருவமாகவாவது இருக்கும். விக்ரஹாராதானம் மூடர்களுக்கு மாத்திரமல்ல, நம்மைப்போன்ற கற்றறி மூடர்களுக்கும், அது மூடர்களுக்கும் பாமரர்களுக்குந்தான் என்று கருதி இறுமாந்திருக்கும் கண்மூடிகளுக்கும், நன்றாக உண்டு. இதைத்தவிர பக்தியோகத்திற்கும் அதன்முடிவான மோக்ஷத்திற்கும் இங்கிருந்து வேறு வழியே இல்லை.



(5) சில ஸமயங்களில் இந்த பக்தியோக உள்ளுணர்வு வெளிப்பட்டு ஆடல், பாடல், மெய்ம்மறந்து போவது, ஆராமை முதலிய வெளிக்குறிகளோடு ஸம்பந்தப்பட்டும் காணப்படலாம். இப்படிக் காணப்படுங்கால் இது வைதிக ஸ்மார்த்த ஒழுங்குகளுக்கு மீறிப் போகவேமாட்டாது. ஆகவே இதில் வர்ணாச்ரம ஒழுங்கு ஆசார சௌசாதிகள் ஒன்றும் நிலை குலைந்து காணப்படவேமாட்டாது. இந்த வெளிப்பாடு மனப்பரபரப்பு ஒருவித ஆராமை ஸத்விஷயம் பகவத்விஷயம் இவைகளில் ஈடுபட்டு நிற்கவேண்டும் என்ற அடங்கா ஆவல், அப்படி இருப்பவர்களுடன் சேர்ந்து உலகையே மறந்து இந்த விஷயமாக கூறிக் கேட்டு மனதில் வாங்கித் தியானித்திருக்கவேண்டும் அமைதியுடன், என்ற மனங்கொள்ளா உள்ளக்கொதிப்பு ஆகிய இவைகள் உருவமாக இருக்கும்: இதையே பகவான்கீதை 10-ம் அத்யாயம் 9-ம் ச்லோகத்தில்:—

அவ்வறிஞர் சிந்தையையும் ஆவியையும் என்கணமைத்
தெய்வமறஎன்னை யொருவர்க்கொருவர்-செவ்வியுறப்
போதிப்பர் பேசிவேர் போதும் நிறைவைப்பெறுவர்
மோதிப்பர் காதலினால் முன்.

என்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். இம்மாதிரி ஒழுங்கான வைதிக வழிகளிலின்றி வேறு வரம்பு மீறி தத்கால பாகவதர்களிடமும் பக்தர்களிடமும் காணப்படுவதுபோல பேய்க்கூத்து, வர்ணாச்ரமக் கட்டுப்பாடு, ஸ்திரீ புருஷக் கட்டுப்பாடு இவைகளை மீறி நடத்தல், ஸ்மிருதிக்கும் சௌசாரங்களுக்கும் மாறாக எச்சில் கலத்தல், கட்டிப் புரளல், பாட்டில் ஈடுபட்டு மயங்கிவிழித்தல் ஆகிய இவைகளில் எல்லாம் பக்தியோக வெளிப்பாட்டின் லேசமும் இல்லை. இவைகள் வீண்மனக் கொதிப்பு, உலகப்புகழ் விரும்புவது, மறைவான விஷயஸங்க ஈடுபாடு இவைகளை வளர்த்து அப்யாஸியை அதோகதிக்கே ஆளாக்கிவிடும். ஸ்ரீமத்பாகவதத்தில் பக்த சிகாமணியான ப்ரஹ்லாத ஸ்வாமி எடுத்துக்கூறிய நவவிதபக்தியில் இவை சேரவேமாட்டா. அவைகள் எல்லாம் பக்தியோகப் பரபரப்பைப் பெரும்பாலும் உள்முகப்படுத்தி ஒடுங்கிவரும்படிச் செய்து அடுத்தபடியான ராஜ யோகத்தில் அடி எடுத்துவைக்கத் தயார் செய்பவை; எப்பொழுதும் மேற்படி ஏறும்படியான திறன் இன்னும் வரவில்லையே என்ற ஆராமையை உள்ளடக்கியவை. இக்காலத்திய பக்திப் பெரும் கூத்தோ ஆள்கண்ட ஸமுத்திரம்,பலர் முன்

னிலையில் ஓங்கி எழுவது, வெளிமுகப்படுத்தி விஷயங்களில் ஈடுபட்டுத் திண்டாடும்படிக் காட்டிக் கொடுத்து விடுவது, இவற்றிற்கு மேலான நிலை ஒன்றுமில்லை என்று இறுமாந்து சுழலும்படி செய்யும் குணமுடையது. பக்தி யோகம் அடக்க முடியாது இயற்கையாக வெளிப்படுவதற்கும், இக்காலத்திய பக்திக் கூத்திற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாஸம் உண்டு. இரண்டையும் ஒன்றெனக்கருதி மோசம் போகவேகூடாது. சாஸ்திரீயமான பக்தி யோகம் செய்துவரும் பக்தன் ஒவ்வொருவனுக்கும் கர்மயோக பக்தியோகங்களில் ஈடுபட்டிருக்கும் வரையில் மனம் மேலான நிலையிலிருப்பதாகவும், ஆதலால் தன் பக்தியாதிகளிலேயே மறைந்து கிடக்கும் தாழ்த்தும்சக்தி போவதற்கு மார்க்கமும் உண்டா என்ற பரபரப்பு தன் மனதிலிருப்பதாகவும் உள்ள எண்ணங்கள் மாறாமல் குடிகொண்டிருக்கும். ஆதலால் அவனிடம் ஒருவிதச் சிறந்த துக்க உணர்வே குடிகொண்டிருக்கும். இது அடுத்தபடியான ராஜ யோகத்தில் நிலைக்க நிலைக்கத் தான் மாறும். தத்காலத்திய பக்தர்களிடம் இந்த துக்க ஆதாரம் காணப்படவே மாட்டாது. ஆதலால் அவர்கள் பக்தி, பக்தியோகமேயல்ல. மேலும் சாஸ்திரீய பக்தனுக்கு அவன் ஆராமை வெளிப்படும்பொழுது தீவ்ரத்தில் குறைவதாகவும் முன்னிலையில் அது பலமாக இருந்ததாகவும் தோன்ற அவன் காலக்ரமத்தில் அந்த வெளிப்படுங்கொதிப்பை அடக்கி அதை மனதிலே திருப்திப்படுத்தி அமைதியுடனிருக்க முயலுவன். இந்த அடையாளமும் தத்காலத்திய பக்தர்களிடமில்லை. ஆகவே பக்தி வெளிப்படும் விதம், அதனால் மனதில் ஏற்படும் நிலைகள், வெளிப்பாடுகள் அடங்கியோ ஓங்கியோ வரும் மாதிரி இவைகளைக்கவனித்தால் உண்மையான பக்தியோகம் கரை புரண்டு வருவது இத்தன்மையது என்று முன்னர் கூறியபடி நம்மனதில் மாறாதிருக்கும்.

இதுவரையில் கூறிவந்த பக்தியோக பாகங்களை மனதில் வைத்துக்கொண்டிருந்தால் இக்காலத்திய நிலைகுலைந்த பக்தி கர்மாதிகளுக்கு இடங்கொடாது வைதிக பக்தி செய்ய முயலலாம். இதற்கு ஸாதகமாக உள்ள மேல் இரண்டு பாகத்தையும் பின்னர் எடுத்து விவரிப்போம்.

# வியாஸர் (த்வைபாயநர்)

## VYASA (Dwaipayana)

வியாஸரெனப் பெயர் பூண்ட இம்மகரிஷியின் சரித்திரத்தைச் சொல்ல நான்முகக் கடவுளாலும் முடியாதெனில் அற்ப மதியுடையயாமோ அதைக் கூற வல்லோம். இவருக்கு வேதவியாஸரென்றும், துவைபாயனரென்றும், பாதராயணரென்றும் வேறுபெயர்கள் உள. வேதங்கள் அனந்தங்களாயும் ஒரே கூட்டமாயுமிருந்தவைகளை சாகைகளாக பிரித்து ருக்கு, யஜுர், ஸாமம், அதர்வணமாகிய நான்காகப்பகுத்து அவைகளை பைலர், வைசம்பாயனர், ஜைமினி, ஸுமந்து என்னும் நால்வருக்குத் தனியேகொடுத்து உலகத்தில் எங்கும் விஸ்தாரம் செய்யும்படி ஏற்படுத்தியதால் இவருக்கு வேதவியாஸரெனப் பெயர். யமுனை நதியின் நடுவிலுள்ள ஒரு தீவில் பிறந்ததால், இவருக்கு துவைபாயனரெனப் பெயர் வந்தது. சிரஞ்சீவிகளெனக் கொண்டாடப் பட்ட ஏழு பெயர்களில் * இவர் ஒருவர். இவர் இன்னும் லோகோபகாரத்தின் பொருட்டு ஜீவித்திருக்கிறாரென்பது பெரியோர்களின் நம்பிக்கை.

இவர் வஸிஷ்ட மகரிஷியின் கொட்பேரன், சக்திமகரிஷியின் பேரன், பராசரமுனிவரின்புத்திரன். சுகப்பிர்ம்ம ரிஷியின் தந்தை. தவஞ்செய்வோர்களெல்லாருக்கும் முதல்வர். பராசரர் ஒரு காலம் யமுனை நதியில் ஓடத்தின் மீதேறிச் செல்லுகையில் ஓடம் நடத்திவந்த சுந்தர ரூபமுள்ள ஒரு மாதின் மீது காதல் கொண்டு அவளுடன் காந்தர்வ விவாகம் செய்து கொண்டனர், இவர்கள் இருவருக்கும் பிறந்தவர் வியாஸர். குழந்தை பிறந்ததும் சீக்கிரத்தில் விருத்தியடைந்து வாலிபனாய்த் தாயை வலம்வந்து பணிந்து தன்னை எப்பொழுது நினைத்தபோதிலும் அக்கணமே அவளிடம் வருவதாய் வாக்களித்துத் தவம்செய்யச் சென்றனர். விஷ்ணுபுராணத்தில் வியாஸர்கள் இருபத்தெட்டுப் பெயர்கள் உண்டென்றும் ஆதிவியாஸர் பிர்ம்மா வென்றும் இருபத்தெட்டாவது, துவைபாயனரென்றும் கூறப் பட்டிருக்கிறது.

* மற்ற ஆறுபெயர்கள். அசுவத்தாமன், மஹாபலி சக்கிரவர்த்தி, ஹனுமான், விபீஷணர், கிருபாசாரியார், பரசுராமர்.



வியாஸர் விஷ்ணு பக்தரென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அவர் இயற்றிய கிரந்தங்களே இதை நன்குவிளக்கும். ஆயினும் சைவர்கள் சிலர் ஒரு பழையகதை சொல்வார்கள். அதுயாதெனில் வியாஸர் ஒருக்கால் காசிக்குச் சென்றபொழுது "கோவிந்தனைக் காட்டிலும் உயர்வான தெய்வம் ஒன்றுமில்லை" எனச்சொல்லி கையைத் தூக்கிக்கொண்டுசிவபிரான் ஸன்னிதிக்குச்சென்று ஆங்குநந்திகேசுவரனால் உயர்த்தின கைகள் அப்படியே ஸ்தம்பித்துப் போகப்பெற்றனரென்றும் பிறகு சிவனுடைய உண்மை உணர்ந்து துதிக்கக் கைகள் திரும்பவும் முன்போல கீழேவந்தன வென்பதுவேயாம்.

இவரைப்பற்றியகதை மற்றொன்று உண்டு. "தாயுடனாயினும் சகோதரியுடனாயினும், பெண்ணுடனாயினும் ஒரே படுக்கையிலும் ஆஸனத்திலும் உட்காரலாகாது. இந்திரியங்கள் பொல்லாதவைகள். வித்வானையும் கூட தனக்கு வசம் செய்து கொண்டு கெட்டவழியில் இழுத்துச்செல்லும்" என்று கருத்துடைய ஒரு சுலோகத்தை முனிவர் பாடம் சொல்லிக்கொண்டிருக்கையில் சீடர்களில் ஒருவன் எழுந்து, "ஐயா எனக்கு ஒரு சந்தேகம். வித்வானைக் கூட இந்திரியங்கள் கெட்ட வழியிலிழுத்துச் செல்லுமென்பது தொப்பாது. அஃது அவிவேகியை இழுக்குமே யன்றி வித்வானையணுகச் சக்தியற்ற" தென்றான். இது கேட்ட முனிவர் அச்சீடனுக்கு புத்தி கற்பிக்கும்பொருட்டும் அவன் மனோநிலையை யறியும் பொருட்டும் அச்சமயம் ஒன்றும் பேசாதிருந்து பிறகு சில நாட்கழித்துத் தன்மாயையால் அவ்வனத்தில் திவ்வியமானமாளிகை யொன்றமைத்தி அங்கே அழகில்மிக்க ஓர் கன்னிகையை உலாவும்படி செய்தார். சுந்தர வடிவுள்ள இம்மங்கையைக் கண்டசீடன் மதிமயங்கி அவளைப் பின்தொடர்ந்து சென்று அவள் வீட்டிற்குட் சென்றான். அந்தோ! என்ன ஆச்சரியம்! தன் குருமூர்த்தியாகிய வியாஸர் இருக்கக்கண்டுவெட்கித்தலை குனிந்து நின்றான். முனிவரும் புன்னகை செய்து "குழந்தாய், இப்போது நாம் சில நாட்கள் முந்தி சொன்ன சுலோகத்திற்கு ஆட்சேபமில்லை போலும்" என்றியம்பினார். சீடன் அது கேட்டு தண்டனிட்டு "ஐயா கெட்ட வழியிலிழுத்துச் செல்லுமென்று ஒரு முறை யல்ல மும்முறையும் சொல்லலா"மென்று கூறி புத்திபெற்றான்.

இவரைப்பற்றின மற்றொரு கதையுமுண்டு. முன்னொரு காலத்தில் தேவலோகத்தில் தேவஸ்திரீகள் நீராடிக் கொண்டிருக்கையில் சுகப்பிரம்மரிஷி அவ்வழியே செல்ல அவ்விளங்குமரிகள் அச்சமின்றி அப்படியே இருந்தனராம். சற்று நேரம் கழித்து வேதவியாஸரும் அவ்வழியே போக, ஸ்திரீகள் நாணமுற்றனராம். இதைப் பார்வையுற்ற வியாஸர் "பெண்மணிகாள், யௌவன புருஷனான என் குமாரன் செல்லுகையில் இவ்விதம் செய்யாது கிழவனாகிய நான் வரும்போது இப்படிச் செய்யக் காரணம் யாது" என வினவ, அவர்களும் "ரிஷிபுங்கவ, தங்கள் குமாரன் யௌவனப் பருவத்திலிருந்தாலும் புருஷன் பெண் எனவாவது வேறு எவ்வித வேற்றுமை யாவது கொண்டவனல்லன்; தாங்களோ விருத்தராயினும் வேற்றுமை யற்றவரல்லர்; ஆகையால் அப்படிச்செய்தோம்; பிழையாயின் பொறுத்தருள்வீர்" என உரைத்தனர்.

வியாஸர் ஒருகாலத்தில் அரணிக்கட்டையை நெருப்புக்காக கடைந்து கொண்டிருக்கையில் அதிலிருந்து உண்டானவர் இவர் புத்திரன் சுகப்பிர்ம்ம ரிஷி. சுகருக்கு பிர்ம்மோபதேசம் செய்யும் பொருட்டு வியாஸர் சிவபிரானை வேண்டினார். அதற்குப் பரமசிவனும் தான் பிர்ம்மோபதேசம் செய்தால் பின்னை தகப்பனோடிருக்க மாட்டானென எப்படியாகிலும் செய்தருளவேண்டுமெனக் கூற சிவனுமதற்கிசைந்தார். குறிப்பிட்டகாலத்தில் எல்லா பிர்ம்மரிஷிகளும் ஒருங்கே சேர்ந்தபொழுது சிவபிரானும் பிர்ம்மோதேசம் செய்ய முயலுகையில் சுகர் எழுந்துவணங்கி, "பிர்ம்மரிஷிகாள், எனக்கோர் சந்தேகம். இப்பொழுது நீங்கள் உபதேசம் செய்வது எவருக்கு? தேகத்திற்கா, ஆத்மாவுக்கா? தேகமோ ஜடவஸ்து, ஆத்மா ஞானமூர்த்தி, சச்சிதாநந்தரூபி. உங்கள் உபதேசம் இவ்விரண்டில் ஒன்றுக்கும் பொருந்தாது" என ஆங்கு வந்தோர் ஆச்சரியத்தால் பிரமித்து நிற்க அக்கணமே எல்லாவற்றையும் துறந்து சுகர் சமாதிக்கேகினர். புத்திரன் தன்னை விட்டுப் பிரிந்து போவதைப் பார்க்க மனம் சகியாத வியாஸர், "குழந்தாய்" எனக் கூவுகையில் செடி, கொடி, வல்லி, மிரு

கம், மனிதன், தேவர்கள், ரிஷிகள் ஆகிய அகிலாண்ட கோடிகளும் "குழந்தாய்" என எதிரொலி செய்ததைக்கேட்டு வியப்புற்று சுகர் தன்னைத் தானறிந்த ஞானி எனத்தெளிந்து மயக்கம் நீங்கினர்.

## மஹாபாரதம்

வியாஸர் எழுதிய புத்தகங்களுள் மஹாபாரதம் மிகச்சிறப்புடையது. இதை ஐந்தாம்வேதமென ஆன்றோர் கூறுவார். இம்மஹாபாரதத்தின் பெருமை யறிய விரும்பிமுன்னொரு காலத்தில் தேவர்களும் முனிவர்களும் தராசின் ஒரு தட்டில் இப்புத்தகத்தையும் நான்குவேதங்களை மற்றோர்தட்டிலும் வைத்து தூக்கிப்பார்க்கும்பொழுது மஹாபாரதம் மிகக்கனமாயிருந்ததெனவழங்கிவருகிறது. இன்னும் வேதங்களையும் மஹாபாரதத்தையும் நதியின் வெள்ளப்பெருக்கில், எறிந்துவிட வேதங்கள் யாவும் வெள்ளத்தோடு கீழ்நோக்கிச்செல்ல மஹாபாரதம் ஒன்றே வெள்ளத்தை எதிர்த்துச் சென்றதென்றும்கூறுவர். இத்துணைச்சிறப்பும் இப்புத்தகத்துக்கு அமையும். ஏனெனில் வேதங்களின் அருத்தம் எளிதில் விளங்குவதில்லை. வித்தியாரண்ய ரெனப் பெயர்பூண்ட முனிவரும் மற்றும் சிலரும் வேதங்களுக்கு விரிவுரை கருத்துரை கூறியிருப்பினும் வேதவாக்கியங்கள் ஒன்றுக்கொன்று விரோதமான அர்த்தங்களை அநேக இடங்களில் கொடுக்கின்றன. அதில் ஏது நிச்சயமென்று அறிவதற்கு மஹாபாரதமும் புராணங்களும் ஆதாரம். மஹாபாரதத்தை எல்லாச் சாதியோரும் கேட்டுக் கற்று உணரலாம். இத்தகைய சிறந்த நூலாகும் மஹாபாரதம். இந்தப் புத்தகத்தை யெழுத நினைத்து வியாஸமுனிவர் பிர்ம்மதேவனை மனதில் தியானம் செய்தனராம். நான்முகக்கடவுளும் பிரத்தியட்சமானார். வந்ததோர்தேவனை மகிழ்வுடன் பணிந்து தன்னுடைய எண்ணத்தைத்தெரிவித்துத் தான் சொல்லும் சுலோகங்களை விரைவிலெழுதத் திறமையை தயை புரியுமாறு வேண்டிக் கொண்டனர். பிர்ம்மாவும் விநாயகக் கடவுளை வேண்டிக் கொள்வீராயின் அவர் அவ்வேலையைச் செய்து முடிப்பாரென உரைத்து மறைந்தனர். பின்னர் வியாஸர் விநாயகக்கடவுளைத் துதிக்க யானை முகத்தோன் தோன்றி யாதுகாரணம்பற்றி என்னை யழைத்தாயென வினவ வியாஸரும் தனக்குதவி புரியுமாறு வேண்டினர். விநாயகர், நீர் கோரியபடியே நீர்சொல்லும் சுலோகங்களை நான் எழுதச்சம்மதிக்கின்றேனாயினும் என்னுடைய எழுத்தாணிதாமதிக்காமல்தடையின்றிச்சொல்லவேண்டும்; இல்லாவிடில்இக்காரியம் நம்மா லியலாதென்றார். வியாஸரும் அதற்கிணங்கி "அப்படியேயாகட்டும்; ஆனால் நான் சொல்லும் சுலோகங்களுக்கு அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளாமல் மாத்திரம் நீர் எழுதக்கூடாது" என்றார். ஒருவருக்கொருவர் ஏற்பாடு செய்துகொண்டு எழுதப்பட்ட கிரந்தம் இம்மஹாபாரதம். இப்புத்தகத்தில் சிற்சில விடங்களில் சுலோகங்களுக்கு அர்த்தம் நன்குவிளங்காது. இவைகளை வியாஸர் செய்து அவைகளின் அருத்தத்தை விநாயகர் யோசித்தறிவதற்குள் நூற்றுக் கணக்கான மற்ற சுலோகங்களை செய்து முடிப்பாராம்.

இப்படிச் செய்துமுடித்த தெக்காலமென்று கேள்வியுண்டாகலாம். இதற்கு உத்தரம் திருப்திகரமாய்க்கூறுவது எளிதல்ல. சாஸ்திரங்களையும் பூர்வ மதக்கிரந்தங்களையுமே பிரமாணமாகக்கொண்டவர்கள் கலிபுருடன் பூமியில் பிரவேசித்து 5000 வருடங்களுக்கு மேலாகிறதாலும் அதற்கு முந்தியே மஹாபாரதயுத்தம் நடைபெற்றதாலும் மஹாபாரதமும் சற்றேறக்குறைய ஐயாயிரவருடங்களுக்கு முந்தி செய்யப்பட்டதென்றும் கூறுவர். ஆனால் பூர்வபுருஷர்களின் காலத்தை நிர்த்தாரணைசெய்ய முயன்ற வித்வான்களாகிய இந்தியர்களும் ஐரோப்பியர்களும் அவ்வாறு கருதார். இவர்களுடைய ஆராய்ச்சிகளால் மஹாபாரதம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிக்கு இப்பால் (சுமார் 2400 வருடங்களுக்கு முந்தி) எழுதப்பட்டதென்று விளங்கும். இதற்கு அநேக காரணங்களும் எடுத்துக் கூறுகின்றனர்.

இந்த மஹாபாரதம் கிருஷ்ணபகவானுடைய மான்மியத்தையும் பாண்டவர்களின் சத்தியம் தவறாமையையும் கௌரவர்களது துஷ்டத்தனத்தைப்பற்றியும் முக்கியமாய்க் கூறும். இதனுடன்நீதிகளையூட்டும் அநேகக் கதைகளையும்தர்மங்களையும்விஸ்தாரமாய் எடுத்துச்சொல்லும். இது சிவபிரான் சிறப்பைக்கூறுகிறதென்றும் சைவர்களும் மகாவிஷ்ணுவின் மகிமையை



யன்றோ மகிழ்ந்து புகழ்கிறதென்று வைஷ்ணவர்களும் ஆங்காங்கிருக்கும் சுலோகங்களையும் கதைகளையும் தம்தம் பட்சம் ஆதாரமாகக் காட்டிக்கூறுவார். அவர்கள்வழக்குக்கு வேதங்களுக்கு விரிவுரை கூறிய வித்யாரண்ய ரெனப் பெயர் வாய்ந்த பேரறிவாளர் ஸமாதானம் கூறியிருக்கிறார். அஃது இவ்வாறு:—"புராணங்களில் மும்மூர்த்திகளைக்குறித்து உயர்வுதாழ்வு உரைக்கப்பட்டிருக்கிறது; மக்கள்,தனம் பெண்டீர் இவர்களிடத்துப் பற்றால் சிற்றின்பத்தில் ஆசைப்பட்டவர்களுக்கு படிப்படியாய் ஞானமுண்டாகும்பொருட்டே யாகும். மேலும் கருணைக்கடலான வாஸுதேவர் வியாஸரூபமாக அவதரித்து உலகத்தோர் உய்யுமாறு புராணங்களைச் செய்தவர். இவ்வாறு வெவ்வேறு கூறுவதுமமையுமோ? ஆகையால் அப்படிச் சொல்லப்பட்டிருப்பது எத்தெய்வத்தினிடத்து எவனுக்குப்பற்று இருக்கின்றதோ அவனுக்கு அத்தெய்வத்தினிடத்துப் பக்திமிகுந்து அவன் கடைத்தேற வேண்டுமெனக் கருணையால் அத்தெய்வத்தைப் புகழ்வதே யன்றி, மற்ற தெய்வத்தை நிந்திக்க வேண்டுமென அபிப்பிராயமல்ல. சிவன் சங்கரன் மஹாதேவன் என்றும்,மகாவிஷ்ணு நாராயணன் வாஸுதேவன் என்றும் சொல்லப்படும் பெயர்கள் ஒரே தெய்வத்தினுடைய மாறுபெயர்களாகும். உயர்வு தாழ்வு நம்முடையபுத்தியீனத்தால்மாத்திரம் தோற்றும்."

## பாகவதம்

வியாஸர் பாரதத்தையும் மற்றுமுள்ள புராணங்களையும்இயற்றியும் தம்மனது ஸமாதானம் பெறாதது கண்டு கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில் தேவரிஷியான நாரதர் அவர் முன் தோன்றினார். வியாஸரு மெழுந்து நாரதருக்கு ஆஸனம் அமர்த்தி உபசாரணைசெய்து, "அடியேன்மீது கிருபைகூர்ந்து தரிசனந்தந்தருள நான் என்னதவம் புரிந்தேனோ!" என வெகுவாகக் கொண்டாடினார். நாரதரும் புன்சிரிப்புடன் கூறுவார்: "நீங்க ளிப்படிச் சொல்வது தகுமோ? மஹாவிஷ்ணுவின் அவதாரமன்றோ நீர்! உலகத்தாருக்கு நீதி கற்பிக்கும் பொருட்டோ இப்படிப் பேசுகிறீர்? இருப்பினும் தற்காலம் தங்கள் மனதில் கவலையிருப்பதை யறிகிலேனே. புராணங்களையும் ஞானத்திற்குக் களஞ்சியமாயிருக்கும் பாரதத்தையும் செய்தருளினீர். ஆனாலும் உமக்கு மனது சாந்தியடைய வில்லை. அதற்குக் காரணம் யாதெனில் நீர்செய்த புராணங்களில் ஆங்காங்கு விஷ்ணுவின் மகிமையைக் கூறியிருப்பினும் அப்பெருமானுடைய திவ்விய சரித்திரங்களையும், அளவிடக் கூடாத குணாதிசயங்களையும் புகழ்ந்து கொண்டாடினீரில்லை. இப்பொழுதேனும் இம்மாதிரிப் புத்தக மொன்றமைப்பீர்" எனச் சொல்லிமறைந்தார். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மிகுந்த ஸந்தோஷமடைந்து அப்பொழுதே வியாஸர் பாகவதம்செய்ய ஆரம்பித்தார். இப்புத்தகம் வெளிவந்தது ஹிந்துக்களாகிற நாமும் நம்முன்னோரும் செய்த புண்ணியத்தின் பலனேயாகும். இம்மாதிரி புத்தகம் வேறொன்றுமில்லை. இனி யொருபொழுதும் இம்மாதிரி புத்தகமுண்டாகு மென்றெண்ணவோ இடமில்லை.சுகர், உத்தவர், துருவர், முதலிய பெரியோர் படித்துணர்ந்து பேரானந்தம் பெற்றவரன்றோ? பக்திமார்க்கத்தை விசேஷமாயுரைக்கும் கிரந்தம் இதன்றி வேறுமுண்டோ? ஞானமுண்டாய்த்தான் மோக்ஷமடையலா மெனக் கூறியிருப்பினும், பக்தனுக்குக் கடவுள் தானாகவே ஞான மளிக்கின்றா ரல்லவோ? ஞானத்தைக்காட்டிலும் பக்திபண்ணுவது ஸுலபமன்றோ? இக்காரணம் பற்றியே பகவத் கீதையில் கிருஷ்ணபகவான் ஞானமார்க்கத்தையனுஸரிக்கிறவர்களுக்குக் கிலேசமதிகமென்றார். இன்னும்,பாகவதத்தில் "உபநிடதங்களின் ஞானோபதேசம் ஹரிகதையின் அமிருதத்துக்கொப்பாமோ? மனதுருகிக்கரைவதும், ஆனந்தக் கண்ணீர் தனக்குத் தெரியாமல் பெருகி யோடுவதும்,அங்கமெங்கும் மயிர்க்கூச்சல் உண்டாவதுமாகிய ஸமாதியின் குணங்கள் ஞானமார்க்கத்தில் திரிந்து தேடினு மகப்படுமோ?" எனக் கூறியிருக்கின்றது. பக்திமார்க்கம் மேலானதா அல்லது ஞானமார்க்கமாவென இப்போது நாம் ஆராய்வதற்கு உத்தேசமில்லையாதலால் இதனுடன் விட்டுப் பக்திமார்க்கம் ஸுலபமானது, சீக்கிரம் பலனைக் கொடுப்பது,அந்த பக்திமார்க்கத்தைத்தெளிவாய்த் தெரிந்துகொள்வதற்குப் பாகவதத்தைவிட வேறு புத்தகம் உலகத்தில் வேறொன்றுமில்லை என்று மாத்திரம் கூறுவோம்.

பரீக்ஷித்து மஹாராஜன், தான் அரவம் கடித்து இறக்கவேண்டுமென முனி புத்திர

னால் சபிக்கப்பட்டு தன்னுடைய மரணகாலத்தில்மஹாவிஷ்ணுவின்பாதங்களில் தன்மனதை நிறுத்தவேண்டுமெனக்கருதி ஸபை கூட்டிய பொழுது வியாஸரின் புதல்வரான சுகர் அவ்விடம்தோன்றி பரீக்ஷித்துராஜனுக்குப்பாகவத முழுவதும் பத்து நாளில் சொல்லி முடிக்க அரசன் பேராநந்தமடைந்து மோக்ஷமேகினன் என்று கூறப்படுகிறது.

இப்புராணத்தில் முக்கியமாய் ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய திவ்விய சரித்திரமும், அவரது அநேக அற்புதலீலைகளும், விஷ்ணுபக்தர்களான பிரஹ்லாதர், நாரதர், துருவர், உத்தவர் அக்ரூரர், குசேலர், அம்பரீஷன், கஜேந்திரன், ருக்மாங்கதன் இவர்களுடைய சரித்திரமும், இன்னுமனேக பக்தர்களின் வரலாறும், பகவான் அவர்களுக்குச் செய்த அநுக்கிரகமும், மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களும் அவைகளின் சரித்திரங்களும் ஸவிஸ்தாரமாய்க் கூறப்படுகிறது.

## வேதாந்த ஸூத்திரங்கள்

இவைகளுக்கு பிரம்ம ஸூத்திரங்களென்றும் சாரீர ஸூத்திரங்களென்றும் உத்தர மீமாம்ஸை யென்றும் வேறு பெயர்கள் உள. இவற்றை யருளிச்செய்தவர் வியாஸர். இவை வேதாந்த சாஸ்திரத்தை மிகச்சுருக்கி ஸூத்திரங்களாகச் செய்துள்ளன. இவற்றிற்கு விரிவுரை, கருத்துரை, விசேட வுரை, ரகஸ்ய தாத்பர்யம் இவைகளில்லாமல் வித்வான்களுக்கும் அர்த்தம் புலப்படாது. ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்வர் என மும்மதத்தாரும் மூன்று வெவ்வேறு உரைகளை செய்திருக்கின்றனர். இவைகளைச் செய்தவர்கள் முறையே சங்கராசாரியர், ராமானுஜாசாரியர், மத்வாசாரியர். இவர்களா லேற்பட்ட மதங்களுக்கு முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்று பெயர்.

சங்கராசாரியர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இருந்தனரென்றும் நான்கு சீடருடன் ஆங்காங்கு சென்று இதரமதங்களைக் கண்டித்து அத்வைத மதத்தை நிலை நாட்டினவரென்றும் கூறப்படுகிறது. சங்கரர் ஒரு ஸமயம் காசிக்குச் சென்றிருந்தபொழுது அங்கு வேதவியாஸர் ஒரு கிழப்பிராமண ரூபமாய்த் தோன்றி ஆசாரியருடன் ஒரு ஸூத்திரத்தின் அர்த்தத்தைக் குறித்து எட்டு நாள்வரையில் தர்க்கித்தார். முடிவில் தன் சீடர்களுள் ஒருவராய் வந்திருக்கிற வேதவியாஸரும் தன் குருமூர்த்தியும் இருவர்களுடைய முக்கிய தாத்பரியம் ஒன்றாயிருக்க வீணே விவாதம் செய்வதுண்டோ என்னும் சொற்களைக் கேட்டுத் தணிந்து 'ஸ்வாமீ, நான்செய்தபாஷ்யம் தங்கள் மனதுக்குச் சரியாயிருந்தால் தங்கள் நிஜரூபத்தைக் காட்டி என்னை கிருதார்த்தனாக்க வேண்டும்' என்று வேண்டினார். அந்த க்ஷணமே வியாஸர் கிழப்பிராமணவடிவை விட்டு "மேகங்களில்லாத காலத்து பூர்ண சந்திரனைப் பழிக்கும் முக அழகும், மின்னற் கொடியால் சுற்றப்பட்ட மேகத்தைப் போன்ற உடல் மேனியும், தங்கக்கொடி போல் மின்னும் சடைகளுடனும், சந்திரகாந்தக்கல்லா லியற்றப்பட்ட கமண்டலுவும், கைகளில் ஞான முத்திரை தரித்தும், விபூதி ருத்திராட்சம் பூண்டவராயும், புலித்தோல் அணிந்தவராயும், செந்தாமரைபோல் பரந்த கண்களால் பக்தர்களை வாழ்த்திக்கொண்டும்" திவ்வியத்திருமேனியுடன் சங்கரர் முன் தோன்றினார். தோன்றி, "சங்கர, நீ வரைந்த பாஷ்யத்தைக் காட்டுவாயாக" எனச் சொல்லி வாங்கிப்பார்த்து, "மிகச் சந்தோஷம்! இது சிறந்த பாஷ்யம். என் கருத்தை நன்கு விளக்கினாய்" என்று கூறி வெகுவாகக் கொண்டாடி இன்னும் சிலகாலம் இவ்வுலகத்திலிருந்து விரோதிக் கட்சிகளை தோற்கடிக்கக் கடவாயென்றார். இதைக் கேட்ட சங்கரர், "தங்கள் அநுமதியின்மேல் இச்சரீரத்தை விட்டு நிர்வாணம் அடையவேண்டுமெனக் கருதினேன். உத்திரவு இப்படியானால் ஸம்மதந்தான்" என்றார். வியாஸர் இதைச்செவியுற்று, "உனக்கு ஸ்வபாவமாய் வயது எட்டு. உன்னுடைய நற்குண நற்செய்கைகளால் எட்டுவயது ஸம்பாதித்தாய். இப்போது 16-வயதாகிறது. ஈசுவரன் கருணையா லுனக்கு இன்னும் 16 வயது கொடுத்தோம். அதற்குள் மிகுந்திருக்கும் பௌத்தர்களையும், பாஷாண்டர்களையும் கண்டித்து அத்வைத மதம் ஓங்கும்படி முயல்வாயாக" என உரைத்து மறைந்தார்.

இந்த வேதாந்த சாஸ்திரத்தில் ஜீவன், ஈச்வரன் இவர்களின் ஸ்வபாவம், ஒருவர்க்கொருவரின் ஸம்பந்தம், உலகத்தின் நிலைமை, அதன் காரணம், மோக்ஷம் என்றால் என்ன, எப்படி மோக்ஷமடைவது, எங்கிருந்து வந்தோம் எப்படி ஜீவித்திருக்கிறோம், மரணத்தின் பிறகு என்னவாகிறோம், இது முதலான அநேக விஷயங்கள் கூறப்பட்டுள.

## கலம்பகம்

முன்னே கூறியபடி மஹாபாரதம், வேதாந்த ஸூத்திரங்கள் இவைகளையன்றி, இம்மஹரிஷி செய்த பதினெண் புராணங்கள் உண்டு. அவையாவன:-பிர்ம்மபுராணம், பத்மபுராணம், பாகவதம், விஷ்ணுபுராணம், சிவபுராணம், பவிஷ்ய புராணம், நாரதபுராணம், மார்க்கண்டேயபுராணம், அக்னிபுராணம், பிர்ம்மகைவர்த்தம், லிங்கபுராணம், வராஹபுராணம், கந்தபுராணம், வாமனபுராணம், கூர்மபுராணம், மச்சபுராணம், கருடபுராணம், பிர்ம்மாண்டபுராணம் இவையாம். இவைகளுள் 10 புராணங்கள் சிவனைக் குறித்தும், நான்கு மஹாவிஷ்ணுவைப்பற்றியும், இரண்டு பிர்ம்மதேவனைக்குறித்தும், ஒன்று அக்னிபகவானைக் குறித்தும், மற்றொன்று ஸூரியனைக்குறித்தும் கூறுகின்றன. நான்கு வேதங்களையும் எப்படி நான்கு ரிஷிகள் மூலமாய் உலகத்தில் பரவும்படி செய்தனரோ அம்மாதிரியே இப்புராணங்களை எல்லாருக்கும் விளங்கச் சொல்வதற்கு ஸூதர் எனப் பெயர் பூண்ட முனிவரை நியமித்தார். இப்புராணங்கள மூன்றுவகைப்படும். அவையாவன:—

ஸாத்விகபுராணங்கள்;—விஷ்ணு, நாரத, பாகவத, கருட, பத்ம, வராஹ புராணங்களாம்

ப்ராவிருத்தி புராணங்கள்:—பிர்ம்மாண்ட, கைவர்த்த, மார்க்கண்டேய, பவிஷ்ய, பிர்ம்ம புராணங்களாம்.

நிவிருத்தி புராணங்கள்:—மச்ச, கூர்ம, லிங்க, சிவ, கந்த, அக்கினி புராணங்களாம். இவற்றுள் பிர்ம்ம கைவர்த்தமும் பாகவதமும் பிற்காலத்தில் செய்யப்பட்டவைகளென்றும் அக்னி புராணம் எல்லாவற்றிற்கும் முந்தி எழுதப்பட்டதென்றும் ஆங்கிலேய வித்வான்களின் கருத்து.

## வியாஸரும் பாண்டவர்களும்

தாயாகிய ஸத்தியவதியின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, வியாஸர் விசித்திரவீர்யன் மனைவிமாரிடத்து திருதராஷ்டிரன், பாண்டு, விதுரர் என மூவரை உண்டாக்கினார். திருதராஷ்டிரன் மக்கட்குக் கௌரவர்களென்றும் பாண்டுவின் புதல்வர்களுக்குப்பாண்டவர்களென்றும் பெயர். பாண்டவர்கள் தங்களுடைய ஸத்தியத்தாலும் நடுநிலைமையைவிட்டுத் தவறாததாலும் வியாஸரால் ஆங்காங்கு ஒத்தாசையையும் அநுக்கிரகத்தையும் பெற்றனர். வியாஸர் இவர்கட்கு இடுக்கண் நேர்ந்தபொழுது அதினின்று நீங்கும் வழி கூறுவர்.

கௌரவர்கள் அரக்குமாளிகையில்தீவைத்து அதில் வஸிக்கும் பாண்டவர்களைக் கொல்லும் பொருட்டு ஏற்பாடு செய்திருந்ததை அறிந்து பாண்டவர்கள் இராத்திரியே சுரங்கத்தின் வழியே சென்று இடும்பவனத்தில் வஸித்துவரும் இடும்பனைக்கொன்று காட்டில் ஸஞ்சரித்துக்கொண்டு சாலிகோத்திர முனியின் தடாகக்கரையண்டை சேர்ந்தனர். அங்கே வியாஸரை தரிசித்தனர். அவர் கட்டளைப்பிரகாரம் அவ்விடத்திலேயே கொஞ்சநாள் வஸித்தனர். பகாஸுரன் பீமன் கையாலிறந்த பிறகு,பாண்டவர்கள் ஐவரும் திரௌபதி ஸ்வயம்வரத்திற்குப் போகும்பொழுது இவர்களுக்கு வியாஸர் திரும்பவும் தரிசனமளித்தனர். "அரக்குமாளிகையினின்றும் தப்பிவந்தநீங்கள் பாஞ்சாலதேசத்தரசனுக்கு பேராநந்தத்தை அளிக்கப்போகிறீர்கள் (திரௌபதியை மணப்பீர்கள்)" என்று முனிவரால் வாழ்த்தப்பெற்றுச் சென்றனர். மீண்டும் திரௌபதியின் ஸ்வயம்வரத்தில் அர்ஜுனன் மச்சயந்திரத்தை யடித்துப் போர்புரியவந்த துரியோதனன் கர்ணன் முதலானவர்களைத்தோற்கடித்துப்பாஞ்சாலதேசத்தரசனால் மருமகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டபொழுது அர்ஜுனன் "திரௌபதி என்னை மட்டுமல்ல, என்ஸகோதரர்கள் நால்வரையும்கூட மணக்க வேண்டு"மென்றான். அரசனும் "ஒரு பெண் ஐவர்களை மணத்தல் எப்படித் தருமமாகும்" எனச் சங்கித்தான். அச்சமயம் வியாஸர் மீண்டும் வந்து "திரௌபதி பூர்வகாலத்தில் நளாயனி என்னும் ஜந்மத்தில் கணவனை யளிப்பீர் என்று பரமசிவனை ஐந்து தரம் கேட்டதால் அவளுக்கு ஐந்து கணவர்கள் கிடைப்பார்கள் என்றார். ஆகவே சங்கைப்படாமல் ஐவர்களுக்கும் முறையேமணஞ்செய்வாயாக" என்று அரசனுக்கு உறுதி கூறினார். பிறகு சூதாட்டத்தில் இராஜ்யத்தினின்றும் துரத்தப்பட்டுப் பாண்டவர்கள் காட்டில் வஸிக்கும்பொழுது வியாஸர் திரும்பவும் இவர்

(இதன் தொடர்ச்சி 168-ம் பக்கம்.)

# ஜலத்திலுள்ள அசுத்தங்கள்

## WATER: ITS IMPURITIES

நாம் ஜீவித்திருப்பதற்கு அத்யந்த அவசியமானவை மூன்று வஸ்துக்கள். அவையாவன: காற்று, ஜலம், ஆகாரம். இவைகளில் காற்றில்லாவிட்டால் ஜீவிப்பதே முடியாது. காற்றுமட்டுமிருந்து மற்ற இரண்டும் இல்லாவிடினும் கொஞ்சம் நாட்கள் ஜீவிக்கலாம். காற்றும் ஜலமும் மாத்திரம் கிடைத்து ஆகாரமில்லாவிட்டாலும் முன்னினும் நீண்ட காலம் உயிரோடு இருக்கலாம். மூன்றும் கிடைத்தால் ஜீவித்திருத்தல் எளிதாகும்.

ஆனால் நெடுநாள் நோயற்று ஜீவித்திருக்க வேண்டுமானால் நாம் சுவாசிக்கும் காற்று, அருந்தும் நீர், உட்கொள்ளும் ஆகாரம் இவை மூன்றும் சுத்தமானதாக இருக்க வேண்டும்.

ஜலத்தின் அசுத்தம் இருவகைப்பட்டது. (1) கரைந்த அழுக்கு, (2) வேறுபட்டு நிற்கும் அழுக்கு. வேறுபட்டு நிற்கும் அழுக்கைக்கஷ்டமின்றி நீக்கலாம். அதற்கு வடிகட்டுதலே வழியாகும். வடிகட்டுவதில் அநேகவிதங்கள் உண்டு. அவையாவன:—(1) நெருங்கிய இழையுள்ள துணி, (2) சல்லடை, (3) ஒத்து காகிதம் (blotting paper), (4) நிலக்கரி, மணல்நிரப்பிய மண்பாண்டங்கள் இவைகளை உபயோகப்படுத்துதல். துணி, சல்லடை இவைகளில் வடிகட்டுவதைவிட ஒத்து காகிதங்களில் வடிகட்டுதல் மேலானது. ஆனால் செலவும் அதிகம்; காகிதமும் நைந்து விட்டால் ஜலத்துடன் கலந்து விழும். சல்லடையில் வடிகட்டுவதைக் காட்டிலும் துணியை நன்றாய் மடித்து வடிகட்டுவது சிறந்ததாகும் எல்லாவற்றைக் காட்டிலும் ரயில் ஸ்டேஷன்களில் ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்காக சுத்த ஜலம் வடிகட்டும் ஸாதகத்தையனுஸரிப்பதே நலம். மேல் பாத்திரத்தில் சுத்த ஜலத்தை விட்டால், கீழ்ப் பாண்டங்களிலுள்ள கரி, மணல் இவை வழியாகப் போகும்போது அசுத்தங்கள் நீங்கி ஜலம் சுத்தமாகின்றது. இந்த ஸாமான்கள் சேகரிக்க ரூபாய் ஒன்றுக்குமேற் செல்லாது.

கரைந்த அசுத்தம் வடிகட்டுதலினால் நீங்காது. நீரும் மாசும் ஒற்றுமைபாயிருத்தலின், இவ்வாறு வேறுபடுத்த இயலாது. இவ்வகையான மாசை நீக்கும் முறைக்கு 'டிஸ்டிலேஷன்' (distillation) என்று ஆங்கில பாஷையில் சொல்லுவார்கள். இந்த முறையாவது சுருங்கச் சொல்லில், நீரை ஆவியாக மாற்றி ஆவியை வேறோர் பாண்டத்திற்கு காற்றடைப்புள்ள வழியாகக் கொண்டுபோய் அதில் குளிரச் செய்து மறுபடி நீராக்குதல். இப்படிக் காய்ச்சுவதினால் முதல் பாத்திரத்தில், கரைந்த மாசுகள் அடியில் தங்கிவிடும். இரண்டாவது பாத்திரத்தில் உள்ளது சுத்த ஜலம். இங்ஙனம் உண்டாக்கிய சுத்த ஜலத்தைத்தான் மருந்து செய்வதில் பெரிய ஆங்கில ஔஷதசாலைகளில் உபயோகப்படுத்துகிறார்கள்.

அசுத்தங்களை, மற்றொருவிதமாக வகுக்கலாம். அதாவது உயிருடைய அசுத்தம் (Organic impurities) உயிரற்ற அசுத்தம் (Inorganic impurties). உயிரற்ற அசுத்தங்களை மேற் சொன்ன உபாயங்களினால் நீக்கலாம் உயிருள்ள அசுத்தங்களை அவ்வண்ணம் நீக்கமுடியாது. உயிருள்ள அசுத்த மென்பதால் தவளை, மீன் போன்ற கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படும் பெரிய வஸ்துக்கள் என்பது பொருள் அல்ல. கண்ணுக்குப் புலப்படாது அணுதர்சனி (Microscope) யின் கீழ்மட்டும் தன் உண்மையான அளவுக்குப் பன்மடங்கு பெரிதாய்ப் புலப்பட்டும் வெகு சிறியனவாகவே தோன்றும் புழுக்களையே 'உயிருள்ள அசுத்தம்' என்பது குறிக்கும். இவைகள் வெகு சிறியனவாயிருப்பதினால் வடிகட்டினால் நீங்குவதில்லை. இவைகள் நம் குடலுக்குள் சென்றால் விளைவிக்கக்கூடாதவியாதி ஒன்றுமில்லை. வாந்திபேதி, க்ஷயம், முதலான வியாதிகளை உண்டாக்கும். ஐரோப்பிய சிகிச்சையில் தேர்ந்த பண்டித ரத்தினங்களின் அபிப்பிராயம் என்னவென்றால்:—வியாதிகள் உண்டாவதற்கு காரணம் கிருமிகள், காற்று, நீர், உணவு இவைகளின் வழியாய் உட்புகுந்து ரத்தத்தோடு கலப்பதேயாம்.

இவ்வகைத்தான அசுத்தத்தை எவ்வாறு ஒழிப்பது? வடிகட்டின ஜலத்தை கொதிக்க வைப்பதேயாம்.

நம்முடைய ஸ்திரீகள், இவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட ஜலம் பொறுக்கமுடியாத சூடாயிருந்தால் ஆற்றுவதற்கு ஓர் உபாயம் செய்கிறார்கள். அதாவது, சுத்தமாக்கப்படாத பச்சை ஜலத்தைக் கலந்துவிடுகிறார்கள். இச்செய்கை அமிர்தத்துடன் விஷத்தைக் கலப்பதையொக்கும். ஆறச்செய்வது ஒரு கடினமான காரியமன்று. வெந்நீருள்ள பாத்திரத்தை குளிர்ந்த நீரில் அல்லது காற்றுள்ள இடத்தில் (வாயைக்காற்றுக்கு நேராக) வைத்தாவது, வெந்நீரை ஒரு பாத்திரத்திலிருந்து வேறோர் பாத்திரத்திற்கு மெதுவாக தாரை நீண்டதாக விட்டு மாற்றியாவது சீக்கிரத்தில் ஆறச் செய்யலாம்.

சுத்த ஜலத்தை மற்றோர் விதத்தில் ஸ்திரீகளும் குழந்தைகளும் கற்றும் அறிவில்லாத பெரியவர்களும் பாழாக்குகிறார்கள். ஜலம் பிறருக்குக் கொண்டுவரும்போதும், தாமுட்கொள்ளும்போதும், பாத்திரத்தில் விரல்களை விடுகிறார்கள். பாத்திரத்தினுள்ளே விரல் விடாமல் கொண்டு வருவது அஸாத்தியமோ? விரல் விடுவதினால், தோலிலுள்ள அசுத்தம், நகத்தின் நுனியிலுள்ள அசுத்தம், ஜலத்தில் கரைந்து உட்சென்று நோயை விளைக்கும்.

மேற்கூறிய மார்க்கங்களினால் ஜலத்தை சுத்தி செய்து பருகி நம் பாலர்கள் நெடுநாள் குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வுடன் ஜீவித்திருந்து நம்முடைய ஜனன பூமியை ஜோதி பெறும்படி செய்வாராக.

(167-ம் பக்கத்தொடர்ச்சி.)

கட்குத் தரிசனமளித்தனர். இவர்கள் துயரம் நீங்குமாறு தைரியத்தைக் கைவிடாமலிருக்க புத்திமதிகூறி சிவபிரானை ஆராதனைசெய்து அப்பெருமானிடத்திலிருந்து பாசுபதாஸ்திரம் பெறும்படி அர்ஜுனனுக்கு அரியதோர் மந்திர முபதேசஞ் செய்தனர். அம்மந்திரத்தின் மஹிமையால் பாசுபதாஸ்திரத்தை சிவனிடத்திலிருந்து பெற்றதனால் அல்லவோ மஹா சூரனைகர்ணனை யுத்தத்தில் அர்ஜுனன் கொன்றான். பின்னர் பாரதயுத்தம் தீர்ந்தபொழுது திருதராஷ்டிரன் தன்மக்களெல்லோரும் மாண்டதைக் குறித்தும் பாண்டவர்கள் ஜயமடைந்து ஜீவித்திருப்பதைக் குறித்தும் பார்த்து மிகக் கோபத்தால் வருந்தியபொழுது யுதிஷ்டிரர் வேண்டுகோளுக்கிசைந்து மீண்டும் வியாஸர் அவ்விடம் சென்று திருதராஷ்டிரனுக்கு நியாயங்களாலும், யுக்திகளாலும், வேதாந்தத்தாலும், பலவாறுகப் புத்தி கூறி சோகம் நீங்குமாறு அருளினர்.



# ஆதியில் அரசனேற்பட்ட தெப்படி?

## THE ORIGIN OF KINGSHIP

இக்காலத்தில் நாகரிகமடைந்த எல்லாத் தேசங்களிலும் அரசாங்கங்களிருக்கின்றனவென்று நாமறிவோம். ஆனாலின்று ஸ்தாபிதமாய் நாமறிந்திருக்கும் பற்பல விதமான அரசாங்கங்கள் ஆதிகாலந்தொட்டே இன்றிருக்கும் மாதிரி இருந்தன வல்ல. பலர் ஒன்றுகூடிச் சேர்ந்து ஒரு கூட்டமாய் வஸித்து ஒரு தலைவன் கீழடங்கி வாழ்தல் மனிதஜாதியில் மட்டும் காணப்படுகிறதேயன்றி, வேறு பிராணிகளிடத்தில் காணப்படவில்லை. மனிதர்கள் ஸமாஜங்களாய்க் கூடிவாழவும், தங்களி லொருவனை அரசனாய்க் கொள்ளவும் ஆதியில் நேரிட்ட விதத்தைப்பற்றி சுருக்கமாய் விசாரிப்போம்.

உலகத்தில் பிராணிகள் ஜீவிப்பதற்கு ஸாதனமாயிருப்பது வலிமையே. இதனுண்மையை பிராணி வர்க்கத்தின் அன்றாட வாழ்வில் காண்கிறோம். வலுத்த பிராணி இளைத்த பிராணியை அடித்துத்தின்று பிழைக்கிறது. ஒவ்வொரு பிராணியும் தான் பிழைப்பதற்கு மற்றப் பிராணிகளுடன் ஓயாது சண்டையிட்டுக் கொண்டே யிருக்கிறது. இந்த ஓயாச்சண்டையில் வலிமையே ஜயம் கொடுக்கிறது. எந்தப் பிராணிக்குத் தேகவலிமையும் தைர்யமும் மிகுந்திருக்கிறதோ, அது தன்னிலு மிளைத்தவைகளைக் கொன்று தின்று பிழைக்கிறது. பிராணிகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டே பிழைக்கவேண்டி யிருப்பதால், அப்போட்டியில் ஜயம் கொடுக்கும்படியான சரீரத்தை ஒவ்வொரு பிராணியும் அமையப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பிராணியினது சரீரத்தின் அவயவங்களையும் வகுத்து அவைகளது உபயோகங்களைக் கவனிக்குங்கால், அவை அப்பிராணியினது ஆத்மபோஷணைக்கோ தற்காப்புக்கோ, அல்லது பகைவரை யெதிர்த்தற்கோ ஸாதகமாயிருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று அறிவோம். புதிது புதிதான பிராணிகள், வெவ்வேறு விதமான சரீர அமைப்புகளுடனும், புதிது புதிதான உறுப்பு வேறுபாடுகளுடனும் பிறக்கின்றன. பிராணிகளிற் காணப்படும் எண்ணிறந்த வகுப்பு பேதங்களுக்குக் காரணம் இதுவே. இளைத்த வகுப்பைச் சேர்ந்த பிராணிகள், பிழைக்க மாட்டாமல்

நாளளவில் நசித்துப்போகின்றன. வலுத்தபிராணிகள் மாத்திரம் பிழைத்து நிற்கின்றன. புதிது புதிதான சரீர உருவங்களும், புதிது புதியதான சக்தியும் பலமும் உடையனவாய்ப், பிராணிகள் பரிணமிக்கின்றன. இது பரிணமவாதிகளின் (Evolutionists) கொள்கை.

ஆனாலிப்படிப் பிழைப்பதற்குப் பிராணிகள் ஒன்றோடொன்று சண்டையிடுவதில், அநேகமாய் ஒற்றைக் கொற்றையாய்த்தான் சண்டைபோடுகின்றன. கூட்டமாய் நின்று சண்டைபோடும் பிராணிகள் வெகு அபூர்வம். இரண்டொரு பிராணிகள் கூட்டமாய் நின்று பகைவரை யெதிர்த்தாலும், அவைகள் ஒரு தலைவன் கீழ்நின்று தங்கள் வலிமையை யெல்லாம் ஒருமைப்படுத்துவதில்லை. பிராணி வர்க்கத்தின் பரிணமம் வெகுதூரம் மேற்சென்று வெகுகாலத்துக்குப் பின் மனிதன் இப்பூமியில் தோன்றினான். அவனும் மற்றப்பிராணிகளைப்போல், தன்னினத்தார்களுடனும், வேறு ஜந்துக்களுடனும், வைரம் பாராட்டியே ஜீவித்துவந்தான். ஆனால் இப்பூமியில் வஸித்த பிரதம மனிதர்களிடத்தும் (Primitive men) மற்றப் பிராணிகளிடத்திலிராத இரண்டு அபூர்வ சக்திகள் காணப்பட்டன. அவை பகுத்தறிவும், பேசும் திறமுமே.

மனிதன் சரீரப்பருமனில் வேறு அநேகப் பிராணிகளைக் காட்டிலும் சிறுத்திருந்தாலும் அறிவில் மிக்கவனாயிருந்ததால், மற்றப்பிராணிகளைச் சுலபமாகத் தனக்குக் கீழடக்கினான். அப்பால் மனிதனுக்குத் தாழாவிரோதி மனிதனேயானான். முதலில் மனிதனுமொருவனுக்கொருவனே எதிர்த்து நின்றான். ஆனாலினிச் சரீரபலம் மாத்திரம் ஜயம் கொடுத்தகாலம் போய்விட்டது. ஒரு கூட்டத்தில் எவனொருவன் மனோதைரியத்திலும், அறிவு நுட்பத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் மிக்கவனாயிருந்தானோ அவனே அக்கூட்டத்திற்குத் தலைவனானான். அவனே இப்பூமியில் முதல் முதல் தோன்றிய அரசன்; அவனுக்கடங்கின மனிதர்களே ஒருதலைவன் கீழ்ப்பட்ட முதல் மனிதஸமாஜம்.

இப்பொழுதுதான், ஒன்று கூடித் தொழில் புரிதலில் எவ்வளவோ நன்மையுண்டென்று மனிதன் அறிவதற்கெட்டியது. கீழ்ப்பிராணிகளின் ஒற்றைக் கொற்றைச் சண்டையில், எது வலுத்ததோ அதுவே பிழைத்து நின்றது போல, இனிமேல் எந்த ஒரு மனிதக் கூட்டம் சங்கியையிலும் ஒற்றுமையிலும் மேற்பட்டிருந்ததோ அதுவே மற்றவைகளைக் காட்டிலும் விருத்தி யடைந்தது. இம்மாதிரிதான் மனிதஸமாஜம் முதலில் உலகத்தில் தோன்றிற்று. இரண்டு ஸமாஜங்களுக்கும் சண்டை நிகழ்ந்தபொழுது, எந்தப் பக்கத்திலுள்ளவர்கள் ஒன்றுகூடி நின்று, ஒருயிரால் இயங்கும் ஒரு தேகம்போல் இயங்கிச் சண்டை செய்தார்களோ அவர்களே வெற்றிகொண்டார்கள். அப்படியின்றி, கூட்டமாய் நின்றாலும் ஒவ்வொருவனும் தன்னிச்சைப்படி போர்புரிந்ததால், தோல்வியே யுண்டாயிற்று. இதனால் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அவனாணைப்படி மற்றெல்லாரும் ஒழுகுதல் அவசியமென்று வெளியாயிற்று.

ஆதியில் மனிதர்கள் சண்டைக்காலத்தில் மட்டும் ஒன்றுகூடி ஒருதலைவனை ஏற்றார்கள். சிலகாலம் செல்லுமுன், சண்டை முடிந்ததும் பிரிந்து விடுவது ஸரியன்றென்று அவர்களிற் சில அறிவு மிக்கவர்களுக்குத் தோன்றி யிருக்கலாம். போர்த் தொழிலிற்போல் மற்றைத் தொழில்களிலும், பிரிந்து நிற்றலிலும் கூடி நிற்றலே அதிக நன்மையயக்குமெனச் சுலபமாக அறிந்திருப்பார்கள். பலமனிதர்கள் கூடியிருந்தால் தனியாயொருவனாலாகாத எத்தனையோ காரியங்கள் ஸாத்தியமாகின்றன. தவிர, பலர் கூடினால் ஒருகாரியத்தை மிகுந்த லாகவத்துடனும் செய்யலாம். இதுபோன்ற ஸாதகங்களைக் கருதியே மனிதர்கள் எப்பொழுதும் கூடிவாழத்தொடங்கினார்கள்; எப்பொழுதும் ஒரு தலைவன் கீழேயே வஸிக்கவும் தலைப்பட்டார்கள்.

S. மஹாலிங்கமய்யர், பி.ஏ., பி.எல்.

---

**பழைய ஒழுங்குகளின்படி பீ.ஏ. பரீட்சை.**—அக்டோபர்மீ 30உ நடந்த ஸெனட் மீட்டிங்கில் பழைய ஒழுங்குகளின்படி நடத்தப்பட்டு வந்த பி. ஏ. பரீட்சையை 1915, 1916 இந்த இரண்டு வருஷங்களிலும் நடத்தவேண்டுமென்று டாக்டர் ஸ்கின்னர் கொண்டு வந்த பிரேரணை ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், அவர்கள் இங்கிலீஷ் லாங்குவேஜ் (English Language) டிவிஷனுக்கு 18-ரூபாயும், ஸெகண்ட் லாங்குவேஜ் (Second Language) டிவிஷனுக்கு 12 ரூபாயும், ஸயன்ஸ் (Science) டிவிஷனுக்கு 24 ரூபாயும் கட்டணங்கள் கட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்விதம் கட்டணங்களைச் சிறிது உயர்த்தியிருப்பது ஒரு பொருட்டாக கருதப்படாது.



# ஜீரணம்

## DIGESTION

ஜீரணமென்றால் என்னவென்பது ஏற்கனவே முன்னதிகாரத்தில் ஒருவாறு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் விஸ்தாரமாய் அதைப்பற்றிப் பேசுவோம்.

சரீரமானது பல புஷ்டியோடுகூட விருப்பதற்குப் புதிதாக ரக்தமானது சரீரத்தில் உண்டு பண்ணப்பட வேண்டும் என்றும், அப்படி ரக்தம் உண்டாவதற்கு நாம் சாப்பிடுமாகாரம் முக்கியமென்றும், அந்த ஆஹாரமே சரீரத்தில் ஏற்படும் சில மாறுதல்களால், அன்னரஸமாக மாறி அது ரக்தமாகிறதென்றும், அப்படிச் சாப்பிடுமாகாரம் ரக்தமாக மாறுதலுக்குத்தான் ஜீரணித்தல் என்றும் கூறி யிருக்கிறோம். இதனால் நாம் உட்கொள்ளும் ஆகாரங்கள் ஸரிவர ஜீரணமானாலொழிய, அவைகளால் சரீரத்திற்கு ஒருவிதப் பிரயோஜனமும் உண்டாகாதென்பது நன்றாக விளங்கும்.

அப்படிக்கன்றி, ஸரியாக ஜீரணிக்கப்படும் பக்ஷத்தில் அவை ரக்தமாகி அங்கங்களுக்குப் பலத்தையும் புஷ்டியையும் கொடுத்து சரீரத்தைக் காப்பாற்றுமென்பது கிடைக்கப்பெற்றது.

இந்த ஸந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயம் நாம் நன்றாய்க் கவனிக்க வேண்டியது. ‘நான் வேலை செய்கிறேன்’ என்பது ஸாதாரணமாய் உலக வழக்கத்தில் கடினமான வேலைகளைச் செய்வதற்கே அந்வயித்தாலும், நாம் செய்யும் ஒவ்வொரு அற்பசலனமும் வேலை செய்வதேயாகும். நாற்காலியில் நான் சும்மா உட்கார்ந்திருக்கும்பொழுது என்னுடைய கால்களை ஆட்டிக்கொண்டிருக்கிறேன். இது ஒரு வேலையென்கிற ஞாபகம் எனக்கில்லவேயில்லை என்றாலும் அது ஒரு வேலை. அவ்விதம் வெகு நேரம் ஆட்டிக்கொண்டிருப்பேனானால், அக்கால்களில் ஒரு அசதி தோன்றும். அதன் அர்த்தம், கால்கள் வேலை செய்து களைத்தன என்றாகும். ஏதாவது ஸாமானியமான விஷயத்தைக் குறித்து நான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். அது ஒரு வேலையென்று தோன்றாவிட்டாலும், அது மூளைக்கு வேலையே. இப்படி வெகுநேரம் யோசித்துக்கொண்டிருப்பேனேயானால் எனக்குத் தலைவலி யுண்டாகிறது. மூளையானது யோசித்துக் களைத்துப்போனதால் இனி சிரமபரிகாரம் செய்துகொண்டாலொழிய வேலை செய்ய முடியாதென்று மூளை சொல்வதற்கு அது அடையாளம். வேறு ஒரு காரியமும் செய்யாமல் நான் என் சிநேகிதனுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். அதுவும் சுவாசாசயத்திற்கொரு வேலைதான். ஆகவே நாம் வேலையே ஒன்றும் செய்யாமல் அரை நிமிஷமாவது இருக்க முடியாது என்பது நன்றாக விளங்குகிறதல்லவா?

இப்படி நாம் வேலை செய்வதானது நெருப்பெரிதலுக்கு ஸமானமாயிருக்கிறது. எப்படியெனில், ஒரு விறகுக்கட்டை அடுக்கி, அதில் தீயை வைத்துவிடுவோமானால் அத்தீயானது கொஞ்சங் கொஞ்சமாக அக்கட்டைகளை யெரித்து, பிடி சாம்பலாக்கி விடுகிறது. ஆதியில் நாம் எரிப்பதற்கென்று வைத்த விறகுக்கட்டு எங்கே? மற்ற ஸாமான்களெல்லாம் எங்கே போயின? என்றால், ரஸாயன சாஸ்திர ஞானிகள் கரியமில வாயுவாகவும், தண்ணீராகவும் வெளியே போயினவென்பார்கள்.

அப்படி நாம் வேலை செய்யும்போதெல்லாம் அஃது நெருப்பு எரிதலுக்குச் சமானமாதலால் நம்முடைய சரீரத்தின் பாகங்கள் நசித்து எரிந்து கரியமிலவாயு வாகின்றன. அவைகளும் அவைகளுக் கென்றேற்படுத்தப்பட்ட மார்க்கங்களால் வெளியேற்றப்படுகின்றன. ஆகையால் நாம் வேலை செய்யுந்தோறும் நம்முடைய சரீரபாகங்கள் குறைந்து புஷ்டி குறைந்துகொண்டே வருகிறது. ஆகையால் நாம் புதிதாக விறகிடாததினால் எப்படி விறகு கட்டுத் தானாகே எரிந்து நெருப்பணைந்து, பொருளெல்லாம் நஷ்டமாயிற்றோ அவ்விதமாகவே சரீர பாகங்களின் புஷ்டி வரவரக் குறைவதனால் அங்கம் மெலிந்து, சரீர உஷ்ணம் குறைந்து மரணத்திற்கு ஹேதுவாகும். புதிது புதிதாக விறகு இட்டுக்கொண்டிருந்தோமானால், நெருப்பணையாது சூடு இருந்துகொண்டே இருக்கும். வைத்த விறகின்பரிமாணத்திற்கு குறைவில்லாமலும் பார்த்துக்கொள்ளலாம். இப்படியே நாம் ஆகாரம் கொடுப்பது சரீரத்தில் நடக்கும் நெருப்பெரிதலுக்கு விறகு இடுதல்போலாகும்.

நாம் கடுமையான வேலைகள் செய்தவுடன்

நமக்குப் பசிக்கிறது. தாகமெடுக்கிறது. சரீரம் களைத்து விடுகிறது. இதற்கெல்லாம் காரணம் சரீர பாகங்களிலுள்ள மாமிஸம் மேதஸ் முதலியவைகளின் நஷ்டமேயாகும். இந்த நஷ்டத்திற்கு ஈடுகொடுக்க வேண்டுமென்று சரீரம் கேட்கிறது. இதுதான் நான் மேற்கூறிய பாதைகள்.

அன்றியும், க்ஷௌரம் செய்துகொண்டிருக்கும் தினம், முகமானது விசேஷ ப்ரகாசமாயிருக்கிறது. ஸ்நாநம் செய்து முடித்தவுடன் நம் தேகம் மிகவும் பளபளப்பாயிருக்கிறது. இதற்குக் காரணம் நமது மேற்றோலில் பழைய பாகங்கள் சிதல் சிதலாய் அழுக்கோடு அழுக்காய் வெளிப்படுவதுதான். ஆதலால் தோலில் தினந்தோறும் நாசமுண்டாவதையும் அதற்குப் பதிலாக புதுத்தோல் உண்டாகிக் கொண்டு வருவதையும் நாம் ப்ரத்யக்ஷத்தில், சற்று கவனித்தால் காணலாம்.

ஆதலால் சரீர அவயவங்களில் ஸதா நஷ்டம் உண்டாகிக்கொண்டே இருக்கிறது. இந்த நஷ்டங்களுக்கு ரக்தம் ஈடுகொடுக்கிறது. இந்த ரக்த நஷ்டம், ஆகாரம் ஜீர்ணித்தால் ஈடுசெய்யப்படுகிறது. ஆகவே ஜீர்ணமென்பது ரக்த நிர்மாணம் அல்லது அங்காவயவ நிர்மாணம் என்று சொல்லலாகும்.

நிற்க, சரீரபுஷ்டிக்காக நாம்சாப்பிடுமாகாரங்களெல்லாம் அநேகமாய்கனபதார்த்தங்களாகவேயிருக்கின்றன வென்பதை நாமெல்லோரும் அறிவோம். இந்த ஆகாரமானது ரக்தமயமாக ஆகவேண்டுமென்றால் அது திரவமாக மாறவேண்டிய தவசியம். அப்படி திரவமாக மாறினால்தான் மயிரிழையைக்காட்டிலும் ஸன்னமான ரக்தக் குழாயின் வழியாய் ஓடுவதற்கு ஸாத்யமாகும்.

ஆதலால் இந்த ஜீரணமானது முக்கியமாக நம்முடைய சரீரத்தில் மூன்று இடங்களில், அதாவது வாயிலும், குடலிலும் அந்தரமாலைகளிலும் நடக்கிறது.

நாம் ஆகாரத்தை எடுத்து ஒரு கவளமாக உருட்டி வாயில் போட்டுக்கொண்ட வுடனே, அது நாவிற்கும் அதன் மேற்புறத்திற்கும் நடுவில் நசுக்கப்படப் பற்களுக்கிடையே செல்லுகின்றது. அப்பொழுது பற்கள் அவைகளை நன்றாய் அறைத்து சிறு துணுக்குகளாக அல்லது பொடியாக மாற்றுகிறது. இதுதான் வாயில் செய்யப்படும் வேலை யென்று எண்ணிவிடக்கூடாது. நாம் ஏதாவது நெல்லு வறுத்தமா அல்லது பாசிப்பயற்றுமா முதலியவைகளை வாயிலிட்டால் அவைகள் எவ்வளவு மிருதுவானவையா யிருந்தும் அவற்றை நம்மால் விழுங்க முடிவதில்லை. வாயில் அவை சற்று நின்று அங்கே ஊறும் உமிழ் நீரால் நனைக்கப்பட்ட பிறகுதான் விழுங்குவதற்கு ஸாத்தியமாகின்றது. இது மனிதனுடைய மூடத்தனம். செய்யாமல் செய்வதற்கான கடவுளின் முன்யோசனைகளி லொன்று. ஜீரணத்திற்கு (ஸுக) ஆகாரத்தைப் பற்களி லரைத்தல் எவ்வளவு முக்கியமோ அதைக்காட்டிலும் அதிக முக்கியம் அவ்வாகாரம் உமிழ் நீரால் நன்றாய் நனைக்கப்பட வேண்டியது.

பிறகு கலட்(Gullet) என்ற ஆகாரக்குழாய் வழியாய் உமிழ் நீருடன் கலந்த ஆகாரமானது குடலில் போய்விடுகிறது. குடல் ஒரு பெரிய பைபோல் முண்டத்தின் கீழ்பாகத்தில் குறுக்காய் வைக்கப்பட்டிருக்கிறது. இது வலது புறத்திற்காட்டிலும் இடது புறம் தள்ளித் தொங்கலாய் நிற்கிறது. இதன் மேற் சுவர்களும் பலமான தசை நார்களாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மாம்ஸங்கள் சுருங்குவதாலும் விரிவதாலும் இதற்குள் வந்து விழும் ஆகாரங்கள் அங்குமிங்குமாக நன்றாய் அலைக்கப்பட்டு ஜீர்ணிக்கப்படுகின்றன. இந்த வேலை நடந்து கொண்டிருக்கும்பொழுதே குடலில் உட்புறத்தில் பலவிடங்களிலிருந்தும், குடல்நீர் என்ற ஒருவகை நீர் ஊறிவந்து பாய்ந்து ஆகாரத்துடன் நன்றாய்க் கலந்துகொள்ளுகிறது. இவைகளினால் ஜீரணமானது அநேகமாய் இங்கு முடிவுபெறுகிறது. இதை உத்தேசித்தே குடலில் உட்புறத்தில் வெகு நெருக்கமாக மயிரிழைபோன்ற வெகு சிறிய ரக்தக் குழாய்கள் அதிக நெருக்கமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் வெகு சுறுசுறுப்பாய் இந்தக் குடலிலுள்ள ஆகாரத்தின் ஜீரணிக்கப்பட்ட பாகங்களை யெல்லாம் ஆகர்ஷித்து ரக்தமாக்கிக் கொண்டே யிருக்கின்றன. என்ன வேலை! என்ன சுறுசுறுப்பு! என்ன ஏற்பாடு! கொஞ்சமும் உளறுபடி கிடையாது. ஆச்சரியம்! ஆச்சரியம்!!

குடல் வலது புறத்தில் ஒருசிறு குழாயாக வந்து முடிவு பெறுகிறது. இக்குழாய் அங்கி



ருந்து நீண்டு வெகு நீளம் செல்லுகிறது. அதற்கு அந்தரமாலை யென்று பெயர். அதில் முதல் பாகம் பின் பாகத்தைவிடச் சிறியதாயிருக்கும். அக்காரணம்பற்றி, சிறிய அந்தரமாலை யென்றும், பெரிய அந்தரமாலை யென்றும் இரண்டு பிரிவினைகளை யுடையதாக எண்ணப் படுகிறது. இந்த அந்தரமாலையைப் பிரித்து நீளத்தில் வைத்தால் சுமார் 30 அடி தூரம் வரையிலிருக்கும். இதை மடித்து மடித்து வெகு அடக்கமாய் வயிற்றுக்குள் வைக்கப் பட்டிருக்கிறது. இதை ஒருதரம் எடுத்துவிட்டால் பிறகு அம்மாதிரியே மறுபடி அந்த இடத்திற்குள் அடக்கிவைப்பது அஸாத்தியம்.

சிறிய அந்தரமாலையின் ஆரம்பமும் குடலின் முடிவும் ஸந்திக்கிற இடத்திற்குச் சற்று மேலாக லிவர் (liver) என்று ஒரு அவயவமும் குடலுக்கு இடது புறத்தில் அடியோடு ஒட்டி பேன்கிரியஸ்(Pancreas) என்று புழுப்போன்ற ஒரு அவயவமு மிருக்கின்றன. இவைகள் முறையே பித்த நீர் (Bile) கணைய நீர் என்ற இருவகை ரஸங்களைக் கொடுக்கின்றன. கணைய நீர் அந்தரமாலையிலும், பித்த நீர் சிறிய அந்தரமாலையின் ஆரம்பத்திலும் வந்து சொரிகின்றன. மயிரிழை ரக்தக் குழாய்களால் குடலிலிருந்து ஆகர்ஷிக்கப்பட்ட ஆகார ஸத்துப்போக மற்றபாகங்கள் அந்தரமாலையின் ஆரம்பத்திற்கு வரும்பொழுது அங்கு பித்த நீர் ஆகாரத்தோடு வந்து சேருகிறது. கணைய நீர் அதற்கப்புறம் வந்துசேருகிறது. இதற்குள் ஜீரணம் முற்றிலுமாகிவிடுகிறது. பிறகு அந்தரமாலையின் வழியே செல்லுங்காலத்தில் பக்கத்திலுள்ள ரக்தக் குழாய்கள் ஜீரணிக்கப்பட்ட ஆகாரத்தை ஆகர்ஷித்து ரக்தமயமாக்கிக் கொள்கின்றன.

இனி இந்த ரஸங்களின் தன்மையை யறிவதற்கு, ஆகாரங்களின் தன்மையைச் சற்று கவனிக்கவேண்டும். நாம் சாப்பிடும் ஆகாரங்கள் முக்கியமாய் மூன்று விதப் பண்டங்களாயிருக்கின்றன. அதாவது, (1) மாப்பண்டம் (2) ஆல்பியூமின் அல்லது மாமிஸ பண்டங்கள் (3) நெய்ப் பண்டங்கள். இவைகளைப்பற்றிய விசேஷங்களை இதனுபந்தமாகிய ஸுகாதார விதிகளிற் காணலாம்.

உமிழ் நீரானது ஆகாரத்தை ஈரமாக்கி விழுங்குவதைச் சுலபமாக்குவதுடன் மாப்பண்டங்களை சர்க்கரையாக மாற்றிக் கரைக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் ப்ரொபெஸர் ஹக்ஸ்லி(Prof Huxley) முதலியவர்களிற் சிலர் உமிழ் நீர் இந்த வேலை முழுவதும் செய்வதில்லை யென்றும் சொல்லுகிறார்கள்.

குடலில் உண்டாகும் குடல் நீர் மாமிஸபண்டங்கள் அல்லது அல்பியூமின் பண்டங்களைக் கரைப்பதற்குச் சக்தியுள்ளது. அப்படியே பித்த நீர் நெய்ப் பண்டங்களை நன்றாய்க் கரைத்து ஜீரணிக்கச் செய்கிறது. கணைய நீரோ இவைகளெல்லாம் செய்யாமல் விட்ட பாகங்களை ஜீரணிக்கச் செய்கிறது. ஆகையால் ஒவ்வொரு தன்மையுள்ள ஒவ்வொரு ரஸமானது ஒவ்வோரிடத்திலுண்டாக்கப்பட்டு ஆகாரத்துடன் கலந்து அதன் ஒவ்வொரு பாகத்தை ஜீரணித்து ரக்தத்துடன் தன்னினப்படுத்துகிறது என்று அறிந்தோம்.

T. R. S. சாஸ்திரி. பீ. ஏ.

---

**உலகத்திலுள்ள விருட்சங்களுக்குள் மஹா பெரிய விருட்சம்.**—அமெரிகா கண்டத்தில் காலிபோர்னியா என்னும் பிரதேசத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரமாண்டமான விருட்சமொன்று கண்டுபிடிக்கப் பட்டது. அது கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அதன் மேற் பாகம் ஒடிந்து போயிருந்தும் அவ்விருட்சம் 240 அடி உயரமிருந்தது. முறிந்திருந்த பாகம் சுற்றளவில் 40 அடியும் குறுக்களவில் 12 அடியுமிருந்தது அதற்கு இரண்டு கிளைகளிருந்தன. அவை சுற்றளவில் முறையே 30 அடியும் 37 அடியும் இருந்தன. முறிந்துபோன மேற்பாகம் அந்தப்படியேஇருந்திருக்குமாயின் விருட்சத்தின் உயரம் 400 அல்லது 450 அடிக்குக் குறையாமல் இருந்திருக்குமென்றுயூகிக்கலாயிற்று. சிலபிரபுக்கள் இப்போதிருக்கிற அடித்தண்டின் மேல்மூலையைக் குறுக்காய் அறுத்து உள்ளிருந்ததைக் குடைந்தெடுத்துவிட்டு நியூயார்க் (New York) என்னும் பட்டணத்துக்குக் கொண்டுபோய் அதை ஒரு ஸபாமண்டபமாக உபயோகித்து வருகிறார்கள். அதில் அநேக தட்டு முட்டு ஸாமான்களும் நாற்காலி முதலிய வஸ்துக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏககாலத்தில் 150 பேருக்குக் குறையாமல் வசதியாய் கூட்டம் கூடுவதற்கு அது யோக்கியதை யுள்ளதாய் இருந்து வருகிறது. பரமகருணாநிதியின் சிருஷ்டியில் என்னென்ன விசித்திரங்கள் இருக்கின்றன !

# அதிவீரராம பாண்டியன்

## ATIVIRARAMA PANDIYAN

அதிவீரருக்குத் திருக்குறளிலும் சங்கச் செய்யுள்களிலும் கம்பராமாயணத்திலும் மிக்க பழக்கமுண்டென்பது இந்நூலிலும் இவர் இயற்றிய ஏனைய நூல்களிலும் பரக்கக் காணலாம்.

" மறந்திரு மார்பெனேட்
கன்னியர் மனமென்றித்
செறித்துடன் பிரியுமெனத்
தெளிவுடையோர் செப்புசொல்."

(அன்ன தூது படலம். செ-ள் 98.)

இங்கு தெளிவுடையோர் என்றது திருவள்ளுவ நாயனாரை.

" இணைப்போன் றிணைமலர் கேண்மை மனிர்
மனம்போல வேறு படும்"

, என்ற திருக்குறளை நோக்குக.

(கூடாநட்பு: 88-ம் அதி 2.)

"உணர்த்தவரன் முகத்தனை
யுதிக்குமவை குறிப்பினூற்
றெளித்துணர்த்தல் சிறமைத்தே
தூதர் செயலிற்குரும்"

(அன்ன தூது படலம் 107-ம் செ-ள்.)

இச்செய்யுள் அடியிற் கூறப்படும் குறளின் கருத்தைக் கொண்டிருப்பதை பறிக.

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்" (71-ம் அதி: 6)

"குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்" (71-ம அதி: 8)

"உரவீர்க் கருங்கட லுடுத்த மாநிலத்
தருளுடை விம்மையி னளித்த வான்பொருள்
மருவிய மறுமையில் வழங்கு பான்மையால்
இரவலர் தமரினு மினிய ராவரே."

(வாள் தூது படலம்: செ-ள் 22.)

இச்செய்யுளில்,

"அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்ற திருக்குறளின் கருத்தைக் காண்க.

"கன்று குணிலாக் கனியுகுத்தேகல்
லடலி னமுதக் கடைக்கேய்ப்ப"

(சந்திர பார படலம் 4-ம் செ-ள்.)

என்றதில் " கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன் " என்ற சிலப்பதிகாரத் தொடர்மொழியே அமைந்திருத்தலைக் காண்க.

(சிலப்: ஆச்சிரியர் குரவை)

இவ்வாறே யாப்பருங்கலச் சூளாமணி, புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்கநூற் கருத்துக்களைப் பரக்கக் காணலாம்.

" வட்டடிக் கயவாய் மேதி கன்றுள்ளிப் பொழிந்த தீம்பால்" என்று இவர் சுயம்வர காண்டம் 144-ம் செய்யுளில் கூறியிருப்பது " காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த பாலுண்டு" என்ற கம்பர் கருத்துக் கொத்திருப்பதை நோக்குக.

நம் அதிவீரருக்கு வடமொழி நைஷதம் பாடஞ்சொன்னவர் நைஷதம் இராமகிருஷ்ணர் என்ற ஓர் அந்தணர். இது ஸ்ரீ வில்லிபுத்தூரைச் சார்ந்த புதுக்கோட்டைச் சாஸனத்தால் வெளியாகின்றதென்று நண்பர் ஸ்ரீ கோபிநாதராயர் எம். ஏ., அவர்களது சிலா சாஸன ஆராய்ச்சியால் தெரியவருகின்றது. புதுக்கோட்டை சாஸனத்தில் மானியம் பெற்றவர்களாகக் குறிக்கப்பட்டவர்களில் நைஷத இராமகிருஷ்ணர் என்பவரும் ஒருவர்.

காசிகாண்டம்:—இந்நூல் பாயிரம் உட்பட 100 அத்தியாயங்களையும் 2,526 செய்யுள்களையுமுடையது. இதனை "இலங்கலில் காண்டமிரண்டி னத்தியாயம் நூறென வுரைப்பர் மிக்குணர்ந்தோர்" என்பதனாலறிக. இது ஸ்காந்தத்தின் பகுதியென்பது " காந்தத்துள் மொழிந்த பழுதறு காசிகாண்டம்" என்ற பாயிரச் செய்யுளாலும் நூலின் இறுதியில் கூறப்பட்ட வாழ்த்துச் செய்யுளாலும் விளங்கும்.

" புவிபுகழ் காசிகாண்டம் பொருவில்பாச
சன்புதல்வன் புகன்ற வாறே
செவிவழியி னமுதுகுத்த தெனமதுரம்
பொழிதமிழாற் றெரித்தல் செய்தான்
உலவுமாக் குடைநிழற்ற கோராழி
திசையுருட்டி யொலிநீர் வேலி
வலனிபுரக் தருஞ்சூழதி யதிவீர
ராமனெனு மரச ரேறே"

என்ற இதன் பாயிரம் 14-ம் செய்யுளால் நம்மாசிரியர் இந்நூலை வடமொழியினின்றும் மதுரம் பொழிதமிழில் மொழிபெயர்த்ததாகத் தெரியவருகின்றது. இது காசி க்ஷேத்திரத்தின் மகிமையைப் பரக்கக் கூறுவதும பல



அரிய தர்மங்களை எடுத்துக் காட்டுவதுமான சிறந்த நூல்.

இதில் கற்பிலக்கணம் 54-செய்யுள்களாலும், இல்லற ஒழுக்கம் 87-செய்யுள்களாலும், துருவ சரித்திரம் 36-செய்யுள்களாலும் எவரும் வியக்கும் வண்ணங் கூறப்பட்டிருக்கின்றன.

சில அழகான செய்யுள்களை உதாரணங் காட்டுவேன்.

" காசியைக் குறித்துச் செல்லுங்
கால்களே கால்க ளாகும்
காசியை வழுத்து நாவே
நாவெனக் கழற லாமால்
காசியின் கதைகள் கேட்குஞ்
செவிகளே செவிக ளாகும்
காசியை யினிது காணுங்
கண்களே கண்க ளாமால்."

(2-வது அத்: 35-ம் செ-ள்.)

" அரிமா னேற்றின் கூன்பிறைக்கோட்
டண்ணல் வேழ முதுகுரிஞ்சும்
வெருவாச் சரபந் தலையணையா
வெங்க ணரிமான் விழிதுயிலும்
புரிகோட் டிரலை புனிறறுமதி
பொங்கி யெழுந்து வால்குழைத்துப்
பரிவாற் கடைவாய்ப் பாலொழுகப்
பாய்வெம் புலியின் முலையுண்ணும்."

(3-ம் அத்: 12-ம் செ-ள்.)

" விருந்தின் ஞக வொருவன்வர் தெதிரின்
வியத்தல்நன் மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்த
லெழுதல்முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றவன் றனருகு றவிருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்க லிவ்வொன்ப
தொழுக்கமும் வழிபடும் பண்பே."

(39-ம் அத்: 17-ம் செ-ள்.)

" அருமறை முனிவர் வாழ்க
வானினம் வாழ்கத் தெண்ணீர்
விரிதிரை யுலகங் காக்கும்
விறல்கெழு வேந்தன் வாழ்க
மருவிய திங்க டோறும்
மழைவளஞ் சுரக்க வெங்கோன்
பொருவற மொழிந்த விந்நூல்
பொற்பொடும் பொலிக மாதோ."

(முடிவுரை வாழ்த்து.)

கூர்ம புராணம்:—வியாச பகவான் வடமொழியிற் செய்த புராணங்கள் பதினெட்டுள் 13-வது கூர்ம புராணம். இந்நூலும் காசிகாண்டம், நைடதம் போலவே வடமொழிப் புராணத்தின் மொழிபெயர்ப்பு. இது பூர்வகாண்டம், உத்தரகாண்டம் என இரண்டு காண்டங்களுள்ளது. பூர்வ காண்டத்தில் 51 அத்தியாயங்களும் 2729 செய்யுள்களும், உத்தர காண்டத்தில் 46 அத்தியாயங்களும் 988 செய்யுள்களும் ஆக 97 அத்தியாயங்களும் 3717 செய்யுள்களும் உள்ளது. இவற்றில் வருணாச்சிரம தரும முரைத்த அத்தியாயமும், பார்வதி கல்யாண அத்தியாயமும் இராமாயண முரைத்த அத்தியாயமும், கண்ணனைக் குறித்த அத்தியாயமும் மிகவும் பாராட்டற்பாலன. இராமாயணக் கதை 7 அத்தியாயங்களும் 651 செய்யுள்களும் கொண்டது.

இந்நூலின் செய்யுணடை மிகவும் அழகும் சுபாவமும் கம்பீரமுமானது. " கன்னலின் முதிற் றேனிற் கனியினிற் கனிந்த பாடல்" என்றே கூறலாம். பின்வரும் பாடல்களின் பேரழகை நோக்குக.

### கைகேசி இராமனைக் காட்டுக்கனுப்புதல்

" கல்லும்வல் லிரும்பும் வெண்ணெயென் றுரைப்பக்
காழ்படு மனத்த கைகேசி
மல்லல் திணிதோட் பரதனுக் குலகம்
வழங்குதி யெழிரு பருவஞ்
சொல்புலி யுழங்கு கானிடைத் திரியக்
கூறின னுந்தையென் றுரைப்ப
வில்விழுங் குயர்தோட் செம்மலீ பணித்த
திலக்கலன் எனத்தொழு தகன்றான் ".

(பூர்வ : 22-அத் : 8-ம் செய்யுள்.)

### யசோதை தயிர் கடைதல்

" நிறைமண் டாற்றுங் கூந்தற் றேமென் மலரோடவிழ
உறைபெய் துடத்திற் றதும்பு மைவெண் முத்த [முலையின்
பெய்தையாற் குறு மருங்குல் தயிர்கொள் பூச லொழி [யென்
றறைபோன் வினையும் பூணு மலறத் தயிர்மத் தெரித்தாள்."

(பூர்: 29-அத்: 69-ம் செய்யுள்.)

### பொன்னியாற்றின் சிறப்பு

" கொம்பு குழைய மலர்சுமந்த
குளிர்மென் றேமா மலர்சொரிந்
தம்பு குயில்வாய் விழமோதை
யுழவர் கழனி காட்கொண்டு

பம்பு மோதை மதகோதை
    யுடைநீ ரோதை பரந்தார்ப்ப
வம்பி வழங்கு கடற்புகுந்து
    மலைநீர்ப் பொன்னிப் போராறும்.''

(பூர்: 12-ம் அத்: 57-ம் செய்யுள்.)

" கண்ணே வாயா யிறையழகைக்
    களித்து நோக்கிப் பருகுமின்கள்
வண்ண மூக்கே வாயாக
    வையன் மேனி மணநுகர்மின்
எண்ணு மனனே வாயாக
    வெழுத்தோ ரைந்து முரைமின்கள்
அண்ண லமுதஞ் செவிவாயா
    யருந்தி யுய்ம்மி னமரங்காள்.''

(உத்: 11-அத்: 51-ம் செ-ள்.)

"ஊழ்வினை தனையாரே யுப்புறங் காணவல்லார்"

(கூர்: பூர்வ: 30-ம் அதி: 168-ம் செ-ள்)

இவ்வடியை

''ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்ற குறளோடு ஒப்பிடுக.

(62-ம் அதி: 10-ம் செ-ள்.)

"கொங்குதேர் வாழ்க்கைப் பலபொறி சுரும்பர்
    கோங்கின்மென் பூந்துக ளாடி"

(கூர்: பூர்வ: 46-அத்: 26-ம் செ-ள்.)

இவ்வடியை வாசிப்பவர் எவர்க்கும் "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி" என்ற குறுந்தொகை இறையனார் செய்யுளும்*"கொங்கு தேர்வாழ்க்கையின்றமிழ், சொன்னலம் பெறச் சொல்லி நல்கினேன்" என்ற திருவிளையாடலினடியும் ஞாபகத்துக்கு வரும்.

"குற்றமில் குமரியாடக் குறுகிய விசயனென்றுன்"

(கூர்: பூர்: 30-அத்: 133-ம் செ-ள்.)

இவ்வடி சீவக சிந்தாமணி சுரமஞ்சரியாரிலம்பகம் 26-ம் செய்யுளை நினைவுறுத்தும்.

இப்புராணங்களது நடை வேற்றுமையை ஒருவாறாகக் கூறுவதுண்டு. காசிகாண்டத்தை மொழிபெயர்த்து வரதுங்கராம பாண்டியரிடத்தில் காட்டியபொழுது அது "கரும்புபோலிருக்கிறது," அஃதாவது வலிந்து பொருள் கொள்ளத்தக்கது. ஆனால் மிக்க ரசமுள்ளதாயிருக்கிறதென்று கூறினராம். பின் கூர்மபுராணத்தைக் காட்டவே அது "பால்போலிருக்கிறது," அஃதாவது வெள்ளையாகவும் ருசியாகவு மிருக்கிறதென்றனராம்.

வரதுங்கரது மனைவியாரிடம் காட்டியபொழுது நைடதத்தை வேட்டைநாய்போலிருக்கிறதென்றும் கூர்மபுராணத்தைக் காட்டவே அது வேட்டைக் குதிரைபோலிருக்கிறதென்றும் கூறினராம். அஃதாவது வேட்டைநாய் முதலில் சுறுசுறுப்பா யோடிக் கடைசியில் களைத்துப்போகும். வேட்டைக்குதிரை முதலில் மெதுவாய்ச் சென்று வர வர ஊக்கத்துடன் ஓடி வேலைசெய்யும். இக்கருத்துக்கள் கர்ண பரம்பரையான வழக்கு.

காசிகாண்டம் பூர்வபாகம் 9-ம் அத்தியாயம் 24-ம் செய்யுளாலும், 13-அத்தியாயம் 2-ம் செய்யுளாலும் இவ்வாசிரியர் சோதிடநூல் பயின்றவரென்பது வெளியாகின்றது.

திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி:— மிக்க உருக்கத்துடன் சொற்சுவை பொருட்சுவை செறிந்துகிடக்குந் தன்மையாலும் பதிபசுபாச இலக்கணங்களை விளக்குந் தன்மையாலும் இதனைக் குட்டித் திருவாசகம் என்றும் கூறுவர்.

" உருவாகி நிற்றி யருவாகி நிற்றி
    யுயிரோ டெவர்க்கு முறவாய்
மருவாகி நிற்றி மலராகி நிற்றி
    மறையாகி நிற்றி மறையின்
பொருளாகி நிற்றி யுனையா னறிந்து
    புகழ்கின்ற வாறு மறியேன்
கருவா புரிக்கு ளுறைதேவ தேவ
    கதியே யெனக்கு மொழியே.''

" தேவனே நின்னை யல்லாற்
    பிறிதொரு தேவை யெண்ணேன்
பாவனை நின்னை யல்லாற்
    பிறிதொரு பற்று மில்லேன்
யாவையுங் காட்டக் கண்டே
    னென்னுளே நின்னைக் கண்டேன்
காவலா கருவை யானே
    யினியமற் றோர் காட்சி யுண்டோ.''

திருக்கருவைக் கலித்துறை யந்தாதி:—நூறு அழகான கலித்துறையுடையது. பக்தி ரசம் ததும்பியது.

"பலக்கடல் வீழ்ந்து தடுமாறி வேறொரு பற்றுமின்றி
அவத்தினி னீந்தித் தளர்கின்ற நீயனுக் கம்பியெனத்
தவத்துறை யோர்தொழுந் தாள்காட்டி முத்திக் கடல்
    கரைமேல்
உவக்கற வேற்றவை யோசரு வாபுரித் தூயவனே."

* தருமிக்குப் பொற்கிழியளித்தபடலம் செய்யுள் 88 (பரஞ்சோதியார் திருவிளையாடல்.)



"நின்றாள் வழுத்த நினைவுதந் துள்ளி னிலைநிறம்பிக்
குன்றா வகையென்னை யாட்கொண்ட தாற்கொடி
    யேன்புகல
நன்றாகக் கொள்வதல் லாற்பிழை நாடலை நாடினருக்
கொன்றாய்ப் பலவுரு வாங்கரு வாபுரி யுத்தமனே."

திருக்கருவை வெண்பாவந்தாதி:—இச் சிறுநூலும் பக்திரசம் ததும்பியது. 100 வெண்பாக்களையுடையது.

"சென்றது காலஞ் சிதைந்த திளமைநல
நின்றதுசா வென்று நினைந்துருகி—மன்றி
னடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணு மாந்தர்
படிக்கின்ற நூலெல்லாம் பாழ்.''

"மாலுண்டு நெஞ்சே*வருந்துவதென் பால்வண்ணன்
காலுண் டவர்சொரியக் கையுண்டு—நாலுண்டு
வாழ்த்திட நாவுண்டு வரதன் கள்ளாவுண்டு
தாழ்த்திடவு முண்டே தலை."

மேற்கூறிய மூன்று சிறு நூல்களையும் நன்கு ஆராயின் நம் அதிவீரர் கருவைப்பிரானிடம் மிக்க அன்பு பூண்டிருந்தவரென்பதும் அப்பிரானே இவரை யாட்கொண்டு காட்சி கொடுத்து உய்யச் செய்தனரென்பதும் இன்னும் இவரது ஸ்வாநுபவங்களும் நன்கு விளங்கும். நைடதத்தை வரதுங்கராம பாண்டியரிடம் காட்டியபொழுது அவர் கூறிய மொழிகளை மனத்தில் வைத்துக்கொண்டு முதுமைப் பருவத்தில் பரமசிவன் விஷயமாய் இச்சிறு நூல்களை இயற்றினர் போலும்.

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

என்ற திருக்குறளுக்கிணங்க இவரது மனைவியார் கற்பிலும் புலமையிலும் மிகச் சிறந்தவராய் விளங்கி இந்நூல்களை இவர் மொழிபெயர்க்குங்கால் இவருக்குப் பலவிதத்திலும் பெருந்துணையாய் நின்று ஊக்கமளித்துவந்தனரென்ப. இப்பெண்ணரசியார் கவிபாடுவதிலுந் திறமை பெற்றவர்.

இந்நூலாசிரியரது கவித்தன்மை பெரிதும் பாராட்டத்தக்கது என்பது இவரது செய்யுள்களாலும், சாஸனங்களாலும் புலப்படும். பின்வரும் நளன் தூதுபடலச் செய்யுள்கள் சான்றாகும்.

" குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றென
மறுத்தலே கேட்டபின் வழங்க லாதலிற்
பெறற்கரு மாவியும் பெட்பி னீகுவன்
நிறப்பட வீவருளந் தெரிந்த தில்லையால்." (19)

" உரவுநீர்க் கருங்கட லுடுத்த மாநிலத்
தருநட னிம்மையி னளித்த வான்பொருள்
மருவிய மறுமையில் வழங்கு பான்மையால்
இரவலர் தமரினு மினிய ராவரே. (22)

உடைப்பெரும் பொருளினை யுலகி லூதியங்
கிடைப்பதற் களித்தலிற் கிளர்நி ரப்பினு
லடுத்துவந் தேற்குநர்க் கார்வ மீதுறக்
கொடுக்கிலொன் றேபல கோடி யாகுமால்." (23)

நோக்கோகம்:—சிங்கார ரசம் வாய்ந்த இந்நூலையும் இவர் வடமொழியினின்றே மொழிபெயர்த்தனர். இந்நூற் கருத்துக்களை நைடதத்தில் ஆங்காங்கு சுருங்கக்காணலாம். மதனநூலென்றும் இதற்கொரு பெயருண்டு. இதனை வரதுங்கராமபாண்டியர் செய்தனரென்றும் கூறுப.

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை யவர்களின் நைடதப்பதிப்பு இந்நூலாராய்ச்சியில் எனக்குப் பேருதவியாயிருந்தது.

## முடிவுரை

இப்புலவர் பெருமானது சரித்திர ஆராய்ச்சியால் இவர் பாண்டியகுலத்தைச் சார்ந்த ஒரு சிற்றரசரென்பதும், தென் காசிப்பிரதேசத்தை 16-ம் நூற்றாண்டின் மத்தியபாகத்தில் ஆண்டவரென்பதும், வடமொழியிலும் தமிழிலும் நல்ல பாண்டித்திய முடையரென்பதும், நம் பாஷைகளையும் புலவர்களையும் மிகவும் ஆதரித்துப் பேரும்புகழும்பெற்ற பெருங்கொடையாளி என்பதும், கன்னலின் அமுதிற்றேனிற் கனியினிற் கனிந்த கவிபாடுந்திறமையுடையவரென்பதும், நம் பண்டை நூல்களின் பழக்கம் மிகுதியுடையவரென்பதும், சிற்றின்பம் பேரின்பம் இரண்டிலும் அநுபவமுடையரென்பதும், நம் ஆசாரங்களிலும் வேதசாஸ்திர புராணக் கொள்கைகளிலும் பெரிதும் பற்றுடையவரென்பதும், மதவிஷயத்தில் சிறந்த சிவபக்தராயினும் சிறிதும் மதத்துவேஷ மில்லாத சமரஸபாவமுடையவரென்பதும், சவியா முயற்சியோடு ஆண்மைக்குண முடையவரென்பதும், குடிகளைக் கண்ணினைக்காக்கின்ற இமையிற் காத்து நீதிவழுவாது செங்கோல் செலுத்திய மன்னரென்பதும், குருபக்தியும் சகோ

(இதன் தொடர்ச்சி 178-ம் பக்கம்)

* பாடபேதமுமுண்டு.

# ஐரோப்பிய யுத்தம்

## THE EUROPEAN WAR

ப்ரான்ஸ் தேசத்தின் பிரதான நகரமாகிய பாரிஸை நோக்கிவந்துள்ள ஜெர்மானியப்படைக்கும் நம் துணைப் படைகளுக்கும் ஸாய் ஸன்ஸ், அயின் முதலிய இடங்களில் கோரமான யுத்தம் நடந்து கொண்டிருக்கிற தென்றும் அந்த யுத்தத்திலேயே யார் பக்கம் ஜயம் என்பது தெளிந்துவிடும் என்றும் பெல்ஜியத்தில் ப்ரஸ்ஸல்ஸுக்குப் பிறகு ராஜதானியாக்கப் பட்ட ஆன்ட்வேர்ப் நகரம் ஜெர்மானியரால் முற்றுகை போடப்பட்டிருக்கிற தென்றும் சென்ற அக்டோபர்மீ த்து 'போதினி' யில் நண்பர்கள் கண்டது ஞாபகமிருக்கலாம். ஆன்ட்வேர்ப் நகரத்தைமுற்றுகைபோட்ட ஜெர்மானியர் எப்படியும் பெல்ஜியத்திற்கு நாசம் விளைக்க எண்ணம்கொண்டதை முடிப்பதன்பொருட்டு அவ்விராஜதானியைபலத்த ஸேனையைக்கொண்டும் கோரமான யுத்தாயுதங்களைக் கொண்டும் தாக்க ஆரம்பித்தார்கள். பெல்ஜிய நாட்டு மன்னராகிய ஆல்பர்ட் அரசரும் நகரத்திலுள்ளவருக்குத் தேறுதல்சொல்லி, தம் ஸைன்யங்களையும் உத்ஸாகப் படுத்திக் கொண்டு கடைசிவரையிலும் போர்செய்தார். எவ்வளவு வீரராயிருந்தாலும் கொடிய ஜெர்மானியரின் படைகளுக்கு முன்னிற்க முடியவில்லை. ஆகவே பெல்ஜிய ஸைன்யங்களும் ஜனங்களும் ஆன்ட்வேர்ப் விட்டு வெளிக்கிளம்பி விட்டார்கள். பெல்ஜிய கவர்ன்மெண்ட் தற்காப்பு நிமித்தம் ப்ரான்ஸ் தேசத்திலுள்ள ஹாவர் என்னும் துறைமுகப் பட்டணத்திற்கு வந்து சேரலாயிற்று. பெல்ஜிய அரசரும் 'ஆஸ்டேண்ட்' வந்து சேர்ந்தார். ஜெர்மானிய ஸேனையின் பகுதிகள் 'ஆன்ட்வேர்ப்' பைக் கைப்பற்றிய பிறகு கேண்ட், ஆஸ்டேண்ட் இவைகளையும் பிடித்து விட்டன.

துணைச்சேனைகள் இவைகளைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்குமோ ?ஜெர்மானியரின் வழியைமறித்துக்கொண்டு போரிட்டு ஆங்காங்கே அவர்களை முதுகுகாட்டி ஓடும்படி செய்துவிட்டன. ஸாய்ஸன்ஸ், அயின் இந்த இடங்களில் ஏற்கனவே போர்நடந்து வருகின்றதல்லவா ? இந்த இடங்களில் நடக்கும் விஷயங்கள் வரவர ஸாரமற்றவையாய்ப் போய்விட்டன,ஜெர்மானியர், துணைப்படைகளின் முன்னிற்கச் சக்தியற்றுப் போயினர். ஆனால் ப்ரான்ஸுக்குவடமேற்கு பாகத்தில் உள்ள ஜெர்மன் ஸைன்யங்கள் கடற்கரை பாகங்களை ஆக்ரமிக்கவேண்டுமென்றும்,டன்கர்க்கு, கலே முதலிய இடங்களைப்பிடித்து இங்கிலாந்தின்மீது படை எடுக்கவேண்டும் என்றும் வெகு ஆவேசத்துடன் பிரயத்தனப்பட்டன. பாபம்! அசட்டுத்தனமாய் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கலாயிற்று. பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்களும் துணைச்சைன்யங்களும் ஜெர்மானியரைக் கிட்டநாட்வொட்டாமல் விரட்டிவிட்டன. இப்பொழுது இங்கிலாந்தைவிட்டு பாரிஸின் மேலேயே கண்ணுயிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.ஆயினும் தினே தினேஜர்மானியரின் பலம் குறைந்து வருகிறது. நம் துணைப்படைகள் ஜர்மானியரைத் துரத்தியடிக்கின்றன.

இன்னொரு விசேஷம். இந்தப் படுகளத்தில் நம் ஸஹோதரர்களாகிய இந்தியர்கள் நம்தேசத்திற்குரிய சௌர்யாதிகளைக் காட்டிப் பிரதாபம் அடைந்திருக்கிறார்கள். போர்முனையில் கொண்டுபோய் நிறுத்தப்பட்ட இந்திய ராணுவங்களைக் காணும்போதே ஜர்மானியர் திகில்பிடித்தவர்களானார்களாம். வங்கதேசத்தவர்களும் கூர்க்காஜாதியாரும் தங்கள் ஸாஹஸச் செயல்களால் எதிரிகள் படையுள் புகுந்து வெகுதூரம் வரையில் அவரைத் துரத்தியிருக்கிறார்கள். முக்கியமாய் நம்மவர் ஸமீபத்தில் தைரியத்துடன் நெருங்கி கைகலந்து மல்லயுத்தம்செய்வதில் மிக்க ஸாமர்த்தியசாலிகள் என்று சொல்லப்படுகிறது. நம்மவர் எக்காலத்திலும் தர்மத்தின் பொருட்டும் ஸத்தியத்தின்பொருட்டும் தங்கள் உயிரினைத் துரும்பெனமதித்து அழிவில்லாப் புகழைப் பெற்றிருக்கிறார்கள் அல்லவா ? அதற்கு இவர்களே உதாரணம் போதும்.

நிற்க,கிழக்கே ருஷியா சும்மா இருக்கவில்லை. தாங்களே வார்ஸா முதலிய நகரங்களைப் பிடித்து விட்டோம் என்ற ஜெர்மானியரைப் பல விடங்களில் முறியடித்ததுமன்றி ஆஸ்ட்ரியாவில் ருஷியா படைஎடுத்து அநேக பட்டணங்களைக் கைப்பற்றியுள்ளது. இந்த யுத்தத்திற்கு காரணமான சிறுபட்டணமாகிய ஸாரஜீவோவில் ஆஸ்ட்ரியர்களை ஸெர்வியா முறியடித்துவிட்டது. ஆனால் சிலநாட்களாய் டர்க்கியின் நடத்தை ஸரியாய் விளங்கவில்லை.ஜர்மானியருக்கு கப்பல்களில் வேலைகொடுத்திருக்கிறதுமல்லாமல் டார்டனெல்ஸ் என்னும் ஜலஸந்தியை வர்த்தகத்திற்கும் வசதியில்லாமல் செய்துவிட்டது. தவிர ஜெர்மன் கப்பல்கள் கருங்கடலில் ருஷியருக்கு உபத்திரவம் கொடுப்பதற்கு அனுகூலமாயிருந்ததினிமித்தமும் தான் போரில் ஸம்பந்தப்படாம லிருப்பேன் என்று சொன்னதை நிறைவேற்றாததினிமித்தமும் அதற்குப் ப்ரிட்டனுக்கும் போர் கிளம்பியிருக்கிறது.

கடற் சண்டைகள் எப்படியிருக்கின்றன வென்று சற்று பார்ப்போம். இதுவரையில் முக்யமான கடற்போர் ஒன்றும் நடக்கவில்லை. முன்னமேயே கூறியுள்ளபடி ஜெர்மானிய கப்பல்கள் கீயல் முதலிய இடங்களிலிருந்து வெளிவர வழிகிடையாது. ப்ரிட்டனே எங்கும் கடற்படையில் சிறந்திருக்கின்றது. ஆனாலும் சில சிறு கப்பல்கள் ஆங்காங்கே விஷமங்கள் செய்து வருகின்றன.கீழ்ஸமுத்திரங்களில் எம்டன் போன்ற கப்பல்கள் திருட்டுத்தனமாய் நம்மவரின் கப்பல்களைப் பிடித்து ஆழ்த்துவதும் மறைந்து போவதுமாய்த் திரிகின்றன. ஆபிக்

கடலில் மினிகாய் என்னும் தீவுக்குச் சமீபத்தில் சிலகப்பல்களை ஆழ்த்திய பிறகு மஹாகார்யமாய் விரைவுடன் பினாங்குவரையில் சென்று அங்கு இரண்டு போர்க்கப்பல்களை அமிழ்த்தி விட்டதாம். மேற்கே அட்லாண்டிக் சமுத்திரத்திலும். தப்பித்துப்போன கார்ல்ஸ்ரூஹீ என்னும் கப்பல் சில இங்கிலீஷ் வர்த்தகக்கப்பல்களை அமிழ்த்துவிட்டதாம். இவை போன்ற எதிரியின் கப்பல்களைப் பிடிக்க எவ்வளவோ முயற்சிசெய்து வருகிறார்கள். இவர்கள் முயற்சிகள் எல்லாம் கைகூடி இக்கொடிய யுத்தம் சீக்கிரத்தில் முடிந்து உலகெங்கும் சாந்தமும் ஸமாதானமும் அமைந்து எல்லா நல்விஷயங்களிலும் செழித்து வளரவேண்டுமென்பதே நம் மனப் பூர்வமான கோரிக்கை.

(177-ம் பக்கத்தொடர்ச்சி.)

தர வாஞ்சையுமுடைய வரென்பதும், சிறிதுஞ் செருக்கில்லாச் சீலரென்பதும், இன்னுமிவை போன்ற பல அரிய பெரிய குணங்கள் வாய்ந்தவரென்பதும் நமக்கு நன்கு விளங்குகின்றன. நம் தமிழ்நாட்டுச் சிற்றரசர்கள் பின்பற்றுவதற்கு நம் அதிவீரர் சிறந்த முன்மாதிரியாவார் என்பது திண்ணம். தமக்கென்று வாழாமல் பிறர்க்கென்று வாழ்ந்து புவிபாசராயும் கவிபாசராயும் விளங்கிய இப் பெரும் புண்ணிய புருஷனை நம் தமிழ்நாட்டார் என்றும் மறவாது எல்லாப் படியாலும் கௌரவப்படுத்திப் பாராட்டுவார்களாக.

" அருமறை முனிவர் வாழ்க
    ஆனினம் வாழ்கத் தெண்ணீர்
விரிதிரை யுலகங் காக்கும்
    விறல்கெழு வேந்தன் வாழ்க
மருவிய திங்க டோறு
    மழைவளஞ் சுரக்க வெங்கோன்
பொருவற மொழிந்த நூல்கள்
    பொற்பொடும் பொலிக மாதோ."

(முற்றிற்று.)

எஸ். சாமிநாதையர்,

# வைதிகமத ஞானம்—V

## KNOWLEDGE OF THE VEDIC RELIGION

ஸூத்ரபாஷ்யத்தில் காணப்படும் கபில தூஷணபாகம் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியாள் வாக்கே அல்ல, அவர் வைதிகமதஸ்தாபன அத்வைத ஸித்தாந்தம் செய்த ஒழுங்கிற்கு விரோதமாக இருப்பதால், என்று முன்னர் எடுத்துக் காட்டியாகிவிட்டது. இங்கு மற்றைய புராணாதிகளைக்கொண்டு அவைகளை உணர்ந்த ஆசாரியாள் கபிலதூஷணத்தைச் செய்ய நியாயமே இல்லை என்பதை ஸ்தாபிக்கப் புகுவோம்.

மஹாபாரதம் சாந்தி பர்வத்தில் ஸாங்கிய ப்ரவர்த்தகரான கபிலரது ப்ரஸ்தாபம் அநேக இடங்களில் வருகிறது. இதுபோலவே யோக சாஸ்திரவிஷயமும் காணப்படுகிறது. 326-ம் அத்யாயம் 3-4-ம் ச்லோகங்களில் மோக்ஷ விஷயத்தைப்பற்றி சிரவணம் செய்யவேண்டும் என்ற ஆவலுடன் வந்த சுகப்ரஹ்மத்தை நோக்கி, அவர் தகப்பனார் வியாஸர், 'மோக்ஷ சாஸ்திரங்களையும் பலவகைப்பட்டுள்ள தர்மங்களையும்பற்றி முதலில் விசாரணை செய்' என்று கட்டளையிட, அதன்பேரில் அவர் யோக சாஸ்திரத்தையும், கபில சாஸ்திரத்தையும் ஆராய்ந்து தேறி விளங்கினராம்: பின்னர் அவரை வ்யாஸர் மிதிலைமன்னன் ஜனகனிடம் மோக்ஷ விஷயத்தை விசாரித்துணர அனுப்பு

(இதன் தொடர்ச்சி 180-ம் பக்கம்)

வித்தனராம். இதனாலேயே வைதிகமதவிஷய ஞானத்திற்கு ஷட்தர்சன உதவி இவ்வளவு என்பது ஒருவாறு விளங்கும். 307-308-ம் அத்யாயங்களில் வஸிஷ்டர் ஜனகருக்கு யோக ஸாங்கியச் சுருக்கங்களை எடுத்து விளக்குவதாக பீஷ்மர் கூறுகிறார். 306-ம் அத்யாயமும் இவ்விஷயத்தில் கவனிக்கத்தக்கதே. இந்த ப்ரஸ்தாபங்களுக்கெல்லாம் ஆதாரமாக தர்மபுத்திரர் பீஷ்மரை நோக்கி 301-ம் அத்யாயத்தில் ‘ஸாங்கியத்திற்கும் யோகத்திற்கும் உள்ள வித்யாஸங்களை எடுத்து விளக்கவேண்டும்’ என்று கேட்கிறார். அதற்கு பீஷ்மர் பின்வருமாறு பதில் கூறத்தொடங்குகிறார்:—

‘ஸாங்கியத்தைப் பின்பற்றுவோர் அதைச் சிறப்பித்துக் கூறுவர், யோகத்தை யோகிகளும் துதித்தே கூறுவர். தம் தம் ஒழுங்குகளை ஏற்றப்படுத்திக்கூற அவரவர்கள் இப்படிச் செய்கிறார்கள். யோகத்தில் ஈடுபட்டுள்ள பெரியோர் ஈச்வரன் இருக்கிறார் என்ற நம்பிக்கை இல்லாதவர்களுக்கு முக்தி கைகூடாது என்பதற்குத் தகுந்ததாயும், திடமாயும் உள்ள யுக்திகள் கூறுகின்றனர். ஸாங்கியக் கொள்கைகளை நம்புபவர்களோ எப்பொருள்களிலும் உள்ள மெய்ப்பொருளைப் பகுத்துணர்ந்துவிடின், உலகப் பொருள்கள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு, மரணத்திற்குப்பின் முக்தியையே அடையலாம் என்பதற்குத் தகுந்த யுக்திகள்கூறுகின்றனர். இப்படிக் கூறுபவரும் மிகச்சிறந்த பெரியோர்கள்தான். இவ்வாறு இருதிறத்தாரிடத்தும் ஸரியான யுக்திகள் பொருந்தி இருக்கையில், ஸ்வமதமாகிய வைதிகமதத்திற்கு அனுகூலமான யுக்திவாதங்களை எல்லாம் அங்கீகரிக்கவேண்டும் ஒருவன். அப்படித் தேடிச் சேர்க்கப்பட்ட யுக்திகள் மிக அனுகூலமாகவே இருக்கும். பெரியோர்கள் இருகக்ஷியிலும் காணப்படுகின்றனர். உம்மைப் போன்ற தர்மாத்மாக்களுக்கு இவை இரண்டின் எதைக் கடைப்பிடித்தாலும் ஒருவித கெடுதியும் வாராது. யோகவிஷயங்கள் எல்லாம் அனுபவங்களைப் பற்றியவை: அதன் மூலமாகவே உணர்ந்து தெளியவேண்டியவை: ஸாங்கிய விஷயங்களோ வேதவாக்ய ஆராய்ச்சியை ஆதாரமாக உடையவை. இரண்டும் எனக்கு அங்கீகாரம்தான்.’

இவ்வாறு பீடிகை போட்டுக்கொண்டு ஸாங்கியம் யோகம் ஆகிய ஷட்தர்சனங்களில் மிக முக்யமானவைகளை ஒப்புக்கொண்டே, மோக்ஷ வழியில் அவைகள் உபகாரமாக இருப்பதைக் கருதி பீஷ்மர் தர்மபுத்திரருக்கு இவைகளின் ஒழுங்கை விளக்கி இவைகள் விஷயஞானம் முமுக்ஷுவுக்கு அவசியம் வேதஞானப்யாஸங்கள் திடப்பட, என்று காட்டி தர்சனங்கள் சிறப்பை ஒருவாறு நிலை நாட்டுகிறார்.

இப்படிக் கூறிவருகையில் முதலில் யோக சாஸ்திர விஷயத்தைக் கூறிமுடிக்க பீஷ்மர் அடுத்ததான 302-ம் அத்யாயத்தில் ஸாங்கிய சாஸ்திரம் கூறத்தொடங்குகிறார். ‘தெளிவான ஆத்மஞானமுடையவர்களது கொள்கையான ஸாங்கிய தத்வங்களைக் கேள். கபிலரை முதலாக உடைய சிறந்த ஸித்தர்களான யதிகளால் இவை ஸ்தாபிக்கப்பட்டன. இந்தக் கொள்கைகளில் குற்றமே இல்லை. இதன் பலன் அளவிட முடியாது’ என்று கபிலரையும் ஸாங்கியத்தையும் துதித்துக்கொண்டே பீஷ்மர் ஸாங்கிய ஸித்தாந்தத்துள் தலையிடுகிறார். இவ்வாறு பீஷ்மர் 306-ம் அத்யாயம் வரையில் இந்த விஷயத்தை நன்கு விரித்து விளக்குகிறார்.

ஸ்ரீமத் பாகவதம் 3-ம் ஸ்கந்தத்தில் 24-ம் அத்யாயம் முதல் அந்த ஸ்கந்தம் முடிய 33-ம் அத்யாயம் ஈறாகக் காணப்படுகிறது கபில வாஸுதேவ அவதாரக்கதை. இதில் கபில பகவான் விஷ்ணுவின் அவதாரம் என்பதும், அவர் தம் தாயாருக்கு உபதேசித்த ஸாங்கியம் பெரும்பாலும் அவர் இயற்றிய ஸாங்கிய சாஸ்திரம் தான் என்பதும் அதை வாசிப்போருக்கு நன்கு விளங்கும். இதிலிருந்து கபிலபகவான் சிறப்பு விளங்குவதோடும்கூட அவர் ஸாங்கிய சாஸ்திரம் கேட்டதும் ஜீவன் முக்திபெற்ற அவர் தாயான தேவஹூதி தேவியால் ஸாங்கிய சாஸ்திரத்தின் சிறப்பும் நன்றாக வெளியாகும்.

பகவத்கீதையிலும் ஸாங்கிய சாஸ்திரம் II-11 முதல் II 30 ஈறாக உள்ள ச்லோகங்களிலும், VII-ம் அத்யாயத்திலும், XIII-ம் அத்யாயத்திலும் நன்றாக விளக்கப்படுகிறது. இம்மாதிரியே யோகசாஸ்திரம் VI-ம் அத்தியாயத்தில் காணப்படுகிறது. இப்படி வேதார்த்தங்களை விளக்கவந்த சாஸ்திரங்களில் எல்லாம் தர்சன விஷயங்கள் இல்லாமல் போகவில்லை. முக்யமாக ஸாங்கிய விஷயம் மிகுந்த ஏற்றமாக கொண்டாடப்பட்டும் காணப்படுகிறது.



இவைகளை எல்லாம் ஆராய்ந்துணர்ந்த ஆசாரியாள் கபில பகவானை தூஷிக்கத்துணிந்திருப்பாரா! அவர்கள் வாயில் அனுவசியமானசொல் ஸாதாரண மதாசாரிய விஷயமாகக்கூட வாராதே! அப்படி இருக்க எல்லோராலும் கொண்டாடப்படும் சிறந்த வைதிகசாஸ்திர ப்ரவர்த்தகரான, பகவத் அவதார புருஷரான கபில பகவானையா அம்மஹான் தூஷிக்கத் துணிவார்!! இது வெறும் கட்டுப்பாடு. அத்வைதத்தை சிறப்பாக நிலை நாட்டவேண்டும் என்ற கண்மூடி அபிமானம் நிறைந்த பரபரப்பான ஒரு ஆவேச அத்வைதியின் கைச்சரக்கே. இதனால் அந்த மூடன் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல, அத்வைத ஸ்தாபனம் செய்ய எண்ணி அதற்கு ராஜபாட்டைபோலிருந்த ஸாங்கிய யோகாதி ஷட்தர்சன வழியை அடைத்து அத்வைதத்தையே உள்ளபடி உணர வழியில்லாது அடித்துவிட்டான். அப்படிச் செய்தவன் தத்காலத்து ஆபாஸ வேதாந்திகளைக் காணும்படியாக ஏற்பட்டால் தன் அவஸரவேலை அனர்த்தமாக முடிந்ததே என்று கதறி உருகுவான் என்பதற்குத் தடை யேது?

இவ்வாறு புராணாதி விஷயங்களைக் கொண்டும் ஆசாரியாள் தன்மைகளைக் கொண்டு மாத்திரம் ஸூத்திர பாஷ்யத்தில் காணப்படும் கபிலதூஷணம் ஆசார்யாளதல்ல என்று தீர்மானிக்க இடமிருப்பதோடுங் கூட ஆசார்யாள் வாக்கே இதற்கு நேர் விரோதமாக உள்ளது பின் வரும் ஸந்தர்ப்பத்தில் என்பது கவனிக்கத்தக்கது. பகவத்கீதை XVIII-ம் அத்யாயத்தில்,

ஞானமொடுகர்மம் நவிலும் கருத்தன் இவை
ஆனகுணபேதத்தால் ஆமேமூன்—றானமறப்
பல்குணமும் எண்ணிப்பகர்நூல் உரைக்கும் அதை
சொல்வன் இனிக்கேட்டுத் துணி.

என்பது 19-ம ச்லோகமாக அமைந்துள்ளது. இதன் வ்யாக்யானத்தில் ‘பல்குணமும் எண்ணிப் பகர்நூல் என்பது ஸாங்கிய சாஸ்திரமே. கபிலரது குணசாஸ்திரமும் ப்ரமாணந்தான் என்பதற்கு ஐயமில்லை. அதில்காணும் குணம், அனுபவிப்பவன் விஷயம் அங்கீகரிக்கத் தகுந்தவைதான். அத்வைத ப்ரஹ்மமான பரமஸத்வஸ்துவிஷயத்தில் அந்த சாஸ்திரம் நமக்கு விரோதமாயினும், குணம் குணகாரியங்கள் விஷயமாக உள்ள அந்த சாஸ்திரபாகம் சிறந்ததே. அதைக்கொண்டு மேற்கூறப் போகும் குணபேத விஷயங்களை பகவான் துதித்துக் கூறுகிறார் இங்கு’ என்று காணப்படுகிறது. இந்த ஆசாரியாள் வாக்கில் ஸூத்திர பாஷ்யத்தில் காணப்படும் கடுமையான கபிலதூஷணம் வர இடமே இல்லை என்பதற்கு என்ன ஸந்தேஹம்!

இவ்வாறு நேறித் தெளிந்துதான், ஸாங்கிய சாஸ்திரத்திற்கு பாஷ்யம் எழுதப் புகுந்த விஞ்ஞானபிக்ஷு ஸ்வாமிகள் இந்தக் கபிலதூஷணத்தை ஸூத்திர பாஷ்யத்தில் புகுத்திவிட்ட அத்வைத ஆத்திரக்காரனைப் பின் வருமாறு கண்டித்துக் கேலிபண்ணுகிறார். “சில வேதாந்த ஆபாஸகர்கள் ஸாங்கியப்ரவர்த்தககபிலர் விஷ்ணுவல்ல: அக்னி அவதாரமான வேறு கபிலரே என்று சில ஸ்மிருதி வாக்யங்களை மேலெழுந்தவாரியாகக் கொண்டு பின் பற்றுவது வெறும் அறியாமையே. ஸ்ரீமத்பாகவதம் 3-ம் ஸ்கந்தம் 24-ம் அத்யாயம்36-ம் ச்லோகத்தில் பகவான் கர்த்தமரை நோக்கி, ‘மேலும் தேஹத்தின்மேல் அபிமானத்தைவிட விரும்பியவர்களை உத்தேசித்து ஆத்மஞானத்திற்கு உபயோகமான தத்துவங்களின் உண்மையை சொல்வதற்காகவும் அவதரித்தேன்’ என்று காணப்படுவதைக் கொண்டு ஸாங்கிய சாஸ்திர ஆசாரியர் விஷ்ணு அவதாரம் தேவஹூதி பிள்ளை என்பது வெளிப்படை. இரண்டு கபிலரை கற்பித்துக் கூறுவதற்கு இடமே இல்லை. கபிலர் பெயருடன் சில ஸ்மிருதிகளில் ‘அக்னியாகிய கபிலரே ஸாங்கிய சாஸ்திர ப்ரவர்த்தகர்’ என்று அக்னிசப்தம் சேர்ந்து காணப்படுகிறதே எனில் பாதகமில்லை. பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா XI-ம் அத்யாயம் 32-ம் ச்லோகத்தில் ‘ஆறுலகம் எல்லாம் அழிக்கும் ஒரு காலன் யான்’ என்று தாமே கூறியிருப்பதைக் கொண்டு இதனால் காலசக்தி ஆவேசத்தால் உள்ள விச்வரூப கிருஷ்ணன் வேறு, விஷ்ணு அவதார கிருஷ்ணன் வேறு என்று குதர்க்கம் பேசும் மதியிலி போன்றவனே அக்னிபோல ஜ்வலிக்கும் கபிலர் என்று கூறப்பட்டிருக்கும் ஸ்மிருதி வாக்யத்தைக்கொண்டு ஸாங்கிய ப்ரவர்த்தக கபிலர் வேறு, விஷ்ணு அவதார கபிலர் வேறு என்று குதர்க்கம் பேசுவோன்’ இந்த பரிஹாஸத்தை சங்கராசாரியாளைச் செய்துள்ளது என்று கொண்டு பெரி

யோர்களைப் பழிப்பதே விஞ்ஞான பிக்ஷுவின் திமிர் என்று அவரைக் குற்றங்கூறும் அவஸரக்காரர் எத்தனை பேர் இக்காலத்தில்! இதுவரையில் வாசித்தவர்களுக்கு விஞ்ஞானபிக்ஷு கபிலதூஷணம் செய்தவர் ஆசாரியாளல்ல என்று நன்குணர்ந்தே இதைப் புகுத்திய புத்திமட்டான ஆத்திரக்கார ஆபாஸ வேதாந்திகளை வாய்கூசாது வம்புபண்ணி நகைக்கிறார், என்பது தெரிந்திருக்கும்.

இதுவரையில் கூறியதிலிருந்து கபிலதூஷண பாகத்தை ஆசாரியாள் செய்யவே இல்லை. அந்த ஸூத்ர பாஷ்யபாகம் ஒதுக்கப்படவேண்டும் என்பது விளங்கும். இதை நீக்கிவிட்டு பாஷ்யத்தைக் கைக்கொண்டால் ஷட்தர்சனங்கள் வேதப்பொருளை யுக்திவாத மூலமாக ஸ்தாபிக்க வந்தவை; அவைகள் உதவி இன்றி வேதப்பொருள் விளங்கவே மாட்டாது; ஆனால் யுக்திவாத அவஸரத்திற்கேற்ப சிற்சில தத்கால முடிவுக் கொள்கைகள் வேதவிரோதமாயினும் அங்கீகரிக்கும்படி அவைகளில்வரும். அவைகளை மதப்ரக்ரியை எனக்கொண்டு முக்யமாகக் கருதாது ஒதுக்கிமற்றை வேத ஸம்மதவிளக்கபாகங்களை ஆராய்ந்துணர்ந்து தேறிவந்தால் முடிவுபேதம் தக்காமலே வைதிகமத அப்யாஸஞானிகள் முதிர்ந்துவரும். இவைகளைத்தவிர வைதிகமதம் உணர வேறுவழியில்லை: மேலும் முடிவுக்கொள்கைகள் அதிகமாக வேதஸம்மத பாகங்களைத்தாக்குவதில்லை. ஆதலால் ஷட்தர்சன ஆராய்ச்சியும் வைதிக அத்வைதத் தெளிவும் அத்யாவசியம் என்பதுதான் ஸ்ரீமத் சங்கராசார்யாள் அபிப்ராயம். ஆகவே இப்பொழுது குன்றி நஷ்டமாயிருக்கும் ஷட்தர்சனப்படிப்பு மேலோங்கவேண்டியது அவசியம். அதற்குத் தகுந்த ஏற்பாடு பண்டிதர்கள் ஆங்காங்கு செய்தால் வைதிகமத ஞானம் விபரீதமாக ஏற்படாது நல்வழியில் அனுகூலமாக ஏற்படும். இந்த ஷட்தர்சன ஆராய்ச்சியில் பண்டிதர்களையும் உத்யோகஸ்தர்களையும் தூண்டுவதற்கு மேல்வரும் ஸஞ்சிகைகளில் அவைகள் சுருக்கத்தை எழுதிவெளிப்படுத்த முயல்வோம்.

---

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 44 சக்கரநெறி நில்

ஆக்ஞாசக்ர ஒழுங்குப்படி நட என்று பொருள்படும் இந்த ஸூத்திரம். யாராக்ஞைப்படி என்ற கேள்வி பிறக்கும். இக்கேள்விக்குப் பதில்கூறும் வகையால் இந்த ஸூத்திரம் மூன்றுவிதமாகப் பொருள்படும். (1) ஈசனது (2) ராஜனது (3) குருவினது என்பதே இக்கேள்வியின் விடைகள்.

(1) ஈசன் ஆக்ஞைப்படி நட:—இப்பொருளில் இந்த ஸூத்ரம் எல்லோருக்கும் பொதுவானது. ஈசன் இந்த உலகங்களை எல்லாம் ஜீவர்கள் அனுபவித்து அடிபட்டுத் தேறித் தெளிந்து முக்திபெறக் கருதியே ஸ்ருஷ்டித்து லயம் செய்து வருகிறார் என்பது எல்லா மதஸ்தர்களுடைய கொள்கையுமாகும். இப்படி வெளிப்பட்டு ஒடுங்கும் ப்ரபஞ்சத்தில் உள்ள ஜீவராசிகள் பந்தங்களிலிருந்து எளிதில் விடுபட சில சிறப்பான ஒழுங்குகளை வேதாதிகளால் வெளியிட்டுள்ளார் ஈசன். இந்த ஒழுங்குகள்தான் ஆக்ஞாசக்ரமெனப்படுவது. உலகிலுள்ள மற்றைய மதங்களில் இந்த ஈச ஆக்ஞா சக்ரத்தின் உட்பிரிவுகள் நமது ஸனாதன தர்மத்தில் விளக்கமாகவும் விரிவாகவும் காணப்படுவதுபோல காணப்படவில்லை. ஆதலால் மற்றைய மதங்களில் ஈசாக்ஞை விளக்கமாக வெளிப்படாது. நமது வைதிகமதப்படி இந்த ஆக்ஞைக்கு தர்மம் என்று பெயர். முடிவான முக்தி கைகூடும் வரையில் மானிடர் மனதை கீழே நழுவவொட்டாது ஒவ்வொரு அபிவிருத்தி நிலையிலும் தாங்கி நிற்கும் தன்மை இந்த ஈசன் ஆக்ஞாசக்கிர பாகங்கள் ஒவ்வொன்றிற்கும் இருப்பதால் இவைகளுக்கு தர்மம் என்ற பெயர் அமைந்தது. இவைகளை மீறிவிட்டால் இந்த தர்மமே ஒதுங்கிவிட அதர்ம நிலைவந்து கீழேநழுவித் திண்டாடும் கொடிய நிலை ஏற்பட்டுவிடும். இந்த ஈசன் ஆக்ஞையான தர்மம் நாற்பெரும் வருணம், ஸ்திரீ புருஷ வாய்ப்பு. இவைகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. இவைகளின் ஒழுங்குப்



படி எல்லோரும் நடந்து அமைதியுடன் இருக்கவேண்டும் என்று இந்த ஸூத்திரம் உபதேசிக்கிறது. இதற்கு மாறாக, ஒருவன் தர்மத்தை ஒருவன் செய்தால் மோக்ஷ மார்க்கவழி நடப்பது அஸாத்தியமாகிவிடும். மேலோர் தர்மத்தைக் கீழோர் அனுஷ்டித்தால் உலகத்திற்கு கெடுதியும் குழப்பமும் வருவதோடு கூட அனுஷ்டிப்பவனுக்கு அடக்கம் முதலிய ஆத்ம குணங்கள் உண்டாவதற்கு மாறாக வீண்கர்வம் முதலிய பாபநிலைகளே உண்டாகும். கீழோர் தர்மத்தை மேலோர் அனுஷ்டிக்கக் கிளம்பிவிட்டால் அதிலிருந்து வரக்கூடிய லாபமும் உண்டாகாது, குழப்பமும் ஏற்படும், ஆத்ம குணங்கள் வந்தணுகுவதற்கு இடமே இல்லாத அதோகதியும் நரகவாஸமும் மறுஜன்மத்தில் தாழ்ந்த பிறப்பும்தான் வரும். இம்மாதிரி ஈசாக்ஞைமீறி நடந்து திண்டாடுவதற்கு தத்காலத்தில் அநேக திருஷ்டாந்தம் காணலாம். முற்காலத்தில் புராணாதிகளில் அநேக உதாரணங்களும் காணப்படும். உத்தர ராமாயணத்தில் சூத்ரமுனி சம்பூகன் கதையும் சாந்திபர்வத்தில் பிராஹ்மணர் ஒருவர் கிரஹசாரியாது சூத்ராஸாதுவுக்கு வைதிக கர்மாக்கள் செய்து வைத்த கதையும் இதற்கு த்ருஷ்டாந்தம்; பகவத்கீதை முழுவதுமே இந்த ஸூத்ர வியாக்யானம்தான்.

2. அரசன் ஆக்ஞைப்படி நட:—முற்கூறிய ஈசன் ஆஞ்ஞைப்படி நடப்பவருள் அந்த ஆக்ஞை ஸரிவர நடைபெற்று வருகிறதா என்று ஆராய்ந்து உணர்ந்து அதன்படி நடப்பவர்களை தடைகள் வந்து தாக்காது காத்து, அதன்படி நடவாதவர்களை சிக்ஷித்து வழிப்படுத்தி, முடியாவிடில் ஒதுக்கி துஷ்ட நிக்ரஹம் சிஷ்டபரிபாலனம் செய்யக் கடமைப்பட்டவர் க்ஷத்ரிய வர்ணத்தார். இவர்களுக்கே அரசர்கள் என்று பெயர். இவர்கள் ஈசாக்ஞைப்படி நடப்பதில் முற்கூறியவைகளையே இவர்கள் தர்மமாகக் கொண்டொழுகவேண்டும். இப்படிப்பட்ட அரசர்கள் ஈசாக்ஞையை நிலை நிறுத்துவதற்கு இடையே ஏற்படுத்தும் ஆக்ஞைப்படி நட என்று உணர்த்துகிறது இந்த ஸூத்திரம்.

இங்கு இரண்டு வித சங்கை உண்டாகலாம். முதலாவது தர்மப்படி நடக்க அரசன் உத்தரவை மீறலாமா? இரண்டாவது தர்மப்படி நடவாக்கொடுங்கோன்மன்னனைபிரஜைகள் என்ன செய்வது? என்பவைகளே. அரசன் என்ற நிலைக்கு எந்த க்ஷத்திரியன் அல்லது அவனுக்குநிகரானவன் எவன்வந்துவிட்டாலும்ப்ரஜைகள் தர்மம் அவன் ஆக்ஞைக்கு உட்படவேண்டியதுதான். முடியாவிடில் அவன் நாட்டைவிட்டு நீங்கவேண்டியதுதான். இப்படி இருந்தால் தான் ஜனங்களைக்கட்டியாள ஒருவனால் முடியும். அரசன் தர்மத்தின் கஷ்ட நிலையை நோக்கிக் கூடிய வரையில் அவனுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும், முடியாவிடில் அவனுக்கு வீண்வருத்தம் உண்டாக்காது ஒதுங்கிவிடவேண்டியது. கொடுங்கோல் மன்னனைக்கண்டிப்பதும்தண்டிப்பதும்பிரஜைகளின் தர்மமேயல்ல. அவனைத்தண்டிக்க ஆதிகாரிக தேவர்களாவது அல்லது பகவத் அவதாரமாவது வரவேண்டியதுதான். உலகில் லோகதுக்கங்கள் மாறிமாறி வருவது இயற்கை, அதன்படி கொடுங்கோன் மன்னனை இடையில் வந்த துக்கமென்றுகருதி பொறுமையுடன் பகவத் அவதாரத்தை எதிர்பார்த்திருக்க வேண்டியதுதான் ப்ரஜைகள் தர்மம். இந்தக் கட்டைமீறி விடுவதென்றால் உலகில் அராஜகக் குழப்ப நிலைதான் வரும். எவனும் வரம்பு மீறும் ப்ரஜைகளைக் கட்டியாளவே முடியாது. தற்காலத்திய குடியரசுக் கொள்கைகளும் உட்புகுந்து நோக்கில் குடியரசு ஸபை அக்ராஸனாதிபதியையே அரசனாகக் கொண்டிருக்கும். தனிக் குடியரசும் ராஜத்தன்மையையேதான் ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆகவே அரசனை நேரே தண்டிக்க ப்ரஜைகளுக்கு ஸனாதன தர்மம் இடங்கொடாது. ப்ரஜைகள் ஈசாக்ஞையை முன்னிட்டு அரசாக்ஞைக்கும், அரசன் ஈசாக்ஞையையே கைக்கொண்டு தன்னிலையிலும் நிற்றல் வேண்டும். இப்படி அரசன் நில்லாவிடில் செய்ய வேண்டிய காரியத்தை ஸ்ரீமத் பாகவதம் நான்காம் ஸ்கந்தத்தில் கொடுங்கோல் மன்னனான வேனன் உபாக்யானத்தில் வ்யாஸர் நன்றாக வெளியிடுகிறார். அங்கு ப்ரஜைகள் ப்ராஹ்மணர் உள்பட பொறுமையுடன் வேனன் கொடுமையைப்பொறுத்துவந்தார்களே ஒழிய அரசனை அழிக்கக் கிளம்பவில்லை. அவனைத் தண்டிக்க ஆதிகாரிக ருஷிகளான அகஸ்தியாதிகள்தான் வரவேண்டியிருந்தது. இப்படிப்பட்ட ராஜ மர்யாதை இக்கால நாகரிகத்தில் உலே

கில் நஷ்டமாகிப்போய் விட்டது. உலகில் இக்காலத்தில்மேன்மை அடைந்துள்ள ஜாதியார்களிடமெல்லாம் அரச அநுதரவு குடிகொண்டு விட்டது. குடியரசுக்காரர்கள் அரசனை நீக்கிவிடினும் அவநுதரவிற்கு ஆதாரமான ஒரு அக்கிராஸநாதிபதியை ஏற்கவேண்டி வந்து விட்டது. அரசர்களை ஒப்புக்கொள்ளும் ஜாதியாரோ அவர்களை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. ஆதலால் உலகத்திலுள்ள தத்காலத்திய நாகரிகத்தால் கண்மூடித்தனமாகத் திரியும் ஜாதியார்கள் எல்லாம் ஸநாதன தர்மக் கொள்கைகளை உடையநம்பரதகண்ட ஹிந்துக்களிடமிருந்துதான் ராஜபக்தியை ஸம்பாதிக்க வேண்டும். கனவிலும் கஷ்டத்திலும் அரசனுக்கு விரோதம் பாராட்டாது சக்கரநெறிநிற்கும் நிலை நம்மவரிடம்தான் இக்காலத்திலும் உள்ளது. இது இருக்கும் வரையில நம்மை வலுச்சண்டைக்குக் கூட ஒருவராலும் இழுத்து அலங்கோலப் படுத்தமுடியாது. ராஜபக்தியே தத்காலத்தவர் கோலாஹலத்தில் அழிந்த பின்பு நாம்தான் உலகிற்கு இதை வெளிப்படுத்தும் குருக்களாவோம். நமது சாஸ்திரங்களில் அரசன் தர்மம் தவறுதிருப்பதற்காக அவனிடம் மிக நெருங்கி தர்மம் உணர்ந்து அவனுக்கு நிஷ்பக்ஷபாதமாகப் புத்திகூறி நல்வழிப் படுத்தவல்ல ப்ராஹ்மணர் புரோஹிதராகவும் மந்திரியாகவும் இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குப்படி நடந்துவந்தால் அரசர்கள் அநேகமாகக் கெட்டுப்போகமாட்டார்கள். பிரஜைகளும் கஷ்டப் படக் காரணமில்லாமல் போய்விடும்.

(3) குரு ஆக்ஞைப்படி நட:—எப்படி அரசன் ப்ரபஞ்ச ஒழுங்கு ஸம்பந்தப்பட்ட வரையில் ஈசாக்ஞைப்படி நடத்தி தர்மத்தை நிலைநிறுத்த ஏற்பட்டுள்ளானோ அப்படி ஒவ்வொருவனும் மோக்ஷம் அடைய நடந்து தேறவேண்டிய வழியில் அரசன் போன்றவன் குரு. இங்கு கூறப்படுவது ஸாதாரண குருவேயல்ல. ஸந்யாஸியோ அல்லது ஸந்யாஸி போன்ற ப்ராஹ்மண க்ரஹஸ்தனோ ஜீவன் முக்திபெற்றுள்ளவன் ஒருவனே இங்கு குரு எனப்படுவது. இவனுக்கு வரும் சிஷ்யனும் ஒரு விசித்ர ஆள்தான். குரு பரம்பொருளைக் காணாமல் கண்டு அனுபவியாமல் பரவஸ்துவில் அமர்ந்தவன். சிஷ்யனோ இந்த குரு சொல்லாமல் சொல்லுவதை, கேட்காமல் கேட்டு நினையாமல் நினைத்து நிலைப்பவன். இந்த ஆச்சரியகரமான குரு சிஷ்யப்பொருத்தத்தையும் அவர்கள் ஆதாரமான ஆத்ம ஸ்வரூபத்தையும் கிருஷ்ணபரமாத்மா பகவத்கீதை II-ம் அத்யாயம், 29-ம் ச்லோகத்தில்:—

"ஆச்சரியம் போலொருவன் காண்பனிதை மற்றொருவன்
ஆச்சரியம்போலே அறைகிற்பன்—ஆச்சரியம்
போலொருவன் கேட்பனிதைக் கேட்டும் இலையே புவியில்
மாலொருவத் தேருபவன் மற்று"

என்று விளக்கி, குருவின் வாக்கை கேட்பவர்கள், 'கேட்டும் இலையே புவியில் மாலொருவத் தேருபவர் மற்று' என்று கூறி, எத்தனை பெயர் ஆத்மாவைப்பற்றி உள்ளபடி கேட்டபோதிலும் குருவின் ஆக்ஞாசக்கர நெறிநிற்காதிருப்பின் மோக்ஷ பலனை அடையார்கள் என்று முடிக்கிறார். குரு சிஷ்யனுக்கு எடுத்துக் காட்டும் வஸ்துவின் ஆச்சரியத் தன்மைக்கு ஏற்ப அவர் நடந்து காண்டவழியே அவர் சொற்படி நடக்கும் சிஷனுக்குத்தான் மோக்ஷம் கைகூடும். கூடியவரையில் சிஷ்யன் வைதிக யுக்திகளால் குருவாக்யத்தை நம்பிக்கையுடனாராய்ந்து அதைத் திடப்படுத்திக் கொள்ளலாம். குதர்க்கி, ராஜத்ரோஹிக்கு ஸமமே: இருவரும் சக்கர நெறிநில்லாதவராதலால். குரு, வேதத்திற்கும் வர்ணாச்ரம ஸ்திரீ புருஷ தர்மத்திற்கும் விரோதமாக ஒன்றும் கூறமாட்டார். அப்படிக் கூறுபவர் ஒருவர் தோற்றமாத்திரத்தில் சிறந்தவராயிருந்தால் அவரைக்கண்டு மயங்காது ஒதுங்கிவிட வேண்டும். அவரை அணுகிப் பழகியபின்பு அவர் சாயம் வெளுத்தாலும், அவரை வீணாக வருத்தாது ஒதுங்கிவிடவேண்டும். ஒதுங்காதிருப்பது ஈசாஞ்ஞைக்கு விரோதம்தான். இங்கு கூறப்பட்டது ஞானகுரு விஷயமாகத்தான். மற்றையகுருக்கள் விஷயமாக இந்த ஸூத்ரம் முற்றும் பொருந்தாது. இந்த ஸூத்ரப் பொருத்தத்திற்கு உத்தங்கர் திருஷ்டாந்தம். இது மற்றைய குருக்கள் விஷயத்தில் பொருந்தாது என்பதற்கு பீஷ்மபரசுராம யுத்த திருஷ்டாந்தம்.

---



# மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

Power of some kind or other will survive the shock in which manners and opinions perish; and it will find other and worse means for its support. The usurpation which in order to subvert ancient institutions has destroyed ancient principles, will hold power by acts similar to those by which it has acquired it. When the old feudal and chivalrous spirit of *Fealty*, which,by freeing kings from fear, freed both kings and subjects from the precautions of tyranny, shall be extinct in the minds of men, plots and assasinations will be anticipated by preventive murder and preventive confiscation and the long roll of grim and bloody maxims, which from the political code of all power, not standing on its own honour, and the honour of those who are to obey it. Kings will be tyrants from policy when subjects are rebels from principle.

When ancient opinions and rules of life are taken away, the loss cannot possibly be estimated, from that moment we have no compass to govern us; nor can we know distinctly to what port we steer. Europe undoubtedly, taken in a mass was in a flourishing condition the day on which your Revolution was completed. How much of that prosperous state was owing to the spirit of our old manners and opinions is not easy to say; but, as such causes cannot be indifferent in their operation, we must presume that, on the whole, their operation was beneficial.

நடை உடை பாவனைகள் நாசமாகும் கலக்கத்திற்குப் பின்னர் ஏதாவது ஒருவிதமான அதிகாரம் மிகுந்தே நிற்கும்: இதன் ஆதாரவு முன்னவைகளின் ஆதாரவைவிட வேறாகவும் கொடியதாயும் இருக்கலாம். பழைய ஏற்பாடுகளை நிலை குலையச்செய்ய பழைய கொள்கைகளை அழிக்கும் உரிமைக்கு மாறான கடுங்கொள்ளை, தன் அதிகாரத்தை, அபஹரித்த வழிகளைப் போன்ற உதவிகளாலேயே நிலைநாட்ட முயலும். அரசருக்கு ஏற்படக் கூடிய அச்சத்தை நீக்கி, அரசன் குடிகள் இருதிறத்தாரையும் கொடுங்கோன்மை விஷயமான எச்சரிக்கைகளெடுத்துக்கொள்ளாது தடுத்துவந்த பழைய அடக்கமும் வீரத்தனமும் நிறைந்த தலைவர் வணக்கம் என்பது மனிதர் மனதைவிட்டே அகன்று விடுமாயின், சதியாலோசனைகளுக்கும் சதிக்கொலைகளுக்கும் முன் ஜாக்ரதையுடன் மாற்றான கொலைகளும் பறித்து ஏற்று விடுதலும் நடைபெறும்படி யாகும்: தன் சிறப்பைப் பற்றியும் கீழ்ப்படிவோர் மேன்மையைப்பற்றியும் நிலைக்க இடமிராத அதிகாரஸம்பந்தமான ராஜாங்க சட்ட ஒழுங்குக்குரிய அஞ்சத்தக்க கொடிய கோட்பாட்டுத்திறங்களையும் ஏற்படுத்தி விடும்படியாகும். குடிகள் நியாயம் நோக்கி ராஜவிரோதிகளாகிவிடில், அரசரும் அரசமுறைமை நோக்கி கொடுங் கோன் மன்னராகி விடுவர்.

பழமையான கருத்துக்களும், வாழ்க்கை ஒழுங்களும் அடியோடு பெயர்த்தெறியப்படின், ஏற்படக் கூடிய சேதம் இத்தன்மையதாகவிருக்கும் என்று மதிக்கத்தான் முடியாதுபோனாலும்: அந்தக்கணம் முதல் நமக்கு வழிகாட்டி நடத்தும் கருவியே இல்லாமல் போய்விடும்: எம்முடிவைக் கருதித் தொழிற்படுகின்றோம் என்பது நன்கு விளங்காமல் போய்விடும். ஐரோப்பா முழுமையும் சேர்த்து நோக்குமிடத்து உங்கள் நாட்டுக் குழப்பம்முடிந்த அன்றே செழிப்பான நிலையிலிருந்ததென்பதற்கு ஐயமில்லை. இந்த தழைத்தோங்கிய நிலை இவ்வளவுவரையில் பழைய நடை உடை பாவனை ஊக்கத்தைப் பொருத்தது என்பதை வகுத்துக் கூறுவது எளிதல்ல. ஆனால் இது போன்ற முகாந்தரங்களின் தாக்குதல் நடுத்தரமாயிருக்க முடியாதாகையால் மொத்தமாகப் பார்க்குமிடத்தில் இவைகளின் தொழிற்பாடு உபயோகமுள்ளதாகத்தான் இருக்கவேண்டும் என்று துணியும்படியாகிறது.

# ராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

இலக்குவன் வெகுண்டு இந்திராஸ் திரமும்
வாயுவாஸ் திரமும் வகையுடன் விடுத்து
அட்டகா சஞ்செய் தலைநகர் ஞந்து.
பதிற்கணை ஏவி பகைவன் தடுத்தான்.
அரைநொடி தன்னில் அய்யனின் தம்பி
அரக்கனி னுடலை அம்புக ளெய்து
சல்லடைக் கண்களாய்த் துளைத்தலும், சக்தியின்
வேலொன்றெடுத்து விரைந்து விடுத்து
அகிலமும் நடுங்க அலறினன் அரக்கன்.
இதனைக் கண்ட எம்பிரான் தம்பி
கணையொன் றேவிக் காய்ந்தனன் வேலை.
அரக்கன் கண்கள் அனலை வீசிட
புகையை உரோமம் போக்கிட வெளியே
தன்மேல் மொய்க்கும் நதுசின் அம்புகள்
யாவையு மெடுத்து வில்லிற் றொடுத்து
இலக்குவன் மீது ஏவிக் குதித்தனன்.
இதனை இலக்குவன் இமை கொட்டிடாது
பார்த்துப் பார்த்துப் பலபல நினைந்து
"வீரரில் யாவரில் வீரனுக் கொப்பார்?
இத்தகை வீரனை இனிக்காண் பேனோ
இவனைக் கொன்றிட எற்கும் விதித்ததே!
ஐயகோ, ஐயகோ!! பாவியாவேனே!
வீரத் துவத்தை விளக்கமாய்க் காட்டிய
இராவணி புகழில் வீரேழுலகிலும்
பரவுக பீடுடன் பரவுக" என்றே
வீரனை வீரன் புகழ்ந்துரைத் தனனே.
புகழ்ந்து புவியுள மாந்த ரஞ்சிட
சாபங் குனித்துச் சரத்தைத் தொடுத்து,
இராவணி கழுத்தை இருகூறாக்கினன்.
உலகெலாங் களிப்பினை உற்று ஆடிய.
இந்திரன் பூமழை யினிதிற் பெய்தனன்.
தம்பியை மெச்சி, தயாபரன் புகழ்ந்தான்.
சாரண ரோடிச் செய்தியைச் சாற்றலும்
இராவணன் படியிசை ஏங்கி விழுந்து
களைத்துப் பின்னர் களைதெளிந் தெழுந்து,
படியிசை வீரம் பார்த்தியோ! போயது!
தம்பியின் கூற்றையும் தனயனின் சொல்லையும்
மறந்து இக்கதி யடைந்தனன். "மைந்தா!
குடும்பந் தன்னைக் கொன்ற பாவியேனென்
மைந்தனே, மைந்தனே!! மாண் புடை வீர!
சென்று மடிந்து சிவனை யடைந்தனை.
மாண்டு மாண்புடன் மன்னவ வருவேன்.
இராவணி மைந்தா! இந்திரன் ஜெயித்தோய்!"
என்றே அலறி ஏங்கியின் தேறி
அசோகவனம் சென் றன்னையை யடைந்தான்.
அடைந்து அதன்பின் அன்னையை நோக்கி
" உன்னா லன்றோ உற்றா ரிழந்தேன்.
ஒப்பற்ற பிள்ளையர் பேறையே யிழந்தேன்

மங்கையே யுன்னுயிர் மாநிலத் திருப்பின்
மானிடர் விட்டிடார். மாய்த்தே தீர்ப்பார்.
ஆகையால் உன்தலை அரிவேன் வாளால்,
பெண்களிற் பாவி, பேதாய்!" என்றே
வாளினை யுருவி, வாட்டி அந்நிமையின்
ஆவியைக் கொள்ள அரக்கனும் வந்தான்.
இதனை யறிந்த இராவணன் பாட்டன்
மாலிய வானும் மகிபனைக் கண்டு,
"ஈரேழுலகுஞ் ஜெயித்த இராவணா!
கயிலையை யெடுத்து கண்டனைக் கண்டோய்!
தலைகளை யறுத்து தவத்தினைச் செய்தவ!
அமரரை யெல்லாம் அடக்கி யாம்பவ
இந்திரன் தன்னைச் சிறையினி லிட்ட
இந்திரஜித்துவைப் பெற்றவ! இராவணா!
அஷ்ட கஜங்களை அமரில் வென்றோய்!
இராவணா! பேர! இலங்கையில் வாழ்வோய்!
வீரரில் வீர வீடணன் மூத்தோய்!
உருண்டு உருண்டு உலகை யழித்திடும்
சிறம்பினன் செல்வன் கும்ப கர்ணனின்
சகோதர னுயிடும் சதகண்டராவணா!
பகைவரை வாட்டிடும் பண்புடை வீரகீ
ஏழில்மா திவன்மேல் எடுத்தாய் வாளெனில்
உன்னுடை புகழும் உலகினிற் குன்றி
பழிக்கிட் மாயிடும் பாதக னுவாய்.
அன்றியும்,
இராமன் இலக்குவ னிருவரைக் கொன்றபின்
யார் முகந் தன்னில் இராவண விழிப்பாய்?
வீர! வெற்றி விளம்பிடப் புக்கின்
நூர்புறம் இல்லா துணர்வாய் பேரனே!
சக்கரம் போலச் சுழுதியில் மாறிடும்"
எனவே கூறினன். இராவணன் மகிழ்ந்து
பாட்டனின் பாதம் பணிந்து திரும்பி
அரண்மனை யடைந்து அரக்கனொருவனை
மங்கையின் தந்தைபோல் மாயையா லாக்கி
சீதைமுன் கொடுபோய் சென்னியை யறுத்து
"உந்தனின் தந்தையை உடலைக் கட்டி
இதோபா ருன்முன் இட்டுவந் தேனடி.
பாதகத் துருக்கரைப் பார்ப்பாய் நாளை
இங்குள இருவரை யானே மாய்ப்பேன்.
எந்தனைத் தவிர எழிலுடை மங்கையே
வேற கதியுனக் குண்டோ விளம்பிடாய்"
எனவே கூறலும் இராமனி னில்லாள்
தந்தையின் கதியைத் தன்மனத் தெண்ணி
இராமனை நினைந்து ஏங்கினள் யாதோ
ஜனகனு மரக்கன் சுடுதியிற் கண்ணீர்
வடியவே விட்டு வனிதையை நோக்கி
"பேதா யுன்னைப் பெற்றதா லிக்கதி
அடைந்தே னடைந்தேன் கதியிலி யானேன்.
இராவணன் மனம்போல் இப்பவே இணங்கி
பஞ்சணை தன்னிலே படுத்து இன்பம்
அவற்கே ஈந்து அடைதி நீயும்.



அல்லையேல் எந்தன் சென்னியை யரிவான்.
மகளே! மகளே!! மனத்தைத் திருப்புதி."
எனவே இயம்பலும், எழிலி சீதையும்
கண்கள் சிவத்தலால் கனலைக் கக்கிட,
"பெற்றபெண் யானெனைப் பெற்ற தந்தை
பிள்ளையினிடத்தோ பேதையே இந்த
மொழிதனை இயம்பினுப்? மூடனே கேளாய்.

அறிவிலி! அறிவைப் புறமசெல விடுத்தவ!
கொலைபா தகனே! கொடுங்கோல் மன்னவ!
அரச குலத்து உதித்த அரசனின்
தன்மை யிதுவோ தந்தாய் கூறிடாய்
தந்தையோ நீயும்? தடியனே! தடியனே!!
பெண்களைக் கெடுக்கும் பெரும்பா தகனே!
உயர்குலத் துதித்தவன் நீயிலை யுணர்விலி!
பூமிக் கோர்பெரும் பாரமே பெண்டிரைக்
கொன்றிடும் பாதகன் கொல்வான் நின்னை.
கொன்று லெனக்கென்? கொலைபா தகனே!

சாதி சாதி. நீ சாதலே சால்பாய்
உலகிற் காயடும். உலகினர் களிப்பார்.
சாதலே உனக்குச் சரியாம் தண்டனை.
செத்துச் சென்று நரகைச் சேர்தி"
எனவே கடுகடுத் தியம்பி பின்னர்
'இராமா! இராமா!!' என்றேங் கினளே.
திரிசடை யம்மனும் தேற்றின ளன்னையை.
அரக்க னிராவணன் அரக்கனொருவனை
சீதைபோல் மாயையால் உருக்கொளச் செய்து
இட்டுக் கொடுபோய் இராமனின் முன்னே

வெட்டி யெறிந்தனன் வீரர் கலங்கிட.
இராமன் சீதையை யெண்ணிப் புலம்பினன்.
அதனை வீடணன் அறிந்து தேற்றி
அறிவா லரக்கனின் மாயையை விளக்கினன்.
அதன்பின் இராவணன் அரண்மனை யடைந்து

மூல பலத்தினை முடுக்கினன் படுகளம்.
மூல பலமும் முகுந்தனைத் தேடி,
"யாரவன் மனிதன்! யாரவன் மனிதன்?
இராமப் பெயரினன் எங்கே எங்கே?"
என்றே கூவி யிரைந்து ஏகி

விட்டிற் பூச்சிகள் விளக்கைச் சூழ்ந்து போல்
பாம்பைத் தேரைகள் பாய்ந்துசுற் றிடல்போல்
இராமனை வளைந்து ஈட்டிகளெறிந் தார்.
மூல பலத்துள முரட்டு அரைக்கரைக்
கண்ட வானரர் கால்துறை யடிபட

அலமர் தவராய் அணையைக் கடந்து
ஓடி ஒளிக்கவும் அனுமன் திருப்பினன்.
பாஸ்கரன் சூழ்ந்த பனிநிறை யொத்த
அரக்கரை யெல்லாம் அய்யனி ராமன்
கணைகளாற் கொன்று மோகனக் கணையை
மீந்தவர் கொன்றிட மிகுவிரை வாய்த்தொடுத்
தெங்கு மிராமனாய் ஏகமாய் நின்றனன்.
தம்முனிற் பலரே தயாபர னிராமனென்

றெண்ணி அரக்கர் எடுத்து வாளை
தம்முனிற் பலரைத் தாக்கிக் கொன்று
யாவரு மடிந்தனர் இராமன் சூழ்ச்சியால்.
இதனை இராவணன் கேட்டு நகைத்து
உடனே போர்க்களத் தோடியே உற்றான்.
இராமனும் வந்து எதிர்த்துதன் வில்லை
குணத்தொனி காட்டி கூரிய அம்புகள்
மழையெனச் சொரிந்து யாட்டின னரக்கனை
அரக்கனு மெதிர்ந்து ஆர்த்து அம்பினை
அம்பால் அறுத்து ஏவினன் கணைகளை
இராம இராவண யுத்தமென் றிந்தப்
பூமியி லெல்லாம் புகழ்ந்திடும் போழ்து
யான் ஒரு சிறுவன் எவ்விதம் புகழ்வேன்?
இராவணன் சிறப்பொடு மிரத மூர்ந்தும்
நிலமக ளிடந்த நெடியோன் நின்றும்
போர்செயக் கண்ட புண்ணிய னிந்திரன்
சால்பொடு திகழுதன் தேரைச் சாரதி
மாதலி யோடு மாண்புட னனுப்பினன்
இந்திரன் தேர்மிசை இராமனு மேறி
இராவணன் கணைக்கு எதிர்க்கணை யேவலும்
அரக்கன் அனேக கணைகளை விடுத்தனன்.
இராமன் ஏவிய கணையொன் றாலே
இராவணன் சேனை யாவு மழிந்தன.
அதனைக் கண்ட அரக்கன் கோபித்
தனேக கணைகளை அதிசீக் கிரத்தில்
தனுசிற் றொடுத்து தான் ஆர்த்தனனே.
இதனைக் கண்ட இராமன் முனிந்து
பலபல வென்று பலகணை சொரிந்தான்.
இவ்வித மாக இருதிறத் தாரும்
ஒருவருக் கொருவ ரொப்பிலை யென்ன
எண்டிசை யுள்ள யாவுங் கலங்கிட
உயிர்கள் யாவும் ஒடுங்கி யோடிட
கதிரோன் பயந்து கதிதப் பியோடிட
திக்குப் பாலகர் தியங்கி யோடிட
திக்குக் கஜங்கள் திகிலால் கீழ்விழ
அட்டமா நாகமு மடங்கிச் சோர்ந்திட
பராக்கிர மத்தைப் படிக்கு விளக்கி
ஒருவருக் கொருவர் கொஞ்சமும் தாழா
துயுத்தம் விளைத்தனர் ஒருமுகூர்த் தகாலம்
இறுதியி லிராவணன் வேர்த்து இளைத்து
மறைந்து, செத்தவர் பிழைத்திடு மந்திரம்
ஜபித்தலும், வீடணன் அறிந்துசெப் பிடவே
கிலியாஸ் திரத்தை கிண்கிணி யாடிடும்
தனுசிற் றொடுத்து தானே வினனே.
கணைசென் றந்தக் காவிடத் திருந்து
மந்திர மோதும் மகிபனைத் தாக்கலும்
கோபம் பிறந்து கொடுஞ்சூ லெடுத்து
காகுத் தன்மேல் கடிந்து எறிந்தனன்.
கருப்பனும் கணையால் காய்ந்தனன் சூலை,
வெஞ்சின மடங்கா இராவணன் வேலொன்
றெடுத்து ஏவினன் யாவரு மயங்கிட.
அரக்கன் ஏவிய அறுமுகன் வேலும்.

கடுகடுப் புடனே விடமெனக் கறுத்து
அனைத்தையும் காய்ந்து அணுகலைக் கண்டு
அரக்கரின் குலத்தை அறுத்த காலன்
அனேக விதத்தில் அஸ்திரம் விடுத்தும்
அவைகளை யுண்டபின் அழிப்பே னென்று
இராமனின் மேல்விழ இரைந்து வந்ததுவே
தம்பி இலக்குவன் தயங்கியே நின்றான்.
தேவர் யாவரும் திகிலினைக் கொண்டார்.
மனிதனு யினதால் மயங்கியே நின்றான்,
ஆலிலைப் பள்ளி அமர்ந்த அய்யனும்,
குபீலென் றோர் பெரும் குரலிரா மன்றன்
உடம்பினி லிருந்து உண்டா யிடலும்
வேல்புவி மீது விழுந்தது பொடியாய்.
தசதலைத் தலைவன் தழலென வெந்து
எழுமாஸ் திரத்தை எவினன் மாதோ.
அரியரந் தாம ணழித்துலக் கணையை
அண்டம் நடுக்கவாழ் அரக்கனை நோக்கி
"அடாஅ! பாதகா! அரக்கனே! மூடா!
மாயை விற்றிறம் மந்திரம் பலவொடு
கைத்திறம் வரப்பிர சாதம் கணைத்திறம்
யாவு மறிந்தேன். ஈ இதோ பாணம்
தடுப்பா யாக்கனே கடிதிற் றடுப்பாய்"
எனச்சொலி பிரமனின் கணைதனை எவினன்.
செந்துவர் வாயாள் சீதை களிக்க
அந்தரத் தமரரனைவரு மகிழ
அரக்கனின் சிரமெலா மறுந்துவீழ்ந் தனவே.
அறுந்த சிரங்களந் நேரமே முளைத்தன.
வீடணன் முகத்தை விண்ணு நோக்கினன்
அமுதமுண் டவனென அன்னவ னியம்பலும்
தசரதன் மதலை தனுசை வளைத்து
பிரமாஸ் திரத்தைப் பிரீதியோ டேவினன்
உகாந்தகா லத்து உருத்திரன் போல
அமுதபாண் டத்தை அடித்து உடைத்து
சிரங்களைச் சிதைத்து தேவர் போற்றிட
கங்கையில் மூழ்கி கருப்பனை யடைந்தது.
இராவணன் புவிமே லிறந்துவீழ்ந் தனனே.
ஆகா யவீதியி லமரர் அரம்பையர்
வேத வேதியர் மிகுதவத் தவர்கள்
யாவரும் புகழ்ந்து இசையுடன் மகிழ்ந்து
பொன்னும் பூவும் பொழிந்து போற்றி
மங்களம் லாலி வகையுடன் கூறி
அடங்கா மகிழ்ச்சி அடைவுடன் கொண்டு,
"பொழுது புலர்ந்தது. புன்மை யிருட்கணம்
போயின யாவும். புகழையும் பெற்றோம்,"
எனவே மகிழ்ந்து இராமனைத் தொழுதார்.
அனுமன் முதலாய் அனைத்துள வானரர்
யாவரும் களித்து இன்ப மெய்தினர்.
வீடணன் முகமோ வீழ்ந்தது கீழே.
'தானு டாக்கால் தன்மே லாடும்
என்னும் மொழிகள் இகத்துள வன்றோ?'
இராமனி னேவலால் கடன்களை முடித்திட
இலக்குன னிலங்கை யரண்மனை புக்கு
அரச முடியை அகமகிழ் தளித்தான்.
வீடணன் மகிழ்ந்துகீழ் விழுந்து தொழுதபின்,
இராமனின் இணையடி கதியென விழுந்தான்.
இராமனும் வாழ்த்தி இன்போ டிருந்தான்.
அந்த வேளையில் அனுமான் அங்கதன்
வீடணன் முதலிய வீரர் யாவரும்
அன்னை வாழும் அசோக வனஞ்சென்
றன்னையை வணங்கி அய்ய னிடத்து
எழுந்தருள் செய்ய எடுத்துரைத் தனரே.
அன்னையும் திரிசடை யுடனே அய்யனை
பாததாமரையில் வணங்கலும் பரமன்,
"அரக்கன் எடுத்துச் சென்று அடைத்த
சிறையினில் வாழ்ந்த சீதையே கேளாய்.
உன்னையான் சேர்க்கி லுலகம் பழிக்கும். மேலும்,
உன்னை மீட்டிட உயுத்தம் விளைத்திலேம்.
கொன்றை யணிந்த ஜடாயுவைக் கொன்ற
பாவியைப் பழிவாங் கிடற்கே உற்றோம்.
பிதாவைக் கொன்ற பித்தனைக் கொன்றோம்.
எங்குல மிழுக்கை யடைந்திட லாகா.
மாசிலா ளென்று மங்கையே காட்டினல்
சேர்ப்போ மல்லையேல் சேர்த்திடோ" மென்றான்.
அம்மொழி செவிக்கொடு அன்னை வருந்தி
"அய்யனே அரக்கன் வஞ்சித் தெடுத்தான்!
அவனும் தம்முடை யம்பா லிறந்தான்.
அவன்குல மழிந்திட அகல்விழிக் கண்டேன்
இறப்பதே என்கதி என்பது மறிந்தேன்.
பிறந்த குலத்தும் பின்வரும் குலத்தும்
இழுக்கு எகிட லடிகிதே யன்றாம்.
பீடுண் டாம்படி பெருமையோ டக்கினிப்
பிரவே சமாவேன் பெருமை நாயக!"
எனவே அய்யனை எற்றி வணங்கி
இராமனுக் கிளைய இலக்குவன் நோக்கி
"வினையின் வசத்தால் விளம்பினேன்பழிமொழி
அந்தக் குற்றம் அகத்தில் வையா
தக்கினி வளர்ப்பீ ரன்புட" னென்றாள்

சுதேசமித்திரன் எழுதுவது.—'விவேகபோதினி' 1913வது ஜூலை மீ முதல் 1914வது ஜூன் மீ முடியவுள்ள ஒரு வருஷ சஞ்சிகைகள் ஒன்றாய்ச் சேர்த்து பயிண்டு செய்யப்பட்டு வரப்பெற்றோம். நேர்த்தியான காகிதத்தில் பல சித்திரப் படங்களுடன் 'விவேக போதினி' அழகாய் அச்சிடப்பட்டு மாதா மாதம் தவறாமல் வெளிவருவதை எல்லோரும் அறிவார்கள். ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் அரிய விஷயங்கள் சிலபிரஸ்தாபிக்கப்படுவதால், ஒருவருஷ சஞ்சிகைகளைத் திரட்டி அழகிய காலிகோவால் பயிண்டு செய்து ஒரு புஸ்தக ரூபமாகக் கொடுப்பது அநேகருக்கு உபயோகமாக விருக்கும். பொழுது போக்காக கதைகளை வாசிப்பவர்கள் இதை வாங்கி வைத்துக்கொண்டு படித்துவருவார்களானால், தங்களுடைய அறிவைப் பெருக்கிக்கொள்வார்கள், விலை ரூ. 4



# கோவர்த்தனன்: (ஒரு சிறு கதை)

## GOVARDHANA: (A SHORT STORY)

முன்னொருகாலத்தில் திருச்சினாப்பள்ளியில்கோவர்த்தனசெட்டி யென்றொரு கோமட்டியிருந்தான். அவன் மிகுந்தபணக்காரன். அவனுக்குத் திருச்சியிலேயே இரண்டு கடைகளும், பட்டணத்தில் ஒருகடையும், அக்கரைச் சீமைகளில் இரண்டு கடைகளோ அல்லது மூன்றோ (நிச்சயமாய்த் தெரியவில்லை) இருந்தன. இந்தக்கடைகளெல்லாம் அவனுக்கு வெகு நம்பிக்கையான கணக்குப்பிள்ளைகளைக்கொண்டு நடந்துவந்தன. இவன் அதிகமாகக் கடைகளுக்குக் கூடப் போவதில்லை. இவனுக்கு ஸங்கீதத்தில் மிகுந்த ப்ரமையுண்டு. அடிக்கடி மிகப் பெயர்போன வித்வான்களைத் தருவித்து கச்சேரிகள் வைப்பான். இவனும் ஸ்வல்பம் 'கைடார்' என்று பெயர்கொண்ட வீணை போன்ற ஒரு வாத்யத்தை அப்யஸித்திருந்தான். அவனுக்கு அநேகமாய் வேலையிருக்காது. எல்லா ஸமயங்களிலும் இந்த வாத்யம் அவன் பக்கத்திலேயே இருக்கும். அவனுக்கென்ன கவலை? ஸாகி, வெளியில் எங்கேயாவது போவதாகவிருந்தாலும் இந்த வாத்யமில்லாமல் போவது வழக்கமில்லை. இவனுடைய க்யாதி திருச்சினாப்பள்ளி ஜில்லாமுழுவதிலும் பரவியிருந்தது. இன்னும் பலவிடங்களிலும் அவன் பெயர் நன்றாகத்தெரியும்.

இவனுடைய தகப்பனார் நாட்களிலும் இவர்களுக்கு நல்லவ்யாபாரம் நடந்து வந்தது. ஆனால் அப்பொழுதெல்லாம் கோவர்த்தனசெட்டி நல்லபிள்ளையாகக் காணப்படவில்லை. தறுதலைப்பயல்களோடு சேர்ந்து தான்தோன்றியாய்த் திரிந்து கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு விவாகமாகி மனைவி வீட்டிற்கு வந்தது முதல் அவன் மாதிரி ஆச்சர்யப் படும்படியாக மாறுதலடைந்தது. அதைக்கண்ட தகப்பனே மிகுந்த ஆச்சர்யமடைந்தான்.

கோவர்த்தன செட்டியின் மனைவியின் பெயர் **கோமதியம்மகாரு**. அந்த அம்மாளும் ஒரு பெரிய கௌரவமான வம்சத்தில் பிறந்தவள்தான். அவளுக்குத் தன் கணவனிடத்தில் ப்ராண ப்ரியம். அப்படியேதான் செட்டியாருக்கும் அவளிடத்தில். இவ்விதம் குறையொன்றையுமறியாது அவர்கள் ஆநந்தமாய்க் காலக்ஷேபம் செய்து வந்தார்கள்.

இப்படி யிருக்கையில், வீட்டிலிருந்த பசுமாடுகளெல்லாம் வற்றிப்போய் விட்டபடியால், மணற்பாறைச் சந்தைக்குப்போய் ஒரு ஜோடி கறவை மாடுகள் வாங்கிக்கொண்டு வரவேண்டு மென்று தீர்மானம் செய்யப்பட்டது. செட்டியாருக்கு மாட்டுப் பரீக்ஷை நன்றாகத் தெரியும். தான் நேராடிப் போகாமல், யார் மாடு வாங்கிவந்தாலும் அவருக்குத் திருப்திப்படுகிறதில்லை. அவர் வாங்கி வந்தாலும், பிறரொருவரும் அந்த மாட்டின் விஷயமாய் 'அப்பழுக்கு' சொல்லமுடியாது.



ஒருநாள் காலையி லெழுந்திருந்ததும் தான் மணற்பாறைக்கு அன்று போவதாக எண்ணி யிருப்பதாக செட்டியார் மனைவியிடம் சொல்லி அதற்கு வேண்டிய ஆயத்தம் செய்யும்படி சொன்னார். ஒருநாளும் அவர் சொல்லுவதைத் தடுத்து சொல்லாத கோமதியம்மகாரு அன்றைக்கு, "இன்றைக்கு வேண்டாமே! இன்னொரு நாள் போகலாமே!" என்று மிகவும் அஞ்சின குரலில் பதில் சொன்னாள்.

"அதென்ன! புதிதாயிருக்கிறது! இன்றைக்கென்ன! ஏனின்று போகக்கூடாது! இன்னொரு நாளில் என்ன விசேஷம்?" என்று சிரித்துக் கொண்டே செட்டியார் கேட்டார்.

"ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை—" என்று சொல்லுவதற்கு வராமல் இழுத்துக் கொண்டிருக்கும் போதே,

"ஒன்றுமில்லாததற்காகவா இன்றைக்குப் போக வேண்டாமென்கிறாய்? சும்மா சொல்லேன்! ஏன் உடம்பு உனக்குப் பதருகிறது?" என்று கேட்டார்.

அம்மாள் உடம்பு, நிஜமாகவே பதறிக்கொண்டிருந்தது. செட்டியார் அம்மாள் கையைப்பிடித்துத் தன் பக்கமாக அவளையிழுத்து, முதுகில் தட்டிக்கொடுத்து "ஏன் பயப்படுகிறாய்? சும்மா சொல்லு" என்று தைர்யப்படுத்தினார்.

"இல்லை. ஒரு ஸ்வப்நம் கண்டேன். நீங்கள் வெளியே போனதாகவும், திரும்பி வரும்பொழுது உங்களுடைய தலைமயிர் நரைத்து, கிழவரானதாகவும் ஸ்வப்நம் விடியற்காலம். எனக்குப் பயமாயிருக்கிறது. இதுதான் வேறொன்றுமில்லை. ஏன்? இன்னொரு நாள் போனாலென்ன? இப்போது என்ன அவஸரம் வந்தது?" என்றாள்.

செட்டியார் "இடி, இடி" என்று சிரித்தார், 'அடே அசட்டுப்போக்கிரி! இதுதானா?! என்னமோவென்றெண்ணினேன். இந்த ஸ்வப்நத்திற்காகவா என்னைப் போகவேண்டாமென்று தடுக்கிறாய்? ஸ்வப்நத்திற்காக யாராவது பயப்படுவார்களா? அதைத்தான் நம்புவார்களா?" என்றார் செட்டியார்.

"நம்பலாமோ, நம்பவேண்டாமோ, அதெனக்குத் தெரியாது. அது ஒரு கெட்ட ஸ்வப்நம். அதுதான் எனக்குத் தெரியும். அப்புறம் உங்கள் இஷ்டம்" என்று வெறுப்புடன் சொன்ன மனைவியை நோக்கி "அது கெட்ட ஸ்வப்நமல்ல. நான் வரும்போது நல்ல கெட்டீற்று மாடொன்று வாங்கிக்கொண்டு வருவேனென்பதற் கடையாளம். நீ கவலைப்படாதே" என்று ஸமாதானம் சொல்லிவிட்டு ப்ரயாணமானார்.

ரெயில் ஸ்டேஷனில்போய் டிக்கெட் வாங்கிக்கொண்டு இரண்டாவது 'க்ளாஸ்' வண்டியில் ஏறும்பொழுது இன்னும் யரோ ஒரு வ்யாபாரி இவர் ஏறின வண்டிக்கே வந்து சேர்ந்தான். அவனும் மணற்பாறைக்கே வருவதாகவும் தனக்கும் வண்டிமாடு ஒரு ஜோடி மேற்கத்தி மாடு வாங்கவேண்டுமென்றும் சொன்னான். இருவர்களும் சீக்கிரம் நேசர்களானார்கள். வேடிக்கையாகப் பேசிக்கொண்டே போகை

யில் ரெயில் வண்டித்தொடர் மணற்பாறை ஸ்டேஷன் வந்து சேர்ந்தது.

இரண்டு வியாபாரிகளும் வண்டியை விட்டு இறங்கி ஆஹாரம் செய்து கொண்டு, சந்தைக்குப் போனார்கள். கோவர்த்தன செட்டியாருக்கு அவரிஷ்டப்படி மாடுகிடைத்தது. மற்றவியாபாரிக்கும் முதல் தரமான ஜோடிமாடு இவரேவாங்கிக்கொடுத்தார். பிறகு இருவருமாக ஊருக்குள் வந்து ஆகாராதிகளைச் செய்து கொண்டு, ரெயில்வேஸ்டேஷனுக்கு ஸமீபத்திலுள்ள விடுதியில் வந்து படுத்துக் கொண்டார்கள். இவர்களோடு இரண்டு வேலைக்காரர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் வசம் மாடுகள் ஒப்புவிக்கப்பட்டன. அவர்களும் ஊருக்கு கால் நடையாகவே ப்ரயாண மானார்கள்.

இங்கே விடுதியில் படுத்துக் கொண்டிருந்த வியாபாரிகள் வெகு நேரம் வரை பேசிக்கொண்டிருந்தார்கள். புதிதாக வந்து சேர்ந்த வியாபாரி, இரத்ந வியாபாரி யென்றும், அவர் ரத்நங்கள் வாங்குவதற்கு பட்டணம்போவதாகவும் கோவர்த்தன செட்டியார் தெரிந்து கொண்டார். ஆகவே, தாம் விடியற் காலையிலேயே புறப்பட்டு திருச்சினப்பள்ளி போவதாகவும், திருச்சிக்கு வந்தால் அவர் தம்வீட்டிற்கு அவசியம் வரவேண்டு மென்றும் சொன்னார். பயணமும் சொல்லிக்கொண்டார். பிறகு இருவரும் படுத்துத் தூங்கினார்கள்.

கோவர்த்தன செட்டியார் காலா காலையில்எழுந்திருந்தார். தூங்கிக் கொண்டிருந்தவரை எழுப்புவானேனென்று எண்ணி, தன்னுடைய ஸாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டு ரெயில் ஸ்டேஷனுக்கு புறப்பட்டார். இவர் வந்துசேர்ந்ததும் ஸ்டேஷனுக்கு வண்டியும் வந்து சேர்ந்தது. டிக்கெட்டை வாங்கிக்கொண்டு, வண்டியிலேறினார். வண்டியும் புறப்பட்டுவிட்டது.

திருச்சி வந்துசேர்ந்ததும் அங்குள்ள 'ரிப்ரெஷ்மெண்டு ரூம்' இல் புகுந்து காலைப்போஜனம் செய்தார். அங்கு இவருக்குப் பழக்கமான அநேகர் அவரைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு வீட்டுக்குப் போகலா மென்று ஒரு கோச் வண்டிக்காரனை யழைத்து வாடகைபேசி, வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டிக்காரன் சவுக்கை குதிரைமேல் போட்டு, ஓட்டினான்.

இந்த ஸமயத்தில் ரெயில் ஸ்டேஷனிலிருந்து ஒரு ஹெட்கான்ஸ்டேபிளும் இரண்டு ஸாதாரண ஜவான்களும் வெளியே வேகமாய் வந்தார்கள். ஜவான்களிலொருவன், வண்டிக்காரனைக் கூவி, வண்டியை நிறுத்தச்சொன்னான். வண்டி நிறுத்தப்பட்டது. ஹெட்கான்ஸ்டேபிள் வண்டியின் ஸமீபம் வந்துநின்றான். அவன் திருச்சினப்பள்ளியைச் சேர்ந்தவனல்ல. அவனைப்பார்த்து, கோவர்த்தன செட்டியார் "என்ன விசேஷம்? என் வண்டியை நிறுத்தச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"தாங்கள் மணற்பாறையில்தானே ரயிலேறினீர்கள்?"

"ஆம். அதற்கென்ன?"

"நேற்றிரவு மணற்பாறையில் தங்கியிருந்தீர்களல்லவா? எங்கு தங்கி யிருந்தீர்கள்?"

"ஸ்டேஷனுக்கடுத்த விடுதியிலேதான். என்? பெரிய திருடன் திருடனை விசாரிக்கிறதுபோல் க்ராஸ் (Cross) செய்கிறீர்களே?"

"திருடனுக்கு மேலல்லவா இருக்கிறது. நீர் தனியாக விருந்தீரா, அல்லது வேறு யாராவது உம்முடன் கூடத் தங்கி யிருந்தார்களா?"

"பட்டணத்திற்குப் போகவேண்டிய ஒருரத்நவியாபாரி அங்குவந்திருந்தார். நேற்றுத்தான் எங்களிருவருக்கும் நேசமுண்டாயிற்று. அவருக்கு ஒரு ஜோடி மாடு கூட நேற்று வாங்கிக்கொடுத்தேன்"

"நீர் வாங்கிக் கொடுக்க மாட்டீரா? காலையில் நீர் புறப்பட்டு வரும்பொழுது அந்தவியாபாரியிடம் சொல்லிக்கொண்டு வந்தீரா?"

"இல்லை"

"ஏன்?"

"அவர் தூங்கிக்கொண்டிருந்தார். அவரை யெழுப்ப வேண்டாமென்று நான் அவரிடம் சொல்லிக் கொள்ளவில்லை. நேற்றிரவே பயணம் சொல்லிக் கொண்டாகிவிட்டது."

"வாஸ்தவம். அவரும் நேற்றிரவே பயணம்போய் விட்டார். வேறொன்றும் தெரியாதா உமக்கு?"

செட்டியாருக்கிப்பொழுது கொஞ்சம் பரபரப்புண்டாயிற்று. என்னவோ பயங்கரமான கார்யம நடந்து போயிருக்குமோவென்ற ஸந்தேஹம் திடீரென்று உதித்தது. "ஏனய்யா? என்ன விசேஷம்? எதற்காக இதெல்லாம் விசாரிக்கிறீர்கள்?" என்று பரபரப்புடன் செட்டியார் கேட்டார்.

"என்ன விசேஷம்? உமக்குத் தெரியாமலா விசேஷம்? அந்த வ்யாபாரியின் கழுத்து அறுக்கப்பட்டு இரண்டு துண்டாய்க்கிடக்கிறது. உம்மையும் அவரையும் தவிர அங்கு வேறொருவரும் நேற்றிரவில்லை. அப்படியானால் அவரை யார் கொலை செய்திருக்க வேண்டும்?" என்று வெகு சாந்தமாகவும், அழுத்தந் திருத்தமாகவுஞ் சொன்னான் போலீஸ் தலைவன்.

கோவர்த்தன செட்டியாருக்கு அவன் சொன்னதில் பின்பாகம் காதில் விழவேயில்லை "அடாடா! வெகு நல்ல செட்டியாராச்சுதே! அவரை யார் கொன்றிருப்பார்கள்?" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு, வ்யஸனித்துக் கண்ணீர் விட்டார்.

போலீஸ் தலைவன் "பலே ஆள் செட்டியார், டே. 113, அந்த 'ரெயில் பாக்'கை எடு" என்று கடுமையாய்ச் சொன்னான்.

செட்டியார் "ஐயையா! என் ரயில் பையை யெடுக்கவேண்டு மென்கிறாய்! என்னுத்தரவில்லாமல் அதை யொருவரு மெடுக்கக்கூடாது. அது என்னுடையது" என்றார்.



போலீஸ் தலைவன் "ஆம். கொலையாளியின் உத்திரவைக் கேட்டுக்கொண்டுதானே அவனுடைமைகளைப் பரிசோதிப்பது! எடடா அந்தப்பையை யென்கிறேன்" என்று கர்ஜித்தான் செட்டியார் தடுத்தார். போலீஸ் சேவகன் பலாத்காரமாய் எடுத்தான். செட்டியார் பலமாய் கோபித்துப் பேசுவதற் காரம்பித்தார். அதற்குள் கூட்டங்கூடிவிட்டது.

ரெயில்பையின் பூட்டையுடைக்கப் பார்த்தான். அதைத் திறந்து இருந்ததைப் பார்த்தார்கள். மேலாக வைக்கப்பட்டிருந்த உடையில் இரத்தத்துளிகள் காணப்பட்டன. இடது கைவிரல்கள் பதிக்கப்பட்டது போன்ற இரத்தக் குறிகளுமிருந்தன. அந்தத் துணியை வெளியே யெடுத்தெறியும்படி போலீஸ் தலைவன் உத்திரவு செய்தான் அதை வெளியே யெடுக்கவும் அதில் ஏதோ கனமாகவும் கடினமாகவுமொருபொருளிருந்ததாக அதையெடுத்த ஜவானுக்கு தோன்றியது. அதை உதறினான். அதிலிருந்து ஸுமார் எட்டங்குல நீளமுள்ளதும், தந்தப்பிடி போடப்பட்டதுமான மடக்குக்கத்தியொன்று கீழே விழுந்தது! அதையெடுத்தான் போலீஸ் தலைவன் கையில். மடக்கியிருந்த கத்தியை வெளியே யெடுத்தான். அதில் ரக்தம் காய்ந்து ஒட்டிக்கொண்டிருந்தது! அடியிலிருந்த துணியிலும் ரக்தக்குறிகள் காணப்பட்டன.

"இது யாருடைய கத்தி ஐயா?"

தன்னுடைய ரெயில்பையிலிருந்து கத்தியெடுக்கப்பட்டதையும், அது ரக்தத்தால் பூசப்பட்டிருப்பதையுங்கண்ட செட்டியாருக்கு திக்ப்ரமையுண்டாயிற்று. அவர் ஒன்றும் பேசவில்லை. விழித்தார்.

"இந்தக் கத்தியில் ரக்தம் எப்படி வந்தது? இது ஏன் உம்முடைய பைக்குள்ளிருக்கிறது?"

செட்டியார் என்னமோ சொல்லவந்தார். ஒன்றும் சொல்லமுடியவில்லை. "எ—எ—எனக்குத் தெரியா—து" என்று தட்டித்தடவிச் சொல்லிமுடித்தார்.

அவருடைய மூட்டைகளைப் பரிசோதித்ததில், 20,000 ரூபாய்க்கு நோட்டுகள் எடுக்கப்பட்டன

போலீஸ் தலைவன் செட்டியாரைப்பார்த்து "இனி யொளிப்பதி லொன்றும் ப்ரயோஜனமில்லை. நீங்களிரண்டு பெயருந்தான் அந்த விடுதியில் இறங்கியிருந்தீர்கள். உள்புறமாக நீங்கள் தாளிட்டுக் கொண்டிருந்ததாகவும் தெரியவருகிறது இன்றைக் காலையில் அந்த வ்யாபாரி கொலையுண்டுகிடக்கிறான். அவன் மூட்டை யவிழ்ந்துகிடக்கிறது. அவனுடைய கழுத்தோ கத்தியாலறுக்கப் பட்டிருக்கிறது. வெகு கூர்மையான கத்தி. அப்படிப்பட்ட கத்தி இதோ உம்முடைய பைக்குள்ளிருக்கிறது. அவருடைய கைக் கணக்குப் புஸ்தகத்திலிருந்து இருபதினாயிரம் ரூபாய் மிச்சம் அவர் கையிலிருந்ததாகத் தெரியவருகிறது. இதோ அந்தத் தொகை அப்படியே உம்முடைய பையிலிருக்கிறது. இனி மறைக்காதே உள்ளதைச் சொல்லிவிடு" என்றான்.

(இக்கதை அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

# CHILDRENS' & LADIES' PAGES

## அறுவர் ஸேவகர்

முன் காலத்தில் ஒருராணி இருந்தாள். அவள் ஒரு மந்திரவாதி. அவளுக்கு அழகு மிகுந்த ஒருபெண் இருந்தாள். அவ்விராணியின் எண்ணம், இப்பெண் மூலமாக எல்லாரையும் தன் வலைக்குள் சிக்கும்படிச் செய்து அவர்களைக் கொல்லவேண்டும் என்பதுதான். எவனாவது ஒருவன் அப்பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதற்காக வந்தால், எதாவது அவனால் செய்ய முடியாத கார்யத்தைச்செய்யச்சொல்லி அவன் செய்யாமற்போவதால் அவனைக் கொல்வது வழக்கம். அநேகம் பேர்கள் இப்பாழும் பெண்மேல் மோகங்கொண்டு உயிரை விட்டார்கள். அவ்விராணிபால் ஏவப்பட்ட கார்யத்தைச் செய்ய முடியாது தலை குனிந்து கத்திக்கு இரையான பேர்கள் அநேகர்.

நிற்க, இப்பெண்ணுடைய அழகைக்கேட்ட ஓர் இளவரசன், தன்னை அனுப்பி அப்பெண்ணைக் கல்யாணம் செய்துவர விடைகொடுக்க வேண்டும் என்று தன் தந்தையைக்கேட்டான். 'நீபோனால் வருவதேது? அதுகிடையாது. உன் உயிர்போவது நிச்சயம். ஆகையால் நீ போக முடியாது' என்று தடுத்து விட்டான் அவன் தந்தை. ராஜகுமாரன் மனோவியாதி பிடித்தவனானான் வரவரவியாதி அதிகமானது. எல்லாவைத்தியர்களும் தீராதுஎன்று கைவிட்டுவிட்டார்கள். கடைசியாக தகப்பன் தன்மகனை அந்த ராஜகன்னிகையைப் போய் மணந்துவர உத்தரவு கொடுத்தான். இதனாலாவது அவன் ஒரு வேளை பிழைப்பான் என்று அவன் எண்ணம்.

சொல்லிய தொன்றுதான்; ராஜகுமாரனுக்கு முன் போல பலம் வந்துவிட்டது. பிராயணத்திற்கு ஸந்நத்தனாகிப் புறப்பட்டான்.

வரும் வழியில் வைக்கோல் போர்போல, ஒரு பெரிய வண்ணான் சாலைப்போல ஒன்றைப் பார்த்தான். நெருங்கி வந்து பார்த்ததும் அது ஒருவனுடைய வயிறாகத் தெரிந்தது. அந்த வயிற்றை உடையவன் கை கால்களைக் கிளப்பிக்கொண்டு கீழ்ப்படுத்து இருந்தான். அவன் குதிரைமேல் வந்த ராஜகுமாரனைப் பார்த்து 'என்னை ஸேவகனாக அமைத்துக் கொள்ள விருப்பமிருந்தால் அமைத்துக் கொள்' என்றான். 'உன்னால் எனக்கென்ன பிரயோஜனம்?' என்று அரசன் மகன் கேட்க "ஒன்றுமில்லை. நான் விரும்பினால் இன்னமும் என் வயிற்றைப் பெரிதாக்கிக் கொள்ளக்கூடும்" என்றான். 'அப்படியானால் ஸரி. நீ என் எண்ணத்திற்கு உதவி ஆவாய் என்று தோன்றுகிறது. வா' என்று அரசன் மகனும் கூறினான்.

இவ்விருவரும் கொஞ்ச தூரம் சென்றார்கள். அங்கு ஒருவன் தன் காதைப் பூமிமேல் அமுக்கிக்கொண்டு உடம்பை நீட்டிக்கொண்டிருந்தான். அவனை 'நீ

என்ன செய்கிறாய்' என்று ராஜகுமாரன் கேட்டான். "நான் உலகத்தில் நடப்பதை எல்லாம் உற்றுக்கேட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்குக் காது மிக நுட்பம். புல் முளைப்பதின் சப்தம் கூட என் காதிற்குப் புலப்படும். என்காதில் புலப்படாத சப்தம் கிடையா" சென்றான். 'ஆனால் அந்த மந்திரவாதியாகிய இராணியின் மனையில் என்ன நடக்கிறது?' என்று கேட்டான். 'அதோ கத்தி ஒச்சுதலின் சப்தம் என் காதில் விழுகிறது. இதோ அந்தப் பாழும் அரசனது தலையை வாங்கத் தீட்டும் கத்தியின் ஓசையும் என் காதில் விழுகிறது.' 'நீ என்னோடு வா. உன்னால் எனக்குப் பிரயோஜனம் இருக்கும்' என்று அரசன் கூற மூவரும் வழி நடந்தார்கள்.

கொஞ்சதூரம் சென்றதும் ஓர் மனிதனது பாதமிரண்டும் மாத்ரம் தெரிந்தன. கணைக்கால்களும் தெரிந்தன. மற்ற பாகங்கள் தெரியவில்லை. நெடுந்தூரம் சென்றபின்பு அவன் உடம்பைக் கண்டார்கள்; அவன் தலையையும் கண்டார்கள். அவனைப்பார்த்து "எவ்வளவு நெட்டையன் ஐயா நீ! நெடியவன் போல்வளர்ந்திருக்கிறாய்" என்று அரசன் சொன்னான். "இன்னும் நான் நீளுவேன். ஆனால் இதிலும் பலமடங்கு நீட்சி அடைவேன். நெடிய மலைகளையும் கடந்து வளர்வேன். எனது விசுவரூபம் மிகவும் நீண்டது. என்னை உம்மிடத்தில் அமைத்துக்கொண்டால் உமக்கு நன்றாக உழைத்து உதவி ஆவேன்' என்றான். "ஆனால் என்னோடு வா. உன்னால் எனக்குப் பிரயோஜனமிருக்கலாம்' என்று அரசன் மகன் கூற நால்வரும் வழி நடந்தார்கள்.

இவ்வாறு நடப்பவர்கள் வழியில் ஒருவன் கண்களைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து இருப்பதைக் கண்டார்கள். அரசன் மகன் 'உனக்கு என்ன கண் ஊனமா? வெளிச்சத்தைக் காணக் கண் கூசுகிறதா என்ன?' என்று கேட்டான். 'அப்படி அல்ல ஐயா. எனக்கு விசித்ரமான கண்கள் உண்டு. அவற்றின் பார்வைக்குள் பட்டவைகள் எல்லாம் நாசமடைகின்றன. ஆனால் பரமசிவன் கண்போல் எல்லாவற்றையும் எரிக்காவிட்டாலும் சுக்கல் சுக்கலாக பொடிபடச் செய்கின்றன. ஆகையால்தான் கண்களைக்கட்டி வாழ்கிறேன். இத்தகைய வரங்கொண்ட யான் உமக்குப் பிரயோஜனப்படுவேன். ஆகையால் என்னைத் தாங்கள் அமைத்துக்கொள்ளலாம்' என்றான். 'ஆனால் வா. உன்னால் பிரயோஜனம் இருந்தாலும் இருக்கும்' என்று அரசகுமாரன் சொல்ல ஐவரும் நடந்தார்கள்.

கொஞ்சதூரம் சென்றதும் நடுமத்யான வேளையில் உக்ரமாகச் சூர்யன் எரிக்கவும் அதனிடை ஒருவன் உட்கார்ந்து உடல் நடுங்குவதைக்கண்டு அரசச் சிறுவன் 'உங்களுக் கென்ன உடம்பு? இவ்வாறு உடம்பு குளிர்ந்துகூசக் காரணம் என்ன?' என்று கேட்டான். எனக்கெல்லாம் தலைகீழ்; கொடும்பனி கல நெருப்பாக வீசும். கடும் வெயில் பனிபோல் ஜ்வலிக்கிறது, பனியின் நடுவில்பட்டடால் உயிர்பொறுக்க முடியாது அலையவேண்டிவருகிறது. அக்நிகுண்டத்திடை என்னை எரிந்தால் குளிர்ச்சியால் இன்னது செய்வதென்று தெரியாது மயங்க வேண்டிவரும்' என்றான். "நீ மிக்க ஆச்சரியமான மனிதன். உனக்கு விருப்பமிருக்குமானால் எனது வேலைக்காரனாக என்னோடுவா?" என்று அரசன் மகன்கேட்க அறுவரும் நடந்தார்கள்.

போகும் வழியில் கழுத்து நீண்டு ஒருவன் கண் கொட்டாது மலைச்சிகரமுதல் எல்லாவற்றையும் நோக்குவதைக் கண்ட இளவரசன் "எதை நீ அப்படி இமையாது பார்க்கிறாய்" என்று அவனைக் கேட்டான். 'என் கண் மிகக் கூர்மையானவை. அவை எங்கு இருக்கும் வஸ்துக்களையும் நிதானித்து அறியும் சக்தியுடையன. காட்டிலாவது, மலையிலாவது, வயலிலோ, வீட்டிலோ எங்கிருந்தாலும் கண்டு அறியும் பெருமை வாய்ந்தன' என்றான். 'இதுவும் அதிசயம் தான். உன்னைவிட்டு நான் போகலாகாது. என்னோடுவா' என்று அரசன் மகன் கூற எழுபேர்களும் அப்பாழும் ராணியின் நாட்டை நாடிநடந்தார்கள்.

காடும் மலையும் கடந்து, ஆறுகளையும் கழனிகளையும் தாண்டி, அவ்வேழு பேர்களும் அப்பாழும் ராணியின் நாட்டை அடைந்தார்கள். அரச இளங்குமாரனும் அந்த ராணியின் முன்போய் "உன் பெண்ணை எனக்கு மனைவியாக்க விருப்பமிருந்தால் நீ எதைக் கேட்டாலும் செய்வேன்" என்றான். தன் சத்திக்குக்கொழுத்த இரை கிடைத்ததென்று மிக ஆவலோடு அந்த ராணியும் "நீ பெருங்காரியங்கள் மூன்று செய்ய வேண்டும். அவைகளை நான் இனிச் சொல்வேன். அவைகளைச் செய்து விட்டால் என் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளலாம்" என்றாள்.

'அதில் முதலாவது என்ன?'

'துவர்க்கடலில் யான் வீழவிட்ட எனது கணையாழியை எடுத்து வரவேண்டியதுதான்.'

அரசகுமாரன் தன் இருப்பிடம் சென்று தனது ஸேவகர் அறுவரிடத்தில் இதைச் சொன்னான்.

நெடுங்கழுத்தான் 'நான் அம்மோதிரம் இருக்கும் இடத்தைக் காண்பேன்' என்றான். பார்த்து 'அது ஒரு கூரிய கல்லில் அகப்பட்டு தொங்கிக் கொண்டு இருக்கிறது' என்றும் சொன்னான். கால் நீண்டவன் நான் அதைப்பார்த்தால் எடுத்து விடுவேன்?" என்றான்.

"ஆனால் ஸரி நான் உதவி செய்யக் கூடும்' என்று சொல்லிக்கொண்டு பெரு வயற்றன் தன்வாயை வைத்து அக்கடல் நீர் முழுவதையும் உறிஞ்சி அகஸ்தியன்போல் தன் வயிற்றுக்கிரையாக்கினான். அப்பொழுது அக்கடல் முழுதும் வெளியாக்கப்பட்டதால் நீண்டவன் அக்கணையாழியை அரசன் மகனிடம் கொடுக்க அவனும் அதை ராணியிடம் தந்தான்.

திக்ப்ரமையடைந்த அந்தராணி 'ஒருகாரியம் ஆகியது. இனி இரண்டாவது 'என் அரண்மனைக் கெதி



ரில் வயலில் மேய்ந்துகொண்டிருக்கும் அந்த முந்நூறு யானைகளையும், மயிர் நகம், எலும்பு என்று கழிக்காமல் முழுதும் விழுங்கவேண்டியது. எதிரில் இருக்கும் ஓடையின் நீரையும் உரிந்து அதைக் காலி செய்யவும் வேண்டும்' என்றாள்.

'நான் ஒருவனாகவா செய்யவேண்டும்? அல்லது அதிதிகளோடு உண்ணலாமா?' என்று அரசன் எதிர்மொழிந்தான்.

'நீ ஒருவனை மாத்திரம் உனக்கு விருந்தாக உடன்கொண்டு உண்ணலாம்' என்றவள் மறுமொழி கூறினாள்.

ராஜகுமாரனும் பெருவயிற்றனைக் கூப்பிட்டு 'இன்று உனக்கு நான் விருந்திடுகிறேன். நீ சென்று எதிர் இருக்கும் முந்நூறு யானைகளையும் மயிர் நகம் எலும்பு என்று கழிக்காது விழுங்கவேண்டியது"என்றான். அவனும் அவ்வாறே சென்று குண்டோதரன்போல்யாவற்றையும் விழுங்கி"இன்னும் என்பசி யடங்கவில்லை" என்று மேலும் கேட்டான். 'ஆனால் எதிரிலிருக்கும் ஓடையின் நீரை உறிஞ்சி அதை வற்றிவிடும்படிச் செய்' என அவனுமப்படியே செய்தான்.

இவைகளை உணர்ந்த ராணியும் ராஜகுமாரனைப் பார்த்து'இதுவரை நீ யாரும் செய்யாதகாரியங்களைச் செய்தாய். ஆனாலும் இம் மூன்றாவது மிகக்கஷ்டமானது. இது உன் உயிரைக் கூட வாங்கிவிடலாம்?' என்று கூறி 'இன்று மாலை என்பெண்ணை உன் அறையில் வரச்செய்கிறேன். அவளை வெளியில்போகவொட்டாமல் நீ காக்க வேண்டியது. ஆனால் ஜாக்ரதை! நான் இரவு நடுஜாமப்பொழுதில் வருவேன். அப்பொழுது அவள் அங்கு இல்லாதிருப்பாளானால் உன் உயிரை விடவேண்டியதுதான்" என்றாள்.

ராஜபுத்ரனும் 'இது இன்பத்தைத் தரக்கூடியதாயினும் இதில் ஏதோ ஆழ்ந்த எண்ணம் இருக்கிறது' என்று எண்ணித் தனது ஸேவகரிடம் ரஹஸ்யத்தைச் சொன்னான். "ஜாக்ரதை! இதில்என்னவிபரீதம் இருக்குமோ தெரியாது! அந்த ராஜகுமாரி என்னை விட்டுப்போகாதிருக்கும்படி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்' என்றும் அதட்டினான்.

மாலையானதும் ராணி தனதுமகளை அரசன்மகனது அறைக்கு அனுப்பினாள். அரசனும் அவளைவிடாமல் காத்துத் தடுத்துக்கொண்டிருந்தான். கால் நீண்டவனும் தனது காலால் அவ்விருவரையும் பிணைந்து பந்தம் செய்து வைத்திருந்தான். இரவு பன்னிரண்டு நாழிகை இருக்கும். அப்பொழுது அப்பாழும் ராணி செய்த மாந்திரிகத்தால் எல்லாரும் தூங்க அப்பெண்ணைக் கவர்ந்து போனாள். நடு ஜாமத்திற்கு ஒரு நாழிகை இருக்கும். எல்லாரும் விழித்துக்கொண்டார்கள். அரசனது கவலையைக்கண்ட ஸேவகர்கள் வ்யாகூலமடைந்து கையைப் பிசைந்துகொண்டிருந்தார்கள். இதற்குள் காது கூர்மையன் 'சும்மா இருங்கள், நான் சற்று கவனிக்கிறேன்' என்றான்.

அவன் காது கொடுத்துக்கேட்டு அவள் நூறு யோஜனைக்கு அப்பால் ஓர் பாறையுள் அடைப்பட்டு தன் விதியை நினைத்து புலம்புகிறாள்' என்றான். மேலும் கால் நீண்டவனை நோக்கி 'நீதான் அவளை எடுத்து வரவேண்டும்' என, அவன் 'அப்பாறையை பொடிக்க அக் கண்மூடியும் வேண்டும்" என்றான். கண்மூடி கண் திறப்பதற்குள், ஓர் இமைப்பொழுதில், கைக்கொடிப்பதற்குள்ளாக அக்கண்மூடியுடன் சென்று அவன் கண்ணை மூடிவிட்டு ராஜகுமாரியை எடுத்து வந்து நடுஜாமம் வருவதற்குமுன் அரசனிடம் ஒப்பிவித்தான்.

ராணியும் 'இனி அந்தப் பயல் என் கத்திக்கே இரை' என்று எண்ணி எண்ணி மிகுந்த ஸந்தோஷத்துடன் ராஜகுமாரன் இருக்கும் அறையுள் வந்தாள். அறையுள் வந்ததும் அவள் நெஞ்சம் கலங்கினாள். தன்பெண்ணை அக்குமாரனுக்கு கொடுத்தே தீரவேண்டியதாயிற்று. ஆனாலும் தன் குமாரியின் காதில் 'சீ! வெட்கமில்லையா? உன் இஷ்டப்படி கணவனை அடையாமல் எவனையாவது மணப்பதும் அவன் சொல்லியவிதம் நடப்பதும் உனக் கழகாகுமா?' என்று மெல்ல விழும்படி ஓதினாள்.

இதைக் கேட்டதும் அப்பெண்ணின் அகந்தை மேற்கிளம்பி ராஜகுமாரனைப் பார்த்து 'நீங்கள் மூன்று பெருங் காரியங்களைச் செய்தது பெரிதல்ல. இந்த அக்நிகுண்டத்தில் உங்களில் யாவரேனும் உட்கார்ந்து வெளிக்கிளம்பினாலன்றித் தங்களை நான் மணக்கேன்' என்றாள். இவ்வாறு சொல்லியது அரசனுக்காக ஸேவகர் உயிர்விடாராகையால்,ஆசையின் மிகுதியால் அரசன் மகன் உயிர்விடுவான் என்னும் எண்ணத்தோடுதான்.

இம்மொழியைக் கேட்ட ஸேவகர் 'நாம் எல்லாரும் நமது அரசனுக்குதவி செய்தோம். இவ்வுடல் நடுங்கி ஒருவன்தான் இதுவரை ஒன்றும் செய்யவில்லை. இப்பொழுது அவன் முறை' என்று அவனைக் கிளப்பி நெருப்பில் உட்காரச் செய்தார்கள். அது மூன்றுநாளாக மூவாயிரம் குண்டு கட்டைகளைத் தைலத்தில் தோய்த்து கொளுத்தப்பட்டது. அதன் மத்தியில் அவன் உட்கார்ந்து நடுங்கிக்கொண்டிருந்தான், கடைசியாக 'அப்பாடி! இந்த மாதிரியான மூடுபனியை நான் எங்கும் கண்டதில்லை! என்றும் கண்டதில்லை!' என்று கூவிக்கொண்டு வெளிவந்தான்.

ராஜகுமாரிக்கு வேறு வழியில்லை. ராஜகுமாரனையே மணக்கவேண்டி ஆய்விட்டது. கடைசியாக அப்பாழும் ராணி கல்யாண ஆரம்பத்தில் கிராமப்ரதக்ஷிணம் வரும்பொழுது, தன் ஸேனைத்தலைவனைக் கூப்பிட்டு தன்பெண்ணை கவர்ந்துவரும்படிச் சொன்னான்..

இதை காது கூர்மையன் காது கொடுத்துக்கேட்டு நாம் இனி என்ன செய்வது' என்று பெரு வயிற்றனிடம் சொன்னான். அவனும் பெண்ணைக் கவர எதிர்த்து வந்த ஸேனையை தான் முன் உட்கொண்ட

உலர்ந்த உடலின் ஒருபகுதியைத் திருப்பி நீருள் அவர்கள் அமுக்கும்படிச் செய்தான். இதைக்கேட்ட ராணி தனது மூல பலத்திலிருந்து பெரும் சேனைகளையும் அனுப்பினாள். அவை அந்த கதியை அடைந்தன மேலும் மூலபலங்களையே அனுப்புக முடிய தனது கண்ணைத் திறந்து பார்க்க எல்லாம் சின்னபின்னமாகப் பொடிபட்டு அழிந்தன. வேறு வழி இல்லாமல் அந்த ராணி வியாகூலத்தால் இறந்தாள்.

அரசன் மகனும் ராஜகன்னிகையை மணந்தான். அந்த அரண்மனையை விட்டு சில வழி தூரம் சென்றதும் "நான் ராஜகுமாரன் அல்ல. பன்றியை மேய்க்குமோர் பறையன். அதோ எதிரில் அவன் மேய்ப்பதுபோல் நீயும் பன்றிகளை மேய்த்து என் தாய் தந்தைகளுக் குதவிசெய்ய வேண்டும். சீக்கிரம் வா. நீயும் நானும் சென்று அப்பன்றிகளுக்கு உணவு அளிக்க வேண்டும்' என்றான்.

வழியில் ஓர் ஸத்திரத்தில் இறங்கி அந்த ராஜகுமாரியைத் தனது அரசஉடையைக்கழற்றச் செய்து ஒரு பழம் புடவையையும் ரவிக்கையையும் அணியும்படி செய்து அந்த பன்றி மேய்ப்பவன் போல் அஞ்ஞாத வாஸம் செய்தான்.

ராஜகுமாரியும் தன் கணவன் சொல்லியது உண்மை என்று நம்பி, 'இக்கதி நமது அகந்தையால் நாமே நமக்கு உண்டாக்கிக் கொண்டது. யானை தன் தலையில் தானே மண்வாரி இறைத்துக் கொள்ளும் அல்லவா? எனக்கு வேண்டும், நன்றாய் வேண்டியதுதான்' என்று எண்ணிக்கொண்டு பன்றிமேய்க்கச் சென்றாள்.

இவ்வாறு ஏழல்லது எட்டு நாள் கடந்திருக்கும். அக்குமரிக்குக் காலில் முள்தைத்து, பல்பட்டு ரக்தம் சிந்த நடக்கமுடியாது "நான் இம்மாதிரி வேலை செய்ய இவ்வுடல் எத்தனை நாள் தாங்கும்" என்று ஏங்கினாள். இவ்வாறிருக்க, அங்கு சிலர் வந்து 'உன் கணவன் யார் உனக்குத் தெரியுமா?' என்றார்கள். 'என் கணவர் பன்றி மேய்ப்பவர்; இப்பொழுது நகரஞ் சென்று சந்தையில் பன்றியை விற்பனை செய்யச் சென்றிருக்கிறார்' என்றாள்.

'அப்படியா! எம்மோடு வாரும். உமது கணவரை நாங்கள் காட்டுவோம்?' என்றழைத்து நெடுதூரம் சென்று ஓர் அரண்மனைவாயிலிடம் வந்தார்கள். அங்கு ராஜ மந்திரத்தில் விசால வாயிலில் அரசன் மகன் தன் மனைவியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவள் வந்ததும் அவளை அன்போடணைத்தான். அவளுக்கிவன் யாரென்று புலப்படவில்லை. பின்னை ராஜகுமாரன் கைலாகவர் கொடுத்து 'உனக்காகப்பட்ட ச்ரமத்தில் கொஞ்சம் எனக்காக நீ இப்பொழுது பட்டாய்' என்று சொல்லி அழைத்து உபசரித்தான்.

பின் ஊரை அலங்கரித்து விதிபூர்வகமாக மணம் நடந்தது. தம்பதிகள் இருவரும் ஸுகமாக வாழ்ந்தார்கள். இன்னமும் வாழ்கிறார்கள். சுபமஸ்து.

# விசேஷக் குறிப்புகள்
## NEWS AND NOTES

**எம்டன் நாசமாக்கப்பட்டது:**—சிறிது காலமாய் ஜனங்களுக்கும், வியாபாரிகளுக்கும் பயத்தையும் நஷ்டத்தையும்உண்டு பண்ணிவந்த எம்டன் என்னும் ஜர்மானியக் கப்பல் சென்ற மாதம் 11-உ ஆஸ்ட்ரேலிய சண்டைக் கப்பல்களில் ஒன்றான ஸிட்னி என்னும் கப்பலால், பஸிபிக்ஸமுத்திரத்தில் ஜாவா தீவுக்கு தென்மேற்கே 700-மைலுக்கப்பாலுள்ள கோகோஸ் அல்லது கீலிங் தீவுக்கு ஸமீபத்தில், அவ்விடத்திலுள்ள கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷனை எம்டன் நாசப்படுத்த யத்தனித்துக் கொண்டிருக்கையில், கண்டுபிடிக்கப்பட்டு, அவ் இரு கப்பல்களுக்கும் யுத்தமுண்டாகி, எம்டன்தோற்று நாசமாக்கப்பட்டது. அதிலிருந்தவர்களில் 200 பேர்கள் மாண்டும், 30 பேர்கள் காயம்பட்டுமிருக்கிறார்கள். ஸிட்னி கப்பலைச் சேர்ந்தவர்களில் 3-பேர் மாண்டார்கள். 15 பேர்களுக்குக் காயம். எம்டன் தலைவரான காப்டன் வான் முல்லரும் ஜர்மன் சக்ரவர்த்தியின் சகோதரின் புத்திரரான பிரின்ஸ் ப்ரான்ஸ் ஜோஸப் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்: இவர்கள் காட்டின வீரத்தையும் சௌர்யத்தையும் உத்தேசித்து இவர்களை பிரிட்டிஷ் உத்யோகஸ்தர்கள் ஸகல மரியாதைகளுடனும் நடத்தி வருகிறார்கள்.

**ஆனரபில் மிஸ்டர் J. H. ஸ்டோன்.** சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் பிரின்ஸிபாலும், கல்வியிலாகா ஆக்டிங் டைரெக்டருமான ஆனரெபில் மிஸ்டர் J. H. ஸ்டோன், 1914ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 22தேதி முதல், கல்வியிலாகா டைரெக்டராகவும், கவர்ன்மெண்டு பரீட்சைகளுக்கு கம்மிஷனராகவும் நியமனம் பெற்றிருக்கிறார்.

**காஷ்மீரத்தில்கயிற்றிருப்புப்பாதை:**—கயிற்றிருப்புப்பாதை என்பதை நம்மவர் கேட்டிருக்கமாட்டார்கள். சாதாரண இருப்புப்பாதைகள் போடுவதற்கு வசதியில்லாமலும் ஆனால் போக்கு வரவுக்கு சாதனங்கள் அவசியம்இருப்பதாயும் உள்ள இடங்களில் உயர்ந்த ஸ்தம்பங்களை நாட்டி உறுதியான கம்பிகளை அவற்றுடன் பொருத்தி அதன் மூலமாய்த் தொட்டிகள் போன்றவண்டிகள் போகும்படியாய் ஓர் நூதன வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அத்தகைய இருப்புப்பாதை யொன்று காஷ்மீரத்து பள்ளத்தாக்கு நாட்டினின்று ஹிமாலயத்து மேலுள்ள பஞ்சாப் ஸமவெளிக்குக் கட்டப் போகிறார்களாம். அது கட்டி முடிந்தால் அதுவே உலகத்து கயிற்றிருப்புப்பாதைகளில் மிக்க நீளமுள்ளதாயிருக்கும்.

**ஸிட்னி.**—ஆஸ்ட்ரேலியாவின் யுத்தக்கப்பல்களில் ஒன்று. 5000 டன் பாரம்கொள்ளக் கூடியது. மணி ஒன்றுக்கு 16 மைல் தூரம் செல்லக்கூடியது. அதன் வெளிப்புறம் முழுமையும் கவசத்தால் பந்தோபஸ்து செய்யப்பட்டுள்ளது. அதேமாதிரி 'கவசமிடப்பட்ட வேறு இரண்டு க்ரூஸர் கப்பல்களும் ஒரு பெரிய ட்ரெட்னாட் கப்பலும் ஆஸ்ட்ரேலியாவுக்குசொந்தம்.

[விவேக போதினி' அனுபந்தம்.







PLEMENT TO THE "VIVEKA BODHINI"

SUPPLEMENT TO THE "VIVEKA BODHINI"]

['விவேக போதினி' அனுபந்தம்.]








# விவேக போதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்தவஸு கார்த்திகைமீ : 1914-வஸ டிசம்பர்மீ } பகுதி 6


## வேதாந்தத் திரட்டு

### VEDANTIC SELECTIONS

### 23. பக்தி வைராக்யம்

என்பெலா நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுட
  லிளகமன தழலின் மெழுகா
யிடையறா துருகவரு மழைபோ லிரங்கியே
  யிருவிழிக ணீரி றைப்ப
அன்பினன் மூர்ச்சித்த வன்பருக் கங்ஙனே
  யமிர்த சஞ்சீவி போல்வந்
தானந்த மழைபொழிவை யுள்ளன்பி லாதவெனை
  யார்க்காக வடிமை கொண்டாய்
புன்புலான் மயிர்தோ னரம்பென்பு மொய்த்திடு
  புலைக்குடிலி லருவ ருப்புப்
பொய்யல்ல வேயிதனை மெய்யென்று நம்பியென்
  புந்தி செலுமோ பாழிலே
துன்பமா யலையவோ வுலகநடை யையவொரு
  சொப்பனத் திலும்வேண் டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
  சோதியே சுகவா ரியே.

(சுகவாரி—4)

### 24. பக்தி விருத்தி

அரும்பொனே மணியேயெ னன்பேயெ னன்பான
  வறிவேயெ னறிவி லூறு
மானந்த வெள்ளமே யென்றென்று பாடினே
  னாடினே னாடி நாடி
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
  மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
  வேசற் றயர்ந்தே னியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னலுமெனை
  யிடைவிட்டு நின்ற துண்டோ
வென்றநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
  யாதேனு மறியா வெறுந்
துரும்பனே றென்னினுங் கைவிடுத னீதியோ
  தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
  சோதியே சுகவா ரியே.

(சுகவாரி—7)

### 25. பக்தி ஆராமை

பாராதி யண்டங்க ளத்தனையும் வைக்கின்ற
  பரவெளியி னுண்மை காட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றோய்ந்த
  பாவியேன் பரிசு காட்டித்
தாரா மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
  சதாகால நிஷ்டை யெனவே
சகசநிலை காட்டினை சுகாதீத நிலயந்
  தனைக்காட்ட நாள் செல்லுமோ
காரார வெண்ணரு மனந்தகோ டிகணின்று
  காலூன்றி மழைபொழிதல் போற்
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
  கம்மியா னந்த வெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே
  தொண்டரைக் கூவு முகிலே
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
  சோதியே சுகவா ரியே.

(சுகவாரி—8)

## CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தமிழ் | இங் | தமிழ் | வார | ஆநந்தஹூ மார்கழிமூ { சாலிசகம் 1836 கலியப்தம் 5015 } பசலி1324 கோல்லம்-1090 { 1914ஹூ டிசம்பர்மூ 1915ஹூ ஜனவரிமூ |
|---|---|---|---|---|---|
| ரபுகு | 26 | 15 | 1 | செ | திர 16-55, விசா 6-22, சுக 7-41, திரு 52-17, வணி 16-55, திவி 16-3, அக 28-25, சாபரவி 26-44, கே 2 புத 5-5, அவி 2 குரு 30-40, சாப ஷ சதுர்திதி ஷடசீதி மாசி தனுர்பூ ஆ சூன்யார்கம் [48-13, சர்வஅமா. |
| செசு | 27 | 16 மார்கழி | 2 | புத | சது 11-21, அனு 2-26, கே 56-28, சூல 48-43, சகு 11-21, திவி 15-37, மூல 2 செ 23-30, அனு 1 வக்சுக் |
| பு | 28 | 17 | 3 | வியா | ● அமா 6-13, மூல 55-56, கண் 45-47, நா 6-13, திவி 17-55, ரா 23-31, கே 3 புத 3-44, இஷ் பிண்ட ஹனும ஜ. |
| ரபு | 29 | 18 | 4 | வெ | பிர 1-43, திதி 56-6, பூரா 53-42, விர் 39-27, பவ 1-43, திவி 18-2, புஷ்ய சுத் மூல 2 ரவி 42-56, கே 4 பு 57-2 சங் த. |
|  | 1 | 19 | 5 | சனி | திரு 54-56, உத்தி 52-25, துரு 33-50, தை 26-22, திவி 13-16, அக 28-25, மழை 5-க்குள். |
| செபு | 2 | 20 | 6 | ஞா | சது 53-20, திரு 52-12, வியா 29-4, வணி 24-8, திவி 2-23, மூல 3 செ 40-51, சாபபுத 49-40, சது விரு சிர உப |
| ர | 3 | 21 | 7 | திங் | பஞ் 52-47, அவி 53-12, ஹர் 25-12, பவ 23-3, திவி 2-22, மூல 3 ரவி 59-8. [கரிநாள். |
| பு | டிசம்பர் 4 | 22 | 8 | செ | சஷ் 53-35, சத 55-24, வஜ் 22-20, கௌ 23-11, திவி 11-52, மூ 2 புத 43-37, சஷ் உப. |
| | 5 | 23 | 9 | புத | சப் 55-44, பூரட் 58-53, விதி 20-26, ர 24-39, திவி 12-20, அக 28-25, மகாய 37-0, சப் விரு வணசங்கரி ஆ-கரிநாள். |
| செபு | 6 | 24 | 10 | வியா | அஷ் 59-1, உத் 60-0, விய 19-31, பத் 27-22, திவி 21-45, மூல 4 செ 58-13, மூல 3 புத 37-8 தனுர் வியதிபாதம். |
| ரசு | 7 | 25 | 11 | வெ | நவ 60-0, உத் 3-33, வரி 19-24, பா 29-30, ரா 8-0, மூல 4 ரவி 16-16, சுக்ாவக்ரிய 40-7, கரிநாள். [அசௌக்யம் |
| பு | 8 | 26 | 12 | சனி | நவ 3-24, ரே 8-57, பரி 19-59, கௌ 3-24, தியா—0—0, மூல 4 புத 30-0, பனிபினால் சிலவிடங்களில் ஜனங்களுக்கு |
| சு | 9 | 27 | 13 | ஞா | தச 8-27, அசு 15-17, சிவ 21-3, கர 8-27, திவி 6-14, ரா 13-25, அக 28-25, அனு 2 ரிசுசுக் 35-52, கற்போட்டம் 45-0. [ஏகா கார் உப வைவத ம. |
| ரபு | 10 | 28 | 14 | திங் | ஏகா 13-44, பர 21-40, சித் 22-14, பத் 13-44, ரா 26-22, பூரா 1 ரவி 29-49, பூரா 1 புத 21-1, துவாதிதி சர்வ |
| செ | 11 | 29 | 15 | செ | துவா 18.55, ✻ கார் 27-55, சா 23-19, பா 18-55, தியா—0—0, பூரா 1 செ 16-5, அதிதி பிரதோ மழை 7-க்குள். |
| பு | 12 | 30 | 16 | புத | திர 23-45, ரோ 33-43, சுப 24-4, தை 23-45, திவி 10-41, ரா 20-27, பூரா 2 புத 12-37, திரயோதிதி. |
| ர | 13 | 31 | 17 | வியா | சது 27-38, மிரு 38-45, சுப் 24-14, வணி 27-38, தியா—0—0, அக 28-26, பூரா 2 ரவி 43-21. |
| பு | 14 | ஜனவரி 1 | 18 | வெ | ○ பௌ 30-31, திரு 42-42, பிரா 23-35, பவ 30-31, திவி 1-50, பூரா 3 புத 4-21, ஆருத்திரா தரிசனம் வனசங்கரி பார மா ஸ்நா ஆ. [புத 60-0, கும்பகுரு 30-43, இஷ்டி, |
| செபு குரு] | 15 | 2 | 19 | சனி | பிர 32 12, புன 45 29, மா 22-2, பா 1-21, திவி 14-5, புஷ்ய பகு பூரா 2 செ 34-0, பூரா 4 |
| ர | 16 | 3 | 20 | ஞா | துதி 32-34, பூச 46-59, வை 19-34, தை 2-23, திவி 5-59, பூரா 3 ரவி 1-0, வை சிரா. |
| பு | 17 | 4 | 21 | திங் | திரு 31-38, ஆயி 47-13, விஷ் 15-58, வணி 2-6, திவி 19 அக 28-27, உத் 1 புத 58-22, சங் ச. |
|  | 18 | 1915ஹூ 5 | 22 | செ | சது 29-33, மக 46-25, பிரி 11-29, பா 29-33, திவி 16-49, மழை 4-க்குள். |
| செபு சு] | 19 | 6 | 23 | புத | பஞ் 26-24, பூர 44-32, ஆயு 6-13, தை 26-24, திவி 5-17, பூரா 3 செ 50-49, மகரபுத 56-40 அனு 3 சுக் 27-13, பஞ்சமிதிதி. |
| ர | 20 | 7 | 24 | வியா | சஷ் 22-22, உத் 41-55, சௌ 0-6, சோ 53-20, வணி 22-22, திவி 1-45, பூரா 4 ரவி, 16-30, சஷ்டிதிதி. |
| பு | 21 | 8 | 25 | வெ | சப் 17-36, ஹஸ் 38-32, அதி 46-7, பவ 17-36, திவி 1-44, ரா 28-47, அக 28-30, உத் 3 புத 55-0, திதித்வயம் காளாஷ்டமி திஸ்ரோஷ்டகை. |
|  | 22 | 9 | 26 | சனி | அஷ் 12-18, சித் 34-47, சுக 28-34, கௌ 12-18, சே 1-17, ரா 19-20, நவமிதிதி, [சிவர் 15-0. |
| ரபு | 23 | 10 | 27 | ஞா | நவ 6-35, சுவா 30-43, திரு 30-44, கர 6 35, ரா 15-16, உத் 1 ரவி 32-3, பச்சாதுதய புத 55-7 கோர்போட்ட |
| செபு | 24 | 11 | 28 | திங் | தச 0-53, ஏகா 54-8, விச 26-41, சூ 22-58, பத் 0-53, ரா 7-30, பூரா 4 செ 8-41, உத் 4 புத 60-0, அனு 4 சு 2-0 |
| சு] | 25 | 12 | 29 | செ | துவா 49-27, அனு 22-41, கண் 15-12, சௌ 22-14, ரா 7-18, அச 28-32, வை ஏகா மழை 6-க்குள். [ஸ்மா ஏகா. |
| ரபு | 26 | 13 | 30 | புத | திர 44-22, கே 19-2, விர் 7-43, கர 16-54, ரா 9-28, மகரரவி 47-37, திரு 1 புத 12-45, சாப ஷ திரயோதிதி பிரதோ போகிப்பண்டிகை தனுர்பூஜை பூர் மாசி. |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| ராகு. | 6-சாப புத | | |
| | 19-கும் கு | | |
| குரு. | 23-மக பு | | கே |
| ரவி செ | புத சுக் | | |



# விவேக போதினி

தொ. 7] ஆனந்தஹூ கார்த்திகைமீ: [பகுதி. 6

## மோக்ஷ ஸோபாநம்

### THE STEPS TO THE GOAL

### 3. பக்தியோகம் (தொடர்ச்சி)

(6) ஈசனுடன் பக்தன் ஒருவித ஸம்பந்தத்தையும் ஏற்படுத்திக்கொள்ளாது இந்த பக்தி யோகம் நிகழ இடமே இல்லை. வெறும் விக்ரஹாராதனமும் பக்தி வெளிப்பாடும் மாத்திரம் போதாது. இதை உத்தேசித்து நோக்கில் தான், தத்காலத்திய பஜனைகள் காலக்ஷேபங்கள் எல்லாம் பக்தியோக ஸாதகமே யல்ல என்பது நன்கு வெளியாகும். இவைகளில் வைதிக கர்ம அநுதரவு, நீக்கம் இவைகள் இருக்கின்றன என்பது முக்யமாக ஸந்தியா கால கர்மானுஷ்டானங்களுக்குக் குறுக்கே இவைகள்வந்து தடைப்படுத்துகின்றன என்பதால் நன்கு விளங்கும். இதனாலேயே இவை யோகமாகக்கூடிய பக்திக்கு ஸாதனமல்ல என்பது வெளியாகும். இதுவுமன்றி நடத்தப்படும் விதம், நடத்தும் ஸபையோர் நோக்கம், நடத்துபவர் நடையுடை பாவனை, நிலை, தன்மை, இடம் இவைகளைச் சற்று நிதானித்து நோக்கில் முன்னர்கூறிய பரிதாப நிலை நன்கு விளங்கிவிடும். இந்த காலக்ஷேபாதிகளில் வந்து கலக்கும் ரஸபேதங்கள், பாட்டுக்களில் மயக்கும் சக்தி, அதைக்கண்டு மயங்கி ஈடுபட்டு பரபரப்புடன் அவைகளையே எதிர்பார்க்கும் ஸபையோர் சித்தம் எல்லாம் கேட்பவருக்கும் ஈசனுக்கும் ஏற்படக்கூடிய ஒரு ஸம்பந்தத்தையும் பிடித்து தரித்துநிற்கவொட்டாது தடுக்கும். நாரதர் பக்தி ஸூத்திரத்தில் பக்தி பதினொருவிதமாக நிகழலாம் என்று கூறியுள்ளார். இந்தக் காலக்ஷேபங்களில் ஒருவிதமாகக் கூட அதற்கு இடம் தாராது நம்மவர் ஏற்பாடு செய்து ஈடேறிவிட்டனர்! இந்த ஈச ஸம்பந்தம் ஒவ்வொருவன் மனதின் தன்மைக்குத் தகுந்தபடி ஏற்பட வேண்டியதாயினும், இந்த காலக்ஷேபாதிகளில் இந்த ஸம்பந்தங்களின் விவரம் நன்கு வெளியாகும்படி செய்து கொண்டிருந்தால் அப்யாஸிகள் பாமரர் எல்லோருக்கும் அநுகூலமாக விருக்கும். பதினொருவித ஸம்பந்தங்களுள் ஸ்திரீகளுக்கு ஈசனைத் தாயாகவாவது கணவனையே அந்தத் தாயான ஈசனது உருவமாகவும் கருதுவது தகும்: வைச்யாதிகள் ஈசனைத் தகப்பனாகவாவது, யஜமானனாகவாவது, கருதலாம். க்ஷத்ரியர்களும் ப்ராஹ்மணர்களும் பதினொரு விதத்தில் எந்த விதம் ருசிக்கிறதோ அப்படிக் கருதிப் பழகலாம். அதுபோல ப்ராஹ்மணருக்கு சிஷ்ய பாவத்துடன் ஈசனை பரம குருவாகக் கருதுவதே மிகச் சிறந்தது. க்ஷத்ரியர்களுக்கு ஸர்வேச்வரனாகக் கருதுவது மேல். ஆனால் எல்லோருக்கும் எல்லாவிதமும் பொதுவாயினும் முற்கூறியவை ஒருவாறு சிறப்பானவை. அவரவர்களை அவ்வவர் நிலைகளிலிருந்து ப்ராஹ்மண நிலைக்கும் ப்ராஹ்மணனை மோக்ஷத்திற்கும் ஏற்ற அந்த ஸம்பந்தங்கள் மிக முக்யமானவை. இம்மாதிரியான ஸம்பந்தங்களை அப்யாஸிகள் மனதில் மாறுது நிலைக்கும்படி செய்யும் தன்மை இல்லாத காலக்ஷேபம், நாடகம், கதை, பஜனைக் கூத்து

எதுவானாலும் ஸரி, பக்தியோக அங்கமே அல்ல. உள்ளபடி விருத்தி அடைந்து ஈடேற எண்ண முடையவன் இவைகளை விட்டு விலகி வைதிக மோக்ஷ ஸோபான மார்க்கத்தில் முயல வேண்டும். இவ்வாறு ஸத் விஷயங்களோடு கலந்து மாத்திரம் இருந்து மோக்ஷ ஸோபான க்ரம ஸித்திகளுடன் ஸம்பந்தப்படாத பல வழிகள் உண்டு, ஸந்மார்க்கத்தில் நடக்கவேண்டும் என்கிற ஆவலுடையவரில் பலர் இவைகளையே சதமென நம்பி இறங்கி விடுவர்: இவர்களுள் அபூர்வமாக சிலர் மாத்திரம் பக்தி உள்ளபடி ஸித்திபெற்று யோகமாக வேண்டும் என்ற எண்ணத்துடன் நேரான வைதிகமார்க்கத்தில் ஈசனுடன் ஏதாவது ஒரு வித ஸம்பந்தத்தில் நிஷ்காம்யமாக ஈடுபடுவர் என்பதைக் காட்டிவிடத்தான் பகவான் கீதை VII-ம் அத்யாயம் 3-ம் ச்லோகத்தில்:—

"ஆயிரவர்க் குள்ளொருவன் ஆரிய சித்திபெற
சேயமுடனே முயல்வன் நீணிலத்தில்"

என்று குறிப்பாகக் கூறியுள்ளார். ஈசன் விஷய ஸம்பந்தமிருந்தால்தான் பக்தியோகம் உள்ளபடி வரம்புள் அடங்கி வீண் மனக்கொதிப்பாக முடியாது நேரிட அடுத்தபடியாகிய ராஜ யோகத்திற்குக் கொண்டு சேர்க்கும் மோக்ஷ ஸோபானத்தின் இரண்டாம்படியாகும்.

(7) இந்த பக்தியோகம் இரண்டு பாகுபாடு உடையது. முதல் பாகத்தில் இது தழைத்து ஓங்கி மேல்படிக்குக் கொண்டு சேர்க்கத் தடையாக உள்ளன வாராதிருக்கவேண்டும் என்ற ஆவல் மிகுந்திருக்கும். இரண்டாவதில் இந்த ஆவல் அடங்கிக்கொண்டே வந்து கடவுளை தன் மனதிற்கு இசைந்த வைதிக உருவங்கள் மூலமாக தகுந்த ஸம்பந்தத்தை மானஸீகமாக ஏற்படுத்தி வழிபட்டு வருவதை முக்ய வாழ்க்கைத் தொழிலாகக்கொண்டு மற்றைய விஷயங்களை ஒரு பொருட்டாகவே மதியாத கம்பீர பாவம் பக்தன் மனதில் குடிகொண்டு வரும். இம்மாதிரியாக உள்ள பாஹ்ய அநந்ய பக்திகளில் இரண்டு பெரும் படுகுழிகள் உள. அவைகளுக்கு பக்தன் ஆளாகாதபடி தன்னைப் பாதுகாத்துக்கொண்டு பக்தியில் முதிர்ந்துவர முயலவேண்டும். பாஹ்ய பக்தியில் உள்ளபடுகுழி, கடவுள் நமது ஸுக ஸௌகர்யங்களை எல்லாம் ஸரிவரப் பார்த்து வருவார் என்ற இறுமாப்புத்தான். உலகப் பழக்கங்களில் ஏற்படக்கூடியதும் சிறிது ஸத்குண விசாலத்தால் அடக்கக் கூடியதுமான கஷ்ட விஷயங்களில் வரக்கூடிய மனப்பரப்பையும் பெரிய ஆபத்து எனக்கருதி அதிலும் கடவுள் வந்து ஸரிப்படுத்துவரென்று எதிர் பார்த்து தன் முயற்சியின்றி வீண் பொழுது போக்குவது, தனக்கு மாறாக நடந்தால் கடவுளைப் பழிப்பது, தனக்கு மாறாக நடத்துவோரை வைவது, அவர்கள் அழிந்து மண்ணாகப் போகவேண்டும் பக்தனைத் திண்டாட வைத்ததனால் என்று சபிப்பது, அப்படி நடத்திவிட வேண்டும் என்று கடவுளிடம் ஈடுபட்டு வருந்திக் கேட்டுக்கொள்வது, முதலிய கொடிய நிலைக்கு பக்தனை இந்த இறுமாப்புக் கொண்டுவந்து விட்டுவிடும். இது கிளம்பி தன்னயம் பெரிதாகிவிட்டால் யோகமாகக்கூடிய பக்தி வெறு மோஹக்கொதிப்பாகிக் கூடிய சீக்கிரத்தில் அவனை அதோகதிக்குக் கொண்டு போய்விடும், அவன் அஜாக்ரதையாக விருந்தால். உண்மையான பாஹ்ய பக்தி யோகிக்கு தனக்கு ஏற்படும் ஸுகதுக்காதிகளில் மனமிருக்கவேகூடாது: துக்கம் நீங்கிவிடவேண்டும்: அதை இயற்றுவோர் திண்டாடி அழிய வேண்டும்; ஸுகம் எப்படியாவது வந்து சேர வேண்டும், அதற்குக் காரணமாக விருப்போர் வாழ்ந்து ஓங்கவேண்டும் என்ற ஸாதாரணர்கள் எண்ணமிருக்கவே கூடாது. ஈசனுகப்



பார்த்து எது செய்தாலும் ஸரி நாம் அவரில் ஈடுபடுவதுதான் அவசியம் வேண்டியது, அவரது ஆஞ்ஞைப்படி ஸுகதுக்காதிகள் நமது நன்மைக்கே ஏற்படுவதால், அவைகளுள் துக்கம் வருங்கால் மனக்கலக்கம், கொடுங்குணம் இவைகளுக்கு இடம் ஏற்பட்டு கடவுள் ஈடுபாடு தடைபட்டுப் போகாமலும், ஸுகம் வருங்கால் அவைகளுள் மூழ்கி கடவுள் உணர்வே இழந்தும் மேல்வரும் துக்கக்கலக்கம் அதிகப்படும்படியும் உள்ள மயக்க நிலையை அடையாமலும் இருக்கவேண்டும் என்ற ஆவலையே இந்நிலையிலிருக்கும் பக்தன் பழக்கத்தில் கொண்டுவரவேண்டும். அப்பர், மாணிக்கவாசகர் முதலிய புராண காலத்திற்குப் பிந்திய பெரியோர்களும் தமக்குக் கஷ்டம் வந்தக்கால் ஒருவரையும் கடிந்துகொள்ளாமலும், கடவுள் பக்தி மாறாமலிருக்கவேண்டும் என்ற பரபரப்புடனே மாத்திரம் இருந்து நாள்களைக் கழித்துவந்தனர் என்பது அவர்கள் திவ்ய சரிதைகளால் தெரியவரும். இதனாலேதான் இவர்கள் ஸுக ஸமயங்களில் மனதைப் பறிகொடுத்து கடவுளை மறந்து அவைகளுள் மூழ்கி அவைகளே சதமெனநம்பி இருந்துவிடவில்லை. பக்தியில் பழகவரும் ஒவ்வொருவனுக்கும் முதலில் தன் விரோதிகள் அழிந்தே போக வேண்டும், துக்கமே வரக்கூடாதென்ற ஆவல்கள் இருக்கலாம். மேலும் எல்லா வருணத்தாருக்கும் இந்த யோகம் சிறப்பாக விருப்பதால் பக்தர்களில் பலர் இக்குற்றமுடையவராக இருக்கலாம் தொடக்கத்தில். ஆனால் வரவர இது குறைந்துகொண்டே வரும், பக்தியில் உள்ளபடி ஈடுபட்டுவந்தால். இங்கேயே இருக்கவேண்டிய சிறு ஆராய்ச்சிகளாலும் மேல் வருணப்பிறப்பாலும் இந்தக் கொடிய பாவனைகள் முற்றிலும் அழிந்துபோய் உள்ளபடியான பாஹ்ய பக்திவரும்.

இந்த பாஹ்ய பக்தி சுத்தப்பட்டு ஆவல் குன்றிக்கொண்டே வரவர அநந்ய பக்திக்கு இடம் ஏற்பட்டுக்கொண்டு வரும். இது ஈசனது வைதிகஉருவங்களுள் ஏதாவது ஒன்றன்விஷய வழிபாடாகவும் மற்றையவைகள் எல்லாம் அதன் ரூபாந்தரங்கள் என்ற ஒருவிதமான எண்ணமாகவும் இருக்கும். இந்த பாகத்தில் ஒரு பெரிய படுகுழியுண்டு. ஆராய்ந்து பார்க்குங்கால் இந்த பாகத்தை சாஸ்திரங்களில் கூறப்படும் கத்திமுனையென்றும் மயிர்ப்பாலம் என்றும் கூறலாம். இந்தவழியில் நேராகவும் ஸாவதானமாகவும் நடத்தல் வேண்டும். அப்படி இல்லாது பராக்குப் பார்த்துக்கொண்டும், அவஸரமாயும் சென்றால் ஏதாவது ஒருபுறம் சாய்ந்து அங்கேயுள்ள படுகுழியில் விழவேண்டியதுதான். இந்த ஸூக்ஷ்மமான பக்திமார்க்கத்திற்கு ஒருபுறம் மூர்த்தித்வேஷம் என்ற படுகுழியும், மறுபுறம் ஒரு மூர்த்தியிலும் நிலையாமை என்ற படுகுழியும் உள்ளன. இவை இரண்டிற்கும் ஆளாகாது கத்திமுனை போன்ற ஸூக்ஷ்மமான பக்திமார்க்கத்தின் வழி நடந்தால்தான் அடுத்தபடியாகிய மேல்வருணப் பிறப்பும் ராஜயோக நிலை கைகூடுவதும் ஏற்படும். இவைகளுள் மூர்த்தித்வேஷம் அவஸரத்தாலும், மூர்த்தியில் நிலையாமை பராக்காய் இருப்பதாலும் ஏற்படும்.

இந்த இருவிதப் படுகுழிகளின் தன்மைகளைப்பற்றி விசாரிப்போம். 'பிறமூர்த்திகள் உபயோகமற்றவை: தன்னைவிடத் தாழ்ந்தவை: அவைகளைப் பின்பற்றுபவர்களுக்கு நற்கதி இல்லை: அநியாயமாக அவர்கள் அதோகதியை அடைகிறார்களே! அவர்கள் மூர்த்திகளைப் பழித்து நம் மூர்த்தியின் சிறப்பை, எடுத்துக்காட்டி இதை வழிபடக் கடைத்தேறும்படி செய்யவேண்டும்' என்ற எண்ணங்களுடனும், பிறமூர்த்திகளையும், அவைகளை வழிபடு

பவர்களையும் இழிவாகக் கூறி சண்டையிட்டு வருத்தி எப்படியாவது அவர்களை நல்வழி திருப்பிவிடவேண்டும் என்ற மாறு ஆவலுடனும் கூடியதாக்இருக்கும்மூர்த்தித்வேஷம்என்பது. இதனால் வேறு எந்த மூர்த்திகளைக் கண்டாலும், அவைகளைப் பின்பற்றுபவர்களைக் கண்டாலும், வெறுப்பு முதலிய கொடுங் குணங்கள் கண்மூடி பக்தனுக்கு உண்டாகும். வரவர இந்தக்கொடுமை அவன் தன் மூர்த்தியை வழிபடும்பொழுதும் வந்து குறுக்கிட்டு அதைக் கலைக்கத் தொடங்கிவிடும். தன் வழிபாட்டிலிருக்கும்பொழுது 'ஐயோ நமது மூர்த்தியை வழிபட்டு ஈடேறமாட்டேன் என்று உலகம் வீணாகக் கெட்டுப்போகிறதே! என்ன சொல்லியும் உலகத்தின் முரட்டுத்தனம் நீங்கவில்லையே!! ஈசா உமது பலத்தால் மற்றைய மூர்த்தங்களையும் அவைகள் பக்தர்களையும் அழித்தாவது அவர்களுக்கு உங்களிடம் நேரிட ஈடுபடும் ஜன்மத்தைத் தரலாகாதா?' என்ற எண்ணங்கள் வருவதுதான் மதத்வேஷத்தின் முதிர்ச்சி. இதன்பின் பக்தனுக்கு வழிபாடுபோய் பிறமத கண்டனம் சாபம் முதலியவைகளே வந்துவிட, அநந்ய பக்திக்கு முயற்சித்தவன் 'சிவபூஜையிலே காடிவந்தாற்போல' மதத்வேஷத்தால் சின்னபின்னப்பட்டு 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்ற கதையாக வீண் மனச்சஞ்சலத்தையே கைப்பற்றியவனாவன். இந்த ஸமயத்தில் ஆழ்வார் நாயனாராதிகள் தமக்குப் புறம்பாயுள்ள மூர்த்திகளைத் தாழ்த்தியுள்ள பாசுரங்கள் ஞாபகத்திற்கு வந்து இவன் மனதை நன்றாகக் கலக்கி இவனைப் பரிதாபமான படுகுழியில் கிடத்திவிடும் இவன் அஜாக்ரதையாக விருந்தால். இந்த மதத்வேஷத்திற்கு இடங்கொடுக்காது மற்றைய வைதிக மூர்த்திகளும் வேதஸம்மதமே: பலவகைப்பட்டுள்ள மனங்களையுடைய எல்லோரும் ஈடேறி மோக்ஷமார்க்கத்தில் நிலைக்க பலவாக அமைந்தவை: ஆதலால் இவைகள் விஷயத்தில் த்வேஷம் வரவே கூடாது என்று ஒருவாறு தெளிந்து வீண் மனச்சஞ்சலத்திற்கு இடம் கொடாதிருக்கவேண்டும்.

இப்படியே செய்துவிட்டு நிதானமில்லாது இந்த எண்ணத்திலேயே அவஸரமாகப் பழகிவிட்டால் நாளடைவில் எல்லாவற்றிலும் வாய் வைக்கும்நாய்போல ஒருமூர்த்தியிலும் நிலைக்கவொட்டாது 'இதைப்பற்றுவோமா? வேறொன்றைப் பற்றுவோமா? எல்லாம் வைதிக மூர்த்தங்கள்தானே!' என்ற மனச்சஞ்சலத்திற்கு இடம் வரும். இதன்படி விட்டுவிட்டால் வழிபாடு ஸரிவர நடவாது. மனம் வெளிமுகப்பட்டு வைதிக மூர்த்த தாரதம்யங்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும்படி யாகிவிடும். இந்நிலை அடுத்தபடியாகிய ராஜயோகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்காது: மனதை வீணாகச் சிதற அடித்து வெறும் வாசாகைங்கர்யம் மாத்திரம் செய்யும்படி பக்தனை மோசம் செய்துவிடும். இந்தச் சஞ்சலம் வரவொட்டாது தடுப்பதற்குத்தான் ஆழ்வார் நாயன்மாராதிகள் வேதக் கருத்தைத் தழுவி மற்றையமூர்த்திகளை தமது வழிபடு மூர்த்திகளைவிடத் தாழ்த்திக் கூறியுள்ளனர். அவைகள் விஷயத்தில் நமது எண்ணம்போய்ச்சிதறாது நமது மூர்த்திகளில்இருக்கவேண்டும் என்ற கருத்து அவர்களுக்கே ஒழிய இதைக்கொண்டு மற்ற மூர்த்திகளைப் பழித்து த்வேஷமாகிய புயற்காற்றில் அகப்பட்டுத் திண்டாடவேண்டும் என்பதல்ல அவர்கள் கருத்து. ஆகவே நமது இஷ்டமூர்த்தி ஒன்றையே நோக்கி வழிபட்டுக் கூடியவரையில் மற்றைய மூர்த்திகளை த்யானகாலத்தில் மறந்துவிட முயலவேண்டும். வெளிமுகப்படுங்கால் மற்றைய மூர்த்திகள் விஷயம் நேரிட அவைகளாலோ அல்லது அவைகளை வழிபடுபவராலோ வந்து தாக்குங்கால் முன்னர் கூறியபடி அவைகளின் வைதிகத் தன்மை மறவாதிருந்து மற்றவர்களுக்கு அவை சிறந்தவை நமக்கு நம்மது, எல்லாம் வேதஸம்மதமானதல்லவா என்ற மரியாதையுடனிருக்கவேண்டும். இது நன்கு விளங்க நாட்டுப்பெண் திருஷ்டாந்தம் பெரியோர் கொடுப்பது வழக்கம். ஒரு குடும்பத்திலுள்ள நாட்டுப்பெண், மாமனார், மாமியார், புருஷன், மைத்துனர், நாத்தனார், அதிதிகள் முதலிய எல்லோரிடமும் மரியாதையாக த்வேஷமே இல்லாதிருந்தும் எப்படி தன்புருஷனிடமே உள்ளபடியான அன்பு வழிபாடுகளில் யாதொரு குறைவுமின்றி நடந்துவருகிறாளோ அதுபோல அநந்ய பக்திநிலையில் திடப்படவேண்டிய பக்தன் தன் மூர்த்தி பிற வைதிக மூர்த்திகள் விஷயங்களில் இருக்கவேண்டும். இந்த பாவனை உள்ளபடி திடப்பட்டு இயற்கையாகிவிடுவது மேல்படியான ராஜயோகத்திலேயாயினும் பக்தியோகி இந்த பாவனை திடப்பட மனப்பூர்வமாக முயன்றுகொண்டே இருக்கவேண்டும், வெளிமுகப்படும்பொழுது. உள்முகப்படும்பொழுது மற்றைய மூர்த்திகளைப்பற்றியவைகளை எல்லாம் முற்றிலும் மறந்துவிட முயலவேண்டும். இப்படிச் செய்துவந்தால் பாஹ்ய நிலையிலிருந்து அநந்யநிலைக்கு வந்த பக்தி அதில் திடப்பட்டு மேல்படிக்குத் தகுந்த தாங்கலாக ஏற்பட்டுவிடும்.

---

புதுக்கோட்டை ராஜா அவர்களின் 40-வது பிறந்த நாள் கொண்டாட்டம்:—இந்தச் சுபதினம் புதுக்கோட்டை சமஸ்தானமெங்கும் நவம்பர்மீ 21உயன்று நிரம்ப சிறப்பாய் கொண்டாடப்பட்டது. டவுன் ஹாலில பலர்கூடி, ராஜாவுக்கு ஆயுள் ஆரோக்கியத்தை தந்தருளவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தனைசெய்தார்கள். பல தமாஷ்களும், சங்கீதகச்சேரியும் நடந்தன. அன்று மத்தியானம் ஏழைகளுக்கு சாப்பாடு போடப்பட்டது; துணிகளும் கொடுக்கப்பட்டன. அன்று மாலை டவுன் ஹாலில் ராஜாவுக்கு சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் அட்ரஸ்ஸொன்றை வாசித்துக் கொடுத்தார்கள். அன்றிரவு ஸம்மர் அரண்மனையில் ராஜாங்க விருந்து நடந்தேறியது. பொலிடிகல் ஏஜெண்டும் பல ஐரோப்பிய விருந்தினர்களும் திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்திருந்தார்கள்.



# ஐரோப்பிய யுத்தம்

## உள்மூலம்

## THE EUROPEAN WAR
### The underlying causes

யுத்தமென்பது அபூர்வமான ஸம்பவமல்ல. பூலோகம் ஸ்ருஷ்டியானதுமுதல் எவ்வளவோ யுத்தங்கள் நடந்ததாகக் கேட்டும் வாசித்துமிருக்கிறோம். கோபம், மோஹம், மதம், மாற்சர்யமாதி துர்க்குணங்களால் மனிதன் பீடிக்கப்படும்வரை உலகில் சண்டை நிகழ்வது ஆச்சரியமல்ல. இக்குறும்புகள் வேரற அறுபட்டாலொழிய, சச்சரவொழியுமென்றெண்ண விடமில்லை.

ஆயினும் யுத்தம் என்றால், அதற்கும் கணக்கில்லையா? அகங்கொண்ட மனிதர்களோ, ராஜ்யங்களோ பரஸ்பர த்வேஷங் கொண்டாடுவதுண்டு. எளியாரை வலியாரழிக்க முயலுவது ஸாதாரணந்தான். ஆனால் பிரகிருதம் நடக்கும் யுத்தத்திலோ, ஐரோப்பாவிலுள்ள இராஜ்யங்கள் ஒன்று தவறாது அகப்பட்டுத் தத்தளிக்கின்றன. இந்நாடுகளில் சிறிதும் ஸம்பந்தப்படாது ஜலமத்தியிலிருக்கும் இங்கிலாந்தும், தன் காரியத்தைமட்டுங் கவனித்துப் பிறரைத் தொந்தரை செய்யாத் தனியரசாகிய பெல்ஜியம்போன்ற ராஜ்யங்களும் இப்புயலிலகப்பட்டுத் தவிக்கின்றன.

இத்தகைய பெருங் குழப்பத்திற்கு காரணமென்னவென்று விசாரித்தால், "ஸரஜேவோ"வில் "ஆஸ்டிரிய" இளவரசை, ஸெர்வியச் சிறுவர் புரிந்த படுகொலையே, என்று விடைபிறக்கும். ஆனால் யோசித்துப் பார்க்கின், இது மதுபிந்து கலகம்போலல்லவோ முடிகிறது. இக்கொலைதான் காரணமென்றால் ஜெர்மனியும், இங்கிலாந்தும், ரஷ்யாவும், முனைந்து சண்டையிடுவானேன்? ஆகவே இம்மஹா யுத்தத்திற்குக் காரணமிதுதான் என்று சொல்லுவது யுக்திக்கொவ்வாது. வேறு பலமான ஆழ்ந்த காரணமிருந்தே தீரவேண்டும் என்று நம் நண்பர்கள் அநுமானிக்கலாம். அது வாஸ்தவந்தான். "ஐரோப்பா" இந்த யுத்த வெள்ளத்தில் முழுகுவதற்கு பல காரணங்கள் ஏற்பட்டிருந்தன. அவை எத்தன்மையன என்று சற்று விசாரிப்போம்.

தற்காலம் ஐரோப்பிய நாடுகளின் ஸ்திதியையும், அவைகளுக்குள்ள ஸ்நேக விரோத பாவங்களையும், அவைகளின் நோக்கங்களையும், தத்வாரா ஏற்பட்டுள்ள ஸகஜ வைரத்தையும் உற்று நோக்கினால் இந்த யுத்தம் விளைந்தது ஆச்சரியமேயல்லவென்பதும், இப்பொழுதில்லாவிட்டாலும், சீக்கிரத்திலாவது ஸம்பவித்துத்தானிருக்கவேண்டு மென்பதும் வெளியாகும்.

10,12-ஆவது நூற்றாண்டுகளில் "வெண்ட்" என்பவரைப்போன்ற சில காட்டுமிராண்டியர், அடிக்கடி ஐரோப்பாவில் குழப்பத்தை உண்டு பண்ணிவந்ததை நிறுத்தவேண்டி, அவர்களுக்கு தடையாகவிருக்கும்படி "பிரஷ்யா" என்றும், "பிராண்டன்பர்க்" என்றும் இரு சிறு சமஸ்தானங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. 15-ஆவது நூற்றாண்டில் "ஸிஸ்மாண்டு" என்ற வரசன் "ஹோஹென்ஸாலர்ன்" என்ற வம்சத்தின் ஒரு கிளைக்கு "பிராண்டன்பர்க்கை" விற்றுவிட்டனன். "ப்ரஷ்யாவின்" அரசனும், இந்த வம்சத்தில் மற்றொரு கிளையைச் சேர்ந்தவனே. ஆகவே இரு ராஜ்யங்களும், "ஹோஹென்ஸாலேர்ன்" வம்சத்து இரு கிளைகளுக்கு சொந்தமாயின. இரு கிளைகளில் ஒன்று ஸந்ததியற்றுப்போக நேரிட்டால், ராஜ்யத்தைப் பிறரிடம் விடாமல், மிகுந்த கிளையே இருநாட்டையு மாள்வதென்ற உடன்படிக்கையும் சீக்கிரம் செய்யப்பட்டது. 1618௵ல் அம்மாதிரியே, ப்ரஷ்ய வம்சம் ஸந்ததியில்லாமற் போக, இருராஜ்யங்களும் அப்பொழுது "பிராண்டன்பர்க்" அரசனாயிருந்த எலக்டர் "ஜியார்ஜ்" என்பவரால் சேர்த்தாளப்பட்டன. இதுவே இப்பொழுதைய ப்ரஷ்ய ராஜ்யத்தி னாரம்பம்.

காலக்கிரமத்தில் இவ்விராஜ்யமானது மிகுந்த ஸமர்த்தர்களான அரசர்களால் ஆளப்பட்டு உயர்ந்த ஸ்தானத்திற்கு வர ஆரம்பித்தது. முக்கியமாக, "பிரெடரிக் வில்லியம்" என்பவர் காலத்தும். அவர் குமாரனாகிய இரண்டாவது "பிரெடரிக்"கின் காலத்தும் ப்ரஷ்யர்களின் க்யாதி பூலோகமெங்கும் பாவிற்று. அரசன் யுத்தங்களிற் காட்டிய புயவன்மையாலும், தந்நாட்டிற் செய்த அரிய சீர்திருத்தங்களாலும், ப்ரஷ்யா விருத்தியடைந்தது. ஆனாலும் அப்பொழுது "ஆஸ்டிரியா, ப்ரஷ்யா" விற்கும் பரஸ்பர அவநம்பிக்கையும், சச்சரவுமேமிகுதி. ஜெர்மனியில் மற்றுமுள்ள எண்ணிறந்த சிறு சமஸ்தானங்களுள் த்வேஷமும், போரும், கலகமுமே நிகழ்ந்தன. அவைகளை யெல்லாமொழுங்குபடுத்தி, ஒன்று சேர்த்து ஒரு பலமுள்ள பெரு ராஜ்யமாகச் செய்ய ஆவல்கொண்ட முதலாவது வில்லியம் என்ற அரசன், தன்னால் அது கூடாதகாரியமெனக் கண்டு, "ஆட்டோ வான் பிஸ்மார்க்" என்ற ராஜ்யதந்திர நிபுணரை மந்திரியாக நியமித்தார். ஜெர்மனி தத்காலமிருக்கும் உந்நத ஸ்தாநத்திற்கு வழிதேடியவர் இந்த பிஸ்மார்க் என்ற மேதாவிதான். நாம் விசாரிக்கப் புகுந்த விஷயத்திற்கு இவர் நோக்கங்களும், இவருடைய ஸாமர்த்தியமும் தெரியவேண்டிய தவசியமாகையால், அவற்றைச் சற்று சுருக்கிக் கூறுவோம்.

இராஜரீகத்தில் இவர் காட்டிய திறன் 'நபூதோநபவிஷ்யதி' என்று உலகம் முழுதும் வியப்படையும்படி யிருந்தது. அதிகாரம் வகித்த சில வருஷங்களுள், "டென்மார்க்" அருகிலுள்ள "ஷெலெஸ்விக்—ஹால்ஸ்டீன்" என்னும் சிறு பூஸந்தி மாகாணத்தின் மூலமாய் ஒரு சச்சரவுண்டாயிற்று. அச்சச்சரவைக் கொண்டு ப்ரஷ்யாவின் அபிவிருத்தியை யடைவித்ததில் அவர்காட்டிய சமத்கார மிதுவரை ஐரோப்பா கண்டதில்லை. நேர்ந்த சண்டை ஜெர்மானிய ஜாதியாருக்குள்என்று சொல்லி ஆஸ்டிரியாவை துணைக்கழைத்து, அவ்விருமாகாணங்களையும் வசஞ்செய்துகொண்டார். இம்மாதிரியான செயல்களைக் கண்ட மற்ற நாடுகள் திகிலடைந்தன வென்றாலும், தாங்களதில் நுழைய விடங்கொடாது பிஸ்மார்க் நடந்துவந்ததால், ஒன்றும் செய்ய முடியாது போயிற்று. இது முடிந்ததும், "ஷெலெஸ்விக்" கை பாகித்துக் கொள்வதில் வேண்டுமென்றே ஆஸ்டிரியாவுடன் சண்டையிட்டு, கடைசியாக, ஜெர்மனியினின்றும் "ஆஸ்டிரியாவை" வெளிப்படுத்திவிட்டனர்.

மேலும் தங்கள் ராஜ்யத்திற்கு நேரிடக்கூடிய விபத்தெல்லாம் "பிரான்ஸ்" ஆல்தான் என்றறிந்து 1870௵ல் நடந்த யுத்தத்தில் "பிரான்ஸை"முறியடித்து, 20 கோடி பொன் அபராதமும், ஆல்ஸேஸ் லொர்ரேன்" என்ற வளமிகுந்த மாகாணத்தையும் பெற்றனர். இம்மாகாண மிழந்ததிற்றான் பிரஞ்சுக்காரருக்கு ஸகிக்கரிய மனத்தாங்கலும் ப்ரஷ்யர்களிடமுள்ள பகைவிருத்தியு முண்டாயின.



இவ்வாறாக பல விதங்களிலும் ப்ரஷ்யாவை முன்னிற்குக் கொண்டுவந்தாலும், துராகிருதமான செயல்களைச் செய்தாரென்று ஒருவரும் சொல்ல முடியாதபடி, தந்நாட்டிற்கு ஹிதத்தைத் தேடினார். அதுவல்லவா ஸாமர்த்யம். ஸேனையை வெகுவாக பலப்படுத்தினார். ஏனென்று யாரேனுங்கேட்டால், நாட்டின் அமைதிக்கும் எதிரிகள் தாக்காது தற்காப்பதற்கும் அவ்வாறு செய்யவேண்டிய தவசியமென்று காட்டுவார். ஆகவே அவரை ஒழுங்குமீறி நடப்பவர் என்று ஒருவருஞ்சொல்லத் துணிந்ததில்லை. ஒழுங்கின் அவதாரமெனப் பிறர்நினைக்க நடந்துகொண்டார். பல ராஜ்யங்கள் சேர்ந்து தன்னைத் தாக்காதிருக்கவேண்டி ஸாமத்தாலும் பேதத்தாலும், நாடுகளைத் தனியே பிரித்துவிட்டும் தம்மோடு சில நாடுகளைச் சேர்த்தும் தம்மெண்ணத்தை ஸாதித்தார். அவருடைய நோக்கமோ ஐரோப்பாவில் ப்ரஷ்யா முதன்மை வகிப்பதோடு, ப்ரஷ்யாவை எதிர்ப்பதென்று ஒரு நாடாவது ஸ்வப்நத்திலுமெண்ணக்கூடாதபடி பலப்பட வேண்டுமென்பதே. பூலோகமுழுமையும் ஆளவேண்டுமென்ற தற்காலத்திய ஜர்மனியின் வீணெண்ணம் அவருக்கு இல்லவேயில்லை. அவர் கொள்கைகளையே பின்பற்றி யிருப்பார்களானால் ப்ரஷ்யாவும் மிக்க உந்நத ஸ்தாநத்தில் நெடுநாளிருந்திருக்கும்: இந்த கோர யுத்தமும் நேர்ந்திராது. அவர் நோக்கத்தைக் கைநழுவவிட்டு வீண்கர்வம் தலைக்கேறவேதான், வீண்வம்பும் துன்பமும் ஜர்மனியைச் சூழ்ந்துகொண்டன. கெட்டகாலம் வருமுன் மதிகெடுவது இயற்கையல்லவா?

நிற்க, ரஷ்யாவின் சரித்திரத்தையும் அதன் நோக்கங்களையும் சற்று கவனிப்போம். வடசமுத்திரம்வரை பரவியிருக்கும் ரஷ்யா வெருங்காட்டுமிராண்டியரின் தேசமாயிருந்து வெகுப் பிரயாசையின்மேல், நாகரிகமடைந்து முன்வரவாரம்பித்தது. பீடர், காதரெயின்போன்ற மஹாசக்ரவர்த்திகளுடைய ஸாமர்த்தியத்தால் ரஷ்யாவும் வெகு வேகமாக அபிவிருத்தியடைந்து வந்தது. ஆசைக்கோரளவில்லை யல்லவா? ரஷ்யாவிற்கு ஆசியாவில் பெரிய ராஜ்யமொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஆசை யுண்டாயிற்று. நிலை கெட்டு, பலங்குன்றி, சீரழிந்திருக்கும் துருக்கி ராஜ்யத்தை மெள்ள சுளைபோல் விழுங்கிவிட்டால் நலமென்ற பேரவா, ரஷ்ய சக்ரவர்த்திகளின் நோக்கமாயிற்று. அவ்விதஞ் செய்து மத்தியதரைக் கடலைத் தங்களாதீனத்திற்குள் கொண்டுவரலாமென்ற ஆசையின்பேரில்தான், ரஷ்யா அநேக யுத்தங்களில் தலையிட்டு துருக்கியிலும் பால்கன் தீபகல்பத்திலுமுள்ள மாகாணங்களை ஸ்வல்ப ஸ்வல்பமாகக் கைப்பற்ற வாரம்பித்தது. எகிப்து ஸுல்தான் "மகமதாலி" ஸிரியாவைக் கவர்ந்து பலமுள்ள ஒரு ராஜ்யம் சின்ன ஆசியாவில் (Asia-Minor) ஸ்தாபிக்க முயன்றபொழுது, பலம் பொருந்திய வல்லரசொன்று முளைத்துவிட்டால் தங்களெண்ணம் கைகூடாதென்று கருதித்தான் துருக்கிக்கு "ஸார்நிகோலஸ்" உதவிபுரிந்தது.

ரஷ்யாவின் நோக்கம் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு விளங்க எவ்வளவு காலஞ் செல்லும். சீக்கிரம் தெரிந்துவிட்டது. ஏற்கெனவே விஸ்தீர்ணமான பூமியுள்ள ரஷ்யாவின் கையில் துருக்கியும் அகப்பட்டுவிட்டால் மத்திய தரைக்கடல், கருங்கடல், சின்ன ஆசியா எல்லாமவர்கள் வசம் வந்து மிகுந்த பலமுறிவிடுமென்ற பயம் ஐரோப்பிய நாடுகளுக்குண்டாயிற்று. ஆகவே, துருக்கி ரஷ்யாவிற் கிரையாகாதவண்ணம் பாதுகாக்கத் தலைப்பட்டன. 1828-ல் "க்ரீஸ்" ஸ்வயாதிபத்ய மடைந்த பிறகு, ராஜ்யத்தின் சீரழிவினாலும், அடிக்கடி நிகழுங் கலகங்களாலும், மிகுந்த துர்ப்பலமான ஸ்திதியில் துருக்கி யிருப்பதை யுணர்ந்த "ஸாருக்கு" இதுதான் ஸமயமெனத் தோன்ற, "நீ வையாவிட்டாலும், உன்னப்பன் வைதிருப்பான்", என்ற கதையாக, துருக்கி ராஜ்யத்திலுள்ள கிறிஸ்தவர்களை ஸுல்தான் கொடுமையாக நடத்துவதாயும், ஆகையால், கிறிஸ்தவ மாகாணங்கள் தங்களுடைய மேல்பார்வையிலிருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்க, துருக்கி மறுத்துவிட்டது. இதைச் சாக்காகக்கொண்டு துருக்கியின் நாடுகளிற் சிலவற்றை பலாத்காரமாக ரஷ்ய சக்ரவர்த்தி பிடுங்கிக்கொண்டார். இதை பயத்தோடு பார்த்திருந்த ஏனைய நாடுகள் ஒருமித்து ரஷ்யர்களின் அக்ரமத்தைத் தவிர்த்து, ஒருநாடும்

தற்காலம் ஐரோப்பிய நாடுகளின் ஸ்திதியையும், அவைகளுக்குள்ள ஸ்நேக விரோத பாவங்களையும், அவைகளின் நோக்கங்களையும், தத்வாரா ஏற்பட்டுள்ள ஸகஜ வைரத்தையும் உற்று நோக்கினால் இந்த யுத்தம் விளைந்தது ஆச்சரியமேயல்லவென்பதும், இப்பொழுதில்லாவிட்டாலும், சீக்கிரத்திலாவது ஸம்பவித்துத்தானிருக்கவேண்டு மென்பதும் வெளியாகும்.

10,12-ஆவது நூற்றாண்டுகளில் "வெண்ட்" என்பவரைப்போன்ற சில காட்டுமிராண்டியர், அடிக்கடி ஐரோப்பாவில் குழப்பத்தை உண்டுபண்ணிவந்ததை நிறுத்தவேண்டி, அவர்களுக்கு தடையாகவிருக்கும்படி "பிரஷ்யா" என்றும், "பிராண்டன்பர்க்" என்றும் இரு சிறு சமஸ்தானங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. 15-ஆவது நூற்றாண்டில் "ஸிஸ்மாண்டு" என்றவரசன் "ஹோஹென்ஸாலர்ன்" என்ற வம்சத்தின் ஒரு கிளைக்கு "பிராண்டன்பர்க்கை" விற்றுவிட்டனன். "ப்ரஷ்யாவின்" அரசனும், இந்த வம்சத்தில் மற்றொரு கிளையைச் சேர்ந்தவனே. ஆகவே இரு ராஜ்யங்களும், "ஹோஹென்ஸாலேர்ன்" வம்சத்து இரு கிளைகளுக்கு சொந்தமாயின. இரு கிளைகளில் ஒன்று ஸந்ததியற்றுப்போக நேரிட்டால், ராஜ்யத்தைப் பிறரிடம் விடாமல், மிகுந்த கிளையே இருநாட்டையு மாள்வதென்ற உடன்படிக்கையும் சீக்கிரம் செய்யப்பட்டது. 1618௵ல் அம்மாதிரியே, ப்ரஷ்ய வம்சம் ஸந்ததியில்லாமற்போக, இருராஜ்யங்களும் அப்பொழுது "பிராண்டன்பர்க்" அரசனாயிருந்த எலக்டர் "ஜியார்ஜ்" என்பவரால் சேர்த்தாளப்பட்டன. இதுவே இப்பொழுதைய ப்ரஷ்ய ராஜ்யத்தின் ஆரம்பம்.

காலக்கிரமத்தில் இவ்விராஜ்யமானது மிகுந்த ஸமர்த்தர்களான அரசர்களால் ஆளப்பட்டு உயர்ந்த ஸ்தானத்திற்கு வர ஆரம்பித்தது. முக்கியமாக, "பிரெடெரிக் வில்லியம்" என்பவர் காலத்தும். அவர் குமாரனாகிய இரண்டாவது "பிரெடெரிக்"கின் காலத்தும் ப்ரஷ்யர்களின் க்யாதி பூலோகமெங்கும் பரவிற்று. அரசன் யுத்தங்களிற் காட்டிய புயவன்மையாலும், தந்நாட்டிற் செய்த அரிய சீர்திருத்தங்களாலும், ப்ரஷ்யா விருத்தியடைந்தது. ஆனாலும் அப்பொழுது "ஆஸ்டிரியா, ப்ரஷ்யா" விற்கும் பரஸ்பர அவநம்பிக்கையும், சச்சரவுமேமிகுதி. ஜெர்மனியில் மற்றுமுள்ள எண்ணிறந்த சிறு சமஸ்தானங்களுள் த்வேஷமும், போரும், கலகமுமே நிகழ்ந்தன. அவைகளையெல்லாமொழுங்குபடுத்தி, ஒன்று சேர்த்து ஒரு பலமுள்ள பெரு ராஜ்யமாகச் செய்ய ஆவல்கொண்ட முதலாவது வில்லியம் என்ற அரசன், தன்னால் அது கூடாதகாரியமெனக் கண்டு, "ஆட்டோ வான் பிஸ்மார்க்" என்ற ராஜ்யதந்திர நிபுணரை மந்திரியாக நியமித்தார். ஜெர்மனி தற்காலமிருக்கும் உந்நத ஸ்தாநத்திற்கு வழிதேடியவர் இந்த பிஸ்மார்க் என்ற மேதாவிதான். நாம் விசாரிக்கப் புகுந்த விஷயத்திற்கு இவர் நோக்கங்களும், இவருடைய ஸாமர்த்தியமும் தெரியவேண்டிய தவசியமாகையால், அவற்றைச் சற்று சுருக்கிக் கூறுவோம்.

இராஜரீகத்தில் இவர் காட்டிய திறன் 'நபூதோநபவிஷ்யதி' என்று உலகம் முழுதும் வியப்படையும்படி யிருந்தது. அதிகாரம் வகித்த சில வருஷங்களுள், "டென்மார்க்" அருகிலுள்ள "ஷெலெஸ்விக்—ஹால்ஸ்டீன்" என்னும் சிறு பூஸந்தி மாகாணத்தின் மூலமாய் ஒரு சச்சரவுண்டாயிற்று. அச்சச்சரவைக்கொண்டு ப்ரஷ்யாவின் அபிவிருத்தியை யடைவித்ததில் அவர்காட்டிய சமத்காரம் இதுவரை ஐரோப்பா கண்டதில்லை. நேர்ந்த சண்டை ஜெர்மானிய ஜாதியாருக்குள்என்று சொல்லி ஆஸ்டிரியாவை துணைக்கழைத்து, அவ்விருமாகாணங்களையும் வசஞ்செய்துகொண்டார். இம்மாதிரியான செயல்களைக் கண்ட மற்ற நாடுகள் திகிலடைந்தன வென்றாலும், தாங்களதில் நுழைய விடங்கொடாது பிஸ்மார்க் நடந்துவந்ததால், ஒன்றும் செய்ய முடியாது போயிற்று. இது முடிந்ததும், "ஷெலெஸ்விக்" கை பாகித்துக்கொள்வதில் வேண்டுமென்றே ஆஸ்டிரியாவுடன் சண்டையிட்டு, கடைசியாக, ஜெர்மனியினின்றும் "ஆஸ்டிரியாவை" வெளிப்படுத்திவிட்டனர்.

மேலும் தங்கள் ராஜ்யத்திற்கு நேரிடக்கூடிய விபத்தெல்லாம் "பிரான்ஸ்" ஆல்தான் என்றறிந்து 1870௵ல் நடந்த யுத்தத்தில் "பிரான்ஸை"முறியடித்து, 20 கோடி பொன் அபராதமும், ஆல்ஸேஸ் லொர்ரேன்" என்ற வளமிகுந்த மாகாணத்தையும் பெற்றனர். இம்மாகாண மிழந்ததிற்றான் பிரஞ்சுக்காருக்கு ஸகிக்கரிய மனத்தாங்கலும் ப்ரஷ்யர்களிடமுள்ள பகைவிருத்தியு முண்டாயின.

இவ்வாறாக பல விதங்களிலும் ப்ரஷ்யாவை முன்னிற்குக் கொண்டுவந்தாலும், துராகிருதமான செயல்களைச் செய்தாரென்று ஒருவரும் சொல்ல முடியாதபடி, தந்நாட்டிற்கு ஹிதத்தைத் தேடினார். அதுவல்லவா ஸாமர்த்யம். ஸேனையை வெகுவாக பலப்படுத்தினார். ஏனென்று யாரேனுங்கேட்டால், நாட்டின் அமைதிக்கும் எதிரிகள் தாக்காது தற்காப்பதற்கும் அவ்வாறு செய்யவேண்டிய தவசியமென்று காட்டுவார். ஆகவே அவரை ஒழுங்குமீறி நடப்பவர் என்று ஒருவருஞ்சொல்லத் துணிந்ததில்லை. ஒழுங்கின் அவதாரமெனப் பிறர்நினைக்க நடந்துகொண்டார். பல ராஜ்யங்கள் சேர்ந்து தன்னைத் தாக்காதிருக்கவேண்டி ஸாமத்தாலும் பேதத்தாலும், நாடுகளைத் தனியே பிரித்துவிட்டும் தம்மோடு சில நாடுகளைச் சேர்த்தும் தம்மெண்ணத்தை ஸாதித்தார். அவருடைய நோக்கமோ ஐரோப்பாவில் ப்ரஷ்யா முதன்மை வகிப்பதோடு, ப்ரஷ்யாவை எதிர்ப்பதென்று ஒரு நாடாவது ஸ்வப்நத்திலுமெண்ணக்கூடாதபடி பலப்பட வேண்டுமென்பதே. பூலோகமுழுமையும் ஆளவேண்டுமென்ற தற்காலத்திய ஜர்மனியின் வீணெண்ணம் அவருக்கு இல்லவேயில்லை. அவர் கொள்கைகளையே பின்பற்றி யிருப்பார்களானால் ப்ரஷ்யாவும் மிக்க உந்நத ஸ்தாநத்தில் நெடுநாளிருந்திருக்கும்: இந்த கோர யுத்தமும் நேர்ந்திராது. அவர் நோக்கத்தைக் கைநழுவவிட்டு வீண்கர்வம் தலைக்கேறவேதான், வீண்வம்பும் துன்பமும் ஜர்மனியைச் சூழ்ந்துகொண்டன. கெட்டகாலம் வருமுன் மதிகெடுவது இயற்கையல்லவா ?

நிற்க, ரஷ்யாவின் சரித்திரத்தையும் அதன் நோக்கங்களையும் சற்று கவனிப்போம். வடசமுத்திரம்வரை பரவியிருக்கும் ரஷ்யா வெருங்காட்டுமிராண்டியரின் தேசமாயிருந்து வெகுப்பிரயாசையின்மேல், நாகரிகமடைந்து முன்வரவாரம்பித்தது. பீடர், காதரெயின்போன்ற மஹாசக்ரவர்த்திகளுடைய ஸாமர்த்தியத்தால் ரஷ்யாவும் வெகு வேகமாக அபிவிருத்தியடைந்து வந்தது. ஆசைக்கோரளவில்லையல்லவா ? ரஷ்யாவிற்கு ஆசியாவில் பெரிய ராஜ்யமொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஆசை யுண்டாயிற்று. நிலை கெட்டு, பலங்குன்றி, சீரழிந்திருக்கும் துருக்கி ராஜ்யத்தை மெள்ள சுளைபோல் விழுங்கிவிட்டால் நலமென்ற பேராவா, ரஷ்ய சக்ரவர்த்திகளின் நோக்கமாயிற்று. அவ்விதஞ் செய்து மத்தியதரைக் கடலைத் தங்களாதீனத்திற்குள் கொண்டுவரலாமென்ற ஆசையின்பேரில்தான், ரஷ்யா அநேக யுத்தங்களில் தலையிட்டு துருக்கியிலும் பால்கன் தீபகல்பத்திலுமுள்ள மாகாணங்களை ஸ்வல்ப ஸ்வல்பமாகக் கைப்பற்ற வாரம்பித்தது. எகிப்து ஸுல்தான் "மகமதாலி" ஸிரியாவைக் கவர்ந்து பலமுள்ள ஒரு ராஜ்யம் சின்ன ஆசியாவில் (Asia-Minor) ஸ்தாபிக்க முயன்றபொழுது, பலம் பொருந்திய வல்லரசொன்று முளைத்துவிட்டால் தங்களெண்ணம் கைகூடாதென்று கருதித்தான் துருக்கிக்கு "ஸார்நிகோலஸ்" உதவிபுரிந்தது.

ரஷ்யாவின் நோக்கம் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு விளங்க எவ்வளவு காலஞ் செல்லும். சீக்கிரம் தெரிந்துவிட்டது. ஏற்கெனவே விஸ்தீர்ணமான பூமியுள்ள ரஷ்யாவின் கையில் துருக்கியும் அகப்பட்டுவிட்டால் மத்தியதரைக்கடல், கருங்கடல், சின்ன ஆசியா எல்லாமவர்கள் வசம் வந்து மிகுந்த பலமுறிவிடுமென்ற பயம் ஐரோப்பிய நாடுகளுக்குண்டாயிற்று. ஆகவே, துருக்கி ரஷ்யாவிற் கிரையாகாதவண்ணம் பாதுகாக்கத் தலைப்பட்டன. 1828-ல் "க்ரீஸ்" ஸ்வயாதிபத்ய மடைந்த பிறகு, ராஜ்யத்தின் சீரழிவினாலும், அடிக்கடி நிகழுங் கலகங்களாலும், மிகுந்த துர்ப்பலமான ஸ்திதியில் துருக்கி யிருப்பதை யுணர்ந்த "ஸாருக்கு" இதுதான் ஸமயமெனத் தோன்ற, "நீ வையாவிட்டாலும், உன்னப்பன் வைதிருப்பான்", என்ற கதையாக, துருக்கி ராஜ்யத்திலுள்ள கிறிஸ்தவர்களை ஸுல்தான் கொடுமையாக நடத்துவதாயும், ஆகையால், கிறிஸ்தவ மாகாணங்கள் தங்களுடைய மேல்பார்வையிலிருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்க, துருக்கி மறுத்துவிட்டது. இதைச் சாக்காகக்கொண்டு துருக்கியின் நாடுகளிற் சிலவற்றை பலாத்காரமாக ரஷ்ய சக்ரவர்த்தி பிடுங்கிக்கொண்டார். இதை பயத்தோடு பார்த்திருந்த ஏனைய நாடுகள் ஒருமித்து ரஷ்யர்களின் அக்ரமத்தைத் தவிர்த்து, ஒருநாடும்

துருக்கியின் பாட்டிற்குப் போகக்கூடாதென்ற உடன்படிக்கையைச் செய்துகொண்டனர்.

இவ்வாறு ரஷ்யாவிற் கெதிர்பலமாக துருக்கியை "முட்டுக்கொடுத்த" பிரயத்னமும் வீணாயிற்று. துருக்கி முன்னிலும் பதின்மடங்கு துர்ப்பலமாகும்படி நேர்ந்தது. பால்கன் தீபகல்பங்களிலுள்ள மாகாணங்களெல்லாம், சிறிது சிறிதாக ஸ்வயாதிபத்யத்தையடைய வாரம்பித்தன. ஒவ்வொரு சிறு ராஜ்யத்திலும், தீயும் கொலையும், கலகமும் ஏற்பட்டன. தாங்கள் ஒரே ஜாதி ஜனங்கள் என்றும், வேறொரு ஜாதியாரின் ஆளுகைக்குள்ளிருப்பது மெத்த அவமானமென்றும் வெருட்டவாரம்பித்தனர். ஓயாது சீர்திருத்தங்களும், ஸ்வயாதிபத்யமும் அதிகம் வேண்டும் என்று துருக்கியை ஸதா தகைந்தனர். ஓடுபவனை வெருட்டுவது துரத்துபவனுக்கெளிதுதானே. 1875-ல் "ஹெர்ஸகாவினா" என்ற ராஜ்யப் மூட்டிய கலக நெருப்பு வெகு சீக்கிரம் தீபகல்ப முழுமையுஞ் சூழ்ந்துகொண்டது. முன்சொன்னபடி துருக்கி ராஜ்யத்திலேயே கண்ணாயிருக்கும் ரஷ்யர்கள் இவர்களைத் தூண்டுவதும், யுக்தி சொல்வதும், உதவி புரிவதுமாகத் தலைப்பட்டனர். காரணமென்னவென்றாலோ, தாங்களும் பால்கன் தீபகல்பத்திலுள்ள ஜனங்களும், "ஸ்லாவ்" என்ற ஒரே இனமாகையால், ஸ்வஜாதி யபிமானத்தை முன்னிட்டிவ்வாறு செய்கிறோம்." என்று வேஷம். ஆடு நனைந்ததென்று கோனாப் குலுங்கிக்குலுங்கி யழுததாமென்ற கதையா யிருந்தது இவர்கள் வார்த்தை.

இதன் மத்தியில் 1876-ல் பல்கேரியாவில் மூண்ட கலகத்தை ஸகிக்காத துருக்கர்கள் செய்த கொடுங்கொலைகளை ஆதாரமாகக் கொண்டு "ஸார் அலக்ஸாண்டர்" யுத்தத்திற் காரம்பித்துத் துருக்கியை யழிக்க முயன்றார். ரஷ்யாவின் துரெண்ணம் முற்றிலும் அறிந்த இதர ஐரோப்பிய நாடுகள் குறுக்கிட்டு, ரஷ்யாவைப் பின்னிடச்செய்து, பெர்லினில் ஒரு மஹாஸபையொன்று கூட்டி ரஷ்ய, துருக்கி, பால்கன் விஷயங்களைப்பற்றித் தீர்மானமான முடிவிற்கு வருகிறது என்று நிச்சயித்தனர். அவ்வண்ணமே, 1878-ல் பெர்லினில், "காங்கிரஸ்" ஒன்று கூடிற்று. ரஷ்யாவின் பேராசைக் கிடங்கொடுக்கலாகாதென்ற ஸங்கல்பத்துடன் கூடியவர்களாகையால் ரஷ்யாவிற்கு இடறுகட்டையாக ஒரு ராஜ்பத்தைப் பலப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தனர். அதற்கிணங்க, பால்கன் ராஜ்யங்களை பலப்படுத்தி ரஷ்யாவிற்கு தெற்கில் அடியெடுத்து வைக்கமுடியாமற் செய்து விடுவதென்ற நோக்கத்துடன் அநேக ராஜ்யங்களுக்கு ஸ்வயாதிபத்யத்தையும் கொடுத்துவிட்டனர். இவ்விதம் தாங்கள் பட்ட சிரமமனைத்தும் வீணானதைக் கண்ட ரஷ்யர்களின் கோபத்தை நண்பர்களே ஊகித்துக்கொள்ளலாம்.

ரஷ்யர்களின் நோக்கத்தையும் அதற்கவர்கள் செய்த பிரயத்னங்களையும் பார்த்ததுபோல, ஜர்மனியின் நோக்கங்களையும் விசாரித்துவிட்டால் முடிவில் இந்த யுத்தத்திற்கு உள்மூலங்கள் எத்தன்மையன என நன்கு விளங்கிவிடும்.

ஜர்மனி முன்னிற்கு வருவதற்கே, பிஸ்மார்க் என்ற ஒப்புயர்வற்ற ராஜதந்திரிதான் காரணமென்று முன்னர் கூறினோமல்லவா? இவ்வாறு ப்ரஷ்யா முதன்மை யடைந்து விளங்கினால், மற்ற நாடுகளுக்கு திகிலும் பொறாமையும் அதிகரிக்கும்; அவர்கள் ஒன்றுசேர்ந்து ப்ரஷ்யாவை யடக்க முயலுவார்கள் என்றவர் நிதானித்தார். அவ்வாறுகாமலிருப்பதற்குத்தான், அவர் பிற ராஜ்யங்களுடைய ஸ்நேகத்தை ஸம்பாதித்தனர் என்றும் கூறினோம். வெகுகாலமாக "ப்ரஷ்யா"விற்கு முக்கிய எதிரி "பிரான்ஸ்"தான் என்பது பிஸ்மார்க்கின் துணிபு. ஸமயம் நேர்ந்தவிடத்துத் தானடைந்த அபஜயத்திற்குப் பழி வாங்கவேண்டுமென்று "பிரான்ஸியர்" எண்ணியிருப்பதும் அவர் அறிவார். ஆனால் "பிரான்ஸ்" பலஹீனஸ்திதியிலிருப்பதாலும், "ப்ரஷ்யா" மிக்க வலுவடைந்து கொண்டிருப்பதாலும், தனியே "பிரான்ஸ்" தன்னை யெதிர்க்கத் துணியாதென்றவர் அநுமானித்தார். வேறு ஸஹாய மேற்படாது செய்துவிட்டால், "ப்ரஷ்யா", பிரான்ஸிடம் பயப்படச் சிறிதும் ஹேதுவில்லையென்ற ஸித்தாந்தம் அவருக்குண்டு. இதைக் கருதி, "ஆஸ்டிரியா" 'ரஷ்யா", இவ்விரு ராஜ்யங்களுடனும், ஸ்நேக வுடன்படிக்கையொன்று செய்துகொண்டார். இதை "திரி சக்ரவர்த்தி ஸங்கம்" என்று ஜனங்கள் வழங்குகிறார்கள்.



ஒருவர் குடியை ஒருவர் கெடுப்பதில் ஆஸக்தியுள்ள ராஜ்யங்கள் ஒற்றுமையுடன் எவ்வளவு காலம் வாழமுடியும்? மேற்கூறியபடி "பெர்லின் காங்கிரஸி"ல் தன்னிடம் பொறாமையும் பயமுமுள்ள "ஆஸ்டிரியாவும்," "ஜர்மனியும்," தன் ஹிதத்தைச் சிறிதும் கருதவில்லையென்பது ரஷ்ய சக்ரவர்த்திக்கு விசதமாகத் தெரிந்துவிட்டது. பின்னர் அந்த ஸங்கத்திலிருக்கப் பைத்தியமா? மெள்ள அந்த உடன்படிக்கையினின்றும் நீங்கிவிட்டார். நீங்கவே, தங்களுடைய அபிவிருத்திக்கு அத்யாவசியமென்று காண்பித்து, "ஆஸ்டிரியாவும்", "ஜெர்மனியும்" ஸமயம் நேர்ந்தவிடத்து பரஸ்பர முதவிசெய்வதென்று, பிஸ்மார்க் ஓர் உடன்படிக்கை வாங்கிக்கொண்டார்.

இவ்வாறிருக்க, 1881-ல், ஆபிரிகாவில் சண்டை நேர்ந்தது. "டியூனிஸ்" என்ற மாகாணத்தை "பிரான்ஸ்" கைப்பற்றி, மத்தியதரைக் கடலை தங்கள் ஆதீனத்திற்கு கொண்டுவர பிரயத்னப்பட்டது. சிறு ராஜ்யமாகிய "இடாலி" இது தனக்கபாயமாய் முடியும் என்ற பயத்தால், ஆவச்யகம் நேர்ந்தபொழுதிருக்கட்டுமென்ற எண்ணத்துடன், ஆஸ்டிரியா ஜெர்மனியுடன் சேர்ந்தது. இதற்குத்தான் "ட்ரிபுள் அலையன்ஸ்" (மூவர் ஸங்கம்) என்று பெயர்.

இந்த ஸங்கத்தினின்றும் விலகிக்கொண்ட ரஷ்யாவின் நிலையை சற்று விசாரித்து வந்துவிடுவோம். ஜர்மனி, ஆஸ்டிரியா இவைகளின் விருத்தியையும், அவைகள் தன் எண்ணத்திற்குத் தடையாய் நின்றதையும் கவனித்த ரஷ்யாவிற்குத், தனக்கும் ஏதாவது ஒரு பலம் வேண்டியதவச்யமென்றெண்ணி, மிகுந்த அஸம்மதமாயினும், வேறு கதியின்மையால், குடியரசாகிய பிரான்ஸுடன் சேர்ந்துகொண்டது. சிறிது காலத்திற்குள் தொன்றுதொட்டுப் பகைமை பாராட்டிவரும் பிரான்ஸ் இங்கிலாந்து இரண்டிற்கும், காலஞ்சென்ற சக்கரவர்த்தி ஏழாவது எட்வார்டினுடைய அபார முயற்சியால் ஸ்நேகமுண்டாக, இந்த ஸங்கத்தில் இங்கிலாந்தும் சேர்ந்தது. இதற்குத்தான் "ட்ரிபுள் என்டன்டே கார்டியாலே" (அன்பார்ந்த மூவர் ஸங்கம்) என்று பெயர்.

இவ்விதமாக, இந்நூற்றாண்டினாரம்பத்தில் மும்மூன்று ராஜ்யங்கள் கொண்டதாக, இரண்டு ஸங்கங்கள் ஐரோப்பாவிலிருந்தன. இரு கக்ஷியிலுமுள்ளவருக்கும் பரஸ்பரம் ஒருவரிடமொருவர்க்கு அவநம்பிக்கையும் பொறாமையுந்தான். தங்கள் ஸ்வயநன்மையைக் கருதி இந்த ஸங்கங்களேற்படவில்லையென்றும், எதிர்பாராது எதிரி தாக்காதபடி தற்காத்துக்கொண்டு, ஐரோப்பாவின் அமைதியைக் கருதினவையென்றும் வெளிக்கு வேஷம்; வாஸ்தவத்திலோ அயலான் கண் ஒன்று போவதற்கு தன் கண் இரண்டு போனாலும் போகட்டுமென்று தேங்காயுடைக்க எல்லா நாடும் தயார்தான்.

இப்படியிருக்க ஜர்மனியின் தத்கால ஸ்திதியால் இந்த யுத்தம் திடீரென்று ஆரம்பிக்கவும் எல்லா நாடுகளும் அதில் முனையவுமேற்பட்டது. அவ்வாறு ஜர்மனிக்கு என் அவசியமேற்பட்டதென்பதை விசாரிப்போமானால், நமக்கு இதில் ஸம்பந்தப்பட்ட ஸகலவிஷயங்களும் புலப்படும்.

பிரஞ்சுக்காரருக்குத் தங்களிடமிருக்கும் த்வேஷமும் தாங்களிழந்த நாடுகளைத் திரும்பக் கைப்பற்ற வேண்டுமென்று அவர்களுக்குள்ள ஆர்வமும் ஸ்வய பலமாவது துணை பலமாவதேற் படாததாற்றான் "பிரான்ஸ்" வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கிறதென்பதும், வாய்த்தால் கிழவியும் பாடுவாளென்றும், அம்மாதிரியான ஸமயம் நேராதபடி காக்க வேண்டியதவசியமென்பதும், ஜர்மானியருக்குத் தெரியுமென்று மேலே கூறியுள்ளோம். "பிஸ்மார்க்கின்"பின் ராஜ்யாதிகாரம் வகித்த தற்காலத்திய ஜர்மானிய சச்கரவர்த்தி "கெய்ஸர், வில்ஹெல்ம்" என்பவர்க்கு, பிரான்ஸிற்குள்ள ஸ்வல்ப பலத்தையுங் குறைத்து விடவேண்டுமென்றும் ஒவ்வொன்றாக ஐரோப்பிய நாடுமுழுமையும் தன் ஆக்ஞாசக்கரத்திற் குள்ளாக்க வேண்டுமென்றும் ஒரு பேராவா உண்டாயிற்று.

உதவியின்றித் தன்னைத் தனியே யெதிர்க்கக் கூடிய ராஜ்யம் உலகிலில்லையென்ற கர்வம் ஜர்மனிக்கு வந்துவிட்டது. ஆகவே, "பிரான்ஸின்" ஸ்வல்பபலத்தையும் குறைத்துப் பற்பிடுங்கின பாம்பாகச்செய்துவிட்டால், ரஷ்யாவின் உதவிக்கு வேறு தேசம் ஸுலபமாக முன்வராதென்பது ஜர்மனியின் அபிப்பிராயம். எனவே, ரஷ்யாவை சிறிது காலத்தில் முற்றிலும் முறியடித்துத் தங்கள் ஆதீனமாக்கிவிடலா

மென்று மெண்ணினார்கள். பலகாரணங்களை உத்தேசித்து ஆஸ்டிரியாவுடன் பலத்த ஸ்நேகம் செய்தாய்விட்டது. இவ்வாறு மத்தியக் கடல் முதல் வடஸமுத்திர பரியந்தமுள்ள நாடுகளெல்லாம் தங்கள் வசம்வர என்னதடை? அப்பதவி யடைந்தபின், கைத் தொழிலிலும் வியாபாரத்திலும் தங்களுக்குக் குறுக்காகவிருக்கும் இங்கிலாந்தையும் ஒரு நொடியில் ஹதமாக்கி, பூலோகமுழுமையும் ஓர் குடைக்கீழாளலாமென்ற ஆகாசக்கோட்டையை வேகமாக ஜர்மானியர் கட்டிவிட்டனர்.

இக்கோட்டையை விட்டு ஜர்மனியுட்புகுந்து, அதன் நிலைமையை விசாரிப்போம். சிறிதுகாலமாக ஜர்மனியில் ஜனத்தொகை விஷமேறுவதுபோல் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. ஜனஸங்கியை யதிகமாகவே கணக்கிறந்த ஜனங்களுக்கு பிழைப்பிற்கிடமில்லாமல் மிகுந்த அவதிக்குள்ளாயினர். கைத்தொழில்களும் ஏராளமாக விருத்தி யடைந்தன வென்றாலும் மேற்பட்ட ஜனங்களுக்குப் பிழைப்பிற் கேதுவாகும்படி அவ்வளவு விரைவாகவாவது முடியாதல்லவா?

இவ்வாறு பிழைப்பற்றுத், தங்களுக்கும் ராஜ்யத்திற்கும் பெரும்பாரமான கோடிகணக்கான ஜனங்களை என்ன செய்வதென்ற ஏக்கம் கவர்ன்மெண்டைச் சூழ்ந்து கொண்டது. வேறு ராஜ்யங்களிற்குடியேறிஜீவிக்கலாமென்றாலோ, அது முழுவதும் முடியுங் காரியமல்லவென்று நாம் சொல்லாமலே விளங்கும். மேலும், தத்காலம், ஒவ்வொரு ராஜ்யமும், ஸ்வதேசிகளைத் தவிர்த்து, அந்நியர்களுக்குதவுவதால் நஷ்டம் தங்களுக்காதலால், அவ்வாறு செய்யாதிருக்கவேண்டு மெண்ணத்துடன், அந்நியதேசத்தார்களை வெறுக்க ஆரம்பித்துவிட்டனர். தவிரவும், ஜனங்களுக்கு ஸ்வாதிகாரத்தோடுகூட ஜீவனோபாயமும் தேடிக்கொடுத்தால், அவர்களுக்கும் ஸ்வாராஜ்யாபிமான முண்டாகும்; ராஜ்யத்திற்கும் ஸமயங்களில். சிறந்தபலமாகுமல்லவா? இன்னமும், ஜர்மனியிற் கைத்தொழில்கள் விருத்தி யடைந்திருப்பது வாஸ்தவந்தான். ஸாமான்கள் மிகுதியாயும் விலைஸஹாய மாயுமிருப்பதும் வாஸ்தவந்தான். ஆனால் இக்காரணங்களை முன்னிட்டு ஜனங்கள் வாங்கினாலல்லவா பெருத்த லாபமும், மேன்மேல் அபிவிருத்தியும் அடையலாம். பிரகிருதமோ, ஒவ்வொரு தேசத்திலும், ஸ்வதேசாபிமானக் கிளர்ச்சியதிகரித்து ஒவ்வொருவரும், தான் நஷ்டமடைவதானாலும் பொதுவாகத் தந்நாட்டின் நன்மையை யுத்தேசித்து அந்நிய தேசஸாமான்களை வாங்கி அவர்களுக்கு லாபம் விளைப்பதில்லை யென்ற வீரகங்கண பத்தராயிருக்கின்றனர். இதற்கென்ன செய்யலாம்; யுக்தியொன்று பார்த்தார்கள். இங்கிலாந்திற் கிருப்பதுபோல், அகண்டமான ராஜ்யமிருந்தால், தங்களுடைய ஜனங்கள் சென்று ஸுக ஜீவனஞ் செய்வதற்கும், கைத்தொழில்களுக்கு வேண்டிய ஸாமான்கள் சேகரிப்பதற்கும், தங்கள் ஸாமான்களை விலைப்படுத்துவதற்கும் தகுந்த ஸாதனமாயிருக்குமென்ற முடிவிற்கு வந்தனர்.

இதைச் செய்து முடிப்பதற்கு எந்தப் பிரதேசத்தில் ஜர்மன் ராஜ்யமொன்று ஸ்தாபிக்கலாமென்று யோசித்தாலோ, ஸகல விஷயங்களிலும் இவர்கள் யோசனைக்குப் பொருந்தியதாக சின்ன ஆசியாவிலிருப்பது வெளியாயிற்று. அநடோலியா, க்ரோயேஷ்யா, ஸலோனிகா போன்ற பிரதேசங்கள் மட்டும் தங்களுக்கு கைவசப்பட்டால் மிகுந்த நன்மை யனுபவிக்கலாமென்ற ஆசை ஜர்மனிக்கு அதிகம்.

ஸாகராதிபத்யத்தில் முதன்மை பெற்றுள்ள இங்கிலாந்திடம் ஜர்மனிக்கு பொறாமையும் ஆவேஷமும் அதிகமென்று முன் கூறினோம். மெள்ள இங்கிலாந்திடமிருந்து ஸாகராதிபத்யத்தைப் பிடுங்கி இங்கிலாந்தின் அகண்ட ஸாம்பிராஜ்ய முழுமையுந்தானடைய வேண்டுமென்ற எண்ணம் வெகுநாளாயுண்டு ஜர்மானியருக்கு. இவ்வுத்தேசத்தைக் கொண்டே சென்ற 30 வருஷங்களாக, கப்பற்படையை வெகு தீவ்ரமாக அதிகப்படுத்திக் கொண்டே வந்தனர். இவ்வாறு கப்பற்படையையும் வெகு பலப்படுத்தி, அநடோலியா, முதலிய பிரதேசங்களையுங் கவர்ந்து, மத்தியதரைக் கடலிலுமொரு பெரிய கப்பல்படையொன்று ஸ்தாபிக்க ஒரு துறைமுகமும் அடைந்தால், ஸகஜ வைரியான இங்கிலாந்தை யழிப்பது ஒரு நொடி வேலையென்று, இக்காரியங்களை ஸாதிக்கப் பிரயத்தனப்பட்டனர்.

சின்ன ஆசியாவிலும், மத்தியதரைக்கடலிலும் தங்கள் அதிகாரத்தை ஜர்மனி ஸ்தாபிப்பதென்றால் பால்கன் தீபகல்பத்திலுள்ள



ராஜ்யங்களின் கதி என்னவாகுமென்று நண்பர்கள் யோசித்துப் பார்க்கலாம். அவ்வாறு ஜர்மனி செய்வது தங்களழிவிற்கு த்வஜாரோகணமென்று தோன்றுமல்லவா? ஜர்மனியின் எண்ணம் நிறைவேறி கிழக்கே ஒரு ஜர்மன் ராஜ்யம் ஸ்தாபனமானால், உரலிற்கு முலக்கைக்கும் நடுவிலகப்பட்ட பண்டம்போல், தாங்களிருந்த விடமறியாமல் அழியும்படி நேரிடுமென்பதை யறிந்தபின் அவர்கள் ஏன் சும்மா இருப்பார்கள்? எவனாவது தான் சாக மருந்துண்ணுவானோ?

இயன்றமட்டும் ஜர்மனியின் யோசனைகளை ஈடேற வொட்டாமலடிப்பது தாங்களடியோடழிந்தாலுஞ் சரி, ஜர்மனியின் கீழ்ப்படுவதில்லை யென்ற தீக்ஷை வகித்தனர். இவ்விராஜ்யங்களுக் கெல்லாம் தலைமை வகித்தது ஸெர்வியா என்ற சிறு ராஜ்யம். மிகுந்த அநாகரிகமான ஸ்திதியிலிருந்து ஆஸ்டிரியாவின் கீழ்வந்தபின்தான் விரைவில் அபிவிருத்தியும் நாகரிகமுமடைந்து விளங்கிற்று. எவ்வளவோ நன்மை ஆஸ்டிரியர்களால் தங்களுக்குச் செய்யப்பட்டிருப்பினும், கீழே விஸ்தரிக்கப்படுங் காரணத்தால் ஆஸ்டிரியர்களிடம் இவர்களுக்குக் கடும் த்வேஷமே. சென்ற சில வருஷங்களாக இந்த ராஜ்யம் விளைத்திருக்கும் கலகங்களுக்கும் குழப்பத்திற்கும் கணக்கு வழக்கில்லை. என்றாலும் பால்கன் ராஜ்யங்களுள் ஸகல விஷயங்களிலு மேம்பட்டுநிற்பது ஸெர்வியா தானென்பதற் கையமில்லை. உழுது பயிரிடுங் குடியரனவர் தானெனினும், போர்த்திறனில், ஐரோப்பாவில் இவர்களை மிஞ்சுபவர் கிடையாது. இத்தகைய வலிமை வாய்ந்த ஸெர்வியாவிற்கு, பால்கன், பொஹீமியா, போலண்ட் முதலிய தேசங்களில் சிதறிக்கிடக்கும் (ஸ்லாவ்) ஸ்வஜாதியரைத் திரட்டி, ஒரு அகண்ட ஸ்லாவ் ராஜ்யத்தை ஸ்தாபித்துத் தான் தலைமையாக விளங்கவேண்டுமென்ற எண்ணம் சில வருஷங்களாக உண்டு.

இவ்வாறு ஜர்மன் இச்சைக்கு முற்றிலும் இடையூறாக ஸெர்வியர்கள் வந்து முளைக்கவும், ஜர்மனிக்குண்டான கோபத்தை யார் அளவிட முடியும்? ஸெர்வியாவை அடியோடழித்து தங்கள் யுக்தியை ஸபலமாக்கிக் கொள்வதென்ற தீர்மானத்தை யடைந்தனர். ஸெர்வியாவிற்கும் தங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமில்லையாதலால், நேரிடத் தாங்கள் ஒன்றும் செய்யவியலவில்லை. ஆஸ்டிரியாவிற்கு தலையணை மந்திரோபதேசம் செய்துதான் இக்காரியத்தை ஸாதிக்க வேண்டியிருந்தது.

இந்த யுத்தத்திற்கு, முக்கியமாக இரண்டு காரணங்கள் காணப்படும். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய ராஜ்யங்களை அழித்துத்தான் முதன்மையாக விளங்கவேண்டுமென்ற மதம் பற்றிய ஜெர்மனியின் மனோரதம் ஒன்று; அநடோலியா முதலிய கீழ்தேசங்களை யாக்ரமிப்பதற்குத் தடையாயுள்ள பால்கன் தீபகல்பத்திலுள்ள ஸ்லாவ் ஜாதியாருக்கும், ஆஸ்டிரியாவிலும், ப்ரஷ்யாவிலுமுள்ள "டியூடன்" என்ற ஜாதியாருக்கும் தொன்றுதொட்டுள்ள பகையின் கொதிப்பு ஒன்று. முன்காரணத்தைப்பற்றி விஸ்தரித்தாய்விட்டது. பின்னர் கூறிய ஜாதிப் பகைக்காய்ச்சலைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டுகளில் ரஷ்யாவின் வடபாகத்திலும், தென்பாகத்திலும் "ஸ்லாவ்" என்ற ஜாதியார் வஸித்து வந்தனர். நாகரிகமென்பது மிகவும் மட்டு; வீண்சச்சரவுகளில் அவர்களுக்கு நாட்டமேகிடையாது. ஒரு வம்பிற்கும் போகாமல் பயிரிட்டு ஜீவனஞ் செய்து வருவார்கள். அதில் மட்டும் அவர்கள் ஸமர்த்தர்களேயொழிய, ராஜ்யமென்றாவது கோட்டையென்றாவது அவர்கள் நினைப்பதுங் கிடையாது. இப்படியிருக்கையில், தென்கிழக்கு மூலையிலிருந்து காட்டு மிராண்டியரும், போனவிடங்களில் கொள்ளையிடுவதும், நகரங்களைப் பிடித்துத்தங்கள் ஜனங்களைக்கொண்டு அந்நாடுகளிலுள்ள செல்வத்தை யநுபவித்தழித்தபின் வேறு தேசங்களை யாக்ரமிப்பதும் இதேதொழிலாக வுடையவருமான அநேக ஜாதியர் ஐரோப்பாவிற்குள் புகுந்தனர். ஹன்ஸ், ஆவார்ஸ், பல்கர்ஸ், டார்டார்ஸ், முதலான மங்கோலிய வகுப்பைச் சேர்ந்த நாடோடிகள் வந்து "ஸ்லாவ்" ஜாதியாரை தங்களாணையின் கீழ்ப்படுத்திக் கொண்டனர். அவர்களைக்கொண்டு தங்களுக்கவசியமான ஸாதனங்களைப் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு ராஜ்யமாக விழுங்கத்தலைப்பட்டனர். நாளடைவில் சிறிது சிறிதாக இம்மூர்க்கரும் ஸ்லாவியரின் குணத்தையே யடைந்தனர். ஆயினும் "ஸ்லாவியர்" இக்காட்டு மிராண்டிக

ளிடம் பட்ட அவஸ்தை கொஞ்சமல்ல. ஹன்ஸ், ஆவார் என்ற இருவகை ஜாதியாரிடம், ஸ்லாவியரடைந்த அவஸ்தைகளை நினைக்கவும் அரிது.

அக்காலத்தில் இப்பொழுது ஆஸ்ட்ரியாவிலும் ஜர்மனியிலுமுள்ள ஜனங்களாகிய ட்யூடன் என்னும் ஜாதியர் ஸ்லாவியரிருந்த ராஜ்யங்களின் மேற்கேயுள்ள ராஜ்யங்களை ஆக்ரமித்திருந்தனர். சிலவருஷங்களில் தென்பாகங்களையும் மேல் ஐரோப்பிய நாடுகளையும் வசமாக்கியிருந்த “காத்யர்” போன்ற சில ஜாதியாழிவடைந்து ஊர்விட்டோட, கிழக்கே தயாராயிருந்த ட்யூடானியர் மெள்ள இடம் பெயர்ந்து காலியான ராஜ்யங்களைக் கைவசமாக்கினர். இவர்கள் இடம் பெயரவே, கிழக்கேயுள்ள ஸ்லாவியர் இவர்களிருந்த பிரதேசங்களிற் குடியேறினர். இவ்வண்ணம் இடம் பெயர்ந்த ஸ்லாவியரில் கடைசியாக பால்கனிற் சேர்ந்த ஸெர்வியரே முதன்மையானவர். நிற்க, மேற்கே புறப்பட்ட ட்யூடானியர் ஜெர்மனியை வசஞ் செய்துகொண்டு தங்கள் ராஜ்யத்தை கீழ்திக்கில் விஸ்தீர்ணஞ்செய்ய வாரம்பித்தனர். ஆஸ்ட்ரியாவும் ட்யூடானியர் வசம் வந்ததும், ட்யூடானியர் மிக்க பலமுற்று விளங்கினர். ஆஸ்ட்ரியாவிற்குக் கிழக்கிலுள்ள தேசங்களோ மேலே கூறிய பிரகாரம் ஸ்லாவியரால் குடியேறப்பட்டிருந்தன. மெள்ள ட்யூடானியர் இந்த ஸ்லாவிய நாடுகளை தம்மாதீனத்திற்குள்ளாக்கிவிட்டனர். பொஹிமியா, போலண்ட் என்ற விரண்டு ராஜ்யங்களிடம் மட்டும் ட்யூடானியரின் ஜம்பம் செல்லவில்லை. எனவே ஆஸ்டிரியா ஹங்கேரியிலுள்ள மற்றொரு ஜாதியாராகிய ‘மாகியாரு’டன் நேசவுடன்படிக்கையொன்று செய்துகொண்டு, இருவருமாக பொஹிமியாவையும் தம்வசப்படுத்திக் கொண்டனர். இவ்விதம் ஸ்லாவியரைத் தாக்கித் தங்களாளுகைக்குட் கொணர்ந்தது மல்லாமல், ஹன்ஸ், ஆவார்ஸ், இவர்களுக்கு முன்செய்து வந்தது போலவே ஸ்லாவியருடைய ஸாமர்த்தியத்தையும், வலிமையையும், சிரமத்தையும், தங்களுக்கு லாபத்தை யளிக்கும்படியான வழிகளிற் செலுத்திவந்தனர். ஸ்லாவியர் என்னவஸ்தைப்பட்டாலும் பாதகமில்லை; தங்களுக்கேதேனும் ஸாதகமேற்பட்டால் போதும் என்று எண்ணி ஸ்லாவியரை மிக்க தொந்திரவுக்குள்ளாக்கினர். மேலும் பொஹிமியா ஒன்றைத் தவிர மற்ற ஸ்லாவ் நாடுகளில் வெகுகாலம்வரை கிறிஸ்துமதம் பரவவில்லை. கிறிஸ்து மதத்தை அவர்கள் தழுவாதிருக்கவே, மதவேறுபாட்டாலுண்டான பகையும் சேர்ந்தது. கிறிஸ்தவால்லா ஸ்லாவியருக்கும் விலைகொடுத்து வாங்கின அடிமைகளுக்கும் பேதமில்லையென்றெண்ணிய ட்யூடானியர் தாங்கள் ஸுகஜீவனஞ் செய்யவும் அதற்கு ஸ்லாவியருழைக்கவுமாக ஆக்ஞை நடத்திவந்தனர். நெற்றி வியர்வை நிலத்தில் வடிய அயலானுடைய ஸுகத்திற் குழைப்பதென்றால், யாருக்குத்தான் மனங்கொதிப்பிராது? யார்தான் அவ்வித அடிமைத்தனத்தினின்றும் நீங்க வழிதேடாமலிருப்பார்? பொஹிமியாவிலுள்ள ஜனங்கள் மட்டும் சீக்கிரம் கிறிஸ்தவர்களாய்விடவே, ட்யூடானியருக்கும், ஸ்லாவியருக்கும் இங்கவ்வளவு கொழுந்துவிட்டெரியும் த்வேஷமில்லையென்றாலும், த்வேஷம் அடியோடு போகவில்லை. எவ்வாறுபோகும்? “போலண்டி”லுள்ள ஸ்லாவியரோ ஸ்வஜாதி யபிமானக் கிளர்ச்சி மிகுதியாக உடையவர். ஜெர்மனியின் வாடை வீசியும், ரஷ்யாவுடன்* தங்கள் நாடு ஐக்கியமாகியும், ஜாதி யபிமானமும், ஸ்வேச்சையடைந்து ஸ்லாவ் ராஜ்யமொன்றுண்டாக்கி அதில் வாழவேண்டுமென்ற தீரா ஆவலுங்கொண்டவர்.

இவ்வாறு “பால்கன் தீபகல்ப மென்ன”, “பொஹிமியா” வென்ன, “போலண்ட்”என்ன இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஸ்லாவ் ராஜ்யமொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஆசையை வெளிக்காட்டக்காட்ட, ட்யூடானிய ராஜ்யமாகிய ஜர்மனியும், ஆஸ்டிரியாவும் ஒன்று சேர்ந்து தொன்றுதொட்டு தங்கள் நன்மைக் குழைத்துவரும் ஸ்லாவியரை ஸ்வேச்சையடையும்படி விட்டுவிட்டால் தங்களுக்கு நஷ்டமும் விபத்தும் விளையுமெனக் கருதி, ஜாதி யபிமானக் கிளர்ச்சியை யடக்க மிகுந்த பிரயத்னங்கள் செய்தன. ஸ்வேச்சையைத் தவிர வேறெதுவும் தரத் தயாராயிருப்பதாகவும் ஆஸ்டிரியா சொல்லிற்று. நாகரிகத் தேர்ச்சிக்கடையாளமான அநேக சீர்திருத்தங்களை யுண்டுபண்ணிற்று. என்ன பண்ணித்தானென்ன? வேண்டாப் பெண்டாட்டி கைப் பட்டாற் குற்றங் கால்பட்டால் குற்றம். என்னவுதவி செய்யினும் தங்களைக் கொடுமையாய் நடத்துவதாயும் தங்கள் ஸுகதுக்கங்களை முற்றிலு மலக்ஷியஞ் செய்வதாயும் ஸெர்வியா குற்றங் கூறிக்கொண்டே வந்தது.

ஆஸ்டிரியர்கள்தாம் என்ன செய்வார்கள்! இருவரும் பிடித்தபிடியை விடுவதாகக் காணோம். ஸ்லாவியரோ ஸ்வேச்சையைத் தவிர வேறொன்றையும் ஒரு பொருளாகக் கருதவில்லை. ஆஸ்டிரியாவோ ஸ்வேச்சை யொன்று மட்டும் அளிக்க இஷ்டப்படவில்லை இதற்கு முடிவுண்டோ? வரவர இரு ஜாதியாருக்கும் வைஷம்யம் வளர்ந்து கொண்டே வந்தது. இருபக்கங்களிலும் சண்டையை பலமாக மூட்ட அநேகர் தலைப்பட்டனர். இரு ஜாதியாருக்கும் ஒருவரை யொருவர் நிர்மூலமாக அழித்துவிடவேண்டியதைத் தவிர வேறு வழியில்லையென்று தோன்றிவிட்டது.

இந்நிலைமையை யறிந்த ஜர்மெனி தன்னெண்ணத்தை ஸாதிக்க இதுவே தருணமெனக் கருதியது. ஸெர்வியர்களிடமும், மற்றபால்கன் ராஜ்யங்களிடமும் ஜர்மனிக்குள்ள அடங்காக் கோபமும், அவைகளை அடியோடழிப்பதில் ஜர்மனிக்குள்ள ஸாதகமும் முன்னேயே கூறினோமல்லவா? அதற்கு ஆஸ்டிரியா மூலமாகத்தான் முடிக்கவேண்டிய தென்றும் சொன்னோம். ஸெர்வியருக்கு ஆஸ்டிரியடமுள்ள வேரூன்றிய த்வேஷத்தையும், ஆஸ்டிரியரை நாசஞ்செய்து ஸ்வேச்சையடைய அவர்கள் அடிக்கடி செய்யுங் கலகங்களையும் நன்றாக எடுத்துக் காட்டி, சீக்கிரம் கண்விழித்து ஸெர்வியர்களைத் தகுந்தபடி சிக்ஷித்துக் கீழ்ப்படுத்தினாலொழிய தங்களுக்காபத்தாய் முடியும் என்று ஜர்மானியர் போதித்தனர். இயற்கையிலேயே இப்பயமுடைய ஆஸ்டிரியருக்கு இப்புத்திமதி மனதிற் சுருக்கெனப் பதிந்தது. தகுந்த முகாந்தரமகப்படட்டுமென்று, மீன்வரவை யெதிர்பார்க்க கொக்கென விருந்தனர். வீராவேசமும், முரட்டுத்தனமும், பயமின்மையும், த்வேஷமும் நிறைந்த ஹ்ருதயமுள்ள ஸெர்வியரிடங் குற்றங் கண்டுபிடிப்பது கஷ்டமா? சிறிது காலத்தில் ஸெர்வியர்களே தங்களுடைய அகிருத்யத்தால், ஆஸ்டிரியாவிற்குத் தகுந்த போக்கொன்று ஏற்படுத்தினர். விஷப்பகையிலழுந்திய ஸெர்வியர் “ஸராஜீவோ”வில் ஆஸ்டிரிய இளவரசைப்புரிந்த படுகொலையை ஆதாரமாகக்கொண்டு தங்கள் கருத்தை நிறைவேற்றலாம் என்று ஜர்மானியர் ஆஸ்டிரியரைத் தூண்டினர். ஆஸ்டிரியாவைக் கொண்டே தன்வழியிற் குறுக்கிட்ட ஸெர்வியாவை நாசம் பண்ணி விடலாமென்பது ஜர்மனியின் எண்ணம். எதற்கும் தெய்வ ஸங்கல்பமல்லவா வேண்டும். ஜர்மானியர் இவ்விதம் நகத்தாற் கிள்ளியெறிந்து விடலாமென்றெண்ணிய ஸெர்விய யுத்தப் பூண்டு, கோடாலி கொண்டும் தகைய முடியாப் பெரும் விஷவிருக்ஷமாய் வளர்ந்துவிட்டது அதன் முடிவோ என்னவாகுமென்று ஒருவரும் நிச்சயஞ் சொல்ல முடியாது. தானிந்த யுத்தத்தில் தோற்றால் இருந்த விடம் புல் முளைக்க வழித்து விடுவார்கள் என்று ஸெர்வியாவுக்குத் தெரியும். இதில் ஜர்மானியர் ஜயமடைந்தால் தங்களுடைய ஸாகராதி பத்யத்திற்கும் ராஜ்யங்களிற்கும் அழிவு வெகு சீக்கிரம் வந்துவிடும் என்று இங்கிலாந்திற்குத் தெரியும். அவ்விதமே ‘பிரான்ஸ்’ ரஷ்யா, இவைகளும் தாங்களொன்று சேர்ந்து ஜர்மனியை முறியடித்தாலொழிய தனித்தனியே தங்களை ஜர்மனி விழுங்கிவிடுமென்பது தெரியும்.

எனவே, இந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட ராஜ்யங்களெல்லாம் முக்கியமாக தங்கள் தங்கள் உயிரைக்காப்பாற்றிக்கொள்வதற்கே போரிடுவதாகச் சொல்லலாம். ஆனால் துருக்கி மட்டும் இந்த ரணகளத்தில் நுழையவேண்டிய அவசியமட்டுந் தெரியவில்லை. ரஷ்யா துருக்கியை யாக்ரமியாது காப்பதிலும், ஜர்மனி சின்ன ஆசியாவை யடையாது தடுப்பதிலும், ஐரோப்பிய நாடுகள் ஜாகரூகரா யிருந்தனரென்று கூறினோம். ஆகவே துருக்கிக்கு அந்த பயமிருக்கக் காரணமில்லை. இருந்தால்தான் என்ன? திருடினவன் தலையாரிவீட்டில் ஒளிவதுபோல், ஜர்மனியோடா ஸ்நேகம் செய்யவேண்டும்? துருக்கியின்

(தொடர்ச்சி 210-ம் பக்கம்.)

* ரஷ்யா “ஸ்லாவ்” தேசந்தான் என்றாலும், மிகுதியாக ட்யூடனுடைய ஆளுகையின்கீழ் வெகுகாலமிருந்தபடியால்தான், ட்யூடனுடைய போர்த்திறன், ராஜரீக விஷயவிச்சை முதலிய குணங்கள் காணப்படுகின்றன. “ஸெர்வியா” முதலான ஸ்லாவ் தேசங்களுக்கு உதவி புரிவதாக ரஷ்யா முன் வந்தாலும் மிகுதியும் ஆஸ்டிரியாவை வருத்துவதற்கும் தன்னபிவிருத்தியை யுத்தேசித்துந்தான் சிறிது சிறிது ஜாதியபிமானமுமிருக்கலாம்.

## அமெரிகா ஆதி ஹிந்து கோயில் *

## FIRST HINDU TEMPLE IN AMERICA

உலகில் புராதனமாக இருக்கும் தத்வஞானமே இப்பொழுது புதிதாக அமெரிக்காவிலுள்ள ஸான் பிரான்ஸிஸ்கோ என்னும் பட்டணத்தில் வெளியாகி இருக்கிறது. இப்பொழுது இந்தப்பட்டணத்தின் குரு பீடத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் அரியமத விஷயங்கள் ஆதியில்—மனுஷ்யர்கள் தமது இலக்கியங்களில் அரிய எண்ணங்களை வெளியிடத் தொடங்கிய காலத்தில்—வெளிப்பட்ட சிறந்த உண்மைகளே, புராதன விஷயம் ஆராய்பவர்களால் மனிதர்கள் ஆதியில் வஸித்த இடம் என்று குறிப்பிக்கப்பட்டதும், புராதன கதைகளில் சிறப்பித்துக் கூறப்பட்டதுமாகிய ஸிந்து கங்கா மைதானத்திலிருந்து வருவது இவ்வரிய விஷயங்கள்.

மனிதர்களது அற்புத எண்ணங்கள் எப்பொழுதும் பூமியின் கிழக்குப் பாகத்திலிருந்து மேற்குப் பாகத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறதாம். ஆதியில் கிழக்கு தேசத்தியஞானிகளே பரம்பொருளைப்பற்றி தாம் த்யானத்திலறிந்த விஷயங்களை வெளியிட்டு மானிடர்களுக்கு தைர்யத்தை உண்டாக்கினர். இந்த ஞானம் கடவுள் பாதமாம் உலகெங்கும் பரவி அஞ்ஞான இருளை நீக்கியது. இந்த ஞானம் ஒருதரம் பூப்ரதக்ஷிணம் செய்துகொண்டு மறுபடியும் ப்ரதக்ஷிணம் செய்யத் தொடங்கவேண்டியது நியாயமே.

பூமியிலுள்ள மேற்குக் கண்டங்களில் ஏற்பட்டுள்ள முதல் ஹிந்துக் கோவில் இப்பட்டணத்தில் வெப்ஸ்டர் தெரு, பில்பார்ட் தெரு இரண்டும் ஸந்திக்கும் தென் மேற்கு மூலையில் இருக்கிறது. ஆதியில் வேதங்களில் அடக்கப்பெற்றுப் பின்னர் ஆதி ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பெற்ற தத்வஞானமானது பூமியின் குடகோளார்த்தத்தில் பிரஸங்கிக்கப்படும் இடமாக உள்ள கோயில் இது ஒன்றுதான். இது கட்டி ஸ்தாபனமானது 1908 ஏப்ரல்மாதம் ஐந்தாம்தேதி. இது இந்தியாவிலுள்ள கல்கத்தா நகரம் பேலூர்மடம் ராமகிருஷ்ண ஸங்கத்தார் மேல்பார்வையில் கட்டப்பட்டது.

இம்மடத்தைச் சேர்ந்த சில வேதாந்திகள் சேர்ந்து இக்கோயிலைக் கட்டிய விமரிசையை நோக்கில் இது இவ்வூரில் அநேக காலம் இருக்காமல் போகாது என்ற பூர்ண நம்பிக்கை அவர்களிடம் குடிகொண்டிருந்தது என்பதற்கு ஐயமில்லை. இதற்கேற்பவே கொஞ்சவருஷங்களுக்குமுன் இவ்வூரில் உண்டான பூகம்பத்தில் இக்கோயிலைச்சுற்றி கட்டிடங்கள்எல்லாம் சின்னபின்னமாகச்சிதறி அழிந்துபோக இக்கோயில் மாத்திரம் யாதொரு குறைவுமின்றி நிலைநின்றது. இக்கோயில் மிகப்பெரியதாக இல்லாவிடினும், ஏழு செயற்கை அற்புதங்களுள் ஒன்றாகிய அகராபுரி தாஜ்மஹாலைப்போலவும், மிகக் கீர்த்திபெற்ற ஜீவன்முக்திக்ஷேத்ரமாகிய காசியில் உள்ள கோயில்போலவும் இது கட்டப்பட்டிருக்கிறது. ஹிந்துக்கள் கோயில், கிறிஸ்தவர் கோயில், துலுக்கர் கோயில், ஸந்யாஸி மடம் முதலியவைகளின் முக்கிய சின்னங்கள் எல்லாம் இதில் அமைந்திருக்கிறது. அமெரிக்கர்கள் வஸிக்க யோக்கியமான வீட்டின் லக்ஷணங்களும்இதில் அமைந்துள்ளன. புராதன கோயில்களில் உபயோகப் படுத்தப்பட்டுள்ள ரத்னங்கள், ஸலவைக்கற்கள் முதலியவைகளுக்குப்பதிலாக ஸாதாரண மரம் கல்முதலியவைகளால் கட்டிய சிறு கோயிலாயினும் இதில் புராதன கோயிலிலுள்ள அறிகுறிகள் எல்லாம் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வறிகுறி விஷயங்களைப்பற்றி அநேக உதாரணங்கள் கொடுக்கலாம். பில்பார்ட் தெருவிலிருந்து சிரவணாலயத்தில் கொண்டுவிடும் வாயிலில் மேல் உள்ள விசித்திரவர்ண வேலைகள் அமைந்த ஸலவைக் கல் மேற்கட்டியானது யோக சாஸ்திரத்தில் ஆத்மானுபவஸ்தானம் என்று கூறப்படும் ஸஹஸ்ரா புரி என்னும் ஸஹஸ்ரதளபத்மத்தைக் குறிக்கின்றது. மிகுந்த விசித்திர வேலைகள் அமைந்த இதன் மத்திய வழி ஒரு கருடனிடம் நம்மைக் கொண்டுசேர்க்கிறது. இந்த கருடன் தனது இறகுகளைப் பிரித்துக் கொண்டு நமது நாட்டு மூன்று வர்ண (வெள்ளை, சிவப்பு, நீலம்)க் கொடியின்மேல் பறக்கிறது. இம்மாதிரி இந்நாட்டுச் சின்னத்தை இங்கு அமைத்தது, நமதுநாட்டார் இந்தக் கோயிலை எவ்வளவு மதிக்கிறார்கள் என்பதைக் குறிக்கின்றது. மேலும், கருடன் திவ்ய தேஜஸ், அனந்தம் முதலியவைகளைக் குறிக்கின்றது. அது இறகை விரித்துக்கொண்டு பறந்துபோவது, ஆகாயத்திற் கிளம்பி நமது நாடு மாத்திரமன்றி உலகமுழுவதையும் காப்பாற்ற முயலுவதைக் குறிக்கிறது. ஹிந்து தத்வசாஸ்திரத்திலோ கருடன், பலம், ஸ்திரபக்தி, விடாமுயற்சி, தயங்காது மேல்நோக்கிச் செல்லுதல் ஆகிய இக்குணங்களுக்கு அடையாளம். இக்கோயிலிலுள்ள ஒவ்வொருசிறியசிகரத்திற்கும் தெளிவான உட்பொருள் உண்டு. உட்பொருளில்லாத அழகிற்காக மாத்திரம் எந்தச் சிறு பாகமும்கூட இதில் அமைக்கப்படவில்லை. இதில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு வளைவிற்கும் வைதிக உட்பொருள் இல்லாமல் போகவில்லை. கோயிலிலிருக்கும் காற்று திசை காட்டிகூட ஸதாமாறிக்கொண்டிருக்கும் காற்று வரும் திசையைக் காட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு மாத்திரம் அல்லாமல் வேறு சிறந்த உட்பொருள்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலில் இருக்கும்படியான தனித்தனியாக நிற்கும் நான்கு கோபுரங்கள் நான்கு சிறந்த தத்வங்களையும், அவைகளில் அலங்காரத்திற்கு அமைக்கப்பட்ட ஸூர்யன் சந்திரன், பிறை, சூலம் முதலியவைகளும் அவைகளுக்கு ஏற்ற உட்பொருளையும் அடக்கியுள்ளன. இதில் உள்ள உட்கருத்துகளின்படி எல்லோரும் இங்கு இவைகளை மதித்தே வழிபடுகின்றனர்.



அமெரிக்கா ஆதி ஹிந்து கோவில்

இந்தக் கோயில் இரண்டுமாடியை உடையது;

* இந்த விஷயம் அமெரிக்காவிலுள்ள ஸான் பிரான்ஸிஸ்கோ என்னும் பட்டணத்தில் தினம் பிரசாரமாகும், ஈவினிங் போஸ்ட் என்ற பத்திரிகையில் ஓர் அமெரிக்காவாஸி எழுதியது. ப. ர.

(209-ம் பக்கத்தொடர்ச்சி.)

சின்ன ஆசியப் பிரதேசங்களையடையத்தானே ஜர்மனி பிரயத்தனப் படுவதெல்லாம்? பின் துருக்கி ஏன் இந்த யுத்தத்தில் தலையிட்டது?

ரஷ்யாவிடம் துருக்கிக்குள்ள பயமும் த்வேஷமுந்தான் நண்பர்களுக்குத் தெரியுமே. மெள்ள எகிப்து தங்கள் ஜாதியாளுகையின் கீழிருந்து, அநேக உபாயங்களில் பிரிட்டிஷ் ராஜ்யத்தைச் சேர்ந்தது முதல், இங்கிலாந்திடம் துருக்கிக்குக் கோபமும் பகையும் அதிகம். இதையறிந்து இங்கிலாந்தின்மேல் தீர்க்க வைரமுடைய ஜர்மனி மெள்ள துருக்கியுடன் ஸ்நேகஞ்செய்து, தான் என்ன சொன்னாலுங் கேட்கும்படி துருக்கியை மயக்கிவிட்டது. மெள்ள மெள்ள உபதேசஞ்செய்து இந்த யுத்தத்திலும் புகுத்திவிட்டது. முடிவோ நாமறிய முடியாது. கருணாஸாகரமான கடவுளருள் இருந்தவாறுதான் நடக்கும். எல்லாம் சுபமாகவே முடியுமாக.

அடிபாகத்தில்தான் சிந்தனைச்சாலை, உபதேசச்சாலை, சிரவணச்சாலை ஆகிய இடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சிரவணச்சாலையில்தான் வாரம்தோறும் நடக்கவேண்டியவைகளும், ஞாயிற்றுக்கிழமை நடக்க வேண்டியவைகளுமான மத விஷய கர்மங்கள் நடத்தப்படும். ஞாயிற்றுக்கிழமை தோறும் மூன்று உபந்யாஸங்கள் இங்கு நடக்கின்றன. ஒன்று காலை 10-45-மணிக்கும், மற்றொன்று பகல் 3-மணிக்கும், மூன்றாவது மாலை 7-45க்கும் நடந்து வருகின்றது. முதல் மாடி சிஷ்யப்பிள்ளைகள் தங்கும் இடம். மூன்றும் மாடி இந்த அரியசாஸ்திரவிஷயமாக பாடுபடத் துறவிகளாகவந்திருக்கும் ஸ்திரீபுருஷர்கள் இருக்கும் மடம்.

முற்கூறிய பூகம்பத்திற்கு முன்னமேயே இந்தக் கோயில் மடத்தில் அநேக துறவிகள் சேர்ந்திருந்தனர். இந்தக் கோயிலில் நடக்கும் உபந்யாஸாதிகளை எல்லா ஜாதி ஸ்திரீபுருஷர்களும் வந்து கேட்டு ஆனந்திக்கின்றனர். ஆனால் இதில் ஹிந்துக்கள் ஒருவரும் இல்லை என்பது ஆச்சரியகரமான ஸங்கதி. இங்குள்ள மடத்தில் துறவிகளாக வந்திருப்பவர் வேதாந்த சாஸ்திரத்தை எங்கும் பாவச்செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் வந்திருப்பவர். இவர்கள் முற்றும் துறந்தவர்கள் அல்லர். இவர்கள் தமது தொழில்களைச் செய்துகொண்டு அவைகளில் வரும் வரும்படியை இந்த வேதாந்த விஷயத்திற்கே அர்ப்பிதம் செய்துவிடுகின்றனர். வேதாந்திகளுக்கு மதம் மாற்றல் என்ற கெட்ட பழக்கமே இல்லாததால் அவர்கள் தூண்டுகோலால் இந்தக் கோயிலில் ஒருவரும் பலவந்தமாகச் சேர்க்கப்படுவதில்லை. கேட்பவர் மனம் கனிந்து வேதாந்த உண்மைகளின் சிறப்பை ஒப்புக்கொண்டு மடத்தில் ஒருவராகத் தாமே புகுவர். இதில் சேர்ந்திருக்கும் கந்யாமடம் ஸந்யாஸிமடத்தை விட்டு விலகி வேறாக இரண்டாம் மாடி மடத்திலேயே இருக்கிறது.

இம் மடவாஸிகளுக்கு ஸாதாரணவாழ்க்கையேமுக்கிய நோக்கம். இதனால் இவர்களுக்குச்சாப்பாடு, உடைமுதலியவைகளுக்குச்செலவாகும் பணத்தை கேள்விப்பட்டால் இங்கு உள்ளோர் நகைப்பர். இப்படி இருந்தும் மடவாஸிகளில் ஒருவராவது வெளுத்து, கண் உள்ளேபோய் சாப்பாடு குறைந்தவர்கள்போலக் காணப்படவில்லை. எல்லோரும் மிகவும் ஸௌக்கியமாகவே இருக்கின்றனர். இவர்களுக்கு ஜீவகாருண்ய குணம் வந்திருப்பதால் மாம்ஸ பக்ஷணத்தை சிலர் அடியோடு விட்டுவிட்டனர். இவர்கள் பருப்பு பழங்களையே ஆகாரம் செய்கின்றனர். ஆனால் இம்மடத்தில் சேருவதற்கு மாம்ஸ பக்ஷணம் விடவேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக வைக்கவில்லை. இந்த மடத்தில் ஸுமார் வயது 35 முதல் 40-க்குள்ளாக இருக்கும் ஒருவன் அச்சுக்கூட அதிபதியாக இருந்தவன். அவன்தான் கோயில் விஷயமான அச்சுவேலைகளை ஸரிவர நடத்திவருகிறான். மற்றவர்கள் தமது வரும்படிகளைக் கோயிலுக்கு அர்ப்பிதம்செய்து அன்னவஸ்திரங்களை மாத்திரம்தான் பிரதிபலனாகப் பெற்று அதோடு இஹலோக விஷயத்தில் திருப்தியாக இருக்கின்றனர்.

இத்தகைய கோயிலை நான் பார்க்கப் போயிருந்த ஸமயத்தில் காலை மத விஷய கர்மங்களை நடத்துபவராயும் மடாதிபதியாயும் உள்ள திரிகுணாதீதஸ்வாமிகள் என்னை எதிர்கொண்டழைத்து கைகுலுக்காது தமது மார்போடு கவசரூபமாக தமது கைகளை மடக்கிக்கொண்டு எனக்கு நல்வரவு கூறினார். இவ்வித வந்தனத்தின் உட்பொருளே மிகச் சிறந்தது. "உன்னையும் என்னையும் சிருஷ்டித்த பரம்பொருளது குழந்தை நீ. என் மனதை உன்னிடம் தடையின்றிக் கலக்க விட்டுவிடுகிறேன். இவ்வித ஸம்பந்தம் உனக்கும் எனக்கும் இருப்பதை உணர்ந்து உனக்கு வந்தனம் அளிக்கிறேன் என்பதே இவ்வித வந்தனத்தின் உட்கருத்து. ஆதலால் நாங்கள் கைகுலுக்குவதில்லை. அது இவ்வளவு சிறந்த உட்கருத்துடன் செய்யப்பட்டு வருவதல்ல" என்று ஸ்வாமிகள் எனக்கு தங்கள் வந்தனமுறையை விளக்கினார்.

ஸ்வாமிகள் சிந்தனைசெய்யும் சாலையில் ஏராளமாக இருந்த புஸ்தகங்கள் மிகவும் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஒழுங்காகவும், சுத்தமாகவும் இருக்கும். இதில் இருந்துகொண்டு ஸ்வாமிகள் என்னுடன் பேசிய பரிவும், காம்பீர்யமும் அடிக்கடி பேசும் விஷயங்களை வற்புறுத்த அவர் சுழல் நாற்காலியைச் சுழற்றி கையைநீட்டி புத்தகக் கூட்டங்களில் வெவ்வேறு இடங்களிலிருந்து



வேண்டிய புத்தகங்களைத் தயங்காது எடுத்து வெகு ஸ்வலபமாக பக்கம் திருப்பி எனக்கு வேதம் முதலியவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டிய அழகும் என் மனதை அவருக்கு அடிமைப்படுத்திவிட்டன. அவர் சிந்தனாலயத்தில் உலகிலுள்ள தத்வசாஸ்திரிகள் எழுதிய புஸ்தகங்கள் மதபுஸ்தகங்கள் எல்லாம் இருக்கின்றன. ஸ்வாமிகள் நடத்து கிறிஸ்தவமத : புத்தகத்திலிருந்து லகுவாக மேற்கோள்கள் காட்டுவதை ஒருவராலும் உபேக்ஷிக்கவே முடியாது.

இதன் பின்னர் இந்த வ்யாஸம் எழுதியவர் தமக்கும் திரிகுணாதீதஸ்வாமிகளுக்கும் வேதாந்தவிஷயமாக நடந்த ஸம்பாஷணையை எடுத்துரைக்கிறார்.

இதில் வேதாந்தம் மனிதனுக்கும் உலகத்திற்கும் உள்ள ஸம்பந்தத்தை இரண்டிலும் இருக்கும் பரம்பொருள் மூலமாக உள்ளபடி காட்டி, மனிதனை ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடையும்படி செய்து அவனை கெட்டகுணங்களிலிருந்து இவ்வாறு விடுவித்து அவனை எல்லா விஷயத்திலும் ஸௌக்யப்படுத்துகிறது. இங்கே இப்பொழுதே வீடடைவதற்கும் ஸாதாரண வாழ்க்கை, கபடமின்மை (அதாவது மனநேர்மை) ஆகிய இவைகளே ஸாதனங்கள். அமெரிக்காவில் இஹலோக விஷய ஆசைக்கு அளவில்லை என்ற உண்மை நன்கு வெளியாகின்றது. ஆதலால் புதிய நாகரிகத்தின் விருத்தியால் மனிதர்களுக்கு சித்தசஞ்சலம் அதிகமாகிக் கஷ்டம் அதிகரிக்கும்: மோசம், பணத்தாசை, பொறாமை வ்யாபாரத்தில் வரம்பு கடந்த போட்டி முதலியவைகளுக்கு இடங்கொடுக்கும் புதிய நாகரிகம் மனிதர்களுக்கு நிலைத்த ஸுகத்தைக் கொடுக்காது. ஆசை, விஷயங்களால் தீராது நெய் விட்ட நெருப்புப் போல் மூண்டெழும். ஆதலால் அதைஅடக்கி, ஸாதாரண வாழ்க்கை நிலைக்கு வரவேண்டும். கிறிஸ்து, வேதாந்த சாஸ்திர உண்மைகளை வெளியிட வந்த மஹான்களுள் ஒருவர். எவன் எம்மதத்தானாகிலும் அவன் தடையின்றி அதைப் பின்பற்றி மோக்ஷத்தை இங்கே இப்பொழுதே அடையக்கூடும் என்ற பொதுவான வேதாந்த நம்பிக்கையை விடாது இருக்கவேண்டும்; நாம் மிருகப்பிராயத்திலிருந்து மனிதர்களாகி இருக்கிறோம்; இனிமேல் பரம்பொருளாக வேண்டியது; இவ்வாறானால் துக்க ஸாகரமாக இருக்கும் இவ்வுலகமே ஆனந்த ஸாகரமாக மாறிவிடும்; இதுதான் கிறிஸ்துநாதர் கூறிய 'பரமபதம் உன்னுள்ளேயே இருக்கிறது' என்பதன் உண்மைப் பொருள், என்ற அரிய விஷயங்களை மிக உருக்கத்துடன் பரவசமாகப் பேசி இந்த வ்யாஸம் எழுதியவரை ஆனந்த ஸாகரத்தில் அமர்த்திவைத்தாராம். நண்பர்களே பாருங்கள்! கோயில் என்றால் இவ்வாறல்லவோ இருக்கவேண்டும்! அமெரிக்காவில் ஸாதாரணமாக செய்யக்கூடிய, ஒழுங்காகச் செய்யும், ஜனங்களுக்குப் பொதுவான மதவிஷய கர்மங்கள், கூட்டு ஆராதனை, கந்யாமடம் ஸந்யாஸிமடங்களை ஒன்றாகக் கோயிலோடு சேர்த்தல் முதலியவைகளை நாம் இங்கு பின்பற்றுவது அஸாத்தியம். ஆனால் உபந்யாஸங்கள், பாடசாலைகள் ஏற்படுத்தல் வேத ஆகமசாஸ்திர ஞானங்களை அர்ச்சகர்கள், அவசியம் உடையவராக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை மூலமாக வரவர அர்ச்சகர்கள் நிலையை உயர்த்தல், அர்ச்சகர்கள் மூலமாக உபந்யாஸங்கள் நடத்தல், அர்ச்சகத்தொழிலை மாத்வர்களிருக்கும் நல்லொழுக்கப்படி தாழ்ந்ததொழில் என்று எண்ணுதிருத்தல், கோயிலில் எல்லா வித்வான்களும் சென்று உபயோகப்படுத்தக்கூடிய பொது மத விஷயப் புஸ்தகாலயம் ஏற்படுத்தல், கோயிலில் ஆஸ்தான பண்டிதர்களை ஏற்படுத்தல், கோயில் மத விஷயப் பத்திரிகை நடத்தல், முதலிய அரிய விஷயங்களை எடுத்துக்கொண்டு நம் கோயில் தர்மகர்த்தர்கள் நடத்தினால் ஏன் நமது கோயிலில் பகவான் வந்து நேரே தோன்றமாட்டார்? ஏன் நம் நாடு இழிவான குணங்கள் நீங்கிக் கடைத்தேறாது? இவ்வமெரிக்காக்கோயிலில் இருக்கும் நல்ல விஷயங்களை நாமும் பின்பற்றி நடத்துவோமாகில் நமக்கு மிகுந்தசாந்தம் உண்டாகி நாம் ஸுகம் அடையமாட்டோமா?

---

ஸைப்பிரஸ்—இத்தீவு இப்பொழுது பிரிட்டிஷார் ஸ்வாதீனத்திலிருக்கின்றது. இது ஒரு காலத்தில்சுபிக்ஷமான தீவாயிருந்தது. அப்பால் துருக்கிராஜ்ய ஆட்சியினால் சீர்கெட்டுப்போயிற்று 1878-ம்வருடத்தில் ஆங்கிலேயர்களுக்கும் துருக்கியர்களுக்கும் நடந்த உடன்படிக்கைப்பிரகாரம் ஆங்கிலேயர்கள் துருக்கியர்களுக்கு பிரதிவருடமும் 92800 பவுன் ஜீவனாம்சமாகக் கொடுத்துவந்தார்கள். பிரிட்டிஷ் அரசாட்சியினால் இங்குள்ளவர்கள நன்மை யடைந்திருக்கின்றனர். இது மத்தியத் தரைக்கடலில் இருக்கின்றது.

# உச்சுவாஸ நிச்சுவாஸங்கள்

## RESPIRATION

நான்காமதிகாரத்தில் ரக்த ஸஞ்சாரத்தைப்பற்றிப் படித்தகாலத்தில் ரக்தாசயத்திலிருந்து வெளியே ரக்தம் கொண்டுபோகும் குழாய்களுக்கு ஆர்டரிகள் என்று பெயர் எனவும், தேகத்தில் பல விடங்களிலிருந்தும் ரக்தத்தை ரக்தாசயத்திற்குக் கொண்டுவரும் குழாய்களுக்கு வெயின்கள் எனவும் பெயர் என்று கூறியிருக்கிறோம். ஆனால் இவ்விருவகைக் குழாய்களினும் ஓடும் ரக்தம் ஒரு தன்மையானதல்ல. நம் விரலின் நுனியில் ஒரு கயிற்றை யெடுத்து இறுகக் கட்டிப்போடுவோமானால் அவ்விடத்தில் ரக்தம் கருமையாய் கட்டிப்போவதை நாம் பார்க்கலாம். இப்படிக்கு ரக்தம் கட்டுவதற்குக் காரணம் ரக்தவோட்டம் தடைபடுவது. கயிற்றை இறுக்கிக் கட்டியதால் ரக்தக் குழாய்கள் இறுக்கப்படுகின்றன. அதனால் அவ்விடத்திலுள்ள ரக்தம் வெயின்கள் மூலமாய் ரக்தாசயத்திற்கு வருவதற்குத் தடையுண்டாகிறது. ரக்தாசயத்திற்கு வாமற்போவதால் ரக்தத்திற்குரிய நல்ல சிவப்புவர்ணம்போய் கருப்புவர்ணம் வருகிறது என்று அறிந்துகொள்ளலாம்.

நம்முடைய ஆர்டரிகளின் வழியே ஓடுகிற ரக்தமானது சுத்தமான சிவப்பு வர்ணமுடையதாகவும் வெயின்களின் வழியாக ஓடும் ரக்தமானது கருப்புவர்ண முடையதாகவுமிருக்கிறது. வெயின் ரக்தங்கள் வர்ணம் மாறுவது மட்டுமல்ல, அவைகளில் பலவிதமான அசுத்தங்களும் கலந்து விஷமாகின்றன. அதனால் அந்த ரக்தமானது சுத்தப்படுத்தப் படாமல் நம்முடைய சரீர ரக்தக்குழாய்களில் மற்றொரு தடவை பிரவகிக்குமானால் பிராண ஹானிக்கு இடமுண்டாகும் என்பதில் ஸந்தேகமில்லை. இப்படி ரக்தத்திற்கு விஷத்தன்மை கொடுக்கக் கூடிய முக்கியமான விஷ பதார்த்தம் கரியமிலவாயுவாம். இது நம்முடைய சரீரத்தில் எங்கெங்கு எவ்விதமாய் உண்டாகின்றதென்பதை 5-வது அதிகாரத்தில் விஸ்தாரமாய் சொல்லியிருக்கிறோம்.

நான்காவது அத்தியாயத்தில் கூறியுள்ள ரக்த ஸஞ்சாரத்திற்கு ரக்தத்தின் சுத்தீகரணந்தான் பிரயோஜனம். இப்படி ரக்தம் சுத்தமாவது நம்முடைய உச்சுவாஸ நிச்சுவாஸங்களால்தான்.

நான்காவது அத்தியாயத்தில் தேகத்தின் பல பாகங்களிலிருந்தும் ரக்தத்தைச் சேகரம் செய்து வலது ஆரிகிளில் கொண்டுவந்து ஒரு வெயின் சொரிகிறது என்று சொன்னோமல்லவா? அந்த ரக்தம் வலது வெண்ட்ரிகிளில் பாய்ந்து அங்கிருந்து பல்மனேரி ஆர்டேரிகள் வழியாய் சுவாஸாசயங்களுக்குக் கொண்டுபோகப் படுகிறதென்றும் சொன்னோம். இந்த ரக்தமானது சரீர பாகங்களிலிருந்து சேகரம் பண்ணப்பட்ட வெயின்களால் கொண்டுவரப் பட்டதாதலால் கருப்புவர்ணமுடையதும் விஷத்தன்மை யுடையதாயு மிருத்தல் வேண்டுமென்பது நாம் ஊஹித்தறியலாம். இதற்கு பல்மனேரி ஆர்டேரி என்று பெயர் கொடுத்திருப்பது இது சுவாஸாசயத்திற்கு ரக்தத்தை கொண்டுபோய்ச் சேர்க்கும் குழாய் என்பதனால்தான் இந்த ஆர்டேரி ஒன்றுதான் அசுத்தமான ரக்தத்தையேற்றுப் பரவ வைக்கிறது. மற்றவை சுத்தச்சிவப்பு நிறமான ரக்தத்தையே பரவ வைக்கின்றன. இந்த ஆர்டேரி ரக்தாசயத்தைவிட்டுப் புறப்பட்டுச் சற்று தூரம் போகுமுன்னர் இரண்டு கிளைகளாகப் பிரிந்து வலது இடது சுவாஸாசயங்களுக்குச் செல்கின்றது.

மறுபடி சுவாஸாசயங்களிலிருந்து ரக்தத்தை ரக்தாசயத்திற்குக் கொண்டுவரும் குழாய்கள் பல்மனேரி வெயின் என்று நமக்கு முன்னமேயே தெரியுமே. இக் குழாய்களிலுள்ள ரக்தமானது மற்ற வெயின்களிலுள்ள ரக்தம் போலல்லாது சுத்தச்சிவப்பாயும் விஷத்தன்மையற்றதாகவுமிருக்கிறது. இதற்குக் காரணம் பல்மனேரி ஆர்டேரிகள் வழியாய் சுவாஸாசயங்களுக்குப்போகும் ரக்தமானது அங்கே சுத்தம் செய்யப்பட்டு ரக்தாசயத்திற்கு மறுபடி யனுப்பப்படுகிறதென்றிருக்க வேண்டும். ரக்தம் சுவாஸாசயத்தில் எவ்விதம் சுத்தப்படுத்தப்படுகிறது என்பதுதான் இந்த அத்தியாயத்தின் முக்கிய விசாரணை.

சுவாஸாசயங்கள் என்பன மார்பகத்தின் இருபுறத்திலும் பரவி ரக்தாசயமும் அதன் குழாய்களும் இருக்குமிடம்தவிர பாக்கி இடங்களை ஆக்கிரமித்து நிற்கும் பைகள் போன்ற



இரண்டு அவயவங்கள். இவைகள் ஒரு விதமான சிவப்பு வர்ணமாயும் மிருதுவாயும் சுருங்கி விரியக்கூடியனவாயு மிருக்கின்றன. நாம் வாயினாலும் நாசியினாலும் உட்கொள்ளுகிற காற்றானது ட்ரகீயா என்று பெயர் கொண்ட ஒரு குழாய்வழியாக வந்து இரண்டு பிரிவாகப் பிரிந்து இரண்டு சுவாஸாசயங்களுக்கும் போகிறது. இக்குழாய் ஆஹாரவாஹினி என்ற கல்லெட்டுக்கு முன்புறமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. உட்செல்லுமாகாரம் இக்குழாய்க்குள் செல்லாமலி ருக்கவேண்டியதற்காக இதில் ஒரு மூடி போடப்பட்டிருக்கிறது. இது சுலபமாய் மூடவும் திறக்கவும் செய்யும். இது திறந்திருக்கும்பொழுது ஆஹாரம் தண்ணீர் முதலியவை இக்குழாய்க்குள் செல்லுவதைத்தான் புரையேறுதல் என்கிறோம்.

இந்த சுவாஸாசயங்கள் மார்பகத்தின் வெளிச்சுவர்களோடும் — டயாப்ரம் என்ற குடலகத்தையும் மார்பகத்தையும் பிரிக்கிற அவயவத்துடனும் ஸம்பந்தப் பட்டிருக்கிறது. மூற் கூறியபடி ஆஹாரவாஹினியின் முன்புறமாக வருகிற ட்ரகீயாக் குழாய் சற்றுதூரம் வந்தவுடனே இரண்டு பிரிவாகி அதிலிருந்து அநேகம் கிளைகள் வெடித்து மரத்திலிருந்து கிளைகள் வெடிப்பதுபோல் வரவர அதிகமாகி மரத்தினிலைகள்போல வெகுசிறிய ஏர் ஸெல்ஸ் (air cells) என்ற உருண்டையான சிற்றறைகளால் முடிகிறது. ஆகவே நாம் உட்கொள்ளும் ஆகாயமானது இக்குழாய்களின் வழியே இந்த ஏர் ஸெல்ஸ் என்ற அறைகளிற்போய் எட்டுகிறது.

பல்மனேரி ஆர்டரி பல பாகங்களாகப் பிரிந்து கடைசியில் மயிரிழைபோன்ற குழாய்களாகி இந்த ஏர் ஸெல்ஸ்களுடைய மேற்புறம் முழுவதும் படர்ந்து பரவி நிற்கின்றன. இந்த ஆர்டரிகளிலுள்ள ரக்தம் அசுத்தமான ரக்தம் என்றும், அதிலுள்ள முக்கியமான அசுத்தம் கரியமிலவாயு வென்றும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோமல்லவா ? ஆகையால் இவ்விடத்தில் ரக்தத்திலுள்ள கரியமிலவாயுவை ரக்தமானது ஏர் ஸெலஸ்களில்வெளியிலிருந்து வந்தடைந்திருக்கும் சுத்தமான காற்றினிடங் கொடுத்து அந்த வாயுவினிடத்துள்ள பிராண வாயுவை மாற்றிக்கொள்ளுகிறது. இப்பிராண வாயுவானது கரியமிலவாயுவை விரட்டி ரக்தத்தைச் சுத்தப்படுத்துவது மன்றியில் ரக்தத்திற்குச் சிவப்பு வர்ணத்தையும் ஒரு விதமாக சுறுசுறுப்பையும் இப்படி சுவாஸாசயங்கள் சுருங்குவதனாலும் மறுபடி விரிவதனாலும், மார்பகம் தாழ்ந்தும் வீங்கியும் மாறுதல்களையடைகிறது. ஒரு பெரு மூச்சு உட்கொண்டோமானால் அப்பொழுது நம்முடைய மார்பின் மேற்புறமானது கொஞ்சங் கொஞ்சமாய் மேலே கிளம்பி மார்பகம் வீங்குவதை நாம் பிரத்தியக்ஷத்தில் காண்கிறோம். இதற்குக் காரணம் சுவாஸாசயம் விரிந்து இக்காற்றை யுட்கொள்ளுவது. இப்படி மறுபடி மார்பகம் தாழ்வது சுவாஸாசயங்கள் சுருங்குவதாலென்றறிக.

இவ்விதம் விநிமயம் (பண்டமாற்று) நடந்தவுடன் சுவாஸாசயங்கள் சுருங்குகின்றன. அப்படிச் சுருங்கும்போது அவைகளின் உள்ளிடம் குறைவதால் அங்குள்ள கரியமிலவாயுவை மிகுதியுங்கொண்ட வாயுவானது விரட்டப்படுகிறது. இது நம் நாசியின் வழியாய் வெளியே வருகிறது. இது நிச்சுவாஸம். இதற்குள் சுத்தம் செய்யப்பட்ட ரக்தத்தையேற்று பல்மனேரி வெயின்கள் ரக்தாசயத்தை நோக்கிச்செல்கின்றன. உடனே மறுபடியும் பல்மனேரி ஆர்டேரிகள் புதிதாக விஷத்தன்மையேற்ற ரக்தத்தைக் கொண்டுவந்து இந்த ஏர் ஸெல்ஸ்களில் தயாராக வைத்துக்கொண்டிருக்கின்றன.

இப்பொழுது சுவாஸாசயங்கள் மறுபடி விரிவடைகின்றன. அதனால் அவைகளின் உள்ளிடம் அதிகப்படுகிறது. வெளியில் விரட்டப்பட்டதுபோக மீதமிருக்கும் சொல்ப வாயுவானது அந்தவிடம் முழுவதிலும்பரவி தாக்குசக்தியில் (Pressure) குறைகிறது. அப்பொழுது வெளி ஆகாயத்திலுள்ள காற்றானது உள்ளே செல்லும்படி நேருகிறது. இப்படி காற்று நாசித் துவாரத்தின் வழியாய் உள்ளே செல்லுவதற்குத்தான் உச்சுவாஸம் என்று பெயர்.

இப்படி சுவாஸாசயங்கள் சுருங்குவதனாலும் மறுபடி விரிவதனாலும், மார்பகம் தாழ்ந்து வீங்கியும் மாறுதல்களையடைகிறது. ஒரு பெரு மூச்சு உட்கொண்டோமானால், அப்பொழுது நம்முடைய மார்பின் மேற்புறமானது கொஞ்சங்கொஞ்சமாய் மேலே கிளம்பி,

மார்பகம் வீங்குவதை நாம் பிரத்தியக்ஷத்தில் காண்கிறோம். இதற்குக் காரணம் சுவாஸாசயம் விரிந்து இக்காற்றையுட்கொள்ளுவதுதான். இப்படி மறுபடி மார்பகம் தாழ்வது சுவாஸாசயங்கள் சுருங்குவதாலென்றறிக

நம்முடைய நிச்சுவாஸக்காற்றில் கரியமிலவாயு மிகுதியுமிருக்கிறதென்பதையும், ஸாதாரணவாயுவில் அவ்வளவு கரியமிலவாயு இல்லையென்பதையும் நாம் ஸுலபமாய் நிரூபணம் செய்து காண்பிக்கலாம். சுண்ணாம்பை யெடுத்து நீராகக் கரைத்து, ஒத்துதாளைக்கொண்டு வடிகட்டுவோமானால் நல்ல சுத்த ஜலம்போல தெளிவான சுண்ணாம்பு ஜலம் நமக்கு கிடைக்கும். அதை இரண்டு பாத்திரங்களில் தனித்தனியே வைத்து, ஒன்றைத் துருத்திகொண்டு ஊதியும், நம் வாயால் ஊதவும் செய்தால், பின் கார்யத்தில் சுண்ணாம்புத் தண்ணீரானது கலங்கிப் பால்நிறமாக வெகு சீக்கிரத்தில் மாறிவிடுவதையும் மற்ற பாத்திரத்தண்ணீரை அப்படி சீக்கிரமாக மாற்ற முடியாதென்பதையும் நாம் காண்போம். இதன் காரணம் நாம் வாயால் ஊதும் காற்று நம்முடைய நிச்சுவாஸக்காற்று. துருத்தியால் ஊதப்படும்காற்றுசாதாரணவாயு. கரியமிலவாயுவிற்குத் தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீரைக் கலக்கி பால்நிறமாக்கும் சக்தியுண்டு. நம்முடைய நிச்சுவாஸக்காற்றில் கரியமிலவாயு மிகுதியுமிருப்பதால், சுண்ணாம்புத் தண்ணீரை அவ்வளவு சீக்கிரம் பால்நிறமாக்கியது.

கரியமிலவாயு விஷத்தன்மை யுடையதென்றும் அது நிச்சுவாஸத்தால் மிகுதியும் உண்டாகிறதென்றும் சொன்னோம். ஆதலால் ஒரு சிறு அறையில் அநேகம் பேர்கள் உட்கார்ந்திருக்கும்பட்சத்தில் அதிலுள்ள பிராணவாயு வரவரக் குறைவதுமட்டுமில்லாமல் கரியமிலவாயுவு மதிகமாகிக்கொண்டே வருகிறதென்பது நன்றாய் விளங்கும். ஆதலால், அவ்வறையிலுள்ளவர்களுக்குச் சீக்கிரத்தில் தலைவலியும், தலையில் ஓர் விதபாரமும் உண்டாகும். இப்படிப்பட்ட அறைகளில் காற்றோட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் பூரணமாகச் செய்யப்படவேண்டும்.

இதுபோலவே, நாம் இந்த தேகதத்வசாஸ்திரத்தைப் படித்ததினால், அநேகம் சுகாதாரவிதிகளையும் அந்த விதிகள் ஏற்பட்டிருப்பதின் காரணங்களையும் ஸுலபமாய் அறிந்துகொள்ளலாம். ஆகையால் இதனுடன் ஸம்பந்தமுடைய முக்கியமான சில ஸுகாதாரவிதிகளை இனியெடுத்துக்கூறுவோம்.

## காலஞ்சென்ற எர்ல் ராபர்ட்ஸ்
## THE LATE EARL ROBERTS

அனேக நூற்றாண்டுகளாய் இங்கிலாந்தின் பெருமையைக் காத்து அதன் ஏகாதிபத்தியத்தை பிறரபகரிக்காவண்ணம் போர்புரிந்து தங்கள் கீர்த்தியை நாட்டிய வீர சிகாமணிகள் பலராவர். ஸுமார் முந்நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தின் ராணியாயிருந்த எலிஸபெத் காலமுதல் கடற்படையிலும் தரைப்படையிலும் தேர்ச்சியடைந்து, தம் நாட்டார் என்றும் மறவாதிருக்கக்கூடிய வீரச்செயல்களைப் புரிந்துவந்தவர்களில் லார்ட் ராபர்ட்ஸ் முதல்வராய் விளங்கியுள்ளார். இவர் போரில் மாத்திரமன்றி ராஜதந்திர விஷயங்களிலும் 'மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்' என்னும் முதுரைக்கிணங்க சிறந்தவராய்த் தோன்றினர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த எர்ல் ராபர்ட்ஸ் புண்ய பூமியாகிய பரதகண்டத்தில் கான்பூர் என்னும் ராணுவ ஸ்தலத்தில் 1832௵ பிறந்தார். சிறுவயதிலேயே இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு அங்குதான் வளர்ந்துவந்தார். பத்தாவது வயதில் பாடசாலைக் கனுப்பப்பட்டு இங்கிலாந்தில் மிக ப்ரஸித்திபெற்றுள்ள ஈடன், ஸாண்ட்ஹர்ஸ்ட் முதலிய விடங்களில் கல்வி பயின்றார். இவ்விடத்துப் பாடசாலைகளே ஆங்கில வீரர்கள் பால்யப்பருவத்தில் போர்ப்பயிற்சி செய்யத் தகுந்ததாயுள்ள இடங்கள். நாம் இங்கிலாந்து தேச சரித்திரத்தில் படிக்கும் வீரர்கள் எல்லாம் ஏறக்குறைய ஈடன் பாடசாலைகளில் படித்துத் தேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது. இளமை முதற்கொண்டே ராபர்ட்ஸுக்கு கணித நூலில் மிக்க ஆர்வமுண்டு. சிறந்த போர்வீரர்களிடத்திலுள்ள நுண்ணிய அறிவிற்கும் அவர்கள் குறிக்கும் விஷயங்களின் நேர்மைக்கும் காரணம் அவர்கள் கணித நூலில்கொண்டுள்ள தேர்ச்சியே யெனத் தெரியவரும். இவரது கணிதநூல் திறமையை முன்னிட்டே இவரதுநண்பர்கள் இவருக்கு 'டிடக்ஷன்ஸ்' (கணக்குகள்) எனப் பெயரிட்டனர் போலும்! பிறகு 1852௵ வங்காளக் குதிரைப் படையில் உத்யோகம்பெற்று இந்தியாவிற்கு வந்துசேர்ந்தார். இவர் குழந்தையா யிருக்கும் போதே இந்தியாவினின்றும் அனுப்பப்பட்டனராதலின் தம்தகப்பனாரைக்கண்டவரில்லை. இந்தியாவிற்கு வந்து நான்கு மாதங்கள் கழிந்தவுடன் பஞ்சாப் மாகாணத்தில் அடிக்கடி அக்காலங்களில் உண்டாகும் சச்சரவுகளை அடக்க வேண்டி தம் ஸைன்யத்துடன்சென்றபொழுது அங்குதான் கண்டனராம். தாம் அவ்வந்தப் போர்களில் தம் திறனைக்காட்டி மேலதிகாரிகளின் அபிமானத்தை அடைந்தனர். 1857௵ இந்தியாவில் உண்டான பெரும் ராணுவகலகத்தில் இவர் தம் ஸாமர்த்யத்தையும் தீரத்தையும் காட்டினர். எதிரிகளுக்கும் அவர்களுடைய குண்டுகளுக்கும் சிறிதேனும் அஞ்சாது, தம் ஸஹாக்களுக்கு உதவிபுரிந்ததினிமித்தம் அரசாங்கத்தார் அவரை மெச்சி அதற்கறிகுறியாக 'விக்டோரியா க்ராஸ்' என்னும் ஸன்மானத்தையும் அளித்தனர். பிறகு அபிஸீனியா, லூஷேய் முதலிய பல இடங்களுக்கும்போய் ராணுவங்களுடன் சேர்ந்து மிக்க தேர்ச்சியடைந்தார். இதற்குள் ஆப்கானியருக்கும் இங்கிலீஷ்காரருக்கும் யுத்தம் தொடங்கிவிட்டது. யுத்தாரம்ப முதற்கொண்டே மிகுந்த ஆர்வத்துடன் ஆப்கானியருடன் போர்புரிந்துவந்தார். ஆங்கில ப்ரதிநிதியை வஞ்சகமாய்க் காபூலில் ஆப்கானியர் கொலை செய்ததைக் கேட்டு அவ்விடம் உடனே தம் ஸைன்யத்துடன் சென்று ஆப்கானியரை முறியடித்ததும் காபூலுக்கு வெகு தூரத்திலுள்ள காண்டஹார் என்னுமிடத்தில் மற்றொரு ப்ரிடிஷ் ஸைன்யத்தை ஆப்கானியர் முற்றுகை செய்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டார். என்ன செய்வார்? காண்டஹார்ஸமீபத்திலுள்ளதல்ல. மலைப்ரதேசத்தில்—எதிரிகள் வெகு எளிதாய் எதிர்க்கக்கூடிய வழிகளில்—ப்ரிடிஷ் ஸைன்யத்தின் உதவிக்கு அந்த க்ஷணத்திலேயே ஒரு ஸைந்யத்துடன் செல்லுவது ஸுலபமான காரியமல்ல. இருந்தாலும் மனவுறுதியும், தைர்யமும் பொருந்திய ராபர்ட்ஸ் தாம் குறிப்பிட்ட கணக்கின் பிரகாரம் காபூலிலிருந்து காண்டஹார் வந்துசேர்ந்து, அங்கு நம்பிக்கையிழந்து கிடந்த ப்ரிடிஷ் ஸைந்யங்களின் ரக்ஷகராய் விளங்கி ஆப்கானியரை முறியடித்து விரட்டியோட்டினார். இவர் செய்த வீரச்செயல்களில், இவர் காபூலிலிருந்து காண்டஹார் வந்ததே முதன்மையானது. இத்தகைய வீரத்தைக் காட்டியவர் வெகு சிலரேயாவர். அவரது தீரத்திற்கும் செய்கைக்கும் அவரை மெச்சி அரிய பட்டங்களளித்ததுமன்றி சென்னை ராஜதானியின் ஸைன்யத்திற்கு தலைவராகவும் நியமிக்கப்பட்டார். பிறகு இந்திய ஸேனாதிபதியாக நியமிக்கப்பட்டு, இந்திய ராணுவ விஷயங்களில் அநேக நூதன சீர்திருத்தங்களை நவீன முறைகளுக்கேற்பக் கொண்டுவந்தார். அவர் இந்தியாவிலிருந்துபோவதற்குமுன், அவைகள் நிறைவேறவில்லை யாதலால் அவரையே நேரிலிருந்து அவைகளை முடிக்கும்படி இன்னும் இரண்டு வருஷம் அவ்வுத்தியோகத்திலேயே யிருக்கும்படி வேண்ட அவ்வண்ணமே யிருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார். இவர் தம் வேலையினின்று நீங்கி இங்கிலாந்திற்குப் போவதற்கு முன், அவர் இந்தியாவில் உத்யோகத்திற்கு வந்தநாள் முதற்கொண்டு தம் ராணுவப் போர் வீரர்களில் தாமும் ஒருவராகவே பாவித்து அவர்களுடன் அளவளாவி அவர்களது அன்பையும் நன் மதிப்பையும் பெற்றனராதலின், இந்தியாவைவிட்டுப் பிரிவது அவருக்கும் இந்திய ஸைந்யங்களுக்கும் ஆற்றொணாத் துயரைத் தருவதாயிருந்தது. அவர் இங்கிலாந்தை அடைந்தவுடன் உயர்ந்த பட்டங்கள் மறுபடியும் கொடுக்கப்பெற்றவராய்ப் பிறகு ப்ரிடிஷ் படைகளுக்கு முக்ய ஸேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார்.

இதற்குள் இவர் ஆதியில் உத்தியோகம் பெற்றது முதல் 43 வருடங்களுக்கு மேலாயின. ப்ரிட்டிஷ் ஸேனாபதி பதவியிலிருந்து நீங்கினதும், ஸகஜமாய் விருத்தாப்ய காலத்தில் சமாதானத்துடன் ஏதாவதொரு விடத்தில் வாழ்வாரென்று நம்பலாம். ஆனாலப்படியில்லை. 63 வயதாகியும் அவருக்கு தேக தார்ட்யமும், சரீரவன்மையும், விடாமுயற்சியும், யௌவன புருஷனிடத்தில்போல் குன்றாது காணப்பட்டன. தென்னாப்பிரிக்கா சண்டை யாரம்பித்ததும், ஸேனாதிபதியாக ஒரு மஹாவீரன் தேவையேற்பட்டதும், எல்லோரும் லார்ட் ராபர்ட்ஸையே நோக்கினார்கள். அவர் செய்ததைச் சொல்லவும் வேண்டுமோ? ஜனங்கள் பிரார்த்தனைக்கிணங்கி,

தம் சகாயத்திற்காக லார்ட் கிச்சனர் (Lord Kitchener) என்பவரைத் தெரிந்தெடுத்துக் கொண்டு தம் கியாதியை விருத்தி செய்தும், தம் நண்பருடைய கியாதியைப் பரவவும் செய்தது லோகப் பிரஸித்தமானது.

தாம் இங்கிலாந்து திரும்பியதும், அத்தேசத்தின் ராணுவ நிலைமையையும், மற்றைய தேச ராணுவ நிலைகளையும் பரிசோதிப்பதிலும், தற்காலம் புதிதுபுதிதாய் கண்டுபிடிக்கப்பட்ட யந்திர தந்திரங்களை ராணுவங்களில் எப்படி உபயோகிக்கமுடியுமென்பதையும்பற்றி ஆராய்வதிலும் ஊக்கத்தைச் செலுத்துபவரானார்.

ஜெர்மனியிலிருப்பதுபோல், நம் தேசத்திலும், ஸகல வாலிபர்களும் கொஞ்சகாலம்கட்டாயமாய் ராணுவ ஸேவகம் செய்யவேண்டுமென்கிறசட்டம் இன்றியமையாததென்றும், அப்படியேற்பாடுகள் செய்யத்தவறினால், ஜெர்மனிக்கும் நமக்கும் சண்டையேற்படும்பட்சத்தில் ஸைன்யங்கள் யதேஷ்டமாய் சீக்கிரத்தில் நாம் தயாரிக்க முடியாமற் போகுமென்றும், இதரகண்டங்களிலுள்ள நம் ஆதீனத்திற்குட்பட்ட ராஜ்யங்களை சத்துருக்களினின்றும் பாதுகாப்பது வருத்தமாயிருக்குமென்றும், இங்கிலாந்திலுள்ளோர்க்கு, ஸமயம் வாய்க்கும்போதெல்லாம் வற்புறுத்துபவரானார். ஆனால் இவர் பிரயாஸையெல்லாம் செவிடன் காதில் சங்கூதுவது போலாயிற்று. இவருடைய புத்திகளைக் காதுகொடுத்துக் கேட்டு,கொஞ்சமாவது அனுஷ்டித்துவந்திருக்கும் பட்சத்தில், வர்த்தமான சண்டையானது நமக்கு ஸாதகமாய் முடிந்து வெகு நாட்களாயிருக்கும்.

நிற்க, லார்ட் ராபர்ட்ஸ் தாம் சாவதற்குமுன் நடந்துகொண்டது கணக்கில்லா வியப்பையுண்டாக்குகிறது. எண்பத்திரண்டு வயதாயிருந்தும், மனவன்மை, சரீரவலிமை குறையாது, யுத்தமந்திரிகளுக்கு யுக்தி உபதேசங்கள் செய்ததையும், தாம் நேரில் தம்சொந்த சரீரத்தைப் போற் பாவித்த தன் இந்திய ஸைன்யங்களைப் பார்த்து உத்ஸாகப்படுத்துவதற்கு ப்ரான்ஸ் தேசம் போய், தம்மைக் காணவேண்டுமென்கிற அவாவினால் குழந்தைகளைப்போல் பெருங் கம்பளிச் சட்டைகளைக் கூடத் திரஸ்கரித்து வந்த இந்திய துருப்புகளைப்பற்றி நினைத்ததும் தாமும் தம் கம்பளிச் சட்டையைத் தூரவிலக்கி தம் துருப்புகளையும் பார்த்து அவர்கள் நல்வரவேற்பை யங்கீகரித்து தாம் அவர்களை உத்ஸாகப் படுத்தினதையும் யோசித்தால், ஸாக்ஷாத் பீஷ்மாசார்யர் பழுத்த விருத்தாப்யத்திலும் குருக்ஷேத்திரத்தில் சத்துரு ஸைன்யங்கள்நடுங்கும்படி யுத்தம் புரிந்ததையும், அந்த யுத்தகளத்திலேயே மரணகாயம்பட்டு சரதல்பமாகிற அம்புப்படுக்கையிலமர்ந்து பரலோகமடைந்ததையும் ஞாபகப்படுத்துகிறது. ஆனால் ஒரு வித்தியாஸம் மட்டும் உண்டு. பீஷ்மர் அர்ஜுனனாலடிபட்டு மரண காயமடைந்தார். ராபர்ட்ஸோ, பீரங்கி சப்த மத்தியில் தேவாஸுர யுத்தத்தையும் பழிக்கும்படியாய் கோடிக்கணக்கான ஸைன்யங்கள் இருபுறத்திலும் யுத்தம் செய்ய தாம் ஒரு மனுஷ்யனாலடிபட்டு பிராணனை விடுவது இகழ்ச்சியென்று கருதினதால், தெய்வமே அவர் வேண்டுகோளுக்கிரங்கி ஸ்வச்சந்த மரண சக்தியைக் கொடுத்ததன்பேரில் தாமே இஷ்டப்பட்டு ரணகளத்தில் ரக்த வெள்ளப் பெருக்குகளினிடையில் பீரங்கிசப்தப் பேரொலியினிடையில் தேகவியோகமடைந்தார். கர்மாவினால் யுத்த வீரனானபடியாலும், ஜன்மதேசத்தினால் இந்தியரானதாலும், குணத்தினால் மஹாரதனானதாலும், இவர் யுத்தகளத்தில், இந்தியர்கள் மத்தியில், அனாயாஸமாய் பிறராலடிபடாமல் உயிர் நீத்தது இவருக்கே தகும். அவர்வீரஸ்வர்க்கத்தை அடைந்தாரென்பதிறையமுண்டோ?

---

**வைரம் நிறைந்த நாடு.**—தென்மேற்கு ஆப்ரிக்காவில் லூடரிட்ஸ்பே என்னும் நகரமானது ஜர்மன் ஆதீனத்திலிருந்தது. இப்பொழுது இந்நகர் ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழிருக்கின்றது. இது ஆரஞ்ஜ் நதிக்கு வடக்கில் 200 மைலிலுள்ளது. இது ஜர்மன் பிராந்தியத்தில் முக்கியமான துறைமுகப்பட்டணமாயிருக்கின்றது. லூடரிட்ஸ்பே என்னும் இந்நகர் ஒன்றே ஐரோப்பியர்கள் குடியேறத்தகுந்த வசதியாயிருக்கின்றது. 1908-ம் வருடத்தில் ஜூலை மாதத்தில் வைரம் நிறைந்த நாடென்று தெரியப்பட்டு அநேகர் குடியேறினார்கள். இவ்வைரங்கள் அநேகமாகச் சிறியனவையாயினும், அதிக விலையுயர்ந்தவை. இந்நகரம் 1908-ம் வருடத்தில் 39,000 காரட்டு மதிப்புள்ள வைரங்களைக் கொடுத்தது. 1909-ம் வருடத்தில் 1000000 பவுன் மதிப்புள்ள வைரங்களையும், 1912-ம் வருடத்தில் 766405 காரட்டுகள் கொண்ட வைரங்களையும் இந்நகர் ஈன்றது. இது 322450 சதுரமைல் கொண்டது. இதின் ஜனத்தொகை 14816. இதில் 12292 பேர் ஜர்மானியர்கள்.



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### 1. ஆத்திசூடி விளக்கம்

### 45. சான்றோரினத்திரு

பெரியோர்களிடமே நீ எப்பொழுதும் சேர்ந்திரு என்பது இந்த ஸூத்திரத்தின்பொருள். இங்கு பெரியோர் அல்லது சான்றோர் என்னுமிடத்து லௌகீகப் பெரியோரையும் வைதிகப் பெரியோரையும் கொள்ளலாம். லௌகீகப் பெரியோராவது உலக வ்யவஹாரச் சுழலில் அகப்பட்டு அதனுள் தமது அறிவின் வல்லமையாலும் பழக்கத்தின் வல்லமையாலும் ஸரிவர நடந்து மொத்தண்டு தேறிவருபவர்களான கல்விகேள்விகளினாலும்,சீர்சிறப்பு பெருந்தன்மை இவைகளினாலும் பெரியோராகக் கருதப்படுவர். வைதிகப் பெரியவராவது நமது வேத சாஸ்திராதிகளில் தேர்ச்சி அடைந்து உலகவாழ்க்கையை ஒருபொருட்டாக மதியாது வைதிக அனுஷ்டானங்கள் பக்திகள் த்யானங்கள் ஸமாதிகள் இவைகளையே வாழ்க்கைத் தொழிலாக உடைய மஹான்கள். இவ்விருவித சான்றோரையும் இங்கு கொள்ளலாம்.

இந்தச் சான்றோர் இனத்திருப்பது அதாவது நல்லோர் இணக்கமே,பாமரன்கூட பண்டிதனாகிவிட எளிதானவழி. தானே நேரேகற்றுணர்ந்து அதன்படி நடக்க முயன்று அநேகந் தரம் தவறித் திண்டாடி முடிவில் ஒரு நல்நடத்தையைக் கடைப்பிடிப்பதைவிட சான்றோர் இனத்திருந்தால், அதை வெகு எளிதாய் இயற்கைபோல நடத்திக்கொண்டிருக்கும் அவரைக்கண்டு,நாமும் அப்படியே நடந்துகொள்ள வேண்டும் என்ற மனஉறுதி ஏற்பட்டுவிடும். இம்மனஉறுதி ஏற்பட்டபின் பின்பு ஒருவன் ஒரு ஸத்விஷயத்திலிறங்குவானாகில் உத்ஸாஹச்சிறப்பால் வெகு எளிதில் அதை ஒழுங்குப்படி நடத்திவிட திறன் உண்டாகிவிடும். பெரியோர்களிடமே பழகிவரும் ஒருவனுக்கு நல்லவிஷயங்களில் ஈடுபட்டிருக்கத்தான் பொழுதிருக்குமே ஒழிய கெட்டவழிகளில் மனம் செல்லத் தருணமே வாய்க்காது. ஆதலால் நல்லோரிணக்கத்தால் மனம் எப்பொழுதும் நல்லவைகளிலே பாய்ந்துகொண்டுபோக அந்த வாஸனையே திடப்பட்டுவரும் கெட்டவாஸனைகள் தலை எடுக்கமுடியாது. பழக்கக் குறைவால் வலிவுகுன்றி மங்கிக் கொண்டேவரும். இப்படி சான்றோர் இனத்திருந்து பின்னர் தனித்து சிலகாலம் ஒருவனிருக்கும்படி நேரிட்டாலும் அப்பொழுது கிளம்பக்கூடிய கெட்ட வாஸனைகளை எளிதில் தலை எடுக்கவொட்டாது செய்யும் திறன் வந்துவிடும். அவைகள் வலிவு குன்றியிருப்பதும் நல்ல வாஸனைவிடாப் பழக்கமுமே இதற்குக் காரணம். வியாபாரியிடம் போனால் வியாபாரப்பேச்சும், வக்கீலிடம் போனால் சட்டப் பேச்சும், உபாத்யாயரிடம் பள்ளிக்கூடப் பேச்சும், இவ்வாறு யாராரிடம் போனபோதிலும் அவரவர் தொழிலைப்பற்றிய பேச்சு ஏற்பட்டு நமது மனதை அந்தந்த விஷயங்களில் ஊறச்செய்து அவைகளுக்குத்தகுந்த எண்ணங்களை நமது மனதில் திடப்படுத்திவிடுவதுபோல, தமது சாப்பாட்டு விஷயங்களுக்காகக் காலத்தைச் செலவிட வேண்டிய திண்டாட்டமும், உலக விஷயப்பற்று, உலக ஸுகத்தைத் தேடிச்செல்லும்வழியும்இல்லாது பொதுஜன நன்மைக்கே உழைக்கத் தயாராகவிருக்கும் கவடற்ற சான்றோரிடம் இணங்கியிருந்தால் அவர் மனப்போக்குக்கேற்ற பேச்சில் தான் முழுகி இருந்து சற்றுவாழ்க்கை இழிவை மறந்து எங்கிருந்தபோதிலும் நல்ல விஷயங்களையே கருதியிருக்கும் திறன் நமக்குவரும். இச்சான்றோர் இணக்கம் இல்லாது வாழ்நாளைக் கிடத்த எண்ணுபவன் வாணாள் வீணாகப்போய் வயிற்றின்ப சிற்றின்பமாகவே மிஞ்சிவிடும்.

லௌகீகச் சான்றோர் விஷயச் சிறப்பே இவ்வாறிருக்க வைதிகச் சான்றோர் விஷயத்தைக் கூறவும் வேண்டுமா! அவர்கள் வெறும் ஸந்நிதான மாத்திரத்திலேயே கொடியவர்களின் எண்ணங்களே நல்லதாகிவிடும் என்று புராணங்கள் கதறும். பிராஹ்மணனாய்ப் பிறந்து இணக்கக் கேட்டால் வேடர்தொழிலைப் பின்பற்றி பாட்டைசாரிகளைக் கொள்ளையிட்டுக் கொன்று சாய்த்து வந்த வால்மீகி, ஸப்தரிஷிகளைக் கொள்ளையிடப்போய் அவர்களைக் கண்டஉடன் மனம்மாறிவிடப் பின்னர் அவர்கள் உபதேசத்திற்கும் தகுந்தவரானார். ஸநத்குமாரரை, தன் திக்கு விஜயயாத்திரையில் காண நேரிட்டபொழுது, ராவணன் மனம் கனிந்து மாறிவிட 'ஸ்வாமி எனக்கும் ஈடேற வழி உண்டோ?'

என்று கேட்டான். அதற்கு ஸனத்குமாரர் ‘அப்பா என்னிடமிருக்கும் வரையில் உனக்கு இந்த நல்ல எண்ணம் இருக்கும். நான் என்ன நல்லவழி கூறினும் அப்புறம் போனால் இது மாறிவிடும். இதை முற்றிலும் மறந்துவிடுவாய். ஆதலால் உனக்கும் ஞாபகமிருக்கும்படியான ஒரு மோக்ஷவழி கூறுகிறேன் கேள். எந்தப் பெரியோரைக் கண்டாலும் அவரிடம் தீராப்பகையைத் தேடிக்கொள். இதைவிட வேறு வழியில்லை நீ ஈடேற’ என்றார். இதனால் சான்றோர் ஸந்நிதான விசேஷம் இப்படிப்பட்டது. அதுமாத்திரமாக எவ்வளவு பயன்படும் என்பதும் விளங்கும். ஆனால் இப்படிப்பட்ட சான்றோர் தர்சனமும் இணக்கமும்கிடைத்ததும் அவரோடு சேர்ந்தே பழகவேண்டும் என்று மனப்பூர்வமாக முயலுவாராயின் காட்சிகாலங்களில் தோற்றும் நல்லெண்ணங்கள் நிலைத்து அவரது எண்ணங்களை உயர்த்தி மனதைமுற்றிலும் மாற்றத் தொடங்கிவிடும். இம்மாதிரி மாறியவர்கள் அநேகர். சூத்திரப் பிள்ளையாக இருந்த நாரதர் தன் யஜமானன் வீட்டிற்கு வந்து சாதுர்மாஸ்ய விருதத்திற்குத் தங்கிய சான்றோரிடம் பழகிஈடுபட்டுவிட அவர்கள் சிறப்பால் அவர்பக்தி சிறப்புற்று ஓங்கி அடுத்த ஜன்மத்தில் நாரதராகும்படி செய்தது. முன்கூறிய வால்மீகியும் இந்த விஷயத்தில் திருஷ்டாந்தந்தான். அஜாமிளனுக்குப் பகவான்நாம உச்சாரண விசேஷத்தால் விஷ்ணுதூதர் தர்சனமாக அவன் எண்ணம் மாறிவிட்டது: பின்னர் இதை மனப்பூர்வமாகக் கைப்பற்றி முயற்சித்து ஹரித்வாரத்தில் கொஞ்சகாலம் தவம் செய்து கடைத் தேறினன். இம்மாதிரியான வைதிகச் சான்றோர்களிடம் செய்யப்படும் கூட்டுறவை ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியாள் ‘ஸத்ஸங்கத்தால் (உலக விஷயங்களில்) ஸங்கமின்மையும், இதனால் முறையே ஒன்றன்பின் ஒன்று காரியமாக மோஹமின்மையும், அழிவில்லா உண்மைவஸ்து அடைவும் ஜீவன் முக்தியும் கைகூடிவிடும் என்று முடிவு வரையில் எடுத்துக்காட்டிவிட்டார். அதாவது ஸத்ஸங்கத்தால் அஸத்ஸங்கம் நீங்கி அதற்குக்காரணமாகவிருக்கும் உண்மைப் பொருள் மறைப்பு விலக அது விளங்கி முடிவில் அதாகவே இருப்பதாகிய நிஜ ஸத்ஸங்கம் ஏற்பட்டுவிடும்.

இங்கு ஸத்ஸங்கம் என்ற சான்றோரினத் திருத்தலுக்கு ஸரியான ஸம்ஸ்கிருத பதத்தின் பொருள் நுட்பத்தைக் கவனித்தல் நலமாகும். இது ஸத்துக்களாகிய சான்றோரிடம் செய்யும் கூட்டுறவு என்று பொருள்படுவதோடும் உண்மைப்பொருளுடன் சேர்ந்துவிடுதல்என்ற பொருளையும் தரும். இப்பொருள்தான் மிக நுட்பமான பொருள். ஸத் என்ற பதத்திற்கு முக்காலத்திலும் மாறாதிருப்பது என்பது பொருள். சான்றோரினத்திருந்து அவர்களுடன் பழகுவது எவ்வளவுசிறந்ததாயினும் அவர்களுடனிருக்கும் சேர்க்கை மாறுபடாமல் எக்காலும் ஒரேமாதிரி இருக்குமா? அபிப்ராய பேதம், எப்படி நெருங்கி இணங்கி இருப்பவரையும் பிரித்து விடும். ஒருவனிடம் நெருங்கிப் பழகப்பழகத்தான் அவன் குறைகள் வெளியாகி மஹானென்று இணங்கவந்தவன் மனதின் ஆவல் குன்ற இடம் உண்டாகிவிடும். எல்லாவழியிலும் இசைந்த ஸத்ஸங்கம் ஒருபெரியவரோடு ஒருவனுக்குக்கிடைத்தாலும்மரணத்தால்பிரிவு ஏற்பட்டு மனச்சஞ்சலம் முதலிய மாறுபாடுகள் உண்டாகாமலிருக்குமா? ஆதலால் ஸத்ஸங்கம் என்ற சொல்லுக்கு ஸாதாரணமாக உள்ள பொருளைவிட ஸத்வஸ்துவான ஆத்மாவுடன் ஏற்படும் சேர்க்கை என்பது மிகப்பொருத்தமாக இருக்கும். ஸத்வஸ்துவான ஆத்மாவுடன் ஒருதரம் ஸரிவர சேர்க்கை ஏற்பட்டுவிட்டால் பின்னர் அது மாறவே மாட்டாது. எதனாலும் அதை பாதிக்கவே முடியாது. ஆகவே சான்றோரினத்திருத்தலுக்கு நேரான ஸம்ஸ்கிருத பதமான ஸத்ஸங்கம் இவ்வாறு ஸாதனத்தையும் ஸாத்யத்தைக் குறிக்கும் ஆற்றலையுமுடையது.

இந்த ஸூத்திரப்படி நடக்க இக்காலக் கொடுமை மிகுந்த தடைகளை உண்டாக்கி விடும். பொதுவாக சான்றோர் குறைவாகத்தான் காணப்படுவர். இக்காலத்திலோ அவர்கள் தொகை மிகக் குறைவே: ஆனால் பெரியோர் வேஷம் தரித்து நடித்து ஜனங்களை மோசம் செய்து தம்நோக்கங்களை மறைவாக முடித்துக்கொள்ளும் மஹாத்மாக்கள் அநேகர் காணப்படுவர். இவர்களைக்கண்டு மோசம் போகாது உள்ளபடி இருக்கும் சான்றோரைக்கண்டு பழகிவந்தால்தான் முற்கூறிய நன்மைகள் எல்லாம் விளையும். இக்காலத்திற்குப் பொதுவாக ஒரு அடையாளம் கூறிவிடலாம் சான்றோர்களை உணர



மோக்ஷத்தைக் கைகூடும்படி செய்யவேண்டும் என்ற கருணையுடன் மானிடர்களுக்குதவியாக இருத்தற்பொருட்டு வேதம் ஏற்படுத்தியுள்ள ஜாதிவரம்பு, ஸ்திரீபுருஷவரம்பு, விக்ரஹாராதனம், யோகவழி, கர்மானுஷ்டானம் இவைகளைக் கனவிலும் பழிக்க எண்ணாமையே சான்றோரிலக்கணம். இந்த அடையாளம் இல்லாதவர் எவ்வளவு சிறந்தவராகக் காணப்படினும், ஔவை இந்த ஸூத்திரத்திற் குறிக்கும் சான்றோரைச் சேர்ந்தவரே அல்லர். இப்படிப்பட்டவரோடு இணங்குபவர் குருடரால் வழிகாட்டப்படும் குருடர் ஒன்றுசேர்ந்து குழியில் விழுவது போல அதோகதியை இப்பிறப்பிலேயே அடைந்து தத்தளிப்பர். வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோகும் கரடியைக்கண்டு தன் வெள்ளாடுள் ஒன்றுஇது என்று ஏமாந்து கரையிலிருந்த ஆட்டிடையன் ஒருவன் தண்ணீரில் விழுந்து அதைப்பிடிக்க அது இவனைப் பிடித்துக் கொண்டது. அவன் கரையிலிருந்த ஒரு தோழனை நோக்கி‘ அண்ணே! வெள்ளாடு என்ன பாரமடா! என, தோழன் ‘தண்ணிதானே இழுத்து வாடா கடக்கட்டும்’ என ‘அப்பா தாளாது அப்பா’ என ‘அதை விட்டுவிட்டுவந்துவிடேன்,’ ‘அது விடமாட்டேன் என்னாதே!’ என்று பரிதவித்து. மூழ்கி மாண்டதாக ஒருகதையுண்டு. இக்கதிதான் வரும் வேஷதாரிகளான சான்றோரை அணுகிப்பழகும் அவலக்காரருக்கு. ஆகவே இக்காலக்கொடுமைக்கேற்ப முற்காலத்திய சான்றோர்களான, மகரிஷிகள், வித்வான்கள் முதலியோரையும் கடவுளையும் மானஸீகமாக வழிபட்டு, அவர்கள் வெளியிட்ட விஷயங்களை அன்புடன் ஆராய்வதே சான்றோரினத்திருத்தலாகும். இதைத்தான் பொதுவாக இக்காலத்தவர் செய்ய முயலவேண்டும். இது நிஜமான சான்றோரைக் கண்டறியும் ஆற்றலையும், அவரோடு பழகநேரிடுங்கால் அவர் உபதேசமொழிகளால் ஈடேறும் ஆற்றலையும்தந்துவிடும்.

# மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

We are but too apt to consider things in the state in which we find them, without sufficiently adverting to the causes by which they have been produced, and possibly may be upheld. Nothing is more certain, than that our manners, our civilization and thegood things which are connected with these, have, in this European world of ours, depended for ages on two principles; and were indeed the result of both combined; I mean the spirit of a gentleman and the spirit of religion. The nobility and the clergy, the one by profession, the other by patronage, kept learning in existence, even in the midst of arms and confusions, and whilst governments were rather in their causes than formed. Learning paid back what it received to nobility and to priesthood; and paid it with usury, by enlarging their ideas and by furnishing their minds. Happy if they had all continued to know their indissoluble union, and their proper place! Happy if learning, not debauched by ambition, had been satisfied to continue the instructor, and not aspired to be the master! Along with its natural protectors and guardians, learning will be cast into the mire, and trodden down under the hoofs of a swinish multitude.

நம்முன் காணப்படும் நிலைமைகள் எக்காரணங்களால் ஏற்பட்டன, எவைகளால் அவைகளை நிலைக்கும்படி செய்யலாம் என்பவைகளைக் கருதாமலே அவைகளின் தன்மைகளை நேரிற்கண்ட அளவே மதித்திருப்பது சற்றேறக்குறைய நமது இயற்கையாகி விட்டது. நமது ஐரோப்பிய ப்ரபஞ்சத்தில் இப்பொழுது காணப்படும் நடை உடை பாவனைகள், நாகரிக நிலைகள், இவைகளோடு பொருந்தியுள்ள நல்லவைகள் எல்லாம், தொன்றுதொட்டு இரண்டு ஆதாரங்களைப் பொருத்தது என்பதைவிட தெளிவாயுள்ளது வேறொன்றுமில்லை. சிற்சிலவைகள் இவ்விரு ஆதாரங்களின் கூட்டுறவாலேயே ஏற்பட்டவை. அவையாவன: உயர்குல ஆற்றலும், மதவிஷய ஆற்றலுமேஎன்பவைகளே என்றுதான் நான் கருதியிருப்பது. பிரபுக்களும், பாதிரி

(இதன் தொடர்ச்சி 222-ம் பக்கம்.)

# ராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

அண்ணனின் மனத்தை அறிந்த இலக்குவன்
அண்டம் அளாவிட அக்கினி வளர்த்தினன்.
அம்மையக் கினியைச் சுற்றி வணங்கி,
"மனம்வாக் காயம் மாசடைந் திருப்பின்
என்னை எரிப்பீ ரெந்தையே" என்று
அக்கினி பகவனை அன்புடன் தொழுது
பத்தா இராமனைப் பலசொலால் துதித்து
செங்கா லன்னம் செந்தா மரைக்கயம்
புகுந்திடும் போலும் புகுந்தா ளெரியில்.
அக்கினி தேவன் அம்மையை வந்தி
ஆலிலை துயின்ற அய்யனை வணங்கி,
"பாதி விரதம் பண்புடன் பூண்ட
அம்மையை யேற்பீ ரய்யனே" என்றான்.
இராமனு மேற்றான் எழில் மிக்காளை.
இந்திரன் தேவர் யாவரும் வந்து
மாமரம் துளைத்த மகிபனை வணங்கி
வீரத் தோளையும் வில்லையும் புகழ்ந்து
அம்மையின் அருந்ததித் தன்மையைப் புகன்று

(221-ம்பக்கத் தொடர்ச்சி.)

களும் முறையே ஆதரவு, அப்யாஸங்களாலே, சண்டைகள் குழப்பங்கள் மிகுந்த காலங்களிலும், ஆட்சி ஒழுங்குகள் ஏற்படாமல் காரண நிலையில்மறைந்திருந்த காலங்களிலும் கல்வியை ஓங்கி நிற்கும்படி செய்து வந்தனர். அவர்கள் பாவனைகளை விரிவாக்கி மனதை நிறையும்படி செய்து கல்வி, அவர்களிட மிருந்து தான்பெற்ற உதவிக்கு வட்டியும் முதலுமாக கைம்மாறு செய்துவிட்டது. இவர் மூவரும்பிரபுக்கள், பாதிரிகள், கல்விமான்கள் தமது இணைபிரியா ஒற்றுமையை நன்குணர்ந்து தத்தம் நிலையை மாறாது உணர்ந்துகொண்டே இருப்பாராயின் எவ்வளவு இன்பம் உண்டாயிருக்கும்! கல்விமான்கள் பேராசையால் மயங்கி அதிகாரநிலையை அடையக்கருதாது வழிகாட்டும் போதகர் நிலையில் திருப்தியுட னிருந்தால் ஸுகம் என்பதற்கு என்ன ஸந்தேஹம்! அவர்களுக்கு இயற்கையி லமைந்துள்ள பாதுகாப்போரும், ஆதரிப்போரும் உலைக்கு நிகரான எந்த குழப்பத்துள் புகுத்தப்படுவரோ அதனுள்ளேயே கல்விமான்களும் புகுத்தப்பட்டு பன்றிக்கு நிகரான பொது ஜனக் கூட்டத்தால் தொகைக்கப்பட்டு உருவிழுந்தே போய் விடுவர் (முற்கூறிய ஒழுங்கிற்கு விரோதமாக நடக்கப்புகின்).

தசரத தரிசனம் தயாபரற் களித்து,
"அயோத்தியா புரியின் அரசினை யேற்று
சீதா சமேதனுய்ச் செல்வனே வாழ்க.
மற்றும் வரத்தை மகிபனே கேளா"
யெனலு மெம்பிரான் இன்ப மெய்தி,
இறந்த வானரர் இயாவரும் உயிர்பெற
வரமும் கேட்க வரத்தினை யீந்து
இந்திர லோகம் இயாவரு மேகினர்.
இந்திரன் தேரில் ஏறிச் சென்றான்
மகிமையைக் கொண்ட மாதலி சாரதி
மகிமையைக் கொண்ட மன்னனைத் தொழுது.
அப்பால்,
சீதா சமேதன் சீதையை நோக்கி
ஆலிங் கனஞ்செய் தழியா வன்புடன்,
"உந்தன் மகிமையை உலகிற் பரத்திட
எண்ணியே இவ்வணம் செய்தனன் யானும்,
'கற்புடை யவட்குக் கணவனே தெய்வம்
என்னு முறுதியை இனிதிற் காட்டினை,
கற்புடையாளே ! காதலி !" என்று
செப்பலும் சீதை மகிழ் வெய்தினளே.
விண்ணுவாம் தலைவன் வீடணன் நோக்கி,
"பதினன் குவருட மாயது பரதன்
இன்றெனைக் காணு திருப்பி லிறப்பன்.
இன்றே இலங்கையை நீத்து அயோத்தியை
இன்றே கிட்டிடற் கென்செய் வேனென
புகலலும் வீடணன் புட்பக மெடுத்து
அய்யனின் பாதத் தருகே வைத்து
இணையடி மனத்தே இருத்தினன் மாதோ.
அதன்மேல் யாவரும் ஆரோ கணித்து
பரம னறிந்த் பரத் வாசனின்
ஆச்சிர மத்தரு கமர்ந்தனர் வந்து.
விருந்தாய் ரிஷியு மேற்றார் விண்ணுவை,
இராம னனுமனை இன்புட னழைத்து,
"அனுமனே ! அன்பன் குகனைக் கண்டு
எந்தன் வரவைக் கண்டு பின்னர்
பரதசத் துருக்கரைப் பார்த்துஎன் வரவை
அறைந்து மீளுதி அஞ்சனை புத்திரா"
எனவே விடுத்தலு மேகினன் மகிழ்ந்தே.
அனுமன் விண்ணில் அன்புடன் வருகையில்
குகப்பிரா செத்திட எண்ணலும், "குகனே!
இராமன் வந்தான். இறந்திடாதிருத்தி" யென்
றறைந்து அன்னவர்க் குயிரினை யளித்த பின்
வாயுவேகத் தொடும் வந்தன னயோத்தி
அயோத்தியில் பரதன் அக்கினி வளர்த்தி
சத்துருக்கனோடும் சதுதியிர் பாய்ந்திட
முவ்வலம் வரலும், முகுந்தனின் தூதன்,
'வந்தா னிராமன் வந்தான்' என்று
அக்கினி யவித்து அருள்மொழி கொடுத்து,
"அயோத்தி நீங்கி அரணியம் புகுந்து
இலங்கையை யாண்ட இராவணன் தங்கை
மூக்கு முலைதனை முனிந்து அறுத்துபின்



மாயமா னாக வந்த அரக்கனை
அம்பினை ஏவி அடித்து மடித்து
சீதையைத் தூக்கிய அரக்கனைத் தேடையில்
வலிமிகக் கொண்ட வாலியை மடித்து
சுக்கிரீ பனுக்கு சுவர்ண கிரீடம்
தலைதனி லேற்றிபின் தாண்டி கடலை
இலங்கைக் கரசன் இராவண வேந்தனை
படுகளந் தன்னில் படுத்து உடுவினால்
பரத் வாசரின் பண்புடை குடிசையில்
சீதா சமேதராய்ச் செல்வர் சூழ்ந்திட
இராவண னிளையோன் வீடணனுடனே
சிந்தை மகிழ்ந்து சிறப்புட னிருக்கும்
இராமனின் தூதன் என்பேர் அனுமான்!!
என்று விளம்பி எழுந்து கிளம்பி
இராமரை யடைந்து இராமரின் பரிகலம்
பரமனின் பத்தரின் பங்கியிலிருந்து
இருகர மேந்தி வாங்கிப் புசித்து
சென்று மீண்ட செய்தியைச் சொன்னான்.
எம்பிரா னிராமனு மனுமனைப் புகழ்ந்தான்.
காலையி லெழுந்து கங்கையை யடைந்து
குகனைக் கூவி கூடவே யழைத்து
அயோத்தியா புரியைக் கடிதிற் கிட்டினன்.
இராமனின் ஜனங்கள் இன்பமெய்தினர்,
பரதசத் துருக்காள் பாதம் பணிந்தனர்.
இருவரை யெடுத்து இன்புறத் தழுவி
ஆசீர் வசனம் அன்புடன் கூறி
தாய்மார் பாதம் தனையர் தொழுதபின்
வசிட்டரை வணங்கினன் மாமுனி நோக்கி,
"தாய்மார் களிக்க தம்பியர் களிக்க
மந்திரி மாரொடு மண்டலம் களிக்க
அண்டர் களோடு தொண்டர் பலரும்
கண்டு களிக்க கவின்முடி சூட்டிட
இன்றுநா" ளென்று இயம்பிப் பின்னர்
தம்பியாருடனே சடைமுடி களைந்து
அம்பு வியாள அணிமுடி தரிக்க
புண்ணிய தீர்த்தம் புனிதமாய் மூழ்கி
மண்ணில் வேதியர் மகிழ்ந்து வாழ்த்திட
ஓமாக் கினிவளர்த் தோதிட மந்திரம்,
சீதா சகிதம் சிம்மா சனத்தில்
ஸ்ரீ ராமபிரான் சிறப்புட னிருக்க
எங்கோன் வசிட்டன் எடுத்து முடியை:
"திங்கள் மும்மாரி சீர்பெற விளங்க
வேதம் வாழ வேதியர் வாழ
தேவ ராலயம் தினந்தொறும் வாழ
சத்திய மோங்கி நித்திய மாக
மன்னுயிர் யாவையும் நின்னுயிர் போல
காத்திரட் சிக்க கடவை. கருப்ப !
தேவ னுமாபதி தேவரின் தேவன்
சத்து சித்து ஆனந்த சற்குரு
சிற்றம் பலவன் சீருனக் கருள்வன்"

# கோவர்த்தனன் (ஒரு சிறிய கதை)

## GOVARDHANA—(A Short Story)

செட்டியார் வண்டியிலிருந்து இறக்கப்பட்டார். முகம் பயத்தால் வெளுத்துப்போயிற்று. உடல் நடுங்கியது. குடல் பதறியது. இன்ன செய்வதென்று விளங்கவில்லை. "ஐயோ! தெய்வமே!" என்று அலறினார். "கொலைசெய்யத் துணிந்தவனுக்குத் தெய்வமா?" என்றான் போலீஸ் அதிகாரி. தானொன்றும் செய்யவில்லையென்று செட்டியார் ஸத்தியம் செய்தார். கத்தி தன்னுடையதல்ல வென்றார். ரூபாய் நோட்டுகள், திருடியதல்லவென்றும் தன்னுடைய ஸ்வந்த ரூபாயென்றும் சொன்னார். போலீஸ் தலைவன் தன்னுடன் கொண்டுவந்த ரத்நவ்யாபாரியினுடைய கைப்புத்தகத்தை யெடுத்து அதில் குறிக்கப்பட்டிருந்த நோட்டின் நம்பர்களையும், இவர் பையிலிருந்தெடுக்கப்பட்ட நோட்டின் நம்பர்களையும் ஒப்பிட்டுப்பார்த்தான். இவைகள் அதே நோட்டுகள்! "நீர் வைத்திருந்த நோட்டுகளின் நம்பர்கள் தெரியுமா?" என்று போலீஸ் தலைவன் கேட்டான். அவர் எடுத்துக் கொடுத்தார். அவைகளுக்கும் இதற்கும் ஸம்பந்தத்தையே காணோம்.

ஜனங்களுக்கு செட்டியார்தான் கொலை செய்து விட்டாரென்று நம்பிக்கையாகிவிட்டது. போலீஸ்

(இதன் தொடர்ச்சி 224-ம் பக்கம்.)

எனவே இயம்பி அணிமுடி தரித்தனர்.
வேத வேதியர் வேதம் சாற்றினர்.
மங்கள ஓசை மழையென முழங்கிய,
தருமம் தழைத்தது தானம் ஓங்கிய
அமரர் யாவரும் அலர்மழை பெய்தனர்.
பின்னர்,
மந்திரி மார்கள் மனுமுறை யியம்பிட
செல்வம் ஓங்கி செழித்து வளர்ந்திட
பாரை யோதியாம் பாவை ஜானகியுடன்
பரதசத் துருக்க இலக்குன ருடனே
அயோத்தியை யாவரும் களித்திட ஆண்டனன்
இரவி குலத்தின் திலக னிராமன்
அருமறை தேடிடு மடியாய் போற்றி
எண்டிசை நிறைந்த எந்தையே போற்றி
திருவருள் தருவாய் திருவடி போற்றி.
இக்கதை கேட்டோர் இயம்பினோர் எழுதினோர்
நிச்சய மனத்துடன் நினைந்து இராமனை
பத்தியாய்த் துதித்தோர் பாவிய ராயினும்
இன்பம் துய்த்து இகத்தினில் வாழ்ந்து
பரத்தின் நற்பயன் பண்புட னடைந்து
ஐயன் திருவடி அடைந்து வாழ்வரே.

ராமாயண அகவல் முற்றிற்று

சுபம் ! சுபம் !! சுபம் !!!

காரர்கள் அவ்விடத்திலேயே ஒரு மகஜர் ஏற்படுத்திக்கொண்டு, செட்டியாரையும் அவரிடமிருந்தெடுக்கப்பட்ட பொருள்களையும் கைப்பற்றிக்கொண்டு போய்விட்டார்கள். செட்டியார் லாக்கப்பில் அடைக்கப்பட்டார்.

விசாரணை நடப்பதற்கு முன் கோவர்த்தன செட்டியாருடைய நடவடிக்கைகளைப்பற்றித் திருச்சிராப்பள்ளியில் வந்து போலீஸ்காரர்கள் விசாரித்ததில், கல்யாணத்திற்கு முன்பு (அதாவது மூன்று வருஷங்களுக்குமுன்) அவன் தறுதலையாகத் திரிந்தவன்தானென்றும், சில ஸமயங்களில் கட்குடித்து போதையுடன் ரோட்டில் கிடந்து புரண்டிருக்கிறானென்றும், ஆனாலிப்பொழுது கொஞ்சகாலமாக அவ்விதம் தான்தோன்றித்தனம் அவனிடம் காணப்படவில்லையென்றும் பலர் பலவாறாகச் சொன்னார்கள். கேஸில் வேறுவித ஸாக்ஷ்யமில்லாததால், இவைகளைக்கொண்டும், நோட்டு முதலிய மற்ற ஸாக்ஷ்யங்களைக்கொண்டும் கேஸ் தீர்மானிக்கப்பட்டது. செட்டியாரைத் தண்ணீர் மேலேற்றி விடுகிறதென்று தீர்மானம் சொல்லப்பட்டது.

அவருடையபெண்சாதியாகிய கோமதியம்மாளுக்கு இன்ன செய்கிறதென்று விளங்கவில்லை. பாலஸம்ஸாரம். கையில் ஒரு குழந்தை. முன்னணைக் குழந்தையொன்று. சாப்பாட்டிற்குக் கஷ்டமில்லையென்றாலும் தன்னுடைய புருஷனில்லாமல் எதிலும் ஸந்தோஷம் காண்பவளல்ல. நல்ல பதிவ்ரதை, குழந்தைகளையெல்லாங் கூட்டிக்கொண்டு தன்னுடைய புருஷன் ஜயிலிலடைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்து, அவரைப் பார்க்கும்படி தனக்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளை மன்றாடிக் கேட்டுக்கொண்டாள்.

உத்தரவும் கடைசியில் அளிக்கப்பட்டது. ஜயிலுக்குள்போய் தன்னுடைய கணவன் மற்ற கொலைபாதகர்களோடும், திருடர்களோடும், அயோக்யர்களோடும் ஒன்றாய் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்ட கோமதியம்மாள் வயிறும், குடலும் மண்டியெரிந்தது. அப்படியே தன் கணவன் காலடியில் குழந்தைகளைப் போட்டுக்கொண்டு விழுந்து மூர்ச்சித்தாள். அரைமணிநேரம் கழித்து ஸ்வயப் பிரக்ஞை வந்தவுடன் "இனி நாமென்ன செய்யலாம்" என்று தன் கணவனைக் கேட்டாள்.

"இனி என்ன செய்வதற்கிருக்கிறது! நம்மால் செய்யக்கூடிய பிரயத்தினங்களெல்லாம் செய்தாய்விட்டது. பிரபலமான வக்கீல்களுடைய யோசனையெல்லாம் கேட்டாய்விட்டது. அப்பீல் செய்வதிலுமொன்றும் பிரயோஜனமில்லையென்கிறார்கள். எதை நாம் விலக்கமுடியாதோ, அதை நாம் அநுபவித்தே தீரவேண்டும். தெய்வத்திற்கும் கண்ணில்லாமற் போய்விட்டதே யென்பதுதான் எனக்கு வருத்தம்."

"தெய்வத்திற்குக் கண்ணில்லாமற் போகவில்லை. ஆனால் தெய்வம் நின்று செய்யும் இது உம்முடைய ப்ராரப்த கர்மம். அநுபவிக்கவேண்டிய காலம். என்னுடைய அதிருஷ்டம்."

இரண்டுபேரும் கட்டிக்கொண்டழுதார்கள். "நான் அன்றைக்கு நல்லதிற்கா ஸ்வப்நங்கண்டேன்? அன்றைக்குப் போக வேண்டாமென்றேனே. கேட்காமல் போனீர்களே. என் துரையே! அதனால் வந்த அநர்த்தமல்லவா இது?" என்று பல சொல்லி வருத்தப்பட்டாள். ஜயிலிற்குள் எந்நேரம் கைதியுடன் பேசிக்கொண்டிருக்க உத்தரவுகொடுப்பார்கள்? அவர்கள் பிரிய வேண்டியகாலம் வந்தது. அப்பொழுது கோமதியம்மாள் ரகஸ்யமாக, "நாதா! என்னிடம் நிஜத்தைச் சொல்லுங்கள். நீங்கள் தானே அதைச் செய்தது?" என்று கேட்டுவிட்டாள்.

ஆஹா! நீயுமா என்னை ஸந்தேஹிக்கிறாய்! ஐயோ! வென்று மேல் வஸ்திரங்களால் முகத்தை மூடிக்கொண்டு விம்மிவிம்மி யழத்தொடங்கினான். இதற்குள் ஜயில் உத்யோகஸ்தர்வந்து மனைவியையும் புருஷனையும் பிரித்துவிட்டனர். குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு கோமதியம்மாள் வீட்டிற்குவந்துவிட்டாள்.

கோமதி போனபிறகு தன்னுடைய ஸ்திதியை கோவர்த்தனன் ஆதியோடந்தமாய் ஆலோசித்துப் பார்த்தான். தன்பேரில் தீர்ப்புச் சொன்னவர்கள் மீது எள்ளளவும் குற்றமிருந்ததாகச் சொல்லமுடியவில்லை. தன்னுடைய மனைவியே, நடந்த ஸமாசாரங்களைக் கவனித்துப் பார்க்கும்பொழுது—தன்னிடம் ஸந்தேஹிப்பாளானால், மற்றவர் ஸந்தேஹிப்பதிலென்ன ஆச்சர்யமிருக்கிறது! தானே, ஆழ்ந்து யோசிக்கும் பொழுது, "ஒருவேளை நம்முடைய ஞாபகமில்லாமல், தூக்கக்கலக்கத்தில்தான் செய்துவிட்டோமோ? துயிலில் விழிப்பு (Somnambulism) என்கிறார்களே! அந்த வ்யாதி நமக்கிருக்குமோ? அப்படியிருந்தாலும் என்னிடத்தில் கத்திகிடையாதே! அதெங்கிருந்து வந்தது? நோட்டுகளின் நம்பர்கள் மாறியிருக்கிறதே! இதன் உண்மையை மனிதர் அறியமாட்டார்; ஈசன் தான் அறியவேண்டும்" என்று தோன்றலும் தான் குற்றவாளியல்லவென்று ருஜுக்கொடுக்கிறதற்கு ப்ரயத்நம் செய்கிறதென்ற யோஜனையே அவனுடைய மனதை விட்டகன்றது.

அதற்கேற்ற காலம் வந்ததும், கோவர்த்தன செட்டியாரையும் மற்றக் குற்றவாளிகளையும் ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் அண்டமான் தீவுகளுக்குப் புறப்பட்டது. எல்லாருமாக அங்கேயே யிறங்கினார்கள். அங்கே அவர்கள் தகுந்தபடி பந்தோபஸ்து செய்யப்பட்டார்கள். பகல் வேளைகளில் அவர்கள் எங்கும் போகலாம். இரவில் படுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அறை அங்கே கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அறைகள் எல்லாம் சேர்ந்து ஜயில் கட்டடம்.

அண்டமான் தீவில் இங்ஙனம் கொண்டுவந்துவிடப்பட்டவனும் நிரபராதியுமான கோவர்த்தனன் இருபத்தாறு வருஷங்கள் கழித்தான். ஒரு வருஷமல்ல இரண்டு வருஷமல்ல. அவனுடைய புத்தி



வா பக்வமடைந்தது. அவனுக்கு சாந்த ஸ்வபாவம் இயற்கையாயிற்று. காலத்தை வீண்போக்குவதிலவனுக்கு மனமில்லை. ஜோடுகள், பூட்ஸ், முதலியன தைப்பதற்குக் கற்றுக்கொண்டான். கையில் ஸ்வல்பப் பணம் மீதம் பிடித்தான். அவைகளைக்கொண்டு தமிழில் ஒரு பகவத்கீதை புஸ்தகம் வாங்கினான். அதைத் திருப்பித் திருப்பி வாசித்தான். முதலில் அதனுடைய தத்வார்த்தங்கள் அவனுக்கு விளங்கவில்லை. கொஞ்சங் கொஞ்சமாக அதனுடைய விஷயங்கள் அவன் மனதிற்கு வந்தன. மற்றவர்களுக்கு ஸாவகாசப்பட்ட வேளைகளில் அவர்களையும் கூட்டிவைத்துக்கொண்டு, தான் கீதையிலிருந்து தெரிந்துகொண்டவைகளை அவர்களுக்கும் சொல்லுவான். இவனுக்கு நல்ல ஸங்கீத ஞானமுண்டென்று சொல்லியிருக்கிறோமல்லவா? பகவந் நாமத்தைக்கொண்ட அநேக கீர்த்தநங்களைப் பாடுவான். குற்றவாளிகளையும் நாமாவளிகளைச் சொல்லும்படி வற்புறுத்துவான். ஜயில்காவலர்களும் அடிக்கடி வந்து இவன் பாடல்களையும் ப்ரஸங்கங்களையும் கேட்பார்கள். கோவர்த்தனனிடத்தில் எல்லாருக்கும் பெரியமதிப்பு. அநேகம் பெயர்கள் அவனை 'தாதா' வென்றழைத்தார்கள். வேறுசிலர் அவனை 'யோகீச்வரர்' என்றார்கள். மற்றுஞ்சிலர் அவனை 'ஸ்வாமிகள்' என்றனர். இவ்விதம் தன்னுடைய குடும்ப ஞாபகத்தைக்கூட விட்டு, கடவுளிடத்திலேயே செலுத்தப்பட்ட நாட்டமுடையவனாகக் காலம் கழித்துவந்தான்.

அவனுடைய தலைமயிர் நரைத்தது. தாடி வெளுத்து நீண்டது. அவனுக்கு இயற்கையான ஸந்தோஷஸ்வபாவம் முற்றிலும் மாறிவிட்டது. உடல் கூனிற்று. மெதுவாய் நடந்தான். அதிகமாய் ஒருவரோடும் பேசுவதில்லை. சிரிப்பென்பதே அவன் முகபாவத்தில் இல்லாததாயிற்று. பகவானை த்யாநம் செய்வதில் அவன் காலத்தில் பெரும்பாகம் சென்றது.

பிறந்த தேசத்திலிருந்து இங்கு ஸமாசாரம் எட்டுவதற்கு வழியே கிடையாது. தன்னுடைய பெண்சாதி பிள்ளைகள் உயிரோடிருக்கிறார்கள் அல்லது இல்லையென்று சொல்லுவார்கள் ஒருவருமில்லை. அடிக்கடி அவர்கள் ஞாபகம்வந்து அவனைத் தொந்தரவு செய்யவுமில்லை.

இருபத்தாறும் வருஷம் முடிந்தது. அடுத்த நாள் தண்ணீர்மேலேற்றப்பட்ட சில குற்றவாளிகள் அண்டமான் தீவில் கொண்டுவந்திறக்கப்பட்டார்கள். அவர்கள் வரவும் பழைய குற்றவாளிகளெல்லாம் புதிதாய் வந்தவர்களைச் சூழ்ந்துகொண்டு, "அவர்கள் யார்? எந்தவூர்? எங்கிருந்து வருகிறார்கள்? என்ன குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டார்கள்?" என்று இவைகள் போன்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தனர். இந்த யோக க்ஷேம விசாரணைகளெல்லாம் நடந்துகொண்டிருக்கும்பொழுது கோவர்த்தனன் விசாரந்தங்கிய மனத்தனாய் பக்கத்திலுட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

புதிதாய் வந்தவர்களில் ஒருவன் வயதில் மூத்தவனாகக் காணப்பட்டான். அவனுக்கு அப்பொழுது வயது சுமார் அறுபது இருக்கும். நல்ல உயரம். ஆஜாநுபாஹு. கட்டுள்ள சரீரம். அவனை எல்லோருமாக விசாரித்தார்கள்.

'என்னை எதற்காக இங்கே யனுப்பினார்கள்' என்றல்லவா கேட்கிறீர்கள். கேளுங்கள். ஒரு ஜட்கா வண்டிக்குதிரையை யோட்டிக்கொண்டு போனேன். அது என்னுடையதல்லத்தான். இந்த ப்ரமாதத்திற்காகத் திருடினானென்று போலீஸ் புலிகள் என்னைப் பிடித்துவிட்டார்கள். திருட்டுக்குற்றத்திற்காக என்னை விசாரித்தார்கள். நான் சொன்னேன் "நான் குதிரையைத் திருடவில்லை, நானோட்டிக்கொண்டு போனது வாஸ்தவந்தான். அதை யெனக்கு ஸ்வந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்பது என் அபிப்ராயமல்ல. ஆனால் எனக்கு வீட்டுக்கு அவஸரமாகப் போய்ச் சேரவேண்டியிருந்தது. வாசலில் குதிரை கட்டியிருந்தது. குதிரைக்கு ஸொந்தக்காரன் எனக்குத் தெரிந்தவன். குதிரையின் மீதேறி ஸவாரிவிட்டேன். வீட்டுக்குப்போய்ச் சேர்ந்ததும் குதிரையை விட்டுவிட்டேன். குதிரை, ஸொந்தக்காரன் வீட்டிற்கு வந்திருக்கும். ஆகையால் அது திருடாகாது"? இன்னம் என்னென்னமோ கார்யகாரணங்களெல்லாம் சொன்னேன். என்னைத் தண்டிக்க வேண்டுமென்று அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும்பொழுது நானெவ்வளவு சொன்னாலென்ன உபயோகம்? நான் எடுத்துச்சொன்ன நியாயங்களெல்லாம் எங்கேயோ போய்விட்டன. "போகிறது. நான் எப்போது குதிரையைத் திருடினேன்? எப்படித் திருடினேன்? எங்கேயிருந்து திருடினேன்? அதையாவது த்ருப்திகரமாக நிரூபணம் செய்யுங்கள்" என்றேன். நான் சொல்லுவதொன்றும் அவர்கள் காதில் விழுவேயில்லை. நான் யோக்யன் என்று சொல்லவரவில்லை. நான் எத்தனையோ குற்றங்கள் செய்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்னைப் பிடிக்கவில்லை, இப்பொழுதென்னைப் பிடித்த கேஸில் மட்டிற்கும் நியாயமே கிடையாது. கடைசியாய் என்னை இங்கே யனுப்பி விட்டார்கள்" என்று சரமாரியாய்ப் பொழிந்தான்.

இந்த ஸமயத்தில் வெகு ஸர்வீஸ் பார்த்த ஒரு ஜயில் வார்டர் அங்கு வந்துசேர்ந்தான். அவன் புதுமனிதனை உற்றுப்பார்த்தான். "ஓஹோ! நீ பழைய ஸ்நேஹிதனன்றோ? இங்கேயிருந்துமுன்னமேயே தப்பித்தோடினாயே. மறுபடி வந்து சேர்ந்தாயா?" என்று குசல ப்ரச்னம் செய்தான்.

புது மனிதன் "ஆம்! ஐயா! நான் சொன்னதெல்லாம் பொய். முன்னமேயே இவ்விடத்தில் எனக்கு க்ரஹப்ரவேசம் ஆகிவிட்டது, நான் தப்பித்துக் கொண்டோடினேன். மறுபடி கொண்டுவந்து விட்டார்கள்" என்றான்.

"ஆனால் நீங்களிருக்கும் ஊர் எதுவோ?" என்று ஒருவன் கேட்டான்.

‘திருச்சினாப்பள்ளி’ என்று பதில் சொன்னான் புது மனிதன்.

“உன் பெயர்?”

“கட்டாறி.”

“ஜாதி?”

“கள்ளப்பிள்ளை.”

“திருச்சினாப்பள்ளியோ? அதற்கு ஸமீபமாகவுள்ள க்ராமங்களிலொன்றோ உன் வாஸஸ்தலம்?” என்று கேட்டான் கோவர்த்தனன். “ஸமீபத்தில் ஒரு கிராமம் தான்.”

கோவர்த்தனன்: உனக்குத் திருச்சினாப்பள்ளியிலேதாவது பழக்கமுண்டோ? கட்டாறி: எனக்குத் திருச்சினாப்பள்ளியில் தெரியாத தனவந்தர்களு மிருக்கிறார்களோ?

கோவர்த்தனன்: அப்படியானால் சின்னக்கடைத் தெருவில் கோவர்த்தன செட்டியாரென்றிருந்தாரே! அவருடைய வம்சஸ்தர்களைப்பற்றி ஏதாவது தெரியுமா?

கட்டாறி: கோவர்த்தன செட்டியாரா! அவரைத் தெரியாதா! கொழுத்தபணக்காரர். அவருடைய மனைவியும் இரண்டு பிள்ளைகளும் ஸௌக்கியமாக விருக்கிறார்கள். பாவம்! அவர் (பெரிய செட்டியார்) நம்மைப்போலேதான் குற்றம் செய்தவர். இங்கேதான் அவரும் அனுப்பப்பட்டிருக்கிறார். அது கிடக்கட்டும், உம்மைப்பார்த்தால் வெகு நல்லவராகவும் யோக்யராகவும் காணப்படுகிறதே! நீர் இங்கு வரும்படியாக எப்படி நேர்ந்தது?

கோவர்த்தனனுக்குத் தன்னுடைய துரதிருஷ்டக் கதைகளை யெல்லாம் அவனிடமெடுத்துச் சொல்ல மனமில்லை. ஆதலால் “என்னமோ! நான் செய்த பாவங்களுக்காக இவ்விடத்தில் இருபத்தாறு வருஷங்களாக அடைக்கப்பட்டிருக்கிறேன்” என்று மட்டும் சொன்னான்.

“என்ன பாபங்கள் செய்தீர்?” என்றான் கட்டாறி.

ஆனால் கோவர்த்தனன் அக்கேள்விக்கு ஸரியான பதில் சொல்லவில்லை. “என்னமோ பாபங்கள் செய்ததினால்தானே இப்படி யனுபவிக்கிறேன்.” இதற்குமேல் சொல்லுவதில் அவனுக்கிஷ்டமில்லை. ஆனால் அவனுடைய பூர்வகதை தெரிந்த மற்றவர்கள் அவன் தண்டனையடைந்த விதத்தை ஸவிஸ்தாரமாய் எடுத்துரைத்தார்கள்.

இதைக்கேட்டவுடனே கட்டாறி முகத்தில் ஒரு வித மாறுதலுண்டாயிற்று. கோவர்த்தனனை உற்றுக் கவனித்தான். தன்னுடைய தொடையில் அடித்துக் கொண்டான். “பலே! அப்படியா! என்னவேஷம் அதிசீக்கிரத்தில் உமக்குக் கிழட்டுக்களை வந்து விட்டதே” யென்றான். இக்கடைசிவார்த்தைகள் கோவர்த்தனனை நோக்கிச் சொல்லப்பட்டன. நடந்தவைகளைக் கவனித்த கோவர்த்தனன் கட்டாறியைப்பார்த்து “அந்த ஸமாசாரங்களைப்பற்றி நீ இதற்குமுன் கேள்விப்பட்டதுண்டா? அல்லது எங்கேயாவது என்னைப் பார்த்திருக்கிறாயா? நீ ஆச்சர்யப்படுவது எனக்கு விளங்கவில்லையே” என்றான்.

அதற்குக் கட்டாறி, ‘நான் எப்படிக் கேட்காமலிருக்கமுடியும். உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூடலாமா? அந்தக்காலத்தில் இது ஏகப்ரஸ்தாபம். என்னவென்னமோ காதில்வந்துவிழுந்தன. அதெல்லாமிப்பொழுது ஞாபகமிருக்கிறதா?” என்றிழுத்தாற்போல பதிலளித்தான்.

மறுபடி கோவர்த்தனன் “ரத்னவ்யாபாரியைக் கொன்றவனின்னானென்றாவது உன்னுடைய காதில் விழவில்லையா? அதுவுமா ஞாபகமில்லை”? என்று கேட்டான்

கட்டாறி சிறித்துக்கொண்டே “வ்யாபாரியை யார் கொன்றிருக்கக்கூடும். யாருடைய பையில் அவனைக் கொன்ற கத்தியிருந்ததோ அவன்தானே கொன்றிருக்கவேண்டும். வேறு யாராவது கொன்றுவிட்டு, கத்தியை அவன் பைக்குள் வைத்திருக்கக்கூடாதோ என்று கேட்பீர்கள். அப்படியாராவது செய்திருந்தால், அவன் அகப்பட்டு ருசுவாகும்வரை யார் கொன்றவன் என்று எண்ணுகிறது. அல்லாமலும் அவன் அந்தக் கத்தியைக் கொண்டுவந்து எப்படி உம்முடைய பைக்குள் வைக்கமுடியும்? நீதான் பையைத் தலைக்குயரமாய் வைத்துக்கொண்டு படுத்திருந்தீர்களே?” அதையெடுத்தால் நீங்கள் விழித்துக்கொண்டிருக்க மாட்டீர்களோ?” என்றான்.

அவனுடைய நடவடிக்கைகளையும் அநாவசியமாக, வந்தவுடன் கொஞ்சங்கூடக்கூசாமல் ஒரு பாய் அவன் சொன்னதையும், முன்னமேயே குற்றவாளியாகி இவ்விடத்திற்கு வந்தவன் அவன் என்பதையும், தன்னுடைய கதையை மற்றவர்கள் அவனிடம் சொன்னபோது அவன் முகத்திலுண்டான மாறுதல்களையும், தன்னைக் கோவர்த்தனன் என்று தெரிந்துகொண்டவுடன் அவன் முகத்திலுண்டான ஆச்சர்யக்குறிகளையும், குற்றம் செய்தவன் கோவர்த்தனனே யென்று ஸ்தாபிப்பதற்கு (அனாவசியமாகப் போன்று) வெகு, ஆத்திரமாய் அவன் பேசுவதையும், கண்ட கோவர்த்தனனுக்கு “இவனே தான் ரத்னவ்யாபாரியைக் கொன்று என்மீது பழிவரும்படி செய்தவனோ”? என்று ஒரு ஸந்தேஹம் பளிச்சென்று உண்டாயிற்று. ஸந்தேஹத்தைக் கொண்டென்ன செய்யமுடியும்? யார் நம்புவார்கள்? என்ன அத்தாக்ஷி? அப்புறமங்கிருக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. தன்னுடைய அறைக்குவந்துவிட்டான். அன்றிரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. மனது சொல்லவொண்ணாதபடி சஞ்சலமடைந்தது. பலவிதமான உருவெளித்தோற்றங்கள் அவன் கண்களுக்கு முன் தென்பட்டன.

முதலில் அவன் பெண்சாதியின் உருவெளித்தோற்றம் காணப்பட்டது. அவள் கண்களும் முகமும் அப்படியே தெரிந்தன. அவள் ஸ்வபாவமாய்த் தன்



னுடன் பேசுவதுபோலும் சிரிப்பதுபோலுந்தோன்றின. தான் திருச்சியைவிட்டு வரும்பொழுது தன்னுடைய சிறு குழந்தைகள் எவ்வாறிருந்தார்களோ அவ்விதமே கண்களில் புலப்பட்டனர். பிறகு தான் அந்தக்காலங்களில் பரமோத்ஸாஹத்துடன் மாடியில் கைடார் வாத்யத்தை வைத்து வாசித்துக்கொண்டு ஸங்கீத ஸுகத்தை யனுபவிப்பது ஞாபகத்திற்கு வந்தது. கடைசியாய் மணற்பாறையிலிருந்து தான் ரெயில்வே ஸ்டேஷனிலிறங்கியதும், அங்கே போலீஸ்காரர் தடுத்ததும், தான் கைதியாகப் பிடிக்கப்பட்டதும் அவன் மனதை வருத்தின. தான் ஜயிலில் பட்ட கஷ்டங்களும், பெண்டு பிள்ளைகளைவிட்டு அண்டமான் தீவில் வந்து இருபத்தாறு வருஷம் துன்பப்பட்டதும் வரிசைக்ரமமாக மனதில் தோன்றின. இவ்வளவு நரகாவஸ்தையும் வெகு ஸ்வல்ப காலத்திற்குள் அவன் மனதில் தோன்றித் தொந்தரவு செய்ய, ஒன்றும்தோன்றாது, சரீரம் வில விலக்க, உயிரை மாய்த்துக் கொள்ளலாமாவென்றுகூட எண்ணிவிட்டான்.

“அடா! அந்தப் பாபி த்ரோஹி செய்ததல்லவா இத்துணையும்?” என்று தன் பற்களுக்கிடையே முணுமுணுத்துக் கொள்ளுவான். “இந்தப் பழிக்குப்பழி எப்பொழுது வாங்குவேன்! அப்பொழுதல்லவோ என் மனங்குளிரும்!” என்பான் இன்னொருஸமயம். “என்னுயிர்போனாலும் போகட்டும் இவனைக் கொல்லாமல் விடுகிறதில்லை” என்று சொல்லி, முஷ்டியை த்ருடமாகப் பிடிப்பான். இவ்வெண்ணங்களெல்லாம் நல்ல எண்ணங்களல்லவென்று ஸத்புத்தியும் இடையிடையே தோன்றும். அந்த ஸமயங்களில் நல்ல புத்தியைக்கொடுக்கும்படி ஈசுவரனை மனதாறத் துதிப்பான். என்ன செய்தும் மனது ஸமாதானப்படவில்லை; இரவு இப்படிக் கழிந்தது.

மறுநாள் முழுவதும் கட்டாறியை ஏறெடுத்துப் பார்க்கவேயில்லை. இரவு வந்தால் மறுபடி இந்த நரகாவஸ்தைதான். இந்தக் கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ள இன்ன செய்வதென்று அவனுக்கு விளங்கவில்லை.

இப்படி இரண்டு வாரங்கள் கடந்தன. அப்பொழுதும் கோவர்த்தனனுக்கு இரவில் தூக்கம்பிடிக்கவில்லை. கோவர்த்தனன் விஷயமாக ஜயில் காவலாளர் எல்லாருக்கும் மிகுந்த நம்பிக்கையாதலால் இவனறையை இரவில் இவனிஷ்டப்பட்டாலொழியப்பூட்டிவைக்கிற வழக்கமில்லை. ஒரு நாள் காவலாளர் வந்தபோது ‘அறையைப் பூட்டவேண்டாமென்று சொல்லி வைத்திருந்தான். அன்றையதினம் அவனுடைய மனது அதிக அஸமாதானமடைந்திருந்தது. வெளியில் போய்ச் சற்றுக் காற்றாடி வந்தால் தாவிலைபோல் புத்தி தோன்றிற்று. அப்படியே ஜயிலுக்கு வெளியில் வெகுநேரமாய் நடமாடிக்கொண்டிருந்தான். அவன் மனது யோசனையிலாழ்ந்திருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அவனறியாமலே, அவன் கவனம் சுவற்றின் புறமாய் ஆகர்ஷிக்கப்பட்டது. அதென்னவென்று அந்தப்புறமாய்த் திரும்பினான். சுவற்றிலிருந்து மண் சலசலவென்று உதிர்ந்தது. அந்தவிடத்திற்கு ஸமீபமாய்ச்சென்று கவனித்துக்கொண்டிருந்தான். அவன் மனது சூன்யமாயிருந்தது. அதை அவன் வேண்டுமென்றும் கவனிக்கவில்லை. அப்புறம் போக வேண்டுமென்கிற எண்ணமும் உண்டாகவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் சுவற்றில் ஒரு த்வாரம் காணப்பட்டது. அந்த த்வாரம் வரவரப்பெரிதாயிற்று. ஒரு மனிதன் நுழையக் கூடியவளவு பெரிதானவுடன் ஒருமனிதவுருவம் வெளியேவந்தது. அப்பொழுது நடு ராத்ரி. அந்த மனிதன் கீழே குதித்தான். கோவர்த்தனனிடத்திற்கு வந்தான். “நான் வெளியே தப்பியோடுவதற்கு வழி செய்திருக்கிறேன். ஆனால் இன்றைய ராத்ரியே வெளியில் போவதாக வுத்தேசமில்லை. அதற்கு இன்னம் சில கார்யங்கள் செய்துகொள்ளவேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த த்வாரத்தை யொருவரும் கவனிக்காதபடி அடைத்துவிட்டு நான் உள்ளே போகப்போகிறேன். உள்ளிருந்தபடியே யடைக்கவேண்டி வருமென்று பயந்திருந்தேன். நல்லவேளையாய் நீ வெளியே வந்திருக்கிறாய். அடைத்துவிட்டு இப்படியே உள்ளே போய் விடுகிறேன். நீ ஒருவரிடமும் சொல்லாதிருந்தால் உன்னையும் வெளியே கூட்டிக்கொண்டு போவேன். ஏதாவது ஜயிலரிடம் உளறிவிடப் போகிறாய். உளறிவிட்டாயோ, என்னுயிரை யெடுத்துவிடுவார்கள். ஆனால் என் உயிர் போவதற்குமுன் உன்னுயிரை யெடுத்துவிடுவேன். ஜாக்ரதை. ஞாபகமிருக்கட்டும்” என்று கட்டாறி சொன்னான்.

இவ்வளவையும் இவன் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே கோவர்த்தனன்மனம் கோபத்தால்தடுமாறியது. கைகள் பதறின. “எனக்குத் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் கிடையாது. என்னை நீ இனிக்கொல்லவேண்டிய அவச்யமுமில்லை. நீதான் முன்னமேயே என்னைக் கொன்றாயிற்றே. உன் ஸமாசாரங்களை வெளிப்படுத்துவதைப்பற்றிக் கேட்பாயேயானால், நானொன்றும் உனக்கு வாக்களிக்க முடியாது. கடவுள் எப்படிக் கட்டளை யிடுவாரோ!” என்று கோவர்த்தனன் சொல்லி முடித்தான்.

‘அதெல்லா மெனக்குத் தெரியாது. ஜாக்ரதை’ என்று சொல்லிவிட்டு கோவர்த்தனன் அறைக்குள் சென்று அங்கிருந்து தன்னறைக் கேற்பட்டிருந்த பாதைவழியாக ஓடிப்போனான்.

சற்றுநேரங்கழித்து, களைத்துப்போன கோவர்த்தனன் தன்னறையில் வந்து படுத்துக்கொண்டான். அன்றிரவும் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லையென்று நாம் சொல்லவும்வேண்டுமோ?

மறுநாட்காலையில் காவலாளர் ஏதோ சில அடையாளங்களால் ஜயிலுக்குள்ளிருந்து மண் வெளியே போகிறதென்று கண்டுகொண்டார்கள். அதன் பிறகு அறைகளைப் பரிசோதனை செய்தார்கள். கட்

டாறியிருந்த அறையில் த்வாரம் காணப்பட்டது. அவனைக் கேட்டதில் தனக்கொன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டான். இந்த ஸங்கதி அதன்பிறகு ஜயிலரிடம் சொல்லப்பட்டது. அவர் எல்லாரையும் கேட்டார்கள். எல்லோரும் எனக்குத் தெரியாது; உனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். கடைசியாய் ஜயிலர் கோவர்த்தனனை நோக்கி "உனக்கேதாவது தெரியுமா இதைப்பற்றி?" என்று கேட்டார். கோவர்த்தனன் உடனே "நான் செய்யவில்லை அந்த அபராதத்தை" என்றான். ஜயிலர் "நீ செய்திருக்கமாட்டாயென்று எனக்கு நன்றாய் நீ சொல்லாமலே தெரியும். இது யார் செய்ததென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

கோவர்த்தனன் மலைத்து நின்றுபோனான். பேசுவதற்கு நாவெழவில்லை. தேகமாத்யந்தம் கம்பித்தது. உதடுகள் துடித்தன. முகம் வியர்த்தது. உண்மையைச் சொல்லிவிடுகிறதா? அல்லது சொல்லமாட்டேனென்று மறுத்துவிடுகிறதா? என்று அவன் மனதில் போராட்டம் பலமாகநடந்தது. 'என் வாணாளை இவன் வீணாளாக்கினவன். இவனை ஏன் நான் மறைத்துக் காப்பாற்றவேண்டும்? நான் பட்ட கஷ்டத்திற்கு, இவன் கொஞ்சமனுபவிக்கட்டுமே. நானுண்மையைச் சொல்லிவிட்டால், இவனை வெள்ளுரியாய் உரித்துவிடுவார்கள். அவன் உயிர்போனாலும் போய்விடும். ஒருவேளை நான் ஸந்தேஹிக்கிறபடிதானிருக்கவேண்டுமென்பது என்ன நிச்சயம்? நான் ஸந்தேஹிப்பதே தவறுதானோ? இல்லையென்றே வைத்துக்கொள்ளுவோம். இவன் கஷ்டப்படுவதனால் எனக்கென்ன ப்ரயோஜனம்?' என்றிப்படிப் போய்க்கொண்டிருந்தது அவன் எண்ணங்களின் வரிசை.

ஜயிலர் மறுபடி கேட்கலானான். "பெரியவரே! உண்மையைச் சொல்லுங்கள். த்வாரம் செய்ததார்?"

கோவர்த்தனன் அங்கு நின்றுகொண்டிருந்த கட்டாறியை ஏற இறங்க வொருமுறை பார்த்தான். ஜயிலரையும் பார்த்தான். "ஸ்வாமி! நான் உங்கள் அதிகாரத்தின் கீழிருக்கிறேன். என்னை யென்ன வேண்டுமென்றாலும் செய்யுங்கள். அதைச் செய்தவன் இன்னானென்று நானறிவேன். ஆனால், அவனைக் காட்டிக்கொடுக்க முடியாது. இது கடவுளாணை" என்றான்.

ஜயிலர் என்ன மன்றாடிக் கேட்டும் கோவர்த்தனன் தான் பிடித்த பிடியை விடவில்லை. ஜயிலருக்கு ஒருவரையும் ஒன்றும் செய்ய முடியவில்லை. கோவர்த்தனனைத் தண்டிக்கவும் மனது வரவில்லை. கட்டாறியை மட்டும் வேறு அறைக்கு மாற்றிவிட்டார்கள்.

அன்றிரவு, படுக்கையில் படுத்திருந்த கோவர்த்தனனுக்குச் சிறிது தூக்கம் வருவதுபோலிருந்தது. அந்த ஸமயம் யாரோ ஒருவன் சத்தமில்லாமல் வந்து கோவர்த்தனன் படுக்கையில் வந்துட்கார்ந்தான். இருட்டில் உற்றுப்பார்த்தான். கட்டாறி!

"இன்னும் என்ன செய்யவேண்டுமென்கிறாய்? இங்கே எதற்காக வந்திருக்கிறாய்?" என்று கோவர்த்தனன் கேட்டான்.

கட்டாறி யொன்றும் பதில் சொல்லவில்லை. கோவர்த்தனன் படுக்கையிலேயே யெழுந்துட்கார்ந்து "நீ போகிறாயா? காவலாளரைக் கூப்பிடட்டுமா?" என்றான்.

கட்டாறி, கோவர்த்தனன் காதோரமாய்க் குனிந்து "செட்டியாரே! என்னை மன்னிக்கவேண்டும். நான் பெரிய அபராதி" என்றான்.

"நீ எனக்கென்ன அபராதம் செய்தாய்?"

"நான்தான் அந்த வ்யாபாரியைக் கொன்றவன். உம்முடைய பைக்குள் கத்தியை யொளித்தவனும் நானே. கத்தியை யொளிக்கும்பொழுது உம்முடைய பையில் நோட்டுகளிருந்ததைக் கண்டேன். அந்த வ்யாபாரியிடமிருந்து நானெடுத்த நோட்டுகளைக் கையில் வைத்திருந்தேன். உம்முடைய நோட்டுகளையும் எடுக்க ப்ரயத்னம் செய்தேன். அதில் வ்யாபாரியின் நோட்டுகள் நழுவிவிழுந்தன. உம்முடைய நோட்டுகளை எடுத்துக்கொண்டேன். அந்த ஸமயம் வெளியில் ஏதோ சத்தங்கேட்டது. வ்யாபாரி நோட்டுகள் உம்முடைய பையிலேயே இருந்துவிட்டன. நான் தப்பித்தோடிவிட்டேன். அந்தச் சத்தம் கேட்டிராவிட்டால் உம்மையும் கொன்று அந்தப் பணத்தையும் எடுத்துக்கொண்டிருப்பேன்" என்றான் கட்டாறி.

இன்னது சொல்லுவதென்று தோன்றவில்லை கோவர்த்தனனுக்கு. சற்று நேரம் சும்மாவிருந்தான். கட்டாறி மெதுவாக நழுவி அவன் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "ஐயா! என்னை மன்னித்தேன் என்று சொல்லவேண்டும்!" என்று கெஞ்சினான்.

"சொல்வது உனக்கெளிதாயிருக்கிறதப்பா! இருபத்தாறு வருஷம் இங்கு கஷ்டப்பட்டேன். என் கஷ்டம் முடிந்ததாக இல்லை—"

"நான்தான் அந்த வ்யாபாரியைக் கொன்றவன் என்று ஒப்புக்கொண்டு, உம்மை விடுவிக்க முயலுவேன்."

"என் பெண்சாதி இறந்துவிட்டாள். குழந்தைகளோ என்னை யறியாது: எனக்குப் போவதற்கிடமெங்கே. எனக்கு விடுதலையாகவேண்டுமென்கிற எண்ணங் கிடையாது"

"ஐயா! செட்டியாரே! என்னை மன்னிக்கவேண்டும்! நமஸ்காரம். தயவு செய்யுங்கள். என்னைத் தண்ணீர்மேலேற்றுமுன் சவுக்கினால் அடித்தார்கள். அந்தப் பாதையை ஸஹித்துக்கொண்டேன். உம்முடைய முகத்தைப் பார்ப்பதி லெனக்குண்டாகும் பாதை அதிலும் ஆயிரம் மடங் கதிகமாக விருக்கிறதே! ஐயோ! நானென்ன செய்வேன்" என்று கதறினான் கட்டாறி. கோவர்த்தனனுக்கும் அழுகை வந்து

இதன் தொடர்ச்சி 229-ம் பக்கம்



## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDRENS' & LADIES' PAGES

### கழுதையும் அதன் சிநேகிதர்களும்

ஐம்பது வருஷத்துக்கு முன்னே தின்னனூரிலே திருவேங்கடத்தான் என்றொரு வண்ணான் இருந்தான். அவனிடத்தில் வெள்ளையான் என்றொரு கழுதை யிருந்தது. அது பல நாளாக அவனுக்கு உழைத்துக் கொடுத்துக் கொண்டு வந்தது; பின்பு வயது சென்று வேலை செய்யக் கூடாது போய்விட்டதனால், அவன் அதனைச் சாப்பாடு கொடாமல் துரத்திவிட்டான். அது சில நாள் தின்னனூரிலேயே திரிந்து கொண்டிருந்தது. அதற்கு அங்கே நல்ல உணவு அகப்படவில்லை; தோட்டப் புறங்களுக்குப் போனபோது தோட்டக்காரர் தடி கொண்டு நன்றாக மொத்தினர். இந்த அடி பொறுக்க மாட்டாமல் அது பட்டணம் போக நினைத்தது. தைமாசம் பிறப்பதற்குச் சில நாள் இருந்தமையால், அது பொங்கலுக்கு வீடுகள் தோறும் போய்ப் பாட்டுப் பாடினால், தனக்குப் போதிய உணவு அகப்படுமென்று நினைத்தது. "பாட்டுப்பாடுவதற்கு என் குரல் மிகவும் யோக்கியானது" என்று எண்ணி அது மனம் பூரித்தது. மற்றெந்தக் காரியத்தில் அது தவறினாலும், பாட்டுப் பாடுவதற்குத் தன்குரல் தக்கதென்று எண்ணினதில் மாத்திரம் அது சிறிதும் தவறவில்லை. ஏனெனில் தைப் பொங்கலுக்குப் பட்டணத்தில் தெருத் தெருவாய்ப் பாடிக்கொண்டு செல்லும் பண்டாரங்களின் குரலுக்கும் பாட்டுக்கும் அதன் குரலும் பாட்டும் கொஞ்சமும் தோற்பவையல்ல.

பட்டணத்துக்குப் போகும் வழியில் அது தன்னைப் போலவே உணவகப்படாது வருந்திப் பட்டணம் நோக்கிச் செல்லும் நாய் ஒன்றைச் சந்தித்தது அதன் சமாச்சாரத்தை அறிந்துகொண்டவுடன் கழுதை அதனை நோக்கி "நீ என்னோடுவா; நான் பட்டணத்துக்குப் போய்ப் பாட்டுப் பாடிப் பிழைக்கப் போகிறேன்; நீ எனக்குப் பின்பாட்டுப் பாடலாம்" என்று அதனையும் அழைத்துக்கொண்டு போயிற்று கொஞ்சத்தூரம் போனபின் அவைகள் ஒரு பூனையைச் சந்தித்தன. அதுவும் பிழைப்புத் தேடிப் பட்டணம் போகின்றதென்பதை அறிந்துகொண்டு கழுதை அதனை நோக்கி "நீ எங்களோடுவா; நாங்கள் பட்டணத்தில் போய்ப் பாடகர்களாகப் போகிறோம்; நல்ல பணம் கிடைக்கும் என்பதிற் சந்தேகம் இல்லை" என்றது. பூனை அதற்கு உடன்பட மூன்றுமாகச் சென்றன. வழியிலே ஒரு கோழிச் சேவலும் அவைகளோடு சேர்ந்தது.

இதற்குள் பொழுதுபட்டுவிட்டது; வழியும் காட்டுப் பாதையாய் வந்து சேர்ந்தது காட்டுள் கொஞ்சதூரம் போனவுடன் ஒருவெளிச்சம் தெரிந்தது. அங்கே அவைகள் போனபோது ஒரு வீடு இருந்தது. கழுதை தலையை உயர்த்தி ஜன்னல் வழியாக வீட்டுக்குள் என்ன நடக்கின்றதென்று பார்த்தது. மற்றவைகள் மூன்றும் கழுதையை நோக்கி "வீட்டுக்குள் என்ன பார்த்தாய் சொல்" என்றன. 'வீட்டுக்குள்ளே என்ன? பத்துப் பன்னிரண்டு திருடர்கள் சாப்பிடப் போகிறார்கள்; இலைகள்போட்டு வெகு திவ்வியமான சாப்பாடு பரிமாறியிருக்கின்றது" என்று கழுதை சொல்லிற்று. இதைக் கேட்டவுடனே மற்ற மூன்றுக்கும் வாயில் நீர் ஊறத் தொடங்கிற்று. எல்லாமாய்த் திருடர்களை எப்படித் துரத்தலாமென்று ஆலோசித்தன. "நாங்கள் ஆகிரி ஆலாபிப்போம்; அதைக் கேட்டவுடனே அவர்கள் ஓட்டமெடுப்பார்கள்" என்று நாய் சொல்லிற்று.

உடனே எல்லாம் வாயிலிலே வந்து நின்று பாடத்தொடங்கின. கழுதை, கத்திற்று; நாய் குரைத்தது; பூனை உறுமிற்று; கோழி கூவிற்று. பின்னர் எல்லாஞ்சேர்ந்து தடதடவென்று வீட்டுக்குள் நுழைந்தன. இந்தச் சத்தத்தைக்கேட்ட கள்வர் தட்டுத்தாமதமின்றிப் புழைக்கடையாலே ஓட்டமெடுத்தார்கள். கழுதை முதலிய நான்கு விலங்குகளும் உட்கார்ந்து திருடர் சமைத்து வைத்திருந்த உணவை வயிறாரச் சாப்பிட்டன. அதன்பின் அவைகள் விளக்கை அணைத்துவிட்டுப்போய்ப் படுத்துக்கொண்டன. கழுதை முற்றத்தில் இருந்த வைக்கோற் போரின்மேற் படுத்து நித்திரை கொண்டது; நாய் கதவுக்குப்பின்னாலே சுருண்டுகொண்டு கிடந்தது; பூனை அடுக்களைக்குப் போய் அடுப்பின்மேல் படுத்துக்கொண்டது; கோழிச்சேவல் வீட்டின் விட்டத்தின்மேல் பறந்து தூங்கிற்று.

எல்லாம் நித்திரையாய்ப் போய்ச் சத்தமடங்கின பிற்பாடு, முன்னர் ஓடிப்போன திருடரில் ஒருவன், தைரியமாக வீட்டுக்குத் திரும்பி வந்தான். அவன் அடுக்களைக்குள் நுழைந்து கைவிளக் கொன்றைத் தடவி எடுத்துக்கொண்டு அடுப்பின்மேற் படுத்திருந்த பூனையின் கண்கள் தகதகவென்று ஒளி வீசு

(இதன் தொடர்ச்சி 230-ம் பக்கம்)

(228-ம் பக்கத்தொடர்ச்சி.)

விட்டது. "அப்பா கடவுள் உன்னை மன்னிப்பார், உன்னைக்காட்டிலும் கேடுகெட்டவன்தானோ என்னவோ நான்! யார் கண்டார்" என்று வெகு சிரமப்பட்டுச் சொல்லிமுடித்தான் கோவர்த்தனன். அவன் மனதிலிருந்து ஒரு பெரும்பாரம் நீங்கியதாக அவனுக்குத் தோன்றிற்று. கோவர்த்தனன் தன்னிடம் 'எனக்கு வெளியில் போக அபிப்ராயமில்லை' யென்று சொல்லியிருந்தாலும், கட்டாறி அதிகாரிகளிடம் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டான். உடனே கோவர்த்தனனுக்கு விடுதலைஉத்தரவு பிறந்தது. ஜயிலர் அவனை விடுவிப்பதற்காக அவன் அறைக்குள் புகுந்தார.

கோவர்த்தனன் இறந்துகிடந்தான்!

(இக்கதை முற்றிற்று)

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ஸர் ஜான் ப்ரெஞ்ச்:**—இங்கிலீஷ் படைத்தலைவர். 1852ஆம் பிறந்தவர். 1866ஆம்முதல் நான்கு வருஷ காலம் கப்பற்படையிலமர்ந்து வேலைபார்த்து வந்தார். ஆனால் தரைப்படை என்றால் இவருக்கு விருப்பம் அதிகம், பிறகு அனேக போர்களில் பற்பல உத்யோகங்களில் இருந்து போர்புரிந்திருக்கின்றார், ஆப்ரிக்காவில் நடந்த அனேகயுத்தங்களில் பிரக்யாதியடைந்திருக்கிறார், போவர் யுத்தத்தில் கிம்பர்லி முற்றுகையின்போதும், ப்ளூயம்பான்டென், ப்ரிடோரியா இவைகளைப் பிடிக்கும்போதும், போவர் வீரனாகிய க்ரான்ஜீயைப் பிடிப்பதற்கும் வெகு தீரத்துடன் தம் படையைக்கொண்டு போர்புரிந்தார். காரியங்களை முடிக்கும் துணிவிலும் சுறுசுறுப்பிலும், புத்திசாதுர்யத்திலும் இவருக்கு ஒருவரும் நிகரில்லை யெனவே சொல்லவேண்டும்.

---

(229-ம் பக்கத் தொடர்ச்சி)

வதைப் பார்த்து நெருப்புத் தழலென்று நினைத்து' கைவிளக்கை அதில் ஏற்றமுயன்றான். உடனேபூனை அவன் முகத்திலே பாய்ந்து நகத்தால் வறண்டிற்று. அவன் மிகவும் பயந்து வெளியே போவதற்காகக் கதவண்டை ஓடினான். அங்கே கதவுக்குப்பின்னாலே படுத்திருந்த நாய் அவன் மேலே விழுந்து காலைக் கடித்தது. அவன் கதவைத்தாண்டி முற்றத்திலே போனபோது அங்கே வைக்கோற் போரின்மேல் கிடந்த கழுதைகாலால் உதைத்தது. வீட்டு விட்டத்தின்மேல் உறங்கிக் கொண்டிருந்த கோழிச்சேவல் தன் பல மெல்லாங் கொண்டு உரத்துக்கூவிற்று. அவன் பயந்து பின்னே திரும்பிப்பார்க்காமலோடித் தனது கூட்டாளிகள் இருந்தவிடம் போய்ச் சேர்ந்தான்.

அவர்கள் அவனை என்ன காரியம் என்று கேட்டார்கள். அவன் "அம்ம! அங்கே ஒரு பெரிய பேயிருக்கிறது; அது கண்ணை உருட்டிப்பார்த்து என் முகத்தில் வறண்டி விட்டது; கதவுக்குப்பின்னாலே பிசாசொன்று ஒளித்துக்கொண்டிருந்து என்காலிலே வேலாற்குத்தி விட்டது; முற்றத்திலே ஒரு கரிய பூதம் தண்டாயுதத்தினாலே என்னை யடித்தது; வீட்டின்மேலே ஒரு கூளியிருந்துகொண்டு கொண்டுவா அவனை என்று கூவுகின்றது" என்றான். இதைக்கேட்ட திருடர் கெடிமண்டி அவ்விடத்தை விட்டு வேறிடத்துக்கு ஓடிவிட்டார்கள். கழுதையும் நாயும் பூனையும் கோழியும் பட்டணத்துக்குப் போகாமல் அங்கேயே யிருந்து பொங்கல் கொண்டாடின. அவைகள் பட்டணத்துக்கு வாராமையால் அவைகளோ பண்டாரங்களோ பாட்டுப்பாடுவதில் கெட்டிக்காரர்கள் என்று பார்க்க முடியாமல் போய்விட்டது.

**ஜெனரல் ஜாப்ரே:**—ப்ரஞ்ச் படைத்தலைவர், இவரும் 1852ஆம்த்திலே பிறந்தவர். இருபது வயதிற்குள்ளேயே போரில் கைகலந்து யுத்தம் செய்திருக்கிறார். 1870ஆம்த்தில் நடந்த ப்ரஞ்ச்—ஜெர்மன் சண்டையில் இவர்போர்செய்த திறமையைக்கண்டு இவருக்கு மேல் உத்யோகங்கள் கிடைத்தன. கோட்டைகள் கட்டுவதும் அகழ்கள் தோண்டுவதுமான முக்யவேலைகளின் மேற்பார்வை உத்யோகம் இவருக்குக்கிடைத்தது. ஆசியா ஆப்ரிகா கண்டங்களிலும் தரைப்படைகளில் இவர் உத்யோகம் பெற்றிருந்தார், கணித சாஸ்திரத்தில் மஹா நிபுணர். இவர் காரியங்களை ஆரவாரம் யாதொன்றுமின்றி ஸாவதானமாய்ச் செய்வதில் சமர்த்தர். தம் தொழிலில் மிகவும் கண்ணுங்கருத்துமாக இருப்பவர். கபடமற்றவர்.

***

**க்ராண்ட் ட்யூக் நிகோலஸ்.**—இவர் ருஷியஸேனாதிபதி. மிக்க சிறப்புவாய்ந்த போர்ப்பயிற்சியுடையவர். 1877-ம் ஆம்த்திலேயே இவருக்கு படைத்தலைமை கிட்டி விட்டதென்றால் இவர் தேர்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமோ? ருஷ்ய—டர்க்கி யுத்தத்தில் வெற்றிபெற்றதினிமித்தம் சிறந்தகௌரவபட்டங்கள் கொடுக்கப்பட்டார். ருஷிய ஜப்பானிய யுத்தத்திலும் படைத்தலைமை வஹித்திருக்கிறார். ஆகையால் யுத்தத்தில் இவருக்கு மிக்க அனுபவம் உண்டு. ஸைன்யங்களைப்பற்றிய எல்லா வ்யவஹாரங்களும் இவருக்கு நன்றாய்த் தெரியுமாம்.

***

**ஜெனரல் புட்நிக்.**—ஸெர்விய படைத் தலைவர். இவருக்கு வயது அறுபதாகிறது. ஐரோப்பாவிலுள்ள எல்லா முக்கிய தேசங்களுக்கும் சென்று, கல்வி, முக்யமாய் யுத்தப் பயிற்சி, பெற்றுள்ளார். மற்றதேசங்களில் எவைகள் நல்லவைகள் என்றுதோன்றினவோ அவைகளைத் தம் நாட்டில் கொண்டு வந்து அனுசரித்திருக்கிறார். இவருக்கு ஐந்து பாஷைகள் நன்றாய்த் தெரியுமாம். போர்வீரர்களுக்கு இவரைக்கண்டால் வெகு ப்ரியமாம்.

***

**ஜெனரல் வான் மால்ட்க்.**—ஜெர்மன் யுத்தத் தலைவர். இவருக்கு வயது அறுபத்து நான்காகிறது. இவரது பெயரை வஹித்த கௌண்ட் வான் மால்ட்கைப் போலவே இவரும் மஹாநிபுணர். சிறுவராயிருக்கும்போதே நல்ல உத்தியோகத்திலமர்ந்து அதிசீக்கிரத்தில் பற்பல கௌரவங்களைப் பெற்று கீர்த்தியடைந்தார். ஜெர்மன் சக்ரவர்த்திக்குப் பிறகு இவர் தாம் செல்வாக்குள்ளவர். ஜெர்மனியின் தரைப்படை சிறந்ததாயிருப்பதற்கு இவரது விடாமுயற்சியும் சுறுசுறுப்புமே காரணம். காரியங்களை எவ்விதத்திலாயினும் முடித்துவிடுவார். இவருக்கும் கெய்ஸருக்கும் மிகுந்தநட்புமுன் இருந்தது—இவரது வார்த்தையைக் கேட்காமல் ஜெர்மன் சக்ரவர்த்தி நடந்து விட்டு, இவரின்மீதும் கோபித்துக்கொண்டனராம்,



**ஜெனரல் வான் ஹீட் ஸன்டர்ர்ப்.**—ஆஸ்ட்ரிய படைத்தலைவர். இவர் யுத்தத்திற்குக் காரணமாயிருந்தவராகத் தெரியவருகிறது. வயது சென்ற ஆஸ்ட்ரிய சக்ரவர்த்திக்கு நல்ல ஆலோசனை சொல்வதுபோல் ஆஸ்ட்ரியா ஸெர்வியா இந்த இரண்டு நாட்டிற்கும் போரை மூட்டிவிட்டனர்,

***

**கௌண்ட் ஒகூமா.**—ஜப்பான் தேசத்து மந்திரி. 1838-ம் வருஷத்தில் பிறந்தவர், இளமை முதற்கொண்டே கல்விகற்க ஆரம்பித்து, ஐரோப்பிய பாஷைகளிலும் பயின்றுள்ளவர், ஆங்கிலராஜாங்க முறைகளை அனுசரிக்கவேண்டுமென்று அதற்காகப் பாடுபட்டவர். அநேக முக்யமான உத்யோகங்களில் இருந்திருக்கின்றனர். தேசத்தின் அபிவிருத்தியை நாடி உழைத்திருக்கின்றனர், பல தடவைகளில் மந்திரியாக இருந்திருக்கின்றனர். கல்வி விஷயத்திலும் தேசத்திற்காக உழைத்திருக்கிறார், அநேக பள்ளிக்கூடங்கள் இவர் முயற்சியினாலேயே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. எதிலும் தாராள மனஸுடையவர். நம் இந்தியரின்மீது மிகவும் அன்புள்ளவர்

***

**ட்ரெட்நாட்.**—இந்தப்பதத்திற்கு ஒன்றுக்கும் அஞ்சாதது என்றபொருள். இது தற்காலத்தில் கட்டப்பட்டுள்ள பெரும் போர்க்கப்பல்களுக்குப் பெயராய் வழங்கி வருகின்றது. இவை பார்க்கப் பயங்கரமான தோற்றத்தை யுடையவை. இவைகளை மிதக்கும் கோட்டைகள் என்றே சொல்லவேண்டும். மிகவும் உறுதியான—சுமார் 11 அல்லது 12 அங்குல கனமான எஃகுத் தகட்டினாலான கவசமுடையவையாய் எப்படிப்பட்ட குண்டுகளினின்றும் காத்துக்கொள்ளும்படி செய்யப்பட்டிருக்கின்றன. கப்பல் நீளம் ஸுமார் 500 அடிக்குக் குறையாமலிருக்கும். இவைகளில் மிகச் சிறந்த பீரங்கிகள்—12 அல்லது 13 அங்குலப் பெரும் பீரங்கிகளும் சிறு பீரங்கிகளும் வைக்கப்பட்டு, டார்பீடோ குழல்களும் உள்ளன. கப்பலின் மேல்தட்டில் உயர்ந்த கோபுரமாதிரி கட்டப்பட்டு அதிலேதான் நீண்ட பெரும் பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கும். பெரும் பீரங்கிகளும் அதற்கு வேண்டிய ஸாமான்களும் கொண்டுள்ளவை யாதலால் இவை அதிவேகமாய்ப் போகா. மணிக்கு 21 நாட்டு (நாட்=$1\frac{1}{8}$ மைல்) க்குமேல் போவது அரிது. நீரை அமுக்குவதாலுண்டாகும் சக்தியினாலேயே இப்பீரங்கிகள் இயக்கப்படுகின்றன. இவைகளின் தோற்றமும் பெரும் பிசாசுகளைப்போன்று பயங்கரமாயிருக்கும். ஒரு ட்ரெட்நாட் கட்டி முடிக்கவேண்டுமானால் 1,813,000 பவுன் பிடிக்குமாம். இக்கப்பல்களிலேயே பலத்திற்கும் இவைகளின் வேகத்திற்கும் நிறைக்கும் ஏற்ப பற்பல வித்யாஸங்கள் உண்டு.

***

**க்ரூய்ஸர்கள்.**—இவை யுத்தக் கப்பல்களானபோதிலும், இவைகள் போருக்கென்றே அமைக்கப்படாமல் வியாபாரக் கப்பல்களைக் காப்பதற்கும் எதிரிகளைத் துரத்தி யடிப்பதற்கும் எதிரிகளின் கப்பல்களுக்கும் துறைமுகங்களுக்கும் தீங்குவிளைத்து ஓடிப்போய்த் தப்பித்துக் கொள்வதற்கும் உபயோகமாகும்படி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே அதிகமான பாரங்கள் இதில் ஏற்றப்படமாட்டா. இவைகளுக்கு வேண்டிய நிலக்கரி முதலியவைகளை வைக்கும்படி ஸஹாவாய் மற்றொரு கப்பலைகூடக் கொண்டு செல்வதுண்டு. பெரும் பீரங்கிகளும் வைக்கப்படுவதில்லை. சிறியவையும், ஆனால் வேகத்துடன் குண்டுகளை எறியக்கூடியதுமான பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும். எல்லாக் கப்பல்களையும்விட க்ரூய்ஸர்கள்தாம் வேகமாய் செல்லக் கூடியவை. இவைகளின் வேகத்தையும் கனத்தையும் இவைகள் கொண்டிருக்கும் ஆயுதங்களையும் உத்தேசித்து பற்பல வேறுபாடுகள் இவைகளில் உண்டு. இவைகள் செய்வதிற்கும் 20 லக்ஷம் பவுன்களுக்குமேல் செலவாகும்.

***

**ஸப்மெரீன்:**—இது தண்ணீருக்குள் மறைந்து செல்லக்கூடிய ஓர் அற்புதக் கப்பல். அது ஆகாயத்திலிருந்து பார்க்கப்படுமானால் நீரில் செல்லும் ஓர் திமிங்கிலத்தைப்போல் காணப்படும். அது எஃகினாலும், வெளியிலிருப்பன தெரியும்படி கனத்த கண்ணாடிகளாலும் செய்யப்பட்டுள்ளது. கண்ணாடிகளுக்குப் பாதுகாவலாய் உறுதியான எஃகுக் கவசங்கள் உண்டு. பகைக் கப்பல்களை எதிர்க்க வேண்டுமாயின், நீரடியிலேயே சென்று அருகில் நெருங்கியவுடன் தான் வைத்திருக்கும் டார்பீடோ குழல்களைச் செலுத்திவிடும். அதனுள்ளே யுத்தாயுதங்களும் வைக்கப்பட்டிருக்கும். நீரதனுள் நுழையாதபடியும் உள்ளிருப்பவர்களுக்குத் தகுந்த காற்று வசதிகள் இருக்கும்படியும் ஏற்பாடுகள் மிக்க சூக்ஷ்மமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது ஸாதாரணமாய் நான்குமணி நேரம் நீருக்குள் மூழ்கியிருக்கலாமாம். இதன் நீளம் ஸுமார் 130 அடியிருக்கும்.

***

**லெப்டினண்ட் ஹார்டிஞ்ச்:**—இவர் நமது ராஜப்ரதிநிதியவர்களின் தீரனாகிய குமாரர். இவர் போர்முனைக்குச்சென்று காட்டிய வீரதீரச் செயல்களினால் ராணுவத்தில் உயர்ந்த பல பட்டங்கள் அளிக்கப்பட்டார். யுத்தத்தில் காயமடைந்து சில நாட்களாய் ஆஸ்பத்திரியில் சிகித்ஸை செய்யப்பட்டு நவம்பர் 23உ புகழுடம்பை நாட்டி உயிர்நீத்தார். நமது அன்பார்ந்த ராஜ ப்ரதிநிதியவர்கள் இந்தியாவின் ஸேவையில் பல இடுக்கண்கள் அனுபவித்தாலும் ஒவ்வொரு இடுக்கணும் நமக்கும் பிரதிநிதியவர்களுக்கும் பரஸ்பரமுள்ள அன்பை விருத்தி செய்கின்றதற்கு ஹேதுவேயாகின்றது.

**டார்பீடோ:**—இது மீன் அல்லது சுருட்டுப் போன்ற ஓர்வகை யுத்தகலம். இதை ஒவ்வொரு போர்க்கப்பல், க்ரூய்ஸர்களிலும் எடுத்துக்கொண்டு போவதுண்டு. இது 14 அடி நீளமும் 18 அங்குல குறுக்களவும் உள்ளது. இந்த குழலில் நிறைய வெடி மருந்தும் கண்ணாடித் துண்டு, ஆணி, குண்டுகள் முதலிய மிகவும் பயங்கரமான வஸ்துக்களும் போடப்பட்டிருக்கும். இதை எடுத்து இது கொள்ளக்கூடிய குழலில் வைத்து யந்திரத்தை இயக்கினால் நீரில் தள்ளப்பட்டு மணிக்கு 48மைல் தூரம் வெகு விசையாகச் சென்று எதிரியின் கப்பல் அடியில் தாக்கும். உடனே டார்பீடோ வெடித்து கப்பலிற்கு கொடிய சேதத்தை உண்டாக்கும். ஸுமார் 2000 கஜம் வரையில் போகக் கூடிய சக்தியையுடையது. டார்பீடோ தன் ஸ்வசக்தியினாலேயேதான் நீரில் செல்லவேண்டும்.

***

**வெடிகுண்டு கடற் சுரங்கங்கள்:**—இவை எதிரிகளது கப்பலை நாசமடையக் செய்வதெற்கென்று அமைக்கப்பட்டவை. அவை உருவத்தில் சில உருண்டையாய் மிதவையாகவும், மற்றவை பீப்பாய் போலவுமிருக்கும். இவை நிறைய கொடியவெடி மருந்து குண்டு முதலியவைகளைப்போட்டு மிதக்கவிடுவார்கள். அல்லது ஜலமட்டத்திற்குச்சிறிது தூரத்தில் இருக்கும்படி செய்வார்கள். இவைகள் ஸாதாரணமாய் பழங்கப்பல்களில் கொண்டுபோகப்படும். கப்பலின் மேல்தட்டிலிருந்து மெதுவாய் பின்புறத்திலிருக்கும் ஒரு சரிவுபலகையின் வழியாக நீரில் தள்ளிவிடப்படும். இவைகளின்மீது கப்பல்கள் தட்டினால் போதும். எவ்வளவு உறுதியாயுள்ளவைகளானாலும் சின்ன பின்னமாய்த் தகர்க்கப்படும். இவைகள் கடல்களில் போடப்படுவதைப் பற்றிய தேசா தேச விதிகள் பலவுண்டு. இவைகளை எடுப்பதும் மிகவும் அபாயகரமானது. இவைகள் சிதறிக் கிடக்கும் பரப்பில் இரண்டிரண்டு கப்பல்கள் சேர்ந்து வேலை செய்யும். உறுதியான இரும்புக் கம்பிகள் இக்கப்பல்களிலிருந்து கடலில் விடப்பட்டு பிணைக்கப்பட்டிருக்கும். இவைகள் நீரில் ஆழச் செல்வதற்கு இருப்புக்காற்றுடிகள் தொங்கவிடப்பட்டிருக்கும். இக்கம்பிகளை நீரில் இழுத்தால் இவைகளில் இக்கடற் சுரங்கங்கள் அகப்பட்டு ஒன்றோடொன்று மோதி வெடித்து விடும். அல்லது அவை சமீபத்தில் நீர்மட்டத்தில் வந்தால் அவைகளைச் சுட்டு வெடிக்கச் செய்வார்கள்.

***

**மிஸ்டர் ஆஸ்க்வித்.**—இங்கிலாந்தின் ப்ரதம மந்திரி. 1852ஹு பிறந்தவர். லண்டன் ஆக்ஸ்போர்ட் இவைகளில் படித்தவர். இவர் 1891ஹு பார்லிமெண்டு மெம்பராக தெரிந்தெடுத்துக்கொள்ளப்பட்டார். இவர் பாரிஸ்டர் தொழிலி லிருந்தபொழுது கேஸுகள் இவரிடம் அதிகம் வாராமற்போய, வேண்டிய அவகாசம் கிடைக்க, அதை நம்மவர்போல் வீணில் செலவழிக்காமல் ராஜதந்திர விஷயங்களில் தம் கவனத்தைச் செலுத்தி நிபுணரானார். தம் திறமையாலேயே படிப்படியாய் உயர்ந்த உத்யோகங்களில் அமர்த்தப்பட்டார். இவர் உள்நாடு மந்திரியாகவும் சான்ஸலர் ஆவ் தி எக்ஸ்செகர் என்னும் பொக்கிஷ மந்திரியாகவும் வேலை பார்த்திருக்கிறார். 1909ஹுமுதல் முதல் மந்திரியாக இருந்துவருகிறார். அதனுடன் யுத்தமந்திரி வேலையும் பார்த்து வந்தவர் போர்நேரிடவும் தாம் அந்தபதவியிலிருந்து விலகிவிட அதற்கென்று லார்ட் கிச்சனர் நியமிக்கப்பட்டார்.

***

**ஸர் எட்வர்ட் க்ரே.**—இங்கிலாந்தின் அன்யதேச மந்திரி. இந்த வேலையை 1905ஹு முதல் நிர்வஹித்து வருகிறார். இதற்கு முன் இவர் அன்யதேச மந்திரியின் உதவி உத்யோகஸ்தராக இருந்திருக்கிறார். அந்நிய தேச வ்யவஹாரங்களில் இவருக்கு நிகரானவர் கிடையாது. இவர் ஸாமர்த்யத்தைப் பற்றி இங்கிலாந்தின் ராஜ்ய தந்திர நிபுணராய் விளங்கிய மிஸ்டர் க்ளாட் ஸ்டனே புகழ்ந்திருக்கும்போது நாம் என்ன சொல்லவேண்டியிருக்கிறது? இவர் இந்த யுத்தத்தை நிறுத்தும்படியாகச் செய்த முயற்சிகளே இவரது பெருமையையும் ராஜ தந்திரத்தையும் செவ்வனே விளக்கிக்காட்டுகிறது.

***

**எர்ல் கிச்சனர்:**—இங்கிலாந்தின் யுத்த மந்திரி. இவர் 1850-ஹுத்தில் பிறந்தவர். ஆப்ரிக்காவில் நடந்த பல யுத்தங்களில் இவர் ஸேனைத்தலைவராக நியமிக்கப்பட்டனர். அவைகளில் ஒன்றிலாவது தம் காரியத்தை முடிக்காமல் வரவில்லை, தென் ஆப்ரிகா யுத்தத்தில் லார்ட் ராபர்ட்ஸின் கீழ் உத்யோகம் பார்த்து வந்தார். பிறகு அவ்விடத்திலேயே இரண்டு வருஷம் ஸேனைத்தலைவராய் இருந்து வந்தார். பிறகு தான் அவர் இந்திய ஸேனாதிபதியாக வந்தார். இந்திய ஸேனாபதியாயிருந்த இவரது நடவடிக்கைகளைப்பற்றி நம்மவரில் பலருக்கும் இன்னும் ஞாபகமிருக்கலாம். இவர் தாம் நினைத்ததைப் பிடிவாதத்துடன் என்ன இடையூறுகள் நேரிட்டபோதிலும் முடித்தே தீருவார். ஸைனியத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று இவர் கொண்டுவரவும் இவருக்கும் லார்ட் கர்ஸனுக்கும் இயலாமற் போய் விடவே லார்ட் கர்ஸன் தம் வேலையை ராஜிநாமா கொடுத்துவிட கிச்சனர் தம் காரியத்தில் ஸித்தியடைந்தார். பிறகு இவர் ஈஜிப்ட் தேசத்தில் ப்ரிடிஷ் மேற்பார்வையினதிகாரியாய்ச் சென்று அநேக சீர்திருத்தங்கள் செய்துவந்தார். இவரது அனுபவ முதிர்ச்சியை அங்கீகரித்தே இவர் காலஞ்சென்ற எர்ல் ராபர்ட்ஸின் ஆலோசனையின் கீழ் யுத்த மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.


OFFICE OF THE REGISTRAR ... 9-FEB 1915 MA...

[SUPPLEMENT TO THE "VIVEKA BODHINI"]



# CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | துலு | இங் | தமிழ் | வார | ஆநந்த ஹு தைமூ — சாலிசகம் 1836, கலியாப்தம் 5015 — பசலி 1324, கொல்லம்-1090 — 1915 ஹு ஜனவரிமூ பிப்ரவரிமூ |
|---|---|---|---|---|---|
| | 27 | 14 | 1 | வியா | சது 39-51, மூல 15-57 திரு 0-35, வியா 53-27, பத் 12-6, திவி 11-57, ரா 10-27, அக 28-32, மகர ஙிரு சதுர்திதி உத்தராயணம்-பொங்கல்பண்டிகை-கரிநாள் ஸமார்கம்- |
| புசு | 28 | 15 | 2 (மகரம்) | வெ | ● அமா 36-10, பூரா 13-34, ஹர் 48-14, சது 8-0, ரா 4-31, திரு 2 புத 25-30, கே 1 சுக் 45-6, கோபூஜை [தை அமாவாசை கரிநாள். |
| செ | 29 | 16 | 3 | சனி | பிர 33-30, உத்தி 12-3, வஜ் 43-12, கிம் 4-50, திவி 21-58, மாகசுத் உத் 1 செ 27-0, இஷ்டி சிர உப கரிநாள். |
| ரபு | 30 | 17 | 4 | ஞா | துதி 31-56 திரு 11-36, வரித் 39-2, பா 2-43, திவி 21-43, உத் 3 ரவி 3-10, திரு 3 புத 35-45, சந்-தரி. |
| கு | 1 | 18 | 5 | திங் | திரு 31-37, அவி 12-19, விய 35-50, தை 1-46, ரா 2-20, அக 28-35, அவி 4 குரு 20-18, விய சிரா. |
| சு | 2 | 19 | 6 | செ | சது 32-34, சத 14-18, வரி 33-38, வணி 2-35, ரா 2-34, கே 2 சுக் 57-44, சது விரு மழை 9க்குள். |
| ரசெ | 3 | 20 | 7 | புத | பஞ் 34-48, பூரட் 17-31, பரி 32-23, பவ 3-41, ரா 14-39, உத் 4 ரவி 29-4, மகரசெ 43-5, திரு 4 புத 8-12, வஸசர்த [பஞ்ச |
| பு] | 4 (ரபீஉல்அவ்வல்) | 21 | 8 | வியா | சஷ் 38-11, உத் 21-51, சிவ 32-0, கௌ 6 29, ரா 25-54, கும்பாய 15-49, சஷ் உப. |
| புச | 5 | 22 | 9 | வெ | சப் 42-32, ரே 27-11, சித் 32-25, கர 10-21, தியா—0—0 அக 28-38, அவி 1 புத 42-0, ரிஷபவச்ர சனி 46-0, சப் விரு ரதசப்தமி வைவ ம சூரியசந்திர விரு. |
| ரசு | 6 | 23 | 10 | சனி | அஷ் 47-31, அசு 33 12, சா 33-20, பத் 15-1, திவி 22-12, ரா 31-8, திரு க ரவி 34-37, சே 3 சுக் 43-1, பீஷ்மாஷ் |
| செ | 7 | 24 | 11 | ஞா | நவ 52-51, பர 39-36, சுப 34-32, பா 20-11, சே 3-46, உத் 3 செ 59-10, கரிநாள். |
| பு | 8 | 25 | 12 | திங் | தச 58-2, ✱கார் 45-56, சுப் 35-44, தை 25-26, திவி 12-45, அவி 2 புத 35-5, கார் உப. |
| ர | 9 | 26 | 13 | செ | ஏகா 60-0, ரோ 51-56, பிரா 36-40, வணி 29 1, ரா 1-13, அக 28-43, திரு 2 ரவி 50-57. |
| சு | 10 | 27 | 14 | புத | ஏகா 2-43, ம்ரு 54-11, மா 37-4, பத் 2-43, திவி, 7-9, கே 4 சுக் 27-46, சர்வ ஏகா தில பத்ம விரு பீஷ்ம ஏகா. |
| பு | 11 | 28 | 15 | வியா | துவா 6-33, திரு 60-0, வை 36-45, பா 6-23, திவி 19-38, கும்பபுத 50-20, பீமத்துவாதசி தெசி ஸோபபத பிரதோ வை சிரா. [7-க்குள் |
| செ | 12 | 29 | 16 | வெ | திர 9-12, திரு 1-20, விஷ் 35-31, தை 9-12, ரா 4 6, உத் 4 செ 15-30, கல்பாதி மழை |
| ர | 13 | 30 | 17 | சனி | சது 10-52, புன 4-24, பிரி 33-22, வணி 10-52, திவி 25-0, அக 28-48, திரு 3 ரவி 7-17, தைப்பூசம் கரிநாள். ஆ சா மா வை இஷ்டி |
| சு | 14 | 31 | 18 | ஞா | ○ பௌ 11-7, பூச 6-12, ஆயு 30-12, பவ 11-7, ரா 9 42, சாபசுக் 9-36, பகா ஸ்நா பூர் |
| | 15 | 1 (பிப்ரவரி) | 19 | திங் | பிர 10-4, ஆயி 6-45, ஸௌ 16-4, கௌ 10-4, ரா 7-40, மாக பகு. |
| ரசெ பகு] | 16 | 2 | 20 | செ | துதி 7-54, மக 6-11, சோ 21-3, கர 7-54, திவி 25-39, திரு 4 ரவி 33-0, திரு 1 செ 31-32, அவி 4 புத 21-20, சத 1 குரு 54-36. |
| சு | 17 | 3 | 21 | புத | திரு 4-39, பூர 4-34, அதி 15-13, பத் 4-39, திவி 21-49, அக 28-52, மூல 2 சுக் 51-14, சங் சது. |
| | 18 | 4 | 22 | வியா | சது 0-28, டஞ் 55-10, உத் 2-3, ஹஸ் 56-52, சுக 8-43, பா 0-28, திவி 21-51. |
| ர | 19 | 5 (1915ஹு) | 23 | வெ | சஷ் 50-15, சித் 55-13, திரு 1-42, சூல 52-34, கர 22-56, திவி 17-41, அவி 1 ரவி 40-43. |
| செ | 20 | 6 | 24 | சனி | சப் 44-39, சுவா 51-10 கண் 46-31, பத் 17-22, திவி 8-16, திரு 2 செ 48-0, காளாஷ்டமி. |
| சு | 21 | 7 | 25 | ஞா | அஷ் 38-39, விசா 47-4, விர் 38-42, பா 11-34, திவி 4-13, ரா 27-29, அக 28-57, மூல 3 சுக் 8-16, திஸ்ரோஷ்ட |
| ர | 22 | 8 | 26 | திங் | நவ 32-52, அனு 43-3, திரு 30-58, தை 5-45 சே 0-26, ரா 27-11, அவி 2 ரவி 57-43. [கா. |
| | 23 | 9 | 27 | செ | தச 27-22, கே 39-22, வியா 23-27, பத 27-22 சே 0-11, ரா 29-16, தசமிதிதி மழை 4-க்குள். [சர்வ ஏகா. |
| சு | 24 | 10 | 28 | புத | ஏகா 22-17, மூல 36-7, ஹர் 16-15 பா 22-17, செ 2-17, ரா 3-6, ரா 30-28, மூல 4 சுக் 24-24, திதித்வயப் |
| செபு | 25 | 11 | 29 | வியா | துவா 17-49, பூரா 33-34, வஜ் 9-33, தை 17-49, சே 3-30, ரா 23-56, அக 29-3, திரு 3 செ 4-0, புதவச்ர 55-7, மகா ஙி திரயோதிதி பிரதோ. |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| குரு. ராகு. | 7-மகர செ<br>9-ரிஷ வச<br>15-கும் பு<br>18-சாப சு | | |
| ரவி புத | | | கே |
| செ | சுக் | | |



# விவேக போதினி

தொ. 7] ஆனந்தஹு மார்கழிமீ: [பகுதி. 7

## மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

### 3. பக்தியோகம் (தொடர்ச்சி)

### ஹனுமார் சரித்திரம்

பக்தியோகத்தின் அங்கங்களை எடுத்து விளக்கியாகிவிட்டது. இதிலிருந்து பொது வாக பக்தியோகம் கர்மயோகமின்றி நிலை பெறுமென்றும், இது எல்லா வருணத்தாருக் கும் பொதுவாதலால், தாழ்ந்த ஜாதியில் பிற க்க நேரும் பக்தர்களுக்கு கர்மயோக பலமில் லாது இதுதனித்தே இருப்பதுபோலக் காணப் படினும், அவர்களுக்கு உள்ள குறைவான தர் மங்களையும் யோகமாக அனுஷ்டித்தால்தான் பக்தி யோகமாக இடமுண்டு என்றும், இதன் முடிவு மேல்வருணப் பிறப்பும், மேல் படியான ராஜயோக அனுஷ்டான யோக்யமாகும் தன் மையும்தான் என்றும், இந்த பக்தியால் முக்தி பெற்றதாகக் கூறப்பட்டிருக்கும் புராண, இதி ஹாஸ, ஆழ்வார், நாயனார் திவ்யசரிதங்களிலெல் லாம் கவனித்துப்பார்த்தால் திவ்யசரீரப்ராப்தி, ஈசஸாலோகாதி ஸ்திதிப்ராப்தி ஆகிய மேல் வருணப் பிறப்பிற்கும், மேல்படி அப்யாஸ அவ காசத்திற்கும் காரணமான பொதுவான நிலை யையே முக்தியாக வர்ணித்துள்ளது, அல்லது கிரமமாக மேலே அடையப்படும்முக்தியை, ஸித் திப்பதன் உறுதியால் முக்தியாக வர்ணிக்கப் பட்டுள்ளது என்றும், நன்கு வெளிப்பட்டிருக் கும். இந்த பக்தியோகம் அதிகமாகக் கர்ம யோகத்தில் சேராமலிருந்து மேல் படிக்கு (கர்மபக்தியுடன் கூடிய ராஜயோக அனுஷ் டானயோக்யதைக்கு)க்கொண்டுசேர்க்கலாதக மாக இருப்பது ஸ்திரீ, சூத்திரர், புத்தி நுட்ப மில்லாதவர்களுக்குத்தான் என்றும், மற்றைய த்விஜர்களுக்கு இது கர்மயோகத்துடன் கல ந்திருந்தால் மேல் படியான ராஜயோகத்திற்கே கொண்டு சேர்க்கும் என்றும் விளங்கியிருக் கும். ஆகவே தனி பக்தி (அதிக கர்மயோக ஸம்பந்தமின்றி) உள்ளபடி இருந்தால் ராஜ யோக அப்யாஸத்திற்கு யோக்யமான நிலை ஏற்பட, அதிலிருந்து கர்ம பக்தி யோகம் மூன்றையும் அனுஷ்டித்து முடிவில் த்வி ஜர்கள் அடையும் ராஜயோக நிலை வரவேண்டு மென்றுச்சுது ஒவ்வொரு மற்ற வரு ணத்தானும். புராண, இதிஹாஸ, பெரிய புராண, பக்தவிஜய சரிதங்கள் எல்லாம் இத ற்கு உதாரணம்; திரௌபதி, முதலிய ஸ்திரீ களும், நந்தன் முதலிய நாயனார்களும், ஆழ் வாராதிகளும் இதற்கு திருஷ்டாந்தம். இவர் களுள் சிலருக்கு மேல்படிப்போக்கு அமைந் திருப்பினும் அவைகள் ஜன்ம ஒழுங்குப்படி ஸாதாரணமாக அவர்களதுமல்ல, அவைகளைக் கொண்டு தாம் மேல் வருணத்தாரைவிடச் சிற ந்தவரென்று அவர்கள் இறுமாந்து வாய்புலீறி நடக்க ஸ்வப்நத்திலும் கருதி இரார்கள், தா மாக மனப்பூர்வமாக அவைகளைப்பற்றவும் முய லார்கள், தமது தெய்வ ஸம்பந்தத்தால் அவை அமைந்திருப்பினும் அவைகளை ஒரு பொருட் டாகக்கூடக் கருதாது தமது பக்தியையே ப்ர தானமென்று கடைப்பிடித்து நிற்பர். நந்தன் சரித்திரம் 'விவேக போதினி' சிறுவர்க்கான பக்கங்களில் முன்னரே எழுதி வெளியிட்டாகி

விட்டது. திரௌபதி முதலிய புராணபாத்திரங்கள் பலவற்றை முன் அநேக தருணங்களில் எடுத்துக்காட்டியாகிவிட்டது. இங்கு பக்தி பரவசம் என்றுகருதுங்கால் நமக்குளெல்லோருக்கும் இயற்கையாக ஞாபகம் வரக்கூடிய இருவர் சரித்திரங்களை எடுத்துக்கூறி பக்தியோகச் சிறப்பை விளக்க முயலுவோம். இவர்கள் ஹனுமாரும், கண்ணப்ப நாயனாருமே. இவர்கள் பக்திபரவசத்தை எடுத்துப்பாராட்டி அனுபவியாதார் யார்!

ஹனுமார் ஸ்துதியைப் பார்க்கும்பொழுதே அவர் பக்தியின் சிறப்பு நன்கு வெளியாகும். ஹனுமார் சிறுவயது முதலே சிறந்த மனங்கொள்ளா அன்பிலேயே பழகிவந்தவர். அதனாலேயே அவருக்கு தன் பலம், ஆற்றல் எல்லாம் மறந்தே போய்விட, வெறு அன்பு ஆகாரமாகவே இருந்தார். இவர் இம்மாதிரி தன் நிலையையுமறந்து அன்பு பாராட்டவல்லவர் என்பது ஸ்ரீமத் ராமாயணத்தில் இவர் ஸுக்ரீவனிடம் யஜமானக் கருத்துடன் காட்டிய பேரன்பு மிகுதியால் விளங்கும். ஸுக்ரீவன் வாலிக்குப் பயந்து உலகெங்கும் ஓடுகையில் கூடவே இருந்து அவனைத் தேற்றி ஸமயத்திற்குத் தகுந்த யுக்திகள் கூறித்திரிந்தவர் இந்த ஹனுமார். ஸுக்ரீவன் நமது யஜமான், அவன் பக்ஷம் நியாயம் உள்ளது, நாம் அவன் பக்ஷம் உழைக்கக் கடமைப்பட்டவன் என்ற இந்த எண்ணங்கள் வடிவாக ஹனுமார் இருந்தாரே ஒழிய, நமக்கு மிகுந்த பலம்உள்ளது, அதைக்கொண்டு வாலியைக் கொன்று ஸுக்ரீவனுக்கு நற்கதி உண்டாக்குவோம் என்று தோன்ற அவர் எண்ணம் தன்னை நோக்கிப் பாயவே இல்லை. இவ்வாறு தன்னையும் மறந்து தான் அன்பு பாராட்டும் பொருளை மாத்திரமே கருதும் திறன் ஹனுமாருக்கு அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. ஸுக்ரீவன் பட்ட பாடுகளில் தாமும் கலந்து அவனுடன் ரிச்யமூக பர்வதத்தில் கஷ்டப்பட்டு மிகுந்த பயத்துடன் இருந்துவந்த காலங்களில், இவருக்கு எவ்வளவு கல்வி இருந்தும், யோகஸித்தி ப்ரஹ்மசரியம் இருந்தும், இவர் அன்பாகாரமாகி விட்டபடியால் இவைகளில் இவர் மனம் செல்லாமலே இருந்துவிட்டது.

இப்படி அன்பே வடிவமாய் தன்னை மறந்து ஒழுங்குதவறாது மிகுந்த சிரத்தையுடன் நடந்துவரும் பேரன்பன் ஆற்றல் வீணாகுமா? அவன் அன்பைப்பெற்று அதற்குத் தகுந்த நிலையை அருளத்தகும் ஈசன் கருணை அவனை விட்டு எப்படி அகலும்! ஒருநாள் ரிச்யமூக பர்வதச்சிகரத்தில் ஸுக்ரீவனோடு ஹனுமார் ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் ஸுக்ரீவன் திடுக்கிட்டெழுந்து ஓடத்தொடங்கினான். என்ன என்று விசாரித்ததில் தூரத்தில் இருவர் தம்மை நோக்கிவருவதாகவும் அவர்கள் வாலி ஆள்களோ, அல்லது வாலியும் மற்றொருவனுமோ என்று தன் யஜமான் வெருண்டு ஓடுவதாகவும் தெரியவந்தது. உடனே யஜமானனைத் தைர்யமாக இருக்கும்படி உத்ஸாஹப்படுத்திவிட்டு தாம்போய் உண்மை உணர்ந்து வந்துவிடுவதாகக் கூறிப் புறப்பட்டார். ப்ரஹ்மசாரிரூபம் எடுத்து மஹாவிநயத்துடன் மலைச்சிகரத்தில் வந்துகொண்டிருக்கும் அதிஸுந்தர புருஷர்களிருவரையும் அணுகினார்: நமஸ்கரித்தார், அவர்கள் நோக்கத்தை வெளிப்படுத்த வெகு சாதுர்யமான வாக்கியங்களைப் பேசினார். இவ்விடங்களில் எல்லாம் தம்மை அறியாமலே அவர் கல்வித்திறமும் புத்தி நுட்பமும் வரம்பு மீறி வெளிப்பட்டது. வந்தவர்களான ராமலக்ஷ்மணர்கள் இவரது கனிந்த மனதை, தெளிந்த மொழியால் உணர்ந்து தமது விஷயங்களை ஒளியாமல் கூற இவரும் தன் யஜமானன் விஷயத்



தையும் கூறி இவர்களுள் மாறா அன்பு உண்டாவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து ஒழுங்காக ஸுக்ரீவனுக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்திக்கும் நட்பு உண்டாக்கிவைத்து தன் யஜமானனுக்குச் செய்யவேண்டியதான முடிவான செய்கையையும் பூர்த்திபண்ணி அவன் குறையை நீக்கினார்.

இப்படியானதும் யஜமானனுக்கு தமக்கும் மேலான ஒரே யஜமானன் ஸ்ரீராமசந்திரமூர்த்தி என்பதைக்கண்டு தமது பரவச அன்பை ஸ்ரீராமனிடமே செலுத்தலாயினர் ஹனுமார். அன்பிற்கு ஆதரவான பொருள் விசேஷத்தாலும் முன்னமே அவரிடமிருந்த ஒழுக்க விசேஷத்தாலும் அவர் பக்தி யோகமாகி முதிர்ந்து வந்தது. முன்னர் பக்தியோகத்திற்குக் கூறப்பட்ட அங்கங்கள் எல்லாம் இவர் பக்தியில் பொருந்தி யிருந்தன. ஸ்ரீராமனது ஈச்வர ஸ்வரூபத்தைப்பற்றி கவனிக்காமலே ராமரூபத்தில் ஈடுபட்டவர் ஹனுமார். இதற்கு திருஷ்டாந்தமாக ஹனுமாரைப்பற்றிய சிறு கதைகள் அநேகம்உண்டு. அவைகளிலெல்லாம் ராமரூபத்திலேயே ஈடுபாடு இவருக்குளென்பது நன்குவெளியாகும் (கருட கர்வபங்கம் முதலியன) ராமன் திவ்யமங்கள ரூபமே இவர் விக்ரஹம். எவ்வித லௌகிக பயனையும் கருதி இவர் ஸ்ரீராமனிடம் ஈடுபட்டவரல்லர். ஹனுமாரது வைதிக அனுஷ்டான விஷயம் அவர் பாண்டித்யம் முதலியவைகளாலேயே வெளிப்படையாக உள்ளது. இவர் பக்திச்சிறப்பு, ஸமுத்ர தரணம், ஸஞ்ஜீவி பர்வதம் கொண்டு வருதல் முதலிய இடங்களிலும் நன்றாக வெளிப்பட்டுவரவில்லையா? இவருக்கு ஸ்ரீராமசந்திரமூர்த்தியிடம் யஜமான பாவம் திடப்பட்டிருந்தது. அவர் காரியம் பார்ப்பதையே இவர் தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார். இதோடு மாத்திரமா? எங்கெங்கெல்லாம் எவ்வெக்காலத்தில் ராமாயணகதை நடைபெறுகிறதோ, அங்கங்கெல்லாம் ஆனந்த பாஷ்பத்தைச் சொரிந்துகொண்டு சிரமேல்தூக்கிய கையுடனும் மயிர்க்கூச்செரிந்த உடலுடனும் பரவசமாக வந்து சொக்கி நிற்கிறார் ஹனுமார் இப்பொழுதும். இவ்வளவு அன்பு ஆராமை மிகுந்தவர் இப்பக்த சிரோமணி.

இவரது பக்திச்சிறப்பைப் பற்றி நம்முள் வழங்கிவரும் கதைகள் அநேகம். பட்டாபிஷேக காலத்தில் ராமரால் கொடுக்கப்பட்ட முக்தாஹாரத்தை ஸீதை அவர்குறிப்பை அறிந்து ஹனுமாருக்குப் போட, அவர் அதை எடுத்து கசக்கி உற்றுப்பார்த்து எறிந்து விட்டனராம். ஸீதை மனம் நொந்ததைக் கண்ட ஹனுமார் ராமர் கடாக்ஷ விசேஷக்குறிப்பை உணர்ந்து தம் மார்பைப் பிளந்து உட்புறம் எல்லாம் ராம ராம என்றபதிவு ஏற்பட்டிருப்பதைக் காட்டி, இத்தகைய பதிவு இம்முத்துக்களுள் இல்லையே என்று குறித்து தமக்கு யாதொரு வெகுமதியும் வேண்டியதில்லை, ராமபக்தியே போதும் என்பதை விளக்கினராம். ஹனுமாருக்கு ஒருக்கால் சனீச்சரன் வந்து சேருங்காலம்வர, அவன் உட்புக உத்தரவு கேட்டானாம். அப்பொழுது ஏற்பட்ட ஸம்பாஷணையில் ஹனுமார் முடிவாக $7\frac{1}{2}$ நாழிகை தன்னுள்ளிருக்க சனிக்கு இடம் தந்தாராம். இப்படியானதும் அவர் தமது வழக்கப்படி ராமத்தியானத்திற்குத் தொடங்கிவிட ச்வாஸம் தானே நின்றுவிட்டது. உட்புகுந்த சனி பிடிப்பதற்கு ஒன்றும் அகப்படாது தத்தளித்து $7\frac{1}{2}$ நாழிகை இருந்து திண்டாடிவிட்டு வெளியேற நோக்குகையில் வெளிப்போகும் வழிகள் எல்லாம் த்யான வேகத்தால் அடைபட்டுவிட மிகுந்த வருத்தப்பட்டுக்கொண்டு ஹனுமார் நிஷ்டைகலையும் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டு சனிக்கு சனிபிடித்து விட்டதோ என்று

கூறும்படி நிண்டாடினும். ஹனுமார் என்ற பெயர் கூறிய மாத்திரத்தில் எல்லோருக்கும் அவர் ராமபக்தி வைபவம்தான் ஞாபகத்திற்கு வரும்.

இப்படி இருக்க, ஹனுமார் ஆராதனம் தக்காலத்தில் அலங்கோலப்பட்டிருப்பதைப் பாருங்கள் நண்பர்களே! ராமத்யானம், பக்தி, ராமன் ஆகாரமாக இருத்தல் இவைகளை விட்டு ஹனுமாரைப் பிரித்து தனியாக வழிபடுவது எந்த ஒழுங்கைச் சேர்ந்ததோ தெரியவில்லை! ஹனுமாரை வழிபடத்தொடங்கினல் அவர் செய்த அபாரச் செயல்களும் அவர் சிறப்பும்தான் முதலில் தோன்றும். அதோடு நின்று விடுவதா? இவைகளை விட்டு மனம் கிளம்பி எந்த பாவனையுடன் ஹனுமார் இவ்வளவு சிறந்த காரியங்களை வெகு எளிதாகச் செய்து முடித்தார் என்று கருதாமலிருந்தால் அந்த ஹனுமத்தியானம் எதோடு சேர்ந்தது? இப்படிக் கருதி சிந்தனைசெய்யத்தொடங்கினல் அவர் ராமபக்தி பரவசம் நமது மனதில் தட்டாமல் போகுமா? அவர் அத்புதச் செயல்கள் முக்கியமா அல்லது அவர் பக்திபரவசம் முக்யமா? நியாயப்படி அவர் பக்தி ஆராமையில் ஈடுபட்டு அவரைப்போல மெய்ம்மறந்து த்யேயவஸ்துவான ராமர் பக்தி ஸ்வரூபமாக நின்றால் அல்லவா ஹனுமாரை வழிபட்டதாகும். இவ்வாறில்லாது பலபீமராகவும், மஹா பராக்ரமசாலியாகவும் மாத்திரம் வழிபட்டு நின்றுவிட்டால் அவரை மேன்மைப்படுத்தி வந்தனீயராக்கி மனஸ் ஸமாதான நிலைமை நமக்கு எப்படி வரும்? இதனால் வரும் மோக்ஷ நிலைக்கு இடமே ஏற்படாமல் போகும் என்று கூறவும் வேண்டுமா! இப்படி வழிபட்டு பட்டுத்தான் தக்காலத்தில் ஹனுமாரை வெறுங்குட்டிச் சாத்தான் க்ஷுத்ரதேவதை நிலைக்குக்கொண்டு வந்து பாவனை செய்து செப்படி வித்தை காட்டத் தொடங்கிவிட்டார் ஹனுமந்த உபாஸகர்கள். வைதிகவழியிலிருப்பவரான ஸாதுக்கள் இந்த ஹனுமாரை ஆராதிப்பது ஸாத்வீக உபாஸனையாகுமா என்று மயங்கும் நிலை வந்துவிட்டது இக்காலத்திய ஹனுமந்த உபாஸனைக்கு, கும்பிடப் போனவன் தெய்வத்தைக் கெடுத்த கேட்டால். ஒருவாறு ஸாத்வீகமான ஹனுமாரது வழிபாடு மாத்வர்களிடமுள்ளது. அவர்களும் வைதிக முறைப்படி நன்றாக இதை நடத்தாததால் இது நல்ல சித்த ஸமாதானத்தைத்தருவதாகஇல்லை. மாத்வர்கள் ஹனுமாரை ராமபக்தாக மாத்திரம் மதித்து அவர் பக்தி பரவசத்தில் ஈடுபட்டு ராமத்யான ரூபர்களாக இருக்க முயலுவதில்லை. அவர்களுக்கு ஹனுமாரிடமிருக்கும் அபிமானம் அவர் வாயுபகவானது முதல் அவதாரம் என்பதையே பொருத்தது. இதனால் வாயுபகவானது மூன்றாவது அவதாரம் அவர்கள் குருவான மத்வாராதலால் வாயுவினது முதல் அவதாரமான ஹனுமாரிடத்தும், இரண்டாம் அவதாரமான பீமனிடத்தும் அவர்களுக்கு மிகுந்த அபிமானம். ஆனால் இம்மாதிரியான ஸ்வமதாபிமானத்தோடுகூட ஹனுமாரது ராமபக்தி பரவசம் அல்லது பீமஸேனனது சிவபக்தி பரவசம் இவைகளையும் அவர்கள் கருதி ராமமயமாக அல்லதுசிவமயமாக நிற்கப்பார்த்தால் அவர்கள்பக்தி பக்தியோகமாகமாற இடமுண்டு. ஆனல் மற்றவர்கள்செய்யும் ஹனுமத்உபாஸனையான கரடிக்கூடஉபாஸனை, காம்ய உபாஸனை இவைகளுக்கு பக்தியோகமாகும்வழியே இல்லாததால், மத்வர்கள் உபாஸனையொழிந்த மற்றைய ஹனுமத் உபாஸனைகள் எல்லாம் வீணே, வைதிக மோக்ஷஸோபான பாகமாகத் தகுந்தவைகள் அல்ல, என்பதை மறவாது ஹனுமாரிடம் ஈடுபட்டு இக்காலத்திய வழிகளிலிருந்து விலகி வைதிகமார்க்கத்தை இந்த வழிபாட்டிலும் கடைப்பிடிக்கவேண்டும்.



பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாமே என்பது போன்ற பக்தியைத்துதிக்கும் வாக்கியங்கள் காணப்படினும், இவைகளுக்கெல்லாம் பக்திஉள்ளபடி யோகமாகப்பண்ணத் தொடங்கிவிட்டால் ராஜ ஞானயோக வழியாக முக்தியையே அடையும்படி செய்துவிடும், கீழே நழுவுவது அதிகமாக ஏற்படாது என்பதுதான் கருத்து. பக்தி யோகத்திற்கு முடிவான பலன் ப்ரஹ்மலோகம் வரையில் போகலாம். அதாவது தேவதா ஜன்மம் வேதாந்த விசார யோக்யமான த்விஜப்பிறவி முதலியவைகளே ஒழிய, எடுத்ததும் மோக்ஷம் உடனே கைகூடி விடாது. இதுவரையிலும் கூறிவந்த பக்தசிரோமணியான ஹனுமாரும் ஸ்ரீராமன் தமது நிலைக்குப் போகப் புறப்படுகையில் கூடவே புறப்பட யத்தனித்தாராம். அதற்கு ஸ்ரீராமசந்திர மூர்த்தி மிகுந்த பரிவுடன் அவரைநோக்கி 'அப்பா குழந்தாய், நமது திவ்ய கதை உலகில் உள்ளவளவு, நீ ஆனந்தமாக எம்மிடம் ஈடுபட்டு மேலான நிலைகளை அடைந்து என்னிடம் வருவாய்' என்று உத்தரவளித்தார். அதன்படி அவர் உலகில் சிரஞ்சீவியாக இருந்து ராமகதாப்ரஸங்கவிடங்களில் எல்லாம் ஆவிர்ப்பவித்து உருகி ஆனந்தித்து, அடுத்த ப்ரஹ்மகல்பத்தில் பிரஹ்மாவாக யோக்கியராகிறாராம். அடுத்த கல்பமுடிவில்தான் ஹனுமாருக்கு, ஜீவன் முக்தநிலையிலிருந்து விதேக முக்தி வரப்போகிறது. இதனாலேயே பக்தியோகம் அடுத்தபடியாகிய ராஜ ஞான யோகங்களில் கொண்டு சேர்த்து மீளாநெறி வழி நம்மைச் செலுத்திவிடும் என்பதற்கு என்ன ஸந்தேஹம். இந்த விஷயங்களை எல்லாம் கவனியாது இவ்வுலகிலேயே பக்தி, அதுவும் லக்ஷணங்கள் பொருந்தாப் பக்திக், கூத்தடித்து மோக்ஷத்தையே நேரிட உடனே எட்டிப் பிடித்துவிடலாம் என்ற அறிவிலிகளை என்னென்று எடுத்து வர்ணிப்பது? அம்புலியைப் பிடித்துவிட்டதாக எண்ணி மகிழும் குழந்தையை உபமானமாகக் கூறின் அதற்கிருக்கும் குற்றமின்மை இவர்களிடமிராது இறுமாப்பும் பிடிவாதமும் அல்லவா இருக்கிறது?

ஹனுமார் மேல்படியின் யோக்யதையுள்ளபடி கைகூடுவதற்காக ஸ்ரீராமசந்திரமூர்த்தியிடமே வேதாந்த விசாரம் செய்ததாகக்கூட கதைகள் அனேகமுள. முன்னர்கூறிய முத்துமாலை விஷயத்திற்குப்பின்னர் ஸீதைக்கு ஹனுமாரது ராமபக்தி வைபவத்தால் ஆச்சரியம் வர ஸ்ரீராமன் உத்திரவுப்படி ஹனுமாருக்கு கர்ம உபாஸனாதிகளைஉபதேசித்தாள் என்றும் ஸ்ரீராமன்பின்னர் ஞானமுடிவை வேதாந்தவழிப்படி உபதேசித்தார் என்றும் தெலுங்கில் உள்ள ஸீதாராமாஞ்சனேயம் என்ற நூல் விளக்குகிறது. நூற்றெட்டு உபநிஷத்துக்களில் முக்திகம் என்ற கடைசி உபநிஷத்தில் ஹனுமார் ஸ்ரீராமனைக் குருவாக அடுத்து வேதாந்த விசாரம் செய்தது கூறப்பட்டுள்ளது. தத்வஸாராயனம் என்ற வேதஸார இதிஹாஸத்தில் உள்ள ராம கீதையிலும் ஹனுமாரது வேதாந்த விசாரம் விளக்கமாகக் காணலாம். இவைகளிலிருந்து ஹனுமார் வெறும் ராமமூடபக்தியுடன்மாத்திரம் நின்றுவிடாமல் மேல் படியாகிய ராஜஞான யோகங்களிலும் முனைந்தார், அடுத்த ப்ரஹ்மஜீவன் முக்தப்பட்ட முயற்சிக்கு ஏற்ப என்பதும் வெளியாகும். ஆகவே பக்தியோகத்திற்கு ராஜயோகத்தில் சேர்த்து மேலே தள்ளிவிடுவதே முடிவு, அது உள்ளபடி நிலைப்பதற்கு மேல்படி போனால்தான் முடியும். மேல்படியாவது இவ்வுலகில் மேல் வருணப்பிறப்போ அல்லது தேவதாதி வேதாந்த விசார யோக்கியமுடைய பிறவியோ என்பதும் விளங்கி இருக்கும். அடுத்த ஸஞ்சிகையில் பக்திச் சிறப்பை வெளிப்படுத்தும் கண்ணப்பர் சரிதத்தை எடுத்து விவரிப்போம்.

# சாஸர்

## CHAUCER

ஆங்கிலபாஷையின் ஆதிகவியென்று கூறப்படும் ஜியாப்ரி சாஸர் கி. பி. 1328-௵ல் பிறந்தவர். இவர் தேம்ஸ் தெருவில் வஸித்துவந்த ஜான் சாஸர் என்னும் ஒரு பணக்கார சாராய வியாபாரியின் புத்திரர். மூன்றாவது எட்வர்ட் காலத்தில் ஜான்சாஸர் அச்சக்கரவர்த்தியுடன் கீழ்ப்பிரதேசங்களாகிய ஹாலண்டு, பெல்ஜியம் முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கின்றனர். இக்கண்ணியவான் 1366-ம் வருஷத்தில் பரமபதமடையவே, அவர் மனைவி மற்றோர் வியாபாரியை மணந்தனள்.

ஜியாப்ரி சாஸர் பிறந்தமுதல்1357 வரை அவர்இளமைப்பருவத்தைக்குறித்து நமக்கு அதிகம் தெரிய ஆதாரங்கள் இல்லை. ஆயினும் அவர் படிப்பை விட்டு இராஜசேவகத்தில் அமர்ந்த நாள் முதல் அவரதுவரலாற்றை சற்றேறக்குறைய அறியலாம். சிலர் அவர் கல்விப்பயிற்சியில் மேன்மை பெற்ற இடம் ஆக்ஸ்போர்ட் (Oxford) என்கிறார்கள்; மற்றும்சிலர் கேம்பிரிட்ஜ்(Cambridge) என்கிறார்கள்; வேறு சிலர் அவர் வக்கீல் பரீக்ஷைக்கு லண்டன் நகரிலேயே படித்ததாகக் கூறுகின்றனர்.எவ்வாறாயினும் கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்தார் என்பதற்கு ஐயமில்லை

கல்விகற்றவுடன் எட்வர்ட் குமாரரான லையனல் (Lional) என்பவரின் சேவகத்திலமர்ந்து பன்முறை அவரிடமிருந்து பரிசு பெற்றதாக அநேக விடங்களில் காண்கிறோம். இவ்வாறிருக்கும் நாளில் அவ்விளவரசருடன் இவர் ப்ரான்ஸ் தேசஞ்சென்று அங்கு நடந்த யுத்தத்தில் சண்டை புரிந்து எதிரியினால் பிடிபட்டு சிலமாதகாலம் சிறையிலிருந்தனர். 1360ம்-வருஷத்தில் பிரான்ஸுகாரருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த உடன்படிக்கையில் அரசன் இவரை பணங்கொடுத்து மீட்டுவந்தனன். இவ்வித கஷ்டங்களினின்றும் இவரை மீட்டுக்கொணர்ந்து உதவிபுரிந்த உத்தமியாள், லையனல் என்பவர் மனைவி எலிஸபெத் என்பவள். அவள் 1367-ல் இறந்துபோகவே இவர் அரண்மனையில் ஒரு சேவகத்திலமர்ந்தார்.

இச்சமயத்தில்தான் அவர் இல்லறவாழ்க்கையில் அமர்ந்து பிலிப்பா என்னும் பெண்ணை மணந்து கொண்டதாகக் கூறுகிறார்கள். இந்த பிலிப்பா என்பவள் லையனல் என்பவர் ஸகோதரர் வீட்டில் சேவகத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது. எது எவ்வாறாயினும் அவர் பிலிப்பா என்பவளை மணந்து இல்லறம் நடத்தியதில் ஐயமில்லை. ஆயினும் இல்லறவாழ்க்கையில் இருவரும் மனமொத்து வாழ்ந்ததாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றும் எவர்பேரில் குற்றம் சாட்டுவது நியாயமென்றும் இப்பொழுது ஆராயப்புகுவது வீண்.

அவர் எவ்வித ஆசிரமத்திலிருந்த போதிலும் தன் இஷ்டப்படி சுயேச்சையாய்த் திரிந்து கொண்டிருந்தார் என்று யாம் அறிகிறோம். அரசனிடமிருந்த வேலைக்காரர்களில் சிலருக்கு மாத்திரம் இவ்வித பாக்கியம்கிடைக்கும். இக்காலங்களில் அவர் படிப்பிலே தம் கவனத்தைச் செலுத்தினர். இவ்வாறிருக்கும் ஒருவனுக்கு ஏதோ தான் கற்ற வித்தையை பலர் அறியுமாறு புத்தகங்கள் புதிப்பிக்க எண்ணம் உண்டாவது ஸகஜம். இவ்விதம் செய்தோர் அநேகர். ஆனால் அவர்கள் புத்தகங்கள் எல்லாம் தங்கள் மனதினின்று ஊறிய சொந்த எண்ணங்களாயிருப்பது துர்லபம். ஏனெனில் இவ்வகைத்தினர்கட்கு சுயேச்சையாய் எழுத தைரியம் வாராது,எழுதுவதைபிறர் பழிப்பார்களோ அல்லது அதில் குற்றம் கண்டு பிடிப்பார்களோ என்ற எண்ணம் மேலிட்டு நிற்கும். தவிரவும், தெள்ளிய நடையில் எழுத அநேகருக்குப் பயிற்சியிராது. ஆகையால் அவர்கள் மேற்கூறிய இடையூறுகளை நீக்கவும் தங்களிட கல்வித்திறமையைக் காட்டவேண்டி வேறுபாஷைகளிலிருந்து சிலவற்றை மொழிபெயர்த்து எழுதுவது வழக்கம். அவ்வாறே சாஸரும் பிரஞ்ச், இத்தாலியன் பாஷைகளிலுள்ள சிலபுத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத்தொடங்கினர், அவ்விதம்எழுதியபுத்தகங்களில் ஒன்று ரொமாண்ட் ஆவ் தி ரோஸ் (Romunat of the Rose). இவைகளைப் பற்றி பிற்பாடு பேசுவோம்.

கி. பி. 1367-க்கு பின் இவர் லையனல் ஸகோதரரான ஜான் ஆவ் காண்ட் (John of Gaunt) என்பவரது சேவகத்தில்சிற்சில வேலைகளிலமர்ந்து அவரது மனைவி பிளாஞ்ச் என்பவளால் ஆதரிக்கப்பட்டு வருங்கால் அங்கும் இவர் கஷ்டம் இவரைவிட்டு நீங்கவில்லை. 1369-ல் அம்மாதும் பரமகதியடையவே தன்னை ஆதரித்துவரும் எஜமானன் துக்கத்தை நோக்கி அங்கு ஒரு நூல் இயற்றியதாகத் தெரியவருகிறது. இத்தகைய கவிகளினின்று, அவரது புலமை வெளிப்படுகின்றது.

மானிட வாழ்க்கையில் ஒவ்வொருவன் ஜீவதசைகளிலும் அவர்களின் நன்மையை நாடிய சில சமயங்கள் வாய்க்கின்றன. அவைகளை ஒருவன் நல்வழியில் உபயோகிப்பானாயின், அவன் ஆயுள்வரை சுகமாகக் காலங்கழிப்பான். அவ்வாறின்றி அவன் வாளா நிற்பின் நிஷ்பலன் நிச்சயம். கவிகட்கும் அவ்விதமே; அவர்களுக்குக் கிடைக்கும் பருவங்களை வீணில் கழித்து நின்றால் அத்தொழிலில் ஜயமடைவது அரிது. அதற்கேற்ப, நம் சாஸரோவெனின் 1370௵ முதல் 1373 வரை வெளி நாடுகளில் சென்று உலாவ சமயம் வாய்த்ததை விடாமல் உபயோகிக்கலாயினர். ஏதாவது புஸ்தகங்களைப் படிப்போன் அவைகளில் கூறியுள்ள இடங்களை நேரில் பார்த்து ஆனந்திக்க எண்ணுவது நியாயமே; அதினும் சரித்திரம் படிப்போன் அதிக ஆவல் கொள்ளுகிறான். ஆனால் சாஸரது மனதில் தான் புஸ்தகம் எழுத வேண்டுமென்கிற எண்ணமில்லை. இக்காலத்திலோ அதற்கு நேர் விரோதம். ஒருவன் அயல் நாடு சென்று திரும்பினால், உடனே தன்னுடைய செயல்களையும் தான் கண்ணாரக்கண்டு ஆனந்தித்ததையும்பற்றி ஒரு புஸ்தகம் எழுதுகிறான். எழுதுவோனின் எண்ணம் ஒன்று; மற்றோர் எண்ணம் பல. தான் பல நாடுகளில் சஞ்சாரம் செய்தபோதிலும் அவ்வித பாக்கியம் பெறாதவர்களுக்கு அந்நாட்டின் விவரங்களை நன்கறியுமாறு செய்கிறான்; இருப்பவர்களோ எனின் அவன் பிறதேசங்களுக்குச் சென்று செலவழித்த பொருளை மீட்க புஸ்தகம் பதிப்பித்தனன் என்பார்கள். எவ்விதமிருப்பினும், சாஸர் பல நாடுகள் சென்று வந்தது அவர் கல்விப்பயிற்சியின் அபிவிர்த்தியின் பொருட்டென்றே எண்ணுவோம். அவர் சென்ற நாடுகளில் முக்கியமானது இத்தாலி தேசம். அதில் ஜினோவா, வெனிஸ், ப்ளாரென்ஸ் (Genoa, Venice, Florence) முதலிய நகரங்களை நன்கு அறிவாரெனத்தெரிகிறது. பிற்பாடு 1374-ல் அதிக அலைச்சலில்லாமல் நிலையுள்ள இல்லற வாழ்க்கையில் அமர்ந்தார்.

இராஜ வம்சத்தாருக்கு அநேக சிற்றேவல்கள் செய்து அக்குடும்ப ஜனங்களுடன் நன்கு பழகியதால் இராஜாங்கத்தில் இவருக்கும் இவர் மனைவியருக்கும் பிரதிவருஷம் பென்ஷன் கொடுத்து வந்ததுமன்றி, இவரைத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளுக்கு வரிபோட்டு வசூல்செய்யும் முக்கிய உத்தியோகஸ்தராக நியமித்தார்கள். இக்காலத்திலே அவர் அரசனிடமிருந்து அநேக வெகுமான சம்மானங்கள் அடைந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அரச சேவகத்தில் ஸதா அவர் அண்டையிலிருந்து சேவித்ததால் தன் எண்ணப்படி காலத்தைப் படிப்பிலும், நூல் இயற்றுவதிலும் சுயேச்சையாய்க் கழிக்க அவகாசப்படவில்லை.

இவ்வாறாக, ஆண்டுகள் நான்கு கழியவே இரண்டாவது ரிச்சர்ட் சக்கரவர்த்தியின்விவாக சம்பந்தமாய் ப்ரான்ஸ்தேசத்திற்குச் செல்லவேண்டியதாயிற்று. அங்கிருந்து திரும்பியவுடன் இத்தாலிதேசத்திற்கு இவரை அனுப்பினார்கள். யாத்திரைகள் முடிந்து கொஞ்சகாலம் அமரிக்கையாய் இல்லத்தில் நின்ற வருஷங்களில் அவர் பூஸ்திதி சம்பாதித்துவிட்டார். அப்பொழுதே குடிகள் பிரதிநிதிசபையாகிய பார்லிமெண்டி (Parliament)ல் ஒரு பிரதிநிதியாய் (Member) ஏற்படுத்தப்பட்டார். இப்பொழுதுதான் இவருடைய தனமும், தைரியமும், கவித்திறமும் ஓங்கிவிளங்கியதென அநேகர் கொள்ளுகிறார்கள்.

தம் சிநேகிதரும் உபகாரியுமான ஜான் ஆவ் காண்ட் வெளிச்சென்றவுடன் இவர்வேலையும் நீங்கிவிட்டது. இருந்தபோதிலும் 1389-ல் இவர் லண்டனிலுள்ள பெரிய மாதாகோவிலில் (West Minister Abbey) கொஞ்சகாலம் சிற்றலுவல்கள் பார்த்து வந்தார். இச்சந்தர்ப்பங்களில் அநேக துன்பங்கள் நேரிட்டன. முதலாவது, அவர் மனைவி இறந்து போய்விட்டாள். பிற்பாடு சிற்றலுவல்களும்நீங்கின. இவைகட்குத்தக்க கடன் உபாதைகளும் இவரை நெருங்கின; திருடராலும் திரவிய சேதம் நேரிட்டது. 1399-ல் அரசனாயிருந்த நான்காவது ஹென்றி என்போர் இவரது கவித்திறமையை உன்னி பிரதி வருஷம் இவருக்குப் பென்ஷன் கொடுத்துவரும்படி உத்தரவு செய்தார். இவ்விதம் கிடைத்த நல்ல அதிர்ஷ்டத்தினால் இவர்

அடைந்த சுகமும் மட்டே. மறு ஆண்டு முடிவு பெறுமுன், 1400-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25-ம் தேதி இவர் பரமபத மடைந்தனர்.

ஒருவாறாக சாஸர் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு முதலியவற்றைக் கூறியுள்ளோமே யொழிய அவர் எழுதிய காவியங்களைப்பற்றியும் அவைகளின் பெருமையைப்பற்றியும் வினவினோமல்லேம். மேலும் அவர் குணதிசயங்களை விசாரித்திலேம். ஆயின் அத்தகைய விசாரணைகளை கவனிக்குமிடத்து முதலில் அவர் செய்த நூல்கள் கவனிக்கத்தக்கனவா யிருக்கின்றன. சாஸரை 'ஆங்கில பாஷையின் ஆதிகவி' என அநேகர் கூறுகிறார். அவ்வாறு கூற அவர் யாது செய்துளரென்று ஆராயுமிடத்து முக்கியமான சில நூல்களைக் கொண்டே மேற்கூறிய வாசகம் உண்மையென ரூபிப்போம். அவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்ற 'ரொமாண்ட் ஆவ் தி ரோஸ்' (Romaunt of the Rose) என்னும்காப்பியத்தில் இவர் ஆங்கிலபாஷையை காலத்திற்குத் தக்கபடி எவ்விதம் திருத்தியிருக்கிறார் என்பது முதலிலேயே தெரிகிறது. இது தவிர அதில் நாம் மெச்சத்தக்க விஷயம் கிடையா. இவரது இரண்டாவது நூலாகிய 'புக் ஆவ் தி டச்சஸ்' (Book of the Duchess) என்பதில் இவர் கவித்திறமை விளங்குவதுந் தவிர அவர் சுயமாய் கவிகள் பாட வல்லமையுள்ளவரென அறிகிறோம். இங்குமங்கும் அரசர்களின் நடையுடைபாவனைகளை விவரித்திருப்பதால் சாஸர் சமஸ்தானத்தில் சம்பந்தப்பட்டவரெனவும் அறிகிறோம். இரண்டாவது ரிச்சார்டுக்கு ஆஸ்திரியா ஏகசக்ராதிபதியாகிய ஐந்தாவது சார்லஸ் என்பவரின் பெண்ணை மணம் செய்வித்த விருத்தாந்தத்தைக் குறித்து ஒரு கவி பாடியுள்ளார். அதற்கு 'அஸெம்ப்ளி ஆவ் பௌல்ஸ்' (Assembly of Fowls) என்று பெயர். இவைகள் எல்லாவற்றிலும் அவர் தாம் இத்தாலிதேசத்து கவிகளுக்கு அதிகமாகக் கடமைப் பட்டதை நன்கு தெரிவித்திருக்கிறார். இச்சங்கதி அவர் எழுதிய 'கீர்த்திக்கு இருப்பிடம்' (House of Fame) என்பதில் தெள்ளென விளங்குகிறது.

யாவற்றினும் மேம்பட்டதும் அவரை 'ஆதிகவி' என்று கூறுவதும் அவர் திறமையை வெளிப்படுத்துவதுமான நூல் 'காண்டர்பரி கதைகள்' (Canterbury Tales). இந்நூலிலென்ன கூறியுள்ளார் என்பதைக் கவனிப்போம். தமிழில் நடைபெற்று விளங்கும் கதைக் கொத்துக்களில் மிகவும் சிறப்பித்துச் சொல்வது பஞ்சதந்திரம். அதில் ஒரு குரு சிஷ்யப்பிள்ளைகளுக்கு புத்தி கூறுவதாக எண்ணித்தொடங்குகிறார். ஆனால் சாஸர் அவ்விதம் செய்யவில்லை. அவர் இம்மாதிரி செய்திருப்பின் அவரெண்ணம் நிறைபெற்றிராது. ஆனதால் அவர் இவைகட்கு மேல் ஒரு தந்திரம் செய்தார். எல்லா இடங்களிலும் ஸ்தலயாத்திரை போவது வழக்கம். சிலர் வேண்டுதலையின் பேரில் செல்வார்கள்; சிலர் வேடிக்கை பார்க்கச் செல்லலாம்; இவ்விதமாக வெவ்வேறு எண்ணமிருக்கலாம்; அதற்குத் திருஷ்டாந்தமாக நாம் இராமேச்வரத்தை எடுத்துக் கொள்வோம். அவ்விடத்திற்கு ஆடி, தைமாதங்களில் செல்லும் பிரயாணிகளுக்கு கணக்கு வழக்குக் கிடையாது. அதில் வெவ்வேறு ஜாதியாரும், பிரிவினர்களும், தொழிலினர்களும் இருப்பார்களன்றோ. இவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் ஒருங்கு கூடினால் ஒருவர்க்கொருவர் அவரவர்கள் கண்டதையும் கேட்டதையும் சொல்லிக் கொள்வது உலகவழக்கமே. அதை மனதில் வைத்து சாஸர் இங்கிலாந்திலுள்ள அநேக தொழிலாளிகளும் சேர்ந்து ஓரிடத்தில் சந்தித்து ஒரே எண்ணத்துடன் செல்லும் யாத்திரை ஸ்தலம் எது என்று எண்ணி அது காண்டர்பரி என்று தீர்மானித்தார். அங்கு செல்லும்பிரயாணிகள் லண்டன் மாநகரத்தில கூடி வழிச்சென்றதாகவும் அவர்களில் ஒவ்வொருவரும் போகும்பொழுது இரண்டு கதையும், திரும்பி வரும்பொழுது இரண்டு கதையும் சொல்லவேண்டுமென்று தீர்மானித்துச் சென்றதாகவும் சொல்லுகிறார். அவ்வாறு எண்ணிய நூல் முடிவுபெறாவிடினும் முதலில் அங்கு லண்டனில் கூடிய அநேகரது வடிவம், நிறம், நடை, உடை, குணம் தொழில் முதலியவற்றை நன்கு கூறி அவர்களில் சிலர் கூறியதாக இரண்டொரு கதைகளும் எழுதியிருக்கிறார். இக்கதைகள் நமக்கு முக்கியமில்லையாயினும் அங்கு கூடியவர்களைப்பற்றி நாம் அறியும் ஞானமே பெரிது. ஏனெனில் அவர் இங்கிலாந்திலிருந்த ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொருவராகப் பொறுக்கி அவர்களை அவ்வவ் வகுப்புகட்கு பிரதிநிதிகளாக்கி அவர்கள் குணகுணங்களையும் செயல்களையும்



விளக்கி சிலவிடங்களில் பரிகஸித்தும் வேறிடங்களில் இகழ்ந்தும், சிலவிடங்களில் பெருமையாகப் புகழ்ந்துமிருக்கிறார். இவ்வகைய நூல்களிலிருந்து அக்காலத்திய சங்கதிகள் வெளியாகின்றன. இதுபற்றியே அப்பாடல்கட்கு முதலில் யாம் மகிமை தருகிறோம்.

இவைகளினின்றும் யாம் அக்காலத்திய சங்கவாழ்க்கை (Society) என்னவென்றறியலாம். சாஸர்காலத்தில் லண்டனில் பிளேக் வியாதி பரவியிருந்ததால் அந்நகரம் இப்பொழுது இருப்பதினும் மிகவும் சிறியதாயிருந்தது. நான்காவது எட்வர்ட் காலத்திற் கப்புறம்தான் அது மேன்மேலும் விருத்தியடைய ஆரம்பித்தது. இங்கிலாந்திலுள்ள குடிகள் மதத்தில் அதிகப் பற்றுள்ளவர்களாகக்காணப்படவில்லை. ஜனங்கள் பாபங்களும் அக்கிரமங்களும் செய்துவந்ததும்தவிர தங்கள்தொழில்களைச் செய்துவந்தனர்களல்லர். வர்த்தகமும் பாங்கிகளும் அயல்நாட்டு வியாபாரிகள் கையில் இருந்தன. ஹாலண்டு, பெல்ஜியம் முதலியவிடங்களிலிருந்து ஜனங்கள் இங்கிலாந்தின் கீழ்ப்புறங்களில் குடியேறிநெசவுத்தொழிலைக் கைப்பற்றி விருத்திபெற்றதும் தவிர, உள்நாட்டார் தொழிலைத் தொலைத்து விட்டார்கள். இங்கிலாந்தில் முதலாவது வில்லியம் காலத்தில் குடியேறிய பிரஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் ஒருங்குகூடி ஒரே சங்கத்தினராய்விட்டார்கள். ஆங்கில பாஷை அதிகமாய் நடைபெறாவிடினும் அநேகரால் மெச்சத்தக்கதாயிருந்தது. பிரஞ்சு பாஷை மேலோர் பேசும் பாஷையென எண்ணினார்கள்.

சாஸர் சரித்திரத்தை முடிக்குமுன் கவனிக்கவேண்டிய சில விஷயமுள. அவருக்கு கவித்திறமை வாய்த்த தெப்படி? அவர் கவிகளிலுள்ள அலங்கார மென்ன? அவர் குணதிசயங்க ளென்ன? அவர் அநேக விடங்களில் படித்ததும், சமஸ்தானத்தில் தொழிலில் அமர்ந்ததும், அயல் நாடுகளில் சென்று ஆங்குள்ளோரது செயல்களை நேரில் கண்டதும், மற்றும், அங்குள்ள கற்றோரைக் கண்டதும் அவரது சிநேகமுமே இவர் கவித்திறமை வாய்ந்ததற்கு காரணங்களாயினவென்று அறிகிறோம். அவர் கவிகளிலுள்ள அலங்காரங்களை கவனிக்குமிடத்து நம் நாட்டுப் பூர்வ கவிகளுக்குச் சமமாகவே கூறலாம். தமிழ்க் கவிகளில் [illegible] உள்ளவைகளை அப்படியே சொல்லியுள்ளார். அநேகர் ஸ்தோத்திரப்பிரியர்களானபடியால் இஷ்டப்படி சங்கதிகளைத் தாழ்த்தியோ உயர்த்தியோ வைத்திருக்கிறார்கள். ஆனால் சாஸர், தான் கண்டவைகளை அப்படியே சொல்வதுடன் காதாரக் கேட்ட பழைய சங்கதிகளையும் கலந்துள்ளார். ஒருவரை இகழ வேண்டின், பரிகாசமாகவே கூறித் தாழ்வடைவிப்பார். அகப்பொருள், புறப்பொருள் இரண்டும் வரும்படி பாடுவதில் சமர்த்தர். அவர் அதிக சிரமம் எடுத்துப் பாடியதாகவே காணவில்லை. ஆசுகவி என்னலாம். எளிதில் தெளிவான பாடல்களில் கதை சொல்லும் திறமை அவருக்கு மட்டில் கிடைத்தது வியப்பாகும். அவர் கவிகள் காதில் கேட்க மிக ஆனந்தத்தையும், மனதிற்கு உத்ஸாகத்தையும் தருகின்றன.

இவ்வித நூல்கட்கு ஆசிரியரான இவர் குணதிசயங்கள் என்ன என்று யாரைக் கேட்பது? அவர் நூல்களில் சிற்சில விடங்களிலிருந்து அறிவது யாது? சாஸர் அதிக சாந்தமும் பொறுமையும் பொருந்தியவர். அவர் கல்வியும் கண்ணியமும் காட்டிய கனவான். தன் பெருமையும் சிறுமையும் நன்கறிந்தவர். மற்றோர் தன்னை அதிகமாக மதித்துக் கொண்டாடவேண்டுமென்ற எண்ணங்கொண்டிலர். ஜோதிடம், ரசவாதம் முதலிய சாஸ்திரங்களில் பற்றில்லாதவர். பூலோக நடவடிக்கை தெரிந்த புத்தியான். ஸ்திரிகளை அதிகமாகக் கொண்டாடும் கட்சியாருடன் சேர்ந்தவரல்லர். மற்றும் இகழ்ச்சியாகப் பேசியதாகவும் எண்ண இடமில்லை. புத்தகங்களைப் படிப்பதில் அவர் அதிக ஆவல் கொண்டவர். இரவும் பகலும் அதே விசாரமாயிருப்பதும்தவிர படிப்பதும் எழுதுவதும் தன் தினசரி வேலைகளில் ஒன்றென எண்ணியிருந்தார். அதிகம் உரைப்பதில் பயனென்? ஓதாமல் ஒரு நாளு மிருக்க வேண்டாம் என்ற வாசகத்தைக் கடைப்பிடித்து அதன்படி ஒழுகினோர்களில் முதன்மையான ஆங்கில கவி சாஸர் என்பவரே.

C. வெங்கடேச ஐயர், பி. ஏ.

# ஆரியர் நாகரிகம்

## THE ARYAN CIVILIZATION

தற்கால நாகரிகம் பட்டணங்களையே ஆதாரஸ்தானமாய்க் கொண்டது. அதில் அதிசயமாயுள்ள அனைத்தும் பட்டணங்களிலேயே காணப்படுகின்றது.

அது இவ்விதமிருத்தல் சகஜமே. வெவ்வேறு புத்திவிலாஸமுள்ள அநேக மனிதர்கள் கூடியிருக்கும் பட்டணத்தில், ஒவ்வொருவனதறிவும் ஓய்விலா விழிப்புடனிருக்க வேண்டியதவசியமாகிறது. ஒவ்வொருவனது புத்தியியக்கத்திலும் மற்றவரிடத்திலும் முயற்சியும் சலனமும் தொடர்ந்துண்டாகிறது.

மனிதன் தனது வளரும் அறிவைப் பயன் கொடுக்கும் வழிகளில் செலுத்த முயல்கிறான். அதற்குச் சாதனம் எங்கு உண்டாகக்கூடும்? பல மனிதர் ஓரிடத்திற் சேர்ந்து, தமது ஆக்குந்திறமையைக் காட்டுமிடத்திலேதான் அது சாத்தியமாகும். அம்மாதிரியான இடம் ஒரு பட்டணமே.

ஆதிகாலத்தில், மனிதன் முதல் முதல் பட்டணத்தை ஸ்தாபித்தது, அதில் வாழ்தலாலுண்டாகும் நாகரிகத்திற்காக வன்று. தன் விரோதிகளினின்றும் தன்னைக் காத்துக்கொள்ள ஒரு பலமான வஸதியைத் தேடியே அவன் அவ்விதம் செய்யலானான். நகரங்களுண்டாவதற்கு முதற்காரணம் எதுவாயிருப்பினும், அநேகர் ஓரிடத்தில் கூடிவாழ ஆரம்பித்ததும், மனிதரது வாழ்க்கையில் சில விசேஷங்கள் தோன்றின. மனிதர் ஓர் சமாஜமாகக் கூடிவாழ ஆரம்பித்தது முதல், ஒவ்வொருவனுடைய தனித்தனி விருப்பங்களும் செய்கைகளும் சமாஜத்தின் மொத்தவாழ்க்கையை அனுசரித்து, அதற்குக் கீழடங்கியே நடைபெறும்படியான அவசியம் நேரிட்டது. இவ்வாறே சமாஜ தர்மம் என்பது சிறிது சிறிதாய்த் தோன்றி வெளிக்கிளம்பிற்று. காலக்கிரமத்தில் இந்த சமாஜ தர்மம் விஸ்தரித்து ஓங்குவதையே நாம் நாகரிகத்தின் வளர்ச்சியெனச் சொல்லுகிறோம்.

ஆனால் இந்தியாவில் மனுஷ்யதர்மம் தோன்றிவளர்ந்தவிதம் ஒரு விசேஷ ஆச்சர்யத்தைத் தரத்தக்கது. இந்தியாவில் ஆரியர் நாகரிகத்தின் ஆதாரஸ்தானங்கள் நகரங்களிலல்லாது, முதல் முதல் வனங்களிலேற்பட்டன. அது ஆதியில் விசேஷமாய் விருத்தியடைந்த விடம், மனிதர்கள் ஒருவரோடொருவர் இடித்து நெருங்கி வசித்த இடமல்ல. அவ்விடத்திலோ மரங்களும், கொடிகளும், நதிகளும் தடாகங்களும், மனிதனுடன் நெருங்கிப்பழகின. திறந்த வெளியில் நெருக்க ஒடுக்கமின்றி மனிதரிருந்தனர். ஆயினும், பறந்த வெளியிலிருப்பதனால் இந்தியாவில் ஹிருதயம் மந்தத்தை யடையாமல், ஓர் அற்புதமான விகாஸத்தை யடைந்தது. உலகத்தில் வேறோரிடத்திலும் இவ்வாறு நிகழ்ந்ததில்லை.

வேறு தேசங்களில், காடுகளில் வசிப்பவர்கள் தமது வாசஸ்தான விசேஷத்தால் காட்டுத்தன்மையை யடைந்திருக்கிறார்கள். புலிகள் போல் முரட்டுக் கொடியர்களாகவோ அல்லது மான்கள்போல் மந்த புத்தி யுடையவர்களாகவோ இருக்கிறார்கள். ஆனால் பண்டைக் காலத்தில் இந்தியாவிலோ, காட்டில் தனிமையாய் வசிப்பதனால் மனிதனது அறிவு மழுங்கி அழியாமல், அந்த வனஸ்தலங்களிலிருந்து ஆரியர் நாகரிகம் வெள்ளமாய் வெளியோடி, இந்தியா முழுவதையும் செழிப்பித்து, இன்றும் குறைவிலாப் பிரவாஹத்துடன் பரவிக்கொண்டிருக்கிறது.

வனவாஸிகளாலமைக்கப்பட்ட இந்தியர் நாகரிகத்தின் விசேஷசக்தி வெளித் தூண்டுதலாலுண்டானதல்ல. மனிதன் தனது சௌக்கியத்திற்காகப் புதிது புதிதான சௌகரியங்களையும், வெவ்வேறு விதமான பதார்த்தங்களையும் தேடவும் பண்ணவும் எத்தனித்ததால் அந் நாகரிகம் வளரவில்லை. ஆதலால் அது முக்கியமாய் வெளிப்பிரபஞ்சத்தை நோக்கினதன்று. அகாதமான இப்பிரபஞ்சத்தை அது தன் தியானத்தால் ஆழப்புகுந்து பார்த்தது. வெளியில் தெரியும் பிரபஞ்சத்திற்கும் மனிதனது ஆத்மாவுக்குமுள்ள ஒற்றுமையை அது நேர்க்கண்டறிந்தது. இந்திய நாகரிகமானது பெரும்பாலும் பொருட்பெருக்க முண்டாக்கும் வழிகளில் செல்லாததற்கு இதுவே காரணம். இந்நாகரிகத்திற்காதி காரணமாயிருந்தோர், அற்பவுடைதரித்துத் தனியே வசித்துவந்த தபோதனர்கள். கடலையே தம் நிலையாக வுடைய ஜாதியார் (ஆங்கிலேயர்கள்) வியாபாரத்தில் வலுத்தனர்.



பசித்திரப் பாலுதவாப் பாலைவனத் தாயின் மக்கள் (அரபியர்கள்) பல நாடுகளையும் வென்று சென்றனர். ஆங்காங்குள்ள வர்த்தமான பேதங்களால் மனிதனுடைய முயற்சி ஓரோரிடத்தில் ஒரொரு தனி வழியைத் தொடர்ந்து சென்றிருக்கிறது.

வட இந்தியாவிலுள்ள அடர்ந்த வனங்களால் நம் தேசத்திற்கு ஒரு விசேஷ நன்மையுண்டாயிற்று. அவ்வனங்களில்தான் ஆரியர்கள் இப்பிரபஞ்சத்தின் இரகசியத்தை ஆழ்ந்து பார்த்து அறிந்தார்கள். மனோவாக்குகளினெல்லைக்கு மப்பாலுள்ள நிவுகளிலிருந்து ஆரியர்கள் தமது புத்தி சக்தியால் கொணர்ந்த நிதியின் பெருமையை மனித ஜாதியார் அனைவருமே கொண்டாடவேண்டும். வனங்களில் தியானபரர்களாய் வசித்த ரிஷிகள், இரவிலும் பகலிலும், மாறிமாறிவரும் பருவங்களிலும், சிருஷ்டியின் உயிரையும் இயக்கத்தையும் காட்டும் மரங்களிலும்—தங்களைச் சுற்றியுள்ள பிரபஞ்சக் காட்சி முழுதிலும், இனியதும், தெளிய முடியாததுமான ஒரு ரஹஸ்ய மிருப்பதாக உணர்ந்தனர். அதனாலேயே, "இருக்கு மனைத்தும் ப்ரம்மத்தினிடமிருந்தே. நமது அந்தராத்மாவாய் இயங்குவதும் அதுவே" என்று சொல்லலானார்கள். மண்ணாலும் கல்லாலும் கட்டின குறுகலிடத்தில் அடைப்பட்டு வசிக்காது, விஸ்தாரமான வெளியில், அகண்டமான பிரபஞ்ச வாழ்விற்கிடையே தாங்களும் வசித்தார்கள். இருக்கநிழலும், புசிக்கப்பழமும், பூவும் விறகும், யாகத்துக்குப் புல்லும் அவ்வனமே யவர்களுக்குதவிற்று. அவர்களது தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் அவ்வனம் சம்பந்தப்பட்டிருந்தது. இவ்வாறேயவர்கள் தம் வாழ்க்கையுடன் இவ்வகன்ற பிரபஞ்சத்தின் இயக்கத்தையும் ஒற்றுமைப்படுத்த அறிந்தார்கள். தம்மைச் சூழ்ந்துள்ள பிரபஞ்சம் அறிவற்றதும் ஆதாரமற்றதுமாக அவர்களுக்குத் தோன்றவில்லை. இயற்கையிற் கிடைக்கும் வேரும், உணவும் நீரும், பூமியிலிருந்தாவது மரங்களிலிருந்தாவது ஆகாசத்திலிருந்தாவது வந்ததாக அவர்கள் நினைக்கவில்லை. அவையனைத்தும் ஸச்சிதானந்தஸ்வரூபியாயிருக்கும் ஒரு வஸ்துவினிடத்திலிருந்தே உண்டாவதாகக் கொண்டார்கள். ஆதலால்தான் சுவாஸம் விடுவதிலும் அன்னபானாதிகளிலுங்கூடத் தம் கருத்துங் கவனமும் செலுத்தினார்கள். ஆத்மாவுக்கும் பிரபஞ்சத்துக்குமுள்ள நெருங்கின சம்பந்தத்தை திடப்படுத்திக்கொண்டே ஆரியர் ஞானம் விருத்தியடைந்தது.

வேதங்களுதித்த காலத்திலும், புத்த மதம் பரவின காலத்திலும் ஆரண்யத்திலேயே ஆரியர் ஞானம் செழித்தது. வேதங்களோதின ரிஷிகள் மாத்திரமல்ல, புத்தருங்கூடத் தமது உபதேசங்களை மாஞ்சோலைகளிலும் மூங்கிற் றோப்புகளிலேயுமே பொழிந்தனர்.

பின்பு காலஞ்செல்லச் செல்ல, இந்தியாவில் ராஜ்யங்களும் நகரங்களும் உண்டாயின. அந்நிய நாடுகளுடன் வியாபாரமும் ஏற்பட்டது. உழவினர் பெருத்து வயல்கள் விரிய விரிய, அடர்ந்த வனங்களும் வரவரப் பின்னிட்டுக் குறுகின. ஆனால் வனங்களிலிருந்து வெளிவந்த ஞானத்தை இந்தியர்கள் ஒருநாளும் மறந்தனரல்லர். மற்றெல்லாத் தொழில்களினுந் தவஞ்செய்தலே மேற்பட்டதென எண்ணினார்கள். இந்திய அரசர்களும் சக்கரவர்த்திகளும் பண்டைக்காலத்தில் காட்டில் வசித்த முனிவர்களையே தமது கூடஸ்தர்களாகக் கொண்டு பெருமை யடைந்தார்கள். இந்தியாவில் அற்புதமும் பெருமையும், மேன்மையுந் தூய்மையும் பொருந்தின எதுவும் ஆதிகாலத்தாச்சிரமங்களினின்றே உதயமாயின; மனுஷ்ய கோடிகளுள் இந்தியாது விசேஷம் இதிலேயே அமைந்திருக்கிறது.

உஜ்ஜயினீநகரத்தில் விக்கிரமாதித்தன் அரசு புரிந்து, காளிதாஸன் கவியாயிருந்த சமயத்தில் வனஸ்தலங்கள் விசேஷம் பெற்றிருந்த காலம் போய்விட்டது. அப்பொழுது பல்வகைச் சாதியாரும் நம்மைச் சூழ்ந்தனர்; சீனர்கள் ஹூணர்கள், ஸிதியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் அனைவரும் இந்தியாவில் கூடினர். தன் கையாலேயே நிலமுழுது, தூரதேசத்திலிருந்து வருபவர்களுக்கு பிரம்மஞானம் உபதேசித்தவரான ஜனகர் போன்ற அரசன் அப்பொழுது இருந்திருக்க முடியாது. ஆனால் அக்காலத்தில் வசித்த மஹாகவியின் காவியங்களில் ஆசிரமவர்ணனைகளை நோக்குங்கால், இந்தியாவில் ஐசுவரியம் பொங்கித் திமிர்த்த அச்சமயத்தில்கூட, ஆச்ரமவாஸப் பெருமை அனுபோக நடையிலில்லா விட்டாலும்

மனிதர் மனதை விட்டகலவில்லையெனத் தெரிகிறது.

காளிதாஸனது ஆசிரமவர்ணனை யொன்றிலிருந்தே, இந்தியாவின் மர்மத்தைக் காட்டும் கவி அவரே என்று விளங்கும். அவ்விதம் பூரித்துப் பொங்குங் களிப்புடன் வேறெவர்தான் அப்பொலிவை வர்ணித்திருக்கின்றனர்?

ரகுவம்ச மஹாகாவியத்தின் ஆரம்பத்தில், திரையைத் தூக்கினவுடனே முதலில் காண்பது, சாந்தமும் இனிமையும் சுசியும் பொருந்தின ஓராசிரமக் காட்சி.

(அப்பொழுது சாயங்காலம்). அடுத்த வனத்தில் தர்ப்பையும், விறகும், பழங்களும் சேகரித்துக்கொண்டு ஆசிரமங்களுக்குத் திரும்புகிறார்கள் தபோதனர்கள். ரிஷி பத்தினிகளுக்குக் குழந்தைகள்போலுமுள்ள மான்கள், தமக்கு முன் இடப்பட்ட தானியத்தைக் கடித்துக்கொண்டு பயஞ்சிறிதுமின்றி ஆசிரமவாசற்படிகளில் படுத்துக்கிடக்கின்றன. முனிவர்களுடைய பெண்கள் மரங்களடியில் நீர் வார்த்துக்கொண்டிருக்கின்றனர்; பாத்திகள் நிரம்பியதும், ஜலத்தை நெருங்கும் பறவைகள் பயமின்றிப் பருகுமாறு ஒதுங்கி நிற்கின்றனர். சூரியன் இறங்கிக்கொண்டிருக்கிறான்; முற்றத்தில் தானியம் குவிந்திருக்கிறது; மான்கள் சாய்ந்துகொண்டு அசைபோட்டுக்கொண்டிருக்கின்றன. ஹோமப்புகையால் நறுமணம் வீசும் காற்று ஆசிரமத்தினுள் நுழையும் அதிதிகளைப் புனிதமாக்குகிறது. மனிதனது வியாபாரங்களும் வெளிச்சிருஷ்டியின் இயக்கங்களும் ஒத்திருப்பதே இக்காட்சியின் வனப்பு.

அபிக்ஞான சாகுந்தல நாடகத்தில், சிற்றின்ப நாட்டம் நிறைந்திருக்கும் அரசனது அரண்மனையையும் பழிக்கும் ஆசிரமமொன்று நிர்மிக்கப்பட்டிருக்கிறது. அந்நாடகத்திலும் உண்மையான ரஸம் உயிருள்ளதும் அற்புதமான வெளிப்பிரபஞ்சத்துக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தமும் ஒற்றுமையுமே.

காதம்பரீ காவியத்திலுள்ள ஆசிரம வர்ணனையைப் பார்ப்போம்: காற்றினாலசையும் செடிகளும் கொடிகளும் வந்தனவழிபாடுகள் செய்வதுபோலிருக்கின்றன—மரங்கள் பக்தியால் அர்ப்பணம் செய்வதுபோல் இலைகளை யுதிர்க்கின்றன—பர்ணசாலைகளின் வெளிப்புறங்களில் உலரும் தானியம் பரந்திருக்கின்றது—பிராம்மணப்பையன்கள் பாடங்களோதுங் கோஷத்தால் வனப் பிரதேசங்கள் எதிரொலியிடுகின்றன—அடிக்கடி கேட்ட யாக மந்திரங்களைக் கிளிகள் களிப்புடன் கூவுகின்றன—பூதங்களுக்கிட்ட பலி பிண்டத்தைக் காட்டுப்பறவைகள் கொத்துகின்றன—பூஜையானபின் இரைக்கப்பட்ட நீவாரதானியத்தை வாத்துக்கள் அடுத்த குளத்திலிருந்து வந்துபொறுக்குகின்றன—ரிஷிகுமாரர்கள்மேல் மான்கள் ஸ்வாஸ்யமாக நக்கிக்கொண்டிருக்கின்றன.

இங்கும் உட்கருத்து அதுவே: செடிகளும் கொடிகளும், மிருகங்களும் பறவைகளும், மனிதனின்றும் பிரிந்திராமல், ஆசிரமவாஸத்தில் எல்லாம் ஒத்துச்சேர்ந்தனவாய்க் காண்கின்றன. நம்தேசத்தில் இக்கருத்து திருப்பித் திருப்பிக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

S. மஹாலிங்கமய்யர், பி. ஏ., பி. எல்.

# வரதக்ஷிணை

## VARA DAKSHINA

பெண்ணைப் பெற்றவர்களெல்லாம் வருத்தப்படவும், பிள்ளையைப் பெற்றவர்களெல்லாம் களிப்படையவும் செய்யும்படியான தை, சித்திரை, வைகாசி முதலான இந்த கலியாண காலங்களில், 12-வயதுக் குட்பட்டு, கல்யாணம் செய்யப்பருவமாயிருக்கும் பெண்குழந்தைகளுடைய தாய் தகப்பன்மார்கள் படும் துயரமும், வருத்தமும் சொல்லிமுடியாது. அதிலும், கொஞ்சம் ஏழையாகவும் இருந்து அதோடு ஐந்தாறு பெண்குழந்தைகளும் இருந்து பெண்ணைக்கல்யாணம்செய்து கொடுக்கவேண்டிய வயது வந்து மாப்பிள்ளை விசாரிக்குங்கால், வரதக்ஷிணை ஆயிரம் இரண்டாயிரம் என்று இப்படி கேட்டார்களானால் அந்தோ பாவம் அவர்கள் என்ன செய்வார்கள். ஏற்கெனவே நித்தியப்படி சாப்பாட்டிற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, வரதக்ஷிணை எப்படிக் கொடுக்க முடியும். இதனால் அவர்கள் தங்களையும் நொந்து தங்கள் பெண்குழந்தைகளையும் நிந்திக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! ஏது மறியா இப்பெண் குழந்தைகள் என்ன செய்யும்?

(இதன் தொடர்ச்சி 247-ம் பக்கம்)



இதெல்லாம் வரதக்ஷிணையின் கொடுமையல்லவா?

இன்னமும் இந்த வரதக்ஷிணையின் கொடுமையினால் அனேக கெடுதல்கள் நேருகின்றன. எப்படியென்றால், ஒரு விதத்தில் ந்யாயமாக ஸம்பாதித்து தங்கள் ஜீவனத்தைக் கழிக்கிறவர்கள், தங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க வரன் விசாரிக்கையில், தங்கள் சக்தி மீறி பிள்ளை வீட்டுக்காரர்கள் வரதக்ஷிணை கேட்கிறபடியால் எப்படியாகிலும் பெண் ருதுவாகிறதற்கு முன்னால் கல்யாணம் செய்யவேண்டுமே என்கிற எண்ணத்தினால் லஞ்சம் வாங்கவும், அதர்மவழியில் புகும்படியாகவும் தூண்டுகிறது.

இன்னம் சிலர் இந்த வரதக்ஷிணை கொடுக்க முடியாமல், தங்கள் பெண்ணை கிழவனுக்காகிலும் இரண்டாந்தாரமாகவோ, மூன்றாந்தாரமாகவோ கொடுக்கும்படியாகவும் நேரிடுகிறது. ஆனால் இப்படி கிழவர்களுக்கு மூன்றாந்தாரமாகவும், நாலாந்தாரமாகவும் கொடுப்பதினால், அனேக கஷ்டங்களும், கெடுதல்களும், தொந்தரவுகளும் ஏற்படுகின்றனவென்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

இந்த வரதக்ஷிணையென்னும் கொடிய பிசாசானது, இவ்விந்தியா முழுதும் உலாவிக்கொண்டு திரிகிறது. இந்தப் பிசாசை யடக்கத் தக்க மந்திரவாதிகளில்லையா!

படித்தவர்களும், படியாதவர்களும், தனவந்தர்களும், தரித்திரர்களும் ஒன்றுபோல தங்கள் பிள்ளைகளுக்கு வரதக்ஷிணை கேட்கிறார்கள். இந்த வரதக்ஷிணையினால் விளையும் தீங்கை அவர்கள் அறியாததினாலோ, அல்லது, அறிந்து தான் கற்றறி மூடர்களைப்போல, தங்கள் பிள்ளை பிறந்து செவ்வெண்ணெய் கொடுத்தது முதல் கணக்கிட்டுப்பார்த்து, மெட்ரிகுலேஷன் பாஸானால், ரூபாய்500 என்றும், எப்.ஏ. பாஸானால் 1000 என்றும், பீ. ஏ. பாஸானால் 2000 என்றும், இதற்குமேல் வெள்ளிப்பாத்திரம் நகை, சீர் முதலானவைகளுக்கு 2000, இப்படியாக மொத்தம் 4000, 5000 ரூபாய் கொடுத்தால்தான் தங்கள் பிள்ளைக்கு ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளமுடியும் என்று சொல்லுகிறார்கள். பெண்வீட்டுக்காரர்கள் தகுந்த ஆஸ்திவந்தர்களாயிருந்தால்தான் இப்படிக் கொடுக்க முடியும். இல்லாதவர்கள் பாபம்! என்ன செய்வார்கள்.

பிராம்மண ஜாதியில் பெண் ருதுவான பிறகு கல்யாணம் செய்யக்கூடாது என்று சாஸ்திரம் சொல்லுவது வாஸ்தவமாயிருந்தாலும், இன்னம், ஏழு, அல்லது எட்டு வயதில் பெண்களை கன்னிகாதானம் செய்து கொடுத்தால்தான் பலன் உண்டு என்று சாஸ்திரம் முறையிடுகிறது என்று சொல்லுவது வாஸ்தவமாயிருந்தாலும், வரதக்ஷிணை ரூபா 4000, 5000, பிள்ளை வீட்டுக்காரர்கள் வாங்கவேண்டுமென்றாவது, பெண் வீட்டுக்காரர்கள் கொடுக்கவேண்டுமென்றாவது எந்த சாஸ்திரத்திலும், எந்த சமயத்திலும் சொல்லப்படவில்லை என்பது திண்ணம்.

மேற்கூறியபடி ருதுவானபிறகு பெண்ணுக்குக் கல்யாணம் செய்யக்கூடாது என்னும் சாஸ்திரத்தைப்பின்பற்றி நடக்கிறவர்கள், எந்த சாஸ்திரத்திலுமில்லாததும், சாஸ்திரவிரோதமானதுமான வரதக்ஷிணையென்னுமிந்த கொடிய வழக்கத்தைப் பின்பற்றி நடக்கலாமா?

இந்த வரதக்ஷிணையென்னும் பிசாசானது ஒழிந்தால்தான் நம் இந்தியாவில், அதிலும் இந்துக்களில், அதிலும் பிராம்மணர்களில், அதிலும் பெண்களுக்கு க்ஷேமம் உண்டாகும் என்பது திண்ணம்.

கொள்ளை யடிப்பதுபோல், சில பிள்ளைவீட்டுக்காரர்கள், பெண்வீட்டுக்காரரின் ஸ்திதியிருப்புக்களை யறிந்தும், அவர்கள் சக்திக்கு மீறி வரதக்ஷிணை வாங்குவதினால், ஏழைகளாகவிருக்கும் பெண்ணின் தாய் தகப்பன்மார்களுக்கு, இவ்வளவு ரூபாயும் கொடுத்து பெண்ணைக் கொடுத்தோமே யென்று, பெண்ணின் மீதிருக்கும் அன்பு குறைந்து, மாப்பிள்ளையின் மீதிருக்கும் மதிப்பு குறைந்துவிடும்படியாகவும் நேரிடக்கூடும். ஆகையினால் வரதக்ஷிணை யென்னும் கொடிய வழக்கமானது, அன்பு, மதிப்பு இவைகளை குறைக்கிறதற்கு ஹேதுவாயிருப்பதினாலும், நாம் அதை அவசியம் அகற்றி விலக்க வேண்டுவதல்லவா?

இந்த வரதக்ஷிணையினால் விளைந்த தீங்கு உயிருக்குக் கூட ஹானி நேரிடுகிறது. போன வருஷம், கல்கத்தாவில், ‘ஸ்நேகலதாதேவி’ என்ற பெண், தன் தாய் தகப்பன்மார்கள்

தன்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்காக வரதக்ஷிணை கொடுக்க முடியாமல் வருத்தப்படுவதையும், அதற்காக தாங்கள் பரம்பரையாக வாழ்ந்துவந்த வீட்டை அடகு வைத்து தன்னைக் கல்யாணம் செய்து கொடுக்க யோசித்திருப்பதையும், அதனால் பிற்பாடு மேல்வரும் தீங்குகளையும் யோசித்து, ஸஹியாதவளாகி தானே தற்கொலை செய்துகொண்டாளென்பதையும், நம் ஸகோதரர்கள் யாவரும் அறிவார்கள்.

பூர்வம், 'ஸகர மஹாராஜன்' தன் ராஜ்யத்தில் குடிகளுடையவும், பிரஜைகளுடையவும் க்ஷேமத்தின் பொருட்டு, தன் பிள்ளையான, 'அஸமஞ்சன்' என்னும் தன் குமாரனை துறந்தார் என்று இராமாயணத்தில் சொல்லியிருக்கிறது.

இப்பொது இவ்விந்தியமாதா, தன் பிரஜைகளுடைய க்ஷேமத்தின் பொருட்டும், ஜனங்களுக்கு புத்திவரும்படியான ஞாபகார்த்தமாகவும், 'ஸ்நேகலதா தேவி' என்றகன்னிகையை அழைத்துக் கொண்டிருக்கிறாள். இதனால், இனிமேலாவது நம் இந்தியருக்கு உணர்ச்சி பிறந்து, 'வரதக்ஷிணை வாங்குகிறது' என்னும் கொடிய பிசாசை 'வரதக்ஷிணையே வாங்கக்கூடாது' என்னும் மஹா மந்திரத்தினால் கலையெடுக்கவொட்டாமல் அடக்க, நம் ஸகோதரர்கள் முற்படவேண்டும். அங்ஙனம் கங்கணம் கட்டிக்கொண்டு, நம் பாரத மாதாவை சந்தோஷப்படுத்துவார்களாக.

ஆனால் இவைகளெல்லாம் விருதாவில் வாய்ப்பேச்சுப் பேசுவதினாலும், சும்மா பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதினாலும் மட்டும் போதாது. ஒவ்வொருவரும் தங்கள் நடத்தையில் வரதக்ஷிணையே வாங்காமலும், வரதக்ஷிணை வாங்குகிறவர்களைக் கண்டித்தும், அதற்குத் தகுந்த ஓர் ஏற்பாடு செய்தும், தங்கள் அனுபவத்தில் காண்பிக்கவேண்டும்.

போனவருஷம் ஸ்னேகலதாவின் தற்கொலையானதோடு, நாலைந்து கன்னிகைகளின் தற்கொலை நடந்ததென்பது நம் ஸகோதரர்கள் யாவரும் அறிந்தவிஷயம். அந்தத்தற்கொலைக்கு காரணம் வரதக்ஷிணையின் கொடுமையினால் ஏற்பட்டதென்பதையும் நம் ஸகோதரர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

ஆனால் அப்பொழுது, எங்கு பார்த்தாலும், யாவரும் ஒன்றுகூடி கன்னிகைகளின் தற்கொலையைப்பற்றி வருந்தியும், அதற்கு காரணமாயிருக்கும் வரதக்ஷிணையைப்பற்றி வெறுத்தும், பத்திரிகைகளிலெல்லாம் இதைப்பற்றியே எழுதுவதும், வரதக்ஷிணை வாங்குகிறவர்களைக் கண்டித்துப் பேசியும், குறைவாகக் கூறியும், இப்படியாக இந்தியா முழுதும் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுதோ அந்தப் பேச்சும், வரதக்ஷிணையைப்பற்றின ஸமாசாரமும், அடியோடு மறைந்து விட்டதுபோல் காண்கிறது. இப்பொழுதெல்லாம் யுத்தத்தைப் (War) பற்றிய பேச்சும், அதை ஸம்பந்தித்த ஸமாசாரங்களுமாகவேயிருக்கிறது. இன்னமும், இந்த யுத்தம், எப்பொழுது முடியுமோ வென்று யாவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த யுத்தம், இன்றைக்கோ, நாளைக்கோ, அல்லது இன்னம் ஒருவருஷமோ, அல்லது மூன்று வருஷமோ கழிந்தாகிலும், முடிவடைந்து தேசத்திற்கு நன்மை பிறக்குமென்ற நம்பிக்கையுண்டு. ஆனால் இந்த வரதக்ஷிணையின் கொடுமையடங்கி, முடிவடைந்து நம் தேசத்திற்கு நன்மை பிறக்குமென்பதாக யாதொரு நம்பிக்கையுமில்லையே?

ஸகோதரர்காள்! ஏன் இன்னமும் தூங்குகிறீர்கள். விழித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஸகோதரிகளாகிய கன்னிகைகளின் வரதக்ஷிணையினால் விளையக்கூடிய, தற்கொலையை தடுத்துக் கொள்ளுங்கள். கல்யாணகாலமாகிய தைமாஸமும், அதற்கடுத்தாற்போல் இரண்டு மாஸம் கழித்து சித்திரை, வைகாசி முதலான மாஸங்களும் வரப்போகின்றன. போனவருஷத்தைப் போல இந்தத் தடவையும், வரதக்ஷிணையினால் ஏற்படக்கூடிய தற்கொலைகள் நடவாமல் கன்னிகைகளைக் காத்து, ஏழைகளாக இருந்து வரதக்ஷிணை கொடுக்கச் சக்தியற்றிருக்கும் குடும்பத்தினருடைய மனவருத்தத்தைப் போக்குங்கள். நம் இந்திய மாதாவை திருப்திப்படுத்தி அவள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அலமேலு அம்மாள்.



# ஐரோப்பிய யுத்தம்

## நவாப்ஸா அல்லது பக்கிரிஸா

## THE EUROPEAN WAR: Now or never

இந்த யுத்தம் ஐரோப்பிய நாடுகளின் உயிர்நிலையின் வன்மையைப் பரிசோதிக்க ஏற்பட்டதுபோல் காண்கிறது. இதில் கைகலந்த ஸகல ராஜ்யங்களும் தத்தம் உயிரைக் காத்துக் கொள்வதற்கே பிரயத்னப்படுகின்றன என்றும், இதில் அபஜயமடைந்தால் ஸாகராதிபத்யம் முதலிய பல ஸாம்பிராஜ்யங்களையும் இழக்க நேரிடும் என்ற அபாயத்தைக் கருதியே "ப்ரிடன்" முனைந்து போரிடவேண்டிய தவச்யம் என்றும் 'போதினி'யில் நண்பர்கள் வாசித்திருக்கலாம். ஆனால் இவ்வாறு ஜெர்மனியிடம் பயமடைவது பழுதையைப் பாம்பென மதித்து வெருள்வது போல்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுவதைக் காணலாம். உயிர்ச்சேதம், திரவிய நஷ்டம், இவை நேருவது வாஸ்தவந்தான். அவ்வளவு மட்டில்தான் பயப்பட இடமே யொழிய இங்கிலாந்தை ஜெர்மனி அழிப்பது என்பது கூடாத காரியம் என்றும், கனகமயமான புறச்சுவர்களையும் அகழிகளையும் பாதுகாப்பிற் கடைந்திருந்த இலங்காபுரியைப்போல் ஸமுத்திர மத்தியில் விளங்கும் "ப்ரிடனை" ஜெர்மானியர் வசப்படுத்திவிடுவர் என்று கலங்குவது வீண் பேதைமை என்றும் கக்ஷி தொடுக்கிறார்கள். "இங்கிலாந்தின்" கப்பற்படையை வென்றபின்னல்லவா அதை தம்மாதீனமாக்குவது? அது முடியுங் கார்யமா? என்றெண்ணுகிறார்கள். இக்கக்ஷியில் உள்ள உண்மையையும், இந்த யுத்தத்தில் ப்ரிடனுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தையும் சற்று விசாரிப்போம்.

ஜப்பான் தேசத்து தெய்வஜ்ஞர் ஒருவர் கூறியுள்ள "ஜோஸ்யம்" நண்பர்களறிந்திருக்கலாம். அதில் நாமிங்கு கவனிக்கவேண்டியது ஒரு பாகமே. இறுதியில் இச்சண்டை "ப்ரிடனுக்கும்" "ஜெர்மனிக்கு" மட்டினுமே, மிக்க கொடுமையாயும் மும்மரமாயும் மூண்டுகொள்ளும்" என்று கூறியிருக்கிறார். யுத்தாரம்பத்திற் காதாரமாயுள்ள நாடுகளையெல்லாம்விட்டு, இவ்விரு நாடுகள் மட்டும் இவ்விதங் கடும்போர் புரிய நேரிடவேண்டிய அவசியமென்ன என்று பார்த்தால் இவ்விரு தேசங்களுக்கு முள்ள விரோதமே காரணமென்பது வெளியாகும்.

பல காரணங்களை முன்னிட்டு "ஜெர்மனிக்கு" "ப்ரிடன்" மேல் அளவுமீறிய பகையுண்டென்று முன்பே கூறினோம். ஜெர்மனியில் ஒருவர்க்கல்ல, இருவர்க்கல்ல—ஜனங்களின் பெரும்பாகத்திற்கும் இந்த ஒரே நோக்கந்தான் உள்ளது. தத்காலம் ஜெர்மனியில் பிரசுரமாகும் பத்திரிகைகளை வாசித்தால் இப்பெரும் பகையின் கடுமை நண்பர்களுக்குத் தெரியும். ஐரோப்பிய வியவகாரங்களில் தேர்ச்சியுள்ள சிலர் இங்கிலாந்தின் கொட்டத்தை யடக்குவதற்கென்றால், என்ன வேண்டுமானாலும் ஜெர்மனி செய்யத் தயாராயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு நல்வழிமட்டும் ஏற்பட்டால் "பிரான்ஸுடன் ஸமாதானஞ் செய்யத் தடையொன்றுமில்லை. "ஆல்ஸேஸ்" மாகாணத்தைத் திருப்பிக் கொடுத்தாலொழிய ஸமாதானத்திற்கு உடன்பட "பிரான்ஸ்" ஸம்மதிக்கவில்லையா? ஸரி, "ஆல்ஸேஸ்" அவர்களிடம் ஒப்புவிக்கப்படட்டும். ரஷ்யர்கள் துருக்கியின் மாகாணங்களிற் சிலவற்றையபேக்ஷிக்கிறார்களா? அவர்கள் இஷ்டம்போல் செய்துகொள்ளட்டும். எது எப்படிப்போனபொழுதிலும் ஸரி, இங்கிலாந்து ஒழிந்தால் போதும், மற்ற வியவகாரங்களைப் பிறகு பார்த்துக்கொள்வோம்" என்று எவ்வகையாலும் ப்ரிடனைத் தலையெடுக்கவொட்டாமற் செய்துவிட இயற்கையாகவே ஜெர்மானியருக்கு மிக்க ஆவலுண்டு. போதாக்குறைக்கு இந்த யுத்தத்தில் இங்கிலீஷ் படையினிடம் தாங்களடைந்த அபஜயமும், பராபவமும் அவர்கள் மனதில் உறுத்திக்கொண்டே யிருக்கின்றன. எப்பாடுபட்டோ பழிக்குப்பழி வாங்கிவிட வேண்டுமென்று 'கறுவி'க் கொண்டிருக்கின்றனர். இந்த ஸந்தியில் யுத்தத்தில் அவர்களுக்கு வெற்றியுண்டாகும் பக்ஷத்தில் அவர்கள் முதன் முயற்சி என்னவாயிருக்கும் என்று சிரமமில்லாமல் நண்பர்கள் ஊஹித்துக்கொள்ளலாம்.

அவ்வாறு ஜெர்மனி வெற்றிபெற்றாலும் இங்கிலாந்திற்கு பயத்திற்கு சிறிதும் ஹேதுவில்லை. எதிரியின் கர்வத்தை யடக்கமாட்டா

மற் போனது கீர்த்தி ஹானிதான்; தூணைவரான ஐரோப்பிய நாடுகள்பாடு கஷ்டந்தான். ஆனால் 'ப்ரிடனுக்குமட்டில் ஒரு ஊனமுமில்லை. ஸமுத்ர மத்தியில் ஒரு தீவு. தனைப் படையைக் கொண்டு திடீரெனத் தகைந்துவிடலாமென்பது கூடாத காரியம். ப்ரிடனை வெல்வதென்றால் பலம் மிகுந்த கப்பற்படை யொன்றினாலேயே முடியும். அதற்கு எதிர்க்கவோ பலமுள்ள போர்க் கப்பற்படை கைவசமுளது. இன்னமும் விருத்தி செய்யப்படும். அவ்வாறிருக்க நாமேன் பயப்படவேண்டும்.? இந்த மஹாயுத்தத்தில் ஜெர்மன் கப்பல் ஸைன்யம் நம் ஸைன்யத்துடன் நேரிடப் போர்புரிய முடியாது போனது நமது படையின் பராக்ரமத்தைக் காண்பிக்கவில்லையா? மேலும், எவ்வளவோ யுத்தங்களில் "ப்ரிடன்" அகப்பட்டும், தன் கப்பற்படையைக் கொண்டு ஒவ்வொன்றிலும் வெற்றி பெற்றிருக்கவில்லையா? அவ்விதமாயின் இச்சமயம் மட்டும் ஜெர்மானியர் ஜெயித்தால் என்ன செய்வது என்று 'ஒருக்கால் பிரஸவித்தாய்' *என்ற கதைபாகச் சொல்வதில் என்ன விசேஷம்" என்று சிலர் ஆக்ஷேபிக்கின்றனர். இவ்வாக்ஷேபத்திற்குத் தகுந்த ஸமாதானங்களைக் காட்டி, இப்பொழுது ப்ரிடன் ஜெர்மனியை அடக்க முயலவேண்டிய ஆவச்யகத்தை விளங்குவோம்.

நுட்பமாக கவனிக்குங்கால் இவ்வாக்ஷேபங்கள் எல்லாம் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் உண்மையாயிருந்திருக்குமேயன்றி இப்பொழுதைய வியவஹாரங்களுக்குப் பொருந்தா என்பது விளங்கும். முன் காலங்களில் கப்பல் ஸைன்யமென்பது அபூர்வமாயிருந்தது. ப்ரிடன் மட்டில் வெகுகாலந் தொடங்கி அவ்விஷயத்திற் சிறந்து விளங்கவே அதை யெதிர்க்கும் ராஜ்யமே இல்லாதிருந்தது. அக்காலங்களில் யுத்தம் நேரிட்ட ஸமயங்களிலெல்லாம் ப்ரிடிஷ் கப்பற்படை கண்டவிடமெல்லாம் மனம் போனபடி சென்று எதிரியின் நகரங்களையும் கப்பல்களையும் தீக்கிரையிட்டும் சூறையாடியும் வருவது வழக்கம். அத்துணிவுகரமான செயல்களினால் ராஜ்யத்திற்குப் பயப்பட ஹேதுவே கிடையாது. அஞ்சா நெஞ்சம் படைத்த "ட்ரேக்," "ஹாக்கின்ஸ்" போன்ற வீரர்கள் சென்று பகைவருக்குச் சேதம் விளைத்தால் மிகக் கொண்டாட்டந்தான். இல்லாவிட்டாலும், அவ்வீரர்களின் கதிக்காக சிறிது துக்கப்படுவதைத் தவிர்த்து வேறு ப்ரிடிஷ் ராஜ்யத்திற்கு யாதொரு கெடுதியும் ஸ்வப்நத்திலுமில்லை. அதை யெதிர்க்க வல்ல கப்பல் ஸேனையே கிடையாது.

இவ்வாறிருந்ததால் இங்கிலாந்திற்கு நிர்ப்பயமாயிருந்தது. ஒருவரு மணுகாது ஸாகர மத்தியில் அமைந்திருப்பதே அகண்டாதிபத்திற்கு அநுகூலமென்றும் அறிகுறி என்றுங் கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்திலோ அவ்விதம் மதோன்மத்தமாய் எதிரிகளை பிள்ளைப்பூச்சிகளாக எண்ணி யிகழ இடமில்லை. காரண மென்னவெனிலோ, ப்ரிடனின் பூர்வ ஸாகராதிபத்யத்திற்கும் தத்கால ஆதிபத்யத்திற்கும் உள்ள வித்யாஸந்தான். அது எத்தன்மையது என்று சிறிது சுருக்கிக்கூறுவோம்.

சென்ற நூற்றாண்டின் இறுதிமுதல் அநேக புதுவகையான சக்தி பேதங்களும், அவையாதாரமாகக் கொண்டு செய்யப்படும் பலவித யந்த்ரங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம், கப்பல்களின் உபயோகத்தையும் ஸாவதானத்தையும் முன்னிருந்ததைவிட மிகக் குறைத்துவிட்டன. 17, 18, 19, ஆவது நூற்றாண்டுகளில் போர்க்கலங்களென்றால், அவைகளின் ஸமீபத்தில் எதிரி நெருங்கத் துணிவதில்லை. போர்ப்படையின் ஸமூகம் ஒன்று வருகிறதென்றால் "திகில்" தான். ஆகவே விஸ்தீர்ணமான ராஜ்யத்தை யடைந்து பாதுகாத்து அனுபவிப்பதற்கு கப்பற்படையே சிறந்த ஸாதனமாய் வழங்கிற்று. உதாரண

* ஓர் விதவை தன் மகனுக்கு மிக்க செல்வங் கொடுத்து வளர்த்து ஒன்றிற்கு முதவாக் கசடனாக்கி வந்தனள். ஒருநாள் அப்புத்ர சிகாமணியிடங் காலணா கொடுத்து வயிற்று நோவிற்கு சுக்கு வாங்க அனுப்ப, அம்மூட சிரோமணி, காலணாவிற்கு வெள்ளைப் பூண்டு வாங்கிவந்து சேர்ந்தனன். வயிறெறிந்த விதவை அப்பூண்டென்னத்திற்கெனக் கேட்க, 'நீ ஒருக்கால் பிரஸவித்தால் உபயோகப்படுமல்லவா?' என்றான் புத்ரன். "அடே மடையா, நான் விதவையல்லவா, நான் பிரஸவிப்பதேது" எனக் கடிதலும், பையன் "ஆமாம், எனக்கதுதெரியாதா? இருந்தாலும் ஒருக்கால் பிரஸவித்தாய் இருக்கட்டுமே "பூண்டு" என்று என்ன சொன்னாலும் "ஒருக்கால் பிரஸவித்தாய்" என்று சொல்லியே வர, அவனை அடித்து வெருட்டியதாக ஒரு கதை யுண்டு.



மாக, இங்கிலாந்தையும், இந்தியாவையும் எடுத்துக்கொள்வோம். பண்டமாற்றிற்கும், ஸமாசாரப் போக்குவாவிற்கும், உத்யோகஸ்தர்கள் சென்று மீள்வதற்கும், கஷ்டம்நேர்ந்த ஸமயங்களில்வேண்டிய பந்தோபஸ்து செய்வதற்கும், பலமிகுந்த கப்பல்கள் இருந்தாலல்லவா தடைபாயின்றி ஸ்வாதந்திரியத்துடன் போகவா இயலும்? நில மார்க்கமாய்ப் போவதென்றால் பல ராஜ்யங்களின் தயவும் அனுமதியும் வேண்டும். கஷ்டம்நேர்ந்த தருணங்களில் ஆபத்தாய்வந்து முடியும். ஆகையினால்தான் தூரதேசங்களில் ராஜ்யங்களையுடைய நாடு கப்பற்படையின் வலிமிகுடையதா யிருத்தல் வேண்டும் என்று சரித்திர ஆராய்ச்சி செய்வோர் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆனால் இப்பொழுதோ என்றால், கப்பற்படையை பிரயோசனமற்ற தாக்குவதோடுகூட, அதை ஹதம்செய்வதற்குமான பலவகை ஸாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. ஜலமட்டத்திற்கு கீழ்ச்செல்லும் "ஸப்மெரீன்" என்னும் கப்பலும், பகைவருக்கு யமரூபியுள்ள டார்பிடோ, வெடிசுரங்கங்கள் போலுள்ள சக்திகளும் ஏற்பட்டு, ஒருக்ஷணம் மிகுந்த இறுமாப்புடன் வந்துகொண்டிருந்த கப்பல் மறுக்ஷணம் காற்றில் தூள்தூளாய் பறக்கும்படி செய்ய வாரம்பித்துவிட்டன என்றால், கப்பற்படை முன்னிருந்ததைப்போல் அவ்வளவு உறுதியான ஊன்றுகோலாகயாட்டாதென்பது புலப்படவில்லையா?

மேலும் கம்பியில்லாத் தந்தி முதலிய ஸாதனங்களேற்பட்டபிறகு ஸமாசாரப் போக்குவாவிற்கும் கப்பல்களின் உபயோகம் மிகக் குறைந்துவிட்டது. ஆகவே கப்பலின் சக்தி ஒன்றையே நம்பியிருப்பது மண்குதிரையை நம்பி ஆற்றி லிறங்கியதுபோலத்தான். இந்த யுத்தத்தின் கடற்போரை எடுத்துக்கொள்வோம். ஜெர்மன் படையைவிட இங்கிலீஷ் கப்பற்படை சிறந்ததென்பதற் கையமில்லை. ஆயின் ஏன் ஜெர்மனியின் ஸைன்யத்தைத் தேடிப்பிடித்து நாசம்செய்ய முடியவில்லை? ஏனெனில், முன் காலம்போலல்லாது டார்பிடோ, சுரங்கங்கள் முதலிய பலவித அபாயகரமான இடையூறுகளை ஜெர்மனி குறுக்கிட்டிருப்பதனால்தான். மேலும் முன்காலங்களில், இங்கிலீஷ் கால்வாயில் அடிவைக்கத் துணிபவர் கிடையாது. இப்பொழுதோ "டோவர்" ஸந்தியில் ஜெர்மன் ஸப்மெரீன்கள் வந்து இங்கிலீஷ் கப்பல்களை அழிக்க ஆரம்பிக்கின்றன. ஜெர்மன் "க்ரூய்ஸர்"கள் தைர்யத்துடன் இங்கிலாந்திலுள்ள "யார்மத்" (Yarmouth) என்னும் பட்டணத்தின் துறைமுகங்களில் குண்டுகளை வீசியெறிகின்றன என்றால் முன்பிருந்த ஸாகராதிபத்தியத்தின் அர்த்தத்திற்கும், இப்பொழுதுள்ள கடலாட்சிக்குமுள்ள பேதம் ஒருவாறு புலப்படுகிறதல்லவா?

போதாக்குறைக்கு ஜலமத்தியி லிருந்ததாலுண்டாகும் ஸாவதானமும் வரவரக் குறைந்துவிட்டது. முன்போ, தண்ணீர் மீதேதான் சென்று இங்கிலாந்தை வெல்ல முயலவேண்டும். கப்பற்படையின் பாதுகாப்புள்ள ராஜ்யத்தை அவ்விதம் ஜயிப்பது சிரமஸாத்யம். இப்பொழுதோ, பலவகையான ஆகாயக் கப்பல்கள் உதவிக்கு வந்துவிட்டன. பிருகிருதம் நிகழும் யுத்தத்தில் விமானங்களால் எவ்வளவு ஸாதகமேற்படக்கூடுமென்பது தெரிந்துவிட்டது. ஜெர்மனியிலோ விமான சாலைகள் நிருமித்து விமானங்கள் கட்டியவண்ணமாயிருக்கிறார்கள். ஆகவே கேவலம் ஜலமத்தியி லிருப்பதே போதுமான ஸாவதானமென்ற எண்ணத்திற்கு மிடமில்லாது போய்விட்டது.

ஆனால் ஸெப்லின் (Zepplin) படையொன்று தயார்செய்து ககனமார்க்கமாக இங்கிலாந்தைத் தாக்கலாம் என்று சொல்ல வரவில்லை. அது அவ்வளவு ஸுலபஸாத்தியமானதன்று. என்றாலும் வருங் காலத்தை யாரால் வரையறுக்க முடியும்? எக்காலம் எதுவருமென்று யார் நிஷ்கரிஷையாய்ச் சொல்லக்கூடும்? இந்த ஐரோப்பிய யுத்தத்தில்மட்டும் ஜெர்மானியர் ஜயமடைந்துவிட்டால், வருஷம் 30 அல்ல 40 அல்ல, தங்கள் முழுபலத்தையும் இங்கிலாந்தை யழிப்பதென்ற ஒரு காரியத்திற்கே செலவிடுவர். அப்படியாயின் எவ்வளவு சிரமஸாத்தியமாயினும் கடைசியில் அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும் என்றபடி, எடுத்த காரியத்தை ஸாதித்தாலும் ஸாதிக்கலாம்.

ஆனால் இவ்வளவு பிரயத்னங்கள் ஜெர்மனி செய்வதென்றால், ப்ரிடன் மட்டும் சும்மாவிருக்குமா? அவர்கள் செய்யும் பிரயத்னங்களைக் காட்டிலும் பதின்மடங் கதிகமாகச் செய்யாமலிருக்கப் பைத்தியமா? என்ன ஆக்ஷேபம்?

வேண்டிய ஸாமர்த்தியம், அநுகாரணமாதிப எதில் குறைவு? என்ற கேள்வி பிறக்கலாம். வாஸ்தவந்தான். ஆனால் இந்த யுத்தத்தில் ஜெர்மனி ஜயமடையுமானால் ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் தற்காலமுள்ள பலாபலம் எப்படி மாறிவிடுமென்பதை சற்று ஆராய்ந்து நோக்கவேண்டும். பலவகையிலும் பலங்குன்றி பிரான்ஸ் ஜெர்மன் சக்திக்குட்பட்டு அதன் வாக்கிற்கு எதிர்வார்த்தை சொல்ல முடியாத பலஹீனஸ்திதிக்கு வந்துவிடும். அதன் இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்களை யெல்லாம் ஜெர்மனி தன்னாதீனத்திற் கொண்டு வைத்துவிடும். பொதுநாடாகிய பெல்ஜியமோ ஜெர்மன் ராஜ்யத்தின் ஓர்பாகமாக்கப்படுமென்பதில் ஸந்தேகமில்லை. பிறகு "ஹாலண்ட்" எந்தமூலை? "ஷெல்ட்" நதியை யாக்ரமித்து, "ஆண்ட்வர்ப்," "கலே," "டன்கர்க்" முதலிய முக்கியமான இடங்களை பலப்படுத்தி, ப்ரிடனின் அழிவிற்கு மூலஸ்தானங்களாக்கிவிடுவார்கள். எவ்வித உபாயத்தாலோ, ஐரோப்பிய நாடுகளில் ஒன்றும் ப்ரிடனைச் சேராத வழியையுந் தேடிவிடுவார்கள். பிறகு மகாபலம்பொருந்திய பெரிய ராணுவராஜ்யங்களாய் விளங்கி, ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும், எப்பாடுபட்டும், எவ்வளவு காலமாயும், ப்ரிடன்மேல் தங்களுக்குள்ள க்ஷாத்ரத்தைத் தீர்த்துக்கொள்வார்கள்.

இங்கிலாந்தும் வேண்டிய ஆயத்தங்கள் செய்வதாயிருப்பினும், ஜயமடைந்த ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் வெகு தூரமாய் விடும். இங்கிலீஷை மாத்ருபாஷையாகவுடைய ஜனங்களின் தொகை $5\frac{3}{4}$ கோடி. ஜெர்மானியரின் தொகையோ 12 கோடி. என்னவென்றாலும் ஸமயங்களில் ஆள்பலம் பெருத்த ஸாதகமல்லவா? போதாக்குறைக்கு இங்கிலாந்து முதலியதேசங்களில் வரவர பிரஜோத்பத்தி குறைந்துகொண்டே வருகிறது. ஜெர்மனி, ஆஸ்டிரியாவிலோ, விஷமேறுவதுபோல் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. மேலும் வியாபாரத்திலும், கைத்தொழில்களிலும், யுத்தாயுதங்கள் செய்வதிலும் ஜெர்மனி தாழ்ந்ததாகக் காணோம். சீக்கிரம் மேம்பட்டும் விடலாம். பௌதிக, ரசாயன சாஸ்திரப் பயிற்சியிலும் இங்கிலாந்தைவிட ஜெர்மனி குறைந்ததில்லை. இன்னமும் ஜெர்மனியில் ஸகல ஜனங்களும் ஏகோபித்து ஒரேமூச்சாய் இங்கிலாந்தை அழித்து விடவேண்டுமென் றிருப்பதால், இவ்விஷயத்தில் ஒருதடையு மேற்படாது.

ஆகவே பிருகிருதம் நிகழும் ஐரோப்பிய மகாயுத்தத்தில் ஜெர்மனியை ஜயமடையும்படி விட்டுவிடுவார்களானால் இங்கிலாந்திற்கு விபத்து சீக்கிரம் வந்துவிடுமென்பதற் கையமுண்டோ? ஜெர்மனி ஸாதாரணமாய் அபஜயமடைவதுகூடப் போதாது. அதோடு விட்டுவிட்டால் மறுபடியும் பலமேறி நம்மழிவிற்கே காரணமாகிவிடும். எனவே அதன் விஷப்பல்லை வேரோடு பிடுங்கினாலொழிய க்ஷேமங்கிடைப்பதருமை. இதுவரை யுத்தம் சென்றிருக்கும் கதியைக் கவனித்தால், எவ்வளவு நாளாயினும் கடைசியாக ஜெர்மனி முறியடிக்கப்படுவது நிச்சயமெனத் தோன்றுகிறது. அவ்வாறானபின் இங்கிலாந்தும், அதன் ஐரோப்பியத் துணைவர்களும் ஜெர்மனியின் பலத்தைக் குறைத்து, இனியொரு விஷமுஞ் செய்ய முடியாதபடி அதன் ராணுவ நச்சுப்பல்லைப் பிடுங்கி தங்களுக்கும் லோகத்திற்கும், ; பகவானருளால், ஹிதத்தை விளைவிப்பாராக. சுபமஸ்து.

# சுகாதார விதிகள்

## THE RULES OF HYGIENE

முன் நாம் விவரித்துள்ள தேகதத்துவ சாஸ்திரத்தினுதவியைக்கொண்டு, நம்முடைய தேகத்தில் வியாதிகள் அணுகாம லிருப்பதற்கும், நம்முடைய சரீர தத்துவங்களை விருத்தி செய்வதற்கும், மனோ தத்துவங்கள் வர வர க்ஷீணகதியையடையாமல் தடுப்பதற்கும் ஸாதகமான சில சுகாதாரவிதிகளை இப்பொழுது கவனிப்போம்.

துயிலெழுதல்:—நம்முடைய சாஸ்திரங்களின் விதிப்படி ஏற்பட்டுள்ள பிராம்ம முகூர்த்தமென்ற விடியற்காலம் சுமார் 4 மணி; காலமே தூங்கி எழுவதற்கு உத்தமமான காலமாயிருக்கிறது. ஸூர்யன் உதயமான பிறகு விழித்தெழுவது ஸர்வதா கூடாத காரியம். தீராத பக்ஷம் விடியற்காலம் 5 மணிக்காவது விழித்தெழ வேண்டியது தேக ஸௌக்கியத்திற்கு அத்தியாவசியகமானது. வெகுகாலம் அரோகதிட சரீரிகளாய் ஜீவித்திருந்தவர்களில் பெரும்பாலார் அதிகாலையில் எழுந்திருக்கிற

(இதன் தொடர்ச்சி 253-ம் பக்கம்)



இந்த நல்ல வழக்கத்தைக் கைக்கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அந்த ஸமயத்தில் ஆகாயம் குளிர்ச்சியுள்ளதும் இன்பம் தரத்தக்கதாயுமிருப்பதன்றி, மனதிற்கு விசேஷ உத்ஸாகத்தையு மூட்டுவதாயிருக்கிறது. மேலும் சரீர தத்துவங்களும், மனோ தத்துவங்களும் அவ்வேளையில் துறு துறுத்து அதிக சுறுசுறுப்புடன் பலமான முயற்சிகளில் ப்ரவேசிக்கத் தயாராகவிருக்கும். அதிகாலையில் எழுந்திருப்பதனா லுண்டாகும் நன்மைகளும் இன்பமும் அவ்வழக்கத்தை அநுஸரித்து வருகிறவர்களுக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாது. துயிலெழுந்தவுடன் குளிர்ந்த ஜலத்தால் முகம், வாய், கைகால்கள், இவைகளைச் சுத்தம் செய்து கொள்ளுதல் சிலாக்கியம்.

வ்யாயாமம்:—ஆகாயம், தண்ணீர், வாயு இவைகள் எப்படி உயிரோடிருப்பதற்கு அவசியமோ, அப்படியே வ்யாயாம விஹாருதிகள் (தேகமுயற்சி, கவாத்து, கஸரத்து விளையாட்டுகள்) தேகாரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானவை. இவ்விதமான வ்யாயாமங்களில்லாமற்போனால் சரீரத்தில் உண்டாகும் அசுத்தங்கள் ஸுலபமாய்க் கழிவதற்கு ஹேது ஏற்படுகிறதில்லை. சுவாசாசயங்கள் சுருங்கி, சுவாஸத்திலும் பலமற்று இளைந்தாற்போல் ஏற்பட்டுவிடும். ரக்தத்தின் ஸஞ்சாரமும் மந்தப்பட்டு, அதனால் சரீரத்தில் வியர்வை விசேஷமாய் உண்டாவதும் நின்று விடும். அப்படியே ஜீரண சக்திக்கும் குறைவுண்டாகும். மற்றும் சரீரத்திலுள்ள தசைகள், நரம்புகள் முதலியவைப் பலப்படுவதற்கு ஹேதுவில்லை. ஆகவே, போதுமான அளவு சரீரமுயற்சியற் றிருக்குமானால், மனித சரீரம் பலவகையான கோளாறுகளால் பல வியாதிகளுக்குள்ளாகும்.

சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளும் அவ்வவைகளுக் கேற்பட்ட தொழில்களை ஸரிவர பூர்ணபலத்துடன் செய்யவேண்டியதற்கு ஆதாரமாயிருப்பது, ரக்த ஓட்டமானால், இந்த ஓட்டத்தை விரைந்தோடும்படி செய்து, அத்தொழில்களும் அதன் மூலமாய் விரைந்து நடக்கும்படி செய்ய வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை யோசித்துப் பாருங்கள். அப்படி ரக்தம் விரைந்தோடி சரீராவயவம் எங்கும் பாய்வதற்கு தேகமுயற்சிக்கு ஸமானமான வேறு ஸாதனமில்லையென்றால் தேகமுயற்சியின் மேன்மை எவ்வளவாகிறது.

அன்றியும் தேகமுயற்சிகள் செய்யுங்காலங்களில் நுரையீரலென்ற சுவாச இயந்திரம் அதிகமாக விரிந்து அதிக ஆகாயத்தையுட்கொள்ள நேருவதால், ரக்தம் அதிக சுத்தமாகி தேகத்திற்கு பலத்தையும் ஆரோக்கியத்தையும் தருகிறது. ஒருவன் படுத்துக்கொண்டிருக்கிற ஸமயத்தைவிட எழுந்து நிற்கும் பொழுது அரைப்பங்கு ஆகாயத்தை அதிகமாக உட்கொள்ளுகிறான்; ஒரு மணிக்கு மூன்று மைல் வீதம் நடந்து செல்வானானால் மூன்று பங்கு ஆகாயத்தை உட்கொள்ளுகிறான். தண்ணீரில் நீந்தினாலும் ஸரி, குதிரை ஸவாரி செய்தாலும் ஸரி, நான்கு பங்கு ஆகாயத்தை உட்கொள்ளுகிறான். இவைகளினால் வெவ்வேறு வ்யாயாம விஹாருதிகளின் பலாபலம் ஒருவாறு வெளியாகிறது.

இப்படியே, தேகமுயற்சிக்குத் தகுந்த அளவுதான் தேகக் கழிவுகளும் வெளியேறுகின்றன. வளர்ந்த ஆள் சும்மாயிருக்கும் பொழுது ஒரு மணி நேரத்தில் சுமார் 600 கிரேன் கரியமிலவாயுவையும், பலமான தேகமுயற்சிகளைச் செய்யும்பொழுது அதே நேரத்தில் சுமார் 2400 கிரேன் கரியமிலவாயுவையும் வெளியேற்றுகிறான். கரியமிலவாயு தேகத்தைவிட்டுப் பூர்ணமாய் வெளியாகாவிட்டால், அது சரீரத்திலுள்ள ரக்தத்தில் ஸம்பந்தப்பட்டு அதை விஷமாக்கும். அதனால் ராஜவுறுப்புகளுக்குப் பலஹீன மேற்பட்டு புத்திமந்தமும் கார்யங்களில் ஊக்கமின்மையும் ஏற்படக்கூடும். ராஜவுறுப்புகள் மட்டுமல்ல. இப்படியே மற்ற உறுப்புகளுக்கும் பலஹீனம் ஏற்படும்.

ஒருநாள் முழுவதும் ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்வதால், வேலையைவிட்டு வரும் ஸாயங்காலத்தில் உண்டாகும் தேகச்சோர்வு, மனச்சோர்வு முதலியன சுத்த ஆகாயமுள்ள வெளிகளில் போய் உலாவி வருவதாலும் அவசியமான தேக முயற்சிகள் செய்வதனாலும் மாறுவதை யநுபவத்தில் அறியலாம். மேலும் நல்ல பசியும் போஜனத்தை ஸுலபமாய் ஜீரணிக்கத் தக்க ஸத்துவமும் நல்ல நித்திரையுமுண்டாகும்.

கல்வி கேள்விகளில் தேர்ச்சிபடைய வேண்டியும் ஸரியான காலங்களில் போதுமான அளவு தேக முயற்சி அவசியம். தேக முயற்சியினால் மூளையும் மனோதத்துவங்களும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து, அதன் மூலமாய் கல்வி கேள்விகளிலும் விருத்தியுண்டாகிறது. போதுமான அளவு தேகமுயற்சியில்லாவிட்டால் படிப்பிலும் ஏற்றமில்லாமற் போவதுடன் அகால மரணத்தையும் அடைய ஹேதுவாகிறது.

தேகமுயற்சியினால் ஜீரணம் வேகப்படுகிறது. சாப்பாட்டிலுள்ள நல்ல ஸத்துக்கள் யாவும் சரீரத்தில் ஒன்றினப்படுகிறது. மலசுத்தி தாராளமாய் நடக்கிறது. தேக முயற்சி சரீரத்திலுள்ள அநேகம் வியாதிகளையும் காலக்ரமேண விலகும்படி செய்ய வல்லதாயிருக்கிறது. எந்த விதமான வியாதிகளையும் அவ்வவைகளுக்குத் தகுந்த மாறுதல்களோடு செய்யப்படும் வ்யாயாமங்களால் மாற்றி விடலாம் என்று மிஸ்டர். ஸாண்டோ என்பவர் அநுபவத்தில் நிரூபித்துக் காண்பித்திருக்கிறார்.

நம்முடைய தேசத்தில் இன்னமும் தேகமுயற்சியாலுண்டாகும் நன்மை இவ்வளவென்று ஜனம் பொதுவில் அறிந்ததாகவில்லை. சிறுகுழந்தைகளை அநியாயமாய் காலை முதல் மாலைவரை பள்ளிக்கூடங்களில் ஒரே இடத்தில் அசையாமலிருக்கும்படி செய்து, தேகமுயற்சியே இல்லாமல் கெடுத்து விடுகிறார்கள். இவ்விஷயத்தில் அநேகம் உபாத்தியாயர்களும், பிள்ளைகளின் பெற்றோர்களும் பெருத்த அபராதிகளாகிறார்கள். இப்படிச் செய்வதனால் பிள்ளைகள் வித்தியாபிவிருத்தி யடைவதனைப் போக்கி, வரவர, தேகதத்துவங்களின் செயல் குறைந்து, மனோவிருத்திகள் பலவீனமடைந்து, வயதுவந்த பிறகும் தகுந்தபடி, விசேஷ மனோமுயற்சியை அவசியம் வேண்டுகின்ற படிப்பிற்கும் லாயக்கற்றவர்களாகின்றனர். இப்படி இச்சிறுவர் அவஸ்தைப்பட்டு விளையாட்டிலேயே செலுத்தப்பட்ட ஞாபகமுடையவராய் 10 மணி நேரத்தில் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் இரண்டத்தனை, ஸரியான தேகமுயற்சியுடன் கூடின மூன்று மணிப் படிப்பில் கற்றுக் கொள்வதும் தவிர, பிற்காலத்திற்கு வேண்டிய சரீரதத்துவ, மனோதத்துவ பலங்களையும் சேகரித்துக்கொள்வார்கள் என்பதில் ஸந்தேஹமேயில்லை. இச்சிறுவர்களை காலையில் இரண்டுமணி நேரம் சுலபமான மனோமுயற்சிகள் செய்யவிட்டு, பிறகு ஓடியாடி விளையாட அவர்களுக்கிடம் செய்து கொடுத்து, பிறகு ஸாயங்காலம் ஒருமணி நேரம்படிப்பில் செலவிடச்செய்வதே மேன்மையென்பது இதனால் விளங்கும்.

சிறுவர்கள் செய்யும் தேகமுயற்சிகள் அவர்களுக்குச் சந்தோஷத்தை விளைவிக்கத்தக்க விளையாட்டு மூலமாகவும், அவர்களுடைய ஸகல சரீரபாகங்களுக்கும் அதிலும் விசேஷமாய் ஸந்திகள், மார்பு, முதுகு முதலியவைகளுக்குப் பலம் கொடுக்க வேண்டியவைகளாயிருக்கவேண்டும்.

வியாதிஸ்தர், விருத்தாப்பியர், பலஹீனர் முதலியோர்களுக்கும் தேகமுயற்சி மெத்த அவசியம். இவர்கள் கடினமான தேகமுயற்சிகளைச் செய்யக்கூடாது. இலேசானவைகளைச் செய்யும்பொழுதும் இடைக்கிடையே இரண்டு மூன்று தடவை இளைப்பாறிக்கொண்டு செய்ய வேண்டியது. வாகிங் என்று சொல்லப்படுகிற உலாவிவருதல் மிகவும் நல்லது. அதிலும் நடக்கும் பொழுதே சுவாஸத்தைப் பலமாய் உள்ளுக்கு வாங்கி, சற்று நேரம் தங்கியிருக்கும்படி செய்து, பிறகு மெதுவாய் வெளிவிட்டுக்கொண்டே போதல் உத்தமமான டானிக் (Tonic) என்று ஒரு பிரபல வைத்திய சாஸ்திரி அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

இப்படிச் செய்வதற்கும் பலஹீனமாயிருப்பவர்கள் பிளானல் அல்லது பின்னல்துண்டு, இவைகளிலொன்றைக்கொண்டு தானாகவாவது அல்லது வேறொரு ஆளைக்கொண்டாவது 15 நிமிஷம் தேகமுழுமையும் அனல் பறக்கத் தேய்த்துக் கொள்ளுவது தேகமுயற்சியின் பிரயோஜனத்தைக் கொடுக்கும். அதற்கும் பலஹீனப்பட்டவர்கள் காலையிலும் மாலையிலுமாக 5 நிமிஷ நேரம் அவ்விதம் செய்ய குணமுண்டாகும். நித்திரை வராத ஸமயங்களிலும் இதே வைத்தியம் சிலாக்கியமாகக் காணப்படுகிறது.

தேகமுயற்சியில் கவனிக்கவேண்டியவிதிகள்:

(i) ஆரம்பத்திலேயே கடினமான முயற்சிகளை அதிகமாகச் செய்யாதே. இலேசானவைகளிலாரம்பித்து, கொஞ்சங்கொஞ்சமாய் அதிகப்படுத்து.

(ii) அதிக வேகமாய் தேக முயற்சிகளைச் செய்து சீக்கிரம் களைப்படையும்படி விடாதே. ஆனால் மெதுவாய் அதிக நேரம் கடினமான முயற்சிகளைச் செய்.

(iii, சுத்தமான ஆகாயமுள்ள திறப்பு வெளிகளிலேயே தேகமுயற்சிகளைச் செய்.

(iv) தினந்தோறும் தவறாமல் தேகமுயற்சி செய்.

(v) தேகமுயற்சி செய்யுங்காலங்களில் சுவாசத்தைப் பற்றி ஏற்கெனவே நாம் சொல்லியுள்ள விஷயங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்.

(vi) தேகமுயற்சி செய்யும்பொழுது அதிலேயே ஞாபகமாயிரு. மனோ தத்துவங்களுக்கு எவ்வித காரணங்களை முன்னிட்டும் வேலை கொடுக்காதே.

(vii) தேகமுயற்சி செய்தான பிறகு, தேகத்தில் குளிர்ந்த காற்று முதலியன வீசும்படிக்கு இடங்கொடாதே.

அளவு:—வளர்ந்த ஆள் ஒவ்வொருவனும் ஒருநாளைக்கு 10 அல்லது 12 மைல்தூரம் நடப்பதற்கு ஸமானமான தேகமுயற்சி செய்யவேண்டும். இதில் சுமார் பாதி அவரவர் வயிற்றுவளர்ப்புக்காக ஓடியாடித்திரிவதில் ஸரிக்கட்டிப்போகும். மீதம் செய்தால் போதுமானது. நாட்டுப்புறங்களில் சுத்த ஆகாயம் அதிகமாதலால்பட்டணக்கரைகளிலிருப்பவர்களைக்காட்டிலும் ஸ்வல்பமான தேகமுயற்சி அவர்களுக்குப் போதுமானது. படிப்பு முதலிய கடினமான மனோமுயற்சி செய்பவர்களுக்கு இதைக்காட்டிலும் அதிகமான தேகமுயற்சி வேண்டும்.

காலம்:—உதயகாலமும் ஸாயங்காலமும் உத்தமமான நேரங்கள். இரண்டில் உதயகாலமே மேலானது. ஆனால் குளிர்காலங்களில் பகலிலும் தேகமுயற்சி செய்யலாம். போஜனம் செய்தவுடனே அல்லது ஜீரணமாகும் ஸமயமாவது தேகமுயற்சிக் கேற்றதல்ல. செய்தால் ஜீரணம் ஸரிவர நடக்காது தடைபடும். பொதுவாய்ப் பேசுமிடத்து, சாப்பிட்ட போஜனம் பூரணமாக ஜீரணமாகி, ரக்தமாக மாறுதலடைந்து, சரீரத்தில் வியாபிக்கத் தயாராயிருக்கும் ஸமயமே தேகமுயற்சிக்கு நிரம்ப ஏற்றது.

வகைகள்:—தேகமுயற்சிகளைப்பற்றி நாம் வியவஹரித்து வந்த காலத்தில் பலவகைகளை ஆங்காங்கு கூறியிருக்கிறோம். உலாவுதல், கஸரத்து, கவாத்து, தோட்டவேலை, குதிரை ஸவாரி, ஓட்டம்பிடித்தல், லலிதமான விளையாட்டுகள் முதலியன தேகமுயற்சியின் வகைகளாம். ஸாண்டோ என்பவர் கண்டுபிடித்திருக்கிற முறைப்படி வ்யாயாமங்கள் செய்வது மிகவும் உத்தமம்.

மலஜலவிஸர்ஜனம்;—சரீர ஸ்வபாவத்திற்கு தக்கபடி தூங்கி எழுந்தவுடனேயாவது அல்லது சற்றுநேரம் கழித்தாவது இந்த தேகபாதையை நிவர்த்திசெய்து கொள்ளவேண்டும். எப்பொழுது அவசியம் நேரிடுகிறதோ அப்பொழுதெல்லாம் கூடிய அளவு உடனே நிவர்த்திசெய்யப்பார்க்கவேண்டும். இல்லாவிடில், எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகிறதோ அதற்குத் தகுந்த அளவு தீமையை விளைவிக்காமல் போகாது. ஆஹாரவாஹினி வழியாய்ச் செல்லும் ஆஹாரக் கழிவுகள் ஆஸனத்துவாரத்தில் வந்து வெளிப்பட பிரயத்னிக்கின்றன. அதற்கிடங்கொடாவிட்டால், உடனே அவைகள் வந்த வழியே நோக்கித் திரும்பிச் செல்லுகின்றன. அப்பொழுது அவைகள் இரத்தத்தில் சுவறி, சுவாஸாசயத்திலிருந்து சுவாஸ வழியாய் வெளியே வருகின்றன. அதனாற்றான் சுவாஸத்திற்கு நாற்றம் ஏற்படுகிறது. மேலும் மலத்திலுள்ள திரவம் முழுவதும் சரீரத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு, கெட்டிப்படுகின்றன. அதனால் மலச்சிக்கல் முதலிய வியாதிகளுக்கிடமாகிறது. ஆதலால் இச்சமயங்களில் அநாவசியமாய் பேதிக்குச் சாப்பிட்டாவது வேறு விதங்களாலாவது மலத்தை திரவமாக்க வேண்டி நேருகிறது. இது தேக ஸௌக்கியத்திற்கு ஏற்றதல்லவென்பது அடுத்த தலைப்படியில் விளங்கும்.

விரேசனம்:—சிலர் தெரியாத்தனத்தால் மாதத்திற் கொருமுறையாவது பேதிக்குச் சாப்பிடுவது சரீரத்திற்கு நன்மை என்று எண்ணுகிறார்கள். விரேசனத்தால் தேகத்திற்குக் கெடுதலேயொழிய, நன்மை கிடையாது. பத்தியமான ஆஹாரத்தை யுட்கொள்வதாலும் காலாகாலங்களில் மலஜலவிஸர்ஜனம் செய்வதாலும் விரேசனத்திற்கு அவசியமே யில்லாமல் செய்து விடுவது ஸாத்தியமாகும். பேதிக்குச் சாப்பிடுவதினால் மலமிளகி, வெளிக்கழிப்பதற்கு ஸாதகமானாலும், இப்படிச் செய்வதற்கு, உமிழ்நீர், குக்ஷிநீர், பித்தநீர், கணையநீர், குடல்நீர் முதலிய ரஸங்கள் சரீரத்தில் அதிகமாக உண்டாகவேண்டி இருப்பதால், அந்த ரஸங்

களை உண்டுபண்ணுவதற் கென்றேற்பட்ட அங்கங்களுக்கு அநாவசியமாய் அதிகவேலை கொடுக்கப்படுகிறது. ஆகையாலிது சரீரத்திற்கு இளைப்பே தவிர வேறில்லை.

ஆயினும் அநுபவத்தில் விரேசனத்திற் கவசியம் நேராமல் செய்துகொள்ளுவது சற்று அஸாத்தியமாகவே இருக்கிறது. ஆகையால், அவசியம் நேர்ந்த ஸமயங்களில், (சுத்தி செய்தது கூட) நேர்வாளம் முதலிய அதிக பேதியுண்டாக்கக்கூடிய மருந்துகளை எப்பொழுதும் சாப்பிடக்கூடாது. பாதரஸம் முதலிய விஷக்கலப்புள்ள (Calomel) மருந்துகளையும் சாப்பிடுதல் கூடாது. விளக்கெண்ணெயே உத்தமமான விரேசனகாரி. சூரத்தாவாரை இலை முதலிய இலைகளின் கஷாயத்தைச் சேர்த்துக்கொள்ளலாம்.

மருந்து சாப்பிட்டு பேதி ஆகுங்காலங்களில் அதை நிறுத்த வேண்டுமென்றால் மோராவது எலுமிச்சம்பழ ரஸமாவது அல்லது புளிப்பு பதார்த்தங்களாவது சேர்ந்த ஆஹாரத்தை யுட்கொண்டால் நின்று விடும். நேர்வாள ஸம்பந்தமான மருந்துகளால் பேதியாவதை நிறுத்த வேண்டியதற்கு எலுமிச்சம்பழ ரஸமும் வசம்புசுட்ட கரியும் நல்லமாற்றுகள்.

பேதிக்குச் சாப்பிட்டதினம் கட்டாயம் ஸ்நாநஞ் செய்யவேண்டும். சரீர சுத்திசெய்வதொன்று, உஷ்ணப்பட்ட சரீரத்தைக் குளிர்ச்சி யடையவைப்பதொன்று இதன் பிரயோஜனங்கள்.

தேகபாதா நிவாரணத்தின் பேரில் செளசம் செய்துகொள்ளும் விஷயங்களில், பானத்திற்கும், ஸ்நாநத்திற்கும் உபயோகப்படுகிற ஜலாசயங்கள், தடாகங்கள் முதலியவைகளை உபயோகப்படுத்தக் கூடாது. அப்படிச் செய்வதினால், அவைகளை யுபயோகப்படுத்தும் மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் வியாதிக்கிடமுண்டானால், அது மிகுந்த பாபமன்றோ.

பல் தேய்த்தல்:—ஆல், கருவேலா, வேப்பு, பூலா முதலியவைகளின் குச்சிகளை உபயோகப்படுத்துவது நலம். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" புளிமுதலிய புளிப்புள்ள குச்சிகளை உபயோகப்படுத்தக் கூடாது. மாவிலை சிலாக்கியம். இவைகளிலிருக்கும் துவர்ப்பு,புண்களையாற்றவும், ஈறுகளைக் கெட்டிப்படுத்தவும் சக்தியுள்ளவை. பற்பொடிகளில் அடுப்புக்கரி, கொட்டைப்பாக்குக்கரி, உமிக்கரி முதலியவைகளால் செய்யப்பட்டவை சிலாக்கியம், கொஞ்சம் சீமைச்சுண்ணும்பு, சூடம், கிராம்பு, மாசிக்காய் முதலியவைகளைச் சேர்த்துப் பொடிசெய்து வைத்துக் கொள்ளுவதில் குணமுண்டு. ஆனால் பற்பொடிகள் பொதுவாய் கரடுமுரடாய் இருப்பது நலமே தவிர, மிகஸன்னமான பொடியாயிருத்தல் கூடாது. அப்படியிருந்தால் அது பற்களினிடையே தங்கி, விசேஷ ஊற்றைக்கும்,வாயில்துர்க்கந்தத்திற்கும் அதன் மூலமாய் வியாதிகளுக்கும் காரணமாகிறது. மணல், சாம்பல், விறகுக்கரி, செங்கற்பொடி முதலியவைகளை உபயோகப்படுத்தவே கூடாது. அவைகள் சீக்கிரத்தில் பற்களின் கெட்டியான கவசமாகிய இனாமலை (Enamel) த்தேய்த்து, பற்களுக்குப் பலக்குறைவையுண்டாக்கும். பல் சொத்தை விழுவதற்கும் ஹேதுவாகும்.

க்ஷெளரம்:—க்ஷெளரம் செய்து கொள்வதே சிருஷ்டி கர்த்தாவின் எண்ணங்களுக்கு மாறுகுமென்னலாம். ஏனெனில் கடவுள், சரீரத்தில் மயிர் உண்டாக்கி யிருப்பதன் நோக்கம் சரீரபாகங்களின் ரக்ஷணத்திற்காகதான். உதாரணமாக:—மூளை யென்ற வெகு ஸூக்ஷ்மமான உறுப்பை சீதோஷ்ணாதிகள் தாக்காதிருக்க வேண்டியே தலைமயிர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியே கண்ணிமைகளிலுள்ள மயிர்களும்.

ஆயினும் ஸெளகர்யம், நாகரிகம்,சாஸ்திரம் என்ற காரணங்களில் ஒன்றையேனும், பலவையேனும் முன்னிட்டு க்ஷெளரம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாக ஆகிவிட்டது. இருந்தாலும், அநாவசியமாக சரீர மேல்தோலில் எரிச்சலுண்டாகும்படி 'எதிர்க்கட்டையிட்டு' க்ஷெளரம் செய்து கொள்ளுதலை நிவர்த்திக்கவேண்டும். அடிக்கடி க்ஷெளரம் செய்து கொண்டால் தலைவழுக்கை விழுந்துபோம். ஒருமாதத்திற் கொருமுறை க்ஷெளரம் செய்து கொள்ளுதல் போதும். 15 நாளைக் கொரு தடவை செய்து கொள்ளலாம். 'சிம்டா' முதலியன காட்டுமிராண்டித்தனம். ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கென்று ஒரு கத்திவாங்கி வைத்துக்கொள்வது நலம். அநேகம் தோல் வியாதிகள், பரிகாரிகளின் கத்தியினாலேயே ஒருவரிடமிருந்து வேறொருவரிடம் மாற்றப்படுகின்றன. க்ஷெளரத்திற்கு ஸ்நாநஞ் செய்ய வேண்டிய தவசிய மென்று நாம் சொல்ல வேண்டியதில்லை.



ஸ்நாநம்:—சரீர செளக்கியத்திற்கு ஸ்நாநம் நிரம்ப முக்கியமானது. நம்முடைய சரீரத்திற்குள் க்ஷணத்திற்கு க்ஷணம் அசுத்தங்கள் உண்டாகி, அவைகள் சரீர சரும துவாரங்களின் வழியாய் வெளியே வருகின்றன. அவைகளை அப்பொழுதைக் கப்பொழுது சுத்தப்படுத்தாவிட்டால், அத்துவாரங்கள் அடைபட்டு, மறுபடி அசுத்தங்கள் வெளிவருவதற்கு ஹேதுவில்லாமற் போவதால் வியாதிகளுக்கிடமுண்டாகும். மேலும் வியர்வையால் சரீரம் எப்பொழுதும் நனைந்த வண்ணமாய் இருப்பதால், நம்மைச் சுற்றிலும், பறந்து கொண்டிருக்கிற தூசிகள் வந்தடைந்து இந்தத் துவாரங்களை யடைத்து விடுகின்றன. ஆகலால் இவ்விதமான, இரண்டு அழுக்குகளையும் நீக்க ஸ்நாநம் அவசியம் என்பதும் ஸ்நாநம் செய்யும் பொழுது நன்றாய்த் தேய்த்துக்குளிக்க வேண்டுமென்பதும் விளங்கும். அன்றியும் ஒரு தினத்திற்கு இரண்டு மூன்று தடவை ஸ்நாநம் செய்வது மிகவும் நல்லது. நிரம்ப சூடான வெந்நீர், தசைகளையும், நரம்புகளையும் மிருதுவாக்கி, பலக்குறைவை யுண்டுபண்ணுமாதலால், மந்தோஷ்ணமான வெந்நீர ஸ்நாநத்திற்கு சிலாக்கியம்.

நம்முடைய தேகத்திலிருந்து ஒவ்வொரு க்ஷணமும் அசுத்தங்கள் (தோலின் வழியாய்) கழிந்து கொண்டிருக்கின்றன வென்று சொன்னோமல்லவா? அவை இரண்டுவிதம். வியர்வையும், ஓர்வகைக்கொழுப்புமாம். தேகத்தில் அப்பொழுதைக் கப்பொழுதுண்டாகும் கழிவுகளை ஸ்வேதரூபமாக்கிக் கழிப்பதற்காக தோலின்கீழ் எண்ணிறந்த பல இயந்திரங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிலிருந்து அநேகம் சிறு குழல்கள் புறப்பட்டு மேற்றோலில் வந்து திறக்கின்றன. இப்படி குழல்கள் திறக்குமிடத்தைத்தான் நாம் சரும துவாரங்கள் என்கிறோம். இவைகளின் மூலமாய்த்தான் வியர்வை வெளியேவருகிறது. மேலும் இன்னொருவித கோளங்களும் தோலில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஓர் வித தைலத்தை ஸதா கசியவைத்து, சரீரத்தோல் காற்றினாலும் உஷ்ணத்தினாலும் காய்ந்து வரண்டு வெடித்துப் போகாமல் பதமாய் வைத்துக் கொள்ளுகின்றன. இவைகளை நிணகோளங்கள் என்னலாகும்.

இப்பதார்த்தங்கள் வெளிக்கழியத் தடைபட்டு சரீரத்தில் தங்குமானால், உடனே பெரிய ஆபத்துகள் நேரக்கூடும். சுகவீனத்திற்காவது ஹேதுவாகும். அல்லாப்பண்டிகை முதலிய உத்ஸவங்களில் வர்ணம் முதலியவைகளால், வேஷம் பூணுங்காலங்களில், அக்காலத்தில் இந்த ஸ்வேதத் துவாரங்களெல்லாம் அடைபட்டுப் போகுமானால் உடனே மரணம் ஸம்பவிக்கும்.

இவ்வித அசுத்தக் கழிவுகள் ஸதாகாலமும் உண்டாகிக் கொண்டிருப்பதால்தான் நாம் அரையில் கட்டிக்கொள்ளும் வஸ்திரங்கள் முதலியன சீக்கிரம் அழுக்கடைகின்றன. நாம் அவைகளை அடிக்கடி மாற்றி, சுத்தம்பண்ணி வைத்துக்கொள்ளாவிட்டால், ஷை விஷ பதார்த்தங்கள் மறுபடி தோலின்வழியாய் சரீரத்திற்குள் பிரவேசித்து சுகவீனமுண்டாக்கும். இக்காரணம்பற்றியே சொரிகள், சிரங்குகள், அரைகடி முதலிய அருவருப்பான பல தோலைப்பற்றிய வியாதிகள் உண்டாகின்றன.

உதயகாலந்தான் ஸ்நாநத்திற்கு நிரம்ப ஏற்றது. பூரணபோஜனம் செய்த உடனேயாவது போஜநம் ஜீரணமாகிற வேளையிலாவது ஸ்நாநம் செய்பக்கூடாது. சரீர முயற்சிசெய்து உடம்பு வியர்த்திருக்கும் வேளைகளிலும் ஸ்நாநம் செய்பலாகாது. வியர்வைமாறி, சரீரத்தில் உஷ்ணம் உண்டான பிறகுதான் ஸ்நாநம் செய்யவேண்டும். பலசாலிகள் சாப்பிடு முன்னர் ஸ்நாநம் செய்யலாம். மற்றவர்கள் அல்பாஹாரம் செய்துவிட்டு ஸ்நாநம் செய்வதுதான் சிலாக்கியம்.

ஸ்நாந விதிகள்:—

(i) குளிர்ந்த ஜலத்தில் 10 அல்லது 12 நிமிஷங்களுக்குமேல் நில்லாதே. (ii) தேகத்தை நன்றாய்த் தேய்த்து சுத்திசெய். (iii) ஸ்நாநம் முடிந்தவுடன் ஈரமற்ற மிருதுவான துவாலை கொண்டு சரீரத்தைத் துவட்டி, அதன்பின் பிளானல் அல்லது முரட்டுத் துவாலைகொண்டு 4, 5 நிமிஷநேரம் சரீரத்தில் அனலுண்டாகத் தேய்த்துக்கொள். (iv) இவ்விதத்திலும் தேகத்தில் அனலுண்டாகாவிட்டால் அதிக காலம்

(இதன் தொடர்ச்சி 258-ம் பக்கம்.)

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
### 1. ஆத்திசூடி விளக்கம்
### 46. சித்திரம் பேசேல்

இச்சூத்திரத்திற்கு இருவகைப் பொருளுரைப்பது உண்டு. (1) சித்திரத்தைப்போல அசையாது மௌனமாக இரு பெரியோர் கூட்டத்தில் என்பதும் (2) பலவாறாக மனதைக் இளைபாய்ந்து ஓடச்செய்யும் விசித்திர சொற்களைச் சொல்லாதே என்பதுமே இவ்விருபொருள்களும். ஆகவே இவ்விரு பொருள்களுக்குப் பொதுவாக நற்குணத்தை தழைக்கும்படி செய்யப் பயன்படாச் சொற்களை முன்பின் நிதானியாது பேசாதிருக்கவேண்டும். அப்படிப் பேசுவதாகத் தொடங்கிவிட்டால் கேட்பவனுக்கு வீண்மனச்சஞ்சலமும், சொல்லுபவனுக்கு பொய் சொல்லியாவது கேட்போரை மகிழச்செய்து கொண்டே இருக்கவேண்டுமென்ற வீண் மனக்கொதிப்புமாகவே ஏற்பட்டு, இருதிறத்தாருக்கும் சாந்தியும் சஞ்சலமேயாகிவிடும். வாணாள் வீணாளாகத்தான் முடியும் என்பதே இச்சூத்திரப் பொருள்களின் உட்கருத்து.

(1) பெரியோர் கூட்டத்திற் பேசாதிரு:—பெரியோர்களுடன் சேர்ந்து ஒரு ஸாதாரண மனிதன் கூட்டுறவு செய்வது தன் நன்மைக்கே ஒழிய பெரியோர் நன்மைக்கல்ல. ஆதலால் இவன் வார்த்தைகளால் இவன் அறியாமை விளங்குமே ஒழிய, பொதுவாகப் பெரியோர் கூட்டத்திற்குப் பயன் ஒன்றும் ஏற்பட இடமில்லை. அவர்கள் சேர்க்கையால் இவனுக்குக் கொஞ்சம் அறிவு ஏற்பட்டிருப்பின் சில ஸந்தேஹங்களும் வரலாம்; அல்லது தன் ஞானநிலையை பெரியோர்களுக்கு காட்டி விடவேண்டுமென்ற இறுமாப்பும் வரலாம். முன்னது வருங்கால் சற்று நிதானிக்கவேண்டும். பெரியோர்கள் கேட்போர் எல்லோருக்கும் பொதுவாக உண்டாகக்கூடிய ஸந்தேஹங்களை நீக்கி திட உணர்வு உண்டாக்கவே முயலுவதால், அவர்கள் சொல்லிவருவதைக்கவனித்து தன் ஸந்தேஹத்தை வெளியிடாது இருந்தால் இடையிலேயே அந்த ஸந்தேஹங்கள் அவர்கள் பொது ஆராய்ச்சி விசேஷத்தாலே வெளிப்படுத்தாமலே தனக்கு நீங்கிவிடலாம். ஆகவே எளிதில் நீங்கக்கூடிய அற்பஸந்தேகத்தைப் பெரிதாக்கிக்கொண்டு வீணாகப் பெரியோர் கருத்துப் போக்கைத் தடுத்ததாகும்: பலர்க்கு உபகாரமாகவேண்டியதைத் தகைந்து தந்நயம் கருதியதாகும். அப்படிப் பெரியோர் சொல்லவேண்டியது முடிந்தும் தன் ஸந்தேஹம் நீங்காது ஒருவனுக்கிருக்குமாயின் பின்னர் தனிமையாக அவரிடம் சென்று கேட்பதே தகுதி. இதுவன்றி இறுமாப்பாலும் ஸபையில் குறுக்கே பேசிவிடவேண்டும் என்று சில ஸாதாரணருக்குத் தோற்றலாம். இதை வெகு ஜாக்கிரதையாக அடக்கி நசுக்கிவிடுவதுதான் புத்திமானுக்கு அழகு. ஆகவே எவ்வித காரணத்தாலும் பெரியோர்களோடு சேர்ந்து பழகி வருகையில் ஒருவிதப் பரபரப்பாலும் நல்ல எண்ணத்துடனோ கெட்ட எண்ணத்துடனோ அவர்கள் ஸங்கல்பதாரைக் கலைப்பையாவது அல்லது கேட்போர்கருத்துக் கலைப்பையாவது ஏற்படுத்தி குழம்பச் செய்யும் விநோத சொற்களை சொல்லவே கூடாது. அப்படிச் செய்தால் செய்பவன் நன்மை அடையாததோடுங்கூட கேட்பவர் சொல்பவர் அதிருப்திக்கும் ஆளாவான். பெரியவர் எனக்கருதி அனுசுப்பட்டவர் சொல்வது சரியாயில்லை என்று பட்டால் இறுமாப்பை அடக்கிக்கொண்டு அவர்களை விட்டு விலகவேண்டுமே ஒழிய, அங்கு கூட குறுக்கேவிழுந்து பேசுவது புத்திமான்களுக்கு அழகில்லை. பகவான் மைத்ரேயர் பாண்டவர்கள் வனவாஸம் போனதும் துர்யோதனனிடம் வந்து புத்திமதி கூறுங்கால் அவன் அதைக்கவனியாது கர்ணனியருடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு தொடைதட்டிக் கொண்டிருக்க, அவர் 'உன் தொடையே உனக்கு உயிர் ஸ்தானமாகி, அதில் அடிபட்டு நீ மாளக்கடவாய்' என்று இட்ட சாபத்திற்கு ஆளாகும்படி நேர்ந்தது. அந்த துர்யோதனனை பகவான் அவன் ஸபையிலெடுத்த விச்வரூபத்தைக்கண்டு நகைத்து 'செப்படிவித்தை பேஷ்' என்று சித்திரம் பேசி, முடிவில் 'என்னுள் இருக்கும் ஈசன் என்னை

---

(257-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜலத்திலிருந்துவிட்டதாக நினைத்து, சிறிது தேகமுயற்சிசெய்து தேக அனலை எழுப்பிக் கொள்.



நாடு கொடாதே என்று தூண்ட நான் எப்படிக் கொடுப்பது! எல்லாம் ஈசன் செயல்' என்று குதர்க்க விசித்ர வேதாந்தம் பேசி பகவத் அபராதியானான். ஆகவே பெரியோர் கூட்டத்தில் சித்திரம்பேசிப் பாபத்திற்குஆளாகாது, சித்திரம்போலப் பேசாதிருந்து அப்படியே ஓய்ந்து நின்று நிலைத்துவிட முயலவேண்டும் சான்றோரினத்திருக்க விரும்பியஸாது.

(2) மனம் வியக்கச் சொல்லேல்:—வீணாக மனதிற்கு ஒரு குதூஹலக் கிளர்ச்சி உண்டாக்கி அதனால் மேல் உள்ள நடத்தை நல்வழிப்பட இடமில்லா வீண் விசித்திர விஷயங்களைப் பேசாதே என்பதும் இச்சூத்திரத்தின் பொருள்தான். தக்கால நாகரிகம் வெளிப்பட்டு சித்திரம் பேசுவதோடு நில்லாது சித்திரம் படித்தல், சித்திரம் பார்த்தல், சித்திரம் உடுத்தல், சித்திரம் உண்டல், சித்திரம் நடித்தல் முதலிய பலவித விசித்திர விஷய அனுபவ காரியங்கள் ஏற்பட்டுவிட்டன. இங்கு பேசேல் என்பதனுள் முற்கூறிய சித்திரத் தொழில்களை எல்லாம் கொள்ளலாம். எல்லாவித சித்திரத் தொழில்களுக்கும் சித்திரம் பேசுவதே முதலில் நடைபெறவேண்டும். ஆகவே சித்திரம் பேசுவதின் கொடிய காரியங்களை நன்குணர்ந்து அந்த ஆதாரத்தைத் தகைந்து தடுத்துவிட்டால் மற்றவைகள் வேரற்ற மரம்போல் அழிந்துவிடும். அதுபற்றியேதான் மற்றவைகளை அடக்கி ஔவையார் 'சித்திரம் பேசேல்' என்று மாத்திரம் நிறுத்திவிட்டனர். ஸாதாரண வாழ்க்கை விஷயமாகவாவது, ஈசவிஷயமாகவாவது இல்லாத விநோதப் பேச்சுக்களைப் பேசுவதே சித்திரம் பேசுவது. தக்கால கதை உடைபாவனைகள், நாவல் என்ற புத்தகங்கள் நாடகஸர்கஸ் தியேடர் இவைகளை சிரத்தையாகப்பார்த்தல், கண்ட இடத்திலும் தோன்றிய காலத்திலும் ருசியுள்ளதை தின்னுதல், கண்டபடி மனம்போனபோக்கே நடந்து கொள்ளுதல் இவைகளை சிறந்ததெனக்கருதி வார்த்தையாடுதல்தான் சித்திரம்பேசல் என்பது. இப்பேச்சால் இவைகளில் தொழிற்படவேண்டுமென்ற ஆவலுண்டாகி ஒரு வாழ்நாள் எல்லாம் வீணாய்ச் சிதறிப்போய்விடும். ஆகவே இவைகளுக்குக் காரணமான விநோதப் பேச்சைக் கூடியவரை பேசாமலே பழகிவரவேண்டும் தன் ஜன்மத்தை ஈடேற்றிக்கொள்ளக் கருதுபவன். இவ்வாறு பழகி ஜீவன் முக்தி பெற்றோரிடம் இயற்கையாகவே அமைந்துகிடக்கும் சித்திரம் பேசாமையை கைவல்ய நவநீத நூலாசிரியர்:—

> சென்றது கருதார் நாளைச்சேர்வது நினையார்
> கண்முன்
> நின்றது புசிப்பர் வெயினிலவாய்விண்விழுது
> வீழ்ந்து
> பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையா
> வொன்றும் பாரார்
> நன்று தீதென்னார் ஸாக்ஷி நடுவான ஜீவன்
> முக்தர்.
> இந்த நிச்சயம் முத்தருள நுபவ மிருப்பது
> எப்படி என்றால்
> சிர்தை யற்ற பூமண்டல ராஜனும் சிசுவும்
> போல் சுகமாவர்
> பந்த முத்திகள் மறந்துபோம் உண்டென்று
> பலர் சொல்லின கையாவர்
> அந்தரத்தை உண்டு மிழ்ந்ததோர் கொசுவெ
> னுமவர்களை நகையாரோ.

இப்படி நமது வாழ்நாள் ஸபலமாகும்நிலையில் காம்பீரியமிருக்குமாயின் இதை அடைய அந்த காம்பீர்யத்தை சற்று முயற்சியால் நாம் அடைய வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமல்லவா? அதற்கு நல்ல உதவியாக இருக்க சித்திரம் பேசேல் என்றார் ஔவை. விஷய விசித்திரங்களை ஒரு பொருட்டாகஎண்ணிமனதை அவ்வழி பாய்ந்தோட விடாதிருப்பதில் அவ்வழிப்பேச்சைத் தடுத்த பின்னர்தான் அதற்குக் காரணமான மனச்சஞ்சலம் வெளிப்பட அதைத்தகைய முயன்று விருத்தியாகலாம். நெருப்பென்றால் வாய் வெந்து போய்விடுமா என்று குதர்க்கம் பேசி கண்டபடி விஷய விசித்திரங்களைப் பேசிக்கொண்டிருந்தால் அதற்குக் காரணமான துர்வாஸனையின் பலம் தெரியாது: அதற்கு நாம் அடிமையாகித் தத்தளிக்கும்படிதான் ஆகும். ரிச்யசிருங்காதி மஹரிஷிகளில் அநேகர் சித்திரம் பேசி நின்றதால் தவம் கலைந்து உலகில் இழுபட்டுத் திண்டாடினர் என்று புராணங்கள் கூறி இந்த ஸூத்திரத்தை விளக்கி, அதற்கே இடங்கொடாது விசுவாமித்ராதி ரிஷிகள் மேன்மைபெற்று முக்திபெற்றனர் என்று முடிவுகூறும். ஆகவே நம்மால் கூடிய வரையில் விஷய விசித்திரங்களை அதிகமாகப் பாராட்டாது காலங்கழித்தால்தான் மானிட உடலெடுத்ததாலாய பயன்பெற உள்ளபடி முயன்றவராவோம்.

# உபநிஷத் ரத்னமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

(பகுதி 6-பக்கம் 11!-இன் தொடர்ச்சி)

### 46. அத்யாத்ம உபநிஷத் (73)

பிறப்பற்ற தனிப்பொருள் எப்பொழுதும் ஹ்ருதய குஹையி லுள்ளது. அதன் தேஹங்கள்தான் ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், மனஸ், புத்தி, அகங்காரம், சித்தம், அவ்யக்தம், அக்ஷரம், ம்ருத்யு ஆகிய இவைகள் எல்லாம். இவைகளுடே அது பரவி இருந்தும் அவைகளால் இது உணரப்படமாட்டாது. இவ்வாறு எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாக இருந்து பாபம் நீக்கி பரிசுத்தப்படுத்தும் வஸ்து ஏகதேவதையான ப்ரபு நாராயணனே.

அறிவுடையோர் ப்ரஹ்மத்யானத்தால் ஆத்மாவைவிட வேறுயுள்ள தேஹ இந்திரியாதிகளில் நான் எனது என்ற எண்ணங்களைவிட்டு, புத்தியையும் அதன் காரியங்களையும் பார்த்திருக்கும் ப்ரத்யகாத்மாவை உணர்ந்து நானே அது என்றிருந்துமற்றவைகளில் உள்ள ஆத்மபுத்தியைத் தொலைக்கவேண்டும். இதற்கு தேஹ, லோக சாஸ்திர வாஸனைகளை யோறுக்கவேண்டும், தன்னில் நிலைபெறும் யோகியின் மனம், ச்ருதி யுக்தி அனுபவங்களால் எல்லாவற்றின் ஆத்மாவும் தன்னாத்மாவே என்று வரும் உணர்வால் அழிந்தே போய்விடும். இதற்கு தூக்கம், வம்பு, விஷயம் இவைகளுக்கு இடங்கொடாது, சண்டாளனைக் கண்டால் ஒதுங்குவதுபோல தேஹ ஸம்பந்த பாவனைகளைவிட்டு விலகிப் பழகவேண்டும். குடத்துள்ளிருக்கும் வெளியை பரந்துள்ள வெளியுடன் சேர்த்து விடுவதுபோல தன் ஆத்மாவை பரமாத்மாவில் கரைத்து மாறுதிருந்து அண்ட பிண்ட சராசரங்களை எல்லாம் மல பாண்டம்போல் ஒதுக்கவும், க்ருதக்ருத்யனாகவேண்டுமெனில் தேஹத்தில் வரும் நான் என்ற புத்தியை சிதாத்மாவில் கரைத்து பேதப்பூண்டறும்படி செய்து, கேவலமேயாகி, ப்ரபஞ்சமெல்லாம் கண்ணாடி ப்ரதிபிம்பம்போல எதில் தோற்றுகிறதோ அந்த நானே ப்ரஹ்மம் என்றிருந்து விடவேண்டும். இப்படி அகங்காரத்திலிருந்து விடுபடும்ஒருவன் கிரஹணத்திலிருந்து விடுபட்ட பூர்ண சந்திரன்போல விளங்குவன்.

கர்மம், எண்ணம், வாஸனை, இவைகளில் முறையே முன்னது நீங்க பின்னதாக நீங்கி முடிவில் மோக்ஷமாகிய ஜீவன்முக்தி கைகூடும், எல்லாவற்றையும் எப்பொழுதும் பிரஹ்மமே என்று கருதிப் பழகுவதாகிய ஸத்வாஸனையால் எல்லா வாஸனைகளும் அழியும். ப்ரஹ்ம நிஷ்டையில் அசிரத்தை வரவேகூடாது. இதைத்தான் மரணமென்பர் பெரியோர். அறிவுடையோர் சற்று பராக்காயிருந்தாலுங்கூட விலகிய மாயை நீருட்பாசிபோல வந்து கவிந்துவிடும். உயிருள்ளபொழுதே கைவல்ய மடைந்தவன் இறந்த பின்னும் அதிலேயேதானிருப்பன். நிர்விகல்ப ஸமாதியில் ஆத்மாவாகவே இருந்தால்தான் மனமுடிச்சுச் சிதறும், அஞ்ஞானம் அழியும்.

இங்கிலவர எல்லாவற்றிலும் ஒருவித உபேக்ஷை புத்தி வரவேண்டும், ப்ரஹ்மாமுதல் புழு வரையில் எல்லா உபாதிகளும் பொய்யே. எங்கும் ஆத்மா ஒன்றே உள்ளது. ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர், இந்திரன், ப்ரபஞ்சங்கள் எல்லாம் ஆத்மாதான். ஆத்மாவைவிட வேறானவைபோன்ற வஸ்துக்கள் ஸம்பந்தத்தை மனதைவிட்டு நீக்கினால் ஒருவித பேதமும் இல்லாப் பரம்பொருள்தான் விளங்கும். திரிபுடி நீங்கி ஆத்மாவாக மிஞ்சிவிடின் அனாத்மத்தோற்ற காரணமான அஞ்ஞானம் இராது அந்த ஏகவஸ்துவில். லேசமாத்திரமான ஸ்வேஷ்டைப்ததியில்கூட இது காணப்பட்டாதே! மாறுபாடு சித்தந்தையே பொருத்ததால் அதை ஆத்மாவில் கரைத்துவிடின் உள்ள வெளியெல்லாம் ஆனந்தமாகத்தான் மிஞ்சிவிடும்.

வைராக்யம், உணர்வு, ஒதுக்கம், ஒய்வு இவைகளுள் முறையே பின்னது முன்னதன் முடிவு. இவைகளுள் ஒன்றில்லாவிடினும் பின்னது நிலைக்காது. ஒய்வாகிய ஆத்மானந்தத்தை அனுதம் நிவர்த்திமார்க்கம் ஒப்புயர்வற்றது. மாயையை உபாதியாக உடைய ஈசன் ஜகத்காரணனான மற்றொன்று நான் என்பதன் வேற்றுமைகளில் மனத்தின் மூலமாகப் பலவகைப்பட்டுள்ளது. இவைகளின் உபாதிகளைக் கருதாது ஒதுக்கி நோக்கில் ஸச்சிதானந்த பரப்ரஹ்மம்தான் விளங்கும். இக்கருத்துடைய வாக்கியங்களைக் கேட்டலே ச்ரவணம்; யுக்திகளால் இவைகள் அர்த்தம் மனதில் அமர்வதே மனனம்; இவ்வாறு அமர்ந்ததில் மனம்நிலைத்து மாறாது நிற்பதே நிதித்யாஸனம். இந்த ஸமாதி நிலையில்தான் மனம் த்யாதா, த்யானங்களைவிட்டு த்யானப் பொருள் மாத்திரமாக பின்னர் காற்றில்லாவிடத்துவிளக்குப்போலநின்று விடும்.

பின்னர்தான் இவைகள் ஞாபகம் கிளம்பும். இதனால் ஸகல கர்மங்களும் அழியும். இதற்கு தர்மமேகம் என்றும் பெயருண்டு, இதில் ஏற்படும் மனதின் தன்மையால் பாப புண்யங்கள் இரண்டும் கழன்று விடும். வாஸனைகளும் அழிந்துவிடும். உள்ளங்கை நெல்லிக்கனிபோல எல்லாம் வெட்டவெளியாகிவிடும். வாஸனை வெளிநோக்காது தகயப்படுங்கால்தான் வைராக்யத் தொடக்கம். நான் என்று பிரிக்கும் எண்ணம் கிளம்பாதிருத்தலே உணர்வின் முடிவு. இவ்வாறு அடங்கியது மறுபடி கிளம்பாமலே போகுங்கால்தான் உபரதியாகிய ஒதுக்கம் தொடங்கும். ஆனந்தமாக நிர்க்குண ப்ரஹ்மத்திலேயே நிலை பெற்றிருப்பவனே ஸ்திதப்ராஞ்ஞனெனப்படுவன். ஆழ்ந்த விசாரணையினால் ப்ரஹ்மாத்ம ஐக்கியத்தில் நிலைபெறும் புத்திக்கு ப்ராஞ்ஞை என்று பெயர். இதற்கு நிர்விகல்ப சித்மாத்திர நிலைதான் உண்டு. இப்படிப்பட்ட நிலையை அடைந்த ஜீவன்முக்தனிடம், தேஹேந்திரியங்களில் நான் என்ற புத்தியும், மற்றவைகளில் பேதபுத்தியும் இராது. ஜகத் ஜீவபர ஐக்யம் அவ்வவைகளில் ப்ரஹ்மமாகவே இருக்கும் தன்மை, பிறப்பின்மை, ப்ராரப்தமின்மை இவைகள் அமைந்திருக்கும்.

முக்தனுக்கு உண்மையாகப் பார்க்குங்கால் ஒருவித ப்ராரப்தமும் இல்லை ஆனால் வெளியிலிருந்து பார்க்கும் அஞ்ஞானிகள் திருஷ்டியில் அவனை ஸுகதுக்காதிகள் அனுபவதாகவும், அவன் மறிப்பதாகவும் தோன்றும் ஞானம் வருவதற்கு முன் பலிக்கத் தொடங்கிய ப்ராரப்த பலத்தால். ஆதலால் இந்த ப்ராரப்தம் அவனை அனுபவதாகவும், அவன் உயிரோடிருப்பதாகவும் நமக்குத் தோன்றுவதற்குக் காரணம் கூறி நம்மைத் திருப்திப்படுத்த வேதம் வெளிநோக்கில் புலி எனக்கருதி எய்யப்பட்ட அம்பு தடைபடாது அது பசுவெனக் கண்டபின்னும் போய்ப் பாய்வது முதலிய திருஷ்டாந்தங்களால், ஸமாதானப்படுத்துகிறது. அவன் நோக்கில் ப்ராரப்தம்கூட இல்லைதான், அனுதம் ஸுகதுக்கங்கள் தேஹம் ஒன்றும் அவன் நோக்கில் இல்லவே இல்லைதான்.

எல்லாம் ஸச்சிதானந்த பரிபூரணம்தான், ஒன்றே இரண்டற்றது, மனவாக்குக்கு எட்டாதது, ஸாதாரண தர்மங்கள் ஒன்றும் இல்லாதது இதைத் தன்னுள் உணருபவனே வித்தன். ' இவனுக்குத்தான் தானே எல்லாம் என்ற மாறா உணர்விருக்கும். இந்நிலையில் உலகெங்கே? எப்படித் தோன்றி ஒடுங்கியது? என்ன ஆச்சரியம்! கொள்ளுவது எதைத் தள்ளுவது எதை? உள்ளது ஆத்மாதானே! வேறில்லையே! 'இந்நிலையேதானிருப்பேன், ஆனந்தமாக, ஆனந்தம்தான் நானாதலால்' என்ற உணர்வு ஊறிக்கொண்டிருக்கும்.

இந்த வித்தை அபாந்தராத்மா, ப்ரஹ்மா, கோர ஆங்கிரஸ், ரைய்க்வர், ராமர் இவர்கள் வழியாக முறையே இறங்கி மாணிடர்களிடம் பரவியது. இது தான் நிர்வாண வித்தை, வைதிகவித்தை உபநிஷத்.

### 47. பிக்ஷுகோபநிஷத் (60)

மோக்ஷ இச்சை உடைய பிக்ஷுக்கள் நான்கு விதம்: அவர்கள் குடீசகர், பஹூதகர், ஹம்ஸர், பரமஹம்ஸர் ஆகிய இவர்களே. எல்லோரும் விதிவரம்புக்கு உட்பட்டே நடந்துகொண்டு தனிமையாக இருந்து யோகவழியால் மோக்ஷமடைய முயல்வர்.

**குடீசகர்:**—எட்டுகவளம் தினம்சாப்பிட்டு காலம் தள்ளுவர் கௌதமர், பரத்வாஜர், யாக்ஞவல்கியர், வஸிஷ்டர் இவர்களே இதற்கு உதாரணம். **பஹூதகர்:**—திரிதண்டம், கமண்டலு, சிகை, யக்ஞோபவீதம், காஷாயம் இவைகளுடன் ப்ரஹ்ம ரிஷிகள் வீட்டில் பிச்சை வாங்கி எட்டு கவளம் உண்டு காலம் தள்ளுவர். **ஹம்ஸர்கள்:**—கிராமத்தில் ஒரு இரவு, பட்டணத்தில் ஐந்திரவு, க்ஷேத்ரங்களில் ஏழிரவு, கோமயம் மூத்திரம் இவைகளை ஆகாரமாகக்கொண்டு சாந்திராயணாதி தபஸ்ஸுக்களால் காலந்தள்ளுவர்.

**பரமஹம்ஸர்கள்:**—துணியுடனும் அல்லது இல்லாமலும் இருப்பர். மரத்தடி, பாழ்மனை, சுடுகாடு கோயில்கள், குடிசைகள், எறும்புப்புற்று, குயவன் சாலை, அக்னிஹோத்ரசாலை, மணற்றிட்டு, யக்ஞபூமி, குகை பிளவுகள், பொந்துகள், மலை அருவிகள் ஆகிய இவைகளே இவர்கள் இருப்பிடம். இவர் த்வந்தாதீதர், ஸமதிருக்குக்கள், குறித்தகாலத்தில் வாங்கி உண்பவர்கள், பிறந்தமேனிக்கிருப்பவர். ஆசையற்றவர், சுக்லத்யானபரர், ஆத்மஞானிகள், சுத்தமனத்தால் ப்ரஹ்மத்தை அணுகிவிடுவதால் இவர்கள் ஸ்வபாவிகள் ஒழுங்குப்படி தேஹத்யாகம் செய்வர்.



# மாதவீ கங்கணம்

## CHILDRENS' & LADIES PAGES

### முதல் பாகம்

#### முதல் அதிகாரம்

#### விளையும் பயிர் முளையிலே தெரியும்

அக்பர் சக்ரவர்த்தி அரசாட்சிசெய்துவருங்காலத்திலே 1570 ஷூத்தில் ஒரு நாள் மாலை நேரத்தில் மூன்று குழந்தைகள் கங்கையாற்றங் கரையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இந்த இடம் மிகவும் ரமணீயமாயும் மனோஹரமாயும் இருந்தது; இத்தேச சரித்ரத்தில் ப்ரஸித்தமான ஸம்பவங்கள் எத்தனையோ இங்கு நிகழ்ந்திருக்கின்றன. இந்த அகன்ற நதியானது கிழக்கு முகமாய்ப் பலநூறு மைல் தூரம் பாய்ந்துவந்து இந்த இடத்தில் ராஜமஹால் என்னும் குன்றுகளைச் சுற்றி வளைந்து திரும்பித் தென் திசையாக ப்ரவஹிக்கின்றது. இந்தக் குறுகிய வாயிலின் வழியாக மேற்கு ப்ரதேசத்திலிருந்து படையெழுச்சி அலைகள் பலதடவையும் வங்காள நாட்டின் செழித்த ஸமபூமிகளை நோக்கிப் புரண்டு வந்திருக்கின்றன. ராஜவம்ச ஸ்தாபகர்கள் பலரும் அரசசூழ்ச்சிக்கேற்ற இந்த ஸ்தானத்தில் பல முறையும் தம் அதிகாரத்தை நிலைபெறச் செய்திருக்கின்றனர். கௌடா, தொண்டம், ராஜமஹால் முதலிய இடங்கள் இக்காலத்தில் எளிய பட்டணங்களாகவோ ஜனங்கள் அதிகமில்லாத குக்ராமங்களாகவோ இருந்த போதிலும், முற்காலத்தில் ஹிந்து ஆப்கானிய, மொகலாய அரசர்களும் வெற்றி வீரர்களும் அரசாட்சி செய்துவந்த ப்ரதான பட்டணங்களாயிருந்தன. இதுவுமல்லாமல் வங்காள நாட்டின் ஸௌபாக்கிய தௌர்பாக்கிய கதிகளைத் தீர்மானிப்பதாய் அடிக்கடி உண்டாகிய ராஜ்ய ப்ரளயங்களில் உபய பக்ஷங்களில் ஏதாவதொன்றைச் சேர்ந்திருந்த அஞ்சா நெஞ்சரா

(இதன் தொடர்ச்சி 262-ம் பக்கம்)

கிய வீரர்களையும் திடஸங்கற்பமுள்ள தலைவர்களையும் கொண்ட ஒரு வம்சமானது பதினான்காம் நூற்றாண்டில் நடந்த போர்களால் இந்த ப்ரதேசத்திலேயே தழைத்தோங்குவதாயிற்று.

இவ்வளவு உலகப்ரஸித்தியும் இயற்கையழகும் வாய்ந்த இடத்திலே மேலேகண்ட மூன்று குழந்தைகளும் மணலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்புறத்தில் பசுமையான நெற்கதிர்கள் காற்றினால் அசைவுற்றுக் கொண்டிருக்கும் பரந்த ஸமதிலங்கள் உலகத்திலே இனிப்பிலும் நேர்த்தியிலும் சிறந்த கனிகளை இன்னும் தருவதான மாந்தோப்புகளின் தொடர்ச்சியான வரிசையால் ஓர் இருண்ட ரேகைபோல் விளங்கின. அவர்களுக்கு எதிராக புண்ணிய தீர்த்தமாகிய கங்காநதி பாய்ந்து கொண்டிருந்தது. அந்நதிக்கு அப்புறம் ராஜமஹால் குன்றுகளின் செங்குத்தான சிகரங்கள் உயரமாய்க் கிளம்பியிருந்தன. ஆற்றிலோ சாமான்கள் நிறைந்த கணக்கற்ற படகுகள் அன்றிரவு தங்கியிருப்பதற்காக அங்கே நங்கூரம் போடப்பட்டிருந்தன. அப்படகுகளிற் சில வங்காளத்தில் உற்பத்தியாகும் சர்க்கரை, உப்பு, பருத்திவஸ்திரங்கள், பட்டு பீதாம்பரங்கள் முதலியவற்றை வட இந்தியாவுக்கு ஏற்றிக்கொண்டு போகிறவைகளாகவும் மற்றவைகள் பேஹார்நாட்டு நவதானியங்களையும், காசி பட்டணத்துப் பித்தளை பாத்ரங்களையும் சித்ரப்பூம் பட்டாடைகளையும் மேலை இந்தியாவின் மண்டலாதிபத்ய நகரங்களின் அழகிய கைத்தொழில் சாமான்களையும் கொண்டு வருபவைகளாகவும் இருந்தன. அக்காலத்தில் அகலமும் ஆழமும் அதிகமாயுள்ள கங்காநதியே வட இந்தியாவில் நடந்துவந்த வர்த்தகத்துக்கு ராஜமார்க்கமாயிருந்தது. அவ்வாற்றில் மேலுங்கீழும் போய்வந்து கொண்டிருந்த ஆயிரக் கணக்கான படகுகள் மெல்லச் செல்பவைகளாய் இருந்தபோதிலும் அழகிய உருவங்களுடையனவாய் அதன் அகன்ற நீர்ப்பரப்பை கவிந்து கொண்டிருக்கும் காட்சியானது இன்னும் உயிருடனிருக்கும் வயோதிகர்களுடைய ஞாபகத்திலிருக்கலாம். இக்காலத்திலோ ரயில் மார்க்கம் ஏற்பட்டுவிடவே நதிமார்க்கமாய் நடந்துவந்த வர்த்தகம் குறைந்துவிட்டது; அன்றியும் படகும் மாட்டு வண்டியுமே போக்குவரவுக்குரிய ஸாதனங்களாயிருந்த காலத்தில் விட இக்காலத்தில் ப்ரயாணம் அதி சீக்ரத்தில் நடக்கிறது. ஆனால் அக்காலத்தில் உயிர்வாழ்க்கை அமைதியுடையதாயும், ஸ்திரீ புருஷர்கள் தத்தம் பரம்பரையான தொழில்களைச் செய்துகொண்டு அதிக அலைச்சலின்றி ஓய்வு உடையவர்களாயும், தங்கள் கிராமங்களில் கீழ்த்திசையாருக்குரிய ஆடம்பரமற்ற ஸாமாந்யமான வாழ்க்கை சுகத்தை அதிகமாய் அனுபவித்தவர்களாயும் இருந்திருக்கலாம்

நக்ஷத்ரங்களின் மங்கிய ஒளியிலே இரண்டு சிறுவர்கள் அவ்வாற்றங்கரையில் மண்ணையும், மணலையும் குச்சிகளையுங் கொண்டு சிறுவீடுகள் கட்டிக்கொண்டிருக்க ஒற்றைநாடி சரீரமும் கருத்த விழிகளுமுள்ள ஒரு பெண் மௌனமாய் உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றாள். அப்போது ஸூர்யன் அஸ்தமிக்க, இரவின் இருள் எங்கும் சூழ்ந்துகொண்டது. சமீபத்திலுள்ள வீரநகரம் என்னும் பட்டணமானது மாந்தோப்புகள் அடர்ந்த ஓர் இருண்ட ரேகையாகத் தோன்றியதேயல்லாமல் மற்றபடி அநேகமாய்க் கண்ணுக்குப் புலப்படவில்லை. மரங்களின் இடையில் சில விளக்குகள் மினுக்மினுக்கென்று ப்ரகாசித்துக்கொண்டிருந்தன. ஆற்றங்கரையோ இப்படிக்கன்றி அதிக சுறுசுறுப்புள்ள காட்சியுடையதாயிருந்தது. படகுக்காரர்கள் பகலெல்லாம் இறக்குமதி ஏற்றுமதி விஷயமாய் உழைத்துவிட்டு இரவில் உல்லாஸத்துடன் பாடிக்கொண்டிருந்தனர்.

ராபோஜனத்துக்காக ப்ரதிபடகிலும் தீமூட்டப்பட்டிருந்தது. அப்பாலகர்கள் இருவரும் ஸமவயது — அதாவது ஸுமார் பதினைந்து வயதிருக்கலாம் — உடையவர்களாய்க் காணப்பட்டபோதிலும் உருவத்திலும் குணத்திலும் ஒருவருக்கொருவர் எவ்வளவோ தாரதம்யமிருந்தது. ஸிரீஷ் என்பவன் கள்ளங்கபடு அற்றவன்; சூதுவாது இல்லாதவன். மஹாபலசாலி, நல்ல திடகாத்ரன். யௌவன பருவத்திற்கேற்ற லௌந்தர்யமும் அவனிடம் பொருந்தியிருந்தது. நரேந்த்ரனுடைய ஒளிபொருந்திய தேககாந்தி அவன் கௌரவமான வம்சபாரம்பர்யத்தையுடைய உயர்குடியிற் பிறந்தவன் என்பதை அறிவித்தது. அவனுடைய அழகுவாய்ந்த சரீர அமைப்பும், ஸுகுமாரமான வடிவமும் வசீகரமான முகமும் பார்ப்பவர் கண்களைப் பறிப்பதாயிருந்தது. அவனுடைய விசாலமான நெற்றியின்மேற்புறத்தில் இரண்டு மயிர்ச்சுருள்கள் தவழ்ந்து கொண்டிருந்தன. அவனுடைய கரிய விழிகள் அவன் மணலில் இங்குமங்கும் ஓடித்திரியும்போது ஸந்தோஷத்துடன் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. இவ்வளவிருந்தும், அவன் எளிதில் அற்பத்துக்கும் கோபம் கொள்பவனாயிருந்தபடியால், அவன் முகமானது கோபாக்னியால் விகாரமடைந்தது. அச்சமயங்களில் அவனிலும் பலசாலியான அவனது தோழன் அவன் முகத்தில் விழிக்கமாட்டான்.

பிறப்பினாலாவது செல்வத்தினாலாவது உண்டாகக்கூடிய அநுகூலங்கள் யாவுமின்றிப் பிறந்த ஸிரீஷ் நல்ல புத்தியும், பொறுமையும், ஸ்திரமான ஊக்கமும் உடையவன். நரேந்த்ரனோ ஐச்வர்யத்திலேயே புரள்பவன்; அப்ரதேசமெங்கும் மிகவும் கௌரவிக்கப்பட்ட ப்ரஸித்தமான ஒரு பட்டத்துக்குப் பாத்யஸ்தன். தகப்பனிடமிருந்து பிள்ளைக்கு வம்சக்ரமமாய் வருவதாகிய கூரிய அறிவும் அவனுக்குப் பிறப்பினாலேயே அமைந்திருந்தது. ஆயினும் சாந்தம் என்னும் ஒரு நற்குணம் மாத்திரம் இராமையினால் இவ்வளவு பாக்கியங்களும் அவனுக்கு ஆற்றிற் கரைத்தபுளிபோல் பயனற்றுப் போயின. அவன் எடுத்த கார்யமெல்லாம் அபஜயமாகவும் துக்ககரமாகவுமே முடிந்தன. இது ஒரு பெருங்குறை.



அன்று ஸாயங்காலம் நக்ஷத்திர வெளிச்சத்தில் மணல்வீடு கட்டிக்கொண்டிருந்தபோது நரேந்த்ரனுக்கு நிச்சயமாகவே அபஜயமுண்டாயிற்று. ஸாதாரணமாக ஸாமார்த்தியமும் மதியூகம் உடையவனாயிருந்தபோதிலும், அருகில் மௌனமாய் நின்றுகொண்டிருந்த அந்த ஒற்றைநாடிப்பெண் தன் வேலையைக் கண்கொட்டாது பார்த்திருப்பதைக்கண்ட அவனுக்குக் கூச்சமுண்டாயிற்று. ஹேமலதை சாந்தமும் தயையுமே ஒன்றுசேர்ந்து உருவெடுத்துவந்த பன்னிரண்டு ப்ராயமுள்ள ஓர் இனிய பெண் ரத்னம். அப்பெண்மணியை நரேந்த்ரன் குழந்தைப் பருவமுதல் அறிவான். ஸ்திரமில்லாமல் க்ஷணத்துக்குக்ஷணம் மாறி மாறி உள்ளத்திலெழும் உணர்ச்சியால் தனக்கன்பான வஸ்துவினிடத்தில் அதிக ஆசை வைத்திருக்கும் ஒரு குழந்தையைப்போல் நரேந்த்ரன் ஹேமலதையை நேசித்து வந்தான். அநுதாபத்துடன் செவிகொடுத்துக் கேட்கும் அப்பெண்மணியினிடத்தில் நரேந்த்ரன் தன்னுடைய அந்தரங்க வருத்தங்களையும், தன் உள்ளத்திலெழும் பேராவாக்களையும் ஸவிஸ்தாரமாய் எடுத்துச் சொல்வான்.

அச்சிறுவனுக்குண்டான உணர்ச்சிகளும், அவன் பட்ட கஷ்டமும், கொண்டிருந்த ஆசையும் இத்தன்மையனவென்று அவ்விளங்கொடிக்குச் சிறிதும் புரியவில்லையாயினும், அவள் அவனிடத்தில் வேறெவருக்குமில்லாத அநுதாபங்கொண்டு அடிக்கடி அவனுக்கு ஆறுதல் கூறிவந்தாள். அவ்விருவரும் அந்தரங்கநேசத்தால் ஒருவருக்கொருவர் கட்டுண்டு வளர்ந்து வந்தார்கள். அந்நேசமும் வெளியாருக்குத் தெரியக்கூடாததாயிருந்தபடியால் இன்னும் தீவிரமாய்ப் போஷிக்கப் படுவதாயிற்று.

இவ்வாறு நேசமாய் வளர்ந்து வருகையில் ஸிரீஷ் என்பவன் இவர்களுக்கிடையில் வந்து தோன்றினான். ஹேமலதை அச்சிறுவனிடம் அதிக அன்புடையவள், இருவரும் விளையாட்டுத் தோழர்கள். ஸிரீஷ் அதைவிட அதிகமாய் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை, அவன் அதவா மிஞ்சிமிஞ்சி அதிகமாய் மனோராஜ்யம் செய்தாலுங்கூட அந்த ப்ரதேசத்தில் அப்போது ஸர்வாதிகாரியாயிருந்த அவன் பிதாவுக்கு ஏகபுத்ரியாகிய அந்தக் கட்டழகியை அடையவேண்டுமென்ற எண்ணம் அவனுடைய மனதில் ஒருபோதும் உதித்ததில்லை. பொறுமையும் கருணையும் பொருந்தியிருந்த அவனது கண்கள் ஒருவராலும் இன்னதென்று அநுமானிக்கமுடியாத ஆழ்ந்த சிந்தையும் தீர்க்காலோசனையும், உறுதிப்பாடும் அவனிடம் குடிகொண்டிருப்பதை உணர்த்தின. அவனுக்கும் ரஹஸ்யமான பேராவாக்கள் இருந்திருக்கலாம்; நாம் அறியோம்; ஆனால் அப்படி ஏதாவது இருந்திருந்தாலும் அவன் அவற்றை எக்காலத்தும் வெளியிட்டதில்லை.

இன்றிரவு தான் செய்யும் வேலையை ஹேமலதை இமைகொட்டாது கவனித்துவருவதைக்கண்டு தருப்தியடைந்து ஸிரீஷ் ஆத்ரப்படாமல் ஜாக்ரதையாய்த் தன் மணல் வீட்டைக் கட்டிக்கொண்டிருந்தான். நரேந்த்ரனுக்கோ எங்கும்பாத லஜ்ஜையுங் கூச்சமும் உண்டாக, அவன் ஸிரீஷினிடம் அஸூயைகொண்டான். தன்பொறாமையை வெளிக்குக் காண்பித்துக் கொள்ளாமல் அவன் ஸிரீஷையும் ஹேமலதையையும் அடிக்கடிப் பார்க்கலானான். ஸிரீஷின் வேலை முடிந்து விட்டது; ஒரு மணல் வீடு கட்டியாயிற்று. எப்போது லஜ்ஜையும் கூச்சமும் தோன்றிற்றோ, அத்தக்ஷணமே நரேந்த்ரனுடைய வேலை தடைபட்டுவிட்டது. ஸிரீஷ் கட்டிய சிறுவீடு மிகவும் அழகாய் அமையப்பெற்றிருப்பதைக்கண்டு ஸந்தோஷமடைந்து ஹேமலதை தன் மெல்லிய கைகளால் கரகோஷம் செய்தாள். அவள் அவ்வாறு கைகொட்டி ஸிரீஷின் வேலையை மெச்சியது நரேந்த்ரனுக்குத் தேள் கொட்டியதுபோல் சுருக்கெனத் தாக்கியது; அவனுடைய கைகள் நடுக்கங்கொண்டன; குறையாயிருந்த அவனுடைய சிறுவீடும் கீழே விழுந்து விட்டது.

கையாலாகாதவனுக்குக் கோபம் வருவதற்குக் கேட்பானேன்? நரேந்த்ரனுக்குக் கோபம் அஸாத்யமாய் வந்துவிட்டது. அவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. அப்போது ஹேமலதையுடன் கைகோத்துக் கொண்டு ஸிரீஷ் அவனிருந்தஇடம்வந்து, "ஏனப்பா, நரேந்த்ரா என்ன இன்று ஸாயங்காலம் ஒன்றையுஞ் செய்யக்காணோம். எங்கேபோயிற்று, நீ பெருமையாய்ப் பேசிக்கொண்ட உனது திறமை எல்லாம்?" என்று கேட்டான்.

கீழே விழுந்ததுபோக மிகுந்திருந்த பாகத்தைக் காலாலுதைத்துத் தள்ளிவிட்டு, "இன்றைக்கு நான் ஒன்றும் செய்யப் போகிறதில்லை," என்று அஸூயையுடன் பதில் சொன்னான்.

"அப்படியானால் என்னை ஏன் ஆற்றங்கரைக்கு வரச்சொன்னாய்? நீ ஒன்றும் செய்யாததற்கு இந்தப் பெண்ணை ஏன் இவ்வளவு நேரம் காக்கவைத்தாய்? இவ்வளவு நேரமாயும் நமது செல்வக்குழந்தை இன்னும் வீட்டுக்குவரவில்லையே யென்று ஹேமலதையின் தகப்பனார் அலைந்து கொண்டிருப்பாரே"

"அவளுடைய தகப்பனாருக்கு ஸமாதானம் சொல்ல எனக்குத் தெரியும். நீ உன் வேலையைப்பார். உனக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை."

"நரேந்த்ரா, உனது திறமைக் கேற்றவாறே இருக்கிறது உன்னுடைய குணமும், சாந்தமாய்ப் பதில் சொல்லக்கூடாதா? ஏன் இவ்வளவு ஆத்ரமும் அகங்காரமும்? உன் மணல் வீட்டுடனே போய்விட்டது போலிருக்கிறது உனது பொறுமையும்?"

"மணல் வீடு போனால் அதைவிட மேலானபொன் வீடு எனக்கு இருக்கிறது. தங்களுடைய தென்று ஸ்வதந்த்ரமாய்ச் சொல்லிக்கொள்ளக் கூடிய கூரை குடிசைகூட இல்லாத கனவான்களும் இருக்கிறார்களே!"

ஸிரீஷ் அக்காலத்தில், ஹேமலதையின் தந்தையை ஆச்ரயித்து ஜீவித்துவந்தபடியால், அவனை வேண்டு

மென்று அவமானம் பண்ணுவதற்காகவே நரேந்த்ரன் அவ்வாறு பேசினன். விரீஷுக்கு இதைக் கேட்டு மனம் ஸஹிக்கக்கூடவில்லை. ஆயினும் அவன் நரேந்த்ரனைப்போல் ஆத்ரக்காரனல்லன். தான் கோபத்தை அடக்கிக்கொண்டு விரீஷ் நரேந்த்ரனுடைய அந்தஸ்துக்கேற்ற மரியாதையுடன் விடையளித்தான்.

“நரேந்த்ரா, என்னுடைய அந்தஸ்தும் நானிருக்கும் ஸ்திதியும் எனக்கே நன்றாய்த் தெரியும். நீ அதை எடுத்துக்காட்ட வேண்டியது அநாவச்யம். என் அந்தஸ்து எனக்கோர் அவமானமில்லை. நீ உன் அந்தஸ்தை உள்ளவாறு அறிந்து உன் பாட்டனுடைய வம்சத்துக்கேற்ப யோக்யதையும், சாந்த குணமும் உடையவனாய் நடந்து கொள்ளவேண்டுமென்பதே எனது மனப்பூர்த்தியான கோரிக்கை.”

“என் பாட்டனைப் பற்றியும் மஹா ப்ரவித்தி பெற்ற அவருடைய வம்சத்தார்களைப்பற்றியும் உயர்வாய்ப் பேசியது உனது நற்குணத்தைக் காட்டுகின்றதப்பா. அவர் உயிருடனிருக்கும்போது கருடனைக் கண்ட ஸர்ப்பத்தைபோல் நடுங்கிக்கொண்டிருந்தவர்கள் இப்போது அவருடைய சொத்தையும், நாட்டையும் அபஹரிக்க ப்ரயத்னப்படுகிறார்கள் ஒருவேளை நீயும் அவர்களுடன் ஸம்பந்தப்பட்டவனாயிருக்கக்கூடும். யாருக்குத் தெரியும் உன்னுடைய மோசக்கருத்தும் சதியோசனையும் ?”

இவனுடைய வார்த்தைகளையெல்லாம் ஒருபொருட்டு செய்யயாமல் விரீஷ், “உனக்குத் தோன்றியதையெல்லாம் நீ சொல்லிக்கொண்டிரு. உன்னுடைய அசட்டு வார்த்தைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. ஹேமலதையின் தகப்பனார் இந்நேரம் அவளைக் காணமல் அலைந்துகொண்டிருப்பார். ஆகையால் அவளையழைத்துக்கொண்டு நான் வீடு செல்லுகிறேன்” என்றான்.

இதைக்கேட்டு ஹேமலதை விரீஷின் அருகே செல்வதைக் கண்டு சற்றும் பொறுதவனாய் நரேந்த்ரன், “அடே, நீ யார், அவளை அழைத்துப்போக? எத்தனை தினங்களாயிற்று, இந்த ‘கார்டியன்’ வேலை உனக்கு வந்து? யார் உனக்கு இந்த உத்யோகம் கொடுத்தது?” என்று கோபத்துடன் கேட்டான்.

“நரேந்த்ரா, நான் அவளுடைய ‘கார்டியன்’? என்று உன்னிடம் சொல்லிக்கொள்ள வரவில்லை. ஆனல் உன்னைப்போன்ற வெறியர்களிடம் அவளிருக்க நான் பார்க்கமாட்டேன்” என்றான் விரீஷ்.

“சீ, ஒதுங்கி நில். ஆற்றோரத்துக்கு அவளை அழைத்து வந்தவன் நான் ஆதலால் வீட்டிற்கு அழைத்துப்போகவேண்டியவனும் நான்தான்” என்று அம்மூர்க்கன் பதிலுரைத்தான்.

“மரியாதையாய் நடந்து கொள்ள உனக்குத் தெரியவில்லை. முதல்முதலில் மரியாதையுடன் நடக்கக் கற்றுக்கொள். அப்புறம் நீ அவளை அழைத்துப் போகலாம். இன்றைக்கு உனக்கு மூர்க்கத்தனம் மேல்பட்டிருக்கிறது. ஆகையால் மட்டு மரியாதை தெரியாத சிறு பிள்ளையினிடம் அவளை ஒப்புவித்தல் தகாது. இன்றிரவு அவளை நான்தான் வீட்டிற்கு அழைத்துப் போவேன்” என்றான் விரீஷ்.

“எட்டி நில்லடா, ஈன ஜாதிப் பயலே, அவள் பக்கத்தில் நிற்க உனக்கு என்ன யோக்யதையடா இருக்கிறது,” என்று நரேந்த்ரன் கூறியதைக் கேட்டவுடன் விரீஷுக்கு அடங்காத கோபம் ஜனித்துவிட்டது. ஆயினும் இந்த மூடப்பயலுடன் வார்த்தையாடுவதில் பயனில்லை என்றுணர்ந்து ஹேமலதையைக் கூட்டிக்கொண்டு விரீஷ் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

விரீஷ் ஹேமலதையின் இடுப்பைச்சுற்றிக் கை போட்டுக்கொண்டு போவதைக்கண்டு நரேந்த்ரனுடைய மனம் பொங்கிற்று. பித்தம் தலைக்கேறியவனாய் நரேந்த்ரன் விரீஷைப் பலமாய் அடிக்க முயன்றான் ஹேமலதை அச்சங்கொண்டு கதறினள். விரீஷ் நரேந்த்ரனைவிட அதிக பலசாலியென்று நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம். அவனை ஒரு நொடியில் அடக்கிவைக்கக்கூடிய வல்லமை யுடையவன். தன்னைத் தாக்கியவுடன் விரீஷ் அச்சிறுவனை இடுப்பில் கைபைக்கொடுத்துச் சடைபோல் மேலே தூக்கி மணலின்மேல் விட்டெறிந்தான். ஐயோ பாவம்! நரேந்த்ரனுக்குப் பலத்த காயம் பட்டது. எழுந்திருக்கச் சக்தியற்று மணலின்மீது இறைக்க இறைக்க விழுந்து கிடந்தான்.

அப்பெண்ணின் முன்னிலையில் தான் தோல்வியடைந்ததைப்பற்றி அதிக அவமானமும் மனவருத்தமும் உற்றவனாய் நரேந்த்ரன் ஒரு பெரிய கல்லையெடுத்து விரீஷின் தலையைப்பார்த்துப் பலமாய் எறிந்தான். அக்கல் விரீஷின் வலதுகண்ணிற்குச் சிறிது மேலேபட்டு அங்கே நன்றாய் த்வாரமாக்கிவிட்டது. ரத்தம் ஆறாய்ப் பெருகிறது விரீஷ் உட்கார்ந்து தன் துணியால் ரத்தத்தைத் தடுக்க முயன்றான். ஹேமலதை இவற்றையெல்லாம் மௌனமாய்ப் பார்த்து நின்றனள். மட்டுமரியாதை மீறி துர்நடத்தையிற் ப்ரவேசித்த அச்சிறுவனை வெறுப்புடன் உற்று நோக்கினள்; அவள் கண்களில் நீர் ததும்பிற்று. கண்களைத் துடைத்துக்கொண்டு நீரண்டைபோய்த் தன் சிற்றாடையின் நுனியை நன்றாய் நனைத்துக்கொண்டு வந்து விரீஷின் முகத்திலிருக்கும் ரத்தத்தைத் துடைத்தாள். விரீஷுக்குப் பலமான காயமில்லை; ஆயினும் அவன் எழுந்தபிறகுங்கூடக் காயத்திலிருந்து ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

“ஹேமலதே! வெகுநேரமாய்விட்டது. புறப்படு, வீட்டிற்குப் போகலாம்” என்று விரீஷ் சொன்னவுடன் ஹேமலதை புறப்பட்டுவிட்டாள். இருவரும் நரேந்த்ரனைத் திரும்பிகூடப் பாராமல், கையோடு கைகோத்துக்கொண்டு வீட்டுக்குப் போனர்கள்.

நன்றாய் இருட்டும் வரையில், அவன் அங்கே தனியாய்ப் பரிதாபமான நிலையிலிருந்தான். அப்போது என்னென்னவோ எண்ணங்களெல்லாம் அவன் மனதிலுதித்தன. மிக்க புராதனமானதும் ப்ரவித்தி



பெற்றதுமாகிய ஒரு வம்சத்தின் ஸந்ததியானகிய நரேந்த்ரன் தன்னுடைய மடமையினல் தான் நேசித்தவளிடத்தில் தன் மதிப்பைக் குறைத்துக்கொண்டான். பணிவுள்ள ஒரு பராதீனனகிய விரீஷ் அவனுடைய குற்றங்களைப் பெருந்தன்மையுடன் மன்னித்து அந்த அழகிய இளகிய இளங்கொடியாகிய ஹேமலதையின் உள்ளத்தைக் கவர்ந்தனன். யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதுபோலத்தானே இவ்விஷயமும்?

## அத்யாயம்-2

### பரஸ்பரம் வைரமுற்ற வம்சங்கள்

நமது கதை ஆரம்பிப்பதற்குமுன் சில வருஷங்களாக வீரநகரம்என்னும் பட்டணத்தில் ராஜ்யப்புரட்சிகள் அநேகமும், கோரமான யுத்தங்கள் பலவும் நடந்துகொண்டிருந்தன. நான்கு நூற்றாண்டுகளாக ஆப்கானிய அரசர்கள் வங்காளத்தில் சண்டை சச்சரவுகளின்றி அமைதியாய்ச் செங்கோல் செலுத்திவந்தனர். ஆனல் வட இந்தியாவில் அக்பர் சக்ரவர்த்தி மொகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்தபோது, வங்காளத்தில் ஆப்கானிய அரசாட்சி க்ஷீணதசை அடைய வாரம்பித்தது. 1574-ம் வருஷத்தில் பாட்ண நகரை அக்பர் சக்ரவர்த்தி நேரில் முற்றுகைபோட்டுக் கைப்பற்றிக்கொண்டனர்; அது முதற்கொண்டு, அபஜயம் இன்னதென்று எப்பொழுதும் அறிந்திராத மஹா பராக்ரமசாலிகளாகிய மொகலாயர்களுக்கும், பலமுறை தோல்வியடைந்தும் வீர தீரத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் கைவிடாத ஆப்கானியர்களுக்கும் வங்காளத்தில் வெகுகாலம் வரையில் போர் நடந்துகொண்டிருந்தது. ஹிந்து ஜமீன்தாரர்கள் தத்தம் க்ராமங்களையும் ஜாகீர்களையும் ஜமீன்களையும் அமைதியாய் ஆண்டு வந்தனர். ஆப்கானிய அரசர்களுக்குரிய கப்பங்களைக் கட்டிவிட்டு அவர்கள் தங்கள் ஜமீன்களில் ஸர்வாதிகாரங்களையும் செலுத்திவந்தனர். கள்வர், கொலைஞர் முதலிய குற்றவாளிகளைத் தாங்களே தண்டித்தார்கள். தங்களுடைய ந்யாயஸ்தலங்களிலேயே ஸிவில், க்ரிமினல் ஆகிய இரண்டுவித வ்யாஜ்யங்களையும் விசாரித்துத் தீர்ப்பு சொல்லி வந்தார்கள். குடிகளின் ஸுகதுக்கங்களைத் தங்களுடைய ஸுகதுக்கங்களாக எண்ணி, சண்டை சச்சரவு கலகம் யாதொன்றுமின்றி அவர்களைக் காப்பாற்றி வந்தனர். அவர்களுடைய ஸமஸ்தானங்களில் பல்வேறு பண்டிதர்களும், வித்வான்களும் கவிச்ரேஷ்டர்களும் ஒருகுறைவுமின்றிமனஸ்ஸந்துஷ்டியுடன் ஜீவித்துவந்தனர். ஸகலவிதமான கலைகளையும், நானவித கைத்தொழில்களையும், அதிக ஊக்கத்துடன் அபிவ்ருத்தி செய்தார்கள். தாங்கள் கப்பங்கட்டும் அரசர்களுக்கு ஆபத்து வந்த காலத்து உதவிபுரியவும், தங்களுடைய நாடுகளைப் பகைவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் போதுமான ஸைன்யங்களையும், யானை குதிரைகளையும், படகுகளையும் தயாராய் வைத்திருந்தனர்.

நமது கதையின் உற்பத்திஸ்தானமாகிய வீரநகரம் என்னும் பட்டணத்தில் பழய காலந்தொட்டுப் பெருமைவாய்ந்த ஒரு ஹிந்து ராஜவம்சஸ்தர்கள் ஆண்டு வந்தனர். அக்பரும் அவரது மொகலாய வீரர்களும் பாட்ணவைக் கைப்பற்றி வங்காளமெங்கும் பரவியிருந்தபோது, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினையாமல் கடைசி ஆப்கானிய அரசனகிய தாயுத்கான் பக்கமிருந்து போர்புரிந்தவர் வீரநகரம் ஜமீன்தாரர் ஒருவர்தான். மொகலாயரிடமிருந்தும் நகரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவராய் அவர் காட்டுக்கோடி மறைந்தபோது, அக்பரது சிறந்த தளகர்த்தர்களாகிய முநாயிம் என்பவரும் தோடர்மால் என்பவரும் வீரநகரத்து அரண்மனையைத் தமது ரதகஜதுரகபதாதிகளுடைய இருப்பிடமாக்கிக்கொண்டனர். தாயுத்கான் வங்காளத்தை அக்பருக்குக் கொடுத்துவிட்டு அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டு ஒரிஸ்ஸாவிற்குப்போய் விட்டான். அதற்கப்புறம்தான் வீரநகரம் ஜமீன்தார் தமது பட்டணத்திற்குத் திரும்பிவந்து, தோடர்மாலுக்கு மரியாதை செய்து, வங்காளத்து நூதன அதிபதிகளுக்குக் கீழ்ப்படிந்து கப்பங்கட்டுவதாய் ஒத்துக்கொண்டார்.

ஆனல், தாயுத்கானே ஸத்யத்திற்குக் கட்டுப்படாதவனாய், மொகலாயர்களிடமிருந்து வங்காளத்தைக் கைப்பற்றிக்கொண்டு வீரநகரம் ஜமீன்தாரரை ஸைந்யங்களுடன் தன் ஒத்தாசைக்கு வரும்படிக் கட்டளையிட்டான். தைர்யமுள்ள கிழஸிம்ஹமாகிய நமது ஜமீன்தாரர் அவனுடைய ஆக்ஞையை நிராகரித்து அவரிடமிருந்து வந்த தூதர்களுக்குப் பின்வருமாறு பதில்சொல்லி யனுப்பினர்: “எப்போது தம் ராஜ்யத்தைக் காப்பாற்ற வல்லமையற்ற வராயினரோ அப்பொழுதே அவர் அதை இழந்தவராகிறார். மேலும் அவர் வங்காளத்தை மொகலாயருக்கு விட்டுவிடுவதாக ஒப்புக்கொண்டு மாட்சிமைதங்கிய மஹாபெரிய அக்பருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். தம் சொல்லை மீறிநடப்பது க்ரீடம் புனைந்த ஓர் அரசருக்கு அழகல்ல. ராஜதர்மத்துக் கேற்றதன்று. அவ்வாறு, சொல்தவறுவது கேவலம் ஹீனமான கார்யம். எனது வம்சத்தில் யாவரும் அவ்வாறு இதுவரைக்கும் நம்பிக்கைத்ரோகம் புரிந்ததில்லை. ஆக்ராவின் மொகலாய சக்ரவர்த்திக்கு நான் செய்த வாக்குதத்தத்தை மீறி நடவேன். இவ்விஷயத்தை உமது எஜமானருக்குத் தெரிவியுங்கள்.”

இவ்வார்த்தைகள் தாயுத்கானுக்கு எட்டியவுடன் அவன் கோபாக்ராந்தனனன்; கண்கள் சிவந்தன. வீரநகரத்தை த்வம்ஸஞ்செய்து வயதுமுதிர்ந்த ஜமீன்தாரை விலங்கிட்டுக் கொண்டுவரும்படி அவன் ஒரு பெரிய சேனையை அனுப்பினன். ஆனல் வயோதிகராயும் தைர்யத்திலும் ஸாமர்த்யத்திலும் சற்றுங் குறைவுபடாத அந்த ஜமீன்தார் முன்னதாய்த் தேவையான பந்தோபஸ்தெல்லாஞ் செய்துவிட்டுப்

போருக்குச் சித்தமாயிருந்தார், நகரத்தைச் சுற்றியுள்ள செங்கல் சுவரும் கோட்டைகளும் பழுதுபார்க்கப்பட்டன. அவைகளின் மேற்புறத்தில் கூர்மையான முளைகள் நாட்டப்பட்டன. உருவின கத்திகளுடன் போர்வீரர்கள் இரவும் பகலும் ஓயாமல் நகரத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்தார்கள். அடர்ந்திருந்த புதர்களில் வில் அம்பு ஸஹிதமாய் வில்லாளிகள் மறைந்திருந்தனர். இவ்வளவு ஜாக்ரதையுடனிருந்தபடியால் திடீரெனப் பட்டணத்தில் நுழைந்து நாசஞ்செய்வதற்குப் பகைவர்களுக்கு இடமில்லாமற் போயிற்று. வெகு நாளாய் யுத்தமின்றி புஜங்கள் தினவு கொண்டிருக்கும் ஜமீன்தாரர் தம்மாற் கூடியமட்டும் பட்டணத்தைக் காப்பதாகவும், தவறினால் தம் முன்னோர்கள் ராஜ்யபாரம் புரிந்த இடத்திலேயே கடைசிவரைக்கும் போர்புரிந்து தம் உயிரை மாய்த்துக் கொள்வதாகவும் வீர சபதஞ் செய்தனர். அவரும் இதர ஸாமாந்ய யுத்தவீரர்களைப்போல் கத்தி கேடயங்களுடன் நகரப்ரதக்ஷணம் செய்துகொண்டிருந்தார்.

இவ்வகையான அற்பக்காப்புகள் எவ்வளவு காலந்தான் வீரநகரத்தைப் பகைவரிடமிருந்து ரக்ஷிக்குமென்பது தெய்வத்துக்குத்தான் வெளிச்சம். தாயுத்கானுடைய ஸைந்யமோ அதி ஸாமர்த்தியமாய்ப்பழக்கப்பட்டஸைந்யம். ஆனால் தாயுத்கானின் விரோதி ஜமீன்தாரர் ஒருவரே அன்று; ஜமீன்தாரரைவிட பராக்ரமசாலிகளாகிய பலர் அவனுடைய சத்ருக்கள். கானின் த்ரோகச் செயலைக் கேட்டு ராஜா தோடர்மால் மறுபடியும் வங்காளம் வந்து, அம்மாகாணத்து மொகலாய ராஜப்ரதிநிதியைத் துணைகொண்டு, ஆப்கானிய அரசனை ஆக்மஹல் என்னுமிடத்தில் முற்றுகைபோட்டனர். அவ்விடத்தில் நடந்த போரில் ஆப்கானியர்கள் அபஜயமடைந்து புறங்காட்டி ஓடிவிட்டார்கள். அந்த யுத்தம்தான் வங்காளத்தில் மொகலாயருக்கும் ஆப்கனியர்களுக்கும் நடந்த கடைசியுத்தம், தாயுத்கான் ராஜா தோடர்மால் அவர்களால் சிறைபிடிக்கப்பட்டு 1576-ம் வருஷத்தில் கொலையுண்டனன். ராஜாதோடர்மால் வீரநகரத்து ஜமீன்தாரருக்குப் பேட்டிகொடுத்து அவருடைய நன்றியறிவை மெச்சி, அவருக்குச் சக்ரவர்த்தியவர்கள் உத்திரவுபடிக்கு ஒரு புதிய ஸந்நதை யளித்தார்; அருகிலுள்ள தேவிபுரம் ஜமீனும் அவர் பார்வையில் ஒப்புவிக்கப்பட்டது. ஏனெனில் அதன் ஜமீன்தாரன் ஆப்கானியருடன்கூடி மொகலாயருக்கு எதிராகப் போர்புரிந்தான்; ஆப்கானியர் அபஜயமடைந்ததால் அவன் தன் நாட்டை இழக்க வேண்டியதாயிற்று. இவைகளெல்லாம் வீரநகரத்து ஜமீன்தாரர் போர்முகத்துக் காட்டிய ராஜபக்தியை அக்பர் வள்ளல் மெச்சினதற்கு அடையாளமாக அளிக்கப்பட்ட நன்கொடைகள். அவ்வயோதிகர் தன் புத்ரனையும் பௌத்ரனையும் தோடர்மால் முன்னிலையில் அழைத்துவந்து தாமும் தமது ஸந்ததியாரும் எந்நாளும் அக்பருக்கும் அவரது வம்சத்தாருக்கும் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குதத்தஞ் செய்தார், வீரநகரத்தார் அனைவரும் அத்தினத்தையொரு ஸுதினமாகக்கொண்டாடினார்கள்; கவிகளும் பண்டிதர்களும் அக்பர் மகிபரை வாயார வாழ்த்திக் குதூஹலித்தனம் நகரமுழுவதும். 'அக்பர் சக்ரவர்த்தி நீடூழிவாழ்க என்னும் கோஷமே பெரிதாயிருந்தது' அன்றிரவு அப்பட்டணமெல்லாம் தீபத்தோரணங்களால் பகல்போல் விளங்கிற்று. ராஜா தோடர்மாலும் அவரது நண்பர்களும் யானைமீதூர்ந்து நகர்வலம் வரும்போது வீதிகளின் இரு புறங்களினின்றும் கற்புடையமாதர்கள் புஷ்பத்தை வாரி இறைத்தனர். நகரத்தில் எங்கு பார்த்தாலும் அக்பர் தோடர்மால் முதலியவர்களைப்பற்றிய பேச்சேயொழிய வேறொரு வர்த்தமானமுமில்லை.

தேவிபுரம் ஜமீன் கிடைத்த சில மாஸங்களுக்கெல்லாம், பூரணவயதினராகிய வீரநகர ஜமீன்தாரர் காலமாய்விட்டனர். சில தினங்ககளுக்கெல்லாம் மகனும் தந்தையைத் தேடிச் சென்றான். இவர்களுக்குப்பின் பட்டத்துக்கு வரவேண்டிய ராஜகுமாரனுக்கு வயது இரண்டுதான் ஆயிற்று. அவன்தான் நாம் கங்கையாற்றங்கரையில் கண்ட நரேந்த்ரன், தகப்பன் பாட்மடன் இருவரும் ஏறக்குறைய ஏககாலத்தில் மரணமடைய நரேந்த்ரன் பால்யத்திலேயே இரண்டு ஜமீன்களுக்கும் அபரிமிதமான ஐச்வர்யத்துக்கும் அதிபதியானான்.

நெருங்கிய பந்துக்கள் இருவரையும் இழந்த நரேந்த்ரனுக்குத் தகுந்த போஷகர்கள் எவருமில்லை. அவனோ அதி பால்யன்; பால்மணம் மாறாக்குழந்தை. இவ்வயதில் அவன் இரண்டு பெரிய ஜமீன்களுக்கு எஜமானனாயினன். தேவிபுறத்துப் பூர்வ ஜமீன்தாரனோ ஸாமான்யன் அல்லன்; வலிய பகைவன். அவன் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாவது தன் ஜமீனைத் திரும்ப அடையவேண்டுமென்ற ப்ரதிக்ஞை செய்தனன். இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் நரேந்த்ரன் புயற்காற்றில் அகப்பட்ட கப்பல்போலிருந்தனன்.

வீரநகரமும் தேவிபுறமும் பல வருஷங்களாகப் பரஸ்பரம்வைரமுற்றவைகளாயிருந்தன. எத்தனையோ தலைமுறைகளாக இரண்டு ஜமீன்தாரர்களும் ஒருவரையொருவர் பகைத்துப் பரஸ்பர வைரிகளாய் மல்லிட்டுவந்தார்கள். அத்தி பூத்ததுபோல் எப்போதோ சிற்சில ஸமயங்களில் இரண்டு கக்ஷியாரும் தமக்குள் ஸம்பந்தம் செய்துகொண்டனர். ஆனால் கல்யாணப்பெண் பிறந்த அகத்தைவிட்டுப் புக்ககத்துக்குச்சென்றவுடன் தமது தகப்பனாரது வைரிகளை அறவும் மறந்து, கணவர்களது அபிப்ராயங்களையும் அவர்களுடைய விரோதங்களையும் முற்றிலுங் கைப்பற்றிவந்தனர். அவர்களுடைய வயிற்றிலுதித்த குழந்தைகளும் தங்கள் தாய்வீட்டாரை ஜன்மவிரோதிகளென்று எண்ணும்படிக்கற்பிக்கப்பட்டனர். ஆகையால் இவ்விதபரஸ்பர ரத்தஸம்பந்தம் ஏற்பட்டுங்கூட இரண்டு வம்சத்தினருக்கும் ஒற்றுமையும் ஸமாதானமும் உண்டாகாமலே இருந்துவிட்டது.

இரண்டு வீட்டாரும் மெய்காப்பாளர் என்னும் வீரர்களை வைத்திருந்தனர், ஒரு வீட்டார் மற்றொரு



வீட்டாரை ஸந்தித்துவிட்டால்போதும்; உடனே அடிதடி சண்டைதான். குறைந்தபக்ஷம் நாலைந்து தலைகள் உருண்டுவிடும். ஏரி குளங்களில் மீன்பிடிப்பதைப்பற்றியும் சந்தைசாவடி முதலியவைகளைப்பற்றியும் அடிக்கடி இருதிறத்தாருக்கும் விவாதம் உண்டாய்விடும் அவ்வித விவாதங்கள் உண்டாகுங் காலத்தில் முதலில் அடிதான்; பின்னால்தான் பேச்சு. கைகலந்து சண்டை செய்து யார் வெற்றியடைகிறார்களோ அவர்கள் கோர்டாருக்குப் பூர்த்தியாய் லஞ்சம்கொடுத்துத் தாங்கள் சண்டையில் அடைந்ததை ந்யாய ப்ரகாரம் தங்கள் வசப்படுத்திக்கொள்வார்கள். தலைமுறை தலைமுறையாய்ப் பரஸ்பரம் இவ்வளவுவைரமும் சண்டைசச்சரவுகளும்இருந்தபோதிலும் இருவரும் காலாகாலங்களில் ஒன்றுகூடி ஒருவர்க்கொருவர் மரியாதை செய்து வருவதில் மாத்ரம் இளைப்பதில்லை அக்காலத்து அவர்கள் அத்யந்தம் நேசர்களைப்போல் காணப்படுவார்கள்.

தேவிபுரத்து அதிபனாகிய நவகுமாரன் வீரநகரத்து ஜமீன்தாரின்மேல் தன் முன்னோர்கள் பரம்பரையாய் மிகவும் பயபக்தியுடன் அநுஷ்டிக்கப்பட்டுவரும் வைரியையும் விரோதத்தையும் கிஞ்சித்தேனும் அவமரியாதை செய்யாமல் பூரணமாய் மனதில் பாராட்டினான். ஸ்வபாவமாகவே அயலார் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினியிருப்பவனாகிய நவகுமாரன் வீரநகர ஜமீன்தாரரின் புகழும் நாமதேயமும் தினே தினே அதிகமாய்ப் பரவுவதைக் கண்டு மனம் பொறாதவனானான். தான் எண்ணிய எண்ணத்தை எவ்வித தந்த்ரத்தாலும், சதியோசனைகளாலும் சூழ்ச்சிகளாலும்நிறைவேற்றுவதில் சற்றும் பின்னடையாதவனாகிய தேவிபுரத்துத்தலைவன் தன்னுடைய எதிரியை எவ்விதத்திலாவது ஒழித்துவிடவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டான். சூதுவாது சிறிதுமின்றி ஆண்மையையும் பெருந்தன்மையையுமே அணிகலனாகக் கொண்ட நரேந்த்ரனது பாட்டனாரை ஜனங்கள் ஸ்வப்நத்திலும் வாழ்த்துவார்கள், அவர்கள் குடிகெடுக்கும் யோசனையும், அந்தரங்க சூழ்ச்சிகளுமே அவதாரமெடுத்தது போலிருக்கும். நவகுமாரனை நிந்திக்காத தினமே கிடையாது. நரேந்த்ரனது பாட்டனாரைக் காணும்போதெல்லாம் நவகுமாரன் கற்றோரைக்கண்ட கல்வியில்லாத பேதைபோல் தனது சிறுமையெல்லாம் தனது ஞாபகத்துக்கு வரப்பதுங்குவான்.

ஆகையால் ஆப்கானிய அரசனான தாயுத்கான் ஆக்மஹலுக்கருகில் மொகலாயருடன் கடைசிமுறைப் பெரும்போர் புரியும்படி சுற்றுபக்கத்து ஜமீன்தாரர்களைக் கூப்பிட வீரநகர ஜமீன்தாரர் அவனுடைய கட்டளையை மறுதலித்தபோது தன் எதிரிக்குத் தீங்கிழைத்துத் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றத் தக்க ஸமயம் வாய்த்ததெனக் கருதினான் நவகுமாரன். இத்தருணத்தில் தாயுத்கான் உதவிக்கழைத்த சுற்றுப்பக்கத்து ஜமீன்தார்களில் தானும் ஒருவனாயிருந்தது நவகுமாரனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஸந்தோஷமாயிருந்தது. உடனே வீரநகரத்துக்குச் சென்று கோட்டை கொத்தளங்களைத் தவிடுபொடியாக்கி நகரத்தைச் சூறையாடும்படித் தன் யோசனையை ஏவிவிட்டான். ஆனால் சில வேளைகளில் நாமொன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைப்பதில்லையா? ஆக்மஹல் போர்க்களத்தில் ராஜா தோடர்மால் வாகைமாலை சூடியது நவகுமாரனுக்கு அடிவயிற்றில் இடிவிழுந்தது போலாயிற்று, அவனுடைய மனோராஜ்யங்களெல்லாம் நாசமாயின அவனுடைய சொத்தெல்லாம் மாற்றான் வசப்பட்டது. அவனுடைய ஜமீனும் வீரநகரத்துடன் சேர்க்கப்பட்டது.

தான் குழந்தையாய்ப் பிறந்தது முதற்கொண்டு தோல்வியென்பது இன்னதென்றே அறியாதவன். அப்பேர்ப்பட்டவனுக்கு இப்போது தன் நாடுநகரங்களையும் வீடுவாசல்களையும் விட்டுப்போகவேண்டிய காலம்வந்தது. ஆயினும் அவன் தைர்யத்தை விடவில்லை, தன் கைகளைவிட்டுப்போன தன் சொத்துக்களை மீட்டுக்கொள்ள ஸமயம் எப்போது வாய்க்குமென்று பொறுமையுடன் ஸகல ப்ரயத்னங்களும் செய்துகொண்டிருந்தான்? அவனது ஆப்த நண்பனும், அமைச்சனுமாகிய **கோகிலதாஸ்** தன் எஜமானனுக்கு உண்டான கஷ்டங்களைத் தானும் பாகித்துக்கொண்டான்.

ஆதிமுதற்கொண்டே மொகலாயருக்கும் ஆப்கானியருக்கும் நடக்கும் யுத்தம் ஒருவிதமாக முடிவு பெறும் வரைக்கும் தாயுத்கான்பக்கம் சேரவேண்டாமென்று கோகிலதாஸ் பல முறையும் நவகுமாரனுக்குச் சொல்லிவந்தான். இதுவரைக்கும் அந்த சாதுர்ய புத்திமதி நவகுமாரன் புத்திக்குப் படவில்லை. கெட்டலைந்து குட்டிச்சுவரானபின்பே கோகிலதாஸ் தன்னிடம் அடிக்கடி இடித்துரைத்த யோசனையின் அருமையை அவன் உணர்ந்தான். எஜமானன் ஊழியன் இருவரும் அஞ்ஞாதவாஸம் செய்துவந்தனர். ராஜா தோடர்மால் வங்காளத்தினின்றும் போய்விட்ட கொஞ்சகாலத்துக்கெல்லாம் நரேந்த்ரனது தகப்பனும் பாட்டனும் பரகதியடைந்தாரென்று நாம் முன்னமே கூறியிருக்கிறோமல்லவா? அத்தருணமே ஏற்ற தருணமெனக் கருதினான் நவகுமாரன். ஆத்தரக்காரனுக்குப் புத்திமட்டு. நவகுமாரன் நாலாபக்கங்களிலும் சிதறியிருக்கும் தனது போர்வீரர்களை ஒன்று சேர்த்துத் தன் படைவலிமையாலேயே தேவிரம்ஜமீனைக் கைப்பற்றிக்கொண்டு, பிறகு ஸ்வர்ண புஷ்பத்தால் அரசனது ஸம்மதத்தைப் பெறலாமென்று எண்ணினான். ஆனால் அதிக தந்த்ரசாலியாகிய கோகிலதாஸ் தன் தலைவனிடம் சென்று, "ராஜா தோடர்மால் திரும்பவும் சீக்ரத்தில் வங்காளம் வருகிறார். வீரநகரத்து ராஜகுடும்பத்தை அவர் மறந்து விட்டாரென எண்ணவேண்டாம். வீரநகர ஜமீனுக்கு ந்யாயமாய்ப் பாத்யஸ்தனான ராஜகுமாரனுக்குத் தீங்கிழைப்பவர்களை அவர் எளிதில் விடார். ஆதலால் நாம் பொறுக்கவேண்டும். வேறுவிதமான ப்ரயத்னங்கள் செய்துபார்க்கவேண்

டும். 'பொறுத்தார் பூமியாள்வார், பொருதார்க் காடாள்வார்' என்பது தங்களுக்குத் தெரியாதா'' என்று சொல்லி முன்பின் யோசியாமல் ஆத்ரப்பட்டுச் செய்யப்புகும் இக்கார்யத்தினின்றும் தன் எஜமானனைத் தவிர்த்தான்.

அவர்களுடைய மனோபீஷ்டம் பூர்த்தியாகும் காலம் சீக்ரத்தில் வந்துவிட்டது. ராஜா தோடர்மால் வங்காளத்துக்கு மூன்ருவதுமுறை வந்தார். இந்த தடவை வந்தது ஆப்கானியருடன் சமர்புரிவதற்கன்று. அவர்களுடைய வல்லமையெல்லாம் முன்னமே ஒடுங்கிப் போய்விட்டது. வங்காளத்திலிருந்த மொகலாய சிற்றரசர்கள் கலகஞ்செய்யத் தொடங்கினர். அக்பரால் கைப்பற்றப்பட்ட வங்காள நாட்டில் இம்மொகலாயர் ஒவ்வொருவரும் சிறுசிறுஜமீன்கள்ஸொந்தத்தில் ஏற்படுத்திக்கொண்டனர். இதனுடன் நிற்காமல் தர்மப்ரபுவாகிய அக்பரையும் அவரது செங்கோலையும் அலக்ஷயஞ் செய்யத் தலைப்பட்டனர். இவர்களுடைய அதிகப்ரஸங்கத்தையெல்லாம் அரைநொடியில் அடக்கவல்லவர் அக்பர். தனது ராஜ்யத்தை வலிவான அஸ்திவாரம் போட்டு ஒன்றுசேர்த்து சாசுவதமாக நிலைநிறுத்தசேனைவலிவினும் பலத்த வல்லமையாயிருந்த தனது புத்திசாதுர்யத்தையும், பெருந்தன்மையையும், மனப்பூர்த்தியான அன்பையும் துணையாகக்கொண்டுஅவர் ஹிந்துக்களுக்கும்மகம்மதியர்களுக்கும் ஒரேவிதமான ஸ்வதந்திரங்களை யளித்து அவர்களிருவரையும் பக்ஷமாய்க் பாதுகாத்துவந்தார். இதற்குமுன் ஆப்கானியருடன் போர்புரிந்து இருமுறை வங்காளத்தைஅக்பருடைய ராஜ்யத்தில் சேர்த்தவராகிய தோடர்மால் என்னும் ஹிந்து தளகர்த்தரே இம்முறையும் மொகலாய சிற்றரசர்களது கொழுப்பையடக்க எண்ணிறந்த யுத்தவீரர்களுடன் வங்காளத்துக்கு வந்தார்.

தோடர்மால் இம்முறை வங்காளத்துக்குதளகர்த்தர் பதவியோடு வரவில்லை. அக்பர் அவரை வங்காளத்துக் கவர்னராக நியமித்தார். அவர் வங்காளத்துக்கு வந்து மாங்கீரில் தங்கியிருந்தார். ராஜத்ரோகிகளும், செய்ந்நன்றியை மறந்தவர்களுமாகிய மொகலாயர்கள் முப்பதாயிரம் குதிரையாட்களுடன்பகல்புரம் என்னுமிடத்தில் யுத்த ஸந்நத்தர்களாயிருந்தனர். மாங்கீரும் பகல்புரமும் தேவிபுரத்துக்கு அதிக ஸமீபத்திலுள்ளன. தன் பித்ரார்ஜ்ஜித சொத்தைத் தன்னிடமிருந்து தயை தாக்ஷண்யமின்றிப் பிடுங்கித் தன் பகைவனுக்களித்த தோடர்மாலுக்கும் அக்பருக்கும் எதிராக மொகலாய சிற்றரசர்களுடன் சேர்ந்துவிடலாமா என்று பலமாய் யோசித்தான் நவகுமாரன்.

" இத்தகைய புத்திஹீனமான கார்யம் நாம் ஒருகாலமுஞ் செய்யக்கூடாது. ராஜா தோடர்மாலுக்கு நிகரான யுத்தவீரரும் தளகர்த்தரும் இந்தியா முழுவதும் ஒருவருங்கிடையாது. அவரை மறுபடியும் நீர் எதிர்ப்பீராஞல், நீர் அழிவது நிச்சயம். நீரே உமது தலைமேல் மண்ணைப்போட்டுக்கொள்ளப் பார்க்கிறீர்கள். வேண்டாம் அந்த யோசனை. போர்முனையில் 'வினைவலியும் தன்வலியும் மாற்ருன் வலிம் துணைவலியும்' இத்தன்மையனவென்று ஆலோசிசிக்கவேண்டும். தீர ஆலோசிக்காமல் பதட்டமாய்க் கார்யம் செய்தால் பைத்யக்காரத்தனமாய் முடியும். நாம் தோடர்மால்பக்கம் சேர்ந்து அவருக்கு உதவிசெய்வோம். அவர் யுத்தத்தில் வெற்றிபெறுவது நிச்சயம். கலகமடங்கியபின் அவரை மன்னிப்பு கேட்டுக்கொள்வோம்'' என்று கூறினன் கோகிலதாஸ்.

" தாயுத்கான் பக்கமிருந்து அவருக்குவிரோதமாய்ப் போர்புரிந்து இன்னும் வருஷம் நாலாகவில்லை. இதற்குள் அவர் நமது பகையை மறந்துவிடுவாரோ? அவர் நம்மை மன்னிப்பாரென்று நீர் எண்ணுகிறீரா?''

" நீர் சொல்வது சுத்த தப்பு. ராஜா உயர்குடியிற்பிறந்த தர்மஸ்வரூபி. அவர் பெருந்தன்மையும் தயாளசிந்தையு முடையவர். கண்மூடித்தனமாய்ப் பழிக்குப் பழி வாங்கும் இயல்பினரல்லர். உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினையாமல் கடைசி ஆப்கானிய அரசனுடன் ஸத்யமாயப் போர்புரிந்த ஒருவன் அந்த ஆப்கானிய அரசன் நசித்துப் போனபின் இப்போது மொகலாய சக்ரவர்திக்குக் கீழ்படிந்து ஸத்யமாய் உழைப்பானுனல் அவர் அவனை மன்னித்து அவனுக்குத் தகுந்த மரியாதை செய்வார் என்பது நிச்சயம்'' என்று ஹிதோபதேசஞ் செய்தான் கோகிலதாஸ்.

கோகிலதாஸ்என்ன, இத்தனை நாள் பழகியும்என்னுடைய ஸ்வபாவ மறியாமல் பேசுகிறீர். என் தகப்பனர் பாட்டனுர் இவர்கள்பாரம்பரையாய் அனுபவித்துவந்த ஜமீனை எனக்கில்லாமற் செய்த அக்பருடைய சேனதிபதிக்கா நான் கீழ்ப்படிவேன்? அவரையா நான் மன்னிப்பு கேட்பேன்? என்ன, சற்றும் யோசனையின்றி பேசுகிறீர்? நீர் சொல்வது என்றைக்காவது நடக்குமா? நான் உயிருடனிருக்கும் வரையில் இது இயலாது.''

''நவகுமாரரே, உமதுமுன்னோர்கள் வங்காளத்தில் வெகு காலந்தொட்டு அரசு செய்துவந்த ஆப்கானியருக்குக் கீழ்ப்படிந்து நடந்தனரல்லவா? அவர்களுடைய ஸம்ப்ரதாயத்தினின்றும் தாங்கள் விலகலாமா? வங்காள நாட்டிற்குப் புதிய அதிபதிகளாகக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மன்னர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அல்லவா தர்மம்?''

''எனதரிய நண்பரே, உமதுசாதுர்ய புத்திமதியை நான் அங்கீகரிக்கின்றேன், நீர் சொல்வது ஒருவேளை ஸரியாக இருக்கக்கூடும். ஆனல் என் மனம் வேறு வழிசெல்கின்றது. மொகலாய சிற்றரசர்களுடன்கூடி அந்த இறுமாப்புள்ள ராஜாவின்மீது பழிக்குப்பழி வாங்கி அவரது கொழுப்பையடக்கிவைக்க என் மனம் துடிக்கின்றது.''

''இனி நான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. என் மனதுக்கு யுக்தமாய்ப் பட்டதை நான் தங்களிடம் ஒளிக்காமல் சொல்லிவிட்டேன். என் கடமையை நான் செய்தேன். இனி தங்கள் சித்தம். தங்களுக்கு எது யுசிதமாய்த் தோன்றுகிறதோ நவகுமாரரே,

(இதன் தொடர்ச்சி 269-ம் பக்கம்)



# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ப்ரஸித்தபெற்ற மாமரம்:**—பல்லாரி ஜில்லா அதோனிக்கு 4 மைல் தூரத்தில் உள்ள கொண்டாபுரம் என்னும் ஊரில் நூறுவருஷத்திற்கு மேற்பட்டுள்ள மாமரம் ஒன்றிருக்கிறது. அதன் அடி மரத்தின் சுற்றளவு 25 அடி. கிளைகள் 4, 5 அடி உயரத்தினின்றே பிரிந்திருக்கின்றன. மரத்தின் உயரம் 30 அடிக்கு மேலில்லை. மரமோ தழைத்து கிளைகள் நாலாபக்கங்களிலும் தாழவே படர்ந்து சென்று ஒரு ஏக்கர் நிலத்தைக் கவிந்து கொண்டிருக்கிறது. தனி மரம் தோப்பாமோ என்று ஆலமரம் விசாலமாய் படர்ந்து தழைத்திருப்பதைக் கேட்டிருக்கிரேம். இந்த மாமும் ஆலமரம்போல் தழைத்திருக்கிறது. இம்மரம் வருஷத்திற்கு 10,000 பழம் கொடுத்திருக்கின்றது. ஒவ்வொரு வருஷத்தில் 20000 அல்லது 30,000 பழங்களும் உண்டாயிருக்கின்றனவாம். அக்கம்பக்கத்தில் உள்ள கிழவர்கள் புத்தியறிந்து சென்றவருஷந்தான் காய்க்கவில்லையாம். நாலைந்து வருஷமாய் அந்த ப்ராந்தியத்தில் மழையில்லாததினலேயே அது காய்க்கவில்லையாம். நார், எரிப்பு இவையில்லாமல் இம்மரத்தின் பழங்களைப் போல் மிகவும் இனிமையாயுள்ள மாம்பழங்கள் இந்த தேசத்திலேயே கிடையாது. இம்மரத்தின் மாசூல் பங்குக்காக வ்யாஜ்யம் ஹைகோர்ட்வரையிலும் வந்திருக்கிறதாம். இத்தனைக்கும் இம்மரத்தின் ஒட்டாவது கன்றுகளாவது கிடையாவாம்.

**விலைபெற்ற அரண்மனை:**—''கிரீஸ்'' தேசத்திற்கு அடுத்தாற்போல் மேற்கே கார்பு என்றொரு தீவுண்டு. அது அத்தேசத்திற்குச் சொந்தமானது. அத்தீவிலேயே கெயிஸருக்குச் சொந்தமான ஒரு அரண்மனை இருக்கிறது. அந்த அரண்மனையானது மிகவும் விலையுயர்ந்த ஸலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதன் விலை சுமார் 40 லட்சம் பவுன், அதாவது 6 கோடி ரூபாய்க்குக் குறையாது. ஒரு சமயம் கிரீஸ் தேசமானது நேச ராஜ்யங்களுடன் சேர்ந்து விடுமாயின், அவ்வரண்மனையை கிரீஸ் தேச கவர்ன்மென்டார் பறிமுதல் செய்துவிடுவார்களோ வென்று கெயிஸருக்கு பீதிதோன்றி யிருக்கிறதாம். ஆகவே, அம்மாளிகையை ஸ்விட்ஸர்லாந்து தேசத்திலுள்ள ஒரு கம்பெனியாருக்கு மிகவும் குறைந்த விலைக்கு விற்றுவிடுவதாக கெயிஸர் உத்தேசித்திருக்கிருரென்று சொல்லப்படுகிறது.

(268-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு செய்யுங்கள். நான் என்றைக்கும் தங்கள் ஊழியன். பல நூற்றாண்டுகளாக என் பெரியோர் உழைத்து வந்தபடி நானும் தாங்கள் காலாலிட்ட கட்டளையைத் தலையால் வகித்து அதையே மனப்பூர்வமாய் நிறைவேற்ற சித்தமாயிருக்கிறேன்,'' என்று பணிவுடன் பதிலுரைத்தார் கோகிலதாஸ்.

ஆத்திரத்திலும் அவஸரத்திலும், தன் நண்பனும் அமைச்சனுமாகிய கோகிலதாஸ் கூறிய புத்திமதியை நிராகரித்தபோதிலும் நவகுமாரன் இரண்டொரு நாள் நன்ருய் ஆலோசனைசெய்து தன் மந்திரி சொல்லியதே ஸரியென்று தெளிந்தான். தனது அபரிமிதமான படைகளுடனும் த்ரவ்யத்துடனும் தன்னல் கூடியமட்டும் தோடர்மாலுக்கு உதவி செய்வதென்று தீர்மானித்தான். (இன்னும் வரும்)

Translation of
R. C. Dutts' 'The Slave Girl of Agra' Translated with the permision of the Publishers & Mr. A. C. Dutt.

**ஐரோப்பாவில் நெற் பயிர்.** சில ஐரோப்பிய தேசங்கள் இனிமேல் ஏராளமாய் நெற்பயிர் பயிர் செய்ய வேண்டுமென்று ஆசை கொண்டிருக்கின்றன. இப்பொழுது இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு வருஷா வருஷம் ஏராளமாய் அரிசி ஏற்றுமதியாகி வருகிறது. 1902,03-வது வருஷத்தில் இந்தியாவிலிருந்து 12,595,000 பவுன் மதிப்புள்ள அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 1912-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து அடியிற்கண்ட தேசங்களுக்கு ஏற்றுமதியான அரிசியின் மதிப்புப் பின் வருமாறு:

| | |
|---|---|
| ஜெர்மெனிக்கு | 25-லட்சம் பவுன் |
| ஹாலண்டுக்கு | 15-லட்சம் ,, |
| ஆஸ்ட்ரியாவுக்கு | 10,48000 ,, |
| யுனைடெட் கிங்கிடமுக்கு | 932000 ,, |
| பெல்ஜியத்துக்கு | 298984 ,, |
| பிராஞ்சுக்கு | 66030 ,, |
| ஸ்வீடனுக்கு | 21475 ,, |

1911-12-ம் வருஷத்தில் இந்தியாவில் 26100000 டன் நிறையுள்ள அரிசி உற்பத்தியா யிருக்கிறது.

**சென்ற வருஷம் நடந்த காங்கிரஸ் மகா சபையில் லார்ட் பெண்ட்லண்டும், ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும்:**—சென்ற டிஸம்பர் மீ 29உ 12-மணிக்கு கவர்னர் லார்ட் பெண்ட்லண்டும், கவுன்சில் மெம்பர் ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும் காங்கிரெஸ மகாசபைக்கு விஜயஞ்செய்து அதன் நடவடிக்கைகளை ஏறக்குறைய 'முக்கால்மணி நேரம் போல் கண்காணித்துக்கொண் டிருந்தார்கள். இந்த சமாசாரம் நமது நேயர்களுக்கும், காங்கிரெஸ் அபிமானிகளுக்கும், தேசாபிமானிகளுக்கும் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கும். காங்கிரெஸ் மகா சபை ஆரம்பமாய் இப்போது 29-வருஷங்க ளாகின்றன. இந்த 29-வருஷகாலமாய் எந்த மாகாண கவர்னரும் அந்த மகா சபைக்குச் சென்று அதனைக் கௌரவப்படுத்தினதில்லை. காங்கிரெஸ் பிரெஸிடெண்ட் ஆனரெபில் பாபு பூபேந்திரநாத் பாஸு லார்ட் பெண்ட்லண்டு அம்மகா சபைக்கு விஜயஞ் செய்து அதன் நடவடிக்கைகளை உற்சாகப் படுத்தினதற்காக அவருக்கு நன்றிசெலுத்தினது மன்றி லார்ட் பெண்ட்லண்ட் காங்கிரெஸுக்கு விஜயஞ் செய்தது எப்போதும் ஞாபகத்தில் வைக்கப்படு மென்றார். இந்த சம்ப

வம் இந்தியாவுக்குப் பிறந்துகொண்டிருக்கும் நற்கால அறிகுறிகளி லொன்றாகும்.

**இந்திய தீக்குச்சிகள்.**—இந்தியாவில் தீக்குச்சிகள் செய்யப்படும் தொழில் அபிவிருத்தி யடைந்து வருகிறதென்று வியாபார இலாகா அதிகாரிகள் குறிப்பிட் டிருக்கிறார்கள். மாண்டலேயிலும், ஐக்கிய மாகாணங்களிலும் செய்யப்பட்டு வரும் தீக்குச்சிகள், அன்னிய தேசங்களி லிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் தீக்குச்சிகளுக்கு எந்த விதத்திலும் கீழானவைகள் ஆகமாட்டாவென்று சொல்லப்படுகிறது. தீக்குச்சிகள் செய்யப்படுவதற்கு வேண்டிய மரங்கள் அடங்கிய காடுகள் இந்தியாவில் இருக்கின்றனவா என்ற பிரசினைகளும் அவைகள் சம்பந்தமான வேறு சில பிரசினைகளும் இன்னும் பரீட்சித்தறிந்து முடிக்கவேண்டிய காரியங்களா யிருக்கின்றன. மைசூர் சமஸ்தானத்தில் தீக்குச்சிகள் செய்யப் படுவதற்கு அனுகூலமான காடுகள் இருக்கின்றன வென்றும், அங்கிருக்கும் மரங்களால் சில தீக்குச்சிகள் செய்யப் பட்டதில் அவைகள்நிரம்ப சிலாக்கியமாயிருக்கின்றன வென்றும்,மைசூரில் தீக்குச்சித்தொழிற்சாலையொன்றுஏற்பட்டு நடத்திவரலாமென்றும்,திருவாங்கூரிலும் அவ்விதசாலையொன்று ஏற்படுத்தலாம் என்றும் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

**1915-ம் வருஷத்தில் கவர்ன்மெண்ட் விடுமுறை நாட்கள்**:—1915-ம் வருஷத்தில் அடியிற்கண்ட நாட்கள் கவர்ன்மெண்ட் விடுமுறை நாட்கள் என்று போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஜனவரி மாதம் 1ந்தேதி புதிய வருஷப்பிறப்பு தினம். ஜனவரி மாதம் 13-ந்தேதி 14-ந்தேதி பொங்கல். ஜனவரி மாதம் 28-ந்தேதி பாராவாபட், பிப்ரவரி மாதம் 12-ந்தேதி மஹா சிவ ராத்திரி. மார்ச்சு மாதம் 16-ந்தேதி தெலுங்கு புதிய வருஷப் பிறப்பு. ஏப்ரல் மாதம் 2-ந்தேதி குட்பிரைடே. (Good Friday) ஏப்ரல் மாதம் 3-ந்தேதி 4-ந்தேதி 5-ந்தேதி ஈஸ்டர் பண்டிகை, ஏப்ரல் மாதம் 13-ந்தேதி தமிழ் புதிய வருஷதினம். ஜூன் மாதம்—ராஜ சக்கரவர்த்தியின் பிறந்ததினம். (ராஜ சக்கரவர்த்தியின் பிறந்ததினம் கொண்டாடவேண்டிய நாள் இன்ன தேதி என்பதைப் பின்னால் தெரிவிக்கப்படும்.) ஆகஸ்ட் மாதம் 13-ந்தேதி ரம்ஜான். ஆகஸ்ட் மாதம் 24-ந்தேதி ஆவணி அவிட்டம். செப்டெம்பர் மாதம் 2-ந்தேதி ஸ்ரீஜயந்தி. அக்டோபர் மாதம் 8-ந்தேதி மஹாளய அமாவாசை, அக்டோபர் மாதம் 16-ந்தேதி ஆயுத பூஜை. அக்டோபர் மாதம் 20-ந்தேதி பக்ரீத் பண்டிகை. நவம்பர் மாதம் 6-ந்தேதி தீபாவளி பண்டிகை. நவம்பர் மாதம் 18-ந்தேதி மோஹரம் (10வது நாள்) டிசம்பர்மாதம் 17-ந்தேதி வைகுண்ட ஏகாதசி. டிசம்பர் மாதம் 25, 26, 27, 28, 29, 31-ந்தேதிகளில் கிறிஸ்துமஸ் பண்டிகை விடுமுறை.

**ரேமண்ட் பாயின்கேர்**:—இவர் ப்ரான்ஸ்தேச ப்ரஸிடெண்ட். 1869-ம் ஸூத்தில் பிறந்தவர். தேசாபிமானம், விடாமுயற்சி, ஆழ்ந்த ஆலோசனை எல்லாம் ஒருங்கு கூடியவர். மிக்க கல்விமான். வக்கீல் வேலை முதலில் பார்த்து வந்தவர். பத்ரிகாசிரியராகவும் இருந்துவந்தார். ப்ராஞ்ச் ஜனப்ரதிநிதி ஸபையில் ஒரு மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, வெகு ஸாமர்த்தியமாய் வேலைகளை நடத்திவந்தார். பிறகு படிப்படியாக முக்ய அரசாங்க உத்யோகங்களில் நியமிக்கப்படவும் ஸாமர்த்தியத்துடன் அவைகளை நிர்வஹித்து வந்தார். இவருக்கு அன்யதேச வ்யவஹாரங்கள் நன்றாய்த் தெரியவரும். 1913-ம்ஸூ முதற்கொண்டு ப்ராஞ்ச் ப்ரஸிடெண்டாக இருந்து வருகிறார்.

**ஆல்பர்ட்**:—இவர் பெல்ஜியநாட்டு அரசர். 1875ம் ஸூ பிறந்தவர். அடக்கம் சாந்தம் இவைகள் குடிகொண்டவர். ப்ரஜைகளிடத்தில் மிக்க அன்புபூண்டவர். தம் நாட்டின் விருத்தியையே மேற்கொண்டுள்ளவர். தமது ஸைன்யத்திற்குள் தாம் ஒரு ஸாதாரண போர்வீரனைப்போன்று அவர்கள் கஷ்டங்களைத் தாமும் அனுபவித்து அவர்களுக்கு உத்ஸாகமூட்டி ஜெர்மானிய வெள்ளத்தை வெகுதீரத்துடன் கடைசி வரையில் தடைசெய்த மஹாவீரர், நாட்டை யிழந்து தம் ஸைன்யத்தின் தலைவராய்நின்று போர்புரிந்து வருகிறார்.

**இரண்டாவது உவில்லியம்**—இவர்தான் கெய்ஸர் என்று சொல்லப்படும் ஜெர்மன் சக்ரவர்த்தி. 1859-ம் ஸூத்தில் பிறந்தவர். இளமை முதற்கொண்டே கல்விப்பயிற்சியும் யுத்தப்பயிற்சியும் இவருக்குக் கொடுக்கப்பட்டுவந்தது, எல்லா விஷயங்களிலும் நிபுணராம். மனச்சாட்சிக்கு விரோதமாக் நடப்பவரல்லர். தம் நாட்டிற்கும் ப்ரஜைகளுக்கும் மிக்க நன்மைகளைச் செய்யவேண்டுமென்ற ஆவல் இவருக்கு மிக்க அதிகமென்றும் குடிகளிடத்தில் நிரம்ப ப்ரீதியுடையவரென்றும் சொல்கிறார்கள். தாம் செய்து முடிக்கவேண்டியதைத் தவறாமல் செய்தேதீருவார். இவருடைய பொறுமையும், சுறுசுறுப்பும் மிகவும் சிலாகிக்கத்தக்கவை என்று சொல்கிறார்கள். ராஜ்ய தந்திரத்திலும் ராணுவ விஷயங்களிலும் மிக்க நிபுணராம். பலவித சாஸ்திரங்களின்மீதும், சாஸ்திர ஆராய்ச்சி செய்பவர்களின்மீதும் இவருக்கு மிக ப்ரியமாம். ஜெர்மனியின் நாவாய்களை விருத்திசெய்வதில் மிகவும் ஊக்கங்கொண்டுள்ளவராம். இவர் விக்டோரியா மஹாராணியின் பெண்வயிற்றுப் பேரன் என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம்.

**இரண்டாவது நிக்கோலஸ்**:—இவர் ரஷிய சக்ரவர்த்தி. 1868-ம்ஸூபிறந்தவர். மிகவும் படித்தவர். ப்ரபஞ்ச வர்த்தமானங்களை நன்றாயறிந்தவர். ஐரோப்பாவில் எங்கு யுத்தம் நேரிட்டுவிடுமோ எனக்கருதி அதைத் தடுக்கத் தம்மாலியன்றவரையில் முயன்றனராம், ஆனால் அது முடியாமற்போயிற்று. ஸாதாரணமாய் ரஷியாவைக் கொடுங்கோலரசென்றுசொல்லதுண்டு, இவர்காலத்தில்தான், மற்ற ராஜ்யங்களில் உள்ள ஜனப்ரதிநிதி ஸபைபோல ரஷியாவிலும் ட்யூமா என்னும் ஸபை ஸ்தாபிக்கப்பட்டது.


தயார்! தயார்!! தயார்!!!

உடனே ஆர்டர் செய்யுங்கள்

THE GREAT EUROPEAN WAR

(In Tamil)

PROFUSELY ILLUSTRATED

ஐரோப்பிய மஹா யுத்தம்



256 - பக்கங்கள் : 58 - ஆப்டோன் படங்கள் :

4 - தேச படங்கள் : மிகவும் அழகாய் அச்சிட்டு,

பயிண்டு செய்யப்பெற்றது. விலை ரூ. 1 8 0

'விவேக போதினி' சந்தாதார்க்கு மாத்திரம் விலை ரூ. 1 4 0

(விவர அட்டவணைக்கு அடுத்த பக்கம் பார்க்க.)

OFFICE OF THE REGISTRAR 2-MAR 1916 MADRAS

# பொருளடக்கம்


| அதிகாரம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | யுத்தமூலம் : பால்கன் தீபகல்பம்... | ... 1 |
| 2. | யுத்தமூலம் : மேல் ஐரோப்பிய நாடுகள் | ... 19 |
| 3. | முதல் ஸம்பவங்கள் | ... 41 |
| 4. | நகர்க் குழப்பங்கள் | ... 60 |
| 5. | படையெழுச்சி | ... 89 |
| 6. | லீயஜ் : பெல்ஜியரின் தீரம் | ... 103 |
| 7. | நாமூர் —ப்ரஸல்ஸ் | ... 118 |
| 8. | ஆண்ட்வெர்ப்—பெல்ஜியரின் யுக்தி | ... 130 |
| 9. | ஜெர்மானிய வெள்ளம்—பிரிடிஷ் ப்ரஞ்ச் அணை—ஜெர்மன் பின்போக்கு | ... 140 |
| 10. | கீழ் அயர்க்களம் | ... 158 |
| 11. | கடலில் நடக்கும் கடும்போர் | ... 177 |
| 12. | இந்தியாவும் யுத்தமும் | ... 195 |

அநுபந்தங்கள்

| அநுபந்தங்கள் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தரைப்படையின் அமைப்பு | ... 214 |
| 2. | கப்பற்படையின் அமைப்பு | ... 216 |
| 3. | ஆகாயப்படை | ... 220 |
| 4. | ஆயுதங்கள் முதலியன | ... 221 |
| 5. | ரெட்கிராஸ் சிகித்ஸா ஸங்கம் | ... 222 |
| 6. | நடுவுநிலைமையுள்ள தேசங்கள் | ... 223 |
| 7. | யுத்தமுனைக்குச்சென்றுள்ள இந்திய அரசர்கள் | 224 |
| 8. | யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட தேசாதிபதிகள் | 226 |
| 9. | ராஜ தந்திரிகள் | ... 230 |
| 10. | ஸேனாதிபதிகள் | ... 234 |
| 11 | கப்பற்படைத் தலைவர்கள் | ... 236 |
| 12. | முக்யராஜ்யங்களின் விஸ்தீரணம் ஜனத்தொகை | ... 239 |
| 13. | முக்ய ராஜ்யங்களின் ஸேனாபலம் | ... 240 |
| 14. | 1914-ம் வருஷாரம்பத்தில் உலகத்து முக்ய ராஜ்யங்களின் கப்பற்படைகள் | ... 242 |


## இப்புஸ்தகத்தில் சேர்ந்திருக்கும் சித்திரப்படங்கள்.


1. ஜ்யார்ஜ் சக்கரவர்த்தி
2. மிஸ்டர் பாயின்கேர், ப்ரான்ஸ் தேச ப்ரஸிடெ [ண்ட்
3. நிகொலஸ் ரஷ்ய சக்கரவர்த்தி
4. ஆல்பர்ட், பெல்ஜியம் அரசர்
5. யோஷி ஹீடோ, ஜப்பான் சக்கரவர்த்தி
6. ஸர் ஜான் ப்ரஞ்ச், இங்கிலீஷ் படைத்தலைவர்
7. மிஸ்டர் வில்ஸன், யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரஸி [டெண்ட்
8. வில்லியம் II : ஜர்மன் சக்கரவர்த்தி
9. ப்ரான்ஸிஸ் ஜோஸப், ஆஸ்ட்ரிய சக்கரவர்த்தி
10. ஜெனரல் ஜாப்ரே, ப்ரஞ்ச் படைத்தலைவர்
11. ஸர் ஜான் ஜெலிகோ, இங்கிலீஷ் கப்பற் படைத் தலைவர்
12. ஜெனரல் வான் க்ளுக், ஜெர்மன் தளகர்த்தர்
13. எர்ல் கிச்சனர், ப்ரிடிஷ் யுத்தமந்திரி
14. மிஸ்டர் ஆஸ்க்வித், இங்கிலீஷ் ப்ரதம மந்திரி
15. ஸர் எட்வர்ட் க்ரே, பிரிடிஷ் அந்நியதேச வ்யவஹார மந்திரி
16. உவின்ஸ்டன் சர்ச்சில், ப்ரிடிஷ் கப்பற்படை மந் [திரி
17. லார்ட்ஸ் மஹாஸபை, லண்டன்
18. யுத்தகளத்தில் காயமடைந்தவர்களுக்கு ஆஸ்பத்திரியாய் உபயோகப்படுத்தப்பட்ட ப்ரஸல்ஸ் அரண்மனை
19. பார்லிமெண்ட் மஹாஸபை, லண்டன்
20. காமன்ஸ் மஹாஸபை, லண்டன்
21. லக்ஸம்பர்க் நாட்டு மஹாராணி
22. ப்ரின்ஸ் லூயி ஆவ் பாட்டன்பெர்க்
23. ப்ரின்ஸ் லியோபோல்ட் ஆவ் பாட்டன்பெர்க்
24. ப்ரின்ஸ் மாரிஸ் ஆவ் பாட்டன்பெர்க்
25. ஸெயிண்ட் பால்ஸ் கதீட்ரல், லண்டன்
26. பரோடா மஹாராஜா
27. மைஸூர் மஹாராஜா
28. ஹைதராபாத் நிஜாம் அரசர்
29. பாடியாலா மஹாராஜா
30. பிகானேர் மஹாராஜா
31. மேஜர் ஜனரல் ஸர் ப்ரதாப்ஸிங்
32. மகமத் V : டர்க்கி ஸுல்தான்
33. அன்வர் பாஷா : டர்க்கி படைத்தலைவர்
34. லெப்டினெண்ட் ஜனரல் லீமான்
35. பெல்ஜியப் போர்வீரர்கள்
36. ஆட்டோ வான் பிஸ்மார்க்
37. வங்காளக் குதிரைவீரர்கள்
38. கௌண்ட் வான் மால்ட்க்
39. ஸ்காட்லண்ட் (ஹைலண்ட்) போ[illegible]ர்கள்
40. ரஷ்யப் போர்வீரர்கள்
41. இந்தியக் குதிரைவீரர்கள்
42. க்ருய்ஸர் எம்டன்
43. ப்ரஞ்ச் போர்க்கப்பல் டாண்டன்
44. ஏர்ல் ராபர்ட்ஸ்
45. டார்பீடோவைச் செலுத்தல்
46. ஹாலண்டிலுள்ள ஹேக் என்னும் நகரத்தில்
47. கடற் சுரங்கங்கள் (ஸமாதான ஸங்கம் கூடுமிடம்
48. க்ருப் முற்றுகை பீரங்கி
49. ட்யூக் ஆவ் வெல்லிங்டன்
50. லார்ட் நெல்ஸன்
51. ப்ரிடிஷ் ஆகாயக்கப்பல்
52. டவுன்ஹால், லோவேய்ன்
53. பெரிய முற்றுகை பீரங்கி
54. ராஜ குடும்பத்தார், யுத்தமுனைக்குச் செல்லும்
55. நெபோலியன் (ஸேனைகளைப் பார்வையிடுதல்
56. லார்ட் ஹார்டிஞ், இந்திய ராஜ ப்ரதிநிதி
57. கப்பற் பீரங்கிகள் வெடிதீர்த்தல்


### தேச படங்கள்


1. ஐரோப்பா கண்டம்
2. ப்ரிடிஷ் ஆதீன நாடுகள் 4கீழமர்க்களம்
3. மேலமர்க்களம்


விலாஸம்:—மானேஜர், 'விவேக போதினி' திருவல்லிக்கேணி, சென்னை



மார்க்காவர்த்தித பாதுகாபசுபதே꞉ அங்கஸ்ய கூர்ச்சாயதே.
கண்டூஷாம்பு நிஷேசனம் புரரிபோ꞉ திவ்யாபிஷேகாயதே ||

கிஞ்சித்பக்ஷித மாம்ஸசேஷகபளம் நவ்யோபஹாராயதே
பக்தி꞉ கிம் நகரோத் யஹோ வனசரோ பக்தாவ தம்ஸாயதே ||


# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்தஹூ தைமீ : 1915-ஹூ பிப்ரவரிமீ } பகுதி 8


## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 29. கருணையின் பெருமையும், பக்தர் சிறுமையும்

காதமா னதுகோடி கூடினின் றாலுமொரு
கல்வின்முன் னெதிர்நிற்கு மோ
கர்மமா னதுகோடி முன்னேசெய் தாலுநின்
கருணைப் பிரவாக வருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ
தமியனேற் கருட்டாக மோ
சற்றுமிலை யென்பதுவும் வெளியாச்சு வினையெலா
சங்கேத மாய்க் கூடியே (ஞ்
தேசமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராமல் யோக மார்க்க
சித்தியோ வரவில்லை சகசநிட் டைக்குமென்
சிந்தைக்கும் வெகுதூ ரநான்
ஏகமாய் நின்னோ டிருக்குநா ளெந்தநா
ளிந்நாளின் முற்று றாதோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே

(எங்குநிறைகின்றபொருள்—6)

### 30. ஸாதாரண நிலை

பாகத்தினுற் கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லை வேத
பாராய ணப்பனுவன் மூவர்செய் பனுவலது
பகரவோ விசையு மில்லை
யோகத்தி லேசிறிது முயலவென் ஶ்றேக
மொவ்வாதி வூண் வெறுத்தா
லுயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக
ளுபாயத்தி னுற்செய்ய வோ
மோகத்திலே சிறிது மொழியவிலை மெய்ஞ்ஞான
மோனத்தி னிற்க வென்றால்
முற்றாது பரிபாக சத்திக ளநேகநின்
மூதறிவி லேயெ ழுந்த
தாசத்தி லேவாய்க்கு மமிர்தப்ர வாகமே
தன்னந் தனிப்பெ ருமையே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

(சச்சிதானந்தசிவம்—3)

### 31. வைராக்ய ஸ்வரூபம்

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்ச மையோ
வின்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில் லையே
அனியாய மாயிந்த வுடலைநா னென்றவரு
மந்தகற் காளாக வோ
வாடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன் றோ
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்க ளேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாத தோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

(சச்சிதானந்தசிவம்—5)

## CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | திதி | இங் | தமிழ் | வார | ஆநந்தஸூ மாசிமூ · சாலிசகம் 1836 · கலியப்தம் 5015 · பசலி1324 · கொல்லம்-1090 · 1915ஸூ பிப்ரவரிமூ மார்ச்சுமூ |
|---|---|---|---|---|---|
| ரபு [ரா | 26 | 12 | 1 | வெ | திர 14-18, உத் 31-52, வித் 3-21, விய 54-26, வணி 14-18, ரா 12-39, அக 29-6, கும்பரவி 14-53, அவி 3, வக் [புத 35-0, அ 3, ரா மக 1, சேது 16-46, கும்ப கிரு சதுர்த்தி விஷ்ணுபதி மகாசிவராத்ரி விய கி, குன்யார்கம் |
| புசு | 27 | 13 | 2 | சனி | சது 11-37, திரு 31-11, வரி 53-35, சகு 11-37, ரா 12-9, பச்சாதஸ்தபுத 55-7, பூரா 1, சுக் 40-31, சர்வ அமா சிர [உப துவாபரயுகாதி |
| | 28 | 14 | 3 | ஞா | ● அமா 10-7, அவி 31-38 பரி 51-6, கர 10-7, ரா 21-0, பிண்டபிய இஷ்டி மழை 3-க்குள் (60-0, சங்-தரி |
| ரசெ | 29 | 15 | 4 | திங் | பிர 9-50 சத 33-16, சிவ 47-35, பவ 9-50, ரா 20-55, பால்குண சுத் அ 4, ர 32-25, திரு 4, செ 20-0 சத 2, குரு |
| புசு | 1 | 16 | 5 | செ | துதி 10-50, பூர 36-13, சித் 46-8, கௌ 10-50, தியா 0-0, அக 29-9, மகரவக்புத 1-0, பூரா 2 சுக் 49-20 |
| கு | 2 | 17 | 6 | புத | திரு 13-9, உத் 40-17, சா 45-30, கர 13-9, திவி 2-35, பச்சாதஸ்தகுரு 43-7 சது விரு |
| ர | 3 | 18 | 7 | வியா | சது 16-35, ரே 45-36, சுப 45-45, பத் 16-35, திவி 12-56, சத 1, ரவி 49-57, பஞ்சமி திதி பணிமிகுதி |
| செசு | 4 | 19 | 8 | வெ | பஞ் 20-59, அசு 51-18, சுப 46-33, பா 20-59, ரா 11-11, அவி 1, செ 36-0, பூரா 3 சுக் 57-40, அதிதி [திதி சஉ |
| பு | 5 | 20 | 9 | சனி | சஷ் 25-56, பர 57-40, பிரா 47-46, தை 25-56, திவி 17-51, அக 29-11, மீரு 44-7, அ 1, வக்புத 28-54, சஷ்டி |
| | 6 | 21 | 10 | ஞா | சப் 31-12, ✻ கார் 60-0 மா 49-6, வணி 31-12, ரா 1-43, சப் விரு கார் உப |
| ர | 7 | 22 | 11 | திங் | அஷ் 36-19, கார் 4-8, வை 50-15, பத் 3-45, ரா 19-19, சத 2, ரவி 7-56, வை சிரா |
| செசு | 8 | 23 | 12 | செ | நவ 40-52, ரோ 10-13, விஷ் 50-52, பா 8-35, திவி 25-38, அவி 2, செ 52-9, பூரா 4, சுக் 6-17 |
| | 9 | 24 | 13 | புத | தச 44-37, மிரு 15-34, பிரி 50-57, தை 12-44, ரா 8-49, அக 29-20, மழை 8-க்குள் |
| ரச | 10 | 25 | 14 | வியா | ஏகா 47-17, திரு 20-3, ஆயு 50-2, வணி 15-57, ரா 22-22, சத 3, ரவி 26-20, சனிவக்ரசிவ 47-7, சர்வஏகா |
| புசு | 11 | 26 | 15 | வெ | துவா 48-41, புன 23-22, சௌ 48-13, பவ 17-59, ரா 14-22, திரு 4, வக்புத 50 0, உத் 1, சுக் 8-38, கரிநாள் |
| புகு | 12 | 27 | 16 | சனி | திர 48-48, பூச 25-27, சோ 45-23, கௌ 17-44, ரா 28-25, பிராகுதயபுத 55-7, சத 3, குரு [7-30, சனிப்பிரதோ கரிநாள் ரவி 44-43, கும்பசெ 9-30, கரிநாள் |
| ரசெ | 13 | 28 | 17 | ஞா | சது 47-35, ஆயி 26-17, அதி 41-35, கர 18-11, சே 1-54, ரா 26-38, அக 29-29 சத 4 |
| சு | 14 | 1 | 18 | திங் | ○ பௌ 45-13, மக 25-57, சுக 36-51, பத் 16-24, சே 0-7, ரா 16-0, மகரசுக் 8-38, மாசி [மகம் காமதகனம் பிரம்மஸாம |
| | 15 | 2 | 19 | செ | பிர 41-50, பூர 24-34, திரு 31-19, பா 13-31, ரா 12-21, பால்குணபகு இஷ்டி வஸந்தாதி |
| ர | 16 | 3 | 20 | புத | துதி 37-33, உத் 22-16, குல 25-3, தை 9-41, ரா 12-40, பூர 1, ரவி 59-23, மழை 5-க்கு |
| செபு சு] | 17 | 4 | 21 | வியா | திரு 32-36, ஹஸ் 19-14, கண் 18-12, வணி 5-4, ரா 8-31, அக 29-32, அவி 4, செ 30-0 [புதவக்கிவ 55-7, உத் 3, சுக் 8-38, கல்பாதி சங் சது |
| பு | 18 | 5 | 22 | வெ | சது 27-10, சித் 15-41, விர் 10-56, பா 27-10, திவி 28-46, அவி 1, ரிசுபத 24-20, சதுர்த்தி |
| | 19 | 6 | 23 | சனி | பஞ் 21-26, சுவா 11-46, துரு 3-22, வியா 52-17, தை 21-26, திவி 24-49, திதித்வயம் |
| ரசு | 20 | 7 | 24 | ஞா | சஷ் 15-36, விசா 7-43, ஹா 47-55, வணி 15-36, திவி 17-3, புர 2, ரவி 23-9, உத் 4, சுக் 8-38, சப்தமிதிதி |
| செ | 21 | 8 | 25 | திங் | சப் 9-48, அனு 3-42, சே 56-17, வஜ 40-22, பவ 9-48, திவி 16-50, அக 29-38, சத 1, செ 46-0 காளாஷ்டமி திஸ் |
| பு] | 22 | 9 | 26 | செ | அஷ் 4-13, நவ 54-49, மூல 56-29, வித் 33-7, கௌ 4-13, திவி 18-49, ரா 22-51, அவி 2, பு 20-0 (ரோஷ்டகா |
| ரசெ | 23 | 10 | 27 | புத | தச 54-33, பூரா 53-43, விய 26-18, வணி 26-47, திவி 19-23, பூர 3, ரவி 43 17, பிராகுதயசெ 47-7, திரு 1, சுக் |
| | 24 | 11 | 28 | வியா | ஏகா 50-56, உத் 51-48, வரி 20-3, பவ 22-44, திவி 13-25, சர்வஏகா மழை 9-க்குள் (8-38, விய சிரா |
| பு | 25 | 12 | 29 | வெ | துவா 48-23, திரு 50-51, பரி 14-32, கௌ 19-39, திவி 1-38, அக 29-45 கும்பபுத 49-0, சிர உப சிரவணத்துவா [தெதி (சனிப்பிரதோஷம் |
| செசு | 26 | 13 | 30 | சனி | திர 46-42, அவி 51-0, சிவ 9-50, கர 17-32, திவி 0-52, சத 2, செ 40 திரு 2, சுக் 6-4, கும்ப கிரு திரயோதிதி |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | |
| ர-கு ரா-பு | 5-ம-வக்-பு 17-கு-செ 18-மக சு 29-கும்-பு | | |
| செ | | | கே |
| சுக் | | | |



# விவேக போதினி

தொ. 7] ஆனந்தஸூ தைமீ: [பகுதி. 8

## மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

### 3. பக்தியோகம் (தொடர்ச்சி)

### கண்ணப்பநாயனுர் சரித்திரம்

வைதிக பக்தியோக ஒழுங்கு இவ்வாறு உள்ளபடி ஹநுமாரிடம் அமைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டியாகி விட்டது. இந்த ஒழுங்குகளுக்குச் சற்றுமாறாக உள்ளது போலக் காணப்படும் தென்னாட்டில் வழங்கி வரும் பக்தர்கள் சரித்திரங்களிலிருந்து கண்ணப்ப நாயனாரை உதாரணமாகக் காட்டி அவர் பக்தி ஒழுங்கு மூலமாக, பக்தியோகமாகி மோக்ஷ வழியில் பலிக்கவேண்டுமாகில் வைதிக ஒழுங்கு தவறலாகாது எவ்விதத்திலும் என்பதைஎடுத்துவிளக்குவோம். வேதக்கோட்பாடுகளான வர்ணாச்ரம ஸ்திரீ புருஷ தர்மம் இவைகளை ஸரிவர எல்லோரும் அனுஷ்டித்து ஈடேறுவதற்காக நமது பெரியோர்கள் கண்டு தெளிந்து வெளியிட்ட ஸ்மிருதிகள் இவைகளுக்கு எள்ளளவேனும் முரணாக இருக்கும் பக்தி வீண்மனக் கொதிப்பு மாத்திரமாகத் தான் முடியும் என்பதை நந்தனார் சரித்திரம் எப்படி வெளிப்படையாகக் காட்டுமோ அவ்வாறு இக்கண்ணப்பர் கதையும் பார்ப்போருக்கு ஒளியாது காட்டும் என்பதை விளக்கப் புகுவோம். நமது சாஸ்திர ரஹஸ்யம் உணராது, பக்தியைத் துதிக்கமாத்திரம் கருத்துக்கொண்டெழுந்த வாக்கியங்களில் காணப்படும் மற்றைய கர்ம ஞானத் தாழ்வைக்கண்டு குரங்குப் பிடியாக அவைகளைக் கைவிட்டு பக்தியைப் பிடிக்கப்போய், வீணாக பக்தியும் அகப்படாது தன்னையும் பிறரையும் கெடுத்துக் கொண்ட பாபத்திற்கு ஆளாகாமலிருக்க முயலுவதில் இக்கதை உபயோகப்படலாம்.

பக்தி யோகமாவதற்கு கர்மம், ஞானம் இவைகளோடு ஸம்பந்தமில்லாதிருக்க இடமில்லையாயினும், ராஜயோகம் பலிக்கக்கூடிய மேற்பிறப்பில் கொண்டுசேர்க்க எல்லா வருணத்தாருக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கும் உபயோகமாதலால், அது விரிந்த அல்லது சுருங்கிய கர்மஞானங்களுடன் ஸம்பந்தப்பட்டுக் காணப்படும். விரிந்த ஞான ஸம்பந்தத்துடனிருப்பது அடுத்த படியில்தான்: சுருங்கிய ஞான கர்மங்களோடு பொருந்தி ஸாதாரணமாகக் காணப்படும், அப்பாலியின் வருணம் தாழத்தாழ. இது கொண்டு சில ஆத்திரக்காரர் பக்தி தனித்தே இருந்து மோக்ஷம் சேர்க்கும் என்பர். இதைத் தடுக்கவந்த சரித்திரங்களுள் நம் கண்ணப்பர் கதை ஒன்று. இவர் ஜாதியில் வேடராகப் பிறந்தவர். ஈசன் விஷய ஸம்பந்தம் ஏற்படும் வரையில் இவர் தமது கர்மா கடவுள் வழிபாடு இவைகளையெல்லாம் தம் குலத்திற்கேற்பச்செய்துவந்தவரே: ஒன்றையும் அனுதாவாய்விட்டவரல்லர். இவர் ஒழுங்கானதொழில்களெல்லாம் ஒருவகைப்பட்டுக் கடவுளிடமே தீவ்ரபக்தியுடன் பாய்வதற்கு ஒரு நிமித்த காரணமாக ஏற்பட்ட பன்றி வேட்டையில் வெகுதூரம் தம் தோழரிருவருடன் சென்று களைத்து, பன்றியும் அகப்பட்டுவிட்டபடியால், அருகாமையிலுள்ள 'பொன்முகலி'

ஆற்றின் கரையிலுள்ள சோலையில் தங்கி இளைப்பாறி ஆகாரம் வாட்டியுண்டு போவதாகத் தீர்மானம் அவர்களுள் பிறந்தது. இப்படி எண்ணி ஆற்றை அணுகிப்போகையில் எதிரில் மலைச்சிகரத்தில் ஒரு கோயில் போலத் தென்பட அதனிடம் போவோம் என்று நாயனார் கூறியதும் கூடவந்த தோழன் நாணனிடமிருந்து ஒரு அருள் வாக்கு இத் திண்ணனார் விஷயமாகப் பிறந்தது.

நாணனே தோன்றுங் குன்றி
    னண்ணுவே மென்ன நாணன்
காண நீ போதி னல்ல
    காட்சியே காணுமிந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி
    மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவ
    ரிருப்பர்கும் பிடலா மென்றான்.

இது பசுமரத்தாணிபோல, தன் வேடர்குல தர்மத்தின்படியும் கடவுள் கட்டுப்பாட்டின்படியும் நடந்துவந்த திண்ணனார் செவிகளுள்ளும் மனதுள்ளும் ஊடுருவிச் சென்றது. வழிநடந்து களைத்ததருணத்தில் ஒரு ஆராமை உண்டாயிற்று:—

ஆவதென் னிதனைக் கண்டிங்
    கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலு
    மாசையும் பொங்கி மேன் மேன்
மேவிய நெஞ்சும் வேறோர்
    விருப்புற விரையா நிற்குந்
தேவாங் கிருப்ப தெங்கே
    போகென்றார் திண்ணனார்தாம்.

இவ்வாறு திண்ணனாருக்கு ஒருவாறு ஜாதி தர்மப்படி முன்னரே இருந்த ஒழுங்கு தவறு நடத்தை, ஈசனைப்பற்றிய ஒரு ஸ்தூலபாவம், எல்லாம் இத்தருணத்தில் ஒருவாறு முதிர, மூடமாக அம்மலைமேல் தமது நாதன் உள்ளார் போய்க்காணவேண்டும் என்ற பரபரப்பு உண்டாகிவிட்டது. ஆற்றங்கரை சேர்வதும் பன்றியை ஓரிடத்தி லெறிவதும், தீமூட்ட ஒருவனை ஏவுவதும் அரை நொடிவேலை போல முடிக்கப்பட, திண்ணனார் மற்றொரு தோழனோடு தன் மனம் கனிந்துருக நாதனைக் காணப்புறப்பட்டார் மலை உச்சியை நோக்கி. நடு மத்தியான ஸமயம். எல்லாம் நடு நிசியில் எப்படி ஒடுங்கி நிற்குமோ அப்படியே இருந்தது. 'நம் நாதனும் இவ்விடம் தனியாகவா இருக்கிறார்: இதுவரை இவரை அணுகி வாராது ஸாதாரணமாக இவர் கட்டளைப்படி மாத்திரம் நடந்து அனாதாவாயிருந்து விட்டோமே, இவரிடமே இருந்து இவர் கட்டளைப்படி நடப்பது எவ்வளவு சிறந்ததாக இருக்கும், இனி அப்படி இருக்கவே கூடாது,' என்ற எண்ணம் கதித்தெழுந்து மனதைக் கொள்ளை கொள்ள 'கருணையங்கடலைக் காணலாம் கிரி மேல்' என்ற ஆராமையுடன் நடப்ப துணராது நடந்து செல்வார் திண்ணனார் என்னப்பனை நோக்கி.

நாணனு மன்பு முன்பு
    நளிர்வரை யேறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும்
    பெருகு சோபான மேறி
ஆணையாஞ் சிவத்தைச் சார
    வணைபவர் போல வையர்
நீணிலை மலையை யேறி
    நேர்படச் செல்லும் போதில்

திங்கள்சேர் சடையார் தம்மை
    சென்றவர் காணா முன்னே
* * *
பொருவிலன் புருவ மானார், இத் திண்ணனார்.

இவருக்கு அங்கு விக்ரஹபாவனை தோற்றவே இல்லை: தம்மை இதுவரை ஸரிவர நடத்தி இந்த அன்பு நிலைகொண்டு சேர்த்த தோன்றாத்துணையான கருணைக்கடலான காப்போனாகத்தான் அவருக்குப்பட்டது. இவ்விடத்தில் ஈசனுக்கும் அவருக்கும் ஒருவித ஸம்பந்தம் ஏற்பட்டது: மற்றைய அங்கங்கள் முன்னரே ஒருவாறு அமைந்திருப்பினும் அவைகளெல்லாம் இதனால் திடப்பட்டு விட்டன. சற்று பரவசராக இருந்தார். (பெரிய புராணச் செய்யுள்கள் 105 முதல் 108 முடியப் பார்க்க) இது முடிந்ததும், பக்தி வெளிப்படத் தொடங்கியது. இதுவரை ஈசன் கட்டளைப்படி நடந்துவந்த திண்ணனாருக்கு, ஈசனைக் கண்டு எதிர் நிற்குங்கால் செய்வது இன்னது என்று புலப்படவில்லை வழக்கமில்லாததால். அருகி லிருந்த நாணன் தான் கண்டறிந்த பூஜையை:—

வன்றிற லுந்தையோடு
    மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக்
    குளிர்ந்த நீ ரிவரை யாட்டி
ஒன்றிய விலைப்பூச் சூட்டி
    யூட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தானின்று
    மிவன்செய்த தாகு மென்றான்.

இதுவும் கண்ணப்பருக்கு ஒரு உபதேசமாயது ஈச்வராராதன வழியில்.

உண்ணிறைந் தெழுந்த தேனு
    மொழிவின்றி யாரா வன்பிற்
றிண்ணனார் திருக்கா ளத்தி
    நாயனார்க் கினிய செய்கை
எண்ணிய விவைகொ லாமென்
    றிதுகடைப் பிடித்துக் கொண்டவ்
வண்ணலைப் பிரிய மாட்டா
    தளவிலா தரவு நீட.

கொஞ்சநாழிகை வரையில் ஈசனுடனேயே இணைபிரியாதிருந்துவிடவேண்டும் என்ற ஆராமையும் அவரை அவர் கட்டளைப்படிப் பிரியப்படுத்தவேண்டும் என்ற ஆராமையும் திண்ணனார் மனதைப்பற்றி இழுக்கத் தத்தளித்தார் திண்ணனார் (111, 112, 113, பெரியபுராணச்



செய்யுள்களைப் பார்க்க). இங்கு திண்ணனார் ஆண்டவனை விட்டுப் பிரிந்துபோய் வழிபாடுகளுக்குத் தயார் செய்வதே,பக்திதனித்திருக்க இடமில்லை, ஈசன் நேரான வழிபாடும் அது போன்ற அவன் கட்டளைப்படி நடப்பதாகிய வழிபாட்டின் ரூபாந்தரமும் கூடித்தானிருக்கமுடியும் என்பதைக் காட்டும். திண்ணனார் வேடர்ஜாதியாதலால் ஈசன் வழிபாட்டிற்காகச் செய்யவேண்டிய தொழில்களைவிட வேறு முன்பின் அந்த ஈசனையே வழிபடுவதாகிய கர்மானுஷ்டான ஒழுங்கு அவருக்குஅதிகமில்லை. ஆதலால்தான் திண்ணனாரது கடவுள் வழிபாடு ஈச்வரபூஜை தன்னை மறந்து அவர் திரு உருவத்திடம் காத்துக் கிடத்தலுமேயாக இருந்தது. இந்த பக்திக்கு திண்ணனார் பிறவி விசேஷத்தால் ஆதாரம் அதிகம் வேண்டிய தில்லையாயினும், ஆதாரமில்லாது இது யோகமே ஆகாது என்பதைக் காட்டவே இந்த 'சரித்திரத்தில் சிவகேசரியார் என்ற அக்கோயில் அர்ச்சகர் ஒருவர் அமைந்துள்ளார். அவர் வழிபாட்டை நாணன் வாக்கில் சேக்கிழார் கூறியதை முன்னர் காட்டியாகிவிட்டது. இந்த விஷயத்தை மேலும் சேக்கிழார் 130 முதல் 140-ம் செய்யுள்முடிய விவரிக்கிறார். ஆகவே குலத்திற்கேற்ற கர்மங்களை முன்னிட்டே பக்தி இருத்தல்வேண்டும்: அதற்கு மாறாக பக்தி குறுக்கிட நியாயமே இல்லை என்பது வெளிப்படை.

திண்ணனாரே தம் குலத்திற்கு ஏற்ப, சிவகேசரியார் செய்த ஈசன் விரும்பும் தொழில்களை ஏற்றுச் செய்து அன்று முதல் ஒருவழி நின்று, தன்னப்பன் ஈசன் என்ற அன்பு மேலீட்டால் வழிபட்டு எதிரே காவலிருக்கத் தொடங்கிவிட்டார். சேக்கிழார் மனமுருகிக் கூறுவார் இப்பூஜை வைபவத்தை 110-ம் செய்யுள்முதல் 128-ம் செய்யுள்வரை. இந்த அவஸரத்தில் தம்

தோழர் தமது நிலையைத் தம் தாய்தந்தையரிடம் சொல்லப்போனதுகூட அவருக்குத்தெரியாது. இவ்வாறு வழிபட்டுவர எல்லா விஷயங்களும் இவர் மனதைவிட்டகன்றது, ஈசன், வழிபாடு, வழிபடும் தான் மூன்றுமாத்திரமே நின்று, தன் எண்ணம் மங்கிக்கொண்டும் வந்தது. பக்தி முதிர்ந்து வந்தது வழிபாட்டொழுங்கால், இவர் பக்திப் பெருமையைப் பரமசிவமே எடுத்துப்பாராட்டி சிவகேசரியார் மனக்குழப்பத்தை நீக்கினர் (158-163 முடியவும், 147,148 செய்யுட்களையும் பார்க்க). இந்த பக்திபாவசத்தில் திண்ணனருக்குத் தம் தாய் தந்தையர்கள் வந்துபோனதுகூடத் தெரியாது, தம் தேஹ உணர்வும் கெட்டது.

இவ்வாறு பக்தி முதிர்ந்து வருகையில் இதன் முடிவு எதுவரையில் போகும் என்பதை தன் பக்தரான சிவகேசரியாருக்குக் காட்ட பகவான் ஆறும்நாளில் தமது கண்களில் ஒன்றிலிருந்து ரக்தத்தைப் பெருகவிட்டார். திண்ணனர் தம்மை அணுகிப் பூஜிக்க வரும்பொழுது இந்நிலையைக் கண்டதும் வழிபாடு நழுவிவிட்டது கண்ணப்பரைவிட்டு ஈசபாவனையும் அவரை உள்ளபடி யாக்கவேண்டும் என்பதற்கு வேண்டிய அன்பாகாரமும்தான் மிஞ்சியது. இந்த அன்பு முதலில் ஆணவமாகச் சற்றுத்தடிக்க அதன் வழிபட்டு வன மூலிகைகளைத் தேடிச் சென்றுவந்து பிழிந்து முயன்று பார்த்தார் அவர். இப்படிப்பலவாறு அன்பால் திண்டாடுகையில் 'ஊனுக்கு ஊன் தாங்கல்' என்றபழமொழி சில வ்யாதிகளைத்தீர்க்கும்வகையில் இருந்தது இவருக்கு ஞாபகம் வந்தது. உடனே தேஹாபிமானம் தமக்கு நீங்கியே இருந்ததனல் தம் கண்களுள் ஒன்றை வெகுலகுவாக அம்பால் பிடுங்கி உதிரம் பாய்ந்துகொண்டிருந்த கண்ணின்மேல் அப்பிவிட்டார். உதிரம் நின்று, கடவுள் கண் முன்போலானதைக் கண்டு ஆனந்தித்துக் கூத்தாடினர். இந்நிலை ஈசன் மாத்திரமாக மனம் பாய்ந்துகொண்டிருந்த போதிலும் இவர் மனம் சற்று காரியம் பலித்ததால் பூர்வவாஸனையின் முடிவான சேஷத்தின் வலியால் தன்னைப்பற்றியும் சற்றுபாய்ந்தது. இது தான் பக்தியோகத்தில் முடிவிலுள்ள அபாய நிலை. இதன் வசமாகி பக்தன் பூர்வாப்யாஸ பலமில்லாது நின்றுவிட இடங்கொடுத்து விடுவானயின் அதோகதியையே அடைந்து பழைய இழிவுக்கு வந்துவிடுவன். தகுந்த கர்மஞானங்களால்நிலையாத வீண் மனக்கொதிப்பான பக்தி இந்நிலைக்குக்கூடவாராது, தவறி அப்யாஸபலத்தால் வந்தால் நழுவிவிடும். திண்ணனர் பக்தி அப்படி எல்லாம் இக்காலத்தில்கூறப்படும் முழுமூட நாமஸங்கீர்த்தன பக்தியல்லவே. ஆதலால் இந்த நிலைவந்து அது திடப்படக் கூடியதாலுல் நிஜமான பக்தியோகம் இந்த நிலையோடு மாத்திரம் முடிந்துவிடுவதல்ல. இதன் முடிவில் அடுத்தபடியின் தன்மை சற்று வெளியாகும், தன்னை மறந்து வழிபடும் வஸ்துவாகமாத்திரம் தனித்திருப்பதால். இந்த முடிவு வருங்கால் தான் ஈச்வரன் ஸாக்ஷாத்காரம், ப்ரத்யக்ஷம் முதலிய அற்புத நிலைகள் ஏற்படும். இந்த நிலையும் திண்ணனருக்கு ஏற்பட்டு அவரது ஏகாக்ரம் முதிர்ந்து த்யேய வஸ்து மாத்திரமாக நிற்கக்கூடிய திறனை வெளிப்படுத்த பகவான் தமது இரண்டாவது கண்ணிலிருந்து ரக்தத்தைப் பெருக்கினர். திண்ணனர் மனம் வருந்தாது தமது இரண்டாவது கண்ணைப் பிடுங்குவது என்று தீர்மானித்து, பின்னர் அதைப் பகவான் இரண்டாம் கண்ணில் ஸரியாக அப்ப உதவியாக இருக்கத் தமது இடது செருப்புக்காலை பரம்பொருள் கண்ணண்டை வைத்து அழுத்திக்கொண்டு தம் இரண்டாவது கண்ணைக் கீண்டுவிடத் தொடங்கினர். இச்சமயத்தில் திண்ணனர் மனம் தன்னைநோக்கியும் 



பாய்ந்தோடவில்லை, வெகுலேகுவாகக் காரியம் பார்க்கத் தொடங்கி பூர்ணநம்பிக்கையுடனிருந்ததால், சுற்றுமுள்ள பிரபஞ்சங்கள் எல்லாம் அவர்மனதைவிட்டு முன்னரே ஒதுங்கியிருப்பினும் இத்தருணத்தில் அற அகன்றன. தம்வழிபாடும் கழன்றது, ஈசன் மாத்திரமாக திரிபுடியற்ற ஏகரூபமாக அமர்ந்து சற்று சிவாகாரமாயது. இதுதான் பக்தியோக முடிவு: பகவான் ப்ரத்யக்ஷமானர்: அவர் கையைப்பிடித்து 'நில் கண்ணப்பா! நில் என் கண்ணப்பா!! நில் கண்ணப்பா!!!' என மும்முறை கூறிய மொழியொன்று கிளப்ப சிவகேசரியார் பரவசமானர். வானவர் பூமழை பொழிந்தனர். அப்படியே பகவான் தம் வலப்புறம் அவரை இருத்திக் கொண்டார். அவ்வாறே இன்றும் ஸ்ரீகாளஹஸ்தியில் அந்த கண்ணப்பர், கோயிலுள் அமர்ந்துள்ளார்: கிரிமேலும் அவருக்கு ஒரு கோயிலுண்டு. குன்றின்மேலிட்ட விளக்குப் போல அது முதல்தோன்றிப் பின்னர்தான் பகவான்கோயில் தோன்றும் காளஹஸ்தியை அணுகுவோருக்கு.

பக்தியோகம் இவ்வாறு தன் முடிவைப் பெறின் அடுத்தபடியாகிற ராஜயோகமாகிய ஏகாக்ர முடிவும் அதன் மேல்படி அப்யாஸத்திற்கும் கொண்டுசேர்க்கும் தன்மையுடையது என்பதை இக்கண்ணப்பர் கதைமுடிவே காட்டும். அவருக்கு பகவான் ஸாமீப்ய முக்தி கிடைத்தது: அதாவது வைதிகதர்மப்படி மேலான ப்ரஹ்மலோகத்தில் சிறந்த வேதாந்த விசாரம் செய்து முக்திபெறக்கூடிய பிரஹ்மதேவர் நெருங்கின சிஷ்யர் நிலையான உத்தம பிராஹ்மண நிலை கிடைத்ததென்பதாகும். இது மீளாநெறிதான்: ஆனல் அதன் முடிவு இக்கல்பாந்தத்தில் ஆசாரியனை பிரஹ்மாவுடன் தான். முன்னர் கூறிய ஹனுமார் சரிதத்திலும் இந்த பக்தியோக முடிவை இப்படியே கண்டோம்.

ஆகவே பக்தியோகமே நேரிட முக்திகொண்டு சேர்க்காது. ஆனல் உள்ளபடி அதில் முனைந்துவிட்டால் மீளா நெறியில் நடப்பது தான் மறுபடியும் ஸம்ஸாராதி துக்கம் தாக்கும் நிலை வாராது என்பதாயிற்று. வேத ரஹஸ்யம் இப்படி இருக்க வெறும் நாம ஸங்கீர்த்தனமே முக்தி தந்துவிடும்என்று வெறும் சோம்பேரிகளாகக் காலங்கழித்து அநேகர் அதோகதியை அடைய முயல்கின்றனர். கர்மயோகம் பக்தியோகம் இரண்டின் உதவியின்றி நாமஸங்கீர்த்தனம் பயனே படாது. இதற்கு மாருகப் புராணங்களிலிருந்து சில பக்தசரித்திரங்களை எடுத்துக் காட்டுவர் இக்காலத்தவர். அவைகளுள் சில பக்தர்கள் அடைந்த முடிவு இன்னவை என்பதை வெளிப்படையாகக் காட்டாதவையாயும், சில அவதார விசேஷ சரித்திரங்களாயும், சில மாற்றிக் காட்டப்படுபவைகளாயும் இருக்கும். பொதுவாக பக்தியால் பகவந்நாமத்தை ஒருதரம் உச்சரித்தால் போதும் பரமபதம் வந்துவிடும் என்பதைக் காட்ட ஸ்ரீமத் பாகவதம் ஆறும்ஸ்கந்தம் அஜாமிளன் உபாக்யானத்தைக் காட்டுவது வழக்கம். அதை நன்ருக வாசித்துப்பார்த்தால் இந்தச் சோம்பேரி ஸித்தாந்தத்திற்கு இடமே இல்லை என்பது விளங்கும். ஒருதரம் அவஸரமாக அஜாமிளன் உச்சரித்த நாராயணநாமத்தின் சிறப்பு அவன் மனதை பச்சாத்தாபப்படும்படி செய்ய அதை ஆதாரமாகக்கொண்டு அவன் தன் இழியோர் இணக்கம்விட்டு வெகுகாலம் ஹரித்வார க்ஷேத்ரத்தில் பக்தி அப்யாஸம் ஸரிவரச் செய்து நற்கதி அடைந்தானே ஒழிய, வெறும் நாம ஸங்கீர்த்தனத்தால் மாத்திரமல்ல. சில ஸ்தல புராணங்களில் இந்த யோகவிஷய விரோத கதைகளும் காணப்படும். அவைகளையெல்லாம் ஸ்தல விசேஷத்தை ஏற்றமாகக் கூறவந்த அர்த்தவாதங்கள் துதிகதைகளே ஒழிய ஸித்தாந்தம் வெளிப்படுத்தவந்தவைகளல்ல என்று உணரல்வேண்டும். ஆதலால் கர்மயோக ஸம்பந்தமின்றி பக்தி யோகமே யாகாது. இப்படி உள்ளபடி யோகமாகும் பக்தி அதன் முடிவான த்யானமூர்த்தமாக மாத்திரம் நிற்பதான முடிவிலிருந்து மேல் எப்படி ராஜயோகமாகும் என்பதை பின்னர் எடுத்து விவரிப்போம்.

[illegible]தா நேயர்களுக்கு

சந்தாதாரர்[illegible]க்கு அந்தந்தமாதப்பத்திரிகை ஒழுங்காகக் [illegible]விட்டால் உடனே நம் ஆபீஸுக்கு [illegible] தங்கள் ரிஜிஸ்டர் நம்பரைக் கண்டு தெரிவித்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தாலன்றி அவர்கள் கடிதத்தை உடனுக்குடன் கவனிப்பது ஸாத்தியமாகாது. தவிர, சந்தாநேயர்கள் தங்கள் கடிதங்களுக்கு ஜவாப் தேவையிருந்தால்ரிப்ளை கார்டாவது அல்லது [illegible] ஸ்டாம்பாவது அனுப்பவேண்டியது மிகவும் அவசியம்.

மானேஜர்.

# கலீலியோ—வான சாஸ்திரி

## GALILEO—The Astronomer

கலீலியோ என்பவர் வின்ஸென்ஸோ கலீலிலை (Vincenzo Galilei) என்பவருடைய புதல்வராய், இடாலி நாட்டிலுள்ள பைஸா (Pisa) பட்டணத்தில் 1564-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 18-உ அவதரித்தார். இவருடைய தந்தையார் உயர்ந்த வம்சத்தினராயினும் தனவந்தரல்லர்; ஆனால் விஷயங்களின் உண்மையை அறிய வேண்டுமென்னும் அவா மிகுதியாக உடையவர். மகனுக்கும் அதேமாதிரி ஆசை இளமைமுதல் இருந்தது.

முதன் முதல், இவரை அவ்வூர் பள்ளிக்குத் தந்தையார் அனுப்பினார். இவர் கொஞ்சம் படித்தபிறகு கம்பள வியாபாரம் செய்யவேண்டுமென்பது தந்தையாருடைய எண்ணம். இவர் அப்பள்ளிக்கூடத்தில் டாண்டி (Dante) டாஸோ (Tasso) அரியாஸ்டோ (Ariosto) முதலிய சிறந்த கவிவாணர்களது நூல்களை மாசறக் கற்றறிந்தார்; வீணை வாசிப்பதிலும் சித்திரம் எழுதுவதிலும் பழக்க மேற்படுத்திக்கொண்டார். இவரது கல்வியை யறிந்த தந்தையார் இவருக்குக் கம்பள வியாபாரம் உதவாதென்றும் கலாசாலைப்படிப்பு வேண்டுமென்றும் தீர்மானித்து பைஸா ஸர்வ கலாசாலைக்கு வைத்திய சாஸ்திரம் படிக்கும்படி இவரை யனுப்பினார். கணித சாஸ்திரிகளுக்கும் தத்துவ சாஸ்திரிகளுக்கும் அக்காலத்தில் நல்ல வருமானம் கிடையாததலால், வைத்திய சாஸ்திரம் படிக்க வேண்டுமென்பது தந்தையாருடைய நோக்கம்.

அக்காலத்தில் இவர் ஒரு நாள் அவ்வூர்க் கோயிலில் ஜபம் செய்து கொண்டிருந்தபோது ஒரு பெரிய விளக்கு ஆடிக்கொண்டிருந்தது. அது ஆடும் காலத்தை இவர் தன் நாடி அடிப்பதனால் கணக்கிட்டார். அதிலிருந்து அம்மாதிரியாக ஆடிக்கொண்டிருக்கும் ஒரு வஸ்து, ஒரு பக்கத்தினின்று மற்றோர் பக்கம் செல்வதற்கு, எப்பொழுதும், எவ்வளவு தூரமிருந்தபோதிலும் ஒரே காலந்தான் செல்லுகிறதென்று தீர்மானித்தார். இதை யறிந்ததனால்தான், பிறகு கடியாரங்க ளென்னும் காலத்தை யளக்கும் கருவிகள் செய்கிறார்கள்.

இஃது இங்ஙனமிருக்க, ரிஸ்ஸி (Ricci) என்னும் ஒரு கணிதசாஸ்திரி பைஸா நகரத்துக்குவந்தார். அவரிடம் நம் கலீலியோ கணிதம் கற்க ஆரம்பித்தனர். பிறகு தனது இருபத்தாறாவது வயதிற்குள் அக்காலத்தவர் அறிந்திருந்த கணிதம், தத்துவம், இயற்கை சாஸ்திரம், யாவற்றையும் தெரிந்து கொண்டார். அதே வயதில், ஒருநாளுக்கு $7\frac{1}{2}$-அணா சம்பளமுள்ள பைஸா ஸர்வகலாசாலை கணித போதகராக நியமிக்கப்பட்டார்.

எல்லா வஸ்துக்களுக்கும், கனமாயிருந்தபோதிலும், இலேசாயிருந்தபோதிலும் ஒரே உயரத்தினின்று பூமிக்கு விழுவதற்கு ஒரே காலம் பிடிக்கிறதென்பதை இவர் இப்போது கண்டுபிடித்தார். ஆனால் இது அக்காலத்தில் அனுஸரித்து வந்த கொள்கைகளுக்கு மாறானது. இவர் நிலைமையை நன்கறிய அக்காலத்தின் கல்வியின் நிலைமையை யறியவேண்டும். அரிஸ்டாடில் (Aristotle) என்னும் கிரேக்க தத்துவ சாஸ்திரியார் சிலவற்றைப்பற்றி எழுதியிருக்கிறார்; அவர் எழுதியவை யாவும் உண்மையென்றும், எழுதியவைத் தவிர வேறொன்றும் உண்மையல்லவென்றும் அக்காலத்தவர் கருதியிருந்தனர். அரிஸ்டாடில் என்பவர் ஒரே உயரத்தினின்று பூமியில் விழுவதற்கு கனமான பதார்த்தங்களுக்கு இலேசானவைகளைக் காட்டிலும் குறைந்த காலம் செல்லுகிறதென்று எழுதிவைத்திருக்கிறார். அவர் ஏன் அம்மாதிரி எழுதிவைத்தாரென்பது ஒருவருக்கும் தெரியாதபோதிலும் இவர் சொல்வதை ஒருவரும் நம்பவில்லை. ஒருநாள் காலை அப்பட்டணத்து சாய்ந்துள்ள கோபுரத்தின் (Leaning Tower) மேல் சென்று அங்கிருந்து நூறுபவுன் எடை ஒன்றையும், ஒரு பவுன் எடை ஒன்றையும் ஒரே ஸமயத்தில் கீழே நேராக எறிந்தார். அவை இரண்டும் ஏககாலத்தில் நிலத்தின்மேல் யாவர் முன்னிலையிலும் விழுந்தன. அங்கிருந்தவர்கள் இதை நேரில் பார்த்தபோதிலும், நம்பாமல் கலீலியோவை வெறுக்க ஆரம்பித்தனர். ஆதலால் 1592-ம் வருஷம் இவர் வெனிஸ் (Venice) நாட்டைச் சார்ந்த பாதுவா (Padua) ஸர்வகலாசாலையில் ஒரு வேலையை ஒத்துக்கொண்டு அங்கு சென்றார்.

இதேகாலத்தில் மிடில்ஸ்பரோ (Middles-



burgh) பட்டணத்தில் கண்ணாடிக்கடையில் வேலை கற்றுக்கொள்ளும் ஒருவனால் விநோதமான கருவி ஒன்று செய்யப்பட்டது; மூக்குக் கண்ணாடிக்கு உபயோகப்படும் இரண்டு வட்டமான கண்ணாடிகளை ஒரு விதமாக சேர்த்ததனால் செய்யப்பட்ட அந்தக்கருவியானது தூரத்திலிருக்கும் வஸ்துவை அருகாமையிலும் தலைகீழாகவும் காட்டும் சக்தியுடையதாயிருந்தது. இந்த சங்கதி கலீலியோவிற்கு எங்ஙனமோ தெரிந்தது. இப்படிப்பட்ட விஷயங்கள் கலீலியோ போன்றவர்களுக்குத் தெரிந்தால் அதை அம்மட்டில் விட்டுவிடுவார்களா? அதைப்பற்றி இவர் உடனே தீவிரமாய் யோசனைசெய்து, ஒரு குழாயை எடுத்து ஒரு முனையில் நடுவில் பள்ளமாயுள்ள ஒரு வட்டக் கண்ணாடியையும், மற்றொரு முனையில் நடுவில் மேடாயுள்ள ஒரு வட்டக்கண்ணாடியையும் புதைத்து, அதன் வழியாய் தூரத்திலுள்ள வஸ்துக்களைப் பார்க்க அவைகள் அருகாமையிலும் தலைகீழாக மாறாமலும் காணப்பட்டன. உடனே இவர் அந்த விநோத கருவியை எடுத்துக்கொண்டு வெனிஸ் பட்டணத்திற்குச்சென்று அந்நகரஜனங்களுக்கு அந்தக் குழாயின் வழியாக வஸ்துக்களைக் காட்ட ஆரம்பித்தனர். இந்தக் கருவியின் உபயோகத்தைக் கண்ட அவர், தங்களுக்கொன்று வேண்டுமென்று கேட்க அவ்வாறே செய்து தந்தனர். இவருக்குச் சம்பளமும் இருமடங்காக உயர்த்தப்பட்டது. தானே வேலை செய்து பெரிய நச்சுக்குழாய் (Telescope) ஒன்றைச் செய்து முடித்து ஆகாயத்திலுள்ள கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் பார்க்க ஆரம்பித்தனர். அவர் அதன் வழியாக ஆகாயத்தில் கண்ட அற்புதங்களை என்னவென்று கூறலாம்! சந்திரனை நன்றாகப் பார்த்ததில் பூமிமாதிரியே மேடு, பள்ளம், மலை, குன்று, கடல், நிலம் முதலியவைகள் அதிலிருப்பதைக் கண்டனர். இதுமாத்திரமல்லாமல் பூமியும் மேகத்தால் மூடப்பட்டபோது சந்திரனைப் போலவே கொஞ்சம் பிரகாசமுடைய கிரகம் என்று அறிவித்தார்.

1610-ம் வருஷம் ஜனவரி மாதம் 7உ பிரகஸ்பதிக் கிரகத்தை நச்சுக்குழல் வழியாக பார்த்துக்கொண்டிருக்கும்போது அதன் பக்கத்தில் மூன்று சிறிய நக்ஷத்திரங்கள் இருப்பதைக் கண்டனர். அடுத்த நாள் பிரகஸ்பதிக் கிரகம் அம்மூன்று நக்ஷத்திரங்களுக்கு அடுத்தபக்கத்திலிருந்தது. 10உ இரண்டு நக்ஷத்திரங்களிருந்தன. 11உயும் இரண்டு இருந்தபோதிலும் ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் பெரிதாக இருந்தது. 12உ மூன்றும் காணப்பட்டன. 13உ நான்கு நக்ஷத்திரங்களிருந்தன. பிறகு நான்கிற்குமேல் காணப்படவில்லை. உடனே, நமது பூமியைச் சுற்றி சந்திரன் செல்லுகிறதைப்போல், பிரகஸ்பதி கிரகத்தைச் சுற்றி நான்கு உபக்கிரகங்கள் செல்லுகிறதென்பதை வெளியிட்டார். இந்த விஷயம் நாடெங்கும் அதிசீக்கிரத்தில் பரவலாயிற்று. ஆனால் அநேகர் நம்பாமல் மறுத்தார்கள். சிலர் இதைத் தடுப்பதற்கு தங்களால் முடிந்த இடையூறுகளையெல்லாம் செய்தபோதிலும் கடைசியாக ஒத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. (1892-ம் வருஷந்தான் 5-வது உபக்கிரகமும் ஒன்று இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.)

இனிமேல் கலீலியோவின் வாழ்நாட்களின் நிலைமையை நன்கறிவதற்கு, அக்காலத்தின் நிலைமையை சற்றே அறிவது இன்றியமையாததாயிருக்கிறது. அக்காலத்திலிருந்த கிறிஸ்தவ மதக்கொள்கைகள் சாஸ்திர அபிவிருத்திக்கு இடைஞ்சலாயிருந்தன. ஸத்திய வேதத்தில் கூறியிருக்கிற விஷயங்களுக்கு மாறானவைகளும், அவர்கள் அனுஸரித்து வந்த எண்ணங்களுக்கு விரோதமானவைகளும், பெரும் பாவம் என்று கிறிஸ்தவமதத் தலைவர்களால் கருதப்பட்டுவந்தன. மேலும் அக்காலத்தில் கிறிஸ்தவ மதத் தலைவராகிய போப் (Pope) என்பவருக்கு ஸர்வாதிகாரம் உண்டு. எவனாவது புதியகொள்கையை ஸ்தாபிப்பானாகில் சிறைச்சாலையில் அடைத்துவிடுவார்; சிற்சிலசமயங்களில் அவனுக்கு மரண தண்டனை விதிப்பதும் உண்டு. போப் என்பவரும் அவரைச் சேர்ந்த மதாபிமானிகளும் பூமியே அண்டங்களுக்கெல்லாம் முக்கியமானதென்றும், சூரியனே பூமியைச் சுற்றிவருகிறதென்றும் நம்பியிருந்தார்கள். கோபர்னிகஸ் (Copernicus) போன்ற நிபுணர்கள், சூரியனையே பூமிமுதலிய மற்றகிரகங்கள் சுற்றிவருகின்றனவென்று கூறியிருந்தபோதிலும், அதை நம்பப்படாதென்றும், அதை நம்புகிறவர்க

ளுக்குத் தகுந்த தண்டனை விதிக்கப்படுமென்றும் போப் என்பவர் கட்டளையிட்டிருந்தார்.

இது நிற்க, கலீலியோ, சனிக்கிரகம் மூன்றுபாகமாக இருக்கிறதென்றும், வெள்ளிக்கிரகத்திற்குச் சந்திரனைப்போல வளர்பிறை, தேய்பிறை உண்டென்றும் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியால் கண்டுபிடித்து உலகத்தவர்க்கு அறிவித்தார்; சூரியனில் கருப்புப் புள்ளிகளிருக்கிறதென்பதையும் கண்டுபிடித்தார். இவைகளெல்லாம் கிறிஸ்தவ மதாசாரியர்களுக்கு நம் கலீலியோவின் பேரிலிருந்த விரோதத்தை அதிகப்படுத்தியது.

இவர், பாதுவாவில் தமக்கு வேலை அதிகமாயிருக்கிறதென்றும், தமக்கு ஓய்வுகாலம் கிடைக்குமானால் தாம் சாஸ்திர ஆராய்ச்சியை அதிகமாகச் செய்ய முடியுமென்றும், தம் கண்பரான டஸ்கனி (Tuscany) பிரபு காஸ்மோ (Casmo) என்பவருக்கு எழுதிக்கொள்ள அவர் இவரை உடனே பாதுவாவைவிட்டு ப்ளாரென்ஸ் (Florence) க்கு வரவழைத்துக் கொண்டார். இந்தச் செய்கைதான் இவருக்கு பின்னிட்டு விளைந்த ஆபத்துக்களுக்கெல்லாம் காரணமாயிருக்கிறது. ஏனெனில் வெனிஸ் நாடானது சுயேச்சையானகுடியாசாயும் டஸ்கனி போப்பிற்கடங்கிய ஒரு ராஜ்யமாயுமிருந்தது.

இவர் அக்காலத்துக் கொள்கைகளுக்கு மாறான அநேக விஷயங்களைக் கண்டுபிடித்ததும் கோபர்னிகஸ் எடுத்துக்காட்டியதை இவர் அனுசரிப்பதும், போப்பிற்குப் பிடிக்கவில்லை. இவர் மதத்துவேஷி என்று கருதப்பட்டார். மதாசாரியர்கள் இவருக்குச்சரியான தண்டனை விதித்து இவர் கண்டுபிடித்தவைகளை யெல்லாம் அடக்கிவிடவேண்டுமென்று நிச்சயித்தார்கள். 1615-ம் வருஷம் இவரை தன் சமுகத்திற்கு வரும்படி போப் உத்தரவு அனுப்பினார். இவரும் அங்ஙனமே சென்று ரோமாபுரியிலுள்ள கனவான்களுக்கும் மதாசாரியர்களுக்கும் தம்முடைய நச்சுக்குழலைக் காட்டித் தாம் அறிந்த விஷயங்களைப்பற்றி உபன்யஸித்தார். போப்பும் அவருடைய மந்திரிகளும், கலீலியோவை பூமிசுற்றுகிறதென்பதை நம்பக்கூடாதென்றும் அதை ஒருவருக்கும் போதிக்கக்கூடாதென்றும் உத்தரவளித்து ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். இவர் கொஞ்சகாலம் தமது இரண்டு புத்திரிகளுடன் சுகமாக வாழ்ந்து வந்தார்.

1623-ம் வருஷம் இவருடைய ஸ்நேகிதரான பார்பெரினோ (Barberino) என்பவர் போப்பாக நியமிக்கப்பட்டார். உடனே கலீலியோ ரோமாபுரிக்குச் சென்று தமது சிநேகிதருக்கு உயர்ந்த பதவி கிடைத்ததைப்பற்றி அவரை வாழ்த்தி உபசரித்தார். இருவரும் சிநேகிதராகவே பிரிந்தார்கள். இவர் ப்ளாரென்ஸை யடைந்ததும், "டாலமி, கோபர்னிகஸ் இவர்கள் கொள்கைகளுக்குத்தர்க்கம்" (Dialogues on the Ptolemaic and Copernican systems) என்று ஒரு புஸ்தகத்தை வெளியிட்டார். இதில் டாலமி கக்ஷிக்காரன் சொல்லும் வார்த்தைகளையெல்லாம் கோபர்னிகஸ் கொள்கைக்காரன் மறுதளிப்பது மல்லாமல், அவனையும் மூடனாக்குகிறான். கலீலியோவின் சில விரோதிகள் போப்பினிடம் சென்று அப்புத்தகத்தில் மூடனாக்கப்படும் டாலமி கக்ஷிக்காரனைப்பற்றி எழுதினதெல்லாம் போப்பைக் குறித்தே கலீலியோ எழுதினதாகக் கூறினார்கள். உடனே போப்பிற்குக் கோபம் மூண்டுவிட்டது. கலீலியோவை ரோமாபுரிக்கு வந்து சேரும்படி கட்டளையிட்டார்.

1633-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 14௳ இவரும் ரோமாபுரி வந்து சேர்ந்தார். உடனே இவரது கொள்கைகளை, போப்பும் அவரைச் சேர்ந்த மதாசாரியர்களும் பரீக்ஷிக்க ஆரம்பித்தனர். அக்காலத்தில் வழங்கிவந்த இன்க்விஸிஷன் (Inquisition) என்னும் ஹிம்ஸைப்படுத்திச்செய்யும் பரீக்ஷைக்கு உள்ளாக்கப்பட்டார். ஜூன் மாதம் 21௳ இவரைக் கண்டிப்பாய்ப் பரீக்ஷிக்க ஆரம்பித்தார்கள்—அப்பரீக்ஷையின் நோக்கம் ஹிம்ஸை செய்தாவது, பயமுறுத்தியாவது கலீலியோ அதுவரையில் பிரசுரித்துவந்ததெல்லாம் தப்பிதமென்று ஒத்துக்கொள்ளச் செய்யவேண்டியது.—அது மூன்று நாள் நடந்தது. அந்த மூன்று நாட்களில் என்ன நடந்ததோ, என்ன கொடுமைகள் விளைத்தனரோ, பகவானுக்கே தெரியும். அய்யாதிரியாக இவரை நிர்ப்பந்தப்படுத்தி ஹிம்ஸை செய்யும்போது, ஹிம்ஸை பொறுக்கமாட்டாமல் அவர்கள் சொல்வதையெல்லாம் செய்வதாக ஒப்புக்கொண்டார். உடனே தாம் செய்ததெல்லாம் பிச



(280-ம் பக்கத் தொடர்ச்சி.)

கென்றும் தம்முடைய கொள்கைகளெல்லாம் மாறானதென்றும், அவைகளை தாம் நம்புகிறதில்லையென்றும், கலீலியோவை ஒரு பத்திரம் எழுதச்சொல்லி அதில் கையெழுத்தும் போடும்படி செய்தார்கள். கையெழுத்துப் போட்ட போதிலும், இவருக்கு ஆயுள் பரியந்தம் சிறைச்சாலையி லிருக்கவேண்டுமென்று தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் கொஞ்சகாலத்திற்குப் பிறகு இவரை, ஆர்ஸெட்ரி (Arcetri) என்னும் கிராமத்திற்குச் சென்று, வெளியில் போகாமலும், ஒருவருடனும் வார்த்தையாடாமலும் தமது வீட்டிலுள்ளேயே வசித்துவரும்படிக் கட்டளையிட்டு அவ்விடத்திற்கு அனுப்பப்பட்டார். இதற்குள்ளாக இவரது கண் பார்வையும் கெட்டுவிட்டது. இப்மாதிரியாக, அநேக கஷ்டங்களை அனுபவித்து கடைசியாக 1642-ம் வருஷம் ஜனவரி மாதம் 8௳ தமது 78-வது வயதில் உயிர் துறந்தார். என்ன விநோதம்! மேனாட்டிலும் சாஸ்திர அபிவிருத்திக்கு இம்மாதிரியான இடையூறுகள் இருந்தனவென்பதைக் கேட்க நமக்கு ஆச்சரியமாகவிருக்கின்றது.

S. சீனிவாஸய்யர், பீ. ஏ.

# ஸ்ரீராமர் ஆண்ட அயோத்தி

## THE REALM OF RAMACHANDRA

இப்பரதகண்டம் முழுதும் பிரஸித்தி பெற்றிருக்கும் அயோத்திமாநகர் அநேக விசித்திர காட்சிகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. ஐரோப்பாமுதலான வெளிநாடுகளிலிருந்து இந்திய நாட்டைச் சுற்றிப்பார்க்க வந்துள்ள ப்ரயாணிகளின் நேர்மார்க்கத்தி லில்லாமல் ஒதுப்புறமாக விருந்தபோதிலும், இந்துதேசத்தின் ஸமஸ்தமான விடங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் வந்து அங்கு கூடுகின்றனர். கிறிஸ்தவர்கள் ஜெருஸெலம் எனும் பட்டணத்தையும், மகம்மதியர்கள் மெக்கா எனும் பட்டணத்தையும் எப்படிக் கொண்டாடுகிறார்களோ அப்படியே ஹிந்துக்கள் இந்நகரைக் கொண்டாடுகிறார்கள். வெகுகாலத்துக்குமுன் இவ்விடத்தில் ஸுமார் 96 சதுரமைல் விஸ்தீரணமுள்ள ஒரு பெரிய பட்டணமிருந்தது. ஆனால் அதன் எல்லைகளென்ன வென்று அறியக்கூடவில்லை. இந்நகர் அப்பொழுது, மனுவை ஆதியாகக் கொண்ட ஸூர்யவம்சத்தரசர்கள்பரிபாலித்து வந்த கோஸல ராஜ்யத்தின் ப்ரதான நகரமாயிருந்தது. ஸூர்யவம்சத்துதித்தவர்கள் அநேக வருஷங்கள் அங்கே அரசாட்சி செய்துவிட்டுப் பிறகு சில காரணங்களால் நாட்டைவிட்டுப் பெயர்ந்து தேசசஞ்சாரஞ்செய்து கடைசியாய் ராஜபுதனத்தில் போய்த் தங்கினார்கள். உடைபூர், ஜாட்பூர் முதலிய ராஜபுதன ராஜ்யங்களை இப்பொழுதாண்டு வருகிற அரசர்கள், கோஸலவம்சத்தின் ஸந்ததியார்களென்று ஊகித்தறியவேண்டியிருக்கிறது. இவ்வயோத்திநகரில் ஒரு ஸமயம் பௌத்தமதஸ்தர்கள் விசேஷித்திருந்தார்களென்று நம்ப அத்தாக்ஷிகளிருக்கின்றன. அசோக மஹாராஜனுக்குப்பின்னாண்டவர்கள் காலத்தில் இப்புத்தமதமே உன்னதபதவியை யடைந்திருந்ததாகவும், பிறகு விக்ரமாதித்தன் இப்பொழுது கோக்ராவென்று சொல்லப்படும் ஸரயுநதியைக் கொண்டு அப்பட்டணமிருக்கு மிடமறிந்து, அங்கே ப்ராம்மணமதத்தை ஸ்தாபித்ததாகவும் நமக்கு சரித்திரமூலமாய்த் தெரியவருகிறது. விக்கிரமாதித்தனுக்குப்பிறகு ஜெயினமதத்தைத் தழுவின ஸ்ரீபாஸ்டம் வம்சஸ்தர்கள் அந்நகரத்தில் கொஞ்சகாலம் அரசுபுரிந்தார்கள்; என்றால் அவ்வற்புதபுரியில் ஜயினமதம், ப்ராம்மணமதம், புத்தமதம் எல்லாம் கலந்திருந்தன என்றாகிறதல்லவா?

ஆனால் இந்நகர் இந்தியாவில் விசேஷமான க்யாதியடைய ஏனையகாரணங்களைவிட முக்கியமானது ஒன்றுண்டு. அதாவது, ஸாக்ஷாத் ராமச்சந்திரமூர்த்தி அவதரித்தவிடம் இது என்பதே. அவர்காலத்தில் அப்பட்டணத்திற்கிருந்த சிறப்பைப்பற்றி அவருடைய திவ்யசரித்திரமாகிய ராமாயணத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சத்துருக்கள் தாக்கி வெல்லக்கூடாத கோட்டைகள் நகரைச்சுற்றி எழுப்பப்பட்டிருந்தன. பார்க்கப் பதினாயிரங்கண் வேணுமெனும்படியான உப்பரிகைகளும், உருக்கிவிட்ட தங்கம்போல் ஜ்வலித்துக்கொண்டிருந்த கோபுரங்களும் ஆகாயத்தை அளாவி நின்றன. அங்கே தனவந்தர்களாயும், தர்மிஷ்டர்களாயும் ஸந்தோஷமே முகத்தில் குடிகொண்டவர்களாயுமுள்ள ப்ரஜைகள் வஸித்து வந்தார்கள். நாலா பக்கங்களிலும் விசாலமான வீதிகளும், வீதிகளின் இடையிடையே அழகிய பண்டசாலைக

ளும், ரத்னமயமான அரண்மனைச் சிகரங்களும் கண்ணைக்கவர்ந்தன. கருப்பஞ்சாறு போல்இனியநீரும், தான்யஸம்பத்தும் அக்ஷயமாகவேயிருந்தனவென்று பூர்வீக கிரந்தகர்த்தாக்கள் எழுதியிருக்கிறார்கள். இன்னும், யாகாதிகளின் தாத்பர்யமறிந்த பண்டிதர்கள், பாடகர்கள், மற்ற வித்வத்சிகாமணிகள் அங்கேகுடியிருந்தார்கள். பிரக்யாதிபெற்ற சிற்பசாஸ்திரிகளும் இதர வேலைக்காரர்களும் ஜனங்களின் சவுக்கியத்தை நாடினவர்களாய் அவர்களுக்குத் தங்களாலானமட்டும் உதவிபுரிந்தார்கள். வெகுபராக்ரமசாலிகளான யுத்தவீரர்கள் இவ்வற்புதபுரியை சத்ருக்களினிடமிருந்து காக்க வலியுற்றிருந்தார்கள்.

இவ்விதம் ஸகலவித ஸம்பத்துக்களுக்கும் ஆஸ்பதமாயிருந்த நகரத்தை, தேவாம்சமெனச் சொல்லவேண்டிய தசரதமஹாசக்ரவர்த்தி அறுபதினாயிரவருஷம் அஸஹாயசூராய்ப் பரிபாலித்து வந்தார். அவருக்கு வெகுகாலம்வரை புத்ரஸந்தானமில்லாதிருக்க, அச்வமேதமென்னும் யாகத்தை மூன்று நாள் விக்நம் வாராவண்ணம் விமர்சையாய் நடத்தி, நான்கு புத்திரர்களை அடையவரன்பெற்றார். மஹாவிஷ்ணுவின் அம்சமாய், ஜகதகில ப்ரதாபனாய் முதலில் ஜனித்த குமாரன் ராமன், கொஞ்ச காலத்திற்கெல்லாம் கைகேசியின் மாற்சரியத்தினால் நாட்டைவிட்டுக் காட்டிற்கேக நேர்ந்து, அங்கே தன் ப்ரிய ஸகியான ஸீதையைப் பறிகொடுத்து, லங்கேச்வரனோடு கோரயுத்தம் செய்து, தன் நாயகியை ராமன் மீட்டு வந்தது எந்த இந்திய வாஸிக்குத்தான் தெரியாது! ஹிமோத் பர்வதம் முதல் கன்யாகுமரி வரைக்கும் ஜனங்கள் அவரை பரதெய்வமாகக் கொண்டாடுகிறார்களல்லவா? ஸாதாரண ஜனங்களின் நடையுடைபாவனைகளுக்குக் காரணபூதங்களாயிருக்கிற புராதன இந்திய சரித்திரங்களைப் படிக்க ஆவலுற்றவர்களுக்கு இந்த அயோத்தியில் ஆச்சரியமுண்டுபண்ணத் தக்கனவாய் எண்ணிறந்த விஷயங்களிருக்கின்றன; என்றால் இப் புண்யபூமிக்குக் கோடிக் கணக்கான ஜனங்கள் வருவது ஒரு விநோதமாகுமா?

ஒருவர் இப்பொழுது அயோத்திக்குப் போகவேண்டுமானால், இருப்புப்பாதை மார்க்கமாய் பைஸபாட் (Fyzabad) என்ற பட்டணம் போய் அங்கிருந்து நான்கு மைல் தூரம் தூசிகளடைந்த ஒரு சந்தின் வழியாகப் போகவேண்டும். அப்படிப் போகும்பொழுது குரங்குக் கூட்டங்கள் வரவர விருத்தியாகிக்கொண்டு போவது தெரியும். பட்டணத்தில் புகுந்ததும் அதில் மர்க்கடங்கள்தான் குடிகளோவென்று திகைக்கும்படி ஒவ்வொரு வீட்டின் கீழ்த்தரை முதல் மேல்மாடி வரையிலும் அலைந்துகொண்டிருக்கும். இங்குதான் தேவர்களால் ராமனுக்குச் சகாயமாக வானர சைன்யங்கள் உண்டாக்கப்பட்டன. பசுவின் வாலுக்குமேல் நீளமாய் பூமியிற் கிடந்து புரளும் வால்களோடு கூடி, பர்வதங்கள் போல் பருமனுடையதாய், வேண்டிய சமயங்களில் உருக்களை மாற்றிக்கொள்ளக் கூடிய திறமை பெற்ற வானரங்கள் இங்கே பல இருந்தன. விளையாட்டாக மலைச் சிகரங்களை யுருட்டவும், ஆகாயத்தில் கிளம்பி மேகங்களோடு போர் புரியவும், அலைகள் மோதும் ஸமுத்திரத்தில் குறுக்கே நீந்திச் செல்லவும் அவை வலியுற்றிருந்தன. அங்கே ஒரு கோயிலில் ஹனுமானைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்கிறார்கள், கோயில், தோற்றத்திற்கு ஒரு கோட்டை போலிருப்பதால் அதற்கு "ஹனுமான்கோட்டை" யென்று பெயர். அக்கோயிலின் நாலா பக்கங்களிலும் நூற்றுக் கணக்காய் வானரங்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. சிலவற்றின் துஷ்டத்தனத்தைக் குறித்து, புதிதாய்ப் போகிறவர்கள் அவைகளிடம் அதிகமாய் நெருங்காமலிருக்க எச்சரிக்கை செய்யப்படுவது மன்றி, அவை தொந்தரவு செய்யாமல் தடுக்கப்படவேண்டியதும் அவசியமாகிறது.

அயோத்திக்குப் போகும் ப்ரயாணிகள் முகவில் காண்பது மணற்றரையி லரித்தோடும் கோக்ரா நதி. பிறகு பொதி மணலால் நிறைந்துள்ள ப்ரதேசத்தைத் தாண்டினால், ராமன் பிரதிதினம் தீர்த்தாடனம் செய்து பாவனமடைந்திருக்கும் 'ராம கட்டம்' இருக்கிறது. இதற்கு ஸ்வர்க்க த்வாரமென்றும் பெயர். இப்புண்ய நதியில் பல்லாயிரம் தேசாந்திரிகள் அனுதினம் ஸ்நானம் செய்கிறார்கள். சில இடங்களில் வித்வான்கள் ராமாயணத்திலிருந்து ச்லோகங்களைப் படித்து, ஜனங்களின் மனதில் பதியும்படி அவைகளின் தாத்பர்யத்தை விளக்கிக் கூறுவார்கள். ஆற்றின் மணற்றரையில் நின்றபடியே பல பல புராதனமாயும், சில நூதனமாயுமுள்ள கட்டிடங்களையும், மசூதிகளையும், எவரும் காணலாம். இவ்விதக் கட்டிடங்களுக்கு முன்னிருக்கும் அரங்கவாயில்களின் நடுவே கட்டப்பட்டுள்ளசுவர்களில் குரங்குகள் ஒளிந்து விளையாடிக் கொண்டு அவ்வழி போய்வருபவர்களைப் பல்லிளித்துப் பயங்காட்டும். பட்டணத்தின் நடுவில் விக்டோரியா மஹாராணியாருடைய ஞாபகச் சின்னமாக, வெள்ளைச் சலவைக் கல்லால் ஓர் உருவம் செய்து, அதேகல்லால் செய்யப்பட்ட மேடைமேல் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிறது. ஹிந்துக்களுக்கு இப்பிராசீனப் பட்டணத்தின் மேலிருக்கும் அபிமானத்தை உத்தேசித்து இவ்விடத்திலும் லக்னோவிலும் அபூர்வ வேலைத்திறமையுடன் எழுப்பப்பட்டிருக்கும் இச்சிலைகள் ஒருவித ஆநந்தத்தை உண்டுபண்ணுகின்றன. இவ்வு நவத்துக் கெதிரே ஒரு கோயிலில் புத்தருக்கு விக்ரஹாராதனை நடந்து வருகிறது. புத்தமதம் இங்கு பரவியிருந்ததென்று ருசுப்படுத்த ரொம்ப ஸ்வல்பமாகயிருக்கும் ஆதாரங்களில் இது வொன்று.

அயோத்தியில் இப்பொழுதிருக்கும் பழய கட்டிடங்களில் வெகு ச்லாக்யமெனக் கொண்டாடப்படுவது ராமன் ஜனித்த இடமாகிய 'ஜன்மஸ்தானம்' என்பது. அது இரண்டு மாடிகளையும், அகன்ற பிராகாரத்தையும் உடையது. சுவரின் கல் ஒன்றில் ராமன் ஜனனத்தைப் பற்றி சில விஷயங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் மதத்வேஷப் போராட்டம் ஜாஸ்தியாய் நிற்கிறது. இங்கிருந்த கோயிலொன்று மசூதியாக மாற்றப்பட்டு, ஹிந்துக்களும் மகம்மதியர்களும் சேர்ந்து பூஜைசெய்ய நேர்ந்து, 1885-ல் பெரியசச்சரவுண்டாகி 75 மகம்மதியர்கள் உயிரிழந்தார்கள். அவர்களுடைய ப்ரேதங்கள் அருகிலொரு சமாதியில் அடக்கம் செய்யப்பட்டன. பிறகு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கட்டிடத்தை விபக்தம் செய்து, ஒரு பாகத்தில் துலுக்கர்கள் தங்கள் விதிகளைச் செய்யும்படிக்கும், மற்றொன்றில் ஹிந்துக்கள் ராமனுக்கு பூஜைமுதலிய க்ரியைகளை அனுஷ்டிக்கும்படிக்கும் ஏற்பாடு செய்து தந்தும், சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் இருமதஸ்தர்களுக்கும் சண்டையுண்டாகி, பாவம்! மூன்று மகம்மதியர்களும் மூன்று ஹிந்துக்களும் உயிர் நீத்தார்கள்!

இப்பொழுது அயோத்தியை ஆண்டுவரும் அரசன் பால்ய வயதிலிருப்பதால் ராஜ்யவிஷயங்களை துரைத்தனத்தார் பார்த்துக்கொண்டு, அவன்பட்டிருக்கும் ஜாஸ்தியான ஒரு கடனைக் கொடுத்துவந்து கொண்டிருக்கிறார்கள். அரசன் வஸிக்கும் அரண்மனை அழகிய ஊற்றுக்கள், செடிகளால் நிறைந்து, அதில் அநேக ப்ராகாரங்கள், தாழ்வாரங்கள், வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டு, அத்யுன்னதமாயிருக்கிறது.

ஹிந்துக்களால் மத ஸம்பந்தமாய் அயோத்தி நகரம் மிகக் கொண்டாடப்பட்டுப் பிரஸித்தி யடைந்திருந்தபோதிலும், இப்பொழுது அதன் மகிமை குறைந்து ஒரே தூக்கத்தில் அது ஆழ்ந்து கிடப்பது வ்யஸனிக்கத்தக்கதாயிருக்கிறது.

T. S. ராஜகோபாலன்.



# நம்பூதிரிமார்கள்

## NAMBUDRIS

தர்மராஜ்யமென்று எல்லோராலும் புகழப்படும் திருவிதாங்கோட்டு ஸமஸ்தானத்தில் நம்பூதிரிமார்கள் என்ற ஒரு ஜாதியாருண்டு. நமது பாரதவருஷத்திலுள்ள பிராம்மணர்கள் அனைவரும் பஞ்ச கவுடர்களெனவும், பஞ்ச திராவிடர்களெனவும் இரு பெரும் பகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் கவுடர்களைக்காட்டிலும் திராவிடர்கள், சிறந்த தர்ம மார்க்கங்களினாலும் மாமிசவுணவை முற்றும் தவிர்த்திருப்பதினாலும் மேம்பட்டவர்கள் எனப்படுகின்றனர். இந்தத் திராவிடர்களிலும் மலையாள பிராம்மணர்கள் எனப்படும் நம்பூதிரிமார்கள் வெகு வைதீகர்களாய் விளங்குகின்றனர். மற்றைத் திராவிடர்கள் பற்பல விடங்களில் பரவியிருப்பதாலும், அந்நிய மதஸ்தருடைய ஸம்பந்தத்தைப் பெற்றிருப்பதாலும், நம்பூதிரிகளைப்போலவே வைதீக மார்க்கத்தையே அனுசரிக்கின்றனரென்பதற்கிடமில்லை.

திருவிதாங்கோட்டில் பற்பல விடங்களில் பொதுவாக நம்பூதிரிமார்கள் காணப்பட்டாலும், அவர்களது விசேஷ ஸ்தானங்கள் மூவாற்றுப்புழையும், ஆலங்காடும், எட்டுமானூரும், குன்னத்தநாடுமேயாம். பகவான் பரசுராமரால் குடியேற்றப்பட்டதாகப் போற்றப்படும் இந்நம்பூதிரிமார்கள் சென்ற ஜனஸங்கி

(இதன் தொடர்ச்சி 284-ம் பக்கம்.)

ஸபையில் 5,933 பேர்களிருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள்.

"நம்பூதிரி" என்ற பதத்துக்குப் பொருள் இன்னம் தெரிந்தபாடில்லை. 'உண்மையானவர்' அல்லது 'பரிசுத்தமானவர்' என்னும் பொருளையுடையது என்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார், 'அறிவைப் புகட்டுவோர்' என்னும் பொருளையுடையதென்பர். இஃதெவ்வாறாயினுமாகுக. இவர்கள், பாரத வருஷத்தில் பல விடங்களினின்றும் முனியும் வீரருமான பகவான் பரசுராமரால் கேரளநாட்டில் குடியேற்றப்பட்ட அறுபத்துநான்கு கிராமக்காரர்களின் ஸந்ததியார்களெனப்படுகின்றனர். இவர்களது மூலஸ்தானம் அஹிக்ஷேத்திரமென்றும் அங்கிருந்து அவர்கள் குருக்ஷேத்திரப் பிரதேசத்துள்ள ஆர்யபுரம் என்னும் நகரில் குடியேறினரென்றும், அவ்வாரிய புரத்திலிருந்து பரசுராமன் அவர்களைக் கூட்டிக் கொண்டுவந்து கேரள தேசத்தில் குடியேற்றி, அவர்களுக்கென்றே விடப்பட்ட அறுபத்து நான்கு கிராமங்களுக்கும் அவர்களைச் சாசுவத "ஜென்மி"களாக்கினரென்றும், அவர்கள் கேரளத்தைவிட்டுப் போய்விடாவண்ணம், அவர்களது நடையுடை பாவனைகளில் சிற்சில மாறுபாடுகளை பரசுராமர் உண்டாக்கினரென்றும் கர்ணபரம்பரைச் செய்தியால் தெரிகின்றது. இவர்கள் மலையாள நாட்டில் குடியேறிய காலம் திரேதாயுகமெனப்படுகின்றது.

அந்தஸ்தினாலும், ஜாதீய முக்கியத்தினாலும் நம்பூதிரிகள் எழுவகையாகப் பகுக்கப்பட்டுள்ளனர். அவராவார்:—1. ஆழ்வான்சேரி நம்பூதிரிகள். 2. ஆத்யநம்பூதிரிகள்3. விசிஷ்டநம்பூதிரிகள். 4 ஸாமான்ய நம்பூதிரிகள். 5. ஜாதி மாத்ரநம்பூதிரிகள்.6. சாபகிரஸ்தநம்பூதிரிகள். 7. பாபிஷ்ட நம்பூதிரிகள். இவர்களுள் முதலாவதான ஆழ்வான்சேரி நம்பூதிரிகள் வெகு மேலானவர்கள். ஒரு காலத்தில் ஹிரண்யகர்ப்ப விசேஷத்திலிருந்து ஒரு பொற்பசுவைத் தானமாகப் பெற்றுக்கொண்டு ஆழ்வான்சேரி நம்பூதிரி தனதுவீட்டுக்குப் போகையில் எதிர்ப்பட்ட புலையன் ஒருவன், "இறந்த பசுக்கள் எங்களைச் சேர்ந்தவையே யொழிய பிராம்மணச் சிரேஷ்டர்களைச் சேர்ந்தவையல்ல. இந்தப் பசு உம்முடையதானால், இதை நடந்துவரச் செய்யும்" என்றனனாம். உடனே, நம்பூதிரி அப் பொற்பசுவின்மீது தண்ணீரைத்தெளித்துத் தன் மந்திரசக்தியால் அதற்கு உயிர் கொடுத்து உடனழைத்துச் சென்றனனாம். இவ்வதிசயத்தைக் கண்டு ஆச்சரியமடைந்த புலையன், "ஐயனே! நீர் உண்மையிலேயே தம்புராக்கள் தான்" என்றதாகவும்! 'தம்புராக்கள்' என்ற பட்டம் அவர்களுக்கு அன்று முதல் கிடைத்ததாகவும் கர்ணபரம்பரைச் செய்தியால் தெரிகின்றது. இந் நம்பூதிரிகளுக்குப் பரசுராமர் நான்கு அரிய சுதந்தரங்களைக் கொடுத்தனராம். அவை (1)பத்ராஸனம் (ஸபையில் முதல் ஸ்தானம்) (2) ஸர்வமான்யம் (எல்லோராலும் பூஜிக்கப்படுந்தன்மை)(3) பிராம்ம ஸம்ராஜ்யம் (பிராம்மண அதிகாரம்) (4) பிரம்மவர்ச்சஸ் (சாஸ்திரப் பிரமாணம் சொல்லுதல்) என்பனவாம். இந்நம்பூதிரிகள் எப்போதும் தேவதா பிரார்த்தனையிலும், பகவத் கைங்கரியத்திலும் ஈடுபட்டு, பரம வைதீகர்களாய் ஆசார அனுஷ்டானங்களில் எள்ளளவேனும் குறைவுபடாது காலங் கழிக்கின்றனர். அவர்களைப்பற்றி அவதூறுபேசினவனே கிடையாது. 'ஆறுவருஷங்களுக் கொருமுறை திருவிதாங்கோட்டில் நடக்கும் 'முறை ஜபம்' என்ற பெரிய விசேஷத்துக்கு இந்த ஆழ்வான்சேரி தம்புராக்கள் தான் முதன்முதலில் மஹாராஜாவினால் அழைக்கப்படுவார். அவர், முறைஜபம் கழிந்து ஊருக்குத் திரும்பிப்போகும்வரையில் மிகுந்த கௌரவமாயும் ஸர்வ மரியாதையுடனும் பாராட்டப்படுவார்.

இரண்டாமவரான ஆத்ய நம்பூதிரிகள், நம்பூதிரிப்பாடு எனறும் அழைக்கப்பெறுவர். அவர்கள் பூவல்லி, ஓலப்பாமன், வரிக்கச்சேரி, கூடலூர், பொறையனூர், ஓளச்சேரி, மேப்பத்து, எடமண் என்னும் எட்டு இல்லங்களைச் சேர்ந்தவராவர். இவர்களும் வெகு தனிமையில் வாஸஞ் செய்துகொண்டு வேதாத்தியயனம் பண்ணுவதிலும் பக்தி காரியங்களைச்செய்வதிலும், தர்மத்தை யனுஷ்டிப்பதிலுமே காலங்கழிக்கின்றனர். இவர்களுக்கு யாகஞ்செய்யும் உரிமையும், ஸந்யாஸம் பெறும் பாத்தியமும் கிடையா. இவர்கள் எவ்வகையான தானத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை. இவர்களுள் இரண்டு இல்லத்தாருக்குப் பகவான் பரசுராமர் கேரளத்திலுள்ள பெரியகோயில்களில் ஸர்வாதிகாரம் செய்யும் குருக்கள் பாத்தி



யத்தைக் கொடுத்தனராம். இப்போது திருவாங்கூரிலுள்ள சிரேஷ்ட கோயில்களில் காரணநல்லூர் நம்பூதிரிப்பாடு என்பவரே ஸர்வ அதிகாரம் வகித்துவருகின்றனர். மற்றைய நம்பூதிரிகளால் இந்த ஆத்யநம்பூதிரிகள் எப்போதும், அவர்களது குடிப்பெயருடன் "நம்பூரி" என்னும் பட்டத்தைச் சேர்த்து விளிக்கப்படுவார். ஆத்ய நம்பூரி ஸ்திரீகள் உடையுடுக்கும் விதத்தினாலும், நெற்றியில் தரிக்கும் புண்டரங்களினாலும் மற்றைய நம்பூதிரி ஸ்திரீகளினின்றும் வேறாகத்தோன்றுவர். இவர்கள்மட்டுமே வெள்ளி வளையல்களைத் தரிக்கலாம்; மற்றைய ஸ்திரீகள் வெண்கலம் அல்லது வெள்ளீயத்தாலான வளையல்களைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

மூன்றாமவரான விசிஷ்ட நம்பூரிகள் அக்னிஹோத்திரி என்றும், பட்டதிரிஎன்றும் இருவகையாவர். முன்னவரான அக்னிஹோத்திரிகள் அக்னிசயன யாகத்தைச் செய்த அக்கிதிரியென்றும், அக்னியாதானத்தைச் செய்த அதித்திரியென்றும், ஸோமயாகத்தைச் செய்த ஸோமதிரியென்றும் மூவகுப்பினராவர். கிருகஸ்தர்கள்தாம் யாகம் செய்வதற்குரியர்கள். யாகங்களிலும் மற்றக் காரியங்களிலும் நம்பூதிரிகளுக்கு நாயர்மாரின் உதவி அவசியம் வேண்டும்.

பட்டதிரியென்பவர், தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை,வேதாந்தம்,பாரதம்,பிரபாகரம் முதலியவற்றைப் படித்துச் சொல்லிக்கொண்டிருக்கும் தத்துவஞானிகளாவார். மலையாளத்திலுள்ள மதாசாரியர்கள் இவ்வகுப்பினர்தாம். இவர்களுக்கு அநேக சிஷ்யர்களுண்டு. வாத்யான், வைதீகன், ஸ்மார்த்தன் எனவும் மூன்று பகுப்பு இவர்களிடமுண்டு.

வேதம் ஓதிக்கொண்டும், கோயில்களில் வைதீக காரியங்களைச் செய்துகொண்டும், மந்திர வாதத்தை அனுஷ்டித்துக் கொண்டுமிருக்கும் நம்பூதிரிகள் நான்காமவரான ஸாமான்ய நம்பூரிகள் எனப்படுவர். இவர்களுள் சிலர் கோயில்களில் அதிகாரம் பெற்றவராகவுமிருப்பர்.

ஐந்தாமவரான ஜாதி மாத்ர நம்பூதிரிகள் அஷ்ட வைத்யரெனவும், யாத்ரகழிக்காரர் அல்லது சாஸ்திர நம்பூதிரிகள் எனவும், கிராமணி நம்பூதிரிகள் எனவும் மூவகுப்பினராவார். அஷ்ட வைத்தியர், பரசுராமரால் வைத்தியத் தொழிலையே மேற்கொண்டிருந்தபடி. கட்டளையிடப்பட்ட எட்டு வைத்தியக் குடும்பங்களைச் சேர்ந்தவராவர். அவர்களுக்கு நம்பூரி, நம்பி, மூசு என்று பெயர்களுண்டு. யாத்ரகழிக்காரர் பரசுராமனிடமிருந்து போர்த்தொழிலைப் பெற்றுக்கொண்டவரெனப் படுகின்றனர். இவர்கள் பாதி பிராம்மணர் பாதி க்ஷத்திரியராவார்கள். கிராமங்களைக் காவல் செய்ய ஏற்படுத்தப் பட்டமையின் கிராமணி நம்பூதிரிகள் என்ற பெயர் மூன்றாம் வகுப்பினர்க்குக் கிடைத்தது. இம்மூவகையினரும் பிரத்தியேகமாக வைத்தியத் தொழிலிலும், போர்த் தொழிலிலும், ஊராள்வதிலும் கருத்தைச் செலுத்தும்படி பரசுராமரால் விதிக்கப்பட்டமையின், இவர்களுக்கு வேதாத்தியயனம் செய்வதற்குப் போதுமான சவுகரியம் இல்லாது போயிற்று. ஆதலால், காலக்கிரமத்தில் இவர்கள் அந்தஸ்தில் குறைந்தவராகி, வேத மோதுவதற்கு அருகரல்லர் என்று கருதப்பட்டனர். ஆயினும் இவர்களுக்கு 'முதல் முறை' என்ற வேத படனம் இன்னுமுண்டு. இம் முறையில் வேதத்தை இவர்களே படிக்கலாம்; அல்லது வேறொருவர் படிக்கக் கேட்கலாம். இவர்கள் மற்றைய பிராம்மணரைக் காட்டிலும் அந்தஸ்தில் குறைந்தவரென்றாலும், அவர்களோடு ஒரே துறையில் நீராடவும், ஸகபோஜனஞ்செய்யவும், சமையல் செய்வதில் உதவி செய்யவும் அருகராவார். தரித்திரத்தினாலும், வியாதியினாலும், காமாதிகளாலும் வேதாத்தியயனத்தைக் கைவிட்டவர்கள் இவ் வகுப்பைச் சேர்ந்தோராவர்.

ஆறாமவரான சாபகிரஸ்தர்கள், பரசுராமருடைய தெய்வீகத்தை நம்பாமல்போனதின் நிமித்தம், அவரால் சபிக்கப்பட்டவராவர். இவர்களுக்கு யாதொரு ஜாதி மரியாதையும் கிடையாது; வேதாத்யயனம் செய்யக்கூடாது, முன்னர்க் கூறப்பட்ட பிராம்மணர்களுடன் சேரக்கூடாது, கோயில்களில் நைவேத்யம் செய்யப்பட்ட அன்னத்தில் இவர்களுக்குப் பங்கு கிடையாது.

ஏழாமவரான பாபிஷ்டன்மார், நடத்தையினால், மற்றைப் பிராம்மணர்களுடன் ஸமமான மரியாதையும் உரிமையையும் பெறுவதற்கு அருகரல்லரென விலக்கப்பட்டவராவார். பரசுராமரிடமிருந்து பூமி தானம் வாங்கிய ஊரில்

பரிஷ மூசன் மாரும், மலையாள அரசர்களுள் ஒருவரான பூதாரயப்பெருமாளைக் கொலைசெய்ததைக் கடைக்கணித்தவர்களும், வாரக மூர்த்திக்கு அவமரியாதை செய்து அதனால் மற்றைப் பிராம்மணர்களை அவமதித்த பன்னியூர் கிராம வாசிகளும், பிராம்மணர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அரசனைக் கொலை செய்த நம்பிடிகளும் இவ்வகுப்பினராவார்கள்.

இவ்வகுப்புக்களை யன்றி, பொதுவாக நம்பூதிரிகள் ஒத்துள்ளவரென்றும், ஒத்தில்லாதவரென்றும் இரு பெரும்வகுப்பாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். ஒத்துள்ளவர், வேதாத்தியயனம் செய்வதற்கும், சோடச கிரியைகளைச் செய்வதற்கும் அருகராவர். ஒத்தில்லாதவர் அவைகளைச்செய்வதற்கு அருகரல்லாதவர். ஜாதிமாத்ர நம்பூதிரியும் சாபகிரஸ்த நம்பூதிரியும் ஒத்தில்லா வகுப்பைச் சேர்ந்தோராவர். ஒரு வகுப்பு ஸ்திரீ மற்றொரு வகுப்பு ஸ்திரீயுடன் ஸக போஜனம் செய்யமாட்டாள்; மற்றைய விஷயங்களில் இரு வகுப்பாருக்குள்ளும் வேற்றுமை இல்லை.

பொதுப்படக் கூறுமிடத்து, நம்பூதிரிகள் அனைவரும் நல்ல நிறமுடையவராயும், புத்தி சாதுர்யத்தைத் தோற்றுவிக்கும் முகக்குறியுடையவராயும் காணப்படுவார்கள். கூன், முடம், முதலியவர்கள் காணப்படுவது அருமையிலும் அருமை. அவர்களுக்குப் பூர்வசிகையுண்டு; அதாவது தலையின் முன்பக்கத்தில் குடுமி வைத்துக் கொண்டிருப்பார்கள். நல்லுணவு உண்பதால் அவர்கள் அனைவரும் பெருத்தசரீரிகளாகவேயிருப்பார்கள். மெலிந்த நம்பூதிரியைக்காண்பதரிது. அவர்கள் கைவிரல்களின்நகங்களை, முக்கியமாக இடதுகை நகங்களை வெகு ஆசையோடு வளர்ப்பார்கள். சிற்சிலர்களுக்கு அந்நகங்கள் ஒரு அங்குலத்திற்கு மேலாகவே வளர்ந்திருப்பதுண்டாம். இவர்கள் முக்கியமாக கிராமவாஸிகளானபடியால், பட்டினங்களுக்கு வந்தால் பட்டிக்காட்டார்களைப்போல விழிப்பதனால் இவர்களை இன்னாரென்று கண்டுபிடித்து விடலாமாம்.

உடை. நம்பூதிரியினுடைய உடை ஸர்வ ஸாதாரணமானது. கரைகளில் ஜரிகையேனும் வேறு நிறமேனும் போடப்பட்ட சுத்த வெள்ளை வஸ்திரத்தையே ஆண்பாலரும் பெண்பாலரும உடுப்பார்கள். ஸாதாரணமாக, ஆண்பாலார், மலையாள சூத்திரர்களைப்போலவே அரையில் சுற்றி ஒரு வேஷ்டியையும் மேல் ஒரு வேஷ்டியையும் தரிப்பார்கள். வைதீக காரியங்களைச் செய்யும்போதுதான் அவர்கள் எட்டு அல்லது ஒன்பதுமுழ நீளமுள்ள வஸ்திரத்தைத்தட்டுடுக்கையாகக் கட்டிக்கொள்வார்கள். அதாவது முன்னும் பின்னும் கச்சம் வைத்துக் கட்டிக்கொள்வார்கள். ஸந்யாஸிகளுக்குக் காவி வஸ்திரமுண்டு. கால்களில் மரப்பாதுகைகளிருக்கும். ஸ்திரீகளின் வஸ்திரத்துக்குப்புடவையென்றே பேர். ஸாதாரணமாக அது இருபது முழ நீளமும் இரண்டரை முழ அகலமும் உள்ளதாகவிருக்கும். அதுவும் முன் கூறப்பட்ட தட்டுடுக்கையாகவே தரிக்கப்படும். ஸ்திரீகள் வீட்டிலிருக்கும்போது தேகத்தின் மேல்பாகத்தைத் திறந்தே போட்டிருப்பார்கள். வெளியில் சென்றால் நன்றாக மறைத்துக்கொண்டு போவார்கள். நம்பூதிரி ஸ்திரீகள் ரவிக்கை போட்டுக் கொள்வதில்லை. அவர்கள் பிறர் கண்ணில் படக்கூடாத "கோஷா" ஸ்திரீகளாவர். தங்கள் தங்கள் புருஷர்கள், தகப்பன்மார், நெருங்கிய உறவினர் இவர்களின் முகத்தை மட்டும் தான் அவர்கள் பார்க்கலாம். வெளியே சஞ்சரிக்கும்படி நேர்ந்தால் அவர்கள் நாயர் ஸ்திரீகளை முன்னிட்டுக்கொண்டு, பெரிய ஓலைக் குடையொன்றால் தேகத்தை மறைத்துக்கொண்டு செல்வார்கள்.

நகைகள். புருஷர்கள் தங்கத்தினாற் செய்த மோதிரங்களையும், அரைஞாணில் கோர்க்கப்பட்ட ரக்ஷாபந்தன மொன்றையுமே நகைகளாக அணிவார்கள். அக்கிதிரி, ஹோமதிரி முதலிய வைதீகர்கள் காதுகளில் பெரிய குண்டலங்களை அணிந்துகொள்வார்கள். மற்றையோர்கள் காதுத்துளையுடையோராயினும் யாதொரு காதணியையும் தரிக்க மாட்டார்கள். ஸ்திரீகளும் அதிக நகைகளைத் தரிப்பதில்லை. கழுத்தில் தாலியும், குழைவைத்துப் பட்டுச்சரடு கோர்க்கப்பட்ட பொன் நாணயத்தாலான ஒரு மாலையும் இருக்கும். காதுகளில் ஒரு விதமான பொன்னோலைமட்டுமுண்டு; பித்தளையினாலாவது வெண்கலத்தினாலாவது செய்யப்பட்ட உள் கூண்டான காப்புகள் கைகளில் அணியப்படும்.

(இது அடுத்த ஸஞ்சிகையில் முடிவு பெறும்.)



# சுகாதார விதிகள்

## THE RULES OF HYGIENE

### ஸ்நாநத்திற்குத் தண்ணீர் வகைகளின் குணதோஷங்கள்

அதி குளிர்ச்சியான தண்ணீர்.—"இது பலமுள்ள சரீரங்களுக்கே ஏற்றது. குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்வதாலுண்டாகும் நன்மைகள் என்னவென்றால் (i) ரக்தவோட்டம் வேகப்படும்; (ii) சரீரயந்திரங்களில் ரக்தக்கட்டுகள் நீக்கப்படும்; (iii) வியாதி, அதிகப்படிப்பு, தூக்க விழிப்பு, அதிக சிற்றின்பபோகம் முதலியவைகளால் சோர்வடைந்தவர்களுக்கு குளிர்ந்த ஜல ஸ்நாநம் நன்மையையும், பலத்தையும் கொடுக்கும்.

[குறிப்பு:—பலவீனர்கள் குளிர்ந்த ஜலஸ்நாநத்தால் தங்கள் தேகத்தைப் பலப்படுத்திக்கொள்ளமுயன்றால், அவர்கள் ஸ்நாநத்திற்கு முன்பு, தேகத்தைத் தேய்த்து அனலெழுப்பிக் கொள்ளவேண்டும். சரீரமுழுவதையும் ஒரே காலத்தில் தண்ணீரில் நனைக்காமல் முகம், கழுத்து, மார்புமுதலியவைகளை முதலில் நனைத்துக்கொண்டு, பிறகு ஸ்நாநம் செய்யவேண்டும். யாரும் கால் முதலிய சரீரத்தின் கீழ்ப்பாகங்களை நெடுநேரம் நனையும்படி இடங்கொடுக்கக் கூடாது. இப்படிச் செய்வதால் ரக்தாசயம் சுவாஸாசயம்முதலிய சரீரமத்ய யந்திரங்களில் அதிகரக்தம் கட்டி தீமையுண்டாகும். ஸ்நாநம் செய்தான பிறகு ஈர வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டிருக்கும் வழக்கம் கெடுதல்.]

மந்தோஷ்ணமான ஜலம்:—இது குளிர்காலங்களுக்கேற்றது. பலவீனர், கர்ப்பிணிகள், சிறு குழந்தைகள் இவர்களுக்கும் ஏற்றது கடினமான தேகமுயற்சிகளுக்குப் பிறகு நல்லது.

வெந்நீர்:—பொதுவில் இது தேகத்தளர்ச்சிக்கு ஹேது வாதலால் நன்மையல்ல. ரக்தக்கட்டுகள், சுளுக்கு, உழைப்பினாலுண்டாகும் சரீரச்சோர்வு முதலியன இருக்குங்காலங்களில் வெந்நீர் ஸ்நாநம் நன்மையைத்தரும். வெந்நீர் ஸ்நாநம் செய்தான பிறகு சரீரத்தில் குளிர்ந்த காற்றுப்பட விடக்கூடாது. சூடான வெந்நீர் குழந்தைகளுக்கு நன்மையென்றெண்ணும் ஸாதாரண ஜநங்களின் அபிப்பிராயம் முற்றிலும் தவறு.

கடல்நீர்:—சரீரத்திற்கு மிகவும் ஹிதமானது. ஜலத்தில் இறங்கினவுடனே ஓர்வித மபக்கமும் திக்கு முக்காடும் உண்டாகும். சற்றுநேரத்திற்கெல்லாம் அவை மாறி, மன உத்ஸாகம் முதலிய இன்பமான உணர்ச்சிகள் உண்டாகும். அவை நிற்கும்வரையில்தான் கடல் ஸ்நாநம் ஹிதம் செய்யும். அவை குறைய ஆரம்பித்தவுடன் கரையி லேறிவிடவேண்டும்.

அப்யங்கனம்:—எண்ணெயை ஸ்வல்பமாகச் சுடவைப்பதனால் மெல்லிதாகி சரீர துவாரங்களில்பிரவேசித்து நன்மைபயக்கும். எண்ணெய் தேய்த்து வெகு நேரம் ஊறவைப்பது நன்மையன்று. குளிர்ச்சிக்குணமுள்ள பச்சிலைகள் சேர்த்துத் தைலங்கள் செய்து உபயோகப்படுத்தலாம். அப்யங்கன ஸ்நாநம்ஆனவுடனே, மிளகு ரஸம் போட்டு சாதம் சாப்பிடவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்; அது பிசகு. ஸ்நாநத்தால் தேகம் குளிர்ந்திருப்பதால் ஜீரணத்தில் தீவிரமாய் பிரவேசிக்க சரீரம் இடம்கொடுக்காது. ஆகையால் சரீரத்தில் அனல் ஸ்வபாவமாய் உண்டான பிறகு, லகு ஜீரண யோக்கியமான ஆகாரம் சாப்பிடுதல் நன்று.

பொதுவாக ஸ்நாநம் செய்யும்பொழுது நகங்கள் முதலிய மிக அல்பமான பாகங்கள் கூட நன்றாய் ஜலத்தால் சுத்தி செய்யப்பட்டு, அழுக்கு எடுக்கப்படவேண்டும்.

வஸ்திரம்:—நமக்கு விசேஷமாய் உபயோகத்திலிருப்பது பருத்தித் துணிகளே. வண்ணானிடம் கொடுக்கப்பட்டு, அவன் வெளுத்து, கஞ்சிபோட்டு 'இஸ்திரி' செய்த உடைகள் மிகவும் நாகரிகந்தான், பார்வைக்கும் அழகுதான். ஆனால் அவ்வுடைகள் சரீரத்தின் வியர்வை முதலிய ஈரங்களை ஆகர்ஷித்து, கஞ்சிமா புளித்து, துர்க்கந்தத்திற்கு இடங்கொடுத்துப் பல விதமான சர்மரோகங்களுக்கு இடமாகிறது. மேலும் பல வியாதிஸ்தர்களின் உடைகளோடு நம்முடைய உடைகளும் வண்ணான் வீட்டில் ஒன்றாய்ச் சேர்ந்து கிடக்கிறபடியால், அது வியாதிகள் பாவுதற்கு ஸாதகமாயிருக்கிறது. ஆகையால், நேராக சரீரத்தோடு ஸம்பந்தப்படுகிற வஸ்திரங்களையாவது வண்ணான் மடியாக உபயோகிக்காமல் நனைத்துத் தோய்த்து உபயோகித்தல் நலம். அன்றன்றாடகம் வஸ்திரங்களை அவரவர் சுத்தமாய்த் தோய்த்துவிடும் பட்சத்தில், கோடிவஸ்திரங்கள் தவிர வேறு

வண்ணானுக்குப் போடவேண்டிய அவசியமேயில்லை.

பிளானல் (Gauze Flannel) என்ற மெல்லிய கம்பளியுடைகள் எப்பொழுதும் சரீரத்திலிருப்பது நலம். ஆனால் பிளானல்கள் சரீரத்தோடு நேராக ஸம்பந்தித்தல் அவ்வளவு நன்றன்று. வியர்வை, அழுக்கு முதலியவை ஸம்பந்தித்தால் அவைகளை வெயிலில் உலர்த்தினால், அதனாலேயே பிளானல்கள் சுத்தமடையும் குணமுடையவை. மேலும் ஸோப்பினால் சுத்தம் செய்வதற்கு மிகவும் ஸுலபமானவை. ஆனால் கற்களில் அடித்துத் தோய்க்கக்கூடாது. கோடைகாலத்தில் பிளானல் உபயோகப்படுத்தக்கூடாதென்று சொல்வது மூடத்தனம். குளிர்காலத்தில் பிளானல் சரீர உஷ்ணத்தைவெளிவிடாமல் காக்கிறது. கோடைகாலத்தில் வெளியிலுள்ள உஷ்ணம் சரீரத்தில் தாக்காமல் காக்கிறது.

சிறுகுழந்தைகளுக்கு குளிர் தாங்குகிற சக்தி மிகவும் குறைவு. அவர்கள் சரீர உஷ்ணம் வெகு ஸுலபமாய் அல்ப காரணங்களால் குறைந்து விடுகிறது. சரீர அனல் குறைவது மிகவும் அபாயகரம் என்று யாரும் அறிவார். ஆகையால் தகுந்த உடைகளைக்கொண்டு குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாயிருக்க, நம்முடைய நாட்டில் இவ்விஷயத்தை அவ்வளவாய் கவனிக்காமலிருப்பது துக்ககரமான விஷயம். குளிர்காலங்களில் பிளானல் முதலிய நல்ல துணிகளால் குழந்தைகளின் உடம்பைமட்டும்மூடி கைகால்களைத்திறந்துவிட்டு வைக்கும் வழக்கம் மிகவும்கெடுதல். குழந்தைகளுக்கு மெதுவான பருத்தி நூல் உடைகள் தரிப்பித்து அதன் மேல் பிளானல்உடைகளை தரிப்பித்தால், காடுமுரடான பிளானல் துணியால், குழந்தைகளின் ஸன்னமும் மிருதுவுமான தோலுக்குச் சேதம் ஏற்படாது. குழந்தைகள் விஷயத்தில் இவ்விதஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளாததால்தான், நம் நாட்டுக் குழந்தைகளுக்கு விசேஷமாய் அஜீரணம், வாந்தி, வயிற்றோட்டம், பேதி, ஜலதோஷம், இருமல், காய்ச்சல், மந்தம் முதலிய பல மோசமான வியாதிகளுண்டாகின்றன.

சிறுவர்களுக்குச் சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் விருத்தாப்பியர்களுக்கும் அர்வயிக்கும்.

பெல்ட் என்ற அரைக்கச்சைகளைக்கொண்டு வலுவாக இடுப்பில் பிணித்தலை நிறுத்தவேண்டும். அரைக்கச்சைகளின் உபயோகத்தையே நிறுத்துவதாயிருந்தாலும் நலந்தான். இப்படி இறுக்கிக் கட்டுவதனால் அரைகடி முதலிய வியாதிகள் வருகின்றன. ரத்தவோட்டம் தடைப்படுகிறது. கச்சையை யவிழ்த்தவுடனே அந்த விடத்தில் ஒருவிதமான குறுகுறுப்புண்டாவது யாவருடைய அனுபவத்திற்குள்ளும் வந்திருக்கலாம். தடைப்பட்டிருந்த ரத்தவோட்டம் மறுபடி ஸஞ்சாரத்திற்காரம்பிப்பது தான் அதன் காரணம்.

பொதுவாய்ப் பேசுமிடத்து,உடைகள் எவ்விடம் தரிக்கப்படுபவையாயிருந்தாலும், அவைகளை இறுகக் கட்டுவது மிகவும் தீமையானது. வஸ்திரங்களால் வயிறு இறுக்கப்பட்டால் ஜீர்ணேந்திரியங்களுக்கும், மார்பு இறுக்கப்பட்டால் சுவாஸாசயங்களுக்கும், கழுத்து இறுக்கப்பட்டால், கழுத்திலுள்ள பெரிய ரத்தக்குழாய்களுக்கும் தீமையேற்படுகிறது.

தலைகளில் தலைப்பாகை வைத்துக்கொள்ளும் காலங்களிலும், உச்சித் தலையின்வழியாய், மற்றபாகங்களுக்குக் காற்றோட்டமிருக்கும்படியாக பாகைகள் கட்டப்பட்டிருக்கவேண்டும். குல்லா (Cap) க்களிலும் உச்சித்தலைக்கு நேராக துவாரங்கள் இருத்தல் நன்று; இல்லாவிட்டால் மண்டையும் அதன்மூலமாய் மூளையும் உஷ்ணப்படுவதோடு, தலையில் அகாலத்தில் வழுக்கை விழுவதற்கும் அது ஒரு காரணமாகும்.

ஈரமான வஸ்திரங்களையும் அழுக்கடைந்த வஸ்திரங்களையும் உடுத்திக்கொண்டிருப்பதால் உண்டாகும் தீமைகள் முன்னமேயே ஓரிடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகாரம்:—நம்முடைய சரீரத்தில் ஓயாமல் வேலை நடந்துகொண்டிருப்பதனால், அநேகம் வஸ்துக்கள் உபயோகமற்றுக் கழிக்கப்படுவதினாலும், அக்குறைவை நிவர்த்திக்கப் புது வஸ்துக்கள் உண்டாக்க வேண்டியதின் நிமித்தம், சரீரதத்துவ விருத்திக்கேற்ற ஆகாரங்களை மனிதன் உட்கொள்ளவேண்டியது அவசியமென்றாயிற்று.

எவ்விதமான ஆகாரங்களை நாம் உட்கொள்ள வேண்டுமென்று அறிவதற்கு ஸுகஜீரணம் எந்த நிபந்தனைகளுக் குட்பட்டதென்று அறிந்துகொள்ளவேண்டும்.



முக்கியமாய் நாமுட்கொள்ளும் போஜனத்திற்கு இருவிதமான பிரயோஜன முண்டு:—(i) சரீரத்திலிருந்து கழிந்துபோன பதார்த்தங்களுக்கு ஈடுசெய்வது; (ii) தேகத்தின் ஸ்வபாவ உஷ்ணம் மாறாமல் காத்துக்கொள்வது. இவை எப்பொழுதும் ஞாபகத்தில் இருக்கவேண்டும்.

ஆகாரம்:—மாப்பண்டம், அல்பூமின் பண்டம், நெய்ப்பண்டம் என மூன்றுவகைப்படும். இவைகளில் மாப்பண்டமானது வாயிலூறுகிற உமிழ்நீராலும், அல்பூமின் பண்டங்கள் குக்ஷி நீராலும், நெய்ப்பண்டங்கள் பித்தநீர், கணைநீர் இவைகளாலும் இவ்வளவிலும் ஜீரணிக்கப்படாதபாகங்கள் குடல்நீராலும் ஜீரணத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. ஜீரணமாக, ஆகாரங்களெல்லாம் தங்களுடைய ஸ்வரூபம் மாறிக் கரைந்து ரத்தத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டு, சரீராவயவங்களோடு தன்னினப்படுதலுக்குத் தகுந்த ஸ்திதிக்கு வருதலாம்.

ஆகார வகைகளை வேறுவிதமாகவும் பாகுபாடு செய்திருக்கிறார்கள். முதல் வகுப்பு: சதையை உண்டுபண்ணும் ஸத்துள்ள பதார்த்தங்கள்-உதாரணம்: இறைச்சிகள்,பால்,பயறுகள் முட்டைகள் முதலியன. இரண்டாவது வகுப்பு: கொழுப்புப் பதார்த்தங்கள்—உதாரணம். பலவகை நெய்களும் எண்ணெய்களும். மூன்றாவதுவகுப்பு: கரிஜலவஸ்துக்கள்(Hydro carbons); உதாரணம்—பலவகை மாக்கள்,மாசத்துகள் (Extracts), சர்க்கரைகள். நான்காவதுவகுப்பு: உப்புகள். உதாரணம்—சாதாரண உப்பு காய்கறிகளிலுள்ள பலவிதமான உப்புகள், சுண்ணாம்பு, இரும்பு முதலியன.

மேற்சொல்லப்பட்டிருக்கும் பாகுபாடுதான் சாஸ்திர திருஷ்டிக்கு மிகவும் ஸம்மதமானது. எந்த போஜனத்தில் இந்நான்குவகைகளும் ஸரியான அளவு கலந்திருக்கின்றனவோ அந்த போஜனந்தான் பூரணமான போஜனமாகும். ஆகிலும் மூன்றாவது வகுப்புத்தவிர மற்றைய வகுப்புக்கள் போஜனத்திற்கு இன்றியமையாதவைகள். அதெப்படியென்று அறிந்து கொள்ளுவதற்கு அவ்வவ்வகுப்பு போஜனபதார்த்தங்களின் இயல்பு எப்படியென்று சற்று நிதானிக்கவேண்டும்.

(i) சதையை வளர்க்கும் வகை பதார்த்தங்கள் சரீரபலத்திற்கும் உறுதிக்கும் மனோபலத்திற்கும் அவசியமானவை. இவைகளால்தான் சரீரயந்திரங்கள் செழிப்பாக வளரவேண்டும். இவைகளை நாமெவ்வளவுக் கெவ்வளவு சாப்பிட்டு, அவை தன்னினப்பட்டு சரீரத்தில் சாருகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சரீரத்திற்குக் திடமும் மனோதத்துவங்களுக்குப் பலமும் ஏற்படுகின்றன.

(ii) கொழுப்புப் பதார்த்தங்கள் முதல் வகுப்பு ஆகாரங்கள் ஸரிவர ஜீரணமாவதற்கு வேண்டிய உதவி செய்கின்றன. சரீரத்திலுள்ள சிலவகை நரம்புகளை அவை ஒருவாறு போஷிக்கின்றன. முக்கியமாய் சரீரத்தின் ஸ்வபாவ உஷ்ணத்தைக் காப்பாற்றிவைத்துக் கொள்வதற்கு இவை மிகவும் அவசியமானவை.

(iii) இவ்வகுப்புப் பதார்த்தங்கள் சரீரத்தின் ஸ்வபாவ உஷ்ணத்தை காத்துக் கொடுக்கக்கூடியனவே யன்றி, சரீரவளர்ச்சிக்கு எவ்விதத்திலும் உதவி செய்யக்கூடியவையல்ல. என்றாலும் தேகம் பூரண ஸௌக்கியத்துடனிருப்பதற்கு இவை மெத்த அவசியம். இவை சரீரத்துடன் ஸம்பந்தப்பட்டு, வேண்டிய அளவு அனலை எழுப்பி மீதப்படும் பாகங்கள் கொழுப்பாகமாறி, சரீரத்திலேயே நிலைக்கின்றன. முதல் வகுப்புப் பதார்த்தங்களைக் காட்டிலும் இவை போஜனத்தில் மூன்று முதல் நான்கு மடங்குவரை சேரவேண்டுமென்று வைத்திய சாஸ்திரிகள் அபிப்ராயப்படுகிறார்கள்.

(iv) இவை இன்றியமையாத வகுப்புகளில் ஒன்று. தண்ணீரும் இவ்வகுப்பைச் சேர்ந்ததுதான். சிறுகுழந்தைகளுக்குத் தகுந்த அளவு தண்ணீர் கொடுக்கப்படாததினாலேயே வளர்ச்சி ஸரிவர ஏற்படுகிறதில்லை. இவ்வகை போஜனங்கள் எலும்பு முதலிய சரீர யந்திரங்களின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவை. ஸாதாரண உப்பு சரீரத்திற்கு மிகவும் முக்கியமானது. ஒரு நாளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் உப்பு சரீரத்திற்குச் சேராவிட்டால், உடம்பிற்கு அஸௌகர்யம் உண்டாகக்கூடும். வயிற்றில் பூச்சிகள் உற்பத்தியாகும்.

---

ஒரு புதிய முனிஸிபாலிடி.—ராமனாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த விருதுப்பட்டி 1915-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல்தேதி முதல், ஒரு முனிஸிபாலிடியாக ஆக்கப்படும் என்று கவர்ன்மெண்டு உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# ஐரோப்பிய யுத்தம்

## THE GREAT EUROPEAN WAR

சிற்றுளியால் கல்லும் தகரும்!

முக்காலத்து தேவாஸுர யுத்தங்கள் போலவும், மஹாபாரதப் போரைப் போலவும், வெகு மும்முரத்துடன் தற்காலம் நடந்துவருகிற ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றி அறியாதார் யார்? நாம் இதுவரையில் கேட்டுள்ள யுத்தங்களில் இரு கட்சியாருக்கும் இடையிடையே ஒழிவு வேளை யிருந்ததெனவும், அப்பொழுதும் சிறு ஸமாதானங்களினால் சற்று களைப்பாறி மறுபடி பல விருத்தியுடன் போர்செய்தன ரென்றும் அறிகிறோம். ஆனால் இப்பொழுது நடந்துவரும் பெரும் போரிலோ ஒழிவு என்பதும் இடையாது. ஸமாதானமும் இல்லை. யுத்தமுனைக்கு இன்னும் ஆட்கள் வேண்டும். தேசத்தின், ஜன்மபூமியின் பாதுகாப்பினிமித்தம் எல்லாரும் முன் வரவேண்டியது என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதே பெரும்பேச்சாயிருக்கிறது. இருகட்சிகளிலும் பின்னடைபவரைக் காணோம். ஆஸ்ட்ரியாபோன்ற சில நாடுகள் உள்நாட்டுக் கலஹங்களினால் ஸமாதானத்தைக் கோருகின்றனவென்று ஸமாசாரங்கள் அடிக்கடி வெளிவந்த போதிலும் "இந்த யுத்தத்தில் முதன்மையாய் வந்துள்ள ப்ரிடிஷ் ராஜ்யமும் ஜெர்மன் ராஜ்யமும் தங்களில் எவராவது தீர்மானமாய்த் தோல்வி யடைகிறவரையில் போரை நிறுத்துவதில்லை" என்று போட்டி போட்டுக் கூறுவதுபோல் விஷயங்கள் தற்சமயம் நிற்கின்றன.

இவ்வாறு இவைகள் ஒன்றிற்கொன்று போட்டி செய்வானேன் என்ற சங்கை நிகழலாம். இந்தப் போட்டிக்குக் காரணமாகிற விஷயங்களைப்பற்றி சவிஸ்தாரமாய் நம் ஸஞ்சிகையில் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். ஆனபோதிலும் இங்கு இன்னம் வேறுசில காரணங்களைக் கூறி அவற்றின் இயற்கையை ஆராய்வோம். இப்பெரும்போரில் அகப்பட்டுத் தத்தளிக்கும் மனுஷ்யஸங்க்யையைப்பற்றி நினைத்தலும் மனஸிற்குப் பெரும் துக்கத்தைத் தருகின்றது. ஹா, கஷ்டம்! கஷ்டம்!! தம் நாட்டின்பொருட்டும், ஸத்தியத்தின்பொருட்டும், தர்மத்தின் பொருட்டும், தம் அரசன், இனத்தார், ஸ்வதந்திரம், ஸஹோதரத்வம் ஆகிய பல விஷயங்களின் நிமித்தமும் ரணகளத்தில் உயிர்நீத்தவர் எத்தனையாயிரம்பேர்! பத்திரிகைகள் மூலமாய் வரும் மரணஜாப்தாவில் இருக்கும் பெயர்களைத் தவிர இறந்துகிடப்பவர்கள் எத்தனை பெயரோ! காயப்பட்டவர்கள் ஸாதாரண குடும்பத்திலுதித்து போருக்குச் சென்றிறந்து போனவர்கள் எத்தனை பேர்! பகைவரது ஸைன்யத்திலும் இதேமாதிரி இவர்களினும் அதிகமாய் உயிர் நீத்த வீரர்கள் எத்தனை பேர்! பகவானே கணக்கெடுத்தற்குரியர். இப்படி இறந்தவர்களின் ஸ்தானத்திலிருந்து போர்செய்ய இருதிறத்தாரும் அவ்வப்பொழுது ஸேனைகள் தயார் செய்கிறார்கள் என்று எல்லோருக்கும் தெரியவரும்.

அதுபோலவேதான் பொருட்செலவு விஷயத்திலும். எந்ததேசம் அதிகமான பொருளைச் செலவழிப்பதற்குத் தயாராய் இருக்கின்றதோ அதன் கட்சியில்தான் ஜயமும் உண்டு. நாகரிகம் முதிர்ந்த இருபதாம் நூற்றாண்டில் மனுஷ்ய பலத்தினாலும் மனுஷ்ய சூக்ஷ்மத்தினாலுமே காரியங்கள் முடிகிறதில்லை. 'மந்திரத்திலே மாங்காய் விழுமோ?' என்பது பழமொழியல்லவா? எவ்வளவு ஆண்மை, வீரம், சௌர்யம்பொருந்திய எண்ணிக்கையில்லா ஆண்மக்கள் போர்முனைக்குச் சென்றிருந்தபோதினும் அதற்குத் தகுந்த அவ்வெண்ணிக்கையினும் மிகுதியான பொருட்செலவு இருந்தாலொழிய யாதொரு கட்சியும் ஜயம்பெறாதென்பது திண்ணம். உதாரணமாக இந்தயுத்தத்தையே எடுத்துக்கொள்வோம். முதலில் ஜெர்மானியர் பாரிஸ் வரையிலும் வெற்றியுடன் முன்வந்ததற்குக்காரணம் என்ன? பெல்ஜியம் அவ்வளவுசீக்கிரத்தில் ஜெர்மானியர் வசம்ஆவானேன்? எண்ணிக்கையில் ஜெர்மானியர் அதிகமானவர் என்பதினாலோ? அலல அல்லது அவர்கள் சூக்ஷ்ம புத்தியுடையவர்கள என்பதா? அதுவும் அல்ல. பின் எதனாலே அவர்களுக்கு முதலில் அவ்வளவு அனுகூலம் உண்டாயிருந்தது என்றால் அவர்கள் இவ்யுத்தத்தை முன்னோக்கி அதற்குத்தகுந்த பொருட்செலவு செய்திருந்தார்கள். அவர்கள் ராஜசக்தி, வீரதீரம், பராக்கிரமம் இவைகளுடன் அவர்களுக்கு பொருள் அநுகூலம் ஏராளமாயிருந்தது. போவதற்கு வேண்டிய வாகனங்கள், புகைவண்டி, ஆகாயவிமானம், மோட்டார்வண்டிகள், தந்தி முதலானவைகளும், போர்வீரர் தம



க்குவேண்டிய உடை ஆகாராதிகளும்தட்டுத்தடையின்றி சேகரிக்கப்பட்டிருந்தன. யாதொரு கஷ்டமுமின்றி' இருந்த விடத்தில் இருப்பது போல் இருந்துகொண்டே போர்புரிவதென்றால் யாருக்குத்தான் எளிதாயிராது. போர்தொடங்கி சிலகாலம்வரையில் ப்ரஞ்சுக்காரர் யாதொரு முஸ்தீப்புக்களுமின்றி வருந்தினர். சில ஆயுதங்கள்கூட அயலாரிடமிருந்து இரவல்வாங்கவேண்டியதாயிற்று. அதேமாதிரியே முதலில்நம்மவர்களுமிருந்துவிட்டனரென்றால் என் சொல்வது! ஆனால் அதிசீக்கிரத்தில் ப்ரிடிஷ்ராஜாங்கம் சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும் என்பதைக் கைக்கொண்டு எல்லாப் பொருள் வசதிகளையும் யுத்தத்திற்கென்று உபயோகித்து வந்ததினால் ஜெர்மானியரை மெதுவாய்ப் பின்நகர்ந்து செல்லும்படி செய்திருக்கின்றனர். ஜெர்மன் ராஜ்யமும், ப்ரிடிஷ் ராஜ்யமும், இந்த பொருட்செலவு விஷயத்தில் ஒன்றற்கொன்று பின்வாங்காமற் போனபோதிலும் ப்ரிடனே முன்னிற்பதை ஒவ்வொருவனும்கண்டறிவான். எத்தனை வருஷங்களாய் யுத்தத்திற்கென்று முஸ்தீப்புகள்செய்து வைத்திருந்தபோதினும் இடைவிடாமல்பொருட்குவிக்கக்கூடியராஜ்யத்தின்முன் ஜெர்மனி வரமுடியுமா? நாலாபக்கங்களிலும் சத்துருக்கள் சூழ்ந்திருக்கும்போது வெளிநாடுகளிலிருந்து ஸாமான்கள் அதனுள் யுத்தத்திற்கு அனுகுணமாய்க் கொண்டுபோகமுடியுமா? அமோகமான பொருட் குவியல்கள் உள்ளிருந்த போதினும் அவை எத்தனை காலந்தான் தாங்கி நிற்கும்? தற்காலம் ஜெர்மனியின் சாமக்ரியைகள் குறைந்து வருகின்றன என்று கேள்விப்பட்டு வருகிறதே இதற்கு ஒரு அத்தாட்சி.

இங்கிலாந்தின் விஷயத்திலோ இப்படியல்ல. உலகமுழுதும் அதன் குடியேற்ற நாடுகளும் மற்று இந்தியா போன்ற ஆதீன நாடுகளும் இருக்கின்றன. மற்றும் அதற்கு அனுகூலமாய் உதவிசெய்ய வரும் நாடுகளும் பல இருக்கின்றன. ஜெர்மனியில் வயல்களில் வேலை செய்து பயிரிட்டு தானிய அறுவடை செய்ய பல்லாயிர ஜனங்கள் வேலைசெய்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்டு வந்தது. அதுவும் தவிர, அவ்விடத்து தொழிற் சாலைகளில் லக்ஷக்கணக்கான தொழிலாளிகள் உழைத்து கணக்கற்ற யுத்தாயுதங்களையும் செய்து முடிக்கிறார்கள் என்று செய்திவருகின்றது. இதனாலேயே ஜெர்மானியர் எவ்வளவு பொருளைத் தம்தேசத்தின் நன்மைக்காக (தீமைக்காகவேதானோ!) செலவழிக்கிறார்கள் என்பதும் அப்பொருள்களை உபயோகப்படுத்துவதில் எவ்வளவு சூக்ஷ்மபுத்தியுடைய சாஸ்திர விற்பன்னர்கள் முயன்றிருக்கிறார்கள் என்பதும் வெளியாகும். அவர்கள் கட்டிமுடிக்கும் விநோதமான ஸெப்ளின் ஆகாய விமானங்களும் அவைகளிலிருந்து அழகிய நகரங்களுக்கு யமனைப்போல் வந்து குதிக்கும் வெடிகுண்டுகளும், பெரும் கோட்டைகளையும் க்ஷணநேரத்தில் நாசஞ்செய்து தவிடுபொடியாக்கும் யந்திர பீரங்கிகளும், அவர்கள்நாட்டு ஆண்மையையும் புத்திசூக்ஷ்மத்தையும் மாத்திரமே காட்டுவதன்றி அவர்கள் ஏராளமாய்ச் செலவழிக்கும்பொருட் செல்வத்தையும் குறிப்பிடுகின்றது. அவர்கள் நாட்டின் மீது ஒருவரும் படையெடுத்து வாராவண்ணம் அவர்கள் செய்துள்ள பல உபாயங்களும் கடற்படைகளை விருத்தியாக்கி கடலில் உண்டாக்கும் பெரும் சேதங்களும் ஜெர்மானியரது திறமையைப் பற்றியும் அவர்கள் முன்ஜாக்கிரதையைப் பற்றியும் எல்லோரும் வியக்கக்கூடிய வண்ணம் செய்துவிடுகின்றது. "ஆகவே அதற்கேற்ப, இக்கொடிய சத்துருக்கள்—ஜெர்மானியர் அல்ல—பலவித கொடிய யுத்தாயுதங்கள், ஸெப்ளின் ஆகாயக்கப்பல்கள், பெரும் க்ருப் பீரங்கிகள், கொடிய கடற்சுரங்கங்கள், ஸப்மெரீன்கள், வெடிகுண்டுகள்—இவைகளைச் செய்தற்குரிய பொருட்பேறுகள் வேருடன் அழியும்படியான வழியைநாடவேண்டும். நாம் ஈஸன் (யுத்தாயுதத் தொழிற்சாலை யிருக்கும் பட்டணம்) தொழிற் சாலைகளுக்குப் பின்வாங்காமலிருக்கவேண்டும். கூடிய சீக்கிரத்தில் அந் நகரம் சென்று அத்தொழிற்சாலைகளை என்றைக்கும் தெரியாதபடி நாசஞ் செய்யவேண்டும். வெஸ்ட்பேலியா (Westphalia) வைத் தவிர பெர்லின் முக்யமானகுறியல்ல இந்த மேலமர்க்களத்தில். இப்பொருட்போரில் அதாவது இந்த மேல் ஐரோப்பிய நாடுகளின் யுத்தத்தில் கைத்தொழிற் கிருப்பிடத்தையே தவிர ராஜதானியின்மீது பகைகொண்டு படைகளைச் செலுத்தல் நன்றன்று" என்று ஓராங்கில கனவான் கூறியிருக்கின்றனர். ஆகையால் தற்கால நாகரிகப் போக்கைமாற்றி மானிட அறிவை

(இதன் தொடர்ச்சி 292-ம் பக்கம்.)

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 47. சீர்மை மறவேல்

சிறப்பை மறவாதே என்பது இதன்பொருள். சிறப்பு அல்லது சீர்மை என்ற சொல்லுக்கு சிறப்புதரக்கூடிய நடவடிக்கைகள் என்ருவது தன்னிடமிருக்கும் சிறப்பு என்ருவது பொருள் கொள்ளலாம். இதனுல் சிறப்பு உண்டாக்கக்கூடிய காரியங்களை மறவாதிருந்து அவைகளை நடத்தி சிறப்புபெறத் தயாராகவிருக்கவேண்டும் என்றும், நமக்கு எவ்வளவு தாழ்ந்த நிலைவந்தாலும் மனம் அழியாதும், உயர்ந்த நிலைவந்தாலும் முழுகிமயங்கி விடாமலும், நமது சிறப்பை மறவாதிருந்து அதற்கேற்ப நடந்துகொண்டு அமைதியாக இருக்கவேண்டுமென்றும் இந்தஸூத்திரம் இருவகையாகப் பொருள்படும் என்பது விளங்கும். இப்படிப்பட்ட இருவகைப் பொருள்கள் பின்வருமாறு மூன்றுவிதமாகப் பிரிந்துநிற்கும்.

சிறப்பான காரியங்களை மறவாதிரு:—சிறப்புதரக்கூடிய காரியங்கள் இருவகைப்படும். அவையாவன லௌகீக சீர்மையாகிய சீர், சிறப்பு, புகழ், செல்வாக்கு, பணக்காரநிலை முதலியவை அடங்கியதும், வைதிகச் சீர்மையாகிய சித்தசுத்தி அமைதி முதலிய ஆத்மகுணங்கள் அடங்கியதுமே. இவை இரண்டின் ஸந்மார்க்கத்தில் பழகிவருபவன் முதலில் லௌகீகச் சீர்மையை மறவாது நடந்துகொண்டுவரவேண்டும். இடை இடையே வைதீகச் சீர்மையின் தன்மையையும் ஆராய்ந்து உணர்ந்துகொண்டு வரவேண்டும். இப்படிச்செய்துவந்தால் வைதிகச்சீர்மையின் ஏற்றம் விளங்கி அதில் பற்று ஏற்படத்தொடங்கும். சிற்சில ஸமயங்களில் இரண்டு சீர்மைக்கும் பொருந்தா தர்மஸங்கட நிலைகள் வர அவைகளில் வைதிகச் சீர்மையை மறவாது நடக்கவேண்டிய திடம் அப்யாஸம் முதலியன ஏற்பட இடம் உண்டாகும். இப்படிச் சிறப்புடைய காரியங்களை மறவாது முயலுங்கால் லௌகீகச் சிறப்பி லிருந்து வைதிகச் சிறப்பிற்குள் விருத்தியாகி நிலைத்துவிட முயலவேண்டும் என்பது இந்த ஸூத்திரத்தில் அடங்கிய கருத்து. இந்த மாதிரியான அபிவிருத்தி மனோநிலையிலிருந்துதான் த்ருவர் போன்றவரும் கோபிகைகள் போன்றவர்களும் முதலில் காம்யமாக தமது லௌகீக ஸுகச் சிறப்புகளைப் பெரிதாக எண்ணி பகவானை அணுகி பக்திசெய்யப் புகுந்தாராயினும் அது முதிரமுதிர அவர்களுக்கு நிஷ்காம்யமான வைதிகச் சிறப்பைப்பற்றி மறவாதிருக்கும் நிலைவந்துவிட்டது. த்ருவர் பகவானைக் கண்டதும் பரமபதம் வேண்டும் என்ருர். கோபிகைகள் பகவானது பிரிவில் அவரிடமே தீவ்ரமான மனப்போக்குடையவராகி பின்னர் உத்தவரால் கொண்டாடப்பட்டனர். ஆகவே சிறப்புத்தாக்கூடிய ஒழுங்குக்கு விரோதமில்லாத காரியத்தை மனதார மறவாதிருந்தால் அவைகளில முயற்சி உண்டாகி மேல்படிகளில் போகும் திறன் நமக்கு உண்டாகும்.

(2) பிறவிச் சிறப்பை மறவாதிரு:—மானிடப் பிறவிக்கே ஒரு சிறப்பு உண்டு. அதற்குப் பகுத்தறிவென்று பெயர். இதனேடுதன்னையே உணரும் தன்மையும், தனக்கு வேண்டியவைகளை வகுத்து உணரும் தன்மையும் உண்டு. முற்கூறிய பகுத்தறிவை இவ்விரண்டிலும் செலுத்தும் திறன் மனிதனுக்கு மாத்திரந்தான்; மற்றைய பிராணிகளுக்கு இல்லை என்றே கூறிவிடலாம். நமக்குத் தேவையான வஸ்துக்களிலே மனதைச் செலவிட்டு வாணிபம் பொருள் தேடுதல் முதலிய லௌகீக வழிகளில் பகுத்தறிவை செலவிட்டால் சீக்கிரத்தில் பகுத்தறிவு தாழ்ந்துபோய் அந்தச் சிறப்பையும் மறந்துவிடும்படியான கொடியநிலையும் நமக்கு வந்து போபத்திற்கு இடமுகும். தற்காலத்தில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய மஹாயுத்தமே இதற்குத்தகுந்த திருஷ்டாந்தம். தற்காலத்தில் சீர்மை மறந்ததால் ஓங்கிவரும் நாகரிகத்தின் ஒழுங்கான முடிவு இதுதான். இப்படிப் பகுத்தறிவைச் செலுத்தாது, மானிடர்களுக்கு தமது ஜீவனகாலம் வரையில் வேண்டுவது கொஞ்சம்தான்: அதுவும் அதிகமாக

(291-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஸரியானவழியில் செலுத்தி எங்கும் ஒருவருக்கொருவர்சண்டை சச்சரவு செய்யாமல் தங்கள் பொருட்பேற்றை பெருமையுடன்போற்றி நல்வழிகளில் விநியோகப் படுத்தும்படியாய் அருள் செய்யும்படி பகவானைப் பிரார்த்திக்கின்றேம்.



இல்லை: ஆதலால் எல்லோரும் ஸுகமாக எவ்வளவு குறைவான அளவில் ஜீவிக்க முடியுமோ அப்படி ஜீவிக்கவேண்டியதில் மாத்திரம் பகுத்தறிவைப் பாவவிட்டு, பின்னர் இப்படி ஜீவிப்பதில் ஸுகம் தருவதற்கு ஆதாரமாக உள்ளசீர்மை எது என்பதை அறிந்து அமர்ந்திருக்கத்தான் நமக்குப்பகுத்தறிவாகிய சீர்மை வந்தமர்ந்துள்ளது, ஈசன் கருணையால், என்றுணர்ந்து அதைமறவாது ஆராய்ந்து பழகித்தெளிந்துநமதுஸனுதன தர்மத்திற் கூறியபடி, வந்தால் உண்மையான ஸுகமும்அபிவிருத்தியும்உண்டாகும். இப்படிப்பட்ட பிறவிச்சீர்மையை மறவாதிரு என்பதும் இச்சூத்திரத்தில் அடக்கம். வைதிகமதத்துள் வந்தால் பிறவிச்சீர்மைக்கு சிறந்த வேறு ஒரு பொருளும் உண்டு. இந்த நமது மதத்தில் பிறவிச்சீர்மையை மறவாதிருந்து பகுத்தறிவின் சிறப்பு ஓங்கிவர வர்ணுச்ரமாதிகள் ஏற்பட்டுள. இவைகளுக்குப் பொதுவாக நடை ஒழுங்குகளான தர்மகர்மங்கள் உள. இவைகளைப்போல பகுத்தறிவை லௌகீக விஷயங்களிலிருந்து ஸுகாதாரத்தில் திருப்பும் வேறு ஒழுங்கு உலகில் மானிடர்களிடம் இல்லவே இல்லை. இப்படிப்பட்ட நான்கு வர்ணத்துள் சீர்மை ஓங்கக்கூடிய கர்மாக்களை உள்ளபடி நடத்தக்கூடிய பிறவியை அடைந்தவர் அந்த சீர்மையை மறவாது அந்த கர்மாக்களின் தன்மைகளையும், அவைகளை நடத்தும் விதங்களையும் உணர்ந்து ஸரிவர அவைகளை அனுஷ்டிப்பதே பிறவிச்சீர்மையை மறவாதிருப்பதாகும். மேலும் இவ்வருணங்களுள் பிராஹ்மண வர்ணப் பிறப்பு மிகச் சிறந்தது. இதன் சீர்மையை மறந்ததால்தான் தக்காலத்து பிராஹ்மணர்கள், 'புலி பசித்தாலும் புல்லைத்தின்னுமா' என்று சீர்மை மறவாதிருப்பதை விட்டு, கண்டவிடங்களில் தின்னுவது, கண்ட நடைஉடை பாவனைகளைப் பின்பற்றுவது, கண்டதொழில்களை கைக்கொள்வது, கண்டவருடன் போட்டிபோடுவது, தம்கர்மம் விடுவது ஆகிய இவைகளைச் செய்து பிறர் த்வேஷத்திற் காளாகிவிட்டனர். நம் பரதகண்டத்தில் ப்ராஹ்மணர் மாத்திரம் பிறவிச்சீர்மை மறவாது நடப்பாராயின், உலகத்திற்கே அதனுல் ஒருவிதத்தில் க்ஷேமமே பிறக்கும். தக்காலத்திய நாகரிகத்தில் மொத்துண்டு பலவிதமாகத் திண்டாடும் வெளிநாட்டார் எல்லோரும் வைதிகவர்ணுச்ரம தர்மம் விவாகதர்மம் முதலிய இவைகளைக் கண்டு மலைத்து ஈடுபட்டுக்கொண்டு வருகையில், நம் நாட்டு ப்ராஹ்மணர் மாத்திரம் உயர்நிலை மயக்கத்தால் நமது வைதிகவர்ணுச்ரம விவாஹாதி தர்மங்களை, தமது சீர்மை மறந்து, பழித்து அழிக்கத் தொடங்குகின்றனரே என்ன காலக் கொடுமை இது! அவர்களிடம் சீர்மை மறவேல் என்ற ஸூத்திரத்தைத் தான் கூறி, அடிக்கடி அவர்கள் நிலையை நினைப்பூட்டவேண்டும். இக்குழப்ப காலத்தில் வேறு ஒன்றும் செய்யமுடியாது. இந்தஸூத்திரத்திலுள்ள மறவேல் என்ற சொல் கவனிக்கத்தக்கது. சீர்மை குலையக்கூடிய காலத்தில் மறவாதிருக்கவேண்டுமே ஒழிய எப்பொழுதும் சீர்மையை நினைத்துக் கொண்டிருக்கலாகாது. அப்படிச்செய்தால் வீண்கர்வமும் இறுமாப்புமாகத்தான் முடியும்.

(3) இயற்கைச்சீர்மை மறவேல்:—முற்கூறியபடி பிறவிச்சீர்மையில் பழகி வந்தால் நமக்குத் தேவையானவைகளைக் குறைத்து பொதுவாக எல்லோரும் ஸுகித்திருக்க இடம்தர, ஒழுங்காக ஜீவனம் செய்து பலஸுகிகளுக்கு இடையில் நாமும் மனுஷ்ய யத்னத்தில் ஸுகியாக மனச்சஞ்சலமின்றி இருக்கும் நிலை வரும். இப்படி இருப்பினும், இந்த ஸுகத்திற்கும் நமது முயற்சி இல்லாமலே இடையூறும் வரலாம், அல்லது உதவிகள்வந்து ஏற்றமும் வரலாம். அப்பொழுது இந்த ஸுகதுக்க உணர்வு நம்முள்ளேயே இருப்பதாக வெளியாகி இதன் ஆதார ஆராய்ச்சி ஸரிவரத் தொடங்கி நிகழ இடம் உண்டாகும். இந்த ஸமயத்தில் வர்ணுச்ரமாதி தர்மங்களும் மிகுந்த உதவியாக இருந்து வைதிகமத ஞானத்தை உண்டாக்கி திடப்படுத்தி, மனிதனுள்ளும் எங்கும்பரவியுள்ள ஞானனந்தப்பொருள் விளக்கம் ஏற்பட்டு உள்ளபடி ஸுகதுக்க அதீதப்பொருள்தான் எல்லாம் என்ற இயற்கை பொருட்சிறப்பு வெளியாகும்: இந்த இயற்கைச் சிறப்பை மறவாதிரு என்கிறது இந்த ஸூத்திரம், இந்நிலையை அணுகித்தே ப்ராஹ்மணனை நோக்கி. அதாவது, காரியத்தில் இந்த அத்வைத பாவனையைக் கொண்டுவரமுடியாதாயினும் எப்பொழுதும் பாவனையில் அத்வைதமாகவே இரு என்ற ஞானி நடத்தைக்கு

ஏற்பட்ட வைதிக ஒழுக்குதான் இந்த ஸூத்திரத்தின் பொருள்: அதாவது வைதிக அத்வைதப் பொருளே தான், நான் வேறல்ல, என்ற உணர்வைத் தாங்கி ஒழுங்கு தவறாது நிற்பதற்கு வேண்டிய பிறவிச்சீர்மையை மறவாதிருந்து வைதிக தர்மப்படி ஒழுகி இந்தப் பழக்க விசேஷத்தால் வைதிக முடிவை அணுகிப் பிடித்து அதையும் மறவாது உலகில் ஒழுகி வந்தால்தான் முற்றிலும் சீர்மை மறவாது ஒழுகினதாகும். இல்லாவிடில் பெரும்பாலும் சீர்மை மறந்து ஒழுகி நிலை குலைந்தோ அல்லது சீர்மை நினைந்து ஒழுகி கர்வம் முதலிய மனக்கொதிப்புள் அகப்பட்டோ தத்தளிப்பதாயும் இடை இடையே சில ஸமயம் மறவாதிருந்த அலங்கோல நிலையும்தான் ஏற்பட இடமுண்டு.

ஆகவே சீர்மை மறவாமை என்பது கத்தி முனை மயிர்ப் பாலம் போன்ற நுட்ப வழி. சற்றுப்பிசகினால் முற்கூறிய இருபுற அபாய நிலையில்தான் விழவேண்டிவரும். இதில் ஸரிவர இயற்கையிலே நடக்க வல்லவன் இங்கு விஸ்தரிக்கப்பட்ட இயற்கைச் சிறப்பை அடைந்த முக்தன் ஒருவனே ஆகவே இவன் நடத்தைவிஷயத்தில் இந்த ஸூத்திரம் முற்றிலும் பொருத்தமுடையது. இவன் ஒருவன்தான் இந்த ஸூத்திரப்படி அணுகூடப் பிசகாது நடந்தவனாவன். நாம் எல்லோரும் முற்கூறிய பொருள்களில் நமக்குத் தகுந்தவைகளைப் பின்பற்றி நாளடைவில் நிஜவைராக்யம் உண்மை உணர்வு ஆகிய இந்த மஹானது நிலைமையை அடைய முயல்வோமாக.

---

**போர்முனையில் வெளிச்சங் கொடுத்தல்.**—ஈஸர் கால்வாயண்டையில் இரவில் போர் புரியும்பொழுது தங்களுடைய ஸோல்ஜர்களுக்கு வெளிச்சங் கொடுப்பதற்காக ஒருவகை வாணத்தை ஜெர்மானியர்கள் உபயோகிக்கின்றனர். அந்த வாணம் பந்துபோல் உருண்டை வடிவமாயிருக்கிறது. அதை ஆகாயத்தே தூக்கி யெறிந்தால், உயரப் போகப்போக அதன் வெளிச்சம் அதிகரிக்கிறது. பின்பு, அது கீழே விழும்பொழுது, திடீரென விழாமல், மெதுவாக சக்கராகாரமாய்ச் சுற்றிக்கொண்டே வருகிறது. மேலும், அதன் வெளிச்சம் கீழேயுள்ள கால்வாயின் ஜலத்தில் பிரதிபலிக்க இன்னும் பிரகாசமாயிருக்கிறது. அதன் வெளிச்சம் 300-கஜதூரம் நாலு பக்கத்திலும் வீசுகிறது.

# உபநிஷத் ரத்னமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 47-ஸுபால உபநிஷத் (30)

ஆதியிலுள்ளது எது என்று ரெய்க்வர் கேட்க பகவான் விடை கூறுவார்:—ஆதியில் ஸத் (ப்ருதிவி அப்புதேயு) அஸத்(வாயு ஆகாயம்) இவைகளின் இன்மை(காரணநிலை) இருந்தது. இதிலிருந்து தமஸ் உண்டாயிற்று. இதிலிருந்தே பூதாதிகளும் முறையே ஆகாயம் முதல் ப்ருதிவி ஈறாகவுள்ள பஞ்சபூதங்களும் வெளிப்பட்டன ஒரு தேவவருஷத்தின் பின்னர் இவைகள் தாமிருந்த அண்டரூபத்திலிருந்து இரண்டாகப் பிரிந்தன. இடையில் அநேகம் காலாதிகளுடைய அகண்ட புருஷனுடன்கூடிய மேலாகாயமாகவும் கீழ்ப்பூமியாகவும், இதன்முன் பூதங்களிலிருந்து ம்ருத்யூ உண்டாக்கப்பட்டான். இவன் புருஷனாகிய ப்ரஹ்மாவுள் புகுந்து அவரிடமிருந்து ஏழு புத்திரர்களையும் ஏழுப்ரஜாபதிகளையும் உண்டாக்கினான். ப்ராஹ்மணாதி வருணத்தவர்கள் அவரது முகாதி அங்கங்களிலிருந்து வெளிப்பட்டார், சந்திரன், ஸூரியன், வாயு, பிராணன் ஆகிய இவைகள் அவர் மனம், கண், காது, ஹ்ருதயம் இவைகளிலிருந்து உண்டாயின. இவ்வாறு எல்லாம் வெளிப்பட்டன. அவர் அபானத்திலிருந்து நிஷாதாதி ஜாதிகளும், எலும்புகளிலிருந்து மலைகளும், ரோமங்களிலிருந்து, மரம், செடி, கொடிகளும், நெற்றியிலிருந்து கோபத்தால் ருத்ரரும், மூச்சுக்காற்றிலிருந்து 4 வேதங்கள் 6 வேதாங்கங்களும், மூன்று தர்சனங்களும், வ்யாக்யானாதிகளும் உண்டாயின. எல்லாம் இந்தப் புருஷனுள்ளேதான் அடக்கம்; அது தன்னையே இருகூறாக்கி ஒன்றிலிருந்து பெண்ணையும் மற்றதிலிருந்து ஆணையும் வெளிப்படுத்தியது. இவை, தேவதைகளாகி தேவர்களையும், ருஷிகளாகி ருஷிகளையும் இவ்வாறே யக்ஷராக்ஷஸகந்தருவர்கள், காட்டு நாட்டு மிருகாதிகளையும் உண்டாக்கியது: பூமியாயும், ஆதாரமாயும் ஆயது, ப்ரளயத் தொடக்கத்தில் முறையே பின் ஒழுங்காய் எல்லாம் ஒடுங்கி ஸத் அஸத் இன்மை நிலையை அடையும் எல்லாம்.

முதலில் அஸத்(ஸர்வதன்மையுமற்றது) இருந்தது. ஆத்ம ஸ்வரூபத்தின் தன்மை யுணர்ந்தவனுக்கு துக்கமேயிராது. அந்த ஆத்மாவுடன் ஒருவித குணமும் இல்லை; அது நிர்குணம். சிலர்தான் இதை ஸத்ய,



தானம், தபஸ், அஹிம்ஸை, ப்ரஹ்மசரியம், அநாசகம் (நிஷ்காம்ய கர்மம்) இவைகளால் அதை அணுகுவார்க்கு வேறுவழியேயில்லை. அதை உணர்ந்தேன் என்ற அனுபவம் வந்தவன், மரணகாலத்தில் தேஹத்தை விட்டு வெளியேறாது அங்கே ப்ரஹ்மமாகிவிடுவன்.

ஹ்ருதய மத்தியில் சிவந்த சதைகண்ட மூளது. அதில் தஹரபத்ம இருக்கிறது அநேகம் இதழுடன் இதற்குள் இருத்வாரம் உள ப்ராணாதிகள் இங்குதான் நிலைபெற்றுள்ளன. ஆத்மா பிராணனுடன் சேர்ந்து உலாவுங்கால் பல உலக வஸ்துக்களைப் பார்க்கிறான். வியானனிடமிருந்து தேவ ருஷிகளையும், அபானனிடமிருந்து புவர்லோகத்தையும் உதானனிடமிருந்து ஸ்வர்காதிகளையும் ஸமானனிடமிருந்து குபேர லோகத்தையும், ரம்பா எனும் நாடியிலிருந்து எல்லாவற்றையும் காண்பன். இப்படிப்பட்ட ஹ்ருதய தஹர ஆகாயத்தில் ஆத்மா எவ்விதப் பற்றுமற்று நிற்கும் ஸுஷுப்தியில், நாடிகள்வழியாக அங்குசென்று, போன வழியே விழிப்பில் திரும்பிவிடும் முன்னிலைக்கும்.

| அத்யாத்மம் | அதிபூதம் | அதிதெய்வம் |
|---|---|---|
| கண் | ரூபம் | ஸூர்யன் |
| காது | சப்தம் | திக்கு |
| மூக்கு | கந்தம் | ப்ருதிவி |
| நாக்கு | ரஸம் | வருணன் |
| தோல் | ஸ்பர்சம் | வாயு |
| வாக்கு | பேச்சு | அக்னி |
| பாணி | பிடிப்பு | இந்திரன் |
| பாதம் | நடப்பது | உபேந்த்ரன் |
| பாயு | வெளிஒழிப்பன | ம்ருத்யு |
| உபஸ்தம் | வெளிவிடுவது | ப்ரஜாபதி |
| மனஸ் | எண்ணம் | சந்திரன் |
| புத்தி | நிர்ணயம் | ப்ரஹ்மா |
| அகங்காரம் | அகம்பாவம் | ருத்ரன் |
| சித்தம் | தொடர்எண்ணம் | க்ஷேத்ரஞ்ஞன் |

நாடிகள்தான் இவைகளைப் பொருத்துவது. இங்கு காட்டப்படும் மூவகையுடைய ஒவ்வொன்றிலும் நாடி, ப்ராணன், விஞ்ஞானம், ஆனந்தம், ஹிருதயாகாசம் மற்றவைகள் எல்லாவற்றிலும் ஊடுருவிப்பாவி நிற்பது தான் ஆத்மா, இதைத்தான் வழிபடவேண்டும். இது ஜரை மரணம், பயம், துக்கம், லயமற்றது. இதுவே தடன் ஐந்து கோசங்களிலும் பூதாத்மா, இந்திரியாத்மா ஸங்கல்பாத்மா, காலாத்மா, லயாத்மாக்களாகவும் இருப்பது. இதுதான் ஸர்வகுண ரஹிதமான நிர்குணம்.

ஆதியில் நாராயணன் தவிர வேறொன்றுமில்லை. முற்கூறிய 14 வஸ்துக்களும், அதன் பிரிவுகளும், தேவதைகள், நாடிகள் வாயுக்கள், கால விசித்ரங்கள் முதலிய எல்லாம் நாராயணனே. இந்த நாராயணனையே தடையின்றி ப்ராஹ்மணர்கள் கண்டு துதிப்பர். (இங்கு அத்யாத்ம உபநிஷத் முதல்பாகம் காணப்படுகிறது) ஆத்மா தேஹ குகையில் உள்ளது: அதைச் சுற்றியுள்ள விசித்ரங்களை எல்லாம் நீக்கி அதின் உண்மையான அஸங்காதி நிலையை உணர்ந்தவனே ஞானி.

'எல்லாம் எதில் ஒடுங்கும்? எவ்வாறு?' என்று ரைக்வர் கேட்க பகவான் சொல்லுகிறார்:—முன்னர் கூறிய 14 தத்துவங்களும் முறையே தமது அதிபூத, அதிதெய்வங்களில் ஒடுங்கி அவைகளேயாம்; பின்னர் முறையே அவை விராட், ஸுதர்சனம், ஜயம், ஸௌம்யம், மோகம், குமாரன், அம்ருதம், ஸத்யம், மது, நாவீனம், சிசு, கிருஷ்ணம், அஸுரம், பாஸவதி இவைகளில் ஒடுங்கி இவைகளேயாய், பின்னர் ப்ராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், வைர்யம், முக்கிய ப்ராணன், ச்வாஸநிரோதம் சண்டமாருதம், கூர்மிரம், ச்யேனம், ஸூர்யன், ச்வேதம், நாகன், ஆகிய இவைகளில் ஒடுங்கி இவைகளேயாகி முடிவில் எல்லாம் விஞ்ஞானம், ஆனந்தம், துரியம் இவைகளேயாகி துரீயத்தில் மறைந்தே போய்விடும். இந்த மரணம், பயம் துக்கம் முடிவு, முதல், இவைகள் அற்றதை அடைவாயாக. இதை இவ்வாறு உணர்பவனும் தன்னிலையடைவன். இவனுக்கு ஒருவித பாதகமும் ஏற்படாது கோபம் கூட இவனிடம் அணுகாது. இப்படிப்பட்ட ஆத்மா பல்தரம் கேள்வி, சாஸ்திரபடனம், நுட்பஉணர்வு, பலசொற்கள், விவேகத்தெளிவு, வேதப்பழக்கம், தவம், ஸாங்கியம், யோகம், வர்ணாச்ரமப்பற்று, மற்றுமுள்ள வழிகள் தனித்தனியாக இவைகளால்மாத்திரம் கைகூடாது. சிரத்தையுடன் ப்ராஹ்மணர்கள் ஒழுங்குப்படி வேதாத்யயனம்பண்ணி அவனைத் துதித்தே அடைவர் அவனை. அமைவு, அடக்க வைராக்யம், ஆத்மாவில் நிலைப்பு இவைகளுடையவனே எல்லாவற்றிலுமுள்ள ஸாரமான ஆத்மாவுடன் ஒன்றுபடுவான்: அப்படியே முற்கூறிய லய ஒழுங்கை உள்ளபடி உணருபவனும் அடைவன். பின்னர் எல்லாம் ரஸாதலத்திலும் அதுமுறையே மேல்மேலான தலங்களை லோகங்களையும் பொருத்து நின்று ப்ரஜாபதி பிரஹ்ம, சர்வலோகங்களைப் பொருத்துநின்று ஆத்மாவையே ஆதாரமாக உடையன என்றுகாட்டப்படுகிறது. ஜீவன் தேஹத்தை விடுங்கால் ஏற்படும் கதிகள் கூறப்படுகிறது. ஹ்ருதயத்தில் நான்கு நாடிகளுள. அவையாவன: ரமா, அரமா, இச்சா, புனர்பாவம் என்பவைகளே, ரமா புண்யலோக மார்க்கம், அரமா நரகமார்க்கம், இச்சா, இஷ்டா பூர்த்திமார்க்கம், புனர்பாவம்தான் தெய்வயான மார்க்கம் எனப்படுவது. இது ஒருவனை மோக்ஷத்திலே கொண்டு சேர்த்துவிடும்.

அன்னம் எல்லாம் நாராயணனே ஆதலால் ஒருவன் கிட்டினதை திருப்தியுடன் அனுபவிக்க வேண்டும், ஆசைப்பட்டு இதற்காக பிச்சையே எடுத்துக் கொண்டிருக்கலாகாது. ஞானி சுகனைப்போல தனிமையாயும் குற்றமில்லாதவனாயும், மௌனமாயும், அறிவுடனும், அதிகார தோரணையை ஏற்காமலும் இருத்தல் வேண்டும். பரமபதத்தில் நிலைத்து, துணி முதலியவைகளைக் கவனியாது மரத்தடியில் ஸமாதியிலேயே மூழ்கிவிடவேண்டும். ஆத்மாவிலேயே ப்ரியத்துடன் ஆசையற்று நின்றுவிட வேண்டும், பயவஸ்துக்கள் அவனைச்சூழ்ந்திருப்பினும்

நிர்பயனாக இருக்கவேண்டும். எவ்வித ஆபத்து வந்தாலும் மரம், தாமரை, ஆகாசம் இவைகள்போலத் தாக்கற்றிருக்கவேண்டும்.

பஞ்சபூதங்கள் அவ்யக்தம் ம்ருத்யு இவைகளில் ஒவ்வொரு தன்மை உண்டு: ம்ருத்யுதான் முடிவானது. இவைகளில் முறையே முன்னது பின்வருவதன் விஷயமாகிவிடும். எல்லாம் ம்ருத்யுவிலடக்கம். விஞ்ஞானகனான ஞானி தேஹம் விட்டால் எல்லா தத்துவங்களையும் எரித்து அடக்கி ஸதஸத்துமில்லா வஸ்துவாக மிஞ்சிவிடுவன். இந்த ஸுபல பீஜ ப்ராஹ்மண உபநிஷத்தை கண்டவர்களுக்கு வெளியிடலாகாது. வைதிக ஒழுங்கு உடையவர் இதைக்கேட்டால்தான் உண்மை உள்ளபடி விளங்கும்.

## (48) தாரஸார உபநிஷத் (91)

இங்குமுதலில் ஜாபால உபநிஷத்துப்போல் தொடங்கப்படுகிறது குருக்ஷேத்ர ரகஸ்யம். பின்னர் பரத்வாஜருக்கு யாஞ்ஞவல்கியர் ஓம் நமோ நாராயணாய என்பதுதான் தாரகமந்திரம் (ஸம்ஸாரத்தி லிருந்து கரையேற்றுவது) என்று உபதேசிக்கிறார். ஓமிலிருந்து ப்ரஹ்மா; ந, விஷ்ணு; மோ, ருத்ரன்; நா, ஈச்வரன்; ரா, அண்டவிராட்; ய, புருஷன்; பகவான்: யா பரமாத்மா; ஆகிய இவர் உண்டாவர். இந்த அஷ்டாக்ஷரமே பரம புருஷன்; ஓம் ஆத்மா, நம: ப்ரகிருதி, நாராயணாய பரப்ரஹ்மம். இதுதான் ரிக்வேதமாகிய முதல் பாதஸ்வரூபம்.

ஓம் ஒன்றே எட்டு பாதங்களை அடக்கியுள்ளது அ, உ, ம், பிந்து களை கலாதீதம் ஸர்வாதீதம் ஆகிய இவைதான்—இதுதான் தாரகம், இதை ப்ரஹ்மமாகவே வழிபடவேண்டும். அ விலிருந்து ஜாம்பவனாகிய பிரஹ்மா; உ ஹரியாகிய உபேந்திரன்; ம், ஹனுமானாகிய சிவன்; பிந்து சத்ருக்னனான ஈச்வரன்! நாதம், பரதனாகிய ப்ரபு; கலை, புருஷனாகிய லக்ஷ்மணன்; கலாதீதத்திலிருந்து ஸீதை; ஸர்வாதீதத்திலிருந்து பரமாத்மாவாகிய ராமன்; இந்த ஓமேதான் எல்லாம். இதுதான் யஜுர்வேதமாகிய இரண்டாம் பாதஸ்வரூபம்.

எப்படி பரமாத்மா திருப்திப்பட்டு பக்தர்களுக்கு விளங்குவர் என்ற கேள்விக்கு பதில் சொல்லப்படுகிறது. ஓம், யார் பரமாத்மாவாயும், நாராயணனாயும் முற்கூறிய எழுத்துக்களால் முற்கூறியபடி இருக்கிறாரோ அவரே பூ, புவ ஸுவாதிகளும், அவருக்கு நமஸ்காரம் என்று எட்டுதரம் மந்திரம் ஜபிக்கவேண்டும். இப்படி அஷ்டாக்ஷரம் ஜபிப்பதால் பரிசுத்தமடைவன்; ஸகல ஸத்காரிய பலனையும் பெறுவன், ஸகல ஜபபலனை அடைவன், பிதுர்க்களை கரை ஏற்றுவன் நாராயணனே ஆகிவிடுவன், பரமபதத்தை நேரிடவே அனுபவிப்பன்.

# ரணகேஸரி அல்லது ராஜபக்தி

## RANAKESARI

### நாடக பாத்திரங்கள்

வீரமர்த்தனன்—பாண்டியநாட்டரசன்
கரிக்காலன்—சோழநாட்டரசன்
சேரன்—
ரணகேஸரி—பாண்டிய நாட்டு மந்திரி (நாடகத் தலைவன்)
தூர்மதி—பாண்டியநாட்டில் ரணகேஸரிக்கு முன் மந்திரியாயிருந்தவன்.
நீலகண்ட சாஸ்திரி—பாண்டிய நாட்டு ஆஸ்தான வித்வான்
ஸுந்தரேசன்—ரணகேஸரியின் தோழன்.

குப்பனய்யங்கார், மஹாதேவராவ், சுப்பாசாஸ்திரி, ராமாதீக்ஷிதர் } பாண்டியநாட்டு மஹா ஜனங்கள்.
வாமேச பட்டர், ஸோமேசபட்டர் } சோழநாட்டு காளிகோவில் அர்ச்சகர்கள்.
தொந்திவீரன், பாவாடை, பல்லு சுந்தரம், வவுத்துப்பயல், சவட்டைக்காலன் } பாண்டிய நாட்டுக் குடிகள்.

அம்பாலிகை—வீரமர்த்தனன் மனைவி
விதூஷகன், நகரவாஸிகள் முதலாயினோர்.

## அங்கம் 1

### களம் 1

இடம்:—தெரு. காலம்:—மாலை.

சுப்பாசாஸ்திரி, குப்பனய்யங்கார், ராமாதீக்ஷிதர், மகாதேவராவ் பிரவேசிக்கிறார்கள்.

**மகாதேவ ராவ்.**—சாஸ்திரிகளே! பார்த்தீங்களா—நம் ராசா இருக்காங்களே அவங்க இத்தினி சீக்கிரத்திலே என்னமா மாறீட்டாங்கன்னு.

**சுப்பா சாஸ்திரி.**—ஆமான்னு. எல்லாம் அவவனுக்கு வந்தாத்தானே தெரிகிறது. நேத்திக்கு வரையிலும் ஸுமாரான கோஷ்டி—ஸதா ஸ்திரீகளின் ஸங்கம்—வேறென்ன? ராஜ்யம் எப்படிப் போனாலென்ன! இப்படியிருந்தது கதை. எதிரி வந்துவிட்டானுங்கவும் வந்துடுத்து கவலை. ஓடேன். கவசத்தைப் போடேன். குதிரையிலே ஏறேன்! ஏக தடபுடல்.

**ராமாதீக்ஷிதர்.**—என்னிக்கும் நீர் க்ருசானு * மாதிரி தோஷத்தைத்தானே சொல்லரது. எனக்கது பிடிக்காது. சண்டைக்குத்தான் புறப்பட்டாரே என்ன சௌரியம் காட்டினார்—என்ன தைரியம்! எந்த ராஜா அய்யா இப்படி யுத்தரங்கத்திலே முனையிலே நின்று சண்டைபோட்டவன்?—சொல்லுங்கோ ஐயா?

**குப்பனய்யங்கார்.**—அதெல்லாம் இல்லை இன்னு



யார் சொல்றா? அதெல்லாம் ஸரி. இருந்தாலும் சேரன் சண்டைக்கு வரவரையிலே இந்த ராஜ்யத்தை இவர் கொஞ்சமாவது கவனித்தாரா? அதையன்னா சுப்பா சாஸ்திரி சொன்னார்.

**மகா.**—என் அய்யா குளிப்பிள்ளைக்கு எடுத்து எனவு கொண்டாடுரீங்கள். என்னமோ பால்யம், கொஞ்சம் விளையாடினார். மனிசனுக்குப் பட்டாத்தானே தெரியுது எல்லாம்.

**ராமா.**—பட்டாலும் பட்டார், நன்னாப் பட்டாரையா! என்ன தீரமாய் அவர் யுத்தம் செய்தும் முதலில் ஜயம் அடைய முடியவில்லை, எங்கேயோ போயிட்டு கூடன வந்தாராம்.

**மகா.**—ஆமய்யா! எங்கேயோ காணவே காணம், ஒரு நாக்களிச்சு மறுபடி ஒரு ஸேனையோடே வந்தாங்க அந்த ஸேனையைத்தான் நடத்தி வந்தானே அவன் மூஞ்சியைப் பார்த்தீங்களா? என்ன? ஞாபகமிருக்கிறதாங்கிறேன்.—என்ன கருப்பு? ஸரியா சனீசுவரன் கணக்குத்தானின்னு.

**குப்ப.**—ஆமய்யா என்ன வேடிக்கை! அந்த ஸேனை வரப்போறதுன்னு யாருக்காவது தெரியுமா? வந்ததுதான் தெரியுமா? சண்டை போட்டதுதான் தெரியுமா? என்னமோ ஸேனை வந்ததுன்னார்கள். சண்டையாரமிச்சு சேசாகள் இன்னு, சேரன் ஓட்டம் பிடிச்சானின்னு அவ்வளவுதான். அந்த ஸேனையையுங்காணோம். அந்த சனீசுவரனையுங் காணோம்.

**ராமா.**—ஆமய்யா, அப்ராக்ருதமாகத் தானிருந்தது. ரொம்ப ரொம்ப ஆச்சர்யமின்னு! அதென்ன மந்திரம் போட்டாப்போலத் தானிருந்தது. சேரன் ஸைன்யம் முதல் நாள் யுத்தம் பண்ணினதென்ன? மறுநாள் சண்டைகூடச் செய்யாமல் ஓடினதென்ன? இதென்ன வேடிக்கை?

**சுப்பா.**—அதானா அதிலே வேடிக்கை? ஒருவன் ஒரு ராஜாவுக்கு ஒத்தாசை செய்தால், பிறகு அவன் அரண்மனைக்கு வந்து விருந்து நடக்கிறது உண்டா இல்லையா! சண்டை செய்தார்கள். சத்ருக்களை காந்திசீகராய் ஓட்டினார்கள். அப்புறம் எங்கே என்று பார்த்தால் அவர்களையே காணோமே.

**மகா.**—நம்முடைய ராஜாவின் ஸேனை இருக்குதாலயா. அதிலே தளகர்த்தர் அய்யா—யாரு? ஹரிஹர தேவர்—அவர்கூடச் சொன்னாராம், வந்த ஸேனை சோழராஜனுடைய ஆட்கள் என்று. அவன்கள் என்னமோ அந்தமாதிரி அடையாளம் வைச்சிருந்தாங்களாம்!

**ராமா.**—அதென்ன எழவும் பழுதையுமோ நமக் கொண்ணும் தெரியக்காணம். அது போறதுன்னா: அது முதல் நம்ம ராஜா எப்படி யிருக்கார் பார்த்து வரீர்களல்லவா?

**சுப்பா.**—ரொம்ப ஆச்சர்யம். இப்படி வேகமாக மாறுவார்களென்று நான் ஸ்வப்நத்திலும் எண்ணவில்லை. முதல்காரியம் தூர்மதியை ராஜ்யத்திலிருந்து பஹிஷ்காரம் செய்தாரல்லவா? அவன் ப்ரதானமந்திரியாயிருந்து. விச்வாஸத்ரோஹம் செய்து தனக்கு இவ்வளவு கஷ்டத்தையு முண்டுபண்ணினானென்று ஒரு நிமிஷத்தில் கண்டுகொண்டாரே.

**குப்ப.**—என்ன நீர்கூட ஸ்தோத்ரத்திற்கு ஆரம்பிச்சுட்டீர்! உங்களுக்குத் தோஷம்தானே தெரியும்.

**சுப்பா.**—நீர் ரொம்ப யோக்கியர் தானய்யா. இதாரய்யா உமக்குச் சொல்லிக் கொடுத்தது. இந்த ராமாதீக்ஷதரோ? அவருக்கென்ன தெரியும்: பிறத்தியாரை தோஷம் சொல்லத்தான் தெரியும்.

**ராமா.**—என்னய்யா வேடிக்கைக்குச் சொன்னா என்னமோ அஸாத்யமாக கோபித்துக் கொள்ளுகிறீர்களே-(சுப்பாசாஸ்திரிகள் முதுகில் தட்டிக் கொடுக்கிறார்.)

**சுப்பா.**—பின்னே என்னய்யா வேடிக்கை. நீர் ஒருதரம் சொன்னீர், இந்த மூணு கொம்புப் பயல் மறுபடி சொன்னான். இவன் கண்டேட்டானேல்யோ தோஷத்தையும் குணத்தையும்.

**குப்.**—ஒப்-மேலே பேசாதேயுங்காணும் என்றேன். என்ன காணும் மேலே மேலே தவ்வரீர், நிறுத்துமையா உம்ம கைவரிசையை. நான் ரொம்ப பார்த்திருக்கேனே ஹூ, ஹூ.

**விதூஷகன்.**—(பிரவேசித்து)சுப்பாசாஸ்திரிகளே வீண் வம்புக்கிழுக்காதேயுங்கள். நம்முடைய தூர்மதி காலத்திலேயே ஜனங்களுக்குள்ளே கலகம் ஏற்படக் கூடாதென்று (மூன்று பேர்களுக்குமேல் கூடிப் பேசக்கூடாதென்று) ரைபட் ஆக்ட் (Riot act) பாஸ் (Pass) செய்திருக்கார் தெரியாதா?

**குப்ப.**—ரையட் ஆக்டும் ஆச்சு—பாஸுமாச்சு—நான் என்ன சொன்னேன்?—என்னய்யா ப்ரமாதம்? இதுக்கு மூணு கொம்புப் பையலாம்—ரொம்ப கெட்டுப்போனாப்போலே யிருக்கு.

**விதூ.**—அய்யா சுப்பாசாஸ்திரிகளே—

**சுப்பா.**—ஆமப்பா, நான் தான் சொல்ரேனே அப்படித்தான் சொன்னேன். இன்னந்தான் சொல்ரேன் ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு—ஐயங்காருக்கு மூணு கொம்பு—இந்த மூட்டைப்பூச்சிப் பயல் என்னய்யா பண்ணிப்பட்டது?

[குப்பனய்யங்கார் கோபத்துடன் கைவிரல்களை முஷ்டியா யிறுக்கிப்பிடித்து சுப்பா சாஸ்திரிகளை யடிக்கப்போகிறார்.]

* க்ருசானு.—விசுவகுணாதர்சம் என்ற வடமொழி க்ரந்தத்தில் க்ருசானு விச்வாவஸு என்று இரண்டு கந்தர்வர்கள் உலக குணத்தை கண்டறியவேண்டி, தேசாடனம் செய்வதாகவைத்து, பலபல ப்ரதேசங்களிலுள்ள தோஷங்களையும் குணங்களையும் அவ்விருவருக்கும் ஸம்பாஷணைமூலமாய் கவி வர்ணித்திருக்கிறார். அதில் க்ருசானுவின் கண்களுக்கு தோஷங்கள் மட்டும் தென்பட்டதாகவும், விசுவாவஸுவிற்கு குணங்கள்மட்டும் தென்பட்டதாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

[விதூஷகன் தடுக்கிறான்.]

**விதூ**.—சுப்பா சாஸ்திரிகளே — உமக்கென்ன அய்யா இப்படிக் கோபம் வருகிறது. ஏன்—குப்பனய்யங்கார் புறச்சிக்கிண்டா—நீர் மூன்றாலே நிற்பீரா?—என்னமோ மூன்றுநாளைக்கொருதரம் ப்ராம்மணார்த்தம் கிடைக்கிறது. அந்த உளுந்து நெப்பலமிருக்கிறதுன்னு எண்ணீட்டீரோ? உமக்கு அதிரச் சாப்பாட்டிலே தொந்தி விழுந்து போச்சு. அவன்—குப்பனய்யங்கார் கோபிச்சுக்காதேயும் ஓய்-பெருமாள் கோவில் எண்ணெய்வழிகிற புளியோதரையும், நெய் வழிகிற வெண் பொங்கலையும் தின்னுப்பிட்டுக் கொழுத்துக் கிடக்கிறான். இந்தக் குத்து உம்மதொந்தியிலே விழுந்திருந்தா—உம்ம தொந்திவடையெல்லாம், நேத்திக்குச் சாப்பிட்ட சாதமுள்பட சரிஞ்சு போயிருக்குமே ஓய்—சண்டை போடாதேயும்போம்.

**சுப்பா**.—பின்னே என்னய்யா—என்னை இப்படி குப்பனய்யங்கார் சொல்லலாமா?

**குப்ப**,—போனாப் போறது. இன்னிக்கு உம்மை விட்டேன். இனிமேல் ஆரம்பிச்சீரோ பார்த்துக்கும். மூளையை யுருஞ்சி விடுவேன்.

**விதூ**.—(சுப்பா சாஸ்திரியைத் தட்டிக்கொடுத்து) சும்மா இரும் ஐயா—சும்மா விருமையா எங்கிறேன்—குப்பனய்யங்கார், நீர்போயிவிடும்—

(குப்பனய்யங்கார் போகிறார்.)

**மகா**.—இந்த எளவு சண்டை இன்னு வந்துட்டா, எனக்கு பயமாயிருக்கிறது. எளவிலே நான் என்ன பண்ரது. எங்கே ந்யாய ஸபைக்கு சாக்ஷிக்குப் போக வேண்டிவருமோ வென்று பயந்துக்கொண்டிருந்தேன் எளவு—தீக்ஷதரே—நானும் போய்வரேன்.

(மகாதேவராவ் நிஷ்கிரமிக்கிறார்.)

**ராம**.—எனய்யா விதூஷகரே! அரண்மனையிலேதாவது விசேஷமுண்டோ?

**விதூ**.—ஆமா-உண்டு ராஜா என்னமோ யாகம் பண்ணப் போறாராம்.

**ராம**.—எப்போ ஐயா? என்ன யாகம்? நான் அத்வர்யுவாக இருந்து நடத்திவைப்பேனே—எனக்கு ச்ரௌதம்-மீமாம்ஸை- எல்லாம் வரும்; அச்வமேதாந்தம் பண்ணிவைப்பேன் ஐயா-உத்காதாவாகவாவது எனக்கு ஏற்பாடு செய்யவேணுமே.

**சுப்பா**.—சில யாகங்களிலே புராணங்கூட வாசிக்க வைக்கிறதுண்டு. அப்படியேதாவதுண்டோ ஐயா!

**விது**.—எல்லாம் உண்டு-சுந்தர காண்ட பாராயணம்.

**ராம**.—நீர்தான் ஐயா நமக்குக் கொஞ்சம் சிபார்சு செய்யணும்.

**சுப்பா**.—என்னை மறந்துடுவீரோ?

**விதூ**.—தக்ஷிணை அபாரம்-தானங்கள் யதேஷ்டம் ஸமாராதனை, எல்லாம் நெய்தான், நல்லெண்ணெய்க் கலப்பே கிடையாது-லாடு, பேணி, ஹல்வா யதேஷ்டம்.

**ராமா**.—அது கிடக்குதையா! யாகத்திற்கு யௌத்தத்தில் என்ன செலவாம்?

**சுப்பா**.—பாராயணம் கிடைக்காவிட்டாலும் சாப்பாடாவது எல்லாருக்குமுண்டோ கிடையாதோ?

**விதூ**.—சாப்பாடுமானேஜ்மெண்டு எனக்குள்ளே. எல்லாம் டிக்கெட்டு-டிக்கெட்டிருந்தால்தான் உள்ளே வரலாம்.

**சுப்பா**.—தக்கடியா? அதென்ன அய்யா தக்கடி?

**விதூ**.—டிக்கெட்டு— சீட்டு ஐயா (Admit one) என்று எழுதியிருக்கும். அந்த சீட்டு உமக்குக்கொடுத்தால் நீர் மட்டுந்தான் வரலாம்-உம்ம பிள்ளையைக் கூட கூட்டிண்டு வரமுடியாது. தெரியுமா?

**சுப்பா**.—எனக்கு ரண்டு இக்கட்டையா சுந்தரகாண்டம் தக்ஷிணையில்லாமல் பாராயணம் செய்கிறேன்

**ராமா**.—என்ன ஐயா— உத்காதாவாவது எனக்குக் கிடைக்குமா? நீர் ஏற்பாடுபண்ணிக் கொடுத்தால் உமக்குத் தக்ஷிணையிலே பாதி தருகிறேன்.

**விதூ**.—தக்ஷிணை முழுக்கக்கூடக் கொடுத்து விடுவீர்கள்.

**ராமா**.—அப்படிச் சொல்லாதேயுங்கோ ஸ்வாமி. நான் ஸம்ஸாரியோ யில்லையோ-ஏதாவது நாலிலே இரண்டுலே ஆம்பட்டாத்தானே கார்யம் நடக்கிறேன் என்கிறது.

**சுப்பா**.—ஐயா-எனக்கு இரண்டு தக்கடி ஐயா.

**விதூஷ**.—இல்லை ஐயா—யாகத்தையும் காணேம் ஒன்றையுங் காணேம். என்ன சொல்லுகிறீகள் என்று பார்த்தேன்.

**ராமா**.—என்ன கேலி ஐயா இது.

**சுப்பா**. அவர் சொல்ரபோதே எனக்குத் தெரியுமே. (நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம் 1

### களம் 2

*பாண்டியன் அரண்மனை யிலோர் அறை.*

காலம்—மாலை

**வீரமார்த்தனன்**.—அம்பாலிகா: நான் என்னசெய்வேன்? சந்தோஷப் படவேண்டிய ஸமயத்தில் ஏன் துக்கப்படவேண்டு மென்று நீ யழுத்தியழுத்திக் கேட்கிறாய்? நான் அரசனாயிருந்தும், ஸகல ஸௌபாக்கியங்களையும் பெற்றிருந்தும், மிகுந்த செல்வாக்குடையோனாயிருந்தும், குருடன் கையிற் சிக்கிய ஒரு அப்ஸரஸ்போல எல்லாம் நிஷ்ப்ரயோஜனமாயின. இவையனைத்தும் எனது மனதில் உத்ஸாகத்திற்குக் காரணமாகவில்லை நான் என்ன செய்வேன்.

**அம்பாலிகை**.—ப்ராணநாதா, ஸந்தோஷமானது, அதற்குரிய காரணங்களை ஆப்தர்களிடத்தில் சொல்லுவதால் இருமடங்காகிறதென்றும், அப்படியே துக்கமானது பாதியாகிற தென்றும் லோகவதந்தியேற்பட்டிருப்பதுடன் அநுபவ ஸித்தமாகவுமிருக்கிறதே. அப்படியானால் தங்கள் மனதைச் சல்யப் படுத்துகிற காரணத்தை என்னிடம் சொல்லுவீர்களானால், அதனால் தங்கள் துக்கம் சாந்தமடையாதோ? எவ்வளவு ரஹஸ்யமாயிருந்தாலும், என்னிடம் சொல்லலா



மென்று தங்களுக்குத் தோன்ற நம்பிக்கைக்குப் பாத்ரமாகும்படி நான் நடந்து கொள்ள வில்லையோ? ப்ரபு—தங்களுடைய துக்கம் இன்ன விதம் என்று சொல்லலாகாதா?

**வீர**.—ப்ராண நாயகி—நீ இவ்விதம் சொல்வது ஏற்கனவே வெந்த புண்ணில் சேலையிடுவது போலிருக்கிறது. நான் சொல்லாமலிருப்பதற்குக் காரணம் உன்னிடம் நம்பிக்கைக் குறைவென்பதல்ல. நானுன்னைக் கைப்பிடித்தது முதல் சென்ற மூன்று வருஷகாலங்களுக்குள் என் மனதிலோர் பாரமாய் நின்று, சல்யப்படுத்துகிற இந்த ரஹஸ்யத்தை உன்னிடம் சொல்லிவிடவேண்டும் என்று ஆயிரம் தடவைகளில் வாயெடுத்திருக்கிறேன். ஆனால் அந்த ஸமயங்களிலெல்லாம் அப்பயங்கரமான விஷயங்களை உன்னிடம் சொல்லி அதனால் உன்னையும் துன்புறுத்துவதில் என்ன லாபமென்றெண்ணியே சும்மாயிருந்து விட்டேன் இப்பொழுதும் சொல்ல வேண்டுமென்கிற எண்ணம் பூரணமாயிருந்தாலும், அதைப்பற்றிப் பேசவரும்பொழுது நாவெழேனென்கிறது. நான் என்ன செய்வேன். இதோ பார். என் சரீரம் நடுங்குகிறதை!

**அம்பா**.—நாதா! ஆனாலென்னைக் காணும் பொழுதெல்லாம் நீங்கள் துக்கப்படுவதால், எனக்கும் துக்க முண்டாகாமலிருக்கிறதென்று நினைத்து விட்டீர்களா? நாதா! தனிமையில் நான் எத்தனை தடவைகளில், தங்களுடைய ஸந்தோஷமற்ற ஸ்திதியை நினைந்து கண்ணுங் கண்ணீருமாய் உட்கார்ந்து துக்கப்பட்டிருப்பேன். நாதா—இந்த துக்கத்திற்குக் காரண மின்னதென்று தெரிந்துகொண்டால், அது எத்துணை பயங்கரமானதாயிருந்தாலும், எப்படியாவது ஸமாதானம் செய்து கொள்ளலாமென்று தோன்றுகிறது. இன்னதென்றறியாமல், மனதைப் பலவிதத்திலும் கவலைப்படவிட்டு, துக்கப்படுவது எனக்கு ஸஹிக்கவேயில்லை, நாதா.

**வீர**.—ஐயோ அம்பாலிகா! உன்னையேன் நான் விவாகம் செய்தேன்! ஆதியில் நான் ஸங்கல்பித்திருந்தபடி என் விவாகம் செய்து கொள்ளாமலே இருந்து விடவில்லை! என்னுடைய கார்யதர்சியான ரணகேஸரிதான் என் பல படங்களைச் சேகரித்து வைத்திருந்தான்! எப்படியிருந்தாலும், உன்னுடைய படத்தை ஏன் நான் பார்த்தேன்! ஐயோ தெய்வமே! என்னையேன் இப்படிப் பரிசோதிக்கிறாய்!

**அம்பா**.—நாதா! ஐயோ! நான் ஒரு அபராதமும் மனதாறச் செய்யவில்லையே! ஐயோ! தங்களுடைய துக்கம் இவ்வளவிற்கும், நானு காரணமாயிருந்தேன்! ப்ரபு—உங்களுக்குப் பாத்தியதை யில்லையா? என்னைத் தங்கள் கட்கத்தால் ஒரே வெட்டாக வெட்டியிருக்கக்கூடாது! தங்களுக்கு அபராதம் செய்து, இவ்வளவு துக்கத்திற்குக் காரணமான பிறகு நான் ஜீவித்திருத்தல் யோக்கியமா? ப்ரபோ—நான் என்ன அபராதம் செய்தேன்?

**வீர**.—ப்ராணகாந்தே! அவ்விதம் நீ அர்த்தம் கொள்ளும்படி என்னுடைய வார்த்தைகள் இடங்கொடுத்தனவா? நீ யொருத்திதான் என்னைப்பற்றி நல்லெண்ணம் எண்ணுவானேன்! அடே பாழுந்தெய்வமே! பட்டகாலிலே படும் என்பதுபோல் என் வார்த்தைகளே எனக்கிப்படி விரோதமாகிறதென்றால் அப்புறம் நான் என்ன செய்வேன். ப்ராணகாந்தே! என்னுடைய துக்கத்திற்கு நீயணுவளவும் காரணமல்ல. ஆனால் இந்தத் துக்கத்தின் மத்தியிலும் சில நேரங்களில எனக்குக் கிடைக்கிற ஸந்தோஷம் ஐயோ அதுவும் எவ்வளவு அல்பகாலம்—உன்னாலேயே எனக்குக் கிட்டியது. இந்த துக்கம் அனைத்தையும் தருவித்துக்கொண்ட மகாபாதகன் நானே. ஒருபாவமும் அறியாதஉன் தலையிலும் இந்த ஸகிக் கொணாத துக்கபாரத்தைக் கொண்டுவந்து வைத்த மகாபாபியும் நானே! (என்று அழுகிறான்)

**அம்**.—ஐயோ நாதா, அறிந்திருந்தும் இந்தப் பேச்சை மறுபடி யெடுத்ததனாலல்லவோ இத்துணை துக்கமும். நாதா, என்னை மன்னிக்கவேண்டும். இந்தப்பேச்சைஇனிமனதாலுங்கூட ஸ்மரிக்கவில்லை.

**வீர**.—(சற்று தைர்யத்தை யவலம்பித்து) அம்பாலிகா! நான் என்னமோ மூட்டாள்தனமாய்த் துக்கித்தேன். இந்தப் பேச்சையே ஸ்மரிக்காமல் விட்டுவிடுவதென்பதும் அஸாத்யமான கார்யம். ஆகையால் என்னுடைய துக்கத்தையும்—உன்னுடைய துக்கத்தையும் அது அதிகப்படுத்தினாலும் ஸரி,—நான் சொல்லிவிடுகிறேன் கேள்.

**அம்**.—நாதா, நானறிய விரும்பவேயில்லை. இப்பொழுது தைர்யமாகப் பேசுகிறீர்கள். சொல்லிக்கொண்டு வரும்பொழுது உங்களுக்குத் துக்கம் அதிகமாகி விடக்கூடும். அப்பொழுது ஸஹிக்க மாட்டீர்கள். நீங்கள் அநேகந் தடவைகளில் சொல்லியிருக்கிறபடி, மிகவும் பயங்கரமான அந்தக் கதையைச் சொல்லுவதற்கு அவச்யமான திடம் உம்மனதிலில்லை. இப்பொழுது வேண்டாமே!

**வீர**.—ப்ராணஸகி, அப்படியல்ல, இதுதான் அதற்குத் தகுந்த ஸமயம். ஏனெனில் துக்கம் அதிகப்பட்டு மறத்துவிட்டது. ஆகையால் சொல்லுகிறேன் கேள். ஆதியில் உன்னை நான் விவாகம் செய்துகொள்ளுவதற்குமுன் சில துஷ்டர்களுடைய ஸஹவாஸத்தால், புத்திகெட்டு, ராஜ்யகாரியங்களை நான் கொஞ்சமும் கவனிக்காமலும், கள்ளிலும் ஸ்திரீகளிடத்தும் சூதிலும் பொழுது போக்கிவந்தேன்.

**அம்**.—யார் நீங்களா? நாதா! நீங்களே சொல்லியும் நம்பக்கூடாததாயிருக்கிறதே!

**வீர**.—ஆம். அப்படித் தானிருக்கும் என்னுடைய தத்கால நடப்பை பார்க்கிறவர்களுக்கு. ஆயினும் அது முற்றிலும் வாஸ்தவமே. என்னுடைய மந்திரியாகிய துர்மதி யென்பவன் எனக்கு அக்காலத்தில் ப்ரியமாயிருந்த இம்மூன்றிலும் குறை யொன்றில்லாது செய்துவைத்ததனால், எனக்கு என் ராஜ்ய ஸ்மரணையேயில்லை, என்னருமை ப்ரஜைகள் சொல்லொணாத் துபாத்தை இந்த மஹா பாபியான துர்மதியால்

அனுபவித்தது எனக்குத் தெரியாது. அவர்கள் என்னை வெறுத்தது எனக்குத் தெரியாது. அநேகர் என்னுடைய ராஜ்யத்தைவிட்டே வெளியேறினதும் எனக்குத் தெரியாது. இப்பொழுது ப்ரதான மந்திரியாயிருக்கும் ரணகேஸரியை என்னிடம் வரவொட்டாமல் தந்திரம் செய்ததுமன்னியில் ப்ரஜைகளுக்கு எவ்விதத்திலும் ஒரு குறைவுமில்லையென்று என்னிடம் சொல்லிக்கொண்டே வந்தான். நான் அத்தனையும் நம்பினேன்.

அம்.—நம்முடைய விவாஹத்திற்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் தங்களுடைய ராஜ்யத்தில் ஏதோ கலஹம் நடந்ததாகவும், அதன் பலத்தைக்கொண்டு, சேரன் படையெடுத்து வந்ததாகவும், முதலில் தங்களுக்கு அபஜயம் நேர்ந்தாலும், பிறகு சேரனை புறங்காட்டியோட அடித்தீர்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

வீர.—ஆம் காந்தாமணி! நான் சொல்லவந்த கதையின் பெரும்பாகத்தைச் சுருக்கமாய்ச் சொல்லிமுடித்தாய். ஆனால் முதலில் சேரனால் தோற்கடிக்கப்பட்டு, இனி நமக்கு ராஜ்யம் போயிற்றென்று எண்ணிவிட்டேன். முட்டாள்தனமாய், அகார்யங்களில் ப்ரவர்த்தித்ததற்கும் கடவுளுடைய தண்டனையது என்று எண்ணினேன். இதுவும் எனக்குப் போதாதென்று தோன்றினாலும், ஒருபலமான ராஜ்ய வைபவத்தை யிழப்பதென்றால் மனது வரவில்லை.

அம்.—மனது வருமா?

வீர.—என்னுடைய துர்ப்புத்தி மூலமாயானாலும் எனக்கு நேர்ந்தவொரு அவமானத்தை அறத்தீர்க்க வேண்டுமென்கிற ஒரு கவலையும் உண்டாயிற்று.

அம்.—தாங்கள் மானதனர்களன்றோ!

வீர.—அவமானத்தை யழிப்பதற்கு வேறொரு வழியுங் காணேன். என் படைகளோ சேரன் படைகளால் முறியடிக்கப்பட்டு, நாலாபக்கங்களிலும் ஓடிக்கொண்டிருந்தன. நான் என்ன செய்வது என்று, தோன்றவில்லை. என்னைப் பிடித்து, எனக்கிவ்வளவு கஷ்டங்களையு முண்டாக்கி, என் புத்தியையும் மாற்றின சநீசுவரனை ஸ்தோத்ரம் செய்து, "ஹே பகவந்! என்னை இந்த ஆபத்தினின்றும் நீக்கி என் அவமானத்தைத் துடைப்பீர்களானால் தங்களிஷ்டப்படி செய்வேன்" என்று பைத்தியம் கொண்டவன்போல பலமாய் அலறினேன், அம்பாலிகா! நான் என்ன சொல்லுவேன் அப்புறம் நடந்ததை! (அழுகிறார்.)

அம்.—நாதா, நடந்துபோன காரியத்தைப்பற்றி துக்கிப்பதில் என்ன லாபம். தைர்யத்தைக் கைப்பற்றுங்கள். மேல்நடந்ததைச் சொல்லுங்கள் எதுவாயிருந்தாலும் அதை கேட்கத் தக்கபடி என்மனதை திடப்படுத்திக்கொண்டேன்.

வீர.—அம்பாலிகா! நீ தைர்யசாலிதான். இருந்தாலும் நானிவ்விஷயத்தை உன்னிடம் சொன்னால நீயும் பயப்படுவாய்! ஐயோ? நானேன்பிறந்தேன்! இவ்வளவு துன்பங்களுக்கும் ஆளாகவா?

அம்.—நாதா அப்பொழுதே சொன்னேனே. இப்பொழுது துக்கவேகம் வந்து நெஞ்சடைக்கிறது பார்த்தீர்களா? வேண்டாம் அத்துடன் நிறுத்துங்கள். உத்யானத்திற்கு விதூஷகனை யழைத்துக்கொண்டு போவோம் வாருங்கள்.

வீர.—இல்லை அம்பாலிகா! இனி எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லாமல் முடியாது. வந்து நின்றான் சநீசுவரன் என்கண் முன்னே. உனக்கு முதற்பிறக்கும் குழந்தையை எனக்குப் பலிகொடுப்பதானால் இந்தச் சேரனை இருந்தவிடந் தெரியாமல் பஞ்சாய் * *

அம்:—(காதுகளைப் பொத்திக்கொண்டு) சிவ-சிவ. சாந்தம். பாபம்- நீங்கள் என்ன சொன்னீர்கள்?

வீர:—அம்பாலிகா! என் கண்ணே. என்னை மன்னிக்கவேண்டும். எனக்கு அந்த ஸமயம் புத்தி ஸரியாகவேயில்லை, எனக்கு நேர்ந்த அவமானமொன்றே என் கண்முன் நின்றது என்னை மன்னிப்பாயா!

அம்,—அப்படியே யாகட்டும் என்று ஒப்புக்கொண்டீர்களாக்கும்! அதனால் அது எனக்குச்செய்த அபராதம் எப்படியாகும்? அதற்கு மூன்று வருஷத்திற்குப்பிறகல்லவோ நமக்கு விவாகமானது.

வீர.—ஆம். ஆயினும் நான்செய்த வாக்குத்தத்தம் பயங்கரமானது. உலகத்தில் பிறந்து அவற்றின் சில போகங்களையேனும் அனுபவித்த நான் என் ராஜ்ய ஆசையால் இனியுலகில் பிறக்கப்போகிற ஒரு குழந்தையை பலியிடுவதாக வாக்குத்தத்தம் செய்தது அதனால் ஒரு பாவமு மறியாத அதன்தாய்க்கு ஆற்றொணாத் துயரத்தை உண்டுபண்ணிவைக்கிறதென்பது எவ்வளவு க்ரூரமான காரியம்? அப்படிசெய்யத் துணிந்த மஹாபாபியான நான் அப்பொழுதே இறந்திருந்தாலன்றோ லோகத்திற்கு க்ஷேமம்.

அம்:—ப்ரபு, நீங்கள் உங்களையே வீணில் நொந்துகொள்ள வேண்டாம். இவ்வளவு யோசனையும் அந்த ஸமயம் தங்களுக்குத் தோன்றக்கூடியதா? நீங்களும் மனித ப்ரக்ருதிதானே. அது கிடக்கிறது. எனக்கு விஷயம் தெரிந்து விட்டதால் என் மனது ஒருவாறு சமனமடைந்தது மேலே சொல்லுங்கள்.

வீர:—என்பேரில் நீ வருத்த மடையாதிருப்பதற்காக வந்தனம் கோடிகோடி செய்கிறேன். நிற்க. இப்பொழுது நீ பூர்ண கர்ப்பமாயிருப்பதை நினைக்குந்தோறும் எனக்குத் துக்கம் மேலிடுகிறது ஆச்சர்யமல்லவென்று உனக்கே தோன்றும். (பெருமூச்செறிகிறான்.)

அம்:—நடந்தவற்றைப்பற்றி விசாரப்படுவது ப்ரயோஜனமற்ற காரியம். நீங்கள் ஆதியில் செய்த வாக்குத்தத்தம் மிகப் பயங்கரமாகத்தானிருக்கிறது. உங்களைத் தவிர வேறு யாராவது இம்மாதிரியான விஷயம் என்னிடம் சொன்னால் நான் நம்பவே மாட்டேன்.

வீர.—என்றாலும் இதெல்லாம் வாஸ்தவம்-என் கண்ணே. அதோ ப்ரகாசிக்கும் சூர்யமண்டலத்திற்குக் கீழ் நாமிருக்கிறோமென்பது எத்தனை வாஸ்தவமோ அத்தனை வாஸ்தவமிது. இதோ பார் என்கையை (தன் மணிக்கட்டிலுள்ள கங்கணம் போன்ற ஒரு கரிய கோட்டைக் காண்பிக்கிறான்)

அம்.—(உற்றுப்பார்த்து) இதென்ன ப்ராணநாதா, இதென்ன?

வீர.—இதுதான் அந்த சநீசுவரனுக்கு என் மீது ஏற்பட்டிருக்கும் அதிகாரத்தை நினைப்பூட்டும் ஓர் அடையாளம். நீ கர்ப்பமாகி ஐந்து மாதமானதை நானறிந்தவுடனே முதலில் சொல்லுதற்கரிய ஸந்தோஷத்தை யடைந்தேனாயினும், அடுத்தநிமிஷமே, மழைக்காலத்தில் பளிச்சென்று ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஸூர்யனை மேகங்கள் திடீரென்றெழும்பி மறைத்தாற்போல், அந்த ஸந்தோஷத்தை சநீசுவரனுக்கு நான் செய்துகொடுத்த வாக்குத்தத்தத்தின் நினைவு வந்து கெடுத்துவிட்டது. யோசனையிலழுந்தினேன். இவ்விதம் நான் வாக்குத்தத்தம் செய்து கொடுத்தது ஸ்வப்நமாகத்தானிருக்கவேண்டுமென்றுகூடத் தீர்மானம் செய்துவிட்டேன் அதோ! அந்தஸமயம் என் முன்வந்தது அந்த சநீசுவரன் உருவம். 'இவ்வளவு சீக்கிரத்தில் என் ஞாபகம் உனக்கு மறைய ஆரம்பித்ததா' வென்று சொல்லி என் கையை இந்த விடத்தில் (மணிக்கட்டைக் காண்பித்து) பிடித்தது உடனே ஆயிரம் ஊசிகொண்டு அக்கையில் குத்தினதுபோலிருந்தது. சநீச்வரன் கையை விடவேயில்லை. என்னை அநேக இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போய், அநேகம் பயங்கரமான சித்ரவதை ஆயுதங்களை எல்லாம் காண்பித்து என்னை இங்கு மறுபடியிந்துநாளில்கொண்டுவந்து சேர்த்தது. அப்பொழுதுதான் என்னைக் காணோமென்று நீங்கள் பலவிடங்களிலும் தேடி விசாரப்பட்டது.

அம்.—இவ்வளவுதானா இந்தப் பயங்கரமான கதை? இன்ன மிருக்கிறதா?

வீர.—இனி என்ன இருக்கிறது. சநீசுவரனுடைய பலத்தை அல்ப மானிடர்களான நாம் எதிர்க்க முடியாதாகையால், நாம் கொடுக்காவிட்டாலும், தனக்குபலியாகும் ப்ராணியை சநீசுவரனெவ்விதத்திலும் பெற்றுக் கொள்ளுவான் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆயினும் நிரபராதியான உன்னை யந்தத் துக்கம்பீடிக்கவும், நீ கஷ்டமடையவும் காரணமாயிருந்த நான் இருந்தென் இறந்தென்! நீ கஷ்டப்படுவதைக் கண்ணால் காண்பதற்குமுன் நானிறப்பதே நான் மேன்மையென்று தீர்மானிக்கிறேன்.

அம்.—நாதா இந்த வார்த்தை தாங்கள் சொல்லுவது தங்களுக்கு அழகாயிருக்கிறதா? நீங்களாகத்தான் சொன்னீர்களா, யாராவது சொல்லச் சொல்லிக்கொடுத்தார்களா? அந்த வார்த்தையைத் தயவுசெய்து மறுபடி என் காதில் போடாதேயுங்கள் நிற்க. இந்த ஆபத்திலிருந்து தப்புவிக்கிறது அஸாத்யமல்லவென்று எண்ணுகிறேன்.

வீர.—ஆ! கண்ணே! அஸாத்யமல்லவென்று நினைக்கிறாயா? என்ன யுக்தி செய்யலாம்! ஐயோ! இதற்கு முன்னமே உன்னிடம் சொல்லாமற் போனேனே!

அம்.—ப்ரபோ! எனக்கு யுக்தி தெரியாது. ஆனால் க்ரஹாதிகள் வக்ரமாயிருக்கும் காலங்களில் சாந்திகள் ஹோமங்கள் முதலியன செய்து க்ரஹங்களின் ப்ரீதி செய்வது உலக ப்ரஸித்தம். அப்படியே இந்த சநீசுவரனும் ஒரு க்ரஹந்தானாகையால் சாந்தியாதிகளால் அவருடைய ப்ரீதியை ஸம்பாதித்து, இவ்வாபத்தினின்றும் தப்பலாமென்றெண்ணுகிறேன்.

வீர.—அடி. என் கண்ணே, எனக்கிந்த யுக்தி தோன்றவில்லையே. பலே. அப்படியே செய்வோம். இப்பொழுதே புரோஹிதரை வரவழைக்கிறேன் (மடமடவென்று இழிவுதோன்றிய ஓர் சிரிப்புக் கேட்கிறது.) ஐயோ! அது சநீசுவரன் குரலல்லவோ. நாம் செய்யும் யோசனையைக் கேட்டிருந்து, உங்கள் எண்ணத்தைப் பலிக்கவிடுவேனா என்று சொல்வது போலவன்றோ விருக்கிறது. ஐயோ என் ப்ராணகாந்தே! வது இந்தசநீசுவரன் பாதையிலிருந்து நாம்தப்புவிக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லையடி! நான் என்னடி செய்வேன்? ஹதபாக்யன்! (அழுகிறான்).

அம்.—(ஸ்வகதம்) ஐயோ! அந்தப்பாழும் சிரிப்பு என்காதிலும் விழுந்ததே (ப்ரகாசம்) நாதா நீங்கள் திடுக்கிட்டதைக்கண்டு நானும் திடுக்கிட்டேன். அவ்விதம் சிரிப்புத்தோன்றினது மனதின் ப்ரமமாகவேயிருக்கும். வேறொன்றுமில்லை. கவலைப்படாதேயுங்கள். என் தகப்பனார் ராஜ்யத்தில் நீலகண்டசாஸ்த்ரி என்றொரு மகாவித்வான் இருக்கிறார், அவரைத் தருவித்தால் நம்முடையகவலையைநீக்குவார், அவருடைய ஸாமர்த்யத்தைப்பற்றி என்தகப்பனார் அஸாத்தியமாய் சொல்லியிருக்கிறார்.

வீர — என்னமோ செய்து பார்ப்போம். எனக்கு மட்டும் நம்பிக்கையில்லை. எல்லாம் வல்ல ஈசன் செயல். (நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

---

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு க்ராண்ட்.— எலிமெண்டரி பாடசாலைகளுக்காக, கட்டடம் கட்ட ஆரம்பித்து அரைகுறையா யிருக்கும் கட்டடங்களைக் கட்டிமுடிக்கவும் முன்பே கட்டப்பட்டுள்ள அப்பாடசாலைக் கட்டடங்களை சீர்திருத்தவும், பழுதுபார்க்கவும் ரூ. 4,13,977 நமது கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட 22 டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும் 31 முனிஸிபல் கவுன்ஸில்களும் அத்தொகையைப் பெற்று அவ்வேலைகளைச் செய்து முடிக்கும். இனி புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்காக தற்சமயம் பணம் கொடுத்துதவ முடியாதென்று கவர்ன்மெண்டார் அறிவித்திருக்கின்றனர். இது தவிர, வெளி ஜில்லாக்களிலிருக்கும் மாணவர்கள் விளையாட்டுக் கம்பவுண்டு விடுதிக்காக ரூ. 98,900-ம் கொடுத்திருக்கிறார்கள்.



162071
JL
Zm 211, NO8VB
NO8.7

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
## CHILDREN'S & LADIES' PAGES

# மாதவீ கங்கணம்

### ஆக்ராநகரத்து அடிமைப் பெண்ணின் சரித்ரம்

(269-பக்கத் தொடர்ச்சி)

### முதல் பாகம்
### அத்யாயம் 2
### பரஸ்பரம் வைரமுற்ற வம்சங்கள்

ராஜா தோடர்மால் எந்தக் காரியத்தையும் உள்ளூற ஆய்ந்தோய்ந்து பார்த்துச்செய்பவர். ஆழ்ந்த ஆராய்ச்சியும் தீர்க்காலோசனையுமின்றி ஒரு தொழிலிலும் அவர் தலையிட்டுக்கொள்ளார். இந்த குணாதிசயத்தாலன்றோ அவர் இணையற்ற ரணசூரரென்று பெயரெடுத்தார்? ஸம்ப்ரதி உத்யோகத்தில் அவருக்கு ஸமானமானவர் ஒருவரும் அக்காலத்தில் கிடையாது. இவ்வளவு ஸாமர்த்யமுடையவர் வீணில் ஜனங்களை மடிக்க இஷ்டப்படுவாரா? அவர் வங்காளத்துக்கு வந்த சில தினங்களுக்கெல்லாம் ஒரு சண்டையாவதின்றி கலகக்காரரை அடக்கிவிட்டார். ஹிந்து ஜமீன்தாரர்களை ஒருவர் ஒருவராகத் தன்வசப்படுத்திக்கொண்டார். வாகல்பூரிலிருக்கும் கலகக்காரர்களுடைய சேனைக்குப்போகும் போஜனபதார்த்தங்கள் தடைப்பட்டுவிட்டன. ராஜா தோடர்மால்பக்ஷம் நவகுமாரரைப்போல் வேறெந்த ஜமீன்தாரரும் அவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கவில்லை. அவர் அக்பர்சக்ரவர்த்திக்காக அதிக சிரமம் எடுத்துக்கொண்டார். ப்ரதி ஜமீன்தாரிடமும், பாளையக்காரனிடமும் போய் அவர் அதிக ப்ரயாஸப்பட்டு அவர்களை அக்பருக்குக் கீழ்ப்படியும்படிச் செய்தார். அவர் வார்த்தையைக் கேட்டுச் சிற்றரசர்கள் யாவரும் ராஜா தோடர்மால் கக்ஷியில் சேர்ந்தனர். ப்ரதி இரவும் மாறுவேஷம் பூண்டு நவகுமாரர் மாங்கீருக்குள் ப்ரவேசித்து மொகலாய சிற்றரசர்களுடைய அந்தரங்க ஏற்பாடுகளையும் அவர்களுடைய செய்கைகளையும் தெரியப்படுத்தி வந்தார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். அவர் எடுத்த காரியம் கைகூடிற்று. மொகலாயர்களுடைய நண்பர்கள் ஒருவர்பின் ஒருவராக சத்துரு பக்ஷம்போய்ச்சேர்ந்தனர். மொகலாய படைவீரர்களுக்கு ஆகாரங்கள் வருவதற்கு வழியில்லாமற் போய்விட்டது. சோற்றுக்கு வழியில்லாமல் பசியாலலைந்து நெல்லிக்கனிபோல் நாலா திசையுஞ் சிதறியோடலாயினர்.

கலகக்காரர்களுடைய கொட்டமெல்லாம் அடங்கிப்போய்விட்டது. நாடுமுழுதும் ஸமாதானம் நிலைபெற்றது. அக்பருக்கு உதவிசெய்த சிற்றரசர்கள், ஜமீன்தாரர்கள், வீரர்கள் முதலியவர்களுக்குப் பரிசளிக்கும் உற்சவத்தை யாவரும் ஆவலாய் எதிர்பார்த்திருந்தனர் ராஜா தோடர்மால் நவகுமாரர் செய்த உபகாரமே எல்லாவற்றிலுஞ் சிறந்ததென்று கருதி ஸபையில் அவரை யழைத்து,

"நவகுமாரரே, நமது காருண்ய அதிபதியவர்களுக்காக இம்முறை நீர்செய்த உபகாரம் ஸாமான்யமானதல்ல. சக்ரவர்த்தியவர்கள் உம்மை என்றைக்கும் மறக்கமாட்டார். உம்முடைய மனதில் குறைகள் ஏதாவதிருப்பினும் ஸரி, இல்லாவிட்டால் நீர் உன்னத பதவி ஏதற்காவது ஆசைப்பட்டாலும் ஸரி, உம்முடைய வேண்டுகோளைப் பூர்த்திசெய்கிறோம்" என்று சொன்னார்.

"எனக்கென்ன வேண்டுகோள் இருக்கிறது? நான் செய்துள்ள குற்றத்தை மன்னித்தால் அதுவே எனக்கு ஆயிரம்பரிசுக்கு ஸமானம். தலைமுறைதலைமுறையாக என்னுடைய முன்னோர்கள் கீழ்ப்படிந்துவந்த ஆப்கானியர்பக்ஷம் நானும் சேர்ந்து தங்கள்மீது படையெடுத்தேன்."

"நீர் சொல்வது அதிசயமாயிருக்கிறதே! நவகுமாரரே, வங்காள நாடு மொகலாயர் வசமாகும் வரையில் அதன் பூர்வஅரசர்களாகிய ஆப்கானியர்பக்ஷம் உழைத்ததற்காக நீர் பெறவேண்டியது வெகுமானம். அப்படியிருக்க மன்னிக்க வேண்டுமென்கிறீரே; தங்களுடைய பூர்வ அரசர்களுக்காக சண்டைசெய்த சுத்தவீரர் எவரையும் அக்பர் இதுவரைக்கும் தண்டித்ததாகக் காணோம்."

நவகுமாரர் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தார். அவர் வாய்திறவாமல் ப்ரமையடைந்தவரைப்போல் நின்றார் அவருக்குப் பின்னால் தோடர்மாலிடம் பேசவேண்டியவர்கள் பலர் இருந்தனர். தான் அநேக நாட்களாகக் காத்திருந்த தருணம் வந்தும் நவகுமாரருடைய மௌனத்தால் அத்தருணம் தவறிவிடுமென்று கோகிலதாஸ் பயந்தார். அவர் தோடர்மாலுடைய குணாதிசயங்களை அறிந்தவர் அவருடன் எவ்விதம்பேசினால் காரியஸித்தியாகுமென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். தன் மனோபீஷ்டம் பூர்த்தியாவதின்மேலேயே கண்ணுங்கருத்துமாயிருந்த கோகிலதாஸ் அதிகவணக்கத்துடன் மனதிலொன்று வெளிக்கொன்றாக இல்லாமல் யதார்த்தமாகப் பேசலுற்றார்.

"என் எஜமானருடைய குற்றம் அதனுடன் நிற்கவில்லை. தாயுதகான் தான் சக்ரவர்த்தியினிடம் செய்த வாக்குதத்தத்திற்கு மாறாக மஹாகனம் பொருந்திய அக்பர் மகிபருடன் ஆக்மஹலில் போர்புரிந்தபோது என் எஜமானரும் தாயுத்கானுக்குத் தம்பியாய்த் தங்கள்மீது படையெடுத்துவந்தார்."

தோடர்மாலின் முகம் கறுத்தது. அவர் கண்கள் சிவக்க, "அந்த ஆப்கானியன் செய்தது கேவலம் நம்பிக்கை த்ரோகம்; விசுவாஸகாதகம். அத்தகைய த்ரோகச்செயலுக்காக கடவுள் அவனை ஸரியானபடி தண்டித்தார்" என்று கோபாக்ராந்தராக உரத்துப்பேசினார்.

"ஆம் வாஸ்தவந்தான். மஹாராஜா, அந்த தாயுத்கானுடன்கூடிய எனது எஜமானரும் நம்பிக்கை த்ரோகிதான். ஆனால் அவர் தான் செய்த குற்றத்தை ஒளிக்காமல் இந்த ஸபையில் ஒத்துக்கொண்டு அதற்காக மிகவும் பச்சாத்தாபப்படுகிறார் மூன்று வருஷகாலமாக ஆப்கானிய அரசர்களுக்குக் கீழ்ப்படிந்து நன்றியறிவுடன் உழைத்துவந்த எனது எஜமானர் ஏதோ கண்மூடித்தனமாய்க் குற்றமென்றறியாமல் தன்கடமையையே பெரிதாகக்கொண்டு செய்தபிழையை மஹாதயாளுவாகிய மொகலாய வள்ளல் கருணைகூர்ந்து பொறுத்தருளவேண்டும். தயைசெய்து குற்றங்குறைகளைப் பொருட்செய்யாமல் எங்களைத் தங்களுடைய ஊழியர்களாக்கிக் கொள்ளவேண்டும். நவகுமாருடைய வம்சத்தார் இதுவரைக்கும் ஆப்கானியர்களுக்கு உழைத்ததுபோல் இனிமொகலாயருக்கு உழைக்கும்படிக் கருணைபுரிவது தங்களுடைய பொறுப்பு" என்று விண்ணப்பித்துக்கொண்டார் கோகிலதாஸ்.



ராஜா தோடர்மால் மௌனம் ஸாதித்திருப்பதைக் கண்ட கோகிலதாஸ் தன்னுடைய வார்த்தைகள் ராஜபுத்ர வீரனுடைய மனதை உருக்கியதென்று தெரிந்துகொண்டு பின்னும் பேசலானார்.

"வீரநகரமும் தேவிபுரமும் ராஜபக்தியிலும் ஸைந்யபலத்திலும் ஒன்றுடனொன்று போட்டிபோட்டுக்கொண்டு ஆப்கானியர்களுக்காகப் பலவருஷகாலம் உழைத்து வந்தன. மேல் ஸமுத்ரம் முதல்கொண்டு கீழ் ஸமுத்ரம்வரையில் வ்யாபித்திருக்கும் மொகலாய ராஜ்யத்தின் ப்ரதான நகராகிய ஆக்ரா பட்டணத்தில் செங்கோல் செலுத்தும் மஹா பலாட்யராகிய அக்பர் பெருமானுக்கும் அவருடைய ஸந்ததியாருக்கும் இவ்விரு ஜமீன்களும் ஆப்கானியரின் கீழ் இருந்தது போலவே இப்போதும் ராஜபக்தியிலும் இதர ராஜசின்னங்களிலும் ஒன்றுக்கொன்று பின்னடையாமல் செழித்துவரும்படி ஆஞ்ஞாபிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

"வீரநகரமா? நன்றாய் ஞாபகமிருக்கிறது. இந்த ப்ராந்தயத்தில் இதர அரசர்கள் அனைவரும் எதிரிபக்ஷம்போய்ச் சேர்ந்தபோது, அவர்களுக்குப் பயப்படாமல் தர்மத்தையே கடைப்பிடித்து எங்கள்பக்ஷம் தனியாயிருந்து போர்புரிந்த கிழலிம்ஹத்தை எப்படி மறப்பேன். அவர் நாட்டிற்கு நான் எத்தனையோ முறை சென்றிருக்கிறேன். அவருடன் அநேக நாட்கள் பழகியிருக்கிறேன். அவருடைய வீரத்தையும் நன்றியையும்பற்றி அக்பரவர்கள் மெச்சிப்பேசியதைக் கூடுமானால் இன்னொருமுறை அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை".

"இவ்வுலகத்தில் பேரும்புகழும் வாய்ந்து வசித்திருந்த அவர் தாங்கள் இந்நகரத்தை விட்டுச் சென்ற சிறிது காலத்துக்கெல்லாம் பரலோகமடைந்தார். அவருடைய பால்ய பேரப்பிள்ளைதான் இப்போது வீரநகரத்திற்கும் கொஞ்சகாலம் தேவிபுரத்திற்கும் அதிபதி". இம்மொழிகளைக் கேட்டு தோடர்மால் பெருத்த யோசனையிலாழ்ந்தார். ஸபாமண்டபமுழுவதும் நிச்சப்தமாயிருந்தது. ஒருவராவது வாய் திறக்கவில்லை. அந்த்யகாலத்தில் வைத்யர் கையார்த்து என்ன சொல்லப் போகிறாரோவென்று ஆவலுடன் காத்திருக்கும் நோயாளியின் நெருங்கிய சுற்றத்தார்களைப்போல் நவகுமாரர் ராஜா தோடர்மால் வாக்கிலிருந்து வரப்போகும் மொழிகளை எதிர்பார்த்திருந்தார்.

சற்றுக்கெல்லாம் ராஜா தோடர்மால் தன் தீர்ப்பைக் கூறத்தொடங்கினார்.

"நவகுமாரரே, உமது நம்பிக்கையுள்ள அமைச்சர் உமக்காக ஸாமர்த்யமாகப் பரிந்துபேசினார். அதைவிட அதிக பலமான சிபார்சு நீர் நடந்த போரில் செய்திருக்கும் உதவியொன்றிருக்கிறது. அந்த உபகாரத்துக்கு ஏற்ற ஸம்மானம் உமக்குக் கிடைக்கும். நான்கு வருஷங்களுக்குமுன் தாங்கள் செய்த த்ரோகத்தின் ஆந்தரிக காரணங்கள் தெரியவேண்டியது அவசியமில்லை. நீர் செய்த பிழைகள் யாவற்றையும் அக்பர் சக்ரவர்த்தியவர்கள் முழுவதும் மன்னித்துவிட்டார். இனி நீர் அவ்வித நடத்தைக்குட்படாமல் என்றைக்கும் ராஜபக்தியில் சிறந்து விளங்குவீரென்று நம்புகிறோம். வீரநகர ஜமீன்தாருக்குப் பரிசாகக் கொடுத்ததை இவ்வளவு சீக்ரத்தில் திரும்பி எடுத்துக்கொள்வது சக்ரவர்த்தியவர்களுடைய பெருமைக்கும் அந்தஸ்துக்கும் சிறிதும் ஒவ்வாத காரியம். இன்னுங் கொஞ்சகாலம் கழிந்த பிறகுதான் உமது ஜமீன் உமக்குக் கைவசமாகும். அதற்குள் நீர் உமது நல்நடத்தையால் சக்ரவர்த்தியவர்களுடைய தயையைப் பெறவேண்டும். வீரநகர ஜமீன்தாருக்கு இன்னும் யுக்தவயது வரவில்லை; அவரை ராஜ்ய வ்யவகாரங்களில் பழக்கவும் அவருடைய ஜமீன் விஷயங்களை ஸரிவர பார்த்துவரவும் ஒரு நம்பிக்கையான உத்யோகஸ்தர் தேவை. அவ்விரு உத்யோகங்களையும் நீர் பார்த்துவாரும். நீர் சக்ரவர்த்தியவர்களுடைய மனதுக்கு த்ருப்தியாய் உமக்கிட்ட காரியத்தைச் செய்துவந்தால், அந்த பால்ய ஜமீன்தார் யுக்த பருவமடைந்தவுடன் தேவிபுரம் உமக்குக் கிடைக்கும். உமது வம்சத்தைப் போன்ற புராதன வம்சங்கள் க்ஷீணித்துப்போகாமல் கூடியமட்டும் நெடுங்காலம் தழைத்தோங்க வேண்டுமென்பது சக்ரவர்த்தியவர்களுடைய மனப்பூர்வமான கோரிக்கை. ஆதலால் நம்பிக்கையாய் ஊழியஞ்செய்து உமது ஜமீனைத் திரும்பப்பெற்றுக்கொள்ளும் வழியைத் தேடும். என்றைக்கும் கனவில்கூட நினைக்கவேண்டாம் நம்பிக்கை த்ரோகம் என்பதை. நண்பரையும் அவர்கள் புரியும் உதவியையும் எப்படி என்றைக்கும் மறப்பதில்லையோ, அப்படியே நாம் நமது சத்துருக்களைப் பூண்டற நாசம் செய்யும் வரையில் அவர்களை மறப்பதில்லை. இது உமக்கு ஞாபகத்திலிருக்கட்டும்."

தோடர்மாலவர்கள் செய்த ப்ரஸங்கம் ஆஸ்தான மண்டபமெங்கும் ஒலித்தது. அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நவகுமாரர் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. அவர் மனம் துடித்தது. தன் ஜன்ம சத்துருவீட்டில் திவானையுங் காரியஸ்தனையும் வேலைபார்க்கத்தான் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தோடர்மால் கூறியது அவருக்கு நாராசங் காய்ச்சி நுழைத்

செவியில் வைத்தது போலிருந்தது. அவர் மனம் பெரிதுந் துன்பப்பட்டது. அவர்க்கு அடங்காக் கோபமும் ஆத்ரமும் உண்டாய்விட்டது அவருடைய உதடுகள் சிறிது அசைந்தன. அவர் ராஜ கட்டளையை மீறிப் பேசுவார் போலிருந்தது. ஆனால் அவர் பக்கத்திலொருவர் இருக்கவில்லை. ராம் கோகில தாஸ் அப்போது இருந்திராவிட்டால் கைக்கெட்டிய பழம் வாய்க்கெட்டாமற் போய்விட்டிருக்கும். நவகுமாரர் ஏதாவது பதட்டமாய்ச் சொல்லிவிட்டிருப்பார். சக்ரவர்த்தியவர்கள் நவகுமாரர் செய்த பழய த்ரோகங்களை யெல்லாம் மன்னித்து விட்டார். திவான் உத்யோகம் அவரை உண்மையில் வீரநகரத்துக்கும் தேவிபுரத்துக்கும் தலைவராக்கியது. மேலும் சில வருஷங்களுக்கெல்லாம் தேவிபுரமும் தமது எஜமானர் கைவசமாகும் என்னும் உறுதிமொழியும் கிடைத்தது. இவ்விஷயங்களை யெல்லாம் ஆறத்தீர யோசித்த கோகில்தாஸ் இப்போது மௌனமாயிருப்பது விபரீதபுத்தியென்று துணிந்து, தோடர்மால் முன்னிலையில் நமஸ்கரித்து மலர்ந்த முகத்துடன்

"கருணையே உருவாய் எடுத்துவந்த உத்தமரே தங்களுடைய தயாளகுணத்தால் என் எஜமானர் பேசச் சக்தியற்றவராயிருக்கிறார். அவர் ஆநந்த பரவசமாய் விட்டார், தங்களுக்கு வந்தனமளிப்பதைக்கூட அவர் மறந்துவிட்டார். இந்திய சக்ரவர்த்தியவர்கள் அந்தஸ்துக்கே தகும் இம்மொழிகள். உமது திருவாய் மூலமாய்வெளிவந்தது சர்க்கரைக் குன்றில்தேன்மாரி பொழிந்ததுபோலிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் போர்முகத்தில் தங்களுக்குத் தீங்கிழைத்த எங்களுடைய யோக்யதைக் கதிகமான இம்மரியாதையை என் எஜமானர் மிக்க மனஸ் ஸந்தோஷத்துடனும் வணக்கத்துடனும் ஏற்றுக்கொள்கிறார். இந்த உதார செயலுக்காக நவகுமாரர் தங்களுக்கு என்றைக்கும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார் அவர் உயிருடனிருக்கும் வரையில் மனப்பூர்வமாய் டில்லி ராஜனுக்கு உழைத்து வருவார் என்பதில் ஸந்தேஹமில்லை. இன்னும் கொஞ்சகாலங் கழித்து ஆப்கானியர்கள் கீழ் இருந்தது போலவே தேவிபுரம் வீரநகரம் இரண்டும் மொகலாயரின் கீழும் ஒன்றுக்கொன்று பின் வாங்காமல் நம்பிக்கையாய் உழைத்து வருவதைக் காண நீங்கள் நெடுங்காலம் வாழ்ந்திருக்க வேண்டும்."

நவகுமாரர் தம் மனைவியுடனும் தம் பெண் ஹேமலதையுடனும் வீரநகரத்துக்கு வந்து சேர்ந்தார். அவரும் ஸகல நற்குணங்களும் அமையப்பெற்றவளாகிய அவரது மனைவியும் நரேந்தரன், ஹேமலதை இருவரையுங் கருத்தாய் வளர்த்துவந்தார்கள். ஹேமலதை அழகிற் சிறந்தவள், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக இரண்டு குழந்தைகளும் வளர்ந்துவருங் காலையில் இருவருக்கும் ஸ்நேஹம் அதிகரித்தது, தன் முன்னோர்கள் உழைத்தபடியே இன்னும் தேவிபுரத்து ராஜ குடும்பத்தாருக்கு மனப்பூர்வமாய் உழைத்து வரும் கோகிலதாஸனும் நவகுமாரருடன் வீரநகரம் வந்தார்.

இவைகளெல்லாம் நடந்து இப்போது பத்து வருஷமாயிற்று. அக்பர் சக்ரவர்த்தியின் இன்னொரு ஹிந்து தளகர்த்தராகிய ராஜா மான்ஸிங் அப்போது வங்காளத்துக் கவர்னராயிருந்தார். ஆக்மஹாலைத் தலைநகராக்கி அதன்பெயரை 'ராஜமஹால்' அதாவது அரசர்கள்வசிக்குமிடம் என்று மாற்றினார். நரேந்த்ரனும் ஹேமலதையும் விளையாடிக் கொண்டிருந்த வீரநகரம் இந்த ராஜமஹாலுக்கு அருகில்தான் இருக்கிறது. ஆனால் இந்த பத்து வருஷகாலத்துக்குள் விசேஷ என்னும் ஓர் அந்நியன் அவர்களுக்கிடையில் வந்து தோன்றினன்.

## அத்யாயம்.—3

## ஸௌந்தர்ய மந்த்ரி

தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட ஜமீன்களை நவகுமாரர் அதிக சிரத்தையுடன் ஸாமர்த்யமாய்ப் பரிபாலித்துவந்தார். பத்துவருஷகாலத்துக்குள் வீரநகரம் தேவிபுரம் இரண்டும் ஸமாதான நிலைக்குவந்தன. நாடெல்லாம் ஸுபிக்ஷமடைந்தது. ஆப்கானிய மொகலாய யுத்தம் நடந்தகாலத்துப் பாழடைந்துபோன க்ராமங்களிலெல்லாம் ஜனங்கள் மறுபடியும் வந்து குடியேறினர். பீதியடைந்து வீடுவாசல்களை விட்டோடிய குடித்தனக்காரர்களும் தொழிலாளிகளும் சண்டைச்சரவுகள் அடங்கி ஸமாதானம் நிலைபெற்றவுடன் தத்தம் க்ராமங்களுக்குத் திரும்பிவந்து பழையபடித் தம் வீடுகளைச் சீர்ப்படுத்திக்கொண்டு, ஜீவிக்கத் தலைப்பட்டார்கள். புல்பூண்டு செடிகொடிகளால் மூடப்பட்டுப் போன நிலங்களும் வயல்களும் மறுபடி சாகுபடி செய்யப்பட்டன. சிறு பிள்ளைகள் வயல்புறங்களில் சுற்றித்திரியும்போது அவர்கள் கையில் அகப்பட்ட பீரங்கிக் குண்டுகளையும், உடைந்துபோன துப்பாக்கிகளையும்கொண்டுவந்து அவைகள் அங்கே கிடக்கவேண்டிய காரணமென்னவென்று தங்கள் தகப்பன், பாட்டன்மார்களை ஆவலுடன் கேட்டார்கள். பெரியவர்களும் தங்கள் இளம்பருவத்தில் கண்ணுற்ற சேனைகளுடைய போக்குவரவுகளைப்பற்றியும், அவர்கள் புரிந்த யுத்தங்களைப்பற்றியும் ஞாபகமிருந்தவரையில் கதையாகச் சொன்னார்கள். அப்பெரியவர்களில் சிலர், தாயுத்கான் அல்லது தோடர்மால் பக்கமிருந்து சண்டை செய்த யுத்தவீரர்கள். அவர்கள் மர நிழலில் உட்கார்ந்து அதிக உத்ஸாஹத்துடன் தங்களைச் சுற்றியிருந்த சிறுவர்களிடம் தாங்கள் செய்த ஸாஹஸங்களை எடுத்துச் சொல்லிக் களித்தனர். எத்தனை முறைதான் திரும்பத்திரும்பச் சொன்னாலும் கதைகள் ஸ்வாரஸ்யத்தில் கிஞ்சித்தேனும் குன்றவில்லை, ப்ரதிதினமும் ஊரார்கள் அக்கதைகளை ஆவலுடன்கேட்டு அவர்கள் புரிந்த வீரச்செய்கைகளில் ஒன்றிரண்டுகூடத் தங்களால் ஆகாதென்றெண்ணி, அவர்களுக்கு மரியாதைசெலுத்தவந்தார்கள்.

பிறர் செய்யும் ப்ரதிகார்யத்திலும் குற்றங்குறை



கண்டுபிடிப்பதே தொழிலாக இருப்பவர்கள்கூட நவகுமாரருடைய ராஜ்யகார்யங்களில் பிழை கூறமுடியாது. வீரநகரத்துப் பழைய உத்யோஸ்தர்களையும் சேவகர்களையும் வேலையில் நிறுத்திக்கொண்டு அவர்களுக்குத் தக்க சம்பளங்களையும் பரிசுகளையும் அளித்துவந்தார். நரேந்த்ரனுடைய பாட்டனார் ஏற்படுத்திய தர்மகைங்கர்யங்கள், தேவாலயங்கள், தர்மசாலைகள் யாவற்றையும் சீராய்ப் பரிபாலித்துவந்தார். ஸகல ராஜகார்யங்களையும் டம்பமின்றி அமரிக்கையாய் நடத்திவந்ததனால் அவர் தன் அதிகாரத்தை வெளிப்படையாய்க் காண்பித்துப் பொதுஜனபீதியை உண்டுபண்ணவில்லை. வங்காளத்துக்கவர்னராய் ராஜா மான்ஸிங் வீரநகரம் வந்தபோது ராஜா தோடர்மால் செய்த ஏற்பாடு ஒழுங்காயிருப்பதைக் கண்டு த்ருப்தியடைந்தார். நவகுமாரருடைய ராஜபக்தியையும், ராஜ்யபரிபாலன முறையையும் மெச்சி, ராஜா மான்ஸிங் அவருக்குத் தகுந்த மரியாதைசெய்து, வீரநகரத்து இளவரசனுக்கு யுக்த வயதுவந்தவுடன் தேவிபுரத்தை அவருக்கு அளிப்பதாகத் தோடர்மால் காலத்தில் செய்த வாக்குத்தத்தத்தை ஸ்திரப்படுத்தினார்.

நரேந்த்ரனுடைய பாட்டனாரிடத்தில் நெடுங்காலம் உத்யோகஞ்செய்து இப்போது அதிக வ்ருத்தாப்யதசையிலிருப்பவர்களுள் இரண்டொருவர்மாத்ரமே நவகுமாரருடைய ஆந்தரிக எண்ணத்தை அறிந்திருந்தார்கள். அவர்கள் நவகுமாரரிடத்தில் உள்ளும் புறமும் ஒத்திருக்கவில்லை என்பதை நன்குணர்ந்தனர். நவகுமாரர் வெளிக்குச் சிரித்தமுகமும், அன்பும் உடையவராகத் தோற்றியபோதிலும், அவர் மனமதில் ஏதோ வித்யாஸமான யோசனைகளும், ஆழ்ந்த கருத்துகளும் வைத்திருக்கிறாரென்று அவர்கள் ஸம்சயித்தார்கள். இரண்டு ஜமீன்களிலுமுள்ள ப்ரதான ப்ரபுக்களையும் உத்யோகஸ்தர்களையும் ரஹஸ்யமாய் அவர் தன் வசப்படுத்திக்கொண்ட விஷயம் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். வீரநகரத்து வேவுக்காரர்களும் ஒற்றர்களும் தங்கள் எஜமானர் இட்ட கட்டளைகளை ப்ரதிக்ராமங்களிலும், சந்தைகளிலும் அதிகசுறுசுறுப்பாக நடத்திவந்தார்கள். தேவிபுரத்தில் நூதனமாக சில கோட்டைகள் கட்டப்பட்டன. பழையகோட்டைகளும் மதிற்சுவர்களும் பழுதுபார்க்கப்பட்டன. போர்வீரர்களுடைய தொகையும் தினேதினே வ்ருத்தியடைந்துவந்தது. இந்த மாறுபாடுகள் ஏற்பட்டதின் காரணங்களை அவர்கள் நன்கு யூகித்தபோதிலும் அவைகளை வாய்விட்டுப்பேசத் துணியவில்லை. நரேந்த்ரன் பால்யபருவம் நீங்கும் ஸ்திதியிலிருந்தான். அவன் இப்போது நல்லஅழகும், அஞ்சாநெஞ்சமும், வீரதீரமும் பொருந்திய ஒரு வீரசிகாமணியாக விளங்கினன். அந்நரேந்த்ரனை எங்காவது மனிதர் நடமாட்டமற்ற இடத்தில் ஸந்தித்தால் அப்போது அவர்கள் தங்கள் மனதில் தோன்றிய ஸந்தேஹத்தை அவன் செவிகளில் வற்புறுத்தி உரைப்பார்கள்.

"ராஜா தோடர்மால் அதிக தைர்யஸ்தர். அவருக்கு இணையானவர் சௌர்யத்தில் வேறெவருங்கிடையாது. ராஜா மான்ஸிங்கைப்போல் ஸாமர்த்யவான் இம்மொகலாய ராஜ்யத்தில் காண்பதரிது. ஆனால் அவர்களிருவரும் நவகுமாரர் மனதில் குடிகொண்டிருக்கும் மோசக்கருத்தை அறிந்திலர். உனது பாட்டனாருடைய ஜமீன் இப்போது அவர்கையில் நன்றாய்ச் சிக்கியிருக்கிறது. நவகுமாரர் பிடி உடும்புப் பிடிதான். அவர் ஸாமாந்யரல்ல. தன் எண்ணத்தை எவ்விதத்திலாவது நிறைவேற்றிவிடுவார். ராஜகுமாரா, நாங்கள் சொல்வதை அசட்டை செய்துவிடாதே, ஜாக்ரதை!" என்று அவ்வயோதிகர்கள் பலமுறையும் நரேந்த்ரனிடத்தில் கூறியதுண்டு.

ஜமீன்தாரரின் அரண்மனை கடைத்தெருவுகளுக்கு மத்தியில் அமைந்திருந்தது. அவ்விடம் ஜனநெருக்கம் அதிகம். அந்த விசாலமான அரண்மனையின் சில பாகங்கள் இருநூறு முன்னூறு வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டனவாதலால் கொஞ்சம் கிலமாயிருந்தன; இன்னும் சிலபாகங்கள் அதற்குப் பின்னர் கட்டப்பட்டனவாதலால் அவைகள் அவ்வளவு ஜீரண ஸ்திதியிலில்லை. இவ்வாறு சிலபாகங்கள் நாளாவர்த்தியில் கிலமடைந்துவர, அவ்வப்போதைய ஜமீன்தாரர்கள் புதிய அறைகளும், கூடங்களும், கொலுமண்டபங்களும் கட்டிவந்தனர். பரம்பரையாய் வழங்கிவரும் ஸம்ப்ரதாயப்படியே நரேந்த்ரனது பாட்டனார்காலத்திலும் கட்டப்பட்ட கொலுமண்டபம் கடைத்தெருவை நோக்கி அதிக கம்பீரமாய் அமைந்திருந்தது. பழைய ஜமீன்தாரர் ராஜா தோடர்மாலை வரவேற்று உபசரித்ததும், இப்போது சில நாட்களுக்கு முன்னர்தான் நவகுமாரர் ராஜா மான்ஸிங்குக்கு விருந்தளித்ததும் இவ்வழகிய கொலுமண்டபத்தில்தான். அரண்மனையைச் சேர்ந்ததுபோல் ஒரு பெரியமுற்றம் ஒன்றிருந்தது. அம்முற்றம் நாலுபக்கத்திலும் சித்ரவேலை செய்யப்பட்டிருக்கும் ஸ்தம்பங்களால் சூழப்பெற்றிருந்தது. முற்காலத்திய அதிபதிகள் தனிமையாயும் ஏகாந்தமாயும்காலங்கழிக்க விரும்பாதவர்களாதலால், அம்முற்றத்தில் ஸதா ஸர்வகாலமும் ஜமீனின் நாலாபக்கத்து ஜனங்களும் கூடியிருந்தனர். அக்காலத்தில் ப்ரதி ஜமீன்தாரர் வீடும் ஒரு பெரிய கச்சேரிபோல் தானிருக்கும் ஏனெனில் ஜமீன்தாரர்கள் எப்போதும் தங்கள் குடிகளுடைய ஸுகதுக்கங்களை நேரில் விசாரித்துப் பரிஹாரம் செய்தும், அவர்களுடன் அடிக்கடி ஸம்பாஷித்து அவர்களுடைய அபிப்ராயங்களையும் நோக்கங்களையும் அறிந்தும் வருவதுவழக்கம். முற்றத்தைச் சுற்றியிருக்கும் விசாலமான அறைகளில்தான் ஜமீன்வ்யவஹாரங்கள் நடைபெற்று வந்தன. க்ராமாதிகாரிகள் தாங்கள் வசூல்செய்த பணத்தையும் தங்களுடைய கணக்குகளையும் ஒப்புவிக்க இவ்விடம் வருவார்கள். அதிக மழையினாலாவது அல்லது மழையில்லாததனாலாவது ஸாகுபடி த்ருப்தியாயிராத நிலங்களுடைய தீர்வையை தள்ளுவதற்கும், ஏரிகள் மராமத்துசெய்வதற்கும்,புது ஏரிகள்கட்டுவதற்கும் கால்நடை விதைதான்யம் வாங்கவாவது, வீடு கட்டவாவது முன்பணம் கடன் கேட்பதற்கும் க்ராம மஹாஜனக்

கள் அடிக்கடி ஜமீன்தாரரிடம் வந்து விண்ணப்பஞ் செய்துகொள்வது வழக்கம். இவ்விடத்தில்தான் ஜமீன்உத்யோகஸ்தர்களும், ந்யாயாதிபதிகளும் கேஸ்களை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிப்பது வழக்கம். சில ஸமயங்களில் ஜமீன்தாரர் நேரிலேயே இவ்யவஹாரங்களை நடத்துவதுமுண்டு. இவ்வாறு துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனஞ்செய்து நாட்டை ஸுபிக்ஷமாக அரசுபுரிந்துவரும் காருண்ய அதிபதியைக் கண்டுபோக வேண்டுமென்ற ஆசையினால் திரளான ஜனங்கள் இந்த ஸபைக்கு ப்ரதிதினமும் வருவார்கள்.

முற்றத்தைச் சுற்றியிருக்கும் மாடிஅறைகள் ராஜகுடும்பத்தினர்களுடைய இருப்பிடம். மேலேவிவரிக்கப்பட்ட கொலுவறைகள் முற்றத்தின் முன்புறத்திலிருந்தன. அதன் பின்புறம் ராஜஸ்த்ரீகளினுடைய அந்தப்புரம். அரண்மனைக்குள் மிகவும் அழகிய அறையில் நரேந்த்ரன் இருந்தான். அந்த அறையைப்போல் அவ்வளவு அழகுவாய்ந்திராத வேறு இரண்டு அறைகளில் ஹேமலதையும் அவனுடைய தாயாரும் இருந்தனர். ஜமீன்தாரருடைய பந்துக்கள் பலர் அந்த மாளிகையின் இதரபாகங்களில் தங்கள் குடும்ப ஸஹிதமாய் வசித்துவந்தனர்.

அந்தப்புரத்துக்குப் பின்புறத்தில் இன்னொரு அந்தஸ்து கட்டடமிருந்தது. அவ்விடத்தில் ஸ்திரீகள் தான் நடமாடுவார்கள். அவ்விடத்தில்தான் அரிசி, பருப்பு முதலிய போஜன பதார்த்தங்கள் வைத்திருந்தன. ப்ரதிதினமும் பால், தயிர், மோர், கறிகாய் ஏராளமாய்வரும். ஸூர்யோதயம் முதல் அர்த்தராத்ரி வரைக்கும் அடுப்பு எரிந்தபடியே இருந்தது. வயது முதிர்ந்த சமையல்கார ஸ்த்ரீகளும் இதர வேலைக்காரர்களும், அதிகக் கஷ்டப்பட்டுத் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள், அந்தக் கட்டில் குழந்தைகள் குதூஹலமாய்க் குதித்து விளையாடிக்கொண்டிருந்தன. கூடத்தில் பூஜைமண்டபம் இருந்தது. ஸூர்யோதய ஸூர்யாஸ்தமன காலங்களில ப்ரதிதினமும் ஒரு வைதிகப்ராமணர் அவ்விடத்தில் தேவதாபூஜை செய்துபோவது வழக்கம்.'

வீட்டுக்குச் சிறிது தூரத்துக்கப்பால் உத்யானவனம் இருந்தது. அவ்விடத்தில் ஒரு பெரிய ஏரி ஒன்றிருந்தது. அதன் கரையில் நல்ல இனிப்பான பழமரங்கள் வளர்ந்திருந்தன. அந்த ஏரியின் நாலுபக்கத்திலும் ஒரு பெரிய சுவர் எழுப்பப்பட்டிருந்தது. அச்சுவரில் பல வாயில்கள் அமைந்திருந்தன. அவ்வாயிலின் வழியாக ராஜஸ்த்ரீகளும் இன்னும் இதர உயர்குல மாதர்களும் நதிக்குப்போய் ஸ்நானஞ்செய்துவிட்டு, தேவாலயஞ்சென்று ஈசனை நமஸ்கரித்துத் தங்கள் நண்பர்களைக்கண்டு பேசி வருவார்கள். ஜமீன்தாரர் அகத்து ஸ்த்ரீகள் வழக்கமாகப் பின்கட்டு வாசற்படியாகத்தான் நதி தேவாலயம் முதலிய இடங்களுக்குப் புறப்பட்டுப் போவார்கள்.

பூர்வகாலத்து ஜமீன்தாரர்களுடைய மனைவிகளிடம் காணப்படும் குணதிசயங்கள்யாவும் ஒருங்கே திரண்டு உருவெடுத்துவந்தவள் நவகுமாரரின் மனைவி. குலத்துக்கேற்ற கம்பீரமும், அந்தஸ்த்துக்கேற்ற பெருந்தன்மையும் அமைந்தவளாய் அம்மாது சிரோமணி வைதிக க்ரியைகளிலும் ஆசாரவ்யவஹாரங்களிலும், வ்ரதாதி அநுஷ்டானங்களிலும் கிஞ்சித்தேனும் பிறழாமல் அந்தப் பெரிய குடும்பத்தின் அதிபதியாகத் தான் செய்யவேண்டிய கார்யங்கள் எல்லாவற்றையும் சற்றும் சலிக்காமல் செய்துவந்தாள். ஸூர்யோதயத்திற்கு முன்னமே புண்யதீர்த்தமாகிய கங்காநதியில் ஸ்நானஞ் செய்துவிட்டு அரண்மனை நந்தவனத்தில் நரேந்த்ரனது பாட்டனார் கட்டிய திருக்கோயிலிற்குச் சென்று ஸ்வாமி தர்சனஞ் செய்துகொண்டு வீட்டுக்குத் திரும்பிவந்து செய்யச் செய்யத் தொலையாமல் வளர்ந்துகொண்டே வரும் வீட்டு வேலையில் தலையிட்டுக்கொண்டு பாதிராத்ரி வரையில் ஓயாமல் உழைப்பாள். ஸ்த்ரீகள், குழந்தைகள் உள்பட வீட்டிலுள்ளோர் யாவரும் போஜனஞ் செய்தபின் அவள் ஸரியாய் உச்சிவேளைக்குக் கொஞ்சம் போஜனம் உட்கொண்டு சற்று கண் அயர்வாள். மறுபடியும் ஸாயந்த்ரம் வீட்டுவேலைகளை மேல் பார்த்துவிட்டு மத்யானம் போலவே ஸகலரும் சாப்பிட்டானபிறகு தானும் ஒரு வாய் அள்ளிக்கொண்டு அவள் நித்ரை செய்வதற்குள் ஏறக்குறைய நிசியாய் விடும். இவ்வளவு அந்தஸ்தும் பதவியுமிருந்தும் அவள் சற்றேனும் டம்பமில்லாமலிருந்தாள். அரண்மனையில் வசிக்கும் ஜமீன்தாரருடைய பந்துமித்ரர்கள் யாவரும் அவளது மொழிகளை வேதவாக்காகக்கருதி அவள்மனது சற்றுங் கோணாமல் நடந்து கொள்வார்கள். சில ஸந்தர்ப்பங்களில் நவகுமாரர் கூட ராஜாங்கவிஷயங்களைப்பற்றி அவளுடைய சாதுர்ய புத்திமதியைக் கேட்டு அதன்படி நடப்பார். தனக்கு ஈடு எவருங்கிடையாதெனக் கருதி இரண்டு ஜமீன்களையும் விமர்சையாய்ப் பரிபாலித்துவரும் நிபுணராகிய நவகுமாரர் அவளுடைய மனோபீஷ்டத்துக்கு மாறு செய்ய அஞ்சுவாரென ராஜஸ்த்ரீகள் தங்களுக்குள் அடிக்கடி ரஹஸ்யமாய்ப் பேசிக்கொள்வதுண்டு.

தானும் வீரநகரத்து ராஜவம்சத்தில் உதித்த காரணத்தினாலேயோ, அல்லது உயர்குலத்தில் அவதரித்து மன்மதனைப் பழிக்கத்தக்க உருவத்தையுடைய அவ்வநாதைக்குழந்தையின் பரிதபிக்கத்தக்க நிலைமையைக்கண்டு மனம் இளகியோ நவகுமாரருடைய மனைவி நரேந்த்ரனைத் தன் ஸொந்த புத்ரனுகபார்த்துச் செல்வமாய் வளர்த்துவந்தாள்: அவள் தன்வயிற்றிற்பிறந்த ஹேமலதையையும் அவ்விளங்குமரனையும் ஒரு சீராக வளர்த்துவந்தாள். அவர்கள் இருவரும் தோட்டத்திலாவது, ஏரிக்கரையிலாவது கூடி விளையாடுவதைக் காணும்போதெல்லாம் மனம்பூரிப்பாள். ஒரு தாய்வயிற்றுக் குழந்தைகளைப்போல் அவர்களை அன்பாக ஆதரித்துவந்த அவளுக்கு அவர்கள் ப்ரகருதத்தில் இருப்பதற்கேற்ப வருங்காலத்திலும் இருக்க வேண்டுமென்ற விருப்பம் ஸஹஜமாய் உண்டாயிருக்கும்,



ஹேமலதைக்குப் பன்னிரண்டு ப்ராயமாயிற்று. விவாஹகாலம் நெருங்கிவிட்டது. நரேந்த்ரனுடைய வயது பதினாறு. ஒருநாள் காலை ஸ்நானஞ் செய்துவிட்டு ஆலயத்துக்கு வரும்வழியில் அரண்மனை நந்தவனத்தில் குழைந்தைகளிருவரும் செடிகளுக்குஜலம் பாய்ச்சுவதை அவள்கண்டாள். நரேந்த்ரன் தடாகத்திலிருந்து நீர் கொண்டுவர, ஹேமலதை அதைவாங்கித் தான் நட்ட மல்லிகைச்செடிகளுக்குக் கொட்டிக்கொண்டிருந்தாள். ஹேமலதையின் தாயார் சற்று நிதானித்துக் குழந்தைகளிருவரும் ஒருவரையொருவர் நேசித்துக் குதூஹலமாயிருப்பதைக்கண்டு அந்த க்ஷணமே அவள் தன்மனதில் தீர்மானித்துக்கொண்டாள். ஆலயத்துக்குட்சென்று தன்மனோபீஷ்டத்தை ப்பூர்த்திசெய்து வைக்கவேண்டுமென அம்பிகையை வேண்டிக்கொண்டாள்.

அன்றையதினம்பகல் நவகுமாரர் போஜனஞ்செய்து 'உண்ட அலுப்பு தொண்டருக்கும் உண்டு' என்ற வசனத்தின்படி இளைப்பாறிக்கொண் டிருக்கும்போது அவருடையமனைவி அவர்படுக்கையண்டைவந்து தன் கணவனைத் தன் கரியவிழிகளால் அன்பாய் நோக்கி, ' தங்களுடைய முகம் அதிக கவலையாலும் வேலையாலும் வரவர வெளுத்துக்கொண்டு வருகிறது. உமது கண்களும் நாளுக்குநாள் காந்திகுன்றி உள்ளுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. நீங்கள் அதிக சிரமம் வைத்துக்கொள்கிறீர்கள். உமது தேகம் மிகவும் இளைத்துப்போயிற்று'' என்று பணிவாய்க்கூறினாள்.

“ புருஷர்களுக்கு எத்தனையோ வேலைகளும், எவ்வளவோ மனக்கவலையும் இருக்கின்றன. அதுவும் ஒரு நாட்டிக்கு அதிபதியென்றால் அவனுக்கிருக்கும் கவலைகளுக்குக்கேட்பானேன். ஸ்திரீஜாதியாகிய உனக்கு அவைகளெல்லாம் எவ்வாறு தெரியும் ? ”

“ ஆம், நீர் சொல்வது உண்மைதான். ஒரு ஸ்திரீ தன்புருஷனுடையமனக்கவலையைத் தானும் பாகித்துக்கொண்டு அவைகளைக்கூடியமட்டும் நீக்குவதற்காகத் தன்ப்ராணநாதருடைய மனக்கவலைகளை அறியவிரும்பாளோ? சென்ற சில வாரங்களாக ஏதோ புதிய கஷ்டம் ஒன்று தங்கள் மனதை வருத்துகிறதென்று நினைக்கிறேன். இதற்குமுன் இரண்டொருதடவை தாங்கள் தங்கள் கஷ்டத்தை என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். இம்முறைநான் தங்களுடையகஷ்டத்தைப் பாகித்துக்கொள்ள யோக்யதையற்றேனோ? ”

“ப்ரதிவருஷமும் புதியபுதியகவலைகள் எனக்குஏற்படுகின்றன. எப்போதும் உனது யோசனையைக் கேட்க மறக்கமாட்டேன். நரேந்த்ரனுக்கோ யுக்தவயதுவந்துவிட்டது. வீரநகரத்தை இன்னும் கொஞ்சகாலத்துக்குள் அவனுக்கு ஒப்புவிக்கவேண்டும்.”

“திக்கற்று, நாதனற்று இருந்தகுழந்தையை வளர்த்து, அவனுடையராஜ்யத்தையும் சீராகப்பரிபாலித்து யுக்தவயது வந்தவுடன் அவனுடைய பித்ரார்ஜ்ஜித ஸொத்தை அவனிடம்சேர்ப்பதைக்கண்டு ராஜமஹலை இப்போது அரசாட்சிபுரியும் சக்ரவர்த்தியவர்கள் உள்பட ஸகல ஜனங்களும் உம்மை மெச்சுவார்கள். நாடெங்கும் உமது பெருமையும் ப்ரதாபமும் ஸூர்யனைப்போல் ப்ரகாசிக்கும்.”

“ ஆஹா! என்ன பெருமை, என்னப்ரதாபம்! ஸரிஸமானமாகவோ அல்லது ஒருபடி உயர்ந்தோ—ஒருபோதும் தாழாமல்—மட்டுமே விஜய வீரர்களாகிய எனது முன்னோர்கள் அடியெடுத்துவைத்த நாட்டில் நான் கார்யதர்சியாக வேலைபார்த்து வருவது ஒரு பெருமையன்றோ ! நன்றாய்ச் சொன்னாய்! தேவிபுரத்து மகிஷியாக ஒருகாலத்தில் நீ இருந்ததைக்கூட மறந்து விட்டனையோ ? தேவிபுரத்து ராணியைப்போல் நீ பேசவில்லையே?”

“ நாதா, நான் ஒன்றையும் மறக்கவில்லை. நமது தேவிபுர வம்சத்தாரின் நோக்கங்கள், அந்தஸ்து, மரியாதை எல்லாம் என் ஞாபகத்திலிருக்கிறது. அந்த ஒன்றான பகவானது திருவருளால் நாம் நமது ராஜ்யம் பதவி, அந்தஸ்து யாவற்றையும் திரும்பிப் பெறுவோம் என்பதற்கு ஸந்தேஹமில்லை. ”

“கடவுள் க்ருபையிருந்தால் அடைவதற்கு ஸந்தேஹமா? நவகுமாரன் மாத்ரம் தன் பழைய ஸாமர்த்யத்தை இழக்காதிருக்கவேண்டும், தேவிபுரம்முன்னிலும் பதின்மடங்கு அதிக பெருமையுடன் விளங்காதா?”

“அப்படியேஆகுக, நம்மை இதுவரைக்கும் எவ்வளவோ கஷ்டங்களினின்றும் விடுவித்த பகவான், நமக்கு வருங்காலத்தில் முன்னிலும் அதிகமான கீர்த்திக்கு வழிசெய்துகொணடிருக்கிறார். ”

“ மனதிலுள்ளதை ஒளிக்காதே உள்ளதை விட்டுப்பேசு, நீ பேசுவதைப்பார்த்தால் ஏதோ உன்மனதில் சில எண்ணங்கள் குடிகொண்டிருக் கிறதுபோல் தோன்றுகிறது; இதுவரைக்கும்உன் யோசனை வீண் போனதில்லை. பலமுறையும் நான் உன் யோசனையைக் கேட்டு பயனடைந்திருக்கிறேன். ”

“ நாதா, நமது குழந்தை ஹேமலதைக்கு என்ன வயது ? ”

“என்னத்திற்கு ? இப்போது அவளுக்கு வயது பன்னிரண்டு, நாம் தேவிபுரத்துக்கு வரும்போது அவள் இரண்டுவயது குழந்தை, நாம் வந்து பத்து வருஷம் ஆகவில்லையா ”

“அவளுடைய விவாஹ விஷயத்தைப்பற்றி யோசிக்கக் காலமாயிற்றல்லவா? ”

“ ஆம், அதைப்பற்றி நான் இதுவரைக்கும் யோசிக்கவில்லை. நமது ராஜ்யம் நம்வசமிருந்தால் நாட்டிலுள்ள சீமான்களெல்லாம் அவளை எனக்கு உனக்கென்று கேட்பார்கள். நாம் வீரநகரத்தில் உத்யோகத்திலிருக்குமட்டும் நம்மை யார் மதிப்பார்கள் ?”

“அப்படிச் சொல்வானேன் ? தேவிபுரத்து இளவரசியைத் தகுந்த சீமான்கள் பலர் விரும்புகின்றனர். தூரதேசங்களிலிருந்துகூட பல ராஜகுமாரர்கள் அவளை நாடி வருகின்றனர். ஈச்வரனது அருளால் நமக்கு இருக்கும் இந்த ஒரு குழந்தையையும் விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது. ஹேமலதையை அனுப்பிவிட்டு என்னால் ஒரு நிமிஷமும் உயிர்த்திருக்க முடியாது.”

"ஹேமலதை உனக்கு எப்படியோ அப்படியே தான் எனக்கும் உனக்கு எவ்வளவு அருமையோ அதைவிட ஜாஸ்தி எனக்கு. எனக்குப் பின்னர் என் ராஜ்யத்துக்கு அவள்தான் அதிபதி. அவளை மணம் புரிந்து நமக்குபின் நமது நாட்டை அரசுபுரிய எவன் தான் மறுப்பான்? கரும்புதின்ன கூலிவேண்டுமா?"

"நரேந்திரனை ஸமீபத்தில் எப்போதாவது பார்த்தீர்களா?"

"ஏன்? ப்ரதிதினமும் பார்க்கிறேன். அதைப்பற்றி என்ன கேள்வி இப்போது"

"அவன் எவ்வளவு ஸௌந்தர்யமாயிருக்கின்றான்? அவ்வளவு ப்ரகாசமான முகமும், பெருந்தன்மையான நடத்தையும் வேறெவரிடத்திலும் நான் இதுவரைக்கும் கண்டதில்லை."

"நல்ல ரூபவான்தான், தன்னைவிட அழகிலும், ஸாமர்த்தியத்திலும் சிறந்தவர் ஒருவரும் கிடையாது என்ற எண்ணம் பூர்த்தியாயிருக்கிறது. அவன் சொல்வார் வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கெட்டுப்போயிருக்கின்றான். கர்வம் தலைக்குமேல் ஏறியிருக்கிறது. சில பழங் கந்தைகள் அவன் செவியில் கண்டதெல்லாம் போதனை செய்திருக்கின்றன. அதைக் கேட்டு அவன் சிறிது மனோராஜ்யத்திலிருக்கிறான்."

"நாதா, அவன் பிறந்த வம்சத்தையும், அவனுடைய அந்தஸ்தையும் நாம் யோசிக்க வேண்டாமா? அவனுக்கு அவ்வித எண்ணங்கள் உதிக்க ஹேதுவில்லையா? அவனுடைய பாட்டனார் வீற்றிருந்த ஸ்தானத்தில் அவன் வீற்றிருக்கக் காலம்வரும்போது அப்பெருமையும், காம்பீர்யமும் அவனுக்கு ஏற்றிருக்காதோ?"

"ஆஹா, பாட்டனார் அந்தஸ்துக்கு இவன் வரமாட்டானோ? அவர் என்ன, இவன் என்ன? எனக்குச் சில ஸமயங்களில் தீங்கிழைத்துள்ள போதிலும் அவரைப்போல் ஆண் மகன் இனி எவனாவது அகப்படுவானோ, சொல்வார் வார்த்தையைக் கேட்டுத் தறிதலையாய்ப்போன இந்தச்சிறுவனோ அவன் பாட்டனார் ஸ்திதிக்கு வருவது?"

"நாதா, நான் சொல்வது தங்கள் மனதுக்குப் பிடிக்காவிட்டாலும், என் வார்த்தையைச் சற்று செவி கொடுத்துக் கேளுங்கள். இவ்விஷயங்களில் ஸ்திரீகளுக்குத் தெரிந்தவளவு புருஷர்களுக்குத் தெரிவதில்லை. வீரகசாத்தில் இதுவரைக்கும் அரசுபுரிந்த தலைவர்கள் எவருக்கும் நரேந்தரன் குறைந்து போகமாட்டான்."

[..]வகுமாரர் அலக்ஷ்யமாய்ச் சிரித்துக்கொண்டே, "[..]ன்னைப்போல் எனக்கு அவ்வளவு கண்கள் சுத்தமாயில்லை. அவனிடத்தில் நீ சொல்லும் உயர் குணங்கள் இருப்பதாக எனக்குப்புலப்படவில்லை" என்றார்.

"திரும்பவும் நான் சொல்லுகிறேன் கேளுங்கள். [..]தாது முகத்தையும் அவர்களுடைய முகதேஜஸை[..] பார்த்து அவர்களுடைய பெருமை சிறுமைகளை [..]றிவதில் புருஷர்களைவிட ஸ்திரீகள்தான் சதுரர். சென்ற சில வருஷங்களாக நான் அவனை ப்ரதினமும் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறேன். புருஷர்களுடைய அந்தரங்கயோசனைகளும் நோக்கங்களும் ஸ்திரீகளுக்குக் கரதலாமலகம்போல் புலப்படுகின்றன."

"ஒரு அசட்டுக்கர்வமும் மூடத்தனமும்தான் அவன் முகத்தில் குடிகொண்டிருக்கிறது. வேறொன்றும் எனக்குத்தெரியவில்லை." ராமநாதன்.

(இன்னும் வரும்.)

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**விவசாயபத்திரிகை ப்ரசுரமாகும் தேசங்கள்.** அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலும், ஜப்பான் தேசத்திலும், விவசாயப்பத்திரிகை ஏராளமாய்ப்பிரசுரிக்கிறார்கள். அந்த தேச கிராமங்களில் படமுள்ள விவசாயபத்திரிகைகள், துண்டுபத்திரிகைகள், ஏதேஷ்டமாய்க் காணலாம். பத்திரிகைகள் இனாமாகக்கொடுப்பதை கவர்ன்மெண்டார் பொருட்டாய் பாவிப்பதில்லை; ஜனங்கள் பத்திரிகைகளை, சரியாய் கவனிக்கிறார்களாவென்று விசாரிக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில், விவசாய போதனை குறைவில்லாமல் நடக்கிறது. அமெரிக்கா ஐக்கியமாகாணங்களில், ஸ்பெஷல் ரெயிலில், விவசாய உத்தியோகஸ்தர்கள், படங்கள் மாஜிக் லான்டர்ன், (Magic Lantern) தொட்டிகளில் பயிர்முதலியன சகிதம் சர்கியூட்போய், ஒவ்வோர் ஸ்டேஷனிலும், சிலமணிநேரம்நிறுத்தி ஜனங்களுக்கு பிரசங்கஞ் செய்வதும், மாஜிக் லாண்டர்ன் மூலமாய் பயிர்களின் பிரத்தியக்ஷ தெரிசனங் காட்டப்படுகின்றது. நேடால் விவசாய டிபார்ட்மென்டார் பிரசுரிக்கிற மாதாந்தர விவசாய பத்திரிகையில், விலை வாசியைப்பற்றிய அனுபந்தம் சேர்க்கப்படுகிறது. அதில் உள்நாட்டுவிலையும் அயல்நாட்டுவிலையும் குறிக்கப்பட்டிருக்கிறது. பின்னும் அயல்தேச வியாபாரிகளை விசாரித்து சரக்குகளை விற்பதற்கேற்ற விலையும் தெரிவிக்கப்படுகிறது. அந்த விவசாய இலாகாவின் காருண்யமும், இவ்வளவு மேம்பாடும், புகழ்ச்சியும் அளவிடமுடியுமா? இந்தியாவில் நாகப்பூரிலும், மத்யமாகாணத்திலும், விவசாய இலாகா, தேசபாஷையில் மாதாந்தர பத்திரிகை வெளியிடுகிறது. அதில் நாகப்பூர் டிபார்ட்மெண்டார், பாரத்தில் பரீட்சிக்கும் முறைகளை யறிவித்தல் தகுந்த பலனை யளிக்கிறது.

***

**அமெரிக்காவில் பத்திரிகைகளின் அபிவிருத்தி.**—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் 2,472 தினப்பத்திரிகைகளும் 16,269 வாரப் பத்திரிகைகளும் அநேக மாதப் பத்திரிகைகளும் ஆகமொத்தம் 22,806 பத்திரிகைகள் நடைபெறுகின்றன. இவை யனைத்திற்கும் மொத்தமாக 59,000000, அதாவது அமெரிக்காவின் ஜனத்தொகையின்படி ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு தினப் பத்திரிகை, ஒரு வாரப் பத்திரிகை, ஒருமாதப்பத்திரிகை மூன்றும் வாங்குகின்றனர்.



காலஞ்சென்ற ஸ்ரீ கோபாலக்கிருஷ்ண கோகலே

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்தஸு மாசிமீ : 1915-ஸு மார்ச்மீ } பகுதி 9

THE REGISTRAR
22 MAR 19..

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 32. வேத ரஹஸ்யம்

கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியெனக்
  கண்டவே தாக மத்தின்
காட்சிபுரு ஷார்த்தமதின் மாட்சிபெறு முத்தியது
  கருதி னனுமான மாதி
உத்திபல வாகிரு விகற்பமே யில்லையா
  லொன்றே டிரண்டென் னவோ
வுரையுமில்லை நீயுமில்லை நானுமில்லை யென்பது
  முபாயநீ யுண்டு நானுஞ்
சித்தமுள தனில்லை யெனும்வசன நீயறிவை
  தெரியார்க டெரிய வசமோ
செப்புகே வலநீதி யொப்புவமை யல்லவே
  சின்முத்தி ரங்க மாயிற்
சத்தமற வெனையாண்ட குருமௌனி கையினாற்
  றமியனேற் குதவு பொருளே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
  சச்சிதா னந்த சிவமே.

(சச்சிதானந்தசிவம்—7)

### 33. காரியகாரண அதீதம்

வேதாவை யிவ்வணம் விதித்ததே தென்னினுன்
  வினைப்பகுதி யென்ப னந்த
வினைபேச வறியாது சிற்சவிவை மனதால்
  விளைந்ததா ன்மனதை நாடிற்
போதமே கிற்குமப் போதத்தை நாடிலோ
  போதமு நின்றவி ளக்கம்
பொய்யென்று தெய்வமறை யாவுமே நீயென்று
  போக்குவா வறநி கழ்த்தும்
ஆதார வாதேய முழுது நீ யாதலா
  லகிலமீ தென்னை யாட்டி
யாடல்கண் டவனுநீ யாடுகின் றவனுநீ
  யருளுநீ மௌன ஞான
தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ
  தமருநீ யாவுநீ காண்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
  சச்சிதா னந்த சிவமே.

(சச்சிதானந்தசிவம்—10)

### 34. உலகின் இயல்பு: முத்திநிலை

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
  சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
  சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசா லக்கோலம்
  வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
  வாஞ்சையி லாத கனவே
எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
  யிரவுபக லில்லா விடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
  யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலுமவகை யென்கொ
  தேடரிய சத்தாகி யென் (லோ)
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
  தேசோ மயானந் தமே.

(தேசோமயானந்தம்—3)

## CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தல | இங் | தமிழ் | வார | ஆநந்தஹு பங்குனிமூ — சாலிசகம் 1836 கலியப்தம் 5015 — பசலி1324 கொல்லம்-1090 — 1915ஹு மார்ச்மூ ஏப்பிரல்மூ |
|---|---|---|---|---|---|
| ரகு | 27 | 14 | 1 | ஞா | சது 46-29, சத 52-23, சித் 5-8, பத் 16-35, திவி 9-25, அக 29-47, மீனரவி 3-17, சத 4 குரு 35-0, மீன கி சதுர்திதி ஷடசீதி காரடையான் நோம்பு மாசி சூன்யார்கம். [ருத்திரஸாம. |
| பு | 28 | 15 | 2 | திங் | ●அமா 47-28, பூர 55-0, சா 3-16, சது 16-56, திவி 9-5, அவி 4 புத 45-34, அமாதிதி சர்வ அமா சோம அமா |
| சு | 29 | 16 | 3 | செ | பிர 49-43, உத் 58-50, சுப 1-30,கிம் 18-35,திவி 20-32,சைத் சுத் திரு 3 சுக் 2-21,சாந்திர ஸம்வஸ்தரகௌரீ இஷ். |
| ரசெ | 30 | 17 | 4 | புத | துதி 53-8, ரே 60-0, சுப் 0-48, பா 21-25, ரா 1-33, உத் 1 ரவி 24-7, சத 3 செ 20-30, சங்-தரி மழை 4-க்குள். |
| புசுச | 1 | 18 | 5 | வியா | திரு 57-23, ரே 3-52, பிரா 0-49, தை 25-15, ரா 28-42, அக 29-56, சத 1 புத 24-14, திரு 4 சுக் 59-0, மிதுனரிசுசனி 30-0, ஸௌபாக்ய கௌரீ உத்தமஸாமம. [சிரா கரிநாள். |
| கு | 2 | 19 | 6 | வெ | சது 60-0, அசு 9-35, மா 1-30, வணி 24-41, சே 2-38, ரா 6-11,பிராகுதயகுரு 43-7,சது விரு சத்திகெணபதி வை |
| ரபு | 3 | 20 | 7 | சனி | சது 2-28, பா 15-54, வை 2-43, பத் 2-28, ரா 19-9, உத் 2 ரவி 44-47, சத 2 புத 57-28,கார் உப மத்ஸய ஜ கல்பா. |
| செசு | 4 | 21 | 8 | ஞா | பஞ் 7-41, ✳கார் 22-21, விஷ் 4-7, பா 7-41, தியா—0—0 சத 4 செ 39-30, அவி 1 சுக் 55-0, சஷ் உப. |
| | 5 | 22 | 9 | திங் | சஷ் 12 41, ரோ 28-32, பிரி 5-24, தை 12-41, திவி 6-28, ரா 13-47, அக 30-4, மேஷாய 46-47,சப் விரு சந்தான |
| பு | 6 | 23 | 10 | செ | சப் 17-7, மிரு 34-9, ஆயு 6-17, வணி 17-7, ரா 26-44, சத 3 புத 3-18, அஷ்டமிதிதி. [சப்தமி. |
| ரசு | 7 | 24 | 11 | புத | அஷ் 20-44, திரு 38-51, ஸௌ 6-37,பவ 20-44,சே 0-48,உத் 3 ரவி 6-20,அவி 2 சுக் 51-18,அதிதி அசோகாஷ்ட. |
| செபு | 8 | 25 | 12 | வியா | நவ 23-14,புன 42-31,சோ 6-5,கௌ 23-14,திவி 10-41, பூரட் 1 செ 55-40,சத 4 புத 14-29,நவமிதிதி ஸ்ரீராமநவ. |
| | 9 | 26 | 13 | வெ | தச 24-31, பூச 44-54, அதி 4-42, கர 24-31, திவி 3-19, அக 30-10, மழை 10-க்குள். [கும்பசுக் 44-50, சர்வ ஏகா. |
| ரபுசு | 10 | 27 | 14 | சனி | ஏகா 24-28, ஆயில் 46-8, சுக 2-15, திரு 56-40, பத் 24-28, திவி 17-33, உத் 4 ரவி 27-50, பூர 1 பு 22-22, |
| | 11 | 28 | 15 | ஞா | துவா 23-12,ம 46-0,சூல 54-31,பா 23-12, திவி 16-4, துவாதி மதனத்திரயோ பிரதோ கரி. |
| பு | 12 | 29 | 16 | திங் | திர 20-47, பூர 44-48, கண் 49-11,தை 20-47,திவி 5-36,பூர 2 புத 19-22 திதித் சமனச 1. |
| ரசெ குசு] | 13 | 30 | 17 | செ | சது 17-18, உத் 42-44, விர் 43-13, வணி 17-18, திவி 2-11, அக 30-18, ரே 1 ரவி 49-58 பூர 2 செ 15-0,பூரட் 1 குரு 15 0,அவி 4 சுக் 37-9,பூர்ணிமாதிதி பங்குனி உத்திர கரி. |
| பு | 14 | 31 | 18 | புத | ○பௌ 12-59, ஹஸ் 39-49, துரு 36-33, பவ 12-59, திவி 2-43, ரா 28-22, பூரட் 3 புத 10-23, சாந்திரசித்ராபருவம் ரௌச்சம வைஸ்நா ஆ. [களில் உஷ்ணமதிகரிக்கும். |
| | 15 | 1 | 19 | வியா | பிர 7-47, சித் 36-21, வியா 29-27, கௌ 7-47, சே 2 40, ரா 19-8, சைத்பகு சிலவிடங் |
| புசு | 16 | 2 | 20 | வெ | துதி 2-27, திரு 54-8, சுவா 32-31, ஹர் 22-1, கர 2-27, ரா 15-14, மீனபுத 13-25, சத 1 சுக் 29-26. [பிராகஸ்தபுத 55-7, சங் சது. |
| ரசெ | 17 | 3 | 21 | சனி | சது 50-36, விசா 28-28, வஜ் 14-23, பவ 23-35, ரா 7-17, அக 30-20, ரே 2 ரவி 12-56, பூரட் 3 செ 32-10, |
| பு]பு | 18 | 4 | 22 | ஞா | பஞ் 44-41, அனு 24-23, வித் 6-41, விய 52-21, கௌ 17-38, ரா 7-10, உத் 1 புத 9-57, விய சிரா |
| சு | 19 | 5 | 23 | திங் | சஷ் 39-15, கே 20-39, வரி 51-37, கர 11-58, பா 9-3, சத 2 சுக் 21-43, மழை 3-க்குள். |
| ரபு | 20 | 6 | 24 | செ | சப் 33-59, மூல 17-4 பரி 44-52, பத் 6-37, திவி 13-4, ரா 9-29, ரே 3 ரவி 35-54, உத் 2 புத 2-30. காளாஷ்டமி. |
| புசெ | 21 | 7 | 25 | புத | அஷ் 29-27, பூரா 14-10, சிவ 38-32, கௌ 29-27, ரா 3-2, அக 30-25, மீனசெ 46-0, உத 3 புத 55-40. |
| சு | 22 | 8 | 26 | வியா | நவ 25-44, உத் 12-1, சித் 32-54, கர 25-44 திவி 21-49, சத 3 சுக் 14-0, வராகஜ சிர உப. |
| ரபு | 23 | 9 | 27 | வெ | தச 23-2, திரு 10-50, சா 28-5, பத் 23-2, திவி 20-49, ரே 4 ரவி 59-58, உத் 4 புத 49-27, தசமிதிதி |
| | 24 | 10 | 28 | சனி | ஏகா 21-27, அவி 10-46, சுப 24-10, பா 21-27, திவி 29-6, திதித்வயம் சர்வஏகா மழை 2-க்குள். [பிரதோ. |
| புசு | 25 | 11 | 29 | ஞா | துவா 21-6, சத 11-52, சுப் 21-43, தை 21-6, திவி 28-30, அக 30-32, ரே 1 புத 45-15, சத 4 சுக் 6-17, அதிதி |
| செ | 26 | 12 | 30 | திங் | திர 22-5, பூர 14-15, பிரா 19-18, வணி 22-5, ரா 9-11, உத் 1 செ 5-52, மீன கி திரயோதிதி மாசி. |
| ரசு | 27 | 13 | 1 | | ராக்ஷஸஹு சித்திரைமீ, செ சது 24-20,உத் 17-52, மா 18-18, சகு 24-20,ரா 19-37, அக 30-35, மேஷரவி 23-38, பூரட் 1 சுக் 58-17, சௌரவருஷப்பண்டிகை. |

| ரவி | | சனி |
|---|---|---|
| குசெ பு-ரா | 5-மா-ரி-ச 14-கும்-சு 20-மீன பு 25-மீ-செ | |
| சுக் | | கே |
| | | |




# விவேக போதினி

தொ. 7] ஆனந்தஹு மாசிமீ [பகுதி. 9


## மோக்ஷ ஸோபாநம்

### THE STEPS TO THE GOAL

#### 4. ராஜ யோகம்: பீடிகை

இந்த ராஜயோகம்தான் மூன்றுவது படி: பக்தியோகம் முதிர்ந்தால்தான், இந்நிலை அப்யாஸிக்கு வரும். ஸாதாரணமாக யோகம் என்ற பதத்திற்கு பரம்பொருளுடன் சேர்க்கும் வழி என்ற பொருளிருப்பினும், இப்படியில் இந்தச் சொல்லுக்குச் சிறப்பான வேறு ஒரு பொருளும் உண்டு. பரம்பொருளுடன் உள்ளபடி அப்யாஸியைக் கொண்டு சேர்ப்பதில் முக்ய ஸாதனமான மனதின் எண்ண அடக்கம் என்பதே யோகம் என்ற சொல்லுக்கு இந்தத் தொடரில் சிறப்புப்பொருள். கீழ் சொல்லப்பட்ட இரண்டு யோகங்களிலும் மனதின் தன்மையை உள்ளபடி உணர்ந்து அதை அடக்கவேண்டிய முயற்சிக்கு இடமே இல்லை. மேல் கூறப்போகும் ஞானயோகத்தில் அடங்கிய மனதைக்கொண்டு பரம்பொருளை பாகிவிடுவதில முயற்சிபாதலால் அங்கும் மனதின் எண்ணங்களை அடக்கத் தனிமுயற்சி வேண்டியதில்லை. ஆகவே அந்த முயற்சி இந்த மூன்றும் நிலையிலே முக்கியமாக இருப்பதால்தான் இங்கு யோகம் என்பதில் நிஷ்காம்யம், பரம்பொருளுடன் சேர்க்கும் மார்க்கம் என்ற பொருள்களுடன் சித்தவிருத்தி நிரோதம் என்னும் மனத்தொழிலடக்கம் என்றபொருளும் அடங்கியுள்ளது. ராஜ என்ற சொல்லுக்கு சிறந்த என்று பொருள் ஆகவே ராஜயோகம் என்பது மனிதன் தன் முயற்சியால் செய்யும் மோக்ஷ வழிப்போக்கில் இந்தப்படி மிகச் சிறந்தது ஆன்றுச்சுது. ஞானயோகமல்லவா சிறந்தது என்ற சங்கை இங்கு வரலாம்: ஆனல் அதில் பெரும்பாலும் மானிடமுயற்சி குறைந்தும் பரம்பொருள் பெருமையின் ஆற்றல் மிகுந்தும் இருக்கும். ஆதலால் அதை முயற்சிக்கு மேற்பட்ட அதீதநிலையாகக்கொண்டு மானிடமுயற்சியில் சிறந்தது இந்த ராஜயோகமே என்று உணரவேண்டும்.

இங்கு எடுத்துக் காட்டப்பட்ட சிறப்புப் பொருளும் அமையப்பெற்ற யோகம் என்ற சொல்லால் குறிக்கப்படும் விஷயத்தில் தத்காலத்தவர்களுக்கு திடமான மோஹம் ஒன்று உள்ளது. யோகம் என்பது ஏதோ செப்படி வித்தைபோன்ற மூச்சடக்கும் கூத்தாடி வித்தை: இது ஸாதாரணர்களால் செய்ய முடியாதது: அப்படி முயல்பவர்கள் பொதுவாகக் கொடிய நோய் முதலியன வந்து வருந்தும்படியாகும்: அல்லது ஒருவேளை ஸரிவரத் தேறிவந்தால் விநோத ஸித்திகள் ஏற்பட்டு அப்யாஸியை மோக்ஷவழியை விட்டுக் கீழே இழுத்துவிடும், உலகத்தவரிடம் கீர்த்தி பெறவேண்டும் என்ற எண்ணக்கிளர்ச்சியால்: ஆதலால் இந்த யோகத்தைக் கவனிக்கவே கூடாது என்று இவ்வாறு கண்மூடி அபிப்ராயம் ஒன்று நம்முள் புத்திமான்களிடத்தும் ஓங்கித் தழைத்துக்கொண்டு வருகிறது. இதனால் விளைந்துள்ள தீமைகள் அநேகம். இப்பொழுது நம்மவரிடமிருக்கும் நமது மத விஷயங்களான, கர்மா, பக்தி, லோகாந்தரம், ஈசன், ஜீவன்,

வேதசாஸ்திரங்களின் தன்மை இவை முதலியவைகளைப்பற்றிய பூர்ண அஞ்ஞானம்; இதனால் மோக்ஷமடைய ஏற்பட்டுள்ள யோக வழிகளான ஜாதி வர்ணாச்ரமதர்மம், ஸ்திரீ புருஷதர்மம், முற்கூறிய விஷயப் பகுத்தறிவு ஆகிய இவைகளில் ஊன்றிய அனாதரவு; வேதங்களில் காணப்படும் பரம முடிவான அத்வைத வேதாந்தத்தை கண்மூடித்தனமாகப் பின்பற்றி உணரப்படும் ஆபாஸவேதாந்தத்தைக்கொண்டு எழுந்துள்ள தத்காலத்திய சூத்திர, ஆஸுர, விதவ, கலுவாய், ராக்ஷஸ, சீர்திருத்த, ராஜத்ரோக, ஜனோபகார, வேதாந்தங்கள் பல ஓங்கித் தழைப்பது; ஆகிய கர்ம, பக்தி, யோக ப்ரஷ்டவேதமில்லா வெறும் அந்தங்களே நமது வேதாந்தங்களுக்கு அந்தியகால நிலையைக் கொண்டுவந்துவிட்டன! இக்கொடிய நிலைகளுக்கெல்லாம் யோகநுட்பத்தை உணரா அறியாமையே காரணம். இன்னும் தத்காலத்திய பலகொடிய நிலைகளுக்கும் இந்த யோக அனாதரவேதான் காரணம். இவைகளை ராஜயோக விஸ்தாரத்தில் ஆங்காங்கே ஸந்தர்ப்பத்திற்கேற்ப எடுத்துக்காட்டுவோம்.

யோகம் என்பதன் உண்மைப்பொருள்தான் என்ன? முன்னரே மன எண்ண அடக்கம் என்று கூறியாகிவிட்டது. அதை இனி இங்கு எடுத்து விவரிப்போம். எல்லோருக்கும் தத்தமக்கு மனம் என்ற அத்புதத் தொழில்கள் எல்லாவற்றிற்கும் எண்ண ரூப காரணமாக இருந்துகொண்டு காரியப்பட்டு விளங்கும் ஒரு அத்புத அரூபக் கருவி உள்ளே இருக்கின்றது என்பதற்கு ஸந்தேஹமே இல்லை. இதன் எண்ணங்களை அடக்குவதுதான் யோகமெனப்படும். முற்கூறியுள்ள கீழ்ப்படிகளில் மனம் ஒன்று உள்ளது, அதன் தன்மை இப்படிப்பட்டது, அதன் எண்ணங்களை இப்படி அடக்க வேண்டும், இப்படிச் செய்தால்தான் மோக்ஷம் கைகூடும் என்ற பகுத்தறிவொன்றும் நன்றாக இல்லாது பொதுவாக நற்கதி ஜீவர்களுக்கு வர ஈசனால் ஏற்படுத்தப்பட்ட கர்மபக்தி ஒழுங்குகளைப் பின்பற்றி பழகிவந்தான் அப்பாவி. இந்த ராஜயோக நிலையில்தான் இவைகளைப் பற்றிய யுக்தி விசாரமும், நெருங்கிய மனப்பூர்வப் பழக்கமும் ஏற்படும். அதற்கு முதல்படி மனதின் விருத்திகளின் பொதுத்தன்மைகளை உணர்ந்து அவைகளை அடக்குவதென்றால் என்ன என்ற யோகச் சொற்பொருளை நன்கு உணரவேண்டும். மனவிருத்திகளை அடக்குவது என்பது இரண்டு விதம். அவையாவன: மனதில் பலவாறாக மாறிமாறி எழும் விருத்திகளுள் ஒன்றை முக்யமாகக்கொண்டு மற்றவைகளை எழவொட்டாது தன் முயற்சியால் தடுத்து அந்த எண்ணத்தையே தைல தாரைபோலத் தொடர்ந்து கொஞ்சகாலம் வந்துகொண்டே இருக்கும்படி மனம் நிற்பதாகிய ஏகாக்ரம் (ஒருமைப்பாடு); அப்படி நிலைத்த விருத்தியும் மனதிற்கு ஒரு வேலைதானே என்று அதையும் அடக்கிய ஒழிவில் ஒடுங்கி மனம் நிற்பதாகிய நிருத்தம் (ஒழிவும்) ஆகிய இவைகளே. இவ்விரண்டு யோக நிலையில் ஏதிலாவது மனம் இருக்கும்படி செய்வதே யோகம் எனப்படும். இதில் யோகத்தின் முதல்படியாகிய ஏகாக்ரத்தில் மனம் நிலைத்திருக்க முயலுங்கால் ஏகாக்ர நிலை கைகூட வேண்டும் என்ற ஆவலும், சிறுகாலம்கூட மனம் நிலைக்காது வெளி விஷயங்களை நோக்கிப் பாய்ந்தோடுவதும், அதைப் பிடித்து இழுத்து தன் ஏகாக்ர வஸ்துவில் நிறுத்த முயலுவதும், அப்படி முயலுங்கால் மன எண்ணங்கள் எல்லாம் ஒடுங்கி மனம் தூக்கத்திற்கு நிகரான மயக்கத்தை அடைந்து ஏகாக்ர வஸ்துவைக் கைவிட்டு மறந்துவிட அதை அப்படித் தூங்கவிடும்படி விடாது தடுப்பதுமாகி வெகுகால முயற்சியில் சற்று



ஏகாக்ரக்கோடி வெளிப்படுவதுமான மனதின் பழக்க நிலைக்கு விக்ஷிப்தம் என்று பெயர். இதற்குக் கீழ்ப்பட்ட நிலைகள் இரண்டு உண்டு. அவையாவன: விஷயங்களுக்கு இடையில் அலைந்து ஸுகதுக்கங்களை அனுபவித்து மொத்துண்டு நிற்றலாகிய க்ஷிப்தம்: இவ்வாறு மொத்துண்டு களைத்து எல்லாவற்றையும் கைசோரவிட்டு ஒன்றையும் நாடமுடியாது தொழிலற்று நின்றுவிடுவதாகிய தூக்கம், மோஹம், சோம்பலாகிய மூடம் ஆகிய இவைகளே. இவ்விரண்டும் ஸாதாரணர்களுக்கு உள்ளதுபற்றியே தாயுமானவரும் 'எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதுவும் (க்ஷிப்தம்) உறங்குவதும் (மூடம்) ஆக முடியும்' என்று பொதுஜன முயற்சியை விளக்கிக் காட்டியுள்ளார். இப்படிப்பட்ட ஸாதாரண ஜனங்கள் கூடியுள்ள இவ்வுலகில் ஆயிரவருள் ஒருவனிடம் விக்ஷிப்தம் (க்ஷிப்தம் மூடங்களை விசேஷமாக நீக்கி ஏகாக்ரதர்சனம் செய்தல்) என்ற நிலை காணப்படும். இவனுக்குத்தான் கர்ம அல்லது பக்தியோகி என்று பெயர். விக்ஷிப்தம் காணப்படும் ஆயிரவருள் ஒருவனிடம்தான் ஏகாக்ரம் காணப்படும். இந்நிலையை அடைந்தவனுக்குத்தான் ராஜயோகி என்று பெயர். இந்த ஏகாக்ரம் முற்ற வெகு சிலருக்குத்தான் நிருத்தம் கைகூடும். இந்த நிருத்தநிலை மதியிலேயே ஞானயோக டால், வீசத்தொடங்கிவிடும்: எவ்வாறு பக்தியோக முடிவில் யோகடாலான ஏகாக்ரம் தலைதூக்குமோ, அதுபோல இப்படிப்பட்ட மனதின் ஐந்து நிலையை நன்கு முதலில் உணர்ந்து பக்தியோகி ஈச்வரனிடம் ஏகாக்ரத்தில் பழகி நிருத்தத்தில் முயலவேண்டும். இதுதான் பக்தியோகியிடம் ராஜயோக நிலையை அடைந்ததும் நடக்கும் முயற்சி.

இங்கு கூறியபடி பக்தியோகி மனம், ஞானபூர்வமாக ஏகாக்ரத்தில் நிலைப்பதற்கே இரண்டு ஸாதனங்கள் வேண்டும். அவையாவன: அப்யாஸம், வைராக்யம் என்பவைகளே. ஏற்கெனவே பக்தியோகியிடம் ஒருவிதமான மூட அப்யாஸமும், வைராக்யமும் குடிகொண்டிருக்கும். அதனால் அவனிடம் ஈச்வரத்யானமும், விஷய ஈடுபாடின்மை ஒருவாறு இருக்கும். ஆயினும் இது உள்ளபடி அமைந்த ஏகாக்ர நிலைப்பு, நிருத்த முயற்சி இவைகள் ஏற்பட வைதிக விஷய ஆழ்ந்த அறிவும், அதற்கு இசைந்த அப்யாஸ வைராக்யங்களும் வேண்டும். ஆகவே ராஜயோகிக்கு யுக்தி விசாரமும் நெருங்கிய பழக்கமும்தான் அவசியம். இங்கு யுக்தி விசார ராஜயோக பாகத்தை விரிவாயும், பழக்க பாகத்தை நம்மைப் போன்றவர் பெரியோர் நூலுணர்விலிருந்து எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவு சுருக்கமாயும் கூறப்புகுவோம். இதனாலே யோகம் வெறும் செப்படிவித்தையல்ல, நமது வைதிக மதஸாரம், நம்மால் மோக்ஷத்திற்கு அடுத்த படியை அடைய முயலவேண்டிய முடிவு, இதை அடைந்தால்தான் மோக்ஷம் இன்னது என்பதுவிளங்கும் என்பது வெளிப்பட்டிருக்கும். இந்த ராஜயோகமான சித்த நிரோதமில்லாது மோக்ஷ ஸாதனமான ஞானத்திற்கு வேறு வழியே இல்லை. இதை வெறும் மூச்சடக்கம் தான் என்று அனாதரவு செய்யவேகூடாது மோக்ஷமடைய விரும்பும் வைதிகன்! இந்த ராஜயோகத்திற்கே ஈச்வர ப்ரநிதானம், ஞான தபஸ் என்ற பெயர்களும் உண்டு. இந்த ராஜயோக பாகங்களான ஏகாக்ர நிருத்தங்களுக்கு அனந்ய பக்தி ஏகாந்த பக்தி என்ற பெயர்களும் உண்டு. அந்த நிலைகளில் எல்லாவற்றையும் தான் வழிபடு கடவுளின் ரூபாந்தரங்களாகப் பாவித்து நிலைத்திருப்பதும், தன்னையும் த்யானத்தையும் மறந்து, தான் வழிபடு கடவுளாக மாத்திர மிருந்து அதுவும் நழுவா

மல் நழுவி நிற்கும் தன்மையும் இருத்தலால் பக்திப்பெயர்களும் இவைகட்குப் பொருந்தும். இம்மாதிரி பக்தியோகம் முற்றியதால் ஏற்படும் அனந்யபக்தி எனும் ராஜயோகத் தொடக்கமான ஏகாக்ர யோகத்தையும் அதன் க்ஷேமமாகிய இடையூறு வாராது ஓங்குவதையும் தாங்குகிறேன் என்று பகவான் கீதை ix-ம் அத்யாயம் 22-ம் ச்லோகத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

"என்றனையே சிந்தனைசெய் தென்னிலயே நல்லாரா
மன்றவெனை எங்கும் வழிபட்டே—என்றும் நிலை[ய்]
அன்புடையார் தங்கட் களிப்பேன் அளித்தவற்றை
இன்புடனே காத்திடுவேன் ஈங்கு"

இந்த ராஜயோக முதல்படி ஸரிவர கைகூட ஈசன், ஜீவன், ஜகத்து, இவைகள் தம்முள் உள்ள பொருத்தத்தை வெளியிடும் ப்ரமாண நூலான வேத சாஸ்திரங்கள், அவைகளில் இந்த நிலையில் உள்ளபடி நிலைக்கக் காட்டியுள்ள ஒழுங்குகள் இவைகளைப்பற்றிய உணர்வும் அதோடுகூடிய முன்படிகள் அப்யாஸமும் மேல்படி அபிவிருத்தியும் அவசியம் வேண்டும். எப்படி பகவத்கீதையும், நாரத பக்தி ஸூத்ரமும், கர்மபக்தி யோகங்களை விரிவாக வெளியிடுகின்றனவோ, அப்படி பதஞ்ஜலி பகவான் யோக ஸூத்திரம் ராஜயோக விஷயத்தை நன்கு வெளியிடுகின்றது. இவைகளை நன்கு உணர்ந்து பழக முயலும் பக்தியோகிக்குத்தான் ராஜயோகம் கைகூடி ஞான யோகத்தை நாடும் திறன் காளடைவில் ஏற்படும்.

இங்கு கூறத்தொடங்கிய ராஜயோகத்தின் விசாரணை பாகங்களை பின்னர் எடுத்து விவரிப்போம்.

---

**ஸ்ரீ கோகலேயைப்பற்றி ஸர் கை ப்ளீட்வுட் வில்ஸன்.**—முன்பு ராஜப்ரதிநிதி ஸபையில் வரவுசெலவு மெம்பராயிருந்த ஸர் கை ப்ளீட்வுட் வில்ஸன், மிஸ்டர் கோகலே இறந்துபோய்விட்டாரென்றசெய்தி கேட்டு அவருடையமரணத்துக்காகத் தாம்அனுதாபப்படுவதாய் டெல்லிக்குத் தந்தி யனுப்பினார். இந்திய வரவுசெலவு கணக்குகளை ஆனரபில் மிஸ்டர் கோகலே, ஸபையில் பிரஸன்னமா யில்லாதிருந்தபோது, தாம் ஆஜர்ப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட, தாம் அச்சபையில் வரவுசெலவு கணக்குகளை ஆஜர்ப்படுத்திப் பேசுவது ஹாம்லெத என்னும் நாடகத்தை ஹாம்லெத் என்ற முக்ய நாடகபாத்திரமின்றி நடத்துவதற்குச் சமானமாகுமென்று ஒருஸமயம் இரங்கிக் கூறினார்.

# ஸ்ரீ கோபாலக்ருஷ்ண கோகலே

## THE HON'BLE Mr. G. K. GOKHALE

புண்ய பூமியாகிய பாத கண்டத்தில் எந்தெந்த காலத்தும் உத்தம மதாபிமானிகளும் தேசாபிமானிகளும் இருந்து பற்பல விஷயங்களிலும் உழைத்து மானிட கோடிகளுக்குத் தொண்டு புரிந்து நாட்டின் பெருமையை நாட்டிப் புனிதமாக்கி யிருக்கிறார்கள். இந்திய சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் பாரதமாதாவுக்கு எவ்வித கொடுமையும் வாராமல் தடுப்பதின் நிமித்தமும், பாரத மாதாவின் மஹிமையை அறியாதவருக்கு எடுத்துச் சொல்லும் பொருட்டும், ராஜ்யப்பாதுகாப்பில் தாமும் ஈடுபட்டு, இந்தியாவைக் கட்டியாண்டுவந்த பற்பல அரசருக்கும் சக்ரவர்த்திகளுக்கும் ஊன்றுகோலாயிருந்து உதவிபுரிதலின் நிமித்தமும், பாரத புத்திரர்கள் எவ்வளவு பாடுபட்டார்கள் என்பது தெரியவரும். ஆதிகால முதற்கொண்டு இந்திய ஆகாயத்தில் ஒளிவிட்டு ஜ்வலித்துக்கொண்டிருந்த தாரகா மணிகளின் எண்ணிக்கையைக் கூறவும்வேண்டுமோ! இடையிடையே அவ்வானம், கருமேகங்களால் மூடப்பட்டிருந்தபோதிலும் சிறிது நேரத்திற்கெல்லாம் அம்மேகங் கலைந்து பன்மடங்கதிகமாய் அழகு பொருந்தியுள்ளது. இந்த நக்ஷத்திர ராசியில் மிக்க ஒளிபொருந்தியது ஒன்றுகாணப்படுகின்றது. ஆ, என்ன காந்தி! தற்கால அமளியில் செல்லும் இந்தியக்கப்பலுக்கு வழிகாட்டியாகவன்றோ நிற்கின்றது இந்த நக்ஷத்திர விசேஷம்! திடீரென்று அது மறைந்துவிட்டதே! ஆகாயம் நிர்மலமாயிருந்தும் அவ்வொளியைக் காணோமே! இந்தியக் கப்பல் நடுக்கடலில் திசைதப்பித் தயங்குகிறதே!

மஹாராஷ்ட்ர தேசம், தான் கொண்டுள்ள நன்மக்களின் பெருமையாலும், அவர்கள் நடவடிக்கைகளின் போக்காலும், துணிகரச் செயல்களாலும் எக்காலத்தும் எவ்விதத்திலாயினும் மேம்பாடடைந்திருக்கின்றது. எந்தத் துறையிலும் அந்நாட்டாரே தலைமை வஹித்துவந்தார்கள் என்பதற்கையமில்லை. கல்வி, மதம், கைத்தொழில், போர், வியாபாரம் முதலிய எந்த விஷயத்திலும் முதன்மை பெற்று அவர்கள் விளங்குகிறார்கள். அதிலும் தேசத்தில் ஸமாதானம் பரவியுள்ள இக்காலத்தில்



இந்தியாவை மேன்மைப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவந்தவர்களில் ரானடே, டெலாங், ஆப்தே, பண்டார்கார், பரஞ்ஜபே முதலியவர்கள் பேரை அறியாதார் யார்? இந்த கோஷ்டியில் சேர்ந்தவர்தாம் ஸ்ரீ கோபாலக்ருஷ்ண கோகலே.

இவர் 1866-ம் வருஷம் கோலாப்பூரில் ஒரு ஏழை ப்ராஹ்மண குடும்பத்தில் பிறந்தார். அவ்வூரிலுள்ள காலேஜில் இண்டர்மீடியேட் வரையிலும் வாசித்துபிறகு, புனாவிலுள்ள டெக்கான் காலேஜிலும், பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜிலும் பி. ஏ. க்கு வாசித்து 1884-ம் வருஷம் பரீக்ஷையில் தேறினார். சிறுவராயிருக்கும்பொழுதே இவருக்கு கூர்மையான புத்தியும், உறுதியான ஊக்கமும், அழியா ஞாபக சக்தியும் பொருந்தியிருந்தன. இவர் படிப்பைவிட்டு நீங்கியதும் பிறரைப்போல பெரிய உத்யோகங்களை நாடவில்லை. 'தேசத்திற்காகப் பாடுபட்டு உழைக்கவேண்டும். கல்வியை எங்கும் பரவச் செய்யவேண்டும்' என்ற எண்ணங் கொண்டவராய் தக்ஷிண கல்விச்சங்கம் (Deccan Education Society) என்ற ஸபையில் சேர்ந்துகொண்டார். அதற்குச் சிறிதுமுன்புதான் புனாவில் பெர்கூஸன்காலேஜ் என்ற கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இந்தக் கலாசாலையின் ஆசிரியர்கள் கல்வியின் பெருமையையும் மஹிமையையும் உணர்ந்தவராய், அதைப் பரவச்செய்ய விரும்பி, ஸ்வல்ப சம்பளத்தைக்கொண்டு உழைப்பதெனத் தீர்மானித்தவராய் வேலைசெய்துவருபவர்கள்: கல்வியில் கற்றுத் தேர்ந்த சிறந்த மேதாவிகள். தங்களுக்கு அரசாங்கத்தில் உயர்தர உத்யோகங்கள் கிட்டுவதாயிருப்பதினும் அவைகளை ஒதுக்கி இக்காலேஜில் உழைப்பதையே மேற்கொண்டனர். கோகலேயும் உடனே 75 ரூபா சம்பளத்திலமர்ந்து சுமார் இருபது வருஷகாலம் அதே சம்பளத்தில் உழைத்து வந்தார். அவர் காலேஜ் மாணவர்களுக்கு இலக்கியம், கணிதம் இவைகளைக் கற்பித்துவந்தார். ஆனாலும் சரித்திர ஆராய்ச்சியிலும் அர்த்த சாஸ்திரத்திலும் விற்பன்னராய்விளங்கி அத்துறைகளிலேயே உழைத்தனர். காலேஜ்போதகாசிரியராயிருந்தது தவிர காலேஜ் ஸ்திரப்படுவதற்கு வேண்டிய முயற்சிகளிலும் மனப்பூர்வமாய் உழைத்துவந்தார். ஒழிவு காலங்களில் ஆங்காங்கு சென்று பணம் சேகரித்து, அந்தக் கலாசாலையை முதன்மைபெறச் செய்தவர் இவர்தாம்.

காலேஜ் ஸம்பந்தமான வேலைகளுடன், பொது ஜன நன்மைகளுக்குரிய விஷயங்களிலும் இவர் கவனம் செலுத்திவந்தார். இவருக்குத்தகுந்த குருவும் இந்த ஸமயத்தில் ஏற்பட்டிருந்தார் தேசபக்த சிகாமணியாய் விளங்கியுள்ள மஹாதேவ கோவிந்தரானடே இவரை இத்துறைகளில் இவருக்கு நிகரில்லை என்று யாவரும் சொல்லும் வண்ணம் பழக்கிவந்தார். உலக சரித்திரங்களை ஆராய்ச்சி செய்து தேச நடவடிக்கைகளின் அந்தரங்கங்களையும், அவைகளின் பலாபலன்களையும், தேசாபிமான மதாபிமானங்களின் உயர்வையும் அறிவதில் இருவரும் உழைத்து வந்தனர். இக்காலத்தில் தான் கோகலே, ரானடேயின் சாந்தம், பொறுமை, அபாரசக்தி முதலிய பலவித நற்குணங்களைப் பெற்றார். ரானடேசெய்த நன்மைகளையும் ஊழியத்தையும் தாமும் பின்பற்றி, அவரது உண்மையான சிஷ்யரெனத் தம் நடவடிக்கையால் காட்டியுள்ளார்.

இடையில் பூனாவிலுள்ள ஸர்வஜன ஸபையின் பத்ரிகைக்கும், அதன்பிறகு ஏற்பட்ட ஸுதாரிக் என்னும் ஆங்கில மஹாராஷ்ட்ர பத்ரிகைக்கும் பத்ராதிபராக இருந்து அவைகளைச் செவ்வனே நடத்திவந்தார். ராஜாங்க விஷயங்களில் முக்கியமான கொள்கைகளைப் பரவச் செய்வதில் ஊக்கங்கொண்டுள்ள தக்ஷிண ஸபை என்பதின் கார்யதரிசியாகவும் வேலை பார்த்து வந்தார். பம்பாய் மாகாண கான்பரன்ஸ் என்ற ஸபைக்கும் காரியதரிசியாகவும் 1893-ம் வருஷம் காங்கிரஸ், பூனாவில் கூடினபோது அதற்கு கார்யதரிசியாகவுமிருந்து மிகவும் உதவி புரிந்தார். இப்படி இவர் சிறுவயதிலே பல துறைகளிலும் உழைத்து, முதிர்ந்த அனுபவம் உடையவர்களோடு பழகி, ராஜரீக விஷயங்களில் மிக்க நிபுணராய் விளங்கினார். இதனாலே 1897ஆம் இவரினும் பெரியவர் பலரோடு இங்கிலாந்துக்குச் சென்று வெல்பி கமிஷனில் தம் அபிப்பிராயத்தைச் சிறிதேனும் அஞ்சாமல் வெளியிட்டார் இந்த ஸமயத்தில்தான் பம்பாயில் ப்ளேக் வியாதி ஆரம்பித்து ஜனங்கள் பலவிதமாய் உபத்திரவப்பட்டார்கள். இதைப்பற்றிய கடிதங்கள் அநே

கம் இங்கிலாந்திற்கு இவரிடம் வந்து சேர, இந்திய ராஜாங்க நடவடிக்கைகளைப்பற்றி, அக்கடித மூலமாய்த் தமக்குத் தெரிந்ததைக்கொண்டு ஆங்கில பத்திரிகைகளில் வெளியிட்டார். இந்தியாவிற்கு அவர் வந்த பிறகும் தம் நாட்டார்பட்ட கஷ்டங்களைக் கண்டு அவர் மனம் ஸஹிக்கவில்லை. இருந்தபோதிலும், இவர் இச்சமயத்தில் காட்டிய மனஉறுதியும் பெருந்தன்மையும் சொல்லுதற்கரியது. இக்காலத்தில் இவர்மீது பல அவதூறுகள் சொல்லி பலர் தூற்றினபோதிலும் எதற்கும் பின்னடையாது வெகு பொறுமையுடன் உழைத்து தம் நாட்டாரின் கஷ்டங்களை நிவர்த்திப்பதில் காலங் கழித்துவந்தார்.

1901-ம் வருஷத்தில் பம்பாய் சட்ட நிரூபண ஸபையில் இவர் மெம்பராய்த் தெரிந்தெடுக்கப்பட்டு மிகவும் சுறுசுறுப்புடன் உழைத்து வந்தார். 1902-ம் வருஷம் ராஜப்ரதிநிதி ஸபையில் மிஸ்டர் மேடா வஹித்திருந்த ஸ்தானம் காலியாக அதற்குத் தகுந்தவர் கோகலேதான் என்று கருதப்பட்டது. இந்த உயர்ந்த ஸ்தானத்தை வஹித்து நாட்டாருக்குப் பல விதங்களிலும் நன்மை பயக்கவேண்டும் என்னும் பேரெண்ணத்துடனும் அஞ்சா நெஞ்சத்துடனும் தாராள சிந்தையுடனும் உழைக்கத் தொடங்கினார். இவ்வரிய ஸ்தானத்தை கடைசி வரையில் வஹித்து அழியாக் கீர்த்தியை அடைந்திருக்கிறார்.

அதற்கேற்ப இதுவரையில் தாம் பார்த்து வந்த காலேஜ் உத்யோகத்தினின்றும் நீங்கி தம் காலமுழுமையும் பொதுஜன நன்மையில் உழைக்க வேண்டுமென்று கடைசியில் 30 ரூபா பென்ஷனுடன் வேலையினின்றும் நீங்கினார். இவர் இந்த உத்யோகத்தினின்று நீங்கியது அக்காலேஜுக்கு பெருத்த நஷ்டமெனக் கருதப்பட்டது. ஆயினும் இவரது எண்ணங்கள் எவ்வளவு சிறந்தனவாய் இருந்தனவென்பதை எல்லாரும் அறிவர்.

அவர் 1904-ம் வருஷம் நமது சென்னைக்கு விஜயம் செய்தார். அந்த ஸமயத்தில் நம்மவர்கள் அவர்மீது காட்டிய விசுவாஸத்தையும் பெருமையையும் எடுத்துரைத்தல் அரிது. அவர் ராஜப்ரதிநிதி சட்டநிரூபண ஸபையில் ஜனங்களுக்காக எவ்வளவு வீரத்துடன் போராடியிருக்கிறார் என்பதை எல்லாருமறிந்து தகுந்தவிதம் அவரை வரவேற்று உபசரித்தார்கள். அப்பொழுதுதான் அவர் மயிலாப்பூரில் தமது குருவான ரானடேயின் ஞாபகார்த்தமாக நிருமிக்கப்பட்ட புஸ்தகசாலையின் அஸ்திவாரத்தைநாட்டியது. இத்தக்ஷிணதேசத்தில் தம் மனதிற்குகந்தவாறு பெயரை நாட்டுவதில் அவரது ஆனந்தத்திற்களவில்லை.

அடுத்த வருஷம் அவருக்கு ஓய்ச்சல் ஒழிவு என்பதே கிடையாது. காங்கிரஸ் ஸெக்ரிடெரிகளில் ஒருவராக உழைத்துவந்தார். ராஜப்ரதிநிதிஸபையில் மிகவும் கஷ்டப்பட்டுப் போராடவேண்டியிருந்தது. அரசாங்கமுறைகளின் ஒழுங்கீனத்தையும், அவர்களது எண்ணுதற்கரிய தாராளக்கொள்கைகளையும் உலகத்திற்கே அப்பொழுது எடுத்துக்காட்டவேண்டியிருந்ததினால் ஊக்கத்துடன் உழைக்கவேண்டியிருந்தது. தம் குருவின் பேரால் அர்த்த சாஸ்திர ஆராய்ச்சி ஸங்கம் என்று ஒன்று ஏற்படவும் அதை நிலைநிறுத்தற்பொருட்டு அதற்குப்பொருள் சேகரிக்கவேண்டியது மிகவும் அவசியமாயிற்று. இங்கிலாந்தில் இந்திய விஷயங்களைத் தெரிவித்துப் பரவச்செய்வதற்கென்று, ஏற்கெனவே சில ஐரோப்பிய இந்திய கனவான்களால் ஆதரிக்கப்பட்டுவந்த 'இந்தியா' என்னும் பத்ரிகை பண உதவியின்றி நின்றுபோய்விடும் போலிருக்கும் காலத்தில், அதை விடாமல் காக்கவேண்டியதிற்கேற்ற முயற்சிகள் எடுத்துக்கொள்ளுவதும் அவசியமாயிற்று. அதேவருஷம் ஜூன்மீ 12உ அவர் இதுவரையில் உத்தேசித்திருந்த இந்திய ஊழிய ஸங்கம் என்னும் ஸபையை ஸ்தாபித்து முதல் அங்கத்தினரைச் சேர்த்துக்கொண்டார். தவிரவும், இதற்குள் காங்கிரஸில் நடந்த தீர்மானத்தின் பிரகாரம் இங்கிலாந்திற்குச் சென்று இந்தியரின் குறைகளை ஆங்கிலேயருக்குத் தெரிவிக்கவேண்டியவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இதுவும் போதாதென்று, இவருக்கு இஷ்டமில்லையேனும் அடுத்தகாங்கிரஸ் ப்ரெஸிடெண்டாகவும் இவர்நியமிக்கப்பட்டார்.

இங்கிலாந்திற்குச் சென்றிருந்தபோது இவர் செய்த வேலைகளை இவரை நேரில் கண்டவர்களே சொல்லக்கூடும். இந்த ஸமயத்தில்தான், இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ராஜாங்கத்தில் பலவித மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதுக்கிளர்ச்சி அப்பொழுதுதான் ஆரம்பமாயிற்று. இந்திய விஷயமாய் அநேக இடங்களில் ஆங்கிலேய ஜனங்களுக்குப் பேசி இந்தியரிடம் அவர்கள் நல்லெண்ணத்தைக் காட்டும்படித் தம்மாலானமட்டும் முயன்றார். பிறகு இந்தியாவுக்கு வந்து காங்கிரஸ் ப்ரெஸிடெண்டாயிருந்து இந்திய மஹா ஜனங்களின் வாழ்த்துதலைப் பெற்றார். மறுபடியும் இந்திய காங்கிரஸின் மெம்பராக இங்கிலாந்துக்குச் சென்றார்.

அவர் இங்கிலாந்துக்கு இரண்டாமுறை சென்றிருந்த காலத்தில் இந்தியாவில் நடந்த கொடிய மாறுதல்கள் நம்மவருக்கு இன்னும் ஞாபகமிருக்கலாம். இவைகளுக்கெல்லாம் காரணம் ராஜாங்க ஒழுங்கின்மையென உணர்ந்து அவைகளை ஒருவழிக்குக் கொண்டுவரவேண்டுமென்று இங்கிலிஷ் இந்திய மந்திரி முதலானவர்களிடம் பேசி இந்தியரின் நல்லெண்ணங்களைக் கெடுக்கவொட்டாமல் தழைத்தோங்கத் தனிவழியே விடவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவந்தார். தாம் கருதிய எண்ணங்கள் நடைபெற்று முடியுமென்று கல்கத்தாவில் நடந்த காங்கிரஸில் சொன்னதுந்தவிர தாமே முன்னின்று தம்மால் கூடியவரையில் அதற்குரிய வழிகளையும் ஸரிப்படுத்தினார்.

இச்சமயத்தில இந்தியாவில் ஏற்பட்டிருந்த பரஸ்பர விரோதங்களை நீக்குவதில் ஓயாமல் உழன்று, வட இந்தியா முழுவதும் சென்று ஆங்காங்கே உபன்யாஸங்கள் செய்து, தேசத்தில் ஐகமத்யத்தையும் நிலைநிறுத்தினார். லஜபதிராய்க்காகவும் வங்காள நாட்டாருக்காகவும் மிகவும் பரிந்து பேசி அவர்களுக்காகப் போராடி வந்தார். சட்ட நிரூபணஸபைகளின் சீர்திருத்தத்தில் எவ்வளவு பாடுபட்டு உழைத்தார் என்பது அவரது கருத்துக்களை இந்திய மந்திரி அங்கீகரித்தார் என்பதினாலேயே விளங்கும். சட்ட நிரூபண ஸபையில் இவர் இந்திய வரவுசெலவு கணக்குகளைப்பற்றிப் பேசினாராயின் இவ்விஷயங்களில் கற்றுத்தேர்ந்த நிபுணர்கள் எனப் பேர்பெற்ற மெம்பர்களும் திகைத்து விடுவார்கள் என்றால் இவரது ஸாமர்த்யத்தையும் ஆழ்ந்த யோசனையையும் பற்றி நாம் சொல்லவும் வேண்டுமோ ?

சட்ட ஸபையில் இருக்கும்பொழுது இந்தியரின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று இடைவிடாமல் உழைத்துவந்தார். 1911-ம் வருஷத்தில் அவர் எலிமெண்டரி படிப்பைப்பற்றிய ஒருமசோதாவைக் கொண்டுவந்தார். ஜனங்களுக்கு அவசியம் கல்வியறிவு இருந்தாலொழிய நானாவித ஸௌக்கியங்களையும் அடையமாட்டார்களென்று கருதி ராஜாங்கத்தாரை இந்த விஷயத்தில் ப்ரவர்த்திக்கும்படி தூண்டினார்.

வெளி நாடுகளிலுள்ள இந்தியரைப்பற்றிய கவலைகளும் கோகலேயின் மனதில் குடிகொண்டிருந்தன. தென் ஆப்ரிக்காவில் நம்மவர் படும் கொடுமையைக், காணவும் கேட்கவும் ஸஹியாதவராகி அதை நிவர்த்திக்கவேண்டிய பலவழிகளையும் தேடினார்; தென் ஆப்ரிக்கா இந்தியகஷ்ட நிவர்த்தி நிதி என்பதை ஏற்படுத்தி பணம் சேகரித்து தென் ஆப்ரிக்காவிலிருந்த இந்திய ஸிம்ஹமாகிய காந்தியினிடம் அனுப்பி அவ்விடத்திய சச்சரவுகளை தைர்யத்துடன் நடத்தும்படி தூண்டினார். தென் ஆப்ரிக்காவுக்குக் கூலிக்காக அனுப்பப்படும் ஆட்களின் பலவித உபத்திரவங்களையும் நீக்கும்படி ராஜப்ரதிநிதியிடமும் சொல்லி அப்படி கூலிகள் அனுப்பப்படும் ஏற்பாடுகளை நிறுத்தும்படியான வழிகளுக்கும் அடிகோலினார். இந்த ஸமயத்தில், தாம் நேரேபார்த்து விஷயங்களை அறியும்பொருட்டு தம் தேகஸௌக்கியத்தையும் கவனிக்காமல் தென் ஆப்ரிக்கா சென்று அங்குள்ள ராஜதந்திரிகளுடனும் மற்றும் பெரியவர்களுடனும் பேசி எல்லாவற்றையும் நேராகக் கண்டறிந்தார். இதன் விஷயமாக இங்கிலாந்திலும் அவர் செய்த வேலைகள் மிகவும் வியக்கத்தக்கவை.

1914-ம் வருஷத்தில் உடம்பு அஸௌக்யமாயிருந்ததினால் இவர் சட்ட நிரூபணஸபையில் அதிகமாக வேலைசெய்ய ஸாத்யப்படவில்லை, ஆனபோதிலும் சென்ற இரண்டு வருஷகாலங்களாய் இந்திய பப்ளிக் ஸேர்விஸ் கமிஷன் மெம்பர்களில் ஒருவராயிருந்து எவ்வளவு உழைத்துள்ளாரென்பதை அறியாதார் யார்? பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் ரிபோர்ட் வெளிவருவதற்கு முன்னமேயே, இந்தியாவுக்கு நற்காலம் பிறக்கும் என்று யாவரும் எதிர்பார்க்கும் காலத்திலே, இவரைப்போன்ற தேசாபிமானிகளின் முயற்சியால் இங்கிலாந்திற்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய ஸம்பந்தங்கள் ஏற்படும்

என்றிருந்த காலத்திலே திடீரென சென்ற மாதம் 19-ந்தேதி வெள்ளிக்கிழமை இவர் தேகவியோகமடைந்தது நம் துர்ப்பாக்கியமே.

இளமை முதற்கொண்டே ஸ்வப நன்மையைக் கருதாமல் தம் ஆயுள் பரியந்தம் தேச நன்மையை நாடி உழைத்துவந்த உத்தம தேச பக்தர்களில் சிறந்தவராய் இவர் விளங்கினார். மேல்நாட்டுக் கல்வியைக் கற்று கேவலம் தம் பேரும் புகழும் பொருளும் பெருகவேண்டும் என்னும் எண்ணத்தையே கொண்டுள்ள அநேகரைப்போன்றிராமல் தம் நாட்டாருக்கு உண்மையில் ஊழியஞ்செய்யக் கருதி, தாமே பல வழிகளில் தொண்டு புரிந்தும், தம்மைப்போல் பிறரையும் நல்வழியில் தூண்டியும் வந்தார் இவர். இந்தியநாட்டார் அரசாங்கத்தில் எந்த உயர்ந்த உத்தியோகத்தையும் வகித்தற்கேற்ற ஆற்றலும் உரிமையும் உடையவர் என்பதைப் பறையறைவித்தவரும் இவரே. தேசத்திலுள்ள குற்றங் குறைகளைக் கண்டு அவைகளைப்பற்றி தம் நாட்டாரிடம் நிதானமாயும், தைர்யமாயும் பேசி அவைகளை நீக்கக்கூடிய பலவித வழிகளைத் தேடினாரும் இவரே.

ராஜாங்கவிஷய முறைகளிலும் ராஜ்யப்பொருள் முறைகளிலும் மிகத் தேர்ந்து, தேச க்ஷேமாபிவிருத்தியைக் கோரி உழைத்து வந்துள்ள ரானடேயின் வழியைப் பின்பற்றி அது முதற்கொண்டு இவ்விஷயங்களில் சிறந்த ஆராய்ச்சி செய்துள்ளவராதலினால் இவர் உழைத்த நாட்களிலெல்லாம் இவருக்கு ஒருவரும் நிகரில்லையென எல்லோரும் சொல்லும்படி விளங்கினார். இந்தியரின் பெருமைகளையும், அவர்களது ஸ்வதந்திரங்களையும் காத்துதவும்ஸிம்ஹமென கர்ஜித்து தீரனெனப் பெயர் பெற்றார். அவரது நிதானத்தையும், ஸ்வயநயமின்மையையும், காருண்யத்தையும், விடாமுயற்சியையும், கண்டனராயின் அவரது எதிர்க்கட்சியாரும் அடங்கி அவரை மெச்சுவர்.

இந்தியா முன்னுக்கு வரவேண்டுமாயின் அது காருண்யமும், தன் மறுப்பும், விடாமுயற்சியும் கொண்டுள்ள தீரர்களால்தான் முடியவேண்டும் எனவறிந்து அத்தகைய மனிதர்களைச் சேர்க்கும்பொருட்டு, இந்திய ஊழிய சங்கம் என்பதை ஸ்தாபித்தார். தேசத்தின் குறைகளை நேரில் கண்டு அறிந்து தம்மைப்போல் அச்சங்கத்தினர் எல்லோரும் உழைத்து வரவேண்டுமென்று கோரினார். தாம் இறக்கும் தறுவாயிலும் தாம் எடுத்துள்ள காரியங்களை அவர்கள் இனிது நிறைவேற்றவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனராம். தமக்கு பெரிய உத்தியோகங்கள் கிடைப்பதாக இருந்தபோதிலும் அவைகளை லக்ஷ்யஞ் செய்யாமல் நீக்கிவிட்டு தேசத்திற்கு ஊழியஞ்செய்து நன்மை பயக்கக் கருதினவராய் தாம் கொண்ட விரதத்தை கடைசிவரையில் கைப்பிடித்து விடலானார்.

இவரது அரிய செயல்களையும் குணாதிசயங்களையும் கண்டு அரசாங்கத்தார் ஸி. ஐ. ஈ. என்னும் பட்டத்தை யளித்தார்கள். சிறிது காலத்திற்கு முந்தி கே. ஸி. ஐ. ஈ. (K.C.I.E.) என்னும் பட்டம் அளிப்பதாக நம்சக்ரவர்த்தியார் கூற தமக்கு அத்தகைய பட்டங்கள் ஒன்றும் தேவையில்லை; ப்ரஜைகளில் ஸாதாரணமான ஒருவராகவே இருந்து காலங் கழிப்பேன் என்று அவர் சொன்னவாக்கு என்றும் மறக்கக்கூடியதன்று

எல்லாருக்கும் கல்வியறிவு இருக்கவேண்டியது அவசியம் என்பதும் பலவித பாகுபாடுகள் ஜனங்களுக்குள் ஏற்படாமல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு நாட்டில் ஐகமத்யம் ஏற்படவேண்டும் என்பதும், இந்தியருக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எல்லா ஸ்வதந்திரங்களும் இருக்கவேண்டுமென்பதும், நமது குறைகளை அரசாங்கத்தாரிடம் இடைவிடாது ஸாவதானமாய் எடுத்துரைத்தால் அவைகள் கிரமமாக நீங்கிவிடும் என்பதும் அவரது அந்தரங்கக்கொள்கைகள். அதற்கேற்ப அவர் உழைத்துவந்தாரென்பதை யாவரும் அறிவார்கள். இந்தியாவின் துரதிர்ஷ்டமோ! யார்செய்த கொடுமையோ! இவர் இன்னும் தமது எண்ணங்களைப் பூர்த்தி செய்யமுடியாமல், இவ்வயதிலேயே காலகதியடைந்துவிட்டார் என்பதை நினைக்க நினைக்க மனம் உருகுகின்றது. அவரது வழியைப் பின்பற்றி ஏனையோரும் நடக்கவேண்டும் என்று எல்லாம்வல்ல ஈசனை ப்ரார்த்திக்கின்றோம்.

---

**இந்திய ஊழியச் சங்கத்தின் ப்ரஸிடெண்ட்:—** கனம் மிஸ்டர் கோகலேயின் மரணம் காரணமாக காலியாகவிருக்கும் ஷை சங்க ப்ரஸிடெண்ட் ஸ்தானத்தை, கனம் மிஸ்டர் V. S. ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் 3-வருஷகாலம் வகிக்கும்படி தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.



# திமிங்கிலம்

## THE WHALE

உலகத்தில் வசிக்கும் பிராணிகள் எல்லாவற்றிலும் பெரியது திமிங்கிலம். இது கடலில் வசிக்கும் ஒரு மிருகம். இச்சலசரம் எண்பதடி முதல் நூறடி வரையில் நீளமுள்ளது. இதன் உடம்பின் சுற்றளவு சுமார் இருபத்தைந்து அடிக்குமேல் இருக்கும். திமிங்கிலத்தை ஜலசரமென்றால் மீன் இனத்தைப்போல் சுவாஸித்து முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் என்றெண்ணுதல் கூடாது. பார்வைக்கு மீனைப்போல் தேகம் உருமாறி நீந்தத் துடுப்புகளுடன் அமைந்திருந்தபோதிலும் இது மீன் அல்ல. சுவாஸப்பைகளால் சுவாஸித்து குட்டி போட்டு குட்டிக்குப்பால் கொடுக்கும் மிருக ஜாதியென்று அதன் ஜீவிய சரித்திரத்தால் தெரியவரும். ஸீல் (Seal) என்னும் கடல் பூனை, வால்ரஸ் (Walrus) என்னும் கடல்யானை டியூகாங்க்(Dugong) என்னும் கடற்பசு இவைகள் ஜலத்தையே உறைவிடமாகக் கொண்ட மிருகங்களாம். மேற்கூறிய ஜலசரங்கள் உத்தர தக்ஷிண பிரதேசங்களில் குளிர்ந்த கடலில் வசிப்பன.

தேக அமைப்பு:— நீர்வாழும் தன்மையைப்பற்றி திமிங்கிலத்தின் தேகம் மீனைப்போல் கை கால்கள் உருமாறித் துடுப்புகளாயிருக்கின்றன. கைதுடுப்புகள் ஆறு அல்லது ஏழடி நீளமுண்டு இவைகளின் உதவியால்ஜலத்தைக் கீழே தள்ளிக்கொண்டு மிதக்கிறது. கால்களிரண்டும் வாலுடன்சேர்ந்து ஒரு தோலால் மூடப்பட்டு இரண்டு கிளைகளுடன் அமைந்து ஒரு பெருந்துடுப்பாக இருக்கிறது. இக்கிளைகள் மீனுக்கிருப்பதுபோல் மேலுங்கீழுமாக இராமல், மிருகத்தன்மைக்கு யிணங்க வலம் இடமாகப் பிரிந்திருக்கிறது. வால் பதினெட்டடி நீளமிருக்கும். அதைமேலுங் கீழுமாக அடித்துக்கொண்டு வெகு உல்லாசமாய் நீந்தும். ஆனால், திமிங்கிலம் அதிகவேகமாய் நீந்தாது. ஒருமணிக்கு நாலுமைல்தான் நீந்தும். திமிங்கிலத்தின் மேல்தோலில் மீனுக் கிருப்பது போல் செதில்களில்லை. மிருகங்களுக்கு இருக்க வேண்டிய மயிருமில்லை. தோல் கெட்டியாயும் மிருதுவாயும் மழமழப்பாகவும் அமைந்துள்ளது. வேட்டைக்காரர்கள் முற்களமைந்த பாதரக்ஷைகளன்றி பிடிபட்ட திமிங்கிலத்தின் மேல் ஏறினால் வழுக்கித்தான் விழவேண்டும். திமிங்கிலத்தின் உதட்டுப்புறங்களில் ஒன்று இரண்டு குச்சுபோன்ற கெட்டி மயிர் காணலாம்; அவைகள்தாம் மிருகேசரத்திற்கு அறிகுறியாக நிற்கும் அடையாளங்களாம். தோலுக்கு உட்புறத்தில் பத்து அல்லது பதினைந்து அங்குல கனமுள்ள கொழுப்புக் கவசமிருக்கிறது. இதன் உதவியால்தான் திமிங்கிலம் தன் உள் உஷ்ணத்தைக் கடல்நீரின் குளிர்ச்சி குறைக்காதபடி காப்பாற்றிக்கொள்ளுகிறது. பிராணி லகுவாய் மிதக்கவும் உதவுகிறது. இல்லையாகில் இவ்வளவு பெரியபிராணி தனது தேக பளுவினாலேயே நீரில் ஆழ்ந்து மாண்டு போக வேண்டியிருக்கும். திமிங்கிலத்திற்குக் கழுத்து இல்லை. சற்றேறக்குறைய தேகத்தில் மூன்றிலொரு பங்கு தலையென்றால் அது எவ்வளவு பெரியதென்று சொல்லாமல் விளங்கும். அதன் வாய் மிகப் பெரியது. பன்னிரண்டு அடி முதல் பதினைந்து அடி நீளமும், ஆறு அல்லது ஏழடி உயரமும் உண்டு. ஒரு ஜாதி திமிங்கிலத்திற்கு பற்களில்லை. அதற்குப்பதிலாக மேல்வாயில் ப்ரஷ் (Brush) போன்ற இரண்டு நீண்ட துடுப்புகள் இருபக்கமும் தொங்குகின்றன. வாயினுள் ஜலத்துடன் சென்ற ஆஹாரத்தை இவைகள் வடிகட்டமாத்திரமே உதவும். மற்றொரு ஜாதி திமிங்கிலம் க்ரீன்லாண்டு திமிங்கிலம் அல்லது கொழுப்புத் (Greenland or Sperm whale) திமிங்கிலம் என்று சொல்லுவார்கள். இதன் தலையில் ஒரு பெரிய அறையிருக்கிறது. அது கொழுப்பால் நிறைந்திருக்கும். இந்த ஜாதி திமிங்கிலத்தின் கீழ் வாயில் பற்களுண்டு. அவைகள் மிகவும் வலிமை பொருந்தியன. வேட்டைக்காரர்களுடைய சிறிய தோணிகளை இரண்டு துண்டாகக் கடித்தெறியும் சக்தி இதற்கு உண்டு.

ஆஹாரம்:— திமிங்கிலத்தின் வயிறு மிகப் பெரியது. வயிற்றில் பதினாறு பேருக்குக் குறையாமல் படுத்துக்கொள்ளலாம். இவ்வளவு பெரிய வயிற்றையுடைய மிருகத்திற்கு எதுதான் ஆஹாரமாகுகிறது என்பதைப் பார்ப்போம். பெரிய பிராணிகளைத் தின்ன முடியுமாயின் அதி சீக்கிரத்தில் கடலில் பெரிய பிராணிகள் சஞ்சரிக்கக் காணமுடியாது. 'வசித்

தொண்டை தாழிவயிறும்' என்ற பழமொழிக்கிணங்க இதன் நெஞ்சு அல்லது உள்வாய் சிறியதாகச் சுருக்கப்பட்டிருக்கிறது. சிறிய மீன், நத்தை, நண்டு முதலியவைகளையே மாத்திரம் தின்றுஜீவிக்கும்.

சுவாஸம்:—திமிங்கிலம் முக்கால்மணிநேரத்திற்கு ஒருதடவை மூச்சுவிட வெளியேவரும். மூக்குத்துவாரங்களிலிருந்துவரும் காற்று மூக்குக்குழாயின்மேல் படிந்திருக்கும் ஜலத்தை வெளியே பீச்சியடித்துக்கொண்டுவரும். இந்த சப்தத்தைக்கொண்டே திமிங்கிலம் இருக்குமிடத்தை வேட்டைக்காரர்கள் கண்டறிவார்கள். வாயின் இருமூலைக்கும் பக்கமாக இரண்டு கண்களுண்டு. மிருகத்திற்கு இருப்பதுபோல் வெளிக்காதுகள் கிடையாது. இரண்டு துவாரங்கள் மாத்திரம் காணலாம்.

இனவிருத்தி:—திமிங்கிலம் குட்டிப்போட்டு குட்டிக்குப் பால்கொடுத்து வளர்க்கும். குட்டிகளைத் தாயானது கூடவே அழைத்து நீந்திச்சென்று ஜலத்தின்மேல் மிதந்து விளையாடும். அப்பொழுது உண்டாகும் அலைகளின் சப்தத்தைக்கேட்டு வேட்டைக்காரர்கள் திமிங்கிலமிருக்குமிடம் அறிவார்கள்.

வசிக்குமிடம்:— திமிங்கிலத்திற்கு தூக்கம் வந்தால் ஜலத்தின்மேல் மிதந்து உறங்கும். குளிர்ப் பிரதேசத்தில் கடலில் வசிப்பது என்றால், மாரிகாலத்தில் கடல் நீரானது கட்டியாய் உறையும்போது எங்கேதான் சென்று ஜீவித்திருக்குமோ அறியோம்! அக்காலத்தில் தெற்கு நோக்கியாவது வடக்கு நோக்கியாவது ஸமசீதோஷ்ண பிரதேசங்களிலுள்ள கடலில் சென்றுதான் ஜீவித்திருக்கவேண்டும். வடக்கேயிருந்து தெற்கே மத்திய தரைக்கடல் வரையில் வருவதாகவும் தக்ஷிண சமுத்திரத்தினின்று வடக்கே ஆஸ்திரேலியா கண்டம் வரையில் சஞ்சாரம் செய்வதாகவும்சொல்லுகிறார்கள். சிலசமயங்களில்இந்துமஹாசமுத்திரத்திலும் திமிங்கிலம் காணப்படுகிறது. திமிங்கில குடும்பத்தில் ஒரு சிற்றினமாகிய டியூகாங்க் (Dugong) என்ற ஜலசரம் எழுடிநீளத்துடன் கங்கா நதி முகத்துவாரத்தில் வசிப்பதாகச் சொல்லுகிறார்கள்.

உபயோகம்:—யானைக்கு ஆயிரம் வயது என்று சொல்லுவதுபோல இதன் வயதை நிர்ணயம் செய்தவரில்லை. திமிங்கிலத்தால் மனிதரடையும் உபகாரங்கள் அதன் மாமிசமும் கொழுப்பும் தந்தமுமே. பனிப்பிரதேசங்களிலுள்ள காட்டு ஜாதியார்கள் மாமிசத்தைத் தின்னவும் கொழுப்பை எண்ணெயாகவும் உபயோகப் படுத்துகிறார்கள். கொழுப்பிலிருந்து மெழுகுவர்த்தியும் செய்கிறார்கள். இம்மிருகத்தின் தந்தம் பெரிதாதலால், வேலைக்கும் உபயோகப்படுத்தலாம்.

உத்தரதேசங்களிலுள்ளவர்களுக்கு கடலில் மீன் பிடிப்பதிலும் திமிங்கிலம் வேட்டையிலும் பிரியமதிகம். ஐரோப்பா கண்டத்தில் ஸ்காட்ச், நார்வீஜியன்ஸ் ஜாதியார்களும் எஸ்கிமோ, லாப்ஸ் ஜாதியார்களும் திமிங்கல வேட்டையில் மிகத்தேர்ந்தவர்கள். இவ்வேட்டையில் முற்காலத்திலிருந்த பிரியம் இக்காலத்தில்லை. மெழுகுவர்த்தி முதலானது செய்வதற்கும் விளக்கெரிப்பதற்கும், வேறு எண்ணெய்கள் சுலபமாய்க் கிடைக்கிறபடியால் மிக்க அபாயகரமான வேட்டைக்கு தற்காலத்தில் அதிகம் போவாரில்லை. ஆனாலும் வேட்டையாடுவதில் பௌருஷமிருக்கிறதென்ற சுபாவம் மனிதனுக்கிருக்கும் வரை, திமிங்கிலவேட்டையாடிக்கொண்டேதானிருப்பார்கள். எஸ்கிமோ, லாப்ஸ் போன்ற காட்டு ஜாதியார்களுக்கு திமிங்கிலம் முதலிய ஜலசரங்களை வேட்டையாடாமல் தீராது. வேட்டைக்குப் புறப்படும்போது ஒரு பெரியகப்பலும் ஆறு சிறுதோணிகளும் புறப்படும். தோணிகளின் இருபுறமும் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு செல்ல கூருடன் அமைந்திருக்கும். ஒவ்வொரு தோணியிலும் 5 அல்லது 6 குத்துக்கோல்கள், இரண்டு தூண்டிபோல் வளைந்த சிறு ஈட்டிகள் கட்டப்பட்ட கயிறுச்சுருள்கள், இவைகளை சாமர்த்தியத்துடன் உபயோகப்படுத்த 6 அல்லது 8 ஆட்களுமிருப்பார்கள். திமிங்கில மிருக்குமிடத்திற்கு தோணியைத்தள்ளிச்சென்று, அது மேல்வரும் சமயம் பார்த்து குத்துக்கோல்களால் குத்தியும், ஈட்டியால் எறிந்தும் பிடிப்பார்கள். * சில சமயங்களில் திமிங்கிலம் ஓடித்தப்ப முயலும். ஆனால் அதிக தூரம் போகாது, அப்போது குத்துண்ட ஈட்டியின் நுனியில்

(இதன் தொடர்ச்சி 321-ம் பக்கம்.)

* இவ்வேட்டையில் திமிங்கலத்தின் வாலினால் அடிபட்டு தோணிகள் கவிழ்ந்து மாண்டவர்கள் கணக்கிடமுடியாது.



## த்யாகராஜ ஸ்வாமி கீர்த்தனைகள்

## TYAGAYYAR'S KIRTANAMS

ஸங்கீத சாஸ்திரத்தைத் தெளிவுறக் கற்றுணர்ந்து, அவ்வித்தையை நன்றாய் அப்யஸித்தவர்களுக்கே ஸங்கீத வித்வான்கள் என்று பெயர். அப்படிப்பட்ட ஸகல பாகவத வித்வத் கோஷ்டிகளுள் திலகம் போன்றவரும், ஸத்குருவாக விளங்கிவருபவரும் தற்கால வித்வான்களுக்கு ஜீவனகாரணமானவரும் பகவத் கடாக்ஷத்தைப்பெற்றவருமாகிய ப்ரும்மஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் ஒருவர்.

இம்மஹான் சுமார் 140 வருடங்களுக்கு முன் தஞ்சாவூர்ஜில்லா ஸ்ரீபஞ்சநத க்ஷேத்திரமென்னும் திருவையாற்றில் அவதரித்தார்.

இவர் ஸங்கீத ஞானமேயன்றி தத்வஞானபுஷ்டியையுமடைந்து, ராமபக்தியைப் புகட்டக்கூடிய அநேக கீர்த்தனங்கள் செய்து தாமே பாடியோ, அல்லது தம்முடைய சிஷர்கள் பாடியோ கேட்டு ஆநந்தஸாகரத்தில் மூழ்கினவராய், சிலகாலம் இருந்துவிட்டு ஸித்தியடைந்தார்.

ஸங்கீத ஞானத்துடன், ஸாஹித்ய ஞானமும் பெற்று ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியை மனதில் தோன்றியவாறு ஸ்தோத்திரம்பண்ணி ஆனந்திக்க என்ன புண்யம் பூர்வஜன்மாவில் செய்திருந்தாரோ நம்மய்யர்வாள்! நம்மிற் சிலர் ஒரு கீர்த்தனை அவரைப்போல் செய்து பார்ப்போமென்று எத்தனித்தால் பதங்களைப் பொறுக்கிச்சேர்த்து, ப்ராஸங்கள் முதலிய லக்ஷணங்கள் பொருந்தியிருக்கிறதா என்று பார்த்து, அர்த்தத்திற்கேற்ற ராகத்திற்கும், தாளத்திற்கும் அமைத்து, ஆரம்பித்த ஒன்றிரண்டு வாரங்களில் செய்து முடித்து பாடிப் பார்த்தால் "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" போலாகும். அர்த்தபாகம் நன்றாயிருந்தால், அதற்கேற்ற ராகம், அமைப்பு நன்றாயிராது. உதாரணமாய், "நின்னுவினா கதி நாகெவரு" என்று ஒரு வித்வான் செய்த கீர்த்தனத்துக்கும், அதே அர்த்தமுள்ள "வேரெவ்வரே-நீவே கதி" என்ற சுருட்டி த்யாகய்யர்வாள் கீர்த்தனத்திற்கும் எவ்வளவோ வித்யாஸமிருக்கிறது. முதற்சொன்ன கீர்த்தனம் ஈசுவரனைப்பார்த்து தீனமான ப்ரார்த்தனையாய் இருந்தபோதிலும், அதனுடைய ராகமமைப்பு ஈசுவரனை எதிர்த்து யுத்தம் செய்வது போலிருக்கும். ஆனால் பின் சொன்ன அய்யர்வாள் கீர்த்தனையின் ராகவமைப்பும், எடுப்பின் தீனமும், ப்ரத்யக்ஷமாய் ஸ்ரீராமனிடம் எதிரில் நின்று "உன்னைத்தவிர யார் எனக்கு கதி" என்று சொல்வது போலேயே இருக்கும்.

மனம் போன போக்கெல்லாம், எந்த நிமிஷம் எப்படியெப்படி மனதில் தோன்றியதோ, அப்படி யப்படியே கீர்த்தனங்களாய் நமது அய்யர்வாள் செய்தார் என்றால் பகவத் கடாக்ஷமன்னியில் முடியுமா?

அவருடைய கீர்த்தனங்கள் பெரும்பாலும் தெலுங்கு பாஷையிலேயே இருக்கின்றன. ஏனென்றால் அவருடைய ஸ்வபாஷை தெலுங்குமன்னியில், தெலுங்கு பாஷைதான் ஸங்கீதத்திற்கு உசிதமாயும், உச்சரிப்பதற்கு வெகு மிருதுவாயும், ராகபாவங்களைக் காண்பிப்பதற்குப் பதங்கள், பெரும்பாலும், உயிரெழுத்துக்களில் முடிவதாலும், அவர் அந்த பாஷையில் கீர்த்தனங்களைச் செய்தார். அவருக்கு ஸமஸ்கிருதத்திலும் நல்ல ப்ரக்ஞையுண்டென்று அவர் செய்திருக்கிற சில வடமொழி கீர்த்தனங்களால் தெரிகிறது.

அவர் வால்மீகிராமாயணத்திலுள்ள 24,000 ச்லோகங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள அர்த்தத்திற்கேற்ப 24,000 கீர்த்தனங்கள் செய்வதாய் தீர்மானித்திருந்தனராம். அவர் அநேகமாகிரி செய்தனரோ என்பது தெரியவில்லை. இப்போது நடைமுதலில் 500,600 கீர்த்தனங்கள் தான் சிற்சிலர் பாடிவருகிறார்கள். ஆந்த்ரதேசமாகிய கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களில் பாடப்படும் சில அய்யர்வாள் கீர்த்தனங்கள், நம் தஞ்சாவூர் ஜில்லாவிற்கு முற்றிலும் புதிதாக விருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்று யூகிக்கும்

(320-ம் பக்கத் தொடர்ச்சி.)

கட்டப்பட்ட கயிறுகளைப்போகவிட்டு பிறகு மேல் வரும்போது மறுபடி குத்திக் கொல்வார்கள். பிறகு அப் பிராணியை, கரைக்கு அல்லது கப்பலுக்கு இழுத்துவந்து அதன் மாமிசம், கொழுப்பு தந்தம் முதலியவைகளை எடுப்பார்கள். பலீன் ப்லேட்ஸ் (Baleen plates) என்ற வாய்த்துடுப்புகளையும் எடுத்து வியாபாரச் சரக்காக்கிறார்கள்.

என். எஸ். ஜம்புநாத ஐயர், B.A., L.T., F.Z.S.

போது த்யாகய்யர்வாள் ஒரு ஸமயம் வெளிப்ர தேசங்களுக்கு யாத்திரைசெய்யும்போது ஆங்காங்கு கீர்த்தனங்கள் செய்திருக்கவேண்டும். உதாரணமாய் விவர்த்தனி என்ற ராகத்தில் "அபிமான மென்னடு கல்குரா" என்ற கீர்த்தனம், நம்முடைய தேசஸ்தர்கள் ஒருவரும் பாடியிருப்பதாக நான் கேட்கவில்லை.

மேலும் நமது மஹானின் மூளை என்ன விசாலமோ! எம்மால் வர்ணிக்க முடியாது ஒரு கீர்த்தனையின் வர்ணமெட்டைப்போல் மற்றொன்றிராமல் ஆயிரக்கணக்கான கீர்த்தனைகள் செய்திருக்கிறார். அநேக அபூர்வ ராகங்களில் கீர்த்தனைகளைப் பாடியிருக்கிறார். அப்படிப்பட்ட சில கீர்த்தனங்களை நாம் பாடிக் கேட்டால், இந்த ஸப்தஸ்வரங்களில் இப்படியும் ஒரு சேர்க்கையுண்டா (Combination) என்று ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கும். அந்த அபூர்வராகத்தை ஒரு அபூர்வ ஸ்வரஞானி, ஸ்வரவர்ஜ்யங்களை யறிந்து பாட எத்தனித்தால், ஐயர்வாள் அதே ராகத்தில் செய்த கீர்த்தனத்தையே திருப்பித் திருப்பி அகாரத்திலும் நம்காரத்திலும் பாடவேண்டி வருமேயொழிய வேறுவழி தோன்றாது. ஆகையால் நம்மய்யர்வாள் அந்தந்த ராகங்களின் ஜீவபாகத்தைக் கண்டுபிடித்து கீர்த்தனைகள் அமைத்திருக்கிறார். தற்கால சில வித்வான்கள் ராகங்களைப் பாடும்போது தியாகய்யர்வாள் அதே ராகங்களில் பார்த்த கீர்த்தனங்கள் எந்த வழிபோயிருக்கிறதோ, அப்படியே இவர்களும் பாடி வருகிறார்கள்.

நமது ஹிந்து ஸங்கீதத்தில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு பழக்கத்தில் கொண்டுவரப்பட்ட இராகங்கள் இருபது. பிற்பாடு, இராகாங்கம், பாஷாங்கம், கிரியாங்கம், உபாங்கம் என்ற நான்கு வகுப்புகளினால், 42 இராகங்கள் உண்டாயின. இப்படி பல வேறுவித மாறுபாட்டினால் இராகங்கள் 264 மொத்தமாயிற்று. ஆனால் தியாகராஜஸ்வாமிகளுடைய அநுபவத்தில் இன்னும் எவ்வளவு ராகங்கள் இருந்தனவோ தெரியவில்லை.

ஒரே ராகத்திலேயே பலகீர்த்தனைகள் செய்திருக்கிறார். ஒரு கீர்த்தனையின் மனோதர்மங்களும், ஏற்படுத்திய ஸங்கதிகளும் மற்றொன்றிற்கு இராது. உதாரணமாய் தோடி கீர்த்தனம் "எந்து தாகினாடோ" பாடிக்கேட்டுவிட்டு அதேராகத்திலுள்ள "தப்பிப்ரதிகி போவதாமா" என்ற கீர்த்தனத்தைக் கேட்டால், எல்லாம் வேறுவழியாய்த்தோன்றும். அதே ராகத்திலுள்ள "கொலுவமரகதா" வேறுதினுசு; 'கத்தன்ன வாரிகி' முற்றிலும் வேறு.

மேலும் த்யாகய்யர்வாள் கீர்த்தனங்களினின்று அவரவர்களுடையசாரீர தர்மத்திற்கேற்ற கீர்த்தனங்கள் பொறுக்கிப் பாடலாம், அதாவது சிலருக்கு ஹெச்சுஸ்தாயியில் பாடமுடியாது. அவர்களுக்கேற்ற மேல் ஷட்ஜமத்தோடு திருப்புகிற கீர்த்தனங்கள் பல உண்டு. சிலர் ஹெச்சில் பாடினால்தான் கேட்க இனிமையாயிருக்கும். அவர்களுக்கேற்ற தாரஸ்தாயி பஞ்சமம் வரைபோய் திருப்புகிற கீர்த்தனங்கள் பல உண்டு. ரவைஜாதிகள் உதவுகிற சில சாரீரத்திற்கேற்ற கீர்த்தனங்கள் அநேகம் உண்டு. உருக்கி, அதாவது, குழைவுடன் பாடக்கூடிய கீர்த்தனங்கள் அநேகம் உண்டு, வீணை, புல்லாங்குழல், பிடில், நாகஸ்வரம், ஹார்மோனியம், ஜலதரங்கம் முதலிய பல நரம்புக்கருவிகள், துளைக்கருவிகளுக்கேற்ற கீர்த்தனங்கள் அநேகமிருக்கின்றன.

தற்கால ஸங்கீத வித்வான்களிற் சிலர் த்யாகய்யர்வாள் கீர்த்தனங்களைக் கெடுக்கத் தலைப்பட்டிருக்கிறார்களென்று நான் அபிப்பிராயப்படுவதை நண்பர்கள் பொறுத்தருளவேண்டும். கர்நாடக சுத்தமாய், கீர்த்தனையின் ஸுகபாகத்தைக் காண்பித்து, அர்த்தபாகத்தை நன்கறிந்து, ராகதாளங்களை வீண் வக்ரப்படுத்தாமல், இனிமையாய்ப் பாடுகிறவர்கள் தற்காலத்தில் நூற்றுக்குப் பத்துப் பேரிருந்தால் அபூர்வம். ஒரு வித்வான் "நகுமோமுகனலேனி" என்ற ஆபேரி கீர்த்தனத்தைப் பாடினார். அவர் பாடி முடிந்த பிற்பாடு அவர் இன்ன கீர்த்தனம் பாடினாரென்று, பக்கத்திலிருந்தவரைக் கேட்டு அறிந்துகொண்டேன். அவர் ஏதோ ஹிந்துஸ்தானிதான் பாடுகிறாரென்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆபேரி ராகம் 20-வது மேளத்தில் ஜன்யமாயிருந்த போதிலும், ப்ராசீன வித்வான்கள் முழுதும் சுத்த தைவதத்தையே பிடித்துப் பாடவில்லை. ஆகையால் த்யாகய்யர்வாள் கீர்த்தனங்களை கேவலம் ராகங்களின் ஆரோஹண அவரோஹணக் கிரமங்களை மட்டும் அறிந்து பாடமுடியாது. அநுபவத்தில் எப்படிப் பாடி வந்தார்களோ, அப்படிப் பாடினால்தான், த்யாகய்யர்வாளின் நிஜ மனோதர்மம் வெளியாகும்.



இக்காலத்தில் வித்வான்களிற் சிலர் பாட்டுக் கச்சேரிகளில் ராகம்பாடி பல்லவி பாடும்போது மனதுக்குத் தோன்றியவாறு பல்லவிகளை எடுத்துக்கொண்டு, ஸாதாரண ஜனங்களை ரஞ்ஜிக்கச் செய்யும், சதுரச்ர நடைகளை விட்டுவிட்டு கண்டநடைகளிலும், மிச்ரநடைகளிலும், இக்கட்டான இடங்களிலும், பல்லவி எடுப்புகளை வைத்துக்கொண்டு, தாழங்குடையில் மழைபெய்கிற சப்தம்போல் ஸ்வரநிரவல் செய்து, பக்கவாத்தியக்காரர்களும், பாடகருமாய், தலைகிரிகோலமாய் தாளங்கள் போட்டுக்கொண்டு, தகிதிணதோம், தீர்மானங்கள், விழிபிதுங்கி உடல்வியர்க்க வைத்து, பாட்டுக் கச்சேரிகளை மாஜிஸ்த்ரேட் கச்சேரிகள் ஆக்கிவிடுகிறார்கள்! இந்த மாதிரியான பாட்டு, வித்வத் அம்சத்தைக்காண்பித்தபோதிலும்கூட ஸாதாரணஜனங்களை ரஞ்ஜிக்கச்செய்யும் சக்தியில்லை. தியாகய்யர்வாள் ஸுகமான ராகங்களில் செய்திருக்கும் கீர்த்தனைகளின் பல்லவிகளையே லலிதமாய் நிரவல் செய்து, சுலபமான தாளகதிகளிலேயே ஸ்வரங்கள் பாடிவந்தால் காதுக்கு என்ன இனிமையாயிருக்கும்!

தற்கால வித்வான்கள், தியாகராஜஸ்வாமிகள் ஸங்கீத சக்கிரவர்த்தி என்றும், ஸங்கீத நிதி யென்றும் அவர் கொடுத்த பிச்சையினால்தான் தாங்கள் பிழைக்கிறார்களென்றும் நன்கறிந்து இப்போது வருஷா வருஷம் திருவையாற்றிலும் இன்னும் இதர இடங்களிலும் அவருடைய உத்ஸவத்தை வெகு சிறப்பாய் நடத்தி வருகிறார்களென்பது மிகவும் மெச்சத்தக்கதே. ஆனாலும் அப்படிப்பட்ட பிரபுவுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் இன்னும் அநேகமிருக்கின்றன. அதாவது அவருடைய ஞாபகார்த்தமாக திருவையாற்றில் ஒரு பிரதிமை (Statue) உன்னதஸ்தானத்தில் நிறுத்த வேண்டும். அதே க்ஷேத்திரத்திலேயே தக்க வித்வான்களின் மானேஜ்மெண்டிற்குள்பட்ட ஸங்கீத கலாசாலை ஏற்படுத்தி (Academy of Music மாணாக்கர்களுக்கு ஸர்ட்டிபிகேட்டுகளும் (Certificate) மெடல்களும் ஏற்படுத்த வேண்டும்.

ஆகையால், இது விஷயமாக எல்லா ஸங்கீத ரஸிகர்களும், தனவந்தர்களும் தகுந்த சிரத்தையெடுத்துக்கொண்டு நம்முடைய கர்நாடக ஸங்கீதத்திற்கு நேத்திரங்களைப்போல் விளங்கும் த்யாகராஜஸ்வாமிகள் கீர்த்தனைகளை, சாஸ்த்ரயுக்தமாய் மேன்மேலும் விருத்தி செய்து யாவருக்கும் இனிமையே பயக்கும்படி செய்வார்களென்பது எனது கோரிக்கை.

V. ராஜகோபாலய்யர்.

# சுகாதார விதிகள்

## THE RULES OF HYGIENE

போஜனத்தின் அளவு:—ஒருவன் செய்ய வேண்டிய போஜனத்தின் அளவு, அவனுடைய வயது, வளர்ச்சி, தேகமுயற்சி, மனோமுயற்சி முதலிய பல வித்யாஸங்களால் வேறுபடும். ஸாதாரணமாய் ஒரு மனிதனுடைய நிறையில் 20-ல் ஒரு பங்கு அவன் ஆஹாரம் செய்யவேண்டுமென்பது பொது விதி. அவ்வித ஆஹாரத்தில் ஒருபங்கு சாதம், ரொட்டி முதலிய கன பதார்த்தங்களாகவும், இரண்டு பங்கு காப்பி முதலிய த்ரவரூபமான ஆஹாரங்களாகவும், இருக்கவேண்டும். அதிக ஸத்தில்லாத போஜனங்களானால் அதிகம் சாப்பிடவேண்டும். தேக முயற்சி மனோமுயற்சி முதலியன விசேஷமாய்ச் செய்வோர்கள், அதிகமும், விசேஷ ஸத்துள்ளவைகளுமான ஆஹாரங்களை சாப்பிடவேண்டும்.

மீதூண்:—மிதமிஞ்சி போஜனத்தைச் சாப்பிடுவது சரீரத்திற்குக் கெடுதலேதவிர வேறில்லை. ஏனெனில், அளவு மிஞ்சின ஆஹார பதார்த்தங்கள் குடலில் நின்று ஜீரணிக்கப்படாமல், புளித்து அழுகி, விஷஸம்பந்தமான வாயுக்களை உற்பத்தியாக்குகின்றன. அன்றியும், அதனால் முடியாத அதிகவேலையை இடுவதால், குடல் அதைச்செய்யப் பிரயத்தினப்படுவதில், தன்னையே பலவீனப்படுத்திக் கொள்ளுகிறது. அதனால் ஜீரணஸம்பந்தமான பலவியாதிகள் உண்டாக இடமாயிருக்கிறது. நெய்ப் பண்டங்களையும், மாப்பண்டங்களையும் மிதமிஞ்சி உபயோகப்படுத்துவதால் இதே மாதிரியான கெடுதல்கள் உண்டாகக் கூடும்.

உண்டிக் குறைவு:—மீதூணைக் காட்டிலும் உண்டிக்குறைவு பல தீமைகளுக்குக் காரணமாகிறது. வரவர சரீரம் துர்ப்பலப்படுகிறது. அதிக உயிர்ச்சேதமும் உண்டாகிறது. பஞ்சகாலங்க

(இதன் தொடர்ச்சி 324-ம் பக்கம்)

ளில் எளியவர்கள் பலவிதமான வியாதிகளுக்குள்ளாகி, கணக்கில் அடங்காமல் மரணமடைகிறார்கள் என்பதே, இதற்குப் போதுமான சாக்ஷி. போஜனம் தண்ணீர் இரண்டும் இல்லாவிட்டால் சுமார் பத்துநாள் மட்டுந்தான் உயிர் தாங்கும். தண்ணீரை மட்டும் ஆஹாரமாகக் கொண்டு சுமார் இருபது நாள்வரை உயிர்தாங்கலாம்.

நமக்கும் ஐரோப்பிய ஜாதியார்களுக்கும் கடினமான வேலைகளைத் தொடுத்துச் செய்வதிலும், பலமான மனோமுயற்சிகளிலும் அதிக வித்யாஸமிருப்பது யாவருமே அறிந்த விஷயம். ஐரோப்பியரைப்போல் நமக்கு அவ்வளவு நிர்வாகம் கிடையாதென்பது நாம் யாவரும் நன்றாயறிவோம். அப்படி யேற்பட்டிருப்பதற்குப் பலவித காரணங்களுண்டாயினும் அவைகளுள் ஆஹாரவகைகளின் பேதமே முக்கியமான காரணங்களுள் ஒன்றாகும். இந்த வித்யாஸம் என்னவென்றால் நாம் சாப்பிடுகிற போஜனத்தில் சரீரபலத்திற்கும் மனோபலத்திற்கும் அநுகூலமான போஜன பதார்த்தங்கள் குறைவாயிருப்பதுதான்.

| போஜனங்களின் பெயர்கள். | | 1 சதை. | 2 அனல். | 3 ஜலம். | 4 உப்பு. | 5 |
|---|---|---|---|---|---|---|
| அரூட் மாவு | ... | 0 | 81 | 18 | $\frac{3}{4}$ | 100 |
| உருளைக்கிழங்கு | ... | 2 | 23 | 74 | 1 | 100 |
| சர்க்கரை | | 0 | $96\frac{1}{2}$ | 3 | $\frac{1}{2}$ | 100 |
| அரிசி | ... | $6\frac{1}{2}$ | 79 | 14 | $\frac{1}{2}$ | 100 |
| கம்பு அல்லது புல் | ... | 12 | 71 | $16\frac{1}{4}$ | $\frac{3}{4}$ | 100 |
| சோளம் | ... | 13 | 72 | $13\frac{3}{4}$ | $1\frac{1}{4}$ | 100 |
| கோதுமை மாவு | ... | 15 | 69 | 15 | 1 | 100 |
| கேழ்வரகு அல்லது கேப்பை | .. | $15\frac{1}{2}$ | $69\frac{1}{4}$ | 14 | 1 | 100 |
| கடலை, துவரை, உளுந்து, அவரை, முதலிய பயறுகள் | ... | $24\frac{1}{2}$ | 59 | 14 | $2\frac{1}{2}$ | 100 |
| வெண்ணெய், நெய், எண்ணெய், கொழுப்பு முதலியவை | ... | $\frac{1}{4}$ | 94 | $4\frac{3}{4}$ | 1 | 100 |
| பசுவின் பால் | ... | 5 | 8 | 86 | $\frac{1}{2}$ | 100 |
| பால்கட்டி (Cheese) | ... | $33\frac{1}{2}$ | $24\frac{1}{2}$ | $37\frac{1}{3}$ | $5\frac{1}{2}$ | 100 |
| முட்டை | ... | 14 | 11 | 74 | 1 | 100 |
| மீன்கள் | ... | 14 | 7 | 78 | 1 | 100 |
| எலும்பில்லாத இறைச்சிகள் | ... | 20 | 7 | 72 | 1 | 100 |
| ரோஸ்டு இறைச்சி | ... | $27\frac{1}{2}$ | $15\frac{1}{2}$ | 54 | 3 | 100 |

நாம் மேற் காட்டியுள்ள அட்டவணையிலிருந்து போஜனபதார்த்தங்களில் நான்கு வகுப்புகளும் அளவுப்படி விரவிவரும் போஜனந்தான் பூரணமான போஜனமென்பதும், அவைகளின் அளவு எவ்வெவ்விதங்களில் வேறுபடலாமென்பதும் ஊஹித்துக் கவனிப்பவர்களுக்கு வெளியாகும். ஆயினும் அது சிரமஸாத்தியமான கார்யமாகையால், நாம் தினந்தோறும் சாப்பிடவேண்டிய ஆஹாரத்தின் ரீதி எப்படியிருக்கவேண்டுமென்று நாம் ஸுலபமாய் அறிந்துகொள்ளுவதற்கு வேறொரு ஸுலபமான வழி சொல்லுவோம்.

பால் பூரணமான போஜனங்களிலொன்று. பசுவின் கன்று வேறுவிதமான ஆஹாரங்களைத் தின்று, அவைகளைத் தன்னினப்படுத்தக்கூடிய சக்தி வருமளவும், தாயின் பாலின் பலத்தாலேயே வளரவேண்டியதாயிருக்கிறது. அது இயல்பிலேற்பட்ட ஆஹாரமாயிருப்பதனாலும் அவ்வாஹாரத்தால் தகுந்த அளவு வளர்ச்சிகன்றுக்கு ஏற்படுவது நமக்கு அநுபவஸித்தமாயிருப்பதாலும், அதைப் பூரணமான ஆஹாரமாயிருக்கலாமென்றும் நம்பக்கூடியதாயிருக்கிறது. ரஸாயந சாஸ்திரிகள் பாலைப் பிரித்துப் பரிசோதனை செய்துபார்த்ததில், அது பூரண ஆகாரமென்றும், எல்லாவகை போஜன பதார்த்தங்களும் அதில் அடங்கியிருக்கின்றனவென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது 100 அவுன்ஸ் பாலில் 87 அவுன்ஸ் தண்ணீரும், 4 அவுன்ஸ தயிரும் (மாம்ஸத்தை வளர்க்கும் ஸத்துள்ள பதார்த்தம்); $3\frac{1}{2}$ அவுன்ஸ் வெண்ணெயும்



(அனலையுண்டாக்கும் ஸத்துள்ள பதார்த்தம்); $4\frac{3}{4}$ அவுன்ஸ் பால் சர்க்கரையும் (கரிஜலபதார்த்தம்—Hydro-carbons;) $\frac{3}{4}$ அவுன்ஸ் தாதுவர்க்க உப்பும் (உப்புப் பதார்த்தம்) இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஆகையால் இந்த இயல்பான ஆஹாரத்தையொத்து நம்முடைய ஆஹாரத்திலும் இந் நால்வகைப் பதார்த்தங்களும் ஸரியான அளவுப்படி கலந்துவரும்படி நாம் ஆஹாரவகைகளைச் சேர்ப்போமானால், நம்முடைய தேகத்தை அது ஸரியானபடி வளர்ப்பதோடுகூட, ஞானேந்திரியங்களுக்கும், மனோ தத்துவங்களுக்கும் ஸரியான பலத்தையும் தீவ்ரத்தையும் எழுப்பிக்கொடுத்து, வியாதிகளும் கிட்டவொட்டாமல் தடுக்கும்.

பதார்த்தங்களை ஒவ்வொருவகையினதென்று ரூடியாய் நாம் பிரித்திருந்தாலும், அவ்வகைப் பதார்த்தங்கள் மட்டுந்தான் அந்த ஆஹாரத்திலுள்ளது என்று நாம் எண்ணுவது பிசகு. ஒவ்வொரு வகையிலும் இதரவகை ஸத்துக்களும் கலக்காமல் இயல்பில் கிடைப்பதில்லை. ஆனாலும் அந்தந்த வகுப்புகள் அந்தந்த போஜன பதார்த்தத்தில் விசேஷம் என்பது அதன் பொருள்.

முக்கியமான போஜன பதார்த்தங்களில் உள்ள ஆஹாரவகைகளின் அம்சத்தை அடியிற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அன்றி போஜன பதார்த்தங்களை வேறுவகைகளாகவும் பிரிக்கலாம். (1) தானியங்கள் (2 பயறுவகைகள் (3) காய்கறி பழங்கள் (4) கிழங்குகள் (5) சர்க்கரை (6) பால் மாம்ஸம் முதலியன.

| | | ஐரோப்பியர்கள். | | சுதேசிகள் | இங்கிலாந்து தேசத்து ஸோல்ஜர். | பங்காளக் கைதிகள், | | பஞ்சாப் கைதிகள். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒரு வகை. | வேறு வகை. | | | வேலை செய் | வேலை செய்யா | வேலை செய் | வேலை செய்யா |
| | | அவுன்ஸ் | | | | | | | |
| காப்பித்தூள் | ... | $1\frac{1}{4}$ | ... | ... | $\frac{1}{3}$ | ... | .. | ... | ... |
| ஆப்பம் தோசை | .. | 6—12 | .. | 6—12 | . | ... | ... | ... | ... |
| அரிசி | ... | 8 | ... | 8 | ... | 10 | 8 | ... | .. |
| ஆட்டிறைச்சி | ... | 8 | 12 | 8 | 12 | ... | ... | 8 | 6 |
| மசாலைத்தூள் | ... | $\frac{1}{2}$ | ... | $\frac{1}{2}$ | ... | 1 | 1 | 1 | 1 |
| சர்க்கரை | ... | $1\frac{1}{2}$ | $1\frac{1}{2}$ | ... | $1\frac{1}{3}$ | ... | ... | ... | ... |
| பால் | ... | 6 | 6 | ... | $3\frac{1}{4}$ | ... | ... | ... | ... |
| வெண்ணெய் | .. | 1 | 1 | 1 | ... | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | 1 | 1 |
| ரொட்டி | ... | 8 | 16 | 8 | கோதுமை, 24 | | ... | ... | ... |
| காய்கறிகள் | ... | 4 | .. | 4 | 3 | ... | ... | ... | ... |
| உப்பு | ... | 1 | ... | ... | .. | ... | ... | ... | ... |
| உருளைக்கிழங்கு | ... | ... | 12 | ... | 16 | ... | ... | ... | ... |
| தேயிலை | ... | ... | $\frac{1}{2}$ | ... | $\frac{1}{6}$ | ... | ... | ... | .. |
| வெங்காயம் | ... | ... | 1 | .. | ... | | ... | ... | ... |
| பார்லி அரிசி | : | ... | $\frac{1}{2}$ | ... | ... | ... | .. | ... | ... |
| மாவு | ... | ... | $\frac{1}{2}$ | .. | ... | ... | ... | ... | ... |
| உப்பு | ... | 1 | $\frac{3}{4}$ | 1 | $\frac{1}{4}$ | 1 | 1 | | 1 |
| பருப்பு | : | ... | ... | ... | ... | 14 | 10 | 6 | 2 |
| மீன் | : | ... | ... | . | ... | 12 | 10 | ... | ... |
| தயிர் மோர் | ... | ... | ... | ... | .. | 16 | 8 | 10 | 10 |

இவைகளில் முதல் வகுப்பாகிய தானியங்களைச்சமைத்தும் சமைக்காமலும் உட்கொள்ளலாம். சமைக்காமல் நன்றாய் மென்று தின்பது சமைத்துச் சாப்பிடுவதிலும் மேன்மையென்றேசொல்லலாகும். ஏனெனில் சமைப்பதில் ஆஹார ஸத்துக்கள் வேவதினால் ஸத்துக் குறைகின்றது. மேலும் சாதமாக வடிப்பதில் வெ

ளியேறுகிற கஞ்சியே நிரம்ப ஸத்துடைய பாகமாக விருக்க, அது வீணாக்கப்படுகிறது. இப்படியே தீட்டிய அரிசியிலும் தீட்டாத அரிசியே சரீரத்திற்கு அதிக போஷணைசெய்யக் கூடியது.

கோதுமை: விசேஷஸத்துள்ள ஆஹாரமானாலும் சரீரத்திலுள்ள திரவங்களை ஆகர்ஷிக்கும் சக்தியுள்ளதாதலால் அதை மிகுதியும் சாப்பிடுதல் நன்று. அதனால்தான் நீரிழிவுவியாதிக்காரருக்குக் கோதுமை ஏற்றதென்று கொள்ளப்படுகிறது.

கம்பு, கேழ்வரகு, சோளம் இவைகளெல்லாம் தேகத்திற்கு விசேஷபலம் கொடுக்கக்கூடிய ஆஹாரங்கள். துவரம்பருப்பில், மாம்ஸங்களைக் காட்டிலும் சரீரபோஷணைக்கேற்ற வஸ்துக்கள் விசேஷமா யிருக்கின்றன. ஆகையால் ஆஹாரத்தில் இது மிகுதியாய்ச் சேருதல் நல்லது. ஆஹார வகைகளுக்குள் இதன் மேன்மையை ஜனங்கள் விசேஷமாய் அறியாததால், சாஸ்திரத்திற்கென்று வெகு ஸ்வல்பமாகச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இது அரிசியைக் காட்டிலும் மலிவாயிருந்தும் ஜனங்கள் இதை யதிகமா யுபயோகப் படுத்தாததற்குக் காரணம் அறிவீனமேயன்றி வேறில்லை.

உளுந்தும் சரீரத்திற்குப் போஷகந்தான்.

பழங்கள்: இவைகள் மிகவும் சிலாக்கியமான ஆஹாரங்கள் என்றாலும் ஜனங்கள் இதை ஏதாவது உத்ஸவம், பண்டிகை முதலியவைகளில் தவிர உபயோகப்படுத்துவதில்லை. பழங்களின் முக்கியமான குணம் மலபந்தத்தை இளகச் செய்து அன்றன்றுடகம் கழிவுகள் ஸரியாக நடக்கும்படி செய்வித்து சரீரத்திற்கு ஸௌக்கியத்தைக் கொடுப்பதே. இந்தப் பழங்களை கிரமமாக உபயோகப்படுத்திவரும் பட்சத்தில் விரேசனத்திற் கவசியமே யில்லாமற் செய்துவிடலாம். சில அஜீர்ணம்பற்றிய வியாதிகளை பலாஹாரங்களைக் கொண்டே சொஸ்தப் படுத்தி விடலாமென்று சில சிறந்த வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். வாழை, மா முதலிய பழங்கள் மிதத்திற் குட்பட்டு புஜிக்கப்படும் பட்சத்தில் அவை சரீரத்திற்கு வெகு நன்மை செய்யும். அரிசிக்கு மலபந்தம் செய்யும் குணம் முக்கியமாயிருப்பதனால், அரிசியைப் பிரதான ஆஹாரமாகக் கொண்ட நமக்கு பழ ஆஹாரங்கள் போஜனத்தில் கலந்து வரவேண்டியது அவசியமாகவிருக்க அதை நாம் வழக்கத்தில் விலக்கியிருப்பது அறிவீனமல்லவா? முற்றின காய்களா யிருக்கும்பொழுது பழவர்க்கங்களைச் சாப்பிடுவது ஜீரணத்திற்கும், சரீரத்தோடு அவை தன்னினப்படுவதற்கும் நிரம்ப ஸாதகமா யிருக்குமென்று, மருந்தில்லாமல் வியாதிகளை ஸ்வஸ்தம் செய்யும் முறையைக் கண்டுபிடித்த டாக்டர் கூநி என்பவர் எழுதியிருக்கிறார். நன்றாய்ப் பக்குவமான பழங்களை சிறந்த ஆஹாரங்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. அதிபக்குவமான பழங்களை எந்தக் காரணங்களை முன்னிட்டும் சாப்பிடலாகாது.

காய்கறிகள்: இவைகளை வேக வைப்பதில் ஜனங்கள் ஸாதாரணமாய், அவை வெந்த ஜலத்தைக்கொட்டி விடுகிறார்கள். இது நன்றன்று. காய் கறிகளின் உத்தமமானபாகம் ஜலத்தோடு போவது மில்லாமல் வாசனையுமில்லாமல் போய் விடுகிறது. ஆகையால் அவ்விதம்செய்தல்கூடாது. இவைகளைச் சேர்ப்பது முக்கிமாய்அவைகளிலுள்ள பாஸ்பரஸ் (Phosphorus) முதலிய தாதுவர்க்க ஸம்பந்தமான உப்புகளுக்காகத்தான். துவர்ப்பும் கசப்பு முள்ள வாழைப்பூ, பாவக்காய், சுண்டைக்காய், அகத்திக்கீரை, நெல்லிக்காய் முதலியவைகள் சரீரத்திற்கு உத்ஸாகத்தையும் பலத்தையும் கொடுப்பதோடு, புண்ணை ஆற்றும் ஸ்வபாவமும் உடையன. இவைகளை அடிக்கடியும் கட்டாயமாய் பட்டினியிருந்து சாப்பிடும் பாரணை காலங்களிலும் சாப்பிடுவது மேன்மை. வெண்டைக்காய் முருங்கக்காய் முதலியவற்றில் பாஸ்பரஸ் ஸத்துக்கள் முக்கியமாய் இருப்பதால் இவை மூளைக்கு மிகுந்த நன்மைசெய்யக்கூடியவை.

கிழங்குகள்: உருளைக்கிழங்கு உத்தமமானது. அடுத்தபடி சக்கரவள்ளி, சேனை, சேம்பு, கருணை முதலிய கிழங்கு வகைகள். முள்ளங்கி முதலிய நாற்றமுள்ள கிழங்குகளில் கந்தகஸத்து மிகுதியாயிருக்கிறது. ஆகையால் அவைகள் ஸுலபஜீரணத்திற் கேற்றவையல்ல. ஆனால் ஜீரணமானால் நல்ல போஷணை குணமுடையவைதான். தாது விருத்திக்கு எடுத்தவை.

சர்க்கரை: நம்முடைய ஆஹாரங்கள் எல்லாவற்றிலும், அதிலும் விசேஷமாய் மாப்பண்டங்களில் சர்க்கரையிருக்கிறது. சர்க்கரை தனிமையாக மிதமிஞ்சிச் சாப்பிடுதல் சரீரத்திற்கு



கேடுவிளைவிக்கும். அதிக சர்க்கரை ஆகாரத்தில் சேர்த்துண்ணல் ஜலரோகத்திற்கு ஆதாரமானது. அதிக சர்க்கரை தின்பவர்களுக்குப் பிளவைகளினால்மரணம் நேரிடக்கூடியது ஸஹஜம்.

பால்: பால் உண்மையில் பசுமுதலிய மிருகங்களின் சரீரத்தினது ஸத்தாகையால் அதுவே மேலான மாம்ஸாஹாரம். ஆனால் எந்தப் பசுவினிடம் பால் கறக்கப்படுகிறதோ அப்பசுவிற்கு ஏதாவது வியாதி இருக்குமானால் அந்த வியாதியும் பாலோடு உட்கொள்ளப் படுவது ஸாத்திய மாகையால், பசுக்களை ஜாக்கிரதையாய் வியாதி யணுகவொட்டாமலும், ஆஹாரத் தட்டில்லாமலும், ஆக்ஷேபகரமான ஆஹாரங்களைக் கொடாமலும் காலாகாலங்களில் போஷணை செய்து பார்த்து வருவதோடு, அவை கட்டப்பட்டிருக்கும் பட்டி (கொட்டில்) எப்பொழுதும் சுத்தமாயிருக்கும்படி செய்யவேண்டும்.

பால் நல்ல போஷணகாரியான வஸ்து. ஆயினும் அதை ஆஹாரத்திற் கலந்து சாப்பிடுதல்தான் நன்று என்று ஆயுள் வேத ஔஷதசாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். பாலைக் காய்ச்சுவதனால் வியாதி ஹேதுக்கள் கொல்லப்படுவதோடு ஸுலபஜீரணத்திற்கு லாயக்காகும்படி கொண்டுவரப்படுகிறபடியால், பாலைக் காய்ச்சாமல் குடிக்கக்கூடாது. பாலைத் திறந்து வைத்திருக்கும் பட்சத்தில் சீக்கிரத்தில் புளித்துக் கெட்டுப்போய்விடும். குழந்தைகளுக்குப் பசுவின் பால் கொடுத்துப் போஷிக்க வேண்டியதாக நேர்ந்தால், அப்பொழுது பாலை நன்றாகக் காய்ச்சிக் கொஞ்சம் ஜலமும் சர்க்கரையும் சேர்த்து ஆறவைத்து ஆடையையெடுத்து விட்டுக் கொடுத்தல் நன்மை.

காரப்பொருள்கள்: மிளகாய், கடுகு, மிளகு, இஞ்சி, சுக்கு, கொத்துமல்லி, சீரகம், சோம்பு, வெந்தயம், ஓமம், மஞ்சள், பெருங்காயம், வெங்காயம், வெள்ளைப்பூண்டு முதலியனவாம். இவைகள் ஆகாரத்திற்கு வாஸனையையும் ருசியையும் கொடுப்பதற்காக சேர்க்கப்படுகின்றன. இவைகளால் சரீரத்திற்கு அதிக நன்மையுண்டாவதில்லை. இவைகளால்தான் தென்னிந்தியர்களுக்கு அநேகம் வியாதிகள் வருகின்றன என்று சொல்லலாம். கடுகு அரைத்துப் போட்ட விடத்தில் கொப்புளமுண்டாக்குவதும், சுக்கு மிளகு எரிச்சலை யுண்டாக்குவதும், பெருங்காயத்தை ஒருசிறுமரத்தில் வெட்டுப்பட்ட இடத்தில் பூசிவைத்தால் அந்தமரம் பட்டுப் போவதும் யாவரும் பரீக்ஷை பார்த்தறியலாம்; அல்லது அநுபவத்தில் அறிந்திருக்கலாம். அப்படியிருக்க, மிகவும் மிருதுவான ஜீரணேந்திரியங்களுக்கு இவைகள்போய் மிகுதியும் சேருவதாயிருந்தால் எத்துணை கேட்டிற் கிடமாகுமென்பதைச் சற்று நிதானித்து யோசிப்பவர் அறிவார். ஆயினும் ஸுலபஜீரணத்திற்கு ஏற்றதல்லாத மாம்ஸாஹாரங்களைச் சாப்பிடுபவர்களுக்கு ஒருவாறு மஸாலை ஸம்பாரங்கள் ஏற்றதாக ஆகலாம். ஜீரணசக்தி மந்தப்படும் காலங்களில் இவை ஒருவேளை இரண்டுவேளை ஆஹாரத்துடன் சேர்க்கப்பட்டால் தேகத்திற்கு நன்மைசெய்யக்கூடும்.

விதிகள்.—ஜீரணம் வாயிலேயே ஆரம்பிக்கப்படுவதால் (மாப்பண்டங்கள் உமிழ் நீருடன் கலந்து சர்க்கரையாகமாறி ரக்தத்துடன் தன்னினப்படத்தயாராதல்) (எல்லா ஆஹாரங்களிலும் கொஞ்சம் அல்லது அதிகமாய் மாப்பண்டங்கள் இருப்பதால்) விசேஷமாய் மாப்பண்ட ஆஹாரங்களும் நன்றாக மெல்லப்பட்டு, உமிழ் நீரோடு நன்றாகக் கலக்கும்படி செய்யப்பட வேண்டுமென்றாயிற்று. எவ்வளவுக் கெவ்வளவு நேரம் அதிகமாக ஆஹாரம் வாயில் நிற்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஸ்வல்பநேரம் குடலில் நின்றால்போதும். இது நிறுத்தப்படும் பட்சத்தில், உமிழ் நீருடைய வேலையானது குடலினால் செய்யப்பட வேண்டியதாக நேருவதனால், குடலுக்கு அதிக வேலை ஏற்பட்டு, அதிகவேலையால் குடல் பலவீனப்படும்படி நேரிடுகிறது. மேலும் மாப்பண்டங்களை ஜீரணிக்க உமிழ் நீருக்குத்தான் பூரணமான சக்தியாகையால், இங்கே மாறுதலடையாத ஆகாரங்களெல்லாம் ஜீரணிக்கப்படாமலே சரீரத்தில் கெடுதலடைந்து புளித்துக்கொண்டுவருகிறது.

மேலும் ஆஹாரம் செய்வதற்கு க்லுப்தமான வேளைகள் ஏற்படவேண்டும். குடலிலும், அந்தரங்களிலும் ஜீரணம் முற்றுப்பெறுவதற்கு 3 முதல் 4 மணி வரையில் பிடிக்கிறது. அதன் பிறகு 2 மணி நேரம் குடலுக்குச் சிரம பரிஹாரம்செய்துகொள்ள ஸாவகாசம் விடவேண்டும். ஆகையால் ஐந்து மணி அல்லது ஆறு மணிக்கொருதரமாக போஜனம் செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே, காலை 8 மணிக்கு ஒரு தடவையும், 1 மணிக்கொருதடவையும்

ராத்திரி 8 மணிக்கொருதடவையுமாக ஆஹாரம் குடலுக்கு அனுப்பப்படும் பட்சத்தில், குடல் சிரமமில்லாமல் ஸரியாய் வேலைசெய்யும். கண்ட வேளைகளில் ஒரு ஒழுங்குமில்லாமல் சிற்றுண்டிகளைத் தின்னலாகாது. முன்னர் சாப்பிட்ட சாப்பாடு ஜீரணமாகிக் கொண்டிருக்கும் பொழுதே, இன்னும் புது ஆஹாரம் குடலுக்கு அனுப்பப்படும் பட்சத்தில் வயிற்றுவலி முதலிய அடையாளங்களால் அவ்வேலை தன்னால் முடியாதென்பதைக் காண்பிக்கிறது. அதிலும் விடாமல் ஒரு மனிதன் சாப்பிடுவானானால், ஒரு ஆஹாரத்தையும் ஜீரணிக்காமல், மலச்சிக்கல் முதலிய வியாதிகளுக்கு ஆஸ்பதமாகிறது. இப்படி மீதூண்விரும்புவார்களுக்கு அகாலத்தில் பற்கள் உதிர்ந்துவிடும். மேலும் மீதூண் வயிற்றைப்பெருக்கச்செய்வதனால் 'தொந்திவிழுந்து' சரீரத்தை அவலட்சணப்படுத்தும்.

வெகுதூரம் நடந்து அல்லது அதிக வேலை செய்து அல்லது தூக்கம் விழித்து அல்லது வேறெவ்விதக் காரணங்களினாலாவது சரீரம் களைத்திருக்கும் வேளைகளில் ஆஹாரம் உட்கொள்ளலாகாது. சிறிது நேரம் சிரமபரிஹாரம் செய்துகொண்டு அல்லது தூங்கியெழுந்து சாப்பிடுதல் நன்று.

தூங்குவதற்கு உடனே முன்னாலாவது தூக்கத்தின் மத்தியிலாவது ஆஹாரம் செய்யக்கூடாது. தூங்கும் காலத்தில் ஜீரணம் ஸரியாக ஆவதற்கு ஹேதுவில்லாமையால் சாப்பிடப்பட்ட ஆஹாரம் வயிற்றில் புளிக்கவும் அதனால் வயிற்றுப்புஸம் முதலிய தொந்தரைகள் நேரவும் கூடும். பால் சீக்கிரம் புளித்துப் போகக்கூடிய வஸ்துவாகையால், தூங்குவதற்குச் சற்று முன், பாலைச் சாப்பிடக்கூடாது. இராத்திரியில் சாப்பிடும் ஆஹாரங்கள் சீக்கிரம் ஜீரணிக்கக்கூடியவைகளாயும் ஸ்வல்பமாயுமிருக்கவேண்டும்.

சாப்பிட்டான உடனே எவ்விதமான முரட்டு வேலைகளும் வ்யாயாம விஹாருதிகளும் உதவாது. இந்த விதியை மீறுவதற்கு மரணம் வரை கடவுள் தண்டனையேற்படுத்தியிருக்கிறார்.

மேலும் பிராணாதாரமான எவ்வித அவயவமும் தனக்கேற்பட்ட வேலையை முற்றுப்பெறச் செய்யவேண்டுமானால், அந்த அவயவத்திற்குப் பூரணமாக ரக்தவெள்ளம் அனுப்பப்படவேண்டும். இந்தக் காரணத்தினால் சாப்பிட்டு முக்கால் மணிநேரம் அல்லது ஒருமணி நேரம் வரை மூளைக்கு எவ்விதமான வேலையும் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் ஜீரணம் தடைப்படும்.

பானம்.—மனிதனுக்கு ஆஹாரம் போலவே பானமும் மிகவும் முக்கியமானது. உத்தமமான பானம் ஜலந்தான்; அதிலும் சுத்தமான சுற்றுப்புறத்தின் மத்தியிலுள்ள ஊற்று நீர்தான். ஸ்நாநத்திற்காக ஏற்பட்டிருக்கும் குளங்களின் ஜலம் பானத்திற்கு உபயோகப்படுத்தக் கூடாது. செவ்வல் தரைகளிலுள்ள ஜலம் பானவிஷயத்திற்கு ஸந்தேஹாஸ்பதமானது. ஆகையால் அவ்விதமான தண்ணீரை நன்றாய்க் கொதிக்கவைக்காமல் சாப்பிடுதல் கூடாது. இந்த விஷயத்தில் அஜாக்கிரதைதான் நரம்புச்சிலந்தி முதலிய பயங்கரமான வியாதிகளுக்கு ஆஸ்பதமாயிருக்கிறது. இந்த வியாதியினால் சரீர அவயவங்கள் கூட சில ஸமயங்களில் வழங்காமல் போவதுண்டு. நாக்கு, கண், உதடு, காதுமுதலிய மிருதுவானபாகங்களின் வழியே கூட நரம்புச்சிலந்தி வெளி வருவதுண்டு.

மழைத்தண்ணீர்.—மழைபெய்யும்பொழுது ஆகாயத்திலுள்ள பிராண வாயுவையும், கரியமிலவாயுவையும், மழை ஜலம் கரைத்துக் கொண்டுவருகிறது. அதனால் அந்த ஜலம் அதிக ருசியாயிருக்கும். மழைத் தண்ணீர் மிகவும் சுத்தமானது.

ஆற்றுநீர்.—ஆறு எவ்விதமான தரைகளின் மீது பிரவகிக்கிறதோ அத்தரைகளை பொறுத்திருக்கிறது ஆற்று நீரின் சுத்தாசுத்தம். ஆற்றில் வெள்ளம் வந்து ஜலம் கலங்கலாய் ஓடுங்காலங்களில் பலவகை அசுத்தங்கள் தண்ணீரில் சேர்ந்திருக்க ஹேதுவுண்டு. ஆதலால் அத்தண்ணீரை ஸரியானபடி சுத்திசெய்து சாப்பிடாமல், அப்படியே சாப்பிடுகிறவர்களுக்கு வயிற்றுக் கழிச்சல் முதலான வியாதிகள் ஸம்பவிக்கும்.

கிணறுகள—கற்பாறைகளுள்ள இடத்திலிருந்து ஊறுகிறதண்ணீர் மிகவும் சுத்தமானது. மணற்பாறையுள்ள இடங்களில் ஊறிவருகிற தண்ணீரும் அப்படியே. ஆனால் சில ஸமயங்களில் அசுத்தங்கள் கலந்திருக்கலாம். சுண்ணாம்புக்கல் தரைகளில் ஊறுகிற ஜலம் சற்று வெளுப்பு நிறமாகவிருக்கும். வாய்க்கும் ருசி



யாகவேயிருக்கும். ஆனால் வழக்கமாய்ச் சாப்பிடுபவர்களுக்கு வியாதிகள் ஏற்படும். வண்டல் தரைகளிலும் பிரேதங்கள் அடக்கம் செய்யுமிடங்களுக்கு ஸமீபத்தில் ஊறிவருகிற தண்ணீரும் மிகவும் அசுத்தமாயிருக்கும்.

நல்ல தண்ணீரின்னதென்று அறிய பல அடையாளங்களுண்டு. அவையாவன:—(i) நல்ல தண்ணீர் கண்ணாடியைப்போல் தெளிவுள்ளதாகவும், நிறம், வாஸனை ருசி முதலியவையொன்றுமில்லாதுமிருக்கவேண்டும்.

(ii) ஒரு பாத்திரத்தில் தண்ணீரைச் சிறிது நேரம் வைத்திருந்தால் வண்டல் படியக் கூடாது.

(iii) பருப்புகள், காய்கறிகள், இவை நன்றாயும் லகுவாயும் நல்ல தண்ணீரில் வேகும்.

சுத்தமான தண்ணீர் கிடைக்காத இடங்களில் கிடைக்குந் தண்ணீரைக் கொண்டு, காயவைத்து, நீராவியாக்கி, மறுபடி அந்த நீராவியைத் தண்ணீராக மாற்றிக்கொள்ளுதல் ஸந்தேஹமற்ற வழி. மூன்று பானைகளின் மூலமாய்த் தண்ணீரைவடிக்கட்டும் மார்க்கம் யாவரும் அறிந்தது. தேத்தாங்கொட்டை, சீனிக்காரம் முதலிய பொருள்களைக் கொண்டு, தண்ணீரிலுள்ள வண்டல்களை வடியவைத்து சுத்தம் செய்யலாம்.

காபி, தேயிலை, கோகோ, சாகோலேட் முதலிய பானங்கள் பொதுவில் சரீரத்திற்கு ஹிதகரமென்று சொல்லமுடியாது. சில ஸமயங்களில் இவை சரீரத்திற்கு நன்மை செய்யும். வேறு சில ஸமயங்களில் இவைகளால் தீமையன்றி வேறில்லை. அதெப்படியென்றால், சரீரத்தில் பூரணமானதும் ஸத்துள்ளதுமான ஆஹாரங்கள் விசேஷமாய் இருக்கும் ஸமயங்களில் இப்பானங்கள் உபயோகப்படுத்தப்பட்டால், சோம்பல்மிகுதியை யோட்டி சுறுசுறுப்பை யுண்டாக்கும். உண்மையில் இப்பானங்கள் செய்யும் காரியம் என்னவென்றால், இதரவிதமான ஆஹார பதார்த்தங்களால் சரீரத்திற்கு உண்டாயிருக்கும் பலத்தை சீக்கிரமாய்ச் செலவாகும்படி செய்வதுதான். ஆகையால், விளையாடி அல்லது வேறு வேலை செய்து களைத்த இரண்டு பையன்களில் ஒருவனுக்குப் பாலும் மற்றொருவனுக்குத் தேயிலைப் பானமும் ஆஹாரமாகக் கொடுக்கப்படும் பட்சத்தில், இருவர்களுக்கும் தத்ஸமயத்திற்கு உத்ஸாகம் ஏற்படுகிறதில் ஆக்ஷேபணையில்லை. சற்று நேரங்கழித்து, பால் சாப்பிட்ட பையனுக்குப் பசிமட்டிலும், தேயிலைப் பானம் செய்தவனுக்குப் பசியுடன், சரீரத்திலும் மனத்திலும் சோர்வும் உண்டாவதைக் கவனிக்கலாம். அதேனெனில், பால்சரீரத்திற்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய ஸத்திலிருந்து ஒரு பையனுக்குப் புதியதான பலத்தை ஸம்பாதித்துக் கொடுத்தது. தேயிலைப் பானமோ மற்றொரு பையனுக்குப் புதிதான பலமொன்றையும் கொடுக்கமுடியாமல், ஏற்கெனவே சரீரத்தில் மீதமிருந்த பலத்தைக் கிளப்பிவிட்டு, அதையும் சீக்கிரமாய்ச் செலவழியும்படி செய்தது. ஆகையால் தேயிலை முதலிய பானங்கள் ஸம்பாத்தியமில்லாத செலவிற்கு ஸமானமாகும். தேயிலை முதலியவைகளில் அவைகளிலுள்ள பாலின் அளவுக்குரிய தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய ஸத்துக்களிருக்கின்றனவே யன்றி, தேயிலை முதலியவைகளுக்குச் சரீரத்தைப் போஷிக்க சக்தி கிடையாது. அன்றியும் இப்பானங்களை ஜனங்கள் தேடுவது அவைகளினாலுண்டாகும் உத்ஸாகத்தையும், மன வெழுச்சியையும் குறித்தல்லது அவைகளினாலுண்டாகும் சரீரத்திற்குரிய ஸத்தாம்சத்தைக் குறித்தல்ல. ஆகையால் இவ்வித பானங்கள் சரீரத்திற்கு நன்மை செய்யமாட்டா. இவைகளை விலக்குதலே மேன்மை.

கள், சாராயம், விஸ்கி, ப்ராண்டி, பீர், வைன் முதலிய பானவகைகளிலும் சரீர பலத்திற்குரிய ஸத்தாம்சம் கிடையாது. இவைகளும் காலக்கிரமத்தில் சரீரத்தினுடைய பலத்தைப் போக்கடிப்பவைதான். இவைகளில் இன்னொரு அபாயம் உண்டு. இவைகளைக் குடிக்க ஆரம்பித்தால், வரவர அதிகமாக அவைகளைக் குடிக்கவேண்டுமென்கிற ஆசை அதிகப்படுகிறது. அவைகளுக்கு ஸ்வபாவத்தில் ருசி ஏற்பட்டிருப்பதனால், சரீரத்தின் சோம்பலைப் போக்கி, சுறுசுறுப்பான வேலைக்கு எழுப்பிவிட எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுடன் நிறுத்துவது அஸாத்தியம் ஆகிவிடும். ஆகவே, இவைகளைச் சாப்பிட ஆரம்பித்தால், குடிமயக்கம் வரை காலக்கிரமத்தில் கொண்டு வந்து விடுமேயல்லாது ஸாதாரணமாய்ப் போகாது. ஆதலின் இவைகளையும் விலக்குதலேதான் மேன்மை.

நித்திரை:—சரீரமானது பகலில் வேலை செய்து களைப்பதும், பிறகு இரவில் நித்திரையினால் அக்களைப்பு நீங்கி மறுபடி கடினமானவேலைகளுக்கு மறுநாள் உதயத்தில் லாயக்காவதும் அநுபவஸித்தமாய் நாமறிந்ததே. ஆகையினால், சிரமபரிஹாரம் நித்திரையினால் கிடைக்கிறதென்பது நமக்குக் கிடைத்தது. ஆயினும் சரீரபலம் முழுவதும் நித்திரையினால் திரும்பி வருவதில்லை. தினந்தோறும் வேலையினால் நம்முடைய சரீரபலம் கணக்கிட முடியாதபடி அவ்வளவு சிறியபாகம் குறைந்துகொண்டே வருகிறது. இப்படி வரவரக் குறைந்து, மறுபடி சரீரத்தினுடைய இருப்பிற்கான வேலைகளையும் செய்வதற்கு சரீரத்திற்கு முடியாமற் போகும்போதுதான் மரணம் ஸம்பவிக்கிறது.

நித்திரையில்லாமற் போவதினால், சரீரம் சிரமபரிஹாரமில்லாமல் உழைக்கும்படி நேரிட்டு, அதனால் மிகுதியும் வியாதிகளுக்குள்ளாகிறது. ஆகையால் ஒவ்வொருவரும் அவரவர் வயது, முயற்சி முதலியவைகளை யொத்துத் தகுந்த அளவு நித்திரையினால் அப்பொழுதைக் கப்பொழுது சிரமபரிஹாரம் செய்துகொண்டு, சரீரத்தைக் கூடுமானமட்டில் சுறுசுறுப்பான நிலைமையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

படுத்துக்கொள்ளுவதில் முதுகு கீழேயிருக்கும்படி (அதாவது மல்லாக்காக)படுத்துக்கொள்ளுதல் சிலாக்கியமில்லை. ஏனெனில் அது குறட்டை விடுதலுக்கும் பயங்கரமான ஸ்வப்னங்கள் உண்டாவதற்கும் இடமாகும். குடல் சரீரத்தின் இடதுபாகத்தில் இருப்பதால், வலதுபுறம் கீழாக இருக்கும்பட்சத்தில் குடல் தொங்கி, தூக்கம் ஸரியாக வராது. இடதுபுறம் கீழாக இருக்கும்படி படுக்கவேண்டும். பக்கத்தில் படுத்துக் கொள்ளும் பட்சத்தில் ஸ்வல்ப உயரமுள்ள தலையணை இருந்தாற்போதுமானது. வேறுவிதமாகப் படுக்குங்காலங்களில் தலையணையின் உதவியே கூடாது. அப்படி சரீரத்தை ஹரிஜஸமமாக (Horizontal) கிடத்தலால், ஹிருதயத்திற்கு சிரமபரிகாரமுண்டாகிறதென்கிறார்கள்.

T. R. S. சாஸ்திரி, பி. ஏ.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திச்சூடி விளக்கம்

### 48. சுளிக்கச் சொல்லேல்

மனம் வருந்தக்கூடிய சொற்களைச் சொல்லாதே என்பது இந்த ஸூத்திரத்திற்குப் பொருள். யார்மனம் என்றகேள்வியை கேட்குமிடத்து கேட்போர் மனம், சொல்லுவோர் மனம் என இருவாறாகப்பிரிந்து நிற்கும் இப்பொருள். கேட்போர் மனம் வருந்தும்விதம் இத்தனை வகைப்படும் என்ற விஷயத்தை ஆராயுமிடத்து, அது சஞ்சலம் என்றும் தாபம் என்றும் இருவகைப்படும். சொல்லுவோருக்கு ஏற்படக்கூடிய மனவருத்தத்தை புகுந்து நோக்குமிடத்து அதுவும், பச்சாத்தாபம் என்றும் குவிபாமை என்றும் இருவகைப்படும். ஆதலால் இந்த ஸூத்திரப்பொருள் உற்று நோக்குமிடத்துப் பின்வரும் நான்கு வழிகளாக அமைந்து காணப்படும்.

(1) கேட்போர் மனம் சஞ்சலப்படச் சொல்லாதே:—இங்கு சொல்லுவது என்பதை உபந்யாஸங்களில் விஷயங்களை பலர் அறிய எடுத்து விஸ்தரித்துக் கூறுவது என்றும், பொதுவாக ஸம்பாஷணை மூலமாக கேட்பவனுக்கு உணர்வேற்படக் கூறுவது என்றும் இருவகையாகக் கொண்டு ஆராயப்புகுவோம். உபந்யாஸாதிகளில் மனம் சஞ்சலப்படக் கூறுவது என்பது பத்துவகைச்சொற்குற்றங்களில் ஒன்றுவதுபலவாவது அமைந்து கிடக்கச்சொல்லுவதே. இதனால் கேட்பவர்களுக்கு விஷயம் விளங்காமல் போக,விஷயத்தில் பிடிப்பின்றி‘ஏன் வந்தோம் இதற்கு’ என்று மனம் களைபாய்ந்து வருந்தும் சஞ்சல நிலையை அடையும். இதை நீக்குவதற்கு பத்துவகை சொல்லழகு அமையக் கூறுவதேவழி. வேறு ஒருவிதமாயும் உபந்யாஸாதிகளில் சுளிக்கச் சொல்லலாம். ஸபையிலிருக்கும் ஒருவரை கங்குகரையின்றி துதிப்பதால் அவருக்கு வீண் மனச்சஞ்சலமான கர்வம் உண்டாகி, கீர்த்திவரக்கூடா ஸத்விஷயங்களில் அவருக்கு ஏற்படக்கூடிய முயற்சியை எழவொட்டாது அடக்கி கீர்த்திக்கிணங்க ஒழுக வேண்டும் என்று தூராக்ரஹ ரூபமான சஞ்ச



லத்தையும் உண்டாக்கிவிடும். இதுபோன்ற ஸாதாரண குற்றங்களை தலை எடுக்க வொட்டாது பேசுவதே சுளிக்கச் சொல்லாமையாகும். ஸாதாரண ஸம்பாஷணையில் முற்கூறியவைகளும் கவனிக்கத்தக்கவை. மேலும், பயனில்லாச்சொல், கோட்சொல்லுவது ஆகிய இருவகைக் குற்றம் இங்கு முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. கோட்சொல்லுவதில் பரநிந்தையையும், பயனிலாச் சொற்களில் பத்திரிகை வம்புகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது. பயனிலாச் சொல்லால் மனதிற்குப் புதிய விஷயங்களை உணரவேண்டும் என்ற ஓயாச் சஞ்சலம் அதிகப்பட்டு நமக்கு வீண் வருத்தம்தான் உண்டாகும். சித்திரம் பேசேல் என்பதன் பொருளை ஒட்டியதுதான் இதுவும். காலத்தை, வீணே மனப்பால் குடிப்பதில் கழிக்கும்படியான உபயோகமற்ற நிலையும் நமக்கு வந்து விடும். கோட்சொல்லுவதில் கேட்பவன் மனம் ஓயாது கொடியநிலையை அடைந்துகொண்டே வருத்தும். ஒரு கெட்ட விஷயம் தானாக நாளடைவில்வெளிப்பட்டால்அதிக மனச்சஞ்சலத்தை உண்டாக்காது. அப்படியின்றி திடீரென்று கோளின்மூலமாக வெளிப்படுமாயின் மனச்சஞ்சலம் அதிகமாகவே இருக்கும். இப்படிப்பட்ட மனச்சஞ்சலத்தை உண்டாக்காத சொற்களையே ஸத்தான புத்திமான் கூறவேண்டும் என்பது இந்த ஸூத்திரத்தின் கருத்து.

(2) கேட்போர் மனம் தவிக்கச் சொல்லாதே. முன்னர் கூறிய உபந்யாஸ ஸம்பாஷணைப் பாகுபாடுகளை இங்கும் கொண்டு ஆராயலாம். உபந்யாஸாதிகளில் தவிக்கக் கூறுவதாவது ஒருவனை குற்றங் கூறப்போகுமிடத்து ஒழுங்குவரம்பு இவைகள் மீறிப்பழிப்பதும் கொடிய அல்லது ரஹஸ்ய விஷயங்களை நாகரிகமின்றி போட்டுடைத்து விடுவதும், நியாயவரம்பு மீறி அநியாயத்தை நிலைநாட்டப் புகுவதுமே. இவைகளுக்கு முறையே ஒரு விஷயத்தைக் கண்டிக்குங்கால் அதை எடுத்தாண்டவனை வாயில் வாராதபடி திட்டுவதும், ஒருவன் துர்நடத்தையை பச்சையாகவெளிப்படுத்துவதும்: விவாஹ மந்திரார்த்தங்களை நோக்கமுணராது வெளியிடுவதும், வைதிக ஒழுங்கை வாய் கூசாது அற்ப லௌகிக ஒழுங்கால் கண்டிப்பதுமே உதாரணங்கள். ஸம்பாஷணையில் பொய், கொடிய சொல், போகவிட்டு புறஞ்சொல்லுதல் ஆகிய இவைகள் கவனித்து ஒதுக்கத்தக்கவை. ஒருவனுடன் மிகுந்த அசுப ஸமாசாரம் வெளியிட வேண்டுமாயின், வெகு ஸாவதானமாகவும் கூடாவிடில் எழுத்து மூலமாக சொல்லை அடக்கியும் தெரிவிக்கவேண்டும். இந்தபாகத்தில் இச்சூத்திரத்திற்கு புண்படக்கூறேல் என்றே பொருள் கூறிவிடலாம். ராவணனுக்கு, திக்விஜயகாலத்தில் அவனால் அடிபட்டு விழுந்த அயோத்திமன்னன் அனரண்யர் சாபம் வந்தது, அவரை அவன் புண்பட கேலி பண்ணியதால்தான். துர்யோதனனுக்குத் தொடையிலடிபட்டு இறக்க சாபத்தால் நேர்ந்தது, அவன் மைத்ரேயர் வாக்கை அனாதரவுபண்ணி கொடுஞ்சொற் கூறியதால்தான். இப்படி நல்லோராயினும் ஸரி, கொடியோராயினும் ஸரி, அவர் மனம் சுளிக்கச் சொன்னால் பெருங்கேடே விளையும். ஆதலால் சுளிக்கச் சொல்லேல்.

(3) பச்சாத்தாபம் உண்டாக்கக்கூடிய சொற்களை நீக்கு.—இதுவரையில் கேட்போர் மனம் சுளிக்கக் கூறுமை விளக்கப்பட்டது. உலகில் ஒருவன் வேறொருவனுக்குக் கெடுதிசெய்தால் அது செய்பவனைத்தாக்கி விகாரப்படுத்தாது போவதில்லை. ஆகவே கேட்பவன் சுளிக்கச் சொல்லுவது, ஒருவனிடமிருந்து கிளம்புமாயின் அது கேட்பவனைத் தாக்குவதோடும் கூட சொல்பவனையும் ஒரு விதம் தாக்கியே போகும். இப்படி கழுதைபோல பின்னே உதைக்கும் சொற்களைச் சொல்லாதே என்பதும் இந்த ஸூத்திரத்தின் கருத்து. எந்தச் சொல்லை வெளியிட்டபின்னர்,“ஐயோ இப்படிக் கூறாதிருந்தால் நலமாக இருக்குமே! இப்படிக் கூறியதால் என்ன கொடுமை நேரிட்டுவிட்டது! இக்கொடுமைக்கு நாமல்லவோ காரணமானோம்!” என்று பெருந்துயரத்தை விளைத்து நம்மையே புண்படுத்தக்கூடிய சொற்களை முன் ஆராய்ச்சியால் தடுத்தே நிறுத்தவேண்டும். பொய் சொல்லக்கூடாது என்று சாஸ்திரங்கள் கூறும், யதார்த்தவாதி பகுஜன விரோதி ஆதலால் நாம் உணர்ந்த உண்மையைக் கூறிவிட வேண்டும் என்று சிலர், உள்ளதை தருணம் கவனியாது வெளியிட்டு கௌசிக ப்ராஹ்மசாரி உண்மைகூறி பல ப்ராஹ்மஹத்திக்குக் காரணமானதுபோன்ற கொடிய நிலைக்கு வந்துவிடுவர். (கர்ணபர்வம்: தர்மம், அதர்மமா

னது; ஆர்யமத உபாக்யானம் 2-ம்பாகமும் பார்க்க). நியாயஸ்தலங்களில் ஸாக்ஷி சொல்லுமிடத்தில் சொற்களை அளந்தே வெளிப்படுத்த வேண்டும்: அவஸரமாக இருப்பின் இம்மாதிரி சுளிக்கச் சொன்னதாகவே முடிந்து விடும். கோட்சொல்லுவதும், கொடியசொல் சொல்லுவதும், வரம்பு மீறினால் இந் நிலையைத்தான் அடையும். பாரத யுத்தம் தொடங்கும் முன் இம்மாதிரி சுளிக்கச்சொல்வதை நீக்கிக்கொள்ளத்தான் தர்மபுத்திரர், கிருஷ்ணபரமாத்மாவைத்தூதாகவிட்டது. இடை அதிகாரிகள் தமக்குத் தாழ்ந்த வேலைக்காரர்களைப்பற்றி மேலதிகாரிகளிடம் தெரிவிப்பதில் இந்த சுளிக்கச் சொல்லாமையை இருவழியிலும் கவனித்தே நடந்துகொள்ளவேண்டும். ஸாதாரணமாகத் தத்காலத்திய அதிகார தோரணை ஒழுங்கில் மேலதிகாரிக்குத் தெரிவித்து வேலைக்காரரைக் கெடுத்துவிடும் ஆற்றல் இடை அதிகாரிக்கு அதிகம் உண்டே ஒழிய, அவர்களுக்கு அநுகூலம் செய்ய அவ்வளவு ஆற்றல் இல்லை. இதை நன்குணர்ந்து தன் அதிகாரத்தை வெகு கவனமாகச் செலுத்தும் இடை அதிகாரிதான் சுளிக்கச் சொல்லாமையின் ஆற்றலை நன்குணர்ந்தவனாவான். ஆகவே உலகில் பழகிவருகையில் ஸந்மார்க்கம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் சுளிக்கச்சொல்லாமையும். தன்மனமே பின்னர் வருந்த ஒருவன் கூறிவிடுவானாயின் ஸந்மார்க்க ஆற்றல்கூட அப்பொழுது குன்றியே போகும்.

(4) மனக்குவிவைக் கெடுக்கும் சொற்களைச் சொல்லாதே.—'பாழான என்மனம்குவிய ஒரு தந்திரம் பண்ணுவதுனக் கருமையோ' என்றும் எல்லாம் வல்ல ஈசனைக் கனிந்துருகிக் கேட்கின்றார் தாயுமானவர். இங்கு சுளிப்பது என்பது மனதைக்குவியவொட்டாது தடுப்பது என்று அர்த்தமாகும். ஸந்மார்க்க முதிர்ச்சி பெற்ற மஹான்கள் ஸமாதியிலிருந்து பழகுவர். இந்தப் பழக்கத்தில் தடைகளை உண்டாக்கக்கூடிய சொற்களை அவர்கள் சொல்லிப் பழகாதிருக்கவேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறது இந்த ஸூத்திரம். அந்த நிலையில் நிலைக்கவொட்டாது தடுப்பவை காமக்ரோதாதிகள் நிறைந்து ப்ரபஞ்ச ஸுகத்தை பெருமைப்படுத்திக் கூறும் வார்த்தைகள், ப்ரபஞ்ச விசித்ரத்தை ஏற்றமாக வர்ணிக்கும் வார்த்தைகள், தன்னையும் கடவுளை பிரித்துப் பாகுபாடு செய்து வற்புறுத்தும் வார்த்தைகள் ஆகிய இவைகளே. இவைகளை முறையே மல, விக்ஷேப, ஆவரண தோஷங்கள் நிறைந்த சொற்கள் என நமது சாஸ்திரங்கள் பகுத்துக்கூறும். இவைகளைச் சொல்லாமலே இருப்பதற்கு நமது சாஸ்திரங்கள் மூன்றுவித ரஹஸ்ய உணர்வும் அவைகளில் பழக்கமும் விதித்துள்ளன. அவையாவன, ஸ்வதர்மாசரணம் (வர்ணாச்ரம ஸ்திரீ புருஷதர்ம அனுஷ்டானம்) ஆத்மானாத்ம விவேகம் (அனாத்மத்யாகம், ஆத்மாவலம்பனம்) ஸர்வம்பிரஹ்மம் (எல்லாம் பரம்பொருள்தான்) என்பவைகளே. இவைகளுள் முன்னதைவிடப்பின்னது அதிரஹஸ்யமானது. இந்த ஒழுங்கிலேயேதான் ஸமாதி பழகவேண்டும். இந்தஸமாதியைக் கலைத்துச் சுளிக்கச் செய்யும் இந்த ரஹஸ்யஞானானுஷ்டான விரோதமான சொற்களில் காலத்தை வீணாகக் கழிக்கலாகாது. இவைகளுக்கு அநுகூலமான சொற்களிலேயே காலத்தைக் கழிக்கவேண்டுமென்பது தெரியவரும் இதனால். இதுபற்றியே பெரியோர்களும் 'அதைநினைந்தும் அதை உரைத்தும் இருப்பதன்றோ ஞானிகளுக்கான நீதி' என்று இந்த ஸூத்திரப்பொருளை உடன்பாடாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

---

**ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜன்மோத்ஸவ வைபவம்.**—சென்ற பிப்ரவரி௴ 21௳ ஞாயிற்றுக்கிழமை, மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் இம்மஹானது ஜன்மோத்ஸவதினம் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றையதினம் இம்மஹானது பேரால் ஸ்தாபிக்கப்பட்ட மடங்களும் சங்கங்களும் எங்கெங்குள்ளனவோ அங்கெல்லாம் இவ்வைபவம் மிகவும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பெற்றிருக்கும்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் இளம்பிராய முதற்கொண்டு தெய்வபக்தி, கருணை, பூததயை முதலிய கல்யாணகுணஸம்பன்னர். அவருக்கு ஏழை ஜனங்களைத் திருப்தி செய்விப்பதில் ஆனந்த மதிகமாகையால் தர்மம் தவமேயாகும் என்று கூறியுள்ளபடி, அவர் ஜன்மதினத்தன்று பல்லாயிரக் கணக்கான ஏழைகள் அன்னம் அளிக்கப்பட்டனர். அன்றையதினம்பஜனைகளும் ஹரிகதாகாலக்ஷேபங்களும் நடைபெற்றன. இப்பரதகண்டத்தில் ஸூர்யனொளிபோன்று உதித்த மஹான் ஸ்ரீ கௌதமபுத்தரின் திவ்யசரித்ரம் வெகு அழகாய் எடுத்துரைக்கப்பட்டது. இத்தகைய பெரியோரின் ஞாபகார்த்தமாக அவரது ஜன்மதினங்கள் கொண்டாடப் படவேண்டியது மிகவும் அவசியமல்லவா?



# ரணகேஸரி அல்லது ராஜபக்தி

## RANAKESARI

(301-ம் பக்கத் தொடர்ச்சி.)

### அங்கம்-1

### களம் 3

இடம்:—அரண்மனையில் ஓர் அறை

வீர:—டை ஸேவகா! என்ன! நீலகண்ட சாஸ்திரிகளைக் கூட்டிவரப்போன ஸேவகன் இன்னும் வரக்காணோம். (ஸ்வகதம்) ஒருவேளை அவர் ஊரிலிருக்கிறாரோ அல்லது இல்லையோ? என் அத்ருஷ்டத்திற்கு அவர் இல்லாமற்போவதுதான் ஏற்றதாயிருக்கும்.

விதூ:—ப்ரபு, இதோ வந்துவிடுவார். (ஸ்வகதம்) ராஜா வெகு கவலையாயிருப்பதாகவன்றோ தோன்றுகிறது. நம்முடைய வாலை யொடுக்கி வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

வீர:—(இரண்டு நிமிஷத்திற்கெல்லாம்) டைா! ஸேவகா! என்னடா! இன்னும் காணோம்.

விதூ:—இதோ வந்துவிட்டார்.

வீர:—எங்கேடா வந்துவிட்டார்?

விதூ:—இல்லை. வெகு சீக்கிரத்தில் நிச்சயமாய் வந்துவிடுவார் ஸ்வாமி.

வீர:—அதற்குத்தானா வந்துவிட்டார் என்று இறந்தகாலமாகச் சொன்னாய்?

விதூ:—இல்லை ஸ்வாமி, அதற்கு இலக்கணம் உண்டு.

வீர:—என்னடா உலக்கடத்தைக் கண்டுவிட்டாய்?

விதூ:—இதை இலக்கண நூலார் தேற்றப் பொருளில் வந்த கால வழுவமைதி என்பர். 'எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது.' ஸ்வாமி உதாரணம் சொன்னேன்.

வீர:—பலே, உனக்கு இலக்கணப் பயிற்சி கூடவா?

விதூ:—(ஸ்வகதம்) ப்ரபுவின்மனம் வேறுவழியில் நாடுகிறது, இதையவலம்பித்து அவர் துக்கத்தையோட்டப் பார்க்கிறேன். (ப்ரகாசம்) ஸ்வாமி, எனக்கு இலக்கணப் பயிற்சி மட்டுமா? எனக்கு எல்லா சாஸ்திரங்களுமே வரும். தர்க்கம், வ்யாகரணம், சந்தஸ், மீமாம்ஸம், வேதாந்தம், 64 கலைஞான மனுவிக்யானங்கள் எல்லாம்வரும், ஸ்வாமி. ஆனால் நம்மை யார் தேடுகிறார்கள்? புழக்கடைப் பச்சிலைக்கு வீர்யம் கிடையாதல்லவா? இந்த நீலகண்டசாஸ்திரிகளை வரவழைத்த கார்யத்தை என்னிடம் சொன்னால் நான் ஸுலபமாய் முடித்து வைக்க மாட்டேனா? இந்த நாளில் அருமை யார் அறிகிறார்கள்? (பாடுகிறான்.)

ராகம்:—மோஹனம்; தாளம்:—ஆதி

பல்லவி

'இந்த உத்யோகம் என்ன பெரிதா
நெஞ்சே இது போனால் பிழைப்பதரிதா

அனுபல்லவி

எந்தவிடம் போனாலும் கந்தப்பொடி வாஸிக்கும்
அந்தவிதமாய்நம்மை அகிலமெல்லாம்பூஜிக்கும் (இ)

சரணம்

நல்லப்ரபுக்களெல்லாம்—நாட்டைவிட்டே அகன்றார்
ஞானசூந்யரெல்லாம்—நமக்கதிபதியென்றார்
சொல்லாமற்கோளரும்—புலையரும்வந்தடுத்தார்
பூவிற்றகடையிலே—புல்லுவிற்கத்தொடுத்தார்' (இ)

வீர:—விதூஷகா, உனக்கு யாகங்கள் செய்யத் தெரியுமா?

விதூ:—ரொம்ப ஸுலபம். ஆயிரம்வகை வளருகிற மரங்களை வெட்டி நாசம்பண்ண வேண்டியது. ஆடுகளைப்பிடித்து இரக்கமில்லாமல் கொல்லவேண்டியது. ரக்தவெள்ளமாக்கவேண்டியது. நடுவிலே நடுவிலே, 'ஓச்ராபா வௌஷட்' என்று பலக்கக் கத்த வேண்டியது. பலக்கக் கத்தவேண்டியதுதான் அதிலே பாயிண்டு. ஆச்சா. இன்னொரு ஆளை நிறுத்திவைத்து 'அஸ்து ச்ரௌஷட்' என்று சொல்லச்செய்ய வேண்டியது. இடையில் ஏதாவது முணுமுணுத்து, நல்லநெய்யை அந்யாயமாய் நெருப்பில் ஊற்ற வேண்டியது வபையை எடுத்து முள்ளிலேமாட்டி, நெய்யை ஊற்றிப் பொரிச்செடுத்துக் கொள்ளவேண்டியது. மற்ற மாம்ஸங்களை வேகவைத்தெடுத்து, நெய்யில் பொரித்து எல்லாரும் கபளீகாரம் செய்ய வேண்டியது. வேறென்ன! என்னுடைய பாட்டனாருக்குப் பாட்டனார் வாஜபேயயாகம் பண்ணினார். என் பாட்டனாருக்குத் தகப்பனார் அச்வமேதயாகம் பண்ணினார். என் பாட்டனார் கஜமேதம் பண்ணினார். என் தகப்பனார் ஸோமயாகம் பௌண்டரீகயாகம் இரண்டுபண்ணினார். நான் ராஜஸேவை யாகம், தந்த ப்ரகடனயாகம், யதா கதஞ்சித் உதர பரணயாகம் இவைகளெல்லாம் செய்துகொண்டு வருகிறேன். எனக்கு யாகம்செய்யத் தெரியுமா வென்று கேட்கிறீர்கள். அதுதான் அருமை தெரியாதவர்களிடம் ஸேவகம் செய்வதிலுள்ள கஷ்டம். எனக்கு ரொம்பகோபம் ஸ்வாமி நீங்களிப்படிக் கேட்டதில்.

வீர:—பூர்வஜன்மத்தில் பல பாபங்களைச் செய்திருப்பதாக என் புத்தியில்தோன்றி அதன் பரிஹாரத்திற்காக நான் செய்துவைக்காத யாகம்கிடையாது. நீ என்னென்னவோ புதிதுபுதிதாய்ச் சொல்லுகிறாயே.

விதூ:—அதுதான் ஸ்வாமி! நீங்கள் பண்ணிவைத்தயாகங்களெல்லாம் எனக்குத் தெரியாதா? பார்த்துக்கொண்டு தானிருக்கிறேன். புதிது புதிதாய் யாகங்கள் உண்டு என்று சொல்லியிருப்பேன். ஆனால் சாஸ்த்ரம், 'நாப்ருஷ்ட: கஸ்யசித் ப்ரூயாத்' கேட்காதவனுக்கு ஒன்றும் சொல்லக்கூடாதாம் ஸ்வாமி. அதி

னுல் பேசாமலிருந்தேன். என்னை மன்னிக்கவேண்டும்.

வீர:—அதென்ன யாகம்? நீளமாய் ஏதோ ஒரு பெயர் சொன்னுயே? (கம்.

விதூ:—அதுவா? யதா கதஞ்சித உதரபரணயாகம். இன்னம் முடியவில்லை ஸ்வாமி என் கையில் காசா, பணமா, ஆளா, தேளா, வீட்டுக்கு ஸாப்பாட்டிற்குக் கூடநெய்கிடையாது. ப்ரபு ராஜாதிராஜன். ஏதாவது த்யாகம் கொடுத்து ஒத்தாசை செய்யவேண்டும்.

வீர:—அதென்ன யாகம்? எப்படிச் செய்கிறது? தெரிந்தாலல்லவோ பிறகு த்யாகம் கொடுக்கலாம்.

விதூ:—யதாகதஞ்சித எப்படியாவது அதாவது பொய்ச்சாட்சி சொல்லியோ கோழ்ச் சொல்லியோ, பிறர்குடியைக் கெடுத்தோ உதரபரணயாகம்—

(வயிற்றில் அடித்துக் கொள்ளுகிறுன்.)

வீர:—பலே! அப்புறம்.

விதூ:—இப்படி யெல்லாம் செய்து ஸம்பாதிக்க முடியாதபொழுது தந்தப்ரகடனயாகம்—ஐயா! என்று பல்லைக்காட்டிப் பரக்கவிழிக்கிறது.

வீர:—அப்புறம் என்ன? ராஜஸூயயாகமா?

விதூ:—என்னைப்போலப் பிச்சைக்காரனு ராஜஸூயயாகம் செய்கிறது? ராஜ ஸேவை—ப்ரபு, அதோ வந்துவிட்டார் நீலகண்டசாஸ்திரி.

வீர:—(திடுக்கிட்டெழுந்து) அடே! ஸேவகா! நீ இங்கு நின்று எப்பொழுதும்போல் ஒன்றும் உளராதே. அவர் மகான். (நீலகண்டசாஸ்திரியும் ஒருஸேவகனும் ப்ரவேசிக்கிறுர்கள்.)

ஸேவ:—(நமஸ்கரித்து) ப்ரபு, இந்த மஹானை இதோ அழைத்து வந்தேன்.

வீர:—(எழுந்திருந்து) ப்ரபோ, நமஸ்கரிக்கிறேன். (வணங்குகிறுன்) ஸ்வாகதமா?

நீல—மங்களானி பவந்து. க்ரஹபீடாநிரஸநமஸ்து.

வீர:—(ஸ்வகதம்) "ஸாமான்யர்களுடைய வார்த்தைகள் அர்த்தத்தை அனுசரிக்கின்றன. மகான்களுடைய வார்த்தைகளை அர்த்தம் அனுசரிக்கிறது" என்கிறுர்களே: அவ்விதம் இவருடைய ஆசீர்வசநமே என் நற்காலத்திற்காரம்பமாயிருக்குமோ? (ப்ரகாசம்) ஸ்வாமி! நான் தங்களை வரவழைத்த காரியத்தை சுருக்கமாய்ச்சொல்லி விடுகிறேன். நான் ஒரு ஸமயம் சத்ருக்களால் அவமானமடைந்ததை ஸஹிக்கமாட்டாமல், எனக்கு இந்த அவமானம் விலகுமானுல், சநீசுவரனுக்கு எனக்கு முதலிற்பிறக்கும் குழந்தையைப் பலிகொடுப்பதாக அத்தெய்வத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டேன். இப்பொழுது என் பத்னி பூர்ணகர்ப்பமாயிருப்பதால், இவ்விதம் நான் செய்த முட்டாள்தனமே, என்மனதில் ஸதாகாலமும் நின்று என்னைத் துன்புறுத்துகிறது. தங்களுடைய அறுத்தமமான புத்தியூகத்தால் இதற்கு ஒரு பரிஹாரம் தேடிக் கொடுக்கவேண்டியதற்காகவே ஸந்நிதானத்தை இவ்விடத்திற்கு எழுந்தருளச் செய்தது.

நீல:—ராஜந், ஸரி நீர் சொல்லுவதை நான் நம்புகிறேன். ஆயினும் இவ்விதம் உடன்படிக்கைகள் மனிதருடன் செய்துகொண்டு அவர்களை அது ஆதாரமாகப் பீடிக்கிறதென்பது சநீசுவரன் விஷயமாய் இதுவரை நான் வாசித்ததுமில்லை, கேட்டதுமில்லை. ஆனுல் தைத்திரீய உபநிஷத்தில் இவ்விதம் அரிச்சந்த்ரன் என்று ஓர் அரசன் தனக்குக் குழந்தைகள் பிறக்கும்பட்சத்தில், அவைகளுள் முதற்குழந்தையை பலிகொடுப்பதாக யமனுக்கு ப்ரார்த்தனை செய்து கொண்டதாகவும், அப்படியே குழந்தைகள் பிறந்தபின்பேரில் யமதர்மன், அவ்வரசனைத் துயர்ந்ததாகவும், அரசன் பல சாக்குப்போக்குகளைச் சொல்லி யமதர்மனை ஏமாற்றி வந்ததாகவும் ஒரு கதையிருக்கிறது. சநி இப்படிப்பட்ட காரியங்களில் ப்ரவர்த்திப்பதாக ஓரிடத்திலும் ஆதாரம் காணுமே. ஒரு ஸ்வப்நம் கண்டு, அதை நிஜமாகத் தாங்கள் பாவித்திருக்கக் கூடாதா?

வீர:—அப்படியில்லையே, அப்படியிருக்குமானுல்! (பெருமூச்செறிகிறுன்.) ஏது! அந்த பாக்கியம் எனக்கா! ப்ரபு இதோ பாருங்கள் (தன்னுடைய கை மணிக்கட்டை காண்பிக்கிறுன்) இதோ கருப்பாகத் தெரிகிற அடையாளம் சநீசுவரன் என் கையைபிடித்தவிடம். பிடித்தவுடன் ஆயிரம் ஊசிகொண்டு சுற்றும் குத்துவதுபோல் எனக்குத் தோன்றிற்று. இரண்டு மணிநேரம் அவன், பிடித்தபிடியை விடவேயில்லை. நான்பட்ட ஹிம்ஸையும் கணக்கு வழக்கில்லை. அது முதல் இது ஸ்வப்நமல்ல என்பதற்கு இது ஒரு அழியாத அடையாளமாக இருந்து வருகிறது.

நீல:—(த்யானத்தை யபிநயித்து) அப்பொழுது ஸரி இருக்கலாம். க்ரஹங்களின் கதியை முற்றிலும் யாரறிவார்? ஆனுல்—அதற்குப் பரிஹாரம்—எங்குமிருப்பதாகக் காணுமே—இந்தமாதிரி விஷயமே எங்கும் சொல்லப்படவில்லையே.

வீர:—ப்ரபு நீங்களும் அப்படிச் சொல்லிவிட்டால் அப்புறம் என்கதி என்னவாகிறது? தற்கொலை—

நீல:—ராஜந்! சாந்தம் பாபம் அதைமறுபடி சொல்லாதேயுங்கள். க்ரஹகதிகள் இப்பொழுது வக்ரமாய்த் தோன்றினுலும் சீக்கிரத்தில் மாறும். எங்கே உங்கள் ஜாதகத்தைத் தருவியுங்கள்.

வீர:—யாரடா ஸேவகா, நம்முடைய புரோஹிதரிடமிருந்து என்னுடைய ஜாதகத்தை வாங்கிக்கொண்டு வா. சீக்கிரம். அவரிங்கு வரவேண்டாம். தெரியுமா? —ஆனுல்—ப்ரபு—இவ்விதம் நீங்கள் கதைகளில்கூட கேள்விப்பட்டதில்லையா?

நீல:—இல்லையே. அஷ்டாதச புராணங்கள், நூற்றெட்டு ஸ்ம்ருதிகள், உபநிஷத்துக்கள், வேதங்கள், இவைகளில் எல்லாம் பார்த்திருக்கிறேன். இதுகிடையாது.

வீர:—ஐயோ நான்தானு இப்படி உலகிலில்லாத பாவம்பண்ணினேன்? ப்ரபு இப்படி மஹோவ்யாதியால் சித்ரவதை செய்யப்படவா நான் ஜந்மமெடுத்தேன்.

நீல:—துக்கப்படுவதில், ப்ரபு ப்ரயோஜனமில்லை.



அவரவர்கள் பூர்வஜந்மத்தில் செய்த புண்ணியபாபங்களின் பலனை யவரவர்களே தானே யனுபவிக்க வேண்டும். கர்மகதியை விலக்கிற்பார் யார்—இதோ வந்து விட்டது ஜாதகம். (அரசன் வாங்கி சாஸ்திரிகளிடம் நீட்டுகிறுன். அவர் கவனித்து த்யானத்தில் அழுந்தியதுபோல் அபிநயித்து) ராஜந்! தங்களுடைய ஜாதகரீதியாக தங்களுக்குப் பிறக்கும் முதற் பெண் குழந்தைக்கு எவ்விதத்திலும் குறைவேற்படக் காரணமில்லை. இரண்டாவது, தாங்கள் சொல்லுகிறபடி சநீசுவரனுக்கு தாங்கள் வசமாவதற்கு வேண்டிய க்ரஹஸம்யோகங்கள் ஒன்றையும் நூதனமாகக் காணுமே.

வீர:—ஸ்வாமி நான் சநீசுவரனுடன் உடன்படிக்கை செய்துகொண்டது மட்டும், இந்த ஸூர்யன் கிழக்கில் உதிக்கிறுனென்பது எவ்வளவு நிச்சயமோ, எவ்வளவு ஸத்யமோ, அவ்வளவு நிச்சயம், அவ்வளவு ஸத்தியம். நீங்கள் எதாவது பரிஹாரம் செய்யத்தான் வேண்டும்.

நீல:—நீங்கள் அவ்வளவு உறுதியாகச் சொல்வதால் உங்களுடைய வார்த்தையை நம்பத்தான் வேண்டியிருக்கிறது. ஆதலால் சாஸ்த்ரமில்லாத காரியத்தில் யுக்தியைக்கொண்டு செய்துபார்ப்போம். க்ரகராஜனுன ஸூர்யனை உத்தேசித்தும், அந்த சநீச்வரனையே உத்தேசித்தும் ஜபங்கள் நடத்துவோம். நள சரித்ரத்தைப் பாராயணம் செய்யச்சொல்லிக் கேளுங்கள். இதை விலக்கிவிடலாமென்று தோன்றுகிறது. தங்களுடைய குழந்தைக்குமட்டும் ஒரு குறைவுபாடும் ஏற்படாது. ஆகையால் கவலையை விட்டுவிடலாம். ஏதாவதொரு வ்யாஜத்தைக்கொண்டு இது விலகி விடும். எனக்கு மட்டும் தேவக்ருதமாகவாவது க்ருஹக்ருதமாகவாவது தங்களுக்கு இந்த ஆபத்து நேரவில்லை, இதற்கெல்லாம் யாரோ மனிதனே காரணமென்று தோன்றுகிறது. நீங்கள் சொல்லுகிற கதையையும் நான் சொல்லும் சங்கதியையும் எப்படி ஸமரஸப் படுத்துகிறதென்று எனக்கே தோன்றவில்லை.

வீர:—எனக்கு நிச்சயந்தான். இது சநியின் பீடைதான். எனக்கு ஸந்தேஹமே கிடையாது.

நீல:—(ஸ்வகதம்) ஜாதகரீதியாய் ஸமீப காலத்தில் பெரிய அபவாதங்களும் இராஜ்ய ப்ரம்சமும்கூட இவருக்கேற்படும் போலிருக்கிறதே! ஆகினும் அதை இவரிடம் சொல்லலாகாது. இவருக்கு ஜாதகரீதியாய் சநிபீடை யிருப்பது வாஸ்தவமே. ஆனுல் சனி நேராடி வந்தான் என்பதைத்தான் நம்பக்கூடவில்லை. (ப்ரகாசம்) ப்ரபோ தங்களுக்கு வந்த ஆபத்தை நான் விலக்கி வைக்கிறேன் தங்களுடைய அரண்மனையிலேயே எனக்கொரு இடம் மட்டும் கொடுக்கவேண்டும்.

வீர:—அரண்மனை முழுவதும் தங்களுடையது தான். எந்த விடம் வேண்டுமோ அந்த இடத்தை நீங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். யாரடா ஸேவகன், இவரை யழைத்துச் சென்று இவர் காண்பிக்கும் அறையை இவருக்கு விட்டுக்கொடுப்பதுமன்றி அவ்வறை இன்னதென்றும் எனக்குத் தெரிவிப்பாய்.

நீல:—ராஜந், பயப்படவேண்டாம். ஜபதப ஹோமாதிகளில் ஏதேனுமொன்றை, யல்லது பலவற்றைக் கொண்டு இந்த சநீச்வரன் பாதையை முற்றிலும் உமக்கு நிவர்த்தித்துத் தருகிறேன். பயப்படாதேயுங்கள். (அப்பொழுது 'நீங்களா'வென்று குரலும், இடி இடியென்று இடிவுதோன்றிய வோர் சிரிப்பும், நேபத்யத்தில் கேட்கிறது.)

வீர:—ஸ்வாமி, இது தான் ஐயா அந்த சநீசுவரன் குரல்! தங்களையுமன்றோ அவன் திக்கரிக்கிறுன் போலிருக்கிறது. ஐயா நான் என்ன செய்வேன்,

நீல:—பயப்படாதேயுங்கள். இப்படி வீராவேசம் பேசுவது துர்த்தேவதைகள் முதலியனவற்றிற்கு ஸகஜமே. தங்களுடைய ஜபம் நடக்கவொட்டாமற் செய்து போடுவான் என்று யாரை உத்தேசித்து அவைகள் நினைக்கின்றனவோ, அவர்களைக் கூடிய மட்டில் பயமுறுத்திப் பார்க்கிறது அவைகளின் வழக்கந்தான்.

வீர:—எல்லாவற்றிற்கும் கடவுளிருக்கிறுர். நேரமாகிறது, நீங்கள் போய் வாருங்கள்.

நீல:—மங்களானி பவந்து.

[நிஷ்க்ரமிக்கிறுர். வீரமர்த்தனர் கவலையுடன் ஆஸநத்தில் உட்கார்ந்திருக்கிறுர்.]

ஸே:—நீலகண்ட சாஸ்த்ரிகள் பூஜாக்ருஹத்தையே யேற்றுக்கொண்டார். (அரசன் தலையாட்டுகிறுன். ஸேவகன் நிஷ்க்ரமிக்கிறுன். அம்பாலிகை ப்ரவேசிக்கிறுள்.)

அம்:—ப்ரபோ, நீலகண்டசாஸ்திரிகளுடன் பேசிக்கொண்டிருந்தீர்களே; என்ன விசேஷம்? என்ன சொன்னுர்?

வீர:—ஏதோ தன்னுல் இது ஸாத்யமாகுமென்றும் பீடையை விலக்குவதாகவும் சொல்லிப் போயிருக்கிறுர். முதலில் சாஸ்த்ரங்களில் இதற்கு வழியொன்றையுமே காணுமென்றே சொல்லிவிட்டார்.

அம்.—நாதா! நீங்கள் பயப்படவேவேண்டாம். அவர் ஒரு வழியைக் கண்டுபிடித்து அதனுல் பீடையை நிச்சயம் நிவர்த்தி செய்யலாமென்று கண்டாலொழிய அப்படி நிச்சயமாய்ப் பேசமாட்டார்.

வீர.—அப்படி யிருக்கவேண்டுமென்றுதானே என் ப்ரார்த்தனை.

[அந்தஹால் வாசலில் சநீச்வரன் ப்ரவேசிக்கிறுன்.]

சநீ:—(சிரித்து) ஹா! ஹா! ஹா! ஹா! வீரமர்த்தனு! என்ன நன்றியறிவடா உனக்கு! என்ன ஸத்தியவாக்கு! என்ன உறுதி! மந்த்ரங்கள், ஜபதபஹோமாதிகளால் என்னை வசப்படுத்தி என்னிடமொப்புவிப்பதாக நீ வாக்குக்கொடுத்த பலியை எனக்கில்லாமல் செய்து போடப்போகிறுயோ? நீலகண்ட சாஸ்த்ரிகள் தைர்யமாடா உனக்கு! விளங்கவைக்கிறேன். அடேடேடே முட்டாள்! மந்த்ர ஜபதப ஹோமாதிகளால் வசமாகும் தெய்வம் அல்லது க்ரஹமாயிருந்தாலல்லவோ! (சிரிக்கிறுன்.) இந்த சநீச்

வானுடைய ரகஸ்யத்தை நீயா கண்டுபிடிப்பவன்? இந்த நீலகண்டசாஸ்திரி இன்னம் ஒருநாழிகைக்குள் ரக்த கண்ட சாஸ்திரியான பிறகு உனக்கு சநீச்வரன் ஸாமார்த்யம் விளங்கும்.

(வேகமாய் உள்ளே ப்ரவேசிக்கிறான்)

(வீரமர்த்தனனும் அம்பாலிகையும் எழுந்து நின்று நடுங்குகிறார்கள்.)

அடே! மானிடப்பதரே! அல்பபுத்தி மசகமே! என்னென்ன யோசனைசெய்கிறாய்! அடேடே! மனிதனுக்கு என்னபுத்தி! என்ன ஆஸ்தை! அப்பொழுது சோனால் முறியடிக்கப்பட்டு விழிக்கும்போது அல்லவோ இந்த யோசனைசெய்திருக்கவேண்டும்! இன்னம் இந்த சநீச்வரனுடைய ஸாமர்த்யம் முழுவதையும் நீ யறியவில்லையடா! க்ஷுத்ர புத்திப் பதரே! இன்னும் பரீக்ஷை காண்பிக்கிறேன்! இன்னும் அரை நாழிகைக்குள் என் ஸாமர்த்யத்தைக் காண்பிக்கிறேன். உங்களுடைய க்ஷுத்ரபுத்தியைக்கொண்டு என்னையா ஏமாற்றப் பார்த்தீர்கள்! சொல்லுகிறேன் வழி அந்த நீலகண்டசாஸ்திரிக்கு. (வீரமர்த்தனன் மூர்ச்சிக்கிறான். அம்பாலிகை அவனைத் தாங்குகிறாள். பிறகு அவளும் மூர்ச்சிக்கிறாள். சநி நிஷ்க்ரமிக்கிறான்.) [சற்றுநேரம் கழித்து இருவரும் தாமாக மூர்ச்சை தெளிந்தெழுந்திருக்கிறார்கள். மிரள விழிக்கிறார்கள்.]

அம்:—(தைர்யத்தை யவலம்பித்து) நாதா அந்த சநீச்வரன் மறைந்தது. நாதா! நாம்என்னசெய்வோம். எங்கு போவோம். என்ன இரக்கமற்றுப் பேசுகிறது அந்த சநி!

வீர:—அம்பாலிகே! காலைச்சுற்றிய பாம்பு கடிக்காமற் போகாது. என் மனதிருக்கிற ஸ்திதிக்கு நமக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையைப் பார்ப்பதற்குக் கூட உயிருடனிருக்கமாட்டே னென்று தோற்றுகிறது. ஐயோ தெய்வமே! ஒஹோ காலமே! பாழுந் தெய்வங்களா! (அழுகிறான்.)

அம்:—(கண்ணைத் துடைத்துக்கொண்டு) நாதா! துக்கத்திற்கிடம் கொடுக்காதேயுங்கள். ஆனாலின்னொரு விஷயம் கவனியுங்கள். இந்த சநீச்வரன் நீலகண்ட சாஸ்த்ரி நம்முடனிருக்கும் வரையில் இவ்வறைக்குள் வரவில்லை.

வீர:—(ஆவலுடன்) ஆம் நீலகண்டரும் அப்படிதான்சொன்னார். அவைகளுக்கே தெரியுமாம்! இன்னாரிடம் நம் ஸாமர்த்யம் காட்டலாம், இன்னாரிடம் காட்டக்கூடாதென்று. அவரே சொன்னார்.

அம்:—சொன்னாரா? அந்த சநீச்வரன் அவரிருக்கும்வரை இங்கு வாராமலிருந்தது சாஸ்திரிகளிடம் அந்த க்ரஹத்திற்கிருக்கும் பயத்தை வெளியாக்குகிறதன்றோ? ஆகையால் எல்லாம் சுபமாகவே முடியும். நீங்களும் இங்கு நடந்ததையும் அவரிடம் சொல்லிவிடவேண்டும்.

வீர:—இப்பொழுதே அவர் அறைதேடிச் செல்கிறேன். இல்லை. நான் போவது நன்றாயிருக்குமா? ஒருவருக்கும் தெரியாமல் ராத்ரி 12-மணிக்குப்போகிறேன். நீ அந்தப்புரத்திற்குப் போகலாம்.

## அங்கம் 1

### களம் 4

இடம்:—அரண்மனை வாயில். காலம்:—ஸாயங்காலம்.

ரணகேஸரியும், இரண்டு காவற்காரர்களும் ப்ரவேசிக்கிறார்கள்.

ரண:—ஏண்டா. நம்முடைய அரண்மனையை விட்டு இப்போது வெகு வேகமாய்ப் போனவர் யாரென்று கவனித்தீர்களா?

முதல்வன்:—இல்லையே ஸ்வாமி. கருத்த கம்பளியால் மூடி முக்காடிட்டுக்கொண்டிருந்தார். அவர்முகம் வெளியில் தெரியவே யில்லை.

இரண்டாவதவன்:—ஆம் ஸ்வாமி, நான்தான் ஹஜாரவாசலிலிருந்தேன். அந்தக் கம்பளிப்பேர்வழி வந்தார். ராஜாவுடன் தனக்கேதோ அவஸர கார்யமிருப்பதாகச்சொன்னார். ஸரிதான் என்று போகவிட்டேன்.

ரண:—பலே! நன்றாக இருக்கிறதே. ராஜாவினிடத்தில் கார்யம் இருக்கிறதென்று யார்சொன்னாலும் உள்ளே விட்டுவிடுகிறதோ?

இரண்:—இல்லை ஸ்வாமி. இதற்கு முன்னால் ஒரு தடவை ராஜாவும் அவரும் 4 மாதங்களுக்குமுன் பேசிக்கொண்டிருந்ததை நான் கண்டிருக்கிறேன். அப்பொழுது ராஜா அவருடன் வெகு பயபக்தியாய் பேசினதை நான் கவனித்தேன். யாராவது யோகீச்வரராயிருக்குமென் றெண்ணி, அபராதம் வருமென்று பயந்து உள்ளே விட்டேன்.

ரண:—இருக்கலாம். நீ பொய் சொல்லக்கூடியவனல்ல. (ஸ்வகதம்) அவன் விழியும் முகத்தின்கடுகடுப்பும், கோபமும், யோகியின் சாந்த ஸ்வபாவத்தைக் காட்டவில்லையே! அயோக்கியர்களுள் அக்ரதாம்பூலம் பெற யோக்யனுகவன்றோ தோன்றுகிறது. அவன் யோக்யனானல், என்னைக் கண்டவுடன் சற்று விலகின போர்வையை யிழுத்து, அவன் முகத்தை மூடிக்கொள்வானேன். இருக்கட்டும். வந்த அவனை நீ ஏனடா இன்னானென்று தெரிந்துகொள்ளாமல் அப்புறம் போகவிட்டாய்? அரண்மனைக்குள் கண்ட நாய்களெல்லாம் ப்ரவேசிக்க விடலாமோ?

முதற்:—முதலில், எத்தனையோ காவல்களையெல்லாம் கடந்து வந்திருக்கிறான். இரண்டாவது, ராஜனுடைய அறையிலிருந்து நேராடி அவன் வெளிவருவதை நான் பார்த்தேன். மூன்றாவது, அரசன் இன்று ஏதோ பலமான யோசனையில அமர்ந்திருக்கிறார். அறைக்குள் ஒருவரும் உத்திரவன்னியில் வரக்கூடாதென்று கண்டிப்பாய் உத்திரவிட்டிருக்கிறார். நான்காவது, சற்றுநேரத்திற்கு முன்புதான் யாரோவொரு சாஸ்திரியார் வெளியே வந்தார். இவ்வளவிலே நான் குறுக்கிட்டு ராஜ ரஹஸ்யங்கள் வெளிப்பட்டால் என் கதி என்னவாகிறது. நடந்ததெல்லாம் நான் கவனிக்காமலிருந்தால் நீங்கள் சொல்லுங்கள். நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரண:—நீங்கள் சொல்வதெல்லாம் ந்யாயமே. இருக்கட்டும். அந்தப் பேர்வழி மறுபடி வருவானானல், எனக்குத் தகவல் உடனே கொடுத்துவிடுவதுமன்றி நீங்களும் அவனுடைய கார்யங்களை வெகு கவனத்துடன் பார்த்துவரவேண்டும். அரண்மனைக் காவலிற்கு இன்று முதல் பரீக்ஷித்தறிந்த யோக்யர்களையே நியமிக்கிறேன். உங்களிலொருவன் ஓடிப்போய் அந்தப் பேர்வழி எந்தவழியாக எந்தப்பாதையைப்பின்பற்றிச் சென்றானென்று பாருங்கள். மற்றவன்போகலாம். (ஸ்வகதம்) இதென்னபுதிதாயிருக்கிறது! அரசன் என்னிடம்சொல்லாமல் ஒரு கார்யமும் இந்தமூன்று வருஷங்களாகச் செய்வதில்லையே! இப்பொழுதென்ன ரஹஸ்யம்வந்தது? இந்த சாஸ்திரிகள், வேடம் பூண்ட ஓர் ஆஷாட பூதியாயிருப்பானோ? இதார்! இந்தக் கம்பளதாரி? ராஜன் இப்பொழுதென்ன யோசனை செய்யவேண்டியதிருக்கிறது? மறுபடி அரசனுக்கு துஷ்டஸாஹஸங்கள் ஏற்படுகின்றனவோ? ராணியாரும் உடனே உள்ளே சென்றார்களே. இதென்னமோ ஆச்சர்யமாயிருக்கிறது. இதைக் கவனித்து ராஜனுக்கு ஹிதமார்க்கத்திற்குமறைவிலிருந்தாவது ஏற்பாடு செய்யவேண்டும். ஏதோ மோசக்கருத்திற்குத்தான் இது ஆரம்பமாகிறது.

இர:—ஸ்வாமி. கோட்டைக்காவலில் போய் விசாரித்ததில், வந்த பேர்வழி வெகு வேகமாய்க் குதிரையின்மேல் தாவி, நாலுகால் பாய்ச்சலில் ஸவாரிவிட்டான். நம்முடைய குதிரைப் படைவீரர்களில் ஒருவனை தங்கள் பெயரால் ஏவிப் பின்தொடர்ந்து சென்று, அவன் போகும் இடத்தைக் கவனித்துவரச் சொன்னேன்.

ரண:—பேஷ். நல்ல காரியம் செய்தாய். நல்ல யோசனை. நீங்கள் எல்லோரும் காவலில் ஜாக்ரதையாயிருங்கள். (இருவரும் நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம் 2

### களம் 1

இடம்:—பூஜாக்ருஹவாயில்

பிரவேசம்:—வீரமர்த்தனன் தனிமையில்.

வீர:—இப்பொழுதும் சநீச்வரன் வந்து நம்மை பயமுறுத்தினதை நீலகண்டசாஸ்திரிகளிடம் சொல்லுகிறதா? சொல்லுகிறதில்லையா? இதுதான் ஸந்தேஹம். சொல்லுவோமானல், தன்னைப்பற்றியும் அந்தச் சநி இழிவாகவும் கோபமாகவும் பேசியிருப்பதைநினைத்து ஒருவேளை சொல்லிக்கொள்ளாமலே ஓடிப்போவாரானல், அப்பொழுது, நான் கொழுகொம்பற்ற கொடியாய்த் தவிப்பேனல்லவா? அவருடைய மதுரமொழியும், இனிய பார்வையும், சாந்த ஸ்வபாவமும் முதலில் நான் அவரைக் கண்டபொழுதே அவர் பால் என்னை வசப்படுத்தினவே! அவருடையமுகத்தில் விளங்கிய தேஜஸ் எனக்கு எவ்வளவோ ஆறுதலாகவிருந்ததே. முடிவுஎப்படியாயினும் தத்காலத்திற்காவது என்னுடைய துக்கத்தின் கொடுமையை ஒருவாறு தணிக்கிறது. இந்த தைர்யஹேதுவும் எனக்குத் தவறுமானல் அப்புறம் நானென்ன செய்வேன். அன்றி, சொல்லாமல் நிறுத்திவிடுவோமானல் நமக்கு ஆறுதல் சொல்லி, நம்மை ஆபத்தி னின்றும் காப்பாற்றுவதாக தைரியம் கொடுத்த மகாநுபாவனை சநி வஞ்சனையாய், எதிர் பாராதவண்ணம் கொன்று போட்டால் அப்புறம் என்ன செய்கிறது? சொல்லுவோமானல், ஒருவேளை அவர் முன் ஜாக்ரதையாகி, சநீச்வரன் தன்னை யணுகாவண்ணம் ஏற்பாடு செய்வார். ஆதலால் அவரிடம் சொல்லிவிடுவதேதான் ஸரி. அன்றியும் அவ்வளவு வித்வானாகவும், விஷயஞானியாகவும் இருக்கிற அவர் இதெல்லாம் பயந்துவிட்டால் என்னதான் செய்கிறது? பயப்படமாட்டாரென் றெண்ணுகிறேன். அன்றைக்கு சநீச்வரன் இழிவாய்ப் பேசியதால் அவர் காதில்விழுந்தும் அவர் கொஞ்சங்கூட பரபரப்படைய வில்லையே ஆகையால் அவரிடஞ் சொல்லித்தான் இதற்கு பரிஹாரம் தேடவேண்டும். (சற்று முன்நடந்து) ஸ்வாமிகளே! ஸ்வாமிகளே!—சாஸ்திரிகளே!—நீலகண்டசாஸ்திரிகளே!—என்ன! ஒரு பதிலையுங் காணுமே.—நடுநிசியாகையால் ஒருவேளை அயர்ந்து தூங்குகிறாற்போலதோன்றுகிறது. (கதவில் கைவைக்கிறார். கதவு திறக்கிறது) இதென்ன கதவைக்கூடச்சாற்றித் தாளிட்டுக்கொள்ளவில்லையே! உள்ளேப்ரவேசிப்போம்; (பிரவேசித்து) ஆ! பாபம்! ஹா-ஹா-ஹா-என்ன! என்ன பாபம்! ஐயோ என்னை பாலிக்கவந்த தெய்வம்போல் வந்த மகாநுபாவா! உம்முடைய கதி இப்படியோ ஆயிற்று! ஐயோ! சற்று முன்னர் சநீச்வானுடைய வசத்தினின்றும் என்னைத் தப்புவிப்பதாய்ச் சொன்ன உங்களை சநீச்வரன் என்ன ஹிம்ஸைசெய்துவிட்டான் (மேற்போர்வையைத் தூக்கி) ஆஹா! எத்தனை இடங்களில் குத்துகள்! ஆஹா! என்ன கோபத்துடன் குத்துகள் விழுந்திருக்கின்றன! எவ்வளவு ஆழம் பதிந்திருக்கின்றன! ஐயோ! இவ்வளவையும் எப்படி ஸஹித்திருந்தீர்களோ! இதற்கா நானுங்களைத் தருவித்தேன்? நான் செய்தபாபங்கள் போதாதென்று ஒரு ப்ரஹ்மஹத்திக்குக் காரணமாகவுமா ஆனேன்! ஈசா! நானனுபவித்ததெல்லாம் போதாதோ! இன்னம் என்னென்ன இந்த தௌர்ப்பாக்யனுக்குப் பாக்கிவைத்திருக்கிறாய்? ஐயோ! சாந்த ஸ்வரூபி! அஜாத சத்துரு! உங்களை அந்தச் சநீச்வரனையன்றிவேறுயார் இவ்வளவு குரூரமாய் வதைசெய்திருக்கக்கூடும்! ஐயோ சநீச்வரா, உன்னுடைய ஹ்ருதயந்தானென்ன! கல்லா? நானுனக்கு வாக்களித்ததற்காக என்னைமட்டும் துக்கஸாகரத்தில்அமிழ்த்தினதில் உனக்குத் திருப்தி யுண்டாகவில்லையா!—நாளைக் காலையில் இந்த மகான் கொலையுண்டதிற் கெப்படி காரணம் சொல்வேன்! சநீச்வரன் கொன்றானென்றால் யார் நம்புவார்கள்! அவரை ரஹஸ்யமாய்த் தருவித்து, இவ்வறையிலிருத்தினது முதலிய கார்யங்களெல்லாம் நானேசெய்ததன்றோ! இக்கொலையையும் நானே செய்தேன் என்று ஜனங்கள் அபிப்ராயப்படுவார்களானல்-அதை நினைக்கஎன் மனம்நடுங்குகிறதே!

என்னிடம் ப்ரஜைகளுக்கு நல்ல அபிப்ராயமேற்பட இப்பொழுதானே ஆரம்பித்தது! அது இன்னம் பலப்படவில்லையே! அதற்குள் இது வெளியானால், ப்ரஜைகள் என்னைத் திக்கரிப்பார்களே! எள்ளுவார்களே! நிந்திப்பார்களே! ஸிம்மாஸனத்தைவிட்டு விரட்டியோட்டுவார்களே! ஐயோ! ஸிம்மாஸனம்போனால் போகிறது. நான் அதற்குத் துக்கப்படவில்லை. கொலைகாரன் என்ற பெயர் வந்துவிடுமானால் அது அழியாவசையன்றோ! அப்புறம் உயிர் வைத்திருக்க வேண்டுமோ! என் கண்மணி! அம்பாலிகா! நீ இதைக் கேள்விப்பட்டால் என்ன நினைப்பாய்! சநீச்வரனிடம் முதற்குழந்தையைப் பலிகொடுப்பதாக கொஞ்சங்கூட முன்பின்பாராமல் வாக்குத்தத்தம்செய்த இரக்கமற்றபாவி, இக்கொலையையும் செய்திருப்பான்! இன்னமும் செய்வான்! என்று எண்ணமாட்டாயோ! ஐயோ விதிபரிபாகமே! வழுக்கைத்தலையன் வெயில் தாபம் பொறுக்கமாட்டாமல், விருக்ஷங்களே யில்லாத ஒரு பாலை வெளியில் ஸஞ்சரிக்கையில், அத்ருஷ்ட வசத்தால் போன்று தோன்றின ஒரு பனைமரத்தடியில் தன் தலையை மறைத்து நிற்க, ஒருபெரிய பனம்பழம் அவன் தலையில் விழுந்தாற்போலவன்றோ இருக்கிறது, என் கதி! பாலைவனத்தில் ப்ரயாணம் செய்துகொண்டிருக்கும்பொழுது, தாகத்தால் வருந்தினவர்கள் தூரத்தில் ஜலத்தைக்கண்டு, அதைநோக்கி, முன்னிலும் இரட்டிப்பு மடங்கு வேகமாய்ச் சென்றடைய, அது ஜலமன்றென்றும் கானல் நீரென்றும் கண்டு ஏங்கின கதையாயிருக்கிறதே என் கதி! ஜகதீசா! என்னிடம் உனக்கு இரக்கமில்லையா! (அப்படியே களைத்து உட்காருகிறான்)—(சற்று சும்மாவிருந்து தைர்யத்தை யவலம்பித்து)—இனி துக்கப்படுவதிலொன்றுங்காரியமில்லை. தைர்யமடையவேண்டியது, இக்கொலைநடந்ததாகவே காண்பிக்கக்கூடாது. இதன் அடையாளங்கள் எல்லாவற்றையும் மறைக்கவேண்டும். ஆகையால் இந்த நீலகண்டசாஸ்திரியின் ப்ரேதத்தை ஒருசாக்கில்கட்டி தலையில் தூக்கிக்கொண்டுபோய் ஸமீபத்திலுள்ள நதியில் எறிந்துவிட்டு வந்துவிடவேண்டும். இதுதான் அபவாதத்தைத்தீர்க்கும்யுக்தி. அப்படியேசெய்கிறேன் (ஒருசாக்கில் நீலகண்ட சாஸ்திரிகளின் ப்ரேதத்தை சுருட்டிக்கொண்டே) ஐயோ! பாபம்! இந்தப்பளுசுமையை நான் எப்படி தூக்கிக்கொண்டு போவேன். ஈசா! என் தலையில் ப்ரேதத்தைத் தூக்கும்படியாகவும் எழுதினையா! (மூட்டையைத் தூக்கிக்கொண்டு நிஷ்க்ரமிக்கிறான்).

## அங்கம் 2

### களம் 2

இடம் :—நதீ தீரம். காலம் .—இராத்திரி 12-மணி.

ப்ரவேசம் :—துர்மதி.

**துர்மதி** :—(யோசனையிலாழ்ந்து) நான் எத்தனை காரணங்களை யெடுத்துக்காட்டி, பிறர்பேரில் பழிசுமத்தி, என்ன ஸாமர்த்யங்கள் செய்தும், வீரமர்த்தனன் என் நிஜஸ்வரூபத்தை யறிந்து என்னை ராஜ்யத்தினின்றும் பஹிஷ்காரம்செய்துவிட்டான். இருந்தாலும் மறுபடியும் இந்த ராஜ்யத்திலேயே ப்ரதானமந்த்ரி உத்யோகம் வாங்காமல் விடுவேனானால் நான் துர்மதியா? என்ன! என் கார்யம் முடிவடையாது போலிருக்கிறதே! இவ்வளவு சீக்ரகாலத்திற்குள் ப்ரஜைகள் தன்னை எவ்வளவு தூரம் நேசிக்கும்படி செய்துவிட்டான். நமக்குவிரோதியானாலும், குணத்தை யுள்ளபடி சொல்லவேண்டியதுதானே. இருந்தாலும், புத்திசாலி என்பதில் ஸந்தேஹமில்லை. அவன் முகத்தில் ஒரு வசீகரசக்தி இருக்கிறது. நான் என்ன ப்ரயத்னம் செய்தும் எத்தனை விதமான மாறுவேஷங்களுடன் ஜனங்களை அரசனுக்கு விரோதமாய்க் கிளம்பும்படி தூண்டியும் ஒன்றும்ப்ரயோஜனப்படவில்லை. ஆனால் பட்டணத்திற்கு இவ்வளவு ஸமீபமாகவுள்ளவிடத்தில் என்னுடைய ஸ்வயஸ்வரூபத்தோடு இருப்பது நடுநிசி என்ற தைர்யத்தால்தான். அடே! அரசனை ஜனங்கள் நேசிக்கட்டும். எல்லாருக்கும் என் பெயர் எவ்வளவு விஷமாயிற்று. என்னைக் கொலைசெய்வதும் பாவமல்லவென்றல்லவோ ஜனங்கள் சொல்லுகிறார்கள். இந்த மாறுவேஷங்கள் இல்லாவிட்டாலும் துர்மதியின் சரித்ரம் முன்னமேயே முடிந்திருக்கும். இந்த ஸ்திதியில் நானாவது மறுபடி ப்ரதான மந்த்ரியாவதாவது—சீ? இதென்ன சோர்வு இப்படி அகாலத்தில் உண்டாகிறது. எடுத்த கார்யத்தின் மத்தியில் சோர்வடைந்து, தவிப்பவர்கள் மூட்டாள்களன்றோ. முயற்சி இடைவிடாது செய்தால், தக்க காலத்தில் பலன் ஏற்படும்.-(தூரத்தில் நிதானித்து) ஓஹோ—இந்த வேளையில் தலையில் ஒரு பெரிய மூட்டையுடன் தூக்கமாட்டாமல் தள்ளாடிக்கொண்டு வருகிற ஒருமனிதரூபமன்றோ காணப்படுகிறது. மறைந்திருந்து கவனிப்போம். (குத்துச்செடிகளின் மறைவில் ஒளிகிறான்.) ஓகோ! நல்ல திவ்ய ரூபலாவண்யமுள்ள புருஷனாகவன்றோ இருக்கிறான்.—நம்மரசன் வீரமர்த்தனன் போலவே இருக்கிறதே! நிஜமாகத்தானா! (கண்களைத் துடைத்துக்கொள்ளுகிறான்) — அடே! — வீரமர்த்தனன் தான். இருக்கட்டும் என்னசெய்கிறான் பார்ப்போம்.

(வீரமர்த்தனன் சுமையுடன் ப்ரவேசித்து நதிக்கு இப்புறத்திலேயே சுமையை தலையிலிருந்தபடி கீழே போட்டு உட்காருகிறான்.)

வீர.—ஐயோ! கழுத்து இறந்து போகிறதே! ஈசா! என்னை என்னென்ன வேடிக்கைகள் செய்கிறாய்! நிர்விசாரமாய் ஆகாசமார்க்கத்தில் இறுமாந்து ஸஞ்சரிக்கும் ஹே சந்த்ரா! நீ ஒரு லோகஸாக்ஷியன்றோ. நீயாவது ஈசனிடம் இவன் ஒருபாபமும் மனதாறச் செய்தவனில்லை யென்றுசொல்லி என் கஷ்டங்களை நிவர்த்திக்க மாட்டாயா?—நல்லவேளையாய் நடுவழியிலொருவரும் என்னை ஸந்திக்கவில்லை. இனியும் தாமதிக்க வொண்ணாது. யாராவது பார்ப்பார்களானால் வந்துவிடுமே ப்ரமாதம்—என்



தலைவிதி—சுமக்கிறேன். (மூட்டையை மறுபடி யெடுக்கக் குனிகிறான். துர்மதி, அரசன் முன் வந்து நிற்கிறான்).

வீர:—அடே துர்மதி—நீ பஹிஷ்காரம் செய்யப்பட்டவனல்லவா? ஓடிப்போய்ப் பிழை. இங்கே நில்லாதே.

**துர்**:—ஸ்வாமி. அடியேன்மீது கோபம் கொள்ளக்கூடாது. எனக்கு ஒரே ஒரு ஸந்தேஹம். இந்த மூட்டையில் என்ன இருக்கிறதென்று பார்க்கவேண்டி எனக்கு நிரம்ப ஆவல்! (மூட்டையைக் காலால் உதைக்கிறான்).

வீர:—மூட்டையில் என்ன இருந்தாலுனக்கென்ன? நீயதைப்பார்க்கிறதற்கு என்ன அதிகாரம்? உன்னைச் சித்ரவதை செய்ய உத்திரவிடுவேன். நல்ல காலத்தை நாடி, விடிவதற்குள் நகரைவிட்டோடிப்போ.

**துர்**:—நான் நகருக்குள்ளேயே இருப்பதற்கன்றோ வந்திருக்கிறேன். ஸ்வாமி, நீங்கள் மூட்டையைக் கீழே போடும்போது கவனித்தேன். இவ்வளவு பெரிய மூட்டைக்குத் தகுந்த சத்தமில்லை. சற்றுநேரத்திற்கு முன் மூட்டையைக் காலால் உதைத்துப் பார்த்தேன். மிருதுவுமில்லாமல் கடினமுமில்லாமல் இருந்தது. இந்த சாக்கிற்குள்ளிருப்பது சவம் என்று அறிந்துகொண்டேன்.

வீர:—அறிந்து கொண்டாயானால்—

**துர்**:—உங்களையும் என்னைப்போல் யாதாயாதமாய் அலையும்படி செய்யப்போகிறேன்.

வீர:—அரசனைப் பார்த்து இன்ன சொல்லுகிறது என்ற வரன்முறைகூடக் கடந்து பேசுகிறாய்போலவிருக்கிறது. இதோ உன்னை வாளால் ஒரு வீச்சாய் வீசுகிறேன் பார். (இடுப்பில் கத்தியைத் தடவி காணாமல் விழிக்கிறான்.)

**துர்**:—ப்ரபு! இந்தச் சவத்தை வைகையில் கொண்டுவந்து ரஹஸ்யமாய்ப் போடவேண்டிய அவஸரத்தில், கத்தியை நீங்கள் எடுத்துக்கொண்டுவரவில்லை; இரண்டாவது, என்னுயிர் எந்த நிமிஷத்திலும் அபாயத்திலிருக்கும்படி நீர் செய்ததால், என்னிடம் இப்பொழுதும் ஆயுதமில்லாமலுமில்லை. (ஒருபிச்சுவாவை அரைக்கச்சையிலிருந்து எடுத்துக் காண்பிக்கிறான்) மூன்றாவது, இந்த மனக்கவலையால் (சவத்தைக்காட்டி) நீங்கள் மனக்லேசமுற்று இருக்கிறீர்கள். நான்காவது, இந்தச் சவத்தைத் தூக்கி வந்த ச்ரமத்தால் களைத்திருக்கிறீர்கள். ஐந்தாவது, நான் ஸாயங்காலம்முதல் ச்ரமபரிஹாரம் செய்துகொண்டு துறுதுறுத்திருக்கிறேன். ஆறாவது ப்ரதான மந்திரி உத்யோகம் எனக்குக் கைக்குவந்தது என்ற நிச்சயத்தால் எனக்கொரு உத்ஸாஹம் ஜநித்திருக்கிறது. நான் உங்களைவ்வளவு பராக்ரமசாலியல்ல வென்றாலும், இந்த ஸமயம் சண்டைக்கு நின்றால் யாருக்கு ஜயம் வருமென்று நினைக்கிறீர்கள்? அன்றியும் நீர் என்னைவெட்டிச் சாய்ப்பதாயினும், கத்தி வீசுமுன் நான் போடுகிற சத்தத்தில் ஸமீபத்திலுள்ள ஜனங்கள் கூடுவார்கள். அப்பொழுது நீங்கள் இரண்டு கொலைகளுக்கு ஜவாப் சொல்லநேரிடும். யோசியுங்கள், ஒன்றும் அவஸரமில்லை. (அரசன்கையைப் பிடித்துக்கொள்ளுகிறான்.)

வீர;—(ஆகாயத்தை நோக்கி) என்ன துரத்ருஷ்டத்திற்குமேல் துரத்ருஷ்டமாய் வந்துகொண்டிருக்கிறது. எண்டா! விச்வாஸத்ரோகி! ஏன் என்னுடைய கையைப் பிடிக்கிறாய்?

**துர்**:—துரத்ருஷ்டமா? அத்ருஷ்டமென்று சொல்லுங்கள் ப்ரபு. இப்பொழுது நிலையற்றிருக்கும் புத்தியில் எங்கு என்னையடித்து விடுகிறீர்களோவென்று பயந்து கையைப்பிடித்தேன்.

வீர:—அத்ருஷ்டமா! என்னடா! அத்ருஷ்டம்.

**துர்**:—என்னை ப்ரதான மந்த்ரியாக்கிவிட்டால், இந்த மாதிரி ஆயிரம் கொலைகளை வெகுஸுலபமாக மறைத்து விடுவேன்.

வீர:—என்னடா! ப்ரதானமந்திரி! நீ அந்த உத்யோகத்திற்கு லாயக்கா?

**துர்**:—நான் லாயக்கோ, லாயக்கில்லையோ. நான் பார்த்த உத்யோகந்தான் அது. என்னைப் பலவிதங்களிலும் வெறுத்து, என்னைக்கொல்லுவதும் பாபமில்லையென்று எண்ணும் ஜனங்களைத் தண்டிப்பதற்காகவாவது இந்த உத்யோகம் எனக்கு வேண்டும்

வீர:—மகாபாவி! உனக்கின்னம் குரூரசித்தம் மாறவில்லையடா! உன்னை மந்திரியாக்கி, என் அருமை ப்ரஜைகளை உன்னிடம் ஒப்புவிப்பது கிளியைவளர்த்து பூனைக்கிரையிட்டாற் போலன்றோவாகிறது!

**துர்**:—அதெப்படி வேண்டுமென்றாலுமாகிறது. எனக்கென்ன முடிவான பதில் சொல்லுகிறீர்கள். வீண் தாமதம் செய்வதிலென்ன விருக்கிறது, ப்ரபு. எனக்கு நேர்ந்த கஷ்டகாலத்தால், முன்னிலும் மூர்க்கனானேன். பாருங்கள் என் கந்தைகளை. ஒரு பைசா கையில் கிடையாது. நான் ஆஹாரம் செய்து இரண்டு நாளாகிறது. அதனால் நான் என்ன கார்யம் செய்தாலும் என்னுடைய ஸ்திதியை இதனினும் இழிவாக்க முடியாது. நான் எதற்குப் பயப்படவேண்டும், ப்ரபு?

வீர:— ஓஹோ அப்படி நியாயமாகப் பேசு. உனக்குச் சிலவிற்குத்தட்டானால் இதோ இந்த பணப்பையை (நீட்டுகிறான்) எடுத்துக்கொள். இதில் ஐந்நூறு ரூபாய் இருக்கிறது. இது செலவழிந்தவுடன் மறுபடி உனக்கு வேண்டியமட்டும் தருகிறேன். ஆனால் இந்த நிமிஷமே இந் நகர்ப்புறத்தை விட்டு நீ விலக வேண்டும்.

**துர்**:— அப்படி நிபந்தனைகள் ஒன்றுக்குமுடன்படமுடியாது. பணத்தில் நான் ஆசை வைக்கவில்லை. வேண்டினேனானால் இந்தப் பணமும் என்னதுதானே!

வீர:— ஹா! என்ன சொன்னாய்?

**துர்**.—வ்யர்த்தமான கோபத்தில் என்ன ஸ்வாமி இருக்கிறது? கேளுங்கள் நான் படாதபாடும் அடைந்தேன். கடைசியாய்த் தங்களுடைய பாதாரவிந்தங்களில் வந்துவிழுந்து என்னுடைய குற்றங்களை யெல்லாம் ஒப்புக்கொண்டு தங்களைக் கெஞ்சிக் கூத்தாடி இங்கேயே எவ்வளவு இழிதாயினும் ஒருவேலை வாங்

கிக் கொள்ளவேண்டு மென்ற உத்தேசத்துடன் தான் நானிப்பட்டணத்திற்கு வந்தது. ஆனால்இப்பொழுது தங்களை இந்த ஸ்திதியில் காணும்படியான பாக்யம் எனக்குக் கிடைத்தது.

*வீர.*—எந்த ஸ்திதியில் காணும்படி பாக்யம்?

**துர்.**—எந்த ஸ்திதியிலா? சொல்லத்தான் வேண்டுமோ? வேலையோ நடிக்கிறீர்! நீங்களோ அரசன்! உங்களையோ இந்நதிக் கரையில் காண்கிறேன்! ஒருசவத்தை மூட்டையாகக் கட்டி நதியில் எறிய ப்ரயத்நப்படுகிறீர்கள். வேறு என்னவேணும். நீங்கள் செய்த கொ—. நான் சொல்லவில்லை.

*வீர.*—மகாபாபி! சண்டாளா! அவ்விதம் என்னைச்சொல்லுவாயா?

**துர்.**—இதிலெல்லாம் நான் பயப்பட மாட்டேன். ஸ்வாமி! நீங்களே செய்த கொலையை மறைப்பதற்கு இச்சவத்தை வைகையில் போட வந்தீர்கள். சற்றுப் பொறுங்கள். நீங்கள் சொல்லவருவதைநான் சொல்லிவிடுகிறேன். இக்கொலையை நீர் செய்யவில்லை யென்றே வைத்துக்கொண்டாலும் நீர் செய்திருக்கும் காரியம் ஒவ்வொன்றும் உமக்கு விரோதமாகவே யிருக்கிறது உங்களுக்குத் தெரியாமலிருக்கவில்லை. ஆகையால் நான் சொல்வதைக் கேட்டீர்களோ எனக்கும் க்ஷேமமுண்டு. உமக்கும் க்ஷேமமுண்டு. எனக்கு எந்தக் காரியத்திலிறங்குவதானாலும் ஒருநஷ்டமும்இனி உண்டாக முடியாது. எதையும் செய்வேன். ஆதலால் முடிவாய்ச் சொல்லுங்கள். ஸமாதானமாய்ஸமஸமாய்ப் போவோமா? அல்லது விரோதந்தானா?

*வீர:* (விழிவிழித்து) ஸமாஸமாகவே யிருக்கட்டும்.

**துர்:**—ஸமாஸமாகவா? ஸரி ஸம்மதம். இந்தச்சவச்சாக்கு விஷயம் என்னுடைய மனதிலேயே மறைந்து கிடக்கட்டும். ப்ரபு ராஜாதிராஜன் இச்சவத்தை இனிவிரலாலும் தொடவேண்டாம். நானே புறட்டி வைகையில் போட்டு விடுகிறேன். நீங்கள் எப்பொழுதும்போல், என்னை ப்ரதானமந்திரியாகச் செய்வதாய் வாக்களியுங்கள். தங்களுடைய ராஜ்யபாரத்தை ஸாமர்த்தியமாயும், யோக்யமாகவும் ந்யாயவிரோதமில்லாமலும் மேற்பார்த்து வருவதாக நான் வாக்குத்தத்தம் செய்கிறேன்.

*வீர:*—துர்மதி! இந்த ஒன்றைத்தவிர வேறெதையுங்கேள். தடையின்றித் தருகிறேன். என் பெண்சாதி, என் ஸ்நேஹிதர்கள், என் எவலாட்கள், என் ப்ரஜைகள் முதலியயாவரும் அந்த ஸற்குணநிதியான ரணகேஸரியை விலக்கி, உன்னை நான் நியமிப்பேனானால், என்னைப் பைத்தியம் கொண்டவன் என்றல்லவோ நினைப்பார்கள்.

**துர்:**—ப்ரபு தங்களுடைய பெண்சாதி தங்களுடைய ஸ்நேஹிதர்கள் தங்களுடைய எவலாட்கள், தங்களுடைய ப்ரஜைகள் முதலிய யாவரும் பொழுது விடியவும் இந்த ஸங்கதி வெளியானவுடன், அதைக் காட்டிலும் கௌரவமாக நினைப்பார்கள் என்று நினைக்கிறீர்களோ?

*வீர:*—நீதான் என்மீது குற்றஞ் சாட்டினாலும் உன்னை யார் நம்புவார்கள்?

**துர்:**—காலம், தேசம், வர்த்தமானங்களை எடுத்து காட்ட வேண்டியது. ருஜுவிதோ இருக்கிறது. (ப்ரேத மூட்டையைக் காட்டுகிறேன்) வேறென்ன வேண்டும்?

*வீர:*—ஐயோ பாழுந்தெய்வமே. உன் க்ரௌர்யம் இவ்வளவுதானா? இன்னும் பாக்கியிருக்கிறதா? ஈசா! நானென்னசெய்வேன்! துர்மதி! நீ சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நாளையதினம் நான் தர்பாரிலிருக்கும்பொழுது நீ வா, என்னுடைய காலில் விழு, உன்னுடைய குற்றங்களையெல்லாம் ஒப்புக்கொள்ளு. கெஞ்சு. இனிஸரியாய் நடந்து கொள்ளுவதாய் வாக்குறுதி கொடு. உனக்கு மறுபடி ப்ரதானமந்திரிஸ்தானம் கொடுக்கிறேன். இப்பொழுது நீ போ.

**துர்:**—அவ்வளவு அவஸரப்படக்கூடாது. கேவலம் உங்களுடைய வார்த்தை யொன்றுமட்டும் போதாது. நாளைக்கு அரண்மனைக்கு வந்தவுடன் 'அதோ பகிஷ்காரம் செய்யப்பட்டவன் பட்டணத்திற்குள் வந்தான். அவனைத் தூக்குங்கள்' என்றீர்களானால், நான் சிரமப்பட்டது முழுவதும் வீணன்றோ. ஆகையால் நம்மிரண்டுபேருக்குள் இவ்வித உடன்படிக்கை நடந்ததற்கு அறிகுறியாய் தங்களுடைய கணையாழியைக் கழற்றிக்கொடுக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். நான் அப்படிக் கேட்கிறேனென்று கோபிக்கக்கூடாது. இன்றைக்கு உங்களை இவ்வித நிபந்தனைகளுக்குள்ளாக்கினது யாருக்கும் கோபத்தைத்தான் உண்டுபண்ணும்.

*வீர:*—இந்தா வாங்கிக்கொள். [கணையாழியைக் கொடுக்கிறான்]

**துர்:**—ப்ரபு! என்பேரில் இவ்வளவு தூரம் நான் செய்ததற்காக கோபமில்லையென்றும், நாமின்று செய்த உடன்படிக்கையின் நிபந்தனை யொன்றைத்தவிர வேறெல்லாவற்றையும் மறந்துவிட்டதாகவும் உறுதி கொடுக்கவேண்டும்.

*வீர:*—ஸரி.

**துர்:**—அப்படியானால் இப்பொழுதுமுதலே உங்களுடைய ஸேவகனானேன். நீங்கள் போகலாம் அரண்மனைக்கு. இப்ரேதத்தை நான் வைகையில்போட்டு விடுகிறேன்.

*வீர:*—கூடாது. அதைப்போட்டபிறகுதான் நான் போவேன்.

**துர்:**—ஆக்ஞை. ப்ரபு. தங்கள் சித்தம் எனக்குச் சட்டம். அப்படியே செய்கிறேன் (சவமூட்டையைத் தூக்கிக் கொண்டுபோய் வைகையில் எறிகிறான்.)

*வீர.*—நீ போ, என் மனதில் தோன்றுகிற பலவித துக்கங்களுக்கு ஸமாதானம் ஏற்படுத்திக்கொண்டு நான் அரண்மனைக்குப் போகிறேன்

**துர்.**—ப்ரபு தாங்கள் செய்த வாக்குத்தத்தம் ஞாபகமிருக்கட்டும். (நிஷ்க்ரமிக்கிறான்.)

*வீர.*—முட்டநனைந்தவர்க் கீரமேது? எல்லாம் ஆயிற்று. முதற் குழந்தையைச் சனிக்கு பலியிட்டாயிற்று;



# உபநிஷத் ரத்னமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 49. தேஜோபிந்து உபநிஷத் (37)

**அத்யாயம் 1:**—தேஜோபிந்துவாகி ஹ்ருதய குஹையு, ப்ரபஞ்சம் எங்கும் நிறைந்துள்ள ஆத்ம விஷயமாகவே பரமத்யானம், இருத்தல் வேண்டும் இதுமிகுந்த ச்ரமஸாத்யமாகவேதானிருக்கும். உணவு மிதமாயும், கோபம் அடங்கியும், பலரிடையில் இருக்க விருப்பம் இல்லாத்தன்மையும், காமாதிகள் த்வந்த்வங்கள் இவைகளுக்கு அப்பாற்பட்டிருக்கும் நிலையும். அமைந்து அகங்காரம் பிச்சைஎற்றல் அற்பசந்தோஷம் இவைகள் நீங்கப்பெற்று உலகில் ஸஞ்சரிப்பவனுக்கே மூன்று முகத்தில் அடங்கிநிற்கும் ஹம்ஸமந்திர ரஹஸ்யமும் அது ப்ராஹ்மமேயாகி இரண்டாவதற்ற விஷ்ணு நிலையாக இருப்பதும், அதில் ஒருவித நன்மை தீமைகள் இல்லாதிருப்பதும் விளக்கப்படுகிறது.

ஞானயோகஅங்கங்கள் பின்வருவன:—

(1) **யமம்:**—ஞான கர்மேந்திரியங்களை எல்லாம் ப்ராஹ்மம் என்ற விஞ்ஞானத்தில் பெட்டிப் பாம்புபோல அப்யாஸத்தால் அடங்கும்படி செய்வதுதான். (2) **நியமம்:**—ஒரேதன்மையாயுள்ள ப்ராஹ்மத்தையேநோக்கிப்பாயும் பேதத்தைநாடாத மனதில் தோன்றும் ஆனந்த உணர்வே. (3) **த்யாகம்:**—ஸத்தாயும் சித்தாயும் உள்ள ஆத்ம உணர்வால் ப்ரபஞ்ச வஸ்து உணர்விற்கு இடம் தாராமலிருத்தல் தான். (4) **மௌனம்:**—எந்த வஸ்துவை நாடுங்கால் மனதிகளெல்லாம் அதை அணுகமுடியாது செயலற்று சொக்கித் திரும்பிவிடுமோ அதுதான். ஸாதாரண மௌனம் வாக்குடன்கூடிய மறைவான மௌனம். இதுதான் வாக்கிறந்த மௌனமாகும். (5) **ஆஸனம்:**—எந்த தேஹ அமைப்பில் ஸ்திரமாயும் ஸுகமாயும் ப்ராஹ்மத்யானம் நிகழுமோ அதுதான். மஹான்கள் எந்த ஆஸனத்திலிருந்தபடி ஸகலபூதாதாரமான அத்வயவஸ்துவைச் கண்டு தெளிந்தனரோ அதற்கு ஸித்தாஸனம் என்று பெயர். (6) **மூலபந்தம்:**—ஸகல ப்ரபஞ்ச மூலமும், சித்தம் பந்தப்பட்டிருக்கும் மூலமுமே. (7) **ஸமத்ருஷ்டி:**—இவ்வங்கங்கள் எல்லாம் ஒரே ப்ராஹ்மத்தை நோக்கமாக உடையன என்று ஸமமாக உணர்ந்து, எல்லாம் ப்ராஹ்மமாகக் கருதி, மூக்கின் மேல்நுனியின் வழி நிருத்தி எந்த ப்ராஹ்மஸ்தானம் நோக்கினால் அறிபவன், அறிபடுபொருள், அறிவு ஆகிய திரிபுடி நழுவுமோ அதில் பாய்ந்தோடும் திருஷ்டிதான். (8) **ப்ராணாயாமம்:**—மனம் அதன் வ்ருத்திகள் இவைகளுள்ளும் ப்ராஹ்மத்தைக்கண்டு தெளிந்து இவைகள் வேற்றுமைப்பட்டுத் தலை எடுக்காது செய்வதே. ப்ரபஞ்சம் ஸத்யம் என்ற எண்ணம் தலைதூக்காமலை இருக்கும்படி செய்து தடுத்துவிடுவதே ரேசகம் (வெளிவிடும் மூச்சு). நானே ப்ராஹ்மம் என்ற நிறைவான பாவனையுடனிருக்க முயலுவதே பூரகம். (உள்மூச்சு). இதிலேயே நிலைத்து வெகு காலம் இருப்பதே, மூச்சு நிலைப்பதாகிய கும்பகம் (9) **ப்ரத்யாஹாரம்:**—விஷயங்களில் ஆத்மாவைக்கண்டு சித்தத்தை புத்தியால் திருப்திப்படுத்துவதுதான் (10) **தாரணை:**—மனம் இயற்கையாக பாய்ந்தோடும் வைதிகநிலைகள் தொழில்கள் எல்லாவற்றிலும் ப்ராஹ்மத்தை ஆங்காங்கு கண்டு ஒடுங்குவதே (11) **த்யானம்:** நான் ப்ராஹ்மமாத்திரமே என்ற ஸத்விருத்தியில் நிராதாரமாக முழுகிவிடுவதுதான் (12) **ஸமாதி:**—முற்கூறிய பாவனையில் முதலில் நிலைத்திருந்து பின்னர் ப்ராஹ்மமேயாகி அந்தபாவனையும் நழுவிவிடுவதுதான். இந்நிலை அப்யாஸத்தில் தன்னறிவு ப்ரத்யகாத்மாவுடன் ஒன்றுபடும்படி செய்பவனே ஸித்தன், இவன் முக்தனே. (இங்கு ஸ்ரீமத் சங்கராசாரியாரால் அபரோக்ஷானுபூதி பின்பாகத்தில் விவரிக்கப்பட்ட ஞானயோகத்தின் 15 அங்கங்கள் கவனிக்கத்தக்கவை.)

இந்த ஸமாதிக்கு சில தடைகள் உண்டு. அவை யாவன: நேர் விசாரமின்மை, சோம்பல், விஷய இச்சை, விஷய அழுத்தம், தமஸ், மனச்சிதைவு, வியர்வை, மறதி, ஆகிய இவைகளே. இவைகளைத் தலைதூக்கவொட்டாமல் அடக்கவேண்டும் அப்யாஸிகள். உலகவிஷய பாவ விருத்திகளும் சூந்ய விருத்திகளும் தான் இவைகள் தலைதூக்கக் காரணம், ப்ராஹ்ம விருத்திகளால் ஒருவனுக்கு பூர்ணத்வம்ஏற்படுவதால் அதிலேயே பழகவேண்டும் அப்யாஸி. இதில் நிலை பெற்றவனே பூஜார்ஹன்; இதை நாடாதவன் வெறும் மிருகம்தான். கர்ம பக்குவத்தால் முதிர்ந்தவர்களுக்கே இது கைகூடும். மற்றவர்கள் எல்லோரும் வாசாஞானிகள்தான். இவர்களுக்குப் பிறப்பு இறப்பு மாறி மாறி ஏற்பட்டு வருத்தும். முன்னவர்களோ

(340-வது பக்கத் தொடர்ச்சி)

சிசுஹத்தி. ஒரு தேவப்ராஹ்மணன் கொலையுண்ணுவதற்கு காரணமாயிருந்தாயிற்று; ப்ராஹ்மஹத்தி துர்மதி மந்த்ரியானான்; உருவுடன்கூடிவந்த ப்ராஹ்மஹத்தி இனிப்ரஜைகளின் கலகம், சேரன் படையெழுச்சி, ராஜ்யத்தைவிட்டு ஓடும்படி நேருகிறதோ அல்லது கைதியாகிறேனோ! ஐயோ! கஷ்ட பரம்பரையே! நான் சீக்கிரம் இறந்துபோவேன், அப்புறம் என்னைப்போல் நீ வஸிக்க ஸுகமான இடமாக யாரிருப்பார்? உன்னைக் கண்டல்லவோ எனக்குத் துக்கமாயிருக்கிறது.

(நிஷ்க்ரமித்தல்)

ப்ரஹ்ம வ்ருத்தியை விட்டொழிந்து அரைக்ஷணம் கூட இருக்கவே மாட்டார்கள் யாறும் காரணத்திற்கு வேறு ஒரு காரணம் இருத்தல்வேண்டும். இப்படி பின்னர்போய் ஆதிகாரண வஸ்துவுக்கு காரணத்வமில்லாவிடில் காரியங்கள் நழுவிவிடவேண்டியதுதான். நேர்மையான விசாரணை திருஷ்டியில் இப்படியானதும் அவாங்மானஸகோசரமானவஸ்துமாத்திரமுள்ளபடி தனித்துவிடும். பரிசுத்தமான மனதில் இந்த வஸ்துவிஷய விருத்திஞானம் தலைதூக்கிவிடின், வஸ்து தந்திரத்யான வேகத்தால் மாறு மனோதிடம் ஏற்படும் தோன்றுபவைகளையெல்லாம் தோன்றாக் காரணத்துள் ஒடுக்கி அதிலும் ப்ரஹ்மத்தையே உணர வேண்டும், சித்ரூபமாக புத்திமான் ஆனந்தத்தில் நிலைத்துவிட வேண்டும்.

அத்யாயம் **2**:—அசண்ட அத்வைத ஸாரமான சின்மாத்திரத்தை விளக்கவேண்டும் என்று ஸுப்ரஹ்மண்யர் பரமசிவத்தைக்கேட்க, அவர் 'உலகிலுள்ளது எல்லாம் சின்மாத்திரமே, இதைத்தவிர வேறு ஒன்றுமே இல்லை. எல்லாம் இதிலேயேதான் நடைபெறுகிறது. நானே இந்த சின்மாத்திரமென்றுணர்ந்தவன் உடனே முக்தனாவன். அவனே தனக்குக் குரு' என்று விடைகொடுத்தார்.

அத்யாயம் **3**:— 'ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்றால் என்ன' என்று குமாரர்கேட்க, சிவன், 'நானே ஆத்மா என்னுள் எல்லாம் அடக்கம், என்னைத்தவிர வேறு ஒன்றுமில்லை. என்னைத் தவிர வேறாகத் தோற்றுபவைகள் எல்லாம் பொய்யே. நான் ஸத்யே. இப்படி ஆத்மாவை உணர்ந்து ஆத்ம மந்திரமான 'நான் ப்ரஹ்மமாகிறேன்' என்பதில் பழகி இந்த பலத்தால் ஆனந்த அஜடநிலையை அடைந்து மலையைப் போலும் அஸுரர்களைப்போலும் உள்ள அனாத்மாவைத் தகர்த்து அழித்து ஞானானந்தத்தில் அமரவேண்டும். ஏழு கோடி மஹாமந்திரங்களில் இதைமாத்திரம் கடைப்பிடித்து முக்திபெறுவதே ஆத்மஸாக்ஷாத்காரம் எனப்படும்' என்றார்.

அத்யாயம் **4**:—ஸுப்ரஹ்மண்யர் விதேஹமுக்தி ஜீவன்முக்தி இவைகளை விளக்கவேண்டும் என்று கேட்கப் பரமசிவம், 'நானே சிதாத்மா சின்மாத்திரன் நிர்குணன், முதலிய பெருந்தன்மை வாய்ந்தவன்: என்னிடம் த்வந்த்வாதிகள், ப்ரபஞ்ச வைசித்ரியங்கள் ஒன்றுமில்லை, நானே ப்ரஹ்மமென்று அயர்ந்திருப்பவன் ஜீவன்முக்தன். ப்ரஹ்மத்திலே நிலைத்து ஜீவன்முக்தன் பாவனையும் நழுவி ப்ரஹ்மமேயாகி நின்று ஆத்மாவிலேயே, ஆவல், திருப்தி, ஸந்தோஷம் இவைகளை உடையவனே விதேஹமுக்தன்' என்றார்.

அத்யாயம் **5**:—ஆத்மானாத்ம விவேகத்தை எடுத்து விளக்கவேண்டுமென்று நிதாகர் ரிபுவைக் கேட்டார். அதற்கு ரிபு, 'வாக்கின் முடிவு ப்ரஹ்மமே, பாவனைகளின் முடிவு குருவே. ஆத்மா குணாதீதன் நாதபிந்து கலாதீதன். எவ்வித த்வைத ப்ரதீதியாலும் அணுகப்பெறாதவன். அனாத்மா என்பது இல்லவே இல்லை சொல்மாத்திர மயக்கம்தான். ஆகவே ஆத்மா ஒன்று என்றதற்கும் அப்பாற்பட்டவன், இரண்டாவது இல்லாததால். உண்மைவஸ்துவில்வேறுகலப்பே இருக்க இடமில்லை: ஒருவிதஸம்பந்தமும் ஏற்பட இடமில்லையாதலால் இந்த ஆத்மாவான நானே ப்ரஹ்மம் மற்றைய ஒன்றும் இல்லவே இல்லை. எல்லாம் நானே, நீயே நான். தோன்றுபவை எல்லாம் முயற்கொம்புபோலத்தான் நானே தேஹம் என்பது மனதாலாகியப்ரபஞ்சபீஜம்: மனத்தால்எண்ணித் தானே வந்தது இவ்வுலகமாகும். இம்மன ஸங்கல்பத்தில் உண்மையே இல்லை' என்று கூறி,

அத்யாயம் **6**:—ரிபுமேலும் கூறுகிறார்: எல்லாம் ஸச்சின்மயமே. தனியாக ஒன்றுமில்லை: குற்றத்திற்கு இடமேஇல்லை: குற்றமற்றதாகிய எல்லாம் ப்ரஹ்மமே. இதைவிட அணுகூட வேறாக இல்லை தோன்றுவனவெல்லாம் அஸத்தே: உள்ளது ஸச்சிதானந்தமான நானே. அனிர்வாச்யமாக விவேகதிருஷ்டியில் தோற்றும் ப்ரபஞ்சம் இல்லவே இல்லை. உலகில் ஸாத்யமென்று கனவிலும் கருதமுடியாதவை ஸாத்தியமாகிவிடுமாகில் உலகமும் உண்டு என்னலாம். உலகம் ஆத்மாவில் உண்டு என்பது அஸாத்யமான அத்புதவாக்கு மாத்திரம்தான், வெறும் மாயம்தான். ப்ரஹ்மமாவனையே எப்பொழுதும் இருத்தல்வேண்டும். நான் தேஹம் என்ற எண்ணம் துக்கமாதலால நான் ப்ரஹ்மம் என்பதற்கு என்ன தடை. இதை நன்குணர்ந்து நான் என்பதை அறத்துறந்து ப்ரஹ்மமேயாகிவிடு. எல்லாம் தூங்குபவன் கைப்புஷ்பம் போலத் தாமே நழுவிவிடும். எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கி ப்ரஹ்மத்யானம்செய். இந்த சங்கர வித்தையை உணர்ந்தவன் ஒரு வருஷகாலம் உபதேசிக்க மற்றைய உபநிஷத் வழிகளைக் கவனியாது இதிலேயே மூழ்கி ஆனந்திக்கும் நிலையில் எவன் கொண்டுவரப் படுவனோ அவனே ப்ரஹ்மமாவன்.

## 50 ப்ரஹ்மோபநிஷத் (78)

மஹாசால சௌனகர், ஆங்கிரஸ பிப்பிலாதரை நோக்கி "இவ்வழகிய ப்ரஹ்மபுரியாகிய தேஹத்தில் வாசாதிதேவதைகள் எவ்வாறு நிலை பெற்றுள்ளன? எப்படி தொழிற்படுகின்றன? இவைகளுக்கு ஆதாரமான திறன் யாரிடம் நிலைபெற்றுள்ளது. அயர் தன்மையாது? என்ற கேள்விகளைக் கேட்டார். பிப்பிலாதர் மறுமொழி கூறலுற்றார்:—

அந்த ஆதாரவஸ்துதான் ப்ராண னெனப்படும் ஆத்மா. இதுதான் ஆதாரசக்தி: தேவதைகள் மூலமும் ஸாரமும். இந்த தேஹத்தில் நிஷ்களமாக விளங்கும் ப்ரஹ்மமே எல்லாவற்றையும் அடக்கியாள்வது ப்ராணன் போக்கையே வாக்காதி இந்திரியங்கள் அனுஸரித்திருக்கும். ஸுஷுப்திகாலத்தில் ப்ராணன் தன்னிலையில் அடங்கிவிடுவதால் புண்ய பாப ஸம்பந்தமே ஒருவனுக்கு இல்லாமல் போய்விடுகிறது: ஓய்வால் ஸுகமும் தானேஉண்டாகிறது. ஸ்வப்ந, ஜாக்ரத்துக்கு வருங்கால் தேவதைகளுடன் ஸம்பந்தப்பட்டு விரிவை அடைகிறான். இப்படி ப்ராணனையும் ப்ரஹ்மத்தையும் உணர்பவன் பரமாயும், ஸர்வாதாரமாயும், க்ஷேத்ரஞ்ஞனாயும் உள்ள ப்ரஹ்மத்தை அடைவன். புருஷனுக்கு நான்கு ஸ்தானம்: தொப்புள், ஹ்ருதயம், கண்டம், சிரஸ்! நான்கு நிலை: ஜாக்ரத் ஸ்வப்ந, ஸுஷுப்தி, துரீயம்: இவைகளில் அவன் முறையே ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ர, அக்ஷரங்களாக அமர்ந்துளான். பரப்ரஹ்மம் இவைகளில் விளங்கும். இதில் வேற்றுமை எல்லாம் அற்றுப்போயுள்ளது; ஆகவே ஒரே ப்ரஹ்மம்தான் பலவாக விளங்குகிறது. ஹ்ருதயாகாசத்திலுள்ள சிதாகாசமே ப்ரஹ்மம். தேவபித்ருருஷிகள் எல்லாம் இதனுள் அடக்கம்தான். ஹ்ருதயத்தில் தேவர்கள், ப்ராணன்கள், முப்புரி நூல் சைதந்யம் எல்லாம் உள்ளன. ஆகவே யஞ்ஞோபவீதத்தை ஹ்ருதயத்தைச் சுற்றிப்போட்டுக் கொள்ளவேண்டும். ஞானி தலையை மொட்டையடித்து இந்தப் பூணூலைத் துறந்தால் ஸந்யாஸமும் பெறலாம். அவனுக்கு ப்ரஹ்மமேதான் பூணூல். பூணூலுக்கு ஆதமா ஹ்ருதயத்திலுள்ளது என்று ஸூசிக்கும் (குறிக்கும்) தன்மை இருப்பதால் ஸூத்ரம் என்ற பெயரிடப்பட்டது. ஸூத்ரம் பரமபதம் என்ற ரஹஸ்யம் உணர்ந்தவனே ப்ராஹ்மணன்: இந்த ஸூத்ரத்தில்தான் எல்லாம் மணிகள் போல கோர்க்கப்பட்டுள்ளன. உண்மை உணர்ந்தயோகியே இதை அணியத்தகுந்தவன். இந்த பூணூலை ப்ரஹ்மமாக எண்ணி அணிபவனே புத்திமான். எவனுக்கு ஸூத்ரமும், சிகையும் ஞானமாகவே உள்ளதோ அவனிடமே இவை உண்மையில் அமைந்துள்ளன எனத்தகும். ஸாதாரண ப்ராஹ்மணர் இந்தப் பூணூலை தமது கர்மாக்களின் அடையாளங்களாக அணிவர். யஞ்ஞோபவீதம் என்பதற்கு விஷ்ணுவைச் சூழ்ந்துள்ளது என்ற ஒரு பொருளும் உண்டு. இதை உள்ளபடி அணிபவனுக்கே விஷ்ணு விளங்குவர். அவனே அவராவன். இந்த விஷ்ணு ஸர்வாந்தர்யாமி, பலதாதா, ஸர்வஸாக்ஷி, நிர்க்குணன், ஸர்வஞ்ஞர், சேதனர், ஒன்றை மாயையால் பலவாகக் காட்டுபவர் என்று தமது புத்தியில் காண்பவர் மாறாசாந்தி பெறுவர். எள்ளுள் எண்ணெயும், தயிருள் நெய்யும், ஆற்றுள் நீரும், அரணியில் நெருப்பும்போல இந்த மறைந்துள்ள விஷ்ணுவை அப்யாஸிகள் புத்தியில் தியானத்தால் பார்ப்பர். ஜீவன் ஜாக்ரதாவஸ்தையில் கண்களிலும், ஸ்வப்நத்தில் கண்டத்திலும், ஸுஷுப்தியில் ஹ்ருதயத்திலும் துரீயத்தில் சிரஸிலும் நிலைத்திருப்பன். ப்ரத்யகாத்ம பரமாத்மப் பொருத்தத்தை புத்தியால் காணவேண்டியே ஸந்தியாவந்தனம் ஏற்பட்டது. இதை விடாது செய்யவேண்டும். த்யானரூப ஞான ஸந்தியாவந்தனத்திற்கு தண்ணீர் வேண்டியதில்லை, ஒருவித தேஹ அசைவும் வேண்டியதில்லை. இதுதான் ஸந்யாஸி ஸந்தியை. இதனால் மனவாக்கெட்டாஜீவன் மோனானந்த நிலையை உணர்ந்து விடுபடுவர் ஞானிகள். இந்த முடிவைக் காட்டவே ஏற்பட்டது ப்ரஹ்மவித்யை.



## ஸ்ரீயுத கோபால கிருஷ்ண கோகலே

### இரங்கற்பா

தேசாபி மானிகளின் சிரமணியே
  சிரமணியி னொளியே தேசத்
தாசாபி மானமன்றி யயலொன்று
  மறியாத வறிவின் குன்றே
வாசாம கோசரமே வானவரும்
  நின் குணங்கள் வழுத்தும் வண்ணம்
பேசாது போயினையோ பிரிவாற்றோம்
  பிரிவாற்றோம் பிரிவாற்றோமே. (1)
முன்னாளி னம்பெரியோர் மாதவத்தால்
  வேதாந்த முறையான் முற்றிப்
பன்னாளும் நிலையான பக்தர்களாய்த்
  தேவரிஷிப் பட்டம் பெற்றார்
இன்னாளி லாயுளெலாந் தாய்நாட்டிற்
  கீடாக்கி யின்பம் நீக்கி
என்னாளு மழியாத ராஜரிஷி
  யெனும்பட்ட மேற்றாயன்றோ. (2)
சொல்லாலும் பொருளாலுஞ் செயலாலும்
  நந்தேசத் துயரம் நீங்க
எல்லோருந் திருத்தொண்டு புரிவதற்கா
  யொருகளக மியற்றினாய் நீ
நல்லோனே நன்னாட்டு நாயகமே
  யுலகமெல்லாம் நயக்கும் நாவின்
வல்லோனே யுனையிழந்து வருந்துவமோ
  ஐயயோ! வலிது பாவம். (3)
வானவர்க்கா யொரு முனிவன்றனது
  முது செலும்பதனை வளங்கினான் முன்
கானகத்தி லொருபறவை தனக்குடலின்
  றசையளித்துக் கார்த்தானோர் மன்
மானவர்க்கும் மாதவர்க்கு மிருப்பிடமாம்
  நம்பாரத வளநாட்டிற்காய்த்
தானமெனை நினதரிய வாழ்நாளை
  யழித்தனையால் தரணி மெச்ச (4)
மாதாவின் திருத்தொண்டே யல்லாது
  மற்றொன்றும் வாழ்விற்காணாத்
தாதாபாய் நௌரோஜி முதலான
  தவமுனிவர் தளரும் நாளில்
வாதாடு மன்னியர் முன் வழக்காடி
  யரசவையும் வாழ்த்த நின்றாய்
நீதானோ வெமைப் பிரிவாய்
  நினைப்பிரிந்து முயிர்பேணி நிற்கின்றோமே (5)
மதலிழந்தோம் முன்னாளின் வலியிழந்தோம்
  மாதவங்கள் வளர்த்து வந்த
இல்லிழந்தோ மரசவையி னிடமிழந்தோம்
  பிறர்வாழ்விற் கிலக்காய் நின்றோம்
எல்லிழந்த மதிபோலு மிழிவடைந்தோம்
  நமது குறை எடுத்துக்கூறச்
சொல்லிழந்தோம் நினதரிய துணை
  யிழந்தும் வாழ்கின்றோம் சுமையே யன்றோ. (6)

B. ஆதிமூர்த்தி.

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

# CHILDREN'S & LADIES' PAGES

# மாதவி கங்கணம்

## முதல் பாகம்

### அத்யாயம்-3

### ஸௌந்தர்ய மந்த்ரி

(308-ம் பக்கத் தொடர்ச்சி)

"அவ்வளவு காம்பீர்யமும், மனோதிடமும், தைர்யமும் உள்ள நரேந்த்ரன் நமது குழந்தை ஹேமலதையைக் கண்டால் அவற்றையெல்லாம் அறவே மறந்துவிட்டு அவள் காலாலிடும் கட்டளையைத் தலையால் செய்துமுடித்து, ஆவலுடன் அவளுடைய புன்சிரிப்பை எதிர்பார்த்துக்கொண்டு நிற்பதைத் தாங்கள் கண்டதில்லையா? வேண்டுமானால் அவன் அவளுக்காகத் தன் உயிரைக்கூட ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்வான் போலத் தோற்றுகிறது."

"என்ன சனியன் இதெல்லாம், அவன் அடிக்கடி நமது குழந்தையுடன் கூடியிருப்பது எனக்கு மிகவும் அருவருப்பாயிருக்கிறது, இரண்டொருமுறை ஜாடையாய்ச் சொல்லியும் அவன் மானமற்றவனாயிருக்கிறான். இனி ஜாஸ்தியாக இருவரும் ஸந்திக்காமலிருக்கும்படிப் பார்த்துக்கொள்."

"அவனுக்கோ இது யௌவன பருவம். அப்பருவத்துக்குரிய எண்ணங்களும், யோசனைகளும், அவன் மனதில் குடிகொண்டிருக்கின்றன. அதனால் எத்தனை கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவன் ஹேமலதையை மணம்புரியத் தன்னாலானமட்டும் ப்ரயத்நஞ் செய்வான். அத்தகைய ஸந்தோஷகரமான விவாஹம் நெடுநாளாக ஜன்மவிரோதத்தால் பிரிவுற்றிருக்கும் வீரநகர தேவிபுர ஜமீன்களை ஒன்று சேர்த்து அதனால் தங்களுடைய நாமதேயம் என்றைக்கும் விளங்கும்படிக்குச் செய்யும்."

"இவ்வளவு நேரம் வார்த்தைசொல்லிக் கடைசியில் இவ்வாறாகவா முடித்தனை! இதுவா உன் கருத்து? இத்தனை வருஷங்களாய் என்னுடைய மனைவியாயிருந்தும் நீ இவ்வாறாக அபிப்ராயப்படுவது அதிசயமாயிருக்கிறது. இந்த இரண்டு குடும்பங்கள் தமக்குள் ஆதிமுதற்கொண்டு அழியாமலிருந்துவரும் வித்யாஸங்கள், விரோதங்கள் அனைத்தையும் நீ மறந்துவிட்டனையோ? ஏதோ காலவித்யாஸத்தால் பத்து வருஷங்களாக முள்மேல் நிற்பதுபோல் இந்த வீரநகரத்தில் இருந்து வருவதால் பழைய ஞாபகங்களெல்லாம் என் மனதைவிட்டு அகன்றுவிடுமோ? பதரிலும் கேடுகெட்ட இந்தச் சிறு பயலுக்கு என் ஹேமலதையை விவாஹம் செய்துகொடுத்து, முந்நூறு வருஷகாலமாகப் பிறருக்குக் கீழ்ப்படியாமல் கம்பீரமாயிருந்து வரும் தேவிபுரஜமீனை வீரநகரத்தானுக்கு உரிமையாக்குவேனென்று நீ எவ்வாறு நினைத்தாய்? இது என்றைக்காவது ஸாத்யமா?"

தன் இஷ்டத்துக்கு விரோதமான மொழிகளெவற்றையும் காதுகொடுத்துக் கேட்க ஸஹியாத வண்ணமாய் அப்புண்யவதி "நீர் சொல்வது எனக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை. முந்நூறு ஆண்டுகளாகப் பிரிவுற்றிருந்தபோதிலும் என்றைக்காவது ஒரு நாள் இரண்டு நாடுகளும் ஐக்யப்படும் என்று நான் மனப்பூர்வமாய் எண்ணியிருந்தேன். அவ்வாறு ஐக்யப்பட்ட நாட்டிற்கு நமது ஹேமலதை அரசியாயிருப்பது நமக்கு எவ்வளவு பெருமையாயிருக்கும். நமக்கோ புத்ர பாக்யமில்லை, ஹேமலதையின் புருஷனே தங்களுக்குப் பின்னர் தேவிபுரத்துக்கு அதிபதியாயிருப்பான். அந்த ஸ்தானத்துக்கு ஸகலவிதத்திலும் யோக்யதையுடையவன் நரேந்த்ரன். ஹேமலதைக்கு ஏற்ற கணவன் அவனே. அவனுக்குத்தான் ஹேமலதையைக் கன்னிகாதானம் செய்துகொடுக்கவேண்டும்" என்று ஒரே பிடிவாதமாய்க் கூறினாள்.

நவகுமாரர் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தார். மனைவி இவ்வளவு தீரமாய்ச் சொன்னதற்கு மாறாகச் சொல்ல அவருக்குத் தைர்யமில்லை; மௌனமாயிருந்தார். தன் புருஷனுடைய மனோநிலைமையை உணர்ந்த அம்மாது சற்று நிதானமாய்ப் பின்னும் பேசலாயினள்: "என் அருமை நாயகனே, நான் சொல்வதில் ஒன்றும் பிழைபோகாது. நரேந்த்ரனை நான் வெகுகாலமாய்க் கவனித்து வருகிறேன். அவனுடைய மனதை நான் நன்றாய் அறிவேன்; ஹேமலதையை மணம்புரிபவன் தேவிபுரத்தில் வந்திருக்கவேண்டுமென்று நாம் கூறினால் அவன் ஒருதடையும் சொல்லமாட்டான்; தேவிபுரம் அதிக ப்ரபலமாகும்; வீரநகரம் என்றைக்கும் தேவிபுரத்துக்கு அடங்கியதாய்விடும். தேவிபுரம் கீர்த்தியடைவதற்குத் தாங்கள் எவ்வளவு ப்ரயாஸைப்படுகிறீர்களோ அதைவிட அதிகமாய் நான் படுகிறேன். தேவிபுரத்து ராஜவம்சத்தின் நன்மையையும் கீர்த்தியையும் முன்னிட்டுத்தான் நான் இந்த யோசனைசெய்தேன்; இவ்வாறாகப் பேசினேன்."

நவகுமாரர் ஒன்றும் பேசவில்லை. தன் மனைவி கூறியதும் ஒருவாறு யுக்தமானதுதான் என்றெண்ணினார். வீரநகரதேவிபுர சண்டை ஒழிந்து இரண்டு ஜமீன்களும் என்றைக்கும் ஒன்றுசேர்ந்து ஸுபிக்ஷமடைவதும் விரும்பத்தக்கதென்று கருதினார். வீரநகரம் சேர்ந்துவிட்டால் தேவிபுரத்து விஸ்தீரணமும், செல்வாக்கும், ப்ரதாபமும் வ்ருத்தியடையுமென்றும் அவருக்குத் தோன்றிற்று.

இவ்வாறு சற்றுநேரம் ஆலோசித்துப் பிறகு தன் மனைவியை நோக்கி, "ஸரி, யோசிக்கலாம்" என்றார். தனது வார்த்தை அம்பலமேறிவிட்டதென்று எண்ணினாள் ராஜபத்நி.

இந்த ஸம்பாஷணை முடிந்தவுடன் ஹேமலதையும் நரேந்த்ரனும் அறைக்குள் ப்ரவேசித்தார்கள், நரேந்த்ரன் தான் கையில்எடுத்துவந்த சிலமல்லிகைப் புஷ்பங்களை நவகுமாரரிடம் கொடுத்து வேண்டாவெறுப்பாய் அவரை நமஸ்கரித்துவிட்டு, ஹேமலதையின் தாயாரிடம் சென்று மிகுதியாயிருந்த புஷ்பங்களைத் தலைவணங்கித் தன் இருகரங்களால் அவளிடம் கொடுத்து அந்தரங்க நேசத்துடன் அவள் பாதங்களில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்தான். அம்மாது சிரோமணி தன் வலது கரத்தை அவன் சிரத்தில் வைத்து "நீ நெடுங்காலம் ஹேமலதையுடன் ஸௌக்யமாயும் ஸந்தோஷமாயும் வாழ்ந்திருக்கவேண்டும்" என்று ஆசீர்வதித்தாள். அன்றையதினம் அவள் மனம்பூரித்து ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினாள். புருஷனுடைய மனதைத்திருப்பித் தன் அபிப்ராயத்தை அவரை அங்கீகரிக்கும்படிச் செய்ததால் ஹேமலதையைப் பெற்றெடுத்த பயன் அப்போதுதான் பூர்த்தியாயிற்றென்று அவள் மனங்களித்தாள்.

இவ்விஷயங்களில் தன் கணவன் ஸம்மதம் மாத்ரமேயன்றி இன்னொருவருடைய ஸம்மதமும் வேண்டுமென்பதை நவகுமாரருடைய மனைவி மறந்தாள். அந்த இன்னொருவர் ஸாமாந்யமான பரல்வர். காரியம் கைகூடும் நிமித்தம் எதை வேண்டுமானாலும் செய்ய அஞ்சமாட்டார். அவருக்கு முன் நமது ஜமீன்தாரரின் மனைவி எம்மாத்ரம்? கோகுலதாஸ் நவகுமாரருடைய அமைச்சரன்றோ?

### அத்யாயம்-4

### மாற்றான் வல்லமை

கோகுலதாஸ் இருப்பிடம் மிகவும் ஸாமாந்யமானதாயிருந்தது. உண்மையில் அது ஒரு எளிய குடிசைதான். அக்குடிசையிருந்த இடம் நகரத்துக்குள் மிகவும் ஏகாந்தமான பாகம். ஜன நடமாட்டம் அதிகமாய்க் கிடையாது. ஜமீன்தாரருடைய மாளிகைக்கும் அதற்கும் வெகுதூரம். ப்ரதிதினமும் கூடியசீக்ரம் காலைபோஜனத்தை முடித்துக்கொண்டு கோகுலதாஸ் அரண்மனை போய்விடுவார். ராஜாங்க அலுவல்களை மேல்பார்ப்பதில் பகலெல்லாம்கழிந்து அஸ்தமனமாகிவிடும். ஸாயங்காலம் அதிக நேரமானபின்பேதான் வருவார். சில தினங்கள் இருட்டிவிட்டாலும் இருட்டிவிடும், கடைத்தெருக்களிலெல்லாம் விளக்கேற்றிவிடுவார்கள். காலையில் சென்றவிதமாகவே தான் கால் நடையாய் வீட்டுக்குத் திரும்புவார், ஒவ்வொருநாளும் குறைந்தபக்ஷம் பத்துமணி நேரமாவது அரண்மனையில் ராஜ்யபரிபாலன விஷயங்களில் ஆழ்ந்திருப்பார். ராஜ்யத்தில் நடக்கும் அற்பவிஷயங்கள்கூட அவருக்குத் தெரிந்திருக்கும், நாட்டிலுள்ள ப்ரதான ஜனங்களுடைய நோக்கங்கள், அபிப்ராயங்கள், செயல்கள், போக்குவரவுகள் யாவும் அவருக்குத் தினந்தினம் ஒற்றர்கள் மூலமாய்த் தெரிந்துகொண்டிருக்கும் ராஜ்யத்தில் இவ்வளவு அந்தஸ்தும், செல்வாக்கும், பொறுப்பும், ஊக்கமும் உடைய அவர் தெருவில் போகும்போது உத்யோக சின்னங்கள் டம்பம், வெளிப்பகட்டு யாதொன்றுமின்றி ஸாக்ஷாத் ருத்ராக்ஷபூனைபோல் செல்வார். அப்போது அவரைப் பார்ப்பவர்கள் யாவரும் ஒரு ஸாமாந்ய மனிதனென்றே நினைப்பார்கள். ஆனால் அவர் அரண்மனைக்குவரும்போதும், அரண்மனையினின்று வீடு செல்லும்போதும் ரஹஸ்யமாய் ஆயுதங்கள் தரித்துச் சில மெய்க்காவலர்கள், தெருவில் நடமாடிக்கொண்டிருக்கும் இதர மனிதர்களைப் போலவே அவருடன் செல்வார்கள். நாடுமுழுவதும் உள்ள ஸர்க்கார் உத்யோகஸ்தர்களை நியமித்து அவர்களுடைய வேலைகளைக் கண்கொட்டாமல் மேல்பார்வை பார்த்து வருபவரும், ஒற்றர்களிடமிருந்தும் வேவுகாரர்களிடமிருந்தும் அநேக ஆந்தரிக விஷயங்களை அறிந்து ஸமயோசிதமாய் ராஜகாரியங்களை நடத்துபவரும், வீரநகரதேவிபுர ஜமீன்களின் உண்மைத் தலைவராயிருந்து வருபவருமாகிய கோகுலதாஸ் மண்ணாலாகிய ஒரு கூரைக் குடிசையில் வஸித்துவந்தார்.

வைக்கோலால் மூடப்பட்டிருக்கும் அவ்வற்புதக்க்ருஹத்தின் முன்கட்டில் செங்கல்லால் கட்டப்பட்ட ஓர் அறை இருந்தது. அவ்வறையில்தான் கோகுலதாஸ் தன்னிடம் வந்துபோகிறவர்களுடன் வார்த்தையாடுவது வழக்கம். சில ஸந்தர்ப்பங்களில் அவ்வறை மந்த்ராலோசனை மண்டபமாகவுமிருக்கும். அவ்வறைக்குப் பின்புறம் உள்ளிடங்கள்; அதாவது படுக்கையறை, உக்ராண அறை, சமையலறை—எல்லாம் சிறுசிறு இடங்கள்—அமைந்திருந்தன. இந்தக் கட்டிற்குப் பின்னால் எல்லாம் காலிமனைதான். அவ்விடம் சில பழமரங்கள் தவிர மற்றதெல்லாம் புல்பூண்டு முளைத்திருந்தது. வீட்டுக்குக் காற்றுவரும் ஆதாரம் முன்கட்டு முற்றமும் பின்கட்டு முற்றமும்தான்.

கோகுலதாஸ் தாரமிழந்தவர்; அவருக்கு ஒரே பிள்ளைதான். அவருடைய நிலைமையிலிருப்பவர் அநேகர் புனர்விவாஹம் செய்துகொண்டிருப்பார்கள். ஆனால் கோகுலதாஸருக்கோ இரண்டாவது விவாஹம் என்ற யோசனையே ஜனிக்கவில்லை. அவருடைய ஊக்கம், புத்தி, யோசனையெல்லாம் வேறோர் விஷயத்தில் லயித்திருந்தது. ஆதலால் அவர் தம் முதல்மனைவி மரணமடைந்ததுமுதல் தனியாகவே இருந்துவிட்டார், தேவிபுர ராஜ்யத்தையும் ராஜகுடும்பத்தையும் உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டுமென்பதையே தம் நோக்கமாகக் கொண்டார், அதற்காகவே தம் ஆயுள்பரியந்தம் மனப்பூர்வமாய் உழைப்பதாகக் கங்கணங் கட்டிக்கொண்டார். இவ்வாறு தேவிபுர நன்மைக்காக உழைப்பது யாதொரு ஸ்வயலாபத்தைக் கருதியன்று; உழைப்பதால் உண்டாகக்கூடிய மனஸ் ஸந்துஷ்டியொன்றைத்தான் அவர் கோரியது; கடைசியில் அவர் கண்டதும் அதுதான். அவருடைய பந்துக்களில் தரித்ரதசையிலிருந்த ஒருஸ்த்ரீ அவருக்குச் சமையல்செய்துபோட்டுக்கொண்டு அவருடைய வீட்டுக்காரியங்களைப் பார்த்துவந்தாள். முன்னர் நாம் கூறிய கல்கட்டு அறை அவருக்குரியது. அவ்வறையில் அவர் ராஜாங்க வ்யவஹாரங்களைக் கவனித்துக்கொண்டிருக்கும்போதும்,

அல்லது தம் நண்பர்களுடனாவது ஒற்றர்களுடனாவது பேசிக்கொண்டிருக்கும்போதும் அவரிடம் செல்வதற்கு எல்லோரும் அஞ்சுவார்கள். அந்த அறையண்டை நிற்கக்கூட ஒருவரும் துணியமாட்டார்.

இன்றையதினமிரவுஅவ்வறையில் ஒருவிளக்கெண்ணெய்தீபம் எரிந்துகொண்டிருந்தது. அங்கே இருவர் உட்கார்ந்திருந்தனர். அவ்விளக்கின் மங்கலான ஒளியில் காணப்படும் அவர்களுடைய முகங்கள் சித்ரக்காரர்கள் அவசியங் கவனிக்கத்தக்கன.

நவகுமாரருக்கு வயது ஐம்பதாயிற்று. ஆனால் அவர் தலையில் நரைத்தமயிர் ஒன்றுகூடக்காணவில்லை. அவருடைய விசாலமான வதனத்தில் க்ஷத்ரியஜாதிக்குரிய வீரமும், சௌர்யமும் இன்னும் ப்ரகாசித்துக்கொண்டிருந்தன. யௌவன பர்வத்துக்குரிய ஊக்கமும் பரபரப்பும் அவரிடத்தில் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. ஊடுருவிப் பாயும் அவருடைய கண்கள் அவருடைய மனோதீரத்தை உணர்த்தின. அவருடைய தேகம் தளராமல் திடமாயிருந்தது. ஆத்ரம் கோபம், வைரம் முதலிய சில துர்க்குணங்கள் அவருடைய முகக்குறிகளில் தோன்றின. அரண்மனையில் பந்துமித்ரர்கள் அதிகமா யிருப்பதால், நவகுமாரர் ரஹஸ்ய ஆலோசனைக்காக பாதி ராத்ரியில் கோகுலதாஸ் வீட்டிற்கு வந்தார்.

நவகுமாரருடைய முகத்துக்கு நேர்விரோதம் கோகுலதாஸ் முகம். இருவரும் ஸமவயதானபோதிலும் கோகுலதாஸ் அதிக வ்ருத்தாப்யராகக் காணப்பட்டார். அவரைப் பார்த்தால் அறுபது வயதுபோலிருந்தது; தேகம் அவ்வளவு தளர்வடைந்திருந்தது. கிழமுகந்தட்டி, கிழச்சின்னங்கள் உண்டாய்விட்டன. தோல் சுருங்கிய அவருடைய முகத்தில் அகக்குறிகள் ஒன்றும் விளங்கவில்லை. ஸதா ஸர்வகாலமும் ஓயாமல் யோசனைகளையும் சூழ்ச்சிகளையும் உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் அவருடைய மனதின் செயல்கள் கிஞ்சித்தாவது வெளிக்குப் புலப்படவில்லை. அவருடைய முகம் எப்போதும் ஒரேமாதிரியாக இருந்தது. ஸந்தோஷத்தாலாவது வருத்தத்தாலாவது மாறுதலடைவதில்லை. கற்பதுமைபோல் எக்காலத்தும் அவருடைய முகம் ஒரே தோற்றமாக இருந்தது. அவருடைய கண்கள் இடுங்கியிருந்தன. தலை நரைத்திருந்தது. அவர் தம் எஜமானருக்கு அதிக பயபக்தி மரியாதை உடையவராகக் காணப்பட்டார். நவகுமாரர் எவ்வளவு ஆத்ரமாய்ப் பேசினாலும், அவர் அமரிக்கையாய் விடைபகர்ந்தார். தீரத்தெளிய ஆலோசித்து அதிக ஜாக்ரதையுடன் அவர் கூறிய வார்த்தைகள் நவகுமாரர் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. ஆத்ரமும், படபடப்பும் அவஸரமுமுள்ள நவகுமாரர் ஸூத்ரதாரி கைப்பொம்மையைப் போல் அதிக பொறுமையுடனும் மரியாதையுடனும் பேசும் கோகுலதாஸ் ஆட்டுவிக்கும் ஆட்டங்களுக்கெல்லாம் உட்பட்டு அவரிழுத்த பாதையே செல்கிறாரென்றும், வயதுமுதிர்ந்து வீரமற்று சௌர்யமற்றுக்கிடக்கும் கோகுலதாஸ்தான் ராஜ்யத்துக்கு உண்மையில் அதிபதியென்றும் விஷயங்களைச் சற்று நுட்பமாய்க் கவனித்துப்பார்ப்போர் யாவருக்கும் எளிதில் புலப்படும்.

வெகுநேரம் மௌனம்ஸாதித்துவிட்டு நவகுமாரர், "நாம் இங்கே ஏகாந்தமாய்த்தானே இருக்கிறோம்? சுற்றுப்பக்கம் ஒருவருமில்லையே?" என்று கேட்டார்.

"என் வீட்டார், வேலையாட்கள், என்னைச் சேர்ந்தவர்கள் யாவரும் வஸந்தோத்ஸவத்திற்கு க்ராமாந்தரத்துக்குச் சென்றிருக்கின்றனர். வெளிவாசற் கதவை நானே தாழ்ப்பாளிட்டுப் பூட்டிவந்திருக்கிறேன். ஆதலால் ஒருவரும் அண்டையயலில் இருக்க ஹேதுவில்லை. தாராளமாய்ப் பேசலாம்."

"கோகுலதாஸ், சென்ற சிறிது காலத்திய ஸமாசாரங்கள் உமக்குத் தெரியுமா?"

"மஹாராஜா, எனக்குத் தெரிந்ததைவிடத் தங்களுக்கு அதிகமாகத் தெரிந்திருக்கலாம். ஏதாவது விசேஷமிருந்தால் தங்கள் வாக்கிலிருந்து அதைக் கேட்கத் தயாராயிருக்கிறேன்."

"அஞ்சாநெஞ்சராகிய ஆப்கானியர் தென்பாகத்தில் எப்போதும்போலவே தக்க ஸைந்யங்கள், ஆயுதங்கள் முதலியவைகளை வைத்துக்கொண்டு யுத்த ஸந்நத்தராயிருக்கின்றனர். அவர்கள் முன்னிலும் அதிக வலிவுற்றிருக்கிறார்கள். அவர்களை யடக்க ராஜா மான்ஸிங் ஒருமுறை ஜஹனாபாதுக்குச் சென்றனர். அப்போது ஆப்கானியர்கள் அவரை அடித்துத் துரத்திவிட்டனர். அவருடைய புத்ரனைத் திடீரெனத் தாக்கிக் கைதிசெய்தனர்."

"அது நடந்து இரண்டு வருஷமாயிற்றே."

"அதற்குப் பிறகு ஆப்கானியர்கள் மான்ஸிங்கின் குமாரனை விடுதலை செய்துவிட்டு யாதொரு தொந்தரவுமின்றி ஒரிஸ்ஸாவை ஆண்டுவருகின்றனர். வங்காளத்தில் மொகலாயர் அரசுபுரிவதுபோலவே அவர்கள் ஒரிஸ்ஸாவை ஆட்சிசெய்கிறார்கள். பேருக்கு மாத்ரம் அக்பருக்குக் கீழ்ப்படிந்திருப்பினும் உண்மையில் அவர்கள்தான் ஒரிஸ்ஸாநாட்டுத்தலைவர்கள்."

"இந்த ஸமாதானமும் உடன்படிக்கையும் எவ்வளவு காலம் நிலைத்திருக்கப்போகிறது என்று எண்ணுகிறீர்?"

"ஸமாதானம் நிலைக்காவிட்டால்தான் என்ன? ராஜாமான்ஸிங் என்ன ஸாதித்துவிடப் போகிறார்? ஒரிஸ்ஸாவென்றால்தான் அவர் ஓட்டம்பிடிக்கிறாரே! அம்மாகாணத்தில் தலைகாட்டக்கூட அவர் துணியமாட்டார்."

"ராஜாமான்ஸிங் லேசானவரல்ல. அவருடைய வீர தீரம் ஒருவருக்கும் கிடையாது. அவர் புறங்காட்டியோடும் சூரரல்ல."

இதைக்கேட்டு நவகுமாரர் புன்சிரிப்பாய், "ஓஹோ! எனக்குத் தோன்றவில்லை. கொஞ்சகாலத்துக்கு முன் அவர் உமக்குப் பரிசுகளும் பட்டங்களும் அளித்ததை நான் மறந்துவிட்டேன். ஸரி, ஸரி, நீர் இப்போது அவர் மனுஷ்யராய்விட்டீர். அதனால்தான் இப்படி அவருக்காகப் பரிந்து பேசுகிறீர்" என்று பரிஹாஸமாகச் சொன்னார்.



கோகுலதாஸ் முகத்தோற்றத்தை மாற்றாமல் "இவ்வுலகில் நான் விரும்பும் பட்டங்களெல்லாவற்றிலும் ஸர்வோத்தமமான பட்டம் என்னுடைய முன்னோர்கள் உழைத்ததுபோல் நானும் தேவிபுரத்து ராஜகுடும்ப க்ஷேமத்துக்காக மனப்பூர்வமாய் உழைத்து வருகிறேன் என்பதுதான்."

"எனது ஆந்த்ரிக நண்பரே! உமது விஷயங்கள் எனக்கு நன்றாய்த் தெரியும். அதைப்பற்றி நீர் பேசவேண்டியது அவசியமில்லை. இந்த ராஜா மான்ஸிங்கைப்பற்றி உமது அபிப்ராயமென்ன?"

"ராஜாமான்ஸிங்கைவிட உத்தம ஸேனாதிபதி அக்பரிடம் ஒருவருங் கிடையாது. ஆனால் ரணகளத்தில் மாத்ரமேயன்று அவருடைய ஸாமர்த்யம். ராஜதந்த்ரத்தில் அவரினும் மிக்கார் அகப்படுவது துர்லபம்."

"ஆகையினாலே?"

"ஆகையினாலே அவர் ஆப்கானியரிடமிருந்து ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றிக்கொள்வார்."

"ஆனால் அவர் முன்னமே ஒரிஸ்ஸாவை ஆப்கானியருக்குக் கொடுத்து அவர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறாரே."

"ஆமாம்; அவர்களை வேருடன் களைய ஏற்பாடுகள் செய்வதற்காகத்தான் அவர்களுடன் உடன்படிக்கை செய்தார். இத்தனை நாட்களாய்க் காலக்ஷேபஞ் செய்வது யுத்தஸந்நாகத்தின்பொருட்டுத்தான்."

"க்ஷத்ரியராயிற்றே அவர் வார்த்தை தவறுவாரா?"

"அந்தச் சிரமத்தை ஆப்கானியர்கள் அவருக்கு வைக்கமாட்டார்கள், அவர்கள் துஷ்டர்கள். சற்று நேரம் சும்மா இருக்கமாட்டார்கள். தெருச்சண்டைகளை விலைக்கு வாங்குவதில் அதிக கெட்டிக்காரர்கள். ராஜாமான்ஸிங்கைத் தங்கள் மீது படையெடுத்து வரும்படி அவர்களே அழைப்பார்கள்."

"உமக்கு அவ்விஷயம் எப்படித்தெரியும்? எவ்விடத்திலிருந்து இந்த ஸமாசாரங்களெல்லாம் உமக்கு வருகிறது?"

"ராஜாமான்ஸிங் கச்சேரியிலிருக்கும் நமது ஒற்றன் எழுதிய கடிதத்தால் நான் அறியலானேன். தங்களுடைய ஸமூகத்துக்கு அக்கடிதத்தின் ஸமாசாரத்தைத் தெரிவிக்க இதுவரைக்கும் ஏற்ற தருணம் வாய்க்கவில்லை."

ஒரே வெள்ளை பூசப்பட்டுச் சுவருடன் சுவராய்த் தோன்றிய ஒரு கள்ளறையின் கதவைக் கோகுலதாஸ் திறந்தார். சுவரின் செங்கல் கட்டடத்தில் பதிக்கப் பட்டிருக்கும் ஓர் இரும்புப் பெட்டியின் கதவைத் திறந்து கோகுலதாஸ் ஒரு காயிதக்கட்டையெடுத்து நவகுமாரரிடம் கொடுத்தார்.

விளக்கெண்ணெய் தீபத்து மங்கலான ஒளியில் நவகுமாரர் கடிதங்களைப் பிரித்துத் தலைகுனிந்து அவற்றிலெழுதப்பட்டிருக்கும் விஷயங்களைக் கவனமாய்ப் படித்துவிட்டுக் கீழே வைத்துவிட்டார்.

"என்ன ப்ரமாதமாயிருக்கிறதே. ஆப்கானியர்கள் ஜகந்நாதத்திலிருக்கும் ஹிந்து ஆலயத்தை இடித்துப் பொடி தூளாக்கி த்வம்ஸஞ் செய்தனராமே?"

"மான்ஸிங் ஹிந்துமதத்தினர். மேலும் க்ஷத்ரியர் இந்தப் பாதகச் செயலைக்கொண்டு அவர் சற்று நேரமாவது பொறுமையுடன் நிதானித்திருப்பாரா?"

"ஹிந்து மதத்தினரை இவ்வாறு நிந்தித்து அவ[…] மனதைப் புண்படுத்துவதைக் கண்டு எவர்தான் ஸஹித்திருப்பார். ஆப்கானியரைப் பூண்டறுத்து விட்டுத்தான் அவர் மறுவேலை பார்ப்பார்."

"யாருக்குந் தெரியாமல் ஏராளமான ஸைந்யத்துடன் அவர் முன்னமே ஒரிஸ்ஸாவுக்குப் புறப்பட்டு விட்டார்."

"ஜயாபஜயம் எப்படி இருந்தாலும், யுத்தம் மா[…]ரம் ப்ரமாத யுத்தமாயிருக்கும். அதற்கு ஸந்தேஹமில்லை."

"யுத்தமும் ப்ரமாதமாய்த்தானிருக்கும். கடைசியில் ஜயமும் ராஜா பக்கந்தான் நிற்கும்."

"அப்படியானால் இம்முறை அவர் ஒரிஸ்ஸாவைப் பிடித்து அக்பரது ராஜ்யத்துடன் சேர்த்து விடுவா[…]ரென்று நீர் எண்ணுகிறீர்?"

"ஆமாம், அப்படிக்குத்தான் நடக்கும். இப்போ[…]ருடன் ஆப்கானியர்கள் இருந்தவிடம் தெரியாமல் போய்விடுவார்கள். அவர்களை இனி தலையெடுக்[…]வொட்டாமல் அடியோடு த்வம்ஸஞ்செய்துவிட்டு[…]தான் அவர் வங்காளம் திரும்புவார். ஆதலால் கொஞ்சகாலம் அவர் ஒரிஸ்ஸாவில் தாமதித்திருப்பார்."

"அவர் அங்கே சிறிதுகாலம் தங்கிவிட்டால் நமது ப்ரயத்நங்களெல்லாம் விழலுக்கிறைத்த நீராய்விடுமே?"

"அதுதான் தப்பு. அவர் ஒரிஸ்ஸா செல்வது நமது நல்ல காலத்துக்குத்தான். நமது கார்யம் சீக்ரம் ஸித்திபெறும்."

"நீர் சொல்லது எனக்குப் பொருள்படவில்லை. மறைபொருளாகப் பேசவேண்டாம். அவர் ஒரிஸ்ஸாவில் சிறிது காலம் தங்கியிருப்பது நமக்கு எப்படி நல்லகாலமாகும்? கூடிய சீக்ரம் தேவிபுரத்தை என[…]க்குக் கொடுத்தருளவேண்டுமென்று நீர் ராஜாமான்ஸிங்குக்கு மனு ஒன்று தயார் செய்துகொண்டிருக்[…]வில்லையா? ரணவீரராகிய அந்த ராஜபுத்ரர் யுத்தங்களிலும், வெற்றிகளிலும், மொகலாய ராஜ்யத்தின் விஸ்தீரணத்தை வ்ருத்திசெய்வதிலும் கவனமெல்லாம் செலுத்தியிருக்கையில் அற்பவிஷயமான இந்த மனுவைப்பற்றி சிரமப்படுத்திக்கொள்வாரா?"

"ராஜா அவர்கள் வெளியூர்களுக்குச் சென்றிருக்கையில் ஸகலமான கவர்ன்மெண்ட் வேலைகளையும் பார்த்துவர அவருடைய கார்யஸ்தர் ஒருவரிருக்கிறார். அக்காலங்களில் ஸர்வ அதிகாரமும் கார்யஸ்தர்கையில்தான் இருக்கிறது."

"அக்கார்யஸ்தர் நமக்கு வேண்டியவராயிருக்க வேண்டுமே. அதற்கென்ன செய்வது?

"அதைப்பற்றி ஸரியான ஏற்பாடுகள் செய்திருக்கி[…]

றேன். நமது கஜானாவிலிருந்து அவருக்கு வேண்டியமட்டும் த்ரவ்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது.''

தன் அனுமதியின்றி கோகுலதாஸ் ஸ்வய அதிகாரத்தைக்கொண்டுசெய்யும் எண்ணிறந்த ரஹஸ்யமான செயல்களில் ஒன்று வெளிவரவே, நவகுமாரருக்கு கோபமும் ஆத்ரமும் அதிகமாகி முகஞ் சிவந்தது. ஆனால் கோகுலதாஸ் முகம் மாத்ரம் கிஞ்சித்தும் மாறுதலடையாமல் எப்போதும்போலவே இருந்தது.

"உமது சூழ்ச்சிகளும், யோசனைகளும், ஆழம் அளவு கண்டுபிடிக்கக் கூடாதனவாயிருக்கின்றன. எனக்கு அறிவிக்காமல் நீர் இவ்வளவு சூழ்ச்சிகளும் ஏற்பாடுகளும் எவ்வாறு செய்யத் துணிந்தீர்? எவ்வளவு த்ரவ்யம்தான் தலைகால் தெரியாமல் பெற்றுக் கொண்டாலும்கூட ராஜா தோடர்மால் அவர்களால் செய்யப்பட்டு ராஜாமான்லிங் அவர்களால் உறுதியாய் ஸ்தாபிக்கப்பட்ட ஏற்பாட்டை அக்கார்யஸ்தர் அவ்வளவு துணிவாய் மாற்றிவிடுவாரா?''

"துணிவும், தைர்யமும் ஒன்றும் அவசியமில்லை. எல்லாம் இரண்டும் இரண்டும் நாலு என்பதுபோல் ஸுலபமாய் முடிவுபெறும். ராஜா தோடர்மால் ஏற்பாட்டை மாற்றுவதற்குப் போதுமான காரணங்கள் உண்டாகி விடும். வீரநகரம் தேவிபுரம் இரண்டு ஜமீன்களிலும் பெருத்த கலஹங்கள் கிளம்பும். அஜ்ஜமீன்களிலிருந்து சக்ரவர்த்தி யவர்களுக்கு வருஷா வருஷம் சேரவேண்டிய வரும்படி பாக்கிநிற்கும். அப்பாக்கியை ஸரிவர வஸூல் செய்வதற்கும், இனி வருங்காலத்தில் அவ்விதமாகத் தீர்வைகள் பாக்கிநிற்காமலிருக்கும்படிக்கும் சில நூதன மாறுதல்கள் செய்யவேண்டிய அவசியம் உண்டாகும்.''

"ஸர்க்கார் தீர்வை காலக்ரமப்படி வஸூலாகுகிவித்தம் தேவிபுரத்தை எனக்கும் வீரநகரத்தை அதன் பால்ய அதிபதிக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் ஒப்புவிக்க வேண்டிவரும்.''

"தங்களை உடனே தேவிபுரத்துக்கு அதிபதியாக்க வேண்டிய அவசியம் ஏற்படுமே யொழிய, வீரநகரத்தை அவ்வளவு சீக்ரம் அதனுடைய பாத்யஸ்தனுகிய நரேந்த்ரனுக்குக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.''

"திருப்பித்திருப்பி அர்த்தமாகாத விஷயமாகவே பேசுகிறீரே! என்ன ஸமாசாரம்? அதைவிட்டுத்தான் சொல்லுமே. அப்படியானால் வீரநகரத்தின் கதி என்னதான் ஆகும்?''

"நரேந்த்ரனுக்குப் பக்வ வயது வரும்வரையில் அவனது ஜமீனைச் சீராய்ப் பரிபாலித்துவரச் சக்ரவர்த்தியவர்கள் புதிதாய் ஒரு கார்யஸ்தரை நியமிப்பார். அப்படி யுக்தகாலம் வந்தபிறகுங்கூட பாக்கிகளெல்லாம், தீர்ந்தாலொழிய அந்த ஜமீன் அவன் கைவசமாகாது.''

"அதற்கென்ன, கடன்தொகை முழுவதும் சில வருஷங்களுக்கெல்லாம் பூர்த்தியாய்ப் பைஸலாகிவிடுகிறது. வீரநகரம்தான் பணம் பெருத்திருக்கின்றதே.''

"அக்காலம் என்றைக்கும் வராது''

"ஏன்?''

"புதிதாய் வரும் கார்யஸ்தனிடம் கோகுலதாஸ் ஸாமர்த்யமும் செல்வாக்கும் பலிக்காமல் போய் விடுமோ?''

'என்ன செல்வாக்கு, என்றைக்கும் வீரநகரத்துக் கடனைத் தீர்க்காமல் மேலும்மேலும் ஏற்றிக்கொண்டேயிருப்பதற்கா?''

"ஆம், வீரநகரத்துக் கடன் குறையாமல் நாளுக்கு நாள் வ்ருத்தியாய்க்கொண்டே வரும் விஷயமாகத்தான்?''

"அப்புறம்?''

"அப்புறம் என்ன இருக்கிறது? பாக்கித்தொகை ஸாதாரணமார்க்கமாய்க் கொடுக்க முடியாதளவு ஜாஸ்தியாகிவிட்டால், வீரநகரம் ஏலத்துக்கு வந்துவிடுகிறது. அப்போது வீரநகரத்தை நவகுமாரர் ஏலத்தில் எடுத்தாலும் எடுக்கக்கூடும். இதற்கு முன் இவ்வித ஸம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன.''

"இவ்வளவுதூரம் நீர் முன்யோசனை செய்திருக்கிறீர் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. கேட்கக்கேட்க என்பாடு ப்ரமித்துப் போய்விட்டது. ஸரி, இருக்கட்டும், இவ்வளவு ஸாமர்த்யமாய் யோசனை செய்துவிட்டீரே. என் பரிபாலனத்தின் கீழ் இருக்கும்போது உண்டாகும் கலஹங்கள், தீர்வை பாக்கி முதலியவற்றிற்கு மான்லிங்கின் கார்யஸ்தர் என்னை உத்தரவாதியாக்கி வீரநகரத்துக்கு மாத்ரமன்றி தேவிபுரத்துக்குக் கூடச்சேர்த்து ஒரு புதிய கார்யஸ்தரை ஏற்படுத்துவது கூடாதா?''

"அதற்கெல்லாம் தாங்கள் பயப்படவேண்டாம். மான்லிங்கின் கார்யஸ்தரை நான் சென்ற வாரம் பார்க்கப்போயிருந்தேன். அப்போதே அவர் என்னிஷ்டப்படி ஸகல ஏற்பாடுகளும் செய்வதாக ஒத்துக்கொண்டுவிட்டார்.''

"நானும் என் நாட்களில் எவ்வளவோ துணிகரமான செயல்கள் புரிந்திருக்கிறேன். ஆனால் உமது தைர்யமும், மன உறுதிப்பாடும், அஞ்சா நெஞ்சமும் எனக்கே அதிக ஆச்சர்யமாயிருக்கிறது.''

"எனது தைர்யமும் எனது ஏற்பாடும் என்ன இருக்கிறது? எல்லாம் எனது எஜமானர் தேவிபுரத்துக்கு அதிபதியாகி வீரநகரத்தையும் அதனுடன் சேர்த்துக்கொண்டு இரண்டு ஜமீன்களையும் ஸர்வ ஸ்வதந்த்ரபாத்யதைகளுடன் அரசாளுவதைக் கண்ணாரக் கண்டு களிப்பதற்காகத்தானே.''

"ஆனால் இரண்டு நாட்டு ராஜகுடும்பங்களுக்குள் நெடுநாளாக இருந்துவரும் த்வேஷத்தை அகற்றி அவைகளை என்றைக்கும் ஐக்யஞ் செய்விப்பதற்காக எனது தர்மபத்நி ஒரு யோசனை செய்திருக்கிறாள். அது ஸ்த்ரீ புத்தியாயிருந்தாலும் அநுஸரிக்கத்தக்கதென்று எனக்குத் தோன்றுகிறது.''

"தன்னுடைய காருண்ய மனதுக்கேற்ப அம்மாது சிரோமணி எந்தா யோசனை செய்திருக்கிறாள். கோழைமனதில்லாத புருஷர்களுடைய நோக்கங்களுக்கும் கார்யங்களுக்கும் ஸ்த்ரீகளுடைய புத்திமதிகள் சற்றும் பொருந்தாது.''



வயிற்றிலிருப்பதைக்கூடப் பூறிப்பார்க்கும் இயல்பினராகிய தமது மந்த்ரிக்கு தமது குடும்ப ரஹஸ்யங்களெல்லாம் ஆதியோடந்தமாய்த்தெரிந்திருப்பதைக் கண்ட நவகுமாரர் கோபாக்ராந்தராயினர். என்ன கோபம் வந்தென்ன? எதிரிலிருப்பவர் யார்? இதற்கெல்லாம் அவர் பயந்துவிடுவாரா? கோகிலதாஸ் தம் எஜமானரின் மனோநிலைமையைக் கண்டுகொண்டார்.

"அடியேனிடத்தில் தாங்கள் எவ்வளவு நம்பிக்கை பாராட்டுகிறீர்களோ அதைவிட அதிகமாகவே தங்களுடைய மனைவியாகிய அந்த ஸ்த்ரீரத்நம் என்னிடத்தில் பாராட்டி வருகிறார்கள். தேவிபுரத்து ராஜகுடும்பத்தினருடைய நன்மையைக்கோரி இந்த நாற்பது வருஷகாலமாக எப்படி ஸ்வயலாபம் ஒன்றையும் உத்தேசிக்காமல் அந்தரங்க சுத்தியுடன் உழைத்துவந்தேனோ அப்படியே மனப்பூர்த்தியாய் இன்னும் அவர்களுக்காக உழைக்க இந்ததேகத்தை அர்ப்பணஞ்செய்துள்ளேன் என்னும் விஷயம் தங்களுடைய மனைவியாருக்கு நன்றாய்த் தெரியும்.''

"வீரநகரதேவிபுர ராஜகுடும்பங்களை ஒன்றுசேர்க்கும் உத்தேசத்துடன் என் மனைவி செய்திருக்கும் ஏற்பாடுதான் உமக்குத் தெரிந்திருக்கிறதுபோல்த் தோற்றுகிறதே. அதைப்பற்றி உமது அபிப்ராயமென்ன?''

"ராணியவர்களுடைய தர்மசிந்தைக்கேற்ற ஏற்பாடுதான் அது. அதற்கு ஸந்தேஹமில்லை. அவர்களைப்போல் நியம நிஷ்டை, பக்தி, ஆசாரம் உடைய ஸ்திரீகள் இவ்வுலகிலேயே வேறொருவருங் கிடையாது. ஸாக்ஷாத் ஸீதாதேவியே அவதாரமெடுத்து வந்தது போலிருக்கிறாள் அப்புண்யவதி. அவசியம் நேருமானால் ஸீதாப்ராட்டியாரைப் போலவே நாடு நகரங்கள், வீடுவாசல்கள் யாவற்றையும் துறந்து தன் கணவனுடன் ஆரண்யஞ் செல்வதற்குப் பின்னடையாத உத்தம குணமுடையவள்.''

இவ்வாறு கோகுலதாஸ் அதிக புத்திசாதுர்யத்துடன் மறை பொருளாகக் கூறிய பரிஹாஸமொழிகளின் உட்கருத்தையும், நோக்கத்தையும் நவகுமாரர் அறிந்துகொண்டார்.

"என்னுடைய புத்ரியை நரேந்த்ரனுக்கு மணம் புரிவித்தால், நான் என் ராஜ்யத்தை அவனிடம் ஒப்புவித்துப் பரதேசியாக வனவாஸம் செல்லவேண்டிவரும் என்று நீர் சொல்கிறீர்?''

"தங்களுக்குத் தெரியாததா நான் சொல்லப்போகிறேன்! நான் என்ன, தாங்கள் காலாலிட்ட கட்டளையைத் தலையால் செய்து முடிக்கும் ஓர் ஊழியன். தங்களுடைய பித்ரார்ஜித ஸொத்து தங்கள் வசத்திலிருக்கிறது. தாங்கள்தான் அதன் அருமைபெருமைகளை உள்ளவாறு அறிந்து தங்கள் முன்னோர்களுடைய பெருமைக்கேற்ப அதனை வ்ருத்திசெய்யவேண்டியவர். நான் தங்கள்கை ஆயுதம். என் மனைவி சொல்வது பெண்கள் ஏற்பாடுதான்; ஆனாலும் அவள் சொல்வதும் ஒரு விஷயத்துக்கு உசிதமாகத்தான் இருக்கிறது, ஆதலால் அந்த யோசனையின் யுக்தாயுக்தங்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம்.''

"அகத்தினழகைக் கண்டறிவதில் ஸ்திரீகள் மிகவும் கெட்டிக்காரர்கள்தான். உமது மனைவி அணுவும் பிறழாமல் அதிக புத்திதீக்ஷண்யத்துடன் பால்யனான நரேந்த்ரனது மனோநிலைமையையும் மனப்போக்கையும் அறிந்திருக்கிறாள். ஆனால் புருஷர்களுக்கு ஆழ்ந்த யோசனைகளும் ரஹஸ்யமான போக்குகளும் அநேகம் உண்டு. வெளிக்கு எவ்வளவுதான் சிரித்த முகத்துடனிருந்தாலும் அவர்கள் கனவிலும் தங்களுடைய அவாக்களையும் நோக்கங்களையும் மறக்க மாட்டார்கள். நரேந்த்ரன் பிறந்த வம்சமென்ன? அவன் குலமென்ன? அவனுடைய மூதாதைகள் புரிந்திருக்கும் ப்ரதாபச செயல்களின் சிறப்பென்ன? இவ்வளவு தூரம் யோசிப்பானேன், மொத்தத்தில் அவனுடைய பாட்டனுருடைய குணதிசயங்கள் நமக்குத் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அவருடைய வம்சத்தில் தோன்றியவனன்றோ நரேந்த்ரன்? விதையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா?''

"நரேந்த்ரன் ஹேமலதையின்மீது காதல்கொண்டிருப்பதாகவும் நம்முடன் அவன் தேவிபுரத்துக்குவர எவ்விதமான தடையும் சொல்லமாட்டான் என்பதாகவும் என் மனைவி கூறுகிறாள். என் மகளைப் பெறும் பொருட்டு அவன் தேவிபுரத்து ராஜகுடும்பத்துக்கு ஒரு பிள்ளை போன்று இருப்பான் போலிருக்கிறது.''

'இதற்குமுன் எத்தனையோமுறை நரேந்த்ரனைவிட அதிகமாய்க் காதல் கொண்ட வீரநகரத்து ராஜகுமாரர்கள் பலர் தேவிபுரத்து ராஜகன்னிகைகளை மணம் புரிந்திருக்கிறார்கள். அவர்களிலொருவராவது இதுவரைக்கும் தங்களுடைய பித்ரார்ஜித ஜமீன்களைத் திரஸ்காரம் செய்திருக்கிறார்களா? இதேமாதிரி தேவிபுரத்து அரசர்கள் பலரும் வீரநகரத்துப் பெண்களை விவாஹஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிலாவது தங்களுடைய பிறந்தகத்து ஸ்நேஹ த்வேஷங்களை மறந்ததாகத் தெரிகிறதா?'

"ஆனால் இம்முறைபோல் இரண்டு வம்சத்து பாத்யஸ்தர்களுள் எம்முறையாவது விவாஹஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா? இத்தகைய ஸம்பந்தம் இதுதான் முதல்முதலாகச் செய்வது. ஆதலால் அவர்களிருவருடையவாழ்க்கையும் ஒன்றுசேர்வதால், அவர்களுடைய ராஜ்யங்களும் என்றைக்கும் ஐக்யமுற்று விளங்கும் என்று என் மனைவி உறுதியாய் நம்பியிருக்கிறாள்.''

"பகவானது க்ருபையால் அவ்வுத்தமியின் மனோபீஷ்டம் நிறைவேறி ஸகலமும் அவள் விருப்பத்தின்படி மங்களகரமாய் முடியவேண்டுமென்பதுதான் என்னுடைய மனப்பூர்வமான கோரிக்கையும். ஆனால் முந்நூறு ஆண்டுப் பகை ஒரு நாளில் ஒரு ஸ்த்ரீஜாதியின் யோசனையால் நசித்து விடுவது ஸாத்யமா? தலைமுறை தலைமுறையாய் ஒருவருடைய உயர்சி

யைக்கொண்டு ஒருவர் ஸஹியாத பொறாமையும் விரோதமும் பாராட்டிவரும் இரண்டு ஜன்மவிரோதிகள் ஒரே நாளில் அவ்வளவு பகையையும் நிமிஷமொன மறந்துவிட்டு ஸ்நேஹபாவமாய்க் கைகோத்துக் குலவுவது என்றைகாவது நடக்கக்கூடிய காரியமா.”

“ஏன் நடக்கக்கூடாது. சிறிது கஷ்டஸாத்யமாயிருக்கலாம். இதற்குமுன் இவ்வாறு நடந்ததில்லையா?”

“எஜமானரே,ஸ்த்ரீவார்த்தையைக்கேட்டு அவஸரப்பட்டு நாம் ஒன்றும் செய்துவிடக்கூடாது. பெண் பேச்சைக் கேட்டு இடர்ப்பட்டோர் அநேகர். உயர்குலத்தில் பிறந்து அவ்வுயர்குலத்து குணங்கள் யாவும் அமையப்பெற்றிருக்கும் தாங்கள் இவ்விஷயத்தை ஸாவகாசமாய் யோசித்துப்பார்க்கவேண்டும். ஸாமாந்யனான நான் இவ்விஷயத்தைப்பற்றித் தங்களுக்குப் புத்திமதிகூற அருகனல்லன். தங்கள் மனைவி கூறியதை மறந்துவிட்டுத் தங்களுடைய குடும்பத்தின் அருமை பெருமைகளுக்கேற்றவாறு ஒரு வழியைத் தாங்களே தேடவேண்டும். எவ்வளவுதான் நற்குணம் வாய்ந்தவளாயிருந்தபோதிலும் தங்களுடைய மனைவி வீரநகரத்து ஸ்த்ரீதானே. அவ்விஷயத்தை மறந்துவிடலாமா? இயல்பாக அம்மாது தன் பிறந்தகத்தின் மீதுதானே அன்பு பாராட்டுவாள். கேவலம் ஒரு ஸ்த்ரீயை த்ருப்திசெய்வதற்காகத் தங்களுடையமுன்னோர்களுடைய இஷ்டத்துக்குவிரோதமாக நடப்பது தர்மமா? வீரநகரத்துராஜகுடும்பத்துல் உதித்தவனாகிய நரேந்தானுக்குத் தேவிபுரத்தைக் கொடுத்துவிடத் தாங்கள் யோசிப்பது அடுக்குமா? சென்ற முந்நூறு வருஷ காலமாகக் கருடனைக்கண்ட ஸர்ப்பத்தைப் போல் நடுங்கிக்கொண்டிருந்த தேவிபுரத்தாருக்குத் தாங்கள் கீழ்ப்படிவது சிறப்பா? தேவிபுரத்து அரசர்கள்செய்யும் காரியமா இது? உமதுமுன்னோர்கள் உயிருடனிருந்தால் உம்மை எவ்வளவு மதிப்பார்கள்? அவர்கள் உம்மை நம்பிக்கைத்ரோகி என்று ஏசமாட்டார்களா? தங்களுக்கே தோன்றவில்லையா தாங்கள் செய்ய உத்தேசிக்கும் காரியத்தின் பெருமை சிறுமை?”

“போதும் போதும், ஒருகாலும் அத்தகைய இழிவான காரியம் செய்யவேமாட்டேன். என்னுடைய ஸைந்யங்களெல்லாம் ரணகளத்தில் மந்தைமந்தையாய் மடிந்து கடைசியில் என்னுடன் நூறுவீரர்கள் மாத்ரமே தங்கியிருந்தால்கூட அக்காலத்திலும் ஒரு கைபார்த்துவிடுவேனேயொழிய இந்தமானக்கேடான ஏற்பாட்டிற்கு உடன்படமாட்டேன். என் ப்ராணன் போகும்வரைக்கும் தேவிபுரத்துக்காக நான் சண்டை செய்தே தீருவேன்,”

“வயதுமுதிராமுதிர நரேந்த்ரனுடைய ஆண்மையும் வீரமும் குன்றுமென்று எண்ணலாமா? இப்போது அவன் யாதுமறியாமல் ஏதோ சிறுபிள்ளைத்தனமாய் ஹேமலதையைக் காதலித்து அவளையே பின்பற்றித் திரிந்துகொண்டிருக்கிறான். இதைக்கண்டு நாம் அவன் பெரியவனான பின்பும் இவ்வாறே அவளுடைய அழகால் கட்டுண்டு தன் வம்சத்தினையும் அதன் நோக்கங்களையும் மறந்து கிடப்பான் என்று கருதிவிடலாமா? இப்போதே தன் பாட்டனாருடைய வீரச்செயல்களைக் கேட்கும்போதெல்லாம் அவன் தன் நெற்றியை நெறித்துக்கொள்வதும் அவனுடைய கண்களும் முகமும் சிவப்பதுமாயிருக்கிறது. வீரநகரத்து ராஜவம்சத்துக் கத்தியைத் தோடர்மாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அவ்விளங்குமரன் ஹேமலதையின் நேசத்துக்காக தனது குலம், அக்குலத்தினர் புரிந்திருக்கும் வீரச்செயல்கள், அவர்களுடைய விருப்பு வெறுப்புகள் யாவற்றையும் மறந்துவிடுவானா? நரேந்த்ரன் ஸாமாந்யமானவனென்று நாம் நினைக்கக்கூடாது,உமது மனைவி சொல்வதெல்லாம் என்ன? தான் பிறந்த குடும்பத்தின் செல்வத்தையும் செல்வாக்கையும் வ்ருத்திசெய்யவேண்டும் என்பதுதான் அவளுடைய ஏற்பாட்டின் உள்நோக்கம். அவளுடைய புத்திமதியை அநுஸரித்து நடத்தலால் உண்டாகும் பலனென்ன? தேவிபுரம் மாற்றான் வசப்பட்டுப் பகைவராகிய வீரநகரத்தாருக்குக் கீழ்ப்படிந்து கடைசியில் அதோகதி அடைவதுதான்.”

நவகுமாரர் யோசனையில் ஆழ்ந்துவிட்டார்.வெகுநேரம் கழிந்தபின் கண்ணைத்திறந்து பெருமூச்செறிந்துகொண்டே பேசஆரம்பித்தார்:

“கோகுலதாஸ்,நீர்சொல்வதுமுழுதும் ஸரி,உமது வார்த்தைகள் அணுவளவேனும் பொய்க்காது; எல்லாம் நீர் சொன்னபடியேதான் நடக்கும். உமது சூழ்ச்சிகளும், ஏற்பாடுகளும் சிலவேளை மனஸாக்ஷிக்கு விரோதமாயிருந்தாலுங்கூட உமது முன்யோசனையும், தூரத்ருஷ்டியும் ஒப்புயர்வற்றனவென்பதற்கு ஆக்ஷேபமில்லை. இரண்டு குடும்பத்தினருக்கும் பலதடவை யுத்தம் நடந்திருக்கிறது. மூன்று நூற்றாண்டுகளாக ஸமாதானமென்பதே இல்லாமல் ஒருவரையொருவர் வெட்டி மடிப்பதிலேயே கண்ணாயிருந்துவருகின்றனர். என்றைக்கும் இந்த பரஸ்பர விரோதமும் சச்சரவும் ஓயாது இவ்வாறேதான் நடந்துகொண்டிருக்கும். அதைத் தவிர்ப்பது அஸாத்யம். என்னுடைய மனைவியின் புத்திமதிகளைப் பற்றி எனக்கு எக்காலத்தும் ஸம்சயம் உண்டு. அவளோ தான் பிறந்த குடும்பத்தைப்பற்றி அதிக சிறப்பாகவும் மேன்மையாகவும் நினைத்துக்கொள்பவள். என்னதான் என் மனைவியாயிருந்தாலும் அவளுடைய பிறந்தகம் வீரநகரம்தானே. அதன் நினைவு எங்கே போகும்?”

கோகுலதாஸ் போட்ட தூண்டிமுள் ஸரியாய்ப் பிடித்துக்கொண்டது. நவகுமாரருடைய மனம் அடியோடு மாறிவிட்டது. புலி ஸிம்ஹம் முதலிய காட்டு ம்ருகங்களைத் தான் சொல்லும்படியெல்லாம் செய்யப் பழக்கிய வீரனுக்கு உண்டாகும் ஸந்தோஷத்தைவிட பதினமடங்கு அதிகமான ஸந்தோஷத்தையடைந்தார் கோகுலதாஸ். ஆனையானை தன் தலைமேல் தானே மண்ணைப் போட்டுக்கொண்டதாம் என்பது போல் காரியம் பூர்த்தியாகும் தருணத்தில் ஸ்வ



ல்ப அஜாக்ரதையால் எல்லாவற்றையும் கெடுத்துக் கொள்பவர் அல்லர் கோகுலதாஸ். அவர் தம் வெற்றியையும் குதூஹலத்தையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் முன்னிலும் அதிக விநயமாயும் பணிவாயும் பேசலுற்றார்.

“என் முன்யோசனையும் என் ஸாமர்த்யமும் எப்படியாகும்? எல்லாம்தங்களிடத்திலிருந்து நான் கற்றுக்கொண்டதுதான். தங்களுடைய யோசனைகளும் ஏற்பாடுகளும்தான் நான் சற்றுமுன் எடுத்துச்சொல்லியது. தங்களுக்குத் தெரியாதது ஒன்றும் நான் புதிதாய்ச்சொல்லிவிடவில்லை. இவ்வளவு தூரம் நான் கக்ஷிகட்டிப் பேசியதன் முக்கியதாத்பர்யம் என்ன? தேவிபுரம் தேவிபுரத்தானுக்கே உரியதாகவேண்டுமேயல்லாமல் ஒருபோதும் வீரநகரத்தான் வசப்படக்கூடாதென்பதைத்தான் திரும்பத்திரும்ப பலவார்த்தைகளால் சொல்லலானேன். ஸந்ததியற்றுப்போனால் ஸ்வீகாரம் செய்துகொள்வது தொன்றுதொட்டு வழங்கிவரும் ஆசாரம். அவ்வாறு ஸ்வீகாரஞ்செய்துகொள்ளப்பட்ட புத்ரன் யதார்த்தபுத்ரனைப்போல்வைதிக கர்மங்களைச்செய்து ஸொத்தை யடைகிறான். அவ்வாறே தாங்களும் மனதிற்கிசைந்த ஓரிளங்குமரனை வளர்த்துக்கொள்ளுங்கள். அச்சிறுவன் உமது காலத்துக்குப் பின் தேவிபுரத்தைப் பரிபாலித்து வருவான். ஆனால் கனம்பொருந்திய தங்களுடைய மனைவியாருக்கு தம்முடைய ஏகபுத்ரியைவிட்டுப்பிரிந்திருக்க விருப்பமில்லாவிடின் தேவிபுரத்தின் மேன்மையை யறிந்து அதைமுன்னுக்குக்கொண்டுவரக்கூடிய உயர்குலத்திலுதித்த தேவிபுரத்துச் சீமானொருவனுக்கு ஹேமலதையை மணம்புரிவித்துத் தம்பதிகளிருவரையும் தேவிபுரத்து அதிபதிகளாக்கி விடலாம்.”

“ஏன் நிறுத்துகிறீர்கள், நீர் சொலவதெல்லாம் என்மனதுக்கு இசைந்ததாகவும் அனுபவத்துக்கேற்றதாகவுமிருக்கிறது. இன்னும் நீர் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லுங்கள்,நான் கேட்கிறேன். நீர்குறித்த குணாதிசயங்கள் பொருந்திய சிறுவன் ஒருவனைத் தேடிப்பொறுக்க நாம் அதிக கஷ்டப்படவேண்டும்.”

“எஜமானரே,வெகுதூரம் தேடித்திரியவேண்டிய அவசியமேயில்லை. நல்லபொருள் நமது கையிலேயே இருக்கிறது,நம் அரண்மனைக்குள்ளேயே நாம் நாடும் யௌவனபுருஷன் ஒருவன் இருக்கிறான். கொஞ்சகாலத்துக்கு முன் தேவிபுரத்திலிருந்து ஸிரீஷ் என்னும் தாய்தகப்பனற்ற ஒரு சிறுவன் வைதவ்யமடைந்த தன் ஸஹோதரி சைவலினியுடன் தங்களை ஆச்ரயித்து வந்திருக்கிறான். அவர்கள் இப்போது தரித்ரஸ்திதியிலிருந்தாலும் நல்ல உயர்குடியில் ஜனித்தவர்கள். அவர்களுடைய பெற்றோர்கள் தேவிபுரராஜவம்சத்தில் தோன்றியவர்கள். நான் ஸிரீஷை சிறுவயது முதல் அறிவேன். அவன் வயல்புறங்களில் இதரபிள்ளைகளுடன் விளையாடும்போது கவனித்திருக்கிறேன். மஹா சாந்தகுணமுடையவன்; அவனுடைய முன்னோர்களுடைய கம்பீரமான தோற்றமும் ராஜ பார்வையும் அவனிடம் குடிகொண்டிருக்கின்றன. தேவிபுரத்து ராஜவம்சத்தைச் சேர்ந்தவனாகலால் அவ்வம்சத்தார்களுடைய விரோதிகளுக்குச் கீழ்ப்படியாத சிறந்த ரோஷ குணமும் அவனிடம் பூர்ணமாயிருக்கின்றது. பால்ய முதல் நரேந்த்ரனுடன் விளையாட்டுத் தோழியாய்ப் பழகிவந்த போதிலும் ஹேமலதைக்கு ஸிரீஷினிடம் அதிக மதிப்பும் கண்டமும் உண்டு.

“நண்பரே, நான்கூட ஸிரீஷைக் கவனித்திருக்கிறேன். அவன் எடுத்த காரியத்தைப் பொறுமையாய் விடாமுயற்சியுடன் செய்து முடிக்கும் திறனுடையவன். அவனுடைய மனோதீரமும் வஜ்ரதேகமும் வேறெவனுக்கும் வராது. ஒருநாள் அவனுக்கும் நரேந்த்ரனுக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்றாம். மனஸ்தாபம் முற்றி சண்டைக்கு வந்துவிட்டது. ஸிரீஷ் நரேந்த்ரனை ஒரே தூக்காய்த்தூக்கிக் கோபத்துடன் மணலின்மீது விட்டெறிந்தானாம். ஹேமலதை என்னிடம் வந்து சொன்னாள்.”

“தங்களுடையமகளைக் கல்யாணம்செய்துகொண்டு அவன் தேவிபுரத்தரசனாகும்போது இப்போதடித்த விதமே வீரநகரத்து அதிபதியை அடியோடு தோற்கடித்து நரேந்த்ரனது பாட்டனார் நமக்கிழைத்த தீங்குக்கு பழிக்குப்பழி வாங்குவான்!”

“கோகுலதாஸ், சற்று நேரத்துக்குள் புங்கானுபுங்கமாய் அடுக்கிவிட்டீரே! நீர் சொல்வதை ஸரியாய் க்ரஹிக்கக்கூட எனக்கு அவகாசமில்லாமல் பேசிக்கொண்டேபோகிறீர். நீர் சொல்வது ஒவ்வொரு விஷயமும் அருமையானது. நீர் உமது ஏற்பாடுகளை ஸரியாகச் செய்துவாருங்கள். நவகுமாரர் அவருடைய ஆண்மைக்கேற்றவாறு சில யோசனைகள் செய்திருக்கிறார். ஒன்று மாத்ரம் ஸத்யம். என்றைக்கும் தேவிபுரத்தை வீரநகரத்தான் அடையான்.”

நவகுமாரர் போய்விட்டார்.

கோதுலதாஸ் அறையில் விளக்கு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. ஸூர்யோதயமாய்விட்டது. கதவு த்வாரங்களின் வழியாய்க் கதிரவன் ஒளி அறைக்குள் ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. வயது முதிர்ந்து தள்ளாடும் ஸ்திதியிலிருக்கும் அக்கிழவர் இன்னும் தீர்க்காலோசனையில் ஆழ்ந்திருந்தார்.

“அஸ்திவாரம் பலமாய்ப் போட்டாயிற்று. நான் மாத்திரம் இப்போதிருக்கும் கோகுலதாஸாகவே இன்னும் கொஞ்சகாலமுமிருந்தால் கட்டடமும் சீக்கிரம் எழும்பிவிடும். நவகுமாரருடைய மனைவி நமக்கு விரோதமாயிருக்கிறாள். அவளை லேசானவள் என்று எண்ணிவிடக்கூடாது. தன்னாலானமட்டும் என் ஏற்பாட்டைக் கலைக்க அவள் ப்ரயத்னப்படுவாள், அவள் குணத்தில் எவ்வளவு சிரேஷ்டமானவளோ அவ்வளவு செல்வாக்கும் திடசித்தமும் உடையவள், தன்னுடைய இஷ்ட ப்ரகாரம் திடசித்தமற்ற தன் கணவனை இணங்கச்செய்வதில் அவள் மிகவும்ஸாமர்த்யமுடையவள். அவரும் அவளுடைய வார்த்தைக்கெதிர்வார்த்தை சொல்வது துர்லபம். அவள் கீறும் கோட்டைத்தாண்ட அவர் துணியமாட்டார். ஆனாலும் அவள் ஸத்ரீதானே. பெண்புத்தி பேதமைத்து

என்பது நிஜமல்லவா. அவள் சிறுவர்களின் அழகையும் பொருத்தத்தையும் கண்டு அதையே பெரிதாக எண்ணிவிட்டாள். அந்த ஆனந்தத்தில் அவள் ராஜநடும் பத்து ப்ரதாபத்தையும் கீர்த்தியையும் அடியோடு மறந்துவிட்டாள். நவகுமாரர் தமக்கும் தமது குடும்பத்துக்கும் த்ரோகம் செய்யாதிருந்தால் அப்போது தான் அவர் ஆண்மகன் என்னும் பெயருக்கு அருகராவர். இவ்விஷயத்தில்தான் அவருடைய ஆண்மை தெரியவேண்டும். ராத்ரியெல்லாம் நான் அவருக்குஸரியானபடி போதனை செய்திருக்கிறேன். அவருடைய யோசனைகளையெல்லாம் முழுதும் மாற்றிவிட்டேன். அவருக்குப்புதிய உபதேசம் செய்திருக்கிறேன். அவ்வுபதேசத்தின் மஹிமையால் அவருக்கும், அவருடைய மனைவிக்கும் கொஞ்சம் விவாதம் உண்டாகும். அத்தருணத்தில் நான் அவ்விடம் இருத்தல் யுக்தமன்று. தங்களுடைய கார்யம் ஸித்தியாகாதுபோய்விடுமென்று தோன்றினால் ஸ்த்ரீகள் சில ஸமயங்களில் கண்ணீர் சொரியத்தொடங்குவார்கள். அதைக்கண்டு மனமிளகிப் பதில்சொல்லத் தெரியாமல் கையைப் பிசைந்துகொண்டு நவகுமாரர் முணுமுணுப்புடன் மறுபடியும் என்னிடம் வருவார். நவகுமாரரே, நீர்தான் உமது குடும்பத்தை மறந்தாலும், அதைக் கனவிலும் மறவாமல் அதற்காகப் பலவிதங்களில் உழைத்துவருபவன் ஒருவனிருக்கிறான். அவனிருக்குமட்டும் உமது ஜபம் பலிக்காது. கோகுலதாஸ் தன்கடமையை உள்ளவாறு அறிந்திருக்கிறான். பகலுமிரவும் அவன் அதையே ஸ்மரணை செய்துகொண்டிருக்கிறான். அவன் எடுத்த கார்யத்தை எளிதில் கைசோரவிடுபவனல்லன். எவ்விதத்திலாவது அதை ஸாதித்தேமுடிப்பான்" என்று கோகுலதாஸ் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

---

## ஐரோப்பிய மஹா யுத்தம்

இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் சென்ற 7 மாதகாலமாக நடந்துவரும் மஹா யுத்தத்திற்கு ஏற்பட்ட காரணங்கள், ஐரோப்பிய தேசங்களின் சரித்திரம், அதன் மூலமாய்வெளியாகும் அநேக ஸங்க்ஷேம மானரஹஸ்யங்கள் மற்றும் இந்தயுத்தத்தில்ஸம்பந்தப்பட்ட எல்லாவிபரங்களும் அடங்கிய புத்தகம் ஒன்று (ஐரோப்பிய மஹாயுத்தம், 256 பக்கங்கள், 58 அழகிய ஆப்டோன் படங்கள் விலை ரூ. 1-4-0) வெளியிட்டிருப்பதை நம் நேயர்கள் அறிவார்கள். இப்புத்தகம் கூடியவரை சுத்தமாயும் விஸ்தாரமாயும், தெளிவாயும், படிப்பவருக்கு மனோத்ஸாகத்தை யுண்டுபண்ணும் விதமாகவும் எழுதப்பெற்றிருக்கிறது. 'இம்மாதிரி யுத்த புஸ்தகம் அனேகம் வெளிவந்திருப்பினும், நமது ஆபீஸ் பதிப்பு, மிகவும் சிலாக்கியமாயிருக்கிறதென்று' நமது சந்தா நேயர்கள் அநேகர் எழுதியிருப்பது மிகுந்த திருப்தியைத் தருகிறது. தவிர, இப் புத்தகத்தைப் பற்றிய முக்கிய பத்திரிகைகளின் சிறந்த அபிப்பிராயங்கள், இச்சஞ்சிகையின் கடைசிப்பக்கத்தில் இங்கிலீஷிலியே ப்ரசுரிக்கப்பட்டிருப்பதை நம் நேயர்கள் அறிய விரும்புகிறோம்.

## விசேஷக் குறிப்புகள்

## NEWS & NOTES

**காலஞ்சென்ற ஸ்ரீ கோகலே அவர்களின் அனுதாபத்திற்காகச் சென்னைபுரிவாஸிகளால் கூட்டப்பட்ட ஒருமீடிங்.**—இம்மீடிங் மார்ச்மீ 4உ விக்டோரியா டவுன்ஹாலுக்கடுத்த வெளிப்புறத்தில் திறந்த மைதானத்தில் $5\frac{1}{2}$ மணிக்குக்கூடிற்று. வெகுஜனங்கள் திரளாய் வந்திருந்ததுமன்றி, பல ஆங்கிலேயரும் வந்திருந்தார்கள். இதில் அக்கிராஸனம் வஹித்த கனம் பி எஸ் சிவஸ்வாமி ஐயரவர்கள், ஸ்ரீமான் கோகலே அவர்களின் மிகவும் உயர்ந்த குணங்களைப் பற்றியும் நமது இந்தியாவுக்கு பற்பல விதமாய் அவர் உழைத்திருப்பதைப்பற்றியும் விவரித்துச் சொன்னார். இம்மீடிங்கில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள்: "ஸ்ரீமான் கோகலேயைப்போல் ஓர் உருவச்சிலை சென்னையில் ஸ்தாபிக்கவேண்டும்; அவர் ஸ்தாபித்து அருமையாய்ப்பாலித்துவந்த இந்திய ஊழியச் சங்கத்துக்கு கூடியவரையில் பொருளுதவி செய்து ஆதரிக்கவேண்டும்;" ஆகிய இவைகளே. இவை யாவருக்கும் திருப்தியையே உண்டாக்கும் என்று நம்புகிறோம்.

***

**1907-ம் ஹூ முதல் 1912-ம் ஹூ வரை ப்ரிடிஷ் இந்தியாவில் கல்வி அபிவிருத்தி.**— 1912-ம் வருஷத்தில் ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளின் தொகை 67,50,000. அதாவது 1907-ம் வருஷத்தைவிட 100-க்கு 26 பங்கு அதிகம். பள்ளிக்கூடத்தில் படிப்பவர்களின் தொகை 100 ல் 2. 7. கல்வி விஷயமாக 1907-ல் 3,75,000-பவுனிலிருந்து 1912-ல் 52,50,000-பவுன் செலவு ஏறியிருக்கிறது. ப்ரைமெரி ஸ்கூல்கள், 1,10,692. அவைகளில் கற்கும் மாணவர்கள் 45,00,000; உபாத்தியாயர்கள் 1,71,359. ஸெகண்டரி ஸ்கூல்களும் விருத்தியாயிருக்கின்றன 4,00,000 மாணவர்கள் 1912-ல் படித்திருக்கிறார்கள். யூனிவர்ஸிடியைச் சேர்ந்த காலேஜுகளில் 28,196, பிள்ளைகள் (இதில் 279, பெண்கள்) படித்திருக்கிறார்கள். இருபது வருஷத்துக்கு முன் 8060 பிள்ளைகள் தான் இருந்தார்கள்.

***

இப்ரீஸ்:—இந்நகர் பெல்ஜியத்திலுள்ள புராதன நகரங்களில்ஒன்று. இங்கு மிகுந்த சித்திர வேலைப்பாடமைந்த பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. அவைகளுள் கிளாத் ஹால் என்ற பிரமாண்டமான கட்டடம் 1200-ம் வருஷத்தில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. அதைக் கட்டிமுடிக்க 100-வருஷங்கள் ஆயின. அந்நகரில் முன்பிருந்த ஜனத்தொகை 2 லட்சம். உலகத்தில் மிகவும் புராதனமும், அழகும், சிறப்பும் வாய்ந்தது. இப்பொழுதோ, இவ்விடத்திய அழகிய கட்டடங்களில் அநேகம், ஜெர்மன் வெடிகுண்டுகளுக்கு இரையாய்விட்டன.

Supplement to the "VIVEKA BODHINI."  "விவேக போதினி" அனுபந்தம்.



லக்ஷ்மி

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்தஹூ பங்குனிமீ : 1915-ஹூ ஏப்ரல்மீ } பகுதி 10

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 35. உபதேசநிலை ஒழுங்கு

பிறியாத தன்னருட் சிவஞானி யாய்வந்து
    பேசரிய வாசி யாலே
பேரின்ப வுண்மையை யளித்தனையென் மனதறப்
    பேரம்ப லக்க டவுளாய்
அறிவா யிருந்திடும் நாதவொலி காட்டியே
    யமிர்தப் பிரவாக சித்தி
யருளினைய லாதுதிரு வம்பலமு மாகியெனை
    யாண்டனைபி னெய்தி நெறியாய்க்
குறிதா னளித்தனைநன் மரவுரிகொ ளந்தணக்
    கோலமா யசபா நலங்
கூறினபின் மௌனியாய்ச் சும்மா விருக்கநெறி
    கூட்டினை யெலாமி ருக்கச்
சிறியேன் மயங்கிமிக வறிவின்மை யாவனோ
    தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
    தேசோ மயா னந்தமே.

(தேசோமயானந்தம்—6)

### 36. ஒழுவிலொடுக்க அருமை

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
    கரடிவெம் புலிவா யையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
    கட்செவி யெடுத்தாட் டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
    வேதித்து விற்றுண் ணலாம்
வேறொருவர் காணம லுலகத்து லாவலாம்
    விண்ணவரை யேவல் கொளலாஞ்
சந்ததமு மிளமையொ டிருக்கலா மற்றொரு
    சரீரத்தி னும்புகு தலாஞ்
சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
    தன்னிகரில் சித்தி பெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
    திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
    தேசோ மயானந் தமே.

(தேசோமயானந்தம்—8)

### 37. தேஹத்தின் இழிவு

காக மோடுகழு கலகை நாய்நரிகள்
    சுற்று சோறிடுது ருத்தியைக்
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
    காம வேண்டன சாலையை
மோக வாசைமுறி யிட்ட பெட்டியையு
    மலமி குந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
    முடங்க லார்கிடை சாக்கினை
மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக
    வேத மோதியகு லாலனார்
வனைய வெய்யதடி காரனுடமன்
    வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெனக்கருதி
    யைய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
    சிற்சு கோதய விலாசமே.

(சிற்சுகோதய விலாசம்—1)

ராக்ஷஸ வரு சித்திரைமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | துஇ | இங் | தமிழ் | வார | ராக்ஷஸ வரு சித்திரைமீ — சாலிசகம் 1837, கலியப்தம் 5916 — பசலி 1324, கொல்லம்-1090 — 1915 வரு ஏப்ரல்மீ மேமீ |
|---|---|---|---|---|---|
| ரபுசு | 27 | 13 | 1 | செ | சது 24-20, உத்தி 17-52, மா 18-18, சகு 24-20, ரா 19-37, அக 30-35, மேஷரவி 23-38, ரே 2 புத 22-19, பூரட் 1 சுக் 58-17, சூன்யதிதி சித்திரவிஷு வை சிரா தமிழ் வருஷப்பண்டிகை சூன்யார்கம், |
| கு | 28 | 14 | 2 | புத | அமா 27-37, ரேவ 22-32, வை 18-12, நா 27-37, தியா-0-0 பூரட் 2 குரு 30-0, சூன்யதிதி சர்வ அமா கல்பாதி |
| பு | 29 | 15 | 3 | வியா | பிர 31-50, அசு 28-7, விஷ் 18-51, சிம் 31-50, திவி 17-11, ரா 23-57, அதிகவைசா சுத் ரே 3 புத 1-3, மே சு பிரதஜுஷ் |
| ரசெ புசு | 30 | 16 | 4 | வெ | துதி 36-38, பர 34-17, பிரி 20-1, பா 4-14, தியா-0-0 அசு 2 ரவி 47-54, உத்தி 2 செ 24-9, ரே 4 புத 40-0, பூரட் 2 சுக் 56-27, மகா ராகு கடக கேது 10-6, சந்-தரி. |
| ரா] | 1 ஜமாதிலாகர் | 17 | 5 | சனி | திரு 41-43, *கார் 40-44, ஆயு 21-26, தை 9-10, திவி 7-30, அக 30-41, கார் உப திரேயுகாதி கல்பாதி. |
| பு | 2 | 18 | 6 | ஞா | சது 46-37, ரோ 47-1, ஸௌ 22-50, வணி 14-10, திவி 24-55, மே புத 20-0, சது விரு கரிநாள் தாபவிசேஷம் |
| புசு | 3 | 19 | 7 | திங் | பஞ் 51-2, மிரு 52-50, சோ 23-55, பவ 18-49, திவி 2-22, அசு 2 புத 57-2, பூரட் 3 சுக் 44-57. [புத 51-0 சஷ்உப. |
| ரசெ | 4 | 20 | 8 | செ | சஷ் 54-36, திரு 57-50, அதி 24-28, கௌ 22-49, திவி 15-35, அசு 3 ரவி 13-11, உத்தி 3 செ 42-24, அசு 3 |
| பு] | 5 | 21 | 9 | புத | சப் 57-0, புன 60-0, சுக 24-16, கர 25-48, திவி 29-44, அக 30-51, ரிஷபாய 16-15, சப் விரு மழை 9-க்குள். |
| பு-சு | 6 | 22 | 10 | வியா | அஷ் 58-12, புன 1-39, திரு 23-9, பத் 27-36, திவி 22-32, அசு 4 புத 45-34, மீனசுக் 33-27. |
| ர | 7 | 23 | 11 | வெ | நவ 58-6, பூச 4-19, சூல 21-4, பா 28-9, ரா 6-12, அசு 4 ரவி 38-4. |
| பு | 8 | 24 | 12 | சனி | தச 56-42, ஆயி 5-44, கண் 17-59, தை 27-24, ரா 4-56, பர 1-புத 40-9. |
| செசு | 9 | 25 | 13 | ஞா | ஏகா 54-9, மக 5-56, விர் 14-0, வணி 25-25, திவி 25-38, அக 30-54, உத்தி 4 செ 60-0, உத் 1 சுக் 22-0, ஸ்மா ஏகா. |
| பு | 10 | 26 | 14 | திங் | துவா 50-32, பூர 5-2, திரு 9-0, பவ 22-0, திவி 22-27, பர 2-புத 34-43, வை ஏகா பிரவாகமேகோபத்தி |
| ர | 11 | 27 | 15 | செ | திர 46-7, உத்தி 3-7, வியா 3-12, ஹர் 53-38, கௌ 18-19, திவி 23-11, பர 1 ரவி 4-14, பிரதோ கரிநாள். [உத்தி 2 சுக் 10-28. |
| பு-சு | 12 | 28 | 16 | புத | சது 41-1, அஸ் 0-25, சித் 56-40, வஜ் 49-54, கர 13-34, திவி 19-18, பர 3 புத 28-0, |
| செ | 13 | 29 | 17 | வியா | ◯ பௌ 35-23, சுவா 53-14, சித் 42-32, பத 8-12, திவி 9-52, அக 30-57, ரேவ 1 செ 18-26. |
| ரபு கு-சு | 14 | 30 | 18 | வெ | பிர 29-26, விசா 49-8, விய 34-57, கௌ 29-26, திவி 6-17, ரா 29-24, அதிகவைசாபகு பர 2 ரவி 30-25, பர 4 புத 20-0, பூரட் 3 குரு 36-30, உத்தி 3 சு 60-0, பிரதமா இஷ் வியசிரா. |
|  | 15 | 1 | 19 | சனி | துதி 23-25, அனு 45-5, வரி 27-20, கர 23-25, சே 3-24, ரா 29-14, திதித்வயம் மழை 4-க்குள். [கார் 1 புத 11-47, சதுர்திதி சங் சது. |
| ரபு | 16 | 2 மே | 20 | ஞா | திரு 17-30, சே 41-12, பரி 19-50, பத் 17-30, சே 2-11, ரா 28-57, பர 3 ரவி 56-51, |
| செசு | 17 | 3 | 21 | திங் | சது 11-50, மூல 37-36, சிவ 12-31, பா 11-50, சே 4-0, ரா 2-33, அக 31-3, ரே 2 செ 36-52, உத் 4 சுக் 47-22 |
| பு | 18 | 4 | 22 | செ | பஞ் 6-32, பூரா 34-36, சித் 5-31, சா 53-31, தை 6 32, திவி 0-24, ரா 22-46, ரிஷபபுத 1-33, இடிமின்னல் 10-க்குள். |
| பசு | 19 | 5 | 23 | புத | சஷ் 1-58, சப் 56-6, உத்தி 32-18, சுப 53-15, வணி 1-58, ரா 11-0, பச்சாதுதயபுத 10-38, ரே 1 சுக் 18-7. |
| புச | 20 | 6 | 24 | வியா | அஷ் 55-21, திரு 30-56, சுப் 48-20, பா 26-42, ரா 9-47, கார் 3 புத 4-30, மிரு 4 சனி 22-0, காளாஷ்டமி சிரஉப. |
| ரசெ | 21 | 7 | 25 | வெ | நவ 53-39, அவி 30-35, பிரா 44-17, தை 24-30, ரா 17-44, அக 31-6, பர 4 ரவி 24-28, ரே 3 செ 54-50, ரே 2 |
| சு]பு | 22 | 8 | 26 | சனி | தச 53-12, சத 31-24, யா 41-8, வணி 23-25, ரா 16-51, கார் 4 புத 13-30. [சுக் 48-26, அக்னி நக்ஷத்திர 24-28 |
|  | 23 | 9 | 27 | ஞா | ஏசா 54-5, பூரட் 33-29, வை 39-4, பவ 23-38, ரா 27-40, சர்வ ஏகா வை சிரா மழை 7-க்குள். |
| ர ச | 24 | 10 | 28 | திங் | துவா 56-8, உத்தி 36-47, விஷ் 37-56, கௌ 25-6, சே 2-48, கார் 1 ரவி 52-5, ரோ 1 புத 22-30, ரே 3 சுக் 34-0. |
|  | 25 | 11 | 29 | செ | திர 59-24, ரே 41-45, பிரி 37-45, கர 27-46, திவி 8-1, அக 31-10, பிரதோ. |
| ரசபு | 26 | 12 | 30 | புத | சது 60-0, அசு 46-40, ஆயு 58-20, பத் 29-42, ரா 4-35, ரே 4 செ 12-24, ரோ 2 புத 31-12 மே கிரு சதுர்தசிதிதி |
| சு | 27 | 13 | 31 | வியா | சது 3-37, பர 52-43, ஸௌ 39-27, சகு 3-37, திவி 13-5, ரே 4 சுக் 19-30, அமாதிதி சர்வ அமா. [மா சி. |

| | | | |
|---|---|---|---|
| செ புத | ரவி | | சனி |
| சு. கு. ராகு | 4ம ரா கட கே 6மே பு | | |
| | 10மீன சுக் 22ரிஷ புத | | கே |
| | | | |



# விவேக போதினி

தொ. 7] ஆனந்த வரு பங்குனிமீ: [பகுதி. 10

## மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO SALVATION

### 4. ராஜயோகம் (தொடர்ச்சி)

(யோகஸூத்ரச் சுருக்கம்: முதல்பாதம்.)

ராஜயோகத்தையும் அதில் முக்யமான பாகங்களையும் உள்ளபடி உணர, அவைகளுக்கு முதல் நூலாக விருக்கும் பதஞ்ஜலி பகவான் யோகஸூத்ரத்தின் சுருக்கம் ஒருவாறு உணரப்படவேண்டும். இதை ஒரு வழியாக வாவது உணராது பின்வரும் விஸ்தாரங்களை வாசித்தால் அவைகளின் பொருத்தம் நன்கு விளங்காது. இதுபற்றியே இங்கு அந்த யோக ஸூத்ரத்தை சுருக்கி வெளியிடப்புகுவோம்.

யோகஸூத்ரம் நாலுபாதங்களோடுகூடிய ஒரு அத்யாயத்தில் அமைந்துள்ள சுருக்கமான கிரந்தம். இது ஆதியில் விஸ்தாரமாக ப்ரஹ்மாவால் செய்யப்பட்ட யோகசாஸ்திரத்திற்கிணங்க பதஞ்ஜலி பகவானால் 194 ஸூத்ரங்களாக செய்யப்பட்டது. இந்த நூலின்பாதங்களின் அமைப்பை நன்குணராவிடில் மிகுந்த குழப்பத்திற் கிடமாகு மாதலால் அதை முதலில் ஆராயவேண்டிய தவசியம். முதல் பாதத்திற்கு ஸமாதிபாதம் என்றுபெயர். இதிலுள்ள ஸூத்ரங்களில் யோகத்தின் உண்மைத் தன்மையான ஸமாதி இன்னது என்பது விளக்கப்படுகிறது. யோகம் இன்னது என்பது விளங்கினால்தான் அதைக் கைக்கொள்ளவேண்டும் என்ற ஆவல் படிப்போருக்கு ஏற்படும் என்பதுபற்றி இந்தவிஷயம் முதலில் வைக்கப்பட்டுள்ளது. இரண்டாவதற்கு ஸாதனபாதம் என்று பெயர். இது யோகத்திற்கு உபாயங்களான எட்டு அங்கங்களுள் முக்யமான முதல் ஐந்து அங்கங்களை எடுத்து விளக்குகிறது. முதல் அத்யாயம் வாசித்து யோகம் கைக்கொள்ளவிரும்புபவன் அதை நோக்கப்பிடித்து நிலைப்பதற்கு வேண்டிய உபாயங்கள் இங்கு காட்டப்படுகிறது. ஆவலுடையவனுக்கு வழிகாட்டினால்தான் அவன் அதை திடமாகக் கைப்பற்றுவான் என்ற நோக்கத்துடனேயே இந்தபாதம் முதல்பாதத்திற்குப்பின் வைக்கப்பட்டது. இந்தப் பொருத்தத்தை நன்றாக உணராத பெரும்பாலாரும் ஸமாதிபாத விஷயமேயோதும், மற்றைய பாத விஷயங்கள் அனுவசியம் என்றுகருதி யோகத்திலிறங்கித் திண்டாடி மண்டை கலங்குகின்றனர். முதல் பாதத்தில் கூறப்படும் ஸமாதித் தடை நீக்கத்தையே இவர் யோக ஸாதனமாகக்கொண்டு மயங்கி யோகத்தை அணுகமுடியாமலே தவிப்பர். மூன்றாவதற்கு விபூதிபாதம் என்று பெயர். ஸாதனங்கள் உள்ளபடி அமைந்து விட்டதா? ஸமாதி தொடங்கும் நிலை வந்துவிட்டதா? வேண்டிய அளவு வைராக்யம் மனதில் குடிகொண்டுவிட்டதா? என்று அப்யாஸி தானே கண்டுகொள்ளக்கூடியதான அறிகுறிகளும், ஸமாதி அப்யாஸத்திலிறங்குங்கால் தடைகளை அறநீக்குவதற்கு வேண்டிய ஆற்றலைக் கொடுப்பனவும், உபகரித்து திருப்திப்பட்டு மனம்ஓய்ந்து நிலைக்க உதவியாக இருப்பனவுமான, யோகிக்குவரும்

ஸித்திகளை இந்தப் பாதம் விளக்கிக்காட்டும். இந்தப் பாத நோக்கம் உணராதோர், யோகம் வெறும் செப்படி வித்தை: மோக்ஷத்திற்குத் தடை, புராணங்கள் எல்லாம் வெறும் புரட்டு, யோகம் அப்யாஸத்தில் வரவேண்டியதே ஒழிய படித்து வருவதல்ல, ஆகலால் யோகஸூத்ரம் வாசிக்கவே கூடாது, ஸித்திகள் விநோதம் மாத்திரம் தரும் முத்தியைத் தாரா வே, ஆதலால் யோகஸூத்ரம் அவைதிகம் என்று குதர்க்கம் பேசி வீண்காலங்கழிப்பர், வாசா வேதாந்தத்தில் புரண்டுகொண்டு பதஞ்சலி பகவான் இந்த விபூதிபாதத்தை ஸாதன பாதமுடிவிலும், மேல்வரும் கைவல்ய பாதத்திற்கு முன்னேயும் வைத்ததை நோக்கினாலே ஸித்திகளே சதமென நம்பி பாகக்காய்க்காக பங்கை விற்ற கதையாக மோசம் போகலாகாது; ஸாதனங்கள் நிலைத்துவிட்டனவா என்று கண்டுகொண்டு திடமான யோகமுடிவான கைவல்யம் பெறவே அவைகளை ஸமாதிக்காக உபயோகப் படுத்தவேண்டும் மனத்தெளிவுடன், என்ற கருத்து விளங்காமல் போய்விடுமா? பிடிவாதக் கண்மூடிகளுக்கு வேண்டுமானால், விளங்காது. மோக்ஷஸோபாநத்தில் கீழே நழுவாது நடக்க எண்ணும் ஆவலுடையோருக்கு இது எளிதில் விளங்கிவிடும். இதற்கேற்பவே நான்காவதான கைவல்ய பாதம், ஸித்திகள் பல காரணங்களால் வரலாம் என்றும் அவைகளுள் ஸமாதிமூலமாக அவைகளைப் பெறும் யோகி ஸந்மார்க்கத்தில், தானும் அகப்பட்டுக் கொள்ளாது அவைகளை உபயோகித்து ஸமாதி நழுவாது இவ்வாறு யோக முடிவான கைவல்யம் பெறுவன் என்றும் விஸ்தரித்து, முடிவான கைவல்யத்தின் பெருமையைக் காட்டும். பதஞ்ஜலி பகவான் யோகத்தை விளக்கப் புகுந்தவிடத்து முறையே யோகத்தின் தன்மை உபாயம், அறிகுறி ஸௌகர்யங்கள், முடிவு இவைகளை வாசிப்பவர்களுக்கு ஆவல் பிறக்கக் கூறியிருப்பினும், இவைகளை வாசித்து இவ்வாறு உணர்ந்த பின்னர் புத்திமான் உபாயத்தை முதலில் பிடித்துப் பழகி, அறிகுறிகளை ஸரியான வழியில் உபயோகப்படுத்திக் கொண்டு ஸமாதி ஸாதித்து முடிவை அடைய வேண்டும். ஆகவே உபாயத்தை முக்யமாகக் கொள்ளாது ஸித்திகளில் மயங்கி, ஸமாதி கைகூடி விட்டதாக இறுமாந்து மஹானென வீண் பெருமை பேசுபவர் கதி இன்னது என்று கூறவும் வேண்டுமா? யோக ஸ்வப்நம் கூடக் காணமுடியாத கொடிய நிலைகளையே அவர்கள் ஸொந்தமாக்கிக் கொள்வர்.

ஸமாதிபாதம்:—51 ஸூத்ரங்கள்: ஐந்து உட்பிரிவுகளை உடையது. அவையாவன. பொதுவிஷய முகவுரை, ஹடயோகம், ராஜயோகர், லயயோகம், ஸமாதி பேதவிவரம் ஆகிய இவைகளே.

(i) பொதுவிஷய முகவுரை: இதில், முன்வ்யாஸத்தில் கூறியபடி யோகத்தின் தன்மையைக் கூறியபிறகு, யோகமாகியஸமாதியில் அறிபவன் தன்னிலையிலிருப்பன்: மற்றையகாலங்களிலோ மனதிலெழும் விருத்திகள்போலே யாகிவிடுவான். மனதிலெழும் விருத்திகள் ஐந்து விதம்; ஒவ்வொன்றும் குற்றமுடையது, குற்றமே இல்லாதது என இருவகைப்பட்டு நிற்கும். இவைகளுக்கு முறையே ப்ரமாணம், விபர்யயம், விகல்பம், நித்திரை, ஸ்மிருதி என்று பெயர். ப்ரமாணம் என்றால் ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம் (ஆன்றோர் வாக்கு) இவைகளால் ஏற்படும் நேரான உணர்வு. விபர்யயம் என்பது மாறுணர்வு, ஸந்தேஹம் இவைகளே. விகல்பம் என்பது ஸரியான வஸ்துவில்லாமலிருக்கையில் சொல்மாத்திரத்தில் விளங்குவதாயுள்ளது. பெயர்ச்சொல் விஷயத்தில் எழுவாய்வேற்றுமைதவிர மற்றைய எல்லா வேற்றுமை ஸம்பந்தப்பட்டுள்ள வ்யவஹாரமாகிய உலகவிஷயமனோநிலை எல்லாம் இதனுள் அடங்கும். நித்ரை, இன்மைக்குக் காரணமான தமஸைப் பற்றி எழும் சூந்யவிருத்தி. ஸ்மிருதி என்பது முன் எழுந்த விருத்தி, ஒருவித ஏற்றத்தாழ்வுமின்றி மறுபடி கிளப்புவதுதான். இவை முன்னெடுத்து விளக்கப்பட்ட மனதின் ஐந்து நிலைகளில் ஒன்றாவது பலவாவது எல்லாமாவது நிகழலாம். கடைசி பூமியாகிய நிருத்தத்தில் இவையெல்லாம் அடங்கிக்கொண்டே வரும்: என்றுள்ளது. (1-ஸூ 1-11)



(ii) ஹடயோகம்:—இந்த விருத்திகளை அடக்கி ஒரு வழிப்படுத்துவதும் மேல் அந்த ஒரு விருத்தியும் ஒடுங்கும்படிச்செய்வதுமே யோகமெனப்படும். இது அப்யாஸ வைராக்கியங்களால் கைகூடும். அப்யாஸம் ஒரே விருத்தியில் நிலைத்து அங்கு மற்றவைகள் குறுக்கிடாது தடுக்கும் பழக்கமே. நெடுநாள் இடையறாது இதில் பற்றுடன் முயன்றால் இது திடப்படும். கண்டது ச்ருதி மூலமாகக் கேட்டது ஆகிய எல்லாவற்றிலும் மனம் தானாகப் பாயாது நின்றுவிடும் ஆசையின்மையே (வசீகாரஸம்ஞா) வைராக்யம். இந்த வைராக்யத்திற்கு பொதுமுயற்சிநிலை, (யதமானஸம்ஞா) சிறப்பு முயற்சிநிலை, (வ்யதிரேகஸம்ஞா) மன அடக்க நிலை (ஏகேந்திரியகஸம்ஞா) மனஓய்வுநிலை (வசீகார ஸம்ஞா) என்ற நான்கு நிலைகள் உண்டு. இவைகளில் முறையே மனம் பல இந்திரிய வழி பட்டுச்சிதறாது அடக்க முயல்வதும், எல்லாம் அடங்கி வருகையில் ஓர் இந்திரிய வழியாக வெளிப்பட்டு மற்றைய இந்திரிய அடக்கத்தைக் கலக்காதிருக்கும்படி முயல்வதும், இந்திரிய வழிச் செல்லாமனம், புத்தியின் ஆதாரமிழந்த ஸ்வப்நாதி நிலைகளிலும் தன் உட்பதிவுச் சிறப்பால் விஷயானுபவத்தில் சிதறாதிருக்க முயல்வதும், எப்பொழுதும் எந்த இந்திரிய வழியும் மனதை விஷயங்கள் இழுக்கத்திறனற்றும் போய்விடும்படி நிலைப்பதற்கு முயல்வதுமே, காணப்படும். இதைவிட ஐந்தாவதான பர வைராக்யம் ஒன்றுளது. அது தன்ஸ்வரூப உணர்வின் சிறப்பால் மனம் தான் அடையவேண்டிய முடிவைக்கூட விரும்பிச் சிந்தியாது ஓய்ந்து வரும்நிலை. இவ்விரண்டாகிய அப்யாஸவிஷய பலம் ஓய்வு அடைந்த வைராக்யம் இவைகளில் முதலில் கைகூடுவது ஏகாக்ரம் என்ற நான்காவது மனோபூமி, முதலாவது யோகநிலை: இதே ஸம்ப்ரஞ்ஞாத ஸமாதி, ஸபீஜ ஸமாதி, ஸாலம்பஸமாதி. இது பொதுவாக இரண்டு விதமாயுள்ளது. அவையாவன: ஸவிகல்பம் நிர்விகல்பம் என்பவை: சிறப்பாகப் பார்க்குமிடத்து, விதர்க்கம் (விசேஷஆராய்ச்சி), விசாரம் (விசேஷப் பாவல்) ஆனந்தம் (அமைதி ஸுகம்) அஸ்மிதை (தனது தன்னந் தனிநிலை) என நான்குவிதமாக இருக்கும். இவைகளுள் முதல்இரண்டுபாகத்திலும் ஒவ்வொன்றில் ஸவிகல்பம் நிர்விகல்பம் என்ற இருபிரிவுண்டு; பின்னிரண்டும் கேவலம் நிர்விகல்ப ஏகாக்ரமே. அப்பாஸம்முதல் அஸ்மிதை ஈறாகவுள்ள ஆறு நிலைகளிலும் பழகுவதற்கு, மேல்வரும் நிருத்தம் என்ற நிஜ யோகத்தை நோக்க யோகஸேவை என்று பெயர். ஏகாக்ர அஸ்மிதா ஸமாதியில் எல்லா விருத்தியும் ஓய்ந்து மிஞ்சும் ஒருவிருத்தியும் விஷயமாத்திரமாக தன்னிலையும் உணர்வும் நழுவாமல் நழுவி நிற்கும் தன்மையை அடைவன் அப்யாஸி. இந்த நிலையில் உள்ள மங்கல் உணர்வும் உணர்பவன் தன்மையும் மனதிற்கு ஒருவேலைதானே. இதையும் மனதில்கருதாது நாம் தொழிலற்று நின்றுவிடலாம் என்ற பர வைராக்யமாகிய உண்மைஓய்வுக் காரணமான உணர்வின் பழக்கமாத்திரமாக எல்லாம்அடங்கி நின்றுவிடுவதே நிருத்தம். இதுதான் யோகம் என்பது. இந்த நிருத்தம் இருவகை. இயற்

கை நிருத்தம் என்றும், செயற்கை நிருத்தம் என்றும். இவைகளில் தேவதைகள் முதலியவர்களுக்கு பிறவியிலேயே முன்முயற்சிவலியால் அதிகாரத்திற்கு ஸாதகமாயும், உள்ளனுபவத்திற்கு விரோதமில்லாததாயும் உள்ள நிருத்தம் கைகூடியிருக்கும். இதனால் அவர்கள் வெகு கல்பங்கள்கூட தேஹமற்று தன் மாத்திரைகளில் ஒன்றுபடுவதான விதேஹ நிலையையும், ஆதிகாரணப் பிரகிருதியில் ஒன்றுபடுவதான பிரகிருதிலய நிலையையும் அடைந்து நிருத்தத்தில் இருந்து திடப்பட்டு இடையிடையே தமது பதவித்தொழிலையும் ஸரிவரப் பார்த்து முடிவில் முக்தியைபெறுவர். இரண்டாவதான செயற்கை நிருத்தம் சிரத்தை, (சாஸ்திரவழிப்படி ஸரிவர நடக்கும் ஆற்றல்) வீர்யம் (மனதை பாய்ந்தோடாது ஒன்றில் நிறுத்தும் பிடிவாதம்) ஸ்மிருதி (அறிவிருந்து கருதவேண்டியதை மறவாது நினைத்திருப்பது) ஸமாதி (ஏகாக்ரம்) ப்ரஞ்ஞை (வைராக்ய உணர்வு,) இவைகளால் ஸாதாரணர்களிடம் பிறந்து சிலகாலமான பின்னர் கைகூடுவது. இந்த செயற்கை நிருத்தம், திடவைராக்யமும் சிறந்த பழக்கமும் உடையவர்களுக்கு உண்டாகும். இந்தயோகம், அடிமுதல் நிருத்தம் முடிய ஸாதனங்களில் ஏற்படும் குருஸஹாயத்துடன்கூடிய தன் முயற்சியால் தன்னிலையான ஜீவன் உண்மைநிலை விளக்கம் வரையில் கொண்டுவிடுவது. ஆதலால் இதற்கு ஜீவப்ரநிதானம், காஷ்டதபஸ் என்ற வேறு பெயர்களும் உண்டு. மேல் குருகருணையால் உண்மைவஸ்து விளக்கம் ஏற்பட்டு முக்தி கைகூடவேண்டும். (1-ஸூ 12-22)

(iii) ராஜயோகம்:—வேதசாஸ்திரங்கள் ஈசஆஞ்ஞை அவைகளின்படி நடப்பது நமதுகடன் என்று எண்ணி மேல் ஈசனைக் கவனியாது ஸாதாரண மூட ஆஸ்திகபுத்தியுடன் அவன் காட்டியுள்ள வழிப்படி தன் முயற்சியால் நடக்கக்கூடியதும் தேஹவலிவு ஸௌகரியம் முதலியவைகள் உள்ளவருக்கு இசைந்ததும் கடுமையான அப்யாஸமுமாகிய ஹடயோகம் ஸாதாரணர்களால் எளிதில் பின்பற்றக் கூடியதல்ல: புத்தி நுட்பத்துடன் ஈசன் முதலிய சாஸ்திரீய விஷயங்களை ஆராய்ந்துணர்ந்து மனதை அடக்கக்கூடியவருக்கு அவசியமுமல்ல. இப்படி ஸாதாரண வலிவு, ஹடயோக அங்கங்களை எல்லாம் பின் பற்ற முடியாத தேஹபலக்குறைவு, வ்யாதி, பொதுநிலை, இவைகளை உடைய ஸத்துக்களுக்கு இந்த ராஜயோகம் ஏகாக்ர நிருத்தங்களுக்குக் கொண்டு சேர்க்க ஏற்பட்டது. கிலேசம் (மாறுணர்வு, குழப்பம், விருப்பு, வெறுப்பு, காரணமில்லா பயம் ஆகிய துன்பங்கள்) கர்மா (ஸஞ்சிதமாகச் சேர்ந்துள்ள பூர்வகர்மப் பதிவுகள்) விபாகம் (பலன் கொடுக்கத் தொடங்கியுள்ள கர்மப்பதிவுகள்) ஆசயம் (பூர்வகர்ம அப்யாஸம், கர்மபலவனுபவ அப்யாஸம் இவைகளால் ஏற்பட்டு மேல்தொழில் எழத்தூண்டும் பதிவுகள்) இவைகளுடன் எப்பொழுதுமே சேர்ந்திராது நித்யமுக்த ஸ்வதந்திரரான தனிஸாக்ஷி அறிவுப்பொருளே ஈசன். இவனிடம் ஒப்புயர்வில்லா பேரறிவாதியான அனந்த கல்யாண குணங்கள் குடிகொண்டுள்ளன. இவனே குருக்களுக்கெல்லாம் ஆதிகுரு. இவன் பெயர் பிரணவம்; இதை ஜபிப்பதாவது, இதன் அர்த்தத்தை உணர்ந்து த்யானிப்பதாவது தான் இவன் வழிபாடு. இதனால் தடைகள் எல்லாம் நீங்கும்: பரம முடிவும் கைகூடும். அவன் ஒழுங்குகளையும் ஈசனையும் நன்றாக விசாரித்துணர்ந்து அவனிடம் ஈடுபட்டு தன்னை மறந்திருக்கப்பழகி, இது ஒழிந்த மற்றைய வேலைகளில் எல்லாம் ஹடயோகத்திற்கு அங்கமாகக்கூறப்பட்டதும் எல்லோருக்கும் பொதுவானதும் தன்னால் கூடியதுமான ஈசாஞ்ஞைப்படி தன்னால் கூடியவரை அனுஷ்டித்து, அப்படி அனுஷ்டிக்குங்காலும் அவைகளை ஈசன் வழிபாடெனக்கருதி ஈசன் ஞாபகம் மாறாதிருக்கும்படிப் பழகிவந்தால் நானே ஈசன் என்ற தாரையான எண்ணம் நிலைப்பதாகிய நிர்விகல்ப ஏகாக்ரம் நிலைத்து அந்த ஈசன் கருணை விசேஷத்தால் நிருத்தம் போகும் திறனும் ஏற்பட்டுவிடும் அவ்விடத்தில், அதிகமாகத் தன் முயற்சியில்லாமலே. இதற்கு நுட்ப புத்தியும், சிரத்தைக் குறைவின்மையும் அவசியம் வேண்டும். ஆகவே ராஜயோகி சில யோகஸாதன விஷயங்களில் ஹடயோகி போலவே காணப்படுவன். இதை ஸாதன பாதத்தில் விஸ்தரிப்போம். இந்த ராஜ யோகத்திற்கு ஈச்வர ப்ரநிதானம், ஞானதபஸ் என்ற பெயர்களும், உண்டு. (I-ஸூ 23-29)



(iv) லயயோகம்:—நல்ல ஸாதனங்கள் நிறையப்பெற்று யோகத்திலிறங்குபவனுக்கு ஸமாதி நிலைக்காமல் செய்யும் தடைகள் ஒன்பது. அவையாவன:—நோய், நொய்மை, ஐயம், மறதி, சோம்பல், விடாமை, மாறுணர்வு, நிலையை அடையாமை, நிலையில்லாமை, என்பவைகளே. இவை ஒவ்வொன்றும் துயரம், மன அழிவு, உடல் நடுக்கம், மூச்சுக்குழப்பம் ஆகிய ஐந்துகளில் எதை முன்னிட்டு வந்தாலும் வரலாம் ஆக 45 விதத் தடைகள் வரலாம். இவைகள் ஹடயோகியை பலமாயும் ராஜயோகியை ஸாதாரணமாயும் வந்து தாக்கும். எல்லாம் ஹடயோகிக்கு வரக்கூடியதாயினும், சிலதான் ராஜயோகிக்கு வரும். இவைகளை நீக்கி மனது போகவழியில் அடங்கிவிடப் பொதுவான லய உபாயம் பின் வருபவைகளில் ஏதாவது ஒரே தத்துவத்தில் மனதை நிறுத்தி ஸமாதியை அணுகவேண்டும் என்பதே. இருவருக்கும் மனச்சஞ்சலம் நீங்கி ஒழிவுவா புண்யவானை ஸுகியிடம் உறவு எண்ணமும், புண்யதுக்கியிடம் உருக்க எண்ணமும், புண்யவான் ஸுகதுக்கமின்றி ஸாதாரணமாக இருப்பதைக் கண்டதும் உவப்பும், பாபி எப்படி இருப்பினும் கவனியாமையுமே தகுந்த ஸாதனம். அல்லது ஆசைக்கிடங்கொடா விஷயம்,மஹான்கள் இவர்களிடம்,மனதைச் செலுத்திப் பார்க்கலாம் (புராணப் பெருமை இதில்தான்) அல்லது நல்லது எனக் கருதப்படும். இஷ்டதேவதா மூர்த்தங்களிடமாவது மனதைப் போகவிட்டு ஸமாதியை அணுகலாம். ஹடயோகிக்குச் சிறப்பாக மந்திர அர்த்த த்யானத்துடன்கூடிய ப்ராணாயாமம், அல்லது தேஹத்துள் காணப்படும் அத்புதவிஷயானுபவங்களில் மனதைச்செலுத்தல் இவை உபயோகப்படலாம். ராஜயோகிக்கு துயரற்ற சாந்தஸத்வமாக மனதைக்கருதுவது,கனவு உரக்கம் இவைகளில் மாறுதிருக்கும் உணர்வைக் கருதுவது, இவை வெகு உதவியாக இருக்கும். இப்படி மனோலயப்படுத்தி ஸமாதி பழகிவந்தால் அதன் முடிவான நிருத்தம் கைகூடாவிடினும் இந்த மனதை எந்த வஸ்துவில்பாயவிட்டாலும், அது மிகச்சிறிதாயிருந்தாலும் ஸரி, மிகப் பெரிதாகவிருந்தாலும் ஸரி, அதன் உண்மையை உள்ளபடி உணரும் தன்மை இதற்கு வந்துவிடும். இப்படிப்பட்ட தன்மை வருவதால் மனதின் ராஜஸ தாமஸமான மயக்கம் தொழிற்பாடு இவைநீங்கி அது தன்னிலையை அடைந்து,முறையே அறிபடு பொருள், அறிவுக்கருவி, அறிபவன் இவைகளுடன் சேர்ந்து இவை உருவமாகி வந்து அடங்கி, ஒழுங்காக ஏகாக்ரத்திற்கு தகுந்ததாகிக்கொண்டேவரும். (1-ஸூ—30—41)

(v) ஸமாதி பேதவிவரம்:—விதர்க்க ஏகாக்ரம் இருவிதம். ஸவிதர்க்கம், ஒலி (கருவி) பொருள் (வெளி) உணர்வுக் (உள்) கலப்புடன்

ஏற்படுவது, நிர்விதர்க்கம் நினைப்பற்று, தன்னிலைபோய் பொருள் மாத்திரமாக விளக்கமேற்பட நிலைப்பது. விதர்க்கம் ஸ்தூலவிஷயமாக ஏற்படுவதுபோல ஸூக்ஷ்மமான ப்ரகிருதிவரையிலுள்ள விஷயங்களில் ஏற்படும் ஸமாதிக்கு முறையே ஸவிசாரம், நிர்விசாரம் என்று பெயர். இவைகளின் முடிவில் ஏற்படும் கேவல நிர்விகல்ப த்யானப் பொருள் மாத்திரமான ப்ரகிருதி, ஈசன் விஷயமாக ஏற்படுபவை ஆனந்த அஸ்மிதை ஸமாதிகளே. இவை எல்லாம் ஸபீஜஸமாதி. நிர்விசாரத்தில் தேர்ந்து மேல் நோக்குபவனுக்கே மனத்தெளிவு, ஒரேகால உண்மை நேர்உணர்வு, ஏற்படும். இது கேள்வியாதியால் ஏற்படுவதுபோன்ற தனித்தனி வேற்றுணர்வும், யுக்தியால் உணர்வது போன்ற தொடர்ச்சி வேற்றுணர்வுமாக இராது: பெரிய உப்பரிகைமேல் ஏறிப்பார்க்குங்கால் ஒரே பார்வையில் எல்லாம் விளங்குவது போன்ற அகண்ட உணர்வாக இருக்கும் இந்த உண்மை நிலை உணர்வு. இந்த விசித்ர உணர்வு மற்றைய கண்டஉணர்வுப்பதிவுகளை தரித்து சுத்த மனதில் நிற்க இடங்கொடாது. இந்த உண்மை உணர்வின் பலக்குறைவான பதிவும் பழக்கத்தால் சவுஞ்சுடும் தடிபோல கழன்றுவிடின் யோகமுடிவான நிருத்தம் கைகூடிவிடும். இதனால் ஏற்படும் நிலையை, மேல் கைவல்ய பாதத்திலும், இதில் தடையின்றி பழகுவதற்கு உதவியாக இருக்கும் ஸித்திகளை விபூதி பாதத்திலும், இப்படி எல்லாம்செய்து நற்கதியடைய மூலகாரணமாக உள்ள அப்யாஸங்களை ஸாதன பாதத்திலும் பதஞ்ஜலி பகவான் விளக்கி காட்டுவதை மேல் எடுத்து விவரிப்போம்.

(1·ஸூ 41-51)

---

**போர் முனை மோட்டார் வண்டிகள்.**—இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டுவரும் மோட்டார் வண்டிகளின் தொகை பின்வருமாறு:—

| | | மோட்டார் வண்டிகள். |
|---|---|---|
| ஜெர்மனி | ... | 60,000. |
| ப்ரான்ஸ் | ... | 70,000. * |
| ப்ரிட்டன் | ... | 20,000. |

* இத்தொகையில் பாரிஸ் நகரிலிருந்து மாத்திரம் 11,000 மோட்டார்வண்டிகள் வந்திருக்கின்றனவாம்.

# ஆத்திச்சூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 49. சூது விரும்பேல்

சூதை எப்பொழுதும் ஆவலுடன் பின்பற்றலாகாது என்பது இதன் பொருள். இதன் காரணத்தை, கொன்றை வேந்தனில் 'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்று காட்டப்பட்டுள்ளது. சூது என்ற பதத்திற்கு சூதாட்டம் என்றும், போலித் தோற்றம் அல்லது மோசடித் தோற்றம் என்ற பொருளும் உண்டு. இதற்கேற்ப, இச்சூத்திரப் பொருள் பின்வருமாறு விஸ்தரிக்கப்படலாம்.

(1) சூதாட்டத்தை விரும்பாதே :—சூதாட்ட விஷயம் ஒழுங்கின்றி ஆபத்து ஸம்பத்துக்கு திடீரென்று காரணமாவதால் கௌரவக்குறைவான வேலை. சோம்பேறிகளுக்குத் தகுந்த விளையாட்டு இது. புத்தியை விசாலப்பட வொட்டாது ஒருவித ஆவேசத்திற்கு உட்படுத்தி, வீண் மனோராஜ்யங்களுக்கு இரையாக்கி விடுகிறது இந்த ஆட்டம். வீண் பொழுதுபோக்காகவேதான் முடியும் இது. இந்தப் பொழுதுபோக்கு பலவித பாபங்களான பொய், திருட்டு, புரட்டு, கொலை, குடி முதலியவைகளுக்குக் காரணமாகிவிடும். இதுபற்றியே 'சூது விரும்பேல்' என்றாள் ஔவை. இதற்கேற்பவே தத்காலத்திய ராஜாங்கத்தார்களும் இதை கொடுங்குற்றமாகக்கொண்டு தண்டித்தும் வருகின்றனர். இந்த ஆட்டத்தில் முனைந்து பழகிவந்தால் ஒருவன் ஜனஸமூக ஸுகவாழ்க்கைக்குப் பகைவனாகிவிடுவன் என்பதே இவர்கள் கருத்துப்போலும். இப்படி இருப்பினும் கனதனவான்கள் வேலைக்கொடுமைகளுக்கு இடையில் மனம் ஒருவாறு தளர்ந்து ஸுகித்திருக்க இந்தச்சூதின் கொடுமை குறைந்துள்ள பந்தயம் வைத்தாடும் சீட்டு முதலியவைகளைக் கைக்கொள்ளுகின்றனர். இதையும் விளையாட்டாகக் கருதாது வினையாகக்கருதி ஈடுபட்டுவிட்டால், இது சூதனாக்கிவிடும் எவனையும். இதைக்கூட விரும்பலாகாது. இந்த விளையாட்டில் முதலில் ஜயம்வந்து மனோவேகம் அதிகரிக்கவொழுங்கின்மையால் தோல்வி பின்னர் அடுத்தடுத்துவருகையில், மனம் அழிந்து சண்டை வசவு முதலிய இழி தொழிலுக்கு இது காரணமாகும். இதற்கு உதாரணமாக நளனையும், தர்மபுத்திரரையும் எடுத்துக் கூறுவது வழக்கம். இவர்கள் சரித்திரம், ஒருவாறு சூதில் மனோவேகத்துடன் முனைந்ததால் பெருங்கேடுவரும் என்பதற்கு உதாரணமாயினும், நளனும் தர்மபுத்திரரும் கெட்ட வழியில் முயன்ற பாபிகள் என்று இக்காலத்தில் எண்ணுவதுபோலக் கருத இடங்கொடுக்கவேகூடாது. நளன் தர்மபுத்திரர் இருவரும் ஸாதாரண பாபமனமுடைய சூதர்களல்லர். க்ஷத்ரியர்களுக்கு சூதாட்டம் பாபமும் புண்யமும் அல்லாது, விலக்கப்பட்டும், ஸமாதானகாலங்களில் அழைக்கப்படுங்கால் விலக்கக்கூடாததுமான பொதுகர்மம். இது ஸுகத்திலும் முடிவுபெறலாம்; துக்கத்திலும் முடிவுபெறலாம். லோகாந்தரத்திலும் ஜன்மாந்தரத்திலும் இதற்கு தனிகர்மபலனில்லை. அதே ஜன்மத்தில் தான் இது பலித்துவிடும். ஆகவே இந்த மஹாத்மாக்கள் இந்த தர்மப்படிச் சூதாடியவர்கள். மேலும் இவர்கள் விஷயத்தில் வேறு ஒருசிறப்பும் உண்டு. நளன் கலியால் தூண்டப்பட்டு புத்தி மயங்கி சூதில் வெறிகொண்டான்; ஆதலால் அவன் மாயச்சூதில் முனைந்த பாபியேயல்ல. தர்மபுத்திரர் விஷயப் சற்று மாறுபாடுடையது. ராஜஸூயயாகத்தில் சிசுபாலவத மானதும், நாரதர் தர்மபுத்திரரை நோக்கி 'இந்தயாகம் இப்படித் தடைபட்டு முடிவடையக் கூடாது. இதனால் பேராபத்துக்கள் விளையும். இந்த ஸந்தர்ப்பத்தால் உன்னைக் காரணமாகக் கொண்டு, க்ஷத்ரியர்கள் எல்லாரும் மாளப்போகின்றனர்; என்ன தடுத்தாலும் நிற்காது. வீண் கவலைப்பட்டுப் பயனில்லை' என்று எச்சரிக்கை செய்தார். புத்திமானான தர்மபுத்திரர் மிக மனம் நொந்து யோசிக்கையில் "நானு இந்தக் கொடுமைக்கு ஆளாகவேண்டும்! என்ன செய்வது! இந்த ராஜ்யம் எல்லாம் நியாயப்படி என்னைச் சேர்ந்தது. அதில் பாதி துராத்மாவான துர்யோதனன் கைப்பற்றிவிட்டான். அதையும் நாம் கவர்ந்துகொண்டால் ஜனங்களுக்கு நன்மைதான். ஒருவேளை அவன் நமது பாகத்தையும் கவர எண்ணினால் பெரும் போருண்டாகி நாரதர் வாக்கியம் பலித்துவிட இடம் ஏற்படும். ஆகவே எப்படியாவது சண்டையே இல்லாது துர்யோதனன் பங்கையும் நாம் கைப்பற்றி துர்யோதனனை நம்முள் அடக்கிவிட்டால் பலரைக் கொல்லும் கொடுமையைத் தடுத்துவிடலாம். இதற்குத் தகுந்த வழியைப்பார்க்கவேண்டும், முன் ஜாக்ரதையுடன்" என்று தோற்றியது. இப்படி வருந்திக் கொண்டிருக்கையில் விதுரர் பாண்டவர்களை மாயச்சூதிற்கு அழைக்கவர, இதையே சண்டையைத் தடுத்து ராஜ்யம் கைவசப்படுத்தும் உபாயமாகக்கொண்டு தர்மபுத்திரர் உத்ஸாஹத்துடன் புறப்பட்டார். இந்த ரஹஸ்ய சுத்தவாஸனை சூதாட்டத்திற்கு தர்மபுத்திரரை இழுத்தது என்றுணராது, கௌரவ விரோத ஆவேசங்கொண்ட பீமனும், திரௌபதியும் காட்டில் அவரை வாட்ட, அவர் கொடுத்த பதிலின் நுட்பமும், அவர் வெறும்கொழுத்த சூதாடியல்லர், சகுனிபோன்ற கொடியமாயச்சூதர் அல்லர் என்பதும் இதனால்தான் நன்குவிளங்கும். இந்த ரஹஸ்யத்தை நன்றாகக் கவனித்தால்தான் தர்மபுத்திரர் ஆயுள்முழுவதும் அனுபவித்துத் திண்டாடிய துக்கக்கடலின் தகுந்தஆதாரம் இன்னது என்பது நன்றாகத்தெரியவரும். ஆதலால் நளன் தர்மபுத்திரர் இவர்களை ஸாதாரண சோம்பேரிச் சூதாடி என்று கருதாது, அவர்கள் தர்மாத்மா என்பதை உணர்ந்து, அவர்களையும் சூதாட்டம் படுத்தியபாட்டைக் கவனித்து சூதை விரும்பாது ஒதுங்கவேண்டும் என்பதை கைக்கொள்ளவேண்டும். எல்லோருக்கும் சூதாட்டம் வீண் மனச்சஞ்சல காரணம்; க்ஷத்ரியர் ஒழிந்த மற்றையவர்களுக்கு சூதாட்டம் பாபமே: இதுபற்றியும், சூதாட்டம் சேற்றில் நட்டகம்பம், மதிட்பூனை, எப்படி சாய்ந்தாலும் சாயும், பாய்ந்தாலும் பாயும்: இதைவிரும்பி நம்பித்தொடங்குவது மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்குவதற்கு நிகர் என்று பயந்து, இதை விரும்பாது ஒதுங்கவேண்டும்என்பது இந்த ஸூத்திரத்தின் கருத்து. நளன் தர்மபுத்திரர் இவர்களை மிகுந்த ஜாக்ரதையாக உதாரணமாகக் கொள்ளவேண்டும்.

(2) போலித்தோற்றங்களைக் கண்டு மயங்கேல்:வெளுத்ததெல்லாம் பாலல்ல கருத்ததெல்லாம் தண்ணீரல்ல என்பது பழமொழி. உலகில் சிறந்தவை போன்ற (பகட்டான) தோற்றத்தைக்கண்டு புரட்டெனமதியாது கண்மூடித்தனமாக ஈடுபடுவது ஸாதாரணர்கள் இயற்கை. இவ்வாறிருக்கும் சூதானவைகளைவிரும்பி அனுசரிக்கவேண்டும்என்பது இந்தஸூத்ரத்தின் கருத்து. நாகரிகம், வியாபாரப்போட்டி என்ற பேய்கள் தலைவிரித்தாடும் இக்காலத்தில்

2

மனிதர்களிடமுள்ள சூதில்மயங்குந் தன்மை அதிகமாகிவிட்டது. உபயோக ஸாமான்கள் சரக்குகள் எல்லாம் நல்லதுபோன்ற வெளித் தோற்றத்துடன் ஒழுங்காக வெளிவருவதால் மேலெழுந்தவாரியாக மயங்காது ஆழ்ந்துவிசாரித்தே அவைகளை கைக்கொள்ள வேண்டியது. இப்படி இல்லாவிடில் பயனற்றவைகளைத் தேடி ஓடித்திரிந்து பட்டபாடுதான் மிஞ்சிநிற்கும். இப்பொருள் இதோடு நில்லாது போலித் தோற்றங்களாகிய நாடகங்கள், விகடங்கள், இன்னிசைக் கருவிப் பாட்டுகள் முதலிய நாகரிக நேரம் போக்குகள் இவைகளில் ஈடுபட்டு வீண்காலங் கழியா தொழிக என்றும் வற்புறுத்தும். இதுபற்றியே புருஷர்கள் ஸ்திரீவேஷம் போடுவதைப் பார்க்கலாகாது: மனதைக் கலக்கும் காவ்ய நவீன கதைகளை கைக்கொள்ளவேலாகாது என்று கூறுவர்நம்மவர். விஷயப்போலிகளில் உழன்று களிகூறுவதாகிய அல்ப ஸந்தோஷத்திற்கு ஆசைப்படக்கூடாது என்பது இந்த ஸூத்திரத்தின் உள்கருத்து.

மேலும் போலிநடத்தையும் சூதாதலின் இந்த ஸூத்திரத்தில் பாசாங்குபண்ணுவதில்விருப்பமுடையவனாக இராதே என்றும் பொருள் கூறலாம். மனதில் எதுவோ, அதுவே வாக்கிலும், அதுவே நடத்தையிலும் அமையப்பெற்றவரே ஸாதுக்கள்; மனத்தில் ஒன்றுவாக்கில் வேறொன்று நடத்தையில் மற்றொன்று ஆக முவ்வகைப்பட்டிருக்கும் சூதே மூர்க்கர் இலக்கணம். இப்படி இருக்கும் சூது, மிகுந்த வேதனைசெய்யும். தற்காலத்திய நாகரிகம் இந்தச் சூதை அதிகப்படுத்துகிறது. ஸமூக வாழ்க்கை என்ற பெரிய மனோராஜ்யத்தைக் கிளப்பிவிட்டு, மனதிலுள்ளதை நேர்மையாக வெளியிடமுடியாத வ்யவஹாரங்களைவிருத்திசெய்து உண்மைபோல சிலபொய்களைத் தங்கு தடையின்றி உபயோகிக்கும் கொடியநிலைகளை ஏற்படுத்திவிட்டனர் இக்காலத்து மஹான்கள். இப்படிப்பட்ட சூதை நாள்தோறும் விடாது உபயோகிக்காமல் இருக்க இயலாத கனவான்கள் பெருத்துக்கொண்டேவருகின்றனர். தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட தர்மங்களில் வரம்பு மீறிநடந்து உலக ஸுகங்களில் மூழ்குவதும், தம் தர்மத்தையே அநேக ஸந்தர்ப்பங்களில் விட்டுவிடுவதுமே இந்த ஸாதாரணச் சூதிற்கு முக்யகாரணம். நமது சாஸ்திரங்களைப் பின்பற்றி நடந்து வந்தால் நம்மவர்கள் இப்பொய்களான சூதுகளை விரும்பாமல் வாழலாம்: இல்லாவிடில் இச்சிறு சூதை விரும்புவது வரவரப் பெரும் சூதுகளைப் பற்றச்செய்து நம்மைக் கெடுத்தேவிடும்.

(3) விஷயங்களை விரும்பாதே :—வெளிவிஷயங்களே பெரும் சூது; ஸுகம் தருவனவாகத் தோற்றி மனதை இந்திரியவழி இழுத்து அவைகளில் உழலும்படி செய்து திண்டாடவைக்கின்றன. விஷயங்கள் மனதை முதலில் ஆசையால் கலங்கச்செய்து வருத்தும். இது அதிகப்படப்படத்தான் மேல் ஸுகம் அதிகமாக விளங்கும். கோரியது கைகூடாவிடிலோ பெருந்துக்கம் என்று கூறுமலே விளங்கும். விஷயம் கைகூடி விட்டால் நமது உணர்வு முழுத்தும் மயக்கம் ஏற்பட்டுவிடும். அப்பொழுது உணர்வு தலைதூக்கினால் இந்த ஸுகம் மாறாதிருக்க வேண்டுமே என்ற மனக்கலக்கமிருக்கும். இப்படி இருக்கையில் ஸுகம் மாறிவிட்டால் போய்விட்டதே என்ற துக்கம் உண்டாகும். துக்கம் மேன்மேல் வந்துவிட்டால் முன் ஸுக உணர்வு அந்ததுக்கத்தை அதிகப்படுத்தும். ஆகவே விஷய உழற்சி துக்கமே. இப்படியிருக்க அது ஸுகம்போலத் தோற்றி நமது மனதை வெளியில் இந்திரியவழியே இழுத்து நம்மைக் கழுதைகளாக்கிவிடும். விஷயமே ஒரு பெரிய விஷம் ஒரு ஜந்மத்தை வீணாக்கும்;விஷயமோ பல ஜன்மங்களை வீணாக்கும். ஆதலால் விஷயமே பெரிய விஷம் சூது அதில் பழகாமலே இருக்கவும் முடியாது. அது சூதாக ஸுகம் போலக் காணப்படுகையில் மயங்காது ஜாக்ரதையாக விருக்கவேண்டும். துக்கத்தை மனத்தெளிவுடன் ஸஹித்து விடலாம் பழக்கபலத்தால், ஸுகத்தைக் கண்டு மயங்காது பொறுத்தலரிது. ஆதலால் விஷயச் சூதை விரும்பேல் என்று ஔவையார் இந்த ஸூத்திரத்தில் முமுக்ஷுவை எச்சரிக்கிறாள்.

**ஓர் உதாரமான நன்கொடை.**—திருநெல்வேலியைச் சேர்ந்த ஸ்ரீவைகுண்டத்தில், மிஸ்டர் சுப்பிரமணியப் பிள்ளை என்பவர், தமக்கு அடிக்கடி நேரும் கொடிய வியாதியை முன்னிட்டு, ரூ. 70,000 பெறுமானமுள்ள தன் ஆஸ்தி பூராவையும் ஷெயூர் காரனேஷன் ஹைஸ்கூலின் அபிவிருத்திக்காக அளித்திருப்பது, அவருக்குக் கல்வி விஷயத்திலிருக்கும் அபிமானத்தை நன்கு வெளிப்படுத்துகிறது.



# எலிமெண்டரி

## போதனா முறைக் குறிப்புகள்

## ELEMENTARY EDUCATIONAL NOTES

### ‘‘கொட்டும் கொடுக்கு’’

அல்லது

### சும்மா இருக்கிறாயா சுரூபத்தைக் காட்டட்டுமோ?

தேள்

சுந்தரம் என்பவன் ஒரு சிறிய பிள்ளை. ஆறு ஏழு வயதுள்ளவன். அவன் ஒரு பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். வழக்கப்படி ஒருநாள் இடைநேரம் இரண்டாம் வேளை (Tiffin) சாப்பிட வீட்டிற்கு வந்தான். அன்று வெயில் வெகு உக்கிரமாக விருந்தது. அவன் வீட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்கும் சுமார் அரைமைல் தூரமிருக்கும். மேலே வியர்வை பெருகிக் கொண்டிருந்தது. வெயிலில் வந்ததால் முகம் செக்கச் செவேலென்றிருந்தது. தண்ணீர் தாகமும் அதிகமாக யிருக்குமல்லவா ? ஐயோ ! பாவம். ஏழை ஆனதால் காலிற்குச் செருப்புமில்லை. தலைக்குக் குடையுமில்லை. கஷ்டப்பட்டு பட படைக்கிற வெயிலில் வீட்டிற்குவந்து, இலையில்லாததால் தாயார் கையில் மோருஞ்சாதம் போட்டதைச் சாப்பிட்டபிறகுகூட, தாகம் தணியவில்லை. குளிர்ந்த சாதேர்த்தமும் சாப்பிட்டான். ‘அம்மா! ஏதாவது தின்பண்டம் கொடு’ என்று கேட்டான்.

இவன் அம்மாவுக்கு, இவனிடம் வெகு அன்புண்டல்லவா ? இப்படித்தானே, எல்லாருக்குமிருக்கும் இவன் தாயார், ‘‘அப்பா ! சுந்தரம், அதோ தாழ்வாரத்துக்குள்ளே பானையில் அடுத்தாத்து அம்மாமி இலக்ஷு கொடுத்த சிறிது முறுக்குகள் வைத்திருக்கிறேன். அப்பானையின்மேலிருக்கிறவைகளை ஜாக்கிரதையாய்க் கீழே இறக்கிவைத்து பானையிலிருந்து ஒரு முறுக்கு எடுத்துக்கொள் இரண்டு மூன்று எடுத்துக்கொள்ளாதே. உன் உடம்புக்கு ஆகாது. சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டுவந்தபோது ஒரு முறுக்குக் கொடுக்கிறேன். சட்டைப் பையிலாவது வேஷ்டியிலாவது வைத்துக்கொள்ளாதே. எண்ணெயாய்ப் போய்விடும். பள்ளிக்கூடத்துக்கு நாழி ஆய்விட்டது. சீக்கிரம் போ’’ என்று சொன்னாள்.

சுந்தரம், தாய் சொன்னபடிக்கு உள்ளே சென்றான். அந்த அறை வெகு இருட்டாக விருந்தது. சுந்தரம் வெளிச்சத்திலிருந்து உள்ளே சென்றதால், சற்றுநேரம் ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது. அம்மா சொன்னபடி பானையின் மேலிருந்ததைப் பத்திரமாகக் கீழேவிழாமல் எடுத்துவைத்துவிட்டு பானையைத்திறந்து கையை உள்ளேவிட்டான். கையைவிட்டானோ விடவில்லையோ, உடனே, ‘ஐயோ அம்மா, அம்மா! அம்மா!’ என்று கதறிக்கொண்டு, கையை உதறிக்கொண்டு ஓடிவந்தான். தாயாருக்கு இன்னதென்று தெரியவில்லை. அலறிப்புடைத்துக்கொண்டு கையிலிருந்த சொம்பை உடனே போட்டுவிட்டு, ‘என்னடா அப்பா! ஏண்டி அம்மா! என்ன, என்ன,’ என்று வெகு பலமாய்க் கத்திக்கொண்டு ஓடிவந்தாள்.

சுந்தரத்துக்கோ என்ன என்று சொல்ல முடியவில்லை: கையைமட்டும் அதிகமாக உதறிக்கொண்டு, வீலிட்டழுதுகொண்டு, ‘‘அம்மா, கையில் என்னமோ குத்திவிட்டது. தாங்க முடியவில்லை. விருவிரு என்று கடுக்கிறது’’ என்று கத்தினான். ‘‘எங்கே அப்பா, எங்கே அப்பா’’ என்று தாயார் கேட்டாள். ‘‘இரத்தமோ இல்லை. ஒரு அடையாளமும் தெரியவில்லை கையைத்தூக்க முடியவில்லை. முழங்கையண்டை வலிக்கிறது ; கழுக்கட்டியில் வலிக்கிறது’’ என்று கதறினான். கையைக் கெட்டியாகக் பிடித்து ஒரு விரலைச் சோதித்தாள். ஒருவிரல் சிவந்திருந்தது. உடனே ஒரு மெல்லிய (Twine) கயிறை எடுத்துக் கொட்டின இடத்துக்கு மேலோடு கெட்டியாகக் கட்டினாள். ஆனாலும் சுந்தரம் அழுகை ஓயவில்லை. கதறிக்கொண்டே இருந்தான். அடுத்த வீட்டுக்காரர்களும் அண்டை வீட்டுக்காரர்களும் ஓடிவந்து குழந்தையைப் பார்த்து பரிதபித்தார்கள்.

இப்படியிருக்கிறபோது சுந்தரத்தின் அக்காள் ஸரஸ்வதி ஒரு விளக்கை ஏற்றிக்கொண்டு வந்து பானையை வெளிச்சத்தில் கவிழ்த்தாள்

முறுக்குகள் மட்டும் விழுந்தன. "ஒன்றையும் காணோமே, அம்மா," என்று சொன்னாள். 'நன்றாகப் பார் அம்மா" என்று தாயார் சொல்லவே பானையின் உள்ளே ஒரு மூலையில் ஒரு தேள் பதுங்கிக் கொண்டிருந்தது. பானையின் நிறமும் தேளின் நிறமும் ஒன்றாயிருந்தது. அசப்பிலே பார்த்தால் தேளிருக்கிறதென்று தெரியாது. பானையை மறுபடியும் கவிழ்த்துத் தட்டினாள். உடனே தேள் வெளியே விழுந்தது. விழுந்ததோ இல்லையோ உடனே ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தது. கொடுக்கைத் தூக்கிக்கொண்டு ஓடிற்று. அதைப் பார்த்தால் "என்னைத் தொட்டையோ தெரியுமா சேதி. தைரியமிருந்தால் தொட்டுப்பார்" என்று சொல்லிக்கொண்டு போனதுபோல் தோன்றிற்று



சுந்தரம் போட்ட கூச்சலைக்கேட்டு பள்ளிக்கூடத்திற்கு அந்தத் தெருவழியாகப் போன சில பிள்ளைகள், வீட்டின் உள்ளே ஓடிவந்தார்கள். அப்பிள்ளைகளில் ஒருவன் பெரியவன். அவன் உடனே "சாணி எங்கே, இல்லாவிட்டால் 'வாருகோல்' எங்கே, ஒன்றும் அகப்படாவிட்டால் ஒரு காண்டி, தோசைத்திருப்பி எது இருந்தாலும் கொண்டு வாருங்கள்" என்றான். உடனே அவன்கூட இருந்த பையன். "போடா, போ, ஒரே நசுக்காய் நசுக்கிவிட்டுப் போகிறதை விட்டு, இப்போதுதான், சாணியைக்கொண்டுவா, அதைக்கொண்டுவா, இதைக் கொண்டுவா என்கிறாய்" என்று சொல்லிக்கொண்டு ஒருகல்லை எடுத்து நசுக்கப் போனான். அதற்குள் சுந்தரத்தின் தாயார், "அப்பா, அதைக்கொல்லாதே, கொடுக்கை நறுக்கி விட்டுவிடு" என்றாள். "போங்கோ, அம்மாமி, போங்கோ மறுபடியும் யாரையாவது கொட்டவா" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஸரஸ்வதி, மேஜையின்மேலிருந்த ஒரு கத்திரிக்கோலை எடுத்து கொடுக்கைக் கத்திரித்து விட்டாள். தேள் ஓட ஆரம்பித்தது. அதற்குள் மற்றொரு பையன் அந்த வீட்டு அலமாரியிலிருந்த ஒரு ஹார்லிக்ஸ் மில்க் (Horlick's Milk) காலிசீசாவை எடுத்துத் தேளை உள்ளேவிட்டு மூடிவைத்தான். தேளும் ஏறி ஏறி வெளியேவரமுடியாமல் அலைந்து கொண்டிருந்தது. பொட்டிப்பாம்பைப்போலிருந்தது. சுந்தரமோ அழுகையோடு இதையும் கவனித்துக் கொண்டிருந்தான். சுந்தரத்தின் தாயாரோ, கொடுக்கை முள்ளுடன் வாசலில் ஒருவர் காலிலும் படாமல் தூரக்கொண்டுபோய் போடச்சொன்னாள்.

சுந்தரத்துக்கோ வலி தாங்கவில்லை. முழங்கை, தோள்பட்டை எங்கும் நெறி ஏறி கை தூக்கமுடியவில்லையென்று அழுதான். அங்கே வந்தவர்கள் அநேக மருந்தைச் சொன்னார்கள். ஒருவர் "பனிக்கட்டியை (Ice) கொட்டின இடத்தில் வைத்தால் போதும். எங்கள் வீட்டில் ஓடுமாத்துகிறபோது கொத்தனுக்கு தேள் கொட்டிற்று. பனிக்கட்டியை வைத்ததும் இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் வலியில்லை" என்று சொன்னார். இன்னொருவர் "கத்தியால் கொஞ்சம் சுறண்டி நெருப்பின்மேல் இளகின ரப்பரை கொட்டுவாயில வைத்தால் போதும்" என்றார். மற்றொருவர் "நவசாரம் வைக்கக்கூடாதா; கடை, கிட்ட இருக்கிறதே" என்றார். புளிச்சகாடியைத் தேய்க்கலாம் என்றார் சிலர். மற்றும் சிலர் கத்தாழைமடலை கொட்டுவாயில் தேய்க்கலாமென்றார். அங்கிருந்த ஒரு கிழவி மந்திரம் போடுகிறேன் என்றாள். தாயாரோ "எப்படியாவது மந்திரமாயிருந்தாலும்சரி, மருந்தாயிருந்தாலும் சரி, குழந்தைக்கு வலி இல்லாமலிருக்க வேண்டும்; பிள்ளையாரே, குழக்கட்டை பண்ணி நைவேத்யம் செய்கிறேன்" என்று சொன்னாள். சுந்தரம் பள்ளிக்கூடம் போகவில்லையே. வாத்தியார் அடிப்பரே என்று பூதுகொண்டு வலிதாங்கவில்லையே என்று கதறிக்கொண்டிருக்க, பையன்களும் ஒருவர் ஒருவராய் பள்ளிக்கூடம் போனார்கள். ஒருவன் கடைக்கு ஓடி மருந்து வாங்கிவந்தான். மற்றொருவன் நவசாரம் கொண்டு வந்தான். மற்றொருவன் கத்தாழைமடல் ஒடித்துக் கொண்டு ஓடிவந்தான். எல்லாரும் பள்ளிக்கூடம் போய் சாயங்காலம் சுந்தரத்தை வந்து பார்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டே போனார்கள். சாயங்காலம் கொஞ்சம் வலி ஆற, தாயாரும் குழந்தைகளுக்கு சாதம் போட்டு தானும் சாப்பிட்டு, உள்ளில் சாமான்களைப் பார்த்து மூடிவிட்டு, கொஞ்சம் பாலை எடுத்துக்கொண்டு சுந்தரத்துக்குக்கொடுத்து குழந்தையைக் கட்டிக்கொண்டு படுத்துக்கொண்டாள். உடனே, தாயாருக்கும் பிள்ளைக்கும் அடியில்வரும் சம்பாஷணை நடந்தது.



குழந்தை:—அம்மா, இந்த விரலைப் பார்த்தாயா ? எவ்வளவு வீங்கிவிட்டது.

தாயார்:—ஆமாம், அப்பா, தேள் கொட்டினால் தேகத்தில் சக்தியில்லாமற் போனால் அப்படித்தான் வீங்கும்.

குழ:—அதற்குப் பல் என்ன வெகு கூர்மையோ? கடித்தபோது நெருப்புப்போலிருந்ததே.

தா:—அதற்குப் பல் இல்லை ; அதன் வாலால் கொட்டுகிறது. வால் நுனியில் அதற்கு ஊசிபோல் ஒரு முள்ளிருக்கிறது.

குழ:—எனக்கு எத்தனையோ தரம் முள் குத்தியிருக்கிறதே ; இவ்வளவு அவஸ்தைப் படவில்லையே.

தா:—அந்த முள்ளில் ஒரு பையுண்டு. அந்தப்பையில் விஷமுண்டு. அந்த முள்ளின் மூலமாய் விஷம் வருகிறது. அந்த முள் குத்தும்போது விஷம் உள்ளே புகுந்து விடுகிறது. அந்த விஷத்தால்தான் உபத்திரவமெல்லாம்.

குழ:—எப்படி விஷம் விழும், எனக்கு நன்றாய்த் தெரியவில்லையே. ?

தா:—பைஸிகிளில் (Bicycle) சங்கிலியண்டை எண்ணெய் விடவேண்டுமானால் எண்ணெயிருக்கும் தகரத்தை (oil can) அமுத்தினதும் அதன் மூக்கு ஓட்டையிலிருந்து எண்ணெய் விழுவதுபோல், கொடுக்கின் கடைசி மணியிலிருந்து விஷம் கூராயிருக்கும் முள் வழியாய் விழுகிறது.

குழ:—ஓஹோ ! இப்போழுது எனக்குத் தெரிந்தது, அம்மா, அதற்குத்தான் அக்காள் கொடுக்கை நறுக்கி விட்டாளோ. பிறகு ஒருவரையும் கொட்ட முடியாதோ?

தா:—எப்படிக் கொட்டும்? விஷம் தானில்லையே.

குழ:—அதிருக்கட்டும். சாணி எங்கே என்று யாரோ கேட்டானே. எதற்கு ?

தா:—நீயே யோசித்துப்பார். அதன்மேல் சாணியைப் போட்டுவிட்டால் அது எப்படி ஓடும். அதற்கு மூச்சுவிட இடம் ஏது. இல்லையே; உன் வாயையும் மூக்கையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டால் உனக்கு மூச்சுத் திணறுகிறதல்லவா ? அப்படியே அதற்கும் மூச்சுவிட இடமில்லாமல், காற்றில்லாமல் இறந்துவிடும்.

குழ:—காற்றுவேண்டுமா ! அந்த இருட்டுள்ளே இராத்திரி படுத்துக்கொள்ள முடியவில்லையே! காத்து இல்லையே, அத்தோடே பானையில் மூலையில் அல்லவோ தேள் இருந்தது. அங்கே மட்டும் அதற்கு நிரம்பக் காற்றுண்டோ ?

தா:—அந்தப் பானை நன்றாய் மூடவில்லை. இடுக்கு வழியாய்க் கொஞ்சம் காற்று உள்ளே போகும். தேள் எப்போதும் இருட்டான விடங்களிலும் கற்களுக்கடியிலும்; மரக்கட்டைகள் அடுக்கியிருக்கிற இடங்களில் மத்தியிலும் கீழேயும்; சிலவேளைகளில், பாய் உதராமல் மூலையிலிருந்தால் அதிலும், படுக்கை தலைகாணிகளுக்கடியிலும் சோடுமூலையில் கிடந்தால் அதற்குள்ளும், குப்பைசேர்ந்துபெருக்காத இடங்களிலும், மூட்டையடுக்கி கொஞ்சநாளானால் அதினிடுக்கிலும், பந்தல் போட்டு நாளாய் விட்டால் ஓலையிடுக்கிலும், வீடு ஓடு மாத்துகிறபோது பழைய ஓடுகளிலும் இருக்கும். வெயிற்காலத்தில்தான் அது அதிகமாயிருக்கும்.

குழ:—பகலில் அதிகமாய்க் காணுகிறதில்லையே, ஏன் அம்மா !

தா :—அது அதிகமாய் வெளிச்சத்தில் வருகிறதில்லை. அது அநேகமாய் இருட்டில்தான் இண்டு இடுக்குகளிலிருந்து வரும். அப்போதுதான் அது தனக்கு ஏதாவது சாப்பிட பூச்சி அகப்படாதா என்று தேடிக்கொண்டு வரும்.

குழ :—அது என்ன முறுக்குத் தின்னுமா ? அதற்குத்தான் பல் இல்லையே. முறுக்கு யார் அதற்குப் பண்ணிக்கொடுக்கிறாள்?

தா :—இல்லை அப்பா, அது முறுக்குத் தின்னாது; சின்ன பூச்சி, புழு, கொசு, சிலந்திப்பூச்சி, பாச்சை, கரப்பு இப்படிப்பட்ட பூச்சிகள் அகப்பட்டால் அவைகளைப் பிடித்துத்தின்னும். அதற்கு முன்னால், வாயிலிருந்து நீட்டிக்கொண்டு இரண்டு புறத்திலும் இரண்டு கையைப் போலிருக்கிறது பார்; அவைகளால் பிடித்து மிருதுவாய் நசுக்கி, அல்வா, வாழைப்

பழத்தை நாம் சாப்பிடுவதுபோல் சாப்பிடும். ஆனால் எதையாவது சாப்பிடப் பிடித்தால், அது இதை எதிர்த்து சண்டைபோட ஆரம்பித்தால் கொடுக்கைத் தூக்கி உன்னைக் கொட்டினால் போல் கொட்டி விஷத்தைவிட்டு அதை சாகஅடித்துத் தின்றுவிடும்.

குழ :—ஆம்; ஆம்; இருட்டுள்ளேதான் காப்பு இருக்கிறதைப் பார்த்திருக்கிறேன். சுவற்றின் மூலையில் சிலந்திப்பூச்சி வலை பின்னி அதற்குள் இருக்கிறதைப் பார்த்திருக்கிறேன்.

தா :—ஆம், அப்பா, அப்பேர்ப்பட்ட இடத்தில்தான் இருக்கிற மற்றப் பூச்சிகளையும் பிடித்து சாப்பிடும்.

குழ :—தேள் கொட்டினால் என்ன மருந்து அம்மா.

தா :—எதுதான் நல்ல மருந்து என்று சொல்லமுடியாது. பனிக்கட்டியை கொட்டு வாயில் வைத்தால் விஷம் ஏறாது என்று சொல்லுகிறார்கள். கொட்டின இடத்திற்கு கொஞ்சம் மேலோடு, மெல்லிய (Twine) கயிறைக் கட்டினால் மேலே விஷம் ஏறாதாம்.

குழ:—வேறே மருந்து இல்லையா அம்மா?

தா :—'படிக்காரம்' கடையில் விற்பான். ஒரு தம்படி, காலணாவுக்கு வாங்கி, நெருப்பில் சுட்டு, பொடியாக்கி கொட்டினவாயில் வைத்து ஜலம் விட்டுத் தேய்க்கலாமாம். புளிச்ச காடி அகப்பட்டால் அதையும்வைத்துத் தேய்க்கலாமாம்.

குழ :—தேளுக்கு குழந்தைகள் உண்டோ அம்மா ?

தா :—உண்டு, அப்பா. உன்னை நான் இடுப்பில் எடுத்துக் கொள்கிறேனல்லவோ—சிலது வேளை முதுகில் தூக்கி 'உப்பு வாங்கல்லையோ உப்பு' என்று சொல்லுகிறேனல்லவோ, அது போலே தேளும் தன் குஞ்சுகளை சிலவேளைகளில் முதுகில் தூக்கிக்கொண்டு போகும்.

குழ :—வாசலில், குறத்தி குழந்தைகளை முதுகில் கட்டிக்கொண்டு போகிறாளே, அப்படியா, அம்மா ?

தா :—ஆம். ஆம். அப்படித்தான்.

குழ :—தூக்கம் வருகிறது அம்மா. தேள் பொல்லாதது. அதை சீஸாவில் போடப்படாது அம்மா. அதை நசுக்கணும் அம்மா.

தா:—இருக்கட்டும்-காலமே தூரக்கொண்டு போய்விட்டு விடுகிறேன் தூங்கு.

குழ :—போ. அம்மா—தூரக் கொண்டு போய் விட்டுவிடு அம்மா—அதை நசுக்கி விட்டால்தான், அம்மா, வராது.

தா :—தூங்கு அப்பா — தூங்கு.

சுந்தரம்: தூங்க ஆரம்பித்து விட்டான்.

சுந்தரம் அதிகாலையில் எழுந்திருந்து தேள் மாதிரி ஒரு படம் வரைந்து தேளிலிருந்து மணிகளை எண்ணி அவைகளையும் சரியாய்ப் போட்டு முள்ளிருக்கிறதையும் கூர்மையாய்க் காட்ட ஒரு சிறு கோடுபோட்டு, கைகளையும், சரீரத்தையும் இந்தபுஸ்தகத்தில் போட்டிருக்கிறபடி எழுதி வாத்தியாரண்டை காட்டினான். களிமண்ணினாலும் தேள்போல் ஒன்று பண்ணினான்.

C. S. சுந்தரம் ஐயர், பீ.ஏ., எல்.டி.

---

## ஐரோப்பிய மஹாயுத்தம்

**எமது ஆபீஸ் பதிப்பைப்பற்றி கிருஷிகன் பத்திராதிபர் எழுதுவது:**—பார்த்தவுடன் கண்ணைக் கவரும் விதமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதற்கேற்பவே, உள்ளடங்கிய விஷயமும் சிலாகிக்கத் தக்கவாறு அமைந்திருக்கிறது. ஐரோப்பிய தேச சரித்ர ஸம்பந்தமான பல விஷயங்களையும் விவரித்திருப்பதால், ஐரோப்பாவைப்பற்றிய விஷயங்களை ஸாமான்ய ஜனங்கள் அறிய இது சிறந்த ஸாதனமாகும் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பேபர்களில் ராய்டர்தந்திகள் வருவதுபோல், யுத்தஸம்பந்தமான விஷயங்களை ஸம்பந்தம் சிறிதுமில்லாமல் அடுக்கிவிடாமல், ஒழுங்குபடுத்தி நேர்த்தியாயும் கதைப் போக்காயும், கார்ய காரண ஸம்பந்தம் விளங்கும்படியும் எழுதியிருப்பதால், முன்னுரையில் கூறியபடி படிப்பவர்க்கு மனோத்ஸாகத்தை யுண்டுபண்ணும்படியும், அரிய விஷயங்கள் பல சிரமமின்றி அறியும்படியுமிருக்கிறது. யுத்தமூலம், முதல் ஸம்பவங்கள், நகர்குழப்பங்கள், பெல்ஜியரின் தீரம், கடற்போர் இந்தியாவின் ராஜபக்தியும் போர்வீரரின் பிரதாபமும், ஆகிய இவைகள் மனதைக் கவரும்வண்ணம் அழகிய, தெளிவான நடையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. அநுபந்தங்களில் கணக்கிற் சிறந்த அரிய ஸமாசாரத்தொகுதி ஜனங்களின் அறிவை விஸ்தாரப்படுத்தும்படி அமைந்திருக்கிறது.

☞256 பக்கங்கள்: 58 ஆப்டோன் படங்கள் கொண்டது: அழகாய்அச்சிடப்பெற்றது:விலை ரூ.1-4-0 தான்



# திருத்தணிகை

## வெண்பா அந்தாதி

## TIRUTANIKAI VENBA ANTADI

### விநாயகர் காப்பு

சீராருந் தெய்வத் திருத்தணிகை வேலவன்மேற்
பேரரு மந்தாதி பேசுதற்கு—நேராக
வந்தெனக்கு முன்றோன்று மாதேவன் முன்றோன்
தந்தி முகத்தெந்தை யிருதாள். [றல்

### நூல்

திருத்தணிகை வேன்முருகா நினனை வந்தாளற்
கொருத்தருமே யில்லை யுலகில்—வருத்தமெலாம்
போயகல நின்றாட் புணையே துணையாக
நீயருள்வாய் சற்று நினைந்து. 1

நினையா மூனென்னெதிரே நீவந்து தோன்றின்
வினையாவு மிங்கிரிந்து வீயும்—தனையுணரு
மெய்ப்போதம் வந்தெய்து மேலாந் தணிகைமலை
யப்பா நின்றாளே யரண். 2

தானென்றறைவர் தனையறிந்தோ மென்றுரைப்பார்
தானே தனியாவுமெனச் சாற்றுவா—ரேனலைந்தார்
ஞான குருபரனாய் நற்றணிகை மாமலைவாழ்
தேனை விரைந் தருந்தாதே. 3

தேவரெலாம் போற்றத் திருத்தணிகை மாமலையில்
மேவியடியார் வினைதீர்ப்பான்—ஆவியொடு
காயமெலா மன்னோன் கழற்கே யடைக்கலமாய்
நீயிருப்பாய் நெஞ்சே நிதம். 4

நிதமுன் மனத்தை நிறுத்த வெஞ்ஞான்றும்
பதமென்ற தொன்றைப் பணிப்பான்—சததளத்திற்
பொற்றாமரையாள் புகழுந் திருத்தணிகை
பெற்றாள் குமரனெனப் பேசு. 5

பேசுவது நின்னையே பேணுவது நின்னையே
யேசுவது நின்னையே யிவ்வுலகம்—பாசமெலாம்
வெந்தோடச் செய்வாய் நீவீறு திருத்தணிகைக்
கந்தா வெனையிரங்கிக்கா. 6

காக்கக் கடனுனக்கே கந்தா வறுமுகவா
நீக்கமிலாய் மெய்யடியார் நெஞ்சத்தே—தாக்குகின்ற
ஐம்புலனைச் சுட்டறுத்தோ ராயுந்திருத்தணிகை
நம்பியுனை யடைந்தே னான். 7

நானென்ப தற்றவர்க ளாடோறும் போற்றுநினை
யானென் றறிவே னிறைவனே—வான்றோய்
திருத்தணிகை வாழ்கின்ற தேவே யுனையன்றி
யொருத்தரையும் வேண்டேனுணர். 8

உணரு மறிவும்போ யுண்மை நிலையிற்
கணமேனும் யானிருக்கக் காணேன்—குணமேவும்
வள்ளி தெய்வானையுடன் வாழுந் திருத்தணிகை
வள்ளலே நல்காய் வரம். 9

வரமருள்வாய் நின்றாள் வழுத்து மடியார்க்குப்
பரவு புகழெல்லாம் படைப்பாய்—குரவனாய்
ஞானவனு பூதிதரா னேயேற்ற நற்றணிகைப்
பானுவே நிற்கே பரம். 10

பரமுனக்கென் றெண்ணிப் பலகா லடைந்தே
னொருகணமேனும் வர நீ வுன்னாய்—சுரதருவின்
மிக்கவனே வேலவனே மேவித் தணிகையினிற்
புக்கவனே யுண்மை புகல். 11

புகலுமளவோ நீலப் புட்கரிணிச் சீர்த்தி
சகல கலையுங்கூடிச் சாலப்—புகழுநின்
னன்பின் பெருக்காமணி தணிகையா யதன்சீர்
பின்பா ரறிந்தடைந்தார் பேர்ந்து. 12

பேறடைய வேண்டினேன் பெம்மானே வல்வினைக
ணீறுபட்டு வெந்தோட நீநினைப்பாய்—ஆறணியு
மப்பனுக்கு முன்னுரைத்தா யற்புதமாங் காவிவெற்பி
னப்பனே நீ காத்தருள். 13

அருளுருவ மானவுனை யானடைய ஞான
வொருமொழியி னுண்மை யுரைத்தற்—குரிமையாய்
வாரா தொழிந்தக்கால் வண்டணிகை யாய்துணைதா
னோரா வறியே னறை. 14

அறைவே னின்னும மனுதினமு முன்றாண்
மறவேனெனை நீ மறவேற்—றுறவோர்த
நெஞ்சமலர் போற்றணிகை நீடுமலை வாழ்வுகந்தோ
யஞ்சலென்பாய் சற்றிங்கறிந்து. 15

அறிவிற் கறிவா யனுதினமு மென்னிற்
பிறிவற்றிருக்கும் பிரானே—நெறிகாட்டி
யென்னையோ ரன்பனா யீடேற்றுவாய் தணிகை
மன்னவனே யென்முன்னே வந்து. 16

வந்துன் திருக்கரத்தான் வாய்ந்த சின்முத்திரையைத்
தந்தருளை யேற்குத் தணிகையினிற்—சந்ததமும்
வீற்றிருந் தாயுன்சீர் விளம்புமடியார் சரிதத்
தேற்றமெளிதாமோ வியம்பு. 17

இயம்பு திருக்கரங்க ளீராறுடையான்
பயங்களெலாம் நீக்கப் பணிப்பான்—நயம் பொலியும்
பேரிகையார்க் குந்தணிகைப் பெம்மான் சீரெக்காலு
மாரவுரைத்தேன் புவியிலாய்ந்து 18

ஆய்ந்துரைக்க வென்னாலிங் காகாதெனக் கருதிக்
காய்ந்துரைக்கலாமோ நீ கண்மணியே—செய்பிழை [கள்
செய்திடினுந் தாய்பொறுத்துத் தீர்ப்பாளஃதேபோற்
செய் தணிகையாய் நீ தெளிந்து. 19

தெளிந்துன்னை யானறியத் தேவே யிரங்கி
யளிகொண்டுன் பொற்றா ளளிப்பாய்—களிமிகுந்த
தேனார் பொழில்சூழ் திருத்தணிகை மாமலைவாழ்
கோனே யெனையாண்டு கொள். 20

கொள்ளத்தகும் பொருணின் கோதிலாமெய்ப்பதமே
யெள்ளத் தகுவனமற் றெல்லாமென்—றுள்ளபடி
சந்தான கற்பகம்போற் றங்கித் தணிகையில் வாழ்
எந்தா யுணரே னிதென். 21

என்றைக்கு நின்னருள்வந் தெய்துமோ யானறியேன்
கன்றைப்போ னின்று கதறினேன்— இன்றைக்கே
வாராய் திருத்தணிகை வள்ளலே நிற்றுறந்திங்
கியாரோ டுரைத்திடுவே னியான். 22

யானென தென்றென்னு மகம்பாவ மிற்றவர்க
டானெனவே நிற்குந் தனிநிலையிற்—றேனெனச்சொ
லன்பா ரடியார்கட் கானந்தந் தந்தாளு
மன்பா தணிகை யையா. 23

அய்யா குமரேசா வப்பா தணிகையோய்
மெய்யாகு ஞானமது மேவிடற்கும்—பொய்யாகுங்
காமாதியாம் பகைகள் கட்டோடே போயகல
நேமாதி நிஷ்டை கொடுநீ. 24

நீயே குருவெனக்கு நீயே குலதெய்வம்
நீயே யனைத்துமாய் நிற்றலால்—நீயேதா
னிவ்வண்ணஞ் செய்த லியல்போ தணிகையாய்
யுய்வண்ணம் நீவந் துரை 25

உரையிறந்துமேலா முயர்துரிய வாழ்விற்
கரையிறந்த காட்சிதந்து காத்தான்—விரைநீப
மாலை யணிந்ததோள் வள்ளால் தணிகையிற் கூர்
வேலைப் பிடித்திருந்த வேள் 26

வேளே தணிகைமலை வீற்றிருக்கும் வேலவனே
கோளேது நாளேது கூறுங்கால்—கேளாயென்
னுள்ளத்தே நீவந்திங் குள்ளொளிதர் தானந்த
வெள்ளத்தே நீயிருக்கவே. 27

வேலா திருத்தணிகை மேவியடியார் வினைகள்
வேலால் முடித்தருள்வாய் வித்தகனே—ஆலால
கண்டனுமே கொண்டாடுங் கந்தா நின்னற்புதத்தை
விண்டெவரே சொல்வார் விளம்பு. 28

விளம்பநீ யெண்ணுவையே வேத முடிவைக்
களங்கமறயானுணரக் காட்டி—வளம்பெருகுஞ்
சோலைசூழ் தென்றணிகை தோன்றினா யன்றோவொள்
வேலை யுடையாயென் வியப்பு. 29

வியந்தெனை நீயாண்டுன் விரைகழற் கீழன்பு
நயந்தருள்வை யேலது தானன்கார்—கயங்குலவு
வண்டணிகை மேவிவளர் வள்ளால யிலேந்துந்
திண்டிறலோய் ஞானத்திரு. 30

**வாழி.**

ஆயுமறை வேதியரோ டன்பாற்றிருத்தணிகை
போயுறைந்தவ் வேலவனைப் பூசிப்போர்—நேயமாய்
வாழ்வார்க ளெஞ்ஞான்று மாண்புவியில்வெற்றிபெற்றுத்
தாழ்வாரோ வையமிலை தான்.

**முற்றும்.**

(சென்னை ஹைகோர்ட்டில் டிரான்ஸிலேடராக விருந்த வித்வான் பவழை—ஷண்முக முதலியாரவர்கள் இயற்றியது.)

---

**படிக்காரம்:**—சீனக்காரம் அல்லது படிக்காரம் என்னும் வஸ்து நீரிலுள்ள விஷக்கருவைக் கொல்லும் தன்மையுடைய தென்றும், பானம் பண்ணும் நீரைப் பரிசுத்தப் படுத்தும் குணமுள்ள தென்றும் பிரத்தியக்ஷமாக அறியலாம். முக்கியமாக விஷசுரத்தை உண்டாக்கும் ஜலத்தை சுத்தமாக்கச் சிறந்த மாற்றுப் பொருளாயிருப்பதுந் தவிர இது வருத்தமில்லாமல் யாவரும் கையாளத்தக்கதாயு மிருக்கிறது. தன்னூரைவிட்டு அசலூருக்குப் போகுமிடத்திலெல்லாம் ஜலத்தைக் காயவைத்து ஆறின பின்பு தாகத்துக்குச் சாப்பிடுகிறதென்றால் சாத்தியப் படுமா? ஆகையால், பிரயாணம் செல்லுகிறவர்களெல்லாம் இந்தப் படிக்காரப் பொடியை ஒரு சிறு பரணியில் வைத்துக்கொண்டு சென்று, தாகத்துக்கு ஜலம் சாப்பிடுவதற்கு முன்னே அணுவளவு பிரமாணம்படிக்காரப்பொடியை அதில் போட்டுக்குடித்தால்எத்தனையோ மன்னுயிர்கள் நோய்க்கு இரையாகாமல் உயிர் வாழ்ந்து இருக்கலாமே! இதற்கு வேண்டிய படிக்காரப் பொடி மிகச்சொல்பமாகையால் அதைப் போட்டிருக்கும் ஜலத்தின் ருசிகூட மாறிப் போகிறதில்லை. நாழுழி ஜலத்துக்கு எட்டு நெல்லிடைப் படிக்காரம் போதுமென்று ஒரு சாஸ்திரியார் பரிக்ஷைசெய்து எழுதிவைத்திருக்கிறார்.

***

**வைரம் பரிசோதிக்கும் முறை:**—வைரத்தைப் பரிசோதிக்கும் முறை இரண்டாம். ஒரு கடுதாசி அட்டையிலே ஊசியினால் ஒரு சிறு துவாரத்தைச் செய்து வைரம் என்று சொல்லப்படுகிற கல்லின் வழியாய் அந்தத் துவாரத்தைப் பார்த்தால், வைரம் மெய்யானால் ஒரே துவாரமும், அது பொய்யானால் இரண்டு துவாரங்களும் கண்ணிற்குப் புலப்படுமாம். இன்னொரு முறை: வைரத்தின் வழியாய் உன் விரலைப் பார்த்தால் அது எப்பொழுதும் போலிருந்தால் வைரம் மெய்யும், அது பெருத்துப் பிரிந்து தோன்றினால் வைரம் பொய்யுமாம்.

---



# நம்பூதிரிமார்கள்

## NAMBUDRIS

(286-ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்காப்புகள் ஆத்ய நம்பூதிரி ஸ்திரீகள் மட்டுந்தான் அணியலாம். மூக்குக் குத்தும் வழக்கம் அவர்களிடமில்லை ஆதலால் மூக்கில் யாதொரு அணியும் இராது. விதவைகள் தங்களுக்கிருந்த ஆபரணங்களைத் தரித்துக்கொண்டிருப்பார்கள். தலையை முண்டனம் செய்யும் குரூர வழக்கம் அவர்களிடமில்லை. பச்சை குத்திக்கொள்வதும் குங்குமம் தரிப்பதும் நம்பூதிரி ஸ்திரீகளுக்கு விலக்கப்பட்டிருக்கின்றன. புருஷர்கள் நெற்றியில் குறுக்காக விபூதியையும், வைணவர்களைப் போல நேராக கோபி சந்தனத்தையும் இட்டுக்கொள்வார்கள். ஸ்திரீகள் ஸ்நாநம் செய்த பின்னர், நெற்றியில் சந்தனத்தால் மூன்று கோடுகள் குறுக்காகப் போட்டுக்கொள்வார்கள். ஆத்ய ஸ்திரீகள் மட்டும் அர்த்த சந்திரனைப்போன்று கோட்டை இட்டுக்கொள்வார்கள். விதவைகள் கோவில்களில் கொடுக்கப்படும் விபூதியையும் சந்தனத்தையும் தரித்துக்கொள்வார்கள். குங்குமம் அவர்களிடம் உபயோகத்திலில்லை. கண்ணுக்கு மை இட்டுக்கொள்வதுண்டு.

ஆகாரம் —நம்பூதிரிகள் சாகபக்ஷணிகளானதால் அவர்களுக்கு அரிசியும் காய்கறிகளுமே உணவுப்பொருள்களாமென்று தனியே சொல்லவேண்டியதில்லை. மதுபானம் என்பது அவர்களிடத்து இல்லவே இல்லை. அரிசிக் கஞ்சியைத்தான் நம்பூதிரிகள் இடைவேளைச் சிற்றுண்டியாக வெகு ஆவலுடன் உபயோகிப்பார்கள். பலகாரங்களில், கொழுக்கட்டைதான் அவர்களுக்கு விசேஷம்.பானத்துக்கு கொத்தமல்லியும் சுக்கும் போட்டுப் பொங்கவைக்கப்பட்ட ஜலத்தை உபயோகிப்பார்கள். நெய் உபயோகம் வெகு அருமை. நல்லெண்ணெயை ஒருபோதும் அவர்கள் உணவுப்பொருள்களில் சேர்ப்பதில்லை. புளிப்பும் தித்திப்புமான பொருள்களையே நம்பூதிரிகள் உண்பார்கள். காரமான உணவுகளை வெறுப்பார்கள். ஒவ்வொரு நம்பூதிரியும் போஜனம் செய்யுமுன்னர் ஸ்நாநம் செய்துவிட்டு வேதபடனம் செய்யவேண்டும். இவ்விதி வெகு கண்டிப்புடன் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஸாதாரணமாக வாழை இலையில் உண்பவனுடைய மனைவியினால் அமுது படைக்கப்படும். அவன் உண்டு எழுந்திருப்பதன் முன்னம், அந்த இலையை ஏற்றுக்கொள்வதைக் குறிப்பிப்பதற்காக அந்த ஸ்திரீ தனது வலதுகையால் இலையைத் தொடுவாள். அப்போது புருஷனும் இலையை இடதுகையால் தொட்டுக்கொண்டிருப்பான். ஸ்திரீ புருஷர்களைத்தவிர வேறு யாவரேனும் உடனிருந்து உண்ணும்போது, ஒரு பரிசாரகன் அமுது படைப்பான். விதவைகளுக்கு ஒரே ஒருவேளை போஜனந்தான் விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்நிய பிராம்மணர்களால் பாகம் செய்யப்பட்ட உணவை ஒரு நம்பூதிரி உண்பானாயினும், அவனது மனைவி அவ்வித உணவைத் தொடக்கூடமாட்டாள். தீக்ஷையிலிருப்போரும், பிரம்மசரிய விரதத்தை யனுஷ்டிப்போரும், முருங்கைக்காய், பால், மிளகாய், உளுந்து, துவரை, முதலியவைகளை விலக்குவார்கள்.

வாஸஸ்தானம்.—நகரவாஸத்தாலுண்டாகும் சந்தடியின்றியே நம்பூதிரிகள் வெகு ஒதுக்கமாக கிராமங்களிலேயே வஸிப்பார்கள். இல்லம் என்றும், மணக்கால் என்றும் சொல்லப்படும் அவர்களுடையகிரகங்கள் ஸாதாரணமாக மலைச்சரிவுகளிலும் ஆற்றோரங்களிலும் ரமணீயமாகவுள்ள இடங்களில் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு வீடும், அதன் சொந்தக்காரருடைய ஜன்ம நிலங்களுக்கு மத்தியில் ஒரு தோட்டத்தில் கட்டப்படும். அத்தோட்டத்தில் மா,பலா, புளி, புன்னை, தென்னை முதலிய விருக்ஷங்களை வைத்து விருத்தி செய்வார்கள். ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனி ஸ்நாநக் குளங்களும் கிணறுகளுமுண்டு. வீட்டின் வடமேற்கு மூலையில் ஸர்ப்பங்கள் வஸிப்பதற்காக காவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

நம்பூதிரியின் கிரகம் ஸாதாரணமாக கிழக்கு நோக்கிக் கட்டப்படும். ஒவ்வொன்றுக்கும் அதைச் சுற்றியுள்ள தோட்டச்சுவரின் கண்ணுள்ள ‘படிப்புரை’ என்று சொல்லப்படும் வாயில் வழியேதான் போகவேண்டும். இப் ‘படிப்புரை’யில் ஒரு அறையும் அதைச் சேர்ந்தாற்போலக் கொஞ்சம் வெளி நிலமும் இருக்கும். இங்குதான் காவற்காரர்கள் இரவில் இருந்து காவல் செய்வார்கள். வீட்டு முன்பக்கத்தில் நாற்சோண வடிவமுள்ள

முற்றமொன்றிருக்கும். இது வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும். படிப்புரையிலிருந்து இதற்கு வரப் படிக்கட்டுகளுண்டு. வீடு நாற்கோண வடிவமாகவே அமைந்திருக்கும். அதன் நடுவில் அநேக தாழ்வாரங்களும் அவைகளின் பக்கமெல்லாம் அறைகளுமிருக்கும். பிரதான தாழ்வாரத்துக்குக் கிழக்கிலேனும் மேற்கிலேனும் ஒரு அறையிருக்கும். இங்குதான் வீட்டுப் பிரம்மசாரிகள் படுத்துறங்குவார்கள். அந்நியர்கள் இந்த அறைக்கு மட்டுந்தான் வரலாம். வீட்டின் மற்றப்பாகங்கள் எல்லாம் அந்தப்புரமாகும். இவ்வறைக்கு எதிர்ப்புறமாக தாழ்வாரத்திற்கு அப்பால், மரத்தினாலேயே செய்யப்பட்ட "அறைப்புரை"யில்தான் வீட்டைச்சேர்ந்த விலையுயர்ந்த பொருள்கள் பத்திரப்படுத்தி வைக்கப்படும். இதற்கு இருமருங்கிலும் உள்ள அறைகள் உக்கிராணமாகவும் படுக்கையறையாகவும் உபயோகிக்கப்படும். பிரதான தாழ்வாரத்துக்கு வடக்காக சமையல் அறை இருக்கும். இன்னும், வேத படனம் செய்வதற்கும், குலதெய்வத்தைப் பூஜிப்பதற்கும், யாகங்களும் ஹோமங்களும் செய்வதற்கும் சமகிரியைகளை நடத்துவதற்கும், தனித்தனியே அறைகள் இருக்கும். நம்பூதிரியின் கிரகங்களில் தட்டுமுட்டு சாமான்கள் அதிகமாக இரா. ஊஞ்சல்களும், பூஜாகாலங்களில் ஆஸனமாக உபயோகிக்கப்படும் புள்ளிமான் தோல்களும் வெகுவாகக் காணப்படும்.

பெரும்பாலும் நம்பூதிரிகள் நிலச்சுவான்தாரர்களாகவே இருப்பார்கள். "ஜன்மம்" என்று சொல்லப்படும் அவர்களது பூஸ்திதிகளின்மீது தீர்வை விதிக்கப்படுவதில்லை. அவர்களில் பலர் கோயில்களில் பிரதம குருக்களாக அமர்ந்திருக்கின்றனர். நம்பூதிரியின் காலமெல்லாம் சாஸ்திர விசாரத்திலும் தேவதா பிரார்த்தனையிலுமே கழிகின்றது; வேறு பிரவர்த்தியில் அவன் மனம் நாடுவதில்லை. கபடம், சூது முதலியன அவர்களுக்கு முற்றிலும் புறம்பானவை யெனப்படுகிறது.

ஒரு நம்பூதிரியின் வாழ்நாள் முழுவதிலும் செய்யப்படும் சடங்குகள் பலவாம். பிறந்தவுடன் செய்யப்படும் ஜாதகர்மம், நாமகர்மம், நிஷ்கிரமணம், அன்னப்பிராசனம், சவுளம், வித்யாரம்பம், உபநயனம் இவைகளைப்பற்றி விஸ்தரிக்க வேண்டியதில்லை. பிரம்மசரிய விரதம் முடிந்த பிறகு, கிரகஸ்தாசிரமத்துக்குப் போவதற்கு அருகனாவான். ஒரு நம்பூதிரி குடும்பத்தில், மூத்த பிள்ளை மட்டுமே விவாகம் செய்து கொள்ளலாம். மற்றக் குமாரர்களெல்லோரும் அவர்களுக்குத் தாழ்ந்த குலத்து ஸ்திரீகளோடு சேர்ந்து கொள்ளலாமென்று விதியுள்ளது. ஒரு குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை ஸ்வ ஜாதி கன்னிகையொருத்தியைக் கல்யாணம் செய்வது மிகவும் அபூர்வம். ஒரு நம்பூதிரிக்குப் பிள்ளையில்லாமல் போனால், அவன் இன்னொருத்தியை விவாகம் செய்து கொள்ளலாம். ஆனால் அவன் நான்காவது மனைவியைக் கொள்ளக்கூடாது. அப்படிப்பட்ட ஸந்தர்ப்பத்தில், தன கனிஷ்டனுக்கு விவாகம் செய்துவைக்கவேண்டியது. இவ்விதியை அனுஷ்டிப்பதினால், பூஸ்திதி, பாகம் செய்யப்படாமல் ஒருவரிடத்திலேயே எப்போதும் இருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஜேஷ்ட புத்திர ஸ்வதந்திரத்துக்கு ஸமானமாக இதைச் சொல்லலாம். ஒரு குடும்பத்தில் ஒருவனேதான் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாமாகையால், மணமகன் அகப்படுவது துர்லபம். ஆதலால் அதிகமான பெண்களைக் கல்யாணம் செய்துகொடுக்க வைத்துக்கொண்டிருக்கும் நம்பூதிரியின்பாடு கஷ்டந்தான். இதனால் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏராளமான பொருளைச் சீதனமாகக் கொடுக்க வேண்டியதாகின்றது. கன்னிகைகள் ருதுவாவதற்கு முன்னமேயே விவாகம் செய்து கொடுக்கப்படவேண்டுமென்னும் விதி நம்பூதிரிகளுக்குள் இல்லை. ஆதலால் மணமகன் வாய்க்கும்போது கன்னிகைகளுக்கு விவாகம் செய்து கொள்ளலாம் இன்னும், ஸ்திரீகள் விவாகமாகாமல், கன்னிகைகளாகவே எப்போதும் இருக்கலாம். அதனால் அவர்களுக்கு யாதொரு ஜாதீய தோஷமும் இல்லை. ஆனால் இவ்விதம் ஸ்திரீகளிருப்பது வெகு அருமை. இப்படிப்பட்ட ஸ்திரீகள் இறந்தால், அவர்களுக்குக் கன்னிகைப்பருவம் கழிந்ததற்கு அறிகுறியாக இறந்தவளுடைய கழுத்தில் நெருங்கிய உறவினனாவது, கீழ்த்திசைப் பிராமணனாவது ஒரு தாலியைக் கட்டுவான். கன்னிகழியாப் பெண்களுக்குப் பிரேதஸம்ஸ்காரம் இல்லையாம்.



இதேமாதிரி வழக்கம் நீலகிரி மலையில் வஸிக்கும் தோடர் ஜாதியாருக்குள்ளும் உண்டு.

ஸாதாரணமாக கன்னிகைகளுக்கு இரண்டாயிரம் ரூபா சீதனமாகக் கொடுப்பார்கள். இதற்கு அதிகமாகவும் சில வேளைகளில் கொடுப்பதுண்டு. மணப்பந்தலில் இருக்கும் மணமகளின் கழுத்தில் தாலியை மணமகன் கட்டுவதில்லை; பெண்ணின் தகப்பனே கட்டுவான். கல்யாணத்தில் நான்காம் நாளிலேயே ருதுசாந்தி முகூர்த்தமும் செய்விப்பதுண்டு. அன்றைய தினம் சுபதினமாக இராவிட்டால், அடுத்த சுபதினத்தில் அதைச் செய்விப்பதுண்டு.

யஜுர்வேதநம்பூதிரிகளுக்குள் ஒருவிநோதமான வழக்கம் நடையாடி வருகின்றது. விவாகமான ஐந்தாம் நாள் காலையில், தம்பதிகள் முழங்காலளவு ஜலத்தில் நின்றுகொண்டு, ஒரு சிறு வஸ்திரத்தை வலையாக உபயோகித்து, மண்ணாத்துக்கண் எனப்படும் ஒருவித சிறு மீன்களைப் பிடிப்பார்கள். இவ்வழக்கம், கீழ்க்கரையிலும் போதாயன ஸூத்திரக்காரரிடம் நடையாடி வருகின்றது. இவ்வழக்கம் பின்வளமையைச் சூசிப்பிக்கின்றதென்கின்றனர்.

இனி, சாமகிரியைகளைப்பற்றி இரண்டொரு வார்த்தை கூறுவோம். மரணம் கிட்டிவிட்டதென்று தோன்றினால், தரையின்மீது தர்ப்பையைப் பரப்பி அதன்மீது நோயாளியைக் கிடத்துவார்கள். பின்னர் கர்ணமந்திரம் வலது காதில் ஓதப்படும். உயிர் நீங்கியதும், இறந்தவனுடைய நெருங்கின உறவினர்கள் ஸ்நானம் செய்துவிட்டு ஈரவஸ்திரத்துடனே பிணத்தருகில் வந்து இரண்டு வாழைத்தண்டுகளை யெடுத்து, ஒன்றைப் பிணத்தின் தலைமாட்டிலும் மற்றொன்றைக் கால்மாட்டிலும் வைப்பார்கள். பிணத்தின் முகத்திலும் தலையிலுமுள்ள மயிர், கொஞ்சம் க்ஷவரம் செய்யப்பட்டதும், குங்குமமும் மைலஞ்சி என்னும் சாயப் பொருளும் கரைக்கப்பட்டிருக்கும் ஜலத்தில் பிணத்தைக் கழுவி, கோபி சந்தனத்தால் புண்டரமிடுவார்கள். பின்னர் புதுவஸ்திர மூடித்தப்பட்டு பிணம் பாடையில் கிடத்தப்படும். உறவினர்கள் பாடையைத் தூக்கிக்கொண்டு, இறந்தவனுடைய தோட்டத்திலேயே ஒரிடத்துக்குக் கொண்டுபோய், அதற்கென்றே வெட்டி வீழ்த்தப்பட்ட மாமரச் சிராய்களாலாக்கப்பட்ட சிதையின்மீது வைப்பார்கள். பிணத்தின்மீது மூடப்பட்டிருந்த வஸ்திரத்தை எடுத்துவிட்டு, அரிசியை அதன் முகத்தின்மீது நெருங்கின உறவினர் எல்லோரும் இறைப்பார்கள். தேகத்தின் நவத்துவாரங்களிலும் பொன் துண்டுகள் சொருகப்படும். ஹோமம் ஒன்று செய்யப்பட்டு, அதிலிருந்து நெருப்பை யெடுத்து, பிணத்தின் மார்புமீது வைப்பார்கள். பின்னர் சிதையும் மூன்றிடத்தில் பற்றவைக்கப்படும். இக்கிரியைகளிலெல்லாம் இறந்தவனுடைய முதற்குமாரனே கர்த்தாவாவான்; மற்றைய குமாரர்களெல்லோரும் உடனிருப்பார்களேயன்றி, கருமஞ்செய்வதில் தலையிட மாட்டார்கள். கொள்ளிவைத்துக் குடமுடைத்தபின்னர், இறந்தவனுடையகுமாரர்கள் மறுபடியும் ஸ்நானம் செய்து அருகிலிருக்கும் நதியிலிருந்தேனும் குளத்திலிருந்தேனும் மண்ணெடுத்து, இறந்தவனைப்போல ஒரு உருவம் செய்வார்கள். இந்த கிரியைகளின் போதெல்லாம் மாறனின் உதவி அவசியம்வேண்டும்; தர்ப்பணத்துக்கு எள்ளையும் தர்ப்பையையும் அவன் கொடுப்பான்.

வார்ஸாக்கிரமம்.—நம்பூதிரிகளுக்குள் மூத்த புத்திரனே தகப்பனுடைய ஸர்வ ஆஸ்திகளையும் அடைந்து அவைகளுக்கு ஸர்வாதிகாரியாக ஆகிறான். அந்த மூத்தபுத்திரன் மட்டுமே கல்யாணம் செய்துகொள்ளலாமென்றும், அவனுடைய கனிஷ்டர்கள் க்ஷத்திரிய ஸ்திரீயுடனோ, நாயர் ஸ்திரீயுடனோ சேர்ந்திருக்கலாமென்றும் முன்னமே கூறியுள்ளோம். குடும்பத்துக்கு அதிகாரி, மற்றைய கனிஷ்டர்களைப் போஷித்துக் காப்பாற்றிவரக் கடமைப்பட்டவனாவான். ஆஸ்தி, பாகம் பிரிக்கக்கூடாததாகும். ஸ்திரீகள் புருஷன் வீட்டைச் சேர்ந்தோராவார். ஒரு புத்திரன் தகுந்த பருவமடையு முன்னரே, தகப்பன் இறந்துபோய், வேறு தகுந்த புருஷர்கள் அக்குடும்பத்தில் இல்லாமலிருந்தால், வயதில் மூத்த ஸ்திரீயே ஸர்வாதிகாரியாவாள். ஒரு கன்னிப்பெண்ணையும், மனைவியையும் விட்டுவிட்டு, ஒரு நம்பூதிரி இறந்துபோனால், அந்த மனைவி, யாரேனும் ஒரு பிராமணனைக்கொண்டு, தன் புருஷனுக்குச் செய்யவேண்டிய கர்மாதிகளைச் செய்துவிட்டு, அப்பிராமணனுக்கு தனது மகளை ஸர்வ ஆஸ்திகளுடனும் விவாகம் செய்துகொடுத்து விடலாம். இவ்வகைக் கல்யாணத்துக்கு ஸர்வஸ்வ

வேண்டிய காற்று நன்றாய் உலாவும்படி செய்ய வேண்டும். சால்காற்றுகள், நீர்வாடைகள் இவைகளை விலக்கவேண்டும். காற்றோட்டமில்லாத அறைகளில் படுத்துத் தூங்கினால், எழுந்திருக்கும்பொழுது தலைவலியும், பாரமும், சரீரத்தில் ஓய்ச்சலும் உண்டாவதை யாவரும் கவனித்திருக்கலாம். ஒரு சிறு அறையில் அநேகர் படுத்துறங்கினாலும் இப்படித்தான். இதன் காரணம் என்னவெனில். மனிதன் சுவாஸம் வெளியே விடும்பொழுது, கரியமிலவாயுவை விடுகிறான். இது சுவாஸிக்கப்பட்டால் மரணம் வரையில் உண்டுபண்ணக்கூடும். காற்றோட்டமிருக்கும் பட்சத்தில் புதிதாகக்காற்று உள்ளே வரவும், மனிதர்களின் வெளிமூச்சுக்காற்று வெளியே போகவும், அதனால் நம்மைச் சுற்றியிருக்கும் வாயு சுத்தப்படவும் கூடும். இல்லாவிட்டால் கரியமிலவாயு நம்மைச் சூழ்ந்து நாம் அதையே உள்ளேவாங்கி சுவாஸிக்கும்படி நேர்ந்து அதனால் இவ்வித் தொந்தரைகளெல்லாம் உண்டாகின்றன. இதே காரணத்தினால்தான் தூங்கும்பொழுது போர்வையால் முகத்தை மூடிக்கொண்டு தூங்கக்கூடாதென்பதும். அப்படியே இராக்காலங்களில் விருக்ஷத்தினடியில் படுத்துறங்கலாகாது. ஏனெனில் அவை அப்பொழுது கரியமிலவாயுவை வெளிவிடுகின்றன.

ஒவ்வொருவரும் தூங்கவேண்டிய காலம், அவரவர் வயது, வேலை, ஆகாரம் முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது. குழந்தைகளுக்கு அதிகத் தூக்கம் வேண்டும். கர்ப்பிணிகளுக்கும் இப்படியே. வயது முதிர்ந்தவர்களுக்கு 5 முதல் 7 மணிவரையில் தூக்கம் வேண்டியிருக்கும்.

ராத்திரி வெகு நேரம் வரையிலும் கண் விழிக்கும்படி நேருமானாலும் அல்லது நல்ல பலமான சரீர வேலைகள், அல்லது மூளைக்கு வேலைகள் கொடுத்த உடனும், ஈரத்துணியால் துடைத்து கபாலத்தைக் குளிர்ச்சி செய்வதோடு சுலபமாய்த் தூக்கம் வரவேண்டியதற்காக கொஞ்சம் பச்சைத்தண்ணீரையும் குடிப்பது நலம்.

தூக்கம் வருவதற்காக உள்ளுக்கு மருந்துகள் சாப்பிடுதல் அநர்த்தம். தூக்கம் வியாதியினாலாவது வேறெக்காரணத்தினாலாவது ஸுலபமாக வராவிட்டால் வெந்நீரால் காலைச் சுத்தம் செய்து வயிற்றை ஈரத்துணியால் துடைத்து குளிரவைத்து இடுப்புவரை ஜலத்தால் நனைத்தால் தூக்கம் நன்றாக வரும்.

நல்ல தூக்கம் சரீராரோக்கியத்திற்கு முக்கியமான அடையாளம். அப்படிக்கல்லாமல் ஸ்வல்ப சப்தங்களால் தூக்கங்கலைந்தாலும், அடிக்கடி ஸ்வப்நங்கள் உண்டானாலும், இவைகளெல்லாம் சரீரம் நல்ல ஸ்திதியிலில்லை யென்பதைக் காட்டும்.

சுசி:—(i) கைகால் நகங்கள் முதலிய எல்லா பாகங்களையும் நன்றாய் அடிக்கடி சுத்தம் செய்து அழுக்கு அடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(ii) முக்கியமாய் நாம் தினந்தோறும் உள்ளங் கால்களைக்கூட நன்றாகக் கற்களில் தேய்த்து சுத்தம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் பித்த வெடிகள் உண்டாகும். பித்த வெடிகளுக்கு, ஆலம்பால் கைகண்ட மருந்து.

(iii) சரீரத்தின் மானஸ்தானங்களை, எல்லா அங்கங்களைக் காட்டிலும், எப்பொழுதும் வெகுசுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

(iv) தலைமயிரிலுள்ள அழுக்குகளை அப்பொழுதைக்கப்பொழுது நன்றாகச் சுத்தம் செய்யாததால் பேன், ஈர் முதலியவை புழுக்கின்றன; சிரங்குகளும் உண்டாகின்றன. இவைகளைப் போக்குவதற்காகப் பாதரஸத்தைத் தலையில் தேய்ப்பதுண்டு. இது மிகக்கெடுதி. ஏனெனில் பாதரஸம் கண்களுக்கு மிகக் கெடுதி விளைவிப்பதுடன், மயிர்களையும் உதிரும்படி செய்கிறது. தலையில் பேன் புழுத்தால், ஸ்வல்பமாய் கிரோஸின் எண்ணெய் தடவினால், அவைகளெல்லாம் இறந்துபோம். வாரி அவைகளை ஸுலபமாய் எடுத்துவிடலாம். இந்த நாற்றத்தை தலையில் கொஞ்சம் தேங்காயெண்ணெயையும், அதன்பேரில் புளித்த மோரையும் தடவி சீக்காய் தேய்த்து எடுத்துவிடலாம்.

(v) அப்படியே வஸ்த்ரங்களையும் அன்றன்றுடகம் நன்றாகத்தோய்த்து எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டியது ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

(vi) ஆஹாரங்கள் சமைக்கப்படும்பொழுது, பதார்த்தங்களைக் கையினால் தொடவே கூடாது. அதிலும் முக்கியமாய்த் தண்ணீர், உப்பு, புளிப்பு இவைகள் ஸம்பந்தப்பட்டவைகளைக் கையினால் தொடவேகூடாது. பரிமாறும்பொழுதும் அப்படித்தான். இப்படியே தேங்காய்ப்பால் பிழிதல், எலுமிச்சம்பழ ரஸம் பிழிதல், சாதங்கள் பிசைதல் முதலிய காலங்களிலெல்லாம் ஒரு கரண்டியை அல்லது வேறு ஏதாவது பொருளை உபயோகப்படுத்த வேண்டுமேயல்லாது கைகளால் செய்யக்கூடாது. போஜன பதார்த்தங்களை ஒரு பாத்திரத்திலிருந்து வேறொரு பாத்திரத்தில் மாற்ற வேண்டிய ஸமயங்களிலும் இதே விதிதான். ஊறுகாய்ப் பானைகளில் முழங்கையளவு கைகளைவிட்டு ஊறுகாய் எடுக்கும் துர்வழக்கம் நம் நாட்டில் விசேஷமாயிருக்கிறது. அதனால்தான் முக்கியமாய்ப் பூச்சிவருகிறது. ஊறுகாய்ப் பானைகள் எப்போதும் மூடப்பட்டிருக்க வேண்டும்.

(vii) பானபாத்திரங்களைச் சப்பிக் குடித்தல் கூடாது. இந்த விஷயம் எல்லா தேசத்துச் சிறந்த வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அநேக வியாதிகள், அதிலும் முக்கியமாய் ஸ்திரீவியாதிகள் உதடுகள் மூலமாய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படுகின்றன என்கிறார்கள். ஆகையால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய்ப் பானபாத்திரம் வைத்துக்கொள்ள வேண்டியதுடன், அவைகளை வெகு சுத்தமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

(viii) தொண்டையைக் கனைத்துக் கண்டவிடங்களில் கோழையை உமிழ்தல் கூடாது. இவ்விதம் உமிழப்படும் கோழை, சுவாஸகாசரோகம் அல்லது க்ஷயம், இந்த வியாதிகளுள்ளவர்களுடையதாயிருந்தால், அது அந்த வியாதிகளின் உத்பத்திக்கு ஆஸ்பதமாயுள்ள பூச்சிகளை (Germs) ஸ்ருஷ்டித்து ஆகாயத்தில் பரவச்செய்கின்றது. அதை சுவாஸிப்பவர்கள் அந்த வியாதிகளுக்குள்ளாகிறார்கள். இதனாலேயே கோழை துப்புதல் குற்றமாகச் சிலதேசங்களில் பாவிக்கப்படுகிறது. ஆகையால் பிறருடையவும் நம்முடையவுமான க்ஷேமத்தை உத்தேசித்து, கோழைகள் துப்பினால், அவைகளை மணலினால் மூட வேண்டும்.

(ix) விரல் நகங்களைக் கடித்துத் தின்னல், விரல்களைச் சப்புதல், கைகள் வேலைசெய்யும் பொழுது கையிலுள்ள பொருள்களை பல்லில் இடுக்கிக் கொள்ளுதல், கருப்பாக எழுத வேண்டியதற்காக காகிதப்பென்ஸில்களை நாவில்தடவி ஈரம் செய்துகொள்ளல், முதலியவைகளெல்லாம் பார்ப்பவர்களுக்கு அருவருப்பைத் தருவதுடன், வியாதிகளுக்கும் காரணமாகிறது. காபியிங்பென்ஸில் முதலிய லெட்பென்ஸில்கள் கொடு விஷமாதலால், அதை நாவில் தடவிக்கொள்ளும் வழக்கத்தைக் கட்டோடே விட்டுவிட வேண்டும்.

(x) வஸ்திரம் முதலிய துவாரமுள்ள பதார்த்தங்கள் நாற்றங்களைத் தம்மில் அடக்கி வெகு நேரம் வைத்துக்கொள்ளும் சக்தியுள்ளனவாகையால், மலபாதை நிவாரணத்திற்காக கக்கூசுக்குள் போய்வந்தவுடன், வேறு வஸ்திரம் கட்டிக்கொள்ளுதல் அல்லது ஸ்நாநம் செய்தல் நன்மையாயிருக்கும்.

(ix) கண் காது முதலிய ஸூக்ஷ்மமான அவயவங்களைப்பற்றித் தனியாகப் பேசப்போகிறோமாதலால் இவ்விடத்தில் அவைகளின் ஜாக்கிரதையைப்பற்றி ஒன்றும் சொல்லாது விட்டுவிட்டோம்.

மேற்கூறிய விதிகளை நன்றாக மனதில் வாங்கி அதன்படி நடக்கின்றவர்களுக்கு எவ்விதமான வியாதிகளும் அணுகா என்பது நிச்சயம்.

## 1. வீடுகள்

ஆதிகாலத்து ஜனங்களைப் போலல்லாமல் தற்காலத்தில் ஜனங்கள் தங்களுக்கு வாஸஸ்தலத்திற்கென்று விசேஷப் பணச்செலவின் பேரில் சிங்காரமான மாளிகைகள் கட்டி வஸிக்கும்படியான நாகரிகமடைந்திருக்கிறார்கள். என்றாலும், வீடுகளைக் கட்டத்தகாத, அதாவது சுகத்திற்கடுத்ததல்லாத விடங்களில் கட்டிவிட்டுப் பின்பு அவைகளில் வாஸம் செய்யுங் காலங்களில், பலவிதமான வியாதிகளுக்காளாவது மல்லாமல், அவ்வியாதி முதலியவைகளுக்கு உண்மையான காரணத்தை யறிவதற்குச் சக்தியற்றவர்களாய், பிசாசுக் கோளாறு என்று எண்ணிக் கூத்தாடிகளுக்கும் குரங்காட்டிகளுக்குமிட்டு, பணத்தை வீண் விரயப்படுத்தும்படி நேரிடுகிறது. ஆதலால் வீடுகள் கட்டுவதற்கு லாயக்கான விடங்கள் எவ்வெவையென்று நாம் கற்றுக்கொள்ளுவோம்.

பொதுவாக, ஈரம் தங்கக்கூடிய விடங்களிலே வீடுகள் கட்டக்கூடாது. இது சரீர சுகத்திற்கு மிகுந்த கெடுதியை விளைவிக்கும்.

நடமாடுங் காலங்களில், தரை சீதளங்கொண்டு, அதனால் சரீரத்திற்கு வியாதிகளை யுண்டாக்கும். அன்றியும் வீட்டுக்குள் அடங்கியிருக்கும் காற்றையும் சீதளப்படுத்தி, அதனால் கனப்படும்படி செய்துவிடுகிறது இதனால் தாராளமான காற்றோட்டம் தடைப்படுகிறது. இக்குறைவை நீக்கவேண்டியதன்பொருட்டு, கற்பாறையுள்ள தரைகளின்மேலாவது, சரளை பூமியின்மேலாவது அல்லது நல்ல மணல் தரையிலாவது வீடுகள் கட்டுவது நலம். ஆனால் கற்பாறையின்மேல் வீடுகட்டுவது ஈரம் தங்காமல் மழைஜலம் முழுவதும் வடிந்துபோவதற்கு ஏதுவாயிருந்தாலும், உஷ்ணகாலங்களில் அதிகமும் சூடுண்டு, மனிதர்களுக்கு வெக்கையுண்டுபண்ணுந் தன்மையனவாயிருக்கின்றன. சரளைத்தரையில் பெய்யும் மழை சீக்கிரமாய்ப் பூமியில் சுவறுகிறது. அதோடு கிணறு வெட்டுவதற்கும் சுத்தமான ஜலம் ஊறுவதற்கும் ஸாதகமாயிருக்கிறது. இதே குணம் மணற்பாங்கான இடங்களில் கட்டும் வீடுகளுக்குமுண்டு.

களி, சதுப்பு, முதலியவை விசேஷமாய் இருக்குமிடங்களில் வீடுகட்டுதல் சரீரஸுகத்திற்குக் கெடுதியை விளைவிக்கும். அப்படியே உப்புமண் தரைகளிலும் வீடுகட்டினால் அதுவும் ஈரத்திற்கு இடங்கொடுக்கும். மேலும் நதிகள், குளங்கள், குட்டைகள் முதலிய ஜலாசயங்களுக்கு ஸமீபத்தில், அதிலும் நீர்மட்டத்திற்குத் தாழ்ந்த மட்டமான விடங்களில் வீடு கட்டுதல் ஜலதோஷம், காய்ச்சல் முதலிய பல விதமான வியாதிகளுக்கு இடந்தரும் என்று நாம் சொல்லவேண்டியதில்லை.

சுக்கான் தரைகளின்மேல் வீடுகள் கட்டுவதால் தோஷமொன்றுமில்லை. என்றாலும், அவ்விடத்துள்ள கிணறுகளில் ஊறும் ஜலத்தைக் குடிப்பதனால் வயிறு ஸம்பந்தமான வயிற்றுப்போக்கு, அஜீரணம் முதலிய வியாதிகளுக்கு இடங்கொடுக்குமாகையால் அவ்வளவு ஸாவதானமில்லை.

வீடுகள் கட்டுவதில் அடியிற்கண்ட முன் ஜாக்கிரதைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். முதலில் பூமியிலுள்ள ஈரம் வீட்டுத் தரையில் தாக்காதிருக்கும்படி, வீட்டின் அடிதளத்தை நன்றாயுயர்த்திக் கட்டவேண்டும். அடுத்தபடி முக்கியமானபாகம் காற்றோட்டம். அது தாராளமாயிருக்கவேண்டியதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் பூமியின் மேற்பரப்பிற்கு ஸமீபமாகவுள்ள ஆகாயமானது கனமாகிய கரியமிலவாயு முதலிய விஷத்தன்மையுள்ள பதார்த்தங்கள் கலந்திருக்குமாகையாலும், மேற்புறத்திலுள்ள காற்றானது, இதை யுத்தேசித்துக் கூடியமட்டில் சுத்தமாகவிருக்குமாகையாலும், வீடுகளை நன்றாயுயர்த்தி, ஆகாயத்தின் மேற்பரப்பிலுள்ள காறறு தாராளமாய் உள்ளே புகும்படியான ஏற்பாடுகள் இருக்கவேண்டும். நல்ல காற்றோட்டம் வேண்டுமானால், அதற்காக எதிரெதிராக ஜன்னல்கள் அமைக்கப்படவேண்டும். இதன் பிரயோஜனம் அறிவது சிரமமன்று. ஒரு வாசற்படியின் வழியாய் அறைக்குள்ளே போகும் ஜனங்களும், அறையினின்று வெளியே வரும் ஜனங்களும் நடப்பார்களானால், அது மிகவும் தொந்திரவாயிருக்கும், ஆனால் உள்ளேநுழையும் ஜனங்களுக்கு ஒருவழியும் வெளியே போகும் ஜனங்களுக்கு வேறு ஒரு வழியும் ஏற்படுமானால் இது நிரம்ப ஸௌகர்யத்தைத் தரும். அப்படியே சுத்தமான காற்று உட்புக ஒரு சாளரமும், அசுத்தப்படுத்தப்பட்ட ஆஹாயம் வெளியேற வேறொரு சாளரமும் இருக்குமானால், காற்றோட்டம் வெகு தாராளமாயிருக்கும். மூச்சில் வெளிவரும் கரியமிலவாயு கனமானதாயிருந்தாலும், உஷ்ணமானதால் இதர வாயுவோடு கலந்து இலேசாகி உயரப்போகிறது. இந்தக் காற்று வெளியேறுவதற்கு மேற்கூரைபண்டை சாளரங்கள் ஏற்படுவது நல்லது.

ஆனால் அளவுக்கு மிஞ்சிக் காற்று உள்ளே புகும்படி அதிகச் சாளரங்கள் அமைத்தல் கூடாது. அதிகக் காற்று தேகத்திலுள்ள திரவங்களை வற்றவைக்கும் குணமுடையது. அப்படியே நீர்வாடைகள் விசேஷமாய் வரக்கூடிய பக்கங்களிலும் அதிக சாளரங்களை அமைக்கக்கூடாது. இது ஜலதோஷம் முதலிய நீர்க்கோர்வை வியாதிகளுக்காதாரமாகும்.

ஒவ்வொரு வீட்டிலும் மரங்களுள்ள ஒரு சிறு தோட்டமும், ஒரு காம்பவுண்டும் இருப்பது நலம். ஆனால் பெரிய பட்டணங்களில் ஜன நெருக்கத்தின் மிகுதியால் இவ்விதம் காம்பவுண்டு ஏற்படுவது கூடாமல் போகிறது.

சுவர்களைக் கொஞ்ச உயரம் வரையிலாவது



சுண்ணாம்பினால் கட்டினால், கீழ்த்தரையிலுள்ள ஈரத்தினால் சுவர்கள் ஈரிக்காமல் காப்பாற்றும். சுவர்கள் கட்டுவதற்குச் சல்லிகள் என்ற கருங்கல்துண்டுகள் நிரம்ப சிலாக்கியமானவை. விலையிலும், செலவிலும் லாபகரமானவை.

சமையலறைகள், அடிக்கடி கணப்புகள் போடும் அறைகள் முதலியவைகளில், புகைபோகிகள் தாராளமாய் அமைக்கப்படவேண்டும்.

வீடுகள் கட்டுவதில் நாம் ஜாக்கிரதை எவ்வளவு எடுத்துக்கொள்ளுகிறோமோ, அவ்வளவு ஜாக்கிரதையாய் அவைகளைப் பாதுகாக்க (சுத்தமாயிருக்கும்படி) சிரமம் எடுத்துக்கொண்டாலொழிய, கட்டுவதில் எடுத்துக்கொண்ட சிரமம் அவ்வளவும் வீணேயாகும்.

வீடுகளைச் சுத்தமாக அடிக்கடி (தினத்திற்கிருமுறையாவது) பெருக்கி ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டும். கண்ட வஸ்துக்களைக் கண்ட கண்ட இடங்களில் எறியாமல், அவ்வவைகளுக்கென்று ஓரிடம் ஏற்படுத்தப்பட்டு, அவை அவ்விடத்தில் வைக்கப்படவேண்டும். அழுக்கு ஸம்பந்தமுள்ள எந்த வஸ்துவும் திறந்தவாக்கில் வெளியில் கிடக்கக்கூடாது. கிடந்தால், தான் சுவாஸிக்கும் வாயுவை விஷத்தன்மையுள்ளதாக அவை செய்துவிடும். நறுக்கின காய் கறி பதார்த்தங்களுடைய காம்புகள், நுனிகள் முதலியவைகளை நறுக்கின விடத்திலேயே போட்டுவிடாமல், அவைகளை உடனுக்குடன் எடுத்து, தூரமாய்க் கொண்டுபோய் அப்புறப்படுத்த வேண்டும். அப்படிக்கில்லாவிடில் அவைகள் அழுகி, துர்நாற்றங்களுக்கு இடங்கொடுத்து, பலவித வியாதிகளுக்கு ஹேதுவாகும். சாக்கடை விஷயத்தில் வெகு கவனமாயிருக்கவேண்டும். அவ்வப்பொழுது முற்றத்தில் ஊற்றப்படும் தண்ணீர் அப்பொழுதே வெளியேறும்படியாக சாக்கடைகள் தாராளமாகவும், தடங்கலன்னியிலும் இருக்கவேண்டும். அதற்காகக் கோல்களைக்கொண்டு வாரத்திற்கிருமுறையாவது சாக்கடைகளைக் குத்திவிடவேண்டும். வீட்டின் மூலைகளிலும் கூரைகளிலும், ஒட்டடை, சிலந்திவலை முதலியவைகள் பிடித்து ஆபாஸம் செய்யாதபடி அவைகளைச் சுத்தம் செய்யவேண்டும். வீட்டில் உபயோகப்படுத்தப்படுகிற தண்ணீரில் குப்பை செத்தை முதலியவை விழாமல் காத்து ஜலத்தை வெகு சுத்தமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி கிணற்று ஜலத்தை சுத்தமாயிருக்கிறதாவென்று பரீக்ஷை பார்க்கவேண்டும். ஸாதாரணமாய் ஆஸ்பத்திரிகளிலும், எல்லா ரஸாயன ஷாப்புகளிலும் கிடைக்கக்கூடிய பொடாஸியம் பெர்மாங்கநேட் (Potassium Permanganate) என்ற உப்பை சுத்தமான ஜலத்தில் போட்டால், அந்த ஜலம் உடனே வயோலெட் (Violet) வர்ணமாக மாறிவிடும். அப்படிக்கில்லாமல், நிறம் மந்தமாயாவது சுத்தமாய் மறைந்தாவது போகுமானால், அத்தண்ணீர் அசுத்தமென்றருத்தம். இவ்விதம் பரீக்ஷிக்கப்பட்ட ஜலம் அசுத்தமென்று காணப்பட்டால் இந்த உப்பைக் கொஞ்சங் கொஞ்சமாய், ஜலம் சுத்தப்படும்வரையில் போட்டுப், பிறகு இரண்டு அல்லது மூன்று நாளைக்கு அக்கிணற்று ஜலத்தை எடுக்காமல் விட்டுவிடவேண்டும். படுக்கை அறைகளில் தீர்த்தப்பானைகளையாவது உலருவதற்காக ஈர வஸ்திரங்களையாவது வைத்திருக்கக்கூடாது. குளிர்ச்சிக்காக, படுக்கை அறைகளில் தண்ணீர் தெளிப்பதும் கூடாதுதான்.

ஆடுமாடுகளைத் தனியாக அடைப்புள்ள விடங்களில் கட்டவேண்டுமே தவிர, குடியிருக்கும் வீட்டின் முற்றங்களிலாவது மற்ற பாகங்களிலாவது கட்டக்கூடாது. மாட்டுச் சாணி முதலியவைகளை வெகு நாளாகக் குவித்து வைக்காமல் அன்றன்றுடகம் எடுத்துக் குப்பைத்தொட்டிகளில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். எப்பொழுதும் மாட்டுக்கொட்டிலில் துர்கந்தம் உண்டாகாதபடி தண்ணீர் விட்டுப் பெருக்கிச் சுத்தம் செய்யவேண்டும்.

இவ்விதம் பலவிதத்தில் ஜாக்கிரதை யெடுத்துக்கொண்ட காலத்தும், வீட்டில் அசுத்தம் உண்டாகிவிட்டதாக ஸந்தேஹம் உண்டானால், அப்பொழுது உடனே அந்த அசுத்தத்தைப் போக்க வழி தேடவேண்டும்.

---

**நம் சந்தா நேயர்களுக்கு**:—சந்தாதார்கள் தங்களுக்கு அந்தந்தமாதப்பத்திரிகை ஒழுங்காகக் கிடைக்காவிட்டால் உடனே நம் ஆபீஸுக்கு ஷை தகவலை தங்கள் ரிஜிஸ்டர் நம்பரைக்கண்டு தெரிவித்துக் கொள்ளவேண்டும். அப்படிச்செய்தாலன்றி அவர்கள் கடிதத்தை உடனுக்குடன் கவனிப்பது ஸாத்தியமாகாது. தவிர, சந்தாநேயர்கள் தங்கள் கடிதங்களுக்கு ஜவாப் தேவையிருந்தால் ரிப்ளைகார்டாவது அல்லது அரையணா ஸ்டாம்பாவது அனுப்பவேண்டியது மிகவும் அவசியம்,

**மானேஜர்.**

# தஞ்சாவூர் ஜில்லா தேச சரித்திரம்

## HISTORY OF THE TANJORE DISTRICT

**சிவாஜி, மைசூர் முகலாயருடன் சம்பந்தம்.**

வெங்காஜியின் ராஜ்யம் முதலில் தஞ்சாவூர் ஜில்லா, ஆரணி, பரங்கிப்பேட்டை, பெங்களூர், ஆகிய பிரதேசங்களை யடக்கிக் கொண்டிருந்தது. ஆயினும் வெகு சீக்கிரத்தில் அது சுருங்கிவிட்டது. வெங்காஜியின் சகோதரரான சிவாஜி, கோலகொண்டைச் சுல்தான் பேரைச் சொல்லிக்கொண்டு, கர்னாடகத்தில் படையெடுத்துவந்து, தஞ்சாவூரில் தனக்கும் பிதுரார்ஜித பாத்திய முண்டென்று வாதாடினான். இந்தத் தொந்தரையினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக வெங்காஜி, சிவாஜிக்கு ஏராளமான பணத்தையும் கொடுத்து, அவனுடன் தன துபிதாவின் நகைகளையும்வரும்படியையும் பங்கிட்டுக்கொண்டான். 1680-ல் சிவாஜி இறந்துபோய்விட்டதும், அவனிடமிருந்து சல்லியம் நேராதென வெங்காஜி யனப்பால் குடித்துக் கொண்டிருக்கையிலேயே, முகல் சக்ரவர்த்தி அவுரங்கசீபின் தளகர்த்தன் 1687-ல் தெக்ஷிணத்துக்கு வந்து பெங்களூரைப் பிடித்துக்கொண்டு, தஞ்சாவூரையும் கீழ்படுத்திக் கப்பம் கட்டச் செய்தான். பிற்பாடு பெங்களூரைச் சுற்றியுள்ள விடங்களை, அப்போது புதிதாய்த் தோன்றிய மைசூரரசன் பிடித்துக் கொண்டான். மதுரையரசர்களும் ஆற்காட்டு நவாபும் கொஞ்சம் கொஞ்சமாகத் தஞ்சை ராஜ்யத்தின் பாகங்களைக் கவர்ந்தனர். இப்போதுள்ள தஞ்சாவூர் ஜில்லாவுக்குள் அடங்கிய பிரதேசம் மட்டுமே அக்காலத்தில் தஞ்சை ராஜ்யமாக விருந்தது.

**முகலாயராதீனம்**

1691-ல் அவுரங்கசீபின் கர்னாடக ராணுவ கவர்னரான ஜுல்பகர்கான் தஞ்சை நாட்டில் படையெடுத்து, அவ்வரசனிடமிருந்து வருஷாவருஷம் கப்பத்தொகை 2 லக்ஷமும் தர்பார்ச் செலவு 2 லக்ஷமுமாக நான்கு லக்ஷம் ரூபா வரவேண்டுமென்று திட்டஞ் செய்து போனான். ஆகவே 1691-ம் ஆண்டுமுதல் வெங்காஜியின் சந்ததியார்கள், முகலாய சக்கரவர்த்திகளுக்குக் கீழடங்கிய சிற்றரசர்களாகினர்.

1696-லும் முல்லா என்பவனால் இன்னொரு படையெழுச்சி நிகழ்ந்தது. மேற்கூறியவாறு திட்டப்படுத்திய கப்பத்தொகையைக் கட்டாததுதான் தஞ்சையரசனுக்கும், தெக்ஷிணத்தில் முகலாயர் பிரதிநிதியான ஆற்காட்டு நவாபுக்கும் நேர்ந்த சண்டை சச்சரவுகளுக்கெல்லாம் காரணமாம்.

**திருச்சிராப்பள்ளி ராமநாதபுரச் சம்பந்தம்,**

இத்தருணத்தில், தஞ்சாவூர் ராஜ்யத்தோடு ஒருகால் நட்போடும் மற்றொருகால் விரோதத்தோடுமிருந்த இரண்டு ராஜ்யங்கள் இருந்தன. அவை திருச்சிராப்பள்ளி அல்லது மதுரை நாயக்க ராஜ்யமும், ராமநாதபுரம் மறவர் ராஜ்யமுமாம். மதுரை ராஜ்யத்துக்கும் தஞ்சைக்குமிருந்த சம்பந்தத்தைப்பற்றித் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. 1686-ல் தஞ்சையும் ராமநாதபுரமும் ஒன்றுசேர்ந்து திருச்சிராப்பள்ளியை எதிர்த்தன. பின்னர் இரண்டு வருஷங்களுக்கப்பால் தஞ்சையும் திருச்சிராப்பள்ளியும் ஒன்றுசேர்ந்து ராமநாதபுரத்தைத் தாக்கின. 1725-ல் ராமநாதபுர ராஜ்ய விவாதத்தில் தஞ்சையும் திருச்சிராப்பள்ளியும் வேறுவேறு கட்சியில் சேர்ந்தன. 1736-ல் திருச்சிராப்பள்ளி ராஜ்யம், நவாபு பேரைச் சொல்லிக் கொண்டுவந்த சந்தாசாகிபு என்பவனால் வஞ்சனையால் பிடிபட்டது. அதனுடன் அந்த நாயக்க வம்சமும் அற்றுப்போயிற்று.

ராமநாதபுரத்து மறவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் மன்னார்குடி வரையில் ஒருகால் படையெடுத்து வந்திருக்கின்றனர். 1646-லும் 1677-லும் மறவர் படையெழுச்சி நிகழ்ந்தன. 1709-ல் தஞ்சாவூரரசன் ராமநாதபுரத்தை யடக்கப் பிரயோசனமற்ற முயற்சி செய்தான். "கிழவன்" சேதுபதி என்ற பிரபலவரசருடைய சுவீகாரமகன். விஜயரகுநாத சேதுபதி இறந்ததும், 1725-ல் ராமநாதபுரத்தில் உட்கலகம் உண்டாயிற்று. தஞ்சையும் திருச்சிராப்பள்ளியும் வேறு வேறு கட்சியில் சேர்ந்தன. தஞ்சைப்படைக்கு வெற்றியுண்டாக, தஞ்சையரசன் தனக்கு வேண்டியவனை ராமநாதபுரத்துக்கு அதிபதியாக்கினான். இப்புதிய வரசன் தஞ்சையானுக்கு விசேஷ வெகுமதி



கொடுக்கவில்லையாதலால், தஞ்சையரசன், வேறு பாத்தியஸ்தர் இருவர்களுடன் சேர்ந்துகொண்டு, முந்தியவரசனைச் சிறைபிடித்து ராமநாதபுரத்தை மூன்று பகுதியாக்கி, இருபகுதியை இரண்டு பாத்தியஸ்தர்களுக்கும் கொடுத்துவிட்டு, ஒருபகுதியைத் தான் வைத்துக்கொண்டான். மேற்கூறிய இரு பகுதிகளுந்தான் இப்போதைய ராமநாதபுரம் சிவகங்கை ஜமீன்களுக்கு மூலம். தஞ்சையரசன் வைத்துக்கொண்ட பாம்பனாற்றுக்கு வடக்கிலுள்ள பாகத்தை மறுபடியும் மறவர்கள் கொஞ்சங் கொஞ்சமாகப் பிடுங்கிக்கொண்டனர்.

**வெங்காஜியின் சந்ததியார்கள் 1687–1735**

**கலகம் 1735-1739**

வெங்காஜி 1687-ல் இறந்தான் அவனுடைய குமாரர்களான ஷாஜி (1687-1711-) சரபோஜி( 711- 1727) துக்கோஜி (1728--1735) மூவரும் ஒருவருக்குப் பின் ஒருவராய் 1735 வரையில் ஆண்டனர். துக்கோஜி இறந்ததும் நாட்டில் குழப்பங்கள் உண்டாயின. அவனுக்கு ஐந்து குமாரர்களிருந்தனர். அண்ணாசாகிபு, நானாசாகிபு, என்ற மூன்றாவது நான்காவது குமாரர்கள், துக்கோஜி உயிருடனிருக்கும்போதே காலகதியை அடைந்துவிட்டனர். பிரதாப்சிங் என்ற கடைசிக்குமாரன் வைப்பாட்டி வயிற்றிற் பிறந்தவன். மூத்த குமாரனான பாவா சாகிபு ஒரு வருஷம் ராஜ்ய பாரம் புரிந்துவிட்டு இறந்தான். அவனுடைய மனைவி ஸுஜனாபாய் அவனிறந்ததற்குப் பின் இரண்டு வருஷம் அரசாதிகாரம் செலுத்தினாள். 1738-ல் துக்கோஜியின் மூத்த சகோதரனான சரபோஜியின் மகனென்று சொல்லிக்கொண்டு கிளம்பிய சவாய்ஷாஜி அல்லது சித்தூஜி, அல்லது "காட்டுராஜா" என்பவன் ராஜ்ய தளகர்த்தனான சையதுகானோடு சேர்ந்து அவனுடைய உதவியால் சிங்காதனமேறினான். அப்போது துக்கோஜியின் இரண்டாவது மகன் சையாஜி என்பவன் சிதம்பரத்தில் தங்கி புதுச்சேரியிலிருந்த பிரஞ்சுக்காரர்களை தனக்கு ராஜ்யம் சித்திக்கும் விஷயத்தில் துணைசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தான். மேற்கூறிய சவாய்ஷாஜியின் அதிகாரம் நெடுநாளைக்கு நிலைத்திருக்கவில்லை. ஏனெனில் சையாஜி பிரஞ்சுக்காரர்களுடைய உதவியில்லாமலேயே உத்யோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுத்து சவாய் ஷாஜியை நீக்கிவிட்டுத் தானே அரசனானான். பிரஞ்சுக்காரர்கள் இவனுக்கு உதவி செய்யாமல் போனாலும் இதிலிருந்து காரைக்கால் பிரதேசத்தைப் பெற்றுக் கொண்டனர். இப்படிச் சிங்காதனமேறிய சையாஜியும் நெடுநாளைக்கு அரசாளவில்லை. துக்கோஜியின் கடைசிக் குமாரனான பிரதாப்சிங்கை ஜனங்கள் ஏகோபித்து அரசனாக்கிச் சிங்காதனத்தில் ஏற்றினபடியால் சையாஜி 1739-ல் ராஜ்யத்தை யிழந்தான்.

**ஐரோப்பியராதீனம்: ஆங்கிலேயர் தலையிடுதல் 1749.**

ராஜ்யத்தை யிழந்த சையாஜி ஒன்பது வருஷங்கள் கழித்து, மதராஸ் கவர்ன்மெண்டாரிடம் தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டான். தேவிகோட்டையையும் அதைச் சுற்றியுள்ள விடங்களையும் கொடுத்து, சண்டைச் செலவையும் ஒத்துக்கொடுப்பதாக விருந்தால், உதவிசெய்வதாக ஆங்கிலேயர் வாக்களித்தனர். (1749.) இருமுறை ஆங்கிலேயர் தேவிகோட்டையைத் தகர்க்கச் சென்றனர். முதன்முறை முற்றிலும் தோல்வியடைந்தனர். இரண்டாமுறை ஸ்டிரிங்கர் லாரென்ஸ், க்ளைவ் என்ற தளகர்த்தர்களுடன் சென்றதில், அவர்கள் தேவிகோட்டையைப் பிடித்துவிட்டனர். ஆனால் தஞ்சாவூர் ஜில்லாவில் வேறு பாகங்களைப் பிடிப்பதில் விசேஷ சங்கடங்கள் உண்டாகுமென்று கண்டபடியாலும், பிரதாப்சிங் சண்டையை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்கும்படியான சந்தர்ப்பம் வந்தபடியாலும், ஆங்கிலேயர் மேல் நடவடிக்கைகள் ஒன்றும் நடத்தாமல் போய்விட்டனர். என்றாலும் தேவிகோட்டை அவர்களுக்கென்றே கொடுத்துவிடப் பட்டது.

**சந்தாசாகிபும் தஞ்சாவூரும்.**

1736-ல் சந்தா சாகிப் என்பவன் திருச்சிராப்பள்ளியை வஞ்சனையால் கவர்ந்துகொண்டு, அங்கு அரசுசெலுத்திய நாயக்க வம்சத்தை அறச் செய்தானென்று மேலே கூறினோம். அந்த சந்தா சாகிபினுடைய சல்லியமே பிரதாப்சிங், சண்டையை நிறுத்த வேண்டுமென்று கேட்டதற்குக் காரணம். 1738-ல் சந்தா சாகிபு, ஆற்காட்டு நவாபுக்குத் திறைப்பணம் வசூலிக்கும் பொருட்டு தஞ்சை நாட்டில் படையெடுத்துச் சூறையாடினான். பின்னர்

அவன் சையாஜிக்கும் பிரஞ்சுக்காரருக்கும் காரைக்காலைப்பற்றி நடந்து கொண்டிருந்த ஓர் தகராரில் தலையிட்டுக்கொண்டு பிரஞ்சுக்காரர்களை ஆசைவார்த்தை காட்டி மயக்கிவிட்டு, சையாஜியை தஞ்சைக் குள்ளேயே கிடக்கும்படி அடக்கிவிட்டான். 1739-ல் ஸயாஜி காரைக்காலைப் பிரஞ்சுக்காரருக்குக் கொடுத்துவிட்டு, அதே வருஷத்தில், மைசூர் அரசனுடன் சேர்ந்துகொண்டு வடக்கேயுள்ள மகாராஷ்டிரர்களைத் தனக்குத் துணைசெய்து துருக்கர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றும்படி வேட்டுக்கொண்டான். இவ்வேண்டுகோளுக்கிரங்கி 1740-ல் மகாராஷ்டிரர்கள் படையெடுத்துவந்து தாமல்செருவு என்ற விடத்தில் நடந்த சண்டையில் ஆற்காட்டு நவாபு தோஸ்டு அலியைத் தோற்கடித்துக் கொன்று, நெடுநாள் முற்றுகைபோட்டு திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி சந்தாசாகியையும் அடுத்த வருஷம் மார்ச்சு மாதத்தில் சிறைபிடித்துப் போயினர்.

1749-ல் சந்தா சாகிபு, டூப்ளேயின் சிபார்சால் விடுதலைபெற்றான். பெற்றதும் அப்போது நிஜாமாகவிருந்த நாஜர் ஜங்குக்கு விரோதமாகக் கிளம்பிய முஜபர்ஜங் என்பவனோடு சேர்ந்துகொண்டு தெக்ஷிணத்தின்மீது படையெடுத்தான். 1749-ல் ஆம்பூர் யுத்தம் நடந்தது. அதில் நாஜர் ஜங்கால் நியமிக்கப்பட்டிருந்த ஆற்காட்டு நவாப் அன்வாருத்தீன் கொலையுண்டிறந்தான். உடனே முஜபர்ஜங், தனது துணைவனாகிய சந்தா சாகிபை ஆற்காட்டு நவாபாக்கினான்.

நவாபு அதிகாரத்தைப் பெற்றதும் சந்தா சாகிபு முதற்காரியமாக தஞ்சையரசனைக் கண்டிக்கச் சென்றான். சந்தாசாகிபுக்கு விரோதமாக தஞ்சையரசன் மகாராஷ்டிரர்களை வரவழைத்ததொன்று. இரண்டாவது தஞ்சாவூர்ச் சீமை செல்வங் கொழுத்த சீமையாதலால் அதைக் கொள்ளையடித்தால் ஏராளமானபணம் பெறலாம் என்ற எண்ணமொன்று. இவ்விரண்டு காரணங்களும் சந்தாசாகிபைத் தூண்டினவாதலால் அவன் தஞ்சையின்மீது படையெடுத்துவந்தான். தஞ்சையரசன் சாமர்த்தியமாய் துணை வரும்வரையில் நாள் கடத்தினான். தகுந்த சமயத்தில் பிரதாப் சிம்மனுக்கு நாஜர்ஸிங் துணைவந்தபடியால் சந்தா சாகிபு திரும்பிப் போய்விட்டான். என்றாலும் அவன் வெறுங் கையோடு போகவில்லை. பிரதாப்சிங்கிடம் 46 லக்ஷம் ரூபாவுக்கு ஒரு தஸ்தவேஜு எழுதி வாங்கிக்கொண்டு சென்றான்.

*தஞ்சாவூர் ஆங்கிலேயரோடும் முகம்மதலியோடும்சம்பந்தம் செய்தது.*

அதிக்கிரமமாக ஆற்காட்டு நவாபு ஸ்தானத்தைப்பெற்ற சந்தாசாகிபு கட்சியைப் பிரஞ்சுக்காரரும், அந்த ஸ்தானத்துக்குப் பாத்தியமுள்ள அன்வாருத்தீன் மகன் முகம்மதலி கக்ஷியை ஆங்கிலேயரும் எடுத்துக்கொண்டனர். நடந்த சண்டையில் சந்தாசாகிபு தோற்றுப்போய் தஞ்சை தளகர்த்தனான மாங்கோஜியின் கைகளில் அகப்பட்டு அவனால் கொலைசெய்யப்பட்டிறந்தான். முகம்மதலி நவாபு ஆயினான். என்றாலும் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் ஓயாமல் சண்டை நடந்தது. இதில் பிரதாபசிங் ஆங்கிலேயருக்கு உதவிகள் செய்ததைப்பொறாத பிரஞ்சுக்காரர் தஞ்சையைச் சீர்குலைக்க வெண்ணி அடிக்கடி தண்டெடுத்துவந்தனர். வந்தாலும் தளகர்த்தர் மாங்கோஜியின் சாமர்த்தியத்தாலும் ஆங்கிலேயருடைய உதவியாலும் பிரதாபனுக்குத் தீங்கொன்றும் நேரவில்லை. சந்தாசாகிபுக்குப் பிரதாபசிங் எழுதிக்கொடுத்திருந்த 46 லக்ஷம் ரூபா பத்திரத்தை அவன் (சந்தா சாகிபு) பிரஞ்சுக்காரரிடம் கொடுத்திருந்தான். அவர்களுக்குப் பணம் வேண்டியிருந்தபடியால், தஞ்சையரசனை நெருக்கிக் கேட்டனர். தஞ்சைக் கோட்டையும் அவர்களால் முற்றுகை போடப்பட்டது. பிரதாப் சிங் வெகு ஆக்கிரகத்தோடு எதிர்த்து வந்தான். தகுந்த சமயத்தில் ஆங்கிலேயர் உதவி வந்தது. பிரஞ்சுக்காரர் காரைக்காலுக்குத் தப்பிப்போயதே பெரும்பாடாய்விட்டது. பின்னர், பிரஞ்சுக்காரர் சென்னப்பட்டணத்தை முற்றுகைபோட்டபோது, பிரதாபனைத் துணையனுப்பும்படி ஆங்கிலேயர் மன்றாடிக் கேட்டனர். அவன் துணையனுப்ப மறுதளிக்கவில்லையாயினும் ஒன்றும் செய்யாமல் காலங்கடத்திவிட்டான். கொஞ்சநாள் சென்றபின் பிரதாபசிங் இறந்ததும் துல்ஸாஜி (1763-87) பட்டத்துக்கு வந்தான். அப்பால ஆற்காடு நவாபுக்கும் தஞ்சையரசனுக்கும் மனஸ்தாபமுண்டாயிற்று. தஞ்சையரசன் கட்டவேண்டிய கப்பத்தொகை பாக்கியில் விழுந்தது.



*மனஸ்தாபங்கள்.*

அதை நவாபு நெருக்கிக் கேட்டபோது, ஆங்கிலேயர் மத்தியஸ்தம் பேசி தஞ்சையரசனுக்கு அனுகூலமாகக் காரியத்தை முடித்துக் கொடுத்தனர். காவிரியின் தண்ணீர் கொள்ளிடத்தில் போய்விடாதபடிக்கு மேலூரில் ஒரு அணை கட்டப்பட்டிருந்தது. அது பழுதாய்ப்போயிற்று. மேலூர் நவாபு ராஜ்யத்திலிருந்தபோதிலும் அணையினால் அவனுக்கு ஒரு லாபமுமில்லை. ஆகவே அவன் அதைப் பழுதுபார்க்கப் பிரியப்படவில்லை. அவ்வணையினால் பயனடைகிற தஞ்சையரசனையும் அதைப் பழுது பார்க்கும்படி விடுவதற்கு நவாபுக்கு இஷ்டமில்லை. இந்தச் சமயத்திலும் ஆங்கிலேயர் தஞ்சையரசனுக்குச் சாதகமாகவே காரியத்தை முடித்துக் கொடுத்து, அணையைச் சீர் செய்ய நவாபிடம் அனுமதி வாங்கித்தந்தனர்.

முகம்மதலியும் ஆங்கிலேயரும் மைசூர் ஹைதராலியுடன் சண்டை செய்த காலத்தில் தஞ்சையரசன் அவர்களுக்கு உதவி செய்ய மனமில்லாதவனாகவிருந்தான். மேலும் அவன் ஹைதரோடும் மகாராஷ்டிரர்களோடும் சினேகப்பான்மையான கடிதப்போக்குவரவு செய்து வந்ததாகவும் தெரிந்தது. இன்னும், நவாபின் ஆதீனத்திலிருந்த மறவர் நாட்டின்மீது தஞ்சையரசன் நவாபுக்குத் தெரியாமலேயே படையெடுத்துப் போனான். இவைகாரணமாக ஆங்கிலேயருக்கும் தஞ்சையரசனுக்கும் விரோதமுண்டாயிற்று. நவாபு ஆங்கிலேயருடைய நண்பனாதலால் அவனுடைய ஆக்ஷியைப் பலப்படுத்துவது அவர்கள் செய்துதீரவேண்டிய கடமையாகவிருந்தது. ஆதலால் அவர்கள் துல்ஸாஜியின்மீது போருக்குப் புறப்பட்டனர்.

*தஞ்சாவூர் ஆங்கிலேயரால் பிடிப்பட்டது. 1771.*

ஆங்கில தளகர்த்தர் ஸ்மித் தஞ்சைப்பிரதேசத்தில் புகுந்து வல்லம் கோட்டையை எளிதில் பிடித்து தஞ்சையையும் முற்றுகை போட்டனர். கோட்டை எதிரி வசம் போய்விடக்கூடிய தருணத்தில் துல்ஸாஜி ஆங்கிலேயருக்குத் தெரியாமல் நவாபுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு அவனுக்குப் பெருந்தொகை கொடுப்பதாக ஒப்புக்கொண்டான்.

# ரணகேஸரி அல்லது ராஜபக்தி

## RANAKESARI

### அங்கம் 2

### களம் 3

இடம். ஸமுத்ரக்கரைக்கு ஸமீபத்தில் ஒரு க்ராமம்

காலம்: காலை.

ப்ரவேசம்: வவுத்துப்பயல், சவட்டைக்காலன், உளறுவாயன்.

உளறு.—என்டா வவுத்துப்பயலே. எந்நேரம் ஆயிலுச்சு. இன்னம் பிலப்படல்லே. ஏலே, பொளுது அந்தாலே வந்துலுச்சி இங்கலேன்.

சவட்:—ஆறு என்னடாப்பா மோசம் வந்திருச்சு. காலை இரண்டடி எடுத்துவச்சா ஆயிருச்சி. வெகு தொலையோ சமித்திரியம்?

வவுத்:—குளிருது அண்ணே. இப்படிக் காலமேயுங் காட்டியும் போகாட்டித்தான் என்ன? இன்னம் ஒருநாளி களிச்சுப்போவோமே.

உளறு:—இந்த எளவுதான் இவனோடே—காலை வேளையிலே காலை மடிச்சுக்கினு போத்திக்கினு சும்மா கிடக்கிலதன்னு—ஜந்தோஜம் லொம்ப லொம்ப இவனுக்கு. வாடா எலவுமவனே போய்த்து வந்திலுவோம்.

சவட்:—ஏலே வவுத்துப்பயலே. இன்னிக்கி ரொம்ப சிலவாம்டா மீன் மதுரையிலே. நேத்திக்குக்கூட ஆள் வந்திருந்திச்சா இல்லையா?

உளறு:—ஆமண்ணே—இண்ணைக்கி, யாலோ தம் மட்டியாமல்ல—ஆமண்ணே முன்னே மந்திரியா இறுந்தானல்யா அவன் மந்திரி ஆயிட்டானே—இண்ணைக்கி அஞ்சுநாளாச்சாம். ஒண்ணு, லெண்டு, நாலு, ஆலு, எட்டு, ஒன்பது, எழுபதினேளு நுப்பத்திமூணு, அஞ்சு அண்ணே, எத்தினி நாளாயிலுச்சி. அவன்கள் எல்லா ஜாதிப் பயலுகளுக்கும் இண்ணைக்கி ஒலுவிலுந்து பண்லாங்களாம். அதுக்குத்தான் மீன் மதலையிலே சிலவாம்.

வவுத்:—நீங்கள் போங்கடா—நான் புறகாட்டி வர்ரேன்.

சவட்:—வாடா—ஒருதாப் போய்த்துவருவம்னு—என்னமோ—படுத்துக்கிட்டான்—சாலிஜாப் பண்ணரா—ஏலே—தண்ணியைக் கொணாந்து கொட்டிடுவேன் தலையிலே—தெரியுமா?

வவுத்:—என்னடா, எலவு கொடுக்கிறே—இந்தாலே. அந்தக் கொங்கணிலே வலையை மாட்டியிருந்தே—அதே பெடுத்தா. போத்தொலைவோம்.

உளறு:—இந்தாங்காப்பா உன் வலை. அடே எழுந்தில்லா எலவிலே.

(வவுத்துப்பயல் வந்து வெளியேபார்க்கிறான். மேகாடம்பரமா யிருக்கிறது.)

வவுத்:—டேயப்பா—இந்த மாந்தல்லே நான் வல்லேடாப்பா.

உளாறு—இந்த லாப்பா—வலையைப்புடி. நான் அவனை இளுத்துக்கிட்டுவாரேன். (போய் அவனை இழுக்கிறான்) ஒப்புராட்டி — ஒப்பன் தன்னானே— எண்டா அமுக்கிக்கிறே (கட்டிப்பிடிக்கிறான், அவன் உதைக்கிறான்) நிசந்தானா! இந்தா! (உதைக்கிறான்.)

(வவுத்துப்பயல் எழுந்திருக்கிறான்.)

வா அண்ணே போய்த்து வந்திருவோம்னா.

வவுத்:—இந்த எளவு அடக்கமாபடுத்துக்கினு இருந்தேன். தொலைபுவோம் வா.

(நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம் 2

### களம் 4

இடம்: கடைத்தெரு. காலம்: ஸாயங்காலம்.

ப்ரவேசம்: சவட்டைக்காலன், வவுத்துப்பயல்.

சவட்:—நல்லா சிக்கிருச்சுராப்பா! ஒங்கப்பன் தலை முறையிலேயும் இப்படி பாத்திருக்கிறயா.

வவுத்:—எண்டா—அது தங்கமூட்டையா இருந்திச்சுன்னா—என்ன பொணக்காரனா யிருக்கலாம். வலையைப் பிடிச்சிழுப்பேனே? எனப்பா எம்பட்டுக் கனமாயிருந்தது. நான் என்ன தொத்தப்பயலா— என்னதான் இளேன்! வரமாட்டேன்னிருச்சு. இந்த உளறுவாயன் பயல் இல்லாட்டி அந்தச் சுமை வெளியா வந்திருக்கும்?

சவட்:—அந்தச் சாக்கை பவுக்கங்காட்டியும்—என்னப்பா—பயந்திட்டேன். இருந்தாலும் மூஞ்சி சொஞ்சமாச்சியும் மாறல்லேன்னு—வெளுத்துப்போயிருச்சே அதான்—நேத்துத்தான் சொணுந்து போட்டிருப்பான்னு தோணாது.

வவுத்:—இல்லேடா, அதை சாக்கைப்போட்டு நல்லா வரிஞ்சுகட்டி யிருந்தாங்களால்யா? அதினாலெ சுருக்குனு அழுவல்லே—நாலஞ்சு நாளாயிருக்குமடா என்னடா இந்த உளருவாய் பயலே இன்னும் காணம்! இருந்தாலும் சுமை நல்ல முட்டுச்சுமையோல்யோ.

சவட்:—அதா அங்கணே வரானு—எளவு சனியனைக்கொண்டே தொலைச்சுப்பிட்டு என்னமாச்சியும் ராசா கொடுக்கிறதை வாங்கிட்டுப்போய்த் தொலையலாமின்னா இந்த எளவுமகன் வந்து தொலையாரானில்லையே.

வவுத்:—டே—சும்மா சொல்லாதேடா —பாவம்—உன் தலையிலே தூக்கி வச்சிருந்தாத் தெரியும்நோக்கு—அவனுக்கண்டு—இம்பட்டுத் தூரம் கொணுந்தான்—ராஜா—வெகு ஒளுங்கா முன்னே தப்படிக்கச் சொன்னாரே—இதை இம்பட்டு கஸ்டப்பட்டு எடுத்தாந்தமே என்னடா கொடுப்பார்—ஏ—உளறுவாய்ப்பயலே சுருக்குனு ஓடியாடா,

சவட்:—என்னாத்தைக் கொடுக்கப் போறாங்க—தாளி—சுமை கூலிகூட குடுக்கமாட்டான் அந்தத் தும்மட்டிப்பயல்—அந்த ரணகேசு அய்யாவா—தொம்பது பத்து ரூபாயாச்சியும் கொடுப்பார்.

(உளறுவாயன் ப்ரவேசித்து—மூட்டையைக் கடைத்தெருவில் கொண்டுவந்து போடுகிறான்.)

உளறு:—இனிச் செத்திருவேன்—என்னமா கனத்து இருந்துபோயிருச்சி. (கழுத்தைத்தடவி கொண்டு போனாப்போங்க, இல்லாட்டி இங்கணையே கிடக்கட்டும்—நம்மாலே இனி முடியாதிராப்பா—

(கூட்டம் வந்து கூடுகிறது.)

ஒருவன்:—ஏ இதென்னடா மூட்டை.

உளறு:—விக்கிறதில்லை ஐயா!

இரண்:—பின்னே ஏ—ஏ—ண்டா இங்கே—போட்டே.

உளறு.—நோக்கென்ன அய்யா அது.

முதல்.—உதையடா இவனை.

மூன்று.—இதென்னடா நாறுகிறது எண்டா இதென்ன தாண்டா சொல்லேன்.

உளறு.—அப்படிக்கேளுங்க—சொல்றேன். என்னமோ இவலு லொம்ப மிலட்டராரே என்னய்யா குப்பக்காட்டானுண்ணு என்னிக்கிட்டீமோ.

மூன்று:—உன் ஸாமர்த்தியம் அவனுக்குத் தெரியுமா? அவன் கிடக்கா நீ சொல்லு.

உளறு:—அது ஒலு உசிவில்லாத வைத்து.

மூன்று:—இல்லாவிட்டால் இப்படிக் கட்டுவார்களா?

உளறு:—உசில் வைத்துத்தான், இப்போ உசிலில்லை.

இரண்:—என்னடா மொத்தி மீனா?

உளறு:—இல்லை அய்யா எங்கே சொல்லிருங்க மூன்று மாஸம் டயன் கொடுக்கறேன்.

மூன்று: எங்களாலே முடியாதிராப்பா.

உளறு:—போஅப்பா—போ ஒருபொணம்—ஸமுத்திரத்திலே கிடந்து ஆப்புட்டிச்சு. ராசா என்னமும் எனும் சனும் கொடுப்பாறுன்னு கொணுந்தம்—எங்கணேயும் உடம்பெல்லாம் குத்துக்காயம் ஐயா.

மூன்று:—எங்கே—அவுடா—யாருன்னு பார்ப்பம்.

உளறு:—என்ன அய்யா பால்வை—அந்தக் கண்லாவியை.

மூன்று:—ஆரு இன்னு பார்ப்பமே.

உளறு:—ஆரோ அய்யா, கொட்டை கொட்டையாய் பாப்பான்கள் மேலெல்லாம் போட்டிருப்பான்களே— அது ரொம்ப போட்டிலுக்கார்— வேஷ்டி நல்லா பாப்பான்கள் மாதிரி வெகு அளகாக் கட்டிலுக்கார். பரங்கிப்பளச் சேப்பு ஐயா.

மூன்று:—அவுடா—பார்ப்பம். (உளறுவாயன் அவிழ்க்கிறான்) (ஸ்வகதம்) அடே, துன்மதி மந்திரியாக வருவதற்குமுதனுள் ராஜா வரவழைத்த பெரியவர் இன்னா. ஹா! அன்னிக்குக் கடைத்தெருவு வழியாகப் போனாரே. இவரை யார் கொன்றிருக்கக்கூடும்? அந்த துர்மதியைத்தவிர வேறு யார் இந்தக் கிழவரைக் கொன்றிருப்பான். முகத்தில் இன்னம் அருள் வடிகிறதே. ராஜா மறுபடியும் பழைய வழிகளில் திரும்பிவிட்டார் போலிருக்கிறது. இல்லாவிட்டால்



மறுபடி ரணகேஸரியைத் தள்ளி இந்த துர்மதியை ராஜா வாக்குவாரா? (இதற்குள் கும்பல் பலமாய்க் கூடி ஹா ஹாகாரம் பலமாகிறது) [ப்ரகாசம்] ஹே! மஹா ஜனங்களே. அரசன் மறுபடி தப்புவழிகளில் இறங்குகிறார்போல் தோன்றுகிறது முதலில் இந்த துர்மதியை விலக்கினது போக்காகமட்டுந்தான் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் ஜனங்கள் அவனையும் அவன் க்ரூரச் செயல்களையும் முற்றிலும் மறக்குமுன் இவனை ப்ரதான மந்த்ரியாக்குவாரா? இந்த துர்மதி வருதற்குமுன் ராஜ்யத்தில் எல்லாம் ஸ்பாபமாக நடந்தது. அவன் மறுபடி காலடி எடுத்து வைப்பதற்குமுன் இதோ ஒரு அந்யாயமான கொலை நடந்துவிட்டது. இதற்கு ராஜாவும் துர்மதியும் தான் பாத்திபட்ட வேண்டும். இல்லாவிட்டால் குற்றவாளியைக் கண்டுபிடிக்கட்டும். ஏதாவது வ்யவஸ்தை பிறக்கவேண்டுமல்லவா? வாருங்கள்.

எல்:—அதுதான் ஸரி. ராஜாவிடம் கொண்டு போவோம். (ஒருவன் மூட்டையைக்கட்டித் தூக்க, மற்றவர்கள் அவனுடன் நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம் 2

### களம். 5

இடம்: அரசன் அந்தஃபுரம்.

காலம்: மாலை 9-மணி.

மூன்று:—போங்கடா ராஜன் அந்தஃபுரத்தி லிருந்தாலென்ன? விஷயம் பெரியது. மூட்டையை யவிழ்த்து அவர் காலடியில் கொட்டடா.

அம்:—இதென்ன நம்முடைய அந்தஃபுர வாசலில் ஏகக் கூக்குரல் கேட்கிறதே. ஜனங்களுடைய ஆரவாரம்போல் தோன்றுகிறதே. என்ன விசேஷம் வெகு கோபமாகவன்றோ குரல்கள் கேட்கின்றன!

(வீரமர்த்தனன் கவனிக்கிறான்.)

முதல்:—ராஜ்யத்தில் கேள்விமுறை கிடையாதா? இப்படிக் கொலைநடந்தால் நாமெல்லாம் எப்படி தைர்யமாய் வெளிப்படமுடியும்?

இரண்:—இந்த துர்மதி யுள்ளவரையில் இந்த ராஜ்யம் முன்னுக்கா வரப்போகிறது!

வீர:—ப்ரியே, துர்மதியை மறுபடி ப்ரதான மந்த்ரியாகச் செய்ததில் அத்ருப்தியடைந்த குடிகள் போலிருக்கிறது. அதற்குள்ளா கொலை செய்துவிட்டான்? (ஸ்வகதம்) ஒருவேளை நாம் நீலகண்ட சாஸ்திரிகளைக் கொண்டுபோய் வைகையில் போட்டது வெளியாயிருக்குமோ? சுந்தரேசா—அங்ஙனமில்லாமல் நீர்தான் காப்பாற்றவேண்டும். (ப்ரகாசம்) அம்பாலிகே, துர்மதிக்கு மறுபடி அதிகாரம் கொடுத்த விஷயத்தில் எனக்கு த்ருப்தியில்லையென்றும் சில ராஜரீகதந்த்ரங்களை யெண்ணி அவ்விதம் செய்ய வேண்டி வந்ததென்றும் சொன்னேனல்லவா? எப்படியாவது இந்த துஷ்டன் நம்மைவிட்டுத் துலைந்தானால் எனக்கும் ஸந்தோஷந்தான்.

முதல்:—ராஜாவாம், ராஜா, இப்படி ராஜாக்கள் சந்தையில்காசுக்கு இரண்டு பிசுக்குமூன்றுவாங்கலாமே.

இரண்:—ராஜாவாவது மந்த்ரியாவது எல்லாரும் ஒன்று. மோசக்காரப்பயல்கள்,

மூன்—உள்ளே போங்கடா—கதவை உடையுங்கடா—

அம்—நாதா—உங்களையும் கூடவன்றோ நிந்திக்கிறாற்போலிருக்கிறது—ஸ்வாமி— அதென்னவென்று பார்த்து ஜனங்களுக்கு ஆசுவாஸம் சொல்லுங்கள். இதென்ன விபரீதமாகவிருக்கிறதே.

வீர.—சுந்தரேசா நீதான் துணை. (இதற்குள் சேவகன் தடுத்தும் கேளாமல் உள்ளே எல்லோரும் நுழைந்து சவமூட்டையை யவிழ்த்து அரசன் காலடியில் கொட்டுகிறார்கள்)

(அரசன் அப்படியே மூர்ச்சையாகிறான்.)

அம்:—ஐயோ—இதென்ன பாபம்.

எல்லோரும்— இதற்கென்ன வழிசொல்லுகிறீர்கள்

அம்:—குடிகளே—இப்படி திடீரென்று சவத்தை அவர் காலடியில் போட்டு, திடுக்கிடச்செய்து அவரை மூர்ச்சையடையச் செய்தீர்களே —இது ந்யாயமா? அந்தச் சவத்தை யெடுத்துச்செல்லுங்கள் —அரசனுக்கு ப்ரஞ்ஞைவந்தவுடன் விசாரித்து ந்யாயம் கொடுக்கச்சொல்லுகிறேன்.

மூன்று:—அம்மணி அவ்வளவு ஸுலபமாயப்போய் விடுகிற எண்ணத்துடன் நாங்கள் இங்கு வரவில்லை. இந்தக் கொலைக்குக் காரணம் துர்மதி அவன் ராஜ்யத்திற்குள் காலடியெடுத்து வைக்கும்வரை, இவைகளெல்லாம் இல்லாதிருந்தது. இவனும் வந்தான்—கொலையும் ஆரம்பித்தது. துர்மதி ராஜ்யத்தில் அதிகாரம் பெறுவதற்கு அரசனே காரணம். ஆதலால் இக்கொலைக்கு அரசனேதான் காரணம். ஆகையால், அரசன் ஸ்மரணையுடன் எழுந்து, எங்களுக்கு த்ருப்திகரமான ஜவாப் சொல்லும்வரை நாங்கள் விலகமாட்டோம்.

வீர:—(அரை நினைவாய்) ஐயோ—நீலகண்டசாஸ்திரியை நான் கொலை செய்யவில்லையே.

இரண்:—எங்கப்பா குதிருக்குள் இல்லையென்று இப்பொழுதுதான் வருகிறது.

அம்:—டே. உன்னுடைய அரசன்மீது அபாண்டமான பழி சொல்லாதே.

இரண்:—நாங்கள் சொல்லவில்லை— அம்மணி— அவரேயன்றோ சொல்லிக்கொள்ளுகிறார்.

அம்:—சற்று சும்மாவிருங்கள் அவரையே கேட்போம். (முகத்தில் பன்னீர் தெளிக்கிறாள்) இதோ ஸ்மரணை வருகிறது.

வீர:—ஹே—துர்மதி! (மேலே பேசமுடியவில்லை)

மூன்று:—பார்த்தாயா! உடனே துர்மந்த்ரியை யழைக்கிறார் சூழ்ச்சிக்கு.

வீர:—ப்ரஜைகளே—

எல்:—யார் ப்ரஜைகள்? —நீர் ராஜாவாகவிருந்த

வன்றைக்கல்லவோ நாங்கள் ப்ரஜைகள்—இனி அப்படியழைக்காதேயுங்கள்

**வீர**—மஹாஜனங்களே—நான்செய்யவில்லை—இக்கொலையையென்று, ஸத்யமாய்ச் சொல்லுகிறேன்—என்னையேன் ஹிம்ஸிக்கிறீர்கள்?

**மூன்ற**:—பின் யார் செய்தார்கள்—துர்மதியோ?

**வீர**.—அவனுமல்ல.

எல்:—அவனைச் சேர்ப்பீர்களா?

**மூன்ற**:—அவனில்லையென்று எப்படி உம்மால் சொல்லமுடியும். இல்லையென்று சொல்வதை நிரூபிப்பீர்களானால் நீங்கள் சொல்வதை நம்பலாம்

**வீர**:—அது என்னால் முடியவில்லையே.

**மூன்ற**:—அவனுமல்லவென்றதனால், கொலைசெய்தவன் இன்னானென்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று அர்த்தமாகிறது. வேறு ஸமாதானம் சொல்லுங்கள்.

**வீர**:—சொல்லுவதற்கில்லையே—சொன்னால் நம்பமாட்டீர்களே—சுந்தரேசா.

**மூன்ற**:—அதுதானே ஸந்தேஹாஸ்பதம்.

(துர்மதி ப்ரவேசிக்கிறான்.)

எல்:—இதோ வருகிறான் மஹாபாபி—இவனை வெட்டுங்கள். கொல்லுங்கள்—பாவமில்லை.

**துர்**:—ஜநங்களே. ஏன் கோபிக்கிறீர்கள்--விஷயத்தைச் சொல்லுங்கள்.

எல்:—உன்னைப் பேசவிடக்கூடாது—ஏனென்றால் நீ அழகாகப்பேசி ஏமாற்றிவிடுவாய்—உன்னைக் கொன்றால்தான் தேசத்திற்குக்ஷேமம்(பாய்கிறார்கள்)

**துர்**:—நானெங்கே போய்விடப்போகிறேன். உங்கள் கையிலகப்பட்டவன்தானே—இந்த நிமிஷமில்லாவிட்டால் அடுத்த நிமிஷம் கொல்லுங்கள்—ஸம்மதம்—நான் கொலை செய்தவனைக் காட்டிக்கொடுக்கிறேன்.

**மூன்ற**:—உனக்கெல்லாம் தெரிந்திருந்தும்தானா சும்மாவிருந்தாய்—உன்னைவிடக்கூடாது—சொல்லு, கொலை செய்ததார்?

**துர்**:—இந்த ப்ரேதத்தை பட்டணத்திற்குள்ளிருந்து வைகையில்போடத் தூக்கிக்கொண்டுபோனது யார் என்று உங்கள் அரசனையே ஸத்தியமாய்க் கேளுங்கள்.

**வீர**—துர்மதி!

**துர்**:—(ஸ்வகதம்) இந்தக் கோபத்தில் நான் தப்புவிக்க வேறென்ன செய்ய முடியும்?

எல்:—ஓய் பாண்டியரே--அந்தக் கேள்விக்குப் பதில்சொல்லுமே—(வீரமர்த்தனன் சும்மாவிருக்கிறான்)

எல்:—சொல்லும், ஓய், ஏன் விழிக்கிறீர்?

**வீர**:—நான் எதைச் சொல்லுகிறது? நான்தான் தூக்கிக்கொண்டு போனேன்.

**மூன்ற**:—அப்பொழுது கொலைசெய்ததார்? கொலைசெய்தவன் ஒருவனிருந்தால் அவன் தூக்கிக்கொண்டுபோயிருப்பானல்லவா? கொலையும் நீர்தான் செய்திருக்கவேண்டும்.

**அம்**:—(ஸ்வகதம்) இதெல்லாம் வாஸ்தவமா? ஸ்வப்நந்தானா?

**வீ**:—நான் கொலை செய்யவில்லை.

**துர்**:—உள்ள விஷயத்தை நான் சொல்லி விடுகிறேன்—கேளுங்கள் எனக்கும் கொலைசெய்தவனின்னானென்று தெரியாது.(ஸ்வகதம்) அந்த மட்டிலாவது அரசனுக்கு உபகாரம் செய்வோம். நான் வைகைக் கரையில் ராஜாக்களுக்குப் பயந்து ஒளிந்திருந்தேன். நடுநிசியில் இவர் ஒரு மூட்டையுடன் வந்தார். அது ஒரு சவமூட்டை. அதைக்காட்டி, பயமுறுத்தி, மந்த்ரி உத்தியோகம் பெற்றுக்கொண்டேன். இவ்வளவுதான் கதை.

**மூன்ற**:—ஸரி இனி உம்மை விசாரிக்கவேண்டியதில்லை. ராஜா என்ற மரியாதையை இழந்தீர், உம்முடைய பெண்டாட்டியோடு விடிவதற்குள் வெளியேறவேண்டும். இல்லாவிட்டால் உம்கதி என்னவாகுமோ (அரசனும் ராணியுந் தவிர எல்லோரும் நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

**வீர**:—அம்பாலிகே. நான்தான் நீலகண்ட சாஸ்திரிகளின் சவத்தைத் தூக்கிக்கொண்டுபோய் வைகையில் போட்டேன் என்று ஒப்புக்கொண்டதை நீ கேட்டுக் கொண்டிருந்தாய் ஆனால் அந்த சங்கதி இந்த ஐந்தாறு நாட்களாக உன்னிடம் சொல்லவில்லை. அதனால் உன்மனதிலேதாவது என்விஷயமாய் ஸந்தேக முண்டாயிருக்குமோ—நான்தான் இந்தக் கொலையையும் செய்திருப்பேன் என்று எண்ணுகிறாயோ! ப்ராணகாந்தே! நான் ஒரு பாவத்தையும் அறியேன். ஒரு பிணத்தையும் தூக்கும்படி என்னை யடித்ததே காலபலம். ஹரிச்சந்திரன்கூட சுடலைக் காத்து, பிணத்தைக் கோலால்தள்ளிச் சுட்டானேயன்றி, அதைத் தூக்கும்படி வரவில்லையே—என்னுடைய கஷ்ட காலத்தைப் பார்.

**அம்**:—ப்ரபோ. தங்கள்விஷயமாய் நான்எத்தனையும் ஸந்தேஹிக்கவில்லை. அந்த சநீசுவரனன்றோ நம்மைப் பிடித்தாட்டுகிறான் இவ்வளவுதானா அவன் செய்வான்? இன்னமும் செய்வான். ப்ரபு இனி ப்ரஜைகள் நம்மைப்பற்றி நல்லெண்ணம் எண்ணுவார்கள் என்று கருதுவது முட்டாள்தனம். இனி இவ்விடத்தில் இருத்தலுமியலாது. ஆகையால் நாமிருவரும் புறப்பட்டு என்னுடைய பிதாவினுடைய க்ரஹம் போய்ச் சேருவோம்.

**வீர**:—அம்பாலிகா. நான் வரவில்லை—நீபோய் ஸுகமாயிரு. எனக்குக் காலபலம் ஒத்துக்கொண்டு, நானும் மனிதர்களுடன்சேர யோக்கியனாகும் பொழுது நானுன்னை மறுபடியும் யழைத்துக்கொள்ளுகிறேன்.

**அம்**:—ஆரம்பம் நளசரித்திரம் போலிருக்கிறதே. ஐயோ ஜகதீசா! முற்றிலும் அது போலாகாமல், எங்களிருவரையுமாவது பிரித்துவைக்காமல் அருள் செய்யவேண்டுமே நாதா அப்படிச் சொல்லக்கூடாது. என்னுடைய தப்பனாரை வித்யாஸமாயெண்ணக்கூடாது. நான் உங்களைவிட்டு ஒரு நிமிஷம் பிரிய



மாட்டேன். நீங்கள் வரமாட்டேனென்று வனஸஞ்சாரத்திற்காரம்பிப்பீர்களானால், நானும் உம்முடன் கூடவேவருவேன். ப்ரபு! தமயந்தி தூங்கினதுபோல் நான் தூங்கமாட்டேன்

**வீர**:—ப்ரியே! வனஸஞ்சாரமே நமக்கிருக்கும் கால வித்யாஸத்திற்கேற்றதானாலும், பூர்ண கர்ப்பமாயிருக்கும் உன்னையும் அழைத்துக்கொண்டு காடுகளில் ஸஞ்சரிப்பது எனக்கு ஸஹிக்காது. ஆகையால் நீ சொன்னப்ரகாரமே உன் தகப்பனார் வீடேபோய்ச் சேருவோம்.

## அங்கம். 3

### களம். 1

இடம் : காடு. காலம் : காலை.

வேடர்கள் ப்ரவேசிக்கிறார்கள்.

**தொந்தி**:—ஏலே பசங்களா. ராசா காட்டுக்கு இண்ணைக்கு வேட்டைக்கின்னு வர்ராங்க—காடுகலக்கேணும், கொம்பு, தம்பட்டம், எல்லாம் சரியாயிருக்குதா?—கண்ணைப்பிடிங்கிடுவாக.

**பாவா**:—தொந்திவீரா—என்னடாலேது—நீதான் ராசாமகன் ராசாப்போலே என்னமோ அதிகாரம் பண்ணிக்கினு திரியறே. எல்லாம் தெரியுமடா எங்களுக்கும்.

**பல்**:—டே பாவாடை. என்னடாலே பெரு பாவாடை; துணியெல்லாம் கந்தலாத் தொங்குது. ஏண்டா, காட்டுக்குள் ராசாவந்து எத்தினை வருசமாச்சு, என்னடா—இப்போ வேட்டையை நினைச்சிட்டாங்க.

**தொந்தி**:—டே பசங்களா! அன்னிக்காட்டமா அப்புறம் சண்டைக்கு வாரதேங்க. எப்படிப் பங்கு பிரிச்சுக்கிறதுன்னு இப்பவே சொல்லிவிட்டிருங்க.

**பா**:—என்னடா—சொல்ரது சொரைக்காய்க்கு உப்பில்லைன்னு—இராசா, மந்திரி, வேறுயாருன்னாலும் அடிச்சுத் தள்ளுவாங்களால்யா அதை பங்கு போட்டுடறது. ஆளுக்கு ஒருபங்குதான்.

**தொந்தி**:— சரி. நாலுபங்குபோட்டு, தொந்திக்கொண்ணு, நேக்கொண்ணு பாவாடைக்கொண்ணு பல்லுச்சுந்தரனுக்கொண்ணு சரிதாண்டா?

**பல்லு**:— அது யாராவன் தொந்தி?

**பா**:— வேட்டைக்காடுகலக்க வாராதவனுக்கு பங்கு கொடுக்க மாட்டம்டா தம்பீ! தெரியுமா.

**தொந்தி**:—வேட்டைக்கு வரல்லையா—அதான் வந்திருக்கானே. நான் எங்கே போனாலும் என்கூட வருவானே.

**பா**:— ஒங்கப்பன் தன்னானே— எங்கடாலே யவன் இங்கிறேன்.

**தொந்தி**:—இங்கேதான் சப்பளிக்க உட்கார்ந்திருக்கேடா.

**பா**:— எங்கேணடா—எங்கே, தொட்டு எண்ணு.

**தொந்தி**:—(எண்ணுகிறான். மூன்று பேரையும் எண்ணி, தன் வயிற்றையும் 'நாலு' என்று எண்ணுகிறான். 1, 2, 3, 4.)



**பல்லு**:—அடே தொலையராண்டா—இரட்டைவவுத்துக்காரப்பயல். இண்ணைக்கி நல்லாவிளும் எல்லாம். போறான் அவனுக்கு இரண்டு பங்கு கொடுப்பம்—அண்ணே—தொந்தி ஒன் பங்குக்கு முசல் விளுந்திச்சா அதே எங்கிட்ட கொடுத்திரணும். பாத்துக்கோ. நான் ஒன் பக்கட்டு இருந்து பேசரேனல்யா.

**தொந்தி**:—என்னத்தை வேணும்னாஎடுத்துக்கிட்டு தொலையுங்கடா—எனக்கு மட்டிலே பங்கு மொத்தியாக் கொடுத்திட்டாச் சரி—அடே அந்தாலே ராசா வராலேடோ—அடே கத்தாதேங்கட (சேரனும் அவன் மந்திரியும் ப்ரவேசிக்கிறார்கள்.)

**சேரன்**:—மந்திரி! வேட்டைக்கென்று வந்து வெகுகாலமாயிற்று. வில்லம்புதான் ஸரியாகக் குறிபிடிக்கிறதோ வென்று கூட ஸந்தேஹிக்கிறேன். மந்திரி—இந்த வேட்டையில் அநேகம் மிருகங்களை வதம்செய்கிறோமே—அது பாபமாகாதோ?

**மந்திரி**:— காட்டிலுள்ள ம்ருகங்கள் நாட்டிற்குள் வந்து பயிர்களையழித்து, ஜனங்களுக்கு உபத்ரவம் செய்யுங் காலங்களில்தான் ராஜா வேட்டைக்குப் புறப்படவேண்டு மென்றும் அத்தகைய ஸமயங்களில் ம்ருகவதம் பாபமில்லை யென்றும் சாஸ்த்ரம் கூறுகிறது.

**சே**:—அது பாபமோ—புண்ணியமோ—வேட்டையில் அநேக லாபங்கள் உண்டாகின்றன. முதலில் மனதிற்கொரு குதூஹலம்; பிறகு சரீரத்திற்கு பலம். மூன்றாவது நல்ல விடாமுயற்சியில் அப்பியாஸம். நாம் மான்களைத் துரத்திக்கொண்டு போகும் பொழுது அவைகள் பயந்து திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டோடும்போது, அது எத்தனை இன்பம் மனதிற்குப் பயக்குகிறது!

**மந்**:—ஆம் ப்ரபு. மான்களுக்கு மனது அப்பொழுது எப்படியிருக்கும்?

**சே**:—அதை நாம் கவனித்தால் வேட்டைக்கு வருவானேன்—அதோ யாரடா— இரண்டுபெயர்—ஒரு ஆண்பிள்ளை—ஒரு பெண்பிள்ளை காட்டுக்குள்ளே வருகிறார்கள். ஏன்! இன்றைக்குக் காட்டிற்குள் ஒருவரும் வரக்கூடாதென்று தண்டோராப்போடவில்லையா—காவல்காரர்கள் ஏன் இவர்களை உள்ளேவிட்டார்கள்—எங்கே அந்த வேடப்பயல்கள் (ஒரு சீட்டியடிக்கிறான்—(வேடர்கள் வருகிறார்கள்)

**எல்லாவேடர்கள்**:— சாமி— ஆண்டவனுக்குத் தெண்டம்.

**சே**:—அதாரடா—இங்கே போகிறது. அவர்கள் எப்படி இங்கே வந்தார்கள்? காவற்காரர்கள் ஸரியாக வேலைபார்க்கிறதில்லையோ?

**மந்**:—என்னடா! காவற்காரர்களை கூப்பிடுங்களேன்.

**தொந்தி**:—சாமி காட்டுக்குக் காவற்காரப்பயங்கள் கிடையாது.

**சே**:—என்ன மந்த்ரீ—என்ன இது?

**மந்**:—எனக்குத் தகவல் கிடைக்கவில்லை—விசா

ரிக்கிறேன்—எண்டா காவற்காரர்கள் நாலு பேர்கள் உண்டே. எங்கேயவர்கள்?

தோந்:—சாமி—ஊருக்குள்ளே வந்து மண்டியிருந்திச்சால்யா சாமி—சாமி— பேதி— அல்லல்—அது நான்கு பயங்களேயும் கொண்டு போயிருச்சு—பச்சை மாமிசம் ரொம்ப தின்னிருப்பாங்க சாமி

மந்:—என்னடா — இதெல்லாம் ராசாகிட்ட சொல்லலாமா? முட்டாள்—அவர்கள் இறந்துபோனார்கள் என்று பொதுவாய்ச் சொல்லுகிறதுதானே.

தோந்:—(ஸ்வகதம்) அதிலே மோசம் வந்திருச்சாக்கும், உள்ளதைச்சொன்னா—என்னமோ இவுகளுக்குப் பொத்துக் கிட்டுவந்திருச்சு. நீங்கள்தான் மன்னன்கள் வந்த நாள்முதல் ஊரிலே பஞ்சம், பேதி அம்மை, இன்னம் என்னா, எல்லாம் வந்திருச்சே. அப்புறம் என்னா—

சே:—மந்த்ரி—அவர்கள் ப்ரயாணிகள் போல் தோன்றுகிறது—நம்முடைய தேசத்தவருமல்லவென்றெண்ணுகிறேன். அவர்களைக்கூப்பிடச்சொல்லு. (வேடர்கள் ஓடி அவர்களை யழைத்துவருகிறார்கள்)

மந்:—பாண்டியன் வீரமர்த்தனன் போலவன்றோ விருக்கிறது.

சே:—ஆம், அடே. என்ன அத்ருஷ்டம். முன்னர் அவனைப் புறங்காட்டியடித்தேன் மறுபடி யாரோவொருவனை யழைத்துவந்து, என் சேனைகளை யோட்டினான். அது முதல் அவன் தேசத்தைப்படையெடுப்பதென்றால் எனக்கே பயமாயிருக்கிறது. நல்லவேளையாய் இங்கே அகப்பட்டுக்கொண்டான். அவனை கைதியாகப்பிடித்து, காராக்ரஹத்திற்கு அனுப்பிவிடு, மந்த்ரி.

மந்:—அப்படியே செய்கிறேன் ஸ்வாமி. (அதற்குள் யாவரும் ஸமீபம் வந்துவிடுகிறார்கள். சேரன் ஒருபுறமாகத் திரும்பி நிற்கிறான்) அடே தொந்திவீரா—இந்தப் பேர்வழியைக் கொண்டுபோய் ஜயிலடைத்துவிடும்படி நம்முடைய ஜயிலரிடம் விட்டுவிடு. ஜாக்ரதை—ஆளைவிட்டாயோ உன் தலையை நம்பாதே—ஹுஷார்—தெரியுமா?

தோ:—சாமி, இந்தப் பொம்பளைங்களை என்னா பண்ணரது?

மந்:—அவள் எங்கே வேண்டுமென்றாலும் போகட்டும்.

வீர:—இது தான் நம்முடைய விதிபரிபாகத்தின் எல்லை! நான் இவ்விடமிருந்து தப்பிவிக்க ப்ரயத்னம் செய்தென்ன ஆகவேண்டும். தப்புவித்தால் எங்கே போகிறது? மாமனார் வீட்டுச் சோற்றுக்குத்தானே போய் நிற்கவேண்டும். இவனைக் கெஞ்சுவானேன்? மானமிழப்பானேன்? இவன் நம்மைவிடவும் போவதில்லை—(ப்ரகாசம்) சேரா! நீ செய்யும் உபகாரத்திற்காக வந்தனம். நன்றாய் தைர்யமாக கைதிபிடிக்கிறாய். பலே. பேஷ் என்ன பௌருஷம்.!

சே:—என்னடா. அடிபட்ட நாய்குலைக்கிறது—எண்டா தாமதமசெய்கிறீர்கள்? சீக்கிரபடுத்துங்கள். கொண்டுபோ அவனை.

அம்:—ராஜந்! நான் ஒருவார்த்தை சொல்லுகிறேன். நாங்கள் எங்களுடைய காலவசத்தால் ராஜ்யத்தையிழந்து பரதவித்து வெளியேறி எங்கேயாவது போய்ப் பிழைக்கலாமென்று புறப்பட்டோம். அப்படிக் கஷ்டமடைந்தவர்களை சேர மஹாராஜன் கைதியாகப் பிடித்தானென்றால், உலகத்தார், உம்மைக் குரூரன் என்று இகழமாட்டாரா? இரக்கமற்ற பாவி என்று வசை கூறாரோ? ஸ்வாமி—என்பேரில் கிருபைவைத்து, இந்த உத்திரவை மாற்றவேண்டுகிறேன். ஸ்வாமி தயவுசெய்யவேண்டும்.

சே:—வெகு அழகாகப்பேசுகிறாயே—நான் உலக நிந்தனைக்குப் பயப்படவில்லை—என்னை அவமானம் செய்து, என் சேனைகளைப் புறங்காட்டியோடச்செய்து, மனக்கவலையடையச் செய்தபொழுது,—

அம்:—(ஸ்வகதம்) இவனுக்கு ஹ்ருதயமுங்கிடையாது; இரக்கமுமில்லை;—புத்தியுமில்லை;—முடன். இவனுடன் வாதுசெய்வதில் யாதும் பயனில்லை—(ப்ரகாசம்) ஸ்வாமி—என் நாதனை ஜயிலிடாமல் காக்கவேண்டு மென்று நான் ப்ரார்த்திக்கவில்லை. என்னுடைய நாதனை எந்த ஜயிலில் அடைக்கிறீர்களோ, அதிலேயே என்னையு மடைக்கும்படிமட்டும் ஆஞ்ஞாபநம் செய்யவேண்டும்.

சே:—ராஜ்யத்தை யிழந்து சாப்பாட்டுக்கு வழியில்லையே யென்று யோசனை செய்து கொண்டிருந்தீர்களோ? இங்கே ஒருவழி பிறக்குமென்று பார்த்தீர்களோ? அது ஸரிப்படாது—நீ எங்கே வேண்டுமென்றாலும் போகலாம். உன்னை என்னாட்டில்கூட இருக்கவிடேன்—என்னடா தாமதம்—கொண்டு போங்கடா அவனை—(வீரமர்த்தனனை வேடர்கள் தள்ளிக்கொண்டு போகிறார்கள்)—சேரனும் மந்த்ரியும் வேறொரு பக்கமாய் மறைகிறார்கள்

அம்:—ஹேசிவனே—நானென்ன செய்வேன்!—அபலை—நாங்களிவரும் படமுடியாத கஷ்டப்பட்டாலும் ஒன்றாகவாவது இருப்பதும்—ஐயோ—பாழுந்தெய்வமே—உனக்கு ஸஹிக்கவில்லையோ!—நாதா!—அந்த நிர்த்தயன் கையிலகப்பட்டீர்களே!—அவன் உங்களை என்ன செய்வானோ!—ஐயோ நாதா!—நான் தமயந்திபோல் தூங்கமாட்டேன்—என்னை விட்டு நீங்கள் பிரிவதானாலும் நான் விடமாட்டேன் என்றேனே!—ஐயோ விதியே!—இப்படிஎங்களிருவரையும் பிரித்தாயே—ஏ! காட்டிலுள்ள ம்ருகங்களா? இந்தப்பாவி இனி உயிரைவைத்திருக்க ந்யாயமில்லை—நீங்கள் கொஞ்சமும் இரக்கம் காட்டாமல் என்னைக் கொன்று தின்னுங்களேன்—ஆ—தெய்வமே—அதோ வேகமாய்ப் பாய்ந்துவந்த புலியும் திரும்பியோடுகிறதே—இந்தப் பாபியின் மாம்ஸம் தன் வயிற்றில் சேருவதும் கெடுதலென் றெண்ணிற்றோ! இல்லை. இந்த மஹாபாபியின் சரீரம் ஒருபுலியின் பசிக்காவது உபயோகப்பட்டது என்று என் விஷயமாக உபகாரம் என்ற சப்தம் உபயோகப்படலாகுமா? இதோ ஒரு பாம்புப்புற்றுத் தோன்றுகிறது—இதில கையிடுகிறேன்—என் அத்ருஷ்டம் இதில் பாம்பிருக்காதா—



பார்க்கிறேன்—அதோ இரண்டு கண்கள் பளபளவென்று தெரிகின்றன: நல்லவேளை—இதிற்கையிட்டு இந்த ஸர்ப்ப ராஜனால் கடியுண்டு இறக்கிறேன்—தெய்வமே பாழுந்தெய்வமே—கண்கெட்ட தெய்வமே—இனி நீ யென்னசெய்வாய்—சநீசுவரா இனி உன்கொரோத்தை யாரிடம் காட்டுவாய்—ஹே வ்ருக்ஷங்களா! மலைகளா! குகைகளா—நானுங்களிடம் உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன்—இனி உங்களை நான் மறு ஜந்மத்தில்தான் பார்ப்பேன். (பாம்புப் புற்றுக்குள் கையைவிடுகிறாள். கையை திடீரென்று வெளியே இழுத்து) ஐயோ நான்சாவது மட்டிலில்லையே. இன்றைக்கோ நாளைக்கோ வெளிவரவிருக்கும் ஒரு குழந்தையையு மன்றோ கொல்ல நினைத்தேன்—என்ன முட்டாள்தனம்—இருந்தாலும், குழந்தைபிறந்தாலும் நான் வைத்து வளர்க்கப் போகிறேனோ? எந்த ஸமயம் சநீசுவரன் வந்து அதைத் தனக்குப் பலியாகக் கொள்ளப் போகிறானோ—குழந்தையை அவன் கையில் காட்டிக்கொடுப்பதிலும் இப்படியே இறப்பதுதான் மேன்மை. (மறுபடி புற்றுக்குள் கையைவிடுகிறாள்.) ஹே ஸர்ப்ப ராஜா—உனக்குமா என்னிடம் தயவில்லை—ஒரே போடாகப்போட்டு என்கஷ்டகாலத்திற்கு முடிவு செய்யாயோ? நாம் மரணமடைகிற தென்றாலும் தெய்வ ஸங்கல்பம் நம்மை விடாது போலிருக்கிறது—நம்மாலாவதென்? தெய்வ ஸங்கல்பப்படி நடக்கட்டும். (நிஷ்க்ரமிக்கிறாள்.)

## அங்கம் 3

### களம்-2

இடம்: காடு. காலம்: பகல் 12-மணி

ப்ரவேசம்: ரணகேஸரி - ஸுந்தரேசன்.

ரண:—ஸுந்தரேசா, இந்த அநர்த்த பரம்பரை எங்கேயாவதுண்டா? என்னை ப்ரதானமந்த்ரிஉத்யோகத்திலிருந்து நீக்கி, தூர்மதியை அவருக்குப் பதிலாக நியமித்தார் அரசன், என்றவிஷயத்தில் எனக்குக்கொஞ்சமும் மனஸ்தாபமில்லை. இந்த ரணகேஸரியை வழக்கம்போல் யோசனை கேட்கிறதில்லையென்றும் எனக்கு மனஸ்தாபமில்லை. அன்றையதினம் கம்பளம் போர்த்துக்கொண்டு, சநீசுவரன் போலொருவன் வந்தானே அரண்மனைக்குள். அன்றுமுதல் எனக்கு என்னமோ மனதில் ஸமாதானமே யேற்படவில்லை. இருந்தாலும் இப்படி வருமென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. எல்லாம் என்ன இரண்டுமூன்று நாளிலா! (யோசிக்கிறான்.)

சுந்த:—எனக்கு ஐயோ! இப்படியெல்லாம் நேருமாவென்று விசாரப்படுவதைத் தவிர வேறொன்றுமே தோன்றவில்லை— இருந்தாலும் தூர்மதியைக் கொண்டுவந்து ராஜ்யத்தில மறுபடியும் மந்த்ரியாக்கினது மட்டும் எனக்காச்சர்யமாயிருக்கிறது. நான் அல்ப ஸேவகனானாலும் என்னிடம் அவருக்குள்ளப்ரியத்தால், அந்ததூர்மதிப்பயல் செய்திருக்கிற அக்ரமங்கள் முழுவதும் அணுவணுவாய்த் தான் பின்னால் அறிந்ததை யென்னிடம் சொல்லியிருக்கிறாரே,—

ரண:—ஆம்—தூர்மதி எதோ சூழ்ச்சி செய்து, நீலகண்ட சாஸ்திரிகளின் பிணத்தை அரசனே தூக்கிக்கொண்டு போகும்படி செய்து—என்னமோ எனக்கு முடிக்கவரவில்லை. அவன்செய்த மோசத்தின் வழிமட்டும் எனக்குத் தெரியவில்லை. அது அவன் மோசந்தான். இல்லாவிட்டால், அரசன் இம்மாதிரியான கார்யம் செய்திருப்பார் என்று நம்புகிறாயோ?

சுந்த:—சாந்தம் பாபம்—நம்மரசனா? ஒருக்காலுமில்லை.

ரண:—பின் இப்படிநேர்ந்ததற்கு ஸமாதானம் எவ்விதம்சொல்லமுடியும்? இதென்னமோஒன்றும் புலப்படவில்லை. அரசனைக் கண்டு பேசவேண்டுமென்று பார்த்தேன்; சரிப்படவில்லை முன்னமேயேபுறப்பட்டுவிட்டார்கள். என்னகஷ்டம்! ஸாதாரணகாலமாயிருந்தால்கூட இவ்வளவு துக்கமாயிராதுபோலிருக்கிறது. ஐயோ! பூரண கர்ப்பிணியையும் அழைத்துக்கொண்டன்றோ போயிருக்கிறார்..ஆனால் அரசனுடன் இந்த மூன்றுவருஷமாய் நான் பழகிவருவதில், அவருடைய மனோபாவம் முழுவதும் அறிந்திருக்கிறேன். ஆதலால் இந்த ஸம்பவங்களுக்கெல்லாம் ஆதாரமாய் எதோ சூழ்ச்சி, எதோ மோசம் அடியிலிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

சுந்த:—அதை யெப்படிக் கண்டுபிடிக்கமுடியும்?

ரண:—அரசனைக் கண்டுபிடித்துவிட்டால் இதையுங்கண்டு பிடித்துவிடுவேன். அரசனாகச் சொல்லாததை விசாரிக்க வேண்டாமென்று நானிருந்தது இவ்வளவு அநர்த்தத்திற்கும் காரணமாயிற்று. இனி அப்படியிருக்கலாகாது. அரசனைக்கண்டு உள்ள விஷயங்களை உள்ளபடி விசாரித்து அறிந்தால் உண்மையைக் கண்டுபிடித்துவிடலா மென்று எனக்குத் தைர்யமா யிருக்கிறது. இதுவரை அரசனும் ராணியும் வந்ததாக விசாரித்துக்கொண்டுவந்துவிட்டோம். இனி எங்கு போனார்கள் என்று விசாரிப்பதற்கு ஒருவரையுங் காணோமே.

சுந்:—என்னமோ? இந்த வழியாய்த்தான் போவோமே—(இருவரும் நடக்கிறார்கள் ராணி இன்னொரு புறமிருந்து வருகிறாள்.)

அம்:—ரணகேஸரி—

ரணகே—ராணீ—

சுந்:—ஐயோ அம்மா—

ரண:—தாயே—என்ன! தங்களைத் தனியாய்க் காண்கிறேனே—அம்மா—ராஜா எங்கே.

அம்:—ஐயோ—ரணகேஸரி—நான் என்ன சொல்வேன்! இந்தக் காட்டில் நாங்கள் அலைந்துகொண்டிருக்கும்பொழுது சேரன் என் நாதனைச் சிறைப்பிடித்துச்சென்றனன்—நான் இனி என்னசெய்வேன் ரண

கேஸரி—உயிரை மாய்ப்பதென்ற ஸித்தாந்தத்துடன் பாம்புப்புற்றில் கையைவிட்டேன். அதுவும் என்னைக் கடிக்காதொழிந்தது. என்னுடையப்ராணநாதனை இனி நான் உயிருடன் காண்பேனு! ஐயோ! ரணகேஸரி! எங்கேயாவதுபோய் ஸாமான்யரைப்போல் பிழைப்போம் என்றுசொன்ன என் நாதனைத் தடுத்து, பிறந்தகத்திற்குப் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்தேனே! அதனாலன்றோ இந்த பாதை வரும்படிக்கும் அந்தப் பாபி த்ரோஹி என் ப்ராணகாந்தனைச் சிறைபிடிக்கவும் நேர்ந்தது.

ரண:—அம்மா! தாயே! சோகவேகத்தை யடக்கிக் கொள்ளுங்கள், அதிலென்ன ப்ரயோஜனம். மறுபடி அரசனை நாம் மீட்பதற்கு வேண்டிய ப்ரயத்னங்கள் செய்யவேண்டிய சமயத்து வீணில் துக்கப்பட்டுக் கொண்டிருந்தால் கார்யம் எப்படியாவது?

அம்:—அப்பா! ரணகேஸரி இராஜருடைய மனது, குடிகள் கலகம் செய்தவன்றை முதல், இன்னவிதந்தான் என்று சொல்லமுடியாதபடி மாறுதலடைந்திருக்கிறது. மேல் மேலும் ஸமுத்திரத்தின் அலைகள் போல் படையெடுத்துவரும் கஷ்டபரம்பரைகளுக்கு ஆளாகாமல் உயிரை மாய்த்துக்கொள்வதென்ற தீர்மானம் அவருக்கு வந்திருக்கிறது. அதில் என்னிடத்தில் அவருக்குள்ள பாசந்தான் தடையாக இருந்தது. பிரிவினால் அதுவும் இல்லாமற்போமானால் அப்புறம் என்ன செய்வாரோ? அதை நினைக்க என்மனம் நடுங்குகிறது—இந்தச்சண்டாளன் சேரன் தானென்ன! த்ரவமில்லாத ஹ்ருதயமுடையவனாயிற்றே.

ரண:—அம்மணீ. நீங்கள் பயப்படாதேயுங்கள்—சேரன் அப்படியொன்றும் செய்துவிட மாட்டான். அவனுடைய ஸ்வபாவம் முழுதும் நான் நன்றாயறிவேன். கொன்றுவிட்டால், பிறகு அவனுடைய க்ரௌர்யத்தைச் செலுத்தவிடமிராதாகையால், அங்ஙனம் செய்யாதொழிவன். அன்றியும் நான் அரசனைக் காணுவேனேல், இந்த கஷ்ட பரம்பரையை யொழித்துவிடலாமென்று எனக்குத் தைர்யமாயிருக்கிறது. நல்ல காலத்தை யெதிர்பார்த்து, சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

அம்:—ரணகேஸரி. இந்த ஸமயத்தில் எனக்கிவ்விதம் யார்தான் தேறுதல் சொல்லப்போகிறார்கள்? என்னவோ! பார்ப்போம்.

ரண:—ஆம் அம்மணி. அப்படி தைர்யப்படுத்திக் கொள்ளுங்கள். நான் தங்களை யழைத்துசென்று உங்களுடைய தகப்பனார் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு, பிறகு என் ப்ரபுவை ஒரு தடவை காண ப்ரயத்நம் செய்கிறேன்.

அம்:—அப்படியே செய்வோம். எனக்கு புத்தி ஸரியான ஸ்திதியிலில்லை. என் தகப்பன் நாட்டிற்கு எந்த பாதையைப் பிடித்துச் செல்லுகிறது? ரணகேஸரி உனக்குத் தெரியுமா?

ரண:—ஆம் அம்மா! இதுதான் அப்பாதை. போவோம் வாருங்கள்.

———

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

# மாதவீ கங்கணம்

### முதல் பாகம்

### அத்யாயம்-5

### ஹோளி பண்டிகை

ஏறக்குறைய இப்பாதகண்டமுழுவதும் இந்தியர்களில் பெரும்பான்மையோர் விசேஷமான குதூஹலத்துடனும் மனஸ்ஸந்துஷ்டியுடனும் அநுஸரிக்கும் உத்ஸவாதிகளில் ஹோளிபண்டிகை அல்லது வஸந்தோத்ஸவம் என்பது முக்யமானது. மாரிகாலம் முடிந்துவிட்டது; குளிர் நாட்கள் இனிக்கிடையாது. அரிசி, கோதுமை, முதலிய தான்யங்கள் அறுவடையாய்விட்டன. உளுந்து, பயறு, துவரை முதலிய பருப்புவகைகளும், எள், இலுப்பை முதலிய எண்ணெய் விதைகளும் யாவும் கைக்கு வந்துவிட்டன. குடித்தனக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்குச் சேரவேண்டிய கடன், வாரம் முதலிய பாபத்துகளைப் பைஸல் செய்து மிகுந்தவற்றை உரையில் கொட்டிப் பத்ரப்படுத்திவிட்டனர். அவர்களுடைய மனைவிகளும், குழந்தைகளும் நெல்லை நேராகவோ அல்லது பணமாக மாற்றியோ தங்களுக்கு வேண்டிய சேலை, ரவிக்கை, வளையல் முதலியவைகளையும் வீட்டுக்கு வேண்டிய பாத்ர ஸாமான்களையும் வாங்கிக்கொண்டனர். சிறிது ஜாஸ்தியாகப் பணமுடையவர் இரண்டொரு வெள்ளிநகைகளும் ஸ்வல்ப பொன் நகைகளும் செய்து கொண்டார்கள். ஊரூராய்ச் சுற்றித்திரியும் பலசரக்கு வ்யாபாரிகள் ப்ரதி க்ராமத்துக்கும் சென்று தங்கள் கடைகளைப்பரப்பி இரண்டொரு நாள் இருந்து வ்யாபாரஞ்செய்தனர். இந்த வர்த்தகர்கள் ஊருக்குள் வந்தவுடன் ஊரிலுள்ள சிறியோர் பெரியோர் யாவரும் அவர்களுடைய கடைகளைச்சுற்றிக்கொண்டு எனக்கு உனக்கென்று போட்டிபோட்டு ஸாமான்கள் வாங்கினர். புதுபுதுமாதிரியான சேலைகள், காப்புகள், கொலுஸுகள் முதலியவற்றை வாங்கிக்கொள்ளக் கையில் ரொக்கமில்லாதவர்கள் கோதுமை நெல் முதலிய தான்யங்களைக் கொடுத்து வாங்கிக்கொண்டனர். இவ்வாறு நாடு முழுதுமுள்ள ஜனங்கள் யாவரும் ஆனந்தித்துக் கொண்டிருப்பதற்கேற்ப மாமரங்களும் இளந்தளிர்விட்டுத் துளிர்த்திருந்தன. அவைகள் புஷ்பிக்கத் தொடங்கிவிட்டமையால், ஊர்முழுதும் மாம்பூவாஸனை நிறைந்திருந்தது. கோகிலபக்ஷிகளும் மனிதர்களைப்போல் ஸந்தோஷமுற்றவைகளாய் மரங்களிலும் கிளைகளிலும் ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் ஸந்தோஷமும், ஆனந்தமும், உத்ஸாஹமும், உல்லாஸமுமே குடிகொண்டிருந்தன.



இவ் வஸந்தோத்ஸவம் ஆதிகாலத்தில் மன்மதன்பண்டிகையாக அநுஸரிக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் காமதேவனாகிய மன்மதனைப் பூஜித்தனர். இதற்குக் காமன்பண்டிகையென்றொரு நாமதேயமுண்டு. ஆனால் ஸுமார் ஆயிரவருஷங்களாக மன்மதனுக்குப்பதிலாக ஜனங்கள் க்ருஷ்ணனை உபாஸித்து வருகிறார்கள். ஸ்ரீ க்ருஷ்ணபகவானைப்பற்றிய கதைகளும் பாட்டுகளும் நாடெங்கும் கோஷிக்கின்றன. பட்டணங்கள், க்ராமங்கள் எல்லாவிடங்களிலும் ஸ்த்ரீகள் க்ருஷ்ணனுடைய லீலைகளையும் அவருடைய அத்புதச் செயல்களையும் பாட்டாகப்பாடிக் களிக்கின்றனர். புருஷர்களும் தங்களுடைய வேலைகளைக் கொஞ்சகாலம் நிறுத்திவிட்டுத் திருவிழா கொண்டாடுகின்றனர்: உத்ஸாஹத்திலும் கேளிக்கைகளிலும் காலங்கழிக்கின்றனர். கடைசி தினத்தன்று ஸகல ஜனங்களுங்கூடி இந்த உத்ஸவத்தை அதிக விமர்சையாயும், அலங்காரமாயும் நடத்துகிறார்கள். அன்றையதினமிரவு முழுவதும் ஒரே இரைச்சலும் கோஷமுந்தான். ராத்ரி ஓய்வேகிடையாது. மறுநாள் ஸூர்யோதயம் வரைக்கும் இந்த கோஷம் நடக்கும். ஸூர்யோதயமானவுடன் எல்லோரும் ஸ்நாநஞ் செய்துவிட்டுப் பழையபடித் தத்தம் வேலைகளுக்குச் செல்கின்றனர்.

இப்பண்டிகை இந்தியா முழுவதும் ஒரேவிதமாய் அநுஸரிக்கப் படுவதில்லை. வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறுவிதமான சடங்குகளும், உத்ஸவங்களும் நடத்துகிறார்கள். ஆனால் நாளதுவரைக்கும் இந்தியாவின் பெரும்பாகத்தில் அநுஸரிக்கப்படும் வழக்கம் ஒன்றுண்டு. அதாவது கடைவீதிகளிலும், தெருக்களிலும், சந்தைகளிலும் வீடுகளிலும் ஒருவர் மீதொருவர் சிவப்புத்தூள் எறியும் வழக்கம். இப்பண்டிகை காலத்தில் இந்தச் செந்தூள் அபிஷேகத்தினின்று எவரும் தப்பமுடியாது. அவன் லக்ஷாதிகாரியா யிருந்தாலும் ஸரி, இதற்கொன்றும் தடை சொல்லக்கூடாது. ராஜ்யத்திலிருக்கும் அரசன், மந்த்ரி, கோயில் குருக்கள் யாவருக்கும் ஒரே கதிதான். எல்லாருடைய உடைகளும் அநேகமாய்ச் செந்நிறமடைந்து விடும். தெருவில் ஆடித்திரியும் சிறுவர்களுக்கு ஒருவரும் வித்யாஸம் கிடையாது.

இந்த அபிஷேகம் ஒன்று, இன்னொன்று காதையடைக்கும்படியான தெருப்பாட்டுகள், இவை யிரண்டிற்கும் அகப்படக்கூடாதென்று நாணமுள்ள ஸ்த்ரீகள் வெகுவாய் வீதியிலும் பொது ஜனக்கூட்டமான விடங்களிலும் வருவதில்லை. ஜனங்கள் அனைவரும் பெரியோர், சிறியோர், உயர்குலத்தோர் தாழ்குலத்தோர், மேல்ஜாதி, கீழ்ஜாதி, பணக்காரன், பிச்சைக்காரன், என்ற வித்யாஸமே தோன்றாமல் கொஞ்ச காலமாவது எல்லோரும் ஸமத்வமாயும், சில ஸந்தர்ப்பங்களில் பரிசயமுடையவர்களாயும் இருப்பார்கள். அக்காலத்திலாவது அவர்களுக்கு மனிதர்களனைவரும் கடவுள் முன்னிலையில் ஸம அந்தஸ்துடையவர்கள். அவருக்கு ஒருவன் உயர்ந்தவன், மற்றொருவன் தாழ்ந்தவன் என்ற பேதமே கிடையாது. அவர் பக்ஷபாதமற்றவர் என்ற தத்வம் மின்னற்கொடிபோல் உதயமாகி மறைகின்றது. த்ரவ்யம் ஸம்பாதிப்பதும், அதைக்கொண்டு ஆசைதீர உண்டு உடுத்துக் களிப்பதுமே ப்ரதான நோக்கமாயும் முயற்சியாயுமிருக்கும். இக்காலத்தில் இந்த உத்ஸவத்தைப் போன்ற ஸந்தோஷகரமான விசேஷ காலங்கள் அநுஸரிக்கப்பட்டு வருவது மனுஷ்ய கோஷ்டிக்கே ஒரு பேருபகாரமாயிருக்கும்.

அன்றைபதினம் வஸந்தோத்ஸவத்தின் பூர்த்தி. இராகவலைகளை யெல்லாம் தூரத்திவிட்டு அன்பே தாண்டவம் புரியும் மலர்ந்த முகவிலாஸத்துடன் நவகுமாரர் அரண்மனையினின்றும் பவனி புறப்பட்டார். வயோதிகத்தாலும், அதிக கவலையாலும் இளைத்திருக்கும் கோகுலதாஸும் மற்றவர்களைப்போல் ஸந்தோஷமுற்றவராய் நவகுமாரருடன் வந்தார்

உத்ஸவத்தின் வைபவங்களைக்காண நாலாபக்கத்து ஊர்களிலிருந்தும் திரளான ஜனங்கள் வீரநகரத்தில் வந்து குவிந்திருந்தனர். நவகுமாரரும் அவரது அமைச்சரும் ராஜவீதிகள், கடைவீதிகள் மூலமாய்ச் செல்லும்போது தெருக்களின் இருமருங்கிலுமுள்ள ஜனங்கள், நவகுமாரருடைய நாமதேயத்தைக் கூறி ஆசீர்வதித்தனர். ஸ்த்ரீகள் க்ருஷ்ணனைப்பற்றிய பாடல்களை உபயார்த்தப்படும்படியாய்ப் பாடினார்கள். தங்களுடைய தாய்தந்தையர்களை இவ்வாறு உத்ஸாஹமாய்க் குதூஹலிப்பதைகண்ட குழந்தைகள் பின்னும் அதிகமாய்க் குதித்து ஆரவாரித்துக்கொண்டு நவகுமாரர்மீது வேண்டுமட்டும் செந்தூள் தெளித்தனர்.

கடைத்தெருவைத்தாண்டிக் கேள்விக்கிடமான ஒரு சிறிய சந்தில் நுழைந்தபோது, அவ்விடத்தில் ஸ்த்ரீகள் பலர் அழகான உடைகளைத் தரித்து ஒரே கூச்சலாய் பாட்டுப்பாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் தெருவின் குறுக்கே இடைவெளியின்றி வரிசையாய் நின்று கொண்டு நவகுமாரரை வரவேற்றனர்.

நவகுமாரர் துரிதமாய்ச் சென்றார். அவரிடம் யாவரும் மரியாதையாகவே இருந்தனர். பின்னால் கோகுலதாஸ் வந்தார். அவருடைய முகத்தைக் கண்டவுடன் யாவரும் அவர்பேரில் இடைவிடாது செந்நீர் வீசினர். கிழவர்பாடு ப்ரமித்துப் போய்விட்டது; அவர் திக்குமுக்கலிட்டார். திரும்பி, வந்தவழியே போய்விடலாமென்று பார்த்தார். அவ்வாறு எத்தனிக்கையில் கால்வழுக்கிக் கீழே விழுந்தார். எல்லோரும் கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்தனர். ஒருவருக்காவது அவர்மீது பரிதாபமில்லை. கீழே விழுந்தவர் எழுந்திருக்க முடியாமல் தள்ளாடினார். மறுபடியும் ஒரு முறை செம்மாரி பொழிந்தது எல்லோரும் கிழவர்படும் அவஸ்தையைக் கண்டு பின்னுமதிகமாய் கைகொட்டிச் சிரித்தனர். உடனே கோகுலதாஸ் வேலையாட்கள் வந்து, அவரை மெள்ளத் தூக்கிக்கொண்டு போயினர். எல்லோரும் வயிறு வெடிக்கச் சிரித்தனர். அப்போது அந்த ஸ்த்ரீகள் க்ருஷ்ணனைப்பற்றிய பாட்டொன்றைப் பாடிக்கொ

ண்டு மனம்போனபடியெல்லாம் கூச்சலிட்டுக் கொண்டு சென்றனர்.

இவ்வளவு கோலங்களுமானபிறகு அச்சந்தை விட்டு நவகுமாரரும் அவருடைய பரிவாரமும் சற்று நாகரிகமான ஒரு கடைத்தெருவுக்குச் சென்றனர். அவ்விடத்தில் வடமேற்கு ப்ரதேசத்திலிருந்து வந்த வர்த்தகர்கள் வ்யாபாரஞ் செய்துவந்தனர். அந்தக் கடைத்தெருவுக்குக் கொத்தபஜார் என்றுபெயர். இக்காலத்தில் போலவே மொகலாய சக்ரவர்த்திகள் அரசுபுரிந்த நாட்களிலும் வடஇந்தியா ராஜபுதனம் இந்த மாகாணவாஸிகள்தான் இந்தியாவில் மிகவும் ப்ரபலமான ஸௌகார்கள். அவர்களுடைய வ்யாபார ஸ்தலங்கள் இந்தியா முழுவதும் வ்யாபித்திருந்தன. இந்தியாவின் எந்தப்பாகத்திலும் அவர்களுடைய கடைகளைப் பார்க்கலாம். அவர்களுடைய ஹுண்டிகள் எவ்விடத்தும் செல்லும். கஷ்டகாலங்களில் இந்திய மிராசுதாரர்கள், ஜமீன்தாரர்கள், மஹாராஜாக்கள் பலர் அவர்களிடமிருந்து ஏராளமானபணம் கடன்வாங்கித் தங்கள் கஷ்டத்தை நிவர்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மார்வாரி வர்த்தகர்கள் அநேகர் வீரநகரத்தில்வந்து கொடுக்கல்வாங்கல் செய்துவந்தனர். ராஜாதோடர்மால் ராஜாமான்ஸிங் இவர்கள் வங்காளத்துக்கு அதிபதிகளாய் வந்தபோது இவர்களுடன் இன்னும் அநேக மார்வாரிகள் வங்காளம் வந்து நாலுவிடங்களிலும் பணம் லேவாதேவி செய்யத் தொடங்கினர்.

நவகுமாரர் கொத்தபஜாருக்கு விஜயம் செய்தபோது இந்த வ்யாபாரிகள் அவரை மரியாதையாய் உபசரித்து வரவேற்றுச் செந்தூள் நிறைந்த ஒரு வெள்ளித்தட்டை அவருக்குக் கொடுத்தனர். நமது நாட்டு ஸம்ப்ரதாயப்படி நவகுமாரர் தாம் அவ்வெகுமதியைஅங்கீகரித்ததற்கடையாளமாக அத்தட்டைக் கைகளால் தொட்டு அதில் ஒரு தங்கநாணயத்தை வைத்தனர் தமது த்ரவ்யத்தைக்கொண்டு வீரநகரத்தைப்போல் பத்து வீரநகரத்தை ஒருங்கே வாங்கக்கூடியவளவு த்ரவ்யவந்தர்களாகிய அந்த லக்ஷாதிகாரிகள் நவகுமாரர் அளித்த பரிசை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டார்கள்.

ஆனால் இந்த வ்யாபாரிகள் குமாரர்களோ தங்கள் தந்தைகளைப்போல் மனிதர்களுடைய பெருமைசிறுமைகளைக் கவனிப்பவர்கள் அல்லர். அவர்கள் சிறுவயதுடைய விளையாட்டுப்பிள்ளைகள். அவர்களுக்கு அரசனாயிருந்தாலென்ன, பிச்சைக்காரனாயிருந்தாலென்ன? தங்களுடைய விளையாட்டுக்கு எல்லோரும் அவர்களுக்கு ஒன்றுதான். நவகுமாரரும் அவருடைய பரிவாரங்களும் வீதியே சென்றபோது அச்சிறுவர்கள் செந்தூள் நிறைந்த சிறுசிறு காகிதப் பந்துகளை அவர்மீது எறிந்தனர். ஸௌகார்கள் அதட்டிப் பார்த்தார்கள். ஒன்றும் பலனில்லை. அவர்கள் எறிந்தவண்ணமே இருந்தனர். நவகுமாரருடைய தலைப்பாகையின்மீதும் இரண்டொரு பந்துகள் விழுந்தன. அவர் புன்னகை செய்துகொண்டே முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

சிறிது தூரம் சென்றவுடன் கங்கையில் ஸ்நானஞ் செய்துவரும் ஸௌகார்களின் மனைவிகள் எதிர்ப்பட்டனர். அவர்கள் அதிக நாணமுடைய உயர்குல மாதர்கள் அவர்கள் அதிகமாய் வீட்டைவிட்டு வெளியே வரமாட்டார்கள். ஆனால் உத்ஸவகாலமாதலால் அவர்கள் இப்போது வெளியே சென்று கங்காநதியில் ஸ்நானஞ்செய்து வந்து கொண்டிருந்தனர். அருகில் வந்தவுடன் அவர்கள் தம் ஸ்வபாஷையில் க்ருஷ்ணனைப்பற்றிய பாடலொன்றை இனிய குரலில் பாடி நவகுமாரரை வரவேற்றனர்.

கடைசி ஸந்தையை அவர்கள் ப்ரலாபத்வனியாய்ப் பாடுவதைக்கண்டு நவகுமாரர் அதை நின்று நிதானித்துக் கேட்டார். ஆனால் இவ்வித கோழை மனதொன்றும் இராதவராகிய கோகுலதாஸ் இவற்றையெல்லாம் நம்பாதவண்ணமாய் ஒருபுன்னகைசெய்து, "வாரும், போவோம். இதைக்கேட்டு ஏன் மயங்குகிறீர்? நாளைக்கு நரேந்த்ரன் வரும்போதும் இவர்கள் இதே பாடத்தைத்தான் அவனிடமும் படிக்கப்போகிறார்கள்" என்று மெள்ளமாய்ச் சொன்னார்.

"கோகுலதாஸ், உமக்குச் சற்றேனும் ஈரமனது என்பதே கிடையாது. நமது நன்மையைக் கோருபவர்களைப்பற்றி நாம் இவ்வாறு கடுமையாய்ப் பேசலாமா? நீர் கிஞ்சித்தும் ஈவு இரக்கமற்றவர். உம்மைப்போல் நான் கல்மனதுடையவனல்ல. நல்லகுணசீலர்களான இந்த ஸ்த்ரீகளுடைய அன்பான வார்த்தைகளும், ஆசீர்வசனங்களும், நிலையற்றனவாயினும், அவைகள் எனக்கு அதிக த்ருப்தி கொடுக்கின்றன."

"எஜமானரே, வெளித்தோற்றத்தையே கண்டு நாம் மகிழ்ச்சியடைந்து விடலாமோ? வெளுப்பாயிருப்பதெல்லாம் பாலாய்விடுமா? வீரநகரத்தில் இத்தகைய உத்ஸவதினங்களில் நரேந்த்ரனுடைய பாட்டனார் நகர்வலம் வந்ததைப்பார்த்து களித்தபேர்கள் சிலர் இன்னும் இருக்கிறார்கள். இப்போது அவர்கள் மனது எவ்வாறு இருக்கும்? அவர்களிற் சிலரை வழியில் ஸந்தித்தாலும் ஸந்திக்கலாம். செல்வோம்?"

முன் காலத்தில் பருத்தி வஸ்த்ரம், பட்டுவஸ்த்ரம், இவைகள் வங்காளத்தில் அபரிமிதமாய் நெய்யப்பட்டுவந்தன. வங்காளிகளுடைய முக்ய கைத்தொழில் அக்காலத்தில் நெசவுதான். இந்த மஸ்லின் வஸ்த்ரங்கள், பட்டுவஸ்த்ரங்கள், இவைகளை வாங்கிக்கொண்டு போக ஐரோப்ப வ்யாபாரிகள் அடிக்கடி வருவார்கள். அவர்கள் வங்காளத்தில் வ்யாபாரஸ்தலங்களை கட்டிக்கொண்டிருந்தனர். மஹாப்ரஸித்திபெற்ற அல்புகர்க் என்னும் கவர்னர் காலத்தில் போர்த்துகேஸியர்கள் கீழ்க்கடல்களில் ஏகாதிபத்யஞ் செலுத்திக்கொண்டிருந்தனர். தென் ஆப்ரிகா தொடங்கி சைனாவரைக்குமுள்ள துறைமுகங்கள் எல்லாவற்றிலும் அவர்களுடைய வ்யாபாரஸ்தலங்கள் அமைந்திருந்தன. போர்த்துகேஸியர்கள் பலர் வங்காள ஸ்த்ரீகளை மணந்து வங்காளத்திலேயே நிலை பெற்று விட்டனர்.



இப்போது இந்தியாவிலிருக்கும் யூரேஷ்யர்களில் பெரும்பான்மையோர் அவர்களுடைய ஸந்ததியார்தான். வ்யாபார விஷயங்களிலும் கப்பற்ப்ரயாணங்களிலும் அதிக ஊக்கமும் விடாமுயற்சியுமுடைய டச்சுக்காரர்கள் இந்தியாவுக்குக் கப்பல்கள் அனுப்பிக்கொண்டிருந்தனர். எலிஸபெத் மஹாராணியார் காலத்தில் ப்ரிடிஷ்காரர்களும் அதிக ஊதியங்கிடைக்கும் இந்திய வ்யாபாரத்தைத் தொடங்கினர். வங்காளத்தில் லக்ஷக்கணக்கான ஸ்த்ரீகளும் புருஷர்களும் நெசவுத்தொழில் செய்து ஜீவித்தனர். வங்காளத்துத் தறிகளிலிருந்து ஏராளமான சரக்குகள் வடஇந்தியாவுக்கும் ஐரோப்பாவிற்கும் சென்று கொண்டிருந்தன.

வீரநகரமிருந்த மால்டா ஜில்லாவில்தான் அதிக நாகரிகமான பட்டுவஸ்த்ரங்கள் நெய்யப்பட்டுவந்தன. அவ்வளவு உயர்ந்த பட்டுவஸ்த்ரங்கள் வங்காளமெங்கும் சுற்றித்திரிந்தாலும் அகப்படாது, க்ராமாந்த்ரங்களிலுள்ள சேணியர்கள் பட்டுப்பூச்சிகளை வளர்த்து, அவைகளினின்று பட்டையெடுத்துத் தங்களுடைய எளிய குடிசைகளில் அவைகளை வஸ்த்ரமாக நெய்து வீரநகரத்தில் சேலிப்பேட்டை அதாவது பட்டுப்பேட்டை என்று சொல்லப்படும் தெருக்களுக்குக் கொண்டுவந்து வ்யாபாரிகளுக்கு விற்றனர். இரண்டுமாடி மூன்று மாடிகளுள்ள நெருக்கமான அந்தச்செலிப்பேட்டைக்கு வந்தபோது பட்டுவ்யாபாரிகள் நவகுமாரருக்கு வந்தனஞ்செய்து உபசரித்து அவருடைய தலைப்பாகையின்மீது செந்தூள் தெளித்தனர், நல்ல வாஸனையுள்ள பன்னீர் நிறைந்த பன்னீர்ச்செம்பு ஒன்றையும் வெற்றிலைப்பாக்கையும் ஒரு வெள்ளித்தட்டில் வைத்து நவகுமாரரிடம் கொடுக்க அவர் பன்னீரைத்தொட்டு வெற்றிலைப்பாக்கைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு பொன் நாணயத்தை அத்தட்டில் நழுவவிட்டுச் சென்றனர்.

வீரநகரத்திலிருந்த பித்தளை பாத்ர வ்யாபாரிகள், கருமார், தச்சர், தட்டார், நகைவ்யாபாரிகள், முதலிய வர்த்தக ஸபையார் ஒவ்வொருவரும் நவகுமாரரை ஏற்றவாறு வரவழைத்து உபசரித்தனர். வீரநகரத்திலிருந்த முஹம்மதிய வர்த்தகர்கள்கூடத் தங்கள் மஸூதி வாயிலில் நின்று நவகுமாரரை உபசரித்து இந்த ஹிந்து பண்டிகை தினத்தன்று அவருக்கு ஒரு பட்டுவஸ்த்ரமும் வெள்ளித்தட்டும் கொடுத்தனர். நவகுமாரர் அவைகளை த்ருப்தியுடன் பெற்றுக்கொண்டு ப்ரதான முல்லாவினிடம் ஒரு தங்க நாணயம் கொடுத்தார். இந்தியாவில் எல்லா நகரங்களிலும் ஹிந்துக்களும் முஹம்மதியர்களும் ஸஹோதரர்களைப்போல் நேசமாய் வாழ்ந்திருந்தனர். மஹா பெரிய அக்பர் சக்ரவர்த்தியவர்கள், அவர்களை ஒன்று சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் பல செய்தனர். ராஜாமான்ஸிங் வீரநகரத்து முஹம்மதியர்களுக்கு மஸூதி கட்டுவதற்காக த்ரவ்ய ஸஹாயஞ் செய்தனர்.

நவகுமாரரும் அவருடன் வந்தவர்களும் வீடுசெல்வதற்குள் நல்ல வெயிலாய்விட்டது. ஜமீன்தாரி வீட்டு ஸிம்ஹவாயிலுக்கு அருகாமையில் உடம்பெல்லாம் செந்தூள் மயமாயிருந்த இரண்டு சிறுவர்கள் ஒரு மரத்தடியில் கம்ஸனுடைய கொடுங்கோன்மையையும், அவனை ஸம்ஹாரஞ்செய்வதற்காக க்ருஷ்ணன் அவதரித்ததையும் பாட்டாகப்பாடிக் குதித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய ஆட்டபாட்டங்களைக் கேட்டு நவகுமாரருக்கு ஏதோ சில எண்ணங்களுண்டாயின. காலைமுதற்கொண்டு பட்டணத்தைச் சுற்றியதால் உண்டான இளைப்பைக்கூடக் கவனியாமல் அவர் அங்கேயே நின்று அவர்களுடைய பாட்டை முழுதும் கேட்கலானார்.

அரண்மனையில் உச்சிவேளை மணி அடித்தது. சுற்றுப்பக்க க்ராமங்களிலிருந்து வீரநகரத்துக்கு ஜனங்கள் திரள்திரளாய் வந்துகொண்டிருந்தனர். நவகுமாரர் சற்றுநேரம் என்னமோ யோசித்த வண்ணமாய் நின்றார். கடைசியில் கோகுலதாஸைப் பார்த்து, "கோகுலதாஸ், இந்தப்பாட்டின் கருத்தென்ன?" என்று, கேட்டார்.

"கருத்தென்ன, தெரிந்ததுதானே. வீரநகரத்துப் பழைய ஊழியர்கள் இன்னும் தங்களுடைய பூர்வ ஞாபகங்களை மறந்துவிடவில்லை. இதைப்பற்றித் தாங்கள் க்லேசப்படவேண்டிய அவசியமில்லை. பத்து வருஷமாக அவர்களும் என்னென்ன ப்ரயத்னங்கள் எல்லாமோ செய்து வருகிறார்கள். நம்மை யொழிக்கப் பல ஏற்பாடுகள் செய்தனர். ஆனால் கோகுலதாஸ் அவர்களை அதிகக் கவனமாய்ப் பார்த்து வருகிறார். எப்போதும் அவர்கள்மீது ஒரு கண் வைத்திருக்கிறார். அவர்களுடைய விஷயம் யாவும் அவருக்கு நன்றாய்த் தெரியும். அவரிருக்குமட்டும் தாங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை."

"இருந்தாலும் இந்தப் பையன்கள் யார்? என் அரண்மனைக்கு ஸமீபத்திலேயே என்னை இவ்வாறு தூஷிக்க இவர்களை ஏவினவர்கள் யார்? அவ்விஷயம் எனக்குத் தெரியவேண்டும். எனக்குக் கவலையாயிருக்கிறது. அவர்களை நீர் சீக்ரம் கண்டுபிடிக்க வேண்டும்."

நாலாபக்கங்களிலிருந்தும் கூட்டங் கூட்டமாய் வந்து கொண்டிருக்கும் ஜனங்களுடன் அச்சிறுவர்கள் கலந்து விட்டார்கள். அவர்களைப்பற்றி ஒரு ஸங்கதியும் தெரியவில்லை. நவகுமாரர் யோசனையில் ஆழ்ந்தார். அவர் முகம் வேறுபாடடைந்தது. அன்றிரவு நடந்த பாணவேடிக்கை முதலிய உத்ஸாஹங்களுக்கு அவர் விஜயம் செய்யவில்லை.

## அத்யாயம்-6

### த்ருவ நக்ஷத்ரம்

கோடைகாலம் கழிந்துவிட்டது. ஆடி, ஆவணி மாஸங்களில் பெய்த மழையால் ஆறுகளில் ப்ரவாஹம் வரத் தொடங்கியது. ஏரிகளும் குளங்களும் பூர்த்தியாய்விட்டன வங்காளத்து நஞ்செய் நிலங்களுக்கெல்லாம் போதுமான எருவும் நீரும் வந்து விட்டன.

ஹேமலதைக்கு வயது பதின் மூன்றாயிற்று.

யௌவன பர்வத்திற்குரிய சின்னங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அவள் முகத்தில் தோன்றின. ஏனெனில் உஷ்ணப்ரதேசங்களில் பால்யத்திலேயே பக்வகாலம் வந்துவிடுகிறது. ஹேமலதைக்கு விவாஹம் நடத்தவேண்டிய யுக்த காலம் வந்துவிட்டது. நமது ஆசாரப்படி இந்த வயதுக்குமேல் பெண்களுக்குக் கல்யாணம் செய்யாமல் நிறுத்திவைப்பதில்லை. ஆனால் நவகுமாரரோ தேவிபுரத்தைத் திரும்பப் பெறுமுன் தம் செல்வப்புதல்வியின் விவாஹத்தைப்பற்றி யோசிப்பதில்லை என்று தீர்மானித்திருந்தார். ஆகையால் அவருடைய இஷ்டத்துக்கு விரோதமாகச் செல்ல எவரும் முன்வரவில்லை.

கல்யாணமாகாவிட்டாலும் ஹேமலதை இரண்டொரு வருஷங்களுக்குமுன் மணலில் கவலையற்று விளையாடிக்கொண்டிருந்த பெண்ணாயில்லை. நமது குடும்ப ஸம்ப்ரதாயப்படி பெண்கள் யௌவனபர்வத்தின் ஆரம்பம் முதற்கொண்டே அடிக்கடி வெளியே வாராமலும் அநேகமாய் வீட்டிற்குள்ளேயே யிருந்து வீட்டு வேலைகளைப் பார்த்துக்கொண்டும் அன்னியர்களுடன் அதிகமாய் வார்த்தையாடாமலும் இருக்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்குக் குடும்ப விஷயங்களிலும், வீட்டு வேலைகளிலும் பால்யத்திலேயே ஒருவித பயிற்சி ஏற்படுகிறது. அச்சம், நாணம், பயிர்ப்பு முதலிய குணங்களும் படிவதற்கு ஸந்தர்ப்பமுண்டாகிறது. ஹேமலதை, வரவர அழகிலும், ஸௌந்தர்யத்திலும், நாணம் முதலிய ஸ்த்ரீகளுக்குரிய நற்குணங்களிலும் சிறந்து விளங்கலானாள். முன்போல அடிக்கடி அரண்மனையைவிட்டு வருவதில்லை. அவள் தன் தாயாருடன் ப்ரதிதினமும் கங்காநதியில் ஸ்நானஞ் செய்துவிட்டுக் கோயிலுக்குச் சென்று ஸ்வாமியைத் தர்சித்து வருவாள் இதரவேளைகளில் வீட்டைவிட்டு வெளியே வருவதில்லை.

அரண்மனையிலிருந்தாலும் விரீஷ் அந்தப்புரம் பக்கம் அதிகமாய்ச் செல்வதில்லை. அத்தி பூத்ததுபோல் ஆடிக்கொருதரம் அமாவாஸைக் கொருதரம்தான் அவன் அவ்விடம் போவான். அக்காலங்களில்தான் ஹேமலதையும் அவனும் ஸந்திப்பார்கள். ஹேமலதையினிடம் தான் வைத்திருக்கும் பழையநாள் அன்பின் பெருக்கத்தால் விரீஷ் அவள் பக்கத்தில் உட்கார்ந்து யோகக்ஷேமங்களை விசாரித்து விளையாட்டு நாள் கதைகளையெல்லாம் அவளுடன் பேசிக்கொண்டிருப்பான். அவனுடைய பொறுமை, சாந்தம், அமைதி, அன்பு முதலிய திவ்யகுணங்களைப்பற்றி ஹேமலதை அடிக்கடிக் கேள்விப்பட்டிருக்கிறாள். அவனுடைய ஆண்மையையும் அடக்கத்தையும்கண்டு அவள் மெச்சினாள். வரவர அவளுக்கு அவனிடத்தில் ஒரு மதிப்பும் மரியாதையு முண்டாயிற்று. அவன் சொல்லாவிட்டாலும் அவனுடைய உயர் குலத்தைப் பற்றி ஹேமலதை இதரர்களிடமிருந்து அறிந்திருந்தாள். அவன் தன்னுடைய ஜாதி, குலம், பிறப்பு, குணம் முதலியவற்றிற்குத்தகுந்த உன்னத ஸ்திதிக்கு வரவேண்டுமென்று அவள் மனப்பூர்த்தியாய் விரும்பலானாள். நரேந்த்ரனோ விரீஷைப் போலன்றி அடிக்கடி ஹேமலதையைப் பார்க்க வருவான். அவன் வரும்போது ஹேமலதையின் உணர்ச்சிகள் ஸஹஜமாயிருப்பதில்லை. அவனைக் கண்டவுடன் அவளுக்கு ஒருவித நூதன உணர்ச்சி உண்டாய்விடும். முன்பின் ஸம்பந்தமிராத அவனுடைய மொழிகளைக் கேட்கும்போதெல்லாம் அவளுடைய முகம் சிறிது சிவக்கும். பால்யத்தில் பலமுறை ஆற்றுமணலில் அவனுடன் கூடி விளையாடிய ஹேமலதை இப்போது அவனெதிரில் நிற்பதற்குச் சற்று லஜ்ஜைப்பட்டாள். சிலவேளைகளில் அவள் தன் முகத்தைக்கூடப் பாதிமூடிக்கொள்வாள். ஆயினும் அவனுடன் வார்த்தையாடுவதில் அவள் அதிக ப்ரியமுடையவளாயிருந்தாள். நரேந்த்ரனுடைய பாரியோசனைகளும், மனோராஜ்யங்களும், அவளுக்குப் பொருள்படுவதில்லை. ஆயினும் அவள் அவற்றையெல்லாம் மிகுந்த ஆவலுடன் செவிசாய்த்துக் கேட்டுக்கொண்டிருப்பாள்.

விஜயலக்ஷ்மி தாண்டவமாடும் அவனுடைய விழிகளையும் ப்ரஸன்ன முகத்தையும் கண்டு ஹேமலதை, தனக்கே தெரியாதவண்ணமாய் அவனிடமொரு ஆர்வமும் ஆசையும் கொள்ளலானாள்.

நரேந்த்ரனுடைய பால்ய ஆசாபாசங்களின் அபிவ்ருத்தியையும் போக்கையும் ஹேமலதையின் தாயார் நன்கு உணர்ந்தாள். நாளுக்கு நாள் தீவிரமாய் வளர்ந்து வரும் அவனுடைய காதலையும் அவள் கவனித்துவந்தாள். ஆனால் இவ்விஷயத்தைத் தன் கணவனிடம் ப்ரஸ்தாபித்தது முதற்கொண்டு இதுவரைக்கும் அதைப்பற்றி மறுபடியும் ஒரு ஸம்பாஷணையும் ஏற்படவில்லை. நவகுமாரர் அவள் சொன்னதற்கெல்லாம் 'ஸரி யோசிப்போம்' என்று கூறிவந்தாரேயொழிய அதைப்பற்றித் தான் நேர்விரோதமாய் அபிப்ராயப்படுவதை அவளுக்குச்சொல்லவில்லை; விவாஹ விஷயமாய் அவள் பேசத்தொடங்கிய போதெல்லாம் "தேவிபுரம் கிடைத்த பின்னர்தான் எதுவும்" என்று சொல்லிவிட்டு இதர விஷயங்களைப்பற்றிப்பேச ஆரம்பித்துவிடுவார். ஆயினும் அவள் ஸ்த்ரீஜாதியல்லவா? அவளிடமிருந்து எத்தனை நாள்தான் தம் அபிப்ராயத்தை நவகுமாரர் ரஹஸ்யமாய் வைத்துக்கொண்டிருக்க முடியும்’ அவர் அடிக்கடி விவாஹத்தைப்பற்றி அலக்ஷ்யமாய்ப் பேசுவதினாலேயே அவள் மனதில் ஸந்தேஹம் ஜனித்தது. மேலும் இரண்டொரு தடவைகளில் ஞாபக மறதியாய் அவர் பேசிய சில வார்த்தைகளால் அவளுடைய ஸம்சயம் ஸ்திரப்படலாயிற்று. இஷ்டமின்மையினாலோ, தைர்யமின்மையினாலோ அவர் தன்னிடம் சொல்லாத சில வித்யாஸ யோசனைகள் அவர் செய்திருப்பதாக அவள் புத்திக்குப்பட்டது.

ஸ்த்ரீகளுக்கு மாத்ரம் எவ்விஷயத்தைப் பற்றியாவது ஸந்தேஹம் பிறந்துவிட்டால் அவ்விஷயத்தைப் பற்றி யதார்த்தத்தை அவர்கள் எப்படியாவது க்ரஹித்துவிடுவார்கள். உண்மை உதயமாகுமட்டும் அவர்களுக்குத் தூக்கம் பிடிக்காது. மனிதர்களுக்குப்



புலப்படாத பல குறிகள் அவர்களுக்குக் கரதலாமலகம்போல் புலப்படுகின்றன; அவன் காதில் விழாத பல வார்த்தைகள் அவர்கள் செவியில் விழுகின்றன. அவனுடைய மந்த புத்திக்கு எளிதில் அர்த்தமாகாத பலவிஷயங்கள் அவர்களுடைய குசாக்ர புத்திக்கு அதிக ஸுலபமாய்ப் பொருள்படுகின்றன. இவ்வாறு பல மார்க்கங்களால் அவர்கள் உண்மையைச் சீக்ரத்தில் அறிந்துகொள்கிறார்கள். தன் தோழிகளாலும் தன் கணவன் அப்போதப்போது சொல்லிவந்த சில வார்த்தைகளாலும் நவகுமாரருடைய மனைவி தன் புருஷரது கருத்தை உணர்ந்தாள். இவ்வாறு தனக்குத் தெரியாமல் தன் கணவன் தன் இஷ்டத்துக்கு மாறாக அபிப்ராயப்பட்டு அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்துவருவதைக் கண்டு அடங்காக்கோபம் கொண்டாளெனினும், அம் மாது காலதேச வர்த்தமானங்களை உத்தேசித்து அப்போது தன் கோபத்தை வெளிக்காட்டிக்கொள்வது அநுசிதமென்று தெளிந்து பொறுமையுடன் காத்திருந்தாள். எவ்வளவோ ப்ரபலமான பரம்பரையிலுதித்து செல்வத்திலும் ஐச்வர்யத்திலும் புரண்டு வளர்ந்துவரும் தன் ஏகபுத்ரி, திக்கற்று நாதனற்று பராதீனனாயிருக்கும் ஒரு ஏழைச் சிறுவனுக்கு மாலையிடுவதென்பது அவளுக்குக் கர்ணகடோரமாயிருந்தது. மேலும் தன் செல்வப்புதல்வியின் விவாஹ விஷயத்தைப்பற்றி அச்சதியோசனைக்காரனாகிய கோகுலதாஸ் தனக்கும் தன் கணவனுக்கும் யோசனைகூறுவதானது அவளுக்கு எரிகிற கட்டையை ஏறத்தள்ளினது போலிருந்தது. ஆனால் கோகுலதாஸ் அவளுக்குப் புதிய மனிதனல்லன். அவனைப்பற்றி அவளுக்கு வெகு நாளாய்த் தெரியும். இரண்டு ஜமீன்களுடைய ராஜ்யபாரத்தையும் அரசனிருக்க துராக்ருதமாய் உண்மையில் அவற்றைத் தன் வசமாக்கிக்கொண்டதுமல்லாமல் அத்துராத்மா இப்போது தன் குடும்பவிஷயத்திலும் சில்விஷம் செய்ய ப்ரயத்னப்படுவதைக் கண்டு அவளால் ஸஹிக்கக் கூடவில்லை. இனி சும்மாவிருப்பது தகுதியன்றென அறிந்து நவகுமாரருடைய மனைவி கோகுலதாஸின் ஏற்பாடுகளையெல்லாம் தோற்கடிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டாள்.

நவகுமாரர் இருதலைக்கொள்ளி எறும்பு போலானார். கோகுலதாஸுக்கு அவர் பதில் சொல்வதா, அல்லது அவர் தம் மனைவிக்குப் பதில் சொல்வதா? அவருக்கு ஒன்றுந் தோற்றவில்லை, கல்யாணவிஷயமாக அவளுடன் பலமுறை பேச முயன்றார். ஆனால் அவள் இடங்கொடுக்கவில்லை. வரவர ஒருவருடனொருவர் முகங்கொடுத்துப்பேசுவதே துர்லபமாய்விட்டது. தாம் இதுவரைக்கும் அதிக ரஹஸ்யமாய் அடக்கிவைத்திருந்த விஷயங்கள் யாவும் தம் மனைவிக்குத் தெரிந்துவிட்டதென்று நவகுமாரர் உணர்ந்தார்.

தம்பதிகளுக்குள் வரவர மனஸ்தாபம் முற்றிற்று. ஒருவரையொருவர் நேரில் கண்ணெடுத்துப் பார்த்துப் பேசுவதே நின்றுவிட்டது. எப்போதும் கோபவார்த்தைகளே யொழிய ஸஹஜமென்பதே அடியோடு போய்விட்டது. இந்த யுத்தத்தில் நாளாவர்த்தியில் நவகுமாரர் கக்ஷி இளைத்தது. செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்துவந்த உயர்குலச் சீமாட்டியாகிய ஹேமலதையைக் கேவலம் முன்பின் குலம் கோத்ரமறியாத ஒரு சிறுவனுக்கு மணமுடிப்பதால் உண்டாகக்கூடிய மானக்கேடும் அவமரியாதையும் பன்னிப் பன்னிப் பலமுறை நவகுமாரருக்கு எடுத்துக் கூறப்பட்டது. வரவர நவகுமாரர் மனம் கலையத் தொடங்கிற்று. தன் மனைவி சொல்வது மனதிற் கிசைந்ததென்றும், தாழ்குலத்தில் பிறந்தவனாகிய கோகுலதாஸ் தன் வம்சத்தைச்சேற்றிலாழ்த்த முயல்கிறானென்றும் நவகுமாரர் நினைக்கத்தலைப்பட்டார், அவர் ஒன்றையும் வாய்திறந்து சொல்லவில்லை. தன் மனைவியின் நிகரற்ற புத்திமதியை அனுஸரித்து அச்சிறந்த ராஜதந்த்ரத்தின்படி தேவிபுர வீர நகரங்களை ஒன்றுசேர்த்தலால், இதுவரைக்கும் எத்தனையோ ஆபத்துக்கள் அபஜயங்கள், யுத்தங்கள், முதலியவற்றிற்குட்பட்டு இடர்ப்பட்ட தன் வாழ்நாட்களை அந்த்யகாலத்திலாவது யாதொரு கவலையுமின்றி ஸமாதானமாய்க் கழிக்கக்கூடும் என்னும் எண்ணம் அவர்மனதில் திரும்பத்திரும்ப வந்து தோன்றியது. அவர் இரவெல்லாம் நித்ரையின்றி இந்த விஷயமாய்ச் சிந்தாக்ராந்தராயினார்.

ஸம்ஸார வ்யவஹாரங்களில் இது செய்வதா அது செய்வதா என்று தயங்குகிறவன் ஆண்மையற்றவன், மயங்குவதினால் அவன் வெகுசீக்ரத்தில் பிறரிஷ்டப்படி நடக்கவேண்டிவருவது ஸர்வஸாதாரணம். நவகுமாரருக்குஒருவழியும் தோன்றவில்லை. அவர் சஞ்சலப்படுவதையறிந்தும் அவருடைய மனைவி அறியாதவள் போலிருந்தாள். இனி ஜயம் தன்பக்ஷம்தான் என்று அவள் எண்ணினாள். ஆனால் வெளிக்கு ஒன்றும் காண்பித்துக் கொள்ளவில்லை. அவசிய மேற்படும்பக்ஷத்தில் கோகுலதாஸைப் புழுப்போல் நசுக்கியாவது தன் மனோவ்ரதத்தைப் பூர்த்திசெய்வதே ஸரியென்று அவள் மனதில் சபதஞ் செய்துகொண்டாள். ஒரு நாள் ஸாயந்த்ரம் அதிகநேரம் வாதாடிய பின் அவள் தன் கணவனைப்பார்த்து, "நாதா! புருஷருக்கேற்றபடி தாங்கள் தங்கள் ஜமீன் வ்யவஹாரங்களை நடத்திவாரும். ஸ்த்ரீகள் தொழிலாகிய குடும்ப விஷயங்களை நான் கவனித்துக் கொள்கிறேன். அதைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம்" என்று கூறினாள்.

நவகுமாரர் ஒன்றும் பதில் சொல்லாமல் சிந்தையிலாழ்ந்தவராய்ச்சென்றுவிட்டார். அவர்மனைவி தான் வெற்றிபெற்றதாகக் கருதினாள். கோகுலதாஸ் செய்துள்ளவும் செய்ய உத்தேசித் திருப்பவுமான ஏற்பாடுகள் ஒன்றும் அவளுக்குத் தெளிவாய்ப் புலப்படவில்லை. முன்னர் நரேந்த்ரன் இருப்பிடத்திற்கு விரீஷைத் தேவிபுரத்திலிருந்து அழைத்துவந்தவரும் கோகுலதாஸ்தான். இப்போது கொஞ்சகாலமாகச் சைவலினியை ஹேமலதையுடன் இருக்கும்படிச் செய்ததும் கோகுலதாஸ்தான். பால்யத்திலேயே கண

வனை யிழந்து வைதவ்ய மடைந்தவளாகிய சைவலினி மஹா சாந்தகுணமுடையவள். நமது நாட்டிலுள்ள இதர விதவைகளைப்போலவே சைவலினியும் தன்னையும் தன் ஸுகதுக்கங்களையுங்கிஞ்சித்தும்கவனியாது தன்னைச் சுற்றியிருப்பவர்களுடைய ஸுகங்களையும் ஸௌகர்யங்களையுமே முழுதும் எண்ணி அவர்களுக்கு உதவிபுரிவதிலேயே தன்ஜீவ்யகாலமுழுவதையும் அர்ப்பணம் செய்திருந்தாள். ஸஹோதர வாஞ்சைக்கீடான வாஞ்சையும் சிறந்த தெய்வபக்தியும் பொருந்தி உலக வ்யவஹாரங்களில் அதிகமாய்த் தலையிட்டுக்கொள்ளாது த்யானத்திலேயே ஆழ்ந்திருந்தவளாகிய சைவலினியைத் தன் ஆயுதமாகக்கொண்டு தன் எதிரியின் எண்ணங்களையெல்லாம் தோற்கடித்து வந்தார் கோகுலதாஸ்.

விரீஷுக்காவது சைவலினிக்காவது முதலில் கோகுலதாஸின் நோக்கங்கள் யாதொன்றும் விளங்கவில்லை. ஆனால் அவருடன் பழகுவதினால் அவர்களுக்கு நாளாவர்த்தியில் சில புதிய அவாக்களும் ஆசைகளும் உண்டாயின. அப்போதைக்கப்போது மறவடமான வார்த்தைகளால் அவர் தன் கருத்தை அவர்களுக்குச் சிறிது சிறிதாக விளக்கிவந்தார். நவகுமாருடைய முன்னோர்களால் துராக்ருதமாய் ராஜ்யத்தினின்று துரத்தப்படாமலிருந்தால் இப்போது தேவிபுரத்து அதிபதிகளாய் அரசு செலுத்திக்கொண்டிருக்கக்கூடிய விரீஷின் வம்சத்தினருடைய புஜபலபராக்ரமங்களையும் அவர்களுடைய வீரதீரச் செயல்களையும் கோகுலதாஸ் அடிக்கடி விரீஷ் சைவலினி இவர்களுக்குக் கதையாக எடுத்துச் சொல்வார். இன்னும் சில வேளைகளில் நாட்டையிழந்து நகரத்தையிழந்து நாடோடிகளாய்ச் சிறிது காலம் திரிந்துகொண்டிருந்து கடைசியில் ராஜகுமாரிகளை மணம்புரிந்து நல்ல உன்னத ஸ்திதிக்கு வந்த அதிர்ஷ்டவான்களுடைய சரித்ரங்களையெல்லாம் அவர்களுக்கு ஆதியோடந்தமாய் எடுத்துக் கூறுவார். ஆனால் இவ்வளவுக்கும் அவர் நவகுமாரரைப் பற்றிப் பல்லத்தனை வார்த்தைகூடச் சொன்னதில்லை. ஆனால் நவகுமாரரோ வரவர பலஹீனராய்க்கொண்டிருந்தார் அவர் புரிந்த கடும்போர்களும், அனுபவித்த கஷ்டங்களும் மனோவேதனைகளும் அவருடைய தேகத்தின் வலிவைக் குன்றச் செய்தன. அவருக்கோ புத்ர ஸந்ததியில்லை. அவர் அதிக காலமிருக்கமாட்டார்போலத் தோன்றியது. கூடியசீக்ரம் அவர் ஸ்தானத்துக்கு ஒருவரை நியமித்தாகவேண்டும். தேவிபுரத்தின் மேன்மையையும் சிறப்பையும் உணர்ந்து அதன் அரசர்களுடைய ப்ரதாபங்களையும் வைரிகளையும் பூரணமாய் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அவைகளுக்கேற்றபடி அரசுபுரியக்கூடிய தேவிபுரத்துச்சீமான் ஒருவன் பகவதானுக்ரஹத்தால்கிடைத்து ராஜ்யம் சீரும் சிறப்புமடைந்து விளங்கவேண்டுமென்று கோகுலதாஸ் அடிக்கடி சொல்லிவருவது விரீஷின் மதினல் நன்றாய்ப்பதிந்து வேரூன்றிற்று.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**நமது ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்.**—இப்பிரபு இந்தியர்களிடத்தில் மிகுந்த அன்பு பூண்டவர் என்பதை இவர் செய்திருக்கும் அநேக நற்காரியங்களிலிருந்து எல்லோரும் அறிவார்கள். இவர் ஆட்சி காலம் சமீபத்தில் முடிவாகிறதென்றும், இவருக்குப் பின் லார்ட் கார்மைகேலாவது அல்லது ப்ரிடிஷ் கப்பற்படையின் முதல் பிரபுவாகவிருக்கும் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலாவது ராஜப்பிரதிநிதியாக வரக்கூடுமென்று வதந்திகள் உலாவுகின்றன. இதற்குள்ளாக, ஸமீபத்தில் டெல்லிமாநகரிற் கூடிய மீட்டிங் ஒன்றில், இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்து ராஜப்பிரதிநிதி சட்ட ஸபை மீட்டிங்குகளுக்குப் போயிருந்த கனவான்களும், டெல்லிமாநகர் வாஸிகளும், லார்ட் ஹார்டிஞ் தம் ராஜப்பிரதிநிதி ஸ்தானத்தை இந்த யுத்தகாலம் முடிவாகிறவரையில் வகித்திருக்கும்படி நமது சக்கரவர்த்திக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளவேண்டுமெனத் தீர்மானித்திருப்பது நமக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்காமலிராது.

* * *

**திருச்சி புதுக்கோட்டை இருப்புப்பாதை.**—திருச்சினப்பள்ளியிலிருந்து புதுக்கோட்டைக்குப் போட உத்தேசித்திருக்கும் இருப்புப் பாதையின் நீளம் 32 மைல்; அதற்கு ஏற்படும் செலவு 20 லட்சம் ரூபாய். கவர்ன்மெண்டு, ரெயில்வே போர்டாருக்கு சிபார்சு செய்ததின் பேரில், ஷெ யார்கள் அதை சீக்கிரத்தில் கட்டிமுடிப்பதற்கு சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். இந்த இருப்புப்பாதைக்கு வேண்டிய நிலத்தை வாங்கி ஸ்வாதீனப் படுத்துவதற்கும், இன்னும் இது ஸம்பந்தமான விஷயங்கள் யாவற்றையும் செய்வதற்கும் புதுக்கோட்டை தர்பார், தென் இந்தியா ரயில்வே கம்பெனியின் சீப் இஞ்சினியருக்கும், நிலத்தை வாங்கி ஸ்வாதீனப்படுத்தும் ஆபீஸருக்கும், அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்

* * *

**யுத்தத்தின் மொத்தச் செலவு.**—யுத்தத்தின் பொருட்டு, ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்ட் வருஷமொன்றுக்கு பன்னீராயிரம் லட்சம் பவுன் செலவிடுகிறதாகவும், ஜெர்மனி 27 ஆயிரம் லட்சம் பவுன் செலவிடுகிறதாகவும், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட எல்லாதேசங்களுமாக வருஷம் ஒன்றுக்கு 90-ஆயிரம் லட்சம் பவுன் செலவிடுகிறதாகவும், அதாவது நாள் ஒன்றுக்கு 250 லட்சம் பவுனாகிறது என்று மிஸ்டர் லட்கர் கிராமண்ட் என்பவர் தாம் செய்த ஒரு பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்.

Supplement to the "VIVEKA BODHINI."

"விவேக போதினி" அனுபந்தம்.



ஸ்ரீமான் காந்தியின் பத்தினி



ஸ்ரீமான் காந்தி


# விவேக போதினி

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ராக்ஷஸஞ் சித்திரை : 1915-ஞ் மே } பகுதி 1


## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 38. கையறு நிலை

ஐந்து பூதமொரு கான னீரென
  வடங்க வந்தபெரு வானமே
யாதி யந்தநடு வேத மின்றிபரு
  வாய்நிறைந் திலகு சோதியே
தொந்த ரூபமுட னரூப மாதிகுறி
  குணமி றந்துவளர் வஸ்துவே
துரிய மேதுரிய வுயிரி னுக்குணர்வு
  தோன்ற நின்றருள் சுபாவமே
எந்த நாளுநடு வாகி நின்றொளிரு
  மாதியே கருணை நீதியே
யெந்தை யேயென விடைந்திடைந் துருகு
  மெளிய னேன்கவலை தீரவுஞ்
சிந்தை யானதை யறிந்து நீயுனருள்
  செய்ய நாளுமினி யுய்வனோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
  சிற்சு கோதய விலாசமே.

(சிற்சுகோதயவிலாஸம்—3)

### 39. நல்லோரிணக்க ஆவல்

ஐவ ரென்றபுல வேடர் சொட்டம
  தடங்க மர்க்கடவன் முட்டியா
யடவி நின்றுமலை யருகி னின்றுசரு
  காதி தின்றுபனி வெயிலினுன்
மெய்வ ருந்தவ மில்லைநற் கிரியை
  கிரியை யோகமெனு மூன்றதாய்
மேவுகின்ற சவு பான நன்னெறி
  விரும்ப வில்லையுல கத்திலே
பொய்மு டங்குதொழில் யாத தற்குநல
  சாத னத்தொழி னடத்திடும்
புத்தி யூகமறி வற்ற மூடமிவை
  பொருளெ னக்கருது மருளன்யான்
தெய்வ நல்லருள் படைத்த வன்பரொடு
  சேர வுங்கருணை கூர்வையோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
  சிற்சு கோதய விலாசமே.

(சிற்சுகோதயவிலாஸம்

### 40. கருணை கண்டு வியத்தல்

எறிதி ரைக்கடனி கர்த்த செல்வமிக
  வல்ல லென்றொருவர் பின்செலா
தில்லை யென்னுமுரை பேசி டாதுலகி
  லெவரு மாமென மதிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்முதவி
  நோய்க ளற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
  நிட்டை கூடவுமெந் நாளுமே
அறிவி னின்றுகுரு வாயு ணர்த்தியது
  மன்றி மோனகுரு வாகியே
யகில மீதுவர வந்த சீருனை
  யைய வையவினி யென்சொல்கேன்
சிறிய னேழைநம தடிமை யென்றுனது
  திருவு ளத்தினி லிருந்ததோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
  சிற்சு கோதய விலாசமே.

(சிற்சுகோதயவிலாஸ

## ராக்ஷஸவருஷ வைகாசிமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | திலு | இங் | தமிழ் | வார | ராக்ஷஸவருஷ வைகாசிமீ { சாலிசகம் 1837 கலியப்தம் 5016 } பசலி 1324 கோல்லம்-1090 } 1915வருஷ மே௴ ஜூன்௴ |
|---|---|---|---|---|---|
| ர-பு | 28 | 14 | 1 | வெ | ● அமா 7-31, ✻கார் 58-12, சோ 40-3, நா 7-31, திவி 25-27, அக 31-13, விருஷபரவி 19-10, ரோ 3 புத 9-0, சூன்யதிதி இஷ்டி கார் உப விஷ்ணுபதி சூன்யார்க்கம். |
| செ | 29 | 15 | 2 | சனி | பிர 13-6, ரோ 60-0, அதி 42-20, பல 13-6, நா 11-50, நிஜவைசா சுத் மேஷசெவ் 34-0, ரிஷ சு துதி திதிசங் தரி. |
| பு-சு | 1 | 16 | 3 | ஞா | துதி 18-12, ரோ 5-29, சுக 43-39, கௌ 18-12, திவி 20-51, ரோ 4 புத 26-0. மேஷ சுக் 5-3, திருயாதிதி. |
| ர | 2 | 17 | 4 | திங் | திரு 22-37, மிரு 11-26, திரு 44-26, கா 22-37, நா 2-56, கார் 3 ரவி 43-30, அதிதி அக்ஷய திரே கல்பா ப ர சு ஜ |
| புசு | 3 | 18 | 5 | செ | சது 25-58, திரு 16-33, சூல 44-27, பத் 25-58, நா 17-20, அக 31-17, மிரு 1 புத 42-10, அசு 2 சுக் 50-11, சதுர் |
| | 4 | 19 | 6 | புத | பஞ் 28-20, புன 20-41, கண் 43-37, பா 28-20, நா 10-21, லாவண்ய கௌரி மழை 5-க்கு. [திதி சது விரு. |
| செ | 5 | 20 | 7 | வியா | சஷ் 29-29, பூச 23-38, விர் 41-46, தை 29-29, நா 25-12, அசு 2 செ 0-48, சஷ் உப கரிநாள். |
| ரபுகு | 6 | 21 | 8 | வெ | சப் 29-20, ஆயி 25-19, துரு 38-55, வணி 29-20, சே 0-32, நா 24-10, கார் 4 ரவி 15-50, மிரு 2 புத 28-17 மீன குரு 30-25. அசு 3 சுக் 35-44, சப் விரு. |
| சு] | 7 | 22 | 9 | சனி | அஷ் 27-56, மக 25-47, வியா 35-7, பல 27-56, நா 14-24. அக 31-24, மிதுன 11-55. |
| | 8 | 23 | 10 | ஞா | நவ 25-22, பூர 25-50, ஹர் 30-21, கௌ 25-22, நா 11-42, நவமிதிதி வாதசஞ்சாரம். |
| ரசெ | 9 | 24 | 11 | திங் | தச 21-46, உத் 23-23. வஜ் 24-47, கர 21-46, நா 12-5, ரோ 1 ரவி 45-18, அசு 3 செ 28-0, மிதுன புத 18-26, அசு |
| புசு] | 10 | 25 | 12 | செ | ஏகா 17-19, அஸ் 20-49, ஸித் 18-33, பத் 17-19, நா 8-20, துவாதிதி சர்வ ஏகா விய சிரா [4 சுக் 21 16 திதித்வயம். |
| | 11 | 26 | 13 | புத | துவா 12-13, சித் 17-36, விய 11-47, பா 12-13, திவி 30-45, அக 31-26, பிரதோ மழை 3-க்குள். |
| சு | 12 | 27 | 14 | வியா | திர 6-38, சுவா 13-57, வரி 4-37, பரி 52-31, தை 6-38, திவி 27-1, பர 1 சுக் 6-48, நரசிம ஜ. |
| ரசெ பு] | 13 | 28 | 15 | வெ | சது 0-40, ◯ பௌ 53-52, விசா 9-57, சிவ 49-31, வணி 0-40, திவி 19-16, ரோ 2 ரவி 14-44, அசு 1 செ 55-12, மிரு 4 புத 18-0, சம்பத்கௌரி வைஸ்நா பூ அக்னிநக்ஷத்திர நிவர்த்தி 14-44. |
| சு | 14 | 29 | 16 | சனி | பிர 48-30, அனு 5-51, சித் 41-57, பா 21-31, திவி 18-55, நிஜவைசா பகு பர 2 சுக் 52-0, இஷ்டி கரிநாள். |
| | 15 | 30 | 17 | ஞா | துதி 42-45, கே 1-50, மூல 56-16, சா 34-37, தை 15-37, திவி 20-35, நா 22-39, அக 3 -27, கரிநாள். மேகசஞ்சாரம் 10-நாள். |
| ர | 16 | 31 | 18 | திங் | திரு 37-29, பூரா 54-57, சுப 27-39, வணி 10-7, திவி 20-50, ரோ 3 ரவி 43-5, வாத |
| சு | 17 | 1 | 19 | செ | சது 32-51, உத்தி 52-31, சுப் 21-10, பவ 5-10, திவி 14-8, பர 3 சுக் 37-28, சங் சது. |
| செ | 18 | 2 | 20 | புத | பஞ் 29-0, திரு 50-52. பிரா 15-18, தை 29-0, திவி 2-14, பர 1 செ 22-32, சிர உப [சஷ் வை |
| ச | 19 | 3 | 21 | வியா | சஷ் 26-6, அவி 50-17, மா 10-9, வணி 26-6, திவி 0-46, அக 31-30, திரு 1 சனி 26-15, |
| ர | 20 | 4 | 22 | வெ | சப் 24-19, சத 50-48, வை 5-53, பவ 24-19, திவி 9-26, ரோ 4 ரவி 13-12, சப்தமி காளாஷ் |
| சு | 21 | 5 | 23 | சனி | அஷ் 23-44, பூர 52-34, விஷ் 2-32, கௌ 23-44, திவி 7-16, பர 4 சுக் 45-0, அஷ்டமிதிதி. மழை 6-க்குள். [புதவக்ரம் 10-38, பச்சாதஸ்தசனி 2-38, நவமிதிதி |
| செபு | 22 | 6 | 24 | ஞா | நவ 24-28, உத்தி 55-36, பிரீ 0-15, ஆயு 58-41, கர 24-28. திவி 17-47, பர 2 செ 49-44, |
| ச]ர | 23 | 7 | 25 | திங் | தச 26-25, ரேவ 59-47, ஸௌ 58-38, பத் 26-25, திவி 27-41, அச 31-31, மிரு 1 ரவி 43-0, தசமிதிதி. |
| புசு | 24 | 8 | 26 | செ | ஏகா 29-29, அசு 60-0, சோ 59-8, பா 29-29 நா 22-51, பச்சாதஸ்தபுத 10-38, கார் 1 சுக் 30-2, சர்வ ஏகா. |
| | 25 | 9 | 27 | புத | துவா 33-32, அசு 5-7, அதி 60-0, கௌ 1-30, திவி 31-32, காற்றுமழை அதிகம் சில யிடங்களில் உண்டாகும். |
| | 26 | 10 | 28 | வியா | திர 38-11, பர 11-9, அதி 0-22, கர 5-51, நா 12-48, பிரதோ கார் உப மாசி. |
| ரசெ புசு] | 27 | 11 | 29 | வெ | சது 43-6, ✻கார் 17-32, சுக 1-51, பத் 10-38, தியா 0-0, அக 31-33, மிரு 2 ரவி 12-47, பர 3 செ 17-4, மிரு 3 வக் புத 17-11, ரிஷபசுக் 15-30, அகஸ்திய அஸ்தமனம் 12-47. [2-க்குள். |
| | 28 | 12 | 30 | சனி | ● அமா 47-51, ரோ 23-54, திரு 3 27, சது 15-28, திவி 1-47, நா 7-45, ரிஷ கிரு அமாதிதி சர்வ அமா மழை |
| | 29 | 13 | 31 | ஞா | பிர 52-11, மிரு 29-55, சூல 4-47, கிம் 20-1, நா 21-15, ஜேஷ்ட சுத் பிரதம திதிஇஷ்டி. [சூன்ய பௌஜ சந் தரி ஷட |
| ரகுசு | 30 | 14 | 32 | திங் | துதி 55-40, திரு 35-17, கண் 5-44, பா 23-55, தியா-0-0 மிதுனரவி 43-22, உத் 1 குரு 37-17, கார் 3 சுக் 1-0, |

| | | | |
|---|---|---|---|
| சுக் செ | | ர புத | சனி |
| குரு | 2மே செ 3 மே சுக்8மீ | | கே |
| ராகு | குரு11மிபு 29 ரிஷ சு | | |



விவேக போதினி

தொ. 7] ராக்ஷஸவருஷ சித்திரைமீ [பகுதி. 11

# மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO SALVATION

### 4. ராஜயோகம் (தொடர்ச்சி)

(யோகஸூத்ரச் சுருக்கம்: 2-ம் பாதம் ஸூத்ரம் 29 முடிய)

II. ஸாதனபாதம்:—55 ஸூத்ரங்கள்: ஐந்து உட்பிரிவுகளை உடையது. அவையாவன, முக்ய ஸாதனமான க்ரியாயோகம். அதன் பலன், கர்மகதி, விவேகதிருஷ்டி, துக்ககாரண நீக்கம், முடிவும் வழியும், யோக வெளி ஸாதனங்கள் ஆகிய இவைகளே.

(i) க்ரியா யோகம்:—யோகத்தை அனுசக் கருதுவதற்கு ஒருவனிடம் முதலில் இந்த க்ரியாயோகம் இருத்தல் வேண்டும். இது தபஸ், ஸ்வாத்யாயம், ஈச்வர ப்ரணிதானம் என்ற மூன்று பாகங்களை உடையது. இதையே, ஸேவை பரிப்ரச்நம், ப்ரணிபாதம் என்று வேறு நூல்கள் கூறும்: இவைகளை பகுத தான தபஸ் என்பவற்றுள் அடக்கியும் கூறுவதுண்டு: இவைகளுள் முன்னர் எடுத்து விஸ்தரிக்கப்பட்ட கர்ம பக்தியோகங்கள் அடக்கம். ஆகவே இவைகளில் அப்பாஸிக்கு முன்னரே பழக்கமிருக்கும்: அதை ராஜயோகத்திற்கு ஏற்ப அவன் விசாரப்படி ஸரிப்படுத்திப் பழகிவரவேண்டும் பூர்ண உணர்வுடன்: இவைகள் முறையே காயிக, வாசிக, மானஸ ஒழுங்கான ஸாதனங்கள். தபஸ் என்பது தேஹத்தால் செய்யகூடிய விருத, உபவாஸ, நமஸ்கார, தீர்த்தயாத்திர கைங்கரியாகள் எல்லாம்: ஸ்வாத்யாயம் என்பது தனக்கு ஏற்பட்ட வேதபாக அத்யயனம், மந்திரஜபம், சாஸ்திர விசாரம் இவைகளைச் செய்வது; இது நான்கு வர்ணத்திற்கு உட்பட்டவர்களுள் முக்யமாக ப்ராஹ்மணர்களுக்குத்தான் முற்றிலும் பின்பற்ற முடியும்: ஈச்வர ப்ரணிதானம் இவைகளை அனுஷ்டிப்பதில், இவைகளை நமது மேன்மைக்காக ஏற்படுத்திய ஈசன் கட்டளைப்படி நடக்கிறேம், தவறினல் ஈசனை அனுதாவு செய்த பாபம்வரும் என்ற ஸாதாரண மாறு ஈச்வர உணர்வுடன் நடந்துகொள்வது. இதற்கும் ராஜயோக ஈச்வர ப்ரணிதானத்திற்கும் பேதம் உண்டு: இது ராஜயோக ஸாதனம்; ராஜயோகம் நிருத்த ஸாதனம். இப்படி கர்ம பக்தி யோகங்களில் அடங்கியுள்ள க்ரியாயோகத்தால் ஏற்படும் பலனாவது துன்பக்குறைவும் ஸமாதி கைகூடும் ஆற்றல் ஏற்படுத்துவதுமே.

துன்பங்களா (க்லேசங்களா) வன அறியாமை (அவித்தை) என்ற நிலையில்லாமையும், அசுத்தியும், அனாத்மத்தன்மையும் உள்ளதினிடம் நிலையுள்ளது, சுத்தமானது, ஆத்மா என்று உண்டாகும் மாறுணர்வு; தன்மை (அஸ்மிதை) என்ற அறிவுக்கருவியே அறிபவன் என்னும் குழப்பம்; விருப்பு (ராகம்) என்ற ஸுக விஷயத்துடன் நிகழும் மனோநிலை: வெறுப்பு (த்வேஷம்) என்ற துக்க விஷயத்துடனிகழும் மனோநிலை: உடலுயிர் பற்று (அபிநிவேசம்) என்ற தேஹவியோகபயம் ஆகிய இவ்வைந்துமே. இவைகள் குறைவு என்பது என்ன என்ற கேள்வி பிறக்கும். இதற்கு இந்தத் துன்பங்கள் இருக்கக்கூடிய நிலைகள் இன்னவை என்பது விளங்கவேண்டும். இவைகள் எல்லா

வற்றிற்கும் அறியாமை என்ற அவித்தையே மூலமாயினும் இவை உள்ளடக்கம் (ப்ரஸுப்தம்) குறைவு (தநு) அடக்கம் (விச்சின்னம்) வெளிவீச்சு (உதாரம்) குற்ற நீக்கம் (ப்ரஹாணம்) அறநீக்கம் (ப்ரலயம்) என்ற ஆறு ஸ்திதிகளை உடையவை. இவைகளுள்: ஸமாதிபரன், தூங்குபவன், ஏகாக்ரநிலையிலிருப்பவன் இவர்களிடம் உள்ளடக்க நிலையிலும்; மனதை தம் முயற்சியாலடக்கும் யோகிகளிடம் இவை குறைவு நிலையிலும், பாமரர்களிடம் ஒன்று வெளிவீச்சிலிருக்குங்கால் மற்றவைகள் அடக்க நிலையிலும், ஸமாதி கைகூடிய ஜீவன் முக்தனிடம் குற்ற நீக்க பரோபகார மோக்ஷ ஸஹாய நிலையிலும், விதேஹமுக்தி கைகூடுமிடத்து அறநீக்க நிலையிலும் துன்பங்கள் காணப்படும். இதில் ப்ரஹாணநிலை ஏகாக்ர அப்யாஸத்தாலும், ப்ரலயநிலை நிருத்த நிலைப்பாலும் கைகூடும். ஆகவே முன் கூறப்பட்ட க்ரியாயோகம் துன்பங்களைக் குறையச்செய்து ஏகாக்ர ஸமாதி நிலைக்கச் செய்து ப்ரஹாண நிலையை அணுகச்செய்யும் முக்ய ஸாதனம். இந்தத் துன்பங்கள் குறைந்து அப்யாஸம் செய்து ஸமாதியை அணுகுங்கால் லபயோக யுக்திகளை உபயோகப்படுத்தும் திறன் அப்யாஸிக்கு வரும். இதைக் கைவிட்டு நேரிட ஸமாதியைப் பிடித்துவிட முயலுபவன் அதோகதியை அடைந்து அநேக பிறப்பில் யோக நிலைப்பிற்கே இடமில்லாது திண்டாட வேண்டிவரும்.

(II-ஸூ-1-11.)

(ii) கர்மகதி:—க்லேசங்களை க்ரியா யோகத்தால் குறைக்காமலிருந்தால் என்ன கெடுதி என்ற கேள்வி பிறக்கும். அவைகள் வர வர, தடித்துக் கொண்டே வந்து ஸம்ஸார துக்கங்களை அதிகமாக்கி மனதைச் சஞ்சலப்படுத்தி, அவைகளிலிருந்து கரை ஏற வழியே தோற்றுத கொடியநிலைக்கு ஒருவனைக்கொண்டுவந்து விடும். இது எப்படி என்பதையும், இதிலிருந்து கரைஏற முயலும் விவேகிக்கு ஸம்ஸாரம் எப்படித் தோற்றும் என்பதையும், இப்பாகம் விளக்கவந்துள்ளது. ஸம்ஸாரத்திற்கு முக்கிய வேர்களாக உள்ள கர்மக் கூட்டங்களுக்கு க்லேசங்களே முக்ய காரணம். இந்த கர்மக்கூட்டங்கள் இந்த அல்லது மேல்வரும் ஜன்மங்களில் பலிப்பதால் வெளிப்படும். இப்படி ஏற்படும் கர்மபலன்களால் க்லேசங்கள் தடிக்கும். இவ்வாறு க்லேசங்களும் கர்மாக்களும் ஒன்றை ஒன்று பலப்படுத்தி ஒருவன் துயரத்தை மாறாது நிற்கும்படி செய்துவிடும், க்லேசங்களை மனப்பூர்வமாகக் குறைக்க முயலாதவனுக்கு. பலமான பாபபுண்ய கர்மாக்கள், அவிஹிதா நிஷித்த கர்மாக்கள் (சாஸ்திரங்களில் செய், செய்யாதே என்று குறிக்கப்பட்டிருப்பினும் பாபமும் புண்ணியமும் அல்லாதவையான கர்மாக்கள்), உபேக்ஷித கர்மாக்கள் (சாஸ்திரங்களில் குறிக்கப்படாமல் பொதுவாக நம்மை மீறி அடிமைப்படுத்தும் சில பாபமும் புண்ணியமும் அல்லாத கர்மாக்கள்) ஆகிய இவைகள் இந்த ஜன்மத்திலேயே பலித்து க்லேசங்களையும் அவைகளால் ஏற்படக்கூடிய எல்லா கர்மங்களையும் அதிகப்படுத்திவிடும்; மற்றைய விஹித, நிஷித்த மத்யம, ஸாதாரண கர்மாக்கள் லோகாந்தரத்திலும் இவ்வுலகிலேயே ஏற்படும் மறு பிறப்பிலும் பலிக்கும், இப்படி கர்மமூட்டையும் க்லேச மூட்டையும் அதிகப்பட்டு ஸம்ஸாரத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கும்படியாகும் க்லேசங்களை வளரவிட்டால். இந்த கர்மாக்கள் எப்படிப் பலிக்கும் எனில், மூலமாகிய அவித்தை எனும் க்லேசம் நீங்காதிருக்கும் வரையில் அதனால் ஏற்படும் கர்மாக்கள் பக்குவமாகும் காலத்தில் ஜாதி (வர்ணாச்ரம நிலைமைகளான தேஹத்தைப் பற்றியவைகள்) ஆயுஸ் (அந்த தேஹத்து



டன் விடவேண்டிய ச்வாஸக் கணக்கு, ஜீவிக்கவேண்டிய நாள்களல்ல) போகம் (அந்ததேஹத்துடன் அனுபவிக்கவேண்டிய ஸுகதுக்கங்கள் ஒழுங்கு) ஆகிய மூன்று விதமாகப் பிரிந்து பலிக்கும்.

இதிலிருந்து வெளியாவன பின்வருவன:— (1) அவித்தை நீங்கிய ஜீவன்முக்தர் செய்யக்கூடிய கர்மா இப்படி எல்லாம் பலிக்காது ஜாதி ஆயுஸாக முன்னரே பலித்துவிட்டபடியால் இது மாறாதாயினும் போகபலன் அவர்களைத் தாக்கவே மாட்டாது. ஜாதி ஆயுஸும்கூட பிறர் திருஷ்டியிலேயேயொழிய அவர் திருஷ்டியில் நழுவியே போயிருக்கும். இந்த நுட்பம் உணராவிடில் ஜீவன் முக்தனுக்கும் அவசியம் அனுபவித்தே தீரவேண்டிய ப்ராரப்தம் உண்டு என்னும் வாக்யங்களையும், அவனுக்கு ப்ராரப்தம் கூட இல்லை என்ற வாக்கியங்களையும் பொருத்தவே முடியாது. (2) இங்கு கூறப்பட்ட ப்ராரப்தங்களுள் முதல் இரண்டும் வந்தப்ராரப்தம் மாற்றவேமுடியாது. மூன்றாவதுள் வந்ததும் வரப்போகிறதும் அடங்கியுள்ளன. (3) ப்ராரப்தம் மூன்றுவிதமாகக் கவர் பிரிந்து நிற்கக் காரணம் ஒன்று உண்டு. கர்மாக்கள் பொதுவாக முக்யம் என்றும் அவாந்தரம் என்றும் இருவகை. பல அவாந்தர கர்மாக்கள் ஒரு முக்ய கர்மாவுடன் சேர்ந்து அதை முன்னிட்டுக்கொண்டே வரும் ஜன்மாதிகளாகப் பலிக்கும். இப்படி ஒரு ஜன்மத்தில் ஒரு முக்ய கர்மாவுடன் கூடி பல அவாந்திர கர்மாக்கள் பலித்து பலமிழந்தால்தான் கர்மகதிக்கே ஒருவித நோக்கம் ஏற்படும். இப்படி பலிப்பவையுள், முக்ய கர்மா ஜாதியையும், அவாந்தர கர்மாக்கள் போகங்களையும், இரண்டும் இசைந்து பொருந்தி ஆயுஸையும் கொடுக்கும். (4) ஒருவன் ஆயுஸ் என்பது நாள் கணக்கில் இல்லை: ப்ராரப்தத்தால் ஏற்படும் மூச்சுக் கணக்கே. மனிதன் ஆஹார வ்யவஹாராதிகளால் இந்த மூச்சுக்களை சீக்கிரத்திலாவது, வெகுநாட்களிலாவது விட்டு ஆயுள்நாட்களை குறுக்கி அல்லது நீட்டிக்கொள்ளலாம். ச்வாஸத்தை யோகாப்யாஸத்தால் அடக்கிவிடாமலும், சாஸ்திரீய வழிகளில் ஆஹார வ்யவஹாரங்களை வைத்துக்கொண்டும், மனதை ஒரு வித ப்ரமாத ஸுகதுக்கங்களில் ஈடுபடுத்தாமல் ஸாவதானமாக இருக்கும் ஒருவனுக்கு 21600 ச்வாஸம் ஒரு நாளில் போகும். அவனுக்குக் கர்மாப்படி ஏற்பட்டிருக்கும் ச்வாஸங்களை 21600ஆல் வகுத்தால் ஸாதாரண ஆயுள் நாள் இவ்வளவென்று ஏற்படும். ஆனால் அவன் இந்த நாட்களுக்குள்ளும் இறந்து விடலாம்; அல்லது மீறியும் இறக்கலாம். பொதுவாக இக்காலத்தவர் ஆயுள்நாள் முடிவதற்கு முன்னேயே இறப்பவர்தாம். பெரியோர்கள் ஆசீர்வாதங்கள் ச்வாஸக்கணக்கை மாற்றாது நமது வ்யவஹாராதிகளை ஒழுங்குபடுத்தும் புத்தியைமாற்றி சாஸ்திர ஒழுங்குப்படி பற்றி நிற்கச்செய்து நமது ஆயுள் நாட்களை அதிகப்படுத்தும்.

முற்கூறியபடியெல்லாம் கர்மா பலிப்பதென்றால் எப்படியெனில் வெளிவிஷயம் எப்படி இருப்பினும், கர்த்தா நல்ல அல்லது கெட்ட காரியங்களைச் செய்துகொண்டிருப்பினும், பாபம் அல்லது புண்ய கர்மம் பலிக்கும் தருணம் வரின், அதற்கேற்ற மனத்தளர்ச்சி வருத்தத்தையோ அல்லது மனக்கிளர்ச்சி ஸுகத்தையோ ரூபமாகவுடைய விருத்தியை உண்டாக்கிவிடும் திடீரென்று. இது வெளி விஷயங்களைப் பொருத்தது போலவே காணப்படும். ஆயினும் இவைகளுள் காரிய காரண ஸம்பந்தம் முற்றிலும் பொருந்தாமலும் இருக்கும். இவ்வாறு பலித்து ஸம்ஸாரத்தை பலப்படுத்தும் கர்மாக்களைத்தடுத்து க்லேசங்களைக்

குறைக்க க்ரியா யோகந்தான் தகுந்த வழி. இதில் தபஸ் ப்ராயச்சித்த ரூபமாக ஏற்பட்டு நமக்குத் தெரிந்த பாபகர்மப் பதிவுகளை அழித்துவிடும்; ஈச்வர ப்ரநிதானம் புத்திக்குத் தெளிவு கொடுத்து நமக்கு வெளிப்பட்டிராத பாபங்களை எடுத்துக்காட்டி அவைகளின் ப்ராயச்சித்தங்களை அனுஷ்டித்து கரையேறத் தூண்டுவதுடன், ஸ்வாத்யாயத்தை ஸரிவர நடத்தி ஈசன் விஷய உண்மை ஞானத்தையும் மற்றையவைகள் விஷய உணர்வையும் உள்ளபடி ஏற்படுத்தும். தபஸால் சுத்தப்பட்ட மனதில் உள்ள புண்யப்பதிவுகள் கூடப் பலிக்காது நழுவும்படி மற்றைய இருபாகங்களும் செய்து க்லேசமூலமான அவித்தையையே வேரறுத்துவிடும். ஆகவே க்ரியாயோகச்சிறப்பு இந்தக் கர்மகதி விசாரத்தால் நன்கு விளங்கும்.

இங்குகூறியபடி ஸுகவிருத்தியையோ துக்க விருத்தியையோ உண்டாக்கக் காரணம்போல இருக்கும் பொதுத்தன்மைவாய்ந்தும் இருவகைப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் க்லேசத்தைக் குறைக்க முயலும் விவேகிக்கு துக்கமாகவேதான் தோற்றும். துக்க விருத்தியை உண்டாக்குபவைகள் துக்கந்தான் என்று கூறாமலே எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஸுகவிஷயங்கூட துக்கமே விவேகிக்கு. விஷய ஸுககாரணம் அதன் முன்னுள்ள ஆசையின் வேகம்: ஆசை துக்கம் மனச்சஞ்சலமே ஆதலால், மனக்குரங்கைப் பிடித்திருக்கும் பிசாசு அது: இதனால் பலிக்குமோ பலிக்காதோ என்ற ஆட்டம் ஏற்படும், பரபரப்பான முயற்சிக்குக் காரணமாகும், பலிக்காவிடில் கோபமாக மாறி மனதை வருத்தும்; ஆசை பூர்த்தியாகி ஸுகிப்பவரைக்கண்டு பொறாமை என்ற தேளால் கொட்டுண்டு வருந்தும்மனக்குரங்கு: இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கு ஆளாக்கும் ஸுககாரண ஆசைதுக்கமே. இனிஸுகம் கைகூடிவிட்டால் ஒருவித மழுங்குதலான மயக்கநிலைதான் ஏற்படும் ஸுக காலத்தில், இதில் கட்டுடித்த நிலையை அடையும் மனக்குரங்கு. இந்த மயக்கம் நீங்கி உணர்வு வரின் இடைச்சஞ்சலமாகிய "இது மாறாதிருக்கவேண்டுமே! மாறி நம்மை விட்டு நழுவினால் கதி என்ன! எப்படியும் மாறிவிடுமே" என்ற வீண் ஆசைஏக்கங்கள் உண்டாகும். மேல்துக்காதிகள் வருகையில இந்த ஸுகப்பதிவிருந்து பொறாமையைப் பலப்படுத்தி துக்கானுபவத்தை உண்டாக்கி வருத்தும். இப்படியெல்லாம் விஷயஸுகத்தின் ஸ்வரூபம் இருப்பினும், அது விஷய ஆசையை நீக்கி மனதை நற்பாவனையில் வைக்கத் தடையாகவே அவை இருந்து பகுத்தறிய முயலும் மனதைச் சந்தியி விழுத்துத் திண்டாடவைப்பதாலும் விஷயஸுகம் துக்கமே. ஆகவே காரணம், இடைச்சஞ்சலம்,பதிவு,நற்பாவனைத்தடை ஆகிய இந்தத்தன்மைகளால் எல்லாவிஷயங்களும் துக்கமே விவேகிக்கு. ஆதலால்இனிவரப்போகும் ஸுக துக்கங்களையே அவன்நீக்க முயலுவன் க்ரியாயோகத்தால் இவைகளுள் இனிவரும் போகபாக ப்ராரப்தமும், ப்ராரப்தமாகப்போகும் ஸஞ்சிதமும் அடக்கம். இவைகளை அற நீக்குவதற்கு ராஜயோகமே சிறந்ததாயினும், ஹடயோகத்திலும் ஈச்வரப்ரநிதான ஸாமாந்யம் இதற்கு முக்ய உபயோகமுடையதாக இருக்கும்.

(II—ஸூ 12-16.)

(iii) துக்க விஷயம் :—இதுவரையில் ஜீவர்களுக்கு ஸமாதிவரவொட்டாது தடுப்பனவான க்லேச கர்மவிபாக ஆசயங்களுள் முதல் மூன்றை க்ரியா யோகத்தால் குறைக்கும் விதத்தைக் கூறிவிட்டார். இதனால் ஆசயம் ஒழுங்குபட்டுவரும். ஒழுங்கான ஆசயம் ஸமாதிக்கு விரோதியுமல்ல. இந்த விஷயம் கைவல்யமாகிய யோகமுடிவிலேயே அற நீங்குவதால் கைவல்ய பாதத்தில் இது விஸ்தரிக்கப்படும்.



இனி க்லேசகர்ம விபாக ரூபமான துக்கத்தின் தன்மை நீக்கவழி இவைகளை விளக்கப் புகுகிறார் பதஞ்சலிபகவான் இங்கு. இவ்விடத்தில் யோகமும் ஸாங்க்யமும் ஒரேமாதிரி இருக்கும். அறிவான் அறிபடுபொருள் குழப்பமே நீக்க வேண்டிய துக்கம். அறிபடுபொருள் ஸூக்ஷ்ம பூதம் ஸ்தூல பூதம், அவைகள் காரியங்கள், ஞான கர்மேந்திரிய மனங்கள் ஆகிய இவைகளே. இவைகள் ஸத்வபாகத்தால் விளக்க உணர்வு, ராஜஸபாகத்தால் பரபரப்பு, தாமஸ பாகத்தால் சொக்கி விளக்கம் ஏற்பட, இடமிரா மயக்கம் உண்டாக்கி தம்முள் தாக்க மயம், துக்கம் விளங்காமை, ஸுகத் தோற்றம் இவைகளை முறையே தோற்றுவித்து நிற்கும். இவைகளில் குடும்பி உழலுபவனை அதிக பந்தப்படுத்தி, ஸத்வத்தில் குழம்பாமலிருக்க முயலுபவரைவிட்டு ஒழுங்காக அகலும் மோக்ஷ காரணமும் ஆகும். ஸ்தூல ஸூக்ஷ்மம், குறியுடைக்காரணம், குறியிலாக்காரணம் ஆகிய நான்கு நிலையில் முற்கூறிய தாமஸாதி ஏற்றத்தாழ்விலா குண நிலைகளால் இந்த அறிபடு பொருள் காணப்படும். அறிவானோ வேறு, அறிவுதான், கலப்பே இல்லாதவன்: ஆயினும் ப்ரகிருதி அறிபொருள் முக்காரண ஸம்பந்தத்தால்வெளிவிஷயத்தை வெளியிட்டறிபவனாகத் தோற்றுவன். பூவிடம் உள்ள படிக மணிபோல இந்த வெறும் தோற்றமே பந்தமெனப்படும். மயங்கும் அறிவானை திண்டாடவைத்து முடிவில் அவன் ஓய்ந்து ஒதுங்கித் தன்னிலையில் நிற்பதில் உதவியாகவிருக்கவே அறிபொருள் மாறுபாடெல்லாம். இவை இரண்டிற்கும் உள்ள போலிப்பொருத்த முதலில் அறிபொருளை விளக்கிப்பின்னர் அதன்வழி அறிவானை உணர்த்தவே. இந்த அறிபொருளை விட்டுவேறான எப்பொழுதும் பந்தமேஇல்லாதுமான அறிஞனாக ஒருவன் இருப்பின், பந்த உபாதியான போலிப்பொருத்தம் நழுவிவிடும். இந்த ஸம்பந்தம் விடுபடுபவனிடத்து இல்லையாயினும் மற்றவர்களுக்கு உண்டு. பந்தமேற்படும் பொருத்தத்திற்கு அவித்யாதி ஐந்து க்லேசங்களே காரணம். இதனால் புத்தி விருத்தி அதிகப்பட அறிவான் சிதறித்திண்டாடுவதாயும், புத்தி அறிவானும் கிடந்து உழலும் குழப்பம் ஏற்படும். அவித்தை ஓய்ந்தால் புத்திவிருத்தியே இல்லாமல் சுத்தப்பட ஆத்மாவின் சிதறல் தோற்றம் நீங்கி புத்தி ஆத்மாபோலாகும். ஒழிவு விளக்க நிலை ஏற்படும். இதற்கு நழுவாத திடமான அறிவுஅறிவான் பகுத்தறிவே சிறந்த உதவி. இந்த பாகம் யோகமதச் சிறப்பான பாகம்: வேதமுடிவிற்குப் பொருத்தமானவைகளை இதில் அங்கீகரிக்கவேண்டும்.

(II-ஸூ 17—26)

(iv) முடிவும் வழியும்:—புத்தி சுத்தப்பட்டு ஆத்மாவுள் அழுந்தி பந்த நீக்குவதான திட விவேக உணர்வில் ஏழு படிகள் உண்டு. அவையாவன (1) தள்ளவேண்டியவைகள் எல்லாம் ஐயம் திரிபற விளங்கி விட்டன என்ற பந்த உணர்வு. (2) பந்த உபாதிகளான க்லேசங்கள் நன்றாகக் குறைக்கப்பட்டன என்ற பந்த நீக்க உணர்வு (3) மனவிருத்திகள் அற ஓய்ந்திருக்கும் அனுபவவிளக்கம் என்ற நிருத்த விளக்கம்.(4)நிருத்த நிலைப்பாகிய ஒழிவு கைகூடிவிட்டது என்ற திடம் (5) புத்தி வெளி உள் நாட்டங்களை விட்டுவிட்டது என்ற உணர்வாகிய புத்தி ஓய்வு (6) புத்தி காரணஸத்வத்தில் ஒடுங்கி ஸத்வமும் அமரத் தொடங்குவதாகிய புத்தி ஒடுக்கம். (7) ஸத்வமும் அடங்கி மிஞ்சுவதாகவே யாதலாகிய ஞான விளக்கமென்னு முடிவேயாதல்) ஆகிய இவைகளே. இவைகளில் முன் நான்கும் காரிய முக்திகர்த்ருதந்திரம் முயற்சியாலாக வேண்டியவை, தனுமானஸி என்ற மூன்றும் ஞான பூமிக்கும் ஸத்

வாபத்தி என்ற நான்காவதற்கும் இடையிலுள்ளது. பின் மூன்று நிலைகளும் மனமுக்தி, வஸ்து தந்திரம், நமது முயற்சி உதவி வேண்டாதவை, ஞானபூமிகளுள். நான்கு ஐந்திலும், ஆறிலும் ஏழிலும், இவை காணப்படும். இந்த அருமையை வெளியிடவே பகவான் கீதை vii—19 இல்

பல்பிறவி பாரில் எடுத்துப்பின் பார்ப்பவெலாம்
செல்வமலியும் வாஸுதேவனது—நல்வடிவே
என்றறிந்து ஞானியெனை எய்துவ னிற்பெரியோன்
ஒன்றலரி திவ்வுலகில் ஓர்

என்று கூறி ஞானிபல பிறவிகளில் இந்த ஏழுபடிகளில் பழகி ஏறி முடிவில் எல்லாம் பரம்பொருளே என்று அமர்வன் எனப் பாராட்டுகிறார் ஞானியின் வேலைப்பாட்டை.

இந்த நிலைக்கு ஸாதனம், யோக அங்கங்களைப் பின்பற்றி அழுக்கு நீங்கி முற்கூறிய பகுத்தறிவுப்பழக்கம் ஏற்படுவதே: யோக அங்கங்களாவன: யமம் (அடக்கம்) நியமம் (ஒழுக்கம்) ஆஸனம் (தேஹநிலைப்பு) ப்ராணாயாமம் (மூச்சொழுங்கு) ப்ரத்யாஹாரம் (வெளி வஸ்துவில் ஈடுபடாமை) தாரணை (ஓரிடத் தடங்கல்) த்யானம் (விட்டநினைப்பு) ஸமாதி (விடாநினைப்பு) ஆகிய இவை எட்டுமே. இதில் ஸமாதி என்பது ஏகாக்ரம்: சித்தம் இந்தஎட்டாலும் அடையப்படும்.

யோகமுடிவு (II-ஸு 27—29.)

இந்த யோக அங்கங்களையும் இவைகளால் ஏற்படும் இடையிலுள்ள நிலைச்சிறப்புக்களையும் பின்னர் எடுத்து விவரிப்போம்.

---

ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் காலஞ்சென்றதைக் கேட்டுச் சொல்லிய இரங்கற்பா.

நேரிசை வெண்பா

கோவெனுங்கோ பால கிருட்டின கோகலே
கோவென் றலறக் குவலயத்தோர்—வாவென்று
தன்னயத்தைப் பேணி யழைத்தார்நின் சத்தியஞ்சேர்
சொன்னயத்தைக் கேட்கச் சுரர். (1)

அன்பில்லன் ஞாலழைக்க வங்குநீ சென்றக்கா
லுன்பில்லிங் காரா லுறுதிபெற—முன்பினுனை
யாராய்ந் தறிபவனென் றூரும் புகழ்வதனால்
வாரா திராதுவரு வாய். (2)

வேங்கடராமய்யர்,

தமிழ்ப் பண்டிதர்.

# ஆந்த்ர கவிகள்

## 1—பம்மெர போதராஜு

## ANDHRA POETS: Bummera Potharaju

தருக்காவலாவென்று புல்லரைப்பாடித்தனவிலைமா
தருக்காவலாய்மயி லேகுயிலேயென்று தாமதராய்த்
தருக்கா வலாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்கா வலாயுதன் பின்றோன் றரங்கர்பொற் ருளிணைக்கே

என அழகியமணவாளதாஸர் என்னும் பிள்ளைப் பெருமாளையங்கார் பாமர கவிகளைப் பற்றி கண்ணீர் வடித்தார். இக்கருத்து, மகான்களுடைய மனத்திலல்லாமல் கேவலம் பெருமையையே விரும்பும் கவிகள் ஹ்ருதயத்தில் உண்டாகாது. தமது பாடலை எல்லாம் கடவுளுக்கே அர்ப்பணஞ்செய்வதென்று வைராக்யத்துடன் பாடுபவர் சிலரே அவர்களைப், பிறரை மதியாதவர்கள் என்று பலர் சொல்லக்கூடும். அவ்வாறல்ல. பிறரது மகிழ்ச்சியையும் ஆதரவையுங்கொண்டு பாடுபவர், ஆதரிப்போர் தக்கவர்கள் அல்லாரானால், உயர்ந்த பாவங்கள் உள்ள கவிகளை எழுதமுடியாது. இதற்கு உதாரணம் தற்காலமிருந்த மாம்பழக்கவியைச் சொல்லலாம். கேவலம் சிருங்காரமே குடிகொண்டு பிறரைத் துதித்தலே கடமையாகக்கொண்டு பணச்சேர்க்கையை இச்சித்ததையே அதுகாட்டும். சடையப்ப வள்ளல் போன்ற மஹானுபாவர் போல், கதையின் பெருமையையும் தமது சிறுமையையும் பாராட்டி, ஆதரிக்கக்கூடியவர் மிக அருமை. கம்பர் வில்லிபுத்தூரார் முதலிய இவர்கள் எல்லாம் தம்மை ஆதரித்தவர்களது குணங்களைக் கூடமாகச் சொல்லியிருக்கின்றார்களே அல்லாமல் நரஸ்துதி செய்தவரல்ல. நிற்க. சில விஷயங்களில் ஆதரிப்போரது மனப்போக்கிற் கேற்ப கவிகள் பாடவேண்டி வரும். அதைப் போல பெருங்கஷ்டம் வேறொன்றுமில்லை. மனவிசாலத்தை ஒழிக்கும் ஆயுதம் அதுவே. ஆனால் நரஸ்துதி செய்யாது கடவுளையே துதிக்குஞ் செயலுடைய கவிகள் பிறரது இஷ்டம்போல் நடக்க ஸமயமிராது. பிடிவாதத்திற்கும், வணக்கமின்மைக்கும், ஆளாகாரானால், அவர் பெரும் கவிகளாகலாம். இப்பெருமையை எண்ணியே நமது பெரியோர்கள் நரஸ்துதி செய்வது குறைச்சலென்றெண்ணுவது. இவ் வெண்ணங்கள் நமது பாரத



நாடு முழுதும் உண்டு. வழிகொண்டவர் மாத்திரஞ் சிலரே. அவருள் "ஆந்த்ரம்" என்று தற்காலம் வழங்கிவரும் தெலுங்கு நாட்டிலிருந்த கவிகளின் மனத்திலும் இவ்வெண்ணங்கள் பரவியிருக்கின்றன. கடவுளையே பாடியமஹான்களாய் அதியத்புத கவி ஹ்ருதயமும், சைலியும், விஷயப் போக்கும், நன்னடக்கையுமுள்ள கவிகள் அநேகரிருப்பது அஸாத்யம். அவ்வாறிருந்தால் அவர்கள் லோக பூஜிதர்களாய் இருப்பார்கள். சிறுபிள்ளை முதல் நெறியுடைய பெரியவர் வரை யாவருக்கும் மகிழ்ச்சியுண்டாக்கும்படித் தெலுங்கில் பாகவதமென்னும் நூலை எழுதிய பம்மெர போதராஜு என்பவர் இச்சிலரைச் சேர்ந்தவர்.

இவர் நியோகிப் பிராஹ்மணர்; கடப்பை ஜில்லாவில் ஒண்டிமெட்டா என்று வழங்கிவரும் ஏகசிலா நகரத்திற் பிறந்தவர்; சாலிவாஹன சகம் 13-14 ம் நூற்றாண்டினிடையிலிருந்தவர்; தெலுங்கில் நைஷதமுதலிய சிறந்த நூல்களையியற்றிய ஸ்ரீநாதன் என்னும் கவிச்சிரேஷ்டரின் உடன்பிறந்தவளது கணவர். இவருடைய தந்தையின் பெயர் கேதன்னா; தாயின்பேர் லக்கம்மா (லக்ஷ்மியம்மாள்). மல்லன்னா என்னுங் கவிச்சிரேஷ்டர் இவருடைய குமாரர்.

போதராஜு வாழ்ந்த காலநிர்ணயத்திற்கு அவரெழுதிய பாகவதத்திலேயே சில ஆதாரங்கள் இருக்கின்றன. அவையல்லாமல் வீரபத்ர ரெட்டியின் காலத்தில் இருந்த ஸ்ரீநாதனும், தனக்குப் பாகவதநூலை அங்கிதஞ் செய்யும்படிக் கேட்ட வேங்கடகிரி அரசனான சர்வக்ஞ சிங்கண்ணநாயக்கனும், இவரும் ஒரே காலமானபடியால் இவர் கிருஸ்து சகாப்தம் 14-15-ம் நூற்றாண்டுகளில் இருந்தார் என்று ஏற்படும்.

இவர் தாமாகவே பூர்ணபாண்டித்ய மடைந்தவர்; குரு முகமாகப் படித்தவரல்லர். பாகவதத்தில் எழுதிய கத்திய மென்னுங் கட்டுரையில் "ஸஹஜபாண்டித்யனை" என்று தன்னைப்பற்றிச் சொல்வதே இதைப் புலப்படுத்தும். இவர் சிறுநாள் முதலே ஆழ்ந்து படித்தவர்; ஏட்டுச் சுரைக்காயையே யுண்டவரல்லர்; எல்லா உலக வியலையும், பெருமையையும், பிரக்ருதியின் அழகையும், ஜனங்களுடைய செயலையும் அனுபவமாகப் படித்தவர்; ஸாதாரணமாக ஜீவித்தவர்; பணப்பேராசைக் குழைத்தவரல்லர்; மிக்க நல்லவர்; உண்மையிடத்திலேயே உழைத்தவர். இவருக்கிரண்டு பாஷையில் தன் முயற்சியாலேயே அபாரஞானம்; அவை: —ஸம்ஸ்கிருதம், தெலுங்கு. இவ்விரண்டு பாஷைகளையும் அவர் வெண்ணெய் போல் கடைந்தெடுத்து யாவருமுண்டு மனப்பசி தீரும்படி பாகவதத்தில் கொடுத்திருக்கிறார். இவரது பெருமையைப் பற்றி பல கதைகளுண்டு. அவற்றில் சிலவற்றை யாவருமறிய விரும்புவார்கள்.

இவர் தாமே தமது மேழியைப் பிடித்து உழுது மெய் வருத்தப் பயனை யடைந்தவர். அதேவிதம் ஒருநாள் வயலில் உழுதுகொண்டிருக்கும்போது போதன்னாவின் பாகவதத்தைக் கர்னாடக ராஜஸபையில் அரங்கேற்றி அவ்வரசனுக் கங்கிதஞ் செய்யும்படிச் சொல்ல வெண்ணித் தன் பல்லக்கின்மேல் ஸ்ரீநாதன் உடன் பிறந்தவள் புருஷனைப் பார்க்க அவ்வயலின் மேல்புறம் வரும்போது, தனது பெருமையைக் காட்டவெண்ணி பல்லக்கைத் தூக்கும் போயிகளை ஒருபக்கம் தூக்குவதைவிட்டு அகலும்படி ஸ்ரீநாதன் உத்தரவு செய்தான். அப்பொழுது அந்தப் பல்லக்கு ஒரு பக்கம் எடுப்பாரில்லாமலே நடந்து கொண்டிருந்ததாம். இதைக்கண்டு ஏரைப் பிடித்துக்கொண்டிருந்த மல்லன்னா தன் தந்தையாகிய போதன்னாவுக்குக் காட்ட, அவர் ஏர் நுகத்தில் கட்டியிருந்த ஒருபக்கத்து மாட்டை அவிழ்த்துவிடச் சொன்னார். அப்பொழுது அவ்வேர் தடைப்படாமல் உழுதுகொண்டிருந்ததாம். இதைக்கண்ட ஸ்ரீநாதன் மற்றைய பக்கத்தில் தூக்கிக்கொண்டிருந்த போயிகளையும் அகலும்படி சொல்ல அப்பல்லக்கு தூக்குவாரில்லாமலே நடந்துகொண்டிருந்ததாம். இதைக் கண்ட போதராஜு ஏர் நுகத்தில் இருந்த மற்றொரு மாட்டையும் அவிழ்த்துவிட அவ்வேர் உழுவாரில்லாமல் தானே உழுதுகொண்டிருந்ததாம். பின் ஸ்ரீநாதன் போதன்னாவிடம் வந்து "ஏர் உழவர்கள் சுகந்தானோ?" என்று க்ஷேமம் விசாரித்தார். அதற்கவர்,

"பாலர ஸால ஸால நவபல்லவ கோமல
காவ்யகந்யகன்
கூளலகிச்சி யப்படுபுகூடு
புஜிஞ்சுட கண்டெ ஸத்கவுல்
ஹாளிகு லைனனேமி கஹநாந்
தரவீமல கந்தமூல கௌத்

தாலிகுலைன னேமி நிஜதார
ஸுதோதர போஷணார்த்தமை ?"

[நறுமா ஸால நாகிளந் தளிரின் நயத்தநற்
காவிய வணங்கை
மறவர்க்குக் கூட்டி வயிற்றினை வளர்த்து
வாழ்தலின் நற்கவி வாணர்
விறலேர் விழியென் ? காட்டகத் துழன்று
வேர்தழைக் காயுணி லென்னும்
அறவாழ் வுகந்தவ் வவர்மனை மக்கள்
வயிற்றினைக் காத்திடற் கம்மா ?]

என்னும் பத்யத்தைப் பதிலாகச் சொல்ல, தான் பரிகாசமாகச் சொன்ன வார்த்தைகளுக்காகக் கோபித்துக் கொள்ளக் கூடாதென்று ஸ்ரீநாதன் ஸமாதானஞ் சொன்னார். பின் போதராஜு தம் மைத்துனற்கு விருந்து செய்யவேண்டித் தமது வறுமையை யெண்ணி மனக்கவலையோ டிருந்தார். மஹாபக்த சிகாமணியாகிய போதன்னா,

"அநந்யாஸ்சிந்தயந் தோமாம் யேஜநா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோக க்ஷேமம் வஹாம்
யஹம்"

என்னுங் கீதாச்லோகத்தை நினைந்து நினைந்து மனமுருகினார்போலும்! இதையுணர்ந்த விஷ்ணுபகவான் போதராஜுவின் உருவத்தோடு வந்து வேண்டியவிதம் போதன்னா வீட்டில் பஞ்சபக்ஷ்யபாயஸான்னமும் நிறைய மல்லன்னா முன்வந்து கொடுத்துப் போயினராம். பின் கவலையன்றி ஸ்ரீநாதனும் போதராஜனும் உண்டபிறகு போதன்னாவின் தாரித்ரியத்தைப் போக்க அவரை அவரது பாகவதத்தைக் கர்ணாடக அரசனுக்கு அங்கிதம் செய்யும்படி ஸ்ரீநாதன் மதிபுகட்டினான். இதைக் கேட்டதும் தன் முன் கண்ணீரும் கம்பலையுமாக ஸரஸ்வதி நிற்பதாகத்தோன்ற போதன்னா,

" காடுககண்டிநீரு சனுகட்டுபயிம்பட
னேலநேட்சுசோ
கைடபதைத்ய மர்தநுநி
காதிலிகோடல யோமதம்பயோ
ஹாடககர்புராணி நினுநாகடிகின்
கொனிபோயி யலசர்
ணாடகிராடகீசகுல சம்ம
த்ரி மூத்திக நம்முபாரதி."

[மைக்கணீ ராற்றின் மார்பகக் குன்றக்
கொடுமுடி குளித்திட நைந்தென்
தக்குறல் கைட வாரியர்க் குகந்த
துகிலயா மருகியென் னெந்தாய்!
சொக்கப்பொன் கருப்பற் காசிநம் பிதுமெய்
மனமொழி சொற்றெடுத் தன்னை
யக்கர்ணா டகக்கி ராடகீ சகர்க்கோ
மாறிடே னம்மபா ரதியே!]

என்று சொன்னார். அக்காலம் தெலுங்கரசர்களுக்குக் கர்ணாடகராஜர்கள் என்று பெயர். போதன்னா தனது பாகவதபுராணத்தை நராங்கிதம் செய்ய மறுத்தனரென்பதற்குப் பாகவதத்தில் வரும்,

"யிம்மநுஜேஸ்வராதமுல கிச்சி
புரம்புலு வாஹநம்புலுந்
ஸொம்முலுகொனி புச்சுகொனிஸொக்கி
சரீரமு வாஸிகாலுசே
ஸம்மெட வ்ரேடுலெம்படக
ஸம்மதி ஸ்ரீஹரி கிச்சிசெப்பெனீ
பம்மெர போத ராஜொகடு
பாகவதம்பு ஜகத்திதம்புகன்"

என்னும் கவியே போதும்.

தன் வழிபடாத போதன்னாவை வழிப்படுத்த எண்ணிய ஸ்ரீநாதன் கர்ணாடக அரசனிடம் சென்று போதன்னாவைப் பாகவதத்தைக் கர்ணாடகவரசனுக் கங்கிதம் செய்யும்படிச் செய்ய ஆணையிடும்படி அரசனைத் தூண்டினான். அவனும் தனது சேனைத்தலைவனை சேனையுடன் சென்று போதன்னாவை அழைத்து வரும்படி அனுப்ப, அவர்கள் வந்தபோது போதராஜு வீட்டிற்கெதிர் ஒருபெரும் வெள்ளைப் பன்றி மிகுநெடிய உருவத்துடன் படுத்திருந்ததாம். அவர்கள் அதைத்தூக்கிவிட்டு அப்புறம் போய் போதன்னாவை அழைத்து வரும்படி எண்ணி அதைத் தாக்க, அது தன் உடம்பை அசைத்ததும் அநேகாயிர படர்கள் வெளிவர, அவர்கள் அரசனுடைய சேனையை ஓட்டிவிட்டனராம். அந்த ஸமயம் போதன்னா வராஹாவதார கட்டம் எழுதிக்கொண்டிருந்ததால் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி வ்ராஹ உருவத்துடன் அவர் முன் இருந்ததாகச் சொல்வார்கள்.

நமதாசிரியர் பாகவத மெழுதியகாலத்தில் எழுதுவதை எல்லாம் தமது கண்முன் நடப்பனவாகிக் கண்டே எழுதினராம். அவ்வாறு எழுதியது ஸ்ரீ விஷ்ணுபகவானுடைய அருளால் என்று சொல்வார்கள். ஆனால் அவர் ஒவ்வோர் ஸ்கந்தமுடிவில் கூறிய கத்தியம் என்னுங்கட்டுரையில் பரமசிவனது அருளால் என்றுசொல்லியிருக்கிறார். எட்டாவது ஸ்கந்தத்



தில் கஜேந்திரமோக்ஷ மெழுதிய காலத்தில், "ஆவை ருண்ட புரம்புலோ நகரிலோ நாமூல" என்று பாடிப் பின்னொன்றும் தோன்றாது சிந்தனையுற்று வெளியே போயிருந்த காலத்தில் 'ஸௌதம்புதாபல' என்று மேல் விஷ்ணுமூர்த்தி எழுதிவைத்ததாக ஒரு கதையுண்டு. இம்மாதிரிக்கதை எல்லாப் பாஷைச் சரிதங்களிலும் காணலாம். அருணாசல கவி இராமாயணக் கீர்த்தனை செய்தபொழுது தசக்ரீவனுக்கென்றசரீரிவாக்கு எடுத்துக் கொடுத்ததாக ஒரு கதையுண்டு. நிற்க, போதன்னாவின் கனவில் ஸ்ரீராமசந்திரமூர்த்தி தோன்றிப் பாகவதத்தைத் தனக்கு ஸமர்ப்பிக்கும்படி விரும்பியதாகத் தோன்ற, போதன்னா தமது பாகவதத்தை யவருக்கே ஸமர்ப்பித்ததாகச் சொல்லுவார் பெரியோர்.

ஒருநாள் ஸ்ரீநாதன் மீண்டும் தனது உடன்பிறந்தாள் கணவனை வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கவலையுடன் தாமும் தம் குழந்தையுமாக போதராஜுவின் வீட்டினுள் நுழைந்தார். அப்பொழுதவர் கஜேந்திர மோக்ஷத்தில்,

" வீரிகிஞ் ஜெப்படு சங்கசக்ர
யுகமும் ஜேதோயி ஸந்திம்படே
பரிவாரம் புனு ஜீரடப்ராகபதிம்
பன்னிம்ப டாகர்ணிகாந்
தாதம்மில்லமு சக்க னொத்தடு
விவாத ப்ரோத்தத ஸ்ரீகுசோ
பரிசேலாஞ் சலமைன வீடடு
கஜப்பராணா வநோத்ஸாஹியை"

[பொன்னிக் குழையான் நேமிசங்கு
புசங்கொண் டிலன்சூழ் படைநோக்கான்
முன்னற் குணரான் கருடனையம்
முந்து மயலின் சடங்கினின்நன்
கன்னத் தோடி கண்படர்மைக்
குழலை யொதுக்கான் தழீஇப் படர்ந்த
பொன்னி மார்பச் சாந்தொழியான்
போற்றக் கரியி னுயிரன்பான்."]

என்னும் பத்யத்தை எழுதிக்கொண்டிருந்தனராம். இதைக்கண்ட ஸ்ரீநாதன் மஹானுபாவரான விஷ்ணு மூர்த்தியானவர் தீனனான கஜேந்திரனைக் காக்கும்படி வரும்போது சக்ராயுதத்தை விட்டுவிட்டு வெறுமையாக வந்தனரா? வேடிக்கை பார்க்க வந்தனரா?" யென்று வாதிட்டனராம். ஆனால் போதன்னா பதில் சொல்லவில்லை. ஸ்ரீநாதன் தயிர்சாதம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தனக்கு அவஸரமான காரியமிருப்பதாகச் சொல்லி எழுந்து, அவருடைய குழந்தையை ஒரு இடத்தில் ஒளித்து வைத்துவிட்டுத், தமது வீட்டுக்கிணற்றில் பெரும் பாறை யொன்றைப் போட்டு, அவ்வோசைகேட்ட உடனே ஓடோடி வந்து ஸ்ரீநாதனுடைய குழந்தை கிணற்றில் விழுந்து விட்டதாக இரைச்சலிட்டார். ஒன்றுந் தோன்றாது, இலையிலிருந்த சோற்றைவிட்டெழுந்து, ஸ்ரீநாதன் கையையுங்கழுவாது கிணற்றண்டை யோடினார். அங்கு கிணற்றிற் கவலையுடன் அவன் குனிந்து பார்த்துக்கொண்டிருக்கும்போது "இறங்க ஆளும், தாம்பும், ஏணியும் இல்லாமலாவருவது? என்ன கூச்சலிட வந்தாயா! வேடிக்கைபார்க்க வந்தாயா?" என்று சொல்லி, "உனது மகன்மேல் ஆசை எவ்வாறுன்னை வேண்டிய உபகரணங்களை எண்ணாமல் ஓடிவரச் செய்ததோ அவ்விதமே ஸ்ரீபரந்தாமனது பக்தவத்ஸலகுணம் அவரைத் தமதுபகரணங்களை எண்ணாமல் கஜேந்திரனிடம் ஓடிவரச் செய்தது. பிறகு அந்த உபகரணங்கள் தாமாகவே வரும்" என்று பதில் சொல்லி மருமகனை ஸ்ரீநாதனிடம் ஒப்புவித்துத் தமது பாட்டின் உண்மையையும் ஒப்புக்கொள்ளும்படிச் செய்தார் என்று சொல்வார்கள்.

இவர் பாகவதத்தை வியாஸர் எழுதியவிதமே வழிபடினும், இராமாயணத்தைக் கம்பர் வழிபட்ட மாதிரியாக, தனக்கியைந்தவிதம் கவிசமத்காரத்திற் கிடங்கொடுக்க, சிறந்த கவி ஹ்ருதயத்துடன் வழிபட்டு எழுதியவர். முதனூலில் ச்லோகங்கள் 20,000; இவரெழுதிய நூற்கு 30,000 பத்யங்கள். விரிவாய் எழுதியிருக்கிறார் என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமென்? பக்திரஸமேலிட்டு விளங்கஅதிலலிதமாக இயற்றிய இவரது நூலிற் குற்றம் கூறுதவர் பலராயினும், சிலர் குற்றங்கூறுவர். நமது கம்பரெழுதிய "நாடியபொருள்கைகூடும்" என்னும்பாட்டிற்கு அனேகர் பிழை கூறவில்லையா? அதைக் கூறியவர் தாமே குற்றமன்றென்று நிலைநாட்டவில்லையா? அதேமாதிரிதான் இதுவும். தெலுங்கில் இரண்டு ரகாரங்கள் உண்டு. ஒன்றிற்கு ரேபமென்றும் மற்றொன்றிற்கு "வண்டிரு" என்றும் பெயர். இவ்விரண்டிற்கும் பேதமில்லாமல் சில விடங்களில் எதுகைவைத்து எழுதியிருக்கிறார் என்பதே இவர் செய்த பெருங்

குற்றம். இதற்கு இவர்மேல் குற்றஞ்சாட்ட இலக்கண நூல்களாக எடுத்தாளப் பட்டவை இவர்க்கநேக காலம் பிறகு உலகில் உதயமானவை. அவரிடம் இவர்க்கு அபிப்பிராயம் ஸரியாகவில்லை என்பதற்கும், அவர்மேல் சொல்லக்கூடாதென்பதற்குமிதுவே சாக்ஷியாகும். நமது தமிழ்ப்பாஷையில் இனவெதுகையில் இவர் செய்தகுற்றம் ஆறிலொன்றாகும் இலக்கியங் கண்டதற் கிலக்கணமானபடியால் மகாகவிகள் இலக்கண வரம்புகடந்து போவார் என்புதற்குச் சந்தேஹம்கிடையாது. இதற்கே தமிழில் யாப்பில் செந்தொடை முதலியவற்றிற்கு லக்ஷணங்கூறப்படுகிறது. இவ்வாறு மகாகவி வழிபட்டால் அவன் மேற் குற்றஞ் சாற்றினுல் இலக்கண நூல் வழுவமைதிகளுக்கு இடம்தரா வகைக்கும் குற்றந்தான் ஆகும். ஆனுல் சந்திரனிடத்திருக்கும் களங்கம்போல அவை தோன்றாமலே மறையும்.

இவ்வளவு கூறினதால் போதன்னுவின் நடை குறைந்ததென்றெண்ணலாகாது. "தமித" மென்ற பதத்திற்காக கம்பர்மேல் குறை கூறியதே போலாகும் அது. போதன்னுவின் நடை வெகு ஸரளம்; திராக்ஷாபாகத்தில் செம்பாகு போல் விளங்குவது. முரண் தொடை, மடக்கு, பிராசம், கர்ப்பார்த்தம் இவ்வளவும் நிறைந்து இனிமையைத் தருவதாயினும், குழந்தையும் அறியும்படியாக எளியநடையில் புதைபொருள் நிறைந்தது. அவரது வாழ்க்கையைப் போலவே அவர் பாகவதமும் பாமரபண்டிதரஞ்சகமாகி விளங்குவது; பக்தி ரஸத்தேன் ஒழுகி படித்தவர் உள்ளத்தை உண்மையில் இனிக்கச் செய்வது. இவர் செய்த வேறுநூல் வீரபத்ர விஜயம் ; இதை யிவர் பாகவதத்தில் தக்ஷயாக பாகத்தில் செய்த சிவநிந்தை போக பிராயச்சித்தமாகச் செய்தனர் என்பார்கள். போதன்னு எழுதிய பாகவதம் பூஜையிலேயே வைக்கப்பட்டிருந்தமையால் அவர் இறந்த பின்பு சிதல்வாய்ப்பட்டுச்சிலபாகம் அழியலாயிற்று. இதைப்பற்றிப் பலகதைகளுண்டு, ஒன்று மாத்திரம் நிச்சயம். போதன்னு இயற்றிய பாகவதம் கொஞ்ச நாள் கடந்து சிலபாகங்கள் சிதைந்து போக, சிங்கன்னு முதலியோர்கள் ஒன்றுகூடி அதை மீண்டும் ஸரிவரச்சரிப்படுத்தினுர் என்பதே.

இவரைப்பற்றி வேறு விசேஷங்கள் யாவருமறியார். அவர் அந்திய காலத்தைப்பற்றிய கதைகள் இதுவரையு மொன்றுங்கிடைத்தில. தன் முயற்சியால் பூர்ணபண்டிதனுகி, ஸம்ஸ்கிருதாந்த்ர பாஷாப்பிரவீணராகி, வறுமையிலிருந்தும் பணப்பேய்க்கிடம் கொடாது, கடவுளையன்றிப் பிறரைத் துதியா தூய்மையுடைய இவரது பெருமையையும் பக்தி வைராக்ய நிலைமையையும் உணர்வதற்கிங்கு எழுதப்படும் இச்சிறிய வியாஸம் சிறிதும் உபயோகப்படா தென்பது திடநம்பிக்கை. ஆயினும் இதுகதையார் என்றுணர்ந்தால் அவரது நூலைப்படிக்க அவா உண்டாகலாம் என்னும் எண்ணத்துடனேயே எழுதப்பட்டது.

'யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு?'

வீ. சேஷகிரி சாஸ்திரி, பீ. ஏ.

# விவசாய விஷயம்

## NOTES ON AGRICULTURE

விவசாய விஷயங்களைப்பற்றி இதர தேசங்களில் கவனிப்பதுபோல் நம்தேசத்தில் அவ்வளவு கவனிக்கிறதில்லை. அமெரிக்கா, ஜப்பான், இன்னும் மற்ற தேசங்களையும் இந்தியாவையும் ஒத்துப் பார்த்தால், அத் தேசங்களில் விளைகிற விளைவைப்போல் இந்த தேசத்தில் விளைகிறதில்லை. இந்தியாவில் ஜனங்கள் வரவர க்ஷீணித்துப்போகிறார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமானவைகளைக் கீழே சொல்லுகிறோம்.

நாகரிகம் நாளுக்கு நாள் விருத்தியாய்க் கொண்டிருக்கிறது. இப்படி விருத்தியாகிறதினுல் செலவும் அதிகமாய்க் கொண்டிருக்கிறது. இந்த அதிகச் செலவுகளுக்கெல்லாம் பூமியின் விளைவைக்கொண்டு ஆகவேண்டுமே யொழிய வேறு விஷயத்தினுல் ஆகிறதில்லை. இந்தியாவின் ஒருபாகத்தில் எவ்வளவு தானியம் விளைந்தாலும் அந்த தானியமெல்லாம் அவ்வந்த இடங்களில் இருப்பதில்லை. தானியங்கள் அறுவடையாகிறதற்கு முன்பாகவே வியாபாரிகள் முன் பணம்கொடுத்துத் தானியங்களை ஏற்றுமதி செய்துவிடுகிறார்கள். குடித்தனக்காரர்கள் தங்கள் சொந்த பூமிகளில் விளைகிற தானியங்களைப் பணக்கொடுமையின் நிமித்தம் அப்போதைக்

(இதன் தொடர்ச்சி 407-ம் பக்கம்.)



கப்போது விற்கும்படியாய் நேரிடுகிறது. இப்படிநேரிடுகிற அதிகச் செலவுகளுக்கெல்லாம் பூமியின் விளைவு அதிகப்பட வேண்டாமா? தற்காலத்திற்கும் சுமார் 10-15 வருஷத்திற்கும் முன் உள்ள தானிய விலையை ஒத்துப் பார்த்தால் முன் விற்ற விலைக்கு இரட்டிப்பாக இப்பொழுது விற்கிறது என்று தெரியவருகிறது.

இதற்கு முன் குடித்தனக்காரர்களுக்குச் சாப்பாட்டுச் செலவைத் தவிர இதர செலவுகள் நிரம்பவும் ஸ்வல்பமாயிருந்தன. இப்பொழுதோ சாப்பாட்டுச் செலவு ஒரு பங்கு இருந்தால் இதர செலவுகள் இரண்டு பங்கு ஆகின்றன. நாளுக்கு நாள் அகவிலை குறைந்து வருகிறபடியால் க்ஷாமம் அல்லது பஞ்சம் என்பது கண்ணுக்குத் தோன்றுகிறதில்லை. தாதுவருஷப் பஞ்சத்தில் அதாவது சுமார் 35 வருஷத்துக்கு முன்னுல் அரிசி விலை இப்பொழுது விற்கிற மாதிரிதான் இருந்தது. அதைப் பெரிய பஞ்சகால மென்றும் அதனுல் ஸகல ஜனங்களுக்கும் மிக்க கஷ்டம் நேரிட்டதென்றும், கஞ்சித் தொட்டிகள் பல இடங்களில் ஏற்படுத்தினுர்கள். நாளுக்கு நாள் ஜனத்தொகை அதிகமாய்க் கொண்டுவருகிறது. இந்த அதிகமான ஜனத்தொகைக்குத் தகுந்தபடி புறம்போக்கு பூமிகளெல்லாம் அதாவது தரிசு பூமிகளெல்லாம் உழுவதற்கு ஆரம்பித்துவிட்டார்கள். அதிக பூமியை உழுவதினுல் மாத்திரம் என்ன உபயோகம்? இந்தியாவில் முன் விளைந்த விளைவையும் சென்ற பத்து வருஷங்களாக விளைகிற விளைவையும் ஒத்துப் பார்த்தால் முன் விளைந்ததில் சுமார் முக்கால் பங்கு தான் விளைகிறது. மொத்த விளைவு மாத்திரம் அதிகப்படவில்லை. ஏனென்றுல் சரியான காலத்தில் மழைமாரி பொழிகிறதில்லை. குடித்தனக்காரர்களும் முன் காலத்தில் பாடுபட்ட பிரகாரம் இந்த காலத்தில் பாடுபடுகிறதில்லை. நம்முடைய தேசத்து ஜனத்தொகை அதிகமாகிறதினுல் அதற்குத் தகுந்தபடி விளைவும் அதிகரித்தாலொழிய தேசம் நாளுக்குநாள் க்ஷீணதசைக்கு வருவதற்கு ஆக்ஷேபணையில்லை. முன் காலத்திலிருந்த குடித்தனக்காரர்கள் தேகப் பாடுபட்டு பூமிக்கு வேண்டிய எருவைப்போட்டுநன்றுய் உழவுசெய்து நல்ல விளைவு விளைய முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவ்விதம் பாடுபடுகிறவர்கள் இல்லாததினுல் விளைவு குறைந்துவிட்டது. உத்தியோக நிமித்தமாகவும் படிப்பு விஷயமாகவும் பல ஜனங்கள் கிராமங்களை விட்டு, பட்டணங்களுக்குக் குடியேறிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் கிராமத்திலிருக்கிற நிலங்களைப் பார்க்கச்சரியான மனுஷ்யர்கள் இல்லாமல்போய்க்கொண்டு வருகிறது. கஷ்டகாலம் அதிகமாகிறபடியால் ஜனங்கள் வேறே தேசங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். மேற்சொன்ன காரணங்களால் தேசம் க்ஷீணதசையை அடைந்துவிட்டது. இக்காலத்தில் விவசாயம் என்று சொன்னுல் ஈனத்தொழில் என்று சிலர் நினைக்கிறார்கள். விவசாயத் தொழிலைப்போல் மேலானது எதுவும்இல்லை. இந்த விஷயத்தைப்பற்றி ஜனங்கள் பிரத்தியக்ஷமாய் அறிகிறதில்லை. நாளடைவிலேயே அறிவார்கள். ஆனுல் இப்பொழுதே சிலருக்கு விவசாயத்தின் மேன்மையைப்பற்றி தெரிந்திருந்த போதிலும், அத்துறையில் உழைக்க பலகாரணங்களால் முடிகிறதில்லை.

கூலிக்காரர்கள் இதற்கு முன் சுலபமாகக் கிடைத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ இரட்டைப்பங்கு கூலி கொடுத்தாலும் ஆட்கள் கிடைக்கிறதில்லை. அப்படி கிடைத்தாலும் சரியானபடி வேலை செய்கிறதில்லை. இப்படியாகக் குடித்தனக்காரர்கள் பலவிதமாய்க் கஷ்டப்படும்படி நேரிடுகிறது. தற்காலத்தில் விற்கிறதானியவிலையினுல் ஏராளமாக பூமிவைத்திருப்பவர்கள் கடன் உடன் இல்லாமல் ஸமாளிக்கிறார்களேயொழிய மற்றவர்களுடைய ஸ்திதி நிரம்ப கேவலமா யிருக்கிறது. ஐயோ——இப்படித் தேசம் அநியாயமாய் கெட்டுப் போகிறதென்று நிபுணர்களுக்கும் தெரிகிறது. குடித்தனக்காரர்களுக்கும் தெரியவருகிறது. இந்த கஷ்டங்களை நிவர்த்திசெய்ய அநேக மார்க்கங்களையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனுல் ஸ்திரமாகவும்பொறுமையாகவும் நின்று விருத்திக்கு வரவேண்டிய விஷயங்களைத் தேடவில்லை. அதைச்செய்தால் லாபம்வருமா—இதைச் செய்தால் லாபம் வருமா என்று யோசனை செய்கிறார்களேயொழிய காரியாம்சத்தில் சிரத்தை யேற்படவில்லை. இப்படி குடித்தனக்காரர்கள் கெட்டுப் போகிறார்களே—"குடித்தனமோ துரைத்தனமோ" என்றபழமொழிப்படி குடித்தனக்காரர்கள் க்ஷேமமா யிருந்தால்தானே

ராஜாங்கமும் விருத்திக்கு வரும் என்று ஸர்க்காரில் குடித்தனக்காரர்களுக்கு வேண்டிய பல வித ஸாதனங்களையும் செய்யவேண்டுமென்று அநேக லக்ஷம் ரூபாய் செலவழித்து விவசாய டிபார்ட்மெண்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த் டிபார்ட்மெண்டு எதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள்? இது செய்கிறவேலை யென்ன? அதினால் குடித்தனக்காரர்களுக்கு உபகாரமோ? என்று யோஜித்துப் பார்ப்போம். குடித்தனக்காரர்கள் தங்கள் பூமிகளை அபிவிருத்திக்கு கொண்டுவரும்பொருட்டுப் புதிய லாபகரமான பயிர்களைத்தங்கள் பூமியில் பயிர் செய்து பார்க்கவும் தங்கள் பூமிகளில் புதுவிதமான ஏற்பாடுப்படி விவசாயம் செய்யவும் சக்தி இல்லாமல் போகிறபடியாலும், அப்படி செய்யக்கூடிய தனவான்கள்,ஏதோ செய்ய ஏற்பட்டு, காலவித்தியாசத்தால் சரியானபடி விளையாவிட்டால் அநியாயமாய் நஷ்டம் அவர்கள் வகிக்க வேண்டிவருமே, என்றும் கவர்ன்மெண்டார் பல ஜில்லாக்களில் விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த விவசாயப் பண்ணைகளில் அந்தந்த ஜில்லாக்களில் பயிர்களை நாட்டு வழக்கம்போல் செய்து பரிட்சை பார்க்கிறது மல்லாமல் அந்தந்த ஜில்லாக்களுக்கும் பக்க ஜில்லாக்களுக்கும் ஏற்ற புதிய லாபகரமான பயிர்களையும் செய்து குடித்தனக்காரர்களுக்குக் காண்பித்தால் அவர்கள் அந்தப் பிரகாரம் பார்த்துக்கொண்டு முன்னுக்கு வருவார்கள் என்று விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி கவர்ன்மெண்டார் செய்து கொண்டிருக்கிறது ஜன உபகார நிமித்தம் என்று தெரிந்துகொள்ளாமல் முன்னோர்கள் போன வழியிலேயே போகவேண்டுமென்று அநேகர் இருக்கிறார்கள். காலஸ்திதிக்குத் தகுந்தபடி விவசாய அபிவிருத்தியையும் கவனிக்காவிட்டால் ஜனங்கள் கடன்காரர்களாவார்கள். இப்படி முன்னுக்கு வரவேண்டுமானால் பல இடங்களில் பழகி அனுபவமிருக்கிற பெரிய குடித்தனக்காரர்கள் அக்கிராமத்தில் இருக்கிற அனுபவமற்ற எளிய குடித்தனக்காரர்களுக்கு தெளிவாக லாபவிஷயங்களை எடுத்துரைப்பது மல்லாமல் தாங்களும் தங்களுடைய பூமிகளில் கொஞ்சம் அபிவிருத்திக்காக ஏற்படுத்தவேண்டும். பல இடங்களில் அநேக ஜமீன்தார்கள் இருக்கிறார்கள். இவர்கள் மூலமாகவும் குடித்தனக்காரர்கள் முன்னுக்குவரலாம். எளிய குடித்தனக்காரர்கள் பெரிய குடித்தனக்காரர்களை இப்படிப்பட்ட விஷயங்களுக்கு அடுத்து சிரத்தையுடன் பயிர் செய்ய ஆரம்பித்தால் அவர்களும் உதவுதற்குத் தடையில்லை. அமெரிக்காவில் இம்மாதிரிதான் விவசாய அபிவிருத்தி விசேஷமாகிவிட்டது. இந்தியாவிலும் அதேமாதிரி செய்யமுடியும். அமெரிக்காவில் விவசாய விஷயங்களைப்பற்றி ஏதாவது சந்தேகம் ஏற்பட்டுச் சந்தேகங்களைத்தீர்க்க நிபுணர்கள் ஏற்பட்டால் அவர்களுக்குத் தகுந்த வெகுமானம் கொடுத்துத் தெரிந்து கொள்ளுகிறார்கள். இந்தியாவிலே ஸர்க்காரில் உத்தியோகஸ்தர்கள் ஏற்பட்டு குடித்தனக்காரர் களிடத்தில் நேரில்போய்ச் சொன்னாலும் ஏதோ அவர்கள் சொல்லிப் போகட்டும் என்றிருக்கிறார்களே யொழிய, அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அபிலாஷையில்லை. கொஞ்சகாலமாக வெகு பிரயத்தினத்தால், விவசாயிகளிற் சிலர், சில ஜில்லாக்களில் ஸர்க்காரில் ஏற்படுத்தியிருக்கிற விவசாய உத்தியோகஸ்தர்கள் மூலமாய் இன்ன பயிர்களைப் பயிரிட்டால் இன்னவிதமாக லாபம்வரும் என்று அறிந்து அம்மாதிரி செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள்.

இதர சாஸ்திரங்களைப் போல் விவசாய சாஸ்திரத்தை அளவறிய முடியாது. இது படிப்பினால் மாத்திரம் தெரிந்து கொள்ள முடியாது. அனுபவத்தால்தான் தெரிந்து கொள்ளவேண்டும். இவ்விந்தியா தேசத்தில் ஒரு ஜில்லாவுக்கும் மற்றொரு ஜில்லாவுக்கும் விவசாய விஷயங்களில் ரொம்பவும் வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசம் இருக்கவேண்டிய காரணம் என்னவென்று தெரிந்துகொண்டு அந்தந்த இடத்துக்குத் தகுந்தபடி அனுசரித்து விவசாய அபிவிருத்தியைச் செய்யவேண்டுமே யொழிய புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் அச்சிடப்பட்டிருக்கிற விஷயங்களை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது. இப்பத்திரிகைகள் பொதுவாக விஷயங்களை எடுத்துச் சொல்லுகின்றன. பத்திரிகைகளிலுள்ள ஸாராம்சத்தைக் கிரகித்துக்கொண்டு, ஏற்படும் சந்தேகங்களை விவசாய டிபார்ட்மெண்ட் மூலமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். விவசாய விஷயமானது திடீரென்று லாபம் கொடுக்கக்கூடியதல்ல. நாளடைவில்தான் பூமிவிருத்தியாகி விளைவு அதிகம் ஏற்படும்: விவசாயத்துக்கு விசேஷப் பொறுமை வேண்டும். 'ஊக்கமது கைவிடேல்' என்ற ஔவையார் பழமொழிப்படி, விடா முயற்சியே பலன் கொடுக்கும். ஆகையால் மேற்சொன்னசங்கதிகளைக்கிரகித்துக்கொண்டு தேசநன்மையைத் தேடுவதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்யவேண்டியது எல்லோருடைய கடமையுமாகும். மேற்சொன்ன சங்கதிகளைச் சகல குடித்தனக்காரர்களும் தீர்க்கமாக ஆலோசனை செய்து தகுந்த ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம். சென்னை ராஜதானியில் முக்கியமான பயிர்கள் இன்னவையென்றும் அவைகள் அதிகமாய் விளையும்படி செய்ய என்னமார்க்கம் இருக்கிறதென்றும் இதுவரையில் எந்த பாகத்தில் அனுஷ்டானத்துக்கு வந்திருக்கிறதென்றும், இன்னும் வேறே எந்த விதமாகச்செய்தால் அபிவிருத்தியடையலாமென்றும், பின் சஞ்சிகைகளில் விவரமாய்ச் சொல்லப்போகிறோம். இவ்விதம் எழுதப்படுவதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே எமது கோரிக்கை.

---

**ஸ்ரீமான்காந்தியும் அவரது பாஷாபிமானமும்.** ஸ்ரீமான் காந்தியவர்கள் சென்னைக்கு விஜயம் செய்த போது ஸ்ரீராமகிருஷ்ண மாணவர் இல்லத்தைப் பார்க்கப் போயிருந்தனர். அங்குள்ள ஏற்பாடுகள் எல்லாவற்றையும் கண்டு திருப்தியடைந்து தம் அபிப்ராயத்தை அங்குள்ள பார்வையீடு புத்தகத்தில்(Visitors' Book)குறிப்பிட்டார். ஸ்ரீமான் காந்தி ஆங்கிலத்தில் நிபுணராயிருந்தபோதிலும், அப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள அபிப்ராயங்களெல்லாம் ஆங்கிலத்தில் இருந்தனவேனும் அவை யொன்றையும் கவனியாதவர்போல் தம் அபிப்பிராயததைத் தாய்ப்பாஷையாகிய குஜராத்தியில் குறிப்பிட்டது பலருக்கு வியப்பை உண்டு பண்ணிற்று. தவிர,அவர் மாயவரத்தில் பேசியபோது ஸ்வதேசி என்பதைப்பற்றி குறிப்பாய் விவரித்தில் நம் நாட்டு துணிமணிகளை உபயோகித்து நம் பாஷையைப்படித்துப் பேசி வழங்கிவரவேண்டு மென்றும், அப்படி அவலம்பிக்காமல் வெறும் வார்த்தைகளாயிருக்கும் வரையில் யாதொரு பிரயோசன மில்லையென்றும், அப்படிச் செய்கிறவர்களிடமிருந்து தாம் கற்றுக்கொள்பவை பல விஷயங்கள் உள்ளன என்றும் சொன்னார்.நம்மவர் பலர் அரை எழுத்து ஆங்கிலத்தில் தெரிந்தவுடன் தம் தாய்ப் பாஷையை அசட்டைசெய்து சரியாய்ப் பேசவும் ஒரு கடிதம் எழுதவும்கூடத் தெரியாமலிருப்பதின் மதியீனத்தை இனியாவது மறந்து நடப்பார்கள் என்று நம்புகிறோம்.



# எலிமெண்டரி
## போதனு முறைக் குறிப்புகள்
## ELEMENTARY EDUCATIONAL NOTES

"அணில்"

ஸைதாப்பேட்டையில் டீசர்ஸ் காலேஜில் (Teachers' College) சிறுவர்களுக்குத் தனியாக, கிண்டர்கார்டன் டிபார்ட்மெண்டு (Kin-(dergarten Department) என்று ஒன்றிருக்கிறது. அந்தச் சிறுவர்கள் வகுப்பில் ராஜு என்று ஒரு பையனிருக்கிறான். அந்தச் சிறுவர்கள் வகுப்புக்கெல்லாம் தலைமை உபாத்தியாயராக ஒரு பெண்பிள்ளை இருக்கிறார். அவர், பிள்ளைகளிடத்தில் மிக அன்புள்ளவர். காலையில் 10 மணிக்கு 10 நிமிஷம் முன்னதாகவே பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் எல்லோரையும் ஒன்று கூட்டி ஏதாவது ஒரு நல்ல கதையையாவது, விசேஷமாய் லோகத்தில் நடக்கும் விஷயங்களையாவது சொல்வதுண்டு. ஒரு நாள் ஜீவப்பிராணிகளிடத்தில் பிரியமாயிருக்கவேண்டியதைப் பற்றி ஒருகதை சொல்லியிருக்கிறார். பிள்ளைகளிடத்தில் அவருக்கு எவ்வளவு அன்பும் விசுவாசமுமுண்டோ, அப்படியே எல்லாப் பிள்ளைகளும் அவரிடத்தில் மிகஅன்பும் விசுவாசமு முள்ளவர்கள்.

ஒருநாள், வழக்கப்படி எல்லா வகுப்பிலும் பாடம் சரிவர நடக்கிறதா என்று பார்க்கப் போனார். ஒரு உபாத்தியாயர் சிறுவர்களை அழைத்துக்கொண்டு 'நேசர் ஸ்டடி' (Nature Study) கற்பிக்க வேண்டுமென்று ம்யூஸியத் (Museum)தண்டைகாத்துக்கொண் டிருந்தார். உபாத்தியாயர், ஸூபரின்டெண்டண்டை (Superintendent) பார்த்ததும், 'அம்மா, ஒரு பட்சியைப்பற்றிப் பாடம் சொல்லிக்கொடுக்கப் போகிறேன், பட்சியை ம்யூஸியத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோக, சேவகனுக்குக் காத்துக்கொண் டிருக்கிறேன்' என்று சொன்னார். இவர், அந்தக் கட்டடத்துக்குப் போகும் வழியில்,தாழ்வாரத்து மூலையண்டை மூன்று எலிக்குஞ்சுகள் போல் ஏதோ கிடந்ததை உற்றுப் பார்த்தார். அதை நன்றாய் உற்றுப்பார்த்ததும் மூன்று அணிற்பிள்ளைகள் என்று தெரிந்தது. உடனே உபாத்தியாயரைக் கூப்

பிட்டு 'நமக்கு இந்தப் பெரியதோட்டத்தில் உயிரோடுள்ள அநேக சிருஷ்டிப்பொருள்களிருக்கும்போது, என் சேவகனுக்குக் காத்துக்கொண்டிருக்கவேண்டும்? நேசர் பாடம் (Nature Study) கற்பிக்கும்போது அதற்குத் தனியாக ஒரு 'ஸிலபஸ்' (Syllabus) வேண்டாம். சிருஷ்டியில், காலாகாலத்தில் எப்போது விசேஷமாய் எவற்றைப் பிள்ளைகள் கவனிக்கக்கூடுமோ, அப்போதே அந்தப் பாடத்தை நடத்தவேண்டும். மழைக்காலத்தில் தவளைகளைப்பற்றியும், பாம்பு கண்ணில் பட்டால் பாம்பைப்பற்றியும், ஏதாவது ஒரு பிராணி கண்ணில்பட்டால் அதைப்பற்றியும் இப்படியே பாடங்களைச் சொல்லிக்கொடுத்து வருஷக்கடைசியில் என்ன என்ன பாடங்களைப்பற்றிச் சொல்லிக் கொடுத்தோம் என்று ஸிலபஸ் (Syllabus) இருந்தால் போதும்; இதோ, தாழ்வாரத்தில் மூன்று அணிற்பிள்ளைகள் கிடக்கின்றன. அதைப் பிள்ளைகள் கவனிக்கட்டும்' என்று சொன்னார்

உபாத்தியாயர் உடனே பிள்ளைகளை அழைத்துக்கொண்டு, 'அணிற்குஞ்சுகளை கவனியுங்கள்' என்றார். இப்படிப் பிள்ளைகள் கூச்சல் போட்டுக்கொண்டு அணிற்குஞ்சுகளைச் சுற்றிக் கொண்டுநிற்கவே, உபாத்தியாயர், '(Silence) சத்தம் போடாதேயுங்கள், கவனியுங்கள்' என்றார். உடனே பையன்கள் இரைச்சல் ஒயவே, தாழ்வாரத்தின் மேட்டில் ஒரு வாரையில் ஒரு பெரிய அணிற்பிள்ளை 'கீச், கீச்' என்று அங்குமிங்கும் ஓடிக்கொண்டு கத்திற்று. பையன்கள் அதையுங் கவனித்தார்கள். உடனே ராஜு என்கிற பையன் ஸார், ஸார். (Sir, Sir) உயரப்பாருங்கள், ஒரு அணிற்பிள்ளை அங்குமிங்கும் ஓடிக்கொண்டு வாலைத் தூக்கிக்கொண்டு, கீச், கீச் என்று நம்மெல்லோரையும் பார்த்துக் கத்துகிறது' என்று சொன்னான். உடனே உபாத்தியாயர் பிள்ளைகளைப் பார்த்து 'இதோ இருக்கிறவைகள் என்ன?' என்று அணிற்பிள்ளைகளைக் காட்டிக் கேட்டார். ஒருவன் 'எலிக்குஞ்சு, ஸார் (Sir)' என்றான். மற்றொருவன் 'இல்லை, ஸார் (Sir) மூன்று எலிக்குஞ்சுகள்' என்றான். மற்றொருவன் 'வாலைப் பாருங்கோ ஸார் (Sir)' என்றான். மற்றும் ஒருவன் 'இவைகள் எல்லாம் பொட்டை' என்றான். இப்படிப்பிள்ளைகள் சொல்லிக்கொண்டிருக்கையில் தாழ்வாரத்தில் மற்றொரு பெரிய அணிற்பிள்ளையும் வந்து, கீச், கீச், என்று அங்குமிங்கும் வாலைத்தூக்கிக்கொண்டு ஓடி கதறிற்று. மேலே இரண்டு பெரிய அணிற்பிள்ளைகளும் போட்ட கூச்சல் காதைத் துளைத்துக்கொண்டு போய் விட்டது. இராஜுவோ, வாயைத் திறக்காமல் கீழேகிடந்த குஞ்சுகளையும், மேலே கதறுகிற பெரிய இரண்டு அணிற் பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டிருந்தான். அணிற்பிள்ளைகள் அங்குமிங்கும் ஓடி இவர்களையும் குஞ்சுகளையும் பார்த்துக் கத்தினதையும் கவனித்து, 'இல்லை ஸார் (Sir) இல்லை, இவை எல்லாம் எலிக்குஞ்சுகள் இல்லை, இவையெல்லாம் அணிற்பிள்ளைக் குஞ்சுகள், உயரப்பாருங்கள் (Sir) ஸார்; இந்தக் குஞ்சுகள் அப்பாவும், அம்மாவும் கத்துகின்றன. நம்மெல்லாரையும் பார்த்து வைகின்றன. நம்மைப்பார்த்து பயந்து கீழே இறங்கமாட்டேனென்கின்றன. அந்த மூலையில் பாருங்கள் (Sir) ஸார், அதன் கூடுகூடத் தொங்குகிறது. அணிற்பிள்ளை கூடுதான் அது. நான் அணிற்பிள்ளைக் கூடு பார்த்திருக்கிறேன். காலேஜ் டென்னிஸ் கோர்டண்டை (Tennis Court) மரம் வெட்டித்தள்ளினபோது அந்த மரப்பொந்தில் இதே மாதிரி கூடு ஒன்று இருந்தது. அதில் இதே மாதிரி மூன்று அணிற்பிள்ளைக் குஞ்சுகள் இருந்தன. அந்தக் கூட்டிலும் இதேமாதிரி கந்தைத்துணி, உருமட்டை நார் எல்லாம் இருந்தன' என்று சொன்னான். உடனே பிள்ளைகளும் மேலே உற்றுப்பார்த்தார்கள். கந்தைத் துணி, உருமட்டைநார், வைக்கோல், இவையெல்லாம் தொங்கிக்கொண்டிருந்தன. உடனே ஒரு பையன், 'அதுதானே இவைகள் வீடு?' என்றான். 'இவைகள் எல்லாம் தூங்கிக்கொண்டிருந்தனபோல் இருக்கின்றன, தூக்கத்தில் கட்டிலிலிருந்துபுரண்டு குழந்தைகள் சிலவேளைகளில் விழுந்துவிடுவதுபோல் இவைகள் விழுந்து விட்டாற் போலிருக்கிறது' என்றான், மற்றொரு பையன், 'ராஜு, நாம் எல்லாரும் போவோம், இவைகளின் அப்பாவும் அம்மாவும் மேலே இருந்துகொண்டு நம்மை வாயில் வந்தபடி வைதுகொண்டு கதறுகின்றன. நாம் போவோம்' என்றான். உடனே ஒருவன், 'நாம் இவைகளை மெதுவாய் எடுத்து மேலே வைத்து விடுவோம்' என்றான். மற்றொருவன் 'மறுபடியும் விழுந்து விட்டால் எல்லாம் செத்துப்போய்



விடுமே' என்றான். மற்றொருவன் 'இங்கேயே இவைகளுக்கு ஒரு சின்னக் கூடுகட்டுவோம்' என்றான். மற்றும் ஒருவன் 'இவைகளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுப்போம்' என்றான். இப்படியே எல்லோரும் அவைகளிடத்தில் தங்கள் அன்பையும், கிருபையையும் காட்டினார்கள்.

கொஞ்ச தூரம் எல்லோரும் விலகிப் போய் இந்த பெரிய அணில்கள் என்ன செய்கின்றன என்று பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். உடனே அவைகள் அங்குமிங்கும் பார்த்துக் குஞ்சுகளண்டை ஓடிவந்தன. அதற்குள் மணியடித்தாய் விட்டது. உபாத்தியாயரும் வேறு வகுப்புக்குப் போக வேண்டியிருந்தது. அடுத்த பாடத்துக்குக் கொஞ்சநேரம் கழித்தாவது போயிருந்தால் நிறபாயிருக்கும். ஆனாலும் மணியாய் விட்டதே உடனே மணிச்சத்தத்தை கேட்டு அணிற் பிள்ளைகளும் பயந்து ஓடின. சேவகன் மணியடித்துவிட்டு இந்தக் குஞ்சுகளை வெகு ஜாக்கிரதையாய் எடுத்து மேலே கூட்டில் விட்டு விட்டான். பெரிய அணில்கள் கொஞ்சநேரம் கழித்துக் கூட்டண்டை போய்க் குஞ்சுகளை அணைத்துக்கொண்டு அவைகளுக்குத் தீனிகொடுத்து, கட்டி அணைத்து முத்தம் கொடுத்தன. பிள்ளைகளும் இரண்டாந்தரம் (Tiffin) சாப்பிட வீட்டுக்குப் போனார்கள்.

சாப்பிட்டுத் திரும்பி வந்ததும் பிள்ளைகள் 'ஐயோ! அணிற் குஞ்சுகள் என்ன ஆயிற்றோ; போய்ப் பார்ப்போம்' என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். தாழ்வாரத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கையில் ராஜுவின் மேல்வகுப்பில் படித்துக்கொண்டிருந்த ஒரு பையன், அடியில் வருமாறு சொன்னான்: "அடே, இந்த அணிற்பிள்ளைகளெல்லாம் பலே திருட்டுப் பையன்கள். இதோ நான் டிபன் (Tiffin) கட்டிக் கொண்டு வந்த துணியைப் பார், இரண்டு மூன்று ஓட்டைகள் அணிற்பிள்ளைகள் பண்ணியிருக்கின்றன பார். நான் வகுப்பில் சுவற்றின் ஓரத்தில் வைத்திருக்கும் அலமாரியின்மேல் டிபன் (Tiffin) வைத்து விட்டுப்போகிறேன். இந்தப் போக்கிரி திருட்டு அணில்பிள்ளை எப்படியோ திருட்டுத்தனமாய் ஜன்னல் இடுக்கால் வந்து ஓசைப்படாமல் வெகுசுகமாய் துணியைத் துளைத்து, இலையையும் தன் பற்களால் கத்தரித்து உள்ளே என்ன இருந்தாலும் சாப்பிட்டு விடுகிறது, யாராவது பார்த்தாலும் ஏதாவது சப்தம் கேட்டாலும் உடனே ஓட்டம் பிடிக்கிறது பார். ஒரே தாவலாய்த்தாவி, ஜன்னல் இடுக்கில் புகுந்து ஓடிப் போய் கொஞ்ச தூரம் ஓடி என்னைத் திரும்பிப்பார்க்கிறது. மறுபடியும் நான் விரட்டினால் ஓடிப்போகிறது, திரும்பி வந்து இரண்டு நிமிஷத்துக்குள் மறுபடியும் சாப்பிடவருகிறது! மறுபடியும் விரட்டினாலும், தெரியாமல் மறுபடியும் வந்து சாதத்தை ஓசைப்படாமல் திருட்டுத்தனமாய் சாப்பிடுகிறது. சப்தம் கேட்டதோ இல்லையோ, உடனே இரண்டு தாவலாய்த் தாவி கால் பந்தடிக்கும் (Foot Ball)



அணில்

தோட்டத்துக்கு ஓடிப்போய் அந்த மாமரத்தின் மேல் ஓடி எங்கேயாவது ஒளிந்து கொள்ளுகிறது."

மற்றொரு பையன் "அணிற் பிள்ளைகளுக்கு இன்னும் அநேக வித்தை தெரியும், கோடைகாலத்து லீவு கழிந்து, உபாத்தியாயர் மேசையைத் திறந்து டிராயரை (Drawer) இழுத்தார். உள்ளே பார்க்கணுமே, வேடிக்கை, இன்றைக்குப் பார்த்தோமல்லவா? அவைகளைப் பார்க்கிலும் கொஞ்சம் பெரிய குஞ்சுகள் மூன்று, திடீரென்று வாத்தியார் மடியில் குதித்து ஓடிப் போயின. எப்படி இதற்குள் வந்தது என்று பார்த்தால் டிராயர் (Drawer) கீழ்ப்பலகையில் துளை ஒன்று கை நுழையும்படி செய்திருந்தது. டிராயர்க்குள் ஏதோ கொட்டைகளை யெல்

லாம் தின்றுவிட்டு தூள்கள் கிடந்தன. வாத்தியார் மடியில் குதித்து ஒரே ஓட்டம் பிடித்து வெளியே ஓடிப்போயின" என்றான். மற்றொருவன், "என் தகப்பனார், மாந்தோப்பு குத்தகை எடுத்திருக்கிறார். அதில் ஜம்புநாக மாமும் காய்த்துப் பழமுமிருக்கிறது. இந்த அணிற்பிள்ளைகள் உபத்திரவம் பொறுக்க முடியவில்லை. இராத்திரியெல்லாம் மணியை அடித்துக்கொண்டு, பகலிலெல்லாம் 'தொண்டைத் தண்ணீர்' வற்றிப்போக இரைச்சல் போட்டு அணில் ஓட்டுகிறார். ஜம்புநாகக் காய்களுக்கெல்லாம் முள்ளோடிருக்கும் தாழை ஓலையைக் கட்டுகிறார். என்ன பண்ணி என்ன? அவைகள் தினம் பழத்தைத் தின்று, கொட்டையையும் கடித்துக் கீழேபோட்டுச் சேதம் செய்கின்றன" என்றான். மற்றொருவன் "வீட்டின் வாசலில் நெல் உலர்த்தினதும் ஆள்வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாலும் எப்படியோ வந்து எலி கொறிக்கிறது போல் நெல்லைக் கொறித்து நாசம் செய்கின்றன" என்றான். மற்றொருவன் "அணிற் பிள்ளைகளை சாப்பாட்டுக்கு வா என்று யாரும் கூப்பிடவேண்டாம். கூப்பிடுகிறதுமில்லை. சாப்பிடக் கூப்பிட்டால்தான் நாம் ஒருவர் வீட்டுக்கு போகிறது என்று இருக்கிறோமே, அந்த சமாசாரம் அணிற்பிள்ளைக்குக் கிடையாது. வரும்போது சில வேளை இருபது முப்பதுகூடப் பார்க்கலாம். களத்தில் நெல் உலர்த்தியிருந்தாலும் சரி; நல்ல மாமரம், கொய்யாமரம், இவைகளில் பழம் பழுத்திருக்கும்போது பார்த்தாலும் சரி; விரட்டினால் உடனே ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்குத் தாவி எல்லாம் ஓடிப்போய் விடும்" என்றான்.

மணி படித்தாய்விட்டது. பையன்கள் எல்லோரும் அவரவர்கள் வகுப்புக்குப் போய் விட்டார்கள். சுமார் மூன்றடித்து பத்துநிமிஷம் ஆனதும், உபாத்தியாயர் மற்றொரு வகுப்பை அழைத்துக்கொண்டு அடையாற்றங்கரையை நோக்கி பொருள் பாடம் (Observation Lesson) என வழங்கி வருகின்ற பாடம் கற்பிக்கப்போனார். போகும் வழியில் இருபுறமும் மாமரங்களும் அதற்கப்பால் வெகு சுகமான ஓரே பொட்டை வெளிபோல் விசாலமாய் பிள்ளைகள் கால் பந்து விளையாடும் நிலங்களுமிருக்கின்றன. பையன்கள் கூச்சல் போட்டுக்கொண்டும் பாடிக்கொண்டும் உல்லாசமாய்ப் போனார்கள். போகவே அந்தத் தோட்டத்திலிருந்த சில அணிற்பிள்ளைகள் ஓடின. பையன்கள் அவற்றை விரட்டிக்கொண்டு ஓடினார்கள். பையன்கள் ஓட, அணில் ஓட வெகு தமாஷாயிருந்தது. ஆனால் ஒரு அணிலாவது பையன்கள் கையில் அகப்படவில்லை. தாவித்தாவிக்கொண்டு ஓரே ஓட்டமாய் ஓடி அணில்களெல்லாம் அது அதற்குக் கிட்ட இருந்த மரங்களிலேறின.

பையன்கள் விடுகிறார்களா? மரத்தைச்சுற்றி ஒரே இரைச்சல் போட்டுக் கொண்டு கையைக் கொட்டிக் கொண்டு அணில்களை பயமுறுத்தினார்கள்.

அணில்களும் மரங்களில் கொம்புக்குக் கொம்பு தாவி, உயர உச்சாணிக் கொம்பில்போய், வாலைத் தூக்கிக்கொண்டு, கீச் கீச் என்று எல்லாம் ஒரேகத்தலாய் கத்திக்கொண்டு, மரத்துக்கு மரம் தாவிக்கொண்டே போயின. பையன்கள் தொண்டைத் தண்ணீர் வற்றிப்போகக் கத்துகிறதும் அவர்கள் ஓட, அணில்கள் ஓட, ஏதோ பந்தயம் போட்டுக்கொண்டது போல் தோன்றிற்று.

அதில் பெரிய அணில்களெல்லாம் கீச், கீச், என்று கத்திக்கொண்டு எல்லாருக்கும் எச்சரிக்கை பண்ணிக்கொண்டு ஓடிற்று. ஜாக்கிரதை, ஜாக்கிரதை. நம்முடைய பகையாளிகள் நம்மை விரட்டுகிறார்கள். ஜாக்கிரதை; நாம் ஓடி ஒளிந்து கொள்வோம் என்று எச்சரிக்கை பண்ணிக் கொண்டேயிருந்தது. இப்படி எல்லா அணில்களும் ஓடவே, ஒரு மரத்தின் நுனிக்கொம்பிலிருந்து, மற்றொரு மரத்தின் நுனிக்கொம்புக்குத் தாவுகையில் இரண்டு சிறிய அணில்கள் கீழே விழுந்துவிட்டன. உடனே ஒரு பையன் ஓடிப்போய் அவைகளைப் பிடிக்கப் போனான். அவன் போய் ஒன்றைத் தொட்டதும் "ஐயோ பாவம், செத்துப் போய் விட்டன போலிருக்கின்றனவே" என்று அவன் மனமிரங்கினான். போய்த் தொட்டதும் ஒரு அணில் பாய்ந்து கைக்கு அகப்படாமல் ஓடி விட்டது. மற்றொன்று ஓடுவதற்கு முன், தன் தலைமேல் இருந்த ஒரு குல்லாவைப்போட்டு மூடிப் பிடித்துவிட்டான். உபாத்தியாயரிடத்தில் வெகு சந்தோஷமாய்க் காட்டினான். அவரும் பிள்ளைகளையெல்லாம் கிட்ட அழைத்து



ஒவ்வொருவருக்கும் அதைக் காட்டினார். அப்போது உபாத்தியாயருக்கும் பிள்ளைகளுக்கும் அடியில் வரும் சம்பாஷணை நடந்தது.

பிள்ளை.—அணில் மேலெல்லாம் ஏன் மயிர் மூடிக்கொண்டிருக்கிறது?

உபாத்தியாயர்.—நீங்கள் தெருத்திண்ணையில் பனிநாளில் படுத்துத் தூங்கினால் உடம்பில் என்ன போட்டுக் கொள்வீர்கள்?

பிள்ளை. — குளிரடிக்காததற்கு மேலே போர்வை போட்டுக்கொள்வேன். தலைக்குக் கூட பனிக்குல்லா போட்டுக்கொள்வேன். குழந்தைகள் தூங்கினாலும் அப்பாவாவது, அம்மாவாவது, போர்த்து விடுவார்கள்.

உபா. —அணிற்பிள்ளைகள் இராத்திரியெல்லாம் மரப்பொந்துகளில் வசிக்கும். அது குளிரினால் கஷ்டப்படாமலிருக்க சுவாமி அதன் தேகத்துக்கு மயிராலேயே ஒரு போர்வை போட்டிருக்கிறார்.

பிள்ளை. —அணில் மேல் மூன்று கோடுகளிருக்கின்றனவே, அவையென்ன?

உபா. —முன் காலத்தில் ஸீதையைத் தேடி லங்கைக்குப்போக அணைபோட உதவி செய்ததால் ராமபிரான் அடையாளமாய்க் கையால் தடவினதாகச் சொல்வார்கள்.

பிள்ளை. —மரப்பொந்திலும், மரத்திலும் கூடு கட்டுகிறதே. அது எதால் கட்டும்?

உபா. —பள்ளிக்கூடத்துத் தாழ்வாரத்தில் அணில் கூடு பார்த்தீர்களே. அது எதால் கட்டப்பட்டிருக்கிறது?

பிள்ளை.—உரிமட்டை நார், கந்தைத் துணி, மெத்தென்றிருக்கிற சாமான்கள் ஏதாவது அகப்பட்டால் அவைகளால் கூடு கட்டும்.

பிள்ளை. —இவைகளெல்லாம் எதற்கு? மரப்பொந்துதானிருக்கிறதே கூடு ஒன்று எதற்கு?

உபா. —சரி, நீ வீட்டில் தரையில் படுத்துக் கொள்ளாமல், அம்மாவைப் பாய்வேண்டும், மெத்தை வேண்டும், தலையணை வேண்டுமென்கிறாயே? உங்கள் அம்மா குழந்தைகளைக் கீழே விடும்போதும் தொட்டிலில் விடும்போதும், ஒன்றும் அகப்படாவிட்டால், கொடியிலிருந்து புடவையோ, வேஷ்டியோ, எடுத்து மடித்துப் போட்டு அதில் குழந்தையை விடுகிறாளே? ஏன் அப்படி விடவேண்டும்?

பிள்ளை.—இல்லாவிட்டால் குழந்தைக்கு வலிக்காதோ? நான் தரையில் படுத்துக்கொண்டால் உடம்பெல்லாம் வலிக்காதோ?

உபா.—சரி, அப்படித்தானே அணிற்பிள்ளை தன் குழந்தைகளையும் காப்பாற்றும்—"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்று சொல்லக் கேட்டிருக்கிறீர்களா?

பிள்ளை.— அணில் எங்கே யெல்லாம் கூடு கட்டும்?

உபா.—அநேகமாய் மரப்பொந்தில்தான் கட்டும்—சிலவேளை, வீட்டில் ஏதாவது மூலையிலே பூனைக்கெட்டாத இடத்திலே கட்டினாலும் கட்டும்—அதன் காதுகளைப் பார்த்தீர்களா—நன்றாய் உற்றுப்பாருங்கள். உன்காதைப் பார்—என்காதைப் பார், அணிற்காதையும் பார்—நாம் எவ்வளவு பெரியவர்கள், அணில் எவ்வளவு சிறியது?

பிள்ளை.— அதற்குக் காது பெரிது—ஸார், ஏன் அதற்குக் காது அவ்வளவு பெரிதாயிருக்கிறது?

உபா.—பெரிதாயிருப்பதால், கொஞ்சம் சப்தம் பண்ணினாலும் அதற்கு உடனே காது கேட்கும்—அதன் பகையாளிகளிடத்திலிருந்து உடனே ஓடிப்போம். அதின் கண்களையும் நன்றாய் உற்றுப் பாருங்கள்.

பிள்ளை.—நல்ல கருப்பாயிருக்கிறது. நாலு ஐந்து உளுந்தைச் சேர்த்து வைத்தால் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு பெரிது. அதற்கிருக்கிற சரீரத்துக்குக் கண்களும் காதுகளும் மிகப் பெரியவை.

உபா.—ஏன் இப்படி இருக்கிறது? யாராவது சொல்லக்கூடுமா?

பிள்ளை.— கண் பெரிதாயிருந்தால் நன்றாய்த் தெரியும்—கொஞ்ச சப்தமாயிருந்தாலும் சீக்கிரம் பெரிய காதால் கேட்டுத் தப்பி ஓடுவது போல், பகையாளி தூரவந்தாலும்கூட நன்றாய்த்தெரிந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிடும்.

மற்றொரு பிள்ளை.—இதன் வாலினால் என்ன உபயோகம்?

உபா.—குளிர் அதிகமாயிருந்தால், நீங்கள் காலையும், கையையும் மடக்கி சுருட்டிக்கொண்டு படுத்துக் கொள்வதுபோல் வாலை மடக்கி மூஞ்சியெல்லாம் குளிரில்லாமல் மூடிக் கொள்ளும்.

பிள்ளை.—இந்த அணில், மரத்திலிருந்து விழும்போது வால் அகலமாயிருந்தாற்போ

லிருந்தது. இப்போது பார்த்தால் அவ்வளவு அகலமாய்த் தெரியவில்லையே, ஏன்?

மற்றொரு பிள்ளை.—இந்த அணில் மரத்திலிருந்து விழுந்தபோது, ஒரு பட்சி மரத்திலிருந்து கீழே வந்துட்கார இறக்கைகளை விரித்துக்கொண்டு வந்து தங்குவது போலிருந்தது ஸார்.

மற்றொரு பிள்ளை.—நம்முடைய காலேஜில் மாட்லி (Madeley) துரை ஏரோப்ளேனி (Aeroplane) லிருந்து தரையண்டை வரும்போது ஏரோப்ளேன் இறக்கைமாதிரி இருந்தது.

உபா.—சரி, சரி, கெட்டிக்காரப் பையன்கள் நீங்கள். இப்படித்தான் விஷயங்களை உற்றுப்பார்க்க வேண்டும். அநேக விஷயங்களை இதேமாதிரி நீங்கள் கவனித்து உற்றுப்பார்த்தால் மிக கெட்டிக்காரர் ஆவீர்கள். அணில் ஒரு மரத்திலிருந்து மற்றொரு தாழ்ந்த மரத்துக்குத் தாவும்போது, பட்சிகள் தங்கள் இறக்கைகளை உபயோகிப்பதுபோல் அணிலும் தன் வாலை உபயோகிக்கும்.

பிள்ளை.—அதன் பகையாளிகள் எல்லாம் யார்?

உபா.—பூனை அணிலுக்குப் பகையாளி. காக்கைகள், தோட்டத்தில் சின்ன அணிற்பிள்ளைகள் அகப்பட்டால் அவற்றைக் கொத்தித் தாத்தித்தொந்திரவு செய்யும்—பெரிய பட்சிகள் எல்லாம் அதைத் தொந்திரவு செய்து அகப்பட்டால் சாப்பிட்டுவிடும். கொட்டைப்பிராந்து, ஆந்தை, கருடன், கழுகு, இவைபோன்ற பட்சிகள் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து ஏந்திக்கொண்டுபோய் மூக்கால் கொத்திக் கொன்றுவிடும். இவைகளைக் கண்டதோ இல்லையோ, உடனே ஓடி, கிட்ட இருக்கும் மரத்திலேறி பொந்திலாவது, மரக்கிளைகளில் இலை அடர்த்தியாயிருக்கிற இடங்களிலாவது ஒளிந்துகொள்ளும். காலையில் எப்போது அணில் இறங்குமென்று நரி மரத்தடியில் காத்துக்கொண்டிருக்கும்.

பிள்ளை.—அணிற்குஞ்சுகளுக்கு யார் சாதம் போடுவார்கள்?

உபா.—உனக்கு உன் அப்பா, அம்மா சாதம் போட்டு வளர்ப்பதுபோல், அப்பா அணிலும், அம்மா அணிலும் அதன் குழந்தைகளுக்கு பழம், கொட்டை இவைகளை வாயில் கௌவிக்கொண்டு பல்லால் கொறித்து அவைகளுக்குக் கொடுக்கும்.

பிள்ளை.—ஒரு அணிலுக்கு எத்தனை குழந்தைகள்?

உபா.—சிலவேளை இரண்டு, சிலவேளை மூன்று, சிலவேளை, நான்குகூட ஒரு அணிலுக்குப் பிறக்கும்.

பிள்ளைகள்.—இவைகளுக்கு என்ன பெயர், ஸார்?

உபா.—நீதான் இதற்குப் பெயர் இட்டுக்கூப்பிடு.

பிள்ளை.—இது அடர்ந்த மயிருள்ள அணில்.

மற்றொரு பிள்ளை.—ஓடினது கருப்பு அணில்.

மற்றொரு பிள்ளை.—குதித்துக் குதித்து விளையாடும் அணில்.

“சரி, கெட்டிக்காரப் பிள்ளைகள். மணியடித்தாய் விட்டது. போவோம், வாருங்கள். பையா, இந்த அணிற் பிள்ளையை அந்த மரத்தடியண்டை விட்டுவிடு- அதன் தாயும் தகப்பனும் அதைத் தேடும்” என்று வாத்தியார் சொல்லவே, பையன் அதை எடுத்துக்கொண்டு மரத்தண்டை விட்டுவிடுவதுபோல் போய், அதை விடாமல், ஜாக்கிரதையாய் வீட்டுக்கு அன்று இராத்திரி கொண்டுபோய் ஒரு சின்னக் கூட்டில் விட்டடைத்தான். அந்தக் கூண்டில் விட்டு, நெல், வாழைப்பழம், ஜலம், கடலைக் கொட்டை, பட்டாணிக்கடலை எல்லாவற்றையும் போட்டான். அணிலோ அவற்றில் சிலவற்றைக் கொறித்துவிட்டு, உடனே ஓட ஆரம்பித்தது. எவ்வளவு பாடுபட்டும் ஓடமுடியவில்லை. அன்றிரவு முழுதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. இராத்திரியெல்லாம் தாய் அணிலும் தகப்பன் அணிலும், தேடாத விடமெல்லாம் தேடி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அதனுடன் பிறந்த மற்றக்குஞ்சுகளும் அதைக் காணாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அந்த அணிலை எடுத்துவந்த பையனுடைய தாயாரும் தகப்பனாரும் பையனைக் கோபித்துக்கொண்டார்கள். சொன்னபடி காலையில் எந்த மரத்தடியில் அணிற் பிள்ளையைப் பிடித்தானோ அந்த மரத்தடியில் கொண்டுபோய் விட்டுவிட்டான். கூட்டைத் திறந்தானோ இல்லையோ, ஒரே பாய்ச்சலாய் ஓடி மரத்திலேறி, கொம்புக்குக் கொம்பு தாவி, கத்திக்கொண்டே போயிற்று. உடனே மேல் கிளையிலிருந்து பெரிய தாய் தகப்பன் அணில்

(இதன் தொடர்ச்சி 415-ம் பக்கம்.)



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 50. செய்வன திருந்தச்செய்

செய்யவேண்டியவைகளை நன்றாகச் செய்துவிடவேண்டுமென்பது இதன்பொருள். செய்யவேண்டியவையாவை, நன்றாகச் செய்வது என்றால் என்ன, என்ற கேள்விகள் பிறக்கும். செய்யவேண்டியவைகள் இன்னவை என்பதை நமது புத்திநுட்பத்தால் மாத்திரம் ஸமயஸந்தர்ப்பங்களுக்கு இசைய, நாமே தீர்மானித்துக்கொண்டுவிட முடியாது. இவைகளை ஸரிவர உணர்ந்து புத்திமான்கள் ந்யாயமாக நடப்பதற்கு உதவியாக விருக்க நமது ருஷிகள் சாஸ்திரங்களான ஸ்மிருதி புராணங்களை வேதவிஷய விளக்கமாக தாம் ஸமாதியில் ஞானதிருஷ்டியில் கண்டபடி வெளியிட்டுள்ளார். இவைகளின் உதவியின்றி செய்வன இன்னவை என்று தீர்மானிக்கவே முடியாது. இவைகளில் உள்ளவை இன்னவை என்று ஓதியுணர்ந்த பின்னர் தகுந்த யுக்திகள் மூலமாக நாம் இவைகளின் பொருத்த உபயோகங்களையும், இவைகளால் ஏற்

(414-ம் பக்கத் தொடர்ச்சி.)

கள் ஓடிவந்து கூட அழைத்துக் கொண்டுபோய், கட்டி அணைத்து முத்தங்கொடுத்து ஆகாரங்கொடுத்தன, ‘குழந்தை, எங்கே போயிருந்தாய் நேற்று இராத்திரி, நாங்கள் உன்னை எங்கேயெல்லாம் தேடினோம், ராத்திரி தூக்கமில்லை, ராத்திரியெல்லாம் நீ எப்படி எங்களை விட்டிருந்தாய்? எங்கே சாப்பிட்டாய்? இனி இப்படிக் கொஞ்சகாலம் வரையில் போகாதே’ என்று சொல்லின. உடனே சின்னக்குஞ்சு நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லி அந்தப் பையனை தாயார் தகப்பனார் கோபித்ததையும், தாய் தகப்பனை விட்டுப்பிரித்துக் கூட்டில் அடைத்தால் எப்படிப் பையன் வருந்துவானோ அப்படித்தானே எல்லாருக்குமிருக்கும் என்று அவர்கள் அந்தப்பையனுக்கு சொன்ன புத்திமதியையும் சொல்லிற்று. பிறகு அந்தக் குஞ்சுகள் தாய் தகப்பன் சொன்னதைக் கேட்டுச் சுகமாய்வாழ்ந்தன.

C. S. சுந்தரம் ஐயர், பி.ஏ., எல்.டி.

படும் பலவித பலன்களையும் நன்கு ஆராய்ந்து திருப்திபடையலாம். இதுபற்றியே, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும், கீதை 16-ம் அத்தியாயம் 23, 24-ம் ச்லோகங்களில்

சாஸ்திரத்தில் சொற்றவிதிதன்னைத் துறந்தவனே
சீர்த்தியில்தன் இச்சை வழிச்செல்கின்றான்—சாற்றுமவன்
சித்திபெறல் இல்லன் ஸுகம்பெறலும் இல்லன்சேர்
முத்திபெறல் தானுமிலன்.

ஆதலினால்செய்தல் செயாதொழிதல் ஆமிவைக்குத்
தீதில் பிரமாணமது சாஸ்திரமே—போதவிழும்
தார்மார்ப சாஸ்திரத்தில் சாற்றுநெறி தேர்ந்திங்குச்
சீருடன் நீ செய்தல் கடன்

என்று செய்வனவற்றை அறியும் வழியை விளக்கிக் காட்டியுள்ளார். இந்த ஆராய்ச்சியிலிருந்து திருந்தச் செய்தல் இவ்வாறு என்பதும் ஒருவாறு வெளிப்படும். செய்வனவற்றை வெளியிடும் சாஸ்திரங்களில் எவ்வாறு அவைகளைச் செய்து முடிக்கவேண்டும் என்று குறிக்கப்பட்டுள்ளதோ, அவ்வாறே இடையில்வரக்கூடிய துயரங்களில் அழுந்தி கலங்காதும், ஸுகங்களில் மூழ்கி மயங்காதும் செய்துமுடிப்பதே திருந்தச்செய்வது. சாஸ்திரங்களில் உள்ள விதி நிஷேத விஷயங்கள் எல்லாம் வைதிகமான ஜாதிவர்ணாச்ரம ஸ்திரீ புருஷ தர்மங்களைப்பற்றியே நிற்பதால், செய்வன திருந்தச்செய் என்பதற்கு, ஜாதிவர்ணாச்ரம ஸ்திரீ புருஷதர்மங்களை முன்னிட்டு சாஸ்திரங்களில் இன்ன இன்ன தருணங்களில் இப்படி இப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று காட்டியுள்ளபடி கஷ்டநிஷ்டூரங்களால் வருந்தாதும் ஸுகங்களால் மயங்காதும் வழுவாது நடத்திச் செய்து முடித்து விடவேண்டும் என்று பொருள் கூறவேண்டும். செய்வனவற்றை லௌகிகம், வைதிக காம்யம், வைதிக நிஷ்காம்யம் என மூன்றுவகையாகப் பிரித்துக்கூறி இப்பொருளைப் பின்வருமாறு விஸ்தரிக்கலாம். இவைகளுள் முறையே முன்னதன் பழக்கம் பின்னதற்கு நம்மைக்கொண்டு சேர்க்கும் ஆற்றலுடையதாகும்.

(1) லௌகிகக் கடமைகளை நன்றாகச் செய்:—லௌகிகக்கடமை என்பதனுள், பணஸம்பாத்யம், குடும்ப ஸம்ரக்ஷணம், பரிவாரரக்ஷணம், பணச்செலவு, இவைகளைச் சேர்த்து தற்காலத்தில் கூறப்படும் நாகரிகவாழ்க்கை எல்லாவற்

றையும் அடக்கிவிடலாம். வைதிக மதத்தைப் பற்றி நிற்கும் நமக்கு இவைகளும் அடுத்த படியில் கூறப்போகும் வைதிகக் கடமைகளாகவே இருக்கும்படி நமது சாஸ்திரம் செய்துவிட்டன. இக்காலத்தில் சாஸ்திரங்களைக் கவனியாது லோகானுபவ மாத்திரமாக இவைகளை ஒழுங்கு படுத்தி நடத்தும் உலகத்தவர்களுடன் நமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கப் பழக்கத்தால் இவைகளை நம்மவருள் பெரும்பாலரும் அவர்களைப்போலவே சாஸ்திர ஸம்பந்தமின்றி ஒருவாறு நடத்தத் தொடங்கிவிட்டனர். இதுபற்றியே இதை வேற்றுமைப்படுத்தி இங்கு கூறப்படுமாயினும் இவைகள் எல்லாம் நமது சாஸ்திரங்களில் காணப்படும்ஜாதிவர்ணாச்ரம ஸ்திரீ புருஷர்களுக்கு எல்லாம் பொதுவாக உள்ள தர்மங்களில் அடங்கிவிடும் என்பதை நாம் மறவாதிருந்து இதை வேறாக இங்கு ஆராயவேண்டும். முன்காட்டப்பட்ட லௌகிகக்கடமைகளை திருந்தச் செய்வதாவது குறித்தகாலம், குறித்தவிதம் தவறாது சொற்றவறாது பொய், கொடிய ஆசை, மாறாக மறைத்துக் கூறுவது இவைகளில்லாது நேர்மையாக நடந்து கொள்வதே. இக்காலத்து ஸந்மார்க்கம் எல்லாம் இந்த வியாபார நன்னடக்கை மாத்திரம் தான். இதை விட இக்காலத்தவருக்கு வேறு நன்னடக்கை விஷயத்தில் செய்வனவற்றை திருந்தச்செய்யும் விஷயம் விளங்கவேமாட்டாது. உலகஸுகம், செல்வாக்கு, கீர்த்தி இவைகள் எல்லாம் நேர்மையால் ஏற்படுவதால் செய்வனவற்றை திருந்தச் செய்யவேண்டும் என்பதுதான் இக்காலத்தவர்கருத்து. இப்படி இல்லாதிருப்பினும் வந்துள்ள கீர்த்தியாதிகள் ஜனங்கள் நம்பிக்கையால் குறையாதிருக்குமாயின் பின்னர் நமது ஸுக சௌகரியங்களுக்கு ஏற்ப கண்டபடி ந்யாயாதி வரம்புகள் மீறி ரஹஸ்யத்தில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதுதான் இந்தவித திருந்தச்செய்வதன் முடிவாகிவிடும். இப்படி திருந்தச் செய்து தேறி உறைத்த யோசக்கார மஹான்களே இக்காலத்தில் அதிகம். இவர்கள் திருந்தச்செய்து இதோடு நின்றுவிடுவதல்ல. வக்கீல் நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடுவதும், வியாபாரி புளுகிப் பொருள் சேர்ப்பதும், வைத்யன் வ்யாதிவளர்த்து தனவானுவதும்,உபாத்யாயர் செல்வவந்தர் பிள்ளைகளை கைதூக்கிவிடுவதுவும், மேல் உத்யோகஸ்தன் கீழோர் நன்மைக்காக அவர்கள் லஞ்சபாகத்தை ஏற்பதும், இவைபோன்ற தத்காலக் கொடிய நாகரிக வாழ்க்கையில் இணங்கி நடக்கவேண்டியவையானவைகள் எல்லாம் அவனவன் செய்யவேண்டியதைச் செய்தேயாகும் என்ற அபிப்ராயம் பாவி திடப்பட்டு விட்டது. இம்மாதிரி சாஸ்திர விரோதமாக இல்லாதவைகளைப் பின்பற்றவேண்டும். மோக்ஷ வழிக்கு நேரே ஸாதனமாகா விடினும்,சாஸ்திரவிரோதமாக இல்லாதவைகளைக் கைக்கொண்டு ஒழுகுவதே வ்யவஹாரத்தில் சாஸ்திரங்களை அதிகமாகக் கவனியாது லௌகிகத்தில் செய்வனவற்றைத் திருந்தச் செய்வது. இம்மாதிரியான லௌகிக விஷயங்களில்கூட நமது ஸ்மிருதிகள் புகுந்து, மேல்வரும் மோக்ஷ வழிக்கு ஸாதகமான வைதிக காம்ய நிஷ்காம்ய கர்மாக்களுக்கு தகுந்தபடி உதவும்படி அவைகளை ஒழுங்குபடுத்தியுள்ளன. ஸ்மிருதிகள் கூறும் பொதுச் சிறப்பு ஒழுங்குகளுக்கு இணங்கி வைதிக மதஸ்தர்களான நாம் ஒழுகமுயலவேண்டும். மற்றவர்களோ பொது தர்மங்களுக்கு விரோதமில்லாது மூடமாகவே நல்லவழியில் முயன்று செய்வன திருந்தச்செய்யவேண்டும். இப்படி ஒழுங்காக இராவிடில், உலக விஷயவ்யவஹாரமே ஸரிவர நடவாமல் தடைப்பட்டுநின்றுவிடும். ரயில்முதலிய ஒழுங்கானஏற்பாடுகளுக்குத் தகுந்த தருணத்திலும், வ்யாபாரங்களில் மாறு விலை முதலியவைகளை ஏற்படுத்துவதிலும், வைத்யம் வக்கீல் வேலைமுதலியவைகளில் நியாய விரோதமாக நடவாதிருப்பதிலும் முயலாதிருந்தால் பெருங்குழப்பமும் ஸம்பந்தப்பட்டவர்களுக்கு கையற்ற நிலையும் அவமானமுந்தான் முடிவில் ஏற்படும். ஆகவே, கேட்டை விலக்கவும், ஸுகத்தை அணுகவும் நல்ல வழி நடப்பதே லௌகிகத்தில் செய்யவேண்டியவற்றை நன்றாகச் செய்ததாகும்.

(2) செய்யவேண்டிய காம்ய கர்மாக்களை திருந்தச் செய்:—உலகில் எவ்வளவு முயன்றும் அநேக தருணங்களில் ஸந்மார்க்கத்தால் துக்கத்தை விலக்கி ஸுகத்தை அடைய முடியாமல் போய்விடுகிறது. இந்தத் தருணங்களிலும் துக்கங்களை ஒருபொருட்டாக மதியாது ஸுகங்களில் அற்பமெனக் கருதி முழுகாது,



வைதிகமார்க்கங்களில் விஷயஸுக விருப்பத்துடனே முயல்வர் நம்மவருள் நம்பிக்கையுடையோர்.இந்த வழி நோக்கினுல் ஜாதிவர்ணாச்ரம ஸ்திரீபுருஷ தர்மங்களுக்கேற்பநம்மவர்நடந்தீரவேண்டும். முன்னர் கூறியபடி பொதுவாக நல்வழி நடப்போர்கள் எவராயினும் ஜன்மாந்தரத்தில் வைதிக வரம்பான ஜாதியாதிகளுள் வந்து பிறந்து பொதுவாயுள்ள ஒழுங்கோடு சிறப்பாயுள்ளவைகளையும் அனுஷ்டிக்கும்படியான ஆற்றலைப் பெறுவர். விதுரர், தர்மவ்யாதர் முதலிய தாழ்ந்த ஜாதி மஹான்கள் இவ்வரம்பை மீறி நடவாது செய்வன திருந்தச் செய்தவரே. நமது பெரியோர்களான ருஷிகளும் இவ்வழிநடந்தவரே. இவ்வரம்பு மீறிநடந்தசம்பூகன் என்ற சூத்திரமுனியை ராமரே போய்க் கொன்று ஸரிப்படுத்தவேண்டிவந்தது. மேல் ஜாதியான்கீழ்ஜாதியானுக்குத் தன்தருமத்தை நடத்திவைத்து தாழ்ந்தநிலையை அடையவேண்டிவந்தது.வைதிககர்மாக்களை ஒழுங்காக அனுஷ்டிப்பதே செய்வன திருந்தச் செய்வது. இதனுல் நல்லவாஸனை கெட்டவாஸனைகளை அழுத்தித் தலைதூக்கி மனம் சுத்தப்பட்டுக்கொண்டே வரும். பழைய பாபங்கள் நீங்கிக் கொண்டே வரும். கர்மபந்தம் தளர்ந்து கொண்டேவர ஸ்வர்க்கவாஸம் நல்ல குடிப்பிறப்புகீழே நழுவாமை ஆகிய நல்ல நிலைகளேவரும். கொடிய நிலைகள்வர இடம் குறைந்து கொண்டே வரும்.

(3) செய்யவேண்டிய கர்ம உபாஸனை ஞான நிஷ்டையாதிகளை திருந்தச் செய்:—முன் குறிக்கப்பட்டுள்ள வைதிககாம்ய கர்மாக்களையே ஸுகம் என்று மேல் உண்டாகவேண்டும் என்ற ஆசையைவிட்டு, விஷய ஸுகத்திற்கு அதன் துக்கத்தன்மை உணராது ஆசைப்படும் மனதின் குற்றம் நீங்கவேண்டும், விஷயஸுக ஆசையின்மையே கைகூடவேண்டும் என்ற ஆவலுடன் (இதற்கு வைராக்ய முமுக்ஷுத்வம் என்று பெயர்,) அது கைகூட ஈசாக்ஞையால் ஏற்பட்டுள்ளவைகள் வைதிக கர்ம உபாஸனை ஞானநிஷ்டைகள், அவைகளைச் செய்யாதிருப்பின்பாபமாயினும் ஸுககாமனையுடன் செய்தால் ஸ்வர்க்கம் கிடைக்குமாயினும், இந்த மேலான மனம் ஓயும் நிலைக்குக் கொண்டுசேர்க்கக் கூடிய ஈசன் ஆராதனைகளே அவைகள் என்ற ரஹஸ்ய உணர்வுடன் அனுஷ்டித்தால் நேரே மோக்ஷ ஸாதனமாகி விடும் அவை எல்லாம். இப்படிக்கருதி வைதிக கர்மாக்களை காமிகள் செய்வது போன்ற ஆவல்வேகத்துடன் சற்றேனும் வேதவிதி வழுவாது செய்து முடிப்பதே செய்வனவற்றை திருந்தச் செய்வது. இப்படிப்பற்றி நடப்பதற்கு இடையூறுகள் பல வரும். பலன் உடனே தோற்றாமலிருக்கலாம், காமிகளாயும், உலக விஷயப்பற்றுடனும் திருந்தச் செய்பவர்களுக்கு எளிதில் பலன் வரலாம், திடமென்று நாம் வைராக்யத்துடனிருப்பதால் மனம் சுத்தப்பட்டு விட்டது, வேத ஒழுங்கு முதலிய விதிவரம்புகள் நமக்கு வேண்டியதில்லை, நாம் எப்படி நடந்தாலும் தாமரைஇலை தண்ணீரைப் போல அவை நம்மை ஒட்டவே மாட்டா, லோகாநுக்ரகம் செய்து உபகரிப்பதற்காகவே நாம் வைதிகவழி இருத்தல் வேண்டும். இது நடவாத இடங்களில் எப்படி வேண்டுமாகிலும் இருக்கலாம், புண்யம் நமக்கு அனுவசியம், பாபம் நம்மை என்ன செய்யும் என்ற இந்த முகாந்தரங்களால் கலக்கமும் இறுமாப்பும் எழுந்து மனம் கலங்கிவிடும். இக்கலக்கத்திற்கு ஆளாகிபெரியசாமியாராக விளங்கிவரும் மஹான்கள் அநேகர் இக்காலத்தில் ஈச்வரனுக்குச் செய்யவேண்டிய பூஜைகளைத் தாம் கூசாது ஏற்று காளைகள் போல வளைய வருகின்றனர். இவர்களை எல்லோரும் செய்வன திருந்தச் செய்தவராகக் கொண்டு தமது கர்மாக்களைவிட்டு பக்திகளை தெருக்கூத்தென்னும் பஜனையிலாவது, சாமியார் ஆராதனம் என்ற மனுஷ்யவழிபாட்டிலாவது சிதறவிட்டு ஞானம்பிதற்றி வைதிகவழியை அணுகித்திருந்தச் செய்வனவற்றைச் செய்ய சக்தியற்றவர்களாகி விட்டனர். ப்ரபஞ்சம் ஒருவனுக்கு வேறாகத்தோற்றிக் கொண்டிருக்கும் வரையில் வைதிக விஷயத்தில் நிஷ்காம்ய இயற்கை போலப் பின்பற்றும் ஆற்றல் விலக இடமேயில்லை என்பதை வற்புறுத்த வந்ததே இந்த ஸூத்திரம். ஸகல கர்ம ஸர்வஸங்கம் இவைகளை விட்ட ஸந்யாஸிக்குக்கூட வைதிகமாக செய்யவேண்டுவன சில உண்டு. அவைகளை அவன் திருந்தச் செய்துகொண்டேதான் இருப்பன் என்பதைக் குறிக்கும் இந்தஸூத்திரம். மற்றவர்களோ அவன் அனுஷ்டிக்கும் வைதிக கர்ம உபாஸனை ஞானுதிகளை முயற்சியை முன்னிட்டு அனுஷ்டிக்க வேண்டும் திடமாக. அப்

(இதன் தொடர்ச்சி 418-ம் பக்கம்.)

# காந்தி தம்பதிகளின் சென்னை விஜயம்

## GANDHIS AT MADRAS

பாரத மாதாவின் அரிய புத்ராராய் விளங்கி தம் தாய்நாட்டிற்கு அகத்தும் புறத்தும் எங்கணும் ஊறு படாமல் காப்பதினிமித்தம் தம் வாணாளைச் செலவிட ஸங்கல்பம் செய்து கொண்டுள்ள மஹா தீரரான ஸ்ரீமான் காந்தியைப்பற்றிக் கேள்விப்படாதவரும் உண்டோ? தென் ஆப்ரிக்காவில் இந்திய புத்ரர்கள் பலவிதகொடுமைகளுக்கும் சிறுமைகளுக்கும் ஆட்களாய் உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கும் தருணத்தில்அவர்களுக்குத் தலைவராயும்உபதேசகராயும் முன்னின்று அவர்களது உபத்திரவம் நீங்கும் வரையில் அவர்களுடன் எல்லாஅவஸ்தைகளையும் அநுபவித்து தமது பொறுமையினாலும் அதன்வழியாய் ஜயமடையும் முறைமையினாலும், தென் ஆப்ரிக்கா இந்தியரின் நிலைமையைச்சீர்ப்படுத்திஇந்தியரும்உயர்ந்த நாகரிகத்தை யடைந்த நாட்டினர் என்பதை உலகிற்கே விளக்கிக் காட்டியுள்ளார் என்பதை யாம்கூறவும் வேண்டுமோ? பூர்வ காலத்தில் தர்மம் ஸத்யம் இவைகளின் பொருட்டு பலவித கஷ்டங்களை அநுபவித்து கடைசியில் வெற்றியடைந்த ஹரிச்சந்த்ரன் நளன் இவர்கள் போன்றும் தம் கஷ்டங்களுக்கு மாறாக கேவலம்மேனாட்டார்போல சரீரபலத்தைஉபயோகிக்காமல் தம் மனோதிடத்தாலும் ஆத்மசக்தியாலும் தங்கள்மீது எதிர்த்துவரும் கொடுங்கஷ்டங்களை ஒழித்தார்கள் ஸ்ரீமான் காந்தியும் அவர் பத்னியும் தென் ஆப்ரிக்காவில். இத்தகைய சிறப்பு வாய்ந்தவர்கள் சென்னைக்கு சமீபத்தில் விஜயம் செய்தது சென்னை வாசிகளின் பாக்யமே!

அவர்கள் இங்குவந்தபொழுது ஜனங்களுக்கு ஏற்பட்ட உற்சாகத்திற்கும் மனக்கிளர்ச்சிக்கும் அளவேயில்லை. மேனாடுகளுக்குச் சென்று இந்தியாவின் வேதாந்தமதக் கொள்கைகளைப்பறையறைவித்து யதிசரேஷ்டராய் விளங்கியஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தர் 1897-ம் வருஷம் சென்னைக்கு வந்திருந்தகாலத்தில் நமது ஜனங்களுக்குள் ஏற்பட்ட குதூஹலத்தையும் உற்சாகத்தையுமே இதற்கு ஒப்பிடலாம். பத்தொன்பதாவது நூற்றாண்டில் வந்துதித்துப்பிரகாசித்த அனேக இந்திய தேசாபிமானத் தாரகைகளில் எண்ணிறந்த நமது எளிய ஸஹோதரர்களுக்கு ஞானஸம்பத்தும், கல்வித்தேனும், மனோற்சாகப் பெருமழையும் ஏற்பட்டாலொழிய இந்தியதேசம் முன்னுக்கு வரமுடியாதென்ற பெரிய அபிப்பிராயத்தை முற்றும் கைக்கொண்டவர்கள் ஸ்ரீமத் விவேகாநந்தரும் ஸ்ரீமான் காந்தியும். "நம்மிந்தியதேசம் உண்மையாகமேன்மையடையவேண்டுமானால் கல்வியறிவும், நியாயமும் பயிரிடுங் குடியானவனுடைய வீட்டுவாசலையடையவேண்டும்; இவ்விரண்டு அரிய நன்மைகளையும் அக்குடியானவன் பெறவேண்டியதாயின் அதிகதூரப் பிரயாணமும் மிகுந்த பொருட்செலவும் அவனுக்கு ஏற்படக்கூடாது" என்று ஸ்ரீமத்விவேகாநந்தர் ஓர் உபன்யாஸத்தில் கூறியுள்ள அபிப்பிராயத்தைக் கடைப்பிடித்தவராய் ஸ்ரீமான் காந்தியும் நம் தேசப் பொதுஜனத் தலைவர்களுடன் இவ்விஷயத்தில் தாம் மாறுபடுவதாக மிகபஹிரங்கமாயும் சுருக்கமாயும் சமீபத்தில் வெளியிட்டார்.

இவரையும் இவரைநிழல்போல் தொடர்ந்து எல்லாவழிகளிலும் எல்லா நிலைகளிலும் மனங்கோணாது பதிபக்தி செய்துவரும் இவர் பத்னியையும் நல்வரவேற்றுபசரித்து கௌரவப்படுத்த சென்னைவாசிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்தது மிகவும் பாராட்டற்பாலது. பொது ஜனங்களும் தனிச்சங்கங்களும் வக்கீல்களும் மாணவர்களும் இந்துக்கள் முஹம்மதியர் கிறிஸ்தவர்களும் எல்லோரும் ஒருமித்தும் தனித்தனியும் காந்தி தம்பதிகளை உபசரித்தது சென்னை ராஜதானியும் மஹான்களுக்கு ஸேவை செய்வதில் பின் வாங்கியதல்ல என்பதைச் குறிக்கின்றது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸங்கத்திற்கும் ஏதாவது சிறந்த உபதேசம் காந்தி செய்ததும் தவிர, அவைகளுக்கு உதாரணங்களைத் தம் அநுபவத்திலிருந்தே எடுத்துக் காட்டினார். அவரது தேசாபிமானத்திற்கு எல்லை என்பது கிடையாது அத்தேச மதபாஷாபிமானங்கள் வெறும் வார்த்தைகளல்ல, ஒவ்வொருவராலும் நேராகக் காரியங்களாகச் செய்து முடிக்கக் கூடியவைகள் என்பதை மிகவும் தெளிவாக எடுத்து சொல்லித் தாமாகவே நடந்தும் காட்டினார்.

எங்கும் புகழ்பெற்று விளங்குகின்ற இவரது தாழ்மையும் அடக்கமும் சாந்தமும் என்னே! தனவந்தராயும் மிகவும் கௌரவமான குலத்தில் பிறந்தவராயுமுள்ள இவர், முற்காலத்தில் மானிடகோடிகளின் கொடுமைகளை நீக்கவந்த மஹா அவதார புருஷர்கள் போல் ஸாதாரண ஜனங்களுடன் தாமும் ஒருவராயிருந்து அவர்களுடன் அளவளாவி அவர்களுக்காகப் பாடுபடவேண்டி அதற்கறிகுறியாய் மிகவும் ஸாதாரண உடை உடுத்து புகைவண்டியிலும் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்து வந்தனரென்றால் நாம் என் சொல்வது! பஹிரங்கமாய் மேடைகளில் பேசுவதும் ஆரவாரம்செய்வதும் உலகத்தில் மற்றவர் மெச்சும்படியாக நடப்பதுமாயிராமல்

(இதன் தொடர்ச்சி 433-ம் பக்கம் பார்க்க.)

---

(417-ம் பக்கத் தொடர்ச்சி.)

பொழுதுதான் மஹான் நிலை நமக்கும் வரும். ஆதலால் எந்நிலையிலிருப்பினும் அதற்கேற்ப சாஸ்திரங்களில் என்ன செய்யவேண்டும் என்று குறிக்கப்பட்டுள்ளதோ அதை அவைகளில் கண்டபடி வழுவாது ரஹஸ்ய நோக்கம் உணர்ந்து நடத்தி விடுவதே செய்வன திருந்தச் செய்வதாகும்.



# ஆரிய மித்திரன்

அல்லது

## வாழ்க்கையின் உண்மைநிலை

## ARYAMITRAN

### (A short Story)

அனேக மாயிரம் வருஷங்களுக்கு முன்னால் அங்கநாட்டில் ஆரியமித்திரன் என்னும் அரசன் ஒருவனிருந்தான். மன்னுயிரைத் தன்னுயிரெனக் கருதுவதில் மனுமாந்தாதாவுக்குப் பின்னிட்டவனல்லன்.

"தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம் பயப்பில்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதியுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்குகேள்வி
ஆயப்புகுங்கா லறிவொக்குமெவர்க்குமன்னோ" (ள்வி

என்று கம்பர் தசரத சக்கரவர்த்தியைப் புகழ்ந்தது நமது ஆரியமித்திரனுக்கும் நன்கு பொருந்தும்.

வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர் உள்ளமும் ஒருவழி ஓடும்படி ஆணை செலுத்திய ஆரியமித்திரனுக்குத் திடீரென்று அகாலமிருத்யூ நேரவிருந்தது. வேட்டைக்குப்போய்க் களைத்துத் தாகவிடாயோடிருந்த தருணத்தில், மிகவும் குளிர்ந்த தண்ணீரைப் பருகியதால் ஜ்வரம் கண்டு படுத்த படுக்கையோடிருந்தான் அரசன். அரண்மனை வாசலில் எள்ளுக்கூட விழ இடமில்லாதபடி ஜனங்கள் நின்றுகொண்டு துன்பந்தேங்கிய முகத்துடன் அரசனுடைய தேகஸ்திதியை அறிய அவாவுற்றிருந்தனர். அரண்மனைக்குள்ளே அரசன் படுத்திருந்த அறையில் அசுவினி தேவர்க்குச் சமானமான இரண்டு வைத்தியர்களும் மற்றைய பிரதான உத்தியோகஸ்தர்களும் இருந்தனர். அரசனுடைய பட்டமகிஷி திரைக்கு மறைவில் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக விருந்தாள்.

அத்தருணத்தில் அரசனுக்குத் தன் நினைவே இல்லை. சுவாசம் மட்டும் மெதுவாக வந்துகொண்டிருந்தது. வெளியே நின்ற ஜனங்கள் காவற்காரர்களை மீறிக்கொண்டு உள்நுழைந்து சப்தம் செய்யாமல் அரசனைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தனர். அப்படிப் போவதாலுண்டான சப்தத்தால் அரசன் விழித்ததுண்டா? இல்லை. பிரகாசமாக எரியும் தீபங்களால் அரசன் கண்ணுக்குக் கூச்சம் ஏற்பட்டதா? இல்லை ராஜ சபையில் அணுகக்கூட அருகரல்லாதவர் பலர் வந்ததை அரசன் அறிந்துகொண்டானா? இல்லை. ஏனெனில் அவனுக்குப் பஞ்சேந்திரியங்களும் அடங்கிவிட்டன. கடைசியாக, கண்கள் மூடின. வாய் மூடிற்று. இருதயமும் சப்தம் செய்யாமல் நின்றொழிந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் சவமிருந்த அறை நிர்மானுஷ்யமாயிற்று.

அரசனுக்கு ஞாபகம் திரும்பி வந்தபோது எங்கும் நிச்சப்தமாகவே யிருந்தது. சுவர்க்கத்தி லிருப்பது போல அவனுக்குத் தோன்றியது. பிரகாசமாக ஐந்தாறு தீபங்கள் எரிந்துகொண்டிருந்தன. அவனுடைய முகத்தைத்தவிர மற்றைய பாகமெல்லாம் பட்டு வஸ்திரத்தால் மூடப்பட்டிருந்தது. புஷ்பமாலைகள் சரம் சரமாக கட்டிலின்மீது தொங்கின. வாசனைத் திரவியங்களின்மீது படிந்து வீசிய இளங்குளிர் காற்று உற்சாகத்தைத் தந்தது. சற்று தூரத்தில் ஆறு சிப்பாய்கள் கத்தியும் கையுமாகக் காவல் செய்துகொண்டிருந்தனர். என்றாலும் அவர்கள் அனைவரும் அயர்ந்து தூங்கினர்.

அவ்வமைதி வெகு மனோகரமாக விருந்தபடியால் அரசருக்கு எழுந்திருக்கப் பிரியமில்லை அரண்மனைக்கு வெளியே ஜாமம் கூறுபவர்கள் நடுநிசிக்கு இன்னும் ஒரு முகூர்த்தம் இருப்பதாகக் கூறியது அரசன் காதுகளில் விழுந்தவுடன் அவன் மெதுவாக எழுந்திருந்து புன்சிரிப்போடு கட்டிலில் உட்கார்ந்தான். உடனே அவனுக்குப் பெருந்துக்க முண்டாயிற்று. கட்ட ஆரம்பித்த ஆலயங்கள் பல அரைகுறையாக நின்றன. ராஜ்ய விஷயமாய்ச் செய்த சீர்திருத்தங்கள் முற்றுப்பாடடையவில்லை. தான தருமங்கள் செய்ய வெண்ணியது நிறைவேறவில்லை. தன்னை நம்பிவந்த குடும்பங்கள் பல பாழாய்ப் போகும். இந்த எண்ணங்களெல்லாம் அவனுக்கு அத்தியந்த துக்கத்தைக் கொடுத்தன. ஆதலால் அவன் தழுதழுத்த குரலில், "ஏ! ஜகதீசா! என் ஆயுட்காலத்தை இப்படியா சுருக்கியருளவேண்டும்? எனது பிரஜைகளின் நன்மைக்காகச் செய்யவெண்ணிய காரியங்கள் பல குறையாகக் கிடப்பதை நீர் காணவில்லையோ?" என்று மெதுவாகப் பிரார்த்தித்தான். அத்தருணத்தில், "அரசனே! உனது மரணம் ஏற்கெனவே நேர்ந்துவிட்டது. நீ பிரார்த்தித்தபடியால்உனக்கு இன்னும் ஒரு முகூர்த்தகாலம் அவகாசம் கொடுக்கிறேன். அக்காலத்துக்குள் நீ உயிரோடிருக்கவேண்டுமென்று பிரார்த்திப்பவர் மூன்று பேரைக் காண்பாயானால், உனது ஆயுளை நான் நிச்சயமாகக் கொடுப்பேன்" என்ற அசரீரிவாக்கு எழுந்தது.

அரசனுக்கு இரண்டு விதத்தில் சந்தோஷமுண்டாயிற்று. தனது வேண்டுகோளை கடவுள் கேட்டாரென்பது ஒன்று. பிரஜைகளின் க்ஷேமமே தன் க்ஷேமமெனக் கருதியிருந்த தனக்கு மூன்றுபேர் அகப்படாமலிருப்பார்களா என்பது ஒன்று. தனக்குக் கிடைத்திருக்கும் ஒரு முகூர்த்தகாலத்தை வீண் மனோராஜ்யத்தில் செலவழிக்கக்கூடாதென்று தீர்மானித்து, படுக்கையில் தலையணைகளை அடுக்கி மனிதனைப்போல வைத்து மூடிவிட்டு மெதுவாக வெளிப் புறப்பட்டான்.

அரண்மனை வாசலுக்கு வந்ததும், முதலில் எங்கே போவது என்ற சந்தேகம் உண்டாயிற்று. "பிராணநாதன்" என்று அனவரதமும் தன்னைக் கொண்டாடிய தன் மனைவியிடம் போகலாமாவென்று நினைத்தான். ஆனால் அத்தருணத்தில் அவள் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்திருப்பாளாதலால், அங்கு போவது

உசிதமல்லவென்று நினைத்து, வேறு பக்கம் திரும்பினான். நிலவு வெளிச்சத்தில் பட்டணம் முழுவதும் அடுக்கடுக்காய்த் தெரிந்தது. "லக்ஷக்கணக்காய்க் குடியிருப்பவரில் மூன்றுபேர் அகப்படுவது துர்லபமா? வேண்டுமானால் எனக்காக உயிரைக் கொடுக்க மூவாயிரம் பேர் முன்வருவார்களே!" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்ட அரசன் அப்பால் செல்லுகையில், அங்கு வாசற்படியில் ஒரு சிறு குழந்தை உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தது.

அவ்விடத்தில் காவல் செய்துகொண்டிருந்த சிப்பாய் அருகில் வந்து "குழந்தாய்! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான்.

"என் அப்பாவும் அம்மாவும் அரண்மனைக்குப்போயிருக்கிறார்கள்; ராஜா செத்துப்போய் விட்டாராம்; அவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை, எனக்குப் பசிக்கிறது. தூக்கம் வருகிறது. ஐயோ! ராஜா உயிரோடிருக்கக் கூடாதா?" என்று அக்குழந்தை சொல்லிற்று.

அரசனுக்கு இதைக்கேட்டதும் அத்தியந்த சந்தோஷம் உண்டாயிற்று. தனது பிரஜைகளில் தன் உயிரை வேண்டுகிற ஒருவரைக் கண்டுவிட்டானல்லவா? அரசனுக்குக் குழந்தையில்லை. ஆகவே இந்தக் குழந்தையைச் சமாதானப்படுத்தி அதற்கு ஏதாவது தின் பண்டம் கொடுத்திருப்பான். ஆனால் தனக்கு ஏற்பட்ட முகூர்த்தத்தில் கால் முகூர்த்தம் கழிந்துவிட்டது. மேலும் அவன் தனது உயிர்த்தோழனான அக்கினிமித்திரன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான். போகும் வழியெல்லாம், 'ஐயோ! பாவம்! அக்கினிமித்திரன் எனக்காகமிகவும் துக்கத்தில் ஆழ்ந்திருப்பான் என்பது நிச்சயம், அவன் எனக்கு முன்னால் இறந்திருப்பானானால் நான் தாங்கியிருக்கமாட்டேன்" என்று மனோராஜ்யம் பண்ணிக்கொண்டே சென்றான்.

அரசன் அக்கினிமித்திரன் வீட்டுக்குள் நுழைந்ததும், அங்கே மூட்டைகள் வண்டிகளில் ஏற்றப்படுவதையும், குதிரைகள் கட்டப்படுவதையும், விளக்குகள் கொண்டுபோகப்படுவதையும் மற்றுமுள்ள அவசர காரியங்களையும்கண்டான். அக்கினிமித்திரனைமட்டும் காணவில்லை; அறைகள்தோறும் தேடினான். அங்கும் அவனில்லை. "துக்கத்தினால் அக்கினிமித்திரன் இறந்துபோயிருப்பானோ?" என்றுகூட அரசன் சந்தேகித்தான். கடைசியாக, அக்கினிமித்திரன் தனியாக உட்கார்ந்து படிக்கும் அறைக்குள் அரசன் நுழைந்தான். அங்கும் அவன் காணப்படவில்லை. ஆனால் அங்கிருந்த அலங்கோலத்தால், அவ்வறையினின்றும் சற்று முன்னர்தான் அக்கினிமித்திரன் வெளியேறியிருக்கவேண்டுமென்பது தெரிந்தது. விளக்கின்கீழ் பாதி கருகின கடிதத்துண்டு கிடந்தது. அது அரசனுடைய கையெழுத்திலிருந்தபடியால் அதை அவன் எடுத்துப்பார்த்தான். ஜனங்களுடைய நன்மைக்காக அவன் செய்யவெண்ணிய ஏற்பாடு ஒன்று அதில் எழுதப்பட்டிருந்தது. தன் ஏற்பாடு இப்படி வீணாய்ப் போவதைக் கண்டு வருந்திய அரசன், அக்கடிதத் துண்டைக் கீழே எறிந்தான். உடனே இருவர் அவ்வறைக்குள் நுழைந்தனர். அவர்கள் பின் வருமாறு பேசிக்கொண்டனர்:—

"அக்கினிமித்திரன் எங்கே?"

"புது ராஜா பேட்டிக்குப்போயிருக்கிறார். நாங்கள் சங்கடத்திலிருக்கிறோம். புது ராஜாவுக்கு பழையவரசனுடைய ஏற்பாடுகள் ஒன்றிலாவது பிடித்தமில்லை. அக்கினிமித்திரன் பழையவரசனுடைய நண்பராகையால், அதற்காகவே புதியராஜா அவர்மீது சற்று அருவருப்பாக விருப்பார், ஆதலால் கொஞ்சம் முன்னாடியே போய் ஏதாவது சமாதானம் செய்து வரலாமென்று போயிருக்கிறார். நாமெல்லோரும் காலத்துக்கு ஏற்ற கோலம் போடுபவர்தாமே!"

"வாஸ்தவந்தான்; அக்கினிமித்திரன் செய்யவெண்ணியதுதான் நியாயம், நானும் சொல்கிறேன். பழையராஜாவுக்குக் கொஞ்சமேனும் தாராதரம் தெரியவில்லை. வங்கநாட்டோடு சண்டைக்குப் போகவேண்டுமென்றேன். கூடாதென்று மறுத்துவிட்டார் சண்டைக்குப் போயிருந்தால், அங்கு கிடைக்கும் கொள்ளையினால் நாமெல்லோரும் குபேரர்களாகியிருக்கலாமே. வலியவன் எளியவனோடு சண்டைக்குப் போகக்கூடாதென்று அவர் சொன்னார். வலியவனுக்குத்தான் இது காலமாயிற்றே."

இப்படிப் பேசிக்கொண்டிருந்தவர்கள் அரண்மனைத் தளகர்த்தரும் கொத்தவாலுமே. இவர்களுடைய சம்பாஷணையை இன்னும் கேட்கப்பிரியமில்லாதவனாய் அரசன் அப்பால் சென்றனன்.

"உத்தியோக முறைமையில் என்னால் தண்டிக்கப்பட்டிருக்கும் இவர்கள் இப்படிப் பேசிக்கொள்வதில் ஆச்சரியமில்லை, எனது பிரஜைகள் என்னிடம் பூர்ணவிசுவாசமுள்ளவர்களாக இருப்பார்கள்" என்று சொல்லிக்கொண்டு அரசன் போனான்.

சாதாரணமாக சந்தை கூடுமிடத்தில் ஜனங்கள் அல்லும் பகலும் கூடியிருப்பாராதலால் அரசன் அவ்விடத்தை நோக்கிச் சென்றான். அவன் எதிர்பார்த்தபடியே அங்கு ஐந்தாறு பேர் கூடி, சூதாடிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்கலாமென்று அரசன் அங்கு நின்றான்.

"தொலைந்தது சனி; ஒரு காசுகூட அதிகமாகச் செலவழிக்காத அரசன் இருந்தென்ன போயென்ன? புது ராஜா ஜோர் பேர்வழி" என்றான் ஒருவன்.

இன்னொருவன், "ஆமடா! இவனுக்கு எப்போதும் தெருத்தெருவாய் அலைந்து மூலை முடுக்குகளிலும் சந்து பொந்துகளிலும் என்ன நடக்கிறது என்று பார்ப்பதுதான் வேலை, ராஜாவாகவிருந்தால் கவுரவத்தோடு உள்ளடங்கியிருக்கவேண்டாமா?" என்றான்.

"என்னடா, அப்பா! இந்த ராஜாகாலத்தில் கூத்து உண்டா? பாட்டு உண்டா? வேறு விளையாட்டுந்தான் உண்டா? இவைகளை எப்போது காண்போம் என்று ஆகிவிட்டது" என்றான் இன்னொருவன்.

"மரணதண்டனையை அடியோடு எடுத்துவிட



வேண்டுமென்றானாம் இந்த ராஜா. அப்படியானால் சிறையிலடைபட்ட கைதிகளைக்கொண்டு எல்லா வேலைகளையும் செய்ய எண்ணிக்கொண்டிருந்தான் போலும்! ராஜாவின் மனத்தை அறிந்தவர் யார்?" என்றான் வேறொருவன்.

அரசனுக்கு இந்த சம்பாஷணையும் பிடிக்கவில்லை. யார் பொருட்டாக உடல்பொருள் ஆவியைச் செலவிட்டானோ, அவர்களே அவன்செய்ததை உணரவில்லை.

இதற்குள் அரை முகூர்த்தம் கடந்துவிட்டது. அன்பர்கள் குறை கூறுவதால் விரோதிகள் வைவது கோரமாக விராது என்று நினைந்த அரசன் தனது ஜன்ம சத்துருக்கள் அடைபட்டிருக்கும் சிறைச்சாலைக்குச் சென்றான். அவ்விடத்தில் ஒருவன் மட்டுமிருந்தான். அவன் எதையோ சிந்தித்தவனாகத் தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டிருக்கையில் சிறைக்கதவைத் திறந்துகொண்டு சிறைக்காவலன் உள்ளே நுழைந்தான். கதவு திறக்கப்பட்ட சப்தத்தால் விழித்துக்கொண்ட குற்றவாளி நிமிர்ந்துபார்த்து "என்ன காவலரே, நாளைக் காலையிலல்லவா என்னைத் தூக்கிவிடவேண்டியது? அதற்குள்ளேயே வந்துவிட்டீரே, இருந்தாலும் நான் பயப்படவில்லை; சற்று பின்னர் போகிற உயிர் சற்று முன்னர்ப்போனால் என்ன? நான் தயாராகவே இருக்கிறேன். எனக்கு ஒரு உதவி மட்டும் செய்யும், இதோ ஒரு கடிதம் எழுதிவைத்திருக்கிறேன், அதை எனது மனைவியிடம் கொடுத்துவிடும்" என்றான்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ராஜா இறந்து விட்டார். புதிய ராஜா பட்டத்துக்கு வரப்போகிறார். அவருடைய கொள்கைகள் உன் கொள்கைகளைப் போன்றனவாதலால், உன்னை மன்னித்திருக்கின்றனர். எந்த நிமிஷத்தில் நீ கொலைத்தண்டனையடைய இருந்தாயோ அந்த நிமிஷத்திலேயே நீ விடுதலை பெறுவாய்" என்றான் சிறைக்காவலன்.

"இறந்து விட்டாரா?" என்றான் குற்றவாளி மிகுந்த திக்பிரமையுடன்.

"ஆமாம் இறந்துவிட்டார்" என்று காவலனுடன் வந்த அக்கினிமித்திரன் பதில் சொன்னான்.

குற்றவாளி எழுந்திருந்து நின்று, புருவத்தின் மீதிருந்த வியர்வையைத் துடைத்துவிட்டு, "ஐயா! அரசர் இறந்தது எனக்கு மிகவும் துக்கத்தைக் கொடுக்கிறது. எனக்கு அவரிடம் பூர்ண விசுவாசம். என்னையும் அவர் ஒருவாறு அன்பாகவே நடத்திவந்தார். ஏதோ காலவித்தியாசத்தால் நான் சிறைப்பட்டேன். அது கிடக்கட்டும்; சின்னஞ்சிறு வயதுள்ள ராணி மனம் எப்படிப் பதைக்காது? ஐயோ! அவர் உயிருடன் இருந்திருக்கக் கூடாதா?" என்றான்.

குற்றவாளியின் கண்களில் ஜலம் வந்தது. அக்காட்சியைக் காணப் பொறாத அரசன் அப்பால் அகலும்போது முக்கால் முகூர்த்தம் கடந்துவிட்டது. அரசனுக்குத் துக்கம் வந்துவிட்டது. எவருடைய நன்மைக்குப் பாடுபட்டானோ அவர்கள் அவனை மதிக்கவில்லை. ஒன்றுமறியா இளங்குழந்தையொன்றும், ஜன்மசத்துரு ஒருவனுமே அவனுக்கு அனுகூலிகளாக இருந்ததைக் கண்டு, "ஏன் இந்தக் காரியத்தை மேற்கொண்டோம்" என்று எண்ணினான். கடவுள் செயலுக்குப் பழுது சொல்லவா? தனது நற்காலத்துக்காகவே அவ்வாறு அகால மரணம் நேர்ந்ததுபோலும் என்று சிந்தித்தான். ஆகவே மரணத்தில் அவனுக்கிருந்த பயமும் வெறுப்பும் நீங்கின. என்றாலும், எஞ்சிய அற்பகாலத்துக்குள் தன் மனைவியையும் சோதிக்கலாமென்று அவளிருக்குமிடம் சென்றான்.

அங்கு அவள் தன்னந் தனியளாய் முகத்தில் துணியைப்போட்டு மூடிக்கொண்டிருந்தாள். எங்கு பார்த்தாலும் அவலமே நிரம்பியிருந்தது. "ஐயோ! ஒருத்திகூட என் உயிர்த்துணைவியின் அருகில் இல்லையே! என்ன குரூரம் இது?" என்று அரசன் எண்ணினான்.

அடுத்த நிமிஷத்தில் அவ்வறையின் சுவரிலுள்ள கள்ளக் கதவு ஒன்று திறக்கப்பட்டது. அக்கதவு இருப்பது தனக்கும் தன் மனைவிக்கும் மட்டும் தெரியுமென்று அரசன் நினைத்திருந்தான். அக்கதவின் வழியாக ஒரு மனிதன் உள்ளே வந்தான்.

முகத்தை மூடிக்கொண்டிருந்த ராணி வந்தவனை மௌனம் சாதிக்கும்படி சாடை காட்டிவிட்டு, பிறகு "இத்தனை நாழிகையா இவ்விடம் வருவதற்கு? சனிதான் தொலைந்து விட்டதே. இனி நமக்கு என்ன பயம்? நாம் சுகமாகக் காலம் கழிக்கலாம்" என்று சொன்னாள்.

இப்பாவச் சொல்லைக் கேட்டவுடன் அரசன் திரும்பிவந்து தனது மரணப் படுக்கையில் படுத்துக்கொண்டான். "தெய்வமே உனது செயலுக்குப் பழி சொல்ல வல்லவன் யாவன்? இந்த ஒரு முகூர்த்தங்கூட நீர் எனக்குக் கொடுத்திருக்கவேண்டாம். கோடானுகோடி ஜனங்களில் என் விஷயமாக அனுதாபப்படுவோர் மூவரில்லையே. கடைசியாகக் கண்ட காட்சி நான் கனவிலும் கண்டறியாததாக விருந்தது போதும். போதும் இவ்வாழ்க்கை" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

உடனே ஜாமங் கூறுபவர்கள் நடு நிசியாயிற்று என்று கூறினார்கள்.

காவல் செய்து கொண்டிருந்த சிப்பாய்கள் திடீரென்று விழித்துக்கொண்டனர், படுக்கையில் அரசன் முன்போலவே படுத்திருந்தான். ஆனால் அவன் முகம் பார்க்கப் பயங்கரமாக மாறியிருந்தது.

ராணியம்மாள் இன்னொருதரம் வந்து பார்க்கவிடக் கூடாது என்று அவர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

ஸ்ரீ சைலர்.

---

**சென்னை ஹைகோர்ட் கோடை விடுமுறை.**— சென்னை ஹைகோர்ட் வெயில் காலத்திற்காக மேமாதம் 3-ந் தேதி முதல் ஜூலை மாதம் 10-ந் தேதி வரைக்கும் மூடப்படும். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் விடுமுறைகால ஜட்ஜியாக விருப்பார்.

# ரணகேஸரி அல்லது ராஜபக்தி

## RANAKESARI

(388-ம் பக்கத் தொடர்ச்சி)

### அங்கம். 4

### களம். 1

இடம்: சேரன் அரண்மனை வாயில்

காலம்: மாலை.

**ரண.**—இனித்தான் த்வைதீபாவத்திற்கு ஸமயம். இந்த ரணகேஸரியின் ராஜ்ய தந்திரங்களில் பயிற்சிக்கு ப்ரயோஜன காலம் இனித்தான். சற்றும் தயவென்பதே யில்லாத இந்தச் சேரனிடம் வேறெதுவும் ப்ரயோஜனப்படாது. வைரத்தை வைரத்தால் வெட்டவேண்டும். ஸர்ப்பத்திற்கு ராஜா மூங்கிற்றடி. அப்படிப்போல் இந்தச் சேரனை வஞ்சனையால் ஏமாற்றினலன்றி கார்யம் ஸாத்யமாகாது. ஆகையால் சேரனுடைய ஸந்நிதானத்தை யடைந்து, அவனிடம் ஸேவகனுயமர்ந்து, அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, காராக்ரஹத்திற்கே தலைமை யதிகாரியாக வேண்டும். ஸமயோசித புத்தியே, ஸமயத்திற்குத் தருந்தபடி உதவிபுரிவாய்! (சற்று உள் ப்ரவேசித்து) யாரடா, ஸேவகன்! சோழதேசத்திலிருந்து ஒரு சுத்த வீரன் வந்திருப்பதாகவும் அவன் அரசனைப் பார்க்க விரும்புவதாகவும் தெரிவிப்பாய்!

**சே.**—ஸ்வாமி இன்னுரென்று பேர் சொல்லாவிட்டால் ப்ரயோஜனமில்லை. இது ராஜாக்ஞை, ஸ்வாமி.

**ரண.**—ஸமரஸிம்ஹன் என்று சொல்லு.

**விதூ.**—(தனக்குள்) ஸமரஸிம்ஹனு இவர். ஸ்வாமி மன்னிக்கவேண்டும். இதோ சொல்லிவிட்டு வருகிறேன். (உள்ளேப்ரவேசித்து) மஹாராஜ—த்வாரதேசத்தில் ஸமரஸிம்ஹர் என்ற ப்ரக்யாதிபெற்ற சோழதேசத்து வீரர் வந்திருக்கிறார். தங்களைப் பார்க்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்.

**சே.**—யார், ஸமரஸிம்ஹனு. இங்கே வரச்சொல்.

**விதூ.**—(ரணகேஸரியைப்பார்த்து) ஸ்வாமி, வரும்படி அரசன் ஆக்ஞை பிறந்திருக்கிறது.

**ரண.**—(உள்ளே ப்ரவேசித்து) ராஜந்! நமஸ்காரம்.

**சே.**—நான் தங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனல் பார்த்ததில்லை. ஏன்—உட்காரலாம். தங்களைக் காணும்படி இப்பொழுதுதான் அத்ருஷ்டம் கிடைத்தது.

**ரண.**—ப்ரபு—ஸேவகன் காத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கென்ன இவ்வளவு மரியாதை?

**சே.**—இருந்தாலும் வீர்யலட்சுமி உம்மிடம் குடிகொண்டிருப்பதால்தாம் தேவாம்சம்பெற்றவரன்றே?

**ரண.**—ப்ரபு, அவைகளெல்லாம் கிடக்கட்டும். நான் சோழ ராஜனது ஸேவகனே. என்னிலும் மரியாதைக் குரியவர், அவ்விராஜ்யத்தில் அநேகர் உண்டாயினும் இந்தக் கார்யத்தை என்னிடம் சொன்னர்.

**சே.**—சோழராஜனிடமிருந்து கார்யமாகவா என்னிடம் வந்திருக்கிறீர்கள்? ரொம்ப ஸந்தோஷம். என்ன விசேஷம்?

**ரண.**—ப்ரபு, நான் போகமாட்டேனென்று சொன்னேன் அவர் கேட்கவில்லை. நானே போகவேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். அப்புறம் என்ன செய்யலாம்? ராஜாக்ஞை, புறப்பட்டு வந்தேன்

**சே.**—(பரபரப்புடன் முகத்தில் விவர்ணம் தோன்ற) ஏன் என்ன விசேஷம்?

**ரண.**—(ஸ்வகதம்) இன்னதென்று சொல்லாமல் கூடமாகச் சொன்னதில், இவர் முகம் விவர்ணம் அடைவானேன்? முன்னர் நம்முடைய அரசர் சேரனை முறியடித்த காலத்து, சோழன் போர்ச்சேவகர்களே நம்மரசனுக்கு உதவிசெய்தனர் என்று ஹரிஹர தேவர் சொன்னர். அப்படியிருக்க, சோழராஜன் பெயர் சொன்னவுடன் ஒரு பய பக்தியும், அவரிடமிருந்து கார்யமென்று கூடமாய்ச் சொன்னதில் முக விவர்ணமும் இவருக்குண்டாயது ஆச்சர்யமாயிருக்கிறது.

**சே.**—என்ன ஸமரஸிம்ஹரே, ஒன்றும் பேசாமல் மௌனமாய் யோசிக்கிறீர்களே. ஏதாயிருந்தாலும் சொல்லிவிடலாம். உம்பேரில் என்ன குற்றம்? அரசன் சொல்லச் சொன்னதை நீர் மென்று விழுங்குவானேன்?

**ரண.**—அப்படி யொன்றுமில்லை. நான் சற்று மரியாதை க்ரமங்கள் தெரியாதவன். தடித்தனமாய் ஸங்கதிகளைச் சொல்லிவிடுவேன். ராஜ ஸந்நிதியில், அதிலும் என்னுடைய ஸ்வபாவம் முழுவதையும் பழகியறியாதவர் ஸந்நிதியில், நான் பேசினுல், என் தடித்தனத்தால் ஏதாவது மனஸ்தாபத்தை ஸம்பாதித்துக் கொள்ளுவேனே வென்ற பயத்தால்தான் நான் போகமாட்டேனென்றது.

**சே.**—(பெருமூச்செறிந்து) ஓஹோ, அப்படியானல் நீங்கள் கார்யத்தை யின்னும் சொல்லவில்லையே!

**ரண.**—நானென்னவோ இப்படிப் பேசுகிறேன் என்று எண்ணக்கூடாது. இன்னின்ன மாதிரி சொல்லு என்று அரசன் என்னை அறையிலாட்டி அம்பலத்தில் விடுத்தார்.

**சே.**—ஹா—ஹா—அப்படியா! சுத்தவீரர்களுக்கும் ராஜபக்தியும் விச்வாஸமுமே உருவானவர்களுக்கும் கள்ளங்கபடு அதிகமாகத் தெரியாதென்று நான் அறிவேன். சும்மா சொல்லுங்கள். எனக்கு வருத்தமேயில்லை.

**ரண.**—அதெல்லா மொன்றுமில்லை. தாங்கள் பாண்டியனை—

**சே.**—சிறையி லடைத்திருக்கிறேன். இஷ்டப்படி நடந்து கொள்ளுகிறேனென்று உம்மரசனிடத்தில் சொல்லுங்கள்.

**ரண.**—தாங்கள் வீரமர்த்தனனைச் சிறைப்படுத்திய



விஷயம் எம்மரசனுக்கு நன்ருகத் தெரியும். அதனுல்தான் என்னை இங்கேயனுப்பியது.

**சே.**—தெரியுமா அவருக்கு! ஹா ஹா, என்னமோ அவருக்கு தெய்வக் ஞானமாகத்தா னிருக்கிறது அல்லவா?

**ரண.**—(ஸ்வகதம்) இவன் போகிறவழியில்விட்டுப் பார்ப்போம். (ப்ரகா) ஆம். எனக்குத் தெரியாசா? அவரிடம் எங்களுக்கெல்லாம் தேவதாவிசுவாஸம் ஏற்பட்டிருப்பதே இது காரணம்பற்றியே யன்ரே (சேரன்முகத்தை யுற்றுப்பார்த்துக் கொண்டே) அவ்விததெய்வ அறிவு தன்னிடமிருப்பதை தங்களுக்குப் பரீக்ஷைகூட காண்பித்திருக்கிருராமல்லவா?

**சே.**—(நடுங்கிய குரலுடன்) ஆம் வாஸ்தவந்தான்.

**ரண.**—(ஸ்வகதம்) அந்தக் கரிக்காலச்சோழன் இவனுக்கு எவ்விதத்திலோ பயம் காண்பித்திருக்கிருன். இல்லாவிட்டால் ஒன்றுமில்லாத ஸம்பாஷணையில் இவருக்கு இவ்வளவு நடுக்கம்பிறப்பானேன்? (ப்ரகாம்) எல்லா ஸங்கதிகளும் ஸவிஸ்தாரமாய் என்னிடம் சொன்னர்.

**சே.**—எல்லாயா? எல்லாவற்றையுமா?

**ரண.**—(ஸ்வகதம்) ஓஹோ, பிசாசைக்கண்டு நடுங்குவது போலன்ரே சோழன் பெயரைக்கேட்டு நடுங்குகிருன். ஒரு யுக்தி தொடுக்கிறேன். (ப்ரகாசம்) எந்தக் கார்யத்தி லென்னை ஏவினுலும் அதைத் தலையாலே செய்கிறேன் என்று நீர் அவரிடம் ப்ரதிக்ஞை செய்திருக்கிறவரை என்னிடம் சொன்னர்.

**சே.**—ஹா—ஹா—

**ரண.**—அவருடைய ரஹஸ்யங்கள் முழுவதும் எனக்குத் தெரிந்ததால்தான் என்னைத் தங்களிடம் அனுப்பினது. இதெல்லாம் வெளிக்காட்டக் கூடாத கார்யங்களல்லவா?

**சே.**—(மிரள விழித்து) ஆனல்—காளி—பலி—எல்லா விஷயமும் தங்களுக்குத் தெரியுமோ?

**ரண.**—எனக்குத் தெரியாத ரஹஸ்யமொன்றுமில்லை. எனக்குத் தெரியாமல் அவர் ஒரு கார்யமும் நடத்துவதில்லை. அது கிடக்கட்டும்—இப்பொழுது வந்த கார்யத்தைப்பற்றிப் பேசுவோம். பாண்டியனிடம் சில ரஹஸ்யமான விஷயங்கள், அவர் இங்கு வருவதற்குள் அறியவேண்டியிருக்கிறது.

**சே.**—உங்கள் மஹாராஜாவா இங்கு வரப்போகிருர்? எப்போது?

**ரண.**—ஆம். நாளைக்கொரு நாள் க்ரமித்து வருகிருர். அதற்குள் அவனைக் கேட்கவேண்டிய விஷயங்கள் சிலவற்றைக் கேட்டறிந்து வைக்கச் சொன்னர். இது அவச்ய கார்யமாகச்சே, இதில் எவ்வித ஆக்ஷேபணையும் நீர் செய்யலாகாதென்றும் அப்படிச் செய்வதானுல் பழையகதைகளை ஞாபகமூட்டும்படிக்கும் சொன்னர்.

**சே.**—நான் ஆக்ஷேபணை செய்வதா யிருந்தால் தானே!

**ரண.**—ஆம். அவர் அறிகுறியாக மோதிரம் கொடுத்திருக்கிருர், வேண்டுமோ? (என்று பைக்குள் கைவிட்டுத் தேடுகிருன்).

**சே.**—ஸ்வாமி வேண்டாம், எல்லா ஸமாசாரங்களும் தங்களுக்குத் தெரிந்திருப்பதே பெரிய அறிகுறி. வாருங்கள், உங்களை நானே காராக்ரஹத்திலிருக்கும் அந்தப் பாண்டியனிடத்தில் கொண்டுபோய் விடுகிறேன்

**ரண.**—(ரங்கத்தில் முன் வந்து) எந்தக் கார்யத்தில் நாம் இறங்குகிருேமோ, அது சீக்ரம் முடிவதற்கு வேண்டிய ஸாதனங்கள் தாமதமின்றி நேருதலே அச்சாரியம் தாமதமின்றிக் கைகூடு மென்பதற்குரியதோர் சுபசகுனமாகும். தெய்வபலம் பூர்ணமாக இருக்குமானுல், அணுவும் மேருவாகிறது, புல்லும் ஆயுதமாகிறது. தடுக்கிவிழுந்தாலும் அதுவுமோர் அடிவரிசையாகிறது. இப்படி எதிர்பாராதவண்ணம் கார்யம் கைகூடிவந்ததே பெருமாச்சரியம். நம்மரசன் மீது கருணையற்று கஷ்ட பாரம்பரையை மேன்மேலும் பொழிந்த தெய்வங்களே பச்சாத்தாபத்துடன் தாம் செய்த தீங்குகளுக்கு ப்ரதீகாரம் செய்ய ப்ரயத்நமெடுத்திருப்பதுபோல் தோன்றுகிறது கடவுளே! இப்படியே என் கார்யங்கள் மேன்மேலும் ஜயமடையுமானுல், நான் க்ருதார்த்தனுவேன்.

(நிஷ்க்ரமிக்கிருர்கள்.)

### அங்கம் 4

### களம் 2

இடம். காராக்ரஹம் காலம்-மாலை.

**வீர.**—ஸுந்தரேசா, உம் கருணையிருந்தவாறென்னே யென்னே? ஐசுவர்யமதத்தால், அதிகார மதத்தால் நம்மை ஸ்மரிக்கமாட்டா னென்றெண்ணியே எனக்கு நிவ்ருத்தி மார்க்கத்தை தடுத்தாட்கொண்டு காட்டவன்ரே ப்ரபு இங்ஙனம் தாம் அருளினது. ஹே,பகவந்! இப்பொழுது தங்களுடைய நாமமே அனவரதமும் என் நாவில் நிற்கின்றது. எனக்கினி யென்னகுறை! என் பாக்யமே பாக்யம், ஹே ஈசுவரா! இனி உம்மை மறப்பதில்லை. உம்முடைய த்யானத்தால், நான் உம்முடைய தயவிற்குப் பாத்ரனுவேன், இனி ஜந்மத்தை யொழிப்பேன்—சிவ—சிவ—

(சேரனும் ரணகேஸரியும் ப்ரவேசிக்கிருர்கள்.)

இதோ சேரனும் ரணகேஸரியும் வருகிருர்களே! ரணகேஸரி என்னைச் சிறைமீட்க வந்திருப்பானே! எனக்குச் சிறையிலிருந்து தப்பித்தென்ன ஆகவேண்டியதிருக்கிறது?

**சே.**—வீரமர்த்தனு! உன்னிடம் ஏதோ சில ஸமாசாரங்கள் பேசவேண்டி யிருக்கிறதென்று சோழமஹாராஜனிடமிருந்து ஸமரஸிம்ஹர் வந்திருக்கிருர். அவர் கேட்பனவற்றிற்கெல்லாம் ஸரியாக பதில் சொல்லவேண்டும். தெரியுமா? ஜாக்கிரதை.

(நிஷ்க்ரமிக்கிருர்கள்.)

வீர.—ரணகேஸரி.

ரண.—அந்தப்பெயர் வேண்டாம் ப்ரபு. ஸமரஸிம்ஹன் இப்பொழுதெனக்குப் புதுப்பெயர்.

வீர.—எதற்காக இப்புதுப்பெயர் வஹித்தாய்.

ரண.—தங்களைச் சுலபமாய் தர்சிக்க வேண்டியதற்காகத்தான்.

வீர.—ரணகேஸரி, உன்னுடைய பக்தி விசுவாஸத்தை நான் நன்கு அறிவேன். அப்படியிருந்தும், நானுன்னை ப்ரதான மந்திரி உத்யோகத்தினின்றும் நீக்கி அந்த தர்மநிதியை ராஜ்யத்தில் ப்ரதான மந்திரியாக உத்யோகம் கொடுத்தேன் என்ற விஷயத்தில் என்பேரில் உனக்கு வருத்தமிருக்குமே! என்னை மன்னிப்பாயா? நான் ஸ்வேச்சையாய் ஆக்காரியத்தைச் செய்யவில்லை.

ரண.—ராஜந், தங்களுடைய ஸ்வபாவம் முழுவதையும் பழக்கத்தால் நன்கறிந்த நானே இத்தகைய காரியம் நேர்ந்ததற்காகத் தங்கள்பேரில் வருத்தமடைவேனுகில் என்னைவிட முட்டாளுமுண்டோ? ப்ரபு, எனக்கதில் மனஸ்தாபமேயில்லை. ஆனால் இன்னதென்று விளங்காத ஒரு ரஹஸ்யம் மட்டும் இதற்கெல்லாம் அடியிலிருக்கவேண்டும் என்று ஊஹித்தேன். நான் தங்களையே கேட்டிருப்பேன். என்னமோ காலவித்யாஸம் இப்படிக்கெல்லாம் நேரவேண்டியதிருக்கும்பொழுது தங்களை எப்படிக் கேட்க வரும்.

வீர.—ரணகேஸரி! நான் உன்னிடம் யோசனை கேட்காமல் போனதன்றோ இவ்வளவு கஷ்டகாலங்களுக்கும் இடமாயது.

ரண.—ப்ரபு, தங்கள்பேரில் சாற்றப்பட்ட குற்றத்திற்கு எவ்விதத்திலும் தாங்கள் காரணமாகவாவது உடந்தையாகவாவது இருக்கமுடியாதென்பது நிச்சயமாய் என் மனதிற்குத் தெரிந்த விஷயம்.

வீர.—அப்பா ரணகேஸரி, நீ ஒருவனாவது என்பேரில் நல்ல அபிப்ராயம் கொண்டிருக்கிறாயே! உனக்கு ஆயிரங்கோடி வந்தனம்.

ரண.—ப்ரபு! நானொருவனல்ல, என்னைப்போல் தங்களிடம் நன்றாய்ப் பழகினவர் தங்கள்மேல் ஒருவித தோஷத்தையும் நம்பார்கள். அது கிடக்க, இவ்வளவிற்கும் அடியில் ஒரு ஆழ்ந்த சூழ்ச்சியிருக்கவேண்டுமென்பதுமட்டும் எனக்கு நிச்சயம். ஆதலால் அதன் ரஹஸ்யத்தைத் தங்களிடம் அறிந்துகொண்டு போகலாமென்றே இவ்விடம் வந்தது.

வீர.—அப்பா ரணகேஸரி! நானென்ன சொல்வேன்! எப்படிச் சொல்வேன்! எனக்கு மனந்துணியவில்லையே.

ரண.—ராஜந்! தைர்யத்தைக் கைப்பிடியுங்கள்! தண்கடல் போல் ஆழ்ந்த மனத்திடமுடைய உங்களைப்போன்றவர் இப்படி மனத்தளர்வுற்றால் மற்றவர் கதியென்னாவது?

வீர.—ஐயோ, நீலகண்ட சாஸ்திரி.

ரண.—நம்முடைய காரியம் பெரியதாயிருக்கையில் ஏதோ கடந்துபோன விஷயத்தைக் குறித்து துக்கிக்கிறீர்களே!

வீர.—அப்பா ரணகேஸரி! இந்த ரஹஸ்யத்தை நீலகண்டசாஸ்திரிகள் ஒருவரிடந்தான் நான் சொன்னது. நான் சொன்னவன்றைக்கே அவர் கொலையுண்டாரே! அப்படியிருக்க, நான் உன்னிடம் எப்படித் துணிந்து சொல்வேன்! உன் தலைக்கும் வருமடா—ரணகேஸரி.

ரண.—ப்ரபு, நான் அப்படித்தான் ஏதாவதிருக்க வேண்டுமென்று நிதானித்தேன். ஆனால் ப்ரபு, அது இன்னதென்று கண்டுபிடிப்பதற்கு வேண்டிய விஷயங்கள் ஏதாவது உங்களிடமிருந்து தெரிந்துகொண்டு போகலாமென்று வந்தேன்.

வீர.—ரணகேஸரி! இந்தக் காரியத்தில் நீ ப்ரவர்த்திக்க வேண்டாம். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீ இதில் இறங்காதே.

ரண.—ப்ரபு, நான் எவ்வித ஆபத்து வந்த போதிலும் பின் வாங்கவில்லை, பயப்படவுமில்லை. தங்களை மறுபடி பாண்டியதேசத்து ஸிம்ஹாஸனாதிபதியாகச் செய்கிறவரை ஏகவார போஜனமே செய்கிறதென்று ப்ரதிக்ஞை செய்துகொண்டேன். மனதிலொன்றையும் வைக்காமல் சொல்லுவீர்களானால், அதைக்கொண்டு இந்தக் கஷ்டபரம்பரைகளை விலக்கலாமென்று எனக்கு தைரியமிருக்கிறது.

வீர.—ரணகேஸரி, ப்ரேதத்திற்கு அலங்காரம் செய்கிற ப்ரயத்நம்போல் என் ஹதபாக்யனை என் விஷயத்தில் சிரமப்படுகிறாய்? உன்னுடைய சிரமமானது ஸபலமாவதானாலும், ஒரு வேளை போகிறதென்னலாம். அதிலென்ன ப்ரயோஜனம்? அந்த யோசனையை விடு.

ரண.—ப்ரபு! நீங்கள் அப்படிச் சொல்லலாகாது. எப்படியிருந்தாலும் என்னிடம் சொல்லுங்கள்.

வீர.—என்னை வீணில் தொந்திரை செய்யாதே, நீ என்ன ப்ரயத்நம் செய்தாலும் என் விஷயமானால் அது பலிக்காது. ப்ரஜைகள் என்மீது என்றைக்கு நல்லெண்ணம் கொள்ளுகிறார்களோ அன்றைக்கல்லவோ நீ செய்யும் எந்தக் காரியமும் ப்ரயோஜநப்படப்போகிறது. ஆதலால் இந்த வீண் பரிசிரமத்தை விட்டொழி.

ரண.—ராஜந்! அதொரு ச்ரமமான காரியமன்று. இப்பொழுது தங்களைக் கொலைகாரன் என்று எந்த நிஜமான ஆதாரத்தைக்கொண்டு நம்பினார்கள்? அப்படிப்போல குற்றமற்றவர்கள் என்று ஜநங்களுக்கு திருப்தியாய் ருஜுப்படுத்த எந்நேரமாகும்?

வீர.—ரணகேஸரி! என்ன நீகூடத் தெரியாமல் பேசுகிறாய். ஒருவனுக்குக் கெட்ட பெயர் வந்தபிறகு அதை விலக்கி நல்ல பெயர் எடுப்பது எவ்வளவு ச்ரமஸாத்யம் என்பது உனக்குத்தெரியாததா? என்னுடைய பூர்வ சரிதங்கள் எதற்குச் சார்பாயிருக்கின்றன? யோசித்துப்பார். அந்த மஹாபாபி தர்மநிதி ப்ரேதத்தை யெடுத்துச் சென்றவன் நானே என்று



என் வாயாலேயே வரும்படி செய்துவிட்டானே! ரணகேஸரி, வேண்டாம்! வீண்க்லேசம் வேண்டாம்!

ரண.—ப்ரபு, ப்ரயத்நம் செய்யாவிட்டாலும் விஷயமாவது எனக்குத் தெரிந்திருக்கட்டுமே. அதிலென்ன ஹாநி?

வீர.—அது ஸரி, விஷயந்தெரிந்தால் உன்னுடைய ஸ்வாமி பக்தி உன்னைச் சும்மாவிருக்க வொட்டாது. அப்பொழுது மரணந்தான் நீயடையும் பலனாகும்.

ரண.—என்ன ப்ரபு! என்னையும் அப்படி நினைத்துவிட்டீர்களா?

வீர.—ரணகேஸரி உன்னருமை முழுதிலும் அறியாதவனல்ல நான்! எவ்வளவு தீரவீர பராக்ரமசாலியாயிருந்தாலும் தெய்வங்களை யெதிர்ப்பாருண்டோ எங்காகிலும்?

ரண.—ஆனால் தெய்வ க்ருதமென்று தெரிந்துகொண்டால் அப்புறம் அதை விலக்க எந்த மூடனாயினும் ப்ரயத்னம் செய்வானா?

வீர.—அப்பொழுது என் என்னை வீணில் தொந்திரை செய்கிறாய்? எனக்கு நேர்ந்திருக்கும் கஷ்டம் அனைத்தும் மானிடராலன்று என்று பூர்ணமாய்நம்பு. இந்த ப்ரயத்நத்தை விட்டொழி. எனக்கு இனி ராஜ்ய ஆசையேயில்லை.

ரண.—ப்ரபு, ஸேவகன்பேரில் ஆயாஸப்படக் கூடாது. ஏதோ தாங்கள் காலக் கொடுமையால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று எனக்கென்னமோ தோன்றுகிறது. அன்றியும், அன்று நீலகண்டசாஸ்திரி கொலையுண்டதினம் அஸ்தமித்த இரண்டு நாழிகைக்கு கருத்த கம்பளியால் மூடிக்கொள்ளப்பட்ட சரீரத்துடன் மிகக் கருத்த முகமுடையவனாக ஒருவன் தங்களுடைய அறையிலிருந்து வெளி வந்ததையும் அவன் அரண்மனையைவிட்டு நீங்கினதையும் கோட்டை வாயிலடையவும் ஒரு குதிரையில் தாவியேறியதையும் என்கீழிருந்த இரண்டு வீரர் பார்த்திருக்கின்றனர். அந்தக் கரியனை நானும் பார்த்தேன். முகத்தை மூடிக்கொண்டிருந்த அந்தக் கம்பளி விலகியிருந்தது. நான் பார்த்ததில் முகம் மட்டில் பழகின முகமாயிருந்தது. ஆனால் அந்த வர்ணம் அத்புதமாயிருந்தது. என்னைக் கண்டவுடன் போர்வையையிழுத்து மூடிக்கொண்டு நடையை வேகப்படுத்தினான். நான் அவனைத் தொடர்ந்து பிடிக்காமற்போனது என் முட்டாள்தனம்

வீர.—நல்லவேளை அவனைப் பிடிக்க ப்ரயத்நம் செய்யாதிருந்தாய்.

ரண.—அவனைப் பிடித்தால் இவ்வளவும் வெளியாகுமென்று எனக்குத் தோற்றுவதால்தான் நான் உங்களைத் தேடிவந்தது.

வீர.—அப்பா ரணகேஸரி, வேண்டாம், தவிர், வேண்டாம். தவிர்.

ரண.—ப்ரபு இத்தனை கஷ்டங்களுக்கும் ஆதாரபூதனாயிருந்த அவனை நான் கண்டுபிடிக்காமல் விடுகிறதில்லை. இது ஸத்யம்.

வீர.—ஐயோ அது சநீசுவரனன்றோ? அதன் வசமகப்பட்டு நானொருவன் தவிப்பது போதும். ஐயோ சநீசுவரா, இன்னுமா என்னை விரட்டுகிறாய்? உனக்கின்னம் த்ருப்தியில்லையா?

ரண.—(ஸ்வகதம்) அப்படியா! ஸரிதான். ஸரிதான். அப்படித்தானிருக்க வேண்டும் (ப்ரகாசம்) இவ்வளவும் சநீசுவரன் செய்கையென்று தாங்கள் சொன்னபிறகு இவ்விஷயம் முழுவதையும் கூலங்கஷமாய் அறியவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. ப்ரபு, ஸவிஸ்தாரமாய்ச் சொல்ல வேண்டுகின்றேன்.

வீர.—ஐயோ ரணகேஸரி, சநீசுவரனென்று ஏன் சொன்னேனென்று விசாரப்படுகிறேன். இந்த விஷயங்களை வெளியிட்டதற்குத்தான் நான் ராஜ்யத்தை விட்டு வெளியேறும்படி கொண்டுவந்து விட்டது அந்த சநி. என் விஷயமாய் நான் பயப்படவில்லை. ஏனெனில் மரணமொன்றுதான் நானனுபவிக்கவேண்டியதாகப் பாக்கியிருப்பது. அதுவும் என்னுடைய தத்காலஸ்திதியிலும் இழிவானதாகவாவது பயங்கரமாகவாவதிருக்காது. என், அம்பாலிகைக்கு நானிழைத்த தீங்கெல்லாம் போதும்; இனியும் என்னால் துன்பம் ஏற்படாதிருக்கவேண்டுமல்லவா?

ரண.—ஸ்வாமி. தடுத்துப் பேசுகிறேன் என்று ஆயாஸப்படக்கூடாது. நான் அஸத்யம் பேசுபவனல்லவென்பது தங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அதனால்தான் நான் இப்பொழுது பேசவாரம்பித்ததே! ஆகையால் என்னிடம் நம்பிக்கையில்லையென்றால், அப்புறம் நான் பேசுவதிலும் பயனில்லை.

வீர.—உன்பேரில் நம்பிக்கைக் குறைவா? ஸரிதான்! என் காலபலம் உன்னையும் அவ்விதம் ஸந்தேகிக்கும்படி விடுகிறதாக்கும்.

ரண.—இல்லை ப்ரபு. அதைச் சொல்லவேண்டியதவச்யமாயிருந்தது. அது நிற்க, முதலில் அந்த சநி குதிரையிலேறிச்சென்றதே அஸம்பாவிதம். அவனுக்கு காக்கையன்றோ வாஹநம்? இரண்டாவது, க்ரஹமாகவிருந்தால் மனிதருடையகண்களுக்குப் புலப்படந்யாயமில்லை. உங்கள் நேத்ரங்களுக்குப் புலப்பட்டதற்கு வேண்டுமென்றாலும் ஒருவித ஸமாதானம் செய்து கொள்ளுவோம். என் கண்களுக்கும் காவல் வீரர்களுக்கும் புலப்பட்டதற்கு எப்படி ஸமாதானம் சொல்ல முடியும்? மூன்றாவது, விலகியிருந்த போர்வையை என்னைக்கண்டவுடன் இழுத்து மூடிக்கொள்வானேன்? நடையை வேகப்படுத்துவானேன்? எனக்கு அவருடைய முகத்தின் அமைப்புகள் பழகினதாயிருந்ததற்கும், அவன் என்னைக் கண்டவுடன் இவ்வித சேஷ்டைகள் செய்ததையும் சேர்த்துப்பார்த்தால், அதிலிருந்து என்ன முடிவு செய்யலாம்? நான்காவது, இப்படியே ஐந்து மாதங்களுக்கு முன்னால் இதே அடையாளங்களுள்ள ஒரு மனிதனுடன் தாங்கள் பேசிக்கொண்டிருப்பதை நம் காவற்காரர்களில் ஒருவன் பார்த்திருக்கிறானாம். அப்படியிருக்க, இதை சநீசுவரன் என்று எப்படி நம்புகிறது?

வீர.—இவ்வளவும் நிஜந்தானா? ஸ்வப்நமா?

ரண.—ப்ரபு. இக்கார்யகாரணங்களை யெடுத்துக் காட்டியதால் நான் தங்களிலும் புத்தியூஹமுடையவனென்று சொல்ல வந்தவனல்ல. பிறர் விஷயமாயிருந்தால், உங்களுக்கும் இவைகளெல்லாம் தோன்றியிருக்கும்.

வீர.—ஹா—ஹா—

ரண.—ஆம் ப்ரபு. இவைகளினால் நான் முன்னமேயே இது தெய்வக் குற்றமல்லவென்று தெரிந்துகொண்டேன்.

வீர.—ஹா—ஹா—

ரண.—அதனால், நீலகண்ட சாஸ்திரியைக் கொலை செய்ததும் அந்த கம்பளிப் போர்வழியாகத் தானிருக்க வேண்டும், எனத் தீர்மானித்துக்கொண்டேன்.

வீர.—ஹா—ஹா—

ரண.—அதனால் அந்தக் கம்பளிப் போர்வழியைக் கண்டுபிடிக்கவேண்டியதுதான் பாக்கி.

வீர.—அதெப்படிச் செய்யலாகும்.

ரண.—தாங்கள் நடந்த ஸங்கதிகள் முழுவதும் ஸவிஸ்தாரமாய் என்னிடம் சொன்னால் ஸாத்யமாகும்.

வீர.—அப்படியானால் நான் சொல்லுகிறேன் கேள் ஆதியில் நான் சேரனிடம் தோல்வியடைந்தபொழுது, இந்த சநிக்கு, எனக்குப் பிறக்கும் முதற் குழந்தையைப் பலியிடுவதாக வாக்களித்தேன். நான் அம்பாலிகையை விவாஹம்செய்துகொண்டு ஸொல்ப காலத்தில் அவள் கர்ப்பிணியானாள். அந்த ஸங்கதி நிச்சயமாகத் தெரிந்து, நான் ஸந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது திடீரென சநீசுவரன் என் முன்னர் தோன்றினான். என் ஞாபகம் உனக்கு இதற்குள் மறைந்ததா ' என்று அதட்டிக் கையைப் பிடித்தான். அந்தஸமயம் அவன் பிடித்தவிடம் முழுவதும் ஆயிரம் ஊசிகொண்டு குத்துவதுபோலிருந்தது. இதோ பார் அவன் பிடித்தவிடத்தை (கையை விலக்கிக்காட்டுகிறான்) ஐயோ- ரணகேஸரி! இவ்வளவும் நிஜந்தான். என்னைப் பிடித்தது சநிதான்- ஐயோ என் உன்னிடம் இத்துணையும் சொன்னேன்-ஜகதீசா! நீரே துணை (மூர்ச்சிக்கிறான்)

ரண.—இதென்ன பாவம். அரசே, எழுந்திரும். (விசிறி போடுகிறான்.)

வீர.—ரணகேஸரி- இந்த பரிச்ரமம் வேண்டாம். உன் கார்யத்தைப் பார்-போ-எங்கேயாவது ஸேவகத்திலமர்- நீ நல்லவன்- இந்த ஹதபாக்யனுடன் பேசுவதும் உனக்குத் தீது- போ.

ரண.—(இழிவாய்ச் சிரித்து) இந்த அடையாளத்தைக் கண்டா இப்படி திடீரென்று உம்முடைய தீர்மானம் மாறியது? இது செப்படிவித்தை ஸ்வாமி— பயப்படாதேயுங்கள்.

வீர.—(விழிக்கிறான் ஹா.

ரண.—ஆம் இது செப்படிவித்தை. ஆயிரம் ஊசிகளைக்கொண்டு உம்முடைய கையில் குத்தினதுபோல் தோன்றினது நிஜம். அது ஸ்திரீகள் பச்சிலைப் பொட்டுக் குத்திகொள்வது போலத்தான். பச்சிலை வர்ணத்திற்குப் பதிலாய் கருப்பு வர்ணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வீர.—ஹா-ஹா.

ரண.—அப்புறம் கதையைச் சொல்லுங்கள்.

வீர.—அந்த சநி என்னை யழைத்துக்கொண்டு போய் சித்ரவதைக்குரிய பலவித ஆயுதங்களைக் காண்பித்து ஐந்து நாட்களில் என்னைத் திருப்பிக் கொண்டுவந்து மதுரையில் சேர்த்தது.

ரண.—இந்த ஐந்து நாட்களிலும் ஆஹாரமே இருவரும் செய்யவில்லையா?

வீர.—நாங்கள் தங்குவதெல்லாம் காடுகளில்தான். என்னை இருக்கச்சொல்லிவிட்டு அடிக்கடி வெளியே போய் திரும்பி எனக்கு ஆஹாரம் கொண்டுவரும். அது ஆஹாரஞ்செய்து நான் பார்த்ததில்லை.

ரண.—அது—அது—என்று சொல்லவேண்டாம் ஸ்வாமி அவன் என்றே வ்யவஹரியுங்கள்.

வீர.—அப்படி வரவில்லையே. பிறகு நான்கு மாதங்களாயின. இதன் அதிகாரத்தினின்றும் தப்பிக்கவும், பலியிடுவதாக சநீசுவரனுக்குக் கொடுத்த ப்ரதிக்ஞையை நெகிழ்த்தவும் நீலகண்ட சாஸ்திரிகளைத் தருவித்துப் பேசிக்கொண்டிருந்தேன். நாங்கள் வ்யவஹரிக்கும்பொழுது இரண்டு தடவை இடி இடி யென்று இழிவுகாட்டிய சிரிப்பு என் காதிலெட்டியது. இதோ பார் மயிர்க்கூச்சலை.

ரண.—இவ்வளவு பயம் உங்களுக் கேற்பட்டிருப்பதால்தான், இவ்விஷயம் முழுவதும் எனக்குத் தோன்றுவதுபோல், பெருமோசடி என்று உங்களுக்குத் தோன்றவில்லை. அப்புறம்—

வீர.—நீலகண்ட சாஸ்திரிகள் இந்த சனிபாதையை விலக்கிக்கொடுப்பதாக வாக்குக்கொடுத்து வெளியே போனதும், சநீசுவரன் உள்ளே வந்தான். 'இன்னம் பார் இரண்டு நாளில் காண்பிக்கிறேன் என் ஸாமர்த்யத்தை' என்று வீராவேசம் பேசினான். ரணகேஸரி. அப்படியே செய்துவிட்டதே அந்த சநி.

ரண.—மறுபடி அந்த வழியில் புத்தியைச் செல்லவிடாதேயுங்கள் ஸ்வாமி. இரண்டு நாளென்று சொல்லிற்றே அந்த சனி. பிறகு ஐந்து நாள் வரை நீங்கள் இவ்விதக் கவலைகளின்றி ராஜ்யபாரம் செய்யவில்லையா? தெய்வ வாக்காயிருந்தால் சொன்னபடி பலிக்கவேண்டாமா?

வீர.—ஆம் வாஸ்தவந்தான்.

ரண.—மேலே கதை.

வீர.—இந்த விஷயத்தை நீலகண்ட சாஸ்திரிகளிடம் சொல்லவேண்டி நடுநிசிவேளையில் அவர் இருந்த அறைக்குள் போனேன். அவர் குத்துண்டு பிணமாய்க்கிடந்தார். அவரைக் கொன்ற பழி என்மீது சாருமென்று, என்னமோ முட்டாள் எண்ணம்-கால வித்யாஸம்- அப்பிணத்தைத் தூக்கியெடுத்து வைகையில் போடக் கொண்டுபோனேன்.

ரண.—சிவ—சிவ ஈசா!

வீர—பாக்கிக் கதைதான் எல்லோருக்கும் தெரியுமே.



ரண.—போதும் ஸ்வாமி. ஐந்து நாள் சநீசுவரனுடன்கூட இருந்தபொழுது தங்கியிருந்த இடங்களில் எதையேனும் அடையாளமாய்ச் சொல்ல முடியுமா ப்ரபு?

வீர.—ஒன்றும் ஞாபகமில்லை. இதுவரையில் நான் பார்த்தவைகள் எல்லாவற்றிலும் பெரிய ஆலவிருக்ஷம் ஒன்றுமட்டும் ஞாபகமிருக்கிறது.

ரண.—ஸரி. இன்னொரு கார்யம். தங்களை இக்காராக்ரஹத்தினின்றும் தப்புவிப்பது எனக்கு வெகு ஸுலபம். என்ன சொல்லுகிறீர்கள்?

வீர.—அதில் எனக்கு இஷ்டமில்லை எல்லா விஷயங்களும் வெளியாகி என் பேரில் குற்றமில்லையென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி வந்த பிறகுதான் நான் காராக்ரஹத்திலிருந்து வெளியேறுவதற்கு ப்ரயத்னப்படுவேன்.

ரண.—ப்ரபு, அப்படிச் சொல்லலாகுமா?

வீர.—அது முடியாது.

ரண.—ப்ரபு, நான் போய்வருகிறேன். மறுபடி ஸந்தோஷ ஸமாசாரத்தோடு உங்களைப் பார்க்கிறேன். (நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம். 5

### களம். 1

இடம்: சோழதேசத்தை யடுத்த ஒரு காடு.

காலம்: ஸாயங்காலம்.

ப்ரவேசம்: ரணகேஸரி.

ரண.—எல்லா விஷயங்களையும் சீர்தூக்கிப்பார்க்குமிடத்து, நம் அரசனுடைய கஷ்டங்கள் அனைத்திற்கும் காரணபூதனானவன் இச்சோழனே என்றுதான் நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. கார்யகாரண ஸம்பந்தங்களை விலக்கிப் பார்க்குமிடத்தும், இக்கரிக்காலச்சோழனே தான் இவ்வளவிற்கும் காரணமாயிருக்கவேண்டுமென்று ஒரு நிச்சயம் ஏற்படுகிறது. அத்தோற்றமும் இதர தோற்றங்கள் போலல்லாது, அக்கரிக்காலச்சோழன் செய்வதையே நேராடிப் பார்த்த ஒருவனுக்கு எப்படி நிச்சிதா புத்தி இருக்குமோ, அவ்விதமாய் தோற்றமல்லாது. ஆராய்ந்துணர்ந்த உண்மையைப் போலவே இருக்கிறது. இவ்விதமான நூதன மனத்தோற்றம் இதுவரை எனக்கிருந்ததில்லை—ஹா—ஹா—என்ன ஸாமர்த்தியமாய்க் கார்யங்களெல்லாம் செய்திருக்கிறான். நிரம்ப புத்தி யூகமுடைய நம்மஹாராஜாகூட இதை தெய்வீகமென்று நினைத்து விடும்படிக் கன்றோ செய்திருக்கிறான். வேறெவ்விதமாக நினைத்தாலும் அது ஸமாதானமில்லாமற் போகும்படி செய்த இந்த நூதன மனத்தோற்றமும், அரசன் கையில் தோன்றின அந்தக் கருமையான கோட்டை நான் பார்த்ததும் இல்லாதிருக்குமானால் நானுமே இதைத் தெய்வீகமென்றே நம்பியிருப்பேன். சீ—இது தெய்வீகமல்ல—சநீசுவரன் கைப்பிடித்தவிடம் கருகிற்று என்பது வாஸ்தவமாயிருக்குமானால், தோல் முழுவது மன்றோ அவ்விடத்தில் கருகியிருக்கும். கருப்பான இடங்களில் ஊசிகுத்தின விடங்கள் தனித்தனியாய் உற்றுக் கவனிப்பவர்களுக்குத் தெரிகின்றனவே! சநீசுவரன் தன்னை ராஜதானியிலிருந்து இட்டுக்கொண்டு போய் பலவகை சித்ரவதைக்குரிய ஆயுதங்களைக் காண்பித்து, ஐந்து நாட்களில் திரும்ப ராஜதானி கொண்டுவந்து சேர்த்ததாக வன்றோ சொன்னார். ஆதலால் அவ்விடம் மதுரையிலிருந்து இரண்டரை நாள் ப்ரயாணத்திலிருக்க வேண்டும். அந்த சநீசுவரன் சோழராஜனென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால், சோழன் சித்ரவதைக்குரிய ஆயுதங்களை தன் ராஜதானியிலன்றி வேறெங்கு வைத்திருப்பான். பாண்டிய ராஜதானியும் சோழ ராஜதானியும் — ஸரியாக இரண்டரை நாட் ப்ரயாணந்தான் இருக்கிறது. அப்பொழுது நாம் யோசித்தது ஸரியாக விருக்கலா மென்றுச்சுது— ஆம்— முன்னே சோழனுடைய படையாட்களே தாம் நம்மரசனுக்கு உதவிசெய்து சேரனைப் புறங்காட்டிபோடச் செய்ததென்று ஸேனாதிபதி ஹரிஹர தேவர் சொல்லியிருக்கிறார். சோழனுடைய ஸேனை வரவும், சேரனுடைய ஸேனைகள் முறிபட்டோடினதையும், சோழன் பெயரைச் சொன்னமாத்திரத்தில் சேரன் நடுநடுங்குகிறதையும் சேர்த்துப் பார்த்தால், இச்சேரனையும் தன் கைவசப்படுத்தி, தனக்கொரு கைவாணமாகச் செய்து கொண்டிருப்பானோ இந்தச் சோழன் என்றுகூட ஸந்தேஹிக்கிறேன். என்ன ஸந்தேஹித்தென்ன? கார்யமோ மிகவும் த்ரோஹமான கார்யம். நிரூபணமோ அஸாத்யமென்றே சொல்லிவிடலாம். இந்த அல்பஹேதுக்களையும் என் மனத்தோற்றத்தையுங் கொண்டு நாம் என்ன செய்யலாம்? சோழன்மீது பழி சாற்றினால், இருப்பவர் பைத்தியக்காரன் என்று பரிஹஸிப்பார்களேயன்றி வேறொன்றும் ப்ரயோஜனப்படாது. மனிதவியற்கையையறிந்தவர்களுள் முதன்மைஸ்தானம் வஹிப்பதற்கு சால யோக்யனான சோழன், நிச்சயம் நான் பைத்தியமல்ல வென்பதை யறிந்து, என்னைக் கொலைசெய்யும்படி யேவினும் ஏவலாம். நானுந்தான் எந்த நிச்சயமான பலத்தைக்கொண்டு அவன்மீது பழி சாற்றுவது? நான் ஏன் இங்கு வந்தேன்? ஜகதீசா—எனக்கொன்றுமே தோன்றவில்லையே. கவலைப்பட்டென்ன கார்யமாவது? தன் பேரில் சற்றும் குற்றமில்லையென்று ஜனஸமூகத்திற்குப் பரிஷ்காரமாய் வெளியாகிறவரையில் காராக்ரஹவாஸமே தனக்கு மிகுந்த யோக்யமென்று அரசனே பிடிவாதம் பிடிக்கிறார். நானென்ன செய்யப் போகிறேன். அவருக்கு விபவமில்லாத பொழுது எனக்கென்ன விபவம்வேண்டியிருக்கிறது. கால்களே, என்னை எங்குவேண்டுமென்றாலும் கொண்டுபோங்கள், களைத்தால் உட்கார்ந்து சிரமபரிஹாரம் செய்துகொள்ளுங்கள்.

(நிஷ்க்ரமிக்கிறான்.)

## அங்கம். 5

### களம். 2

இடம்: சோழ ராஜதானியில் ஒரு வீதி.

காலம்: மாலை.

**ஸோமேசபட்டர்.**—என்ன அய்யா வாமேசபட்டரே, என்ன,காணவே காணமே!என்ன விசேஷம்? எங்கேயாவது அர்த்த ஸம்பாதனத்திற்கு வழியுண்டோ?

**வாமேசபட்டர்**—முதுகு விழுந்துபோகிறதையா; காலமேமுதல்ஒரேநிலையாய் எந்நேரம்நிற்கிறது?

**ஸோ.**—என்ன ஐயா விசேஷம்? என்ன அப்படி வேலை? ஏதாவது அபிஷேகமோ?

(ரணகேஸரி ப்ரவேசிக்கிறான்)

**வா.**—யாரையா அது? இங்கே நிற்காதேயும், போம்.

**ரண:**—(ஸ்வகதம்) கால்கள் களைத்துப்போயின. இனி ஒரு அடியும் எடுத்துவைக்க முடியாது. வருவதற்கு முன்னால் இந்த ப்ராஹ்மணன் வேட்டைநாய் விழுவதுபோல் விழுகிறான். அன்றியும் அவன் சொல்லுகிற மாதிரியைப் பார்த்தால் ஏதோ ரஹஸ்யம் பேசவேண்டியதற்காக நம்மைவிரட்டுவதுபோல் தோன்றுகிறது. நமக்கும் ஊர்விசேஷங்கள் அறிந்துகொள்ளவேண்டிய தவசியமாயிருக்கிறது. ஆதலால் பாஷை தெரியாதவனைப் போலவும் செவிடனைப் போலவும் பாசாங்கு செய்வோம். (அவர்கள் ஸமீபம் போகிறான்) நம்வேஷம் உத்தராதி வேஷம் போல விருக்கிறது.

**வா.**—யார் அது? சநியன்தொலைந்துபோங்கிறேன்! கிட்டவரான்.

**ரண.**—ஸ்வாமி, கூப்பிடுகிறீர்களா? இதோ, வந்துவிட்டேன். நான்—

**வா.**—ஆம், உன்னை வெற்றிலைப்பாக்கு வைத்து யாரோ இங்கழைக்கிறார்களோ—

**ரண.**—ஹா—என்ன சொல்லுகிறீர்கள்?

**ஸோ.**—இவனுக்குத் தமிழ் தெரியாது போலிருக்கிறது. இவனை விசாரிப்போம். ஒய்— நீர்யார் — நீர் எந்த தேசம்?

**ரண.**—ப்ரவேசம் செய்தேன் — மன்னிப்பீர்கள் எனக்குப் பசி—

**வா.**—காதுங் கேட்காதா? (காதண்டை போய் பலமாய்) நீர் எந்த ஊர்?

**ரண.**—ஊரா? விஜயநகரம்—எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன், எனக்குப் பசி காதடைக்கிறது.

**வா.**—பசி காதடைக்கவாவது! தெய்வமேதான் நிரந்தரமாய்க் காதை யடைத்திருக்கிறதே.

(ரணகேஸரி தள்ளாடி உட்காருகிறான்.)

**ஸோ**—நிஜமாகப் பசிதான்போலிருக்கிறது.ஐயையோ. எங்காத்தில் சோவில் சோறு மிச்சமில்லையே.

**வா.**—போறான் ஐயா நாசமாய் போறவன்—போடா—இங்கிருக்காதேடா—

**ரண.**— இருக்கேன் ஸ்வாமி, சற்று சீக்கிரம் உத்திரவு செய்யணும்—பசி காத—

**வா.**—இதென்னடா சநியன்! முழுமூடனாக விருப்பான்போலிருக்கிறதே—முகபாவமா—கைஜாடையா! ஒன்றையுங் கவனிக்கிறானில்லையே—போடா எங்கிறேன், என்னமோ சற்றே இரு என்று சொன்ன மாதிரி இருக்கான்—சீக்கிரம் உத்திரவு பண்ணணும் எங்கிறானே.

**ஸோ.**—போறான் ஐயா—பசின்னுவந்தா ஏதாவது குடுக்கணும் நாக்கே—

**வா.**—இதென்ன! சனியன்—பூஜை வேளையில் காடியை விட்டோட்டிய மாதிரி இவன் எங்கே குறுக்கே வந்தான். ராஜகார்யமாக உம்மிடம் வந்தேன்!—உம் ஒத்தாசையும் வேண்டியிருக்கிறது. ரஹஸ்ய கார்யம்—இந்தச் சனியனைத் தொலைச்சானுதேவலை.

**ரண.**—(ஸ்வகதம்) அப்பொழுது அவசியம் இங்கிருந்து உங்கள் ஸம்பாஷணையைக் கேட்கிறேன்—நான் இங்கேவிட்டுப் போகவில்லை. தெய்வங்களா! உங்களிரக்கந்தானோ இது, அல்லது ஏமாந்துபோகப் போறேனோ—

**ஸோ.**—எந்த ஏழையயாவது இவன் வயத்துக்கு இத்தனை பிண்டத்தைக் கொட்டி விட்டால் தொலையறான் சனியன்.

**ரண**—(ஸ்வகதம்) யாத்ரிகர் விஷயத்தில் எத்தனை தயை—ஆமப்பா, யதா ராஜா ததா ப்ரஜா.

**வா.**—உம்ம வீட்டில் சோறில்லை இங்கிறீர். எங்கள் வீட்டில் வேண்டிய சோறு இருக்கிறது. காளி ப்ரஸாதம்—

**ஸோ.**—காளிபூஜை ஆரம்பித்தாய்விட்டதா?

**வா.**—ஆமையா எளவு, அந்த எளவு சோற்றை தொலைப்பமனு என்னாலே எழுந்திருந்து போக முடியாது.

**ஸோ.**—நீர் சற்றே இரும். நான்போய் எடுத்துக் கொண்டுவந்து தொலையறேன்.

**ரண**—(ஸ்வகதம்) ஆமா—இங்கேதான் நீ வரவேண்டும். (ஸோ-நிஷ்க்ரமித்தல்)

(ஸோமேசன் மறுபடியும் ப்ரவேசித்து)

**ஸோ.**—(அன்னத்தை எடுத்துக் கொண்டுவந்து) இந்தா, எடுத்துக்கொண்டு தொலைந்துபோ—அங்கே குளமிருக்கு எடுத்துத்தொலை.

**ரண.**—(அன்னத்தை வாங்கி) ஸ்வாமி கொஞ்சம் ஜலம்.

**வா.**—தேவலையே—இந்த எளவு இவனோடே யார் கத்தறது எளவிலே—கிடையாது—பிண்டே—போ—

**ரண**—ஐயா—கொஞ்ச ஜலம் மட்டும் கொடுத்தால் இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்ளுவேன்.

**ஸோ.**—இவனோடே கத்தறத்திற்கு இத்தனை ஜலத்தைக் கொணர்ந்து தொலைச்சுப்டலாம்.-இந்தா—



**ரண.**—(ஸ்வகதம்) அப்படி வா.

(உள்ளேயிருந்து வந்த ஜலத்தை ஸோமேசபட்டர் ரணகேஸரியிடம் கொடுக்கிறான், ரணகேஸரி சாப்பிட உட்காருகிறான்.)

**வா.**—ஸரி, நாம் உள்ளே போவோம்.

**ரண.**—ஐயா, வெளிச்சமில்லை.

**வா.**—கைக்கும் வாய்க்கும் வெளிச்சமோ? போடா சடிப்பயலே, தின்னுத்தின்னு இல்லாட்டா தொலை.

**ஸோ.**—அவந்தான் என்னகாணும் பண்ணுவன்—இருட்டோல்யோ? இந்த விளக்கைத்தான் கொடுப்பம். சோறு போட்டது ப்ரயோஜனமில்லாமலா போகணும்.

**வா.**—அப்படியா, என்னவேணு பண்ணுங் காணும்; நீர் மாப்பிளை வந்தாப்பிலே உபசாரம் பண்றீரே.

**ரண.**—(ஸ்வ) நமக்கு ஸோமேச பட்டார்தான் ஸ்நேகிதர். (விளக்கு வருகிறது. ஸோ—வா—இருவரும் உள்ளேபோகிறார்கள்)

**ரண.**—(வாயால் விளக்கையூதி யணைத்து) ஐயோ!

**ஸோ.**—ஏண்டா, இன்னம் என்னடா சநியனே.

**ரண.**—ஐயோ விளக்கணைந்து போய் விட்டது—தயவுசெய்யணும் ஐயா—காதடைக்கிறது.

**ஸோ**—அங்கே அப்படித்தான் அணையும்—(விளக்கைவாங்கி ஏற்றிக்கொண்டுவந்து) இந்த ரேழியிலே தின்னு.

**ரண**—(ஸ்வகதம்) நான் இவ்வளவுநாழி பட்டபாடெல்லாம் அதற்குத்தான். (ரணகேஸரி சாப்பிடுகிறான். உள்ளே இருவரும் உட்காருகிறார்கள்.)

**வா.**—ராஜா வெகு காலமாகக் காளிகாதேவியின் ப்ரஸாதத்திற்கு பரிச்ரமப்பட்டுக் கொண்டிருந்தார் என்பதுதான் உமக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயமாயிற்றே. இன்றைக்கு பலி (மெதுவாக) ராஜகுமாரியை எங்கேயோ ஸம்பாதித்துக் கொண்டிவந்திருக்கிறார். அதை இன்றிரவு பலிகொடுக்க உத்தேசித்திருக்கிறார். அதற்காகத்தான் இன்று முழுவதும் மத்தியானத்தில் அபிஷேகம் நடந்தது.

**ஸோ.**—எனக்குத் தெரியவேயில்லையே—என் என்னிடத்தில் ஒன்றையும் சொல்லவேயில்லை?

**வா.**—இந்தஸங்கதி ஒருவருக்குந்தெரியக் கூடாதென்று ராஜா கண்டிப்பாய் உத்தரவு கொடுத்திருந்தார். அதினால் நான் ஒன்றும் சொல்லவில்லை.

**ஸோ.**— அப்படியானால் இப்பொழுது என் சொன்னீர்?

**வா.**—ராத்ரி — பலி—கொடுக்கிறதுன்னு வந்தவுடனே என்னமோ பயமாயிருக்கிறது. இதுவரையில் அந்தவழக்கம் கிடையாதோல்யோ. அதனாலே—ராஜாவைக் கெஞ்சிக் கேட்டுக்கிண்டேன் - யாராவதொருவரை கூட்டிக்கிறேன்னு — ஸரி—யாராவதொரு நம்பிக்கையுள்ள பட்டரை கூட்டிக்கொள்ளு என்று உத்திரவு கொடுத்தார்.

**ஸோ.**—அதற்காக — என்ன செய்யவேணுமாம்!

**வா.**—நீர் வரவேணும் எனக்குத் துணையாக—

**ஸோ.**—அங்கே யாரார் வரப்போகிறார்களாம்! தெரியுமா?

**வா.**—ராஜா ஒருவர்தான்—வேறொருவருமில்லை. நீர் தான்—நான்தான்.

**ஸோ**—அப்பொழுது பயமாகத்தானிருக்கும்போலிருக்கிறது.

**வா**— அந்த மட்டில்லையே—ராஜா— நம்முடைய சாஸ்திரங்களில் சநீசுவரனுக்குச் சொல்லப்பட்டிருக்கிறபடி வேஷத்துடன் மஹாராஜா வருவார். அங்கு அவரைப் பார்த்தாலே பயமாயிருக்கும்.

**ரண.**—ஈசுவரா—

**ஸோ**—இத்தனை லட்சணத்தில் காளியும் ப்ரஸந்நமாகிவிட்டால்—வேறு வினைவேண்டாம்.

**வா.**—என்னமோ நீர்தான் வரவேண்டும்—நல்ல ப்ரயோஜனம் கிடைக்கும்.

**ரண**—ஸ்வாமிகளே, நான் போய் வருகிறேன்—ரொம்ப நமஸ்காரம். நான் திண்ணையில் படுத்துக் கொள்ளுகிறேன்.

**வா.**—ஸரி—நான் போய் வருகிறேன்—நீர்—ஸரிதானே—மணி 11-க்கு உம்மை நான் கூப்பிடவருகிறேன்.

**ரண.**—(ஸ்வகதம்) காளிகோவிலுக்குப் போகிற வழி எனக்கும் தெரியவேண்டுமோயில்லையோ—போய் வாரும். (நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம். 5

### களம். 3

இடம்: காடு. ப்ரவேசம்: காளிகோவில்.

காலம்: ராத்திரி — 12-மணி.

**ரண.**—இதுவரையில் அந்த இரண்டு பட்டர்களையும் தொடர்ந்து வந்துவிட்டேன்—இதோ தூரத்தில்—ஒரு ஆலயம் விளங்குகிறது—அவர்கள் நோக்கிச் செல்லும்திசையையும் அக்கோவிலிருக்கும் திசையையும்நோக்க காளிகோவில் அதுவாகத்தானிருக்கும்போலிருக்கிறது. சோழா—சநீச்வரன் வேஷத்தோடா வரப்போகிறாய். ஐயோ—யாரோ ராஜ குமாரத்தியை பலியிடக் கொண்டுவந்திருக்கிறானாமே. அந்தக் குழந்தையை பலியாகாமல் எப்படிக் காப்பாற்றலாம்? அப்படியே செய்வோம்—(முன்னாலோடி காளிக்குப் பின் உட்கார்ந்து கொள்ளுகிறான்—வாமேச ஸோமேசர் ப்ரவேசிக்கிறார்கள்.)

**வா.**—ஓய் ஸோமேசரே—இன்றைக்குக் காளிகாதேவியை பார்த்தீரா? என்ன உக்ர களையென்று.

**ஸோ.**—ஆமாண்ணா—நானிதுவரையில் இப்படி பார்த்ததில்லை—என்ன ரௌத்ராகாரம்—ஹா—ஹா.

**வா.**—இந்த அலங்காரத்தைக் கலைத்துவிட்டு இன்னும் கோராக்ருதியாய்த்தான் ரும்படி இப்பொழுது அரசன் வருவதற்குள் அலங்காரம் செய்யவேண்டும். ரத்தசாமுண்டா அவஸரம். ராஜா வந்துவிடுவார்.

வேகப்படுத்துவோம் வாரும். (இருவரும் உள்ளே ப்ரவேசிக்க.)

ரண.—என்னுடைய அலங்காரத்தைக் கலைக்கவே வேண்டாம். இதே அலங்காரத்துடன்தான் பலி ஏற்றுக் கொள்ளப் போகிறேன்.

ஸோ.—வாமேசரே. காளியா பேசறது. அடே—இதென்ன ஆச்சர்யம்.

வா.—இன்னி மத்யான்னம் அபிஷேகமாவது ஸாமான்யமா? இப்படி இதுவரையில் கிடையாதோல்யோ—காளிக்கு உச்சி குளிர்ந்து போயிருக்குமே.

ரண.—(ஸ்வகதம்) எனக்கும் உச்சி குளிர்ந்துதானிருக்கிறது.

ஸோ.—இப்போ என்ன பண்றது—அலங்காரத்தைக் கலைக்கிறதா?

வா.—கலைக்கிறதா? வேண்டாமென்று காளி வாய்திறந்து உத்தரவு செய்யும்பொழுது கலைக்கிறதா? கிட்டப்போனல் காளி கண்ணைக் கெடுத்து விடுவாள். தெரியுமா?

ரண.—நன்ருய்ச் சொன்னய் வாமேசா. ஸோமேசா, ஜாக்ரதை.

ஸோ.—ஐயையோ—காளிக்கு என்பேரில் கோபம்போலிருக்கிறதே.

வா.—அதெல்லாம் கோபமிருக்காது இங்கிறேன்—உத்தரவுக்கு விரோதமாய்ச் செய்யக்கூடாதூன்னு முன்ஜாக்ரதை செய்து வைத்திருக்கிருள்.

ஸோ.—அரசன்வந்து என் அலங்காரத்தைக் கலைக்கவில்லை யென்று கோபித்துக்கொண்டா லென்ன செய்கிறது?

வா.—கலைக்கக்கூடாதென்று காளி உத்திரவு கொடுத்தாள் என்று சொல்லுகிறது.

ஸோ.—காளி அப்புறம் பேசாவிட்டால் நம்மீது ஸந்தேஹப்படமாட்டாரா?

வா.—ஆமா—அதுவும்ஒருசனியன்தான். இதுக்கு நாமென்ன செய்கிறது?

ஸோ.—காளியை இரண்டுபேரும் ஸ்தோத்ரம் பண்ணி ப்ரார்த்தித்துக்கொள்ளுவோம்.

இருவரும்.—தாயே ஜகதீச்வரி, லோகமாதா, நாங்கள் தெரிந்து செய்திருந்தாலும் தெரியாமற் செய்திருந்தாலும் ஸகல அபராதங்களையும் க்ஷமித்து, தாஸர்களைக் காப்பாற்றவேண்டும் (கன்னத்தில் அடித்துக் கொண்டு நமஸ்காரம் செய்கிருர்கள்.)

ரண.—நீங்கள் ஸத்பக்தர்கள். உங்களுக்கொரு துரிதமும் ஏற்படாது.

வா.—காளி வாக்குக் கொடுத்து விட்டாளடா.

ஸோ.—அடே—அதென்னடா. ஐயையோ பயமாயிருக்கிறதே அதென்ன கரியடா— (சனிவேஷத்துடன் சோழன் ப்ரவேசித்தல்.)

வா.—சும்மாயிருங்கய்யா. அவர்தான் ராஜா; சனிவேஷத்துடன் வருகிருர்.

ரண.—(ஸ்வக) பாண்டியன் அரண்மனையிலிருந்து வெளியே போகும்பொழுது இதே கம்பளியைத் தான் மேலே போட்டுக்கொண்டு போனதைப் பார்த்தேன். ஸரிதான், சோழன்தான் சனீசுவரன்.

சோழன்.—பட்டர்களே!

பட்டர்கள்.—ஸ்வாமி, இதோ ஸித்தமாயிருக்கிறோம்.

சோ.—என்ன, இன்னம் அலங்காரம் கலைக்கப்படவில்லை. ரத்தசாமுண்டா அவஸரமாக அலங்காரம் செய்யவேண்டுமென்று நான் சொல்லியிருக்கவில்லையா?

ரண.—நானே இந்த வேஷத்துடன் பலியேற்றுக் கொள்வதாக வாக்களித்தேன்.

சோ.—(திடுக்கிட்டு) பேசுகிறது யார்?—காளிமாதேவியா?

வா.—ஆம் ஸ்வாமி. நாங்கள் அலங்காரத்தைக் கலைக்கவந்தோம். இதே மாதிரி, அலங்காரத்தைக்கலைக்கக்கூடாதென்று காளி ஆக்ஞாபனம் செய்தார்கள்.

ஸோ.—ஆமா ஸ்வாமி

சோ.—(ஸ்வ ஆஹா. காளியின் கருணைத்திறம் இருந்தவாறென்னே! இந்த ஒரு பலி கொடுப்பதற்கு வேண்டிய ப்ரயத்னங்கள் செய்யப்படுகையிலேயே இத்தனை திருப்தி காளிக்கு ஏற்படுமாஞல், பலிகள் மூன்றும் கொடுத்தாஞல் காளி என்னப்ரஸாதந்தான் செய்யமாட்டாள். ப்ரகாசம்) ஸ்தோத்ரம்.

ரண.—கரிக்காலச்சோழா! எத்தனை பலி கொண்டு வந்திருக்கிருய்?

சோ.—மாதா, பலி யொன்றுதான் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

ரண.—அது ராஜகுலந்தானு? நிச்சயமா? காளியை யேமாற்ற முடியாதென்று உனக்குத் தெரியாதா?

சோ.—ஜகந்மாதா, வாஸ்தவம். ராஜ குலந்தான். ஸந்தேஹமில்லை. தங்களை யேமாற்ற முடியுமா?

ரண.—அப்படியாஞல் யார் அந்தக் குழந்தை? என்ன வயது?

சோ.—லோகமாதா, இந்தக்குழந்தை வடக்கிலுள்ள விஜயநகரத்து அரசனின் புதல்வி. வயது எட்டு

ரண.—வயது எட்டாஞல் பலிக்கு யோக்யந்தான். பட்டர்களே, நீங்கள் ஒதுங்கியிருங்கள். அரசனை ரஹஸ்யமாய்ச் சில ஸமாசாரங்கள் கேட்கவேண்டியிருக்கிறது. (இருவரும் நிஷ்க்ரமிக்கிருர்கள்.) இக்குழந்தையை எப்படி ஸம்பாதித்தாய்?

சோ.—மாதா, திருடர்களின் உதவியால் கொண்டு வந்தேன்.

ரண.—திருட்டா—அடா - ப்ரஷ்டா —திருடியா எனக்குப் பலியிட வந்தாய்!

சோ.—மாதா, அந்தத் தாம்ர சாஸனத்தில் திருடியாகிலும் வேறு எவ்விதமாகிலும் மூன்று ராஜ—

ரண.—ஸரி. தொலைந்து போ. பாக்கி இரண்டு பலிகளெங்கே?

சோ.—வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். காலத்தில் கிடைக்கும்.

ரண.—யார் அந்தப் பலிகள்?

சோ.—சேரன் குழந்தை யொன்று.



ரண.—சேரனுக்குக் குழந்தைகள் கிடையாதே. என்னை ஏமாற்றவா பார்க்கிருய்? இதோ பார்! உன்னை என்ன பண்—

சோ.—மாதா, கோபங்கொள்ளக்கூடாது. அடியேனை மன்னிக்கவேண்டும். சேரனுக்குப் பிறக்கும் முதற் குழந்தையை எனக்குப் பலியிடுவதாக வாக்களித்திருக்கிருன்.

ரண.—ஓஹோ! சோழா, பலேபேஷ்! நல்ல கார்யம் செய்தாய். பலே பலி, திருப்தியான பலி, என்ன காளி காபக்தி, பூர்ணக்ருபை செய்கிறேன்; அப்புறம் இன்னெரு பலி?

சோ.—அம்பிகே. பாண்டியராஜன் குழந்தை.

ரண.—பாண்டியராஜன் குமாரியா, பலே! இவ்விரண்டும் எனக்கு நிரம்பத் திருப்தியானபலி- பலே சோழா—அதை எப்படி ஸரிப்படுத்திஞய்? நீ தீரன், நீ ஸத்பக்தன்.

சோ.—மாதா, சேரனை முதலில்கைவசப்படுத்திக் கொண்டு, பிறகு அவனைவிட்டு பாண்டியதேசத்தின்மீது படையெடுக்கச் செய்து, தோல்வியடைந்த பாண்டியனுக்கு உதவி செய்வதுபோல் போக்குக் காட்டி இந்த சனீசுவர ரூபத்துடன் அவனுக்குப் பிறக்கும் முதற் குழந்தையை பலிகொடுப்பதாய் ஒப்புக் கொள்ளும்படி செய்தேன்

ரண.—கொண்டா அந்த ருசிகரமான பலியை முதலில்.

சோ.—அம்பிகே இன்னும் குழந்தை பிறக்கவில்லையே! பிறக்கவேண்டிய ஸமயந்தான்

ரண.—முட்டாள் எனக்கு தெரியாதோ அது. அந்த பலிக்கப்புறந்தான் மற்ற பலிகளை யேற்பேன் என்றல்லவோ நான் சொல்லவந்தேன் தெரியுமா? எருமைமாடே.

சோ.—அம்பிகே, தெரியாத்தனத்தால் நான் செய்தபிழையை மன்னிக்க வேண்டும். மாதா, இந்த பலியையாவது இப்பொழுது ஏற்றுக்கொள்ளவேண்டும். எல்லா ஏற்பாடுகளும் செய்தாய்விட்டதே.

ரண.—எனக்கு பலி வேண்டாம்.

சோ.—மாதா, அடியேன்மீது தாங்கள் ஆயாஸப்பட்டால், எளியேன் தாங்குவேஞ? மன்னிக்க வேண்டும் தேவிக்கு ஆயாஸம் வராமல் காப்பாற்ற எளிய புத்தியுடைய மனிதர்களாகிய எங்களால் முடியுமா? மாதா, இந்த பலியை இன்று ஏற்று என்னை அநுக்ரஹிக்கவேண்டும்.

ரண.—இப்பொழுது இல்லை. இன்றைக்கு விடியற்காலம் பஞ்சபஞ்ச உஷத்காலத்தில்தான் பலியை யேற்றுக்கொள்ளுவேன். அதுவரை முடியாதுபோ.

சோ.—மாதா, அதுவரை காத்திருக்கிறேன். இந்த பட்டர்களையும் காத்திருக்கச் சொல்கிறேன். அநுக்ரஹிக்கவேண்டும்.

ரண.—பட்டர்கள் எதற்கு?

சோ.—பலிப்ரதான ஸமயத்தில் சொல்ல வேண்டிய மந்திரங்களைச் சொல்லுதற்கு.

ரண.—க்ஷுத்ரபுத்தி மானிடப்பதரே. பலியை நானே வந்து ப்ரத்யக்ஷமாய் வாங்கிக்கொள்ளும்பொழுது மந்திரம் வேறேயோ? மந்திரங்கள் எதற்காகவென்று தெரிந்துகொண்டாயா?

சோ.—அம்ப! பட்டர்களை இப்பொழுதே போகச் சொல்லுகிறேன்.

ரண.—நான் பிரஸந்நமாகும்பொழுது அவர்களிருக்கக்கூடாது.

சோ.—புத்தி அம்பா!

ரண. பலியுடன் நீ நம்முடைய ஸந்நிதியிலேயே கண்ணைமூடி, என்னுடைய ஆக்ருதியை த்யானித்துக் கொண்டு கிடக்கவேண்டியது. தெரியுமா? பஞ்சபஞ்ச உஷத்காலம் வரை.

சோ.—புத்தி அம்பா. (வெளியே நிஷ்க்ரமித்து பட்டரிருவரையும் போகச்சொல்லுகிருன். அவர்கள் போகிருர்கள். சோழன் வந்து படுத்துக்கொள்ளுகிருன்.)

ரண.—(காளிக்குப் பின்னிருந்து வெளியே வந்து) (ஸ்வகதம்.) கேட்கவேண்டியது கேட்டாயிற்று. பார்க்கவேண்டியது பார்த்தாயிற்று. தெரிந்துகொள்ள வேண்டியது தெரிந்து கொண்டாயிற்று. இனிஎன்ன? அரசன்பேரில் வந்துசுமந்த குற்றமாகிய நீலகண்டசாஸ்திரிகளின் கொலைக்கும் இந்த மஹாபாதகனேதான் காரணமாயிருக்க வேண்டும். அவ்வளவும்சனீசுவரக்ருதமென்ற தோற்றத்தை அரசனுக்கு நிச்சயப்படுத்த வேண்டியதற்காக இவனே நீலகண்டசாஸ்திரிகளை கொலைசெய்திருக்கிருன்; போகட்டும். இம்மட்டில் தெரிந்ததே— (ப்ரகாசம்) திறவாதே கண்ணை. நான் பலி ஏற்கும்வரைத் திறவாதே கண்ணை. (ஸ்வகதம்) பாக்கி விஷயங்கள் தன்னிச்சையாய் வெளிவரும். பின் பார்த்துக்கொள்வோம். (சோழன் ஸமீபம்போய் பலமாய் அவன் முதுகில் உதைக்கிருன்.)

சோ.—அம்பிகே மன்னிக்கவேண்டும்.

ரண.—திறவாதே கண்ணை, எழுந்திரு.

சோ.—இடுப்பில் விழுந்த உதையில் எழுந்திருக்க முடியவில்லையே.

ரண.—முடியவில்லையா! திறவாதே கண்ணை, எழுந்திரு சீக்கிரம்.

சோ.—இதோ (சிரமப்பட்டு) எழுந்திருக்கிறேன்,

ரண.—கண்ணைத்திறவாதே கையைநீட்டு—ஹூ—இரண்டு கைகளையும்—முட்டாள்—அஞ்சலி பந்தமாய்—ஹா—அப்படி—(கைகளைக் கெட்டியாகக் கயிறு கொண்டு கட்டி விடுகிருன்) கண்ணை விழித்துக் கொள் (சோழன் கண்ணை விழிக்கிருன்.)

சோ.—யாரடா நீ—மோசக்காரன்.

ரண.—நான்தான் ரணகேஸரி. நீசெய்த மஹா துஷ்க்ருத்யங்களைக் கண்டுபிடித்து உன்னைத் தண்டிப்பதற்காக வந்தேன்.

சோ.—என்னை யாரென்று நினைத்தாயடா மூடா? உன்னை இப்பொழுதே கைதியாக்கிச் சித்ரவதை செய்யச் சொல்லுகிறேன் பார்.

ரண.—என்னையா? அடே முட்டாளே, அதற்காகத்தான் பட்டர்களையும் விலக்கினேன். உன்னுடைய ஸ்வபாவ பலத்தையும் குறைக்க இடுப்பில் பலமான உதையொன்று கொடுத்தேன் இது விவித்தமான ப்ரதேசம். கடுகிசி வேளை—பட்டர்கள் வீடுபோயிருப்பார்கள். நீ என்ன கத்தினாலும் ஒன்றும் ப்ரயோஜனப்படாது. கைகளைக் கட்டியாய்விட்டது, பொழுது விடிவதற்குள் உன்னை இவ்விடமிருந்து இரண்டுகோச தூரமாவது கொண்டுபோய் விடுகிறதென்று என் உத்தேசம். மர்யாதையுடன் என்னைப் பின்தொடர்ந்து வந்தாலாயிற்று. இல்லாவிட்டால் ஹிம்சை வெகுவாய் அடைவாய். யோசித்துக்கொள்.

சோ.—அம்பிகே! உன்னைப் பக்தியுடன் பூஜித்ததற்குப் பலனோ இது.

ரண.—நல்ல எண்ணத்துடன், விசுத்தமான பாவத்துடன் பூஜைசெய்தாலன்றோ உனக்கு க்ஷேமம் கிடைக்கும். உன் பாவத்துக்குத் தகுந்த பலன்தான் கிடைத்தது.

சோ.—ஸரி, ரணகேஸரி, நீ சொல்வதனைத்தும் வாஸ்தவமே. நானுன்னுடன் வருகிறேன். நீ எங்கே போகவேண்டு மென்கிறாய்?

ரண.—நானிப்பொழுது சொல்லப்போவதில்லை. நீ கேள்விகள் ஒன்றும் கேட்கக்கூடாது. பேசாமல் பின் தொடர்ந்து வரவேண்டியது.

சோ.—ரணகேஸரி, ஒரு விஷயம்—

ரண.—நீ இன்ன சொல்வாயென்று எனக்குத் தெரியும். அதெல்லாம் வேண்டாம். என் காதிலேறாது. புறப்படு, போவோம். ஹும்.

சோ.—உனக்கு என்ன வேண்டியானாலும்—

ரண.—எனக்கு என்ன வேண்டும். நீ என் பின்னோடு வரவேண்டும். வேறொன்றும் வேண்டாம். புறப்படு. பதிற்பேசாதே. (கன்னத்தில் ஒரு அறை பளீரென்று கொடுக்கிறான்.)

சோ.—அப்பா—(ரணகேஸரி அவன் கழுத்தைப் பிடித்துத்தள்ள இருவரும் நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம். 5

### களம். 4

இடம்: மத்ரதேசம் அரண்மனை.

காலம்: காலை.

அமரேந்த்ரன்.—அம்பாலிகே. துக்கப்படுவதிலென்ன விருக்கிறது, துக்கப்படாதே; காலம் இப்படியே போய்விடாது. நல்லகாலம் பிறக்கும். கெட்டகாலம் நீங்கும். பயப்படாதே.

அம்.—அப்பா. என் ப்ராணநாதனுக்கு நல்லகாலம் பிறக்குமா பிறக்காதா என்பதல்லவே என் விசாரம். மகா க்ரூர ஹ்ருதயமுடையவனான சோழனிடத்தில் கைதியாக அகப்பட்டுக்கொண்டாரே, அவன் அவரை என்ன ஹிம்ஸை செய்வானோ. நான் அரண்மனையில் ஸௌக்யமாய் இருக்கிறேனே.

அம.—அம்பாலிகே, பயப்படாதே, சோழன் ஒன்றும் செய்யமாட்டான். ரணகேஸரி இவ்விடம்விட்டு சோழநாட்டுக்குப் போனபிறகு உன்னுடைய நாதனைக் கண்டு பேசின விஷயங்களையெல்லாம் வந்து சொன்னானே. அவைகளை நினைத்துப்பார். அப்புறம் விசாரப்பட என்ன ஹேதுவிருக்கிறது.

அம்.—அப்பா அதுஸரி. இருந்தாலும் ரணகேஸரி மிகவும் நல்லவனானதையால் என்னைத் தேற்றுவதற்காகவே அப்படிச் சொல்லியிருப்பான் என்று தோன்றுகிறதே தவிர, நிஜமாகத் தோன்றவில்லை.

அம.—அம்பாலிகே! அப்படியல்ல; ரணகேஸரி என்னிடம் தனிமையில் முதலில் சொன்னான். எப்படிக்கிருந்த போதிலும், உலகத்தின் கஷ்ட நிஷ்டூரங்களில் அடிபட்டுத் தேறினவனானதையால் நான் கலங்கமாட்டேனென்பது அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்த விஷயம். ஆகையால் அவன் என்னிடம் பொய் சொல்லியிருக்க முடியாது. அன்றியும் என்னிடம் யோசனை கேட்கவந்தவனானதையால் பொய் சொல்லியிருக்கக் கூடும் என்று யோசிப்பது மெத்த அஸம்பாவிதம்.

அம்.—தப்பிப்பது வெகு ஸுலப ஸாத்யமென்று ரணகேஸரி அவரிடம் சொல்லியும் மாட்டேனென்றுட்டேன் என்று அவர் சொல்லியிருப்பாரோ என்றுதான் எனக்கு ஸந்தேஹம்.

அம.—அதுதான் மனித சித்தவ்ருத்தியிலுள்ள ஒரு விசேஷம். நிஷ்களங்கமான ஹ்ருதயமுடையவன் உன் ப்ராணநாதன் என்பதற்கு அதுதான் ஒரு அடையாளம். அதைக்கேட்டு நான் ஒரு வழியில் ஸந்தோஷிக்கவே ஸந்தோஷித்தேன்.

அம.—ஸந்தோஷித்தீர்களா?

அம்.—ஆம், ஸந்தோஷித்தேன். ஏனென்றால் அவர் உத்தமகுண சீலரென்பது வெளியாயிற்று. அப்படிப்பட்டவர்களுக்குத் துக்கமும் கஷ்டகாலமும் வெகுகாலம் நிலைத்து நிற்குமானால் அது தெய்வ நீதிக்கே புறம்பு—ஆகையால் அவருக்கு க்ஷேமகாலம் சீக்ரம் வருமென்ற எண்ணத்தால் ஸந்தோஷமுண்டாயிற்று. (ஸேவகன் ப்ரவேசிக்கிறான்.)

ஸேவகன்.—ரணகேஸரி வருகிறார்.

அம்.—ரணகேஸரியா? நல்ல ஸமாசாரத்துடன் வருவாரா?

அம.—என் மனதில் ஏதோ ஸந்தோஷமுண்டாகிறது. நல்ல ஸமாசாரமாயிருக்கு மென்று நம்புகிறேன்.

(ரணகேஸரியும் சோழனும் ப்ரவேசிக்கிறார்கள்)

ரண.—ராஜந்! நமஸ்காரம். அம்மா நமஸ்காரம்.

அம.—போனகார்ய மெப்படி ரணகேஸரி?

அம.—ஏதாவது பலன் கிடைத்ததா?

ரண.—இதோ இந்த ப்ரஹ்மஹத்தியைப் பாருங்கள். இவனை ஒருவரு மறியா வண்ணம் மாறுவேஷம்போட்டுக் கூட்டிக்கொண்டு வந்தேன்.



அம.—இவன் யார்?

ரண.—இவன் தான் கரிக்காலச் சோழன்.

அம.—கரிக்காலச்சோழனா? வாருங்கள்.

ரண.—இந்தத் திருட்டு அயோக்ய மாடுபிடிக்கிப் பயல்களில் அக்ரதாம்பூலம் கொடுக்கவேண்டிய இந்த துராத்மாவையா, வாருங்கள் போங்கள் உட்காருங்கள் என்று மரியாதை செய்கிறீர்கள். (சோழனை ஒரு அறை அறைகிறான்.)

அம.—இருந்தாலும் அடிக்காதே.

அம்.—நமக்கே அஹிதம் செய்தவனாயிருந்தாலும் அவன் அரசனல்லவா? அவனைத் தகுந்த மரியாதையுடனேயே நடத்தவேண்டும்.

ரண.—மாதா, மன்னிக்கவேண்டும். கதை முழுவதும் கேட்டால் இவ்விதம் இந்தப் பாதகனுக்கு சிபார்சு செய்யமாட்டீர்கள். இவன் நம்முடைய கஷ்டகால மனைத்திற்கும் காரணமாயிருந்தவன். இப்பொழுது வெகுதூரம் நடந்துவந்து பசிக்களைப்பு அவனுக்கும் எனக்கும் அப்படியே இருக்கிறது.

அம்.—அப்படியானால் அவனுக்கு சாப்பாடு செய்துவை. நீயும் சாப்பிடு, அப்புறம் பேசிக்கொள்வோம் கார்யம் ஜயந்தானே.

ரண.—அம்மா— இன்னம் நான்கு தினங்களுக்குள் (அதாவது இங்கிருந்து மதுரைபோய்ச் சேர வேண்டியதற்குரியகாலம்) அரசனிழந்த ஸிம்ஹாஸனத்தை, அவர் அடைவதற்கு வேண்டிய கார்யங்கள் முழுவதும் செய்தாயிற்று. தைர்யமாயிருங்கள். (ரணகேஸரியும் சோழனும் நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

அம்.—இது நிஜமாயிருக்குமா?

அம.—ரணகேஸரி தீரவிசாரியாமலா சொல்லுவான்? என்னமோ இன்னும் சற்று நேரத்தில் எல்லாம் வெளியாகிறது.

(418-ம் பக்கத் தொடர்ச்சி.)

உண்மையாய் பிறருக்கும் தேசத்திற்கும் உழைத்து தமது ஆத்மநிலை பிறழாமல் இருக்கவேண்டும் என்று வண்ணமே நடந்துவருகின்றனரல்லவோ இவர்! இவர் போன்றவரல்லவா இந்தியமாதாவின் ஸத்புத்ரர்கள்! இந்தியரது நிலைமையை தென்ஆப்ரிக்காவில் சீர்ப்படுத்தியபிறகு அவர்கள் நிலைமையை இந்தியாவிலேயும் சீர்ப்படுத்தவேண்டுமென்னும் உயரிய நோக்கங்கொண்டவராய் இந்தியாவின் உண்மை நிலையைக் கண்கூடாக அறியவேண்டி பிரயாணம் செய்கிறார் போலும். மேற் கூறியவண்ணம், இந்தியரை முன்னிட்டு இயர்நடத்திய ஆத்மசக்தி யுத்தத்தில் தமிழ்நாட்டினரே மிகவும் மன ஒற்றுமையுடன் கஷ்டப்பட்டதாகவும் அத்தகைய சிறப்புவாய்ந்த தமிழ் நாட்டைப் பார்த்து தம்முடன் கஷ்டப்பட்ட சிலரையும் கண்டுபோகத் தாம் வந்திருப்பதாகவும் சொன்னது அவரது தேசாபிமானத்தையும் நல்ஹிருதயத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

# சிறுவர் ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

# CHILDREN'S & LADIES' PAGES

## மாதவீ கங்கணம்

### முதல் பாகம்

### அத்யாயம்-5

(394-ம்பக்கத் தொடர்ச்சி)

அப்பதவியை அடையப்போகிறவன் தான்தானென்றும் அவன் எண்ணினான் அந்த ஸ்தானத்துக்கு வேண்டிய யோக்யதையும் குணாதிசயங்களும் நாளாவர்த்தியில் அவனுக்கு உண்டாயின. அதுமுதற்கொண்டு ஹேமலதையின் அறைக்குச் செல்லும்போதெல்லாம் அவனுடைய முகம் அதிக ப்ரகாசமாய் விளங்கிற்று.

சைவலினிக்கும் கோகுலதாஸின் நோக்கம்தெரிந்துவிட்டது. அதற்காகத் தன்னாலாகவேண்டிய உதவியைச்செய்ய அவள் ஸித்தமாயிருந்தாள். ஸாதாரணமாய் இவ்விஷயங்களில் ஸஹோதரிகள்தான் அதிகமாய் உதவி செய்யக்கூடியவர்கள். குடும்பங்களின் வாழ்வும் தாழ்வும் ஸ்த்ரீகளைப்பொறுத்தது. வீரசைஷப்போன்ற ஸகலவிதத்திலும் சிறந்து விளங்கும் சிறுவனைக் காண்பதரிது. மனோஹரமும் கார்யத்தில் கண்ணுமுடைய வீரேஷமுன் நமோந்ரன் ஒரு குழந்தைக்கு ஸமானம். இதற்குமுன் பலமுறை தேவிபுரத்து ராஜவம்சம் ஸந்ததியற்றுப் போகுங்காலத்தில் தங்களுடைய ஸாமர்த்யததால் அதைக் காப்பாற்றிய இதர ஸ்த்ரீ ரத்னங்களைப் போல் இம்முறையும் சைவலினியானவள் தன் உடன்பிறந்தானுக்காக உழைத்துத் தேவிபுரம் அன்னியர் கைவசப்படாதிருக்கும்படி காப்பாற்றுவதாக வாக்களித்தாள்.

வீரேஷனிடம் சைவலினிக்கு அத்யந்த ப்ரியம். பின்னர் உண்டாகக்கூடிய ஊதியங்களை உத்தேசித்து சைவலினியானவள் எவ்விதத்திலாவது ஹேமலதையைத் தன் தம்பிக்கு மணம் புரிவிக்கவேண்டுமென்று தீர்மானித்தாள். ப்ரதிதினமும் ஸாயந்த்ரவேளையில் தடாகக் கரையிலாவது ஆலயத்தண்டையாவது, உட்கார்ந்து ஹேமலதையுடன் தேவிபுரம், அதன் அரசர்கள், தன் தம்பி, அவனது குணாதிசயங்கள் இவற்றைப்பற்றி ஓயாமல் பேசிக் கொண்டிருப்பாள். அவற்றையெல்லாம் ஹேமலதை ஒரு வார்த்தை விடாமல் கவனமாய்க்கேட்பாள். ஏற்கெனவே வீரசைஷப்பற்றி அதிக மதிப்பாய் எண்ணியிருந்த ஹேமலதை இனி அவன் வருங்காலத்தில் தேவிபுரத்து அதிபதியாய் விளங்கக்கூடும் என்பதைப்பற்றி ஸந்தோஷமுற்று அதே ஞாபகமாயிருந்தாள். அரண்மனையில் நடக்கும் விஷயங்கள் ப்ரதிதினமும் தன் காதுக்கெட்டிக் கொண்டிருந்ததனால் கோகுலதாஸ் இனி தானொருவருக்கும் பயப்படவேண்டியதில்லை; தான் எண்ணினது நிறைவேறிவிடும் என்று மனங்களித்தார்.

இவையெல்லாம் சதுரங்க ஆட்டம் போலிருந்தது. அரசனோ வலியற்றவன். அவனுக்கு முன்னும் பின்னும் காவல்வேண்டும். ராணியோ அதிக வலிவுடையவளாய்த் தலைமை வகித்திருந்தாள். ஆனால் இதர எண்களும் அவற்றவற்றிற் கேற்றவாறு சக்தியுடையவைகளாயிருந்தன.

ஒருநாள் ஸாயங்காலம் வழக்கப்ப்ரகாரம் ஹேமலதையும் சைவலிநியும் நந்தவனத்தில் தடாகக் கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென நரேந்த்ரன் அவ்விடம் வந்தான். ஹேமலதை அச்சத்தால் மௌனமாயிருக்க சைவலிநி நரேந்த்ரனை உட்காரும்படி உபசரித்தாள்.

சற்றுநேரம் வரைக்கும் மூவரும் யாதொரு வார்த்தையுமின்றி சும்மாவிருந்தனர். கடைசியில் சைவலிநியானவள் அன்பார்ந்த இனிய குரலில், "நரேந்த்ரா, ஸமீபத்தில் உனது ஜமீன் உன்வசமாகப் போவதாக ஊரெல்லாம் ப்ரஸ்தாபம். இந்த சுபஸமாசாரத்தைக் கேட்க எனக்கு அதிக ஸந்தோஷமாயிற்று. ஜனங்களெல்லாம் உன்னைத் தங்கள் தெய்வமாகப் போற்றுகிறார்கள். உனது பாட்டனார் அவர் காலத்தில் இருந்தப்ரகாரம் நீயும் ஜனங்களை ஸகலவிதத்திலும் ரக்ஷித்து என்றைக்கும் அவர்களுடைய நண்பனாயிருக்க முயல்வாயென்று நம்புகிறேன்," என்றாள்.

"அப்படிக்கொரு ப்ரஸ்தாபமும் என் காதில் விழவில்லை. ஊராருக்கென்ன? பொழுதுபோக்கு நிமித்தமாய்க் கண்டபடியெல்லாம் பேசிக்கொள்கிறார்கள். ஸஹோதரி, எனது ஜமீன் எப்போது என் வசப்படுமோ நான் அறியேன். ஆனால் அவ்வாறு என் ஜமீன் எனக்குக் கிடைப்பதன் காரணமாய் நீங்கள் தேவிபுரம் செல்லும்படிக்கு ஏற்படுமானால், நான் வெகுகாலம் வரைக்கும் என் ஜமீனுக்கு ஆசைப்படமாட்டேன், ஒருவேளை பகவத் கடாக்ஷத்தால் தேவிபுர வீரநகர விஷயங்கள் வேறுவிதமாய்—"

நரேந்த்ரன் அதனுடன் நின்றுவிட்டான். சைவலிநிக்கோ அவனுடைய கருத்து விளங்கிவிட்டது. உடனே அவள் 'தேவிபுரத்துக்கும் வீரநகரத்துக்கும் நடுவில் அதிக தூரமில்லை. ஸமீபந்தான். ஸஹோதரா, நாம் ஒருவரையொருவர் அடிக்கடி ஸந்தித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் தேவிபுரத்துக்குத் திரும்பிப் போய்த்தான் தீரவேண்டும். முந்நூறு வருஷமுமாயிற்று. அதற்கு அதிகமாயும் ஆயிற்று, இவ்விரு குடும்பத்தினரும் ஒருவரை விட்டொருவர் பிரிந்து' என்று கூறினாள்.

"சைவலிநீ, இன்னும் நாம் பிரிந்திருக்க வேண்டுமா?"

"ஸஹோதரா, நானோ ஸ்த்ரீஜாதி; புருஷர்களுடைய யோசனைகளும் அவர்களுடைய ஏற்பாடுகளும் ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மாத்ரம் நான் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். தேவிபுரத்தார் பூர்வத்தில் அதிக ப்ரபல முற்றிருந்தார்களென்றும், அக்காலத்தில் அவர்கள் புரிந்துள்ள வீரதீரச் செயல்களையும் அவர்களுடைய ஸ்நேஹ விரோதங்களையும் என்றைக்கும் தேவிபுரத்தார் கவனமாய்ப் பாராட்டுகிறார்களென்றும் பலர் சொல்கின்றனர். மீன் இனம் நிலத்தின்மீதும், பக்ஷிஜாதி ஜலத்தினடியிலும் எவ்வளவுகாலந்தான் உயிருடனிருக்கும்?"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது சைவலிநியை வீட்டிலிருந்து யாரோ ஒருவர் கூப்பிடவே, அவள் எழுந்து ஸாயந்த்ரம் வீட்டைத் திருத்திக் கோலமிட்டு விளக்கேற்றும் வேலையைப் பார்க்கப் போய்விட்டாள். நரேந்த்ரனும் ஹேமலதையும் மாத்ரம் தனித்திருந்தார்கள். சைவலிநி கூறிய மொழிகளைக் கேட்டு நரேந்த்ரனுடைய முகவிலாஸம் மாறுதலடைந்தது, அவன் சிந்தையில் ஆழ்ந்தான்.

ஆகாயத்தில் பூர்ண சந்த்ரன் ப்ரகாசித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கிரணங்கள் காற்றால் சிறு சிறு அலைகளாகத் ததும்பும் தடாகநீரில் அசைவுற்று ப்ரதிபலிப்பது பார்ப்பதற்கு மிகவும் ரமணீயமாயிருந்தது. மந்தமாருதம் வீசுவதால் வ்ருக்ஷங்களிலிருந்து ஒருவிதமான த்வனி வனமுழுவதும் சப்தித்துக்கொண்டிருந்தது. அதே இடத்தில் பால்யத்தில் நரேந்த்ரன் அடிக்கடி விநோதகதைகள் அநேகம் சொல்லிவந்த வழக்கம் தன் ஞாபகத்துக்குவர ஹேமலதை அப்போது தலைநிமிர்ந்து நரேந்த்ரனுடைய முகத்தைப் பார்க்கலானாள். நரேந்த்ரனுடைய அழகிய முகம் சந்த்ரகாந்தியின் மஹிமையால் பன்மடங்கதிக அழகுடையதாய் விளங்கிற்று. அத்தருணம் அவன் த்ருவநக்ஷத்ரத்தைஉற்றுநோக்க, அதையொட்டிய கதையொன்று அவன் நினைவுக்கு வந்தது.

"ஹேமலதே, நீ குழந்தையாயிருக்கும்போது ஸாயங்கால வேளைகளில் எத்தனை கதைகள் நான் இவ்விடத்தில் உனக்குச் சொல்லியிருக்கிறேன், உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

"ஆம், அதைப்பற்றித்தான் நானும் சற்று முன் நினைத்துக் கொண்டிருந்தேன்."

"நீ இப்போது பெரிய மனுஷியாய்விட்டாய்; என் கதைகளைக் கேட்பதில் உனக்கு இப்போது ஸ்வாரஸ்யம் போய்விட்டது."

"ஸ்வாரஸ்யம் போராமலென்ன?" என்று மெதுவாய்ச் சொன்னாள்.

"அப்படியானால் கேள். அதோ இருக்கின்றதே, அந்த நக்ஷத்ரம் உனக்குத் தெரிகின்றதா?"

"அந்த மரத்துக்கு நேரே?"

"ஆமாம், அதன் பெயர்தான் த்ருவ நக்ஷத்ரம்."

"சாச்வதமும் ஸத்யமுமானது என்பது அதன் பொருள்."

"ஏன் அதற்கு சாச்வதமும் ஸத்யமுமானது என்று பொருள்?"

"ஹேமலதே, அந்த நக்ஷத்ரத்தை யொட்டிய கதையொன்று வழங்கிவருகிறது."

ஹேமலதை இன்னும் தன்னைவிட்டு அகலாத குழந்தைப் பருவத்துக்குரிய ஆர்வத்துடன் நரேந்த்ரனை



"அக்கதையென்ன? எனக்குச் சொல்" என்று கேட்டாள்.

"ஒருகாலத்தில் அரசன் ஒருவனிருந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள். ஒவ்வொருவருக்கும் ஒரு பிள்ளையுண்டு. அரசனுக்கோ மூத்த பத்நியிடத்திலும் அவளுடைய பிள்ளையினிடத்திலுந்தான் ஆசை யெல்லாம். இளைய பத்நியைப் பற்றியாவது அவள் வயிற்றிற் பிறந்த பிள்ளையைப் பற்றியாவது அரசன் சற்றாவது கவனிப்பதில்லை. அவள் தன்மீது தன் கணவன் பாராமுகமாயிருப்பதைப்பற்றி எண்ணியெண்ணி அடிக்கடித் தன் பிள்ளையுடன் ஒரு குடிசைக்குச் சென்று அழுதுகொண்டிருப்பாள். சிறுவனுக்கோ தன் தாயார் அழுவதன்காரணம் புலப்படவில்லை.

"ஆனால் அவனுக்கு ஸரியான வயது வந்தவுடன் ஒருநாள் அவன் தாயார் அவனையழைத்து 'அப்பா குழந்தாய், நான் அரசனுடைய மனைவியாயும் நீ அரசனுடைய மகனாயுமிருந்த போதிலும் நம்மைப்போல் இவ்வுலகில் கஷ்டத்தை யநுபவிப்பவர்கள் வேறெவருங் கிடையாது' என்று தன் குறையை யெடுத்து அவனிடம் சொன்னாள். இதைக் கேட்டவுடன் அச்சிறுவன் வருத்தமுற்றவனாய் அப்புறம் அகன்றான். சிறிது நேரஞ் சென்ற பின்னர் திரும்பிவந்து, 'அம்மா, இவ்வுலகில் க்ரீடம் புனையும் மன்னர்கள் அடையும் ப்ரதாபத்தைக் காட்டிலும் விசேஷமான ப்ரதாபமும் கீர்த்தியும் பெறுகிறேன்பார். இன்றுமுதல் நான் இவ்வுலகில் ஸந்யாஸி கோலம் தரித்துப் பகவானை த்யானம் செய்யப் போகிறேன்' என்றான்.

"அச்சிறுவன் பெயர்தான் த்ருவன். சாசுவதமும் ஸத்யமுமுடையவன். அவன் அரண்யஞ் சென்று அரசர்களுக்கெல்லாம் அரசாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற அந்த ஒன்றான பரம்பொருளைக் குறித்து ஓயாமல் த்யானஞ் செய்து கடைசியில் யாவராலும் போற்றப்படும் முனிவனாயினான். நாட்டிலுள்ள சக்ரவர்த்திகள், மஹாராஜாக்கள், ராஜாக்கள் அனைவரும் அவருடைய பாத கமலங்களில் வீழ்ந்து அவருடைய ஆசீர்வாதத்தை எதிர்பார்ப்பவராயினர். அவர் தேஹவியோகமான பின்பு நக்ஷத்ரங்களில் ஒன்றாய் விளங்கினார். என்றைக்கும் சாசுவதமாயும் ஸத்யத்துக்கோர் அறிகுறியாயும் அவர் எப்பொழுதும் ஆகாயத்தில் ப்ரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்."

"நரேந்த்ரா, மிகவும் இனிமையான கதை. கேட்கக் கேட்க ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. தேவிபுரத்துக்குச் சென்று வசித்திருக்கும்போது அந்நக்ஷத்ரத்தைக் கண்ணுறும்போதெல்லாம் எனக்கு இக்கதைஞாபகம் வரும்."

"ஹேமலதே, கதையும் இனிமையானதுதான்! அக்கதையினால் விளங்கும் நீதியும் அதைவிட இனிமையானது. ப்ரதி இரவும் அந்நக்ஷத்ரத்தைத் தவறாமல் தர்சனஞ் செய்துவா. என்றைக்கும் சாசுவதமாயும் ஒரே நிலையாயும் ஸத்யம் தவறாமலும் இருந்துவா. நீ தேவிபுரம் செல்லவேண்டிய அவசியமில்லை."

## அத்யாயம்-7

### துர்க்காபூஜை : படகுப் பந்தயம்

மழைகள் ஓய்ந்துவிட்டன. ஆகாயமெல்லாம் மப்புமந்தாரமின்றி நீலவர்ணமாயிருந்தது. செடி கொடிகள்யாவும் பெய்த மழையால் புத்துயிர் கொண்டனவாய்ப் பார்க்குமிடமெங்கும் ஒரே பச்சை நிறமாய் கண்களைக் குளிரச்செய்தன. சில தினங்களுக்கு முன் இருகரையும் புரள ஓடிய வெள்ளங்களெல்லாம், தணிந்துவிட்டன. ஆற்றுக் கால்வாய்களில் ஜலம் நிதானமாய் ஓடிக்கொண்டிருந்தது. அங்கங்கு கொடிநீரும் அருநீருந்தான் கசிந்துகொண்டிருந்தன. க்ராமாந்தரங்களிலெங்கும் புரட்டாசி ஐப்பசி மாத அறுவடை ஆரம்பமாய்விட்டது.

இக்காலத்தில் இந்தியாவின் பல பாகங்களில் ஸிம்ஹ வாஹனத்தையுடைய உமாதேவியை யாவரும் பூஜிப்பது வழக்கம். ஸூர்யன் ஸிம்ஹத்திலிருந்து கன்னிகைக்குச் செல்கிறான் என்னும் வானசாஸ்த்ர உண்மையைத்தழுவி இவ்வுத்ஸவம் அநுஸரிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த சாஸ்த்ர உண்மை ஜனங்களுக்குத் தெரியாது. அவர்கள் ஏராளமாய்த் தான்யாதிகளைக் கொடுத்து ரக்ஷிக்கும் தேவியென உமாதேவியை உபாஸனைசெய்கிறார்கள். ராஜபுத்ரர், மஹாராஷ்ட்ரர் முதலிய க்ஷத்ரிய தொழிலினை யுடைய ஜாதியார்கள் தங்கள் கத்தி கேடயம் முதலிய ஆயுதங்களை வணங்குவதும், வரும் மாரிகாலத்து நடத்தவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதும் இக்காலத்தில்தான். வடஇந்தியா முழுவதும் ஸர்வ ஜனங்களும் வாத்யம், கோஷம் முதலியவற்றுடன் இப்பண்டிகையை அதிக உல்லாஸமாய் அநுஷ்டிப்பார்கள்.

இப்பண்டிகையின் கடைசிதினம் வந்தது. வீரநகர முழுவதும் ஸூர்யன் ஒளியால் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. ஜமீன்தாருக்கு வந்தனமளிக்க அவருடைய மாளிகைக்கு முதன்முதலில் வந்தவர் கோகுலதாஸ்தான்.

ஜமீன்தார் தம் மந்த்ரி செய்த வந்தனங்களை அங்கீகரித்து "கோகுலதாஸ், நீர் வெகுகாலமாக விச்வாஸகாதகம், நம்பிக்கைத்ரோகம் என்பவை யொன்றும் கிஞ்சித்துமின்றி மனோவாக்குக்காயசுத்தியுடன் எமக்காக இரவுபகல் என்ற வித்யாஸமேயில்லாமல் உழைத்துவருகிறீர். ஆயினும், உமது கார்யம் மாத்ரம் இன்னுங் கைகூடக்காணோம்" என்று விடை பகர்ந்தார்.

"என்னுடைய முன்னோர்கள் சென்றவழியே நானும்செல்கிறேன். அவர்கள் உழைத்துவந்த வண்ணமே நானும் நாளதுவரைக்கும் உழைத்துவந்து கொண்டிருக்கிறேன். நான் கோரிய கார்யம் அதிக சீக்ரம் ஸித்தி பெறும். இது திண்ணம்."

"இதே வார்த்தைதான் இந்த ஆறுமாஸமாய்ச் சொல்லிவருகிறீர். ராஜாமான்ஸிங் ஓரிஸ்ஸாவில் ஆப்கானியர்களுடன் மல்லிட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய கார்யதர்சியோ நமது விஷயத்தை மூலையில் கட்டாகக் கட்டிப் போட்டுவிட்டுத் தூங்குகிறார்.'

"ராஜாமான்ஸிங் ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றி அக்பரது ராஜ்யத்துடன் சேர்த்துவிட்டார். தன்னுடைய கார்யதர்சி செய்துள்ள ஏற்பாட்டையும், அவர் பிறப்பித்திருக்கும் கட்டளையையும் ராஜாமான்ஸிங் ராஜமஹல் வந்தவுடன் காயப்படுத்துவார்."

"ஆனால் ஏற்பாடு ஆய்விட்டதா?"

"ஏற்பாடு ஆய்விட்டது. ஆனால் இன்னும் அமுலுக்குவரவில்லை. இப்பண்டிகைகளெல்லாம் முடிவுபெற்றவுடன் நாம் தேவிபுரம் போய்ச் சேர்வோம்."

"எனது ஆப்த மித்ரரே, மிகவும் ஸந்தோஷம். ராஜாமான்ஸிங் ஏற்பாட்டை உறுதி செய்வது நிஜந்தான்; அவர் ஒன்றும் தடைசொல்லமாட்டாரா? நரேந்த்ரனது பாட்டனாரைப் பற்றி அவர் கொண்டிருக்கும் அபிப்ராயத்தையும் வீரநகரத்து ராஜகுடும்பத்தாரிடம் அவர் காட்டும் அன்பையும் நினைக்குங்கால் என் மனதில் சிறிது ஸம்சயம் ஜனிக்கின்றது. அவ்வித பயத்துக்கு ஹேது ஒன்றுமில்லையே?"

"ராஜாவுக்குத்தான் தலைக்குமேல் வேலையிருக்கின்றதே. இந்த நரேந்த்ரனைப்பற்றிய மஹாஸமாசாரத்தைத்தான் அவர் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கப் போகிறாரோ? ராஜமஹலை வங்காளத்துத் தலைநகராக்கிவிட்டார். இனி ராஜபுதனத்தில் தன்னிருப்பிடமாகிய ஆம்பர் நகரைப்போல் ராஜமஹலையும் கோட்டை கொத்தளங்கள் கட்டி பந்தோபஸ்து செய்யும் வேலையை அவர் சீக்ரம் செய்து முடிக்கவேண்டும் இல்லாவிட்டால் ஆப்கானியர்கள் இன்னொருமுறை ஒருகை பார்க்க ப்ரயத்னஞ் செய்வார்கள்."

"அவருடைய வீரத்துக்குச் சிறிதும் இளைத்ததாகக்காணோம் அவருடைய புத்திசாதுர்யம். இம்மாகாணத்தைவிட்டு நீங்குமுன் அவர் நமது வங்காளத்தில் மொகலாய அரசாட்சியை வலிவாய் ஸ்தாபித்து விடுவார். இனி ஆப்கானியர்கள்பூண்டோடே அடியோடு நசித்துவிட்டது போலத்தான். எக்கார்யத்தை எடுத்தாலும் அதைப் பூர்த்தியாய்க் கடைசிவரைக்கும் செய்து முடித்த பின்னர்தான் மறுவேலையைப்பற்றி அவர் யோசிப்பார். கார்யங்களை அரைகுறையாய்ச் செய்து போட்டுவைப்பது அவருடைய ஸ்வபாவமன்று. தன்னுடைய செல்வாக்கைப் பின்னும் பலப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அவர் வங்காளத்தில் நல்ல உயர்குலகன்னிகையொருத்தியை நாடுகின்றனரென்று ஊரெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள்."

"அவருடைய வீரதீரபுத்ரனாகிய ஜகத்ஸிங்குக்கா?"

"இல்லை, தமக்கே தான்."

"என்ன, அதிசயமாயிருக்கிறதே. ராஜபுத்ர யுத்த வீரரொருவர் வங்காளத்துப் பெண்ணை மணம்புரிய உத்தேசிப்பது!"

"என்ன அதிசயம்? இதற்குமுன் எத்தனையோமுறை இவ்வித ஸம்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யுத்தவீரராயிருந்தாலென்ன? அவர்களுக்குப் பெண்பிள்ளை என்ற ஆசை கிடையாதோ? ஸ்த்ரீகள் வலையில் சிக்காதார் யார்? உலகத்தையெல்லாம் நடுங்கச் செய்து ஜயபேரிகை முழக்கிய ராஜாதி ராஜர்கள் கூட ஸ்த்ரீகளைக் கண்டு தமது கர்வமடங்கி அவர்கள் முன், குழந்தைகளைப்போல் ஸாதுக்களாய் விட்டிருக்கிறார்கள்."

கோகுலதாஸ் இவ்வாறு உலகத்துக்குப் பொதுவாய்க் கூறிய மொழிகளின் உட்கருத்து நவகுமாரருக்கு நன்றாய் விளங்கிற்று.

"கூச்பீஹார் மஹாராஜா அவர்களுடைய புத்ரியை விவாஹம் புரிந்துகொள்வதால் அவர் உத்தர வங்காளத்தில் தம் செல்வாக்கை அதிகரித்து அக்பரது ராஜ்யத்தைக் கிழக்கில் பலமாக அஸ்திவாரமிட்டு நிலைநிறுத்துவது ஸாத்யமாகும். ஆப்கானியர்கள் பயம் அடங்கிவிட்டதென்றாலும் இன்னும் அவர்கள் அடியோடு தொலைந்தபாடில்லை. அதுவுமன்றி தெற்கிலிருந்து ஸமுத்ர மார்க்கமாய்ப் புதிய சத்ருக்கள் ஒரு தேசத்தார் கப்பல்களில் வந்து வங்காளத்தைத் தாக்குகின்றனர்."

"ஆமாம், கடற்கொள்ளைக்காரக் கூட்டங்கள் வந்து நமது துறைமுகங்களையும், வாய்க்கால்களையும் கப்பல்களையும் த்வம்ஸம் செய்வதாகவும் அக்கூட்டத்தார் நமது ஊரார்களைப்போல் கருத்த மேனியுடையவர்கள் அல்லவென்றும் அடிக்கடி நமக்குச் செய்தி வருகின்றதே. அவர்களைப் பற்றிய யதார்த்தமான விவரங்கள் உமக்கு ஏதாவது தெரியுமா?"

"அவர்கள் ஒரு பயங்கரமான கடலோடி ஜாதியார்கள் அவர்களுடைய ஜன்மபூமி போர்சுகல் என்னும் ஓர் ஐரோப்ப நாடு. அக்கொள்ளைக் கூட்டத்தார்களின் தலைவர்களுள் ஒருவனாகிய ஸபாஸ்டியன் கொன்ஸல்ஸ் என்பவன் கங்காநதியின் முகத்வாரத்தின் கருகிலிருக்கும் ஒரு பெரியதீவைப் பிடித்துக் கொண்டனன். சிலர் ஹூக்ளியையும் பிடித்துக்கொண்டு சுற்றுப்பக்கத்து க்ராமவாஸிகளைக் கிறிஸ்தவராகும்படி நிர்ப்பந்தித்து வருகின்றார்கள்."

"இது என்ன, எல்லாம் அநர்த்தமாயிருக்கிறதே. ஆப்கானியர்கள் ஒழிந்தார்களென்றால் புதிதாய் இன்னொரு விரோதிகள் கிளம்பியிருக்கின்றார்களே."

"தரையின்மீது சத்ருக்கள் ஆப்கானியர்கள் ஒருவர்தான். ஆனால் ஸமுத்ரமார்க்கமாய் வந்து எதிர்க்கக்கூடிய பகைவர்கள் பலர் உளர். இந்தப் போர்சுகல் தேசத்தினர் உள்நாட்டில் ப்ரவேசித்து அழிந்து முஹம்மதிய ஸ்திரீகளைக் கவர்ந்து செல்கின்றனர்; புருஷர்களைப் பல விதங்களிலும் ஹிம்ஸை செய்கிறார்கள். ஆனால் இப்போர்சுகேசியர்களுக்கே சில சத்ருக்கள் புதிதாய் ஏற்பட்டிருக்கின்றனர். இங்கலண்ட், ஹாலண்ட் இந்த ஐரோப்ய நாட்டினர்கள் ஸாகராதிபத்யத்தைப் போர்சுகேசியர்களிடமிருந்து கைப்பற்ற அதிக ஊக்கமாய் முயற்சிசெய்து வருகின்றார்கள். இரு திறத்தாருக்கும் இதுவரையில் பல போர்கள் நடந்திருக்கின்றன."

"கோகுலதாஸ், உலகம் நாம் எண்ணியிருந்ததைவிட பெரியதாக இருப்பதாகத் தெரிகின்றதே! அதில் நாம் கேட்டறியாத பல தேசங்களும், பலஜாதி



ஜனங்களும் வசிப்பதாகவும் இப்போது நாம் அறிகிறோம். ஏன் இந்த வெளிநாட்டினர்கள் நமது தேசத்தைநாடி வருதல் வேண்டும்?"

"பனியால் உறைந்துகிடக்கும் வடதேசங்களிலிருந்து ப்ரதிவருஷமும் குளிர்காலங்களில் எப்படி பக்ஷிஜாதிகள் கூட்டங்கூட்டமாய்த் தென்திசை நோக்கி இரைதேடி இந்தியாவுக்கு வருகின்றனவோ அப்படியே ஒன்றும் உத்பத்தியாகாத மேலைப்ரதேசங்களிலிருந்து நம் செல்வ பூமியின் ஐசுவர்யத்தையும் வ்யாபாரத்தையும் அதிக வேலைப்பாடமைந்த நமது நாட்டு கைத்தொழில் ஸாமான்களையும் நமது தேசத்தில் பயிராகும் வாஸனை த்ரவ்யங்களையும் நாடி வருகின்றனர்."

"இவர்கள் வருவது கேவலம் வ்யாபாரத்தையும் செல்வத்தையுமே கருதியா? அவற்றைவிட அதிகமான எண்ணங்கள் அவர்கள் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நமது நாட்டில் நாடு நகரங்கள் ஸம்பாதித்து ராஜ்யாதிகாரம் செலுத்தும் உத்தேசமும் கொண்டிருக்கிறார்கள்."

"மொகலாயரால் ஜயிக்கப்பட்டு அக்பரது அரிய புத்தி சாதுர்யத்தால் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்டு ராஜாமான்ஸிங் முதலிய சுத்த வீரர்களால் கண்ணாய்க் காக்கப்பட்டுவரும் இந்த அகண்ட ராஜ்யத்தில் அந்த நாடோடிகள் வைத்திருக்கும் எண்ணம் நிறைவேறுமென்பது கேவலம் கனவுக்கு ஸமானம்."

"ராஜகுடும்பங்கள் ஏற்படுவதும், தழைத்தோங்குவதும், இளைப்பதும், க்ஷீணதசையடைவதும், கடைசியாய் நசிப்பதும் ஸஹஜந்தான். அவருடைய புத்ர பௌத்ரர்களும் அப்பனைப்போலவே அவ்வளவு ஸமர்த்தர்களாய் இருப்பார்களென்பது என்ன நிச்சயம்? அக்பரும் அவரைச் சேர்ந்த மொகலாயர்களும் ஆப்கானியர்களை விரட்டியவிதமே ஐரோப்ய ஜாதியார்களும் இந்த மொகலாயர்களை அடித்தோட்டினாலும் ஓட்டலாம்."

"கோகுலதாஸுக்கு சத்ஸமயம் இருக்கும் கவலைகளே தலைக்கு மேலிருக்கின்றன. வெள்ளையர்கள் வந்து இந்தியாவை அரசுபுரியும் காலத்துக்குள் கோகுலதாஸ் பரலோகம் சென்று விட்டிருப்பார். அதைப்பற்றி அவர் ஏன் இப்போது மனக்கவலையுறவேண்டும்? அதோ அந்த நிலங்களில் கலைந்தாடும் நெற்கதிர்கள் முற்றுவதற்குமுன் தன்னுடைய எஜமானர் தேவிபுர மாளிகையில் வாஸஞ்செய்வதைக் கோகுலதாஸ் கண்குளிரக் கண்டு களிப்பார் என்பது திண்ணம்."

சுக்லபக்ஷத்துத் தசமி. அதாவது சந்த்ரன் துல்யமாய் ப்ரகாசிக்கத் தொடங்கிய பத்தாம் நாள், அன்றையதினந்தான் பண்டிகையின் முடிவு நாள். ப்ரதி ஆலயங்கள், வீடுகள்தோறும் தேவதார்ச்சனை நடந்து கொண்டிருந்தது. நல்ல ஆடைகளைத் தரித்துக் கொண்டு க்ராமவாஸிகள் அனைவரும் கூட்டங்கூட்டமாய் நகரத்துக்கு வந்து கொண்டிருந்தார்கள். ஸூர்யோதய காலத்தில் கணக்கு வழக்கின்றி ஸ்த்ரீகள் கும்பல் கும்பலாய்க் கங்காநதியில் ஸ்நானஞ் செய்து கொண்டிருந்தனர். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தெருக்களில் ப்ரமாதமான கோஷம் செய்து ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள். நகரமுழுவதும் யாவரும் ஸந்தோஷமாயிருந்தனர்.

நகரத்தில் வந்து குவிந்திருக்கும் எண்ணிறந்த ஜனங்களின் பொழுதுபோக்கிற்காக நவகுமாரர் அன்றையதினம் மத்யானம் ஒரு பந்தயம் ஏற்பாடு செய்திருந்தார். மாரிகால முடிவில் வங்காளத்து ஆறுகளும் ஓடைகளும் பூர்ணமாயிருக்கும்போது குடித்தனக்காரர்கள் படகுபந்தயங்களில் அதிகஊக்கமாய்க் காலங்கழிப்பார்கள். வேகமாய்ச் செல்வதற்காகக் கட்டப்பட்ட நீண்டுநெருங்கிய படகுகள் ஒவ்வொன்றும் பதினாறு அல்லது இருபது படகோட்டிகளுடன் நம்ப ஸாத்யமில்லாத வேகத்துடன் கங்கையாற்றில் ஓடும். நீராவிக் கப்பல்கள் ஏற்படுமுன் இந்தப்படகுகள் வேகத்தில் இணையற்றனவாயிருந்தன. இப்பந்தயங்கள் க்ராமாந்தரம், நகர்ப்புறம் எல்லாவிடங்களிலும் நடைபெறும். இத்தகைய பந்தயங்களில் அப்படகோட்டிகளுக்கிருக்கும் ஆத்ரமும் சுறுசுறுப்பும் காட்சி காண்போர்களுக்கு உண்டாகும் ஆனந்தமும் சொல்லத்தரமன்று.

பல ஆண்டுகளாக அநுஸரிக்கப்பட்டுவரும் வழக்கப்படி வருஷாவருஷம் இப்பண்டிகையின் கடைசி தினத்தன்று வீரநகரத்தில் இப்பந்தயங்கள்வெகுவிமர்சையாய் நடைபெறும். தாம் வீரநகரத்தில் தங்கியிருப்பது இதுதான் கடைசியாண்டு ஆதலால் நவகுமாரர் இவ்வருஷத்துப் பந்தயங்களை எப்போதுங் காணப்பட்டிராத ஆடம்பரத்துடன் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தார்.

கங்காநதியின் கீழ்க்கரையில் ஸுமார் இருபதினாயிரம் ஜனங்களுக்குமேல் கூடியிருந்தனர். குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே ஜனங்கள் அபரிமிதமாய்ச் சேர்ந்துவிட்டனர். வீரநகரத்து உயர்குலச் சீமான்களுக்காக ஒரு பந்தலும் வீரநகரத்து ராஜகுடும்பத்தைச் சேர்ந்த ஸ்த்ரீகளுக்காக ப்ரத்யேகமாக ஒரு பந்தலும் போடப்பட்டிருந்தன.

வீரநகர தேவிபுரங்களில் அதிக ஸமர்த்தரான படகோட்டிகள் நிறைந்த பதினாறு க்ராமத்தார்கள் பதினாறு படகுகளில்ஆவலுடன் காத்திருந்தனர். உருவத்திலும் நீளத்திலும் ஒருபடகுக்கொருபடகு தாரதம்யம் கிடையாது. ப்ரதிபடகிலும் இருபது படகுக்காரர்களும் ஒரு சுக்கான்பிடிக்கிறவனும் இருந்தார்கள். நவகுமாரர்தான் மத்யஸ்தர். தமக்கு உதவிபுரிய அவர் வீரநகரத்து ப்ரதான உத்யோகஸ்தர்கள் இருவரை ஏற்படுத்திக் கொண்டனர்.

வீட்டிலிருந்து புறப்படுமுன் நவகுமாரர் தம் மனைவியைப் பார்த்துப் பந்தயஸ்தானத்தில் ஸ்த்ரீகளுக்காகச் செய்யப்பட்டிருக்கும் ப்ரத்யேக ஏற்பாட்டை அவளிடம் சொன்னார். அதற்கு அவருடைய பத்நி, "எங்களுக்காகத் தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டதைப்பற்றிக் கேட்க எனக்கு மிக

வும் ஸந்தோஷமாயிருக்கிறது. நமது ஹேமலதைக்கு இத்தகைய பந்தயங்களைக் காண்பதில் அதிக ப்ரியம். சிறு பெண்ணாயிருக்கும்போது நரேந்த்ரன் அவளைப் பலமுறை கங்கையாற்றில் படகில் அழைத்துப்போயிருக்கிறான்" என்றாள்.

"நீ மஹா கெட்டிக்காரி. நீ பிடித்தபிடி உடும்புப் பிடிதான். அதை எவராலும் அசைக்கமுடியாது. நமது ப்ரயத்னங்களெல்லாம் பூர்த்தியாய்விட்டன; பலன் ஸித்தித்து விட்டது. இந்த உத்ஸவாதிகள் முடிந்தவுடன் நாம் எல்லோரும் தேவிபுரம் போவோம். வீரநகரத்தைப் பரிபாலிக்க சக்ரவர்த்தியவர்களுடைய ஏஜண்ட் ஒருவர் வருகிறார்"

"நரேந்த்ரனுக்கு ஏற்ற ப்ராயம் வரும்வரையில் அவன் நம்மோடுதானே தேவிபுரத்தில் வஸித்திருப்பான்?"

"நரேந்த்ரன் ஸ்வயாதிஹாரி; அவனுக்கு எஜமானன் அவனேதான். ஆனால் அவன் ஒருவேளை தேவிபுரத்துக்கு வர இஷ்டப்பட்டால் நம்மைத் தேடிவந்தவனை நாம் ஒரு விருந்தாளியாய் ஆதரிக்கத் தடையில்லை."

"அது போதும். இனி ஆகவேண்டிய கார்யத்துக்கு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் நவகுமாரருடைய மனைவி.

"இவளோ அதிக ஸமர்த்தை; இவளை வெல்வது அஸாத்யம். மேலும் இவள் சொல்வது மொத்தத்தில் என் மனதுக்கு யுக்தமென்றுதான் படுகிறது. கோகுலதாஸ் நம்பிக்கையானவர்தான். இதுவரைக்கும் அவர் நமக்கு நல்லதையே செய்துவந்திருக்கிறார். அவருடைய சூழ்ச்சிகளும் அந்தரங்க ஏற்பாடுகளும் ப்ரஹ்மதேவனாலுங் கண்டறியக்கூடாதவை. ஆனால் ஆந்தைக்குப் பகல்வெளிச்சத்தின் குணம் எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் தெரியும் அவருக்கு குலம் கோத்ரம் இவற்றின் பெருமை சிறுமைகளும், குடும்ப வ்யவஹாரங்களும். ராஜாயான்ஸிங் கூச்பிஹார் இளவரசியை மணம்புரிவதாக அவர் சொன்னார். மான்ஸிங் தாம் செய்யும் கார்யத்தின் பலனை நன்கறிவார். வங்காள மாகாணத்தைப்போலவே நமது சிறு ஜமீன்களையும் தகுந்த ஸம்பந்தங்களால் ஒன்றுசேர்த்து பலப்படுத்திக்கொள்ளலாம்" என்று நவகுமாரர் தமக்குள் யோசிக்கலானார்.

ஸூர்யாஸ்தமன ஸமயத்துக்கு ஒருமணி நேரம் தான் இருந்தது. பந்தயத்துக்கு எல்லாம் ஸித்தமாய் விட்டது. ஸ்த்ரீகள் தங்களுக்கென்று ஏற்படுத்தப் பட்டபந்தலில் வந்து உட்கார்ந்தனர். நவகுமாரரைச் சுற்றிலும் பெரிய உத்யோகஸ்தர்களும் உயர்ந்த பட்டாடை தரித்த வ்யாபாரிகளும் அமர்ந்திருந்தார்கள், மஹா ஸமர்த்தர்களான படகோட்டிகள் ஆவலுடன் நின்றிருந்தனர். இருகரைகளினின்றும் இருபது முப்பதினாயிர ஜனங்கள் கண்கொட்டாமல் பந்தயப்படகுகளை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அம்மாலுமிகளின் பரந்தமார்புகளும் பருத்து உருண்டபுஜங்களும் அவர்கள் அதிக பலவான்களென்பதையும் எவ்வித அபாயத்தையும் எதிர்க்கக் கூடிய அஞ்சாநெஞ்சர்களென்பதையும் உணர்த்தின. அவர்களுடைய கைகால்களின் முண்டாக்கள் இரும்பையொத்திருந்தன.

முதலில் ஒரு பந்தயம் வைத்து அதில் வீரநகரத்துப் படகுகளில் அதிக துரிதமாய்ச் செல்வதை நரேந்த்ரனும் தேவிபுரப் படகுகளில் முதல் செல்வதை ஸிரீஷனும் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் அப்புறம் அவ்வாறு பொறுக்கியெடுக்கப்பட்ட படகுகள் தமக்குள் பந்தயம் வைக்கவேண்டுமென்றும் அப்பந்தயத்துக்குத் தாம் மத்யஸ்தராயிருக்கும்படிக்கும் நவகுமாரர் ஏற்பாடு செய்தார். இந்த ஏற்பாட்டை ஜனங்களெல்லோரும் குதூஹலமாய் அங்கீகரித்தனர். ஸிரீஷ் தன் ஸ்வபாவப்படி நவகுமாரர் ஏற்பாட்டை அதிக ஆர்வத்துடன் ஸாவதானமாய் ஒத்துக்கொண்டான். நரேந்த்ரனோ ஸந்தோஷத்தால் தலைகால் தெரியாமல் பூரிப்படைந்தான்.

# விசேஷக் குறிப்புகள்
## NEWS AND NOTES

**நமது சக்ரவர்த்தியின் ஜன்மதினம்:**—இவ்வருஷம் பிரிடிஷ் ஏகாதிபத்யத்தில் சக்ரவர்த்தியாரின் ஜன்மதினமானது உத்தியோக முறையில் கொண்டாடப்படமாட்டாதெனச் சொல்லப்படுகிறது. ஆகையினால் இவ்வருஷம் இவ்வைபவத்திற்காக கச்சேரிகளுக்குப் பொதுவாக விடுமுறை நாள் கொடுக்கப்படமாட்டாது.

***

**காலஞ்சென்ற ஸ்ரீமான் ஏ ராஜாராமய்யர்**—இவர் சென்ற ஏப்ரல்மீ 22உ வியாழக்கிழமை காலஞ்சென்றாரெனக்கேட்டு மிகவும் வருந்துகிறோம். இவர் பீ. ஏ. பரீக்ஷை தேறினதும் உபாத்திமைத்தொழிலை ஏற்று, மதுரை நேடிவ் ஹைஸ்கூலில் தலைமைஉபாத்யாயராயிருந்தார் மதுரை கலாசாலை ஸர்க்காரால் எடுபட்டுப் போனபிறகு, அக்கலாசாலை நேடிவ் ஹைஸ்கூலாரிடம் வந்தது. அப்பொழுது ராஜாராமய்யர் சொற்பகாலம் ப்ரின்ஸிபாலாக இருந்து,பிறகு காலஞ்சென்ற வெங்கோபாசாரியார் அந்த ஸ்தானத்திற்கு வந்தபோது, முதல் போதகாசிரியராக இருந்தார். 1910ஆு கள்ளிக்கோட்டைக் காலேஜுக்கு ப்ரின்ஸிபாலாக ஒரு வருஷம் சென்றிருந்தார். ஸ்ரீமான் வெங்கோபாசாரியார் திடீரென இறந்துபோனபிறகு,ஸ்ரீ ராஜாராமய்யர் அவருடைய ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டார். மதுரைக் கலாசாலைக்கு இவர் ஊக்கத்துடன் உழைத்து வந்தார். சிறிதுகாலம் உடம்பு அசௌக்கியமாயிருந்தனரேனும், குணப்பட்டுவிடுவார் என்று கருதப்பட்டுவந்தது. திடீரென இவர் இறந்துவிட்டாரென கேள்விப்பட்டு மனமுடைந்து வருந்தவேண்டியிருக்கிறது. கல்விவிஷயத்திலும் தேச ஜன பொது நன்மைகள் விஷயத்திலும் உழைத்துவந்த இவர், காலஞ்சென்றுவிட்டது தென்னிந்தியாவின் துர்ப்பாக்கியமே!



கிருஷ்ணன் வெண்ணெய்



பக்ஷிதீர்த்தம் தெருக்காட்சி



மஹிஷாசுரமர்த்தனி மண்டபம்



... பக்ஷிதீர்த்தம்

# விவேக போதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ராக்ஷஸஞு வைகாசிமீ : 1915-ஞு ஜூன்மீ } பகுதி 12

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### ஞானானந்த வைபவம்

### 41. பரம்பொருள் துதி

ஆகார புவனமின்பா கார மாக
வங்ஙனே யொருமொழியா லகண்டா கார
யோகானு பூதிபெற்ற வன்ப ராவிக்
குறுதுணையே யென்னளவு முகந்த கட்பே
வாகாரும் படிக்கிசைகிண் கிணிவா யென்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோற்
றேகாதி யுலகமெங்குங் கலந்து தானே
நிகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே.

(ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—1)

### 42. மாயையின் காரணம்

நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானு வாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச்
சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார்
ஊனென்று முடலென்றுங் காண மென்று
முள்ளென்றும் புறமென்று மொழியா நின்ற
வானென்றுங் காலென்றுந் தீயீ ரென்று
மண்ணென்று மலையென்றும் வனம தென்றும்.

(ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—15)

### 43. மாயையின் விரிவு

மலைமலையாங் காட்சிகண் காணுமை யாதி
மறப்பென்று நினைப்பென்று மாயா வாரி
அலையலையா யடிக்குமின்ப துன்ப மென்று
மதைவிளைக்கும் வினைகளென்று மதனைத் தீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றுந் தெய்வ மென்றுஞ்
சாதகரென் றும்மதற்குச் சாட்சி யாகக்
கலைபலவா நெறியென்றுந் தர்க்க மென்றுங்
கடலுறுநுண் மணலெண்ணிக் காணும் போதும்.

(ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—16)

### 44. மாயையின் ஓய்வு

காணரிய வல்லவெல்லாந் தானே கட்டுக்
கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற்கப் பூரமலை படுதீப் பட்ட
விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட
ஊணுறக்க மின்ப துன்பம் பேரு ராதி
யொவ்விடவு மெனைப்போல வுருவங் காட்டிச்
சோணறவோர் மான்காட்டி மானையீர்க்குங்
கொள்கையென வருண்மௌன குருவாய் வந்து

(ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—17)

### 45. குருஉபதேசக் குறிப்பு

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே யத்துவா மார்க்க நோக்கி
யைந்துபுல னைம்பூதங் கரண மாதி
யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை
இந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம்.

(ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—18)

### 46. குரு ஆசீர்வாதம்

அறிவாகி யானந்த மயமா யென்று
மழியாத நிலையாகி யாதின் பாலும்
பிறியாமற் றண்ணருளே கோயி லான
பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டின்
நெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளு
நிர்க்குண நிற்குளம்வாய்த்து நீடு வாழ்க
செறிவான வறியாமை யெல்லா நீங்க
சிற்சுகம்பெற் றிடுக பந்தந் தீர்கவென்றே.

(ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—19)

ராக்ஷஸஹு ஆனிமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | திது | இங் | தமிழ் | வார | ராக்ஷஸஹு ஆனிமூ — சாலிசகம் 1837 கலியப்தம் 5016 — பசலி 1324 கோல்லம்-1090 — 1915 ஹு ஜூன்மூ ஜூலைமூ |
|---|---|---|---|---|---|
| செபு | 1 | 15 | 1 | | செதிரு 58-15, புன 39-40, விர் 5-51, தை 29-57, திவி 7-28, அக 31-34, பர 4 செ 52-6, ரிஷபவக் புத 31-55, சூன்ய |
| சு | 2 | 16 | 2 | | புதசது 59-24, பூச 42-53, துரு 5-14, வணி 28-49, திவி 0-44, கா 4 சுக் 50-20, மிது சு சதுர் சது விரு. [கரிநாள் |
| | 3 | 17 | 3 | | வியாபஞ் 59-14, ஆயி 44-49, வியா 3-38, பவ 26-19, திவி 15-57, மழை 5-க்குள். |
| ர | 4 | 18 | 4 | | வெசஷ் 57-52, மக 45-34, ஹர் 1-2, வஜ 56-28, கௌ 28-33, திவி 15-11, மிரு 4 ரவி 43-53, சஷ் உப. |
| பு-சு | 5 | 19 | 5 | | சனிசப் 55-21, பூர 45-10, வரித் 52-56, கர 26-36, திவி 5-26, அக 31-36, மிரு 1 வக்புத 26-15, சோ 1 சுக் 30-40, அவி 1 ராகு ஆயி 3 கேது 3-26, சப் விரு. |
| ரா] செ | 6 | 20 | 6 | | ஞாஅஷ் 51-42, உத்தி 43-38, விய 47-30, பத் 23-31, திவி 2-39, கார் 1 செ 33-0, விய சிரா கரிநாள். |
| ர | 7 | 21 | 7 | | திங்நவ 47-16, அஸ் 41-16, வரி 41-25, பா 19-29, திவி 3-48, திரு 1 ரவி 44-25. |
| புசு | 8 | 22 | 8 | | செதச 42-6, சித் 38-9, பரி 34-43, தை 14-41, திவி 0-4, ரா 19-41, பிரதுதய புதன் 10-38, சோ 2 சுக் 20-0. |
| | 9 | 23 | 9 | | புதஏகா 36-28, சுவா 34-33, சிவ 27-36, வணி 9-17, ரா 16-0, அக 31-38, கடகாய 42-17, சர்வ ஏகா. |
| | 10 | 24 | 10 | | வியாதுவா 30-31, விசா 30-38, சித் 20-14, பவ 3-29, ரா 8-19, துவாதிதி பிரதோ கூர்ம ஜ |
| ரசெ சு] | 11 | 25 | 11 | | வெதிர 24-24, அனு 26-32, சா 12-41, தை 24-24, ரா 7-57, திரு 2 ரவி 15-31, ரிஷபசெவ் 12-0, சோ 3 சுக் 3-15, திதித்வயம். [சிலவிடங்களில் உண்டு |
| | 12 | 26 | 12 | | சனிசது 18-20, கேட் 22-29, சுப் 5-11, சுப் 52-31, வணி 18-20, ரா 9-35, பூர்ணிமாதிதி வடஸாவித்திரீ அதிக உஷ்ணம் |
| புசு | 13 | 27 | 13 | | ஞா ◯ பௌ 12-28, மூல 18-42, பிரா 50-36, பவ 12-28, திவி 14-57, ரா 9-50, அக 31-37 புதவக்ர நிவர்த்தி 10-38, சோ 4 சுக் 54-25, இஷ்டி பௌச ம. [சனி 52-30. |
| ரசு | 14 | 28 | 14 | | திங்பிர 7-6, பூரா 15-24, மா 44-4, கௌ 7-6, ரா 2-55, ஜேஷ்-பகு திரு 3 ரவி 46-25, திரு |
| செ | 15 | 29 | 15 | | செதுதி 2-22, 55-58, உத்தி 12-47, வை 38-7, கர 2-22, திவி 22-28, கார் 3 செ 52-34, வை சி |
| சு | 16 | 30 | 16 | | புதசது 55-17, திரு 10-56, விஷ் 32-51, பவ 26-48, திவி 20-47, மிரு 1 சுக் 34-30, சங் சது [சி உ. |
| பு | 17 | 1 | 17 | | வியாபஞ் 53-25, அவி 10-3, பிரீ 28-27, கௌ 24-21, திவி 28-17, அக 31-37, மிரு 2 ரிஜு புத |
| ர | 18 | 2 | 18 | | வெசஷ் 52-47, சத 10-49, ஆயு 25-2, கர 23-6, திவி 27-6, திரு 4 ரவி 17-19, மழை 7-க்குள். [38-0. |
| சு | 19 | 3 | 19 | | சனிசப் 53-20, பூர 11-53, ஸௌ 22-34, பத் 23-3, ரா 5-21, மிரு 2 சுக் 15-50. |
| செ | 20 | 4 | 20 | | ஞாஅஷ் 55-10, உத்தி 14-36, சோ 21-6, பா 24-15, ரா 15-0, கார் 4 செ 34-0, காளாஷ்டமி. |
| ரபு | 21 | 5 | 21 | | திங்நவ 58-13, ரே 18-34, அதி 20-38, தை 26-42, தியா-0-0, அக 31-35, புன 1 ரவி 47-51, |
| சு | 22 | 6 | 22 | | செதச 60-0, அசு 23-37, சுக 2 -0, வணி 29-6, திவி 12-46, ரா 18-28, மிதுனசுக் 3-39. [மிதுனபுத 23-0 |
| | 23 | 7 | 23 | | புதசச 2-14, பர 29-36, திரு 22-0, பத் 2-14, தியா—0—0. |
| புசு | 24 | 8 | 24 | | வியாஏகா 6-51, ✻ கார் 35-43, சூல 23-27, பா 6-51, திவி 2-31, மிரு 4 புத 34-0, மிரு 4 சுக் 43-27, சர்வஏகா கார் உப. |
| ரசெ | 25 | 9 | 25 | | வெதுவா 11-46, ரோ 42-10, கண் 25-2, தை 11-46, திவி 20-1, ரா 25-59, அக 31-33, புன 2 ரவி 18-22, சோ 1 |
| சு | 26 | 10 | 26 | | சனிதிர 16-32, மிரு 48-20, விர் 26-27, வணி 16-33, தி-0-0, சதுர்தசிதிதி மாசிமழை 3-க்குள். [செ 13-30, பிரதோ. |
| புசு | 27 | 11 | 27 | | ஞாசது 20-52, திரு 53-54, துரு 27-28, சது 20-52, திவி 11-17, திரு 1 புத 13-0, திரு 1 சுக் 38-17, அதிதி பிராகு தய சனி 2-38, போதாயனம். |
| ர | 28 | 12 | 28 | | திங் ● அமா 24-23, புன 58-36, வியா 27-52, நா 24-23, திவி 26-15, புன 3 ரவி 48-54, அமாதிதி சர்வ அமா சோம பிரதமாதிதி இஷ்டி சங் தரி. அமா போ இஷ்டி. |
| செபு | 29 | 13 | 29 | | செபிர 26-51, பூச 60-0, ஹர் 27-25, பவ 26-51, திவி 19-44, அக 31-30, ஆஷாசுத் சோ 2 செ 57-0, திரு 2 புத 51-3, |
| சு | 1 | 14 | 30 | | புததுதி 28-3, பூச 2-0, வஜ 25-58, கௌ 28-3, ரா 2-39, திரு 2 சுக் 25-16, மிது சு துதியாதிதி. |
| பு | 2 | 15 | 31 | | வியாதிரு 27-59, ஆயி 4-10, வரித் 23-22, கர 27-59, ரா 3-12, திரு 3 புத 9-0, திருதியாதிதி. |

| குரு | செ | சு | ர பு சனி |
|---|---|---|---|
| | 1 ரிஷபவக்பு 11 ரிஷபசெ | | கே |
| ராகு | 21 மிது பு 22 மிது சு | | |
| | | | |



OFFICE 2-7-1915 MADRAS

# விவேக போதினி

தொ. 7] ராக்ஷஸஹு வைகாசிமீ: [பகுதி. 12

## மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

### 4. ராஜயோகம் (தொடர்ச்சி)

(யோகஸூத்ரச் சுருக்கம். II-ம் பாதம் 30-ம் ஸூத்ரம் முதல் III-ம் பாதம் முடிய.)

(v)யோகவேளி அங்கங்கள்:—யம, நியம, ஆஸன, ப்ராணாயாம, ப்ரத்யாஹாரம் ஆகிய ஐந்துமே. இந்த ஐந்து வெளிப்படை அங்கங்களுக்கும் முதல் பாதம் 20ம்-ஸூத்ரத்தில் ச்ரத்தை என்ற பொதுப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளில் தேறி, ருசி கண்டவனுக்கே நமது சாஸ்திரங்களில், எதனாலும் மாற்றமுடியாத ச்ரத்தை திடமாக ஏற்பட்டு மேல் ஸாதனங்களை விடாது அநுஷ்டித்துத் தெளியும் திறன் வருமாதலால், இவைகளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

யமம் என்ற ஐந்து மானஸீக நற்குணங்களான, வருத்தாமை (அஹிம்ஸை) உண்மை (ஸத்யம்) திருடாமை (அஸ்தேயம்) வீரிய ஒழுக்கம் (ப்ரஹ்மசரியம்) பற்றின்மை (அபரிக்ரஹம்) ஆகிய இவைகளே. இதையே வேதாந்த சாஸ்திரங்களில் அகக்காரணத் தண்டமாகிய சமம் என்று பெயர்மாற்றிக் கூறப்படும். உலக வ்யவஹார ஒழுங்கில் சாஸ்திரப்படி இந்த ஐந்து குணங்களுக்கும் சற்று விரோதமாக நடக்கும்படி நேருமாயினும் க்ருஹஸ்தர்களுக்கு இவை இழுக்கேயல்ல. இவர்களுக்கு யாகாதி போன்ற சாஸ்த்ரீய ஜாதி, இட, கால ஸந்தர்ப்பங்கள் தவிர மற்றையவைகளில் ஒன்றையும் வருத்தாதிருத்தலே அஹிம்ஸை: நடந்ததாயும், பயனுள்ளதாயும், கேடு விளையாததாயும் முற்கூறிய நிபந்தனைகள்படி உள்ளதைக் கூறுவது ஸத்யம்: அவைகளுக்கேற்ப ஸ்வந்தக்காரர் கொடுக்காததை எடுக்காதது அஸ்தேயம்; பெண்சாதி ஒழிந்த மற்றவளையும், பெண்சாதியை காலமீறியும் கலவாமை, ப்ரஹ்மசரியம்; அப்படியே வேண்டிய அளவுக்கு மீறியவைகளைப் பெற ஆவல் கொள்ளாமை அபரிக்ரஹம். மாறுன எண்ணங்களான ஹிம்ஸை, பொய்யுரை, திருடுவது, அப்ரஹ்மசர்யம், பரிக்ரஹம் ஆகிய இவை ஸாதாரணமாக நமது மனதில் கிளம்புவது எல்லோர் அநுபவத்திலும் உள்ளதுதான். இவை செயல், செய்வித்தல், கண்டுகளித்தலாகிய மூன்று வகையில் ஆசை, ஆத்திரம், மயக்கம் இவைகளைக் காரணமாகக்கொண்டு குறைவு, நடுத்தரம், கடுமை என்ற மூன்று விதமாக 27 பாகமாகப் பிரிந்து நிற்கும். இவை மீளாத் துயரத்தையும் அறியாமையுமே பயக்கும் என்று கருதி இவைகளைத்தடுத்து அழிக்கவே ஏற்பட்டவை ஐந்து யமங்களும். இப்படி சாஸ்திரப்படிப் பழகிவந்து வாநப்ரஸ்த ஸந்யாஸிகளானல் இவைகளை முற்கூறிய ஜாதி, இட, கால, ஸந்தர்ப்பங்களால் தடைபடாது எப்பொழுதும் விடாது பின்பற்றுவதான ஒன்றையும் வருத்தாமை, உண்மையே கூறுவது, எதையும் திருடாமை, ஒரு ஸ்திரீயையும் சேராமை, எதையும் வேண்டுமெனக் கருதாமை ஆகிய மஹாவிருதம் கைகூடும். இது ஸரிவர திடப்படுவதற்கே தகுந்த பயிர்ச்சி ப்ரஹ்மசரிய ஆச்ரமத்திலேயே ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட திடவிருத நிலையில் இந்த நற்குணங்களுக்கு ப்ர

திஷ்டை ஏற்படும். இந்த ப்ரதிஷ்டையால் சிறந்த தன்மைகள் அப்பாஸிக்கு ஏற்பட்டுவிடும். அஹிம்ஸா ப்ரதிஷ்டையால் அப்யாஸிமுன் பகைவரது பகைமை நழுவிவிடும்: மானும் புலியும் ஒரேதுறையில் தண்ணீர் குடிப்பதுபோன்ற விசித்ரம் நடக்கும். ஸத்யப்ரதிஷ்டையால் சொன்ன சொல் பலிக்கும்: எதிர் உள்ள கர்மபலன் சற்றுவிலகி இந்த அப்யாஸி வாக்கின் பலன் உண்டாகத் தொடங்கி விடும்: அதாவது நிக்ரஹானுக்ரஹ சக்திகள் வரும். அஸ்தேய ப்ரதிஷ்டையால் ஸகல செல்வங்களும் வலியவந்து சேரும். ப்ரஹ்மசர்ய ப்ரதிஷ்டையால் க்ரியா ஞான சக்தி பலமாகும்: ஸத்ரீகள் ஸம்பந்தமில்லாமலே எந்த ஸம்பந்தத்தைக்கொண்டும் குழந்தைகளை உண்டாக்கி விடும் திறன் ஏற்படும்: ருஷி மூலரஹஸ்யம், இந்த ப்ரதிஷ்டையில் தான்: இதை நன்கு விசாரித்துணராது ருஷிமூலம் ஆராயாதே என்று கோஷிக்கின்றன நமது சாஸ்திரங்கள் எல்லாம். இதை ருஷி உத்பத்தி மிக மோசம் என்று துதர்க்கப் பொருள்கொண்டு விட்டனரே இக்காலத்தவர்! என்ன காலக்கொடுமை!! அபரிக்ரஹ ப்ரதிஷ்டையால் இப்பிறப்பின் காரணம், முன்னிருந்த நரகஸ்வர்க்காதி அனுபவங்கள் பூர்வ ஜன்மங்கள் இவைகள் விஷயத்தில் தெளிவான உணர்வு ஏற்படும்.

நியமம் என்பது ஐந்து வாசிககாயிக நற்குணங்களான தூய்மை (சௌசம்) களிப்பு (ஸந்தோஷம்) பொறுத்தல் (தபஸ்) தன் படிப்பு (ஸ்வாத்யாயம்) கடவுள் வழிபாடு (ஈச்வர ப்ரணிதானம்) ஆகிய இவைகளே. இதையே வேதாந்த சாஸ்திரத்தில் புரக்கரணதண்டமாகிய தமம் என்று பெயர் மாற்றிக் கூறப்படும். முன் கூறியபடி 27 பிரிவாக ஏற்படும், அசௌசம், அதபஸ், அத்யயன நீக்கம், ஈசன் வழிபாடின்மையாகிய மாறொழுக்கமான விதர்க்கங்களை விலக்கவே ஏற்பட்டவை இவை. சௌசம் இருவிதம்; வெளி உள் என்பவை: இங்கு வெளிச் சௌசமாகிய, ஸ்நாந, ஆசமன, தேஹ சுத்தி வஸ்திர சுத்தி ஆகிய இவைகளே குறிக்கப்படும். இதற்கும் ப்ரஹ்மசர்யத்திற்கும் நெருங்கிய ஸம்பந்தம் உண்டு. இது நிலைத்து சௌசப்ரதிஷ்டை வந்தால், தன் தேஹவெறுப்பும் பிறர் தேஹஸ்பர்ச வெறுப்பும் ஏற்படும். சௌசமில்லாமல் அடிக்கடி தேஹத்தின் அசுத்தியைக் கருதுவதால் மாத்திரம் இவ்வெறுப்பு வந்துவிடும் என்று வாசாவேதாந்திகள் கூறுவது பெரும் பொய் என்று தத்காலத்திய கருவிபிட்டறுக்கும் வைத்யர்களிடமுள்ள காமாதி ஆசைகளை நன்கு வெளிப்படுத்திவிடும். யோகமில்லா வேதாந்தத்தின் கதி இதுதான்! எப்படிப் பாலைச் சுடவைக்க, அது இருக்கும் பாத்திரத்தையே சுடவைக்கவேண்டுமோ, இதுவன்றி வேறு ஒருவழியும் இல்லையோ, அப்படி மனதை வெளி சௌசத்தால்தான் தாக்கவேண்டும்: வேறுவழியே இல்லை. ஆகவே சௌசப்ரதிஷ்டை உள்ளே தாக்கி, மனத்தூய்மை, தெளிவு, ஒருமை, இந்திரிய ஜயம், ஸாக்ஷாத்காரம் இவைகளை ஏற்கும் ஆற்றலை முறையே உண்டாக்கி விடும். ஸந்தோஷம் என்பது இங்கு உள் ஆசையால் ஏற்படும் வெளிச் சேஷ்டைகள் அடங்கியமர்ந்து ஆனந்தமாயிருப்பதே: இதற்கும் அபரிக்ரஹத்திற்கும்தான் நெருங்கிய ஸம்பந்தம். ஸந்தோஷ ப்ரதிஷ்டையால் நிகரற்ற ஸுகம் உண்டாகும். கஷ்ட காலங்களிலும் ஸுகக்குறைவு ஏற்படாது: ஆசை பரமதுக்கம், நிராசை பரமஸுகம் என்ற வசனமும் உண்டு. தபஸ், ஸ்வாத்யாய ஈச்வர ப்ரணிதான விஷயம் முன்னரே எடுத்து விஸ்தரித்தாகிவிட்டது. (II-ஸூ 1-13) இவை எல்லா யமன்களுக்கும் வேலி போன்றவை, ராஜ ஹடயோகி இருவருக்கும் அவசியம், ஆதலால்தான் முன்



னரும்இங்கும் எடுத்தாளப்படுகின்றன—தபஸ் பிரதிஷ்டையால் அசுத்தம் நீங்கி தேஹ இந்திரியபலம் ஏற்படும்: ஸ்வாத்யாய ப்ரதிஷ்டையால் இஷ்டதேவதா ப்ரத்யக்ஷம் ஏற்படும். ஈச்வர ப்ரணிதானத்தால் ஏகாக்ரஸமாதி (ஈச்வரப்ரணிதான ராஜயோகஸமாதி) கைகூடும்.

இந்த யமநியமம் இரண்டிலேயே நமது சாஸ்திர ஒழுங்குகள் எல்லாம் அடக்கம். இவைகளில் யமங்களுக்கு நியமங்கள் வெளிக்காவல்கள். யமங்களை எல்லா ஜாதியாரும் பின்பற்றலாம். நியமங்களில் கிரியாயோக பாகத்தை த்விஜர்களால்தான் பின்பற்றமுடியும். ஸாக்ஷாத்காரம் வரும்வரையில் இவ்வியமநியமங்கள் இந்திரியாதிகளுக்குக் காவலாக இருந்து பின்னர் இயற்கைகுணமாகவே மாறுது அமர்ந்துவிடும். ஆகவே இவைகளில்லாதவர்களை முக்தர்களெனக் கொண்டாடவே கூடாது. நமது புராணங்களில் ருஷிகணங்கள் பெரும்பாலரும் யமநியமப்ரதிஷ்டைவந்து மேல்படிகள் விடாமல் முயல்பவர்களாகவே இருப்பர். தத்காலக்கொடுமையை நோக்கில் இவைகளில் ஏதாவதொன்றில் பிரதிஷ்டை வரும்படி நடந்து, மற்றவைகளை விடாது ஸ்நாநம், ஸந்த்யை, ஜபம், மிதவேத அத்யயனம், பூஜை, ஆலயவழிபாடு, கர்மானுஷ்டானம் இவைகளால் கூடியவரையில் பின்பற்றினால், அடுத்த ஜன்மம் த்விஜத்வம் கிடைக்கவோ அல்லாமல் நிலைமாறாமலோ இருக்கும் என்று தோற்றுகிறது. இவைகளைவிட்டு நேரே ஞானத்திற்கு முயலும் ஆத்திரக்காரர்களுக்கு நரகமும் புழுவாதி ஜன்மங்களும் வரும்படியாகும், என்பது கூறாமலே விளங்கும்.

மேல்கூறும் வெளியங்கங்களான ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம் ஆகிய இவைகள் ஹடயோகிக்கே முக்யமானவை. ராஜயோகிக்கு இவை ஈச்வரப்ரணிதான ஏகாக்ரதால் தாமே அமைந்துவிடும். இதை அவன் மனப்பூர்வமாக ச்ரமப்பட்டு ஸாதிக்கவேண்டியதில்லை, புத்திகூர்மையாக இருப்பதால். ஆகவே இவை இங்கு சுருக்கமாகக் கூறப்படுகின்றன. ஆஸநம் என்பது யோக அப்யாஸத்திற்கு தேஹ அங்கங்களை அமைத்துக்கொண்டு உட்காரும் விதம். இது யோகம் முடியும் வரையில் மாறாததாயும், ஸுகமாயும் இருத்தல்வேண்டும். தேஹ மனோ முயற்சிகள் அனாவசியமாக ஏற்படாமல் காப்பதாலும், ஸ்திர வஸ்துக்களான ஆதிசேஷன் போன்றவைகளை த்யானிப்பதாலும் ஆஸனத்தை திடப்படுத்திக் கொள்ளலாம். இது நிலைத்துவிட்டால் ஸுகதுக்கத்தாக்கு குறைந்துகொண்டேவரும். இப்படித் தேறிவரும்கால் மூச்சு இழுத்து விடுதலை ஒழுங்கு படுத்தவேண்டும். தேஹத்தின் நன்மைக்குவேண்டியவை ஆகாரம், தீர்த்தம், வாயு; இவைகளுள் ஆஹாரதீர்த்த ஒழுங்குகள் எல்லாம் நியமித்திலடங்கிவிட்டன. நான்காவது அங்கமான ப்ராணாயாமத்தில் வாயு ஒழுங்கு அடங்கும். இந்த ப்ராணாயாமம் பொதுவாக இருவிதம். ஸகர்ப்பம் (மந்திரத்துடன் கூடியது) அகர்ப்பம் (மந்திரத்துடன் கூடாதது) முன்னது ராஜயோகிகளான த்விஜர்களுக்கும், பின்னது ஹடயோகிகளுக்கும் மற்றைய ராஜயோகிகளுக்கும். இவைகளுள் ஒவ்வொன்றும் ரேசகம், பூரகம், கும்பகம் அதாவது விடுவது, இழுப்பது, நிறுத்துவது என மூன்றுவிதம். மூச்சைவிட்டு உள்ளிழுக்காது நிறுத்தி பின்னர் இழுப்பது வெளிக் கும்பகத்துடன்கூடிய ரேசகப்ராணாயாமம். இதை எல்லோரும் இடம் காலம் கணக்கு இவைகளை உணர்ந்து எளிதில் பழக்கலாம்: இதில் அபாயமில்லை. மூச்சை இழுத்து விடாது நிறுத்திப் பின்விடுவது உள்கும்பகத்துடன்கூடிய பூரக ப்ராணாயாமம்: இது குரு உபதேசமும் ஸஹாயமுமின்றித் தொடங்கவே கூடாது: அபாயம் இதில் அநேகமுண்டு தவறினால்: ஹடயோ

கிக்கே முக்கியம். மூச்சு எப்படி இருப்பினும் பிடித்து நிறுத்தி நிற்பது கும்பகப்ராணாயாமம்; இதுதான் ராஜ யோகிகளுக்கு தானே வந்து அமையும் தனிப்ரயத்னமின்றி. இவை மூன்றில் ஏதாவதொன்றில் ஏற்படும் பழக்க விசேஷத்தால் பிடித்து நிறுத்தாமலே மூச்சு த்யான வேகத்தில் அடங்கிவிடுவது நான்காவதான ப்ராணாயாமம். இது மனதைக் கனியச்செய்யும் தாரணை நிலைக்க. இந்திரியங்கள் தம் விஷயங்களுள் சிக்காது மனதில் அடங்கி பொது நிலைப்படுவதே ப்ரத்யாஹாரம். இந்நிலையில் தான் உள் விஷயங்கள் சிறப்பாகிய விஷயவதீ தர்சனங்கள் ஏற்படும். இதனால் இந்திரியங்கள் முற்றிலும் வசப்பட்டுவிடும் அப்பாஸிக்கு. இப்படி இந்திரியங்கள் மனதுள் அடங்கி வெளிமுகப்பட முடியாத நிலையை அடைவதற்கே இந்திரிய நிரோதம் என்று பெயர். ஆமையை திருஷ்டாந்தமாகக் கொடுப்பதும் இதற்குத்தான்.

யமத்தால் மனமும், நியமத்தால் கர்மேந்திரியங்களும், ஆஸனத்தால் தேஹமும், ப்ராணாயாமத்தால் வாயு ஸஞ்சாரமும் தன்மையும், ப்ரத்யாஹாரத்தால் ஞானேந்திரியங்களும் சுத்தப்பட்டு மனதின் வசப்படும். இப்படி சுத்தமனதின் வசம் எல்லாம் அடங்கி நிற்பதே வெளி யோக ஸாதனங்களின் நோக்கம். (II-30-35)

(III) விபூதிபாதம்:— 55 ஸூத்ரங்கள் உடையது. இதுவும் ஐந்து பாகங்களை உடையது. அவையாவன ஸம்யமம் என்ற உள் ஸாதனம், நிருத்தச் சுருக்கம், வஸ்துக்கள் நிலைகள், ஞானஸித்திகள், கிரியாஸித்திகள் என்பவைகளே.

(i) ஸம்யமம்:— யோகத்திற்கு உள்ஸாதனம் தாரணை, த்யானம், ஸமாதி என்ற பின் மூன்று அங்கங்களும்தான். தேஹத்துள்ளேயாவது வெளியேயாவது ஓரிடத்தில், எல்லாவற்றையும் வசப்படுத்தியுள்ள மனதை தன் நோக்கத்தை முன்னிட்டு நிறுத்துவது தாரணை. ராஜ யோகிக்கு ஈசன் விக்ரஹத்திலோ அல்லது அவர் விஷய வர்ணனைகளிலோ வெளிமுகப்பட்டே இருக்கும் இந்த தாரணை. த்யானப் பொருளைச் சுற்றியுள்ள இடம் முதலியவைகளை விட்டு த்யானப்பொருள் மாத்திரமாக தைலதாரைபோல இருப்பது த்யானம். ராஜயோகிக்குஇஷ்டமூர்த்திமாத்திரமாகஇருக்கும் இது. த்யானவஸ்துவின் தன்மைமாத்திரமாக த்யானிப்பவன் த்யானம் இவைகள் நழுவாமல் நழுவி நிற்கும் நிலை ஸமாதி, ஏகாக்ர ஸமாதி: ராஜ யோகிக்கு இது தன் இஷ்டமூர்த்தியிலும் உள்ள எங்கும் நிறைந்த மாயையை அடக்கியாளும் வ்யாபக ஈசன் மாத்திரமாக இருக்கும் இந்த ஸமாதி. இந்த மூன்று அங்கங்களுக்கும் முறையே சித்தபரவசம், ஸவிகல்ப ஏகாக்ரம், நிர்விகல்ப ஏகாக்ரம் என்றும்பெயர். இவைகளில் மனம் நிலைத்திருக்க வேண்டியகாலவளவு வரவர அதிகப்பட்டுவரும்! பின்னதில் முன்னதைப்போல 12 மடங்கு காலம் நிலைக்க வேண்டும் எனப் புராணங்கள் ஒரு எண்ணைப் பொதுவாக எடுத்துக் காட்டும். யமநியமத்தில் நிலைத்த ராஜயோகி தன் ஈச்வரப்ரநிதானபலத்தால் நேரிடதாரணை த்யான ஸமாதியில் பழகி மற்றையவெளியங்கங்களை தாமே வந்தமையப் பெறுவன். ஹடயோகியோ இவைகளில் ஒழுங்காக நிலைபெற்று, ஸமாதி பெறுவன்: பழக்க விசேஷத்தால் தாரணைதொடங்கியதும் எளிதில்ஒழுங்காக உடனேஸமாதிகைகூடும் திறன் வருங்கால் இவ்வுள்ளங்கம் மூன்றும் சேர்ந்து ஸம்யமம் என்ற ஒரே பெயரைப் பெறும். இவனுக்குத்தான் வெளியங்கங்க ளெல்லாம் இயற்கையாக அமைந்துவிடும். இது நிலைத்தால் முதல்பாதத்தில்கூறிய ரிதம்பர ப்ரஞ்ஞை மன



தின் விரிவால் ஏற்படும். இந்த உணர்வு த்யானப் பொருள், த்யானக்கருவி, த்யானிப்பவன், இந்த விஷயங்கள் ஒவ்வொன்றிலும் முறையே ஸ்தூல, ஸூக்ஷ்மகாரண ஒழுங்குப்படி பழக்க விசேஷத்தால் பற்றி விரிந்து பரவிவரும். இந்த ஸம்யமம் நிருத்தமாகிய யோகத்தை நோக்க உள் உதவியாயினும், யோகமுடிவான ஸாக்ஷாத்காரத்தை நோக்க வெளிஉதவிகளே, நிர்பீஜ ஸமாதியாகிய யோகம் ஸாக்ஷாத்காரமான கைவல்யத்திற்கு உள்ஸாதனம். (III-1-8)

(ii) நிருத்தம்:—நிர்விகல்ப ஏகாக்ரமான ஸாதன ஸமாதியின் முடிவில் பரவைராக்யத்தின் அடக்கப்பதிவுகள் மனதை உள்ளிழுத்து ஓயச் செய்யும், ஸூக்ஷ்மமான புண்யப் பதிவுகள் மனதை ஏகாக்ரத்தில் இழுத்து வெளிமுகப் படச்செய்யும், இவை யிரண்டுள் பரவைராக்யத்தை முன்னிட்டு சிறு முயற்சியால் புண்யப் பதிவு வசப்படாது நிற்பதே நிருத்த அப்யாஸம். இப்படி சிறு முயற்சியும், முயற்சியின்றி ஓய்வதுமான அப்யாஸத்தால் ஏற்படும். வேறு பதிவுகள், தாமே ஓயும் தன்மை உடையவையாகி மனதிற்கு இடைவிடா சாந்த அமைதிகளை உண்டாக்கும். இதில் புண்யப் பதிவைத் தடுக்கும் தவணைகள்கூடக் குறைந்து, ஓய்ந்திருப்பதே அதிகப்பட்டு, அமருவதுதான் நிருத்தம் எனப்படும். ஆகவே இந்நிலையில் சற்று அமர்ந்து வெளிப்படுவர், முதலில் எங்கும் பரவியிருந்த மனம்குருகி ஒரே தன்மையைவிடாது எண்ணும் நிலையாகிய ஸமாதிக்கு வந்துவிடுவர். இதிலேயே வெகுகாலம் இருந்து நிருத்தம் போகலாம், அல்லது அடுத்தபடியாகிய ஒரு விஷயத்தில் ஒரே விருத்தி தொடர்ந்து வருவதாகிய ஸவிகல்ப ஏகாக்ரம் வரலாம். வெகு அபூர்வமாக தாரணை நிலைக்குவந்து வ்யவஹரிக்கலாம். இதுதாண்டி நிருத்த சிலர் கீழே இறங்கவே மாட்டார்கள். (III—9-12)

(iii) வஸ்துக்கள் நிலைகள்:—ஒவ்வொருவஸ்து
வுக்கும் தன்னிலைக்குமேல் தர்மம், லக்ஷணம்
அவஸ்தை என மூன்று வகைப்படும் நிலைகள்
உண்டு. மனதின் ஸ்வரூபம் நிருத்தம் அதன்
தன்னிலை: அறியும் தன்மை தர்மம்: கிளம்
வது, அடங்குவது, ஒருமைப்படுவது முதல
ய நிலைகள் லக்ஷணம்: ஸங்கல்ப வசப்பட்
விருத்தியாகி உழலுவது அவஸ்தை. இதுபோ
வித்துதன்னிலை, முளைக்கும் சக்தி தர்மம், முளை
விடுவது லக்ஷணம், வளர்ந்து, அழியத்தொ
டங்கி மாறுவது அவஸ்தை. இப்படி நமக்கு
தெரிந்த வஸ்துக்களுக்கெல்லாம் மும்மூன்
நிலைகள் உண்டு. ஓய்வு கிளர்ச்சி மறைவு என்
தர்மங்களில் எல்லாவற்றிலும் உள்ளதுதா
வஸ்து என்ற தர்மி: இதில் மாறுபாடுள்ள
போலக் காணப்படும் தர்மம், லக்ஷணம் அவ
தைகளாக மாறும்பொழுது. மனம் பூத இந்தி
யாதிகளை நோக்க தர்மி, ப்ரக்ருதியை நோக்
தர்மம். இந்த மனதிற்கு எட்டு தர்மங்களுண்டு
அவையாவன, விருத்தி (முதல் பாதத்தி
கூறப்பட்டபடி 5 வகையாக உள்ளவை), நிரோ
தம் (ஸமாதி), தர்மம் (பாபபுண்யப் பதிவு)
ஸம்ஸ்காரம் (வாஸனை), பரிணாமம் (கலக்க ச
சலங்கள் தாமஸ ராஜஸச் சேர்க்கையால்), ஜீ
னம் (பிராணன் தேஹத்தில் நிலைக்கும்ப
செய்வது), சேஷ்டை (மனம்சேர்ந்து இந்தி
யாதிகளைத் தொழிற்படச் செய்வது)சக்தி(எ
லாவற்றையும் ஸூக்ஷ்மமாக ஏற்கும் தன்மை
ஆகிய இவைகளே. இவைகளுள் முதல
வதைத்தவிர மற்றவை எல்லாம், நேரே விள
காதவை. (III-13-15)

(iv) ஞானஸித்திகள்:—ஸாதாரணமாக யே
கிக்குவரும் ஸம்யமசக்தியை எந்தப்பொரு
விஷயத்தில் உபயோகப்படுத்தினாலும் ஸ
அதன் உண்மை விளங்கும் துவிஷயமாக
சிறந்தசக்தி ஒன்று அவனுக்குவரும். இப்ப

வருவனவெல்லாவற்றையும் வைராக்யாதி ஆத்மகுண விஷயமாகவும் கூடியவரையில் பரோபகாரமாகவும் உபயோகப்படுத்தி இவைகளை அதிகமாகக் கவனியாது நிருத்தம்நிலைத்து ஸாக்ஷாத்காரம்போக முயலவேண்டும், ஸித்தி காரணங்களும் ஸித்திகளும் பின்வருவன:—

| ஸம்யமப்பொருள் | ஸித்தி |
|---|---|
| 1. வஸ்து மாறுபாடுகள் விஷயம் | முன்பின்உணர்வு |
| 2. சப்த அர்தஞானங்கள் | ப்ராணிபாஷை உணர்வு |
| 3. தன் சித்தப்பதிவுகள் | பூர்வவிஷய உணர்வு |
| 4. தன் மனோவிருத்திகள் | பிறன் எண்ண உணர்வு |
| 5. உடல் உருவப்பகுதி | உடல்மறைவு |
| 6 ஸஞ்சித ப்ராரப்தம் | மரணகால உணர்வு |
| 7. நற்குணம் | பிறமனதைத் தாக்குவது |
| 8. சிறந்தவஸ்து | சிறப்புகைகூடுவது |
| 9. புத்தியின் உண்மை உருவம் | அத்புததிருஷ்டி |
| 10. ஸூர்யநாடி | புவனங்கள் ஞானம் |
| 11. சந்திரன் | நக்ஷத்ரக்கூட்ட உணர்வு |
| 12. த்ருவம் | நக்ஷத்ரப் போக்குணர்வு |
| 13. நாபீசக்ரம் | தேஹதத்வ உணர்வு |
| 14. கழுத்து முதலியன | பசிதாக நிவர்த்தி |
| 15. கூர்ம நாடி | ஆஸன அமைவு |
| 16. சிரோஜ்யோதி | ஸித்தர் தர்சனம் |
| 17. ஈசன் ஸர்வஞ்ஞத்வம் | ஸர்வஸித்தி |
| 18. ஹ்ருதயம் | மனதின் தன்மை உணர்வு |
| 19. ப்ரகிருதி புருஷவிவேகம் | புருஷ விளக்கம் |
| 20. விவேக விருத்தி | திவ்ய இந்திரியஸித்தி |

இங்கு பதஞ்ஜலி பகவான் ஸித்திகள் விஷயத்தில் 'இவை ஸமாதிக்குத் தடையேயாயினும், வெளிமுகப்படின் ஸமாதி ஸாதனங்கள் விஷயத்தில் உபயோகப்படும்' என்று எச்சரிக்கிறார். (III—16—37)

(v) கிரியாஸித்திகள்:—

| ஸம்யமம் | ஸித்தி |
|---|---|
| 21. தத்கால கர்மத்தடை மனம் வெளி ஏறும் மார்க்கம் | பரகாயப்ரவேசம் |
| 22 உதான வாயு | மேலே கிளம்பல் |
| 23 ஸமான வாயு | தேஜஸ் ஜீரணசக்தி |
| 24. காது, ஆகாய ஸம்பந்தம் | திவ்ய ச்ரோத்ரம் |
| 25. தேஹ ஆகாய ஸம்பந்தம் | ஆகாயகமனம் |
| 26. விதேஹ நிலை | மறைப்பு நீக்கம் |
| 27. பூத பஞ்சஸ்திதி | பூதஜயம் அஷ்டஸித்திகள் |
| 28. இந்திரிய பஞ்சஸ்திதி | இந்திரியஜயம் |
| 29. நிருத்தம் | ஈசத்தன்மை |
| 30. பரவைராக்யம் | கைவல்யம் |
| 31. காலதத்வம் | விவேக ஞானம் |

இவைகளால் வரக்கூடிய லோகாந்தரச் சிறப்பை சரபங்கர்போல ஒருபொருட்டாக மதியாது கைவல்யத்திற்கே இவைகளைப் உபயோகப்படுத்தவேண்டும். இந்த ஸித்திகள் ராஜயோகிகளுக்கும் வரும்: ஆனால் அவர்கள் இவைகளைப் பெரும்பாலும் கவனியாமலே தமதுயோகத்தில் ஈடுபட்டுநிற்பர். ஹடயோகிகளே பிறர் நன்மைக்கும் தம் அப்யாஸ திடத்திற்கும் இவைகளை உபயோகப்படுத்துவர்.

(III 37—55)

## இளையான்குடி மாறநயினர் சரித்திரம்

## ILAYANGUDI MARANAYANAR

### (A life sketch)

"உலகெலா முணர்ந்தோதற் கரியவன், நிலவுலாவிய நீர்மலிவேணியன்" என்றபடி உணர்ந்து வெளிப்படுத்த முடியாத, அதாவது, நமது புத்தி சித்தம், அகங்காரம் இவைகளில் அடங்காததும், நமது புலன்களால் விவரிக்க முடியாததும், வேதங்கள் சொல்லாமற் சொல்லுகிறதுமான பரம்பொருளின் திருவடிகள் வாழி. தற்பரனை வேதங்கள் சுட்டிக்காட்டும்வகை யாதெனில், இதுவு மல்ல அதுவுமல்ல: மற்றெதுவெனில், எந்த விடத்தில் வேதங்கள் கூற நாவெழாமல், தலை குனிகின்றனவோ, அதுதான் பரப்பிரம்மம். அதெப்படி ? ஒரு ராஜகன்னிகை சுவயம்வரத்தில் இருபக்கமும் ராஜாதி ராஜர்கள் தத்தம் தேர்களில் நிற்க, தன் தோழியால் ஒவ்வொருவருடைய கீர்த்தியையும் சொல்லக்கேட்டு, தன் மனதுக்கிசையாதவரைக் கடந்து தன்மனதுக்கிசைந்தவரிடம் தலைகுனிந்து நாணி நிற்பது போலாகும். ஆற்றில் பெருவெள்ளம் கரை உடைத்துக்கொண்டு போவதுபோல், சிறு புலன்களின் எல்லையைஉடைத்து, பேரானந்தத்தைவிளைப்பது ப்ரம்மம். அவ்வண்ணமான பரம்பொருளை அஞ்சலி செய்குவாம்.

விண்ணவரும் பல பிறவியெடுத்து முத்திபெறுவதற் கிடமாகி, மற்றையரும் இடர்க்கடல் நீந்தா முத்தி இன்பக்கரை யடைய வேண்டினவராகி அவதாரஞ்செய்து, நித்தமும் அத்தனை பக்திசெய்து, சித்தி பெறுதற் கிடமாகிய புண்ணிய பூமி இப்பரதகண்டம். இப்பரதகண்டத்தின்கண் பாண்டிய நாட்டில், இளையான்குடி என்னும் கிராமத்தில் தருமமே உருவாய் வந்த ஒரு பிரபு இருந்தார். அவர் தனத்தினாலும், கருமத்தினாலும், ஜனங்களால் நன்கு மதிக்கப்

(இதன் தொடர்ச்சி 447-ம் பக்கம்.)



பெற்று மாறன் என்ற செல்வப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர். கற்பில் அருந்ததியும், பொறுமையில் பூதேவியும் அறத்திற் கச்சி யேகம்பமுடையார் மகிழுங் காமாட்சியம்மையுமாய் "தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை," "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் திருவாய்மலர்ந்த திருக்குறளுக்கிலக்காகி, திருவாகுமம்மை இவர்க்கு பத்னியாய் வாய்க்க, அவ்வம்மையை இல்வாழ்க்கைத் துணையாகக் கொண்டு பலவகை யறங்களையும் "தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கறொனன்றாங் கைம்புலத் தாறோம் பறலை" என்னும் உரையைக்கடைப்பிடித்து உடலுயிர்போன்று இருவருமொத்துப் பிரியாவன்பினராய் நல்லறமாய வில்லறவழியிலே நின்று, "அவமாயதெல்லாந் தாமே கழியக் கைவிட்டுத் தவமாய தெல்லாந் தாமேவந்தடையக் கைக்கொண்டு" தமது வாழ்நாளைக்கழிப்பாராயினர். எல்லாப் பெண்டிரும் தாரமல்லர். தாரம் என்றால் நூற்சரடுக்குப் பெயர். ஊசிக்கண்ணிலும் நுழையக்கூடிய பத்நியே தாரமெனத்தகும். தன் கொழுநன் குறிப்பறிந்து தருமத்தைச் செய்பவள் தாரம். இல்லாளிருக்க இல்லையென்ற சொல் வருமோ? மனைக்குத் தகுந்தவள் மனைவி. அவள்தான் கிருஹத்துக்கு லட்சுமியாகிய கிருஹணி.

மாறநாயனர், அதிதி பூஜையே வீடடைவதற்கு ஏணிஎன்றறிந்து தருமத்தையே கடைப்பிடித்தவர். இவருக்கேற்ற அணங்கு இவர் மனைவி. அணங்கு என்றால் தெய்வப்பெண். இந்தப் பிரபுவின் மன உறுதியைச் சோதிக்குமாறு, சிவபெருமான் இவருக்குப் பரமதரித்திரத்தைக் கொடுத்தார். செல்வமுற்ற காலை ஒருவன் தரும மியற்றுவது பெரிதல்ல. வறுமை வழங்கும்பொழுது செவ்வனே இரப்போர்க்களிப்பது சான்றோர் முறை. "ஆற்றுப் பெருக்கற்றடி சுடு மந்நாளு மவ்வாறு ஊற்றுப்பெருக்கா லுலகூட்டும்" என்றபடி, தான் பசித்திருப்பினும் பிறர்க் களிப்பது நற்குடிப் பிறந்தார் கொள்கை.

மாறநாயனர், தன்னை அடகுவைப்பதொழிய மற்றக்கஷ்டங்களெல்லாம் அடைந்துவிட்டனர். தன்னையுங் கொள்வாருளராயின், அவ்வூதியத்தையும் தருமம் புரிந்திருப்பார். ஈசன் இந்நிலையில் நாயனரைச்சோதிக்க ஒருநள்ளிருளில் மழைக்காலில் கிழவேடம் பூண்டு பசியால் வருந்துபவராகி 'அய்யனே! என்பசி என்னைத் தின்னுகின்றது– பசிதீர்ப்பாயா' என அந்த வயோதிகர் கேட்டார். மாறன், 'அய்யா! நான் தீர்ப்பே'னென்று சொல்லி, அக்கிழவரை இருத்தி, அன்று உணவின்றி வருந்தும் அருந்ததியிடம் சென்று, மனம் மிகவாடி, 'அணங்கே!, நாம் இன்று உண்டிலம், பரமசிவனே உருவெடுத்து வந்த இவருக்கு அன்னம் அருந்துதியோ' என்ன, அவ்வுத்தமி, இல்லாளிருக்க இல்லையென்று சொல்ல இயலுமோ என்ற சொல்லுக்கு இணங்க 'என் பிராண நாதா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதென்ன வெனில், எல்லாவிடமும் கடனு முண்டாய்விட்டது, இனிக் கொடுப்பார் யாருமில்லை. ஆகையால், தாங்கள் "அல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெலை வாரிக்கொண்டு வரின்" யான் அந்த யோகியாரின் பசி தீர்ப்பேனென்றாள். இனிக்கொடுப்பார் என்பதற்கு இரண்டு பொருள். ஒரு முறை வாங்கினதை திருப்பிக்கொடுக்க சக்தியில்லாததினால் இனிக்கொடார் என்றும், சூரியாஸ்தமன மானபிறகு கடன் வாங்கினதையே திருப்பிக்கொடார் என்றால், யாசகம் கொடுக்க யாரும் சம்மதியார் என்றதும். அல்லல் என்றால் வறுமை என்று பொருள். அல்லல் என்றால் துன்பம் என்று பொருள்பட ஜன்மம் நீங்க என்றும் கொள்ளலாம். இச்சமயம் பரமசிவன் வந்தது எப்படியென்றால் "குருக்ஷேத்திர பூமியில் கண்ணபிரான் பார்த்தன் சாரத்தியத்தை விட்டுக் கர்ணனிடம் பிராமண வேஷம் பூண்டு யாசகத்துக்கு வர, கர்ணனுக்கு பிராணோத்கரண சமய மாயிருந்தும், 'ஐயோ, நாம் குறிப்பறிந்து கொடுக்கும் சமயம் தப்பிவிட்டதே' என்று பரிதபித்து மனம்மிகவும் வாடி' ஏ பிராமணோத்தமரே! என் உயிர் அகத்ததோ, புறத்ததோ தெரியவில்லை. தங்களுடைய தேஜஸோ கோடிசூரியப் பிரகாச மாயிருக்கிறது. பதமிழந்துபதியிழந்து பரிதபிக்கும் பாவியேன் இதுசமயம் என்னதர்மம்செய்யப் போகிறேன்! ஆயினும் நான் இதுவரையில் கீர்த்தியைக் கருதாது செய்த தானங்களின் பலன் உண்டு; அதையே தங்களுக்கு தத்தம் செய்தேன் என்றார். பகவான் அவருடைய அழகிய மனதுக்காக

ஆலிங்கனம் செய்து 'உனக்கு வேண்டுவதைக் கேள்' என்று அருள, இறப்பதற்கு நான் அஞ்சுவதில்லை; 'எக்குடியிற் பிறப்பினும் இல்லையென்றுசொல்லா வரமருள வேண்டு' மென்று கர்ணன் கேட்டுக் கொண்டான். இரப்பவர்க்கு இல்லை யென்றால் எனக்கு வீடடைவதற்கும் இஷ்டமில்லை என்பது. இத்தருமத்தைக் கைக்கொண்ட மாறன் தன் பத்தினி மனதின்படி, ஒரு கூடையை எடுத்துக்கொண்டு அன்று விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வரச்செல்ல, கிருஹிணியும் மையிருளில், சென்ற கணவன் திரும்பி வருமளவும்வாயிலில்நின்றுகொண்டிருந்தனள். கையில் வெளிச்சமோ இல்லை; வெள்ளம் புரண்டு வருகிற வாரியில் விதைநெல்லை அரித்தால் வேறு ஒருவர் புலத்தினின்றும் வரும் பொருள் சேர்ந்து விடுமோ என்று பயந்து, தன் கழனியிற் சென்று நெல் அரித்துக்கொண்டு வந்தார். தனது வாயில் சேரவும், பத்தினி, கூடையை வாங்கி அகம் சென்று, அகங்களித்தனள். தீமூட்ட விறகு வேண்டுமென்று தெரிவிக்க, நெடுநாளாகப்பிடுங்கி, எரித்து பாக்கிநின்ற முகட்டு வளையை இழுத்துக்கொடுக்க, அன்னம் அதி சீக்கிரம் அடிசிற் கினியாள் அட்டனள். புறக்கடையில் இருந்த கீரையை வேருடன் பிடுங்கிச்சமைக்க, பரமசிவன் அவ்வணங்கு இட்ட அமுது உண்டு பசி ஆறிச் சற்று நேரமிருக்க, ஓர் அற்புத விமானம் தோன்றி அவ்விருவரும் பரமசிவனுடன் அவ்விமானத்தில் திருக்கைலைக்குச்சென்றனர். மன்னரும், மாந்தரும், விண்ணவரும் விண்மாரியெனப் பூமாரி பொழிந்தனர். "பெரிது பெரிது புவனம் பெரிது,புவனமோ நான்முகன் படைப்பு, நான்முகனோ திருமாலுந்தி வந்தோன், திருமாலோ பாற்கடல் துயின்றோன்,பாற்கடலோ குறுமுனிகையடக்கம், குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன், கலசமோ புவியிற் சிறுமண், புவியோ அரவினுக் கொருதலைப்பாரம், அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம், உமையோ இறைவனுள்ளடக்கம், இறைவனோ தொண்டருள்ளடக்கம். தொண்டர் தம்பெருமை சொல்லவும் அரிதே."

டி. எஸ், வேங்கடராமய்யர்.

## எங்கள் மஹாபலிபுர யாத்திரை

## OUR EXCURSION TO MAHABALIPURAM

மஹாபலிபுரத்திற்கு நாங்கள் ஒரு விநோத யாத்திரையாகச் செல்வோம் என்பதைக் கேட்டு எங்கள் எல்லோருக்கும் உண்டான ஆனந்தத்திற்களவில்லை. குறித்த காலத்தில் ஒவ்வொருவரும் தத்தம் சிறு மூட்டைகளுடன் ரயில் ஸ்டேஷனில் ஒன்று கூடினோம். பார்க்கப் போகும் இடங்களின் விருத்தாந்தங்களை தெரிந்து கொள்வதில் ஆவலுள்ளவர்களாய் எங்களில் ஒருவருக்கொருவர் சம்பாஷணை செய்து கொண்டிருந்தோர் சிலர். இனிப் பாடசாலையிலும் கலாசாலையிலும் ஏற்பட்டிருக்கும் கட்டுகள் இல்லாமல் போய்விடவும் தாராளமாய் நடந்து கொள்பவர்களாய் பற்பல விஷயங்களைப்பற்றியும் பேசுவோர் சிலர். இப்படி இருக்கையில் புகை வண்டியும் வந்துவிட்டது. கும்பல் கும்பலாய் அவரவர்கள் வண்டியிலேறினார்கள். வண்டியும் புறப்பட்டது. இனி நாம் போவது நிச்சயமாய்விட்டது என்பதை அறிவிக்கிறது போல் எல்லோரும் ஒரே சந்தோஷ சப்தமும் கரகோஷ ஆரவாரமும் செய்தார்கள். ஒவ்வொருவர் முகத்திலும் ஆனந்தமே தாண்டவமாடிக்கொண்டிருந்தது. புகைவண்டி செங்கற்பட்டு வந்து சேரும்வரையில் எல்லோரும் பற்பல விதமாய் வழியைப் போக்கினார்கள். இருமருங்கிலுமுள்ள அழகிய சாலைகளையும், பச்சைப் பசேரென்றிருக்கிறவயல்களையும் அதற்கப்பால் வெள்ளியை உருக்கிவிட்டது போல் கதிரவனின் ஒளியால் விளங்கும் சிற்றேரிகளையும் கண்டு களித்தனர் சிலர்; இவைகளுக்கப்பால் கண்ணுக்குத்தென்படும் கட்டிடங்களையும் குன்றுகளையும் கண்டு அவைகளுடன் சம்மந்தப்பட்ட சரித்திர விஷயங்களைப்பற்றிப் பேசுவோரும் சிலர் இருந்தார்கள்; மற்றுஞ்சிலர் தமிழிலும் தெலுங்கிலும் உள்ள கீர்த்தனைகளைப் பாடி நேசர்களைக் களிப்பித்தோருமாயிருந்தார்கள். இவ்வண்ணம் இருந்து கொண்டிருந்ததனால் எங்களுக்குள் ஏற்பட்டுள்ள ஸ்நேகபாவம் முன்னையினும் பதின் மடங்கு அதிகமாயிற்று. செங்கல்பட்டு சேர்ந்து புகைவண்டியினின்றும் இறங்கி எங்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த விடுதியையடைந்தோம்.

போஜனம் செய்வதற்குமுன் எங்களில்சிலர்



ஸ்நானம் செய்வதற்கு அருகிலிருக்கும் ஏரிக்குச் சென்றிருந்தோம். ஆ! ஏரியின் சிறப்பை என்னென்றுரைப்பது! கண்ணுக்கெட்டியவரையில் எங்கும் ஒரே நீலநிறமான நீர்ப்பரப்பும் அதற்கப்பால் மரங்கள் செறிந்துள்ள சிறு குன்றுகளும் ஒரு பக்கத்தில் பச்சைப் பசேரென்றுள்ள வயல்களும் இருப்பதைப்பார்க்க ஏதோ மாயக்காட்சிகளையும் தேவதைகளின் உறைவிடமாயுள்ள வித்யாதர உலகத்தையும் நினைப்பூட்டிற்று. இத்தகைய விசித்திர காட்சியைக்கண்டு களித்து விடுதியை யடைந்து போஜனமுண்டு இளைப்பாறினோம். பிறகு செங்கல்பட்டில் எல்லோரும் பார்க்கவேண்டிய குற்றவாளிச் சிறுவர்களைச் சீர்திருத்தும் சாலை (Reformatory School for Juvenile Offenders) யைப் பார்க்கச்சென்றோம்.

அச்சாலை கோட்டையினுட்பாகத்தில் அமைந்துள்ளது. ஒருவரும் உள்நுழையாவண்ணம் தகுந்த பாதுகாவலையுடையது. இச்சாலையின் அதிகாரியினது அனுமதி பெற்றுக்கொண்டு உள்நுழைந்தோம். அவர் எங்களை வரவேற்று அச்சாலையின் ஒவ்வொரு பாகத்தையும் காட்டினார். இது இளைஞர்களுக்கென்றே ஏற்பட்டு அவர்கள் சீர்திருத்தம் அடைந்தபிறகு ஏதாவது யோக்கியமான தொழிலில் அமரும்படியான வழிகளைக் கற்பிக்கும் இடமாயிருக்கிறது. எந்தெந்த தொழில் எவ்வெவனுக்கு உரியதோ அதற்குத் தகுந்தபடி அத்தொழில் அமைக்கப்பட்டிருக்கிறது. நெசவுத்தொழில் செய்யும் இடமும், தச்சுத்தொழிற் சாலையும் கொத்தவேலைசெய்யும் இடமும் எல்லா பிள்ளைகளுக்கும் படிப்பு சொல்லித்தரும் பாடசாலையும்,பிள்ளைகளால் செய்யப்பட்ட பலவித கைத்தொழிற்பண்டங்களை விற்பனைசெய்யும் பண்டசாலையும்,ஆகிய இவைகள் எல்லாம் இதிலேயேயுள்ளன. பிள்ளைகள் போஜனம் செய்வதற்கென்று பெரிய ஆலமரத்தின் நிழலில் அழகிய கருங்கல்லால் அமைக்கப்பட்ட மேடைகள் கட்டப்பட்டிருக்கின்றன இவர்கள் இரவில் படுப்பதற்காக ஏற்பட்டிருக்கும் நீண்ட அகன்ற விசாலமான கூடங்களில், தொங்கும் கட்டில்கள் இருக்கின்றன. இதிலிருக்கும் சிறுவர்கள் நல்வழியில் நடக்கும் படியாய் ஒரு பாடசாலையும் ஏற்பட்டிருப்பது மிகவும் மெச்சத்தகுந்ததாய் இருக்கிறது. மற்றைய பாடங்களுடன் சில பிள்ளைகள் இனிய கீர்த்தனைகளையும் உபவாத்தியங்களுடன் பாடுவது வெகு ஆனந்தமாயிருக்கிறது. தினந்தோறும் தேகப்பயிற்சி இவர்களுக்கு இராமல் இருப்பதில்லை. யாதொரு வேலையுமின்றி அயோக்கியர்களாயும் முடிச்சு மாறிகளாயும் போய், உலகத்திற்குப் பெரும் சுமையாய் இருந்துவிடும் சிறுபிள்ளைகளை முதலிலேயே நல்வழிகளைக் கடைப்பிடிக்கச் செய்தால் அவர்கள் எவ்வளவு சிறந்த குணமுடன் நடப்பார்கள் என்பதற்கு இந்த கல்விச் சாலையே நிதர்சனமாயுள்ளது.

இந்தச் சாலையுள் ஓர் உயர்ந்த தனிக்கட்டடமுண்டு. அதற்குத் 'தேர் மஹால்' என்று பெயர். அது தேரைப் போல் அடுக்கு அடுக்கான மாடிகளையுடையது. இது, முற்காலத்தில் செங்கல்பட்டை யாண்டுவந்த நாயகரது அந்தப்புரஸ்த்ரீகள் மேன்மாடியிலிருந்து காஞ்சிபுர ரதோத்ஸவத்தைக் காண்பதற்காகக் கட்டினதாம். இந்தக் கட்டிடத்திலிருந்துதான் இங்கிலிஷ் ஈஸ்டிந்தியா கம்பெனியார் சென்னப்பட்டணத்தைக் கைக்கொண்ட தாக்கீது செங்கல்பட்டு நாயகனால் எழுதிக் கொடுக்கப்பட்டது. செங்கல்பட்டை ஆண்டுவந்த நாயகவம்சத்தாரது பெருமையைக் குறிக்கின்ற அநேக கட்டடச்சின்னங்கள் இங்கு இருக்கின்றன.

இவைகள் எல்லாவற்றையும் கண்டு நம் பழைய அரசர்களின் நிலைமையையும் ப்ரிடிஷ் அரசாங்கத்தாரின் ஒழுங்கையும் மனத்தில்நினைத்துக்கொண்டே திரும்பி அன்றைய இரவே பக்ஷிதீர்த்தம் வந்து சேர்ந்தோம். மறுநாள் காலையில் பக்ஷிதீர்த்தத்தின் காட்சிகளைச்சிறிது கண்டு களித்து போஜனமுண்டு உடனே நாங்கள் போகவேண்டு மென்றிருந்த மஹாபலிபுரத்திற்குப் புறப்பட்டோம். ஸுமார் பன்னிரண்டு மணிக்கு ஊரருகில் வந்து சேர்ந்தோம். நீண்டு சிறிதுயர்ந்த குன்றங்களும் அதன் மீதுள்ள பெரும் பாறைகளும் அவைகளின் நடுவே ஆகாயத்தை யளாவிச்செல்லும் கலங்கரை விளக்கமும் அந்நடுப்பகலில் முக்காலத்தில் பலிச்சக்ரவர்த்தியிடத்தில் மூவடி மண் இரந்து பிறகு உலகத்தையளந்த வாமன மூர்த்தி திரிவிக்கிரமராய் விளங்கியதுபோல்தோன்றிற்று. ஒருபடகின்வழியாய் இடையிலுள்ள சேற்றையும் வாய்க்காலையும் கடந்து குன்றங்களின்

மீது வளர்ந்து செல்லும் அழகியபாதையின் வழியாய் ஊரின் மேற்புறத்தை யடைந்தோம்.

மஹாபலிபுரம், தற்கால நாகரீகத்திற்கு அறிகுறியாய் இருக்கின்ற புகைவண்டி தந்தி முதலான ஸாதனங்களில்லாமல் புராதன கிராமங்களைப் போன்றுள்ளது. இவ்விடத்திலுள்ள பழைய கல்வேலைகளைப் பார்ப்பதற்காகவே ஜனங்கள் அன்னிய தேசங்களிலிருந்துங் கூட வருகின்றதனால் அதற்கோர் மகிமை யேற்பட்டதே தவிர மற்றெவ்விதமான விசேஷங்களுமதற்குக் கிடையாது. அதற்கு ஸ்தலபுராணங்கள், பலர் பலவிதமாகக் கூறுகின்றனரேனும், அது சரித்திராசிரியரால், காஞ்சிபுரத்தை இராஜதானியாகக்கொண்டு சிறிது காலம் ஆண்டு வந்த பல்லவ அரசர்கள் காலத்தில் சிறப்புற்ற நகரமாய் இருந்திருக்கவேண்டு மென்று ஊகிக்கப்படுகின்றது. அதற்கு அத்தாட்சியாக, கண்களைக் கவரும் வண்ணம் விசித்திரபாவனையோடு சித்திரிக்கப்பட்டுள்ள சிலா ரூபங்களும் சிலைகளும் வெகு தூரத்திற்கு வெகுதூரம்இன்னம் புத்தம் புதிதாய் நேற்றுதான் செதுக்கப்பட்டவைபோல் இருக்கின்றன.

குன்றுகளைக்கடந்து ஊரினுள் நுழையுமுன் வடபுறமாகத் திரும்பினோமாயின் "கிருஷ்ண மண்டபம்" கிழக்கு நோக்கி நிற்பதைக் காண்போம். அம்மண்டபத்தினுள் கிருஷ்ண பலராமாது லீலைகள் விளக்கமாய்ச் செதுக்கப் பட்டிருக்கின்றன. இதிலுள்ள அதிசயங்களைப் பார்த்து இன்னும்சிறிது வடக்கேசெல்வோமாயின் தண்ணீரில்லாமல் பெரிய படிக்கட்டுகளுடன் ஓர் அகன்ற பள்ளம் தென்படும். இப்பள்ளத்தையொட்டியுள்ள பெரியதோர் பாறையின் கீழ்ப் பக்கத்தில் செதுக்கியுள்ள சித்திர வேலைகளைக் கண்டுகளிக்க பதினாயிரம் கண்கள் தான் வேண்டும்! இச்சித்திரங்களுக்கு "அர்ஜுனன் தபஸ்" என்று பெயர். பாறையின் இடது பார்சத்தில் மத்திய பாகத்திற்குச் சற்று மேலே அர்ஜுனன் தவஞ்செய்யும் நிலையில் நிற்பதும் அவனுக்குப் பரமசிவன் தம் கணங்களுடன் காட்சியளிப்பதும், மற்ற ரிஷிக் கூட்டங்கள் ஆங்காங்கே யிருப்பதும், வலது பார்சத்தில், அர்ஜுனனைப் பார்த்துப் பூனை ஏளனஞ் செய்வது போல் தவஞ் செய்வதும், இந்த அர்ஜுனனது தபஸைக் கண்டு யானை முதலிய விலங்குகளும், வாத்து, கோழி முதலிய பறவைகளும் ஆநந்தப் படும் பாவனையாயிருப்பதும், கீழே நீர் நிலையி னடியிலிருந்துங்கூட நாகர்களும் வந்து வியத்தல்போல் செதுக்கியிருக்கும் சிறப்பைப் பற்றியும் சொல்லி முடியாது! நேரில் கண்டவரே யறிவர்.

இதை விட்டு இன்னுஞ் சற்று தூரஞ்சென்றால் ஒரு பாறையின் மேல் மற்றொரு பெரும் பாறை, கொஞ்சமேனு மாதாரமில்லை யெனச் சொல்லும்படியாக, மிகச் சிறிய ஆதாரின் மேல் நிற்கின்றது. இதைக் "கிருஷ்ணன் வெண்ணெய்" என அவ்வூரார் அழைக்கின்றார்கள்.

சற்று நேரம் குன்றுகளின் மீதே சென்றால் கணேசர் ஆலயமும், அதற்கப்பால் லக்ஷ்மீ—வாமன—வராஹ அவதார மண்டபங்களுமிருக்கின்றன. இவைகளை விட்டு கலங்கரை விளக்கத் (Lighthouse) திற்குச் செல்லும் பாதை வழியே சென்றால் "மஹிஷாஸுர மர்த்தனி மண்டபம்" இருக்கின்றது. இதன் வடக்குச் சுவரில் துர்க்காதேவி உக்ரத்துடன் மஹிஷாஸுரனை ஸம்ஹாரஞ் செய்வது பிரத்யக்ஷமாய் காண்பது போல் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. அம்மனது உக்ரத்திலும் அவளது திருவருள் பொழியும் முகவிலாஸத்தின் மஹிமை கண்டவர்களுக்கே தெரியவரும்!

ஊருக்கு அரை மைலில் தூரத்தில் சில அருமையான "கோவில்கள், அல்லது இரதங்கள்" இருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் சிறு கோவிலாக செதுக்கப்பட்டுள்ளன. அவைகளின் ஸ்தூபிகள் மற்ற ஊர்களிலுள்ள ஸ்தூபிகளைப் போலிராமல், தஞ்சை ப்ருஹதீச்வராலயத்தின் மத்திய சிகரம் போலுள்ளது. இவைகளை முன்னிட்டு யானை மிகப் பிரம்மாண்டமாய்ச் செதுக்கப்பட்டுள்ளது. இவைகளைப் பார்த்து நாம் முன்னிருந்த விடத்திற்கு வந்து, கிருஷ்ண மண்டபத்திற்கு நேர் கிழக்கே சுமார் அரைமைல் செல்வோமாயின் கடற்கரையில் ஓர் கோவிலைக் காணலாம். கோவிலில் நுழைவதற்கு முன் அநேக நந்திகள் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன இக் கோவிலும் மற்றவைகளைப் போல ஒரே கல்லாலாக்கப்பட்டுள்ளது.

கிழக்கு நோக்கிய மூலஸ்தானத்தில் கடலை நோக்கிய வண்ணம் சிவபெருமானும், மற்றொரு பாகத்தில் பள்ளிகொண்ட இரங்கநாதப்

(இதன் தொடர்ச்சி 451-ம் பககம்)



# ஸஸேமிரா

## SASEMIRA

(காளிதாஸ மஹாகவியின் மனோத்ருஷ்டி சக்தி விசேஷத்தைக் காட்டும் ஒரு சிறுகதை)

நன்று ஆராய்ந்து வஸ்து ஸ்திதியை யதார்த்தமாய் அறியக்கூடிய உதார ஹ்ருதயமானது மஹத்வத்துக்கு முக்ய காரணம். நேத்ராநந்தகரமான ரம்ய ரூபங்கள், சாதுர்யமான ஸங்கீதாதிகள் மனோஹரமான இதர வஸ்துக்கள் விஷயத்திலும் அன்யாத்ருசமான ஸ்வாரஸ்யத்தை அறியக்கூடியவன் மஹானே. ஒருவன், தனக்கேற்பட்ட கலை அல்லது தொழிலின் முறைமையை நன்குணர்ந்தவனாய் அதில் மிகப் பயிற்சியடைந்து ப்ரஸித்தி பெறலாம். அதனாலேயே அவனுக்கு நிஜமான மஹி

(450-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமானும் அமர்ந்திருக்கின்றனர். இக்கோவிலின் கீழ்ப்பாகம் கடலினலைகளால் மோதப்பட்டு கடலில் அமிழ்ந்து கிடக்கின்றது. இந்நகரம் ஒரு காலத்தில் பெரியதாய் மேன்மையடைந்திருந்து எக்காரணம்பற்றியோ, கடலிலாழ்ந்தோ, அல்லது மணல் மேடிட்டோ தற்கால ஸ்திதிக்கு வந்துவிட்டிருப்பதை நாம் குறிக்காமலே பார்ப்பவர்கள் அறிந்து கொள்ளலாம்.

இவைகளை யெல்லாம் பார்த்து, அளவிலா ஆநந்தங்கொண்டு, நாங்களெல்லாரும் பக்ஷிதீர்த்தமடைந்தோம். பக்ஷிதீர்த்தத்திலுள்ள சங்கதீர்த்தமென்னும் பொய்கையில் ஸ்நாநஞ் செய்து மலைமேலுள்ள ஆலயஞ்சென்று எம்பெருமானை வணங்கி, பக்ஷிதரிசனமுஞ் செய்து கீழிறங்கினோம். இங்கு இரண்டு நாள் தங்கி, ஊரிலுள்ள ஆலயங்கள், சிலைகள் முதலியவற்றின் வேலைத்திறத்தைக் கண்டு வியந்தவர்களாய், குதூகலத்துடன் ஊர்திரும்பினோம்.

தம் தம் ஊர்களிலேயும், ஊர்களுக்கருகிலேயும் அநேகம் புராதனச் சின்னங்களிருந்தபோதிலும், புருஷனைக் கைவிட்டு அரசனை காமிய அரிவையேபோல் புறநாடுகளுக்கு, அந்நாடுகளின் சரித்திரத்தையும், பண்டைக்காலச் சிற்பங்களையும், சித்திரங்களையும் வியக்கச் செல்லும் சிலர், இனியேனும் மஹாபலிபுரம் போன்ற புராதன ஸ்தலங்களுக்குச் செல்லுவாரென்பது எமது கோரிக்கை.

மை உண்டாகாது. இப்பிரக்ருதி மண்டலத்திலுள்ள வஸ்து வ்யவஹாரங்களில், ஸாதாரணமாய் புலப்படாத தத்வரஹஸ்யத்தை அறியக்கூடிய உள்ளாராய்ச்சி(Insight)யுள்ளவன்தான் மஹா புருஷர்களிலொருவனென்று எக்காலத்திலும், எவராலும் கொண்டாடத் தகுந்தவனாவன்.

இப்பேர்க்கொத்த மாஹாத்மியம் எங்கும் சிறப்புற்ற காளிதாஸ மஹாகவியிடத்திலிருந்ததற்கு அவருடைய சரித்திரத்திலும், கவிதையிலும் அனேக நிதர்சனங்க ளிருக்கின்றன. அவைகளுள் கொஞ்சம் அபூர்வமானதும் அவருடைய ஸார க்ராஹக சக்தியை நன்குணர்த்தகூடியதுமான ஓர் ஐதிஹக் கதையுண்டு.

முன்னொருகாலத்தில், தார்தேசத்தில் மஹா ப்ரஸித்திபெற்ற 'போஜன்' என்ற மஹாராஜா ஒருவர் இருந்தார். ஸ்வயம் கல்வியில் தேர்ந்தவரும், எல்லா வித்யைகளையும் பரிபாலிப்பவராயு மிருந்தார். அனேக வித்வான்களும் கலா நிபுணர்களும் அவர் ஸபைக்குப்போய், தங்கள் தங்கள் ஞானங்களை ப்ரகடனம்பண்ணி யதோசிதமான ஸம்மானங்களைப் பெறுவதுண்டு. ஒரு ஸமயம் சித்திரம் எழுதுவதில் மிகக் கீர்த்தியடைந்த சித்திரலேககன் ஒருவன் ராஜஸபைக்கு வரும்படி நேர்ந்தது. இக்காலங்களில் ஸர்வஸம்மதமாய் சித்திரக்காரர்களில் ச்ரேஷ்டர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட ரவிவர்மா, மேற்கு தேசத்தினராகிய ராபேல், (Raphel) ரேயினெல்ட்ஸ் (Sir Joshna Reynolds) முதலானவர்களைக் காட்டிலும் அவன் சித்திரமெழுதும் கலையில் விசேஷ பாண்டித்ய முள்ளவன். ஒருவ்யக்தியின் சில அடையாளங்களைக்கொண்டே, உருவம்முழுவதையும் யதாவஸ்திதமாய் வரைந்து அமைக்கக்கூடிய விசேஷசக்தி அவனிடமிருந்தது. இவனுடைய ஸாமர்த்தியத்தை பரிசோதிக்கக் கருதி, போஜராஜாவானவர் ஓர் சிகா பந்தத்தை (Lock of hair)க்கொடுத்து அக்கூந்தலுக்குரிய உருவம் முதலியதை சித்திரம் வரையும்படி ஆக்ஞாபித்தார். அந்த உத்திரவை யனுஸரித்து சித்திரலேககனும் தன் ஸாமர்த்தியத்தை பூராவும் இந்த ஸமயம் காண்பிக்கவேணுமென்றகருத்துடன் அதிலேயே மனஞ் தச் செலுத்தினவனாய் தன் ஞானியன்றபட்டும் வெகு நாள் வேலைசெய்து இராணியின் படத்தை எழுதி முடித்தான். அந்தச் சித்திரமானது பார்த்தவர்கள் மனதைக்

கவரக்கூடிய அழகுள்ளதாயிருந்ததுடன் இராணியின் ரூபாதிசயத்தை, தத்ரூபம் எல்லா அம்சங்களிலும் ஒற்றதாயிருந்தது. திடீரென்று பார்ப்பவர்களுக்கு இராஜாத்திதான் உயிருடன் நிற்கிறாளோ என்று தோன்றும்படியிருந்தது. படம் வரைந்து முடிந்ததும் சித்திரக்காரன் அதை உற்றுப்பார்க்கவே, படத்திலுள்ள உருவத்தின் குறுகிய இடைப்ரதேசத்தில் அதிஸூக்ஷ்மமான ஒரு புள்ளி தென்பட்டது. அவன் அதை அழிக்க எவ்வளவு தடவை முயன்றும் பயன் படாமல், அப்புள்ளி அங்கேயே காணப்பட்டது. சித்திரக்காரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. என்ன செய்வது என்று ஏங்கினான். தீராத்துயரம் முகத்தில் தோன்றியது. ப்ரமை பிடித்தவன் போல் ஆலோசனையில் ஆழ்ந்து, தேகம் வியர்க்க சித்திரக் குச்சி(Brush)யை வர்ணத்தில் தோய்த்து கையில் பிடித்தபடியே விசாரத்துடன் தனிமையில் உட்கார்ந்து விட்டான். அவ்வழியே சென்ற காளிதாஸன் மஹா துக்காக்ராந்தனாயிருக்கும் சித்திரலேககனைப் பார்த்து அனுதாபப்பட்டு, மிகக் கருணையுடன் அவனை நோக்கி, 'ஏனப்பா மிக வ்யஸனமுற்றிருக்கிறாய். உனக்கு என்ன ஆபத்து நேர்ந்தது. வ்யாதி பீடையா? மனோ விசாரமா? சீக்கிரம் சொல்லு. உனக்கு வந்த சோகத்தை, என்னால் கூடுமானால் நிவர்த்தி செய்ய ஸித்தமாயிருக்கிறேன்' என்று சொல்லவே, சித்திரக்காரனும் உடனே நிமிர்ந்து பார்த்து, துக்கம் நிவர்த்தியானவன் போல் பெருமூச்சுவிட்டு, 'ஐயா, இதோ நான் எழுதியிருக்கும் படத்தைப் பாரும் இந்த இடத்தில் காணப்படும் புள்ளியை அழித்துவிடவேணுமென்று யாவச்சக்யம் நான் முயன்றும் அது அதே இடத்தில் புலப்படுகிறது. இதுதான் என் வ்யஸன காரணம்' என்றான். இதைக்கேட்டதும், மஹா புருஷனான காளிதாஸன் "இதென்ன விந்தை சித்திரவேலையில் இவ்வளவு நிபுணனானவன் மனப்பூர்வமாயும், வெகு நிதானம் பொறுமையுடன் வரைந்திருப்பதில் பிழை எப்படி ஏற்படக்கூடும். இதில் ஏதோ ரஹஸ்யமிருக்க வேண்டும்" என்று சற்று தியானிக்குங்கால், "ஒருக்கால், அது ஒரு மச்சமாயிருக்கலாமோ" என்கிற யோஜனை மனதில்பட மறுக்ஷணத்தில் அது 'ஒரு மறுதான்' என்கிற நிச்சயமான புத்தி உண்டாய் விட்டது. உடனே, சித்திரக்காரனை நோக்கி, 'நீ விசாரப்பட்டு அதை அழிக்க வீண்ச்ரமப்படாதே. எந்த ஆக்ருதியை சித்திர ரூபமாய் எழுதுகிறாயோ அந்த சரீரத்திலேயே அந்த ஸ்தானத்தில் ஒரு மச்சமிருக்கக்கூடும். அதைக் காட்டக்கூடிய ஒரு புள்ளி படத்தில் தெய்வீகமாக ஏற்பட்டால் அது உன்னுடைய ஸாமர்த்தியக்குறைவால் நேர்ந்ததென்று ஏன் வ்ருதாவாய் ஏங்குகிறாய்?' என்று காளிதாஸன் தைரியம் சொல்ல, அவனும் படத்தை வர்ணம் முதலானது கொடுத்து பூர்த்திசெய்ய ஆரம்பித்தான். இதுதான் கல்வி கலை இதுகளில் ஸ்வதஸ்ஸித்தமான மாஹாத்மிய முள்ளவனுக்கும் அப்யாஸத்தால் மாத்திர முண்டான ஸாமர்த்தியசாலிக்குமுள்ள பேதம். வஸ்துக்களின் வெளிப்புறமிருப்பது மாத்திரமல்லாமல் அந்தர்ப்பாவத்தையும் அறியவல்லவனே பெரியோனென்பதற்கு ஐயமில்லை.

சித்திர வேலையை யதாக்கிரமம் முடித்துக் கொண்டு, சித்திரக்காரன் அதை அரசனிடம் கொண்டுபோய் கொடுத்தவுடன் அதன் வேலைத்திறமையும், உயிருள்ளதுபோல் தோன்றும்படி அவ்வளவு மனோஜ்ஞமாய் வரைந்திருக்கும் ரூபவிசேஷத்தையும் மெச்சி, ஒவ்வொரு அங்கஸௌஷ்டவத்தை விஸ்தாரமாய் பார்க்க ஆரம்பித்தான். திடீரென்று அந்த மச்சத்தைக் கண்ணுற்றான். அடங்காத ஆச்சர்யமுண்டாகி அடுத்த க்ஷணம் தீராக் கோபமாக மாறிற்று. உடனே கண்கள் சிவந்து முகங்கடுகடுத்து, மஹா ஆவேசத்துடன் அரசன் சித்திரக்காரனை நோக்கி, "இது ராஜஸன்னிதானம், பொய் பேசினால் உயிரை இழக்கும்படி நேரிடுமென்கிற பயத்துடன் நான் கேட்பதற்குப் பதிலுரைக்க வேண்டும். இந்த மச்சமிருப்பதாக உனக்கு எப்படித் தெரிந்தது. தெய்வ உபாஸன முண்டா? மனுஷ்ய மூலமாய் அந்த ஞான மேற்பட்டதா? இல்லாவிடில் வேறு எவ்விதம் அந்தமச்சம் அவிடமிருப்பதாக நீ அறிந்தாய், ஸவிஸ்தாரமாய்ச்சொல்லு" என சித்திரக்காரனும் நடுநடுங்கி, அரசனைப் பார்த்து, "ப்ரபுவே, நான் நிரபராதி. அதுவிஷயம் எனக்கு ஒன்றும் தெரியாது. அதன் ஸூக்ஷ்மத்தை எனக்குச் சொன்னவர் தங்களுக்கு அத்யந்தம் ப்ரியரான காளிதாஸ மஹாகவியே" என்றான்.



அச்சமயம் இதைக் கேட்டுக்கொண்டிருந்த காளிதாஸனும் இதை மறுதளிக்கவில்லை. இது கேட்டு, அரசன் க்ஷணகாலம், ஒன்றும் தோன்றாமல் சிந்தாக்ராந்தனாய், ஸ்தம்பம்போலிருந்தான். பதிவ்ரதோத்தமையான தன் பத்னியிடத்தில் அவனுக்கு மிகுந்த சந்தேகம் ஜனித்தது. இந்தமாதிரி ஸந்தர்ப்பத்தில், பெரியோர்களுக்கும் புத்தி ப்ரமம் வருவது ஸஹஜம். ராமன் ஸீதையை அக்னிப்ரவேசம் பண்ணச் சொல்லவில்லையா? ஆங்கிலேய நாடகக் கவிச்ரேஷ்டரான ஷேக்ஸ்பியர் (Shakespeare) இயற்றிய ஸிம்பெலைன் (Cymbeline) நாடகத்தில் பாஸ்துமஸ் (Posthumus) என்பவர், நிஷ்காரணமாய் தன் தர்ம பத்னியை நெறியற்றவளாக நினைக்கவில்லையா? அநேக தேசசரித்திரங்களில் இதற்கு உதாஹரணங்கள் பல உள. பலவாறாக தனக்குள் தர்க்கித்து, அரசனுக்கு காளிதாஸனிடத்தில் அவநம்பிக்கை த்ருடமாக உண்டாயிற்று. அம்மச்சம் ஒருவருக்கும் தெரியாமல் பெரும் ரஹஸ்யமாயிருந்தமையால், அரசன், 'இராணியின் கூந்தலைத் தூக்கிப் பார்த்திராவிட்டால், காளிதாஸனுக்கு இது எப்படி தெரியக்கூடும். நிச்சயம், நம்மிடமிருந்து பலவித உபகாரமடைந்தும், காளிதாஸன் நமக்கு த்ரோகம் செய்தான்' என்று தீர்மானித்து, அரசன் அவன் தலையை வாங்கிவிடும்படி, வெகு கோபத்துடன் உத்திரவளித்தான். ஆனால், உதார ஸ்வபாவமுள்ள மந்திரி, காளிதாஸன் இவ்வித த்ரோகம் செய்யக்கூடியவனல்லன் என்று நினைத்து, அவன்மேல் தயைபுரிந்து, கொலையாளிகளிடமிருந்து அவனைத் தப்பிவித்து, அரசனுக்கு மாத்திரம் அவன் கொலைசெய்யப்பட்டதாகவே நம்பிக்கை உண்டாகும்படி செய்துவிட்டான்.

சில நாள் பிறகு, ராஜகுமாரன் வேட்டையாட காட்டுக்குப்போனான். ஒரு மிருகத்தைத் துரத்திக்கொண்டு, வெகுதூரம் காட்டுக்குள் போக, தன் பரிவாரங்களைவிட்டுப் பிரிந்துவிட்டான். காலமோ அதிக்ரமித்தது. ஸூர்யன் அஸ்தமிக்கும் தருணம். வெகுவிரைவாய் எங்கு பார்த்தாலும் அடர்ந்த இருட்டு கவர ஆரம்பித்தது. காட்டில் வழியோ தெரியவில்லை. மனோதைர்யம் குறைந்து, பயமானது மேன்மேலதிகரித்தது. இந்த ஸ்திதியில், தன்னை நோக்கி ஒரு புலியானது பாய்ந்துகொண்டுவருவதைக் கண்ணுற்றான். அவன் ஸவாரிசெய்யும் குதிரையோ ஓர் அடிகூட மேல் நடக்கவில்லை. நாள்முழுவதும் உணவு, விச்ராந்தி இல்லாமல் வேட்டையாடி களைப்புற்று, தானும் ஒரு பதம்கூட சலிக்க சக்தியற்றுப் போனவனுக்கு புலியைக்கண்டதும் எதேனும் கொஞ்சம் மிகுதியிருந்த ப்ரக்ஞையும் தவறிற்று. மறுபடியும் புலி மிகவும் ஸமீபத்தில் வந்துவிடவே, ராஜகுமாரன் குதிரை மீதிருந்துதாவி, வழியிலிருந்த ஒரு மரக்கிளையை பிடித்துக்கொண்டு உயர ஏறும்போது ஒரு கரடியைப் பார்த்துத்திகைத்து நின்றான். 'தலைவலி போகத் திருவலிவந்தது' போலும், கலத்திலிருந்து அடுப்பில் விழுந்தாற்போலும், 'புலியைத் தப்பிக் கரடிகையிலகப்பட்டுக்கொண்டேனே' என்று ராஜகுமாரன் நினைத்து, அனலில் காட்டிய மெழுகுபோல் உருகித் திக்கற்றவனாய், எங்கும் நிறைந்தவரும் கருணாநிதியுமான பரமாத்மாவை த்யானித்து ஓ என்று அலறிக்கதற யத்தனிக்கையில் கரடியானது ம்ருதுவாய் அவனருகில் வந்து வெகுஅன்புடன் ஹார்த்தமான உபசாரவார்த்தைகளைச் சொல்லி தன்னிடத்தில் அவனுக்கு நம்பிக்கை வரும்படி செய்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் அதன் மடியில் படுத்துறங்கினான். புலியானது கரடியைஇனியவார்த்தைகளால், ராஜகுமாரனைக் கைவிட்டு விடும்படி கேட்டுக்கொண்டது. 'மனிதன் நம்மஜாதிக்கே அத்யந்தம் விரோதி, அவனுக்குபகாரம் செய்தால் ஸமயம் பார்த்திருந்து நமக்கபகாரம் தேடுவானேயொழிய, ஒருக்காலும் நம்மிடத்தில் நிஜமான விச்வாஸம் வைக்கமாட்டான்' என்றும், இன்னும் பலவிதமாக புலி அவனைக் கீழே தள்ளிவிடும்படிக் கரடிக்கு துர்போதனை செய்தும், அது சரணமடைந்தவனையும் தன்னிருப்பிடம் வந்தவனையும் கைவிடுதல் அதர்மமென்ற நிச்சயத்துடன் சும்மா இருந்துவிட்டது. சற்று நேரத்தில் கரடியும் அயர்ந்து நித்திரை போய்விட்டது. ராஜகுமாரன் கண்விழித்து, கரடி சந்தேகமற்று குறட்டைவிட்டுத் தூங்குவதையும், தன்னைக் கொல்லவந்த புலி மரத்தின் கீழ் ஆவலுடன் காத்துக்கொண்டிருப்பதையும் கண்டான். புலி, ராஜகுமாரனிடத்தில் தன் நயவஞ்சகத்தைக் காட்டி ஏமாற்ற ஆரம்பித்தது. அதன் கபடவலையி

லகப்பட்ட ராஜகுமாரனும், காடியைத் தள்ளி விட்டால் தான் தப்பித்துக் கொள்ளலாமென்கிற துராசையுடன், தர்மசிந்தை யுடையதும், தன்னை ஆபத்காலத்தில் ஸ்நேஹ பாவத்துடன் பாதுகாத்து ஸம்ரக்ஷித்ததுமான காடியைத் தள்ளிவிட யத்தனித்தான். அவன் அப்படிச் செய்யு முன்னமேயே காடி விழித்துக்கொண்டு அவனுடைய பாவத்தை நன்குணர்ந்து, அவனுடைய நன்றி யறிவின்மையையும், துரோக சிந்தனையையுங்கண்டு, வெகு கோபங்கொண்டு, அவன் நாக்கை இழுத்து, அதில் ஸஸேமிரா என்று நாலக்ஷரங்களை எழுதவே, அவன் உடனே பேசும் சக்தியற்றவனாய், எவ்விதக் கேள்விகளுக்கும் ஸஸேமிரா என்று மட்டும் பதில் சொல்லத் தலைப்பட்டான். நன்றி யறிவின்மைக்கு இத் தண்டனையும் போதாது! அதுவும், உன்னதமான ராஜ குலத்தில் பிறந்து, தன் ஸுகத்தைப் பாராமல் ப்ரஜைகளுடைய க்ஷேமத்திற்குமனப்பூர்வமாய் உதவி புரியும்படியான ஸ்திதியிலு மிருக்கவேண்டியவன் இவ்வளவு ஹேயமான மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்பது தெய்வஸம்மதமாகுமா? நன்றி மறந்து விச்வாஸ த்ரோகமாகிற மஹாபாதகத்திற்கு ப்ராயச்சித்தமே கிடையாது.

இது இப்படி நிற்க, மறு நாட் காலையில், வேட்டைக்காரர்கள் யுவராஜாவைத் தேடிக்கொண்டு அவனிருக்குமிடம் வரவே, அவன் ஊமையாய் வாக்கற்று, பயித்தியம் பிடித்தவன் போலிருப்பதைக்கண்டு தீராத்துயரமடைந்தார்கள். அவனுக்கு நேர்ந்த விபத்தின் வரலாற்றைச் சொல்ல புலியாவது காடியாவது அப்போது அவிடமில்லை. 'ஸஸேமிரா' என்பதுதான் அவன் சொல்லக்கூடிய தாயிருந்தது. உடனே அவர்கள் அவனை நகரத்திற்கழைத்துப் போனார்கள். தனது குமாரனுடைய ஸ்திதியைப் பார்த்து ஸஹியாமல், அரசன் அழுது புரண்டு துக்க ஸாகரத்தில் மூழ்கினான். ப்ரஜைகளும் அநுதபித்தார்கள். ஆனால் அவனை சோகஸாகரத்திலிருந்து கைதூக்கி, கரைசேர்த்து ரக்ஷிக்கக்கூடியவன் அவர்களிலேற்படவில்லை. இப்படியே சிலகாலஞ் சென்றது. ராஜா விடத்தில் அதீவ பக்திமானும், மஹா புத்திசாலியுமான மந்திரி இதற்கு பரிஹாரம் தேடுவதற்காக ஆலோசிக்குங்கால், 'யாராவது இதை நிவர்த்தி செய்யக்கூடுமானால், அது காளிதாஸனாகவே இருக்கவேண்டும்' என்ற எண்ணம் அவன் மனதிற்பட்டது. உடனே காளிதாஸனைத் தேடிப் பிடித்து பரிஹாரம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்து முடித்துக்கொண்டு, அரசனிடம் போய், வடதேசத்திலிருந்து யாரோ மாந்திரீகம் தெரிந்த ஒரு கோஷா ஸ்திரீ வந்திருப்பதாயும், ராஜ குமாரனுக்கு நேர்ந்த ஆபத்தை அவள் நிவர்த்திக்கக் கூடுமென்றும் சொன்னான். உடனே ஒரு பெரிய அறையில் திரையொன்று போடப்பட்டு, பின்பக்கத்தில் அந்த ஸ்திரீ வேஷதாரனும் முன்பக்கம் ராஜா, ராஜ குமாரனும் மற்றவர்களும் நின்றார்கள். திரை பின்பக்கமிருந்து அந்த ஸ்திரீ, ராஜகுமாரனை உத்தேசித்து 'எவ்விடத்தில், யாது காரணத்தால் இந்த ஆபத்து நேரிட்டது' என, வழக்கம்போல் ஸஸேமிரா என்கிற பதில் பிறந்தது. கொஞ்சகாலம் சும்மா விருந்து, காளிதாஸன், மறை பொருளான ஸஸேமிராவின், முதல் அக்ஷரமான ஸ இல் ஆரம்பிக்கும் ஒரு * ச்லோகத்தைச் சொன்னான். அதன் கருத்தாவது: (ஸத்பாவத்தை அடைந்தவர்களை வஞ்சிப்பதில் என்ன ஸாமர்த்திய மிருக்கிறது? மடியிலேறி படுத்துறங்குவோனைக் கொல்வதில் என்ன புருஷத்தன்மை?) இந்த ச்லோகத்தைக் கேட்டதும் ராஜ குமாரனுக்கு தான் செய்த துஷ்டக்ருதி ஞாபகம் வந்து, பச்சாத்தாபமுண்டாகவே, கொஞ்சம் பாபம் தொலைந்து, ஸ அக்ஷரத்தை விட்டு, மற்ற ஸேமிரா என்னும் எழுத்துகளை மாத்திரம் சொல்ல ஆரம்பித்தான். திரை பின்னிருந்து, ஸே இல் ஆரம்பிக்கும் இன்னொரு ச்லோகம் சொல்லப்பட்டது. † (ஸமுத்திரத்தில் ஸேது ஏற்பட்டிருக்கும் ஸ்தலத்தையும், கங்கைநதி ஸாகரத்தில் ஸங்கமமாகும் ப்ரதேசத்தையும் கண்டு தர்சித்தால் ப்ரஹ்மஹத்தி தோஷம் தீரக்கூடும். ஆனால் மித்ர த்ரோஹ மஹாபாபம் விலகாது.) இதுகேட்டு ராஜ குமாரன் 'மிரா' என்று கத்தினான். பிறகு மி-ல் தொடங்கும் ச்லோகத்தை ‡ காளிதாஸன் சொல்ல, (மித்ர த்ரோகி, நன்றி மறந்தவன், விச்வாஸத்தைக் கெடுப்பவன் இம்மூவரு பேர்களும் ஸூர்யன் சந்திர னுள்ளவரையில் நரகத்தை யடைவார்கள்.) மி விட்டு ரா மட்டும் மிருந்தது. உடனே மாந்த்ரிக ஸ்திரீ வேஷதாரியான காளிதாஸன், அரசனை நோக்கி கடைசியாக ச்லோகத்தைச் § சொன்னான். (ராஜனே நீர் உம்முடைய குமாரனுக்கு க்ஷேமமுண்டாக வேண்டுமென்று இச்சித்தால், எல்லா வர்ணத்தாருக்கும் பூஜ்யர்களான ப்ராம்மணர்களுக்கு தானங்கள் செய்யும்.) அதுகேட்டு அரசன் அப்படிச்செய்யவே, அத்புதம் (Miracle) உண்டானதுபோல், ராஜகுமாரனுடைய அரிஷ்டம் முற்றிலும் விலகி அவன் தன்னுடைய வ்ருத்தாந்தங்களையெல்லாம் ஸவிஸ்தாரமாய் அரசனிடம் தெரிவித்தான். அது கேட்டு, பூபாலன் மாந்திரீக ஸ்திரீயைப் பார்த்து, 'இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியவந்தது' என, காளிதாஸனும் 'தர்மப்ரபுவே, ராஜாத்தியின் மச்சம் எப்படி எனக்குத் தெரிந்ததோ அப்படித்தான் இந்த வ்ருத்தாந்தமும்' என்றுரை கூறினான். உடனே அரசன் தனக்குண்டான துக்கத்தைத் தீர்த்து ரக்ஷித்தவன் காளிதாஸனே என்று கண்டுகொண்டு ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவனாய் தான் அந்யாயமாய் அவனை சங்கித்து அவஸரப்பட்டு கடுந்தண்டனை விதித்ததற்காக வெட்கி பச்சாத்தாபப்பட்டான். காளிதாஸனுடைய ஆழ்ந்த சூழ்ச்சியையும் ஒப்பற்ற மனோ கற்பனாசக்தியையும் மேன்மேல்புகழ்ந்து பேசி முன்விட அனேகமடங்கதிகமாக அவனிடத்தில் கௌரவபுத்தியும் ஸ்நேஹபாவத்தையும் பாராட்டலானான்.

ஏ.வரதாச்சாரி, பி.ஏ.,எல்.டி.

* ஸத்பாவம் ப்ரதிபந்நாநாம் வஞ்சநே கா விதக்ததா
அங்கமாருஹ்ய ஸுப்தாநாம் ஹநநே கிந்நுபௌருஷம்

† ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய கங்காஸாகரஸங்கமம்
ப்ரஹ்மஹத்யா ப்ரமுச்யேத மித்ர த்ரோஹோ ந முச்யதே

‡ மித்ரத்ரோஹீ க்ருதக்னஸ்ச யஸ்துவிச்வாஸ காதக:
த்ரயஸ்தே நரகம்யாந்தி யாவச்சந்த்ர திவாகரம்

§ ராஜன், போதவ புத்ரஸ்ய யதி கல்யாணமிச்சதி
தானம் தேஹி த்விஜாதிப்யோ வர்ணாநாம் ப்ராஹ்மணோ குரு:

**கங்கை ஜலத்தின் அபார குணம்.**—கங்காநதி ஹிமயமலையில் உற்பத்தியாகி அப்பருவதத்திலுள்ள பலவித விருக்ஷ மூலிகைகளின் வழியாகவும், பலவித தாதுப்பொருள்களின் வழியாகவும் வருவதால், ஸகல வியாதிகளையும் சொஸ்தம்பண்ணக்கூடிய அபார சக்தி கங்கா தீர்த்தத்துக்கு உண்டு.





# சுகாதார விதிகள்

## THE RULES OF HYGIENE

(377—ம் பக்கத் தொடர்ச்சி)

ஜன்னல்கள் மூடப் பட்டிருந்தால் அவைகளை நன்றாகத் திறந்துவிட்டு சுத்த ஆகாயம் உள்ளேபரவும்படி செய்யவேண்டும். அப்புறம் அடுப்புக்கரிகளைச் சிறு துண்டங்களாக்கி அசுத்த வாயுக்கள் உண்டாவதாகச் சந்தேகிக்கப்படும் இடங்களில் போட்டு வைத்தால், அக்கரி அவ்விஷ வாயுக்களை ஆகர்ஷித்து கிரஹித்துக் கொள்ளும். ஆகையால் ஆகாயம் நன்றாய் சுத்தமாகும் வரையில் பழையகரித்துண்டுகளை நீக்கி புதுக்கரித்துண்டுகளைப் போடவேண்டும். அடுப்புக்கரி நல்ல விஷவாயு சுத்தகாரியாகையால் வியாதிக்காரர்கள் படுத்திருக்கும் அறைகளிலும் அடுப்புக் கரியைப் போட்டுவைத்தால், வியாதிக்காரனுக்கும் அவரைப் பார்க்க வருபவர்களுக்கும் நன்மையைச் செய்யும். இப்படியே நெருப்பை எரியவிட்டு, அதில் உப்பை அல்லது கந்தகத்தைப் பொடிசெய்து, புகையை வீடெங்கும் பரவச் செய்வதும் விஷவாயுக்களை நீக்கும்.

### ஜலாசயங்கள்

நமக்கு ஜலம், ஆறுகள், குளங்கள், கிணறுகள், ஊற்றுகள் ஆகிய இவைகளிலிருந்தே முக்கியமாய்க் கிடைக்கிறது. ஆகாயத்திலிருந்து மழையாக விழும் ஜலம் சுத்தமானதானாலும் விழும் இடங்களிலுள்ள அசுத்தங்களையும் கரைத்துக்கொண்டு செல்வதினால், நதி ஜலங்கள் அசுத்தப்படுகின்றன. நதி ஜலங்களை எப்பொழுதும் தேற்றி, வெந்நீராகக் கொதிக்க வைத்து, ஆற்றிச் சாப்பிடுவதே சிலாக்கியம்.

குளங்களின் நீர் சுத்தமாயிருக்கக் கூடியதானாலும் ஜனங்கள் மூடத்தனத்தால் அதைச் சுத்தமாயிருக்க விடுவதில்லை. குளக்கரைகளிலும், வாரிக்கால்களிலும், மல ஜல விஸர்ஜனம் செய்து, குளங்களிலேயே கைகால் கழுவுகிறார்கள். மறுபடி மழை பெய்யுங்காலங்களில், அந்த அசுத்தங்களெல்லாம் கரைந்து குளத்திற்குள்ளேயே வந்து விழுகின்றன. அதனால் ஜலம் அசுத்தப்படுகிறது. தவிரவும் பல்தேய்த்து வாய்கொப்பளித்தல், அழுக்குத்

துணி துவைத்தல் முதலிய பலவகையான அசுத்த ஹேதுக்களைத் தண்ணீரில் கலக்கும்படி செய்கிறார்கள். சில பட்டிக்காடுகளில் ஆடுமாடுகளைக்கூடக் கொண்டுவந்து குளிப்பாட்டுகிறார்கள். ஆகையால் கிராமாந்திரங்களிலும் மற்ற இடங்களிலுமுள்ள குளங்களையும் இவ்வித ஆபாஸங்களுக்கிட மன்னியில் காப்பாற்றி வைக்கவேண்டும். கோடைகாலத்தில் சுத்தமாய் வற்றிப்போகும் குளங்களின் ஜலம், தேக ஆரோக்கியத்திற் கேற்றதன்று. அவ்வித குளங்களைத் தூர்த்துவிட்டு, ஆழமான குளங்களை வெட்டிக்கொள்ளவேண்டும். ஆனால் எவ்வளவு ஜாக்கிரதையா யிருந்தாலும் குளத்தின்நீரும் ஆற்றின் நீரும் பானத்திற்கு மத்திமந்தான். ஆனால் ஆற்றுப்புறங்களிலும் குளங்களுக்குப் பக்கங்களிலும் ஊற்றுகள் வெட்டி, அவற்றில் ஊறிவரும் ஜலம் சிலாக்கியமானது.

கிணறுகளின் ஜலம் ஊறிவருவதால், ஊற்றுக்கண்களிலுண்டாகும் மணல் அதைச் சுத்தமாக்கி விடுகிறது. அதனால்தான் கிணற்று நீர் சரீரத்திற்கு ஹிதமென்று சொல்லப்படுகிறது. ஆதலால் கிணற்றுக்கு வெளிப்புறத்திலுள்ள அசுத்தங்கள் தண்ணீருக்குள்சேராமலும் சுவருமலுமிருக்கும்படி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்காகவே கிணற்றைச்சுற்றி பத்தடிசதுரத்திற்கு செங்கற்கட்டடம் வெளிப்புறம் சரிவாயிருக்கும்படி கட்டவேண்டும். ஏனெனில், ஜலம் கொண்டுபோகவரும் ஜனங்களின் காலடிகளிலுள்ள அசுத்தங்கள் அழுக்குகள், ஜலத்தால் கரைக்கப்பட்டு, வெளிப்புறம் சரிவில்லாமலிருந்தால், கிணற்றுக்குள்போய் விழுந்து ஜலத்தை அசுத்தப்படுத்திவிடும். செங்கற் கட்டடத்தின்மேல் ஸெமெண்ட் போட்டுவிடுவது மிகவும் நல்லது. கிணறுகளை மறைக்கும்படி மரங்களை வைத்துக் கிணற்றின் கரைகளில் பயிர் செய்யலாகாது. ஏனெனில், இலைகள் உதிர்ந்து, அழுகி, ஜலத்தை அசுத்தமாக்கும்.

## தொத்து வியாதிகள்

மேற்கூறிய பல ஜாக்கிரதைகளையும், தொத்து வியாதிகள் ஊர்களில் பரவி வரும்பொழுது இன்னும் அதிகமாய் கவனிக்கத் தக்கவை. பலவிதமான காய்ச்சல்கள், காலரா முதலிய வியாதிகளெல்லாம் தொத்து வியாதிகள் அல்லது ஒட்டுவாரொட்டி வியாதிகள் என்று சொல்லப்படுகின்றன. ஏனெனில், ஒருவரிடமிருந்து மற்றொருவரிடத்திற்கு அவைகள் ஸுலபமாய்த் தொத்துகின்றன. இந்த இரண்டு வியாதிகளாலும், இன்னும் பயங்கரமான அம்மையென்ற வியாதியாலும், இந்தியாவில் வருஷந்தோறும் இறக்கும் ஜனங்கள் அபரிமிதம். இவ்விஷயத்தில் ஜனங்கள் ஸ்வல்பம் தெரிந்துகொண்டு, வேண்டிய முன் ஜாக்கிரதைகள் எடுத்துக்கொள்ளுவார்களானால், இத்துணை துக்க ஸம்பவங்கள் வருஷந்தோறும் நேருவதைத் தடுத்துவிடலாம்.

காய்ச்சல்கள், விசேஷமாய் அசுத்தமான ஜலத்தினாலேயே உண்டாகிற தென்கிறார்கள். இதைத்தவிர வேறு காரணங்களு முண்டு. குளிர்ந்த காற்றில் படுத்துக் கொள்ளுதல், பனியில் நனைதல், ஸுகஜீரணத்திற்கேற்ற தல்லாத ஆஹாரங்களை மிகுதியும் சாப்பிடுதல் முதலிய காரணங்களால் காயலா உண்டாகலாம்.

மழைபெய்து ஓய்ந்தபிறகு சூரியன் அதிக வெப்பத்துடன் பிரகாசிக்கும்பொழுது, ஈரங்கள் உலருங்காலங்களில் ஒருவித இலேசான விஷவஸ்து உண்டாகிறது. இது ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்து தண்ணீருக்கு ஸமீபம் வரும்பொழுது அதனால் ஆகர்ஷிக்கப்பட்டு, அதில் கரைந்து விடுகிறது. அவ்வித விஷத்தன்மை பொருந்திய நீரைச் சாப்பிடுவதனால் ஜ்வரங்கள் உண்டாகின்றன. ஆகையால் இவ்வித ஸமயங்களில், குடி தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைப்பதால், இவ்விஷமானது பட்டுப்போய், செயலற்றுவிடுகிறது. அதனால் எப்பொழுதும், முக்கியமாய், காயலா பரவுதலாயிருக்குங் காலங்களிலும், எந்த ஜலத்தையும் கொதிக்கவைத்துப் பிறகு ஆற்றிச் சாப்பிடவேண்டும். இது ஒரு முக்யமான முன் ஜாக்கிரதை.

இந்த விஷவஸ்துவிற்குப் பூரணமான அதிகாரம் இராவேளைகளில்தான். அவ்வேளைகளிலேயே நம்முடைய சரீரமும் களைப்படைந்து பலமற்றிருக்கிறது. ஆகையால் காய்ச்சல் பரவுதலா யிருக்குங் காலங்களில் சரீரத்தைப் பனிக்கும், இரவின் குளிர் காற்றிற்கும் வெளியாக்கக் கூடாது. ஆத்ம சுகாதாரத்தில் நாம் சொல்லியிருக்கிற பிரகாரம் இக்காலங்களில் ஒரு பிளானல் மேலே தரித்திருப்பது மிகவும் சிலாக்கியம். அதிலும் முக்கியமாய், வயிற்றின் உஷ்ணத்தைப் பாதுகாக்க வேண்டியதவசியம். தரையில் படுக்காமல் கட்டில்களில் இராக்காலங்களில் படுத்துக்கொள்ளுவது நலம். மேல்மெத்தைகளில் இராத்திரி வேளைகளில் படுத்துறங்குவது மிகவும் நல்லது. இந்த விஷமானது விசேஷமாய் தரையை யொட்டித்தான் ஸஞ்சரிக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

இவைகளைத் தவிர, சரீரத்திற்குப் பலஹீனத்தைக் கொடுக்கக்கூடிய காரணங்களெல்லாம் ஜ்வரத்திற்குங் காரணமாகும். ஆகையால் இவ்வித ஸமயங்களில் காலாகாலங்களில் போஜனம், தேகசுத்தி, பழுத்தும் பழுக்காததாயிருக்கிற பழங்கள் முதலிய அபத்தியமான பொருள்களை உட்கொள்ளாதிருத்தல் முதலிய முன் ஜாக்கிரதைகளை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

காய்ச்சல் ஸ்வஸ்தமானவுடன் அடிக்கடி பச்சை ஜலத்தில் ஸ்நாநஞ்செய்வது மறுபடி காய்ச்சல் திரும்புவதற் கிடமாகும்.

நம்முடைய தேசத்தில் காய்ச்சல் வந்தவுடன் இலங்கணம் போடுதல் என்ற ஒரு துரப்பியாஸம் தொன்றுதொட்டு, வழக்கத்திலிருந்து வருகிறது. வாயு ஸம்பந்தத்தாலும் அதன் மூலமாய் வந்த அஜீரணத்தாலும் வந்த காங்கையானால், இலங்கணத்தால் உடனே ஸ்வஸ்தமாகிவிடும். மற்றைய காரணங்களாலுண்டான ஜ்வரமாயின், ஜ்வரம் அதிகப்படும். ஜ்வரம் வந்திருக்கும் காலங்களில் ஸுகஜீரண முண்டாகும்படியான பால், காபி, மெல்லின்ஸ் ஆஹாரம் முதலியவைகளை உட்கொள்ளுவதே மருந்துக்கு ஸமானமாகும். வரவர நம்முடைய வழக்கமான ஆஹாரத்திற்கு பின்பு கொண்டுவரலாம்.

காய்ச்சலுக்கு சிலாக்கியமான மருந்து க்வினைன் (Quinine) என்ற வெள்ளைப்பொடி மருந்துதான். இது போஸ்டாபீஸ்களில் மூன்றுபைஸாவிற்கு ஒரு பொட்டணம் வீதம் ஜனஸௌகர்யத்திற்காக விற்கப்படுகிறது.

## காலரா

இதுவும் தொத்து வியாதிகளி லொன்றும். இதிற் பல பேதங்களிருப்பதாகச் சொல்லப்பட்டபோதிலும் எல்லாம் ஒருவிதந்தான் காரியம்செய்கையில். பேதி கண்டவர்களின் வாயிலெடுப்புகளிலும் வயிற்றுப் போக்குகளிலுமிருந்து உண்டாகின்ற விஷமே பேதிக்குக் காரணமாயிருக்கிறது. இந்த வியாதியானது விசேஷமாய் ஆபாஸமும் அசுத்தமும் நிறைந்த கிராமாந்திரங்களிலேயே பரவுகிறது. ஸாதாரணமாய் ஜனக்கும்பல் விசேஷமாய்க் கூடுமிடங்களிலும் இந்த வியாதி உண்டாகிறது. அதற்குக் காரணம் ஸ்வல்ப இடத்திற்குள் அதிக ஜனங்கள் அடைந்து, அவர்களுடைய அசுத்தக் கழிவுகளால், ஆகாயத்தை அசுத்தம் செய்வதேயாகும்.

ஆதலால் நாமிருக்குமிடங்களிலுள்ள ஆபாஸங்களையும் அசுத்தங்களையும் அப்பொழுதைக்கப்பொழுது வெளிப்படுத்திக்கொண்டிருப்போமானால், அநேகமாய் இந்த வியாதி வாராமலே தடுத்து விடலாம். சாக்கடைகளை நன்றாய்ச் சுத்தம் செய்து, நாற்றமென்பதே அணுகவொட்டாமல் இச்சமயங்களில் செய்ய வேண்டும். தேங்கல் தண்ணீர் இருக்குமிடங்களில் அத்தண்ணீரை வெளிப்படுத்தவேண்டும். சரீரத்தை உஷ்ணங்குறையாமல் வைத்துக்கொள்வது நிரம்ப அவசியம். அதிலும் வயிற்றின் உஷ்ணத்தை மிகுந்த ஜாக்கிரதையுடன் பாதுகாக்க வேண்டும். பேதிகாலங்களில் மிகவும் பத்தியமான ஆஹாரங்களையே சாப்பிடவேண்டும். பழையது, பழுக்காத அல்லது முற்றலான காய்கள், அதிபக்குவமான பழங்கள், ஸுகஜீரணத்திற் கேற்றதல்லாத ஆஹார வகைகள் முதலியவைகளை விலக்கவேண்டும். பானம் செய்யும் நீரைச் சுத்தம் செய்வதில் நிரம்ப ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டும். தூக்கம் விழித்தல், பனி குளிர் இவைகளில் நனைதல் முதலிய சரீரத்தைப் பலவீனப்படுத்தக்கூடிய காரியங்களைச் செய்யாதிருக்கவேண்டும்.

பேதி ஊருக்குள் பரவுதலாயிருக்குங் காலங்களில், பேதிக்கு ஆஸ்பதமாயிருக்கிற விஷத்தை ஸாதாரண வாயுவிலிருந்து விலக்க உபாயந் தேடவேண்டும். இதற்கு கிராமம் அல்லது பட்டணத்தின் முக்கியமான பாகங்களில் நெருப்பை மூட்டி, அந்த ஜ்வாலையில் தார் அல்லது கந்தகம் அல்லது இரண்டையும்பெய்து புகைக்கவேண்டும். பேதிக்கழிவுகளால் அசுத்தப்பட்ட துணிகள், பாய்கள் முதலியவைகளை ஊரி

லுள்ள குளங்களில் கசக்கவிடக்கூடாது. அவைகளை நன்றாய் நெருப்பிட்டு எரித்தாலொழிய, அவைகளிலிருந்தெழும் விஷம் தீங்கை விளைவிக்காமல் போகாது. பேதிகண்டவுடனே மருந்து சாப்பிடுவது குணத்தைக் கொடுக்கும் மூன்று நான்கு தடவைக்கப்புறம் மருந்து சாப்பிடுவதால் விசேஷமாய் நன்மையுண்டாவதில்லை. சாதாரணமாய், ஊரில் பேதிபரவியிருக்குங் காலத்தில், மலக்கழிவு எப்பொழுதையுங் காட்டிலும் சற்று இளகலாயிருக்குமானால், அது மருந்து சாப்பிடவேண்டுமென்பதற்கடையாளமென்று உணரவேண்டும்.

## பெரிய அம்மை

அம்மையென்பது பயங்கரமான தொத்து வியாதிகளிலொன்றுதான். இவ்வியாதி அபரிமிதமான ஜனங்களைக் கொல்லுவதல்லாமலும் கண் முதலிய ஸூக்ஷ்மமான அங்கங்களையும் பின்னப்படுத்தி உதவாமல் செய்துபோடுகிறது. மேலும் முகத்திலும் மற்றும் அவை தோன்றுமிடங்களிலும் பள்ளங்களையுண்டாக்கி, அவலட்சணப்படுத்துகிறது. இதன் குரூரம் உஷ்ணதேசங்களில் மிகுதி. இது வியாதிதானென்றும் தேவதையின் கோபமில்லையென்றும் ஸந்தேஹத்திற்கிடமில்லாமல் ஆங்கில, அமெரிக்க, ஜர்மானிய வைத்திய சாஸ்திரிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆயுர்வேத வைத்திய சாஸ்திரங்களிலும் அம்மையின் கொடுமையைத் தணிப்பதற்கு மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் நம்மவர்களில் முன்னோர்களும் இதை ஒரு தேவதையின் சேஷ்டையென்று கருதினவர்களில்லையென்பது விளங்கும். இந்தத் தப்பெண்ணம் எப்படியோ ஜனங்களின் மனதிற் குடிகொண்டு, மிகுந்த தொந்திரவையும் ஜனநாசத்தையும் உண்டுபண்ணிக்கொண்டு வருகிறது. இந்தத் தப்பு அபிப்பிராயத்தை ஜனங்களுக்கில்லாமல் தடுக்கவேண்டியது படிப்பாளிகளான ஒவ்வொருவருடையவும் கடமையாகும். அப்படிச் செய்வதனால் அவர்கள் உலகத்திற்குச் செய்யும் நன்றி மிகவும் அதிகம்.

மற்ற தொத்து வியாதிகளைப் போலவே, இதையும் தகுந்த முன்ஜாக்கிரதைகளால் தடுத்துவிடலாம். அதற்கு வழிதான் அம்மை வைத்தல் அல்லது அம்மைகுத்துதல் என்று பெயர். மனிதர்களுக்கு அம்மை போட்டியிருக்கும் காலங்களில், அம்மைப்பாலை யெடுத்து, வியாதியற்ற பசுங்கன்றுகளின் மடிகளில் குத்திவைப்பதனால் கொப்புளங்கள் உண்டாகின்றன. பிறகு அக்கொப்புளங்களின் பாலையெடுத்து குப்பிகளில் அடைத்து மனிதசரீரத்தில், இரத்தத்தோடு கலக்கும்படி வைப்பதால், அந்தப்பால் இரத்தத்தோடு கலந்து ஊறுகிறது. அதனால் அம்மையின் வேகம் அம்மை குத்தப்பட்டவர்கள் சரீரத்தில் அவ்வளவு வேகமாய்ப் பிடிக்கச் சக்தியுடையவைகளாய் ஆவதில்லை. இக்காரணத்தால் அம்மைவைத்துக் கொண்டவர்களுக்குப் பலமாய் அம்மையின் உபத்திரவம் உண்டாவதில்லை.

அம்மை வெகுவேகமாய்ப் பரவக்கூடிய வியாதி. ஆகையால், அவர்கள் விஷயமாய்க் கவலையெடுத்து, ஆஹாராதிகள் கொடுப்பவர்கள் தவிர வேறொருவரும் அவரருகே போகலாகாது. அம்மை போட்டினவர்களுக்கு ஸௌகர்யமாய்ப் போனபிறகும், பொருக்குகளெல்லாம் உதிர்ந்துபோன பிறகல்லாது ஜனங்களோடு அவர்களைக் கலக்கவிடலாகாது. அவர்கள் உடுத்தியிருந்த வஸ்திரங்களை நன்றாய்க் கொதிக்கும் தண்ணீரில் போட்டுவைத்திருந்து தனியாய் வெயிலில் உலர்த்தவேண்டும்.

## சரீராரோக்கியமும், மனோத்ஸாகமும்

ஸத்தின் பாஷையில் நல்ல தேகத்தில்தான் சுறுசுறுப்பான மனதிருக்கும் என்று ஒரு முதுமொழி வழங்கிவருகிறது. அதாவது தேகதத்துவங்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஒழுங்காயிருந்து தத்தம் வேலையை ஸரிவரப் பார்க்கச் சக்தியுள்ளனவாயிருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவுதான் மனதும் வேலை செய்யத் திறனுடையதாயிருக்கும் என்பது பொருள்.

நாம் வேலை செய்துகளைத்திருக்கும் வேளைகளில் எவ்விதமான மனோமுயற்சியும் ஸாத்தியப்படாது. வியாதியால் சரீரம் மெலிந்திருக்கும் ஸமயங்களில் ஸரியானபடி படிப்பு ஓடுகிறதில்லை ஞாபகசக்தியும் குறைகிறது. ஆகையால் நாம் மனோமுயற்சியாலும், படிப்பினாலும், மேன்மையடைய வேண்டுமானால், நம்முடைய சரீரத்தை முதலில் கெட்டிப்படுத்தவேண்டும். அதற்காக அநேகவிதமான வ்யாயாமங்கள் (Exercises) ஏற்பட்டிருக்கின்றன. இவைகளைப்பற்றி முன்னமேயே ஆத்மஸுகா



தார விதிகளின்கீழ் சொல்லியிருக்கிறோம்.

சரீர தத்வங்கள் விருத்தியாகி பலமடைய வேண்டியதற்கு தேகாப்பியாஸங்கள் எப்படி அவசியமோ, அப்படியே மனோதத்வங்களின் விருத்திக்கு மனோமுயற்சிகள் அவசியம். மனோதத்வங்களில் முக்கியமானவைகளிற் சில கீழே சொல்லப்படுகின்றன (i) கல்பனைசக்தி (ii) யோசிக்கும் சக்தி (iii) விஷயங்களின் நிலைமையிலிருந்து நியாயா நியாயங்களைக் கிரஹிக்கும் சக்தி (iv) தாரணசக்தி. படித்த விஷயங்களை மனதில் பண்படுத்தல் (v) ஞாபகசக்தி. விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் (vi) உற்றுப்பார்க்கும் சக்தி அதாவது, வஸ்துக்களைக் கவனித்து, அவைகளின் குணதுணங்களின் பரிசீலனை செய்யும் சக்தி.

மனோ முயற்சிகள் செய்வதில் அடியிற்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்:—

(i) மனோதத்வங்களை ஸுலபமான முயற்சிகளிலாரம்பித்து, வரவரக் கடினமான முயற்சிகளைச் செய்ய விடவேண்டுமேயல்லாது எடுத்த எடுப்பில் அளவுக்குமிஞ்சி முயற்சிகள் செய்யவிடக்கூடாது.

(ii) மேற்கூறிய சக்திகளில் ஒன்றிற்கே தொடர்ச்சியாய் வேலை கொடுக்காமல், வெவ்வேறு சக்திகளுக்கு வெவ்வேறு காலங்களில் வேலைகொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

(iii) மனோமுயற்சிகள் செய்தவுடன் சிரமபரிஹாரம் செய்துகொள்ளவேண்டும். மறுபடி மனோதத்வங்கள் வேலைசெய்ய வேண்டியதற்குப் பலம் அவைகளுக்கு ஏற்படும்படி குறிப்பிட்ட காலங்களில் வ்யாயாமங்களைச் செய்து சரீர தத்வங்களை விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

## கண்களும், காதுகளும்

நம்முடைய ஐம்பொறிகளின் வழியாகவே வெளியுலகத்தில் நடக்கும் ஸகல விஷயங்களையும் நாமறிகிறோமாதலால், இவைகளுக்கு ஞானேந்திரியங்கள் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இவைகளுள் கண்களும் காதுகளும் ஞான ஸம்பாத்தியத்தின் விஷயமாய், மிகுந்த முக்கியமாயிருப்பதுடன் மிகுந்த ஸூக்ஷ்மமான அமைப்புள்ளவைகளாயிருத்தல்பற்றி, அவைகள் விஷயத்தில் நாம் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

**கண்கள்.**—இவைகளின் அமைப்பை தேகதத்துவ சாஸ்திரத்தில் புகுந்து படிப்போமானால் மிகுந்த ஆச்சரியத்தையுண்டுபண்ணும். ஸாதாரணமாய் சரீரத்திலுள்ள நீர் மிகுதியால் கண்ணிற்குண்டாவது தவிர மற்றக் கேடுகள் விசேஷமாய் உண்டாவது பள்ளிக்கூடத்திலேயே யென்று கருதப்படுகிறது. தற்காலத்தில் வரவரக்குறைச்சல் திருஷ்டி (Short sight) மூக்குக் கண்ணாடிகள் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறதை நாம் அநுபவத்தில் பார்க்கலாம். உபாத்தியாயர்கள் இந்த விஷயத்தில் விசேஷக் கவலையெடுத்துக்கொள்ளவேண்டும். பள்ளிக்கூடங்கள் போதுமான வெளிச்சமுள்ள இடங்களில் கட்டப்படவேண்டும். ஆனால் கண்களுக்குப் பீடையையுண்டுபண்ணக் கூடியவளவு அதிக வெளிச்சம் வரவிடக்கூடாது. அதோடு அவ்வெளிச்சம் சில விடங்களில் குறைவாகவும் வேறு சிலவிடங்களில் நிறைவாகவுமில்லாமல் ஒரே கணக்காயிருக்கும்படி செய்யவேண்டும். வெளிச்சம் எந்தப்பக்கத்திலிருந்து வருகிறது என்பது நிரம்ப முக்கியமாய்க் கவனிக்கதக்க விஷயம். வெளிச்சம் முன்புறத்திலிருந்து வருவதேகூடாது. பக்கங்களிலிருந்து வரும் வெளிச்சம் ஸிலாக்யம். அவ்விரண்டிற்குள் இடதுபுறமிருந்துவரும் வெளிச்சமே சிறந்தது; மேலிருந்தாவது பின்புறத்தி லிருந்தாவது வரும் வெளிச்சம் ஸாதாரணமாய் பாதகமில்லை.

வெளிச்சம் ஸரியாகப் பரவவேண்டியதற்கு ஒத்தாசையாயிருக்கும்படி, வீடு அல்லது பள்ளிக்கூடத்துச் சுவர்களின் பக்கங்கள் சுத்த வெள்ளையாகச் செய்யாமல் நீலமாகவாவது வேறு மந்தமான சிவப்பு வர்ணமாகவாவது கொண்டு வர்ணம் தீட்டப்படவேண்டும். ஜன்னல் சற்று உயரமான விடங்களில் அமைக்கப்படவேண்டும்.

தரித்திரமான மட்டக்காகிதங்களிலும் நெருக்கமாகவும் அச்சிடப்பட்டிருக்கிற புஸ்தகங்களை படிப்பது கூடாது. உபயோகப்படும் புஸ்தகங்கள் பெரிய எழுத்துக்களையுடையனவாகவும் தாராளமாய் இடம்விட்டு அச்சிடப்பட்டுமிருக்கவேண்டும்.

சிறு எழுத்துக்களை எழுத, அப்பியாஸம் செய்துகொள்ளக்கூடாது. வெகு விசித்திர

மான ஸன்னத் தையல் வேலைகளிலும் கண்களை உபயோகப் படுத்தக்கூடாது. அப்படியே தற்காலத்தில் விசேஷித்துப் பழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்ட கிண்டர் கார்ட்டன் வேலைகளில், பாய்பின்னல் (பளபளப்பான வார்னீஷ் காகிதங்களைக்கொண்டு,) ஸன்னமான பூக்கள் கத்தரித்தல், குத்தித்தைத்தல் (துவாரம்செய்து நூலோட்டல்) முதலிய தொழில்களை அதிகமாகச் செய்யக்கூடாது.

குறைவான வெளிச்சங்களில் எப்பொழுதும் வாசிக்கவேகூடாது. சரீர ஸௌக்கியத்தில் குறைவுகளிருக்கும்பொழுது கண்களுக்குச் சிரமம் கொடுக்கக்கூடிய எவ்வித காரியங்களையும் செய்யலாகாது.

காதுகள்.—இவைகளும் மிகுந்த ஸூக்ஷ்மமான யந்திரங்கள்தான். விரஸமான சத்தங்கள், தம்பட்ட ஓசைகள் முதலிய ராக்ஷஸத்தனமான சப்தங்களுக்குக் காதைக் கொடுக்கக்கூடாது. காதுகளில் எண்ணெயை யூற்றிக் குலுக்குதல் முதலிய துரப்பியாஸங்கள் நிரம்பக் கெடுதி. காதுகளில் குரும்பையுண்டாகாதபடி ஆஸ்பத்திரி லோஷன் கலந்து மந்தோஷ்ணமான தண்ணீரையடித்துக் கொள்ளலாம். குரும்பையெடுக்கி ஈர்க்கு முதலியவைகளைக் காதுகளில்விட்டுக் குடைவதுகூட வேகூடாது. அதிலும் நடந்து போகுங் காலங்களில் இப்படிச் செய்யவேகூடாது.

இந்தப் பிரகாரம் நாம் சொல்லிய விதிகளையனுஸரித்து வரும்பக்ஷத்தில், கூடியமட்டில் அரோக திட சரீரிகளாய் இருந்து வாழக் கடவுள் அநுக்கிரஹிப்பார் என்பது அறியற்பாலது.

சுகாதார விதிகள்
ஸம்பூர்ணம்

---

**நம் சந்தா நேயர்களுக்கு.**—இச் சஞ்சிகையுடன் 'போதினி'யின் 7-ம் தொகுதி, இறைவனருளாலும், நம் சந்தாநேயர்கள், விஷயதானஞ் செய்வோர், இவர்களின் அன்புமிகுந்த ஆதரவினாலும் முடிவுபெறுகிறது. 8-ம் தொகுதியின் ஆரம்பம் ஜூலை மாதமாகையால், இச்சஞ்சிகையுடன் சந்தா முடிவாகிற நேயர்கள் அடுத்த தொகுதியின் சந்தாத்தொகையை சீக்கிரமே அனுப்புமாறு கோருகிறோம். அப்படியனுப்பாத நேயர்களுக்கு அடுத்தபத்திரிகை வழக்கம்போல் வி. பி. யில் அனுப்பப்படும். பத்திரிகையை இனிப்பெற இஷ்டமில்லாதவர்கள் ஷை தகவலை முன்னதாகவே எமக்குத் தெரிவித்தால் மிகுந்த உபகாரமாயிருக்கும்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### 51. சேரிட மறிந்துசேர்

அணுகிப்போய் சேரவேண்டிய இடத்தை நன்றாக ஆராய்ந்துணர்ந்து, பின்னர் சேரவேண்டும், அது சேரத்தகுந்த இடமாக இருந்தால், என்பதுதான் இந்த ஸூத்திரத்தின் கருத்து. இடங்களின் அல்லது நிலைகளின் தன்மைகளை ஆராய்வதில் முதலில் அவை கெட்டவைகளா நல்லவைகளா என்று ஆராய வேண்டும்; கெட்டவைகளானால் அணுகவேகூடாது, விட்டு விலகவேண்டும்; நல்லவைகளானால் மேல் அவைகளின் தன்மை எப்படிப்பட்டது அவைகளிலிருந்து நாம் எந்த எந்தச் சிறப்புக்களை அடையலாம், எப்படி எப்படி நடந்து கொண்டால் இவைகள் மிகுதியாயும் எளிதாயும் கைகூடும் என்று ஆராய்தல் வேண்டும். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுக்குத் தகுந்த முடிவு ஏற்பட்டபின்புதான் தகுந்த இடத்தைச் சேரவேண்டும். அப்பொழுதுதான் சேர்ந்ததன் பயன் நன்றாகவும் எளிதாகவும் ஏற்படும். சேரிடமறிவதை லௌகீக விஷய உணர்வென்றும், வைதிகவிஷய உணர்வென்றும் இருவகைப்படுத்தி இங்கு ஆராயலாம்.

(1) லௌகீக விஷய ஆராய்ச்சி:—ஸாதாரணமான உலகவிஷயங்களில் சேரிடமறிவதில் அது நல்லதா கெட்டதா என்ற பொது ஆராய்ச்சி மாத்திரம் போதும். ஒரு இடம் நல்லது என்று தெரிந்த உடனே கூசாது நாம் சேர்ந்து விடலாம். மற்றைய மேல்வேண்டியவைகளை அவைகளை அடைந்தபின்பு உணர்ந்து நடந்துகொள்ளலாம். பெரியோர்களும் கூட, சேரிடமறிந்து நிதானியாது சேர்ந்து ஏமாந்தேறி இருக்கின்றனர். துர்வாஸ மஹருஷி யோசியாது பாண்டவர் வனவாஸ காலத்தில் துர்யோதனனிடம் வந்து சிலநாளிருந்து அவன் விருந்தை ஏற்றார். இதனால் அவர் புத்திமயங்கி "உனக்கு வேண்டியதைக் கேள்" என்று சொல்லி விட்டார் துர்யோதனனை நோக்கி. பாண்டவர்களுக்கு இடையூறு செய்வது எப்படி என்று காத்திருக்கும் துர்யோதனன் "இவர் பாண்டவர்களிடம் தகாத காலத்தில் சிஷ்யர்களோடு சென்றால், அவர்களால் இவர்



களுக்கு விருந்திட முடியாமல் போகும். இவர் பாண்டவர்களை சபிப்பார், நமக்கு அதனால் க்ஷேமம் வரும்" என்ற மோசக்கருத்துடன், ருஷியை நோக்கி, 'எங்கள் ஸஹோதரர் பாண்டவர்கள் வனத்தில் வருந்துகின்றனர். மஹா சக்திமான்கள். எங்களிடம் விருந்தினராக இருந்து அனுக்ரஹித்ததுபோல அவர்களிடமும் சிலநாள் தாங்கள் தங்கள் சிஷ்ய கோடிகளுடன் இருந்து அவர்களையும் மேன்மைப்படுத்தவேண்டும். அவர்கள் சக்திச் சிறப்பையும் கண்டு ஈடுபட, போகும்பொழுதே இரவு நடுநிசியில் அங்கு விஜயம் செய்யவேண்டும். இதுதான் இப்பொழுது எனக்குள்ள விருப்பம்" என்றான். துஷ்டர் சோறு ஏறியிருந்த ருஷிக்கு இதன் சூது விளங்காது, அப்படியே செய்து கிருஷ்ணபகவான் தந்திரத்தால் சிஷ்யகோடிகளோடு வயிறு வீங்கித் திண்டாடி. தாம் மோசம்போனதைப் பாண்டவர்களுக்கு வெட்கமின்றி வெளியிட்டு அவர்களை துர்வாஸர் அனுக்ரஹித்து வெளிப்பட்ட கதைஎல்லோருக்கும் தெரிந்திருக்கும். சேரிடமறியாது சேர்ந்த ருஷி கதியே இப்படி என்றால் ஸாதாரணர் கதியைப்பற்றிக் கூறவும் வேண்டுமா! வக்கீல், போலீஸ் முதலிய உத்யோகங்களில் நல்லோர்கள், புகுவதும், சுத்த ஆத்மாக்கள் அசுத்தவிடங்களில் கெட்டவர்கள் இடையில் குடியேறுவதும், இப்படி சேரிடமறியாது சேருவதற்கு உதாரணம்: கூடிய சீக்கிரத்தில் அவர்கள் கெட்டே போய்விடுவார்கள்.

சேரும் உத்யோகம் முதலியவைகளை ஆராய்ந்து கெட்டவைகளை விலக்கியும், நல்லவைகளை சேரும்பொழுது அவைகளில் நாம் நன்றாகத் தரித்து நிற்கமுடியுமா என்பதையும் நன்கு ஆராய்ந்தே சேருதல் வேண்டும். நல்லவைகள் பலவற்றில் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தாலும் பயனில்லாமல் போய்விடும். உத்யோக விஷயங்களில் இது நன்றாக வெளியாகும். ஒரு தொழிலையே நிலைத்துப் பார்த்தால்தான் அதில் ஒருவிதத் தேர்ச்சியும், அதனால் நம்மிடம் பிறருக்கு நம்பிக்கையும் ஏற்படும்: நமது வாழ்க்கையும் குழப்பமின்றி நடைபெறும். இப்படியின்றி அடிக்கடி மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருப்பின், வீண்குழப்பம் அதிகப்பட்டு நமது குடிவாழ்க்கை சாந்தியையும் சஞ்சலமேயாக முடியும். இந்தச் சஞ்சலப்பெருக்கத்தில் நல்ல நிலையாயினும் அதில் நிலைக்க நேர்மையின்மையைக் கைக்கொண்டு ஒழுங்குக்கு விரோதமாக நடந்து, நமக்கு வேண்டியவளவு ஸம்பாதித்துக் கொண்டு, தகுந்த அளவு வேலை செய்யாது பின்னடைந்து, வேலைக்குப் பிந்தி கூலிக்கு முந்திச் சீரழிந்து, கெட்டுப்போகும்படி நேரிட்டுவிடும். இதனால் ஸாதாரண ஸமயங்களிலும் பொய் புரட்டு முதலியவைகளைத் தங்கு தடையின்றி உபயோகித்து அதோகதியடையும்படியாகிவிடும். நல்லது உணர்ந்து கைப்பற்றியும் சேரிடமறியாது கெட்டதில் சேர்ந்த பயனை அடையும்படியாகும் நல்வழியின் தன்மையைத் தீர ஆராயாது சேர்ந்தால். இக்காலத்திய மேல் உத்யோகஸ்தரில் அநேகருக்கு நல்லது அணுகிக் கெட்டநிலைதான் ஏற்பட்டுள்ளது. ஆகவே இருவித ஆராய்ச்சியையும் நன்றாகச் செய்துதான் ஒன்றை அணுகிச்சேரவேண்டும்.

வைதிகவிஷய ஆராய்ச்சி:—இதிலும் முன் எடுத்துக் காட்டப்பட்ட இரண்டுவித ஆராய்ச்சியும் இருத்தல் வேண்டும். பொதுவாகக் கெட்டவைகளை நீக்கி நல்லவைகளை அணுகுவதால் வரும் மேன்மைகளைக் காட்ட அநேக சரிதங்கள் நமது புராணங்களில் காணப்படும். நாரதர், பூர்வஜன்மத்தில் ஸாதுக்களிடம் சேர்ந்து தொண்டுசெய்து அவர்கள் அனுக்ரஹம் பெற்று மேன்மை யடைந்ததையும், மார்க்கண்டேயர் சிவபூஜையை ஒழுங்காக திடமுடன் செய்து யமபயம் நீங்கியதையும், உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இம்மாதிரியே பொது ஸாதுக்களிடத்தும், நல்லவிஷயங்கள் நடக்கும் இடத்தும் சேரல்வேண்டும். இந்த நல்லிணக்கத்தால், வரவர நம்மிடமுள்ள கெட்ட பழக்கங்கள் தலை எடுக்காமலே குன்றி ஓய்வடையும். ஸாதாரணமாக எவ்வளவு கஷ்டப்பட்டும் அடங்காத கெட்ட நடத்தைகள் எல்லாம் ஸத்ஸங்கத்தில் தலைஎடுக்கவே முடியாது அழுந்தி அழிந்துபோகும் எனில்: நற்பழக்கங்கள் மனதில் ஊறிக்கொண்டே இருக்கும் நிலை மனதிற்கும் வரும்.

இப்படிப்பட்ட நல்லநிலைக்குப் பின்னர்தான் நமது நிலையின் தன்மையும் நாம் ஸாதிக்கக்கூடும் மேல் நிலையும் நன்கு ஆராயப்பட்டு மேல் நிலை நெருக்கம் ஏற்படவேண்டும். தத்காலத்தில் ஸத் விஷயங்கள் என்று முயற்சிக்கப்பட்டு

வருபவைகளில் இந்த ஆராய்ச்சியின்றி சேர்ந்தால் அதோகதிதான் வரும். மூடமாக இருக்கும் வரையில் ஸாதாரண நல்வினைக்கம் எங்கும் பயன்படலாம். நெருங்கிப்பழகி சிறப்படைய வேண்டியதற்கு எல்லா ஸத்விஷயமும் பயன்படமாட்டாது. இக்காலத்திய பக்திவேதாந்தங்களே இதற்குஉதாரணம். இவைகளில்ஆராயாது சேர்ந்துவிட்டால் நாம் இன்ன நிலையில் இருக்கிறோம்இப்படி நல்வழியில் நாம் பழகிவரவேண்டுமென்ற உணர்வே ஏற்பட இடமில்லாமல்போய்விடும், அதாவது நுட்பமாகச் சேரிடமறியும்திறன் இழக்கும்படியாகிவிடும். இதனால் நமக்கு மோக்ஷமே வந்துவிட்டது, சாஸ்திரங்களில்காட்டப்பட்டுள்ள ஸன்மார்க்கங்களான வர்ணாச்ரம ஸ்திரீ புருஷ தர்மங்கள் நமக்கு அனாவசியம், விக்ரஹாராதனம், சௌசம் முதலியவைகள் எல்லாம் மந்தர்களுக்கே என்ற கொழுப்பு ஏறிவிடும். நாம் நிலை கெட்டுத் தட்டழிய வேண்டியதாகிவிடும். ஆகவே சேரிடமறிவதில் சாஸ்திர ஒழுங்கைப்பற்றிய தெளிவான உணர்வும், அதில் நமது நிலைஇப்படிப்பட்டது என்ற உணர்வும், நாம் போய்ச்சேருமிடத்தில்இவைகளைநமது நிலையிலிருந்துவிருத்தியாக்குவதற்குவேண்டிய பாகங்கள் இருக்கின்றனவாஎன்றஆராய்ச்சியும்ஆகிய இவைகளை முன்னிட்டேநல்நடத்தையுடையோர் ஒருதிருக்கூட்டத்தை நாடிச் சேரவேண்டும். இப்படி ஆராய்ந்து நிதானிக்க வேண்டியது, மதவிஷயஸங்கங்களும் திருக்கூட்டங்களும் பெருத்து மலிந்து கிடக்கும் இக்காலத்தில், மிகுந்த அவசியம்தான். பொதுவாக ஒரு சங்கத்திலும் சேராது நின்றுவிடுவதே இக்காலக்கொடுமையை நோக்கில் சிறப்பாகும். நம்மவர்களுக்கு எங்கேயாவது, உபதேசம் முதலிய பெரிய சாஸ்திரவிஷயங்களில் தலையிட்டுக்கொள்ளாது, நமது வைதிக மத ஆராய்ச்சி மாத்ரம் செய்யும் இடங்களில் கூசாது நாம் சேரலாம்.

தகுந்த சாஸ்திர ஆராய்ச்சி ஸன்மார்க்க அனுஷ்டானம் இவைகளின் தேர்ச்சியால் மனங்கனிந்து, பூர்வ புண்ய வசத்தால் தகுந்த குரு கிடைத்துவிட்ட பின்னும் சேரிட மறிந்து சேர் என்னும் ஸூத்ரம் உபயோகப்படாமல் போகாது. இங்கு அறிந்து என்பதற்கு குரு அறிவிக்க அறிந்து என்றுமாத்திரம் பொருள் கொள்ளவேண்டும். அப்பொழுது சேரிடம் என்பது நிஷ்டைநிலை என்று பொருள்படும். குருவினிடம் தன் பழக்க அனுபவ விசேஷங்களை ஒளிக்காது சொல்லி, அவர் அவைகளைக்கொண்டு நமக்கு தகுந்த நிலை எனக்கூறி விளக்குவதை நன்குணர்ந்து அதில் மனதைவிடாது நிறுத்திப்பழக முயலவேண்டும் என்பது இந்த ஸூத்திரத்திற்கு இங்கு பொருள். குருவிடம் சேர்ந்து ஆராயாது தாமாக ஒன்றை மனதில் நிறுத்த முயலக்கூடாது. அப்படிச் செய்தல், வீண் மனச்சஞ்சலம் வியாதி முதலியவைகளைக் கொண்டுவிட்டு நம்மை மிக வருத்திவிடும். கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாகிவிடும். குருவிடம் நெருங்கி ஆராயாதுதான் விரோசனன் என்ற அஸுரன் தேஹமே ஆத்மா என்றுணர்ந்து உபதேசித்து அஸுரர்களைக் கெடுத்தான். அதே கதையில் இந்திரன் நிதானித்துணர்ந்து தேவதைகளை மேன்மைப்படுத்தினான்.

ஆகவே இந்தஸூத்திரம் நிலைக்கேற்ப வெவ்வேறு பொருள்களைத் தந்து நம்மை மோக்ஷ நிலையை நோக்கி விருத்திபடையச் செய்யும்.

---

**புதுக்கோட்டை பொருட் காட்சி.**—விவசாயம், தொழில், கல்வி இவை சம்பந்தமான பொருட்காட்சி ஒன்று புதுக்கோட்டையில் வருஷாவருஷம் நன்கு நடைபெறுவது நம் நேயர்களுக்குத் தெரிந்ததே. இவ்வருஷம் நடைபெற்ற காட்சியின் முடிவு தினமான சென்ற மே மீ 8வ யன்று புதுக்கோட்டை சமஸ்தானம் பிரஸிடெண்ட் அவர்களின் மனைவி மிஸ்ஸஸ். க்வின் அக்கிராஸனம்வகித்துச் சிறந்த காட்சிப் பொருள்களுக்குப் பரிசுகளைக் கொடுத்தார். அப்பொழுது அதன் காரியதர்சியான மிஸ்டர் தியாகராஜய்யர் வாசித்த ரிபோர்ட் பின்வருமாறு: “பம்பாய் ஜெய்பூர், கல்கத்தா முதலிய இடங்களிலிருந்தும், மைசூர், திருவாங்கூர், கொச்சி இவைகளிலிருந்தும் அனேக காட்சிப்பொருள்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இவ்வருஷம் காட்சிப்பொருள்களைப் பார்க்க வந்தவர்களின்தொகை 13,262. அதற்கு முந்திய வருஷத்தில் பார்க்க வந்தவர்கள் 48,000. இவ்வருஷம் வந்த காட்சிப்பொருள்களின் தொகை 7,927; முந்தின வருஷத்தின் தொகை 9,456. காட்சிப்பொருள்களில் சிறந்தவைகளுக்கு தங்கமெடல்களும், 0 பேர்களுக்கு வெள்ளி மெடல்களும், 35 பேர்களுக்கு வேறு மெடல்களும், தவிர 1200 ரூ. பண வெகுமதிகளும் கொடுக்கப்பட்டன.” இம்மாதிரிப் பொருட் காட்சி ஒன்று மைசூர் சமஸ்தானத்திலும் பிரதி வருஷமும் நன்கு நடைபெற்று வருகிறது. இம்மாதிரி காட்சிகள் பொது ஜனங்களுக்கு மிகுந்த நன்மை பயக்கக் கூடியவை என்பதற்கு ஆக்ஷேபணையில்லை.



# ரணகேசரி அல்லது ராஜபக்தி

## RANAKESARI

### அங்கம் 5

#### களம் 5

இடம்: பாண்டியதேசம் ஸபாமண்டபம்.

காலம்: காலை.

**குப்பா.**—என்னடா— என்னமோ— ராஜா வரப் போகிறார் என்கிறார்கள். இங்கே என்னமோ பெரிய கூட்டமாம் ஒரு ஈ காக்காயைக் காணேமே— அதா ரங்கேவருகிறது— யாரு—ராமதீக்ஷதரா?யாருங்கோ யாருங்கோ— (ராமதீக்ஷதர் ப்ரவேசிக்கிறார்.)

**ராமா.**—இங்கே குப்பையில்லாமல் என்னைக் கூட்டியிருக்கிறதே — என்னத்தை வாருது — என்ன ஒப்பா ஒத்தரையுங் காணோம்.

**கு.**—நான்தான் ஒத்தனாச்சே; நீர் ஒருத்தராச்சு இரண்டு பேராச்சு ஒத்தரையுங் காணோம் என்கிறீரே

**ரா.**—நீரும் நானுந்தானோ ஸமஸ்தலோகமும்—

**கு.**—ஸமஸ்த லோகமும் இந்த ஹாலுக்குள்ளே அடங்குகிறது இன்னைத்தான் முடியுமோ—

(குப்பணையங்கார் வருகிறார்.)

**கு.**—ராமதீக்ஷதரே—நீர் ரெடி தானா—

**ரா.**—நீரோ—

**கு.**—நானும் ரெடிதான் — நீர் முன்னாலேயே வந்துவிட்டீரே—

**ரா.**—எல்லோரும் முன்னுக்கு வரவேண்டியது தானே. (அதிகக் கூட்டம் வருகிறது.)

(அமரேந்திரன் — அம்பாலிகை — ரணகேஸரி — சோழன் வருகிறார்கள்—எல்லோரும் ஒதுங்கி நிற்கிறார்கள்.)

**அம.**—ரணகேஸரி—நீ ஏற்பாடுசெய்துவந்ததாய்ச் சொன்னாயே—இன்னும் சேரனையும் வீரமர்த்தனனையும் காணோமே—

**ரண.**—எனக்கும் அதுதான் ஆச்சர்யமா யிருக்கிறது. சோழனிடம் பேசிக்கொண்டிருந்தமட்டில் தவறமாட்டானென் றெண்ணுகிறேன் — நான் ஸங்கதிகளையெல்லாம் எடுத்து ஸவிஸ்தாரமாய்ச் சொன்னவுடனேயே, வீரமர்த்தனனைக் காராக்ரஹத்தினின்றும் விடுவித்துத் தன் பக்கத்திலேயே உட்கார வைத்துக்கொண்டார்.

**அம.**—ஆனால் நிச்சயம் வந்துவிடுவார்கள் என்று தோன்றுகிறதா?

**ரண.**—அதில் ஸந்தேஹமில்லை, அவர் வந்து ஆக வேண்டிய கார்யமென்னவிருக்கிறது ஜனங்களே—

**விது.**—வெகுதூரம்வரை ஜனங்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகையால் யார் பேசினாலும் பலக்கப் பேசவேண்டும்.

**ரண.**—வந்தனம். ஜனங்களே— நீங்களனைவரும் நினைத்திருக்கிற ப்ரகாரம் நீலகண்ட சாஸ்திரிகளின் கொலைக்கு அரசன் காரணமல்ல வென்பதையும், தார்மிகனை மறுபடியும் ராஜ்யத்தில் ப்ரதான மந்த்ரியாக ஆக்கினது அரசன் ஸ்வேச்சையால் வேண்டுமென்று செய்த கார்யமல்ல வென்பதையும் உங்களுக்கு நிரூபிக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன்தான் உங்களை இங்கு கூட்டியது. ஆனால் நீங்கள் அரசன் விஷயமாய் அர்யதாக்ரஹணம் செய்தது உங்கள்பேரில் பெரியபிசகென்றும் குற்றமற்ற ஓரரசனை ராஜ்யத்தைவிட்டு, அவன்பேரில் சாற்றப்பட்ட குற்றத்தைத் தீர விசாரிக்காமல், விரட்டிவிட்டது பிசகான கார்யம் என்று உங்கள் பேரில் குற்றஞ் சொல்ல வந்தவனன்று. நீங்கள் செய்தது மிகவும் ந்யாயமே அரசனுடைய நெருங்கியபழக்கமும் அவருடைய குணங்களையும் குறைவுபாடுகளையும்பற்றிய அறிவும் எனக்கு இல்லாதிருக்குமேல், உங்களைப் போல், நானும் அரசன்மீது ஸந்தேஹித்திருப்பேன். என்னை விலக்கி, தார்மிகனுக்கு ப்ரதான மந்த்ரிஸ்தானம் கொடுத்த அரசன் விஷயமாய் நான் மனஸ்தாபப்பட வேண்டியதிருக்க, அப்படிச்செய்யாது அரசனுடன் ராஜ்யத்தைவிட்டு விலகி, ராஜன்மீது குற்றமின்மையை ஜனஸமூகத்திற்கு த்ருப்தியாகும்படி நிரூபணம் செய்கிறதென்று கங்கணங் கட்டிக்கொண்டு புறப்பட்டு அலைந்ததே அரசன்மீது எனக்குக்கொஞ்சமும் ஸந்தேஹம் கிடையாது என்பதற்குப் போதுமான ஸாக்ஷ்யம்.

**ஜனங்கள்.**—இந்த மாதிரி வார்த்தைகளால் ஒரு கார்யத்தையும் ஸாதித்துக்கொள்ள முடியாது. நீர் இழந்திருக்கும்ப்ரதானமந்த்ரி உத்யோகத்தைத் திரும்பப் பெறுவதற்கு நீர் செய்யும் தந்த்ரம் என்றுதான் நினைக்கவேண்டி வரும். இன்னும் நேரான கார்ய காரணங்கள் வேண்டும்.

**ஒருவன்.**—நில்லு. இதோ ரணகேஸரி பேசப்போகிறார்.

**ரண.**—நான் சொல்லவேண்டி யிருக்கிற கார்யா கார்யங்களையும் ஆக்ஷேபணை ஸமாதானங்களையும், உங்கள்முன் பரிசீலனைக்கு வைத்துவிடுகிறேன். அப்புறம் தங்களுடைய இஷ்டம் எப்படியோ அப்படியே செய்யலாம். ஆனால் இந்த ரணகேஸரியினுடைய தன்மையை உள்ளதுள்ளபடி யறிந்த நீங்கள், நம்மரசன் நிஜநிஜத்தில் குற்றவாளியா யிருந்தால், இந்த ரணகேஸரியும் அவரை மறுபடி அரசனாக ஒப்புக்கொள்ளமாட்டானென்று சொல்லுவதை நம்புவீர்கள் இப்பொழுதும் அரசன் குற்றவாளியல்லவென்று நிர்த்தாரணமாய்ச் சொல்ல வந்தவனல்ல. இருந்தாலும், ஒரு குற்றம் ஒருவர்பேரில் சாட்டினால் அக்குற்றத்திற்கு அவர் என்ன ஸமாதானம் சொல்லுகிறார் என்று தீர விசாரிக்காமல், அவருக்குத் தண்டனை விதிப்பது நீதிக்குப் புறம்பு என்றுமட்டும் உங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்பது இன்றைக்கு உங்களைக் கூட்டியதின் நோக்கங்களில் ஒன்று. நம்மரசன் விஷயத்தில் இவ்விதம் நேரவில்லையா?

**ஒரு.**—அரசன்தான் ப்ரேதத்தை எடுத்துக்கொ

ண்டுபோய் வைகையில்போடச் சென்றது, தானே என்று ஒப்புக்கொண்டாரே—

**ரண.**—ஆம் ஒப்புக்கொண்டது எனக்கும் தெரியும். ஆனால் ப்ரேதத்தைத் தூக்கிக்கொண்டு போனது வாஸ்தவமென்று ஒப்புக்கொண்ட அரசன், தான் கொலைசெய்யவில்லை என்று சொன்னாரே அதற்கு எம்மட்டில் கௌரவம் கொடுத்தீர்கள்? அரசன் பொய் சொல்லக்கூடியவராயிருந்தால், ப்ரேதத்தைத் தூக்கிக்கொண்டு போனதைமட்டும் அவர் ஏன் ஒப்புக் கொள்ளவேண்டும்? ஆதலால் இதில் ஏதோ மோசமிருக்கிறதென்று யாராவது யோசித்தீர்களா? இல்லை, நீரவிசாரித்துத் தீர்மானம் சொல்லுவோமென்று உங்களுக்குப் பொறுமையிருந்ததா? இல்லை. வெளிப்படையாகத் தோன்றிய சில விஷயங்களைக் கொண்டு அரசன்தான் குற்றவாளியாக விருக்கவேண்டுமென்று தீர்மானம் செய்துவிட்டீர்கள்

**ஒரு.**—நீர்சொல்லும் ந்யாயவாதங்களெல்லாம் ஸரி. ஆனால் கொலைசெய்தவனின்னானென்று ஸந்தேகத்திற் கிடமின்றி கண்டுபிடித்த பிறகல்லவா, நாங்கள் செய்ததீர்மானம் பிசகென்றுசொல்ல இடமேற்படும்.

**ரண.**—அது இன்னும் ஸ்வல்பகாலத்தில் வெளியாகிறது. நான் அதற்காகச் சொல்லவில்லை—இல்லை—ந்யாயம் தீர்க்கும் வழியிலுள்ள ஸிரமம் முற்றிலும் உங்களுக்குக் காண்பிக்க வேண்டுமென்பதற்காகச் சொன்ன விஷயங்கள். பாருங்கள்—ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்த மனிதன் வேண்டுமென்றோ தெரியாத்தனத்தாலோ ஒரு கொலையைச் செய்துவிடும் பட்சத்தில், அதை மறைப்பதற்கு எளிய வேறொருவனை அக்கொலையைச் செய்ததாக ஒப்புக்கொள்ளச் செய்வது மிகவும் ஸுலபஸாத்யமல்லவா? அப்படி அவன் ஒப்புக்கொண்டானென்பதை முன்னிட்டு, அவனைத் தூக்கிவிடும்படி உத்திரவளித்தால் அதைவிட நீதிக்குறைவு வேறுண்டோ? யோசித்துப் பாருங்கள்—

**ஒரு.**—ஆம்—ரணகேஸரி—சொல்வது வாஸ்தவந்தான். அப்படியும் நேரக்கூடுமல்லவா?

**மற்றொரு.**—ரொம்ப ஸகஜமல்லவா? ஆமாண்ணே—ரணகேஸரி—ரொம்ப புத்திசாலிதான்.

**இன்னொரு.**—புத்திசாலி—ன்னா—புத்திசாலி தான் அதிலென்ன ஸந்தேஹம்—

**ரண.**—அரசன்மீது சாற்றப்பட்டிருக்கும் குற்றத்திற்கு அவர் எந்தமட்டில் பாத்யப்பட்டவர் என்று (சோழனை நோக்கி) டே—இந்த நீலகண்ட சாஸ்த்ரியைக் கொலை செய்ததார்?

**ஒரு.**—என்ன இவனோ— என்னவோ—இவனுக்கென்ன தெரியும் நீலகண்ட சாஸ்த்ரிகளின் கொலையைப்பற்றி—

**மற்றொரு.**—நமக்கென்ன அவஸரம்—என்னதான் நடக்கிறது பார்ப்பமே—

**ரண.**—(சோழனைநோக்கி) என்னடா — கேட்ட கேள்விக்கு ஜவாப்பைக் காணோம்.

**சோ.**—நான்தான் நீலகண்ட சாஸ்த்ரியைக் கொன்றவன்.

**ஒரு.**—ரணகேஸரி தீரனடாப்பா—நன்னா ஜோடிச்சிருக்கானே பேர்வழியை.

**மற்றொரு.**—இப்படி ஏமாற்றப்படுவதற்கு நாமென்ன முட்டாள்களோ?

**இன்னொரு.**—கொஞ்சங்கூடக் கூசாமல் கொலைசெய்தவன் தன்னை மறைத்துக் கொள்வதற்காக வேறொருவனை ஒப்புக்கொள்ளச் செய்கலை உதாரணமாக எடுத்துக்கூறி, மறுபடி அப்படியே தானும் ஏற்பாடு செய்துகொண்டு வந்திருக்கிறானே. முன்னாலேயே அதைச் சொல்லிவிட்டால், ஒருவரும் அவ்வழியில் ஸந்தேகிக்க மாட்டாரென்று எண்ணினானே—ஐயா—இவன் யாரோ அஞ்ஞாத குலகோத்ரன்—இவனைக் கொண்டு நீலகண்ட சாஸ்திரிகளைக் கொலை செய்தது நான்தான் என்று சொல்லும்படி செய்துவிட்டால் எல்லாம் ஸரியாய்ப் போய்விடும் என்று நினைத்துவிட்டீரோ—பலே.

**ரண.**—அப்படி நான் நினைக்கவில்லை. இது ஜனஸமூகங்களின் குறைவு. கடைசிவரையில் பொறுமையுடன் கவனிக்கப்போதுமான மனோதிடம் இருக்கிறதில்லை.

**ஒரு.**—என்னதான் நடக்கிறதென்று பார்ப்போமே. அதற்குள்ளே இவனுக்குப் பொறுக்கவில்லையடாப்பா, ரணகேஸரி—ஸரி—அப்புறம்,

**ரண.**—அப்படி சற்றுப் பொறுமையுடன் கேளுங்கள்—அடே—நீ யார்?

**சோ.**—நான்தான் சோழராஜன் கரிக்காலச்சோழனென்று ப்ரஸித்தமாய் வழங்கிவரும் புகழுடைய சக்ரவர்த்தி நானே.

**ஒரு.**—அப்படி—ரணகேஸரி பிடித்தாலும் புளியங்கொம்பைத்தான் பிடித்தார். பலே — கரிக்காலச் சோழன்! வெகு ஸுலபமாய் நம்பலாம்! அவனுடைய அந்தஸ்து எங்கே! பராக்ரமம் எங்கே! ஸாமர்த்யமெங்கே! ரணகேஸரியாவது! அவரை கைதியாக்கிக் கொண்டு வரவாவது!

**மற்.**—சொல்வார சொன்னாலும், கேட்பார்க்கு மதியில்லையா!

**இன்னொ**—அடே—கேப்பையிலே நெய் ஒழுகுது இன்னா கேட்பார்க்கு மதி இல்லையா! ரணகேஸரி யாரோ! போதும் உம்முடைய ஸாக்ஷி விசாரணை! நிறுத்தும். இந்தக் கட்டுக்கதையை நாங்கள் நம்பமாட்டோம்.

**ரண.**—நம்பமாட்டோமென்று சொல்லுவதுதான ஸுலபமாயிற்றே! அதை எப்பொழுது வேண்டுமென்றாலும் சொல்லலாம்! இன்னும் சில கேள்விகள் தான் பாக்கி! அவைகளையும் நான்கேட்டு, பதில் வந்த பிறகு உங்களால் முடியுமானால் நம்பமாட்டேனென்று சொல்லுங்களேன்!

**ஒரு.**—இப்படித்தானே, ஜோடித்து வைத்துத் தயார்செய்த கேள்விகளாகக் கேட்கப் போகிறீர்கள்!



இந்த மாதிரி ஆயிரம் ஸாக்ஷிகள் நான் தயார் செய்வேனே ஒரு க்ஷணத்தில்.

**மற்றொரு.**—என்னய்யா அவஸரம். கேட்கத்தான் கேட்போமே! ஏமாற்றி விடுகிறதென்று தீர்மானித்துக்கொண்டு வந்திருக்கிறார் இந்த ரணகேஸரி! நாம் ஏமாறுகிறதில்லையென்று மனதைத் திடப்படுத்திக்கொள்ளுவோம்! ரணகேஸரி ஸாமர்த்தியந்தான் எந்த மட்டில் போயிருக்கிறதென்று பார்த்துக்கொள்ளுவோமே!

**இன்னொரு.**—இல்லய்யா—ரணகேஸரிபேசுகிறமாதிரியிலும், அவர் குரலில், 'ஸத்யம்' என்ற எழுத்துகள்மேல் வரையப்பட்டனபோல் வெளிப்படையாய் எனக்குத் தோன்றுகிறது. யார் கண்டார்கள். கரிக்காலச்சோழன் இந்த ஸ்திதிக்கு வருவதில்என்ன ஆக்ஷேபணை! என்ன அஸம்பாவிதம் "குடைநிழலிலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவரன்றோ !"

**ஒரு.**—கப்சப், ரணகேஸரி பேசப் போகிறார்.

**ரண.**—அடே, முட்டாள். சந்ந்யாஸிமாதிரி உன்னுடைய வேஷத்தையும் உன்னையும் பார்த்தால், கரிக்காலச்சோழனென்று உன்னை யாரடா நம்புவார்கள்?

**சோ.**—இதோ இந்த அடையாளம் போதுமானால் பாருங்கள். (ஒரு முத்திரை மோதிரத்தைக் கொடுக்கிறான்.)

**ரண**—(அதை வாங்கி) ஜனங்களே! இதில் கரிக்காலச்சோழன் என்று நாமாக்ஷரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. சற்றுப் பொறுங்கள். அதற்குள் கலகத்திற்கு ஆரம்பிக்காதீர்கள். ஏண்டா! இம் முத்திரை மோதிரத்தை கரிக்காலச்சோழன் அரண்மனையிலிருந்து எப்பொழுது திருடினாய்?

**சோ.**—நான் திருடனல்ல. சோழராஜன். இம் மோதிரம் என் கைக்கு எவ்வளவு சரியாக விருக்கிறதென்பதைச் சற்றுக்கவனித்துப் பாருங்கள். அதைத் தவிர வேறு ஸாக்ஷ்யம் நான் சொல்வதற்கில்லை. இவ்வேஷத்தைக் கலைத்து அரசருக்குரிய உடைகள் அணிந்து கொண்டேனானால், என் தேசத்துக் குழந்தைகள்கூட என்னைத் தம் அரசனென்று கண்டுகொள்ளும்.

**ரண.**—அப்படியா! அதையும் சற்று நேரத்திற்கெல்லாம் பார்ப்போம். அதிருக்கட்டும். ஏன் இவ்வேஷம் நீ தரித்துக்கொண்டாய்?

**சோ.**—என்னுடைய சார்யங்களில் சிலவற்றை முடித்துக் கொள்வதற்கு இவ்வேஷம் ஸாதகமாயிருக்கிறது. நீ என்னை யேமாற்றிக் கைதியாகப் பிடித்த காலத்திற்கு முன்னெல்லாம், என்னுடைய கார்யங்கள் ஜயமாகவேயிருந்தன. நீயொருவன்தான் இவ்வேஷத்தைக்கண்டு அஞ்சாதவன்.

**ரண.**—இது என்ன வேஷமென்று தரித்துக்கொண்டாய்? இதென்ன வேஷம்?

**சோ.**—இனி மறைப்பதிலென்ன? இது சந்ந்யாஸமென்ற க்ரஹ தேவதையின் வேஷம்.

**ஒரு.**—இதென்னடய்யா! மேலேமேலே போகிறதே! பலே. ரணகேஸரி கெட்டிக்காரர்தான்.

**மற்றொரு**—என்னமோ இதெல்லாம் நிஜம்போலவே யெனக்குத் தோன்றவில்லையே! சநிவேஷமாவது! சார்ய ஸாதகமாவது!

**இன்னொரு.**—கேட்போமே. இந்த சனிவேஷத்தால் நீர் என்ன கார்யமைய்யா ஸாதித்துக்கொண்டீர்?

**ரண.**—கரிக்காலா! அந்த கேள்விக்குப் பதில்சொல்லு.

**சோ.**—அக்கேள்விக்கு பதில் சொல்வதென்றால் ஸாமாந்யத்தில் முடியாது. அது ஒரு பெரிய கதை, வேண்டுமென்றால் சொல்வதிலெனக்கு ஆக்ஷேபணை இல்லை.

**எல்லோ.**—சொல்லுங்கள்! சொல்லுங்கள்! சொல்லத்தான் வேண்டும்.

**சோ.**—சொல்லுகிறேன். ஆதிகாலம்முதல் என்னுடைய ராஜதானிக்கருகிலிருந்து இடிந்துபோன ஒரு காளிகா தேவியின் ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்வதில் ஒருஸமயம் நோக்கங்கொண்டேன். அதற்காக, அஸ்திவாரம் தோண்டிக் கொண்டிருக்கையில் ஒரு தாம்ரசாஸநத்தை வேலைக்காரர்கள் கண்டெடுத்து என்னிடம் கொண்டுவந்தார்கள், அதில் "யாதாமொருவன் பல்முளைத்த ராஜசிசுக்கள் மூன்றைக் கொண்டுவந்து இக்காளிகாதேவிக்குப் பலிகொடுக்கிறானோ, அவன் மண்டலேச்வரனாவன்" என்று எழுதியிருந்தது. அதைக் கண்டவுடன் என்னுள்ளம் பூரித்தது. காளிகாதேவி என்மீதுவைத்த அவ்யாஜகருணையின் அடையாளம் அது என்று நினைத்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் அந்த எண்ணம் மாறி, இவ்வாலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய நினைத்ததற்காகக் காளிகாதேவி இன்னொரு பரீக்ஷைசெய்து என்னை மண்டலேச்வரனாக்கவே நினைத்தாளென்று பூரணமாய் நம்பினேன். அக்காளியின் ஆலயத்திலேயே என்வாயினின்றும் ஸகல ஸங்கதிகளையும் தான்காளிபோலிருந்து பாசாங்கு செய்து தெரிந்துகொண்டு, ரணகேஸரி என்னைக் கைதியாகப் பிடித்துக்கொண்டு வாராதிருந்தால் இன்னமும் அந்த நம்பிக்கை எனக்குப் பூரணமாகவே இருக்கும். எப்படியாவது மூன்று ராஜசிசுக்களை ஸம்பாதித்துக் காளிக்குப் பலியிடுவதென்று தீர்மானித்துக்கொண்டேன். என்ன செய்வதென்று எனக்கு வழிமட்டும் தெரியவில்லை. இவ்வேஷத்தில் ஞாபகமும் எனக்கில்லை. ஒருநாள் இராத்திரித் தூங்கும்பொழுதுஸ்வப்நத்தில் காளிகாதேவி தோன்றி 'சந்ந்யாஸிவேஷம் பூண்டாயானால், உன் யோசனைகள் ஸபலமாகும்' என்று சொல்லியதுபோல் தோன்றிற்று. காளியின் அநுக்ரஹம் எனக்குப் பூர்ணமாயிருக்கிறதென்ற நம்பிக்கையால் களிகூர்ந்தேன். சநிவேஷத்தைத் தரித்து என்ன செய்வதென்று எனக்கு விளங்கவில்லை. காளியின் உத்திரவை மனதில் வைத்துக்கொண்டு, ஒவ்வொருதேசமாய் அலைந்து ராஜவம்

சங்கிலிக் கவனிப்பதென்ற தீர்மானத்துடன் வெளிப்பட்டேன். முதலில் சேரநகரம் போய்ச்சேர்ந்தேன். விசாரிக்கையில் சேரன் ஏதோ காரணார்த்தமாய் சநீச்வரனைப் பிரார்த்தித்துவந்ததாய்த் தெரியவந்தது. வேறு என்னவேண்டும். காளியின் க்ருபையில் எனக்கு த்ருடமான நம்பிக்கை வர வெகு சிரமமாயிருந்தும் அத்தனையும் லக்ஷ்யம் செய்யாமல், சநீச்வரனுடைய படமொன்றை யெழுதிவைத்து தனிமையான ஓரறையில் சேரன் அந்த க்ரஹதேவதையை ரஹஸ்யமாய்ப் பூஜைசெய்து வந்ததையறிந்துகொண்டேன். ஆயிரம் விதமான தந்த்ரங்கள்செய்து அந்தப் பூஜாக்ரஹத்திற்குள் ஒருமனிதன் திடீரென்று தோன்றி மறையும்படியான ஏற்பாட்டைச்செய்து முடித்துக்கொண்டேன். அதன் பிறகு அவன் ஆராதித்துவந்த சநியின் படத்தின் உடையாதிகளைக் கவனித்துக்கொண்டேன். அப்பொழுது என் வேஷத்தை பட்டிறக்கினல், அதுதான் சேரன் ஆராதித்துவந்தபடம். இம்மாதிரி வேஷங்கொண்டு சேரன் முன் திடீரென்று அவ்வறையில் பூஜாஸமயத்தில் வந்துதோன்றினேன். கண்மூடியிருந்த சேரன் கண்விழித்தவுடன் சநீச்வரன் உருவம் தன்முன் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான். உடனே நான் தடித்த குரலில் "சேரா—உன் இஷ்டம் பூர்த்தியாவதாக! நான் அநுக்ரஹிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உன்னுடைய முதற் குழந்தையை என்னிடம் ஒப்பித்து விடவேண்டும்" என்றேன். அவன் சற்று மலைத்தான். நான் த்வரிதப்படுத்திக் கோபம் காட்டினேன். இசைந்தானவன். ஸந்தோஷமடைந்தேன். நான் காளிகையைத் துதித்தேன். அடுத்தநிமிஷம் மறைந்தேன் முற்கூறிய தந்த்ரத்தால். அவன் செய்துகொடுத்த வாக்குத்தத்தம் அவனுக்கு ஞாபகமிருக்க வேண்டியதற்காக, அடிக்கடி இவ்வேஷத்துடன் அவனைப் பார்த்துவந்தேன். அவனுக்கும் தான் எதற்காக சநீச்வரனை பூஜைசெய்து வந்தானோ அக்கார்யம் தெய்வாதீனமாய்ப் பலித்தது. அவனும் தான்செய்த வாக்குத்தத்தத்தை மறக்கவில்லை. சநீசுவரனை ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் உங்கள் பாண்டியனுக்குண்டானதுபோல் அவனுக்குண்டாகவில்லை. ஆனால் அவனுடைய பார்யை கர்ப்பவதியானால் அப்பொழுது அவன் எண்ணம் எப்படியாமோ மாறுமோ மாறாதோ சொல்லமுடியவில்லை. காலவரையில் ஒரு ராஜசிசு கிடைத்தென்ற த்ருப்தியுண்டாயிற்று. இரண்டாவது சிசு ஸம்பாதிக்க ப்ரயத்னமெடுத்தேன். உங்களரசனாகிய பாண்டியன் அந்த ஸமயம் கெட்ட மார்க்கத்தை யநுஸரித்து ஸ்த்ரீகளிலும் சூதிலும், கள்ளிலும், காலங்கழித்துவந்தான். ப்ரஜைகளில் அநேகர் அவனுக்குவிரோதமாகவேயிருந்தார்கள்.)

(ஹரிஹரமேதயர் ப்ரவேசித்து மலைத்து நிற்கிறார்.)

ஆகையால் அது நல்லஸமயமென்றறிந்து, சேரனைக்கொண்டு, படையெடுக்கச்செய்தேன். சநீச்வர உருவத்துடன் அவனுக்கு உதவி செய்வதாய் வாக்களித்து முதற் குழந்தையைப் பலிகொடுப்பதாக அவனிடமிருந்து வாக்குத்தத்தம் வாங்கிக்கொண்டு, பிறகு சேரனுடைய ஸேனையைப் புறங்காட்டியோடச் செய்யலாமென்பது என் யோசனை.

**ஹரிஹர.**—ஆம்!—ஐயோ! இந்தச் சண்டாளன் தானப்பா சோழன் ஸேனையின் ஒரு பாகத்தை இட்டுவந்தவன். இந்த வேஷந்தானையா! இந்த சநீச்வரன் நம்மரசனுடைய கஷ்ட காலங்களுக்கெல்லாம் காரணமாயிருந்தது!

**ஒரு.**—என்ன! ஹரிஹரமேதயரே! என்ன சொல்லுகிறீர்கள்.

**ஹரிஹர.**—இந்த சநீச்வரன்தான் அரசனுடன் திரும்பி வந்த, சேரஸேனைகளைப் புறங்காட்டி யோடும்படி அடித்தவன். அவனுடன் சில ஆட்கள் வந்தார்கள். அவர்கள் சோழஸேனையைச் சேர்ந்தவர்கள் என்று கண்டுபிடித்து நான்கூட அநேக ஸமயங்களில் ப்ரஸ்தாபித்திருக்கிறேனே.

**மற்றொ.**—ஆனால் இவன் சொல்லுகிற கதைகள் முழுவதும் வாஸ்தவமாக இருக்கும்போல வல்லவோ தோன்றுகிறது. பேஷான கட்டுக்கதை யென்றல்லவோ நினைத்தேன்.

**இன்றொ.**—என்னென்ன ஸங்கதிகள் உள்ளூர நடந்திருக்கின்றன? நமக்கொன்றும் தெரியாமல்!

**ஒரு.**—சரி—கதை வேடிக்கையாக விருக்கிறது மேலே சொல்லட்டும்.

**சோ.**—அப்படியே சேரன் படையெடுத்து வந்தான். பாண்டியன் ஸேனை முறியடிக்கப்பட்டு, நாலா பக்கங்களிலும் ஓட ஆரம்பித்தது. பாண்டியன் வருந்தி சநீச்வரனை உதவிக்கழைத்தான். அவன் மனதில் ஒரு பயபக்தியை யுண்டாக்க, அவன் அப்படியழைத்தது ஸௌகர்யமாயிருந்தது. அவனை நான் பின்பற்றி அலைந்து திரிந்தே வந்தமையால், திடீரென்று அவன் முன்னர் தோன்றினேன். சிறிய கதையைப் பெரிதாக்குவானேன். வாக்குத்தத்தம் வாங்கிக்கொண்டேன். சேரன் ஸேனைக்கு முன்னமேயே உத்தரவிடப்பட்டிருந்ததால் என் உருவத்தைக்கண்டவுடன், அச்சேனை புறங்காட்டி யோடிற்று. அவ்வளவுடன் என் கார்யம் முடிவாயிற்று.

(சேரன், வீரமார்த்தனன், அம்பாலிகை, அமரேந்த்ரன் ப்ரவேசிக்கிறார்கள்.)

**சே.**—(சோழனைக்கண்டு நடுங்கி) ஐயையோ—இதென்ன ரணகேஸரி,

**வீர.**—ரணகேஸரி! இதுவரையில் கண்ணெதிரில் அதிசயம் நிகழாமல் என்னை வருத்திய சநி இதோ எதிரே வந்துவிட்டதே.

**ஒரு.**—கதையெல்லாம் கடைசியில் வாஸ்தவமென்றல்லவோ முடியும்போலிருக்கிறது

**மற்றொ.**—ஆமடா! ஒரு வேளை ரணகேஸரி, வீரமார்த்தனனை இவ்விதம் கண்டு ஆச்சர்யப்படும்படி ஏற்பாடு செய்துவைத்திருக்கிறானோ, சேரனல்லவோ கண்டு பயப்படுகிறான்.

**இன்றொ.**—இதெல்லாம் நாடகம்போலல்லவோ இருக்கிறதே.



**ஒரு.**—இன்னும் வேடிக்கை பார்ப்போம்.

**மற்.**—நம்மரசனை அப்படியானால் நாம் அந்யாயமாகவா விரட்டினோம், ஐயோ! என்ன கஷ்டப்பட்டாரோ! எங்கெங்கே யலைந்தாரோ!

**ரண.**—ராஜந். சேரராஜரே பயப்படவேண்டாம். அவன் சநியுமன்று ஒன்றுமன்று இவன் கரிக்காலச்சோழன். இவன் சனிவேஷத்துடன் உங்களை இப்பாடு படுத்தினான். ஆகையால் கவலைப்படாதேயுங்கள். இப்பொழுதவன் நம்முடைய கைதி.

**சே.**—ஹா—!

**வீர.**—ஹா—!

**ரண.**—நீங்கள் ஸந்தேஹப்படவேண்டாம்; அவ்வளவும் வாஸ்தவம். இவன் ஒரு ராஜ சிசுவைக் காளிக்குப் பலியிடப்போகிற ஸமயத்தில் நான் கையுங்களவுமாகக் கண்டுபிடித்து, அக்குழந்தையைத் தப்புவித்து இவனையும் கைதியாக்கக்கொண்டு வந்தேன். நான் கோவிலிற்குள் காளிகையாக யிருந்து இவன் வாயிலிருந்தே புதிதாகக் கொண்டுவந்த எட்டு வயதுள்ள ராஜகுமாரி விஜயநகரத்து அரசன் புதல்வியென்று தெரிந்துகொண்டேனையால், அவருக்கும் இங்கு வந்து சேரும்படி நிருபம்விடுத்திருக்கிறேன் அவரும் இங்கே வருவார். அக்குழந்தையும் இங்கிருக்கிறது.

**வீர.**—ஆனால் நம்முடைய சரித்ரங்கள் முழுவதும் இப்பொழுது இவன் முகமாய் எல்லாருக்கும் தெரியுமோ?

**ரண.**—எல்லோருக்கும் இவன் யோக்யதை தெரிந்தபிறகு, அதில் என்ன ரஹஸ்யம் வேண்டியிருக்கிறது?

**வீர.**—என்ன அவமானம்! நாமெப்படி ஏமாந்து போனோம்!

**சே.**—அவன் அப்படியெல்லாம் செய்தானே. எப்படி நம்பும்படியாயிருந்தது, அவன் செய்த கார்யங்களெல்லாம்.

**வீர.**—இப்பொழுதுகூட நிஜமென்று நம்பும்படியாக இல்லையே—

**ரண.**—ஏதாவது ஸந்தேஹங்களிருந்தால் கேட்கலாம். அவன் பதில் சொல்லத் தயாராகவே யிருக்கிறான்.

**வீர.**—சோழராஜரே—இதெல்லாம் வாஸ்தவந்தானா?

**ஒரு.**—நடந்த ஸங்கதிகள் இவருக்கும் முழுவதும் தெரியாது போலிருக்கிறதே—

**சோ.**—ஆம் ஸகலமும் வாஸ்தவந்தான்.

**வீர.**—எங்கே! இந்தக் கதையை விஸ்தாரமாய்க் கேட்போம், ரணகேஸரி, இவன்சொன்ன கதைகளையெல்லாம் ஸவிஸ்தாரமாய்ச் சொல்லு கேட்போம் (ரணகேஸரியும் வீரமார்த்தனனும் தனிமையில் பேசிக்கொள்ளுகிறார்கள்.)

**சே.**—ஏண்டா சோழா! நான் செய்த அறையில் திடீரென்று எப்படியடா தோன்றி மறைந்தாய்!

**சோ.**—அது வெகு ஸுலபமாயிற்றே! அது ஒரு பார்ஸி நாடகக் காட்சிதானே.

**சே.**—பாண்டியன்மீது படை நானெடுப்பதால் உன்னுடைய (சநி உருவத்துடன் கூடிய) சிலகார்யங்கள் ஸாதகமாகும் என்று சொன்னாயல்லவா? அப்பொழுதே க்ரஹதேவதைக்கு மனித ஸஹாயம் எதற்கு என்று ஸந்தேஹித்தேன். அதற்கு அடுத்த நிமிஷத்தில் என்ன அழகாய் ஸமாதானங்கள் சொல்லி ஏமாற்றிவிட்டாய்.

**சோ.**—அப்படியெல்லாம் ஸமயத்திற்குத் தகுந்தபடி ஸாமர்த்ய மிருந்ததால்தானே என் கார்யங்கள் ஜயமாகிக்கொண்டே வந்தன.

**ரண.**—இவ்வளவு பாபங்கள் செய்ததினால்தானே இந்த கதிக்கு அவைகள் உன்னை இத்தனை சீக்ரம் கொண்டுவந்தன.

**வீர.**—நொந்தவனைப் புண்படுத்தாதே சோழா—என் பத்நி அம்பாலிகை ஐந்துமாதம் கர்ப்பமாயிருந்த காலத்தில் நான் தனிமையாய் என்னுடைய அறையில், சநீச்வரனுடன் உடன்படிக்கை செய்துகொண்டதாய் நினைத்திருந்த விஷயங்களைப்பற்றி, என் மனதில் நான் ஆராய்ந்து கொண்டிருக்கும்பொழுது, நீ திடீரென்று அவ்விடம் தோன்றினாயல்லவா? ஞாபகமிருக்கிறதா?

**சோ.**—ஞாபகமில்லாமலென்ன?

**வீர.**—நான் மனதில் நினைத்த கார்யங்களையெல்லாம் கண்டு, அந்த ஸமயம் பேசினாயே! அதெப்படி உன்னால் முடிந்தது? அந்த ஸமயம் எப்படி அங்குவந்தாய்?

**சோ.**—நல்ல ஸந்தேஹம் கேட்டீர்கள்! நீங்கள் குழந்தையைப் பலிகொடுப்பதாக வாக்களித்திருந்ததால் உங்கள் மனைவி கர்ப்பமானாளா அல்லவா என்று அறிவதற்காக நான் அடிக்கடி உம்முடைய அரண்மனைக்கு வரும் வழக்கத்தை வைத்துக்கொண்டேன். ஆனால் உம் பெண்சாதி கர்ப்பமானதுமுதல் ஐந்து மாதகாலம் நான் இங்கே வராமலே யிருந்ததால் விஷயம் எப்படி யிருக்கிறதென்று பார்க்கவேண்டியதற்காக நான் அன்றைக்கு அங்கு வந்தேன்—நீர் உம்முடைய அறையில் தனிமையாய் இருந்தீர். சற்று நின்றேன். கவனித்தேன். நீங்கள் மெய்மறந்து உங்கள் மனதிற்குள் ஆராய்வதாக எண்ணி வார்த்தைகளைக் கண்டோக்தியாய்ச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அவ்வளவையும் கவனித்தேன். பிறகு உம்முடைய அறையில் ப்ரவேசித்து, தெய்வ அறிவால் எல்லா விஷயங்களையும் அறிந்ததுபோல் பாசாங்கு செய்து பயமுறுத்தினேன்.

**வீர.**—அடே அப்படியா! அப்பொழுது நீ கையைப் பிடித்ததில், எனக்கு அசாதாரணமான வலியுண்டானதுமன்றி, என் கையில் கங்கணம் போன்ற ஒரு ரேகையும் உண்டாயிற்றே! அதெப்படிச் செய்தாய்?

**சோ.**—அதுவுமொரு சொற்படி வித்தைதான். இதோபாரும். (சட்டையின் உட்புறத்திலிருந்துஏதோ வொன்றை எடுத்து) இது வெளிப்புறம் பார்த்தால் தோல், உட்புறம் முழுவதும் வெகுஸன்னமான சிறு ஊசிகள் பதிக்கப்பட்டிருக்கின்றன, அன்றியும் அவ்

ஊசிகள் உட்புறம் கூடாய் நுனியில் த்வாரமுள்ளன வாயிருப்பதுடன் அக்கூட்டில் கருப்புச் சாயவஸ்து நிரப்பப்பட்டிருக்கிறது. ஆகையால் பிறர் கையை வளைத்துப் பிடிக்கவும் அவ்வூசிகள் சரீரத்தில் குத்தவும், சாயம் உள்ளே இறங்குகிறது. அதனால் கரிய ரேகை உண்டாகிறது.

வீர.—நல்ல யோசக்காரர் ஐயா நீர்! அது கிடக்கட்டும். நீலகண்ட சாஸ்த்ரியினிடம் நான் பேசிக்கொண்டிருந்தவென்று அந்த ஹாலில் நீர் இழிவாகச் சிரித்தீரே! அங்கு எப்படி வந்து சேர்ந்தீர்? நகைத்தது யார் என்று தேடி உம்மைப் பிடித்துவிட்டால் உம்முடைய யோக்யதை வெளியாய்விடுமென்று நீர் ஏன் பயப்படவில்லை?

சோ.—அதற்குச் சிலதினங்களுக்கு முன் உம்மரண்மனைக்கு அடிக்கடி வரும் வழக்கம்போல் வந்திருந்தேன். அன்று நீரும் ராணியும் பேசிக்கொண்டிருந்ததையும், ராணி நீலகண்ட சாஸ்த்ரிகளைப்பற்றி பேசியதையும், அவரை வரவழைக்க நீர் உடன்பட்டதையும் நான் ஒட்டுக்கேட்டறிந்தேன். அப்பொழுது உம்முன் வருவதற்குத் தகுந்தபடி வேஷமில்லாததால் நான் வரவில்லை. நீலகண்டசாஸ்த்ரி அவச்யம் கூடிய சீக்கிரம் வருவார் என்று எனக்குத் தெரியும். ஆகையால் அவர் வந்துசேரக்கூடிய காலத்தைக் கணக்கிட்டுக்கொண்டு மறுபடி நான் அவ்விடம் வந்தேன். நான் நினைத்தபடி ஸரியாக இருந்தது. நானும் அரண்மனைக்குள் நுழைந்தேன். நீலகண்டசாஸ்த்ரிகளும் வந்தார். உங்களுடைய ஸம்பாஷணை முழுவதும் கேட்டுக்கொண்டிருந்தேன். இடையிடையே மனதில் பயந்தோன்றுமாறு சிரித்தேன். பிறகு உடக்கு நேராடிவந்து பயமுறுத்தினேன். போகும் வழியில் அஜாதசத்ருவான நீலகண்டசாஸ்த்ரிகளைக் குத்திக்கொன்றேன். நீர் கேட்ட ஸந்தேஹத்திற்கு ஸமாதானம், மனிதஸ்வபாவம் பயங்கரமான கார்யங்களை விலக்குவதாகையால், சரீச்வர ரூபியான என்னைத் தேடமாட்டார்கள் என்று நிச்சயமாய் நம்பினேன் என்பதுதான்.

வீர — நீலகண்டசாஸ்த்ரிகளை ஏன் கொன்றாய்?

சோ.—அவருடைய சக்தியில் உனக்குப் பூரணமான நம்பிக்கையிருந்ததை உங்கள் ஸம்பாஷணையிலிருந்து அறிந்துகொண்டேன். ஆதலால் அவரையே கொலைசெய்து விட்டால், சரீச்வர ரூபியாயிருந்த என்னிடம் விசேஷ பயம் உமக்குண்டாகும். என்னுடைய கார்யம் இடையூறின்றி முடிந்தேறும். இதுதான் என் யோசனை.

வீர.—நீ அப்படி செய்தது எவ்வளவு கஷ்டங்களுக்கிடமாயிற்று!

சோ.—பிணத்தை நீர் தூக்கிக்கொண்டு செல்லுவீரென்றாவது, தூர்மதி யெதிர்ப்படுவானென்றாவது, குடிகள் உம்மை ராஜ்யத்தைவிட்டு பஹிஷ்காரம் செய்வார்களென்றாவது இவ்வளவு தூரம் நான் யோசிக்கவேயில்லை.

(விஜயநகரத்தரசன் ப்ரவேசிக்கிறான்.)

விஜய: அர.—ஐயா! எங்கே என் புதல்வி?

ரண.—கவலைப்படாதேயுங்கள். இதோ பத்ரமாயிருக்கிறாள். அழைத்துவரச் சொல்லுகிறேன். (ஸேவகன் அழைத்துவர) இக்குழந்தைதானா?

விஜய: அர.—ஆம்! ஆம்! கண்ணே! கண்ணே.
(இறுகத் தழுவிக் கண்ணீர் விடுகிறான்.)

ரண.—இக்குழந்தையை, எப்படி இழந்தீர்கள்?

விஜய: அர.—திருடர்கள் மூலமாகத்தான் போயிருக்கவேண்டுமென்று நினைத்தேன்.

ரண.—திருடர்களேதான் கொண்டு போனார்கள் என்று நிச்சயமாய்த் தெரிந்துகொண்டேன். ஆனால் குழந்தையைக் காளிக்குப் பலியிடுவது அக்கள்வன் உத்தேசம்.

விஜய: அர.—ஐயோ! அப்புறம்?

ரண.—நான் அகஸ்மாத்தாய் அக்கோவிலுக்கு அன்றைக்குப்போயிராவிடில் இந்த முட்டாள்தடியன் உம் புதல்வியைப் பலிகொடுத்தேயிருப்பான்.

விஜய: அர.—ரணகேஸரி, நீர் செய்த உபகாரத்திற்கு நானென்ன ப்ரதியுபகாரம் செய்யப் போகிறேன்.

ரண.—நான் ப்ரதியுபகாரத்தை யபேக்ஷித்துக் கார்யம் செய்பவனுமல்ல, ஒருவருக்காகவென்று ஒரு கார்யம் செய்பவனுமல்ல மனிதன் செய்யக் கடமைப்பட்டிருக்கும் கார்யங்களைக் குறைவில்லாது முடிப்பதில் உயிர் துறக்கவேண்டிவந்தாலும் விரதமாயிருப்பவன்.

(மதியூகி சோழன் க்ரீடத்தோடும் உடையோடும் வருகிறான்.)

ரண.—வாரும் மதியூகியாரே. நானனுப்பிய கடிதம் வந்து சேர்ந்ததென்று நம்புகிறேன்.

மதியூகி.—ஆம் வந்தது. அதனால்தான் க்ரீடத்தோடும் ராஜரீக உடையோடும் வந்தேன். அன்றியும் நீர் கடிதத்தில் எழுதியிருந்த விஷயங்களெல்லாம் வாஸ்தவமென்று, அவமதிக்கவொண்ணாத ஒரு இதர ஸாக்ஷ்யத்தாலும் அறிந்துகொண்டேன்.

ரண.—அதென்ன ஸாக்ஷ்யம்?

மதியூகி.—இதோ! இந்த புஸ்தகந்தான். இதுதான் பலமான ஸாக்ஷி. இது முழுவதும் ஸ்வஹஸ்த லிகிதம். இதோ இந்த சந்நிவேசத்துடன் இருக்கும் இவர் அவ்வக்காலங்களில் செய்த கார்யங்களையும் சொன்ன வார்த்தைகளையும் எழுதிவைத்திருக்கிறார்.

ரண.—(வாங்கிப்பிரித்து சிற்சில விடங்களை வாசித்துப்பார்த்து) சோழன் சொன்ன கதைகளில் கொஞ்சங்கூட பொய்க்கலப்பென்பதே இல்லையே!

வீர.—எங்கே பார்ப்போம் (வாசித்து ஆச்சர்யப்படுகிறான். சேரன் வீரமர்த்தனன் தோளின்மேல் எம்பிப் பார்த்து வாசித்து ஆச்சர்யப்படுகிறான்.)

ரண.—மஹாஜனங்களே! இந்தப் புஸ்தகத்தை வாங்கிப்பிரித்து வாசித்துப் பாருங்கள் (புஸ்தகத்தை நீட்டுகிறான். ஒருவன் வாங்கிக்கொள்ளுகிறான். எல்லோரும் வந்து கூடி வாசித்து ஆச்சர்யப்படுகிறார்கள்.)



1915 MADRAS

என்டா! சோழா இந்த புஸ்தகம் எதற்காக எழுதிவைத்தாய்.

சோ.—வார்த்தைகள் சொல்லுவதில் முன் பின்னாயிருந்தாலும், செய்த கார்யங்களை மறந்துபேசினாலும், புத்திசாலிகளாயிருப்பவர்கள் சற்று ஸந்தேஹிக்கக்கூடும். ஆகையால், அவைகளை யெழுதிவைத்து அடிக்கடி மனனம் செய்து வருவதால், அப்படிப்பட்ட பிழைகளேற்படாதென்ற எண்ணத்தால் செய்தது.

வீர.—என்ன முன் யோசனை! நீ நல்ல புத்திசாலியப்பா! உன்னுடைய புத்தி நல்வழியில் சென்றிருந்தால் உன்னுடைய ஸாமர்த்யத்திற்கு உலகம் சொல்லொணா ஸௌக்யத்தை யனுபவித்திருக்குமே.

ரண.—மதியூகியாரே இந்த க்ரீடத்தையும் இராஜரீகவுடையையும் நீர் எதற்காக இங்கெடுத்து வந்தீர்?

மதியூகி.—ஸ்வாமி! ஜனங்களுக்கு இப்புஸ்தகத்திலிருப்பவைகளை வாசித்துக்காண்பித்து, அவருடைய நிஜமான யோக்யதையையும் மோசங்களையும் கல்நெஞ்சையும் ஜனங்களுக்குப் பரிஷ்காரமாய் எடுத்துக் காண்பித்தவுடன் ஜனங்கள் கலகம் செய்து இனி சோழன் தமக்கு அரசனாகக்கூடாதென்றும் அவனால் மிகுந்த துன்பமடைந்த பாண்டியனை தமக்கரசனாக வேண்டுமென்றும் கல்லோலப்படுத்தினார்கள். ஆகையால் க்ரீடத்தையும் ராஜரீக உடையையும் ஏற்று அதன் மூலமாய் ராஜ்யத்தையும் அங்கீகரித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்வதற்காகவே வந்தேன்.

ரண.—ஆனால் ஒன்று மறந்தேன். இந்த புஸ்தகம் இவ்வளவு ஸுலபமாய் உங்கள் கையிலெப்படிக் கிடைத்தது.

மதியூகி.—ஸுலபமாய்க் கிடைக்கவில்லை அரசனை ஒருநாள் கிடைமென்று காணவில்லை. அவரைப் பற்றி இன்ன நினைப்பதென்று தோன்றவில்லை. எங்கே போவதாயிருந்தாலும்என்னிடம்ஏதாவது சாக்குப் போக்குகளாவது சொல்லாமல் அவர் போவதேயில்லை. ஆகையால் அரசனை எங்கும் தேடலானேன். ஒரு இடத்திலும் காணவில்லை. அவர் பூஜாக்ரஹமென்று வெளிச்சம் காண்பித்து நிஜத்தில் தான் வேஷம் போட்டுக்கொள்வதற்காக ஏற்படுத்தி வைத்திருந்ததும் ஒருவரும் உள்ளேவரக்கூடாதென்று கட்டுப்பாடு செய்திருந்ததுமான ஓர் அறையைத் தவிர வேறெங்கும்காணாமையால், அதையும் திறந்துபார்க்கும்போது அங்கு இப்புஸ்தகம் கிடந்தது, கடைசி வரியைப் பாருங்கள். விஜயநகரத்து அரசன் புதல்வியை இன்றைக்குக் காளிகாதேவிக்கு பலி கொடுப்பதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்று எழுதியிருக்கிறது.

விஜய. அர.—ரணகேஸரியாரே! என்ன உபகாரம் ஐயா! நீர் செய்தது.

சே.—பாண்டியரே. நான் தெரியாத்தனத்தால் சரீச்வரன் வசத்திலிருப்பதாய் நினைத்து தங்களுக்கிழைத்த தீமைகளுக்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

வீர.—சேரரே அப்படியெல்லாம் ஒன்றும் சொல்லவேண்டாம். நீர் செய்ததெல்லாம் ஸஹஜமே. உம் பேரில் ஒரு குற்றமுமில்லை; குற்றம் முழுவதும் விதியினது. ஊழ்வலியை யாரால் விலக்கமுடியும்?

குடிகள்.—ஸ்வாமி. நாங்கள் தீர விசாரியாமல் செய்தபிழை ஸாமாந்யமன்று, அந்யாயமாய் உங்களை இத்துன்பங்களுக் காளாக்கினோமே என்ற பச்சத்தாபமொன்றே எங்களுடைய அறியாத்தனத்திற்கு போதுமான தண்டனையாயிருக்கும். ஆகையால் எங்களைத் தயவுசெய்து மன்னித்து இந்தராஜ்யத்தைமுன்போல் கைக்கொண்டு ரக்ஷிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம் (எல்லோரும் வணங்குகிறார்கள்)

வீர.—அப்படியே செய்வோம். நீங்கள் ஒன்றுக்கும் வருத்தமடையவேண்டாம். அரசன் பிசகான வழியில் நடப்பதாகத் தெரிந்ததும் அவனைச் சீர்திருத்த முயன்றீர்கள். அதில் வெளியான உங்கள் தீரம், மிகவும் மெச்சத்தக்கது. இருந்தாலும், நீங்கள் தீரவிசாரித்து செய்திருக்கலாம். ஆனால் நீங்கள் தீரவிசாரியாமல் செய்ததே, தெய்வானுகூலத்தால் எனக்கு நன்மையாக முடிந்தது. அதனால் ரணகேஸரி முனைந்து வேண்டிய ப்ரயத்னங்கள் செய்து, என் பேரில் கொஞ்சங்கூட தோஷமில்லையென்பதை நிரூபித்தான். ஸாக்ஷாத் ஆகதீசன் நமக்குத் துன்பங்களை ஏற்படுத்துவதும் நம்முடைய நன்மைக்காகவே என்ற பெரியோரின் வார்த்தையினுண்மையை நானின்றுதான் அநுபவத்தால் அறிந்தேன். என்னருமை ப்ரஜைகளே—உமதிஷ்டப்படியே யாகுக.

ரண.—ராஜந்—இது சுபமுகூர்த்தமாயிருக்கிறது. மறுபடி இப்பொழுதே தாங்கள் இவ்விரண்டு ராஜ்யங்களுடைய க்ரீடாதிபத்யத்தையும் வஹிக்கலாம்.

வீர.—ரணகேஸரி. என்னுடைய ராஜ்யம் எனக்குப்போதும். நான் சோழனுடைய ராஜ்யத்தை விரும்பவில்லை.

ரண.—ஆனால் சோழ நாட்டு ஜனங்கள் தமக்குச் சோழன் அரசனாக விரும்பவில்லையே.

வீர.—நாம் போய் ஜனங்களை சாந்தப்படுத்தி ஸமாதானஞ்செய்து சோழனைமறுபடி அவன் ராஜ்யத்தில் அரசனாக்கிவிட்டு வருவோம்.

ரண.—இவ்வளவு பாபங்கள் செய்து, ஸத்குணநிதியான உங்களையும் இத்தனை துன்பங்களுக்கிலக்காக்கிய இந்தமஹாபாபியை, என்ன தண்டனை செய்யலாமென்று நான் யோசித்துக்கொண்டிருக்க, நீங்கள் அவனுக்கு சிபார்சு செய்யவேண்டுமென்கிறீர்கள். எல்லாம் தெரிந்த தங்களுக்கு நான் என்னத்தைச் சொல்லுகிறது.

வீர.—அப்பா! ரணகேஸரி! என்ன நீ கூட இப்படிச் சொல்லுகிறாய்! சோழன் செய்பவாவது! நான் துன்பப்படுவதாவது! இதெல்லாம் வெறுங்கதையல்லவா? அவனன்றியோ ரணுவுமசையாதென்றபடி ஈசுவரனுடைய ஆக்ஞையின்றி, ஒரு கார்யமும் நடவாது. நான் செய்கிறேன், நான் போகிறேன், என்றுமனிதன் வீண் அஹம்பாவத்தால் கெட்டு நாசத

(இதன் தொடர்ச்சி 470-ம் பக்கம்)

## சிறுவர் ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
## CHILDREN'S & LADIES' PAGES

# மாதவி கங்கணம்

### அத்யாயம்-7

### துர்க்கபூஜை : படகுப் பந்தயம்

(438-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவிபுரத்துப் படகுகள் முதலில் புறப்பட்டன. போகவேண்டிய தூரம் ஸுமார் ஒரு மைல். படகுகள் கீழ்த்திசை நோக்கி நவகுமாரருக்கு எதிராக நாட்டியிருந்த ஜயஸ்தம்பத்தை நீரோட்டத்தின் உதவியுடன் அடையவேண்டும். விரீஷ் நரேந்திரன் இருவரும் நவகுமாரர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தனர். பந்தயம் ஆரம்பித்தவுடன் நரேந்த்ரனுக்குத் தன் தேஹமே தெரியாதபடி அவ்வளவு உத்ஸாஹம் உண்டாய்விட்டது. அவன் அடிக்கடி ஆனந்தக் கூச்சலிடுவதும் கைதட்டுவதுமா யிருந்தான். விரீஷ் அவனது ஆர்ப்பரிப்பை அடக்க முயன்றும் ப்ரயோஜனப்படவில்லை.

தேவிபுரத்துப் படகுகள் வந்தவிதம் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருந்தது. ஒருமைல் தூரத்துக்கப்பால் இருந்ததால்முதலில் அவைகள் கண்களுக்குப் புலப்படவில்லை. சற்றுநேரத்துக்கெல்லாம் அவைகள் கறுப்புப் புள்ளிகள்போலத் தோன்றின, வரவர அப்புள்ளிகள் பரிமாணத்தில் பெரியதாய்க் கொண்டிருந்தன. துடுப்புகளின் சப்தமும் படகோட்டிகளின் பாட்டும் கங்காநதியின் ஜலம் பாயும் ஒலியோடு கலந்து ஒலித்துக்

(469-ம் பக்கத் தொடர்ச்சி.)

திற்கு ஆளாகிறேனேயன்றி, இதனால் அவன் அடையும் பலன் யாதுமிலது. ஈச்வராஞ்ஞப்தமானதும் அநாதியுமான கர்மசக்தி சக்ரமானது சுழன்று எந்தக் கார்யம் எந்தக் காலத்தில், எந்தக் காரணத்தால், யாரைக்கொண்டு எவ்விதமாய் நடக்கப் பெறவேண்டுமோ, அந்தக் கார்யம் அந்தக் காலத்தில், அந்தக் காரணத்தால், அவரையே கொண்டு, அவ்விதமாக முடிவடைகிறதென்பதை அறியாயோ? ஆகையால் ரணகேஸரி! இந்தச் சோழன் எனக்கு ஒரு தீங்கு மிழைக்கவுமில்லை. எனக்கு வந்த கஷ்டங்களையெல்லாம் நானே பூர்வஜந்மத்தில் இழைத்துக் கொண்டதன்றி வேறன்று. ஆகையால் சோழனுக்கு அவன் ராஜ்யத்தையே திருப்பிக் கொடுத்துவிடுவது மேன்மை. நாமே போய் அவனுக்கு வேண்டிய உதவிபுரிந்து அவனை ராஜ்யத்தில் ஸ்தாபிப்போம்.

ரண.—லோகஸ்ஸமஸ்தா: ஸுகினோ பவந்து.

(வீரமர்த்தனனுக்குப் பட்டாபிஷேகம்செய்து எல்லோரும் நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

**ரணகேஸரி முற்றிற்று.**

கொண்டிருந்தன. வரவரப் படகுகள் அருகே வந்தன. அவைகள் கால்களை விரித்துக்கொண்டு ஜலத்தின் மேல் நீந்துகின்றதோர் நூதனமான கறுப்புப்ராணிகளாகத் தோன்றின. கடைசியாகக் கொடிச்சீலைகள் கண்ணுக்குத் தென்பட்டன. எட்டுப் படகுகள் துடுப்புகளின் சப்தத்துடனும் படகுக்காரர்களுடைய பாட்டுகளுடனும் கோஷித்துக்கொண்டு குறிப்பிட்ட விடத்திற்கு வெகுஸமீபத்தில் வந்துவிட்டன. கரையிலிருந்தவர்கள் எல்லோரும் ஒரே ஆரவாரஞ்செய்தனர். எல்லாப்படகுகளும் அருகே வரவர முதல் படகு மின்னலையொத்த வேகத்துடன் வெற்றி ஸ்தம்பத்தை அணுகியபோது ஜனங்கள் ஓயாமல் காது செவிடாகும்படி கூப்பாடுபோட்டுக் கைகொட்டி ஆர்ப்பரித்தனர். நவகுமாரர் எழுந்து அப்படகின் மாலுமிகளுக்கு அன்புமொழி கூறி அவர்களை வரவேற்றார். ஸ்த்ரீகளும் தாழ்ந்த த்வனியில் தங்களுடைய ஸந்தோஷத்தை உணர்த்தினர்.

அப்படகின் சுக்கான் செலுத்துவோன் நவகுமாரரிடமும் அவருடைய வம்சஸ்தர்களிடமும் அத்யந்த ப்ரீதியும் ராஜ விச்வாஸமுமுடைய பழயநாளைய மாலுமி. இவ்விஷயம் நவகுமாரருடைய ஸந்தோஷத்தை அதிகரித்தது. அவர் அம்மாலுமியைப் பார்த்துப் புன்சிரிப்புடன் "எனது நம்பிக்கையுள்ள ஸேவக! நான் தேவிபுரத்தை விட்டு வந்து வெகுநாளாயிற்று. நான் அவ்விடமிருந்தபோது உனக்கிருந்த பலமும் பராக்ரமும் இன்றைவரைக்கும் சிறிதும் குன்றாமலிருப்பதைக் காண எனக்கு அதிக த்ருப்தியாயிருக்கிறது" என்றார்.

இதைக்கேட்டு அடங்காப் பூரிப்படைந்த அம்மாலுமியானவன் நவகுமாரரை நமஸ்கரித்துப் பயபக்தி மரியாதையுடன் "ஸ்வாமி பழய தலைவரைக் காண்பதே வெற்றியைத் தருகின்றது" என்று வணக்கமாய்ப் பதிலுரைத்தான்.

"ஆமாம் என்றைக்கும் நீ ஜயமடைவாய். இணையற்ற மாலுமியாகிய நீ தேவிபுரத்திலிருக்குமட்டும் வேறெவரும் வெற்றியடையார். இன்றிரவு வீரநகரத்தவர்கள் தோல்வியடைவார்கள் என்பது நிசசயம். நமது நண்பன் விரீஷிடம் செல் முதல்வந்த படகை அவன் தெரிந்தெடுப்பான்" என்றார் நவகுமாரர்.

விரீஷ் பந்தயப் படகைத் தெரிந்தெடுக்கச் சென்றான்; நரேந்த்ரனுடைய வதனம் சற்று களங்கமடைந்தது. நவகுமாரர் மத்யஸ்தர் அல்லவா? அவர் தேவிபுரத்தார் சார்பாய் அவ்வளவு தீரமாய்ப் பேசுவது ந்யாயமா? வீரநகரத்தார் தோலவியடைவது நிச்சயம் என்று அவர் சொல்வது தகுமா? "வீரநகரத்துப் படகுகள் புறப்பட்டுவிட்டன" என்று யாவரும் கூவினார்கள். வரம்புகடந்த ஸந்தோஷத்தால் ஆத்ரமுடையவனாய் நரேந்த்ரன் ஆற்றங்கரைக்கு ஓடினான்.

துடுப்புகள் ஜலத்தைத் தள்ளிக்கொண்டுவரும் சப்தமும், படகுக்காரர்கள் உல்லாஸமாய்ப் பாடிக்கொண்டுவரும் த்வனியும் நெருங்க நெருங்கக் கேட்கலா



யின. அகன்ற அம்மஹாநதியின் நீர்ப்பரப்பின்மீது வரவர உருவத்தில் பெரியவைகளாகத் தென்பட்டுக்கொண்டே அதிவேகத்துடன் அப்படகுகள் வந்துகொண்டிருந்தன. ஆனால் படகுகள் வெற்றி ஸ்தம்பத்தை அணுக அணுக முன் பந்தயத்துக்கும் இப்பந்தயத்துக்கும் ஒரு வித்யாஸம் ஏற்பட்டது. தேவிபுரத்து முதல் மூன்று படகுகள் வெற்றிஸ்தானத்தை ஏறக்குறைய ஏககாலத்திலேயே அடைந்தனவென்று சொல்லும்படியாக ஒன்றுக்கொன்று அவ்வளவு ஸமீபத்தில் வந்தன; அவைகளுக்குள் இடைவெளி ஒருபடகு நீளந்தான். ஆனால் வீரநகரப்படகுகளில் ஒரு படகு மாத்ரம் எல்லாவற்றிற்கும் அதிக முன்னால் வந்தது. அதற்கும் இரண்டாவது படகுக்கும் மத்தியில் அதிக தூரமிருந்தது. அவ்வாறு அதிக வேகமாய் வருவது தனதருமைப் படகு என்றுணர்ந்த நரேந்த்ரன் ஆனந்தக் கூச்சலிட்டான். இதுவரைக்கும் வாய்பொத்தி மௌனமாய்க் கண்ணுற்றுக்கொண்டிருந்த வீரநகரத்து ப்ரதானிகளும் அதன் நன்மையைக் கோருபவர்களும் அப்படகைக்கண்டவுடன் செய்த ஆரவாரத்தைக் கண்டு நவகுமாரரே சற்று மனங்கலங்கினார். தேவிபுரத்தார் அதைவிட அதிக ஆரவாரஞ் செய்தனர். அப்போதிருந்த ஸந்தர்ப்பம் இருதிறத்தாரும் கைகலந்துவிடுவார்கள் எனத்தோன்றிற்று. உடனே கோகுலதாஸ் தமது ஆஸனத்தைவிட்டு எழுந்திருக்கக் கூச்சலெல்லாம் திடீரென ஒய்ந்துவிட்டது.

நதீதீரத்தில் கூடியிருந்த ஸர்வ ஜனங்களும் அன்று பிற்பகல் பந்தயத்துக்கு வந்திருந்த படகுகளில் எதுவும் வீரநகரத்து முதல் படகுக்கு நிகராகாதென்று ஒருவாய்ப்பட்டதுபோல் கூறினார்கள். வீரநகரம் ஜயம் பெறுவதைக் காண ஆத்ரத்துடன் காத்திருந்த நரேந்த்ரனுடைய பார்வை அதிக கம்பீரமாயிருந்தது. ஒரு நாழிகைக்குமுன் புன்னகை தவழ்ந்துகொண்டிருந்த நவகுமாரருடைய வதனம் சற்றே இருளடைந்தது. ஆனால் கோகுலதாஸோ எதற்கும் கவலைப்படாமல் அவருக்கு இயற்கையான மனோதைர்யத்துடன் பேசத்தொடங்கினார்.

"வீரநகர வம்சத்துப் பாத்யஸ்தர் தமது தகப்பனார் ராஜ்யத்திலுள்ள அதி துரிதமான படகைத் தெரிந்தெடுக்கலாம். ஆனால் நமது பந்தயவிதிகளின்படி அப்படகிலுள்ளோர் அனைவரும் வீரநகரத்தினராகவே இருத்தல் அவச்யம்."

கொட்டகை முழுவதும் நிச்சப்தமாயிருந்தது. கோகுலதாஸ் கூறிய இரண்டாவது வாக்யத்தின் கருத்து எவருக்கும் புலப்படவில்லை. மனக்கலக்கமுற்று நரேந்த்ரன் படபடப்புடன், "கோகுலதாஸ், நீர் சொல்வது நூதனமாயிருக்கிறதே! உமது கருத்தென்ன?" எனக் கேட்டான்.

நரேந்த்ரனுக்கு எவ்வளவு ஆத்ரம் உண்டானபோதிலும் கோகுலதாஸ் சிறிதும் கலங்காமல் ஸாவதானமாய், "நானோ வயோதிகன், எனது கண்கள் என்னை ஏமாற்றக்கூடும். ஆயினும் எனக்குத் தெரிந்தமட்டும் வீரநகரத்து முதல்படகிலுள்ளவர்கள் அனைவரும் வீரநகரத்தார்தான் என்று சொல்வதற்கு இடமிருப்பதாகத் தோன்றவில்லையே" என்றார்.

"சுத்த பொய்" என்று ஆரம்பித்த நரேந்த்ரன் தனது தோழன் விரீஷ் கோகுலதாஸ்பக்கம் நின்றிருத்தலைக் கண்டு சற்று கோபாவேசத்தைத் தணித்துக்கொண்டு "விரீஷ் உனக்கு வயதாகவில்லையே. நீ பால்யன்தானே. உனது கண்கள் உன்னை ஏமாற்றிவிடுமென்ற ஐயமில்லையே. நீதான் சொல், பார்ப்போம். முதல் படகிலுள்ளவர்கள் அனைவரும் எனக்கும் உனக்கும் பால்யம் முதற்கொண்டு பரிசயமுண்டல்லவா? அவர்கள் யாவரும் வீரநகரத்தார்தான் என்று சொல்வதற்கு ஏதாவது தடையுண்டோ?" எனக்கேட்டான்.

விரீஷ் சாந்தமாய், 'வீரநகரத்து ராஜகுமாரன் சொல்வது வாஸ்தவமே. முதல் படகிலுள்ள துடுப்புக்காரர்கள் எல்லோரும் வீரநகரத்தார்தான் என்பதற்கு ஐயமே இல்லை. ஆனால் சுக்கான் திருப்புவோன் இன்னானென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியாது" என்றான்.

மறுபடியும் எங்குபார்த்தாலும் மௌனவ்ரதம் அநுஸரிக்கப்பட்டிருந்தது. இங்குமங்கும் பல ப்ரதான மனிதர்களை விசாரித்ததில் சுக்கான் பிடிப்பவனுடைய தந்தை ராஜமஹலைச் சேர்ந்தவனென்றும், அவன் குமாரன் அவ்விடத்தில்தான் பிறந்தவனென்றும், ஆனால் அக்குமாரன் அடிக்கடி வீரநகரம் வந்து அவ்விடத்திலேயே உழைத்து ஜீவித்து வருபவனென்றும், அவன் நரேந்த்ரனுக்கு மிகவும் வேண்டியவனென்றும் ஸமாசாரம் வெளியாயிற்று.

நரேந்த்ரன் கோபாக்ராந்தனாய் நவகுமாரருடைய வயதுக்கும் அந்தஸ்துக்குமுரிய மட்டுமரியாதை யாவற்றையும் மறந்து, அவரைப்பார்த்து "நீதான் மத்யஸ்தன், அம்மனிதன் வீரநகரத்தானா அல்லவா என்பதைத் தெரிவிக்கவேண்டும்" என்று வினவினான்.

நவகுமாரர் தமக்குண்டான கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, "அவன் வீரநகரத்தானல்லன். ராஜமஹலைச் சேர்ந்தவன். அவன் செலுத்தும் படகு பந்தயத்துக்கு வரக்கூடாது" என்றார்.

நரேந்த்ரனுடைய முகம் கோவைப்பழம்போல் சிவக்க அவனுடைய உதடுகளும் கண்களும் படபடவென்று துடித்தன. வீரநகரத்து ப்ரபுக்கள், ப்ரதானிகள், போர்வீரர்கள் முதலியோர்யாவரும் முணுமுணுத்தனர். அவர்களுடைய முகங்களைப் பார்த்தால் பலத்த கலஹம் ஏற்படும்போலிருந்தது. இதைக்கண்ட விரீஷ் பரபரவென்று நரேந்த்ரனிடம் சென்று அவனுடைய செவிகளில் ரஹஸ்யமாய் "நரேந்த்ரா, கலஹம் உண்டுபண்ணிவிடாதே. இவ்விடத்திலோ உன்னைச் சேர்ந்தவர்கள் மிகவும் ஸ்வல்பம் பேர். எதிரிகளோ கணக்கற்றிருக்கின்றனர். ஏதாவது மனஸ்தாபம் நேர்ந்தால் நீ தோல்வியடைவது நிச்சயம். அந்தப் பந்தலினின்று பார்த்துக்கொண்டிருக்கும் ஹேமலதையையும் என்னையும் பார்த்தாவது உனது கோபாவேசத்தை யடக்கிக்கொண்டு புருஷனைப்போல் மேல்

நடக்கவேண்டியதைப் பார். காலதேச வர்த்தமானம் ஸரியாயில்லை” என்றான்.

தன்னை மீறிச்சென்ற சினத்தை அதிகப்ரயாஸைப் பட்டு ஒருவாறு அடக்கிக்கொண்டு நரேந்த்ரன் நெறித்துக் கொண்டிருக்கும் தனது புருவங்களைத் துடைத்துவிட்டுச் சற்றுநேரம் மௌனமாய் நின்றுகொண்டிருந்தான். திடீரென அவனுக்கொரு புதிய யோசனை உதயமாயிற்று. சரேலென்று படகில் குதித்து “நான் வீரநகரத்தான் தானே? அதற்கு ஸந்தேஹம் கிடையாதே? இப்படகின் சுக்கானை நான் பிடிக்கிறேன். இப்போது தேவிபுரத்து அதிபதி வீரநகரதேவிபுர பந்தயத்தில் தீர்ப்பு சொல்வதற்குத் தடையில்லையே?” என்று நரேந்த்ரன் சுக்கானைப் பிடித்துக் கொண்டான். அவனது ஆச்சர்யகரமான செய்கையைக் கண்டு யாவரும் அதிசயித்தனர். வீரநகரத்து இள ஜமீன்தாரர் சுக்கானைப் பிடிப்பதை தேவிபுரத்தார் அங்கீகரிக்கவில்லை. நவகுமாரர் அதைத் தடுக்கப் புகுந்தருணத்தில், காதவழிக்கு அப்பால் இருக்கும் ஆற்றுக்கு இப்போதே வஸ்த்ரத்தை இழுத்துக் கட்டும் இயல்பினராகிய கோகுலதாஸ், “நமது பந்தயவிதிகளின்படி ஜமீன்தாரர் சுக்கான் பிடிப்பது ஸரியாகாது. வீரநகரத்துப் பாத்யஸ்தர் விருப்பத்துக்கு மாறுசொல்லக் கூடாமல் எனது எஜமானர் அவர் விஷயத்தில் இந்த விதியை அநுஷ்டிக்கவேண்டுமென்ற நிபந்தனையை நீக்குகிறார். எப்படியிருந்தபோதிலும் வீரநகரத்து ராஜவம்சத்தில் தோன்றியவர் தேவிபுரத்துப் பட்டிக்காட்டானுடன் போட்டிபோடுவது அவருடைய ஸ்தானத்துக்கும் கம்பீரத்துக்கும் ஏற்றதாயில்லை. ஆதலால் தேவிபுரத்துப் படகை எனது எஜமானரே செலுத்துவார். அவருடைய தர்மபத்னியும் செல்வப்புதல்வியும் மத்யஸ்தர்களாயிருப்பார்கள்” என்று கூறி நவகுமாரர் செய்த யோசனையை மாற்றிவிட்டார்.

இந்த நூதன ப்ரேரேபனை முடிந்தவுடன் முன்போல் யாவரும் வாய்மூடிச் சப்தமற்றிருந்தனர். இவ்வாறு தன்னைக் கட்டளையிட்டதுபோல் கோகுலதாஸ் கூறிய ஏற்பாடு நவகுமாரர் மனதுக்கே பிடிக்கவில்லை. தன் எஜமானர் முகஞ் சுளித்ததைக்கண்ட கோகுலதாஸ்“ எஜமானரே, நான் சொல்வதைக் கேளுங்கள் தேவிபுரம் ஜயமடைவது நிச்சயம்; வேண்டுமானால் எழுதித் தருகிறேன்” என்று ரஹஸ்யமாய் நவகுமாரருக்குக் கர்ணோபதேசஞ் செய்தனர்.

வீரநகரத்துப் புத்தியான்கள் இந்த ஏற்பாட்டை அங்கீகரிக்காமல் தலையசைத்தனர். ஆனால் நரேந்த்ரனே கோகுலதாஸ் ஏற்பாட்டை குதூஹலத்துடன் ஒத்துக்கொண்டபோது அவர்களுடைய யோசனைகளெல்லாம் பயனற்றுப் போயின. அவன் சுக்கான் பிடித்துப் படகைச் செலுத்துவான்; ஹேமலதை ஜயாபஜய தீர்மானஞ் சொல்வாள். இன்னும் என்ன வேண்டும்? நரேந்த்ரனுடைய வாழ்க்கையே சாபல்யமடைந்தது. நரேந்த்ரன் ஆனந்த ஸாகரத்தில் ஆழ்ந்தான். சற்று முன் அவன் முகத்தில் வீசிக்கொண்டிருந்த கோபமெல்லாம் மாயமாய் மறைந்துவிட்டது. கோகுலதாஸுக்குத் தான் என்றென்றைக்கும் கடமைப்பட்டதாக அவன் அவருக்குப் பலமுறை வந்தனஞ் செய்தான் நவகுமாரரைப் பக்தி மரியாதையுடன் தேவிபுரப் படகுக்கு அழைத்துச் சென்றான். ஸ்த்ரீகளிருந்த பக்கம் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். அவனுடைய மனம் பூரித்தது. கோகுலதாஸ் போட்ட தூண்டிமுள் நன்றாய் அகப்பட்டுக்கொண்டது.

“நரேந்த்ரா, ஆத்ரப் படாதே பத்ரம். அவஸரம் வேண்டாம், ஆழம் ஜாஸ்தி நீரோட்டத்தின் வலிவும் அதிகமாயிருக்கிறது. ஜாக்ரதை. இரண்டு வம்சங்களின் ஸௌபாக்ய தௌர்பாக்யங்களும் இரண்டு படகுகளைப்பற்றியிருக்கின்றன படபடப்பு அடைந்தாயோ மோசம் போனாய் கவனமாய்ப் பார்த்துக் கொள்” என்று விரீஷ் கூறிய புத்திமதி செவிடன் காதில் சங்கு ஒலித்தது போலிருந்தது. நரேந்த்ரனுடைய எண்ணம், நோக்கம்,பார்வை எல்லாம் வேற்றிடம் சென்றிருந்தன. விரீஷ் செய்த எச்சரிக்கையை அவன் கிஞ்சித்தும்கவனிக்கவில்லை. முன்னமே ஸூர்யாஸ்தமன ஸமயமென்று சொன்னோம். இரண்டு படகுகளும் புறப்படும் ஸ்தானத்துக்கு வருவதற்குள் ஸூர்யன் நன்றாய் அஸ்தமனமாகி இரவு தொடங்கிவிட்டது. கங்காநதியின் புண்யதீர்த்தத்தின்மீது குளிர்ந்த சந்த்ரிகையின் க்ரணங்கள் அலைகளுடன் கூடி நடனஞ் செய்து கொண்டிருந்தன. இரண்டு படகுகளிலும் தொங்கவிடப்பட்டிருந்த கொடிச் சீலைகளும் புஷ்பதோரணங்களும் வெண்மயமான ஜலத்தில் ப்ரதிபலிப்பது காண்போர் மனதைக் கவர்ந்தது. இரண்டு புராதன ராஜவம்சங்களுக்குள் நடக்கும் இந்த ப்ரபல படகுப்பந்தயம் எவ்விதமாக முடியுமோ என்ற ஆவல் அதிகரித்துள்ள ஜனங்கள் அனைவரும் தத்தம் கழுத்தை உயர உயரத் தூக்கிக் கண்களை நெறித்துப் பார்த்து நின்றனர்.

படகுகள் புறப்பட்டன; ஒரு வெடி தீர்க்கப் பட்டது. வெகு சீக்ரத்தில் துடுப்புகள் க்ரமமாய் ப்ரயோகிக்கப்படுவதன் ஒலியும் படகோட்டிகள் உல்லாஸமாய்ப் பாடும் ஒலியும் கலந்து கேட்கலாயின. இரண்டு படகுகள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் வருகையில் ஒன்றுக்கொன்று சற்றும் பின்வாங்கியிலலை; இரண்டும் ஸமவேகத்துடன் வந்து கொண்டிருந்தன. தத்தம் தலைவர்கள் படகில் உட்கார்ந்திருப்பதை உணர்ந்த படகோட்டிகள் அளவற்ற உத்ஸாஹம் உடையவர்களாய் ஒருவருக்கொருவர் பின்வாங்காமலும் சலிக்காமலும் அதிக ஊக்கத்துடன் வெற்றி ஸ்தம்பத்தை அடைய முயன்றனர். வாயுவேக மனோவேகத்துடன் வந்து கொண்டிருக்கும் படகுகளின் கொடிச்சீலைகள் காற்றில் படபடவென்று அதிக மும்முரமாய் அடித்துக்கொண்டிருந்தன. படகுகள் பந்தய எல்லையை அணுக அணுக இருகரையிலும் கூடியிருக்கும் திரளான ஜனங்கள் ஏகமாய்க் கைதட்டிக் கோஷஞ் செய்தனர்.



நதி மேலண்டைச் சற்றுத் திருப்பமாயிருந்தது வீரநகரத்துப் படகு மேல் கையிலிருந்ததால் அந்தத் திருப்பம் அதற்கு உதவியாயிருந்தது. மேலும் தேவிபுரத்தாரைவிட வீரநகரத்தார் அதிக திடகாத்ரர்களாதலால் அவர்களுடைய படகு எளிதில் முன்னர் வந்தது. தன் படகு சற்று முன் வந்ததைக் கண்டு நரேந்த்ரனுக்கு ஸந்தோஷம் தலைகால் தெரியவில்லை.

ஆனால் நவகுமாரர் முகம் சுளித்திருப்பதைக் கண்ட அவரது ஆட்கள் அவர் முணுமுணுப்பைக் கேட்டு அவருடைய நோக்கத்தை யறிந்து அதை நிறைவேற்ற முயன்றனர். பலமாய்த் துடுப்புப் போட்டு அவர்கள் தங்கள் படகை வீரநகரத்துப் படகண்டை கொண்டு வந்து விட்டார்கள்.

நவகுமாரர் கோபத்துடன் கூறிய மொழிகள் இரண்டொன்று வீரநகரத்தார் காதில் விழுந்தன,அவர்கள் திரும்பிப் பார்த்தனர். நவகுமாரருடைய கண்களில் கோபாக்னி ஜ்வலித்தது. வீரநகரத்தார் சிறிது தளர்வடைந்தனர். அவர்களுடைய படகு பின்தங்கியது. நவகுமாரர் தேவிபுரப்படகில் வீற்றிருக்கையில் வீரநகரத்தார் தமது படகை முன் செலுத்தத் துணியமாட்டார்களென்று கரையிலுள்ளவர்கள் பரிஹாஸ்யமாய் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளலாயினர். கோகுலதாஸ் எதிர்பார்த்தது இதுதான். இந்தத் தர்மஸங்கடத்தை உத்தேசித்துத்தான் அவர் தமது எஜமானருக்குச் சக்கான் பிடிக்கும் உத்யோஹம் அளித்தார்.

மாற்றான்படகு தன்னை அணுகுவதைக் கண்டு நரேந்த்ரன் பற்களை நெறித்தான். தன் படகுக்காரர்களைத் தன்னாலான மட்டும் கோபித்துப் பார்த்தான்; இன்னும் இரண்டு படகுகளுக்கும் இடையில் ஒரு படகு நீள தூரம் இருந்தது. ஆனால் அவ்விடத்தில் ஆறு கீழண்டைத் திரும்புவதால் கீழ்ப்பக்கமிருந்த தேவிபுரப்படகு முன் சென்றது நரேந்த்ரன் முன் செல்லக் கருதித் தன்படகை வீரநகரப் படகின் ஓரமாய்ச் செலுத்தினான்.

“ஜாக்ரதை! ஜாக்ரதை! ஒன்றுடனொன்று மோதிக்கொள்ளப் போகிறது.” என்று கரையிலுள்ளவர்கள் பலர் கூவினர்; நிஷ்ப்ரயோஜனம்! ஸமயம் மிஞ்சிவிட்டது. இரண்டு படகுகளும் ஒன்றுடனொன்று பலமாய் மோதி நதியில் மூழ்கிவிட்டன. இந்த ஸம்பவம் நேர்ந்தது ஜயஸ்தம்பத்துக்கு வெகு அருகாமையில். அவ்விடமிருந்த ஜனங்களெல்லோரும் ஓவென்று அலறினார்கள். ஸ்த்ரீகள் பயந்து கூக்குரலிட்டனர். நூற்றுக்கணக்கான ஜனங்கள் நீந்திக் கருகே விரைந்தோடி வந்தனர். எல்லாம் அல்லோல கல்லோலமாயிற்று.

படகோட்டிகள் நீந்தி எளிதில் கரையை அடைந்தனர். நல்ல நீச்சுக்காரனாகிய நரேந்த்ரனும் கரை சேர்ந்தான்; அவன் நீரினின்று எழும்பியவுடன் நவகுமாரருடைய மெய்க்காப்பாளர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். நரேந்த்ரனைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கொஞ்சம் மனிதர்கள்தான். அவர்கள் தங்களாலான மட்டும் நரேந்த்ரனை விடுவிக்க முயன்றனர். அவர்களால் ஒன்றும் ஸாத்யப்படவில்லை; சீக்ரத்தில் நிராயுதபாணிகளாயினர். நரேந்த்ரன் தேகமெல்லாம் ஜலம் சொட்டச்சொட்ட, குளிரால் கைகால் உதற, தாழ்வடைந்து அவமானப்பட்டுக் கைதியாய்ப் பரிதபிக்கத் தக்க நிலையில் கிடந்தான்.

தான் செய்த தப்பு அவனுடைய கூர்மையான புத்திக்கு உடனே புலப்பட்டது. தன்னுடைய பைத்யக்காரத்தனமான படபடப்பாலும், அஜாக்ரதையாலும், ஆத்ரத்தாலும் தேவிபுரத்து ஜமீன்தாரரை மூழ்கடித்துவிட்டதாக அவன் எண்ணினான். இக்கார்யத்தால் தனது ஆப்தமித்ரர்களையும் தனக்கிருந்த இரண்டொரு போர்வீரர்களையும் அவன் இழந்தான். அவன் குற்றவாளியாய்விட்டதால் வீரநகர ஜமீனும் அவனை விட்டு அகன்றுவிட்டது. ஸ்த்ரீகளிருக்கும் ஸ்தலத்தைஒருமுறை பார்த்தான். உலகத்தில் தான் மிகவும் அருமைபாராட்டி நேசித்துவந்த தன் உயிர்க்குஸமானமான பொருளுக்கும் தனக்கும் ஸம்பந்தம் அடியோடு அற்றுப்போய்விட்டதென்று அவன் கருதினான். ஈவு இரக்கமென்பதே கிஞ்சித்துமில்லாத வன்னெஞ்சர்களான பகைவர்கள் செய்யக்கூடிய துன்பங்கள்,ஹிம்ஸைகளைவிட பதின்மடங்கு அதிகமான துன்பங்களும்,ஹிம்ஸைகளும் இடைவிடாது அவனுடைய மனதைப்புண்படுத்தின. இதுவரைக்கும் எவருங்கண்டிராத நீர்த்துளிகள் அவன் கண்களினின்று தாரைதாரையாய்ப்பெருகியது பரிதாபகரமாயிருந்தது.ஆனால்சீக்ரத்தில் அவனுடைய ப்ரமாதமான பயம் தொலைந்தது. இவ்வளவு அமர்க்களத்திலும் விரீஷ்மாத்ரம் தன் மனோதைர்யத்தை இழக்கவில்லை. நவகுமாருடைய படகு கவிழ்ந்த இடத்தையும் அவர் தண்ணீரில் தத்தளிப்பதையும் அவன் கண்டான். வீரநகரத்துக்குள் கைதேர்ந்த நீச்சுக்காரனாகிய விரீஷ் உடனே ஜலத்தில் குதித்து, தனது பருத்த புஜங்களின் உதவியால் நீரோட்டத்திற்கு எதிராகச்சென்று கடைசிமுறையாய்த் தண்ணீரில் முழுகிக்கொண்டிருக்கும் ஜமீன்தாரரை அரைக்கச்சையைப் பிடித்து ஒரு கையால் ஜலத்தின்மேல் தூக்கி இன்னொரு கையால் நீந்திக்கொண்டே பத்ரமாய்க் கரைகொண்டு சேர்த்தான்.

நவகுமாரர் பந்தலுக்குள் நுழைந்தபோது நிர்ப்பாக்யசாலியாகிய நரேந்த்ரன் வாடியமுகத்துடன் உட்கார்ந்திருப்பதையும், சினந்தலைக்கேறிய தமது மெய்க்காப்பாளர்களும் யுத்தவீரர்களும் அவனைச் சூழ்ந்துகொண்டு பலவிதத்தில் அவனைப் பயமுறுத்திக்கொண்டிருத்தலையும் கண்டார்.

“விலகி நில்லுங்கள்” என்று நவகுமாரர் உரத்துப்பேச, யுத்தவீரர்கள் யாவரும் பந்தலைவிட்டு வெளியே போய்விட்டனர்

ஆற்றில் இவ்வளவுநேரம் முழுகிமுழுகி எழுந்து தத்தளித்துக்கொண்டிருந்ததனால் உண்டாகிய இளைப்பும் களைப்பும் ஒருபுறம் இருந்தபோதிலும், அவற்றை லக்ஷ்யஞ்செய்யாமல் நவகுமாரர் மிதமிஞ்சிய

கோபத்தால் வாய் தடுமாறிக்கொண்டே, "அடே, நரேந்த்ரா பால்யமுதல் உன்னை எடுத்து வளர்த்து உனது பாட்டனாருடைய ஜமீனையும் உனக்காக ஸரிவரப் பரிபாலித்துவரும் உனது ரக்ஷகனும் உனது நண்பனும், என்றைக்கும் உனது நன்மையைக் கோரினவனுமாகிய என்னையே 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்தாம்' என்றவாறு கொல்ல முயன்றனையே! அடே, கொலைபாதகா, த்ரோஹீ, விச்வாஸ காதகா, உனக்கு என்ன கதி கிடைக்கும்!" என்று கர்ச்சித்தார்.

யாதுமறியா அப்பாலகன் தான் செய்ததை நினைத்து மனம் நொந்து மிகவும் பச்சாத்தாபப்பட்டு, "நவகுமாரரே, நான் செய்த மஹாபாதகத்துக்கு நிகர் வேறெதுவுங் கிடையாது. என்னை இவ்விடத்திலேயே இரண்டு துண்டாய் வெட்டிப்போடும் இனி இவ்வுலகில் உயிர்த்திருக்க நான் சற்றும் அருகனல்லன்" என்றான்.

பந்தல் முழுவதும் யாவரும் வாயை மூடிக்கொண்டு கைகால்களைக் கூட அசைக்காமல் பதுமைகள் போல் நின்று கொண்டிருந்தனர். விரீஷ்மாத்ரம் தாழ்ந்த த்வனியாய்ப் பேசத் தொடங்கினான்.

"அடியேன் கூறும் மொழிகளைச் சற்றுப் பெரிய மனது செய்து கேட்கவேண்டும். என்னைவளவு நரேந்த்ரனுடன் பழகியவனும் அவன் பரிசயமுடையவனும் வேறெவனுங்கிடையாது; அவன் முன்பின் யோசனையற்றவன்; ஆத்ரக்காரன்; படபடப்புடையவன்; எதாவது கோபமோ உத்ஸாஹமோ, உண்டாய்விட்டால் பைத்யக்காரன்போல் தன் தேஹம் தனக்குத் தெரிவதில்லை. அவன் கள்வெறி கொண்டவன் போலாகிறான். மஹாகனம் பொருந்திய தங்களுக்கு மயிரிழைகூடத் தீங்கு புரியவேண்டுமென்ற எண்ணமே அவனுக்குக் கனவிலுங்கிடையாது இன்றிரவு நடந்த ஸம்பவம் அவனுடைய படபடப்பால் உண்டானது. அதற்காக நீர் அவனைச் சினந்து பேசியது ந்யாயந்தான். உங்களுக்குத் தீங்கிழைக்கவேண்டும், உங்களைக் கொல்லவேண்டும் என்ற எண்ணம் லவலேசமும் அவனுக்குஇல்லை. நான் உறுதியாய்ச்சொல்வேன்".

சற்றுநேரம் எவரும் பேசவில்லை. கடைசியாக நவகுமாரர் தனது வாயினின்று புறப்படும் ப்ரதி வார்த்தையினுடையவும் பொருளையும் பலாபலத்தையும் அதிகமாய்க் கவனித்தவராய், "நரேந்த்ரன் என்னைக் கொல்ல வேண்டுமென்ற துர்யோசனையுடன்தான் இக்கார்யத்தைச் செய்தானோ, அல்லது அவனுடைய ஆத்ரமும் படபடப்புந்தான் இந்த ஸம்பவத்துக்குக் காரணமோ, இவ்விஷயத்தை இன்னும் சிலதினத்துக்குள் வங்காளத்துக் கவர்னர் விசாரித்துத் தீர்மானிப்பார். அதுவரைக்கும் அவனைத் தகுந்த பந்தோபஸ்துடன் பத்ரமாய்க் காத்துவருவது எனது கடமையாகும்" எனக் கூறிவிட்டுச் சற்றுத் தாழ்ந்த குரலாய் "வா, போவோம் விரீஷ். வயோதிகர் அதிக நேரம் ஈர வஸ்த்ரத்துடனிருப்பது தேஹத்துக்கு ஒத்துக்கொள்ளாது. அவ்வயோதிகரைப் பத்ரமாய்ப் பார்த்துக் கொள். அவர் நீ புரிந்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் புரிவது நிச்சயம். இன்றிரவு நரேந்த்ரன் என்னைக் கொல்லஎத்தனித்தான். உன்னால் நான் உயிர் பிழைத்தேன்" என்றான்.

## அத்யாயம் 8

### அபிஞ்ஞான மாதவி

ஒரு மாஸ காலமாயிற்று, நரேந்த்ரன் இன்னும் காவலில் இருந்தான். ஸரியானபடி நாலாபக்கமும் பந்தோபஸ்து செய்யப்பட்ட ப்ரத்யேகமான ஒரு வீட்டில் அவன் வைக்கப்பட்டிருந்தான். அவனுடைய அந்தஸ்துக்குரிய ஸகல ஸௌகர்யங்களும் அங்கு அமைக்கப்பட்டிருந்தன; ஆனால் அவனுடன் பேச எவரும் உள்ளே விடப்படவில்லை. தங்களுடைய பால்ய அதிபதியை மீட்க வீரநகரத்தார் எதாவது கலஹம் செய்ய எத்தனிப்பார்களாதலால், காராக்ருஹத்தைச் சுற்றிலும் தலைமுதல் கால்வரைக்கும் ஆயுதம் பூண்ட நல்ல திடகாத்ரர்களான போர்வீரர்கள் பலர் அல்லும் பகலும் இடைவிடாது காவலிருந்தனர். அப்படியும் நரேந்த்ரனை மீட்பதன் நிமித்தம் இரண்டொரு ப்ரயத்னங்கள் நடந்தன; காராக்ருஹத்தைச் சுற்றிச் சிறுசிறு சண்டைகள் நேர்ந்தன; அச்சண்டைகளில் சிலர் மரிக்க நேரிட்டது. ஒன்றும் ப்ரயோஜனப்படவில்லை. வேலையொன்றுமின்றி இரவும் பகலும் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு நரேந்த்ரன் துயரக்கடலில் ஆழ்ந்து துணையொருவருமில்லாமல் திரும்பத் திரும்பப் பலவிதத்திலும் மனதைப் புண்படுத்திக்கொண்டு சிந்தாக்ராந்தனாயினன். கவலையால் தேஹம் இளைத்து முகம்வெளுத்துப் பார்ப்பதற்குப் பரிதபிக்கத்தக்க ஸ்திதியிலிருந்த அவன் அடிக்கடி சாளரங்களின் வழியாய் மனோஹரமான நந்தவனங்களையும் அரண்மனைத் தோட்டங்களையும் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போது அவ்வனங்களில் தான் பால்யபர்வத்தில் உல்லாஸமாய்க் கழித்த நாட்கள் அவனுக்கு ஞாபகம் வரக் கண்களினின்று நீர் ஆறாய்ப்பெருகி வற்றிக் கண்கள் மப்படையும் வரையில் அவன் அவ்விடத்திலேயே உட்கார்ந்திருப்பான். இரவில் குறுக்குக் கம்பிகளிட்ட ஒரு ஜன்னலில் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் விளக்கு அணைந்து தன்னை இரவின் இருளைவிட எத்தனையோ மடங்கு அதிகமான மனோ அந்தகாரத்தில் ஆழ்த்தும் மட்டும் நரேந்த்ரன் எவ்வளவு நேரமானாலும் சலிக்காமல் அந்த ஜோதியைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

ராஜா மான்ஸிங் ராஜமஹாலுக்கு வந்துவிட்டதாகவும், கூடிய சீக்ரத்தில் வீரநகரத்துக்கு விஜயம் செய்வாரென்றும் நவகுமாரருக்குச் செய்தி எட்டியது. அவரைத் தகுந்தபடி வரவேற்றுபசரிக்க ப்ரயத்னங்கள் பலமாய் நடந்துகொண்டிருந்தன. நகரமுழுவதும் வீதிகள் சுத்தமாய்ப் பெருக்கி ஜலம் ஊற்றப்பெற்றிருந்தன. வீதிகளில் ஆங்காங்கு பிறைமுகப் பந்தல்கள் போடப்பட்டிருந்தன; இருமருங்கும் மா



விலைத் தோரணங்களும், புஷ்பத் தோரணங்களும் காற்றில் ஆடிக்கொண்டிருந்தன. ப்ரதி வீட்டுவாசலிலும் வாழைமரங்கள் கட்டியிருந்தார்கள். அந்தத் தேச ஆசாரத்தின்படி இலைகளால் மூடப்பட்ட நீர்க் கலசங்கள் மரங்களடியில் வைக்கப்பட்டிருந்தன. வங்கதேசத்து ராஜப்ரதிநிதியைக் கண்டுகளிக்க க்ராமாந்த்ரங்களிலிருந்து ஜனங்கள் ஆயிரக்கணக்காய் வந்திருந்தார்கள். மொகலாய வீரர்களும் ராஜபுத்ர வீரர்களும் புடைசூழ ஓர் உன்னதமான யானையின் மீதேறி ராஜா மான்ஸிங் நகரத்துக்குள் ப்ரவேசித்ததும் யாவரும் மங்கல வாத்யத்துடன் அவரை அழைத்துக் கரகோஷஞ் செய்தனர். குழந்தைகளும் ஸ்த்ரீகளும் மாடிகளினின்று இனிய கீதங்கள் பாடிப் புஷ்பமாரி பெய்தனர். குண்டுகள் படபடவென்று வெடி தீர்த்துக் கொண்டிருக்கவும், ஜனங்கள் நல்வரவு கூறிக்கொண்டிருக்கவும் நூறு யுத்தங்களில் வாகைமாலை சூடியவரும், அக்பர் பெருமானது இணையற்ற ஸேவகருமாகிய ராஜா மான்ஸிங் ப்ரபு அவருக்கென்று அமைக்கப்பெற்றிருந்த மண்டபத்துள் ப்ரவேசமாயினர். மெல்லிய துணிகளால் மூடப்பட்டிருந்த சாளரங்களிலிருந்து, பல ஸுந்தர ஸ்த்ரீகளும் பெண்களும் ராஜா மான்ஸிங்கையும் அவருடனிருக்கும் ஸௌந்தர்ய வீரசிகாமணிகளையும் தங்களுடைய கரிய விழிகளால் பார்த்த வண்ணமாயிருந்தனர்.

முதல் சில நாட்கள் களிப்பிலும் கேளிக்கையிலும் கழிக்கப்பட்டன.; ராஜா மான்ஸிங் அந்த நாலைந்து தினங்களில் ராஜ்யவ்யவஹாரங்கள் ஒன்றும் பார்க்கவில்லை. ராஜபுத்ரர்கள் வீரநகரத்துக் கடைத்தெருக்களையும் காட்சிகளையும் கண்டு மகிழ்ந்தனர். நீண்ட தாடிகளுள்ள மொகலாய வீரர்கள் சிலர் வங்காளத்து உத்தரீயங்களையும் பட்டுகளையும் வாங்கித் தரித்துக்கொண்டு ஊரெல்லாம் சுற்றித் திரிந்தனர். வேறு சிலர் தூரதேசத்தில் விட்டு வந்திருக்கும் தங்களுடைய ஆசை மனைவிகளுக்காக டக்கா மஸ்லின்கள் வாங்கினார்கள்.

மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களுடைய உத்தரவை ப்ரசுரப்படுத்தும் தினம் வந்தது. ஆகாயமுழுவதும் களங்கமற்றிருந்தது. குளிர்ந்த காற்று மெதுவாய் அடித்துக்கொண்டிருக்க, நீலவர்ணமான வானத்தினின்று கதிரவன் வீரநகரம், அதன் கடைகள், வீதிகள், வீடுகள், அங்கே கூடியிருந்த பல்லாயிர ஜனங்கள் யாவற்றின்மீதும் தனது பொன்னிறமான க்ரணங்களை வீசினான். அரண்மனை வாயிலில் ஜனங்கள் கஜகஜவென்று கூடியிருந்தனர் மேற்கூரையில்லாத ஒரு மேடையின்மீது அலங்கரிக்கப்பட்டிருந்த ஸிம்ஹாஸனத்தின் மீது அதி கம்பீரமாய் வீற்றிருந்தனர் ராஜாமான்ஸிங் ப்ரபு. அவரைச் சுற்றிலும் சக்ரவர்த்தியவர்களுடைய ப்ரதான உத்யோகஸ்தர்கள் சிலர் அமர்ந்திருந்தனர். நவகுமாரரும் கோகுலதாஸும் ஸிம்ஹாஸனத்துக்குப் பின்னால் கைகட்டிப் பணிவாய் நின்று கொண்டிருந்தார்கள்.

ராஜ ப்ரதிநிதி யவர்கள் முன்பாக ஸைந்யங்கள் அணியணியாய்ச் சென்றன. இந்த்யாமுழுவதும் போர்க்களம் போர்க்களமாய் ஜயபவனி சென்றுவந்த மான்ஸிங் அவர்களுடைய ராஜபுத்ர மொகலாய வீரர்கள் தங்கள் எஜமானர் முன்னிலையில் அதிவிமர்சையாய் அணிவகுத்துச் சென்றனர். அப்புறம் நடைபெற்ற குஸ்துச்சண்டைப் பந்தயங்களும் தேஹவலிமையைப் பொறுத்த இதர அத்புத பந்தயங்களும், போலிச் சண்டைகளும் ஜனங்களை மகிழ்வித்தன.

பந்தயங்களெல்லாம் முடிவெய்தியவுடன் மான்ஸிங் அவர்கள் "போர்வீரர்கள் இனி தங்கள் ஜாகைக்குச் செல்லலாம் காலமாகிறது. ராஜாங்க அலுவல்கள் இருக்கின்றன" என்றார்.

நவகுமாரர் எதிர்வந்து வணங்கி, "மஹா ப்ரபு, தங்களுடைய கட்டளைப்படி யாவற்றையும் செய்ய ஸித்தமாயிருக்கிறேன். ஒரு வேண்டுகோள். எமது எளிய நாடாகிய வங்காளத்தில் அதிகமாய்ப் பாராட்டப்படும் ஒரு வித்தையை இங்கு விஜயஞ்செய்திருக்கும் ப்ரபுக்கள், மந்த்ரிகள் முன்னர் காண்பித்து அவர்களைக் களிப்பிக்கவேண்டுமென்று அடியேன் கோருகிறேன். வங்காளத்தில் காவ்யங்களும், ஸங்கீதமும் ப்ரபலமானவை. அநுமதி அளித்தால் ஓர் எளிய கவி தனது ஸங்கீதத்தால் ஸபையோரை மகிழ்விப்பான்" என்று விண்ணப்பித்தார்.

"நவகுமாரரே. நீர் மஹிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களுடைய நம்பிக்கையான ஊழியர்களில் சிறந்தவர். உமது ராஜ விச்வாஸத்தைக் கண்டு அக்பர் வள்ளல் மகிழ்வுற்றிருக்கிறார். தோடர்மால் உமக்கிட்ட கடமையை அந்தரங்க சுத்தியுடன் நிறைவேற்றினீர். ஆதலால் உமது இஷ்டத்துக்கு மாறாக நாம் ஒன்றும் சொல்லோம். உமது நாட்டு மாதுர்ய பாஷை எங்களுக்குத் தெரியாது. ஆயினும் கூடியமட்டும் அவற்றின் இனிமையை நாங்கள் அறியக்கூடும். உமது கவிச்ரேஷ்டர் எங்கே? அவருடைய கீதங்களைக் கேட்கலாம்."

"அவ்வளவு உன்னத பட்டத்துக்கு அவர் அருகரல்லர். தனது ஜனனபூமியாகிய பர்ட்வானை விட்டு வந்து பங்கூரா ஆரண்யத்தில் வஸிப்பவர் அவர். சண்டி தேவி ப்ரஸாதம் பெற்றவர். அவருடைய பாடல்களெல்லாம் எமது காருண்ய மாதவியாகிய ஸ்ரீ சண்டி தேவியைப்பற்றிய ஸ்தோத்ரங்களாகும்" என்று விநயமாய் விடை யளித்தார் நவகுமாரர்.

தேவிப்ரஸாதம் பெற்றுள்ள அக்கவிஞன் சண்டி தேவியைப்பற்றியும் அவள் நிலத்திலாகிலும் நீரிலாகிலும் ஆபத்து நேர்ந்தவேளைகளில் பல மனிதர்களுக்கு உதவி புரிந்த வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் மெய்ம்மறந்து பாடத்தொடங்கினான். வங்காளத்தினின்று ஏராளமான சரக்குகளையேற்றிக்கொண்டு போகும்போது வழியில் கப்பலுடைந்து லங்கைத் தீவில் கைதியாக வருந்திய வ்யாபாரியின் மகன் யௌவனபர்வமடைந்தபோது தான் அறியாத தனது தகப்பனாரைப் பற்றித் தன் தாயார் மூலமாய்க் கேள்விப்பட்டுச், தன் தந்தையை சிறை மீட்கவேண்டு

மென்ற அவா பேலிட்டவனாய், ஸமுத்ர ப்ரயாணம் செய்து, கடைசியில் சண்டிதேவியின் பேருதவியாலும் க்ருபையாலும் தன் தகப்பனாரை ஸந்தித்து, அவரை சிறைமீட்டுக் கடைசியாய் அப்பனும் பிள்ளையுமாய்த் தம்ஜன்மபூமி திரும்பிவந்த வரலாற்றைப் பாட்டாகப்பாடிமுடித்தான். ராஜா மான்ஸிங் அவனது அத்யந்த பக்திரஸத்தைக்கண்டு வியந்து அவனுக்கு ஸரியான ஸம்மானஞ் செய்தார். அதி உன்னத பதவியிலிருக்கும் சிறந்த உத்யோகஸ்தர்களும் அப்பாட்டைக் கேட்டு மனஸ்ஸந்துஷ்டி அடைந்து புன்னகை செய்தனர். எவ்வளவோ ஸமர்த்தர்களான அக்பர் அவர்களது ராஜதந்த்ரிகளுடைய நாமதேயங்கள் மறந்துபோய் வெகு காலமாய் விட்டன. ஆனால் முகுந்தராமரது ப்ரதாபமும் அவரியற்றிய காவ்யங்களும் நமது நாட்டு ஸாஹித்யரத்னங்களில் சிறந்த ரத்னமாய் இன்றைக்கும் விளங்காநிற்கின்றது.

மான்ஸிங் அளித்த வெகுமதியைப் பெற்றுக்கொண்டு அப்புறம் போய்விட்டார் கவீச்வரர். நரேந்த்ரன் வங்கதேசாதிபதி ஸமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டான். எல்லோரும் அவனுடன் மௌனமாயிருந்தனர். மிகவும் புராதனமானதொரு ப்ரபலமான பரம்பரையிலுதித்துக் கடைசியில் சொல்வார் வார்த்தையைக் கேட்டுக் கெட்டுப்போன மஹா தெளர்ப்பாக்யசாலியாகிய அந்த ஸௌந்தர்ய சிறுவனை மான்ஸிங் அதிக பரிதாபத்துடன் பார்க்கலானார். "நரேந்த்ர நாத்ராய், ராஜா தோடர்மால் அவர்களால் உனது பாட்டனார் மரியாதைசெய்யப்பட்டதும் உனது குலத்துக்கத்திரியை அவர் உனது தொட்டிலில் வைத்ததுமாகிய இதேஇடத்தில் இப்போது நீ இந்த கோலத்துடன் நிற்பதைக்காண என் மனம் வருந்துகின்றது. மோசக்காரர்கள்வார்த்தையைக் காதுகொடுத்துக்கேட்டுப் பதைபதைத்து உனது ரக்ஷகருடைய உயிருக்கே ஹானி தேடினாய்; மேலும் உன்னைச் சேர்ந்தவர்கள் ந்யாய பரிபாலனார்த்தம் உழைத்துக் கொண்டிருந்த வீரர்களுடன் சண்டையிட்டனர். உயிர்ச்சேதமும் நேர்ந்தது. ஆயினும் உனது பாட்டனார் குணத்தையும் அவருடைய கீர்த்தியையும் நான் கவனிக்கவேண்டியிருக்கிறது.

"உனது ரக்ஷகராகிய நவகுமாரர், நீ அவரைக்கொல்ல வேண்டுமென்ற உத்தேசம்வைத்திருந்ததாகக் கூறவில்லை. அவரை மரணத்தினின்றும் தப்புவித்த தயாளுவாகிய வஸிரிஷ்டனும் நீ அவ்வித துர்எண்ணம் கொண்டிருக்கக் கூடியவனல்லன் என்று ஸத்யமாய்ச் சொல்லுகிறார். அவர் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன். நரேந்த்ர நாத்ராய், கேவலம் பத்துவயது குழந்தைகூடச் செய்யப் பின்னடையும்படியான அவ்வளவு ஹீனமான கார்யத்தை-நரேந்த்ரன்தன் படகை நவகுமாரர் படகை நோக்கிச் செலுத்தியது-நீ செய்ததன் காரணம் அந்தக்ஷணத்தில் உன்னையும் மிஞ்சிப்போன உனது ஆத்ரம்தான் என்பதை நான் நம்புகிறேன். ஆகலால் உன்மீது கொண்டுவரக்கூடிய அதமாதமமான குற்றத்தை நீ வேண்டுமென்று செய்தவனல்லன். உன்னை விடுதலை செய்தோம்" என்றுரைத்தார் காருண்ய வள்ளலாகிய மான்ஸிங் அவர்கள்.

தனது சத்ருக்கள் பலமாய்ச் செய்த ஏற்பாட்டைக் கண்டு தன்னுடைய கதி அதோகதி என்றெண்ணியிருந்த, ரக்தம் சுண்டி முகம் வெளுத்த நரேந்த்ரனுக்கு வங்க ராஜ்யாதிபதி கூறிய மொழிகள் எதிர்பார்க்காதபடி அவ்வளவு ஆறுதலாயிருந்தன. மான்ஸிங் அவர்களுடைய உதார குணத்தைக் கண்டு அவன் ஸந்தோஷமடைந்தான். அவர்கூறிய மொழிகள் அவன்மனதில் நன்றாய்ப் பதிந்தன. அவன் தன் நன்றியைக்காட்ட முயன்றான்; நா எழவில்லை; உதடுகள் மாத்ரம் அசைந்தன. கடைசியாய் அவன் கண்களினின்று பெருகிய இரண்டு பெரிய நீர்த்துளிகள் அவனுடைய நன்றியறிதலை உணர்த்தின.

"உனது ஜமீன் விஷயங்கள் எல்லாம் சீர்குலைந்து தாறுமாறாய்க் கிடக்கின்றன. அடிக்கடிக் கலஹங்கள் ஏற்படுகின்றன. ஒரு வருஷத்துக்கு முன்னரே வஸூலாகவேண்டிய ராஜாங்கத்தீர்வை இன்னும் செலுத்தப்படவில்லை. உனக்கு இன்னும் பக்வவயது வரவில்லை; நவகுமாரர் தமது ஜமீனுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. ஆதலால் தோடர்மால் செய்த ஏற்பாட்டை இப்போது மாற்றவேண்டுமென்று சக்ரவர்த்தியவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். நவகுமாரர் இன்றையதினம் தமது ஜமீனைத் திரும்பப்பெறுவார். இன்று நான் ஏற்படுத்தியிருக்கும் ராஜாங்கக் கார்யஸ்தர் ஒருவர், நீயும் யுக்தவயதடைந்து, இப்போது நிற்கும் பாக்கித்தொகையும் பூர்த்தியாய்ப் பைஸல் ஆகும்வரை உனது ஜமீன் வ்யவஹாரங்களைப் பார்த்துவருவார்" என்றார் மான்ஸிங்.

இந்த ஏற்பாடும் நரேந்த்ரனுக்கு த்ருப்தியாயிருந்தது. 'நவகுமாரருடைய கொடுங்கோல் ஆதீனத்தினின்றும் தனது ஜமீன் நீக்கப்படும்; தன்னுடைய பாட்டனார் ஸ்தானத்தை வஹிக்கத்தனக்குயோக்யதை வருமட்டும் வீரநகரத்தைச் சக்ரவர்த்தியவர்களுடைய கார்யஸ்தர் ஒழுங்காய்ப்பாதுகாத்து அபிவ்ருத்தி செய்வார்; அதற்குள் தான் அந்த ஸ்தானத்துக்குத் தேவையான யோக்யதையையும் போர்வீரருக்குரிய யுத்தப் பயிற்சிகளையும், உலக வ்யவஹாரங்களையும் அவற்றை ஸரிவர அப்யஸிக்கும் முறைகளையும் கற்றுக்கொண்டுவிடலாம்' எனக் கருதினான் நரேந்த்ரன்.

ராஜாமான்ஸிங் மறுபடியும் பேசலானார்: "ஆத்ரக்காரச் சிறுவனே, இனி நீ வீரநகரத்தில் தங்கியிருப்பது மதிஹீனமான கார்யம். உன் ஸ்நேஹிதர்கள் சிலர் உனக்கு வேண்டியமட்டும் துர்ப்போதனை செய்திருக்கிறார்கள். நீ இவ்விடமிருந்தால் அவர்கள் நிமிஷநேரம் சும்மா இருக்கமாட்டார்கள். அடிக்கடி ஏதாவது கலஹங்கள் கிளப்பிக்கொண்டேயிருப்பார்கள்; அதனால் நமது கார்யஸ்தருக்கு வேலை தடைப்படும். ஆயினும் உன்னை வேற்றூர் அனுப்புவதற்கு எனக்கு இஷ்டமில்லை எம்முடன் ராஜமஹாலுக்கு வருவாயானால், அவ்விடமிருக்கும் உனது பாட்டனாரை அறிந்த ராஜபுத்ர உத்யோகஸ்தர்கள் உம்மிடம் ஆதரவாயிருப்பார்கள். ராஜகுமாரனுக்கு வேண்டிய கலைகள் யாவற்றிலும் அவர்கள் உம்மைத் தேர்ச்சிபெறச் செய்வார்கள். மறுபடியும் நீ உனது பாட்டனார் ஜமீனைத் திரும்பிப் பெறும்போது ஸகல ப்ரஜைகளும் தமது தந்தையென அன்புவைத்து நேசிக்கும் அக்பர் சக்ரவர்த்தியவர்களுடைய சிறந்த நம்பிக்கையுள்ள ஊழியனாயிருப்பாய்."



மான்ஸிங் அவர்கள் இவ்வாறு பேசியபோது நரேந்த்ரனது வற்றியிருந்த முகத்தில் ஆனந்தக்குறிகள் காணப்பட்டன. ராஜா அவர்களிடத்தில் மிகவும் நன்றியுடையவனாகி அவன் ஆனந்த பாஷ்பம் சொரிந்தான்.

"மஹா வல்லமைபொருந்திய ராஜசிகாமணியே, உமது வரம்புகடந்த தயாளத்வம் என்னை நாவெழவொட்டாமற் செய்தது. நான் ஆத்ரப்பட்டேன்; செய்ந்நன்றி கொன்ற பாதகனானேன். அதிக கொடுமையான தண்டனையடையவேண்டியிருக்க, நீர் என்மீது கருணைகூர்ந்து என் குற்றத்தை க்ஷமித்து எனக்கு ஸம்மானஞ் செய்தீர். க்ருபா ஸாகரமே, இனி நான் என் வம்சத்தின் மேன்மையை யுணர்ந்தவனாய் உமது அன்பிற்கும் தயவுக்கும் பாத்ரனாயிருக்க முயல்வேன். எந்த ப்ரதேசத்திலாயினும் ஸரி, நான் சக்ரவர்த்தியவர்களுடைய மனதுக்கு த்ருப்தியாய், நம்பிக்கையாய் உழைப்பேன்" என்று நரேந்த்ரன் வணக்கமாய்க் கூறினான். இவ்வார்த்தைகளைக் கேட்டு ராஜாமான்ஸிங் அதிக ஸந்தோஷப்பட்டார். அக்பரது அகண்டராஜ்யத்தைப் பலப்படுத்து நிமித்தம் ஒரு புராதன ராஜவம்சத்தாரின் முதிர்ந்த ராஜபக்தியைப் பெறுவது மான்ஸிங் அவர்களுக்கு அத்யந்த ஆனந்தத்தை உண்டுபண்ணிற்று.

அன்றிரவு வீரநகரமுழுவதும் எங்கு கண்டாலும் வரிசைவரிசையாய் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஊரெல்லாம் பறையொலியும், சங்கநாதமுமே கேட்டுக்கொண்டிருந்தன. ராஜபக்தி யென்பது நமது மதக்கோட்பாடுகளில் எவ்வளவு முக்யமானதொரு அம்சமோ, அவ்வாறே அது நமது நாட்டு ஜனங்களுடைய ப்ரதான குணாதிசயங்களி லொன்றாகும்; வீரநகரத்துப் பால்ய அதிபதியினிடம் ராஜாமான்ஸிங் காண்பித்த உதார குணத்தைக்கண்டு ஜனங்களெல்லாம் த்ருப்தியடைந்து அவரைப் பெரிதும் விச்வாஸித்தனர். பரம தரித்ரர்கள் வீட்டுவாயிலிலும் ஒரு மண்தீபம் எரிந்துகொண்டிருந்தது. மாடிகளின்மீது உட்கார்ந்து ஜனங்கள் ஸந்தோஷமாய்ப் பாடிக்கொண்டிருந்தார்கள். ஆக்ராவில் தனியரசு புரியும் பாக்ஷா அவர்களைப்பற்றியும், காருண்ய வள்ளலாகிய வங்க தேசாதிபதியைப்பற்றியும், விடுதலைபெற்ற வீரநகரத் தலைவரைப் பற்றியுமே கடைத்தெருக்களிலும், இன்னும், ஜனக்கூட்டமான இதர இடங்களிலும் பேச்சாயிருந்தது. அச்சிறு நகரம் இசைச்சலடங்கி நிச்சப்தமாவதற்கு மணி பன்னிரண்டுக்கு மேலாயிற்று.

மறுநாள்காலை ஹேமலதை மலர்கொய்ய நந்தவனம் சென்றபோது அங்கே வாடிய முகத்துடன் நரேந்த்ரன் நிற்பதைக் கண்டாள். கண்டவுடன் ஒரு க்ஷணநேரம் திடுக்கிட்டு நின்றாள். ஆனால் முதல்நாள் நடந்த ஸங்கதிகளெல்லாவற்றையும் அவள் அறிவாளாதலால் நரேந்த்ரன் அதிகாலையில் அவ்விடம் வந்தது தன்னிடம் விடைபெற்றுச்செல்வதற்கென்று அவள் தெரிந்துகொண்டாள். நாளைமுற்றுப் பின்னடைவதற்கு ஸமயம் அது அன்றென உணர்ந்து ஹேமலதை சாந்தமாயும் தைர்யமாயும் அவன்முன் நின்றாள். சற்றுநேரத்துக்கெல்லாம் தன் பால்யஸ்நேஹிதனருகே வந்து அவள் மௌனமாய்த் தன்னிருகரங்களாலும் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டாள். ஒருவருடன் ஒருவர் பேசாவிட்டாலும், இருவரும் தம்முள் வருத்தும் எண்ணங்களை நன்றாய் உணர்ந்தனர். இருவருடைய கண்களிலும் நீர் ததும்பிற்று.

"நரேந்த்ரா, நீ வீரநகரத்தை விட்டகன்று, வெகுகாலம் வரைக்கும் இந்தப்பக்கம் எட்டிப்பாராமல் போர்வீரனாகக் காலங்கழிக்கப் போகிறாய் என்பது உண்மைதானா? இதுவரைக்கும் நாம் அத்யந்த நண்பர்களாயிருந்தோம். இனி வருங்காலத்தும் அந்த நட்புக்கு யாதொரு ஹானியும் வாராதென்று நம்புகிறேன்"

'ஹேமலதே, என்னிடம் இவ்வளவு பரிவாய்ப் பேசியதற்காகக் கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக. ஆம், நாம் நண்பர்களாயிருந்தது வாஸ்தவந்தான். ஹேமலதே, என் உயிருள்ளமட்டும் நான் என்றைக்கும் உன் ஞாபகமாகவே இருப்பேன்."

"நீ என்னை எக்காலமும் மறக்கமாட்டாய் என்பதை நான் அறிவேன். நீ என்மீது வைத்திருக்கும் அன்பும் ஆர்வமும் எனக்கு நன்றாய்த் தெரியும். உனது சிறந்த கம்பீர மனதும் எனக்குத் தெரிந்தது. எல்லோரும் உன்மீது பழி கூறுங்காலத்தும், உனது பெருந்தன்மையான மனதில் அவ்வித துராலோசனைகள் ஏவையும் குடிகொண்டிராவென நான் பூரணமாய் நம்பியிருந்தேன். ஆனால் சில ஸந்தர்ப்பங்களில் உன்னையும் அறியாமல் கோபமும் ஆத்ரமும் உன் மனதைக் கவர்வதேன்?"

"எனதருமை ஹேமலதே, நான் ஆத்ரக்காரன் மட்டும்தானா? நான் அதிக பதட்டமுடையவன், சுத்த பைத்யக்காரன். முழுமூடன். சிறுபிள்ளைத்தனமாய் ஓர் அசட்டுக் கார்யமுற்று நான் உன் தகப்பனாரை ஆபத்துக்குள்ளாக்கினேன். ஆனால் ஈச்வரன் அருள் சிறிது என்பக்கம் இருந்தது. உன் தகப்பனார் பிழைத்தெழுந்தார். அக்காலத்து நான் உனக்கும் உன் தாயாருக்கும் உண்டுபண்ணிய மனோவேதனைக்காக என்னை நீ மன்னிக்கவேண்டும்."

"நரேந்த்ரா, என் தாயார் அப்போதே உன்னை மன்னித்துவிட்டு, உனக்காக என் தகப்பனாருடன் எவ்வளவோ பரிந்து பேசினாள். நீ நிரபராதி என்றறிந்த நான் உன்னை மன்னிக்கவேண்டிய அவச்யம் ஏதுமில்லை. உனது பௌருஷத்துக்கும் பெருந்தன்மைக்கும் தகுந்தவாறு நீ, அமைதியாயும் பொறுமையாயு

மிருக்கக் கற்கவேண்டும். வங்காள முழுவதும், வீரநகரத்து ராஜகுடும்பத்துக்கு நிகரான ராஜகுடும்பம் எதுவுங்கிடையாது. நரேந்த்ரா, நீ நீடூழிகாலம் வாழ்ந்திருந்து வீரநகரத்து அதிபதியாகி உனது பாட்டனுர் பெயரை முன்னுக்குக்கொண்டுவரவேண்டும்.''

"நீ என்னை மன்னித்துவிட்டனை என்பதைக் கேட்டவுடன் என் மனதைவிட்டு ஒரு பெரிய பாரம் ஒழிந்தது. நான் பூர்வத்தில் எவ்வளவு கஷ்டங்கள் அனுபவித்திருக்கிறேன். இனி வருங்காலத்திலும் எத்தனையோ துன்பங்கள் அனுபவிக்கவேண்டும் ஆனுல், ஒன்று, இனி எவ்வித கஷ்டகாலம் வந்தாலும் அவஸரத்துக்கும் படபடப்புக்கும் ஆளாகி அவதிப்படாமல் ஆண்மையுடன் அவற்றை அனுபவிப்பேன் என்பது நிச்சயம். இப்போது பட்டபாடு போதும். புத்தி வந்தது. இந்த ஸம்பவத்தால் நான் என்றென்றைக்கும் மறக்கக்கூடாத ஒரு நீதியைக் கற்றுக்கொண்டேன்.

"ஆனுல் கொஞ்சகாலத்துக்குப் பின்னர் நீ உனது ஜமீனைத் திரும்ப அடையமாட்டாயோ? என் தகப்பனுர் உன் விஷயத்தில் மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமில்லாமல் தனக்கிட்ட வேலையைச்செய்து முடித்தார். நரேந்த்ரா. என் தாயாரும் என்னை வளர்த்ததுபோலவே உன்னையும் செல்வமாய் வளர்த்து வந்தாள்''

"ஹேமலதே, உன் தாயாரைப் போலும் தாயார் இவ்வுலகில் கிடைப்பது ஸாத்யமா? அவள் மஹா புண்யவதி. என்னுடைய ஸொந்த தாயார்கூட என்னிடம் அவ்வளவு அன்பு பாராட்டியிருக்கமாட்டாள். உன் தகப்பனுரைப்பற்றியும் நான் கிஞ்சித்தும் இழிவாய்க் கூறமாட்டேன்; நான் அவர் செய்த நன்றியை மறந்தது உண்மையே. அப்படியிருந்தும் அவர் என்னை க்ஷமித்தருளினர். இப்போது நாம் பிரிகிறேம். இனி எப்போது ஸந்திப்போமோ, அல்லது ஸந்திக்கவே மாட்டோமோ. ஆகையால் இது பர்யந்தம் என் மனதில் அடக்கி வைத்திருந்ததை உன்னிடம் வாய்விட்டுச்சொல்லிவிடுகிறேன். "ஹேமலதே, நான் உன்னைப்பற்றி அதிக ஸந்தோஷமுற்றிருந்தேன். இதுவரைக்கும் உன்னையே நம்பியிருந்தேன். கடைசியாய் நான் உன்னை எவ்வளவோ ஆர்வத்துடன் காதலித்திருந்தேன், என் கண்ணே!''

ஹேமலதை முகத்தைத் திருப்பிக்கொண்டு மௌனமாய் நின்றனள். அவளோ இளங்குழந்தை; காதல் என்னும் பதத்தின் பொருளையே க்ரஹிக்கக்கூடாதவள். ஆயினும் அம்மொழியைக் கேட்டவுடன் அவளையறியாமலே அவளுடைய மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. "ஹேமலதே இதுவரைக்கும் உன் விஷயமாய் நான் எண்ணியிருந்த எண்ணத்தை ஒருபோதும் வெளியிட்டதில்லை. ஆனுல் அதை முதல்தரமும் கடைசிதரமுமாய் வெளியிடவேண்டிய ஸமயம் இப்போது வந்திருக்கிறது. நமது வாழ்நாட்களில் நமது அந்தரங்க எண்ணங்களைத் தைர்யமாய் வெளியிடக்கூடிய ஸமயம் ஒரு முறை ஏற்படுகிறது. உனது அன்பார்ந்த தாயாரும், குற்றங்களை க்ஷமிக்கும் இயல்புள்ள உனது தகப்பனுரும் உன்னை எனக்கு மணம் புரிவிப்பார்களென்றும், நாம் பால்யத்தில் கூடியிருந்தது போலவே என்றைக்கும் ஸுக தம்பதிகளாய் இருப்போமென்றும் நான் மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தேன். ஹேமலதே, முகத்தை அப்புறம் திருப்பிக்கொள்ளாதே. நாம் பிரியவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது; இன்னும் நான் சொல்லவேண்டிய வார்த்தைகள் இரண்டொன்று இருக்கின்றன. ப்ரதி இரவும் வானத்திலுள்ள நக்ஷத்ரங்களைக் கண்ணுற்றுக்கொண்டே இந்த பூங்காவனத்தில் பால்யத்தில் உத்ஸாஹமாய் நாம் ஒன்றுகூடி விளையாடிக்கொண்டிருந்ததுபோல் என்றைக்கும் ஸந்தோஷமாய் நாம் கூடியிருப்போம் என்று மனப்பூர்த்தியாய் நம்பியிருந்தேன். ஆற்றங்கரையிலோ, ஏகாந்தமாயிருக்கும் வயல் புறங்களிலோ தனித்து உலவும்போதெல்லாம் ஹேமலதே! நீ என் கருத்துக்கிசைந்த கண்மணியாயும் வீரநகரத்து ராணியாயும் விளங்குவாய் என்று நான் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தேன்.''

இம்மொழிகளைக் கேட்கக்கேட்க ஹேமலதையின் முகம் ரக்த ஓட்டத்தால் சிவந்து, கண்களினின்று நீர் பெருகிற்று. ஆனுல் அவள் அக்குறிகள் நரேந்த்ரனது கண்களுக்குத் தென்படாதவண்ணம் மறைத்துக்கொண்டாள். அவளுடைய மனதில் இதுவரைக்கும் தோன்ருதத்ோர் உணர்ச்சி உண்டாயிற்று. அதையும் வாய்விட்டுச் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

ஹேமலதே, நான் சொல்வதைச் சற்றுச் செவிசாய்த்துக் கேள், இவ்விஷயங்களைப்பற்றி நான் பன்னிப்பன்னியுரைப்பது யுக்தமற்றதாயிருக்கலாம்; ஆனுல் அவற்றை இனி எப்போது நான் உன்னிடம் சொல்லப் போகிறேன், எனது எண்ணங்களெல்லாம் வ்யர்த்தமாய்விட்டன; கேவலம் மனோராஜ்யமாகவே சூந்யமாய் முடிந்தது நானே இப்போது நாட்டினின்றும் பஹிஷ்காரப் படுத்தப்பட்டவன். இன்றையதினம் ராஜமஹலுக்குப் புறப்படுகிறேன். ராஜாமான்ஸிங் என்னிடம் அதிக அன்பு பாராட்டுகிருர் அவர் என்விஷயமாய் அதிக கவலை எடுத்துக்கொண்டிருக்கிருர். அவ்விடத்தில் எனது பாட்டனுருடைய நண்பர்கள் உளர். அவர்கள் எனக்கு யுத்தத்துக்கு வேண்டிய கலைகளெல்லாம் கற்பிப்பார்கள். ராஜா அவர்களுடன் நான் ஊரூராய்த் தேசந்தேசமாய்ச் சுற்றித்திரிவேன். ஆனுல் என் மனம் மாத்ரம் என்ஞல் எக்காலத்தும் மறக்கக்கூடாத ஒரு வஸ்துவின்பேரில் லயித்து வீரநகரத்தில் தங்கியிருக்கும். நான் தூரதேசங்களுக்குச் சென்றபின் ஹேமலதே, நீ என்மீது பக்ஷம் பாராட்டுவாயோ?''

இவ்வளவு பரிதாபமாய்க் கூறும் மொழிகளைச் செவியிற்கொண்டு ஹேமலதை, இனி ஒரு நிமிஷங்கூடத் தன் கண்ணீரைத் தடுக்க ஆற்றலில்லாதவளாய்க் கண்களினின்று நீர் பாயவிடுத்தவண்ணமாய் "நரேந்த்ரா, உன்னை மறந்து நான் பிழைத்திருப்பேனே?'' என்று வாய்குழறிச் சொன்னுள்.

"வேண்டாம் அழாதே ஸ்த்ரீரத்னமே. நாம் பிரியவேண்டிய இந்த ஸமயத்தில் நீ இவ்வாறு புலம்புவது ஆகாது, ஸூர்யோதய காலம் ஸமீபத்துவிட்டது; நான் இனி வெகுநேரம் தாமதிக்கலாகாது. ஆனுல் உன்னைவிட்டுப் பிரிவதற்குமுன் என் அடையாளம் ஒன்று உன்னிடம் கொடுத்துச் செல்லவேண்டுமென்பது எனது கடைசி கோரிக்கை. நாம் பால்யத்தில் இந்த மல்லிகைச் செடியைவைத்து ப்ரதிதினமும் ஜலம் வார்த்து வளர்த்தோம். இப்போது இது செழிப்பாய் வளர்ந்து புஷ்பித்திருக்கிறது. இதன் மூலமாய் என் ஞாபகம் உனக்கிருக்கும்படிச் செய்யவேண்டுமென்று நான் இஷ்டப்படுகிறேன்'' என்று கூறி நரேந்த்ரன் அந்த மல்லிகைப் புதரினின்று ஒரு கொடியைப் பறித்து அதை ஒரு வளையலாகச் செய்து ஹேமலதையின் கரத்தைப்பற்றி மெதுவாய் அந்த மாதவீகங்கணத்தை அவள் கையிலிட்டான்.

"புஷ்பங்கள் இரண்டொரு தினங்களில் வாடி உலர்ந்து போகும். ஆனுல் கொடிமாத்ரம் வெகுகாலம் இருக்கும்; ஹேமலதே, நீ என்னைப்பற்றி அன்பாய் நினைத்துக்கொண்டிருக்கும் வரையில் இந்த மாதவீகங்கணத்தை என் ஞாபகார்த்தமாகத் தரித்திரு. என்றைபதினம் நீ என்னை மறக்கின்றனையோ அன்றே இந்தக்கங்கணத்தை ப்ரயோஜனமற்றதொரு மல்லிகைக் கொம்பெனக் கழற்றி எறிந்துவிடு'' என்று நரேந்த்ரன் கூறிமுடித்தான்.

கதிரவனது க்ரணங்கள் ஆறுறாயமெங்கும் பாலிப் பூமியின்மீது பாயத்தொடங்கின. அப்போது துணையற்று ஏகாந்தமாய்ச் செல்லும் ஒரு நாடோடி ராஜமஹலுக்குச் செல்லும் மார்க்கத்தில் அகன்ற கங்கா நதியை ஒரு சிறிய படகில் கடந்துகொண்டிருந்தான். அதே ஸமயம் வீரநகரத்து அரண்மனை ஆலயத்தின் வாசற்படியில் சிறிது காலத்துக்கு முன்னர்தான் யௌவனபர்வத்தையடைந்த ஒரு பெண் உட்கார்ந்துகொண்டு, அப்பருவத்தில், முதல் முதலாய் ஏற்பட்ட வருத்தத்தால் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தாள்.

மாதவீகங்கணம்,

முதல் பாகம், முற்றிற்று.

**சென்னையில் மலேரியா வியாதி நிவாரண வேலை.**—இதைப்பற்றி வெளியாயிருக்கும் ரிபோர்ட்டில், மயிலாப்பூரில் அந்த வியாதிக்கு இரையானவர்களின் தொகை 116, அதற்கு முந்திய வருஷத்தில் 183, புரசைவாக்கத்திலும், மலேரியா வியாதி நிவாரண வேலை திருப்திகரமாயிருக்கிறதென்றும், சுகாதார விதிகளின்படி வேலைகள் சீக்கிரம் துவக்கப்படாமலிருந்தால் 1912-ம் வருஷத்தில் தண்டையார்ப்பேட்டையில் மலேரியா வியாதி பரவினதுபோல் எங்கும் பரவியிருக்குமென்றும், ஆனுல் இப்போது தண்டையார்ப்பேட்டையில் மலேரியா வியாதி குறைந்திருக்கிறதென்றும் ஸ்பெஷல் ஆபீஸர் ரிபோர்ட் செய்திருக்கிருர்.



# கனம் ஸர் சங்கரன் நாயர்

## THE HON. SIR. C. SANKARAN NAIR

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது''

என்ற வள்ளுவரது வாக்கு, மஹாகனம்பொருந்திய இந்திய வைஸிராய் ஸ்ரீ ஹார்டிஞ்ச் பிரபு, கனம் ஸ்ரீ சங்கரன் நாயரவர்களை தமது ஆலோசனை ஸபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்ததே வெளிப்படுத்தும். தமது முடிந்த எண்ணத்திற்குச் சில விஷயத்தில் சிலர்க்குக் கொஞ்சம் ஆட்சேபம் இருக்கும் என்பதை எண்ணினுராயினும், சிறிதும் தயங்காது அவர் தமது எண்ணத்தை வெளிப்படுத்தினதே அதைக் காட்டும். முற்றும் ஆலோசித்துச் செய்த வினை அது என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை எமக்கும் வெகு ஸந்தோஷம். எமது வைஸிராயவர்களைக் கொண்டாடுகிறேம்; நாயரவர்களிடம் களி கொண்டாடுகிறேம். நாயரவர்களைக்காட்டிலும் உத்தமமான நபரை வைஸிராய் அவர்களால் தேர்ந்தெடுக்கமுடியாது. நமது ராஜதானியில் அத்யுன்னத ஜனுபிமானத்தில் விளங்கிய அவரைத் தேர்ந்தெடுத்தது கவர்னர் ஜனரல் அவர்களுடைய பெருந்தன்மையையும் மனேதைர்யத்தையுமே வெளியிடும்.

கனம் சங்கரன் நாயரவர்களுடைய பெருமையை நெடுநாள் முன்னதாகவே யாவரும் அறிவர். அவருடைய சொல் வன்மையும், மனே தைர்யமும், அசைக்கமுடியாத முடிந்த கொள்கையும் அவருக்குச் சிலவிஷயங்களில் வழியில் முட்களாகத் தோன்றின. ஆனுல் அவை அவரைத் தருமவழியைவிட்டு ஓடாமலிருக்கும்படி அமைக்கப்பட்ட வேலி என்றறிய இத்துணை நாள் பிடித்தது. தன் வினை முன்வரும் என்பதற்கு இவரே சாட்சி. அவர் சிறு நாள்முதல் மனவன்மையுடன் வாழ்ந்தவர். தமக்கு இலேசாகக் கிடைத்த டிஸ்டிரிக்ட் முன்ஸீப் வேலையை ராஜீனமா கொடுத்துவிட்டு நியாயவாதியாக விளங்கி,வாவா பெருங் கீர்த்திக் காளானுர். அச்சிறு நாளிலேயே கவர்ன்மெண்டாரால் மதிக்கப்பட்டு 1884-ம் வரு மலையாளதேசத்துவிஷயங்களைப்பற்றி ஏற்படுத்திய விசாரசபையில் ஓர் அங்கத்தினராக ஏற்படுத்தப்பட்டனர். 1890 வரு அவர் சென்னை சட்டசபையின் அங்கத்தினராக கவர்ன்மெண்டாரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்பொழுதவர்க்கு வயது முப்பதுதான் இருக்கலாம். அவரது நடவடிக்கைகளை நமது நாட்டார் யாவரும நன்கு அறிவர். அவர், இந்தியன் நேஷனல் காங்கிரஸ்என்னும் ஜனஸபையிலும் உழைத்து,1897-ம்வரு அச்சபையின் அக்கிராஸனுதிபத்யம்வகித்து,அத்யத்புதமான உபன்யாஸஞ் செய்தார். 1906-வரு அவர் மதராஸ் ஹைகோர்டின் ஜட்ஜாக நியமிக்கப்பட்டனர். ஆனுல் அவர் ராஜாங்க விஷயங்களில் கலக்கமுடியாது போக, தமது கவனத்தை ஆசார சீர்திருத்த விஷயத்தில் செலுத்தினர் என்பது நாம் சொல்லவேண்டியதில்லை. இவர் பலமுறை இங்கிலாந்து சென்று

பல தேசஸஞ்சாரஞ்செய்து லோகானுபவங்கொண்டவர்; தமது தேசத்திடம் ஆழ்ந்தபக்தியும், அதற்கு வரவர நன்மையே வரும் என்ற உத்ஸாகமும் உடையவர்; தாட்சண்யமில்லாமல் ஸத்யத்திற்குழைப்பவர்; தவறான வழியிற்போகத் தயங்குபவர்.

இவரைத் தமது உதவிக்கு ஸபையின் அங்கத்தினராக ஏற்றுக்கொண்டது யாவருக்கும் ஆனந்தம் என்பதற்கு எல்லாப் பத்திரிகைகளும் ஒரேவாயாகப் புகழ்வதே சான்று. இவர்தான் இப்பதவிக் குகந்தவர் என்பதற்கு ஆறு மாதகாலமாக இப்பதவிக்குவர இவரது பெயரே கோஷமாக எங்குமிருந்தது காட்டும். ஜனங்களெண்ணம் மன்னனிஷ்டம் என்பதற்கு இதுவே வெளிப்படை. இதுவரை இந்தியருக்குக்கிட்டாத பதவியில் கனம் சங்கரன் நாயரவர்களை அமைத்த கனம் ஸ்ரீ ஹார்டிஞ்ஜ் பிரபு அவர்களிடம் அன்பு பாராட்டுவது அளவிலடங்கதன்று. சர்க்கரைக்கட்டி இனிக்காது கசக்குமோ? ஆனால் அவர் நமக்குச் செய்த பெருமையை நன்கு ஸ்ரீ சங்கரன் நாயர் அவர்கள் வஹிப்பர் என்பதற்குச் சந்தேஹமே கிடையாது. கல்வி, முனிஸிபாலிடி, ஜனஸௌக்ய முதலிய விஷயங்கள் அவரது கவனத்தை இனிப்பெறும். அவரது வாழ்க்கையில் வந்த அனுபவஞானம் அவர்க்கு ஊன்றுகோலாய் இருப்பதல்லாமல் கனம் வைஸிராய் அவர்களுக்கும் ஊன்றுகோலாய் இருக்குமென்பதற்கு ஆக்ஷேபணை சிறிதுமில்லை. மந்திரச் செயலுக்குகந்த குணங்கள் நாயரிடம் அனந்தம். அவரது பயமற்ற ஆழ்ந்த யோசனைமொழிகள் ஜனங்களுடைய எண்ணத்தையும் ஆள்பவரது கவலையையுஞ் சீர்தூக்கி விளங்குமென்று யாம் பயமின்றிச் சொல்வோம். அவர் முயற்சியும் உண்மை அறியும் ஸ்வபாவமும் அவற்கு தமது நடவடிக்கைக்கு ஆதாரமாக விளங்கி "செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்தியற்கை யறிந்து செய" லுக் குதவியாகும் என்று நம்புகிறோம்.

**மைசூர் விவசாயக் கருவிகள் டெப்போ.**—மைசூர் விவசாயிகளுக்கு விவசாயக்கருவிகளை சப்ளை செய்வதற்காக, விவசாய இலாகாவைப்பொட்டி விவசாயக்கருவிகள் அடங்கிய டெப்போ ஒன்றை மைசூர் கவர்ன்மெண்டார் கொஞ்சகாலமாக வைத்து நடத்தி வருகிறார்கள். வேண்டிய விவசாயக் கருவியை உடனே ரொக்கப்பணம் கொடுத்து விலைக்கு வாங்க சக்தியற்ற விவசாயிகளுக்கு ஒடி விவசாயக்கருவிகள் கடனுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

***

**லீபா.**—இது ஜெர்மன் எல்லையிலிருந்து சுமார் 30 மைல் தூரம் கிழக்கேயுள்ள நேர்த்தியான ருஷ்ய துறைமுகம். இவ்விடமிருந்து ருஷ்யாவின் முக்கிய நகருக்கு ரயில்பாதையும் உண்டு. 1881-ம் வருஷத்தில் அந்நகரின் ஜனத்தொகை 30,000. ஆனால் 1911-ம் வருஷத்திலோ 67,000. இதனால் அந்நகர் வரவர இங்கே விருத்தியடைந்தது விசதமாகிறது.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS & NOTES

**பிரிடிஷ் மந்திரிமார்களின் புதிய ஸபை.**—சென்ற ஒரு வருஷகாலமாக மிகவும் கோரமாய நடந்து வரும் யுத்தத்தை, இன்னும் ஊக்கத்துடனும் பொருப்புடனும் நடத்தவேண்டி, புதிய மந்திரி ஸபை ஒன்று ஸமீபத்தில் நியமிக்கப்பட்டு, நமது சக்ரவர்த்தியின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது. இப்போது நியமிக்கப்பட்ட மந்திரிகள் ஸபைக்கு "கொயலிஷன் மினிஸ்ட்ரி" (Coalition Ministry) என்று பெயர். அதாவது, சாதாரண காலங்களில் எதிரிகளாயிருக்கும் இரண்டு கக்ஷிக்காரர்கள் (Liberals & Unionists) ஒன்று சேர்ந்து ஒரே ராஜ ஸபையாகி, கவர்ன்மெண்டை நடத்துவது. இவ்விதம் நேருவது மிகவும் அபூர்வம். இவ்விதம் நியமிக்கப்பட்ட ஸபையும் நெடுங்காலம் நிலைப்பதில்லை. இப்புதிய ஸபை பின்வருமாறு அமைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| முதல் மந்திரி | மிஸ்டர் ஆஸ்குவித் |
| சஜானு லார்டு | ஸர் ஸ்டான்லே பக்மாஸ்டர் |
| ஸபைத்தலைவர் | லார்டு க்ரூ |
| லார்டு ப்ரிவிஸீல் | லார்டு கர்ஸன் |
| சஜானு மந்திரி | மிஸ்டர் மாக்கென்னு |
| அந்நிய மந்திரி | ஸர் எட்வர்ட் க்ரே |
| யுத்த மந்திரி | லார்டு கிச்சனர் |
| இந்தியா மந்திரி | மிஸ்டர் சாம்பர்லேன் |
| கல்வி இலாகா மந்திரி | மிஸ்டர் ஹெண்டர்ஸன் |
| சட்ட இலாகா மந்திரி | ஸர் எட்வர்ட் கர்ஸன் |
| யுத்த தளவாட மந்திரி | மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் |
| வியாபார இலாகா மந்திரி | மிஸ்டர் ரன்ஸிமான் |
| கடற்படை மந்திரி | மிஸ்டர் பால்போர் |
| குடியேற்ற நாட்டு மந்திரி | மிஸ்டர் போனர்லா |
| உள்நாட்டு மந்திரி | ஸர் ஜான் ஸைமன் |
| மாமத்திலாக மந்திரி | மிஸ்டர் ஹார்கோட் |
| லங்காஷைர் மாகாண மந்திரி: | மிஸ்டர் சர்சில் |

***

**சக்ரவர்த்தி பிறந்த நாள்.**—இம் மாதம் 3-உ கொண்டாடப்பட்டது. முன் சஞ்சிகையில் எழுதியபடியல்லாது அன்று வழக்கம்போல் விடுமுறை தினமாகவே யிருந்தது. நம் சக்ரவர்த்தியின் ஜன்ம தினத்தை முன்னிட்டு, அநேகருக்கு கௌரவ பட்டங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

***

**கொல்லம் திருவனந்தபுரம் இருப்புப்பாதை.**—கொல்லத்துக்கும் திருவனந்தபுரத்துக்கும் 39½ மைல்; இதற்கு ரயில்போட பிடிக்கும் செலவு 29½ லக்ஷம் ரூபாய். இந்த 39½ மைல் தூரத்திற்கும் இடையில் 8 ஸ்டேஷன்கள் ஏற்படும். வேலை மும்முரமாக நடப்பதால், இன்னும் ஒரு வருஷத்திற்குள்ளாகவே இந்த லயனில் ரயில்வண்டி விடப்படும் என்று சொல்லப்படுகிறது.